IL
Rm211.M92
M9223
162039

THE VIVEKA CHINTAMANI

A Monthly Tamil Magazine and Popular New Review

Devoted to the Diffusion of Practical Truth and Knowledge, to Educational and Social Topics and to the "Children's Educational Movement."

Dealing with the Problems of Child Education, Social Service, Self-culture, and Ethics. Adapted for Use in Homes and Schools and approved as suitable for use in all Elementary and Secondary Schools.

God is Love : Knowledge is power : AUM.
" Love and Learn "—" ஓதுவதொழியேல்."
SATYAMEVA JAYATE.

Vol. XXIII.

(For the Tamil Year Rakshasa)

April 1915—March 1916.

விவேகசிந்தாமணி

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

அறிவுடையாரெல்லாமுடையார் அறிவிலா
ரென்னுடையரேனுமிலர்.—திருக்குறள்.
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.—திருக்குறள்.

23-ம் புத்தகம்.

(ராக்ஷஸஸு)
1915-ஸு ஏப்ரல்மீ முதல் 1916-ஸு மார்ச்சுமீ வரை.

PUBLISHED BY
THE SECRETARY, DIFFUSION OF KNOWLEDGE AGENCY,
The Lalita Publishing Co., (Sole Agents and Managers,)
Lalitalaya, 19, Adam St., Mylapore, Madras, S.
1915-1916.

Bound Vol. Rs. 5. nett.] *All Rights Registered.* [**Unbound Vol. Rs. 4 nett**

The copyright of every article first published in this volume is vested solely in the Editor and registered in his name.

162039
600 00

TABLE OF CONTENTS.

Vol. XXIII (April 1915-March 1916)

No. 1. For APRIL 1915.

"For Social Service what was required was not money but men."

"God Helps Those Who Help Themselves." 1
1. The Vernacular as a Medium of Instruction ... ...2 & 3
2. German "Frightfulness" 6
3. Social Service Column: Mr. Gandhi on Social Service 8
4. The Early Life of Our King-Emperor (*illustrated*) 11
5. Harischandra : A Character Sketch 15
6. The Taj Mahal at Agra 19
7. Short Story : All is well that ends well 21
8. Children's Page : Mother and Child 29
9. On the Evils of Gambling : Selections from Standard Authors 30
10. Kindergarten Page : Action Song for Children 32

1915ஞு ஏப்ரல்மீ 1-வது சஞ்சிகை. (சித்திரை)

1. வித்தியாபோத சாதனமுறை : தாய்பாஷையின் சிறப்பு ... ... 2 & 3
2. ஜெர்மானியர் போடும் "பூச்சாண்டி" வேஷம் 9
3. சமஷ்டிசேவை சாதனம் : ஊருக்குழைத்தலாம் சமஷ்டி சேவையைப்பற்றி மிஸ்டர் காந்தியின் அபிப்பிராயம். 8
4. மாக்ஷிமை தங்கிய நம் சக்கிரவர்த்தி ஜியார்ஜ் அரசரின் பால்ய சரித்திரம் (படத்துடன்) ... 11
5. அரிச்சந்திர மஹாராஜாவின் குணாதிசயங்கள் 15
6. ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால் 19
7. சிறுகதை : நன்றாய் முடியின் எல்லாம் நன்றே 21
8. சிறுவர்க்கான பக்கம் : ஒரு தாய் தன்குழந்தையைப் பற்றிக்கூறியது 29
9. சூதுசெய் துன்பம் (பாட்டுகள்) 30
10. கிண்டர்கார்டன் விஷயம் : பாலலீலை 32

No. 2. For MAY 1915.

"It is our Duty to work most of our lives and work well."

The Problem of Child Education.
1. The New Educational Minister's Views on the Problem of Child Education 34
2. The New Minister of Education 35
3. Srimati Swarna Kumari Devi (Mrs. Ghosal) 36
4. The War 39
5. Italy and the War 42
6. The British Cabinet ... ...42 & 48
7. The Pass of Thermopylae 43
8. Proverbs as Aids to Child Study 49
9. A Brief Sketch of the History of India (in verse) 53
10. "On the Excellence of Temple Worship" 56
11. Short Story : Sangamputhaiandi 60

1915ஞு மேமீ 2-வது சஞ்சிகை.

1. புதிய வித்யாமந்திரியின் அபிப்பிராயம் 34
2. புதிய வித்யாமந்திரி 35
3. 'பாரதி' பத்திராசிரியர் : ஸ்ரீமதி ஸ்வர்ணகுமாரிதேவி 36
4. யுத்த சமாசாரம் 39
5. இத்தலியும் யுத்தமும் 42
6. பிரிட்டிஷ் மந்திராலோசனை சபை ... ... 42&48
7. தர்மாப்பிலே கணவாய் 43
8. பாலபோத சிக்ஷாசாதனம்: பழமொழிவிளக்கம் 49
9. இந்துதேச சரித்திர ஏலப்பாட்டு 53
10. "ஆலயந் தொழுவது சாலவு நன்று" 56
11. சிறுகதை : சங்கம் புதையாண்டி 61

No. 3. For JUNE 1915.

"Education is at best only a process of devoloping what heredity had implanted in the mind."

Frontispiece 1. *"The All-India Children's Memorial Picture."* 2 *H. E. Lord Hardinge with Family.* 3. *H. I. M. The King-Emperor in Indian Uniform.* 66
The Vivekachintamani 67
1. The Extension of Lord Hardinge's Viceroyalty 67
2. Race Culture and Individual Culture or Eugenics and Education 71
3. "India and the War" (By Sir Francis E. Younghusband, K. C. I. E.) 74
4. The "Children's Day" Celebration of the Viceroy's Birthday 76
5. The Children's Day Festival Celebrations at Home : Anthems, Hymns and Civic Songs for the Children... 78
6. Echoes of War : Exploits of Bussy 82
7. A Brief Sketch of the History of India (verse) 85
8. Adventures with a Jelly-fish... 86
9. Feruz Sha, the Beneficent 89
10. The Scenery of the Cauvery—I. 94
11. The Principle and Method of Teaching Children—A Review ... ...

1915ஞு ஜூன்மீ 3-வது சஞ்சிகை.

படங்கள் 1. "பாலபோத சமஷ்டி சேவைஸாதனபடம்" 2. லார்ட்ஹார்டிஞ்சவர்களும் அவருடைய குடும்பமும், 3. மாக்ஷிமைதங்கிய ஜியார்ஜ் அரசர் (இந்தியராணுவ உடையில்) 68
1. அரசர் பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்சவர்கள் 68
2. சமஷ்டி வியஷ்டி வித்யாசம்பத் சாதனம் 72
3. இந்தியாவும் யுத்தமும் 74
4. "ஹார்டிஞ்சு ஜயந்தி" யென்னும் பாலர்திருவிழாக் கொண்டாட்டம் ... 76
5. வீடுகள் தோறும் பாலர் திருவிழாக் கொண்டாட்டமகிழ்வுரை 78
6. வெடியோசையும் வேறு பாஷையும் 82
7. இந்துதேச சரித்திர ஏலப்பாட்டு 85
8. ஜல்லிமீனால் நேரிட்ட அவஸ்தைகள் 86
9. பிருஸ்ஷா என்னும் பேருபகாரி 89
10. காவேரிநதியின் அழகியகாக்ஷி 94
11. பாலபோத சாதகசாதனமுறை ... ...

No. 4. For JULY 1915.

" Work is of a religious nature:—Work is of a brave nature ; which it is the aim of all religions to be."

The Great " World-War" as an Eye-opener 97
1. On the Uplifting Power and Religious Nature of Work 98
2. The Great World-War as an Eye-opener 99
3. " Labour is Life" 100
4. The Gospel of " Strenuous Life " 103
5. The Lesson of " The Village Blacksmith" (After H. W. Longfellow.) 106
6. Beware of Evil Habits 108
7. A View of the Ancient History of Egypt 109
8. Coal 115
9. The Scenery of the Cauvery—II 118
10. Snake Stories 122
11. Open Column : Education of Girls : Some defects and remedies 125
12. Children's Page 127

1915ஞு ஜூலை 4-வது சஞ்சிகை.

1. பாரதப்போரும் காரதருமுறையும் 99
2. "பிழைக்கும்வழி உழைக்கப் பழகுவதே" 100
3. "பிழைக்கும்வழி : உழைக்கும்வழி" 103
4. "கருமானே,—கருமவழி காட்டியோனே!" 106
5. கெட்ட பழக்கங்களை முளையிலேபிடுங்கி விடவேண்டும் 108
6. எகிப்து தேசத்தின் பூர்வீக சரித்திர சங்கிரகம் 109
7. நிலக்கரி 115
8. காவேரிநதியின் அழகியகாக்ஷி 118
9. பாம்பைப்பற்றிய கதைகள் 121
10. "பெண்கல்வி"—அதன் குறைநிறை 125
11. சிறுவர்களுக்கான பக்கம் : "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" ... 127

No. 5. For AUGUST 1915.

" We should be wary what Persecution we raise against the Labours of Public Men."

1. The Sanctity of a Good Book ... ... 129 & 131
2. Work, Faith and Help 130
3. Truth Often Unwelcome at First 130
4. Abou Ben Adhem and the Angel (*vide* Transfusion Column) 130
5. " Every Noble Work is at First Impossible " 135
6. Transfusion Column : Abou Ben Adhem and the Angel 138
7. Songs 1. Sailing in Love " Over the Sea of Bondages " 140
   2. On Universal Love 141
   3. On Self-Importance 141
8. The Grandeur of Creation 142
9. Biographical Sketches III : Meera Bai, the Devout Rani of Chittoor 147
10. Scientific Column : Liquid Air 151
11. Arguing in a Circle 155
12. Story for Children : Glory 157

1915ஞு ஆகஸ்டு 5-வது சஞ்சிகை.

1. எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும் ... ... 129&131
2. அடியார் செய்[illegible] (ஆங்கிலம்) 130
3. "ஸத்தியம்தானே முதலில் விளைப்பது வெகுஜனவிரோதம்" (ஆங்கிலம்) ... 130
4. 'அபூபென் ஆதம்' என்பானும் தேவனும் (ஆங்கிலம்) 130
5. " நல்ல காரியத்திற்கு நாலாயிரந்தடை " 135
6. மொழிபெயர்ப்பு வித்தை : ' அபூபென் ஆதம்' என்பானும் தேவனும் 138
7. பாட்டுகள் : 1. "வாழ் வெனும் ஓடம்"—"பாசக்கடல்"—"நேசப்பாய்" ... 140
   2. "ஜீவகாருண்யம்" 141
   3. "பெருக்கம்" 141
8. சிருஷ்டியின் பெருமை 142
9. சரித்திர மஞ்சரி—3 : மீராபாய் என்னும் புண்ணியவதியின் சரித்திரம் ... 147
10. காற்றுத்திராவகம் 151
11. பீஜாங்குர நியாயம் 155
12. சிறுவர்க்கான கதை : கீர்த்தி 157

No. 6. For SEPTEMBER 1915.

" Right will conquer, Truth will make us free."

1. In Memorium 161
2. Ode to Memory 162
3. " A Veteran of Science " on the Present War 162
4. " Moral Instruction in Elementary Schools" (Circular by the Director of Public Instruction) .. 167
5. Cuttle Fish 171
6. The Street of Bye-and-Bye 173
7. Biographical Sketches : 3. Mira Bai, the Devout Rani of Chittoor 174
8. Pride Goeth Before Fall,—Short Story) 178
9. Mahabalipuram—I 179
10. The Age of Man. (An Old Fable) 184
11. A Few Hints on Domestic Sanitation 187
12. Children's Page 188
13. War Notes 191

1915ஞு செப்டம்பர் 6-வது சஞ்சிகை.

"தர்மமே ஜயம், ஸத்யமேவஜயதே" !

1. பாரதப்போரில் மடிவீரர் ஞாபகார்த்தம் (இங்கிலீஷ்) 161
2. ஸ்மராதேவி (ஞாபகசக்தி) ஸ்துதி (இங்கிலீஷ்) 162
3. இப்பொழுது நடக்கும் யுத்தத்தைப்பற்றி ஒருவித்யா விற்பன்னர் அபிப்பிராயம் ... 163
4. பாலபோத சிக்ஷாசாதனம் 167
5. கடல்துரை ஜந்து 173
6. "பின்செய்வோம் என்னும் பேதை நெறி" 181
7. சரித்திரமஞ்சரி—3. மீராபாய் என்னும் புண்ணியவதியின் சரித்திரம் ... 17
8. 'அகம்பாவும்பொல்லாங்கு' (சிறுகதை) 178
9. 'மஹாபலிபுரம்' என்று வழங்கும் மாமல்லபுரம்—1 179
10. மனிதனுடைய வயது (பழையகற்பனைகதை) 184
11. சுகாதார விதிகளைப்பற்றியசில குறிப்புகள் : வீட்டுக்கொல்லை 187
12. சிறுவர்க்கான பக்கம் 188
13. யுத்தசமாசாரக் குறிப்புகள் 191

No. 7. For OCTOBER 1915.

"The Education of the Child must have in it the making of the Man in the Child."

1. Reform of Rural Education : Some Thoughts and Reflections ... 193, 195 & 196
2. Moral Instruction for Girls ... 202
3. The India Office ... 206
4. The Navagara Falls (*Illustrated*) ... 212
5. Biographical Sketches—III. Mira Bai, the Devout Rani of Chittoor ... 218
6. Songs :—
   I. On the Finiteness of Human Mind ... 222
   II. Love and Authority ... 223
   III. On Self-Abnegation ... 223
7. Stanzas on Freedom ... 224
8. The Dewan of Travancore on Vernacular Education ... 225
9. Some Thoughts on Vernacular Studies and Composition ... 225
10. Appeal for Co-operation ... 226

1915௵ அக்டோபர்மீ 7-வது சஞ்சிகை.

பாலபோதசிக்ஷை குழந்தையை அபராக்கிவிடுவத ாயிருக்கவேண்டும்.

1. நாட்டுப்புறத்தார்க் குபயோகமான வித்யா சீர்திருத்தம் இங்கிலீஷ் 193, 195. (தமிழ்) ... 196
2. பெண்கள்நீதி விளக்கம் ... 202
3. இந்தியா ஆபிஸ் ... 206
4. நயகராநதியின் நீர் வீழ்ச்சி ... 212
5. சரித்திரமஞ்சரி 3. மீராபாய் என்னும் புண்ணியவதியின் சரித்திரம் III. ... 218
6. பாட்டுகள் :—
   I. இந்த மனமொரு சிந்தனையந்த்ரம் ... 222
   II. அன்போடதிகாரம் ... 223
   III. தன்னைமறுத்தல் ... 223
7. சுதந்திரம் ... 224
8, சுபாஷாப்பயிற்சி (இங்கிலீஷ்) திருவாங்கூர் திவான் ... 225
9. சுபாஷா ஞானம்—(இங்லீஷ்) ஸி. வி. ஸ்வாமிநாதய்யர் ... 225
10. ஒத்துழைத்துபகரிக்கவேண்டும் ஷை ... 226

No. 8. For NOVEMBER 1915.

"Uncontrolled this 'Will' means universal strife for survival by destruction of all else."

1. Power: the Psychic Conditions of the Present War (English) ... 227
2. Thoughts on the Present War (English) ... 228
3. The Psychic Conditions of the Present War (Tamil) ... 229
4. An Appeal to our Readers ... 230
5. The Nature and Method of the Present War ... 231
6. The Blockade ... 236
7. Nature Study: Observations of a Walk on the Beach ... 238
8. The *Madras Mail* on "Rural Education" ... 241
9. On the Greatness of Chastity ... 242
10. The Scene from the Hill Fort at Trichinopoly ... 248
11. On the Efficiency of Faith ... 246
12. Reform of Rural Education: (1) A Review of the article in the *Vivekachintamani* ... 257
   (2) Letters published in the *Madras Mail* of 11th instant and in the *Hindu* of 13th instant ... 254

1915௵ நவம்பர்மீ 8-வது சஞ்சிகை.

1. யுத்த காரணம் : மனோபாவ நிலைமை, (இங்கிலீஷ்) ... 227
2. யுத்தத்தைப்பற்றிய சிந்தனைகள் (இங்கிலீஷ்) ... 228
3. யுத்தகாரணம் : மனோபாவ நிலைமை, (தமிழ்) ... 229
4. விவேகசிந்தாமணியை வாசிப்போர்க்கு ஒரு விண்ணப்பம் ... 230
5. இப்பொழுது நடக்கும் யுத்தத்தின் இயல்பும் முறையும் ... 231
6. மறியல் யுத்தம் ... 236
7. பிரகிருதிவித்தை : கடற்கரையுலாக் காட்சி ... 288
8. நாட்டுப்புறத்தார்க் குபயோகமானவித்தை—"மதராஸ் மெயில்" அபிப்பிராயம் ... 241

3. [illegible] கதை ... 242
10. திருச்சிறுப்பள்ளி மலைக்கோட்டையிலிருந்து [illegible] காட்சி ... 244
11. கடவுளைநம்பினோர் கைவிடப்படார் ... 248
12! நாட்டுபுறத்தார்க் குபயோகமான வித்யா சீர்திருத்தம் :—
   1. இங்லீஷ் விமர்சநம் ... 256
   2. மெயில், ஹிந்து பத்திரிகைகளில் பிரசுரமான கடிதங்கள் ... 257

No. 9. For DECEMBER 1915.

"A GOOD BOOK is the precious life-blood of a Master-Spirit embolm'd and treasur'd on purpose to a life beyond life."

A Good Book ... 259
1. The Hon'ble Sir Harold Stuart on Educational Efficiency ... 260 & 261
2. On the Efficiency of Faith and the Urgency of Godly Education ... 265
3. "The Water Hyacinth." By Mr. D. T. Chadwick, I. C. S ... 268
4. "The Law of Action and Reaction": Karma-Dharma, A Story ... 269
5. The Brahmin Priest who became a Tahsildar ... 274
6. Sanitation Column : On the Air We Breathe ... 277
7. Short Story : The Dog and the Wolf ... 281
8. On Indebtedness ... 283
9. The Elements of High Art in "Cheating" ... 286

1915௵ டிஸம்பர்மீ 9-வது சஞ்சிகை.

ஓர் நல்லபுஸ்தகம் :
1. வித்யாப்பியாசம் : கடைத்தேறுமுறை : கனம் ஸர் ஹாரல்ட் ஸ்டுவர்ட் அபிப்பிராயம் (இங்கிலீஷ் 260) (தமிழ்) ... 261
2. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" ஆதலால் "பகவத்சிந்தனை அவசியம்" ... 265
3. "வாடர் ஹயசிந்து" என்னுமோர்பூண்டு (மிஸ்டர்டி. டி. சாட்விக், I.C.S.) ... 268
4. 'வினைவிதைத்தவன் வினையறுக்கிறான்' : கர்ம-தர்மத்தைப்பற்றிய ஒருகதை ... 269
5. தாசில்வேலையை விரும்பின அவிவேக புரோகிதன் ... 274
6. சுகாதார விஷயம் : காற்றைப்பற்றி ... 277
7. சிறு கதை : நாயும் ஓநாயும் ... 281
8. கடன்படல் ... 283
9. 'புரட்டுஉருட்டு' அல்லது 'ஜகத்புரட்டு ஜாலவித்தை ... 286

No. 10. For JANUARY 1916.

"Children have a Stronger Desire for First Principles than most People Suppose."

1. Philosophy for Parents (*The Times Educational Supplement*) ... 291
2. 1915-1916: The Lesson of the Last Year (*illustrated*) ... 293
3. The Viceroy on Educational Efficiency ... 301
4. Vehicle of Teaching : Sir Rabindra Nath Tagore's Address ... 302
5. Books and How to Read Them ... 305
6. On Wages—A Lesson in Economics ... 309
7. The Old Man's Comforts and How He Gained Them ... 311
8. The Golden Necklace : A Tale of Modern Times ... 313
9. Short Story: Brotherly Love ... 319
10. Sanitation Column : Health Notes ... 320

1916௵ ஜனவரிமீ 10-வது சஞ்சிகை.

1. பெற்றோர்க்குப் போதனை (லண்டன் டைம்ஸ்) ... 291
2. 1915—1916 : பழைய வருஷத்தின் படிப்பினை (படத்துடன்) ... 293
3. வித்யாப்பியாசத்தில் கடைத்தேறு முறையைப்பற்றி இராஜபிரதிநிதியவர்கள் அபிப்பிராயம் ... 303
4. வித்யாபோத சாதனமுறை ... 305
5. புஸ்தகவாசிப்பு ... 303
6. வேதனம் அல்லது கூலி ... 309
7. ஓர் கிழவனுற்ற சௌக்கியங்களும் அவன் அவற்றை எவ்வாறுற்றானென்பதும் ... 311
8. தங்க அட்டிகை—தற்கால கதை ... 313
9. சிறுகதை ; சகோதரவாஞ்சை, அல்லது, ராஜா உடையரும் அவர்தம்பியும் ... 319
10. சுகாதாரவிஷயம் ; சுகாதாரக் குறிப்புகள் ... 320

No. 11. For FEBRUARY 1916.

" *Education, in fact, is as important as War Service.*"

The Educational Needs of the Hour ... 323-24
1. " Education, as Important as War Service " ... 325
2. " A Nation Rises no Higher than its Mothers " ... 328
3. The Benares Hindu University ... 331
4. " Lyrics and Lay Songs of Temple-Legends." ... 332
5. The New Viceroy ... 333
6. Thomas Alva Edison,—the Wonderful Inventor ... 333
7. War and Self-Denial ... 338
8. The Madras Exhibition of Industries and Agriculture, 1915-1916 ... 338
9. Labour as an Agent of Production—A Lesson in Political Economy ... 341
10. The Golden Necklace II.—A Tale of Modern Times ... 344
11. " We Are Seven " (*From Wordsworth*) ... 350
12. Vain Imagination—" The Ascetic and the Honey-Pot " ... 352

1916ஸு பிப்ரவரி 11-வது சஞ்சிகை.

உண்மையில் யுத்தசிக்ஷையைப்போல் பாலசிக்ஷையும் முக்கியமானதே.

தற்கால வித்யாவசியங்கள். (இங்லீஷ்) ... 323&24
1. *யுத்தசிக்ஷையைப்போல் பாலசிக்ஷையும் முக்கியமானதே* ... 325
2. *தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை* ... 328
3. *ஸ்ரீகாசி ஹிந்து யூனிவர்ஸிடி* ... 331
4. *"நாத-கீத நாமகன் சிலம்பொலி"* ... 332
5. *புதிய இராஜப்பிரதிநிதி* ... 333
6. *அற்புத கற்பிதசிகாமணியாகிய தாமஸ் ஆல்வா எடிஸன்* ... 333
7. *யுத்தச்செலவும் செலவொடுக்கமும்* ... 338
8. *சென்னைக் கைத்தொழில் வியவசாயக்காக்ஷி* ... 338
9. *உத்யமம் அல்லது உழைப்பு : தனோத்பத்தி சாதனம்* ... 341
10. *தங்க அட்டிகை : ஓர் தற்கால கதை* ... 344
11. *"நாங்கள் ஏழுபேர்"*— ... 350
12. *வீண் மனோராச்சியம் அல்லது தபசியும் தேன்சட்டியும்* ... 352

No. 12. For MARCH 1916.

" *Strive, Strive and Strive again, in spite of failures, having this high ideal to encourage* !"—The Hon'ble

Sir Harold Stuart's Advice to the Young Men (Eng.) ... 357
1. Hooting : A Parable from the Streets ... 359
2. The Hon'ble Sir Harold Stuart's Advice to the Young Men ... 361
3. Reform of National Education, ... 363
4. In Memorium H. O. D. Harding ... 364-5
5. The Late Mr. H. O. D. Harding, I. C. S. ... 366
6. " The Children's Educational Movement" ... 367
7. Short Story : A Poverty Stricken Scholar ... 371
8. An Arecdote of Kalathi Bhupathi ... 375
9. The Evil Consequences ef taking Bribes ... 378

1916ஸு மார்ச்சு 12-வது சஞ்சிகை.

" ஊக்கமது கைவிடாதுழைக்க, உழைக்க, ஊக்கமொடுழைக்க, ஊருக்குழைக்கவே!"

1. "கெடுபிடி தடபிடல்": வழிப்போக்குபாக்கியானம் ... 359
2. கனம் ஸர் ஹாரல்ட் ஸ்டுவர்ட் அவர்கள் ஹிதோபதேசம் ... 361
3. தேசப்படிப்புச் சீர்திருத்தம், ... 363
4. எச். ஒ. டி. ஹார்டிங் ஞாபகார்த்தம் ... 364-365
5. மாஜி, எச். ஒ. டி. ஹார்டிங்துரை ... 366
6. பாலசிக்ஷை போதனசங்கம் ... 367
7. வறுமையிற்புலமை ... 371
8. காளத்தி பூபதியின் சரித்திரத்தி னோர்பகுதி ... 375
9. கைக்கூலி வாங்குவதனாலுண்டாகும் கேடு ... 378

"FOR SOCIAL SERVICE WHAT WAS REQUIRED WAS NOT MONEY BUT MEN."

"*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith.*"

"*Seek Truth wherever you can find it,*" *But*, "*Make your choice and stick to it till you reach the End.*'

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

" HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved'**

புத்தகம். **23.**] ராக்ஷஸஸு சித்திரைமீ, **1915**ஸு ஏப்ரல்மீ [சஞ்சிகை **1**

" GOD HELPS THOSE WHO HELP THEMSELVES."

......" For social service what was required was not money but men, men of the right sort with right sentiments, with an abiding love and charity and full of faith in their work "—*Mr. M. K. Gandhi.*

" God helps by hints and suggestions or inspiration only, but never materially."—*Indian Proverb.*

" Few of your countrymen have taken up this question of religion and education with the conviction and fervour that you manifest. I fear you are over-working yourself and exhausting your strength in trying to advance the measures you have at heart. I have......the new Director......I trust he will see his way to help you in this and other matters in which you are deeply interested."—*D. Duncan, Esq., M. A., D. Sc*, *in* 1904.

" I am able to discover in it (Godward Ho!) the aspirations of a sincere seeker after a deeper knowledge of God."—Dr. Cuthbert Hall, Barrow's Lecturer in the *University of Chicago, in* 1904.

The Hon'ble Sir Harold Stuart, K.C.S.I., K.C.V.O., writes under date 28th April 1915.

"Please accept my thanks for the copies of the Educational and War Numbers of the " Vivekachintamani," which you have been kind enough to send me......I have no doubt that your account of the war will prove very useful "

THE VIVEKACHINTAMANI WAR NUMBER.—We have received a copy of the "Household narrative of contend ing folks in the Great War of 1914," re-issued in one volume with an introduction by Mr. H. O. D. Harding, I.C.S., from the Lalitha Publishing Co., Mylapore. The story of the Great War is well described in the volume with striking illustrations and maps. The March number of the Vivekachintamani contains many interesting articles such as the meaning of University life, the goal of Education, the origin and issue of the War, etc. The simple style and the vivid description of the details of the war are sure to commend themselves to the Tamil reading public and the War Number has a historic and literary value.—*The Hindu, dated 4th May* 1915.

THE VIVEKA CHINTAMANI.—We have received a copy of the Vivekachintamani War Number, which is illustrated, well got up, and has an introduction written by Mr. H. O. D. Harding, I.C.S., who aptly remarks that " there is much room for such a book." The little book sets forth in simple language the origin of the war, an account of how things are going, interesting description of the different nations involved, accounts of their resources and of their capacity to go on bearing its enormous cost.—*The Madras Times, dated 5th May 1915.*

THE VERNACULAR AS A MEDIUM OF INSTRUCTION.

வித்தியாபோத சாதன முறை.

"The point is this. There are many criticisms of the existing system : that the boys are over-strained, that they do not understand English sufficiently to follow their instruction in history, science, geography and the like, that it is a constant strain on their minds and that they lose to a large extent the faculty of what I might call biting ideas and connecting words with facts. And the alternative proposal is not, as I understand, to reduce English Education but to teach English by the modern method, the direct method as it is called, as a language, while at the same time lightening the strain on the mind by introducing the vernacular, the language of the people as a medium of instruction. This is a question not of educational policy but of educational economy and is a question which would require many minds to solve. I can only tell you that in my own experience and in the experience of many competent Educationists with whom I have discussed the question, there is a markedly greater intelligence in the boy whose education has been conducted through the medium of the vernacular than the boy who has had his education conducted in English in what used to be called in some provinces the Upper Middle School. That also was the conclusion which the Education Commission of 1882 came to in regard to Bengal. But I am far from thinking that my own experience in the matter is at all conclusive. It is a matter which requires a large amount of experience before we can come to any conclusion. We must also remember that the supply of education is to a large extent governed by the demand for it. Every educational System in the world is beating itself against this bed-rock fact that A is not willing to learn what B is willing to teach. Many modern theories in education have come to grief by ignoring this bed-rock fact. My own idea is that it is essentially a case for experiment, and it is a condition of the experiment being successful that the teaching of the English as a compulsory second language should be of the very highest order in the hands of very good teachers; and the number of these is limited in India at present. The Honorable Pandit suggests a committee. I think that a committee for all India would be out of the question. The subject is one in which different views may very well be taken in different provinces and even in different parts of a province with reference to local conditions. I think myself that there is sufficient demand in this Council for inquiry to refer the matter as an open question to local Governments drawing attention to this debate and suggesting for their consideration whether the time has come to appoint provincial committees to inquire into the subject. But in view of the opposition which the Resolution (*re* Indian Vernaculars in Secondary Schools) has excited in this Council, I think it better to say that this reference to Local Governments will not be made until after the war. I wish to emphasise again the fact that Government has absolutely no idea in its educational policy except to improve and extend education. I think we are all agreed that the best that can be given for the money available at any time should be given, and that no difference in aim really seperates us."—*The Hon'ble Sir Harcourt Butler's (the Educational Member) summing up of the debate in the Viceroy's Legislature Council (on 17th March, 1915) on the Resolution re Indian Vernaculars in Secondary Schools.*

"Due progress in the vernacular (a matter on which too much stress cannot be laid) will be secured by the parallel study of vernacular texts, and by the conduct of lessons in the mother tongue, to the study of which, indeed, more time may be devoted, in proportion as we adopt methods whereby the attainment of English will be accelerated."—The Hon'ble Mr. Sharp with reference to pupils under thirteen years of age and to the Government of India's Educational Resolution of 1904.

"...More effort in given to acquiring the elementary use of *instruments of thought* than to the study of thoughts themselves: in short, to make school-learning preponderatingly verbal and this is antagonestic to the very idea of culture."—*Dr. Welton, Professor of Education in the University of Leeds in "What we mean by Education."*

"There is much experience to the effect that scholars who have been through a complete vernacular course are exceptionally efficient mentally. The Government of India recommend arrangements on the above lines to all Local Governments and Administrations which have not already introduced them."—*The Government of India in their Resolution of 21st February 1913.*

புஸ்தகம்-23.] [சஞ்சிகை-1.

"The Children's Favourite, The Teachers' Help, And the Parents' Guide."

ராக்ஷஸஷூ சித்திரைமீ } விவேக சிந்தாமணி { April May 1915.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

OFFICE OF THE REGISTRAR ... 2 ... MADRAS

THE VERNACULAR AS A MEDIUM OF INSTRUCTION.

வித்தியாபோத சாதனமுறை.

தாய்பாஷையின் சிறப்பு.

"சாதனமின்றிச் சாதிப்பாரில்லை." இது ஒரு உண்மையான பழமொழி. வித்தியா போதம் செய்ய வழியென்ன? அறிவு விசாலிக்கச் செய்வதே வித்தியாபோதமாம். இதற்கு மனமும் இந்திரியங்களும் தத்தம்வேலைகளைக் குறைவறச் செய்யப் பழக்கப்படவேண்டும். மனப்பழக்கத்தில் இந்திரியங்களின் பழக்கமும் அடங்கும். "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்றார் ஔவையாரும். ஆதலால் மனப்பழக்கத்திற்கு இன்றியமையாத சாதனமென்ன? "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றார்: அதாவது சங்கல்ப விகற்பரூபமான மனதின் காரியங்களையறியும் அறிவாகிய எண்ணுதலும் அந்த எண்ணுதலுக்குச் சாதனமாயிருக்கிற கலைகளும் முகத்துக்குக் கண்கள்போல அறிவுக்கு அறியும் கருவிகளாயிருக்கின்றன. எண் என்பதில் கணித சாஸ்திரமும் அடங்குமாதலால் அதைப்பற்றிப் பிரத்தியேகமாகச் சொல்லவில்லை. எழுத்து என்பது எழுத்துக் களிலிருந்துண்டாகும் பாஷா ஞானத்தையும் குறிக்கும்.

மனப்பழக்கம் நன்றாகச்சித்திக்கப் பெறுதல் தானே கல்வி, வித்தை, இங்கிலீஷில் "Education" என்று சொல்வதெல்லாம். அப்படியென்றால் அறிவை விசாலிக்கச் செய்வதென்று பொருள்படும். அறிவு விசாலிக்கப் பார்வை தீக்ஷண்யமாகப் பெறல்வேண்டும். "பார்வையிரண்டுண்டு பஹிர் அஹமுகமென்பர்" என்றதனால் பஹிர்முகப்பார்வையோடு அஹமுகப்பார்வையும் தீக்ஷண்யம் பெறல்வேண்டும். பஹிர்முகப்பார்வை யென்றால் என்ன?

"பார்வை பஹிர்முகம் பரந்தவுலகாராயில்" என்றார். அப்படியே அஹமுகப்பார்வையைச் சுட்டுவான், "பார்வை அஹமுகம் உள்ளுணர்வை யோர்ந்துணரில்," என்று ஓதியுள்ளார். இதையே Objective and Subjective side of Education என்பர். இதையே உலகஞானம் உண்மைஞானம் என்றும் சொல்லுவர் பெரியோர். உலகஞானம் பஹிர் முகம்; உண்மைஞானம் அஹமுகம் அல்லது அந்தர் முகம். மனதை உள்ளும் புறமுமாகத்திருப்பிப்பார்க்கும் சக்திவேண்டும். அதற்கு கலைஞானம் இன்றியமையாத சாதனம். இந்த கலைஞானங்களில் ஒன்று பாஷாஞானம். பாஷாஞானமும் (எழுத்தும்) கணிதமுதலானசாஸ்திர கலைகளும் (எண்ணும்) இரண்டு கண்கள்.

பாஷைகள் அனந்தம்; சப்தம் ஒன்று. அப்படியென்றால்சப்தமாத்திரையாகவுள்ள ஏகதத்துவத்திலிருந்துபிறந்த துவனியும் வர்ணரூபமான எழுத்தும் பலவேறுபட்டிருப்பினும் அவைகளின் மூலம் ஒன்றே. உதாரணமாக "அ" என்கிற எழுத்தின் வர்ணமும் த்வனியும் பல

பாஷைகளில் பலவேறுபட்டிருப்பினும், சப்த மாத்ரையான மூலகாரணம் எல்லாவற்றிற்கும் ஒன்றே. வாயைத்திறக்காமல் அ என்கிற சப்தம் பிறக்காது. இப்படியே ஒவ்வொன்றுக்கும் மூலம் ஒன்று. கலைகள் பலவேறுபட்டிருக்கும். அது எப்படியென்றால், ஒரு விருக்ஷத்துக்கு ஆணிவேர் ஒன்றே மூலமாக கிளைவேர்களும் கப்புக்கிளைகளும் பல விருக்கின்றமைபோல வென்பர். தோற்றப்பிரபஞ்சமெல்லாம் காரணகாரியதோரணையை யனுசரித்து விளங்குகின்றது. காரணகாரிய தோரணையும் "காரணகாரணமாயும் அகாரணமாயும்" இருக்கப்பட்ட மூலதத்துவம் ஒன்றை ஆதாரமாகக்கொண்டு அதிலிருந்துண்டாகி கப்புக்கிளைகளாய் விரிந்துபரவி விளங்குகின்றன. இந்தக் காரணகாரிய தோரணையை உள்ளபடி யுணர அஹமுகப் பார்வை தீக்ஷண்யம் வேண்டும். காரணகாரிய தோரணையின் விளக்கமான தோற்றங்களாம் பிரபஞ்ச மாறுபாடுகளை யுணர பஹிர்முகப் பார்வை தீக்ஷண்யம் வேண்டும். இப்படி அறிவு விசாலிக்க இன்றியமையாத இருபார்வைகளும் "கண்ணிரண்டும் ஒன்றையே காண்கிறான் பார்" என்றதுபோல ஏகமாயுள்ள மூலதத்துவத்தைப் பார்த்துணரவல்லதா யிருக்கவேண்டும்.

பார்வை தீக்ஷண்யம் என்றால் என்ன? சூரியன் ஒளி வீசுகிறான். அந்த சூரியன் வீசும் ஒளியினால் நாம் எல்லாவற்றையும் பார்க்கிறோம். ஆனால் சூரியனிடத்து ஒளியிருப்பதுபோல் நமது கண்ணிலும் ஒளியிருந்தால் தான் கண்ணுக்குப் பார்வை யேற்படும். இல்லாவிட்டால் கண்ணுக்குப் பார்வையில்லை. சூரியப் பிரகாசத்தினால் எல்லாவற்றையும் காண்கிற நம் கண் சூரியனைப்பார்க்க கூசுகின்றது. கழுகின் கண்கள் சூரியனையே நேரப் பார்க்கும் தீக்ஷண்ய முடையவையாயிருக்கின்றன. மனிதரைவிட கழுகுக்குப் பகலில் பார்வை தீக்ஷண்யம் அதிகம். இப்படியே பகலில் காணும் கண் இரவில் விஷயங்களைக் காணக்கூடாமலிருக்கிறது. ஆனால் ஆந்தை முதலிய ஜந்துக்களின் கண்கள் இரவில் நன்றாகப் பார்க்கும் சக்தி வாய்ந்திருக்கின்றன. ஆதலால் ஆந்தைக்கு இரவில் பார்வை தீக்ஷண்யம் அதிகம். இப்படி பகலில் தீக்ஷண்யம் பொருந்திய கண்கள் இரவில் பார்வைகுன்றியும், இரவில் தீக்ஷண்யம் பொருந்திய கண்கள் பகலில் பார்வை குன்றியும் இருக்கிறதைப் பார்க்கிறோம். "உண்மையான பார்வை தீக்ஷண்யம்" என்பது இந்தக் குற்றமின்றி இரவிலும் பகலிலும் நன்றாகப் பார்க்கும் தீக்ஷண்யம் பொருந்தியிருக்கும். இவ்விரண்டு பார்வைக்கும் காரணமாயிருப்பது கண் ஒன்றே. அந்தக் கருவியைப் பழக்க வழக்க விசேஷத்தால் தீக்ஷண்யம் பெறச் செய்வதால் பார்வை தீக்ஷண்யம் உண்டாகிறது. அஃதே போல், மனக்கண் ஒன்று. அது உலகஞானம், உண்மைஞானம் இரண்டும் பொருந்தியதாக விளங்க பஹிர்முகப் பார்வை, அஹமுகப்பார்வை யென்கிற இரண்டும் பூரணமாகப் பொருந்தியதாக விருக்கவேண்டும். இது பழக்க வழக்கத்தாலே சாதனசாதக முறைபற்றிச் சாத்தியமாக சாதிக்கப்பெறல் வேண்டும்.

பகலில் பார்ப்பது விஷயஞானம்; இரவில் பார்ப்பது சூக்ஷ்மஞானம். "இரவு பகலற்ற விடம்" உண்மைஸ்தானம்: அங்கே காண்பது அபேதஞானம். "பார்வை யிரண்டும்" அங்கே ஒன்றையே காண்பதால் "அபேதம்" என்று சொன்னதன்றி இரவுக்குப் பகல் பேதமில்லையென்று சொன்னதில்லை. நிலைக்கண்ணாடியில் காண்கிறவன் கண்ணாடியில் காணும் சாயலும் தன்முகமும் ஒன்றென்றறிந்தால் அது அபேதஞானம். குழந்தை கண்ணாடியில் ஒரு "பாப்பா" தெரிகிறது என்று அஃதை தனக்குவேறாக அறிந்து விளையாடுவது பேதஞானம். இப்படி உருவமும் சாயலும்போல், உண்மையும் தோற்றமும் விளங்குகிறது; அவ்விரண்டையும் ஒன்றாக உணர்வதுதான் அபேதஞானம். இதற்கு "அபேத தரிசனம்" என்று சுருதி கூறுகிறது. இந்த அபேத தரிசனம் தானே "ஞானம்"—அதாவது, உண்மையான அபேதஞானம்.

இந்த ஞானத்தைப்பெறுதலே வித்தியாப்பியாசத்தின் முடிவு. இந்த வித்தியாப்பியாசம் பெறப் பழகுவதே வித்தியாபோதம் அல்லது "பள்ளிப்பழக்கம்" என்று சொல்வது. இந்த பள்ளிப்பழக்கம் பழகுவதில் ஸ்வபாஷையை உபயோகிப்பது நல்லதா அந்நிய பாஷையை உபயோகிப்பது நல்லதா? ஸ்வபாஷை அல்லது தாய்பாஷையே மேலான சாதனமென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் ராஜபாஷையாகிய ஆங்கிலத்தை விட்டுவிடலாமா? என்றால், அதுவும் தேவையென்று எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறபடியால் அதை பாஷாஞானமாகப் பயின்று மற்ற கலைஞானங்களையெல்லாம் பிரதம பாடசாலைகள் நடுத்தரபாடசாலைகளிலன்றி 'செகண்டரி ஸ்கூல்' என்று சொல்லும் உயர்தர பாடசாலைகளிலும் இங்கிலீஷை பாஷாஞானமாகப் போதித்து மற்ற பாடங்களையெல்லாம் பிள்ளைகளின் தாய்பாஷையைக் கொண்டே போதிப்பது உசிதமென்று எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இதைப்பற்றி கனம் ராம ராயனையங்கார் அவர்கள் அரசர் பிரதிநிதி சட்டநிரூபணசபையில் ஒரு தீர்மானம் கொண்டுவர அதைப்பற்றி நடந்த தர்க்கத்தின் சாராம்ஸத்தை வித்தியா மந்திரியாகிய ஸர் ஹார்கோட் புட்லர் அவர்கள் தொகுத்துச் சொன்ன பாகத்தை அப்படியே யெடுத்து முகட்டில் அச்சிட்டிருக்கிறோம். இதைப்பற்றி அபிப்பிராயபேதம் உள்ளதாகத் தென்பட்டதால், இந்த யுத்தம் முடிந்தபின் இதுவிஷயத்தை லோகல் கவர்ன்மெண்டாருக்கும் மற்ற துரைத்தனத்தாருக்கும் அபிப்பிராயத்துக்காக அனுப்ப உத்தேசித்திருக்கிறார்கள்.

பிரதம பாடசாலைகளிலும் நடுத்தர உயர்தர பாடசாலைகளிலும் படிக்கும் சிறுவர்கள் பெரும்பாலும் 15-16 வயசுக்குள்பட்டவர்கள். இவர்களில் பெரும்பாலார் 'ஸ்கூல் லீவிங் ஸெர்டிபிகேட்'பெற்று பள்ளிப்படிப்பை விட்டு ஜீவனார்த்தம் பிழைப்புத் தேடவேண்டியவர்கள். இவர்களுக்கும் சிறுபான்மை காலேஜ் படிப்புப் படிக்க உத்தேசித்து ஸர்வகலாசாலையிற் பிரவேசிக்கும் சில பேர்களுக்கும் பள்ளிப்பழக்கம் மனப்பழக்கத்தை யுண்டுபண்ணியிருந்தால் தான் மேலே தொழிலோ வித்தையோ பயில்வது சுலபமாயிருக்கும். தாய்பாஷையைப் போல் இதற்குச் சாதகமான சாதனம் வேறில்லை. அந்தத் தாய்பாஷையை விட்டு அந்நியபாஷையில் பாடம் போதிப்பதால் பதத்துக்கும் பதார்த்தத்துக்கும் உள்ள சம்பந்தத்தையுணராது கிளிப்பிள்ளைபோல் வாத்தியார் சொல்லிக்கொடுத்ததை நெட்டுருப்போட்டு ஒப்பித்துப் பரீக்ஷை தேறவேண்டியதாயிருக்கிறது. இது வித்தியாபோதனை செய்யும் போதகர்க்காவது வித்தியாப்பியாசிகளாம் மாணாக்கர்களுக்காவது பெருமை விளைப்பதாயில்லை. நான்காவது வகுப்பில் வாசிக்கும் ஒரு பையனை இங்கிலீஷில் Angle (கோணம்) என்று சொல்கிற பதத்துக்கு அர்த்தமென்ன வென்று கேட்டேன். வாத்தியார் சொல்லிக்கொடுத்தபடி பதில் சொல்லிவிட்டான். ஆனால் அதன் பொருள் அவன் மனதில் பட்டிருக்கிறதோவென்று உணர வேறுவிதமாகக் கோணத்

தைக் குறித்துக் காட்டச்சொல்ல ஒன்றும் தெரியாமல் விழித்தான். இப்படிப்பட்ட இங்கிலீஷ் படிப்பினால் பிள்ளைகளின் பாலப்பருவம் வீணில் கழிவதன்றி அவர்கள் மனமும் நற்பயிற்சியின்றி களைமூடிப்பாழாகப் போகிறது. இதனால் தேசத்துக்கு விளையும் தீங்கு சொல்லமுடியாது. இப்பொழுது இங்கிலீஷ் படித்துத் தேறினவர்களில் பெரும்பாலாருக்கு ஸ்வபாஷையில் தங்களினத்தாரோடு பேசவாவது தாங்கள் கற்றவித்தையை இங்கிலீஷ் தெரியாத சாமான்ய ஜனங்களுக்குத் தெரியச் சொல்லவாவது தெரியாது. இதனால் தேசத்தின் யோக க்ஷேமத்துக்கு உண்டாகும் பாதகம் சொல்லிமுடியாது. இப்பொழுது சென்னைக்கு விஜயமாய் வந்திருக்கும் மிஸ்டர் எம். கே. காந்தியவர்கள் பாமரஜனங்களுக்காக அவர்களுடைய யோகக்ஷேமத்தையே பெரிதாக நினைத்து உழைத்துவந்ததால் இப்பொழுது இந்தியாவிற்கு வந்திருக்கும் அவர், ஜனசமூகத்தின் பிரமுகர்களோடு எல்லாம் (Leaders of Society all over India) போராடவேண்டியிருக்கிறது என்று சொன்னார். ஏன்? சமஷ்டி சேவையின் மர்மமறிந்தவர்களுக்கு இதன் அர்த்தம் விளங்குவதுபோல் சாமான்யமாக "நானும் ஊருக்கழைக்கிறேன்" என்றுபேரும் கீர்த்தியும் பெறவேண்டுமென்று ஒப்புக்குழைப்பார் தமக்கு அதன் அர்த்தம் முற்றும் விளங்கமாட்டாது. பூர்வம்தொட்டு இவர்களையே ஒரு பெரியவர் "பெற்றதாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதைகாள்!" என்று விளித்துக் கூறியிருக்கிறார்.

GERMAN "FRIGHTFULNESS"
ஜெர்மானியர் போடும் "பூச்சாண்டி" வேஷம்.

"விவேகசிந்தாமணி யுத்தகாண்டத்துக்கு" இங்கிலீஷில் முன்னுரை யெழுதியிருக்கிற மிஸ்டர் எச். ஓ. டி. ஹார்டிங் துரையவர்கள் German "Frightfulness" என்று நன்றாகப் பேரிடப்பட்ட அவர்களுடைய பூச்சாண்டி வேஷத்தின் உண்மையை உணராமல் நம்மவர்கள் இந்தியாவிலும் ஜெர்மனி இராஜ்யம் ஏற்படுத்த வந்துவிடுமென்று மனோராஜ்யம் செய்து வீண்பேச்சுப் பிதற்றி வருகிறார்கள் என்று சொல்கிறார். ஜெர்மனிபோடும் "பூச்சாண்டி" வேஷம் என்னவென்று முன்னால் எடுத்துச் சொல்வது அவசியம். யுத்தம் என்று ஏற்பட்டால் அரசர்கள் தம் சைனியத்தைக் கொண்டு எதிரி சைனியபலத்தை முறியடித்து அதனால் வெற்றி தோல்வி இன்னார் பக்ஷம் என்று ஏற்படுத்திக் கொள்வார்கள். அப்படிக்கின்றி சைனியத்தில் சேராதகுடிகளைப் பயமுறுத்தவென்று ஆயுதம் தரித்த வீரர்கள் நிராயுதபாணிகளான குடிகளை ஹிம்சித்து பயமுறுத்துவது யுத்த தர்மத்தைச் சேர்ந்ததல்ல. இராக்கொள்ளை, பகற்கொள்ளையிடும் கூட்டக்காரர்கள் இப்படி ஜனங்கள் மனதில் பீதியையுண்டுபண்ணி ஜனங்கள் மனங்குழம்பியிருக்கும் சமயம்பார்த்து அகப்பட்டதைக் கொள்ளையிட்டுக்கொண்டு போவது வழக்கம். அந்த மாதிரி ஜெர்மானியர் யுத்தத்தில் சம்பந்தப்படாதவர்களைக் கொடுமையிழைத்து எங்கும் அவர்களிடத்தில் ஒருவித பீதியுண்டாக்கப் பார்க்கிறார்கள். இதன் முடிவு நோக்கம் என்னவென்றால் சாமான்ய ஜனங்கள் தங்கள் கவர்ன்மெண்டாரிடத்திலிருக்கும் நம்பிக்கையை பிறந்தபோக

வேண்டும் என்பதே. அரசர்கள் பிரஜைகளைக் காக்கக் கடமைபட்டவர்கள். "நாங்கள் சண்டைக்கு வந்துவிட்டோம் உங்கள் கவர்ன்மெண்டால் எங்கள் கொடுமையை அடக்க முடியாது" என்கிற அவர்களுடைய மனோபாவம் சாமான்ய ஜனங்கள் மனதிற் பதிந்தால், அவர்கள் கொள்ளைக்காரனுக்குப் பயந்து உள்ளதைச் சொல்லும் பீதிகொண்ட ஜனங்களைப் போல் இவர்களிடத்துப் பகைபாராட்டி வர்மம் சாதிக்காது இவர்கள் கொடுமைக்குப் பயந்து இவர்களுக்கு வேண்டிய சாதகங்கள் செய்வார்கள் என்பதே.

அந்நியதேசத்தில் படையெடுத்துச் செல்லும் சைனியத்துக்கு ஜனவிரோதம் மிகுதியுமுண்டாதலால் அவர்களுக்கு உணவு முதலிய ஜீவன ஹேதுக்கள் இலகுவில் கிடைக்கமாட்டா. ஊரைக் கொளுத்தி நகரையிடித்து வியாபாரக் கப்பல்களை உடைத்துத் தகர்த்து மூழ்கடித்து இப்படிப்பட்ட கொடுமைகள் இயற்றினால் சண்டையிற் சம்பந்தப்படாத ஜனங்கள் அவர்கள் கொடுமைக்குப் பயந்து சகாயம் புரிவார்களென்பது அவர்கள் எண்ணம். ஆனால் இவர்களுடைய அதர்ம யுத்தத்தின் கொடுமையும் இவர்கள் பூச்சாண்டி காட்டுவதின் மர்மமும் வெளிவரவே, ஜனங்கள் ஊரை விட்டோட நேரிட்டாலும் இவர்ளுக்கு உதவியாக ஒன்றையும் பின்வைத்துப்போகாமல் எல்லாவற்றையும் அவர்களே அழித்துவிட்டுப் "பாழும் ஊருக்கு நரிராஜா" என்று சொல்வதுபோல், பாழான பட்டணங்களில் நரி யூளையிடுவதுபோல், இவர்கள் ஊளையிட்டுக்கொண்டு கிடக்கட்டும் என்று துணிந்து இவர்களுக்கு அதிக பாதகம் விளைக்கிறார்கள்.

*பிரிடிஷ் தீவுகளைச்சுற்றி 'ஸப்மாரின் படகுகளை' வைத்து ஒருவித முற்றுகை போட்டிருக்கிறோம் என்று விளம்பரம் செய்துவிட்டு இந்த "Blockade" என்கிற "மறியல்" முகாந்தரத்தை வைத்துக்கொண்டு சண்டையில் சம்பந்தப்படாத (Neutral) தேசத்தார் கப்பல்களையெல்லாம் உடைத்துத் தகர்த்து நாசம் செய்கிறார்கள். இதனால் அப்படி நாசம்செய்யப்பட்ட கப்பல்களின் ஸ்வதேச கவர்ன்மெண்டாருடைய பொல்லாப்பு நேரிட்டிருக்கிறது. இப்படியாக அமெரிக்காவிலுள்ள யூனைடெட் ஸ்டேட்ஸ் (ஐக்கிய மாகாணங்கள்) ஐரோப்பாவில் ஹாலண்ட், ஸ்விடன் முதலிய தேசங்களில் பொல்லாப்புக் கிடைத்திருக்கிறது. ஹங்கேரிதேசம் ஜெர்மனியோடு சேர்ந்து பட்டது போதும் என்று அவர்கள் நேசத்தை விட்டு நழுவிவிடும்போலிருக்கிறது. துருக்கியிலும் ஜெர்மானியர் கூட்டுறவால் வந்தவில்லங்கம் பொறுக்கமுடியாமல் ஜனங்கள் அவர்களை வெறுத்துவருகிறார்கள். இப்படியாக ஜெர்மானியர் தர்ம யுத்தம் செய்யாமல் அதர்ம யுத்தம்செய்து அக்கிரம அழிச்சாட்டியங்களால் உலகத்தார் வெறுப்புக்குப் பாத்திரராய் வருகிறார்கள். சிறு குழந்தைகளை "பூச்சாண்டி" காட்டிப் பயமுறுத்துவதுபோல் ஜெர்மானியர் அந்நியதேசத்தாரைப் பயமுறுத்தப் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் வேஷம் பலிக்கவில்லை. ஜனங்கள் என்ன அவதிப்பட்டாலும் இந்த கொள்ளைக்காரர்கள் கூட்டம் பூண்டோடு நாசமாகும்வழியொன்றையே பார்க்கிறார்கள். இது பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடிந்த கதையாகத் தானிருக்கிறது. வெறும் முரட்டு பலத்தால் வெற்றி பெற நினைப்பது ஆரம்பத்தில் என்னதான் அனுகூலமாகப்பட்டாலும் கடைசியில் பிரதிகூலமாகவே முடியும், ஏனெனில் ஜடசக்தியை விட சித்சக்தி வலியிற் சிறந்தது.

SOCIAL SERVICE COLUMN:

Mr. GANDHI ON SOCIAL SERVICE.

Mr. Gandhi, who was introduced to the meeting by Mr. T Vijayaraghavachariar, said that he had already heard something of the work which the League had been doing. He began by saying that all social work must be undertaken in a spirit of utter humility and self-sacrifice and instanced Mr. Gokhale who said that to all true public workers, work was its own reward. Absence of recognition or appreciation should not in the least deter a social worker from carrying on his work strenuously and with whole hearted attention. Whatsoever a social worker attempts to do he must not cease his labours till he has carried it out to a successful conclusion. He was against half-hearted social service and said that such work had better not be done at all. Asked what he would advice the members of the League to do who were only able to devote a limited time each week, Mr. Gandhi said, that they should devote at least the few hours they could spare with concentrated attention. He said that if they had the right sort of men undertaking social work, success could certainly be hoped for. ....

"Mr. Gandhi in closing the Conversation said that for social service what was required was not money but men, men of the right sort with right sentiments, with an abiding love and charity and full of faith in their work. If we did have such men, money will come, even unasked. Much social work could be done without any money. It was very difficult for an educated man to understand and appreciate exactly the feelings that prompted the masses unless he retraced his steps; and it was impossible for any man however wealthy to do any social work if he was inspired thereto not by the work itself, but by any feeling of personal ambition. It was easier for a camel to go through the eye of a needle than for such a man to do any effective social service."

Mr. GANDHI ON SOCIAL SERVICE.

சமஷ்டிசேவை சாதனம்.

ஊருக்குழைத்தலாம் சமஷ்டி சேவையைப்பற்றி மிஸ்டர் காந்தியின் அபிப்பிராயம்.

சென்னை "ஸோஷியல் ஸெர்விஸ் லீக்" சங்கத்தார் ஏப்ரல்மீ 25உ ஞாயிற்றுக் கிழமையன்று சாயங்காலம் ரானடே ஹாலில் மிஸ்டர் எம். கே. காந்தியை உபசரித்தழைத்து அவரோடு சம்பாஷித்தார்கள். மேற்படி சங்கத்தின் உப அக்கிராசனாதிபதிகளில் ஒருவராகிய மிஸ்டர் டி. விஜயராகவாச்சாரியர் அவர்கள் மிஸ்டர் காந்தியைப்பற்றிப் பேசியபின் அவர் சம்பாஷிக்கத் தொடங்கினர். மேற்படி சங்கத்தார் செய்யும் வேலையைப்பற்றி அவர் ஏற்கனவே கொஞ்சம் கேள்விப்பட்டிருப்பதாகச் சொன்னபின் "ஸோஷியல் ஸெர்விஸ்" என்று சொல்லும் ஊருக்குழைத்தலாம் சமஷ்டி-சேவையிலிறங்கி யுழைப்பவர்கள் எப்படி அந்த வேலையைச்செய்ய வேண்டுமென்று இலக்ஷணங்கூறிப் பேசினர். ஊருக்குழைப்பது ஒரு சேவகம்: அதுவும் தேவாராதனையாகச் செய்யத்தக்கது. இதற்குத்தான் "சமஷ்டி சேவை" என்று சொல்லுகிறது. இந்த 'சமஷ்டிசேவை"யும் ஒரு சாதனமேயன்றி ஸாம்ராஜ்யமில்லை. பகவான் அருள்பெற்று அவரது பிரபஞ்சக்கூத்தை யுள்ளபடியுணர்ந்தறிந்து தொழுவதே முடிவு. அதற்கு இது ஒரு வழி. ஆகையால் சமஷ்டிசேவைஸாதனமாக ஊருக்குழைப்பவர்கள் அஹம்பாவத்தை யடக்கித் தன்னைக் கொடுத்துச் செய்யும் திருப்பணிவேலையாக அவர்மேற்போட்டுக் கொண்ட வேலையைச் செய்யவேண்டியது அவசியம் என்றார். இதற்கு உதாரணமாக மிஸ்டர் கோபால கிருஷ்ண கோகலே வேலை செய்து வந்த முறையை யெடுத்துச் சொன்னார். பொது வேலை (சமஷ்டி சேவை) செய்கிறவர்களுக்கு

செய்கடனைச் செய்தல்தானே வெகுமானமாகும். இப்படிச் செய்கிற வேலைக்கு "கிருதகிருத்தியம்" என்று சொல்கிறது. இந்த உயர்பாவத்தில் உழைப்பதற்கு "கிருதகிருத்தியபூசனை" யென்று சொல்கிறது. கிருதகிருத்தியபூசனை புரிகிறவர்கள் செய்கடனைச் செய்தடைந்த திருப்தி விசேஷத்தால் "சிந்தாமணி க்ரஹப்ரவேசம்" பெறுகிறார்கள். அப்படியென்றால் "எண்ணினார்க்கெண்ணினபடியிருந்தருளியும்" தேவியின் வாசஸ்தானமாகிய சிந்தாமணி க்ரஹத்தில் நுழைந்து தேவியின் சாமீப்ய சேவைபெற யோக்கியராகிறார்கள்-என்றபடி. தேவியென்றும், சித் என்றும் அறிவு என்றும் சொல்வதெல்லாம் ஒன்றையே குறிக்கும். அதுவே பிரவிருத்திமார்க்கத்தில், அதாவது பிரபஞ்சக்கூத்தில் "ஆதி" யாகவும், நிவிருத்திமார்க்கத்தில், அதாவது அநுக்ரஹம் செய்யும் திருவருட்கூத்தில் "அனாதி" யாகவும் விளங்கும். ஆதியாய் விளங்கும்போது ஆதிசக்தியென்றும் அனாதியாகவிளங்கும்போது அருட்சக்தி அல்லது சித்சக்தி யென்றும் சொல்லுவர். முன்னது மாயாஸஹிதமானது: பின்னது மாயாரஹிதமானது; மாயையென்றால் காரணகாரிய தோரணையின் மாறுபாடுகளால் மயக்கத்தை யுண்டுபண்ணுவது என்று பொருள் கூறலாம். இந்தமயக்கம் "அறியாமை" உள்ள மட்டும் தான் உண்டு. அறியாமை நீங்கி அறிவு உதயமாகி "மனத்தெளிவு" ஏற்பட்டால் அது இருந்தவிடம் தெரியாது மறைந்துவிடும்.

சமஷ்டிசேவை சாதனமாக ஊருக்குழைப்பவர்கள் தாம் செய்யும் வே[illegible] கரித்தாலும் சரி, [illegible]ல் மனஞ்சோர்ந்து தொட்டகாரியத்தை முடிக்காது கைநழுவவிடமாட்டார்கள். மனஞ்சோர்ந்தாலன்றி கைசோராது. டாம்பீகார்த்தம் உழைப்பவர்கள் இந்த வேலைக்கு அருகரில்லை. அரைகுறைவேலையும் பிரயோசனமில்லை. தொட்டகாரியத்தைப் புகழ், இகழ், இரண்டையும் மதிக்காமல் தொடுபிடியாய்த் தொடர்ந்து முடிப்பதுதானே சமஷ்டிசேவை லக்ஷணமாம். ஆகையால் வினைத்தது முடிக்கும் ஆற்றல் இல்லாதவர்கள் 'ஊருக்குழைக்கிறேன்' என்று கிளம்புவதும் வீண்வியர்த்தமே.

"சென்னை ஸோஷியல் ஸெர்விஸ் லீக்" மெம்பர்களுக்கு வாரத்துக்கு ஒருமுறை இருமுறை சிலமணிநேரம் தான் ஊருக்குழைத்தல் சாத்தியமாயிருப்பதால் அவர்கள் என்ன செய்ய வேண்டியதென்று கேட்டார்க்கு மிஸ்டர்காந்தி சொன்ன பதில் நன்றாக கவனிக்கத்தக்கது. செய்கிறவேலையை ஏகாக்ரசித்தத்தோடு செய்ய வேண்டும் என்றார். வாரத்துக்கு ஒருதரம் கூட்டம் கூடி காபி தேயிலேயோடு சிற்றுண்டிகள் உண்டு சந்தோஷமாகப் பேசிப்போதல் ஏகாக்ரசித்தத்தோடு உழைத்தல் ஆகாது. மனதை ஏகாக்ரப்படுத்தி ஒருவழியில் செலுத்தி 'சித்தவிருத்திநிரோதத்தால்' மனம் சிதறிப்போகாமல் காத்து தியானயோகத்தில் விஷயத்தைக் கிரகத்து தியேயாகாரமாகி மனம் சிந்தாமல் சிந்திக்கக்கற்றாலன்றி "வினைத்தது முடிக்கும் ஆற்றல்" உண்டாகாது.

"ELEVATION OF THE DEPRESSED CLASSES."

தாழ்ந்தாரை வாழவைக்கும் விஷயமாய் உழைக்கிறவர்கள் தாழ்ந்தார் மனோபாவங்களை அவர்கள் தாழாமற் றாழ்ந்துணர்ந்தாலன்றி அவர்களைக் கைதூக்கிவிட முடியாது என்று சொன்னார். இன்னும் ஏழைகளுக்குப் பிரதமவித்தை போதிப்பதைப்பற்றி அவர் அபிப்பிராயத்தை வெளியிட்டபின் சுகாதார விஷயமா யுழைக்கப் படிப்புவேண்டுமென்பது அவசியமில்லை. எழுத்து வாசனை யறியாதவர்களும் சுகாதாரவிஷயங்களை யறிந்து சௌக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்ளத் தக்கவர்களாயிருக்கிறார்களாதலால் அந்தவழியில் புகுந்துழைக்க வேண்டியவேலை நிரம்ப இருக்கிறது என்றும், அந்த வேலை [illegible] பெரும் [illegible] அவர் ஊருக்குழைக்கப் பணம அவசியம் என்று நினைப்பது பிசகென்றும், பணத்தைவிட மனிதர்கள்தான் தேவையென்றும், சரியான மனிதர்கள் மட்டுமிருந்தால் பணம் அவசியமானபோது தானே வரும் என்றும் சொன்னார். சமஷ்டிசேவை சாதனமாகச் செய்யத்தகும் பொதுவேலைகள் பெரும்பாலும் பணமின்றிச் செய்யலாகுமென்றும் பணத்தையே பிரதானமாகக் கொண்டு குணத்தை இரண்டாம்படியில் வைத்துழைப்பது சரி

யானமுறையில்லையென்றும் சொன்னார். படித்தவர்கள் படிக்காதவர்களான சாமான்ய ஜனங்களுக்கு உதவிபுரியவேண்டுமானால் அவர்களுடைய மனோபாவத்தை யறிந்துழைக்கவேண்டுமென்றும், அதற்கு அவர்கள் படியாதவர்கள் ஸ்தானத்தில் தாங்களிருக்கக்கற்றாலன்றி அவர்கள் மனோபாவத்தை யறிவது அசாத்தியமென்றும் சொன்னார். பாமரஜனங்களுக்குச் சுகாதாரபோதனை செய்யவேண்டுமென்று அவர்கள் மனோபாவத்தை யறியத் துணிந்துழைத்ததினால்தான் இதை யெழுதுமவர் கைவல்யமுக்த ஸத்யாநந்த சாந்த அவதூதாத்ம தரிசனம்பெற்று அவரது கடாக்ஷ வீக்ஷண்ய தீக்ஷா பலத்தால் சமஷ்டிசேவையின் மர்மமறிந்து ஈசுவர சங்கல்பம் என்பது என்னமாய் நிறைவேறுகிறது என்பதை யுணரலானார். அதைச் சிறுவர்களுக்குப் போதிக்கலாமென்றால் கற்றறிமோழைகளாயுள்ளோர் வேதாந்தமென்றும் சித்தாந்தமென்றும் வார்த்தையின் அர்த்தம் தெரியாமல் பிதற்றுகிறார்கள். "நாய் குலைத்து நத்தம் பாழாமா?" என்கிற பழமொழியொன்றுண்டு. அதுபோல அறியாதவர்கள் அதிகாரதோரணைகாட்டி "அபத்தம்" "அநர்த்தம்" என்கிற குற்றங்களுக்காளாகி அக்கிரம காரியங்கள் செய்தால் அதனால் ஸ்வாமி காரியம் (ஈசுவர சங்கல்பம்) தடைப்பட்டு நின்றுவிடாது. "நெல்லுக்கிறைக்கும் நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்குமங்கே பாயுமாம்" என்றுள்ளபடி நாம் நல்லகாரியம் ஒன்று செய்யப்போனால் பொல்லார்க்கும் அது சிறிது காலம் சாதகமாகவே அமையும். ஆனாலும் பாதகமில்லை. ஏனெனில் நெல்லும் புல்லும் ஒன்றாய் விளைந்தாலும், புல் களையே யாகுமன்றிப் பயிராகாது. களைபிடுங்க சாத்தியப்படாவிட்டாலும் அறுவடைகாலத்தில் நெல்லை களையை முதலில் அறுத்து அடுப்பில் போட்டுவிடுவார்கள். இதனுண்மையை யேசுகிறிஸ்துவும் பயிரும்களையும்* என்கிற உபாக்கியானத்தில நன்றாகச் சொல்லியிருக்கிறார்; பிரவிருத்திதர்மத்தை பிரகிருதி மூலமாகவே போதிக்கவேண்டுமாதலால், பயிரையும் களையையும் உவமானமாகச் சொல்லி அதற்கேற்ற உவமேயத்தை விவேகிகள் அறிந்துகொள்ளட்டுமென்று விட்டுவிட்டார்.

பணக்காரர்கள் நம்மிடத்தில் பணம் மிகுதியாக விருக்கிறது; ஆகையால் நாம் ஊருக்கு பகாரமாயுழைப்போமென்று பணச்செருக்கால் ஊருக்குழைக்கப் புறப்பட்டால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று சொன்னார். ஏனெனில் சமஷ்டி சேவையில "கர்மதர்மம்" லக்ஷியமேயன்றி தர்மத்தை விட்டுள்ள கர்மம் லக்ஷியமில்லை. பணச்செருக்கால் ஊருக்குழைப்போமென்கிறவர்கள் "சமஷ்டி சேவை" செய்து முடிப்பதிலும் ஒட்டகை ஊசியின் காதில் புகுந்து புறப்படுவது எளிதாகும் என்று சொன்னார். ஆகையால் பணக்காரர்கள் பணக்குவியல்சேர்த்துக்கொண்டேயிருக்க அதைவிட்டு லக்ஷியம் மாறாமல் ஊருக்குழைக்கிறேன் என்று புறப்படுவது ஒட்டகை 'நான் ஊசியின் காதுவழியாகச் சென்று விடுகிறேன்' என்று புறப்படுவதுபோலாமென்பதைச் சொல்லாமற் சொல்லி நன்றாக வற்புறுத்தினார்.

மிஸ்டர் காந்தி ஊருக்குழைப்பதைச் சமஷ்டி சேவை சாதனமாகக் கொண்டுழைத்துத் தேர்ந்தவர். அவருடைய தர்மபத்தினியும் அப்படியே. அவர் ஜெயிலுக்குப்போக நேரிட்டதைப்பற்றி அவர் தம்மைப்பார்க்க வந்த ஒரு பெண்பாலுக்குச் சொன்ன வாக்கு ஆணித்திறமானவையாக விருந்தது. அது இது:—

"மிஸ்டர் காந்தி ஜெயிலிலிருந்தபோது நீர் என்ன செய்தீர்?" என்று வந்தவர் வினவ, அதற்கு ஸ்ரீமதி காந்தி அம்மாள் அளித்த விடை அவர் குணத்துக்கிசைந்ததாயிருந்தது.

"அது எனக்குத் தெரியாது. ஏனெனில் அவருக்கு முன்னால் நான் ஜெயிலுக்குப்போனேன். ஏன்? என்று கேட்பீரோ, சொல்கிறேன் கேளும்: நான் 12-வயதில் எனது பர்த்தாவை மணம் புரிந்தேன், நாற்பது வருஷகாலம் அவருக்கு தர்மபத்தினியாகவிருந்து [illegible] தர்மிணியாக வாழ்ந்துவந்தபின் இது "விவாகம்" ஆகமாட்டாது, பிறந்தகுழந்தைகள் சத்சந்ததியாகமாட்டார்கள் என்றால், இதைச் சட்டமாக மதித்துப் பொறுப்பது கூடாமையாகிவிட்டது. ஆதலால் இச்சட்டத்தை யேற்றுக்கொள்வதைவிட இதைமீறி நடந்து ஜெயிலுக்குப் போவதே உத்தமமாகத் தோன்றியது. தோன்றவும் தோன்றியபடி செய்தேன். மற்றவர்களும் அப்படியே செய்தார்கள். இப்பொழுது அந்தச் சட்டம் ரத்தாய்விட்டது" என்றார்.

* "Parable of the Wheat and the Tares."

மாக்ஷிமைதங்கிய நம் சக்ரவர்த்தி ஜியார்ஜ் அரசரின் பால்ய சரித்திரம்.

THE EARLY LIFE OF OUR KING-EMPEROR.

இப்பொழுது நமது சக்ரவர்த்தியாக விருக்கும் மாக்ஷிமைதங்கிய ஜியார்ஜ் அரசர் அவருடைய தகப்பனார் ஏழாவது எட்வர்ட் அவர்கள் விக்டோரியா மஹாராணியவர்களுக்குப்பின் பட்டத்துக்கு வந்தபொழுது அவருடைய தமயனார் மரணத்தினால் இவர் தம் தகப்பனாருக்குப் பின் பட்டத்துக்குரியவராய் "வேல்ஸ் இளவரசர்" என்னும் பட்டம்பெற்று விளங்கினார். அப்பொழுது யுவராஜாவாக விளங்கின அவருடைய சரித்திரம் அச்சமயம் விவேகசிந்தாமணியில் வெளியானபடி இப்பொழுது வாசிக்க அநேகருக்குப் பிரியகரமாயிருக்குமென்று அவருடைய சரித்திரத்தை அப்படியே யெடுத்துக் கீழே பிரசுரிக்கிறோம்.

H. I. M. KING GEORGE V IN ADMIRAL'S UNIFORM.

கப்பல்படைத் தலைவர் உடையில்.

H. I. M. GEORGE V IN THE UNIFORM OF THE INDIAN ARMY.

இந்திய இராணுவ உடையில்.

ஜார்ஜ் அல்பர்ட் என்னும் இயற்கை நாமங்கொண்ட இவர் 1865-ம௵ ஜூன்மாதம் 3-ம் தேதியில் லண்டன் நகரில் மார்ல்பரோ ஹௌஸ் என்னும் அரண்மனையில் ஜனித்தார். இவர் பால்யத்திலேயே பரிதாபமாகக் காலம் சென்ற இவரது தமயனாராகிய கிளாரன்ஸ் பிரபு வென்னும் இராஜகுமாரருக்கு ஒன்றரை வயதுக்கு இளையவர். இவர் தம் பாலியத்தில் தமது தமயனாரைப்போலவே படிப்பு முதலிய விஷயங்களில் சற்றும் பேதமின்றிப் பயிற்றப்பட்டு அவருக்குத்தோழனாகக் கலந்து நேசித்து வந்தனர். அதிபால்யத்திலேயே மாலுமி வேலையிற்பயிற்றப்பட்டுக் கப்பலில் போக்குவரவு செய்வதில் இயற்கையான விருப்பமுடையவராயினர். தமது பன்னிரண்டாவது வயதில் 'பிரிட்டானியா' என்னும் படைக்கப்

பலில் வேலை பயிலப் பிரவேசித்து இரண்டு வருஷம் அங்கிருந்து அதிகமுயற்சியோடு கற்க வேண்டிய விஷயங்களையெல்லாம் ஐயந்திரி[illegible]கொண்டனர். அக்காலத்தே இவருக்கும் அங்கே வேலை பயில வந்திருந்த மற்றவர்களுக்கும் எவ்வளவேனும் வித்தியாசம் காட்டப்படவில்லை. படுக்கைக்கு மாத்திரம் இவருக்கும்இவர் தமயனுக்கும் தனித்தனியே ஒரு அறை கொடுக்கப்பட்டிருந்தது. அவ்விரண்டு வருஷகாலமும் தினந்தோறும் காலை ஆறரைமணிமுதல் மாலை ஒன்பதரைமணி வரையிலும், உழைத்து வேலை செய்வதும் உரிய மேலதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலும் ஆரோக்கியமான தேகமுயற்சிகளையெடுத்துக்கொள்ளலுமாகக் காலம் சென்றது.

பின்பு கிரமப்படியே கப்பற்படையில் உத்தியோகத்திற் பிரவேசித்து இரண்டுவருஷகாலம் பூமியைச்சுற்றி யாத்திரைசெய்து வந்தனர். அந்த யாத்திரை அவருக்கு மிகவும் பிரயோசனப்பட்டது. சமுத்திரத்துக்கு அப்பாலுள்ள பிரிட்டிஷ் ராஜ்யங்கள் அநேகங்களைக்கண்டு ஜனங்களின் குணகுணங்களையும் பிரத்தியக்ஷமாகத் தெரிந்துகொண்டனர். இதன்பின் இராஜகுமாரர் 'கேடா' என்னும் இன்னொரு மரக்கலத்திற் பிரவேசித்து வட அமெரிக்கா கண்டத்தில் வேலைபார்த்துவந்தனர். அதன்பின் வேறு மூன்று மரக்கலங்களிலும் வேலை பார்த்துப் பழகித் தாம் கொடுக்கவேண்டிய பரிக்ஷையில் வெகுமேன்மையாகத் தேறினார்.

அரசகுமாரருக்குப் பரிக்ஷை தேறுவதற்கும் வேலையுயர்வதற்கும் என்ன அட்டி. வெகு சுலபமாக ஆகுமென்று சிலர் எண்ணக்கூடும். அப்படியெண்ணுதல் சரியன்று. இராஜகுமாரராயினும் யாவராயினும் சரி தக்கபடி வேலைக்குத் தகுதியில்லாதபக்ஷத்தில் வேலை உயரமாட்டாது. தாழ்ந்தவேலைகளிலேயே தானிருக்க வேண்டும்.

1890-ம் ௵த்தில் இளவரசர் மேற்கிந்தியர் தீவுகளில் ஒரு போர்ப்படவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டு அதில் உள்ள உத்யோகஸ்தர்களும் படைவீரர்களும் தம்மை நேசித்துத் தம்மேவலில் திறம்பாமல் நிற்கும்படிச் செய்துகொண்டனர். இதன்பின்பு சம்பவித்த ஒரு காரியத்தினாலே இவரது நிலைமுற்றும் மாற வேண்டியதாயிற்று. 189'-ம் ௵ தமக்கும் தமயனாருக்கும் கொடிய சுரமடித்து அச்சுரத்தில் தம் தமயனார் இறந்துபோனதினால் தாமே தம் தந்தையாருக்குப்பின் இராஜபட்டத்துக்கு உரியவராகி அந்நிலைமைக்கடுத்த அநேக கடமைகளையும் பொறுப்புக்களையும் மேற்கொள்வாராயினர். 1892-ம் ௵த்தில் யார்க்குப் பிரபு என்னும் பழய பட்டமொன்று புதுப்பிக்கப்பட்டு இராஜகுமாரருக்கு அளிக்கப்பட்டது. இக்காரணங்களால் இராஜகுமாரர் தமது மாலுமி உத்யோகத்தை விட்டுவிடலாயினர். அதனை விட்டுப்பிரிதற்கு இஷ்டமில்லையாயினும் அவசியம் விட்டுப் பிரியவேண்டி வந்தது.

பின்பு அவ்வருஷத்திலேயே மேயென்னும் ராஜ கன்னிகையை மணம்புரிந்தனர். அக்காலத்தில் ஜனங்கள் காட்டிய ராஜபக்தியும் குதூகலமும் சொல்லவேண்டுவதில்லை. அத்தினத்தை உற்சவதினமாகக் கொண்டாடும்படிப் பறையறைந்து அறிவிக்காவிடினும்ஜனங்கள் ஸ்வயமாகவே மஹோத்சவம் கொண்டாடினார்கள். விவாகமானபின்பு சந்திரிங்காமென்னும் தமது பிதாவின் கிராமத்துள்ள ஒரு பவனத்தில் மனைவியும் தாமுமாகவசித்து வந்தனர். இங்கு இவருக்கு முதல் புத்திரர் பிறந்தபோது இவ்வரண்மனையில் இடம் போதாமல் போனமையால் கட்டிடங்கள் சிறிது சேர்த்து விசாலமாக்கப்பட்டது. இப்போதிவ் வரண்மனை வேண்டியபடி விசாலமாயிருப்பினும் இவருடைய உயர் நிலைமைக்குப் போதுமானதன்று ஆயினும் அதனைவிட்டுப் பிரிய இஷ்டமில்லாதவராய் அங்குதானே இருந்து வருகின்றார். மனைவிமக்களோடு சுகித்திருந்து

அடையும் இன்பங்களை இராஜகுமாரரினும் அனுபவித்துக் கண்டவர் ஒருவருமில்லையென்றுசொல்லலாம். தமக்குப் பிரியமாகிய மனைவிமக்களோடு மகிழ்ந்து வாழ்தலினும் உயர்ந்த சுகம் உலகில் இல்லை. "தாம்வீழ்வார் மென்றோள் துயிலினிது சொல், தாமரைக் கண்ணா னுலகு" என்றும் "மக்கள் மெய் தீண்டல்உடற்கின்பம் மற்றவர்தம் சொற் கேட்டலின்பம் செவிக்கு" என்றும் சர்வமும் தெரிந்த திருவள்ளுவநாயனார் இவ்வில்லறச் சுகத்தைச் சிறப்பித்திருக்கின்றாரன்றோ? மனுஷியன் எவ்வளவு கஷ்டங்கள் அடைந்தபோதிலும் எவ்வளவு தாபத்திரயங்களில் வருந்தினபோதிலும் இச்சுகத்தால் அவ்வளவும் மறந்துபோமன்றோ? இச்சுகம் அரசர்க்காயினும் எளிதிற்கிடைக்கக்கூடியதன்று. இளவரசர் இப்பாக்கியத்தையும் இச்சுகத்தையும் பெற்றிருப்பது மிகவும் சிலாக்கியமானதே. இராஜகுமாரர் தம் குழந்தைகளை வெகு அருமையாக மதிப்பவர். அவர்களோடு ஓடியுலாவுதலிலும் பிரியமானது அவருக்கு வேறொன்றில்லை. பலதடவைகளில் அவர் தெரிந்துகொள்ளும்படியான இலகுவானவார்த்தைகளில் பற்பல விதமான கதைகளையும் அவர்களுக்குச் சொல்லுவார். மூத்தபிள்ளைகளிருவரும் இவரை அடிக்கடிகேட்கும் கேள்விகளுக்கு முடிவில்லை. அக்கேள்விகளுக்கெல்லாம் தம்தந்தைக்கு அவசியம் மறுமொழி சொல்லத் தெரிந்திருக்க வேண்டுமென்பது அவருடைய உத்தேசம். சில வேளைகளில் அவைகளுக்குத் தகுந்த மறுமொழி சொல்லத் தெரியாமல் இளவரசர் விழிப்பதும் உண்டு.

இளவரசர் பிள்ளைகளுக்குச் சுலபமாகவும் இனிமையாகவும் போதிக்கும் வழியாகிய கிண்டர்கார்டன் போதனை முறையில் நல்லநம்பிக்கைகொண்டவர். இந்த மார்க்கத்தை இராஜ குழந்தைகளுக்கு அதிபால்யத்தில் தானே உபயோகப்படுத்திப் பிள்ளைகள் தவழ்ந்து செல்லும் கம்பளங்கள் கூட பார்வைக்குப் பயங்கரமாகாமற் போனாலும் உயிருள்ளவை போன்ற பற்பல ஜந்துக்களின் உருவங்களால் சித்திரிக்கப்பட்ட வருணத் துணிகளால் அலங்கரிக்கச் செய்திருந்தனர். இதனால் அம்மிருகங்களின் பெயர்களை அக்குழந்தைகள் சுலபத்தில் கற்றுக்கொண்டபின் அவற்றின் குணம் செயல்களைப்பற்றிப் பெற்றோர்களோ அல்லது செவிலிமார்களோ வேடிக்கையாக அநேகவிஷயங்களைப் போதிப்பார்கள்.

இளவரசருக்குப் பிள்ளைகளைவளர்ப்பதில் வெகு சிரத்தையுண்டு. அவர்களைப்பற்றி நிரம்ப கவலையெடுத்துக்கொள்வார். அவர்களுக்காகப் பொம்மை முதலிய விளையாட்டுக்கருவிகளைத்தாமே நேரில்சென்று வாங்கிக்கொண்டு வந்து கொடுப்பார். காலைவேளைகளில் வெய்யில் இதமாய் அடிக்கும்போது பிள்ளைகள் குதிரை மேலேறிச் சவாரிச் செய்துவரவாயினும், வண்டியிலேறி உலாத்திவரவாயினும் அவர்களைத் தாமே யேற்றித் தக்க பந்தோபஸ்தோடு அனுப்பிப்பார். எட்வர்ட் என்னும் குழந்தை குதிரையேற்றத்தில் தம் தந்தையார் தன்னளவாயிருந்தபோது எவ்வளவுபயமின்றிச் சாமர்த்தியம்காட்டி வந்தாரோ அவ்வளவு தாமும் சாமர்த்தியம் காட்டுவார்.

இளவரசருக்கு விருப்பமானகாரியம் இரண்டொன்றுண்டு. அவற்றில் ஒன்று விவசாயம். இவ்விஷயத்தில் இவர் தம் தந்தையாரையும் பாட்டனாரையும் கொண்டிருக்கிறார். சாந்திரிங்காம் அரண்மனை தமது சுவாதீனத்தில் வந்தவுடனே அதற்குச் சமீபத்தில் சிறிதுநிலத்தை வாங்கி உழுதுபயிர்செய்ய ஆரம்பித்து உயர்ந்த ஜாதியான மாடுகன்றுகளையும் சேகரித்துத் தமக்கு இஷ்டமான ஓர்தொழிலையேற்படுத்திக்கொண்டதே யல்லாமல், யதா ராஜா ததாப்பிரஜா என்றபடி தம்மைக்கண்டு மற்றவர்களும் இவ்விவசாயத்தொழிலிலும் மாடுகன்றுகளைவளர்ப்பதிலும் விசேஷவிருப்பங்கொள்ளவும் ஏதுவாக்கினர். இது தவிர இவருக்கு இஷ்டமாகிய இன்னொருகாரியம் மூத்தி

ரைகளைச் சேகரிப்பது.* இறந்துபோனதும் இப்போது வழக்கத்தில் உள்ளதுமான அநேக அருமையான முத்திரைகள் இவரிடத்தில் இருக்கின்றன. இவற்றை இவர் பற்பலதேசங்களிலிருந்தும் தமது பிள்ளைப்பருவம் முதலாக முயன்று சம்பாதித்து வைத்திருக்கின்றார். இவர் தாம்செய்ய மேற்கொள்ளும் ஒவ்வொரு காரியமும் அரைகுறையாகாமல் பூர்த்தியாகச் செய்து முடிப்பவரென்பதற்குச் சாக்ஷியாக இவ்விஷயத்தைப்பற்றின வேலைமுழுதும் இவர் தம்மையாலேயே சொந்தமாகச் செய்திருக்கும் சங்கதியை எடுத்துச்சொல்லலாகும். முத்திரைகளைத்தாமே சேகரித்து அவற்றைப் புத்தகங்களில் தாமே யொட்டி அவற்றைப்பற்றின விவரங்கள் யாவும் விசதமாய் விசாரித்துத் தெரிந்துகொண்டிருக்கின்றனர். இன்னொரு விஷயம் இவருக்குப் பிரியமானது குதிரையேறிச் சவாரி செய்தலும் கால்நடையாக நடந்துலாவுதலுமாம். சந்தரிங்காமில் இருக்கும்பொழுது காரியத்தொந்தரவால் மனங்கொண்டபடி நடக்க இசையாவிடினும் போதுமான சௌகரியங்கள் உண்டு.

இவர் லண்டன் நகரில் வந்திருக்கும்பொழுது பூர்வம் விக்டோரியா மகாராணியவர்களது பெரியதாயார் வசித்துவந்ததாகிய 'யார்க்குஹௌஸ்' என்னும் அரண்மனையில் தங்கியிருப்பது வழக்கம். இவரோடு அடுத்துப்பழகினவர்கள் அனைவர்க்கும் இவர் இங்கிலீஷ் ஜாதியாருக்குரிய சிறந்த மேலான குணங்களையுடையவர் என்பது நன்குதெரியவரும். இவர் கபடமற்றவரும், உதாரகுணமுடையவரும், சோம்பில்லாதவரும், முறைவழுவாதவரும், வேடிக்கைப்பேச்சில் இச்சையுள்ளவரும், தயாளகுணமுள்ளவரும், தம்மையடுப்பவர்களைத் தம்நெறியில் செலுத்தவல்லவரும் ஆவார். இவர் மாலுமியாய் இருந்த காலத்தில் அநேகருக்குத் தமது தைரியத்தினாலும் நேர் நடக்கையினாலும் மனத்தளர்ச்சி நீக்கி உதவிசெய்திருக்கின்றனர். இவர் கடற்படையில் சேர்ந்து உத்தியோகம் செய்துவந்தகாலத்தில் தமக்கிட்ட வேலையைத் தட்டவடாமல் முயன்று செய்தவரென்று மற்ற உத்தியோகஸ்தர்களெல்லாரும் இன்றும் மெய்ச்சிக்கொள்வார்கள். அக்காலத்தில் ஆரோநவாபு ஒருவர் அரசியின் பேரப்பிள்ளை கப்பலில் வேலையாயிருப்பதைக் கண்டுபோகவேண்டுமென்று வந்திருந்ததாகவும், அவ்விடத்தில் தம்மை இன்னாரென்று உருவம் தெரியாதபடிக் கரியும்புழுதியும் மூடியிருக்கக் கண்டு அவர் அடையாளம் கண்டு பிடிக்கமாட்டாமல் திகைத்துப்போனாரென்றும் இளவரசர் தாமே வேடிக்கையாகச் சொல்லிச் சிரிப்பார். அப்போது இவர் நிலக்கரி எடுக்கும் ஆட்களைச் செலுத்திக்கொண்டிருந்ததனால் தாமே கரியைவாரி எடுத்தவர்போல உடம்பெல்லாம் புழுதியும் கரியும் படிந்திருந்ததனால் வந்த நவாபுக்கு அடையாளம் தெரியாமல் போனது ஆச்சரியமல்ல.

இவர் மாலுமிகளால் நேசிக்கப்பட்டதுபோலவே இங்கிலீஷ் ஜனங்களில் ஒவ்வொருவராலும் விரும்பி நேசிக்கப்படுகின்றனர். இவர் சபைகளில் நின்று பேசும்போது கணீரென்று தெளிவாகவும், தைரியமாகவும், மனசில் உள்ளதைக் கபடமில்லாமல் வெளியிட்டுச் சபையோர்கேட்டு ஆனந்திக்கும்படிப் பேசுவார். இவர் பேச்சைக்கேட்கும்போது இவர் நன்றாகப் படித்தவரென்றும் லோகவியவகாரங்களில் நிரம்பப் பிரஜ்ஞையுள்ளவரென்றும் புலப்படும். இவருக்கு வேல்ஸ் இளவரசென்னும் தம் பிதாவின்பட்டம் இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கிறது. இவர் சமீபகாலத்திலே அங்கிலேய மகாராஜ்யத்தைச்சுற்றிப் பிரயாணம் செய்து திரும்பி வந்துளார். இப்படிப்பட்ட அரசர் சிங்கமே இப்பொழுது நமக்கு சக்கரவர்த்தியாகவிருக்கிறார். டிலஹிதர்பார் காலத்திலும் பின்னும் அனேக சந்தர்ப்பங்களிலும் இவர் பேசியவைகிவர் குணலக்ஷணங்களைச் சிறப்பித்துக்காட்டியது தானே விளங்கும். இவர் மாலுமியுடையில் எடுத்துக்கொண்ட படம் ஒன்றை இந்தியாவுடையில் எடுத்துக்கொண்டபடம் ஒன்றையும் இதன் முகட்டில் பிரசுரித்திருக்கிறோம்.

* Philately or Stamp Collecting.

HARISCHANDRA:
A CHARACTER SKETCH.
அரிச்சந்திர மஹாராஜாவின் குணாதிசயங்கள்.

ஒவ்வொரு தேசத்தாருக்கும் ஒவ்வொரு மதத்தாருக்கும், அவர்களால் எவ்வளவு அடையக்கூடாதபடி உயர்ந்திருப்பினும், உண்மை, நீதி, வண்மை, பொறுமை, வீரம் முதலான தர்மங்களுக்கு மேற்கோளாக ஒன்று ஏற்பட்டிருத்தல் அவசியமாகும். மற்றத் தேசத்தார்கள் வேறு என்னென்ன தர்மங்களுக்கு என்னென்ன மேற்கோள்களைப் பெற்றிருப்பினும் இந்துக்களாகிய நாம் அரிச்சந்திரனென்னும் இம்மகா புருஷனிடத்துப்பெற்றிருத்தல்போலச் சத்தியத்துக்கு மேற்கோளாக இவ்வளவு உத்கிருஷ்டமான தொன்றைப் பெற்றிலர் என்பது நிச்சயம். நமக்குட்டானேயும் தருமபுத்திரர் தசரதர் முதலான அநேகர்கள் சத்தியத்திற் சிறந்தவர்களாகக் கூறப்படினும், அவர்களும் இவ்வரிச்சந்திரனுக்கு நிகராகார்கள் என்பது நிச்சயம்.

அரிச்சந்திர மகாராஜாவின் கதையை நம் தேசத்தில் ஆபாலவிருத்தம் அறியாதவர் ஒருவருமில்லை. வாசனைத் திரவியங்களின் மணமும் பெருமையும் அவற்றைச் சதைத்தும், இடித்தும், நறுக்கியும், பிழிந்தும், அரைத்தும் புகைத்தும், வெளிப்படுத்தப் படுதல்போல, அரிச்சந்திர மஹாராஜாவின் வண்மை, வாய்மை, பொறுமை, அறநெறியின் வழுவாமை முதலிய உயர்ந்த குணங்களெல்லாம் விசுவாமித்திரமுனிவன் கொடுமையினாலன்றி எவ்வாறு வெளிப்படக்கூடும்? வசிஷ்டமுனிவன் இந்திரசபையில்,

“பாருக்கொருவன் பரதார சகோதரன் வெம்
போருக்கொருவன் புகழுக்குமறைப் பொருட்கும்
நேருக்கும் வீடா மனுநானெறிக்கும் பொறைக்கும்
ஆருக்குமிக்கா னரிச்சந்திரனுகு மென்பான்.”

“அரிச்சந்திர மஹாராஜாவுக்குச் சமானம் உலகில் வேறுண்டோ? பரதார சகோதரனை, போரில் [illegible] வேதங்கள[illegible]ண்மைப்பொருளை உணர்தலிலும், நேர்வழி நடத்தலிலும், அழிவில்லாத மறுதர்ம சாஸ்திரத்திற் கூறிய சந்மார்க்கத்திற் செல்லுதலிலும், பொறுமையிலும் எல்லாருக்கும் உயர்ந்தவனைப் அரிச்சந்திரனைப்போல ஒருவன் உண்டோ?” என்று அவனது குணங்களைச் சிறப்பித்துக் கூறியபோது, கௌசிகமுனிவர் தமக்கு அவ்வரசனோடு யாதும் பகையும் வெறுப்பும் இயற்கையில் இல்லையாயினும் அவ்வசிஷ்டமுனிவன் மேலுள்ள ஆக்ரோசத்தால், அம்முனிவனை நோக்கி,

“வெய்யன் பாதகன் பரதாரவிருப்பன் வீணன்
பொய்யன் னிறையும் பொறையுஞ்சிறிதும்மில் புல்ல
கையன் கடடன் கயவன்றனை நல்லனென்றிவ் [ன்
வையன்றிரு முன்னுரைத்தாயி தென்னகை வென்
[றான்.”

“அந்தோ! உனக்கேன் இவ்வளவு இடும்பு? மகா கொடியவனும், பாதகங்களைச் செய்பவனும், பரதாரதனும், பொய்யனும், நிறையும் பொறுமையும் சிறிதுமில்லாதவனும், அற்பகுணங்களையுடையவனும், வஞ்சகனும், கபடமுள்ளவனும், கீழ்மகனுமாகிய இவனை மகா உத்கிருஷ்ட குணங்களையுடைய யோக்கியனென்றிவ் விந்திரசபையில் சொன்னாயே. இது உனக்கு அடுக்குமா?” என்றனன். இதனால் இருவர்க்கும் விவாத மேற்பட்டு, ‘எருதும் எருதும் சண்டையிட இளங்கன்[illegible] முறிந்ததா[illegible]’ எனனும் உலக வழக்கத்துக்கேற்ப, ஒருபாவமும் அறியாத அரிச்சந்திர[illegible] நினைக்கற்கரிய கொடுந்துயர்களை அனுபவிக்கவேண்டி வந்தது. இவ்வாறு வசிஷ்டனோடு கலகித்துக் கொடிய பிரதிஜ்ஞைகளைச் செய்துகொண்ட விசுவாமித்திரன், மனிதர்க்குத் தனமூலமே சமஸ்த கஷ்டங்களும் உண்

டாதலை நன்குணர்ந்தவனாதலாலே, அரிச்சந்திரனை அடுத்து நினைத்தற்கரிய பெரும்பொருளை ... வேண்டுமென்று யாசகம் கேட்க, இடையெழுவள்ளலில் ஒருவனாகிய அரிச்சந்திரன் இல்லையென்று மறுப்பானோ? கேட்டபடியே உடன்று கொடுத்தனன். மேரு மலையைக் கொண்டுவந்து நிறுத்தினாலும்போதாத அவ்வளவு பெருநிதியை அரசன் எவ்வாறு கொடுக்க வல்லனாயினானோ? இவ்வளவு அளவற்ற நிதியைப் பெறவேண்டுமாயின் இராஜ்யம் எவ்வளவோ சுபிக்ஷமாகிச் சண்டைச்சச்சரவுகள் இன்றிச் சுகப்பட்டிருந்தாலொழிய முடியாது. இதனாலே அரசனது செங்கோல் முறைமையும் நன்மையும் தெரிந்துகொள்ளற்பாலது. இப்பொருளை அரசனிடத்தே வைத்துச்சென்ற விசுவாமித்திரனுக்கு அரசனைத் தன்வசப்படுத்த முதல் முதல் ஓர் அவகாசம் கிடைத்தது.

'சண்டைக்கெது பிடி மாடுபிடி' யென்பதுபோல வலிவுச்சண்டைக்குப் புறப்பட்ட விசுவாமித்திரன் ஒருதந்திரம் பலியாமையால் 'இனி இவனைக் கெடுத்தற்குபாயம் இதுவே' யென்று கருதி, அநேக வனவிலங்குகளைவிட்டு சுவர்க்கதுல்யமான நாட்டை அழிக்கும்படிச் செய்தனன். அரசன் கோபத்தைக் கிளப்ப என்னென்னவழியுண்டோ அவ்வளவும் செய்தனன்.

அரசன் சிற்சில காலங்களில் முனிவன் கோபத்துக்குத் தாழ்ந்து போதலையாராயின் "ஐ ஆ! இவ்வளவு கோபத்தைவென்ற குணநிதி உலகத்தில் இருப்பார்களோ !" என்று வியக்கவேண்டிவரும். முனிவன் பெண்கள் அரசனைக் [illegible] சொல்லி இகழ்ந்ததனாலே அவன் அவர்களைத் தண்டித்துத் துரத்திவிட அதை அறிந்த விசுவாமித்திரன்,

"கரகலத்திடு மெழிற்குசை விதிர்ப்புறவிணிக்கழல் வருந்தப்
பறவு பொற்றடமலர்ச்சடை விரித்தகல் பெரும்படியினலைச்
சுரர்மிகப்பரிதவித் தபயமிட்டலறிடச் சுவணவெற்பாற்
புரமெரித்திடவரும் புனித னொத்தணிமலர்ப்பொய் கைபுக்கான்."

தான் கையிற்கொண்ட தருப்பையும் நடுங்கவும், இரண்டு கால்களும் நோவவும், சடைவிரிகோலமாய்ச் செல்லுகின்ற பெரிய தன்னுருவத்தைக் காணுதலால் தேவர்களும் மிக அஞ்சிவருந்தி அபயம் வேண்டிக்கதறவும், திரிபுரசங்காரம் செய்யச் செல்லும் சிவபிரான்போலக் கோபாவேசம் கொண்டவனாய் பொய்கைக்கரையில் அரசனை அடைந்தபோது; அரசன் மிகவும் இனிய வசனங்களைச் சொல்லிக் கால்களைப் பிடித்துக்கொள்ளவும், அக்கொடிய முனிவன் கோபந்தணியாமல் மேன்மேலும் பொங்கி அரசனை முடிதெறித்து விழும்படிச் சிரத்தில் உதைத்தான். ஆகா ! அப்போது அரசன் சற்றேனும் மனம் கொதித்தானோ? இல்லை. முனிவனது மலர்க்கழல் உதைத்தவேகத்தால் கன்றிவருந்துமோ என்று பரிதபித்து அப்பாதத்தைத் தன் செங்கரங்களால் வருடி வருத்தத்தை நீக்கலுற்றான். ஒருவன் அந்தணனென்றும் மற்றவன் க்ஷத்திரியன் என்றும் பெயர்பெற்றார்களே; குணவிசேஷத்தால் எவ்வளவு மாறுபாடுடையார்! ஒருவன் கோபமே உருவெடுத்தது போலவும் மற்றவன் சாந்தமே உருவெடுத்தது போலவும் அன்றோ தோன்றுகின்றனர்? அந்தணனாகிய முனிவனுக்கு நிரபராதியான அரசன்மேல் இவ்வளவு கடுங்கோபம் உண்டாதற்குக் காரணம் யாதோ? தான் தயையில்லாமல் வனவிலங்குகளைவிட்டு அரசன் ராஜ்யத்தை அழித்ததும், பன்றியை யேவி அரசன் சேனைகளை மடித்ததும், பெண்களென்னும் சண்டாளிகளை விட்டு

அரசனை நிந்திக்கச்செய்ததும் முறைமையாகும் ! அரசன் அவற்றிற்கு மாறுசெய்து குடிகளைக் காத்ததும் தன் பெருமையைக் காத்ததும் பொறுத்தற்கரிய குற்றங்களாயின ! இது என்ன ஆச்சரியம் ! இங்கு அரசனுடைய சாந்தகுணத்தை வியப்பதோ? அல்லது முனிவனுடைய அகங்காரத்தையும் ஆற்றலையும் வியப்பதோ? ஆயினும், முனிவனது தபோபலத்துக்கும் சாபத்துக்கும்பயந்து அச்சத்தால் அரசன் அவனை எதிர்க்காமல் தழுவிக்கட்டிச் சமாதானப்படுத்தினானென் றெண்ணத்தகுமோ? தகாது. ஏனெனில் முனிவன் எவ்வளவு அதட்டி உருட்டி வெருட்டி மருட்டிப் 'பிடி சாபம்' என்று தன் சக்தியை யாவத்சக்தியும் காட்டினபோதிலும், அரசன் அதர்மமான காரியத்தைச் செய்தற்குச் சிறிதும் உடன்பட்டானில்லை. தான் பெற்றுக்கொண்ட செல்வங்கள் அனைத்தையும், அரசையும் திரும்ப அளிப்பதாகச் சொல்லித், தன் புத்திரிகளை விவாகம் செய்துகொள்ள வேண்டிய போது, அரசன் அச்சொல்லுக்கிணங்காமல் எவ்வளவு உதறியெறிந்து பேசுகின்றான் ! முனிவனுக்கு அஞ்சினவனாகவோ தோன்றுகிறான்? இல்லை ! அவன் கொடுமைகளைத் திரணமாக மதித்தவன்போலவே தோன்றுகிறான்.

அரசன் முனிவனுக்கு நாடு நகர் முதலான செல்வங்கள் எல்லாவற்றையும் ஒப்பித்துவிட்டு அவன்பால் விடைகொண்டு புறப்படுங்காலத்தில் முனிவனைநோக்கித் தன் மந்திரிமார்களைக் கோபியாது பாதுகாக்கும்படிக் கேட்டுக்கொண்டவிவரம் எவ்வளவு இனிமையானது.

"கையினாற் பிடித்தமைச் சரைக்காட்டி மற்றிவர்கள்
வையினு நினைமறுக்கினு மற்றுமோர் குற்றஞ்
செய்யினும் பொறுத்தருள் செய்வாய் செல்கதியளித்த
ஐயனேயுன தடைக்கல மிவரென வளித்தான்."

இப்படியன்றோ அரசனும் அமைச்சரும் ஒருவரையொருவர் நேசித்திருத்தல்வேண்டும். இவ்வாறு தம்மை நேசித்தலாலே அரசனுக்கு இடையூறு வந்தகாலத்தில்,

"அற்றகுளத்தில் அறுநீர்ப்பறவைபோல்
உற்றுழித்தீர்வாருறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்போலவே
ஒட்டியுறுவார் உறவு."

என்றதற்கேற்பச் சத்தியகீர்த்தியாகிய உத்தமமந்திரி அரசன் என்ன சொல்லியும் கேளாமல் அவனை நிழல்போலத் தொடர்ந்துசென்று அவனுக்குவந்த இடுக்கண்களையெல்லாம் தானும் அவனோடொக்க மனமகிழ்ந்து அநுபவித்துவந்ததும் ஆச்சரியமாமோ! அரசன் நாட்டைவிட்டுப் போனபோது மனைவியாகிய சந்திரமதியும் மைந்தனாகிய லோகிதாசனும் பின்னிற்பார்களோ! உடன் தொடர்ந்து செல்வாராயினர். இன்னாருக்கு இன்னாரென்று முன்னமே முடிந்திருக்குமென்றும், கல்யாணங்கள் கடவுளின் கருத்துப்படி முடிவன என்றும் நம்மவர்கள் தாமேயன்றி மேற்றிசையோர்களும் இக்கொள்கையைக் கொண்டிருப்பினும், இதன் உண்மையை அரிச்சந்திரன் சந்திரமதியென்னும் இருவர்பாலும் அன்றோ கண்கூடாகக்காணப்பெற்றோம் ! அரிச்சந்திரனால் அணிதற்குரிய மங்கலசூத்திரம் சந்திரமதியின் கழுத்தில் பிறந்தபொழுதே தெய்வச்செயலால் முடியப்பட்டிருந்தது. அதைப் பின்பு அவன் அவள்கழுத்திற் கண்டுகொண்டானேயன்றிப் புதிதாக மணவினையன்று அணிந்தானில்லையே. ஆதலின் இவர் இருவருக்கும் உண்டாகிய காதலையும் கற்பின் உறுதியையும் பெருமையையும் எடுத்துரைக்கலாவதோ? சந்திரமதி காட்டுத்தீயைக் கற்புத்தீயால் அவித்தசெய்கை கேவலம் கற்பனையும் கட்டுக்கதையுமாகக் கருதலாவதோ? ஒருபோதும் ஆகாது. நிற்க, அரசனும், சந்திரமதி

யும், குழந்தை லோகதாசனும் வழியில் விசுவாமித்திரன் தனது மாயையினாலும் கொடுமையினாலும் கற்பித்துவிடுத்த நினைத்தற்கரிய ஹிம்சைகளாலும், இயற்கையாகவே வழியிற் குறுக்கிட்ட நீரும் நிழலுமற்ற பாலைவனத்தின் கொடுமையாலும், தருக்காரனாகிய தயையில்லாத நக்ஷத்திரய்யன் செய்த குரூரங்களாலும் அடைந்த அவஸ்தைகளையும் துன்பங்களையும் இங்கு விவரிக்கத்தேவையில்லை. கடைசியில் ஒருவாறு காசிமாநகரத்தை அடைந்தார்கள். ஆயினும் முனிவனுக்குக் கொடுக்கவேண்டிய கதையிலும் கேட்டில்லாத பெரும்பொருளை எவ்வாறு சம்பாதிப்பது? இப்போதன்றோ சந்திரமதியின் அன்பும் குணமும் அருமையும் பெருமையும் காணப்படுகின்றன. அரசன் ஒன்றும் தோன்றாமல் குழம்பிக்கொண்டிருக்கையில், அவள் அரசனைத்தேற்றித் தன்னைவிற்று முனிவன் கடனைத்தீர்த்துச் சத்தியத்தைக் காக்கும்படிப் போதித்து, அவன் அதற்குடன்படானாயினும் தக்க காரணங்களைச் சொல்லி உடன்படுத்தினள். தெய்வாதீனத்தால் சந்திரமதியை வாங்குதற்கு, மகாகடினசித்தமும் கொடூரகுணமுமுடையோனாயினும் ஓர் அந்தணன் கிடைத்தனன். அவன் மனைவியோ அவனிலும் பன்மடங்கு கொடியவள். ஆயினும் என்ன? அரசன் பொருளைப்பெற்றுக் கடனைத்தீர்த்துச் சத்தியத்தைக் காக்கவல்லனாயினன். இவ்வாறு முனிவன் கடனைத்தீர்த்தபின்னும் அரிச்சந்திரனுக்கு பாதை ஒழிந்ததில்லை. நக்ஷத்திரய்யன் என்னும் தருக்காரன் தான் ஓடியாடி அவர்களோடு உழன்றுபட்ட சிரமங்களுக்குப் பரிகாரமாகப் பெரும்பொருளைத் தனக்குக் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கத் தருமமே ஜயமென்றும் சத்தியமே துணையென்றும் நம்பியிருந்த சாந்தரூபியாகிய அரசன் தன்னையும் ஓர் புலையனுக்கு அடிமையாகவிற்று அப்பொருளைக் கொடுத்தொழித்தனன்.

சந்திரமதி தன் உயிரினும் சிறந்த மணாளன் பொருட்டும் சத்தியத்தைக் காக்கவேண்டியும் அனுபவித்த துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் அளவும் உண்டோ! அக்கினி தேவனே உருவுகொண்டுவந்த அதிக்குரூரனாகிய அந்தணனுக்குத் தானும் தன் மகனும் அடிமையாகிப்பட்ட துன்பங்களை இந்தச் சகமெல்லாம் இன்றைக்கும் நாடகங்களில் ஆடிப்பாடி அழுது ஆற்றி அறிவிக்கக் காணுமன்றோ? அவள் அங்கு நெற்றிவியர்வை நிலத்திற் சொட்டக் கடினமான புன்தொழில்களைச் செய்து காலம் போக்கினதும் போதாமல், ஐயோ! 'பட்ட காலிலே படும் கெட்டகுடியே கெடும்' என்பதுபோல விதியின் கொடுமையோ விசுவாமித்திரன் மாயையோ தன் அருமை மகனையும் இழக்கவந்ததே! கோடித்துக்கம் குழந்தை முகத்தாலாறும் என்றபடி. தன் செல்வன் முகத்தைக்கண்டு தன் துயரமெல்லாம் மறந்திருந்த அவளுக்குண்டான துரதிர்ஷ்டத்தை என்னென்று சொல்லுவது! இத்தனையும் போதாதென்று அர்த்தராத்திரி வேளையில் தன் மகனைத் தானே ஒன்றியாகக் கொடிய காட்டிற்சென்று உழன்று தேடிச் சேமம் செய்யவும் வேண்டிவந்ததே. அதுவும் போதாமல் தன் மணமகன் மணிமுடிசூடிச் செங்கோல்பிடித்து அமைச்சரும் அரசரும் சூழ இரத்தின சிங்காசனத்திருந்து அரசு செலுத்திய வைபவத்தைக்கண்ட கண்களால் இப்போது பறையனுக்கடிமையாய்ச் சுடலையில் இருந்து பிணங்கள் காத்திருத்தலைப்பார்க்கவும் ஆயிற்றே. அவ்வளவும் போதாவோ! ஆ! விதியின் கொடுமைதான் என்ன! அரசன் மதலையைக்கொன்றதாகக் கொலைக்குற்ற

மும் சாட்டப்பட்டுத் தன் உயிர்த்தலைவன் கையாலே தண்டம் பெறும்படியும் நேர்ந்ததே. அரசனுக்காயினும் சந்திரமதிக்காயினும் விதியினாலேனும், விசுவாமித்திரனாலேனும், வேறு எவர்களாலேனும் இழைக்கக்கூடிய கேடும் துயரும் அதன்மேல் யாதுள்ளது? அச்சமயத்தே விசுவாமித்திர முனிவன் இதுதான் தருணமென்றெண்ணி அரசனை அடுத்து "ஓ வேந்த, ஒரு பொய் சொன்னாயாயின் உன் துன்பங்கள் யாவையும் ஒருங்கே நீக்கி உன்னை முன்னிலும் பன்மடங்கு உயர் நிலையில் நிறுத்துவேன்" என்ன, அதற்கு மறுமொழியாக அரசன் அவனைநோக்கிக் கூறியவார்த்தைகள் எவ்வளவு அதிசயிக்கத்தக்கவை!

"சேய்மையண்மையிலுயிர்க்கொருதுணை [illegible]
வாய்மையாலகம்தூய்மையாம் மற்றிலம்புஜத்தைத்
தூய்மைசெய்வதும்நீரலாற்சொல்லின்வேறுளதோ
நோய்மைசெய்யினும் வாய்மையேநோன்பெமக்கறிதி."

"பதி யிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதி யிழந்தன மினிநமக் குளதென நினைக்கும்
சதி யிழக்கினும் கட்டுரை யிழக்கிலே மென்றான்
மதி யிழந்து தன்வாயிழந் தருந்தவன் மறைந்தான்."

முனிவன் வெட்கமுற்று நீங்கவும் திரிமூர்த்திகளும் தோன்றி முனிவனை இகழ்ந்து அரசனைப்புகழ்ந்து, மகனையுயிர்ப்பித்து மங்கையையும் சிறப்பித்து, வேண்டும் வரங்களையும் கொடுத்து அவர்களை முன்பதவியில் இருத்திப் போனார்கள். இதுவே அரிச்சந்திரன் வரலாறு. நாம் எவ்வித மாற்றங்களை யடையினும், பாஷையை இழக்கினும், ஆசாரங்களைத் துறக்கினும், மதத்தையே கைவிடநேரினும் இவ்வரசன் பெயரையும் சரித்திரத்தையும் இழக்கலாவதோ! அன்று, அன்று, ஒருநாளும் இழக்கலாவதன்று. என்றென்றைக்கும் பிரியாமல் இப்பெயரும் சரிதமும் நம்மோ— கூடவே தொடர்க.—

THE TAJ MAHAL AT AGRA.

தாஜ் மஹால்.

ஆக்ரா நகரத்தில் யமுனை நதிக்கரையில் ஓர் அழகிய சோலையின் நடுவில் 'தாஜ்மஹால்' என்றொரு சமாதிமண்டபம் இருக்கின்றது. இது உலகத்தில் உள்ள அதிசுந்தரமான மண்டபங்கள் எல்லாவற்றிலும் அழகானது. இது டில்லி சக்கிரவர்த்தியாயிருந்த ஷாஜிஹான் என்பவனால் தன் மனைவியாகிய மம்தாஜ் மஹால் என்பவளுக்குக் கட்டப்பட்ட கோரி மண்டபம். மம்தாஜ்மஹால் என்னும் பெயரே தாஜ்மஹால் என்று திரிந்தது.

இந்த மம்தாஜ்மஹால் என்பவள் லோகப்பிரசித்தியடைந்த நூர்ஜஹானுக்குச் சகோதரனாகிய அஸொப்கான் என்பவன் புத்திரி. இவள் அந்நூர்ஜஹானைப்போலே அவ்வளவு அழகிற்சிறந்தவள் அல்லாவிடினும் மற்றொருவருக்கும் அழகிற்குறைந்தவளல்ல. அக்காலத்தில் அரசர்கள் அநேக மனைவியர்களை விவாகம்செய்துகொள்ளுதல் வழக்கமாயிருக்க' ஷாஜிஹான் இவளையன்றி வேறொருவரையும் மனத்தாலும் கருதாமல் ஏகபாரியாவிரதனாகவிருந்ததே இவள் அழகின் பெருமையையும் குணங்களின் அருமையையும் தெரிவிக்கப் போதுமானது. ஷாஜிஹான் தான் சக்கிரவர்த்தியாய் வருதற்கு முன்னமே இம்மடந்தையை விவாகம்செய்து, தான் சிங்காசனம் ஏறினபின்பு இன்னொருதரம் அவ்விவாகத்தைச் சிறப்பித்தான். இதுவும் இவன் அவளிடத்து வைத்திருந்த பெருங்காதலையும் அவளது பெருமையையும் உணர்த்தும். இவள் கணவனிடத்தில் மிகுந்த பிரீதியுள்ளவளாய் அவனோடு பதினான்கு வருஷகாலம் சுகித்திருந்து அவனுக்கு நான்கு பிள்ளைகளையும் இரண்டு பெண்களையும் பெற்றாள். இவள் நூர்ஜஹானைப்போலத் துரைத்தன காரியங்க

ளில் உட்புகுந்துழலாமல், குடித்தன விஷயங்களில் தன் புருஷனுக்கு உற்ற துணையாயிருந்து, தன்னுடைய தயாளகுணத்தாலும் நன்மையாலும் எல்லாருக்கும் இனியவள் என்று பேரெடுத்து, அனைவராலும் மெய்ச்சப்பட்டு வந்தாள்.

இந்நங்கை 1629-ம் வருஷத்தில் மரணமடைந்தாள். தான் இனிமேல் ஜீவிக்கப் போகிறதில்லையென்று கண்டு தன் புருஷனை அருகே அழைத்து அவனைநோக்கி, "என் பிராணநாயகரே, நான் உம்மைவிட்டுப் போகுங்காலம் வந்துவிட்டது. என் பிராணன் போகுமுன் நான் தங்களைக்கேட்டுப் பெற விரும்பும் வரம் இரண்டுள்ளது. ஒன்று, தாங்கள் எனக்குப் பிற்காலம் இரண்டாம்தாரம் விவாகம் செய்துகொள்ளாமல் இருப்பது, மற்றொன்று, என் பெயர் அழியாமல் என்றென்றும் நிலைநிற்கும்படி என் பெயராலே ஒரு அழகிய கோரியைக்கட்டுவித்து அதில் என்னை அடக்கஞ்செய்வது. இவ்விரண்டு வரங்களையும் எனக்குக்கொடுத்தருளவேண்டும்" என்றாள். ஷாஜிஹானும் அவ்வாறே வாக்களித்து அவ்விரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றினான். "ஆன்மாவுக்குத் தலைவன் ஈச்வரன் ஒருவனேபோலவும், சூரியனுக்குத் துணைவன் சந்திரன் ஒருவனேபோலவும், ஷாஜிஹானுக்குப் பிராணநாயகி மம்தாஜ்மஹால் ஒருவளே" என்று புனர்விவாகம் செய்யாமல் ஒழிந்திருந்தான்.

அவன் தனக்குத் துயரம் சிறிது ஆறினபின்பு, தான் தன்மனைவிக்குக் கொடுத்த வாக்குப்படியே சமாதியைக் கட்டுவிக்க ஆரம்பித்து முன்னெக்காலத்திலும் இல்லாததும் இப்பரதக்கண்டத்தில் உள்ள கட்டிடங்கள் எல்லாவற்றிலும் அழகுமிகுந்ததுமான ஒரு அதியற்புதமான கோரிமண்டபத்தைக் கட்டுவித்தான். இது அதியனோகரமாகச் சித்திரிக்கப்பட்ட வெண்சலவைக் கற்களால் நிருமிக்கப்பட்டு, ரத்நகஜிதமான புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட சுவர்களையும் உடையது. இது கட்டப்பட்டு எவ்வளவோகாலமாகியும் எள்ளளவேனும் அழகும் ஒளியும் குலையாமல் நேற்றுத்தான் கட்டப்பட்டதுபோல மனோரஞ்சிதமாகக் காணப்படுகின்றது. இதைக்கட்டுவதற்கு இருபதினாயிரம் ஜனங்கள் பதினேழுவருஷம் இடைவிடாமல் வேலைசெய்தார்களென்றும், இதை முடிப்பதற்கு மூன்று கோடி ரூபாய் செலவாயிற்றென்றும் சொல்லுகிறார்கள். இச்சமாதிமண்டபத்தில் தானே ஷாஜிஹானும் பின்பு அடக்கம் செய்யப்பட்டான். இவ்விருவர் சமாதியின்மேல் எப்போதும் தீபம்போட்டுப் புஷ்பமாலைகளும் சாற்றப்பட்டுவருகின்றன.

இது இத்தேசத்திலுள்ளகட்டடங்களெல்லாவற்றிலும் மிக அழகாயிருத்தலினாலே இத்தேசத்துக்கு விநோதார்த்தமாகவோ வேறுகாரியமாகவோ வந்துபோகும் தேசாந்தரிகள் எவர்களும் இதனைப்பாராமற் போகார்கள். இதைச் "சலவைக்கல்லால் அமைத்த கனக்காட்சி" யென்று இதன் அழகைப் புகழ்ந்துகூறுவார்கள். அதாவது இதைப்போலும் மண்டபமொன்று சொற்பனத்திற் கண்டாற் காணலாமேயன்றிப் பிரத்தியக்ஷத்தில் காணமுடியாதென்பது இதன்பொருள். ஒருதரம் காணிற் பின்னென்றும் மறவாத முக்கியமான பொருள்களில் இதுவும் ஒன்று. இதை உலகிலுள்ள மண்டபங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததென்று பற்பல அருமையான காட்சிகளைக் கண்டவர்களும் சொல்லுகிறார்கள். இது அதியற்புதமான மகாசக்தியையுடையவரால் கருதிப்பாவிக்கப்பட்டு இரத்தினவேலைகளில் வல்லசிற்பிகளால் செய்துமுடிக்கப்பட்டதென்னும் இதன் பெருமையை வியப்பார்கள். அன்றியும் இது இந்தியாவின் சிரோரத்நமென்றும் கொண்டாடப்படும். இதற்கிணையானது இப்பூமண்டலத்திலில்லை.

SHORT STORY.

'ALL IS WELL THAT ENDS WELL.

சிறுகதை.

நன்றாய் முடியின் எல்லாம் நன்றே.

நீராவியந்திரம் "சீத், சீத்" என்று சீறி ஆரவாரிக்கவும், சக்கரங்கள் தண்டவாளத்தின்மேல் தேய்ந்து "கிருக்-கிருக்" என்று சப்திக்கவும், தென் இந்தியாவின் முக்கியபட்டணங்களில் ஒன்றில் மாலை சுமார் ஐந்தரை மணிவேளையில் ஒரு புகைவண்டித்தொடர் வந்து நின்றது. உடனே ஏறுவோரும், இறங்குவோருமாய் குழப்ப மதிகரிக்க, ஒரு மூனறாவது வகுப்பினறையிலிருந்து, ஒரு யௌவன புருஷன் கீழே இறங்கினான்.

அவனுக்கு வயது சுமார் இருபத்திமூன்று இருக்கலாம். அவனுடைய உயர்ந்த வடிவையும் அகன்ற மார்பினையும் விசாலமான நெற்றியையும் நுனியில் வளைந்த மூக்கையும் உற்றுப்பார்க்குங்கால் சிறப்பும் ஆண்மையும் நிறைந்த செல்வனென்றே அவனைக் கூறவேண்டும். ஆனால் அவனுடைய ஒட்டின கன்னங்களும் ஒளியற்று ஆழ்ந்திருந்த கண்களும் அவன் தீராத்துயரத்துக்கும் இடைவிடாத தீர்க்காலோசனைக்கும் இறையானவனென்றும் நிரூபித்தன. அவன் நடையையும் யாவரையும மகிழ்ச்செய்யும் பாவனங்களையும் * யோசித்துப் பார்க்கும்பொழுது அவன் தன் துயரங்களைவென்று தனக்கொரு பெயரையும் உண்டாக்கிக்கொள்ளக்கூடிய திறமையையு மடைந்திருந்தானென்பது புலப்பட்டது. மேலும் அவனுடைய முழங்கைகளிற் கிழிந்த சட்டையும், அழுக்குப்படிந்த உள்ளங்கியும், வலைபோன்ற சீமையங்கவஸ்திரங்களும், அவன் தரித்திர சாகரத்தில் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தானென்று வெளிப்படுத்தின.

வண்டியை விட்டிறங்கினதும் தன் பிரயாணச் சீட்டைக்கொடுத்துவிட்டு வெளியே வந்து நின்று "நடந்து போகிறதா, வண்டியில் போகிறதா" என்று ஆலோசிக்கும்பொழுது ஒரு மாட்டுவண்டி வந்து நின்றது. அதிலிருந்து இரண்டுபேரிறங்கினார்கள். அப்பொழுதுதான் சாந்திமுகூர்த்தம் செய்துகொண்ட தம்பதிகள்போல் காணப்பட்டார்கள். அவர்களிலகமுடையாள் வெட்கத்தினால் தன் கணவனருகில் போகாமலும், பயத்தினால் அவனைவிட்டுப் பிரிந்து போகாமலும் புன்சிரிப்புடன் தன் புருஷனைத் தொடர்ந்து வண்டியேறச் சென்றதைப் பார்த்து "ஆஹா இவர்கள் ஒருவருடனொருவர் கஷ்ட நிஷ்டூரங்களைச் சொல்லிக்கொண்டு ஆறுதலுந் தேறுதலு மடைந்து இனிமேலனுபவிக்கப் போகிற ஒப்பற்ற சுகத்தை நானென்றைக்கு அடையப் போகிறேன்" என்கிற தன் பரிதாபமான எண்ணத்தைப் பெருமூச்சினால் தெரிவித்துத் தன் வழி நடக்க ஆரம்பித்தான்.

புகைவண்டி உத்தியோகஸ்தர்களும் வேலைக்காரர்களுமிருக்கும் கட்டடங்களையும் குடிசைகளையுங் கடந்து சென்ற பிற்பாடு இடையிலிருக்கும் ஒரு திறந்தவெளியில் வந்துசேர்ந்தான். அப்பொழுது மேற்கே நிமிர்ந்து கவனித்துப் பார்த்தான். சிவந்த தினகரன் மலையின் வாயில் விழுந்து அஸ்தமானமாயிருந்தபோதிலும் அவனுடைய கிரணங்கள் ஸ்தம்பம் ஸ்தம்பங்களாக மேலே பரவி வியாபித்தது கூட்டமாகக்கூடி ஒன்றன்மேலொன்றாக அடுக்குண்டிருந்த மேகங்களை ஊடுருவிச்சென்றன. அச்சூரிய கிரணங்களால் பற்பல வேறு மிகவும் பிரகாசமான வர்ணங்களை யடைந்து உருவற்றிருந்த மேகங்கள் கட்டுக்கதைகளில் கூறிய விசித்திர ஆடையாபரணங்களை யணிந்த முனிகளும், பூதங்களும் செய்திடும் போர்க்களம் போல் தோன்றின.

இதைப்பார்த்து ஆச்சரியமடைந்து பாதையின் இருபக்கங்களிலும் அவன நோக்கவே அங்கே வித்தியாதனம் நிறைந்த பெரியோர்களைப்போல் தலைகுனிந்து நிற்கும் முதிர்ந்த

* Graceful demeanour.

நன்றாகக் கருவுடைய கதிர்களை யேந்திய நெற்பயிர் கண்களுக்கெட்டிய தூரம் செழிப்பால் சிறந்த வயல்களில் தள்ளாடிக்கொண்டிருந்தது. இடையிடையே நுண்ணிய நறுமணம் நிறைந்த தென்றல் இப்பயிர்மேல் வீசி சிற்றலைகளை யுண்டாக்கிற்று. இவ்வழகை யனுபவித்து மறுபடியும் ஆகாசத்தை யண்ணாந்து பார்த்தான்.

அங்கு முன்னொன்றன்மீதொன்றாய்ப் படிந்திருந்த மேகங்கள், காற்றினால் பரவிச் சிறு பின்னங்களாய், மிகவும் ஒழுங்காகவும் வரிசையாகவும் அமைந்திருந்தன. பார்க்க ஒரு மகா சமுத்திரத்தில் சிறு தீவுகள் சேர்ந்திருந்தாற்போல் விளங்கின. நிமிஷத்திற்கு நிமிஷம் உண்டாகும் இவ்வேறுபாடுகளை உயிர் வாழ்க்கையிலுண்டாகும் மேடு பள்ளங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்து மிகவும் தத்துவமான எண்ணங்கள் மனதில் நிறைந்தவனாய் பாதி மெய்மறந்து நடந்துக்கொண்டிருக்கையில், தண்ணீர் சிறுவாய்க்கால்களில் பாறைகளின்மேல் முறுமுறுத்துக் கொண்டுசெல்லும் ஓசை காதிலின்பமாகப் பட்டது. மேலும் பறவைகள் செய்யும் "கலகல" ஓசையும், அவனை ஆலோசனையிலிருந்து தவிர்த்து, சுற்றுப்பக்கங்களுக்கு அவனைக்கொணர்ந்தது. மறுபடியும் வானம் எவ்வாறு இருந்ததென்று திரும்பிப் பார்க்கவும் தீவுகள்போலிருந்த மேகங்கள் நன்றாகக்கூடி நீண்டிருந்தன. அஸ்தமித்த சூரியனொளியால் தணல்போல் பிரகாசித்தன. இறந்தபின் நமது ஆவிகள் கடக்கவேண்டுமென்று புராணிகர் கூறும் "வைதரணி" என்கிற அக்கினி நதியைப்போல அந்நீண்டமேகம் விளங்கிற்று. இவற்றையெல்லாம் பார்த்து கால்வலி கூடத்தெரியாமல் ஊரினெல்லைக்கு வந்துசேர்ந்தான். அங்கோ பாதையின் ஓரத்தில் ஒற்றைக்கிளையையுடைய "சவுக்கு" மரம் இலைகளையிழந்து நின்றுக்கொண்டிருந்தது. அக்கிளையின்மேல் ஒரு பறவை "கிக்கு கிக்கு" என்று கூப்பிட்டு உட்கார்ந்திருக்க மற்றொரு பறவை பறந்துவந்து அதனருகில் சற்றுநேரம் உட்கார்ந்து தானுங் கூவிற்று. பிறகு இரண்டு மொருங்காகப் பறந்து மறைந்தன.

"ஐயோ! வண்டியை விட்டிறங்கினதும் சுகமனுபவிக்கச்செல்லும் தம்பதிகளைக் கண்டேன். இப்பொழுதோ சந்தோஷமடைந்த இரண்டு பட்சிகளைப் பார்த்தேன். வாழ்வின் துன்பங்கள் இவற்றைச் சற்றேனும் வருத்துவதில்லை. தம்முடைய சொந்த நிலைமைகளில் சுகப்பட்டுக்கொண்டிருக்கின்றன. என் கதியென்னவோ? இறைவனுக்கே வெளிச்சம்." என்று நினைத்து, கடைவீதியின் வழியாய்ச் சென்று, தான் போகவேண்டிய பெரிய மாடவீட்டு வாசலில்வந்து நின்றான். சுமார் ஆறரை மணியிருக்கலாம். ஒரு சிறந்த கண்ணாடிக் கூண்டில் மண்ணெண்ணெய்* விளக்கு பிரகாசித்துக் கொண்டிருந்தது. வாசலில் சாயுந்திண்ணையில் தாடியும் மீசையும் நன்றாக நீண்ட துலக்கனொருவன், தன் முழுந்தாட்களை முழங்கால்களின் மேலிட்டு கைகளைத் தன் வழுக்குத்தலையில் சார்த்திக்கொண்டு கண்ணை மூடியவனும் திறந்தவனுமாய்க் குந்திக்கொண்டிருந்தான். பக்கத்தில் உருமாலும் "சப்-ஜெட்ஜ்" என்று வரையப்பட்டுள்ள வில்லைமாட்டிய மார்ப்பட்டை "நாடாவும்" ஒன்றன்மேலொன்றாயிருந்தன. ஊரிலிருந்து வந்தவன் உள்ளே போக ஆரம்பித்ததும் "யார்சாமி அது! உள்ளே போகக்கூடாது!! வா இப்படி" என்று அதட்டினான்.

"இவனிடத்தில் என்னுடைய பூர்வோத்திரமெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறதா? உள்ளே சென்றால் தானாக நம்மை யறிந்துக் கொள்ளுகிறார்கள் போய்விடுகிறதே நலம்" என்று தீர்மானித்து 'தடதட' வென்று நுழையத்தொடங்கினான்.

தன் வார்த்தைகளை மீறிநடந்ததும், துலுக்கன் கோபித்து "யார் சாமி, அறிவுகெட்ட பாப்பானாய் இருக்கே, உள்ளே போகக்கூடாதென்றேன் போறயா! இதோ பார்—"என்று வேட்டை நாயைப்போல் சீறிக்கொண்டு, கையைப்பிடித்து வெளியே இழுத்து விடுபவன் போல் அருகே வந்தான்.

* Kerosine Oil.

அப்பொழுது தான் இன்னது செய்வதென்று தெரியாமல் பிரமை பிடித்தவன்போல் தியங்கிக்கொண்டிருக்க, அதிர்ஷ்டவசமாய், நன்றாய்த் தேய்த்த குடத்தில் தீர்த்தத்துடன் கட்டையும் குட்டையுமாய் கறுப்பு நிறமாய் ஒரு பரிசாரகன் படிகளேறி வீட்டில் பிரவேசித்தான். நமதய்யரைப்பார்த்து, "வாருங்கோ மாப்பிள்ளை, எப்பொழுது வந்தீர்கள்" என்று வினவி, யுத்தம் செய்பவன்போல் நின்றுக்கொண்டிருந்த துலக்கனைப்பார்த்து "சாயபு! இவரை யாரென்று எண்ணிக்கொண்டாய், இவர்தான் நமது எஜமான் மாப்பிள்ளை" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றான்.

அதுவரையில் புலியைப்போல் எக்கழுத்தத்துடன் நின்ற துலுக்கன், பூனையைப்போல் தாழ்ந்து, "மஹாராஜ், தெரியாமல் சொல்லிவிட்டேன், மன்னிக்கவேணும், மன்னிக்கவேணும் எஜமானருக்குத் தெரிந்தால் வேலை போய்விடும். கோபித்துக் கொள்ளக்கூடாது மஹாராஜ்!" என்று காலைத் தொட்டுத்தொட்டு சலாம்செய்ய ஆரம்பித்தான்.

"சாயபு! இது உன் தப்பிதமல்ல, காலத்தின் மகிமைகளில் இதுவுமொன்று" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள்போய், கூடத்தில் போட்டிருந்த நாற்காலிகளொன்றிலுட்கார்ந்து, தனக்கு அன்றையதினம் சம்பவித்ததையெல்லாம் மனதில் சுழற்றிக்கொண்டிருந்தான். இவ்வாறு பத்து நிமிஷங்கள் கழிந்ததும், மெத்தையின் மீதிருந்து, கையில் "மெழுகுவத்தி தீபமேந்தி, தன் மாமியார் வருவதைக் கண்டான். அழகும் கர்வமுமொருங்கே குடிகொண்ட அந்த அம்மாள், தன்னகைகளும் புடைவையும் நன்றாகப் பார்க்கப்படும் பொருட்டு, சற்று தூரம் நடந்து பிறகு திடீரென்று நின்று, விளக்கைத் தாழ்த்தி, சக்கரவர்த்தினி ஒருத்தி கேவலம் தன் பிரஜையைப் பார்ப்பது போல், நமதய்யரை உற்றுப்பார்த்து, மிகவும் கம்பீரமான தொனியுடன் "வாரும்" என்று நான்கு எழுத்துக்களை உச்சாரணம் செய்துவிட்டு, "தோரணி" நடையுடன் இரண்டாங்கட்டில் மறைந்தாள்.

"ஆஹா! இவள்தானிப்படி எதிர்கொண்டு அழைத்தாள். இவளுடைய மகள் எப்படியோ? நடக்கநடக்கத் தானே தெரிகின்றது" என்று வெகு விசித்திர சிந்தையுள்ளவனா யிருக்கையில், முன் கூறப்பட்ட பரிசாரகன் இரண்டாங்கட்டிலிருந்து பிரவேசித்துவந்து "ஏன்! நாழியாய்ச்சே, கைகாலலம்பி சந்திபண்ணி சாப்பிட எழுந்திருக்கிறதுதானே? எஜமான் வேலையாய்ப் பட்டணம் போயிருக்கிறார்; நாளைக்கு வந்துவிடுவார்; நீங்கள் யாருக்கும் காக்க வேண்டியதில்லை" என்று சொல்லிவிட்டுப் போனான். பிறகு நமதய்யர் அரைமணி நேரத்தில் சாப்பிட்டுவந்து, கூடத்தின் மற்றொரு பாகத்திலிருந்த மேஜையின்பாலுட்கார்ந்து அதன்மேலிருந்த "செண்டு ஜார்ஜ்" கோட்டையின் பத்திரிகையை கையிலெடுத்து, "காலியான வேலைகளுக்கு ஆட்கள்தேவை" என்றிருக்கிற பக்கத்தைத் திருப்பிப்பார்த்து அதில் தன்னைப்போல் பி. ஏ. பரிட்சை தேறினவர்களை 15-ரூபாய்க்கும், 10-ரூபாய்க்கும் விண்ணப்பங்களனுப்பும்படி கேட்டுக்கொள்வதைப் பார்த்து வியசனத்துடன் வியந்து, கலைகளில் தேர்ச்சி பெறுவதனாலுண்டாகும் நிஷ்பலனையுங் கருதி, மிகவும் துன்பமான நினைவுகளுக்கிடமானார். ஆனால் பிரயாணத்தினால், களைப்புண்டதினால், தன் யோசனைகளுக்கு நடுவில் நித்திரையு மவரைக் கைக்கொள்ள ஆரம்பித்தது. இச்சமயத்தில் அவருடைய மாமியார் சற்றேனும் பிரயமாவது சந்தோஷமாவதில்லாத அதே கம்பீரத்துடன் "மீனாட்சி மேலே காத்துக்கொண்டிருக்கிறாள்! போகலாம்" என்று கட்டளையிட்டுத் தூங்கச்சென்றாள்.

நமது அய்யரும் திடுக்கிட்டெழுந்து இருட்டு மூடின படிகளின் வழியாக மெத்தைக்கு ஏறிச் சென்று பித்தளைப் பிடிபோட்டிருந்த இரட்டைக் கதவுகளைத்திறந்து தன் மனைவியிருக்கு மறையினுள் புகுந்தார். இதுவரையில் கடினமான காரையில் நடந்துவந்த பாதங்கள் அவ்வரையில் "வெல்வெட்" போன்ற இரத்தின கம்பளத்தின்மேல் மிகவும் இன்பகரமாய் படிந்தன. அவர் அவ்விடத்தில் கண்ட காட்சியோ கண்ணைக் கவரத்தக்கதாயிருந்தது.

விட்டத்தின் வளையத்திலிருந்து தொங்கிக்கொண்டிருந்த விலையுயர்ந்த ஒரு பெரும் 'வளிவிளக்கு',* தன் ஒப்பற்ற பிரகாசத்தை அவ்வறையிலிருந்த ஒவ்வொரு சிறு வஸ்துவின் மேலும் வீசி, அதன் சிறப்பை நன்றாக எடுத்துக்காட்டிற்று. நான்கு சுவர்களிலும் நன்றாய் அமைந்திருந்த, 'இரவிவர்மா' எழுதிய ஆனந்தமானபடங்கள், அவ்வறையை கந்தருவலோகமோ† என்று நினைக்கும்படி மனதை மயக்கத்தக்க ஒரு திவ்விய அலங்காரத்தை விளைவித்தன. நான்கு மூலைகளிலும் விசித்திரமான மேஜைகளின்மேல் அமைந்திருந்த, பட்டால் செய்த புஷ்பச்செடிகளும், சிற்றுண்டிகளும், பாலும் வைத்திருந்த மேஜையும், இருபக்கங்களிலும் இரண்டு மெழுகு தீபங்களையுடையதாய் மற்றனேக தமிழ்ப்புத்தகங்களும், எழுதுவதற்கு வேண்டிய கருவிகளும் வைக்கப்பட்ட மற்றொரு அழகான மேஜையும், பார்க்கப்பார்க்கக் கண்களுக்குச் சிறந்த விருந்தாயின. ஒரு சிறு பூங்கொடியைப்போல் அமைத்து வைத்திருந்த ஊதுவத்திகள், மெய்மறக்கும்படி அவ்வறையை நன்மணத்தால் நிறப்பின. மேலும் மற்றொரு சுவரின் பால் "டிக், டிக்," என்று சப்தித்துக்கொண்டிருந்த கடிகாரமானது ஒவ்வொரு அரை மணிக்கும் ஒவ்வொரு சிறந்த ஆங்கிலேய கானத்தைச் செய்து காதுகளைக் களிப்பித்தன.

* Power Light.

† Fairy-Land.

இச்சிறந்த வஸ்துக்களின் அழகையெல்லாம் சின்னப்படுத்தி, தனக்கொப்பானவள் இனியிவ்வுலகிலில்லை யென்று விளங்கியவள் நமதய்யர் மனைவியே. பால்போல்வெளுத்து, அன்னஞ்சிறகைப்போல் மிருதுவாயிருந்த பட்டு அமளி பரப்பியிருந்த வில்விசைவைத் தமைக்கப்பட்ட ஒரு கட்டிலில்,‡ தலையைக்கையால் தாங்கி ஒரு சார்பாக மகாராணி ஒருத்தி பொழுதுபோக்குக்காகப் படிப்பதுபோல் படுத்திருந்தாள். சர்வவல்லமையுள்ள சிருஷ்டி கர்த்தா தன் திறமையை வெளியாக்கும்பொருட்டுவரைந்த படங்களில் மிகவும் மேன்மையுள்ளவளாய் விளங்கத்தகுந்த சிறப்பினளாயிருந்தாள். விண் மீன்களைப்போல் பிரகாசித்துச்சுழன்று தாமரை யிதழ்களைப்போன்ற கண்களும், மகிமைதங்கிய ஒரு சிற்பி சிற்றுளியால் தகர்த்தான்போன்ற மூக்கும், தென்றலில் அசையும் இளம் இலைகளைப்போல் துடித்து அடிக்கடி பற்களின் முறுவலைப் பகிரங்கப்படுத்தின. சிவந்த சிறிய உதடுகளும், மற்று ஆரோக்கியமும் அழகும் பாய்ந்துக்கொண்டிருந்த ஒவ்வொரு அங்கமும் சகலத்தையும் வெறுத்த துறவியின் தவசுடன் போராடி வெல்லத்தகுந்ததாயிருந்தன. மேலும் அவள் சரிகைகமலங்கள் நூற்கப்பட்ட ஒரு காசிப் புடவையை அணிந்திருந்தாள். அக்கமலங்களினும், கருமணல் போன்ற கூந்தலினும் நடுவில் பிரகாசித்த முகத்தை, அலங்காரரசத்துடன் சொல்லத் துணிந்தால் மேகங்கள் நட்சத்திரங்கள் இவைகட்கு நடுவில் பிரகாசிக்கும் பூரணசந்திரனுக்கு ஒருவாறு ஒப்பிடலாம்.

நமதய்யரைக்கண்டதும், படுத்திருந்தவள் நிதானமாக "உஸ்-ஸ்-ஸ்." என்று சப்தித்து எழுந்து, "இந்தப்பக்கம் எட்டிப்பார்க்க மாகானுபாவருக்கு இவ்வளவு நாளாயிற்றுக்கும் ! பாவம் தலைபோகிற வேலை யங்கே" என்று கேட்டாள். இவ்வார்த்தைகள் ஒரு சிறிய

‡ Spring cot.

வெள்ளி மணியின் நாதத்தைப்போல் காதில் ஒலித்தன. "இவ்வழகும், குரலும், செல்வமும் வாய்ந்தவள் நமது மனைவியன்றோ" என்கிற சந்தோஷம் தன் நிலைமையை எல்லாம் மறக்கும்படி தன் மனதில் மேன்மேல் எழ நமதய்யர் மரத்தில் நன்றாய்ப் பழுத்த கனியை உண்ணச் செல்லும் வாலிபன்போல் ஓடி அவளருகே உட்காரப் பிரயத்தனப்பட்டார்; அவர் பாதிவழி சென்றதும் மனைவியானவள் பார்த்தவர்கள் பயப்படும்படி முகத்தைச் சிடுசிடுத்துக்கொண்டாள்; ஆவலுடன் சென்ற வாலிபன் பாதிவழியில் ஒரு பாம்பைக் கண்டால் எவ்வாறு திடுக்கிடுவானோ அவ்வாறு தடஸ்தமாய் நின்றான்.

"ஐயோ இந்த ஊருக்கு வந்தும் இக்கந்தைகளைத்தானோ உடுக்கவேண்டும், எங்களண்ணா கொடுத்த சரிகை அங்கவஸ்திரங்களெல்லாம் எங்கே போயின? (சற்றுநேரங்கழித்து) எங்கேபோகிறதாவது ? அக்கிழவி வயிற்றுப் பாட்டுக்காக விற்றுத்தின்றிருப்பாள் " என்று கடுகடுப்புடன் சொன்னாள்.

நமதய்யரப்பொழுது தான் உடுத்திருந்த வேஷ்டியைப் பார்த்துக்கொண்டார். தான் கச்சேரியில் எழுதுகிறபொழுது பேனாவை உதருகின்றதனால் விழுந்த "மைப்புள்ளிகள்" *ஏராளமாய் எங்கும் நிறைந்திருந்தன ; மனதில் குதித்தெழுந்த கோபத்தை (தான் வந்த காரியம் பூர்த்தியாகவேண்டியதால்) அடக்கிக்கொண்டு மேஜையினருகிலிருந்த நாற்காலியிலுட்கார்ந்து " கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக்கொடுத்த புத்தியும் எத்தனை நாளைக்கு ; நாமே சம்பாதித்துச் செய்துக்கொண்டது , தான் நமக்கு நீடித்துவரும் ————அது கிடக்கட்டும்; மீனா உன் விளையாட்டை எல்லாம் விட்டுவிட்டு இதைச் சற்றே கேள். என் தாயார் படுக்கையும் தானுமாக

* Ink spots.

படுத்துக்கொண்டிருக்கிறாள்" என்று சொல்லி இச்சமாசாரத்தால் அவள் முகத்திலுண்டாகும் மாறுபாடுகளைக் கவனித்தார்.

"ஐந்துநிமிஷம் கழிந்தபிற்பாடு " உடம்பு என்னமோ?" என்று தனக்கும் மாமியாருக்கும் ஒரு சம்பந்தமும் இல்லாதவள்போல் மகா இளக்கத்துடன் வினவினாள்.

"பித்தக்காய்ச்சலாம்: எழுந்து நடக்கிறதே மிகவும் துர்லபம் ; அன்னாகாரம் என்கிறது சற்றேனும் கிடையாது. உன்னைப்பார்க்கவேண்டுமென்று அவள் ஆசைப்படுவது இவ்வளவவ்வளவு அல்ல" என்று கல்நெஞ்சமும் இளகும்படி சமாசாரத்தை வெளியிடலாயினான். நமதய்யர் சொன்னதைக் கேட்டும் கேட்காததுபோல் நடித்து " அதற்கென்ன இப்பொழுது" என்று மிகவும் அசுவாரசத்துடன் கேட்டாள்.

"அவளோ தள்ளமாட்டாத கிழவி இங்கே வருவது மிகவும் அசாத்தியம். பிழைக்கிறாளோ ! சாகிறாளோ! தெரியவில்லை. நீ யவ்விடத்தில் வந்து அவளுடைய கடைசி காலத்து ஆசையை திருப்திசெய்துவிட்டுவந்துவிடேன்" என்று தன் தாயாரை நினைக்க மனதில் அடங்காத்துயரமெழ மொழிந்தான்.

" என்ன சொன்னீர்கள் ? நான் உங்கள் ஊருக்கு வருகிறதா ? நன்றாயிருக்கு, அவ்விடத்தில் வந்து காலையிலெழுந்து சாணித்தண்ணீர் இரைத்துக்கொண்டும், புழுக்கல் அரிசி சமைத்த வெங்கலப்பானையையும், சொட்டுரசம் வைத்த கற்சட்டியையும் தேய்த்துக்கொண்டிருக்கவேண்டுமோ ? அதற்கா இக்தக்கைகள் உதவவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு எழுந்துவந்து தன் இரண்டு கரங்களையும் நமதய்யர் முன் நீட்டினாள். அவர் அவற்றை பிடித்துப்பார்த்து நிதானமாய் நசுக்கினார். புதிதாய் மலர்ந்த உரோஜா

புஷ்பங்கள்போல் சிவந்து நூற்றெடுத்த பட்டைப்போல் மிருதுவாயிருந்தன.

"எவ்வளவு நன்றாய்த்தான் கைகளிருந்தபோதிலும் வேலை செய்யப்படாதென்று எங்கே சொல்லியிருக்கின்றது. அதோ மேஜையின்மேலத்தனை நவீன கதைகள் * வைத்திருக்கின்றாயே அதிலிருக்கிறவர்களெல்லாம் பிறர் சுகத்திற்காக எவ்வளவு தங்கள் சுயநயத்தை மறந்திருக்கிறார்கள். எங்கள் குடும்பம் ஏழைமைத்தனத்திலிருந்தபோதிலும் சமயத்தையறிந்து நடக்கவேண்டாமா!" என்று புத்தி சொல்லத் தொடங்கினான்.

பின்பு சொன்னதற்கு சற்றும் செவிகொடாமல் "ஆமாம்! கதைக்குக் காலுண்டா! என்னவோ அதில் சொல்லியிருக்காம் எனக்குப் புராணங்கூற வருகிறீர்கள். இன்றைக்கெல்லாம் நீங்கள் சம்பாதிப்பது மாதம் பதினைந்து ரூபாய். உங்களம்மாளுக்குப் பலகாரம் செய்யவேபோதாது. அதுகிடக்கட்டும்; நீங்கள் ஒரு வருஷம் சம்பாதிப்பதையெல்லாம் செலவிடாமல் சேர்த்தாலும் இதுமாதிரி ஒரு புடவை வாங்கமுடியுமா?" என்று தானுடுத்திய புடவையின் முந்தாணியை விளக்கின் முன்னால் விரித்தாள். அதில் கொடிகளாகவும் மாங்காய்களாகவும் பின்னியிருந்த சரிகை 'தகதக' வென்று பிரகாசித்து நமதய்யர் கண்களைக் கூசச்செய்தது.

இவள் செயல்களைப்பார்த்து மிகவும் ஆச்சரியமடைந்து நமதய்யர், "மீனா உன்னைப்போன்ற சிறுமிகள் எத்தனைபேர் திருப்தியுடனும் சுகத்துடனும் வாழ்கின்றார்கள், அவர்களெல்லாம் இப்புடவையா உடுத்தியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம்விட்டு நான் சொன்னதை ஆலோசி!" என்று தன் காரியத்தை ஞாபக மூட்டினார்.

"என்னத்தை ஆலோசிக்கிறது. இந்த பூமியில் என்னத்திற்கு பிறந்திருக்கிறோம்? இன்பமனுபவிப்பதற்கல்லவா? இக்காலத்தில் செல்வம்தான் இன்பம். நீங்கள் இவ்வேலையிலிருந்துகொண்டு வாழ்நாளெல்லாம் சம்பாதித்தாலும், இந்த நகைகளைப் பண்ணமுடியுமா?" என்று தன் கைகளிலணிந்த காப்பு கொலுசுகளையும் காசிமாலை முதலிய கண்டஆபரணங்களையும் தொட்டாள். மேலும் தான் செய்யும் நடிப்பை பூர்த்தியாக்கத் தன் முகத்தை சற்றே அசைத்தாள். அப்பொழுது அவள் 'தோடுகளில்' பதித்த முக்கோணங்களாகச் செதுக்கின வயிரங்களில் வானவில்லின் வர்ணங்களையுடைய மிகவுஞ் சிறுதீபங்கள் அங்குமிங்குமாகப் பிரகாசித்தன.

"இவளிந்த வித்தைகளை யெங்கு கற்றனளோ!" என்று ஐயமும் அச்சமுமடைந்த நமதய்யர்:

"மீனா இப்புடவைகளிலும் நகைகளிலும் என்ன இருக்கின்றது? எல்லாம் வீண். இனிக் கொஞ்சக் காலம் போனால் நீயே இவற்றையெல்லாம் வெறுப்பாய். சாகுமளவும் நம்மிருவரையும் ஒன்றாகப் பிணித்து, நமது இல்வாழ்க்கையைக் கடக்க சர்வ சவுக்கியமும் நிறைந்த மரக்கலமாயிருப்பது அன்பே. செல்வமயக்கத்தால் அவ்வன்பைக் கைவிடாதே. வேண்டாம்" என்று, உலகத்தை எள்ளளவேனும் நன்றாய் ஆராயாத தன் மனைவிக்கு நற்போதனை செய்தார். செல்வாக்கில் வளர்ந்து செல்வச்செருக்கு குடிகொண்ட அவளுக்கு இவ்வார்த்தைகளின் நியாயம் சற்றேனும் புலப்படவில்லை.

"நீங்கள் என்ன சொன்னாலுஞ்சரி, என்னால் அவ்விடம்வந்து கஷ்டப்படமுடியாது. நீங்களும் இவ்வூரைவிட்டுப் போகக்கூடாது" என்று ஒரு நியாயாதிபதி தீர்ப்புசொல்வதைப்போல் சொன்னாள்.

*Novels.

"உனக்கு மிவ்வளவு கர்வமா? உங்கள் தகப்பனாருக்கு அடிமையென்று என்னை நினைத்தாயா? சோம்பர் என்னுடம்பில் சேர உங்களுடைய பசுமாட்டையும் குதிரையையும் போல் உட்கார்ந்திருக்கின்றவனா? நாமாக உழைத்துச் சம்பாதித்த பொருளின் மகிமையை நீ ஒருநாளும் அறியாய். நாளையதினம் போகின்றேன். இனி இந்தத் திசையில்கூடத் திரும்பிப் பார்க்கமாட்டேன்" என்று இரக்கமும் பச்சாதாபமுமற்று கடுகடுத்து மறுமொழி சொன்னார்.

ஆண்மக்களை மயக்கும் சகல ஆயுதங்களும் தப்பவே கடைசி ஆயுதமான கண்ணரைவிட்டு அழத்தொடங்கினாள். அக்கண்ணீர் துளிக்குப்பின் துளியாக முத்தங்களைப்போல் ததும்புவதை மற்றொரு சமயத்தில் நமதய்யர் பார்த்திருந்தால் இரக்கங்கொண்டு உடனே சென்று தழுவி முத்தமிட்டு அக்கண்ணீரைத் துடைத்திருப்பார். ஆனால் இப்பொழுது தன் தாயாரையும் தன்னையும் நிந்தித்து எள்ளளவேனும் தன் வேண்டுகோளைக் கேட்கவில்லையென்ற கோபம் மனதில் குடிகொண்டதினால், தலைகுனிந்து தனியே நின்றார். மீனாட்சி, கொழுக்கொம்பைச் சுற்றியிருந்த பூங்கொடி, பனிநீரை*ச்சிலிர்த்து அவிழ்ந்துவிழுவதைப்போல் அமளியின்மேல் கண்ணீர்விட்டுக்கொண்டே விழுந்து விம்மி விம்மி யழுதுக்கொண்டே தூங்கிவிட்டாள்.

நமதய்யரும் காலை மூன்றுமணி வரையில் தலைமேல் கைவைத்துக்கொண்டு ஆலோசனை செய்துக்கொண்டிருந்தார். தன் மனைவி வியசனமற்று தூங்குவதையும் அதே அறையில் தான் மிகவும் துன்ப சிந்தையுடன் வருந்துவதையும் நினைக்க நினைக்க, கடவுளின் செயல்களில் மிகவும் வியப்பு அவருக்கு உண்டாயிற்று. கடைசியாக ஒன்றுந்தோன்றாதவராய், மேஜையின் மேலிருந்த ஒரு காகிதத்தில் நான்கு ஐந்து வரிகள் எழுதிவிட்டு கதவைத் திறந்து கீழேஇறங்கி, வெளியில் சென்றார்.

மறுநாள் காலையில் "ஸப்-ஜட்ஜ்" வீடு மிகவும் குழப்பமும் ஆரவாரமும் நிறைந்திருந்தது. மீனாட்சி தன் கையில் ஒரு கடிதத்தை வைத்துக்கொண்டு அழுதுக்கொண்டிருந்தாள். அவள் தாயார் "ஏண்டி அம்மா, அழுகின்றாய்" தலையெழுத்துக்கென்ன செய்யலாம், கலியாணம் செய்யும்பொழுதே எனக்குத் தெரியும். பாழுங்கிணற்றில் தள்ளவேண்டாம், தள்ளவேண்டாம் என்று சொன்னால் உங்களப்பா கேட்டால்தானே?" என்று தேற்றிக்கொண்டிருந்தாள். இச்சமயத்தில் ஊருக்குப்போயிருந்த 'எஜமான்' வந்து சேர்ந்தார்.

"என்னடி மீனா, அழுகின்றாய்" என்று கேட்டார்.

"என்னடி யாவது என்ன! உங்கள் பி.ஏ. பியால் பண்ணின மாப்பிள்ளைசெய்த கோலத்தைப் பாருங்கள். மீனா அவருடைய குடிசைக்கு அந்த கிழவிக்கு சமைச்சிபோட வரமாட்டேன் என்றாளாம். அதற்காக அவளைப் பிடித்தடித்து இந்தக் கடிதத்தையும் எழுதிவைத்துவிட்டு, யாவருடனும் சொல்லாமல் ஊருக்குப் போய்விட்டார்." என்று சொல்லி மீனாட்சியின் கையிலிருந்த கடிதத்தைக் காட்டினாள்.

"என் அருமையான மீனாட்சி,

"நீ பேசின வார்த்தைகளெல்லாம் மிகவும் நியாயமாய்த்தோன்றின. அவைகளால் நானுனக்குத் தகுந்த கணவனல்லவென்று தெரிந்துகொண்டேன். மேலும் இவ்விடமிருந்தால் என் தாயாரை மறக்கவேண்டிவரும். நான் உனக்குத் தகுந்த அகமுடையானென்று,

உனக்குத் தோன்றுகிறதை நான் அறியும்பொழுது மறுபடியும் வருகின்றேன்.

உன் அன்பிலாழ்ந்த,
தியாகராஜன்."

என்று அதிலெழுதியிருந்தது.

"சீ என்னடி மீனா, இந்த அற்பத்திற்கா அழுகிறது, நன்றாயிருக்கு! கழுதை கெட்டால் குட்டிச் சுவர்தானே!" என்று ஆறுதல் சொன்னார்.

"கழுதையோ, இன்னுங் கழுதையோ" என்று மங்களம் பாடினாள் அவர் மனைவி.

* * *

* * *

* * *

இச் சமாசாரங்கள் நடந்து மூன்றுவருஷங்களாயின. இதனிடையில், மீனாட்சி பிழைக்கிறாளோ சாகிறாளோ என்று சந்தேகிக்கும்படி பெருங் காயலாவில் கிடந்தாள். அவள் பிழைத்தது மறுபிறப்பு என்று சொல்லலாம். அவ்வாறு காயலாவில் வருந்தும்பொழுதே, அவளுடைய எண்ணங்களும், நினைவுகளும், பூரணமாக மாறிப்போய்விட்டன. அப்பொழுது உலகத்தில் பிறப்பது விலையுயர்ந்த நகைகளையும், ஆடைகளையும், அணிந்துகொள்வதற்கல்லவா" என்று எண்ணும் வீணாசைகொண்ட சிறுமியாயிருந்த அவள் "இவ்வுலகத்தின் பேரின்பமாகிய அன்பைக் கைக்கொண்டு இதரங்களுக்கு நன்மையுண்டாகும்படி நடப்பதே இல்வாழ்க்கைக்குச் சிறப்பு" என்று நினைக்கும் ஒரு அறிவு முதிர்ந்த பெண்மணியானாள். தன்னுயிர்த்தோழனை தான் அவமதித்ததை யெண்ணி யெண்ணித் தானே தன்னை நிந்தித்துக்கொண்டாள்; திட்டியுங்கொண்டாள். அவரைக் காணவேண்டுமென்று மனமுருகினாள். மேலும், தன் தாய் தந்தையர் தன்னையுண்மையாக வெறுக்காமல் போனாலும் முன்னவ்வளவு அன்புடனும் செல்வாக்குடனும் நடத்தவில்லையென்று தெரிந்து, அவர்களுடன் அதிகமாகப் பேசுவதையும் விட்டாள். தன் காதலன் அன்றிரவு எழுதிய கடிதத்தை பல முறைகளும் படித்து ஆனந்தித்து அதில் வரைந்திருந்த "உன் அன்பிலாழ்ந்த, தியாகராஜன்" என்பதை யாருமறியாமல் முத்தமிட்டுக்கொண்டாள். தன் கணவன் இருக்குமிடம் தெரியும்பொருட்டு, அவ்வூரிலிருந்த தன் தோழிகளுக்கு கடிதங்களெழுதினாள். தன் மாமியார் இறந்துபோனாள் என்கிற சமாசாரம் தெரிந்ததே ஒழிய மற்றவரிருக்குமிடம் தெரியவில்லை. சர்வமறிந்த தெய்வத்தின்பால் நம்பிக்கைவைத்து, தன் கணவனிருக்குமிடம் தெரிகிறதற்காக, கோயிலுக்குப்போய் நெய் தீபங்களையும் ஏற்றிக்கொண்டுவந்தாள்.

மீனாட்சி இவ்வாறு கணவன் தியானத்திலிருக்கும்பொழுது "மைசூர்" முத்திரை போட்ட ஒரு கடிதம் தன் தந்தைக்கு வந்து சேர்ந்தது. அதைப் பிரித்துப்பார்க்கும்பொழுது தியாகராஜன் கடிதமாகவே இருந்தது. மீனாட்சியடைந்த சந்தோஷத்திற்களவில்லை. தான் மைசூரில் பதினைந்து ரூபாய் வேலையிலிருப்பதாகவும் அப்பொழுதாவது தன் மனைவியை யனுப்ப அவர்களுக்கிஷ்டமா? என்று கேட்டிருந்தான். தாய்தந்தையர்கட் கிஷ்டமில்லமாற்போனாலும், மீனாட்சியின் தொந்தரவு சகிக்கமுடியாமல் சம்மதமென்றெழுதவே தியாகராஜனும் வந்து தன் மனைவியை மாத்திரம் அழைத்துச் சென்றான்.

அவர்கள் மைசூரிலிறங்கிய வீடு மிகவும் சிறியதான போதிலும், மீனாட்சி தன் கணவனின் நிலைமையை யறிந்து, யாவரும் மகிழும்படி இல்லறம் நடத்திவந்தாள். முன் அவள் அடைந்திருந்த கர்வத்தையும் பிறகு தனக்கு கீழ்ப்படிந்து தன்னைத் திருப்திசெய்யச் செய்த அவளுடைய செயல்களையும் தியாகராஜன் கண்டு அன்றிரவு மகா கம்பீரமாய் வார்த்தையாடின மீனாட்சியோ! என்றையுற்றான். தன் தாழ்வையும், ஏழ்மையையும் குறித்து சொல்பமு முறையிடாமல் வீட்டிற்குரிய ஒவ்வொரு

காரியத்தையும் சுத்தமாகவும் சிறப்பாகவும் மீனாக்ஷி செய்ததை பல முறைகளிலும் பரிசோதித்து முன்னிலும் பதின்மடங்கதிகமான அன்புடன் அவளைத் தியாகராஜன் நேசித்தான். இவ்வாறு ஒரு மாதம் செல்ல ஒரு நாள் தியாகராஜன் "தன் சிநேகிதன் கட்டிய ஒரு அழகான வீட்டைத் தன் மனைவிக்குக் காண்பிக்கும்பொருட்டு அவளைத் தன்னுடன் அழைத்துச்சென்றான். அவ்வீடு இராஜ வீதியில் புதுமையாலும் அழகுடன் சேர்ந்த அடக்கத்தாலும் நன்றாக விளங்கிற்று. அவ்வீட்டிலிவர்கள் புகவே ஒவ்வொரு வேலைக்காரனும் இவர்களுக்கு மரியாதை செய்ய ஆரம்பித்தார்கள். ஒன்றும் தெரியாமல் பிரமித்து "இது யார் வீடு" என்று மீனாட்சி கேட்டாள். தியாகராஜன் அவளை மெத்தையின்மேலழைத்துச் சென்று நன்றாயலங்கரித்த ஒரு அறையில் நுழைந்தான். அங்கே வேறு அநேக படங்கள் இடையில் ஒரு படம் திரை மூடப்பட்டுள்ளதாய் கவனிப்பைக் கவர்ந்தது.

"அப்படத்திலுள்ளவர்களே இவ்வீட்டின் சொந்தக்காரர்கள்" என்றான்.

சரேலென்று ஓடி மீனாட்சி திரையை ஒதுக்கிப்பார்த்தாள். அதில் தன் தாயாரினுடம்பு அசௌக்கியமென்று தியாகராஜன் தன்னை அழைக்கவந்தநாளில் தான் கட்டிலின்மேல் படுத்திருந்ததும் அவன் "மைப்புள்ளிகள்" நிறைந்த வேஷ்டியைக்கட்டி பக்கத்தில் நின்றதும் மிகவும் நன்றாக வரையப்பட்டிருந்தன. மீனாட்சி வெட்கமும் வியசனமுமடைந்து தலை குனிந்து கண்ணீர் பெருகவிட்டாள்.

"அன்றையதினம் நீ பேதமை நிறைந்த ஒரு சிறுமியாயிருந்தாய். உன்னை மன்னிக்க பிறகு எனக்கு அநேக சமயங்கள் வாய்த்தன" என்று அவளைத் தழுவி முத்தமிட்டான்.

* * * * *

தியாகராஜன் ஐசுவரியம் பெற்றது ஒரு அற்புதமல்ல. அவன் தன் வேலையிலிருந்துக்கொண்டே எம். ஏ. பரிட்சை தேறி பின்பு மைசூர் திவானுக்கு விண்ணப்பம் செய்துக்கொள்ளவே, அவர் இவனுடைய கல்வித் தேர்ச்சியையும், நன்னடத்தையையும் தானகப் பரீக்ஷித்து, ஆச்சரியமடைந்து மைசூர்க் கலாசாலையில் இருநூறு ரூபாய் வேலையைக் கொடுத்தருளியிருந்தார்.

CHILDREN'S PAGE

(Adapted from the Children's Magazine)

ஒரு தாய் தன் குழந்தையைப் பற்றிக் கூறியது.

("சில்ட்ரன்ஸ் மகஜீன்" எனனும் "ஆங்கிலப் பிள்ளைகள் பத்திரிகை"யின் 1914-ம் வருஷத்து ஜனவரிமாதச் சஞ்சிகையின் 83-வது பக்கத்தில் பிரசுரமாயிருக்கிற ஒரு பாடலின் கருத்தைத் தழுவி யெழுதியது.)

"துணிவுடைச் சிறுநர! சொல்லுதி இன்னே,
உன்னாற் பெறலாம் ஊதியம் என்னே?
என்பயன் நின்னா லென்ப தறியேன்.
சொல்ல வல்லையேல், சொல்லுதி வல்லே.
தாமரை யிதழெனத் தயங்குகை விரலாய்!
திங்களை வளைந்து திகழ்கரு முகில்போற்
சுந்தர வதனம் சூழ்ந்து தொங்கி
இருண்டு சுருண்டெழில் எறிக்குங் குஞ்சியாய்!
ஒருநாள் போல உறுபல நாளும்நீ
செய்சிறு குறும்புக் கெய்தன விலையால்.
யாவது நின்னா லாவ தென்ன
உன்னாற் சொல்ல வல்லு மென்னில்
நன்குசிந் தித்து நவிலுதி வல்லே."
என்றனன். என்றலும் இருசிற் றடிகள்
குறுகுறு நடந்தெனைக் குறுகியென் மடிமேல்
உற்றன. மிகுகளி ஒளிர் எழில் இளவிழி
கூர்ந்தெனை நோக்கின. குறுநகை அரும்பின.
இருசிறு செங்கைகள் என்னிரு கதுப்பினை
இறுகுறப் பற்றியீர்த் தினிதின் அணைத்தன.
"உனது வினவுக் குறுவிடை கேட்டி
அன்னாய்! யான்உனக் கன்பு செய்தலே †
என்னால் ஆம்பயன்" என்னப்
பவளவாய் திறந்ததென் பாக்கியந் தானே."

இதன் பொருள்:—"ஏ! துணிவுடைய சிறிய மனிதனே! (பெரிய மனிதர்போல் நடிக்கும் சிறிய குழந்தையே) உன்னால் நான் பெறக்கூடிய இலாபம் யாது? இப்பொழுதே சொல்வாயாக. உன்னால் என்ன பிரயோசனமென்று எனக்குத் தெரியவில்லை. நீ சொல்லக்கூடுமானால் சீக்கிரம் சொல்வாயாக. தாமரை மலரும் அதன் இதழ்களும் போன்ற கையும் விரலும் உடையானே! சந்திரனைச் சூழ்ந்து விளங்குகின்ற கரிய மேகம்போல அழகிய முகத்தைச் சூழ்ந்து கரியநிறமும் சுருண்மையும் கொண்டு விளங்கும் அழகுள்ள தலைமயிருள்ளானே! நீ தினந்தோறும் செய்யும் சிறு குறும்புகள் கணக்கில் அடங்கா. உன்னால் ஆவது யாது என்று உன்னாற்

சொல்ல முடியுமானால், அது இன்னதென்று நன்றாக ஆலோசனைசெய்து சீக்கிரமாகச் சொல்வாயாக" என்று (சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டிருந்த என் குழந்தையைப் பார்த்துச் சொன்னேன். அப்படிச் சொல்லியவுடனே, (என் குழந்தையின்) இரண்டு சிறிய கால்கள் குறுநடைகொண்டு நடந்து வந்து என் மடிமேலுற்று நின்றன. மிகுந்த களிப்புடன், இலங்கும் அழகும் இளமையும் உள்ள கண்கள் என் முகத்தைநோக்கி (நான் கேட்ட கேள்வியை, தெரிந்துகொண்டு கேட்டேனோ தெரியாமற் கேட்டேனோ என்று கண்டுபிடிக்கும்படி) கூர்ந்தபார்வையாகப் பார்த்தன. (என்னால் ஒரு பிரயோசனமும் இல்லையென்றோ எண்ணுகிறாய், சிறந்த பிரயோசனம்என்னால் உண்டு என்பதை நீ தெரிந்துகொள்ளவில்லையே. இவ்வளவுதானா உனக்குத்தெரிந்தது! என்று பரிகாசம் செய்யும் குறிப்போடு கூடிய) சிரிப்புத் தோன்றச் சிறிய பல்லுகள் வெளித்தோன்றி விளங்கின. இரண்டு சிறிய சிவந்தகைகள் என்னிரண்டு கன்னங்களையும் இறுக்கமாகப்பற்றி (என் முகத்தை எதிர்முகமாகவும் சமீபமாகவும் உறும்படி) இனிதாக இழுத்தன. "என் அம்மையே! என்னால் யாது பிரயோசனமென்று கேட்ட கேள்விக்கு மறுமொழி கூறுகிறேன். கேட்பாயாக நான் உனக்கு அன்பு செய்தலே † என்னாலானபிரயோசனம்" என்று (என் பாக்கியமாகிய என்குழந்தை) பவளம்போன்ற வாய் திறந்து கூறியது என் தவப் பயனே."

V. P. SUBRAMANIA MUDALIAR.

† *Compare the following from the Gospel of the Holy Mother:—*

"அமுதூண்"

"அம்மாளுக்கங்கங் கொழுத்ததென்றான் என் 'கண்ணே'
நஞ்சுண்டகுழந்தையவன் தாயாரைத்தேடினதால்
காயுங்கறியுங் கனிபலவும் தின்னூறுமிக்காயம்
பல்லைப்பெருகிப் பருத்திடல் தானதிசயமோ
அருமையுடனவன் வார்க்குமன்பாமமிர்தத்தை
அகமகிழ்ந்தவள்பருகிடுங்கால்."-ஆனந்தத்தாய்மொழி,
3-வது வளர்ச்சிப்பருவம், வளர்ச்சிப்படலம்.

cf. Also Jesus' saying to his disciples: "I have meat to eat that you know not of."—வி.சி.ப.]

ON THE EVILS OF GAMBLING.

சூதுசெய் துன்பம்.

(SELECTIONS FROM STANDARD AUTHORS.)

நாலடியார்.

1. அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்ததேய கொண்டருளைத் தேய்க்கும்—மறத்ததேய
பூண்டுவிரோ தம்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ என்றார் தெரிந்து.

2. உருவழிக்கும் உண்மை உயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானம் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து.

நைடதம்.

3. உலகற் றருமமெய் சிதைக்கும் தெண்டிரை
வேலைமுற் றருமைப் பெருமை வீழ்த்திடும்
மானுறுத் திடுபகவ ருடல் மன்னகேள்
கோவிழுக் காசர்தம் கொள்கைத் தென்பவே.

4. கள்ளுண விரும்புதல் கழகம் சேர்தல்மால்
உள்ளுறப் பிறர்மனை நயத்தல் ஒன்னலர்க்
கொள்ளரும் ஞாட்பினுள் இரியல் செய்திடல்
வள்ளியோய் அறநெறி வழுக்கு மென்பவே.

5. ஐயநீ ஆடுதற் கமைந்த சூதமற்
றெய்துநல் குரவினுக் கியைந்த தூதுவெம்
பொய்யினுக் கருந்துணை புன்மைக் கீன்றதாய்
மெய்யினுக் குறுபகை யென்பர் மேலையோர்.

6. எள்ளுக சூதினை இகலி வென்றதூஉம்
கள்ளமேற் கொடுவலை கரந்து வேட்டுவர்
உள்ளுற வைத்திடும் உணவை ஓர்கிலர்
புள்ளின மருந்தின போலும் என்பவே.

வில்லிபுத்தூரார் பாரதம்.

7. அடியும் ஆண்மையும் வலிமையும் சேனையும் அழகும் வென்றியுந்தத்தம்
குடியும் மானமும் செல்வமும் பெருமையுங் குலமும் இன்பமுந்தேசும்
படியும் மாமறை யொழுக்கமும் புகழுமுன் பயின்ற கல்வியுஞ்சேர
மடியு மால்மதி யுணர்ந்தவர் சூதின்மேல் வைப்பரோ மனம்வையார்.

8. குழக ராய்இள மடந்தையர்க் குருகுவோர் குறிப்பிலா மையின்நாளும்
பழகு வார்மிகச் சிந்தைநோய் தாங்களே படக்குமா றுணராமல்
அழகு பேறிவாகவே கொண்டவர் அறத்தொழில் புரியாமல்
கழக மாடவும் பெறுவரோ இதனினும் கள்ளுண லினிதன்றே.

வேறு.

9. மேதகத்தெரி ஞானநூற் புலவரும் வேதநூ லுணர்ந்தோரும்
பாதகத்திலொன் றென்னவே முன்னமே பலபடப் பழித்திட்டார்
தீதகப்படு புன்றொழில் இளைஞரிற் சிந்தனை சிறிதின்றித்
தோதகத்துடன் என்னையோ சகுனிதன் சூதினுக் கெதிரென்றான்.

வேறு.

10. மீதெடுத்த வஞ்சராகி வெகுளிசெய்தல் பிறர்பெரும்
கோதெடுத் துரைத்தல்நண்பு கொண்டயிர்த்தல் கொடியவெஞ்
சூதெடுத்து விழைதல்உற்ற சூள்பிழைத்தல் இன்னவே
தீதெடுத்த நாலின்முன்பு தீயவென்று செப்பினர்.

திருக்குறள்.

11. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில்.

12. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

13. பொருள் கொடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்லல் உழப்பிக்கும் சூது.

14 உடைசெல்வம் ஊண்ஒளி கல்வியென் றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்.

கொன்றைவேந்தன்.

15. சூதும் வாதும் வேதனை செய்யும்.

ஆத்தி சூடி.

16. சூது விரும்பேல்.

Kindergarten Page.

GLEANINGS FOR THE INDIAN KINDERGARTENER.

"SUFFER THE LITTLE CHILDREN TO COME UNTO ME"—CHRIST."
COME LET US LIVH WITA OUR CHILDREN"—FROEBEL.

ACTION SONG FOR CHILDREN.

பாலலீலை.

குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச் சொல்கேளா தவர்—திருக்குறள்.

Objects:—பூனை, எலி. Idea:—பூனை எலி பிடிக்கும்.

1. வா பூனை, வா, எலி பிடி, வா, ஓடிவா, ஓடிவா, எலிபிடிக்க.	2. போ, எலி போ, பூனை-பிடிக்கும், போ, ஓடிப்போ, ஓடிப்போ, பூனை பிடிக்கும்.
3. பூனை வா, பூனை, எலி பிடி, வா, வா வா வா, எலி பிடி வா.	4. எலி ஓடு, எலி, பூனை பிடிக்கும் ஓடு, ஓடு ஓடு ஓடு, பூனை பிடிக்கும்.

[குறிப்பு: இப்பாட்டு குழந்தைகள் கிண்டர்கார்டன் முறைப்படி பாலலீலை செய்வதற் கேற்றதாய், அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் குழந்தைகளுக்கு பூனையையும் எலியையும் பிரத்தியக்ஷமாகக் காட்டிய பின்,

"பூனை எலி பிடிக்கும்"

என்னும் உண்மையை தாடார் அல்லது வாத்தியார் அவர்களுக்குணர்த்த வேண்டும். பிறகு ஒரு குழந்தை பூனையாகவும் மற்றொரு குழந்தை எலியாகவுமிருக்க பாவித்து, மூன்றாவது குழந்தை அல்லது மற்றக்குழந்தைகளெல்லாம் சேர்ந்து இப்பாட்டை வார்த்தைகளின் அருத்தத்துக்குப் பொருந்த அபிநயங்காட்டிப் பாடவேண்டும். "வா பூனை" என்னும் பாட்டை அபிநயத்தோடு பாடிக் கடைசி வரியாம் "ஓடிவா, ஓடிவா, எலி பிடிக்க" என்பதைச் சொல்லி அபிநயத்தோடழைக்கும்போது பூனையாகவிருக்க நியமித்த குழந்தை பூனை எலிபிடிக்க வருவதுபோல் பதுங்கிப் பதுங்கி இலக்குப்பார்த்துக்கொண்டு மெல்லவர ஏற்பாடு செய்யவேண்டும். உடனே குழந்தைகள் எலியாக விருக்க நியமித்த குழந்தையைப் பார்த்து "போ எலி, போ" என்று பாடி "ஓடிப்போ, ஓடிப்போ, பூனை பிடிக்கும்" என்று ஆபத்து வந்து விட்டதுபோல் அவசரப்பட்டு அபிநயங்காட்டிச் சொல்லவும் எலியாக விருக்க நியமித்த குழந்தை பூனை பதுங்கிப் பதுங்கி வருவதைப் பார்த்துவிட்டு பயந்தோட வேண்டும். அப்பொழுது "பூனை" எலி ஓடிவிட்டதென்று திரும்ப, குழந்தைகள் மறுபடியும் மூன்றாவது பாட்டைப்பாடி அதைக் கூப்பிடவேண்டும். அதைக்கேட்டு பூனை முன்போல் வர, உடனே எலியைப்பார்த்து ஓடிப்போவென்று நாலாவது பாட்டைப் பாடுவார்கள். அப்பொழுது எலியோட பூனை ஏமாந்துபோம்.

இதனால் குழந்தைகளுக்கு மனக்கிளர்ச்சியுண்டாகி வார்த்தைகளை உபயோகிப்பதிலுமுண்டாகும் பயனையறிந்து புலன் பொறிகளெல்லாம் வார்த்தைகளின் பொருளையும் அதன் முன்பின் தொடர்பையும், கவனிக்கப் பழகுவதால் புத்தி தீக்ஷண்ய முண்டாகும். "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்" என்றிருப்பதால், பாலப்பருவத்திலேயே தங்கள் மனதோடு புலன் பொறிகளெல்லாம் ஒத்து வேலைசெய்யப் பழகின குழந்தைகள் அதே பழக்கம் மேலிட்டு எந்த விஷயத்தையும் தீரத்தெளிய உற்று நோக்கி யுண்மை யுணரும் சக்திவாய்ந்தவர்களாவார்கள். 4-வயது முதல் 8-வயது வரையில் இப்படி புலன் பொறிகளை புத்தி தீக்ஷணியத்துக்காதாரமாக உபயோகிக்கப் பழகின குழந்தை பின் அது கற்கு மெல்லாவற்றையும் நுட்பமாக ஆய்ந்து எதையும் "கசடறக் கற்கும்" சக்தி வாய்ந்ததாகும்.]

"IT IS OUR DUTY TO WORK MOST OF OUR LIVES AND WORK WELL.'

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End.'

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

" HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum*
'New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"
புத்தகம். 23.] ராக்ஷஸ வைகாசிமீ, 1915 மேமீ [சஞ்சிகை 2.

THE PROBLEM OF CHILD EDUCATION.

" BENDING THE EDUCATIONAL SYSTEMS."

The Viceroy: "I am not here to decry any efforts that are made to secure for young men *in their early days such* qualifications as are necessary if they are to get a good start in life, though I do think it is one of the most difficult problems before India to-day so to adjust the general life of the country that suitable careers may be open to the multitude of young men who are anually turned out to find no occupation appropriate to their aspirations and qualifi*cations, and so to bend its educational systems* that the education given may be that best calculated to fit them for their various careers. This is a problem that besets us in England as well as in India. I do not know how far the difficulties of the problem have forced themselves upon your notice, but I believe......and *I know that the other question of the character* and well-being of your students occupies a most prominent place in your attention .....*The inculcation of ideals of social service* has been your practice for years and from all I can hear your labours have been attended with happiest results."—*Lord Hardinge's Speech at St. John's College, Agra.*

The Economic Value of Education.

" The imagination must be the child's. He must first of all see clearly. Then out of the whole world of metophors and comparisons he may choose what he likes."—*Madame Montessori.*

" What we need is a greater efficiency on the part of every one, a higher appreciation of the value of labour in all directions, and this can only come by beginning very young by making children do something well and learning to do other things better all the time. Our wasted energy is enormous ...If the Montessori or any other method can reach to the essential fact that it is our duty to work most of our lives and work well, it will be a great boon."—*The London Times.*

THE NEW EDUCATIONAL MINISTER'S VIEWS ON THE PROBLEM OF CHILD-EDUCATION.

புதிய வித்யாமந்திரியின் அபிப்பிராயம்.

THE INFLUENCE OF EDUCATION.

The first need of the village is education suited to its needs. "The teacher in ancient days moulded the life of the boy, and imparted to him the education needed for him. The village schools now scarcely exercise any influence on village life. The school is not in harmony with the needs of the village. The curriculam of studies is the same for all the castes and classes in the Presidency, for towns and villages, irrespective of the needs of the student. The teacher is town-bred. The official Director of educational studies has his eye not on the requirements of any village but on the Madras Presidency as a whole. The courses of study prescribed are really formulated for the use of town boys and are calculated to draw the boys away from villages. The studies are literary and do not make the village boys better farmers or agriculturists. To the girls, such a course of studies is thoroughly unsuited. We want the entire curriculum to be modified to suit the needs of a particular village. Interest may diverge with each village or community, and the children are brought up in the environment peculiar to their village and community. All this can only be done by the members of the village community itself. They have to meet and discuss the needs of their village, and the purposes to be attained by attendance at schools. An official Inspector trying to find out what they want and carrying out the wishes so ascertained can never be a sufficient substitute. A school under village supervision will interest and attract both women and men. We know now that when schools are started in villages in which teachers known to them teach subjects like music, the women flock to them. That the officials may sometimes be white men need make no difference. A school under the management of the members of a village community, teaching the subjects required by them, will also introduce a new element of interest in the village community. They will take a pride in this school, which will be a meeting place for them.—The Hon'ble Mr. Justice C. Sankaran Nair in the *Modern Review*.

"The basis of village life must be a proper system of education devised to suit the needs of the village."

கிராமத்தார் இப்பொழுது வேண்டுவதெல்லாம் உண்மையான வித்யாப்பியாஸம். இது ஏட்டுப்படிப்பு மாத்திரம் ஆகாது. எத்தொழிலில் எத்துறையில் இறங்கியுழைத்து ஜீவனம் செய்யவேண்டியிருந்தாலும் சரி, மனம் படிந்து, தேஹமும் படிந்து நடக்கப் பழகலாம் பாக்கியம் வேண்டும். விவேகம் மட்டும் சிந்தை நிறைந்திருந்தால் விவேகசிந்தாமணியாகிய வரப்பிரஸாதத்தால் எல்லா பாக்கியமும் பெற்று வாழலாம். விவேக சூந்யமான வித்தை அவித்தையே தானாகும். ஆகையால் அவிவேகத்தைப் போக்கி விவேகத்தைக் கொடுக்கும் வித்தை வேண்டும். இது கிராமத்தார் தாமே செய்யு முயற்சியால் விளைக்க வேண்டுமே யன்றி அவர்களுக்காகப் பிறர் செய்யும் முயற்சியால் விளைக்காது. "கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக்கொடுத்த வார்த்தையும் எத்தனை நாளைக்கிருந்துதவும்?" என்பது கிராமத்தார் சொல்லும் பழமொழி. "யோக்யன் தானே பாக்கியனாவான்" என்றால் "அது வேதாந்தம் கூடாது" என்கிற வித்யா விற்பன்னர்களு மிருக்கிறார்கள். அவர்களால் கிராமத்தாருக்கு இடையூறு விளைக்கலாகுமே யன்றி அனுகூலம் செய்வது கூடாமையாக விருக்கிறது. சாதகத்துக்கிடமின்றி பாதத்துக் கிடந்தரும் ஏற்பாடு எக்காலத்தும் வில்லங்கம் விளைக்குமேயன்றி ஸமஷ்டிவாழ்க்கைக்கு நல்லங்கமாகாது. இதை உண்மையாளர்கள் உள்ளபடி ஆய்ந்தோய்ந் துணரல் வேண்டும்.

இதற்கு இன்றியமையாத சாதகம் என்னவென்றால் கிராமவாசத்தின் உண்மைநிலை யுணரல் வேண்டும். இந்த உண்மை யுணர்வது இலகுவான காரியமில்லை. ஸமஷ்டி வித்தையில் பழகினவர்கள் தானே உண்மை யுணர்ந்து ஓதவல்லவராவார். இப்படிப்பட்டவர்கள் நம்மவர்களாக விருந்து நம்மை யறிந்திருக்கவேண்டும்.

புஸ்தகம்-23.] "The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide." [சஞ்சிகை-2.

ராக்ஷஸஹு } விவேகசிந்தாமணி { May June 1915.
சித்திரைமீ

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்தை
யாச்சரிய மோதா னவர்க்கு."

THE NEW MINISTER OF EDUCATION.

புதிய வித்யா மந்திரி.

சென்ற சஞ்சிகையில் அரசர்பிரதிநிதிசட்ட நிரூபண சபையில் வித்யா மந்திரி ஸர் ஹார்கோர்ட்புட்லர் அவர்கள் ஸ்வபாஷாபிவிர்த்தியைப் பற்றித் தாய்பாஷையில் சிறுவர்க்குப் போதிப்பதின் பிரயோசனத்தை யெடுத்துக் கூறியதை யிங்கு விவரித்தெழுதி யிருந்தோம். இப்பொழுது ஸர் ஹார்கோர்ட் புட்லர் அவர்களுக்கு பதிலாக அவருடைய ஸ்தானத்தில் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜாயிருக்கும் ஸர் ஸங்கரன் நாயர் அவர்கள் வித்யா இலாகா மந்திரியாக நியமிக்கப்பெற்றிருக்கிறார். இந்த நியமனம் மாக்ஷிமைதங்கிய நம் அரசர் அவர்களால் அங்கீகாரம் பெற்று கெஜட்டில் பிரசுரமாய்விட்டது. எல்லாரும் ஸர் சங்கரன் நாயர் அவர்களுக்கு உயர்ந்த பதவி கிடைத்ததென்று அவருக்குச் சந்தோஷமுகமன் கூறுகிறார்கள். நாமும் அவருக்கு இந்தியா முழுமைக்கும் வித்யா மந்திரியாயிருக்கும் பதவி கிடைத்ததைப்பற்றிச் சந்தோஷப்படுகிறோம். ஸர் சங்கரன் நாயர் அவர்களிடம் ஆளுக்குத் தக்கபடி வேஷம்போடுகிற ஸ்வபாவம் இல்லை. "எண்ணித துணிவது கர்மம்" என்றுள்ளபடி ஒரு காரியத்தில் பிரவேசித்தால் துணிந்து ஆராத்தீர யோசித்து நிதானம் தப்பாமல் ஒருவித முடிவுகொண்டு அதன்பின் அந்த அபிப்பிராயத்தை நழுவவிடாமல் துணிகர [illegible] ஸ்வபாவம் இவரிடத்தில் இயல்பாயுண்டு. "வாத்தியார் சொன்னபடி தர்ப்பயாமி" என்கிற கதையாக நாலுபேர் அதிகாரிகள் சொன்னபடி சரியென்று தலையாட்டுகிற ஸ்வபாவம் இவரிடத்தில் கிடையாது. தனக்குச்சரியென்று தோன்றியதை வெளியிடப்பயப்படாது தைரியமாகத்தானே சரியென்று தோன்றினபடி நடந்து கொள்ளும் திறமை வாய்ந்தவர். ஒவ்வொரு சமயம் பின்வாங்க நேரிடினும் சமயோசிதமறிந்து சாதிக்கும் வல்லமை யவருக்குண்டு. இவர் பொதுஜனமதிப்பைத் திரணமாய் நினைத்து உத்தியோகப் பெருமையில் மிதமிஞ்சியுழல்கிறவரன்று. தன் அந்தஸ்துக்குள்ள மதிப்பை யறிந்து அதற்குக் குறைவு வாராமல் நடந்து கொள்ளும் ஸ்வபாவமுடையவர். இவருக்கு 1912-ம் வருஷம் நைட் பட்டம் கிடைத்தபொழுது இப்பத்திரிகையின் ஆசிரியர் இவருக்குச் சந்தோஷமுகமன் கூறியெழுத அதற்கு பதில் கூறியெழுதியது அவர் குணத்தைக்காட்டுவதாயிருப்பது பற்றி அதைக்கீழே பிரசுரிக்கிறோம்.

"Many thanks for your letter of congratulations. It is gratifying to learn that a publicist like you entertain such a good opinion. I trust I may not fall in your estimation."

"சந்தோஷமுகமன் கூறியெழுதிய கடிதத்துக்காக அநேகவந்தனம். பொதுவிஷயங்களிலுழைக்கும் உம்மைப்போன்றவர் அவ்வளவு நல்லபிப்பிராயம் கொண்டிருப்பதை யறிய மனம் பூரிக்கிறது. அந்த மதிப்பை யிழந்துவிடாதிருப்பேனென்று நம்புகிறேன்."

1906-ம் வருஷம் அர்பத்நட் கம்பெனி முழுகியபொழுது இவருடன் நெருங்கிப் பழகும்படியான சந்தர்ப்பம் கிடைத்தது..........

மிஸ்டர் சங்கரன்நாயர் அடுத்தவருஷம் அட்வோகேட் ஜெனாலாக நியமிக்கப்பெற்று அதிலிருந்து ஹைகோர்ட்டு ஜட்ஜியாக வந்தார்.

இடையிடையே இவர் மனத்துணிவால் உத்தியோகபதவியில் முன்னுக்குவரும் சந்தர்ப்பங்கள் பலவற்றையிழக்க நேரிட்டிருப்பினும் இவருடைய தீரத்துக்குக் குறைவுவராமல் தானே நடந்து கொண்டு வந்திருக்கிறார்.

இவர் பிரதமவித்யா போதனையைப் பற்றி தீரத்தெளிய நினைந்து கிராமத்தார்க் கவசியமான படிப்பு இன்னபடி யிருக்கவேண்டுமென்று நன்றாகத் தெரிசித்தெழுதி யிருக்கிறார். இவருடைய அபிப்பிராயத்தை யெடுத்தாண்டு "கிராமத்தார்க்கேற்றியமையாத நாட்டுப்படிப்பு" இன்னவித மிருக்கவேண்டுமென்று சென்ற வருஷம் பிப்வரிமாசத்துச் சஞ்சிகையில் விஸ்தாரமாயெழுதி யிருக்கிறோம். அதில் இவர் வெகுதாராளமாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். இப்படிப்பட்ட அபிப்பிராயமுள்ளவர் அந்த அபிப்பிராயத்தை நிறைவேற்றுவதற்கான சாதக சாதன சந்தர்ப்பங்களை யளிக்கும் வித்யாமந்திரி பதவிக்கு வந்ததைப்பற்றி நாம்மிகவும் சந்தோஷப்பட்டு, இவருடைய மந்திரித்துவம் நடக்கும் ஐந்து வருஷகாலத்தில் இவர் செய்யக்கூடிய சீர்திருத்தங்களை ஆவலோடெதிர்ப்பார்த்திருக்கிறோம்.

சென்ற வருஷாரம்பத்தில் கனம் நமது அரசர் பிரதிநிதியாம் லார்ட் ஹார்டிஞ்சவர்கள் பாலபோத விஷயமாய் வெளியிட்ட அபிப்பிராயத்தையும் அவருடைய புதிய வித்யா மந்திரியாகிய ஸர் ஸங்கரன் நாயர் அவர்கள் அதே காலத்தில் கிராமத்தார்க்கேற்ற படிப்பு எப்படி யிருக்கவேண்டுமென்று வெளியிட்ட அபிப்பிராயத்தையும் இங்கிலீஷில் எடுத்து இச்சஞ்சிகையின் முகட்டில் அச்சிட்டிருக்கிறோம். இங்கிலீஷ் தெரியாதவர்கள் புதிய வித்யா மந்திரியின் அபிப்பிராயம் இன்னதென்று தெரிந்துகொள்ள அவர் அபிப்பிராயத்தை யொட்டி முன்னர் விவேகசிந்தாமணியில் வெளிவந்த விஷயத்தில் ஒரு பாகத்தையும் எடுத்ததன் பக்கலில்தானே அச்சிட்டிருக்கிறோம்.

Srimati Swarna Kumari Devi.
(Mrs. Ghosal.)
'பாரதி' பத்திராசிரியை
ஸ்ரீமதி ஸ்வர்ணகுமாரி தேவி.

"When I took up the sacred task of editing, I did not persuade myself to do so with a view to results; nor did I calculate its profit and loss. It was the pleasure of work which encouraged and inspired me to action. Those days of inspiration and encouragement are now ended and I feel lonely and helpless. My done-up body and mind now earnestly seek cessation." —Srimati Swarna Kumari Devi's touching words of adieu on her retirement from the editorship of '*Bharati.*'

ஸ்ரீமதி ஸ்வர்ணகுமாரி தேவியின் பேர் இந்தியா முழுவதும் பரவிப் பிரஸித்திபெற்றது. முக்கியமாய் வங்காளத்தில் அவர் பெருங்கீர்த்தியும் மிகப்பிரபலமாய்விளங்கிவருகிறது. அந்த அம்மாள் காங்ரெஸ் சபையை ஸ்தாபித்த மிஸ்டர் ஏ. ஓ. ஹியூம் அவர்களுக்கு வலதுகையாயிருந்துதவி அவருக்குப் பின் ஜெனரல் செக்ரிடெரி வேலையைவகித்து அச்சபையைச் சிறப்பாய் நடத்திவந்த மிஸ்டர் கோஸால் அவர்களின் மனைவி. பிறந்தவிடம் புகுந்தவிடம் இரண்டும் விசேஷ பாண்டித்தியமுள்ள குலமாயிருந்ததால், இந்த அம்மாளுடைய கல்வியும்திறனும் குணமும் மணமும் நன்றாகச் சோபிக்கலாயிற்று. சுமார் 35-வருஷகாலம் அந்த அம்மாள் 'பாரதி' யென்னும் வங்காள பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்து இப்பொழுது மூப்பு மேலிட்டதனால் அவ்வேலையை விட்டு நீங்கி ஒழிவு தேடலாயினர்.

இந்த 'பாரதி' யென்னும் ஸ்வபாஷா பத்திரிகை 40-வருஷங்களுக்கு முன் அவர் குடும்பத்தாரால் பதிப்பிக்கத் தொடங்கலாகி இப்பொழுது வங்காள முழுவதிலும் மிகப்பெரும் கீர்த்தியும் பெற்ற மாதாந்தரப் பத்திரிகையாக விளங்குகிறது. இப்பத்திரிகையின் முதல் ஆசிரியர் ஸ்ரீமதி ஸ்வர்ணகுமார தேவியின் மூத்த சகோதரர். அவருக்குப் பின் இவர் பத்திராசிரியராக விருந்தார். இவர் மிஸ்டர் கோஸாலோடு சென்னைக்கு வந்திருந்தபொழுது இவரைப்பார்க்கும் பாக்கியம் பெற்றோம். இவருடைய திருமுகமண்டலம் இன்னும் நமது ஞாபகத்தில் அப்படியே அழியாது பதிந்து நிற்கின்றது. இந்தியா முன்னுக்கு வரவேண்டில் இவரைப்போன்ற பெண் ரத்னங்கள் தொகை மிகவும் அதிகரிக்கவேண்டும். இவருக்கு இங்கிலீஷ் நன்றாகத் தெரியுமானாலும், ஸ்வபாஷா விர்த்தியை நாடி அந்த பாஷையில் தானே உழைக்கத் தீர்மானித்து அத்தீர்மானம் தவறாது இத்தனை காலமாக உழைத்து வந்தார். இப்பொழுது அவருக்கு மூப்பு மேலிட்டு விட்டது. அவருடைய பதியை யிழந்த காரணத்தால் அவர் ஏகாங்கி (lonely) யாய்விட்டதாகக் கூறுகிறார் தேஹமும் மனமும் கிட்டத்தட்ட நாற்பது வருஷமுழைத்த உழைப்பால் இளைத்து அக்களைத்து ஓய்வில் ஒழிவை நாடுகிறது என்கிறார்.

இவர் 'பாரதி' யென்னும் சிறந்த பத்திரிகையைநடத்தி வந்ததோடு வேறு விதங்களிலும் வங்காளபாஷையின் விர்த்தியைநாடி மிகவுழைத்து வந்திருக்கிறார். இவருடைய கிரந்தங்கள் பல பிரபலம்பெற்று வழங்குகின்றன. இவருடைய எண்ணமெல்லாம் ஸ்வபாஷா விர்த்தியிலும் அப்பாஷா விர்த்தியினால் பெங்காளிகளின் குணவிர்த்தியையும் நாடியதாயிருந்தது. இவருடைய எண்ணமும் நோக்கமும் எந்தமட்டும் நிறைவேறலாயிற்றென்று பிற்காலத்தில் தானே தெரியவருமென்றும், இவர் 'பாரதி' ஆசிரியர் வேலையை விட்டு நீங்கியது ஸ்வபாஷா பத்திரிகைகளுக்கே ஒரு பெரு நஷ்டமென்றும் 'ரெய்ஸ் அண்டு ரயத்து' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் தமது பத்திரிகையில் கூறியிருக்கிறார். இலக்கியத்துறையில் புகுந்துழைப்பவர்களில் அனேகர் அவருடைய வழிபற்றி முன்னுக்கு வந்தவர்களென்றும் இப்படி அவருக்குள்ள சிஷ்ய வர்க்கம் மிகுதியென்றும் மேற்கண்ட பத்திரிகையின் ஆசிரியர் கூறுகிறார். ஆனால் அவருடைய முக்கியநோக்கம் "கூலிக்கு மாரடிப்பார்" போலக் காசுக்கு எழுதும் கசடராம் கற்றவர்களையொழித்து வித்யேசுவரியின் பூரணோபாஸகர்களாயுள்ள வித்துவான்களையுண்டுபண்ண வேண்டுமென்பதாம். இத்துறையில் அவரெடுத்துக்கொண்ட முயற்சியும் பரிசிரமமும் விசேஷமானது. அவர்செய்த முயற்சி யெந்தமட்டும் பலித்ததென்று பின்னால் தான் தெரியவருமென்று அவரே கூறுகிறார்.

பாஷையின் விர்த்தி புஸ்தகங்களின் மலிவாலும் மிகுதியினாலும் மட்டும் உண்டாகமாட்டாது. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றாதலால், "எண்ணினேன் எண்ணமிது ஸ்வாமி" யென்று, சித்த விருத்தி நிரோதத்தால் மனதை யடக்கியாளக்கற்று, தியான முதிர்ச்சியில் எண்ணினதோர் எண்ணத்தை எள்ளளவும் சிதைவுபடாது அப்படியே ஆணித்தரமான வார்த்தைகளால் வெளியிடக்கூடிய சக்தி வாய்ந்தவர்கள் எழுதும் கிரந்தங்களாலும் அக்கிரந்தங்களை பக்தி சிரத்தையோடு வாசிக்கிறவர்கள் அவருடைய எண்ணத்தைக் கிரஹித்து "பிரமரகீட" ஞாயமாய் அதன் மனனத்தால் அவர்களுடைய மனப்பாங்கை யறிந்து முடிவில் அவர்களுடைய மனோபக்குவத்தைப் பெறும்பாக்கியம் பெற்று உய்யவேண்டும். அப்படிப்பட்ட சக்தி எழுத்துக்கும் வார்த்தைக்கும் வார்த்தையாலமைந்த வாச்சியங்களுக்கும், வாச்சியங்களாலமைந்த கிரந்தங்களுக்கு முண்டு. ஆகையினால் தான் வார்த்தைக்கு மந்திரசக்தியுண்டென்று சொல்லுகிறது. "மனம் ஒருவழிப்பட்டது மந்திரம்" என்றிருப்பதால் மந்திர சக்தி யென்பது மனதை ஏகாக்ரப்படுத்தும் தன்மை வாய்ந்தது. கூருள்ள ஆயுதம் எப்படி நன்றாக வேலை செய்யுமோ அப்படிப் போல ஏகாக்ரப்பட்ட மனது அதன் வேலையை நன்றாகச் செய்யும். இந்த ஏகாக்ர சக்தியில்லாவிட்டால் மனம் தடித்து உணர்ச்சி கெட்டுப்போம். உணர்ச்சி

கெட்டால் புத்தி மழுங்கிப்போம், புத்தி மழுங்கினால் அறிவு குன்றிப்போம், அறிவு குன்றினால் அஸ்தமன காலத்தில் கூடும் இருள் போல் மௌட்டியம் வந்து மூடிக் கொள்ளும்; மனக்கண் குருடாகும். இப்படியே எதிர்வழி சென்றால் ஏகாக்ரசக்தி மனதுக்கு கிராகியசக்தியை யுண்டுபண்ண அது புத்திகூர்மையையும் புத்திவன்மையையும் உண்டுபண்ணும். புத்திகூர்மையினாலும் புத்திவன்மையினாலும் அறிவு விசாலித்துப் பரவும். அறிவு பரவப்பரவ விவேகம் விர்த்தியாகும். விவேகவிர்த்தியினால் மனக்கண் திறக்கும். மனக்கண் திறந்தால் மெஞ்ஞான விசேஷத்தால் குணமும் மணமும் தானே வந்து அமையும். இதுதான் பாஷாவிர்த்திக்குக் காரணம். கலைகளெல்லாம் விர்த்தியாவது பாஷாவிர்த்தியினால். பாஷாவிர்த்தியும் சித்தி விருத்தி நிரோதமாம் யோகசக்தியின் மஹிமையால். இதைத்தான் "Power of Assimilation" என்று நமது அரசர்பிரதிநிதிகூறினார். இது ஏகாக்ர சித்தமின்றி லபிக்காததால் "Concentration" என்னும் ஏகாக்ரசித்தம் இதற்கு இன்றியமையாத துணைக்கருவியாகும்.

ஸ்ரீமதி ஸ்வர்ணகுமாரதேவி நினைத்து முடிக்கக்கருதியவேலை இதுவே. இதன் வித்தை அவர் நன்றாகத் தெரிந்தெடுத்து உழுதநிலமாகிய மனப்பயிர்ச்சி பெற்றவர் உள்ளத்தில் ஊன்றியிருக்கிறார். அது முளைகண்டு வளர்ந்து கிளைத்துத் தழைத்திருப்பது தரிசனமாயினும் அதன் பலன் இனித்தான் தெரியவரவேண்டும். மனேபக்குவம் எல்லாம் மெஞ்ஞானப்பேறு பெறுதற்கும் பெற்ற பேற்றைப் பிறர் பயன்பட வழங்குவதற்குமாம். மனேபக்குவம் வித்து; மெஞ்ஞானப்பேறு முளை; பரோபகாரம் அதன் பலனாகிய சக்தி.

இந்த அம்மாள் பத்திரிகாசிரியர் வேலையில் நுழையும்பொழுது அதனால் காரியத்தில்தனக்குப்பலனுண்டாவென்று யோஜிக்கவில்லை. பிழைக்கும்வழி யாதுமாவென்றும் சிந்திக்கவில்லை. லாபநஷ்டம் என்னவென்றும் சிந்திக்கவில்லை. பின் ஏன் அவ்வேலையிற் புகுந்தாரெனில், அவரே சொல்கிறார் கேண்மின்: பத்திரிகை நடத்துவதை அவர் அஹத்தூய்மைக்குச் சாதனமான ஒரு பெரிய பணியாக நினைத்தார். அந்தப்பணிவிடை செய்வதில் ஒருவித சந்தோஷமிருக்கிறதென்று முணர்ந்தார். இஃதொன்றே அவர் மனதை உற்சாகப்படுத்தி அந்த வேலையில் தொடுபிடியாய்த்தொட்டு நின்றுழைக்கச்செய்தது. இப்பொழுது அவர் வேலைமுடிந்துவிட்டது. தேஹம் களைத்துளுத்துப் போய்விட்டது. மனமும் உழைத்துழைத்துத்தேய்ந்தொடுங்கிப்போயிற்று. இவ்விரண்டு லக்ஷணத்தையும் குறிக்க அவர் உபயோகித்துள்ள வங்காள வார்த்தைகளை இங்கிலீஷ் படுத்தினவர் "My done-up body and mind" என்று சொல்கிறார். வேலை செய்தால் ஓய்வு நாள் வாராதா? வரத்தான் வரும். அந்த ஓய்வு வருங்காலத்தில் பகவான் உழைத்தவர்த்தாரைத் தம் திருவடிநீழலில் இளைப்பாறக் கூப்பிட்டழைப்பார். "Come unto me all ye that labour and are heavy laden" என்று சொன்ன வார்த்தை பொய்யல்ல. இத்தேஹம் எடுத்ததே கர்மவசத்தால்: ஆகையால் இதற்கு கர்மதேஹம் என்று பேர். கர்மதேஹம் அது செய்யவேண்டிய கர்மத்தைச் செய்து ஓய்வில் ஒழிவு பெற்றால், அது பெற்ற ஒழிவில் ஒடுக்கம் தேடும். இதைத் தான் ஒழிவில் ஒடுக்கம் என்று மேலோர் சிறப்பித்துக் கூறியிருப்பது. இதை ஸ்தூல சூக்ஷ்ம காரணதேஹம் மூன்றுக்கும் பொருந்தப் பொருத்திப்பார்ப்பது மேலறிவாளர் பொறுப்பும் கடனுமாம்.

THE WAR

யுத்த சமாசாரம்.

"In the Western Theatre of War the past two or three days have been comparatively quiet after the tremendous fighting that has been proceeding."—*22nd May* 1915.

"சண்டை சமாசாரம் என்ன? கிணற்றில் கல்போட்டாற்போல் இருக்கிறதே!" யென்று கேட்டார் 'விவேகசிந்தாமணிக்கமிட்டி' மெம்பரில் ஒருவரான மாது. அந்த அம்மாள் கேட்ட கேள்வியும் அவர் எடுத்தாண்ட உவமானமும் ரொம்ப சரியாயிருந்தது. ஆனால் அதற்கு நாம் என்ன செய்யலாம்! யுத்தகளத்திலிருந்து வருகிற சமாசாரம் மிகவும் சொற்பம். அன்றியும் யுத்தமுனை சுமார் 260-மைல்தூரம் நீண்டு பரவியிருக்கிறது. பெல்ஜியத்தைச் சேர்ந்த ப்ளாண்டர்ஸ் மாகாணத்தில் வடகடல் ஓரம் தொட்டு 'ஏன்' நதிக்கரை வழியாய் நீண்டோடும் யுத்தமுனையை ஏற்கனவே படத்தில் காட்டியிருக்கிறோம். அந்தச்சண்டை முனையைப்பின்னும் கவனித்துப்பாருங்கள்.*



*

பெல்ஜியத்தின் வடமேற்கு மூலையில் ஒரு பாகம் தவிர மற்றதையெல்லாம் ஜெர்மானியர் பிடித்துக்கொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது. ப்ரான்ஸின் வடபாகத்தில் பிடித்துக் கொள்ளப்பட்ட பாகமும் அதில் நன்றாகத் தெரிகிறது. யுத்த முனையைக்காட்டும் இந்தக் கோட்டுக்குச் சில மைல்கள் முன்னும் பின்னுமாக சண்டைக்காரர்கள் முன்னணிப்படைகள்

நெருங்கிச் சண்டை செய்துகொண்டு வருகின்றன. நாம் எழுதுவது சிறுவர்களுக்கும் மாதர்களுக்கும் விஷயம்தெரியும் பொருட்டாதலால் அவர்கள் புத்திக்கெட்டாத விஷயங்களைப் பற்றி இங்கே பிரஸ்தாபிப்பதில் பிரயோசனமில்லை. ஆனால் அவர்களுக்குத் தெரியாதென்று நாம் ஒன்றையும் மறைக்கத் தேவையில்லை.

இப்பொழுது நடக்கும் இந்தப் பார'தப் போர் யுத்ததர்மத்தை ஒட்டி நடத்தப்பெறுவதாயில்லையென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். இது ராக்ஷஸப் போராயிருக்கிறது. வருஷமும் ராக்ஷஸ வருஷமாயிருக்கிறது. சைனியங்களின் புஜபலபராக்கிரமமும், கோட்டை கொத்தளம் முதலிய அரண்களும் சுமார் 18, 20, 21-மைல் தூரத்திற்கு குண்டுபோட்டுத் தகர்க்கத்தக்க (Long-range guns) பீரங்கிகளின் முன் என்ன பிரயோசனப்படும். ஆதலால் இருதரத்தாரும் நேர் நேராய் நின்று எதிர்த்துச்சண்டை போடுவதற்கில்லை. நிலத்தில் "Trenches" (ட்ரென்சஸ்) என்றுசொல்லும் நீண்ட அகழ்கள்வெட்டி அவைகள் ஒன்றுக்கொன்றுசேரச் சுரங்கவழிசெய்து பூமியின் தரைமட்டத்திற்குக் கீழே பதுங்கியிருந்து எதிரிகளின் படைவலி, போர்வலி, அரண்வலி முதலியவற்றை ஆகாயரதங்களின் மூலமாக அறிந்துகொண்டு பீரங்கிகளைக்கொண்டு அவர்கள் பதுங்கியிருக்கும் அகழ்களைத் தகர்த்துப் பிடித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

TRENCH WARFARE.

இப்படி நடக்கும் அகழி யுத்த முறையில் பீரங்கியும் வெடிமருந்தும் யாருக்கு அதிகமோ அவர்கள் கைதான் வலுக்குமல்லவா ! அப்படி வலுத்தாலும் இங்கே ஒரு சண்டை நடந்தது எதிரிகள் அகழிகள் சிலவற்றை நாம்பிடித்துக்கொண்டோம். அங்கே ஒரு சண்டை நடந்தது எதிரிகள் நமது அகழிகள் (Trenches) சிலவற்றைப் பிடித்துக்கொண்டார்கள்: ஆனால் அவர்களை யெதிர்த்துத்தாக்கி அங்கிருந்து மறுபடியும் துறத்திவிட்டோம்—என்று, வருகிற யுத்த சமாசாரங்களெல்லாம் இவ்விதமாகவே யிருக்கிறது. இல்லாவிட்டால் இத்தனுவது நம்பர் குன்றைப்பிடித்துக்கொள்ள இத்தனை நாள் சண்டை நடந்தது. கடைசியில் நாம் அந்தக் குன்றைப் பிடித்துக்கொண்டோம் என்று செய்திவருகிறது. இதில் இரண்டொரு மைல் தூரத்துக்கு சண்டை முனை முன் பின் நகர்வதும், இங்கே சில அகழிகள் பிடிபடுவதும் அங்கே சில குன்றுகள் பிடிபடுவதுமா யிருக்கிறதே தவிர வேறு சங்கதி விவரம் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் இந்தச் சண்டைகளில் மாண்டு மடிந்தவர்கள் தொகை மட்டும் எப்போதும் மிகுதியாக விருக்கிறது. அதை நினைக்க நினைக்க மனம் உருகுகிறது. 'ஐயோ ! பூமிபாரம் தீர்க்கவென்று நேர்ந்த பார'தப்போர் இப்படித்தான் நடக்குமோ!' என்றிருக்கிறது.

BATTLE OF NEUEV-CHAPELLE.

இடை இடையே இங்கே ஒரு பட்டணத்தைத் தாக்கிப்பிடித்துக் கொண்டார்கள். அங்கே யொரு கிராமத்தைப் பிடித்துக் கொள்ளக் கடும்போர் நடந்தது என்கிற செய்திவருகிறது. இப்படிப்பட்ட செய்திகளில் முக்கியமான ஒன்று 'நியூவ்சாபெல்' என்னும் கிராமத்தைப் பிடித்துக்கொள்ள வென்று அதைச் சுற்றி நடந்த பெருஞ்சண்டையாயிருக்கிறது. இந்த கிராமத்தைப் பிடித்துக் கொள்ள நடந்த கடும்போரில் பிரிடிஷ் சைனியங்களும் இந்திய சைனியங்களும் மிக்க தீரம் காட்டி ஜெர்மானியர்கள் வீரத்தைக் குலைத்து அவர்கள் படைவலியைச் சிதைத்து அந்த கிராமத்தைப் பிடித்துக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் செய்யக்கூடியது அவ்வளவுதான். அதற்கு அப்பால் செல்ல சாத்தியமில்லை. ஏனெனில் நீண்ட குழியுள்ள பெரிய பீரங்கிகள் சைனிய முழுவதையும் ஒரு வெடி யிரண்டு வெடியில் துடைத்து விழுங்கிவிடும். அப்படியே ஜெர்மானியரும் ஒரு மைல் இரண்டு

மைல் தூரம்தான் முன் வரலாம். அதற்கு மேல் வந்தால் நாசம்தான். ஏப்ரல் மாசம் கடைசி வாரத்தில் ஜெர்மானியர் (Ypres)—

SECOND BATTLE OF YPRES.

ஈப்ரேஸ் கால்வாயைத்தாண்டி ஈப்ரெஸ்பட்டணத்தைத் தாக்கினார்கள். அவர்கள் செய்த சூது அவர்களுடைய தீரத்துக்கும் வீரத்துக்கும் சிறப்பாயில்லை. ஆயினும் நடந்ததை நடந்தபடி இங்கே யுரைக்கவேண்டியது நமது கடமை பெருச்சாளிக்குப் புகைபோட்டுப் பிராணனை வதைப்பதுபோல் அவர்கள் ஒருவிதமான கெட்டநாற்றமும் புகையும் உண்டு பண்ணும் வெடியை உபயோகித்து அதைக் கொண்டு இரண்டு மைல் தூரத்துக்கு பிரிடிஷ் சைனியங்கள் அகழில்தானே திக்குமுக்காடி மூச்சுவிடமுடியாமல் திண்டாடும்படிச் செய்து அந்தக் குழப்பத்தில் அவர்களையெதிர்த்துத் துரத்திவிட்டு ஈப்ரெஸ் பட்டணத்தை வெடிகுண்டு போட்டுத் தகர்த்தார்கள். ஆனால் பிரிடிஷ் துருப்புகளும் இந்திய துருப்புகளும் அவர்களுடன் சண்டைசெய்யும் கூட்டாளிகள் துருப்புகளும் சேர்ந்து அவர்களை எதிர்த்து மறுபடியும் துறத்திவிட்டார்கள். இதில் நேர்ந்த உயிர் நஷ்டத்துக்குக் கணக்கில்லை. இப்பொழுது ஜெர்மானியர் பிடித்துக் கொண்ட இடத்தை கூட்டாளிச் சைனியங்கள் மறுபடியும் பிடித்துக்கொண்டு விட்டதாக ஸர்ஜான் ப்ரெஞ்ச் அவர்கள் அனுப்பியுள்ள ரிபோர்ட்டால் தெரியவருகிறது. இங்கே நடந்த கொடிய சண்டைக்கு இரண்டாவது ஈப்ரெஸ் சண்டை யென்று பேர். முன்னம் (Calais) கலே பட்டணத்தைச் சேரவென்று ஜெர்மானியர்செய்த முயற்சி பயன்படாதொழியச் செய்த சண்டை முதலாவது ஈப்ரெஸ் சண்டையாகும்.

பிந்திவந்த சமாசாரத்தால் ஈப்ரெஸுக்கருகேயுள்ள நதிமுதலிய ஜலாதாரங்களைப் பாஷாண் மிட்டுக்குடிக்கத்தகாதபடி செய்து போயிருக்கிறதாகத் தெரியவருகிறது. துப்பாக்கியினால் சுட்டால் அக்குண்டு பட்டவன் உடை தீப்பற்றிக் கொள்ளும்படியான தந்திரம் செய்திருக்கிறார்களென்றும் தெரியவருகிறது. இவையெல்லாம் யுத்தமுறையல்ல.

'A NEUTRAL' IN THE *Times*.

"மார்ன் நதிதீரத்தில் நடந்த சண்டைபோல் இன்னொரு பெரியசண்டை நேர்ந்து ஜெர்மானியர் அவர்கள் கட்டிக்கொண்ட நாடுநகரங்களையெல்லாம் விட்டு ஜெர்மன் எல்லைக்குள் திரும்பியோடும்படியான கதிவரவேண்டும். கூட்டாளி சைனியங்கள் ஜெர்மன் எல்லைக்குள் பிரவேசித்து அவர்களை யெதிர்க்க வேண்டும். அப்பொழுதுதான் ஜெர்மானிய ஜனங்கள் இந்தச் சண்டைக்குக் காரணமான யுத்தத்தலைவர்களிடத்து தங்களுக்குள்ள நம்பிக்கையை முற்றும் இழக்க நேரிடும். அவர்கள் நம்பிக்கை போய்விட்டால் அப்புறம் ஜெர்மனியின் கதி அதோகதிதான்" என்று இச்சண்டையில் சம்பந்தப்படாத தேசத்தைச் சேர்ந்த ஒருவர் (ANeutral) லண்டன் டைம்ஸ் பத்திரிகைக் கெழுதியிருக்கிறார். அந்த அவசரம் எப்பொழுது நேரிடுமோ நாம் சொல்ல வழியில்லை. தற்காலம் ஜெர்மானியர் பிடித்துக்கொண்ட நாடுகளைப் பிடித்த வண்ணம் வசப்படுத்திக்கொள்ளப்பார்க்கிறார்கள். அது பலிக்காது போகும் காலம்வர மார்ன் நதிதீரத்தில் நடந்த சண்டையைப்போல் ஒரு பெரிய சண்டையும் அதன்பின் தலை கால் தெரியாது வந்தவழி பார்த்துக்கொண்டு ஓடும்படியான கதியும் நேரவேணு மென்கிறார்கள். கூட்டாளிகள் சைனியங்களும் அதற்கு வேண்டிய சமயத்தையே எதிர்பார்த்துக்கொண்டு ஜெர்மானியர் இப்பொழுதுள்ள இடத்துக் கப்பால் சிறிதும் போகவிடாமல் காத்து வருகிறார்கள்.

THE SITUATION IN THE EASTERN THEATRE & THE DARDANELLES.

கீழண்டைப் போர்க்களத்தில் ப்ரஸ்மிஸ்ல் கோட்டை பிடிபட்டது முதல் கூட்டாளிகள் கை கொஞ்சம் வலுத்தே யிருக்கிறதாகச் சொல்லலாம் என்று தெரியவருகிறது. மே

லண்டைப் போர்க்களத்திலும் கூட்டாளிகள் கையே வலுத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இவ்விரண்டு போர்க்களங்களைத் தவிர மத்தியதரைக் கடலில் துருக்கியின் மீது சண்டை தொடுத்து 'டார்டனேல்ஸ்'(Dardanelles) ஜலசந்தி வழியாக கூட்டாளிகள் கப்பல் நுழைந்து கடலோரத்திலுள்ள பட்டணங்களைப் பிடித்துக்கொள்ள முயன்று வருகின்றன. அந்த சண்டை இன்னும் நடந்துகொண்டே வருகிறபடியால் அதைப்பற்றி விவரமாயொன்றும் எழுதுவது சாத்தியமாயில்லை. மேமீ 19உ யிட்ட தந்தி சமாசாரத்தால் கூர்க்கா படைகள் அங்கே சண்டை செய்து வருகிறதாகவும் 12உயில் நடந்த சண்டையில் அவர்கள் எதிரி படைகளை முறியடித்துத் துரத்தினதாகவும் தெரியவருகிறது. இது ப்ரேஸ் பூரோ (Press Bureau) அதிகாரிகள் அனுப்பிய தந்தி சமாசாரம்.

ITALY AND THE WAR.

London, May 24, 1-20. A. M. Italy has declared war on Austria.—*Telegram*.

ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தலி இம்மூன்று தேசத்தார்களும் "Triple Alliance" என்று சொல்லும் உடன்படிக்கை செய்து கொண்டவர்கள். அதன்படி இம்மூவர் மற்றவர்களுடைய சம்மதியின்றி எத்தேசத்தாரோடும் வலுவில் சண்டைக்குப் போகக்கூடாது. சென்ற வருஷம் ஜூலைமீ ஆஸ்திரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் சண்டையுண்டானபொழுது ஆஸ்திரியாவும் ஜெர்மனியும் இத்தலியினுடைய சம்மதியைக் கேட்காமல் தானே சண்டை தொடுத்துவிட்டார்கள். இது ஷை உடன்படிக்கைக்கு விரோதமென்றும், அதை மீறி நடந்ததால் இத்தலிக்கு பாதகமுண்டாயிற்றென்றும் அப்பொழுதே முறையிட்டார்கள். முறையிட்டும் கேட்கவில்லை. இப்பொழுது அந்த மனஸ்தாபமுற்றி இத்தலி ஆஸ்திரியாவின்மீது சண்டை தொடுக்கலாயிற்று. ஜெர்மனி ஆஸ்திரியாவோடு சேர்ந்துகொண்டிருப்பதால் அவர்களும் இத்தலிக்கு விரோதமாகவே சண்டை மீறி பிரவேசித்திருக்கிறார்கள். ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி மூன்றும் ஒரு பக்கம் இருந்துவர மற்ற தேசங்கள் எதிர்பக்கமாய்விட்டன. இத்தலி பிரிடிஷ், ப்ரெஞ்ச், ருஷிய கூட்டாளிகள் பக்ஷமாயிருந்து சண்டை போடலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

THE BRITISH CABINET.

பிரிடிஷ் மந்திராலோசனை சபை.

பிரிடிஷ் மந்திராலோசனை சபையில் சில முக்கிய மாறுதல்கள் நேரிட்டிருக்கிறது. மிஸ்டர் அஸ்குவித் (லிபரல் கக்ஷித்தலைவர்) எதிர்க்கக்ஷியாகிய கன்ஸர்வேடிவ் கக்ஷியாரால் இந்த யுத்தம் நடக்கிற காலத்தில் "வீடு இரண்டு பட்டால் கூத்தாடிக் கெளிது" என்கிறபடி உள்நாட்டில் கக்ஷிப்பிரதிக்கக்ஷி கூடாதென்றும் எல்லாக் கக்ஷியாரும் சேர்ந்துள்ள நாஷனல் கவர்ன்மெண்டு ஏற்படுத்த வேண்டுமென்றும் சொல்லி வற்புறுத்த இப்பொழுதுள்ள கவர்ன்மெண்டு தரப்பார் அதற்கு இசைந்திருக்கிறார்கள். அவர்கள் இசைந்திருப்பதின் பலனாக எல்லாக்கக்ஷியும் சேர்ந்த மந்திராலோசனை சபையொன்று ஏற்படுத்தப்பெறும். அதில் மிஸ்டர் அஸ்குவித் முதல் மந்திரியாகவே யிருப்பார். ஸர் எட்வர்ட் க்ரே யவர்களும் அந்யதேச மந்திரியாகவே யிருப்பார். லார்ட் கிட்சனர் யுத்த மந்திரியாக விருப்பார். கப்பற்படையிலாகா மந்திரியான மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் அந்த இலாகாவை விட்டு வேறு இலாகாவுக்குப் போவார். மிஸ்டர் பால்போர், மிஸ்டர் போனர் லா, லார்ட் லான்ஸ்டௌன், லார்ட் கர்ஸன் இவர்கள் எல்லாரும் மந்திரிகளாக வருவார்கள். இவர்களுக் கிடங்கொடுக்கவென்று இப்பொழுதுள்ள மந்திரிகளிற் பலர் தங்கள் வேலையை இராஜிநாமா கொடுத்து விடுவார்கள். புதிய மந்திராலோசனை சபை மெம்பர்கள்விவரம் 48-வது பக்கத்தில் பார்க்க.

THE PASS OF THERMOPYLAE.

தர்மாப்பிலே கணவாய்.

ஐரோப்பாகண்டத்தில் விளங்கும் தற்கால நாகரிகத்திற்குப் பிறப்பிடமாகிய கிரீஸ் தேசமானது, பூமத்தியதரைக்கடலின் வடகிழக்குப் பாகத்திலனேக சிறிய தீவுகளால் சூழப்பட்ட வொருதீபகர்ப்பமாம். சிறந்த நீர்வளம் நிலவளம் முதலிய செல்வங்கள் இத்தேசத்திற்கின்றெனினும், பரந்துயர்ந்த மலைகளுக்கும் பொங்குங்கடலுக்கு மத்தியில் வசித்த இத்தேசத்தவர்கள் தமது தேசவமைப்பால் சரீரப்பிரயாசங்களுக்கும் இடைவிடாத கடினமுயற்சிகளுக்கும் வழக்கப்பட்டவர்களாய் மிக்க தீரர்களாயும், திடகாத்திரர்களாயும் மிகுந்த கூர்மைப் புத்தியுடையவர்களாயும் தேர்ந்தனர். இக்கிரேக்கர் அனைவரும் ஒரே ஜாதியராயும் இவர்களது மதக்கொள்கைகள், பாஷை, யுடை, நடை, பாவனைகள் யாவும் ஒரேமாதிரியாயுமிருப்பினும், வர்க்கபேதத்தினால் பல வகுப்பினர்களாகப் பிரிந்து வகுப்புக்கு வகுப்பு வெவ்வேறு மாகாணங்களைக் கைப்பற்றியும் வெவ்வேறு பரிபாலனமுறைகளைக் கைக்கொண்டு சிற்சில சமயங்களில் ஒருவரோடொருவர் போர்புரிந்தும், பின்னர் சமாதானமாய் யாவரும் ஒருமித்துப் பொது எதிரிகளின்பேரில் போர் நடத்தியும் விபக்த குடும்ப சகோதரர்கள்போலக் காலங்கழித்து வந்தனர்.

கிரேக்க ஜாதியாரின் உட்பிரிவினர்களுள் பிரதான வகுப்பினர்கள் ஆத்தன்ஸ் (Athens) மாகாணத்தவரும் ஸ்பார்ட்டா (Sparta) மாகாணத்தவருமே. பிரஸ்தாப காலத்தில் ஆத்தன்ஸ் மாகாணத்தவர் கொடுங்கோன்மன்னனொருவன் தங்களை வருத்தப்படுத்தியதினிமித்தம், அவனைச் சிம்மாசனத்தினின்றும் அகற்றி 'ரிபப்ளிக்' என்ற குடியரசு சபையை நியமித்தார்கள். மற்றமாகாணத்திலோ வென்றால், ஜனங்களால் நியமிக்கப்பட்ட இரண்டு அரசர்கள் ஒருமித்து ராஜ்ஜிய பாரம்வகித்து வந்தனர். இப்பிரதான நாடுகளைத்தவிற, கிரீஸ்தேசத்தில், போஷியா, பிளட்டீயா, காரிந்த் முதலிய மாகாணங்களும், ஆசியா கண்டத்திலும் ஐரோப்பா கண்டத்தின் தென்மேற்குப் பிராந்தியங்களிலும் விடாமுயற்சியுடைய கிரேக்கர்கள் குடியேறிய சில பிரதேசங்களுமே இச்சாதியாரால் ஆளப்பட்டுவந்தன.

பிரஸ்தாபகாலத்தில் ஆசியாகண்டத்தில் மட்டுமன்று, பூகோளத்திலுள்ள ராஜ்ஜியங்கள் யாவற்றிற்குள்ளும், ஜனத்தொகையிலும், செல்வத்திலும், படைப்பெருக்கத்திலும் சிறப்புப் பெற்றிருந்தது பாரசீக ராஜ்ஜியமே. நமது இந்துதேசத்தின்கண் ஜனத்தொகையிற் கடையரேனும், கல்வியிலும், வியாபாரத்திலும், நாகரிக முறைமைகளிலும், முதன்மை செலுத்திவருகின்ற பம்பாய் பாரசீ ஜீபாய்களுக்கு முன்னோர்களிவர்களே. கிழக்கே ஸிந்துநதிவரையிலும் மேற்கே நீலநதி பரியந்தமும், தென்வடலாக காஸ்பியன் என்ற கடல்போன்ற ஏரிமுதல் இந்தியமகா சமுத்திரம் வரையிலும் பரந்த பூமி முழுவதற்கும் சக்கிரவர்த்தியாகிய பாரசீகவரசனது ஆக்கினைகளெல்லாம் "இதனால் எல்லா ஜாதியாருக்கும் சகல தேசத்தவர்களுக்கும், ஸர்வமதஸ்தர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்" என்றே ஆரம்பித்தன. இவ்வரசனது பிரதிநிதிகளாகிய 'சாட்ராப்'களே (Satraps) விஸ்தீரணமான தேசங்களை இவன் பெயர் சொல்லி யாண்டுவரவும், சால்டியர்கள், யூதர்கள், எகிப்தியர்கள், அராபியர்கள் முதலிய இன்னும் பலஜாதியார்கள் இவ்வரசனுக்குக் கப்பம் செலுத்திவரவும் இருந்ததென்றால், தன் ஆக்கினைகளை எல்லா ஜாதியார்களுக்குமென்று பிரசுரம் செய்வது வீண்பெருமை யென்னலாமோ? அத்தேசங்களிலிருந்தெல்லாம் எண்ணற்ற சேனைகளைத் திரட்டித்தினந்தோறும் புதிய நாடுகளைக் கவர்ந்துகொள்வதே பாரசீக அரசனது பொழுது போக்காயிருந்தது.

கிரீஸ் தேசத்தில் 'ஆத்தன்ஸ்' மாகாணத்தில் கொடுங்கோன் மன்னனைத்துரத்தி குடியரசு ஏற்படுத்தி ஜனசபை மூலமாய் ராஜ்ஜிய பரிபாலனம் செய்துவந்தார்களென்று சொன்னோம். இச்சிம்மாசன மிழந்தவரசன் பாரசீக சக்ரவர்த்தியின் பக்கல் சரணடையவே, இவன், மன்னனுக் கடங்காத குடிகளின்பேரில் படையெடுத்து அவர்களை அரசன் கீழ்க் கட்டுப்படுத்தவும், கிரேக்கர்கள் யாவரையும் பாரசீக ராஜ்யத்திற்கு உள்ளடங்கச் செய்யவும் கருதி, இது சாத்தியமாக ஒரு பெருஞ்சேனையைத் திரட்டிக்கொண்டு கிரேக்கர்கள் பேரில் படையெடுத்துச் செல்லவும், இவர்களெல்லோரும் தத்தமக் குரிய மாறுபாடுகளை மறந்து, ஏகோபித்து, 'மரதான்' (Marathan) என்னுமிடத்தில் மகாவரசனை முறியடித்து அவன் சைன்னியங்களையும் சிதறியோடச் செய்துவிட்டார்கள்.

தனது பராக்கிரமத்தால் எளிதில் ஜயிக்கக் கூடிய ஓரற்ப ஜாதியாரென்று கருதியிருந்தவர்களால் தன் கர்வங்குலைய முறியடிக்கப் பட்டதனாலாகிய மனவருத்தமடங்காது, முன் சேகரித்த சைன்னியத்தினும் பதின்மடங்கு படைகளைத் திரட்டி யின்னுமொருதடவை போர் நடத்த வெத்தனிக்குங்கால் அத்துர்ப்பாக்கியனான வரசன் மரணமடைந்தான். பத்துவருடகாலமாகக் கிரேக்கர் நிர்விசாரமாயிருந்தனர்.

அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த க்ஸர்க்ஸஸ் (Xerxes) என்ற புதிய அரசன், கிரீஸ் தேசத்தின் மீது படையெடுக்கும்பொருட்டுத் தன்னாட்சிக்குள்ளடங்கிய பற்பல தேசங்களிலிருந்தும் போர்வீரர்களைத் தெரிந்தெடுத்துக், கணக்கற்ற சேனைகளைத்திரட்டினான். இவ்வரசன் ஒருபாயஞ்செய்து, தனது சேனைகளை இரண்டு பாகங்களாகப் பிரித்து ஒரு பிரிவைக் கப்பல்வழியாய்க் கிரேக்க நாட்டில் செலுத்திக் கொண்டு போகவிட்டு மற்ற பாகத்தைத் தானே நேரில் நடத்தி 'ஹெல்லஸ்பாண்டு' என்ற ஜலசந்தியைப் படகுபாலத்தாற் கடந்து தென்மேற்கு முகமாகக் கிரீஸ் தேசத்திற்குள் பிரவேசிக்கச் சென்றான். சேனைகள் பிரவேசிக்குமுன் மகாவரசனது தூதர்கள் கிரேக்க மாகாணங்களுக்கு வந்து சக்ரவர்த்தியின் ஆக்கினைகளுக்கு அடங்கி, நாடும் நதியும் அவனதேயென்றங்கீகரிப்பதற் கடையாளமாக நீரும் மண்ணும் கொடுவென்று கேட்கவே, அரசனது படைகள் செல்லும் மார்க்கத்தில் முதலில் நின்ற தெஸ்ஸலீ (Thessaly) ராஜ்ஜியத்தைத் தவிற வேறெந்த மாகாணமும் இவ்வடிமைச் சின்னத்திற்குடன்படவில்லை.

கிரீஸ் தேசமானது, இயற்கையாகவே, வடபாகம், தென்பாகமென்ற விரண்டு பிரிவுகளாக அமைந்துளது. மத்தியில் 'காரிந்த்' (Corinth) என்ற பூசந்தி இவ்விரண்டு பாகங்களையும் இணைக்கின்றது. இப்பூசந்தியில் சபைகூடித் தங்கள் நாட்டுக்குவந்திருக்கிற இக்கொடிய விபத்தை நிவர்த்திக்குமாறு ஆலோசனைசெய்து யுத்தசான்னித்தியங்கள் ஏற்பாடு செய்யும்பொருட்டு கிரேக்க மாகாணங்கள் யாவும் முறைப்படி இவ்விடத்திற்குத் தங்கள் பிரதிநிதிகளையனுப்பின.

கிரீஸ் தேசம் மலைத்தொடர்கள் அடர்ந்ததென்று சொன்னோம். ஆகலால் தென்முகமாகவருஞ் சேனையானது சமபூமிமார்க்கமாகவே அணிதொடுத்து வருவதென்பது அசாத்தியம். பலவிடங்களில் மலைக்கணவாய்களின் வழியாகவே செல்லவேண்டிவரும். இம்மலைத்தொண்டுகள் ஒடுக்கமானவைகளாதலால் இவ்விடங்களைக் காக்குஞ்சொற்ப மனிதர்கள் பெருந்தொகைப் படைகளை யெதிர்த்து அழித்துவிடலாம். மேலும், கிரேக்கவீரர்கள் ஆசியாகண்டத்தவர்களை விடப் புஜபலபராக்கிரமமுடையவர்கள். ஆகவே, இவர்களுக்கு அப்படிப்பட்ட தொண்டுகள் அகப்பட்டால் கேட்கவேண்டுமா.

பாரசீக சைன்னியம் முதல் முதலாகக்கடந்து வரவேண்டிய கணவாயானது டெம்பீ கணவாயே.

இதைக் காக்கும்பொருட்டுச் சில படைகளையனுப்ப, இருந்து சண்டைபோடுவதற்குத் தகுந்த இடமில்லாததனாலும், அதைக்காத்தும் பிரயோஜனமில்லாதது கொண்டும் இவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள். இதற்கு அடுத்த கணவாய் உலகெங்கும் பிரசித்தி பெற்ற தர்மாப்பிலே (Thermopylae) கணவாயே.

தென்முகமாகவருஞ் சேனையானது முதல் முதல் தெஸ்ஸலே (Thessaly) மாகாணத்திற் பிரவேசிக்கின்றது. இம்மாகாணத்தின் தெற்கு எல்லை 'ஈட்டா' மலைத்தொடரே. இப்பர்வதமானது 'தெஸ்ஸலே' மாகாணத்திற்கும், அதற்குத் தெற்கேயுள்ள 'போகியா' வென்ற மாகாணத்திற்கும் மத்தியிலுள்ளது. மலையினது அடிவாரமும் அதைச்சார்ந்த காடுகளும் சமுத்திரக் கரையோரம் வரையிலும் படர்ந்து கடலோரமாக ஒரு சிறிய கணவாயைத் தவிற வேறு மார்க்கங்களொன்றும் கொடாது, தென்பாகத்திற்கு ஒரு மதில்போலிருந்தது. இக்கணவாயில் காவல்வைத்துப் பாரசீக சைன்னியம் முழுவதையும் சிதறடிக்க உத்தேசித்தார்கள். சமுத்திரமார்க்கமாய்ச் சைன்னியங்களைக்கட்டத்திக் கணவாயின் தென்புறமாகக் கொண்டு போகாமலிருக்கும்பொருட்டு இக்கணவாய்க்கு எதிர்புறமேயுள்ள 'யோபியா' வென்ற தீவுக்கும் நாட்டுக்கும் மத்தியிலுள்ள ஜலசந்தியின் முகத்துவாரத்தில் கிரேக்கர்கள் தங்கள் போர்க் கப்பல்களை நிறுத்திவைத்திருந்தார்கள்.

இவ்விடத்தில் நின்றுப் பாரசீக சைன்னியக் கோடிகளை எதிர்க்கும்படி அனுப்பப்பட்ட படைகட்குத் தளகர்த்தன் 'லியானிடாஸ்' (Leonidas) என்பவனே. இசசுததவீரன் 'ஸ்பார்ட்டா' வுக்குரிய இரண்டு கூட்டரசர் [illegible] ஒருவன். [illegible] [illegible]ருவன் தன்னுயிரைக் கொடுப்பதனால் தன் தேசத்துக்குவந்த மகா விபத்தொன்று நீங்கிப்போகுமென்று ஒரு புராதன வசனம் இவன் ஞாபகத்திற்குவரத் தன்னுயிர் இச்சண்டையி லுடலினின்றும் வேறுபடுமென் றுறுதியடைந்தான். தலைபோகக் கால் பிழைப்பதுண்டோ! தளகர்த்தன் தன்னுயிரை அர்ப்பணம் செய்யவேண்டிவரின் ஸ்பார்ட்டர்களோ தங்கள் உயிரைக் காப்பாற்றுகிறவர்கள்! இதுகாரணம்பற்றி 'லியானிடாஸ்' தனக்களிக்கப்பட்ட முன்னூறு ஸ்பார்ட்டர்களையும் தெரிந்தெடுப்பதில், அவர்களுடைய வீரியம், பலம், முதலியவைகளைப் பார்த்துக்கொள்வதுடன், ஒரு வேளை யாவரும் யுத்தத்தில் இறந்துபோகும்படி நேரிடினும் ஒருவம்சமும் வேரற்றுப்போகாதபடிக்கும் ஜாக்கிரதைவைத்துத் தெரிந்தெடுத்தான். யுத்தகளத்தில் இறந்துவிட்டால் தங்களுக்கு அந்தியகர்மம் நடக்குமோவென்று சந்தேகித்துப் புறப்படு முன்னமே, வேண்டிய சடங்குகளைத் தம்முயிருள்ளபோதே செய்துவிட்டுச் சஞ்சலமற்ற மனதினராய்ப் புறப்பட்டனர். இம்முன்னூறு ஸ்பார்ட்டர்களும் இவர்களுடைய அடிமைகளும் தவிறச் சுமார் மூவாயிரம் கிரேக்கர் இவன் வசம் அனுப்பப்பட்டனர்.

கணவாயை வந்தடைந்ததும் இதன் அரண்கள் பாழாய்க்கிடந்ததைக் கண்டார்கள். ஏனெனில் மலையின் ஒருபுரத்திலிருந்து மற்றொருபுரத்திற்குப்போக வேறொரு இரகசியமான மார்க்கம் கண்டுபிடிக்கப்பட்டதும் இக்கணவாயைப்பற்றி ஒருவரும் வெகுநாளாகக் கவனிக்கவில்லை. இரகசியமான வழி 'போகியர்'களுக்குமட்டுமே தெரிந்திருந்ததனால், இவர்கள் லியானிடாஸண்டை வந்து தாங்கள் அப்பாதையைக் காத்துக்கொள்வதாயும் அவ்வழியொன்றிருப்பதென்பது எதிரிக்குத்தெரிய [illegible]லை யென்றும் அப்படியவனறிவுக்கு எட்டினும் இலகுவாய் அத்தொண்டைத் [illegible]ளால் காத்துக்கொள்ள முடியுமென்றும் உறுதிசெ[illegible] [illegible]கியிருந்த ரகசியமான பாதையைக் காத்துக்கொள்[illegible] [illegible]ளுக் கனுமதிகொடுத்துவிட்டுத் 'தர்மாப்பிலே'

கணவாயிலுள்ள மதல் முதலியவைகளில் இடிந்துபோனவற்றைச் செம்மைப்படுத்திப் பாரசீக சைன்னியங்கள் வருவதை எதிர்பார்த்திருந்தான்.

மகாவரசனது சைன்னியம் வந்துசேர்ந்தது. ஐயோ! அதன் தொகையை என்னவென்று சொல்லுவேன்! பார்! இருபது முப்பது லக்ஷத்துக்கு மேலாகவே யிருந்ததன்றி குறையவில்லை.

மகாவரசன் கணவாயை வந்தடைந்ததும், கிரேக்கர்களுடைய சேனாபலம், சைனியவமைப்பு முதலியவற்றைக் கண்டறிந்து வரும்படி வேவுகாரரையனுப்ப அவர்கள்வந்து, ஸ்பார்ட்டர்கள் மதில்களின்மீது உட்கார்ந்துகொண்டு தமது நீண்ட கூந்தல்களை வகிரெடுத்து வாரிக் கொண்டுல்லாசமாயிருப்பதைப் பார்த்தோமென்று தெரிவித்தனர்.

அரசன் ஆச்சரியமடைந்து தன் பக்கத்திலிருந்த நாடிழந்த கிரேக்கமன்னனொருவனைப் பார்த்து யுத்தமுனையில் இவர்கள் இவ்வளவு அலட்சியமாயிருப்பதற்குக் காரணம் யாதென வினவ, அம்மன்னன் "மகாராஜனே, இது ஸ்பார்ட்டர்களுடைய வழக்கம்; யுத்தம் மிகவும் கடூரமாக நடக்கப்போகிறதென்று தெரியுங்கால், இப்படியே தங்கள் கூந்தல்களை வாரிக்கொண்டு மரணத்தை யுல்லாசமாய் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதிலவர்களுக் கொரு பெருமை" யென்றான்.

பாரசீக சைன்னியங்கள் கணவாயண்டை வந்ததும், இத்தொண்டினின்றும் கிரேக்கர்களைத் துரத்தும்பொருட்டுத் திரள்திரளாய் மிக உக்கிரத்தோடு இவர்களை எதிர்த்தன. சமுத்திரத்தின் அலைகள் முன்னும்பின்னுமொன்றாகவந்து கடலோரத்திலுள்ள வொருகருங்கற் பாறைமீது மோத, அவ்வலைகள் தாமே சின்னாபின்னமாய்ச் சிதறுண்டுபோவது[illegible] கருங்கலலை[illegible]ரக்கமாளா[illegible] படைகள்யாவும் வரிசை வரிசையாய்க் கிரேக்கவீரர்களை யெதிர்த்து வரவே, இவர்கள் அப்படைகளின் பெரும்பான்மையோரை யவ்விடத்திலேயே பூமிஸ்தாபனம்செய்ய, மற்றவர்கள் இவர்கள் கதியே நமக்குமென்று பயந்து சேனாதிபதிகள் தங்களை யீட்டிமுனையால் நடத்துவதையும் * சட்டைசெய்யாது திக்குத்திக்காக வோடலாரம்பித்தனர். தன் படைகளுக்குள் பராக்கிரமமுடையவர்கள் ஆயிரக்கணக்காய் மாண்டு கிடப்பதையு மின்னும் பலர், கிரேக்கர்களுக்குப் பின்னிட்டு யுத்தகளத்தினின்று ஓடி வருவதையும் பார்த்து மகா வரசன் சிங்காதனத்தினின்றும் பலதடவை குதித்துத் திகைக்கலாயினான். இவ்வாறு இரண்டு தினங்கள் கழியவும் மகாவரசன் மனஞ்சோர்வடையவே 'டிமார்டஸ்' என்னும் கிரேக்கனொருவன் தன் தேசத்துரோகியாகவந்து, மகாவரசன் பக்கல் சென்று தனக்கோர் இரகசியமான மார்க்கம் தெரியுமென்றும், மிகப்பொருள்கொடுப்பின் அப்பாதையைத்தான் காட்டுவதாயும், அவ்வழியாய்ச் சென்றால் கணவாய்க்குப் பின்புறமாய் வந்து அதைக்காத்துக்கொண்டிருக்கும் கிரேக்கர்களைச் சூழ்ந்துகொண்டு கணவாயைக்கைப்பற்றுவதுமன்றி யப்பால் கிரீஸ்நாட்டின்மீது இலகுவாய்ப் படைதொகுத்துச் செல்லலாமென்றும் கூறினான். கும்பிடப்போன தெய்வம் குறுக்கேவந்தாற் போலாயிற்று! அன்றிரவே, இக்கிரேக்கன் வழிகாட்ட, ஒரு பாரசீக சைன்னியம் அவன்பின் புறப்பட்டது. விடியுமுன்னமே 'போகியர்கள்' காவலிருந்த விடத்தையடைந்தது. திடீரென்று ஒரு பெருஞ்சேனைவந்து சரமாரி பொழிவதைப்பார்த்துத் திடுக்கிட்டுப் 'போகியர்கள்' அவ்விடத்தைவிட்டுச் சற்று உயர்ந்த விடத்திற்கு விலகவே [illegible]சைன்னியம் மிக்கொண்டில் யாதொரு தடையுமுறாது தன் வழியே சென்றது.

[illegible] லியானிடாஸுக்கு எட்டியதும், இனித்தொண்டைக்காப்பாற்றுவ தசாத்தியமென்றறிந்து, இனிமேலும் எதிரிகள் தங்களைச் சூழ்ந்துகொள்வதற்குமுன்னமே,

தொண்டினின்றும் கீழிறங்கித் தப்பித்துக் கொள்ளப் பொழுதிருப்பதால் அவ்வண்ணஞ் செய்ய விரும்புவோர் போகலாமென்றனுமதி கொடுக்க, இவ்விடையின்படி சேனையில், ஸ்பார்ட்டர்களையும் மற்றும் வேறு சிலர்களையும்தவிர மற்றவர்கள் யாவரும் திரும்பிப்போயுயிரைக்காப்பாற்றிக்கொண்டனர். ஸ்பார்ட்டர்களோ தங்கள் சேனாதிபதியுடனிருந்து உயிரிழப்பதொழியப் பின்வாங்கி யுயிர் பிழைப்பது தங்களுக்கு மிகவும் பழிப்புக்கேதுவென்று கருதியிருந்தனர்.

ஸ்பார்ட்டர்களே கிரேக்க ஜாதியார்கள் யாவர்க்குள்ளும் மிகுந்த தீரர்கள். கல்வியையும், செல்வத்தையும், நாகரிக நடவடிக்கைகளையும் அலக்ஷியஞ்செய்து, ஜனனமுதல் மரணபரியந்தமும், தேகாப்பியாசத்திலும், யுத்தப் பயிற்சியிலுமேமிக்க கருத்துடையவராயிருந்தனர். இச்சாதியாரினது ஆசாரங்களும், மதக்கொள்கைகளும், பரிபாலன முறைமைகளும் தேகப்பயிற்சிக்கே சாதனங்களாயிருந்தன. குழந்தைபிறந்ததும் அதை ஒரு தின முழுவதும் ஆடையின்றி வெளியேபோட்டிருந்து, "பனியால் நனைந்து வெயிலாலுலர்ந்து" கிடந்ததன்பின் அப்பால் பிழைத்தகுழந்தைகளையே தாய்மார்களெடுத்து வளர்ப்பது வழக்கம். ஸ்பார்ட்டாவிலுள்ள தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் யுத்தத்திற்குப் போகும் பொழுது அவர்களைத் தைரியப்படுத்தி "உன் பரிசத்துடன் வந்துசேர்," அல்லது உன் பரிசத்தின்மேல் (அதாவது இறந்ததும் தூக்கி) வந்துசேர்" என்றாசீர்வதித்தனுப்புவார்களாம். இச்சாதியாரின் கட்டுப்பாடுகளின்படி, கொலைகளவு முதலியவைகளும்கூட அவ்வளவு இழிவான செய்கைகளல்ல; பஞ்சமாபாதகங்களுக்கு மொருக்கால் பிராயச்சித்தமுண்டு; ஆனால் யுத்தகளத்தினின்றும் பின்வாங்கி வந்தவர்கள் ஆளாகும் பழிப்பேபழிப்பு அப்படிப் பின்வாங்கினவனையும் அவனை யடுத்தாரையும் என்னசெய்யினும் தோஷமில்லை.

மறுநாட் பொழுது விடிந்தது. சூரியோதயமான ஒரு மணிநேரத்திற்கெல்லாம் படைகளிலனேகர், கணவாயினின்றும் கீழேயிறங்கிப் போகலாயினர். ஸ்பார்ட்டாவிலிருந்து வந்திருந்த விரண்டு ராஜகுமார விளைஞர்களின்பேரில் லியானிடாஸ் இரக்கமுற்று இவர்களை எவ்வகையாகவேனும் உயிர்பிழைக்கச் செய்யவேணுமென்றெண்ணி அவர்கள் மூலமாய்ச் சமாசாரஞ் சொல்லியனுப்புவதுபோலொரு வியாஜம்வைத்துக் கடிதங்கள் வரைந்துகொடுக்கவே யொருபுதல்வன் "நான்சண்டைசெய்ய வந்தேனேயொழியக் கடிதஞ்சுமந்து கொண்டுபோக வரவில்லை" யென்றான். மற்றொருவன் "ஸ்பார்ட்டாவிலுள்ளவர்கள், என்னைப்பற்றி வேண்டிய சமாசாரங்கள்யாவு மென் செயல்களாலறிந்துகொள்வார்கள்" என்றான். யாரோவொருவன், பாரசீகர்களது சரங்கள்சூரியகிரணங்களையு மறைக்கு மாறவ்வளவு அடர்த்தியாய்ப் பொழிகின்றனவெனவே யிதைக்கேட்டவொரு ஸ்பார்ட்டன், "அவ்வளவுக்கவ்வளவு நல்லது தான், நாம் நிழலிலிருந்து சண்டைபோடலாம்" என்றான். யாவரும் கடைசியாகத் தங்களதுணவைப்புசிக்கப் போகையில் லியானிடாஸ் "இன்றிரவில் நம்மெல்லோருக்கும் தருமனது மாளிகையில்விருந்து" என்றான்.

இதுவரையிலும் சண்டை செய்யும்பொழுது தன் படைகளுக்கு அதிக உயிர்ச்சேதமின்றியிருக்குமாறு மதிலினுட்புறத்தினின்றுகொண்டே போர் புரிந்துவந்தான். இனியோ, கணவாயின் பின்புறமாக வேறொரு சைன்னி

யம் தாக்குவது சித்தமாகவே உயிர்பிழைப்பது சாத்தியமென்றறிந்து ஸ்பார்ட்டர்களெல்லோரும் மடியுமுன்னே தங்களது சவுரிய பராக்கிரமங்களை யெதிரிகளுக்குக்காட்டக் கருதி மதிலைவிட்டு வெளியேவந்து பாரசீகப் படைகளைத் தாக்கினன். தேசாபிமானமென்றுமில்லாது திரவிய வாசையினாலும் பலவந்தத்தினாலும் யுத்தகளத்திற்கிட்டுவரப்பட்ட சைன்னியமோ தேசாபிமானமே யுருக்கொண்டதென்னத்தக்க இம்மகாவீரர்கள் முன் முகங்கொடுத்து நிற்பது? பாரசீகப்படைகள் அறுப்பறுப்பவன் அரிவாள்முன் விழும் தாள்கள்போலக் கூட்டம் கூட்டமாகத் தலைதரித்து விழுந்து மாண்டனராயினும் கடைசியாகச் சைன்னியப் பெருக்கத்தினால் பாரசீகர் கிரேக்கர்களின் பெரும்பான்மையோரைக் கொன்றுவிட்டனர். நடுமத்தியமானதும் பாரசீக சைன்னியம் கிரேக்கர்களை முற்றிலும் சூழ்ந்துகொண்டது. இவ்வாறு அந்தி வரையிலும் ஸ்பார்ட்டர்கள் எதிரிகளோடு சண்டைசெய்து ஈட்டியுங்கையுமாக யுத்தகளத்தில் மாண்டனர். சூரியாஸ்தமனமானது மொரு ஸ்பார்ட்டன் கூடவுயிரோடிருந்தானென்றில்லை.

நாடிழந்த ஸ்பார்ட்டமன்னனைப்பார்த்து மகாவரசன் இவர்கள் போலின்னு மனேகர்கள் ஸ்பார்ட்டாவிலுண்டோ வென்று வினவ, எண்ணாயிரம் பெயர் போலுமுண்டெனவும், அவன் உளம் நடுங்கி தேகம் மயிர்க்குச்செடுத்திருக்கவேண்டும். இத்தீரர்களுடைய பராக்கிரமமானது பாரசீகசைன்னிய முழுவதையும் நடுக்குறச்செய்தது. இப்படி நடுக்குற்ற பாரசீகர் கணவாயைக் கடந்து கரேக்கநாட்டையடைந்தும் முடிவில் முறியடிக்கப்பெற்றுத் துரத்தப்பட்டார்களென்று சொல்லவும் வேண்டுமோ!

ஸ்பார்ட்டாவில் இச்சுதந்தவீரர்களுடைய பிரதாபஸ்மரணையின் பொருட்டுப் பளிங்கு ஸ்தம்பங்களை நிறுத்தி லியானிடாஸ் முதலிய வொவ்வொரு வீரருடைய பெயரும் யுத்தவரலாறுகளுடன் ஸ்தம்பங்களில்வரையக், கவிகளிவரது சவுரியத்தைப் புகழ்ந்துபாடினர். இவ்விருத்தாந்தங்கள் நடந்து சுமார் இரண்டாயிரத்துநானூறு வருஷகாலமாகியும், படைச்செருக்கினால் அக்கிரமமாக எளியவர்கள்மீது போர்நடத்துவோரை யெதிர்ப்பதில் தேசாபிமானிகளுக்கு லியானிடாவின் நாமஸ்மரணையானது ஓர் மந்திரப்போலின்றைக்குமிருந்துகொண்டு வருகின்றது.

THE NEW BRITISH CABINET

புதிய மந்திராலோசனை சபை.

மிஸ்டர் அஸ்குவித்-பிரதான மந்திரி
லார்ட் லான்ஸ் டௌன்-பொது
ஸர் எஸ். பக்மாஸ்டர்-லார்ட்சான்ஸலர்
லார்ட் க்ரூ கௌன்ஸில் ப்ரெஸிடெண்ட்
லார்ட்கர்ஸன்-லார்ட் ப்ரிவிஸீல்
மிஸ்டர் மக்கென்னா-அரசிறை மந்திரி
ஸர்ஜான் ஸைமன்-உள்நாட்டு மந்திரி
ஸர் எட்வர்ட் க்ரே-புறதேசமந்திரி
மிஸ்டர் போனர் லா-குடியேற்றநாட்டு மந்திரி
மிஸ்டர் சாம்பர்லேன்-இந்தியா மந்திரி
லார்ட் கிட்சனர்-யுத்தமந்திரி
மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ்-யுத்ததளவாட மந்திரி
மிஸ்டர் பால்போர்-கப்பற் சைனிய மந்திரி
மிஸ்டர் ரன்ஸிமான்-வர்த்தக மந்திரி
மிஸ்டர் லாங்-லோகல்போர்டு மந்திரி
மிஸ்டர் சர்ச்சில்-லங்காஸ்டர் மந்திரி
மிஸ்டர் பிர்ரெல்-ஐர்லாந்து மந்திரி
மிஸ்டர் வுட்-ஸ்காட்லாந்து மந்திரி
லார்ட் ஸெல்போர்ன்-வியவசாயமந்திரி
மிஸ்டர் ஹார்கோர்ட்-மராமத்து மந்திரி
மிஸ்டர் ஹெண்டர்ஸன்-சிக்ஷா மந்திரி
ஸர்எட்வர்ட் கார்ஸன்-அட்டர்ணி ஜெனரல்

PROVERBS AS AIDS TO CHILD STUDY.

பாலபோத சிக்ஷாசாதனம்: பழமொழி விளக்கம்.

அற்பகுணம்.

1. காற்றுக்கு எதிரில் துப்பினால் முகத்தில் விழும்.

ஒருவன் அற்பன் என்பது நமக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்க அவனுக்கு நாம் ஏதாவது ஓர்வித அவமானம் செய்ய எத்தனித்தால் அது நம்மையே சூழ்ந்துகொண்டு நமக்கு அதிக அவமானத்தை விளைவிக்கும் என்பதாம். எதிர்காற்று தூசுகளை நம்மேல் வாரியிறைப்பது நமக்குத் தெரிந்திருக்க அக்காற்றின் எதிராக நாம் துப்பினால் துப்பும் எச்சில் நம்மேல் விழாமல் மற்றெவ்விடத்தில் விழும் என்று நாம் கருதலாம்! அவசியம் நம்மேலேயே விழும். ஆகையால் அதை நன்றாக அறிந்திருக்கும் நாம் அவ்வாறு ஒருபொழுதும் செய்யக்கூடாது. அதுபோலவே துஷ்டர் குணத்தை அறிந்த நாம் அவர்களுடன் சிணுக்கக்கூடாது! என்பது கருத்து.

2. குதிரையின் குணமறிந்தல்லவோ தம்பிரான் கொம்பு கொடுக்கவில்லை.

அற்பன் குணமறிந்து அதற்கேற்றபடி நடக்கவேண்டும். ஓர் பிரபுவினிடம் ஓர் துஷ்டக் குதிரையிருந்தது. அதில் ஓர் மனிதன் ஸவாரி செய்ய ஏறியுட்கார்ந்தால் அது வெகு வேகமாய் ஓடும். ஸவாரி செய்கிறவன் கையில் கோலிருக்கக் கண்டால் வெகு விரைவாகச் சென்று தன்மேல் ஏறியிருக்கின்றவனைத் தள்ளிவிடும். இக்குணத்தை உத்தேசித்துத்தான் தம்பிரான் கொம்பு கொடுக்கவில்லை. அற்பர்கள் குணந்தெரிந்து நடந்துகொள்ள வேண்டும் என்றபடி

3. குதிரை ஏறிஎன்ன! கோணக்கொம்பு ஊதி என்ன! வீணர்க்கும் கீர்த்திக்கும் வெகுதூரம்.

வீணர்கள் அதாவது அற்பர்கள் எப்பொழுதும் குணத்தால் அற்பர்களேயன்றி வேறல்லர். ஆகையால் அவர்கள் என்னதான் உயர்ந்த பதவிக்கு வந்த போதிலும் மற்றவர்களுக்கு அதனால் ஓர்வித குணமுமில்லை என்பது கருத்து. கோணக்கொம்பு என்பது உயர்ந்த பதவிக்கு ஒருவன் வரும்பொழுது அவன் பதவி உயர்ந்த பதவி என்பதை எல்லோருக்கும் விளங்கச் செய்ய ஊதப்படும் ஓர் ராஜமரியாதை. அவ்வாறு உயர்ந்த பதவிக்கு ஒருவன் வரும்பொழுது அவன் குதிரை ஏறி ஸவாரி செய்யும் உத்தரவையும் பெறுவான். அவ்வாறு அவன் குதிரை ஏறிச் செல்லும்பொழுது அவன் வரவை எல்லாருக்கும் தெரியப்படுத்த கோணக்கொம்பு ஊதப்படும். என்னதானிருந்தென்ன அவனால் ஒருவருக்கும் ஓர்வித பிரயோசனமுமிருக்கமாட்டாது என்பதாம்.

4. குறைகுடம் ததும்பும் நிறைகுடம் ததும்பாது.

இதற்கு நேரான பழமொழி "அறைகுடம் ததும்பும் நிறைகுடம் ததும்பாது" என்பதாம். இதன் அருத்தம் வெகு சுலபம். அற்பன் எப்படியும் படாடோபம் செய்வான்தான். நிறைகுணமுடையோன் தன்னிலடங்கி அமர்ந்திருப்பான்.

5. கொட்டிக்கொட்டி அளந்தாலும் குருணி பதக்காகாது.

6. குருணி மை நானிட்டாலும் குருடு குருடே.

ஒருவனுக்கு இயற்கையாக அற்பகுணம் ஏற்பட்ட பிறகு என்னதான் முயன்றாலும் அதை மாற்றலரிது என்பதாம். இப்பழமொழிகளை விதித்தபடியே நடக்குமேயல்லாது அதற்கு அதிகமாய் நடக்காது என்பதற்கும் இசைந்த பழமொழிகளாகவும் கூறுவது வழக்கம். அவ்வாறே அற்பகுணத்துக்கும் ஒருவாறு இசைந்த பழமொழிகளாகையாலிங்கு எடுத்து உதகரிக்கப்பட்டன.

7. சீவாத்து பார்ப்பான் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்.

அற்பர்களால் எப்பொழுதும் விளைவது துன்பம் என்பதைச் சொல்லும் மூதுரை.

காஞ்சீபுரத்துக்குச் சமீபத்தில் சீவரம் என்ற ஓர் ஊர் பாலாற்றுக்கரையில் இருக்கின்றது. அவ்வூரில் ஓர் வேதியன் சுமார் 200-வரு

ஷங்களுக்குமுந்தி வசித்துக்கொண்டிருந்தான். அவன் ஏதோ ஒரு காரணத்தால் மதமிழந்து பறையர்கள் கூட்டத்தில் சேர்ந்தான். முதலில் சேர்ந்தான் என்றாலும் பிறகு அக்காலத்திலிருந்த பற்பல ஜாதிக்கட்டால் பறையர்களும் அவனை ஒப்புக்கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள். வேதியர்கள் அவனை மறுபடி யேற்றுக்கொள்ளவோ வழியில்லை. ஆகையால் இருவகையிலும் அவன் கெட்டு ஒருவரும் அதிகமாய் அணுகாத ஆற்றங்கரையோரம் தேடி அவ்விடம் குடிசை கட்டிக்கொண்டு தனது காலத்தைக் கழித்துவந்தான். என்றாலும் அக்காலத்து வழக்கப்படி ஒருவரும் அவனுக்குஉபகாரஞ்செய்ய வழியில்லாமலிருந்தது. இவ்வாறுகொஞ்சநாளிருந்துவிட்டு அவன் மாண்டான். அவனை யார் எடுத்து தகனம் செய்கிறது அல்லது குழியிலடக்கம் செய்கிறது? அந்தணர்களும் 'மாட்டோம்' என்றார்கள், பறையர்களும் 'மாட்டோம்' என்றார்கள். வெகு சிரமப்பட்டு அயலூரிலிருந்து அதிக பணம் கொடுத்து குறவன் ஒருவனை அழைத்துவந்து பிரேதத்தை அடக்கஞ் செய்தார்கள். ஆகையால் அவன் இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுத்தான் என்ற பழமொழி வழக்கத்தில் வந்தது. அற்பகுணத்தால் அச்சீவரத்துப் பார்ப்பான் அவ்வாறு இருவிதமாய் உபத்திரவம் உண்டாக்கினபடியால் அற்பர்கள் குணம் அவ்வாறென்பதை இப்பழமொழி விளங்கச் செய்கின்றது.

8. தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்கு சகுனப்பிழை வேண்டும்.

அற்பர்களுடைய சுபாவத்தை உள்ளது உள்ளபடி காட்டும் உண்மையான மூதுரை. ஓர் மனிதன் ஏதாவது நற்காரியத்தை உத்தேசித்து புறப்படும்பொழுது மூக்குப்போன மற்றொருவன் எதிரில் வரக்கண்டால் அது அவனுக்கு அபசகுனம். தான் போகும் காரியம் கைகூடாதென்பதற்கு ஓர் அடையாளம். அற்பர்கள் அவ்வாறு மற்றவர்களுடைய காரியத்தை நாசம்பண்ண ஏதாவது தங்களையும் ஓர்வித சங்கடத்தில் அமைத்துக்கொள்ளவேண்டியிருந்தாலும் அப்படியே செய்துகொள்ளுவார்கள் என்றபடி.

9. நடு ஊரில் நச்சுமரம் பழுத்தென்ன.

ஓர்வித பிரயோசனமுமில்லை. அதுமட்டுமல்ல. நச்சுப்பழத்தால் தீமையையும் விளைவிக்கும். அதுபோல் அற்பனுக்கு ஐசுவரியம் வந்தால் என்னலாபம்! ஒருக்கால் பணச்செருக்கால் கொடியவனாகித் தீங்கிழைப்பான்.

10. நாய்கொழுத்தென்ன காஞ்சிரம் பழுத்தென்ன.

நிஷ்பிரயோஜனம்: தீமையையே விளைவிக்கும். அடுத்த பழமொழியிலும் விவரிக்கப்படும்.

11. நரிக்குப் பெரியதனம் கொடுத்தால் கிடைக்கு இரண்டாடு கேட்கும்.

நரியை எப்பொழுதும் அற்பவிலங்குகளுக்குள் ஒன்றாகச்சேர்ப்பது வழக்கம். தந்திரமுள்ளதுமாம். இவ்விடத்தில் அதனுடைய அற்பகுணத்தையே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அற்பனுக்கு பெரிய அதிகாரம் கொடுப்போமேயானால் அவன் நியாயம் என்பதைவிட்டு விலகி அவ்வதிகாரத்தை எவ்வாறு செலுத்தினால் தீமையே அதிகமாக விளையுமோ அவ்வாறு செலுத்துவான் என்பது இம்மூதுரையின் தாற்பரியம். ஆகையால் அற்பனுக்கு அதிகாரம் கொடுக்கக்கூடாதென்பது கருத்து.

12. நாறல்மீனை பூனை பார்ப்பதுபோல.

அற்பர்களுக்கு அற்பவிஷயங்களில் கொண்டாட்டம். நாறுத புது மீனும் தூரத்தில் எடுத்துவரப்படும்பொழுதே கவிச்சு வீசும். நாறல் மீனுக்கு கவிச்சுசொல்லவும் வேண்டுமா. அப்படியிருந்தபோதிலும் அதைப்பார்க்கப் பூனைக்குக்கொண்டாட்டம். அற்பர்களுக்கு அற்பவிஷயங்களில் அதிக ஆசை என்பது கருத்து.

13. நாறல் சாணியை மிதிப்பானேன் நல்ல தண்ணீர்வார்த்துக் கழுவுவானேன்.

அற்பர்களுடன் பலாத்காரமாய் சகவாசம் பண்ணி அதனால் வந்த அவமானத்தை நீக்க நம்மிடமிருக்கும் நற்பதார்த்தங்களை இழப்பானேன். முதலிலேயே சகவாசம் பண்ணுமலிருந்தால் பின்பு இவ்வித நஷ்டம் நமக்கு சம்பவிக்காது என்றபடி.

14. நாற்றச் சோற்றுக்கு பதம் பார்ப்பானேன்.

முதலிலேயே ஒருவன் குணம் அற்பமென்று ஏற்பட்டபிறகு அது அற்பமா இல்லையா என்று பரிசோதித்துப் பார்க்க நாம் முயல்வது தெரியாத தனம்—என்று சொன்னபடி. நாறல் சோறு என்று ஏற்கனவே ஏற்பட்டபிறகு அதை பதம்பார்த்து அப்படியே நாறல்சோறா இல்லையா என்று தெரிந்துகொள்ள யாராவது பிரயத்தனப்படுவார்களா!

15. நாற்கலக்கூழுக்கு நானே அதிகாரி.

அற்பன் தான் அடைந்திருக்கும் அற்பசம்பத்தைக்கண்டு ஆனந்தபரவசனாய் அவ்விஷயமாய் செலுத்தவேண்டிய அதிகாரம் அவ்வளவையும் செலுத்துவான் என்றபடி.

கூழ் போஜனங்களுக்குள் வெகு தாழ்மையான உணவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அக்கூழில் நாற்கலம் ஒரு அற்பனுக்குக் கிட்டினால் அதனால் அவன் விபவம் என்ன அதிகரித்ததாக எண்ணலாம். ஆனால் அவ்வற்பனுக்கு ஏதோ மகத்தான ஐசுவரியம் கைகூடினதாகத் தோன்றும்.

அப்பாக்கியத்தையடைந்த நிமித்தம் அவன் எவ்வளவு அதிகாரம் செலுத்தலாமோ அவ்வளவும் செலுத்துவான்.

இம்மூதுரையின் தாற்பரியம் ஓர் அற்பனுக்கு ஏதாவது அற்பவஸ்து கிட்டினபோதிலும் அதனால் அகம்பாவமடைவான் என்றபடி

16. நிலத்திற்குத் தகுந்த கனியும் குலத்திற்கு தகுந்த குணமும்.

அதுபோல அற்பனுக்குத் தகுந்தபுத்திதானிருக்கும் என்றபடி.

17. நீண்டபுல் நிற்க நிழலாமா.

அவ்வாறு அற்பன் உயர் பதவியடைந்தபோதிலும் ஒருவருக்கும் பிரயோசனப்படமாட்டான்.

18. பனிபெய்து கடல் நிரம்புமா.

19. பனிபெய்து குளம் நிரம்புமா.

20. பனிப்பெருக்கிலே கப்பல் ஓட்டலாமா.

21. பனியைநம்பி ஏர்பூட்டினதுபோல.

எல்லாம் ஒரே அருத்தம். அற்பன் உதவியை நம்பி ஓர் காரியம் நாம் ஆரம்பிக்கலாகாது.

22. பாடிப்பாடிக் குத்தினாலும் பதரில் அரிசியில்லை.

அவ்வாறு என்னதான் அற்பனை நாம் புகழ்ந்து பேசி தோத்திரங்கள் பண்ணி அவனிடமிருந்து ஏதாவது ஓர்வித லாபமடைய முயன்றாலும் நமக்கொன்றும் கிட்டாது. வீண் வாய்சிரமமே ஒழிய மற்றோர்வித பிரயோசனமுமில்லை.

23. பிடாரி வரங்கொடுத்தாலும் ஓச்சன் வரங்கொடுத்தலரிது.

ஓச்சன் அப்பிடாரியின் மந்திரியாய் ஏற்பட்டபடியால் அவன் அற்ப தனம் தனக்கு லாபமில்லாமல் வரங்கொடுக்க மனம் வராது. கடைசியாய் ஓச்சன் தானாய்க்கொடுப்பது ஒன்றுமில்லை. பிடாரி அளித்த வரத்தை தான் அவ்வாறு அளித்ததாக சொல்லவேண்டியது ஒன்றுதான். அதற்கும் அவன் மனம் வருகிறதில்லை என்றபடி. அற்பர்களுடைய வியற்கை யித்தன்மையது என்று அறிந்துகொள்ளவந்த பழமொழி யிது.

24. புழுக்கை கலம்கழுவித் தின்னுது.

25. பித்தளை நாற்றமறியாது.

ஏன்! புழுக்கைக்கு சுபாவமே எச்சிலை தின்பது. பித்தளையின் குணமே எப்பொழுதும் அழுக்காக இருப்பது. இவ்வாறு இயல்பாக ஏற்பட்டிருக்க இவர்கள் சுபாவத்தைவிட்டு எப்படி மீறி நடப்பார்கள். அற்பர்கள் தங்கள் அற்பகுணத்தை ஒருபொழுதும் விட்டு பெருந்தோரணையாக நடக்கார்கள் என்றபடி.

26. புழுக்கைப்புத்தி பிடரியிலே.

அற்பனுக்கு எப்பொழுதும் அற்ப புத்தியேயிருக்குமே யல்லாது நற்புத்தி யிருக்காது

என்றபடி. ஓர் வேலைக்காரன் தனது பிடரியில் தடியொன்றை இரு தோட்களிலும் வியாபிக்க வைத்துக்கொண்டு தனது வீட்டுக்குள் நுழையப் தடி அவனை உள்ளே நுழையவொட்டாமல் தடுத்தது. ஏதோ தடையொன்று உண்டானதைமட்டுமவன் அறிந்தானேயன்றி இன்ன காரணத்தால் உண்டாயிற்றென்பதை அவன் அறிந்துகொள்ளவில்லை. வீதியிலிருந்த ஒரு புத்திமான் ஓடிவந்து அப்புழுக்கையின் பிடரியில் ஓர் அரை வைத்து தடியை வாங்கி அவன் கையில் கொடுத்து அவன் வீட்டுக்குள் அவனை நுழையும்படிச் செய்தான்.

முக்கிய கருத்து அற்பர்களுக்கு சில சமயத்தில் புத்தி கெட்டுப்போம் என்றபடி: அல்லது அற்ப புத்தியே மேலிட்டிருக்கும் என்று சொல்லலாம்.

27. முக்காலம் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா.

அற்பர்கள் தங்கள் அற்பகுணத்தை மாற்ற என்னதான் முயன்றாலும் அக்குணம் மாறாது என்றபடி.

28. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா.

முற்கூறிய பழமொழிக்குச்சமானம், என்னதான் உதாரமாய்ச் செலவுசெய்து அற்பன் தனது பெயரை மாற்ற எத்தனித்தாலும் அவனுக்கு ஏற்கனவே வந்த கெட்ட பெயர் போகாது என்றபடி.

இதற்கு ஓர் சிறுகதை யுண்டு. அற்பனொருவன் கப்பல் வியாபாரம் பண்ணி ஏகப் பணம் சம்பாதித்துவிட்டான். இவன் வெகு லோபி என்று பெயரெடுத்திருந்தனன். அதை மாற்றிக்கொள்ள 10-வாசல் வைத்து ஓர் மாளிகை காட்டி அதன் நடுவே உட்கார்ந்துகொண்டு 'எந்த வாசல் வழியாக யார் வந்து கேட்டாலும் பொருள் கொடுக்கிறது' என்ற விரதம் வைத்துக்கொண்டான். கொஞ்சநாளிவ்விரதம் நடந்துவந்தது. இப்படியிருக்க ஒருநாள் ஓர் சன்னியாசி முதல்வாசல் வழியாக வந்து ஒரு ரூபாய் கேட்டார். அவ்வற்பன் கொடுத்தான். மறுபடி அச்சன்னியாசி இரண்டாவது வாசல் வழியே வந்து இரண்டு ரூபா கேட்டார். அத்தொகையையுங் கொடுத்தான். மூன்றாவது வாசல் வழியாகவந்து மூன்று ரூபா, நான்காவது வாசல் வழியாக வந்து நான்கு ரூபா. இம்மாதிரி இவர் கேட்டுவந்தார். அவர் 10-வது வாசல் வழியாகவந்து 10-ரூபாயும் கேட்டார். அவ்வளவையும் அந்த உலோபி சகித்துக்கொண்டு கொடுத்தான். 10-வாசற்களும் முடிந்தவுடன் இரண்டாந்தடவை அச்சன்னியாசி முதல்வாசல் வழியாக வந்து ஓர் ரூபா மறுபடியும் கேட்கலுற்றார். உலோபிக்கு வந்த கோபத்திற்கு அளவேயில்லை. "சேய்! நீர் சன்னியாசியல்ல. சன்னியாசி என்ற பதத்திற்கு உனக்கு அருத்தம் தெரியுமா. என்ன ஆசை!" என்று நிந்தித்தான். உடனே அந்தப் பெரியவரும் "ஐயா நீங்கள் தாதாவுமல்ல! இதோபாரும் உமதுபொருள்!" என்று சொல்லி தனக்கு அதுவரையில் கிட்டின 55-ரூபாயையும் அவ்வற்பன் காலில் கொட்டினார். ஏதோ எல்லாருக்கும் தாதா என்றபட்டம் வந்துவிடும் என்று எண்ணவேண்டாம்: அதைப்போக்கத்தான் நானிங்குவந்தேன். 10-வாசல்களைக்கட்டி தானம் கொடுப்பதாக தீட்சித்துக் கொண்டு உட்கார்ந்த உமக்கு கோபம் ஏன் வந்தது! கேட்டதைக் கொடுக்க சித்தமாயிருக்கின்றேன் என்று ஏன் நீர் விருது கூறிக் கொண்டீர்! என்று சிரித்தார். அந்த உலோபி என்னதான் வேண்டிக்கொண்டும் அச்சன்னியாசி அப்பணத்தை விரலால்கூடத் தொடவில்லை. அற்பன் வெட்கிப்போனான்.

ஆகையால் எவ்வளவு சிரமப்பட்டாலும் அற்பன் உதாரனாவது முடியாது. அவனற்பகுணம் அவனை விட்டு ஒருநாளும் போகாது.

A BRIEF SKETCH OF THE HISTORY OF INDIA.

இந்துதேச சரித்திர ஏலப்பாட்டு.

INVOCATION.

காப்பு.

(1.)

மன்னியசீர் வளர்ந்திடும்நம் - நாட்டின்
மகத்துவம்சேர் சரித்திரத்தைப்
பன்னநல்ல சுவைமிகுந்த - ஏலப்
பாட்டதனிற் பகர்வதற்கு

முடுகு.

1.	கன்னிவளர்பங்கனுக் கரியதிரு	மைந்தன்
	கஜவதனனருள் பெருகு மிறையேக	தந்தன்
	கணநாதனைங்கரன் குணமேரு	ஆதி
	கருதுமவர்மலவிருட் கொருஞான	ஜோதி.
2.	அன்னையொடுதந்தையா யகிலமும்	அளிப்போன்
	அன்பருளமென்னுமல ரின்மிசை	களிப்போன்
	ஆறுவாகனனரிய தோகைமயில்	ஊரும்
	அற்புதன்முன்வந்த சொற்பெருமை	சேரும்.
3.	தன்னைநிகரில்லாத ஷாட்குண்ய	தீபன்
	சாற்றும்நின்மலசச்சி தானந்த	ரூபன்
	சதுர்மறைகள்தேடரிய பரிபூரண	வள்ளல்
	சரணாரவிந்தத்தை நினைவோர்கள்	உள்ளில்.
4.	துன்னிவளர்கின்றவருள் மன்னிநிறை	வாரி
	தோற்றமழிவில்லாத சுயமிர்ணி	காரி
	தூய்மையொடுஞானநெறி மேயவர்கள்	பணியும்
	சுந்தரம்சேர்பாதார விந்தமென்றும்	துணையே
		—ஏலேலோ ராமஜயம்.

THE HINDU RULE.

I. இந்து அரசாட்சி.

(2.)

அந்தமுடன் ஆரியர்கள் - ஆண்ட
அதிசயத்தை அமைவுடனே
முந்துமுந்தத் தெரிந்திடநீ - மானே
மொழிகுவேன்கேள் அழகுடனே.

முடுகு.

1.	சிந்துநதிதீரத்தில் வந்துகுடி	ஏறிச்
	செப்புமுயர்வேதங்கள் மெய்ப்படத்	தேறிச்

சிலகாலம் அயர்வின்றி நலமா இருந்தார்
சென்றுபின் அந்நதி கடக்கத் திருந்தார்.

2. கந்தடுகளிற்றினுக் கிணையாக நின்று
கறுவோடுபோர்செய்ய வெருவாமல் வென்று
கனமானராஜ்யங்கள் இனமாச் சமைத்தார்
கற்பகநல்நாடுபோற் பொற்புற அமைத்தார்.

3. சந்திராதித்தர்தம் சந்ததி உதித்துத்
தலையானபலவேந்தர் நிலையாக் கதித்துச்
சலியாதபுகழ்பெற்ற மநுவாதி மன்னர்
தரமாகப்பலகாலம் முறைசெய்த பின்னர்,

4. பந்தமொடுபல்வேந்தர் அந்தமோ டாண்டார்
பண்பாக ஸ்ரீராமர் நண்போடே ஆண்டார்
பகரரியபலராமர் ஸ்ரீகிருஷ்ணர் ஆண்டார்
பஞ்சபாண்டவர்களும் பரிவாக ஆண்டார்.

5. நிந்தையறுசந்த்ரகுப் தனையாதி மன்னர்
நீதியொடுபலகாலம் முறைசெய்த பின்னர்
நெடியபுகழ்பெருவிக்ர மாதித்த னோடு
நிலவுபலராஜபுத் திரர் இந்த நாடு,

6. நந்தலறவேநெடுங் காலங்கள் ஆண்டார்
நலனுற்றசாலிவா கனனுமிக ஆண்டான்
நண்ணரியபுகழ்பெற்ற எண்ணரிய வீரர்
நலியாதசோழபாண் டியரோடு சேரர்,

7. விந்தையொடுபலகாலம் மெலியாமல் ஆண்டார்
வேதநெறிநீதிதவ றாதுபுகழ் பூண்டார்
விதமாகவே ஆறி லொருகூறு கொண்டு
மெலியோரைவலியோர்கள் நலியாது கண்டு.

8. புந்திமகிழ்வாகவோர் துறையிற் பொருந்தி
புலியோடுபசுநின்று நறுநீர் அருந்தப்
புண்யங்கள்யாவுமிப் புவிமீதில் ஓங்கப்
புகல்கின்றபாவவினை மருவாமல் நீங்க,
—ஏலேலோ ராமஜயம்.

THE MAHOMEDAN RULE.

II. மகம்மதீய அரசாட்சி.

(3.)

செம்மையொடு மகம்மதியர் - இந்தத்
தேசமெல்லாம் ஜயித்ததுவும்
பொம்மலுடன் புரந்ததுவும் - யாவும்
புகலுவேன்கேள் இனியுனக்கே.

முடுகு.

1. நம்மவர்களாம்இந்து ராஜாக்கள் உள்ளில்
நட்பின்றியொருவரோ டொருவர்பகை கொள்ள
நாடியதுகண்டுமக மத்கோரி யென்னும்
ரணசூரனனஆப் காண்தேச மன்னன்.

2. இம்மெனவெழுந்தவந் தெதிர்பொருத வேந்தர்
எல்லோரையும்வென்று வல்லாண்மை வாய்ந்து
இயலாகவேதுருக் கர்க்கரசு தந்தான்
இணையற்றபலமன்னர் அவன்வழியில் வந்தார்.

3. வெம்மையுறும்அவர்களில் விளங்கும் பிரதாபம்
மிக்கானபேர்கள்சிலர் மற்றோர்கள் லோபம்
மேவிவருதுர்க்குணக் கட்டியவர் தொல்லை
வெய்யதுயர்செய்ததற் கெல்லை யொன்றில்லை.

4. தம்மதம்வளர்த்திடப் புன்மதியி லோர்ந்து
சதிரானகோயில்கள் தகர்த்தருள் தீர்ந்து
சங்கடம்பலசெய்து தரணியிருள் மூடத்
தளர்வுசெய்தார்பின்பு தாமவர்கள் வீடக்.

5. கும்முமிருள்நீக்கவரு நன்மையுரு ஜோதி
குலவவந்தார்கள்மொக லாயரெனும் நீதி
குறையாதமன்னரவர் முறையில் உத்துங்கன்
கொடியரசர்அயு பணிந் திடும் ராஜசிங்கம்.

6. எம்மையுறும்அக்பரெனும் நன்மையுறு பேரோன்
எல்லார்க்கும்நல்லான் எனத்திகழும் சீரோன்
ஏதமறுபுவிராஜ நட்சத்தி ரங்கட்
கிடையிலொளிமிகநின்ற வடிவுடைய திங்கள்.

7. சம்மதமதாகவே யெம்மதமும் கொண்ட
தக்கோன்அவன்போன பின்னுமொரு மண்டு
சனிபோல்முளைத்தார்கள் தரணியிருள் கொள்ளத்
தம்முடைமைதன்னையும் காக்கவலி யில்லார்.

8. நன்மையுறவிவர்குடிகள் எவ்வாறு காப்பார்
நலியவந்திடுதுயரம் எவ்வாறு தீர்ப்பார்
நாசமாகியதிந்தத் தேசங்க ளெங்கும்
நண்ணியதுமுன்னமென்று மில்லாத பங்கம்
—ஏலேலோ ராமஜயம்.

(இன்னும் வரும்.)

"ON THE EXCELLENCE OF TEMPLE WORSHIP."

"ஆலயந்தொழுவது சாலவுநன்று."*

கடவுள் வணக்கம்.

தாதையாய்த் தாயாய், தந்தைசற்குருவாய் சராசர மனைத்துமாம்பொருளாய்
ஆதியாய் நடுவாய் யந்தமாய்ப் பந்தம் யாவுமற்றகம் புற நிறைந்த
சோதியாய்ச் சுடராய் தூயநான்மறையாய்ச் சுகந்தரு மின்பவாரியாய்
நீதியாய் யழியா நித்யமூர்த்தியுமாய் நிற்குமின் னடி வணங்குதுமே.
ஊனுயு முயிராயு முடலாயு முலகாயு முதித்துத்தோன் றிக்
கானுயு மலையாயுங் கடலாயு நிலனுயுங் கருதுவோர்க் குத்
தேனுயும் பாலாயுந் தெவிட்டாத வமிழ்தாயுஞ் சிறந்த யாவுந்
தானுயுநின்ற வன்றன் றண்கழலைச் சந்ததமுந் தலை மேற் கொள்வாம்.

அகவல்.

மேலவர் தம்முன் விரும்பியே நின்று
பாலியந்தன்னிற் கல்வியைப் பயின்று
மூலகாரணமாம் மூர்த்தியே யென்று
ஆலயந்தொழுவது சாலவு நன்று.

சமுத்திரம் ஜலதாரைநீரையும் தன்னின மாகச் சேர்த்துக்கொள்வதுபோலும் மாதா பிதாக்கள் மழலைச்சொற்கேட்டு மகிழ்வது போலும், இவ்வுபந்நியாசத்திலுள்ள குற்றங் களை நீக்கி குணத்தையே கொள்வது இச் சபையிலுள்ள மேலோர் கடமை.

ஆவின் உடல் முற்றிலும் பால்பரவியிருப் பினும் அப்பசுவின் மடியிற் கன்றைக்கொண்டு கறந்துகொள்வதுபோல் சுயம்புவாய் எங்கும், என்றும், சொரூபமாயும் அரூபமாயும் இரண் டற்றதாயும் நிறைந்து விளங்கும் பிரமமானது மலரின் மணமாயும் எள்ளில் எண்ணெயாயும் ஆலயங்களிற் றெய்வ மூர்த்தியாயும் எழுந் தருளி யிருக்கின்றமையால் ஒவ்வொருவரும் தம் தமக்குரிய ஆலயங்களிற்சென்று ஜெக தீசன் அடிகளை வணங்கிவருவதே மேலான தென்று தோன்றுகிறது.

* Substance of a lecture delivered before a Teacher's Association.

விஷயம்.

"ஆலயந்தொழுவது சாலவு நன்று." (பத வுரை:) ஆலயம் = கோவிலுக்குப்போய், தொழு வது = கடவுளின் அடிகளை வணங்குவது, சால வும் = மிகவும், நன்று = நல்லது.

(பொழிப்புரை,) கோவிலுக்குப்போய் கட வுளின் அடிகளை வணங்குவது மிகவும் நல்லது. (விரிவுரை): கோவிலுக்குப் போகுமுன் ஒவ் வொருவரும் தம்தம் சமயத்துக்குரியபடி ஸ்நா னம்செய்து சுத்தமான உடைதரித்து "குழந் தையும் தெய்வமும் கொண்டாடு மிடத்தில்" என்றதனால் வேண்டும் பூஜா திரவியங்களுடன் கோவிலுக்குப்போய் அகண்ட சச்சிதானந்த நித்திய பரிபூரண அனந்த கல்யாணகுண பூஷண திவ்யமங்கள ஸ்தாவரசங்கம ரூபமாய் எங்கும்நிறைந்து விளங்கும் பிரமமே அபக் குவிகள் கடைத்தேறும் பொருட்டு இவ்வால யத்தின்கண் மூர்த்தி சொரூபமாய் எழுந்தருளி யிருக்கின்ற கடவுளின் திருப்பாதங்களை மனோ வாக்குக் காயங்களினாலும், பயபக்தி விஸ்வாசத் துடனும், உடல், பொருள், ஆவி மூன்றும் தத்தம்செய்து திரிகரணசுத்தியாய் முக்கால மும் வாழ்நாள் பரியந்தம் எக்காலமும் வண ங்கிவருதல் நல்லபதவியை அளிக்கும். யாவ ரும் முதன்மையில் விரும்புதலும் இதுவே பெரும்பான்மையோர் வழக்கத்தில் சரியை முதற்படியாய் இருக்கின்றமையால், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பதவி யையும் பெறுவதற்கு ஆலயங்களிற்சென்று கடவுளைவணங்குவதே தெய்வபக்தி பெருகி எளிதில் அஞ்ஞானம்நீங்கி மெஞ்ஞானத்தை

யுணர்வதற்கு உத்தமமான மார்க்கமாயிருக் கின்றது. ஆனதால் ஔவையாரும் ஆலயந் தொழுவது சாலவுநன்றென்றனர். ஏன் ஆலயங் களில்போய் கடவுளை வணங்கவேண்டுமெனில், (கைவல்லியம்)

"தாலத்தின்மரங்கள்காட்டி தனிப்பிறைகாட்டுவார் போல்
ஆலத்தின் உடுக்கள்காட்டி அருந்ததிகாட்டுவார்போல்
தூலத்தைமுன்புகாட்டி சூக்குமசொரூபமான
மூலத்தைப்பின்புகாட்ட முனிவரர்தொடங்கினரே."

என்றும், (குறள்) "கற்றதனாலாயபயனென் கொல், வாலறிவனற்றாள்தொழா ரெனில்."— "இருள் சேரிருவினையுஞ் சேராவிறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார்மாட்டு."—"அற வாழியந்தணன்றாள் சேர்ந்தார்க் கல்லாற் பிற வாழி நீந்தலரிது."—"கோளிற் பொறியிற்குண மிலவே யெண்குணத்தான்றாளை வணங்காத் தலை."—என்று திருவள்ளுவநாயனாரும் கூறி யிருக்கின்றார்.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்குவார்த்தைசொல்லசற்குருவும் வாய்க்கும் பராபரமே."—"விரும்புஞ்சரியை முதன் மெஞ்ஞானநான்கும் அரும்புமலர் காய்கனிகளன்றோ பராபரமே."—என்று தாயு மானவரும் சொல்லுகின்றனர். இன்னும் பக்த சேவடிகளும், மார்க்கண்டேயர், அறுபத்து மூவர்கள், மாணிக்கவாசகர்முதலிய ஏனையர் களும் கற்பணி, பொற்பணி, சொற்பணிமுத லிய பலவித உபசாரகைங்கரியத்தினால் ஆல யந்தொறுஞ்சென்று தொண்டுபுரிந்தே முக்தி பெற்றிருக்கின்றனர். அவ்வாறு முக்திபெற்றி ருக்கின்றவர்களில் எளிதில் வீடடைந்தவரும் மிகவும் சாரமாயுள்ளதும் பெரிய புராணத்தில் உள்ளதுமான திருநாளைப்போவா ரென்னும் நந்தனார் சரித்திரத்தை யான் தெரிந்தவரை யில் சொல்லக்கேண்மின்.

கடல்சூழ்ந்து நிலவளம், நீர்வளம், குடிவள மமைந்து சிறப்புற்றோங்கிய சோளதேசத்தின் கண், மேற்கானாடென்னும் ஆதனூர் பறச் சேரியில் நீசர்குலத்தில் சிப்பியில் முத்துண் டானதுபோலும் சேற்றிற் செந்தாமரை உற்ப வித்ததுபோலும் நந்தனார் என்பவர் பிறந்தார். அவர் அவ்வூர் வெட்டிமைத் தொழிலையும் 40-வேலி பூமியுடைய அவ்வூர் வேதியருக்கு அடி மையாளாயிருந்து வியவசாயமும் செய்து வந் தனர். இவர் சிலர் கோயிலுக்குப்போய் சுவாமி தரிசனஞ்செய்து வருபவரைப்பார்த்தும் அவர் சொல்லக்கேட்டும் அவ்வாறு இவரும் செய்து வர ஆவல்கொண்டு சமீபமுள்ள திருப்புன்கூர் ஆலயத்திற்குச்சென்று ஊர்வலம் வந்தனர். தான் நீசஜன்மமானதால் கோவிற்குள் செல் லாமல் சன்னிதிமுன் தூரநின்று தலைவணங்கி யும் ஆடியும் பாடியும் மனமுருகிப் பன்முறை துதித்தனர். நந்தியின் மறைவால் சுவாமியின் மூர்த்திகரம் தெரியவில்லை. அம்மறைவு நீங்கி தனக்குத் தரிசனம் தரும்படி ஜெகதீசனை தோத்தரித்து, ஆனந்தக்கண்ணீர் சொரிய நிற் கும் நந்தனார் மனதறிந்து நந்தியை விலகச் செய்தும் சுவாமியானவர் தமது பக்தனுக்கு தரிசனமும் தந்தருளினார். அதுமுதல் நந்த னாருக்கு பக்திபெருகி பல ஸ்தலங்களுக்கும் போய் பரமனை வணங்கியும் கோவில் மேள வாத்தியங்களுக்குத் தோலும் வாரும், யாழு க்கு நரம்பும் தேவபூஜைக்கு சுகந்த கோரோ ஜனையும் காணிக்கையாய்க் கொடுத்தும் ஸ்நா னபானத்திற்கு உதவியாய்த் தடாகம் வெட்டி யும் சிவபெருமானுக்குத் தொண்டுபுரிந்து வந்தனர். இவர் தான் முயன்ற பரமசிவ பக்தி மார்க்கத்தை தன்னினத்தாருக்கும் போதிக்க அவர்களிணங்காது மறுத்தனர். மீண்டும் அவர்கட்கு பஞ்சாக்ஷர உபதேசம் செய்தும்

† ஆகாயத்தில் (வசிஷ்டர் முதலிய தூலமான) நக்ஷத்திரங்களைக்காட்டி (சூக்ஷமமான) அருந்ததி நக்ஷத்திரத்தைப் (பின்னே) காட்டுவார்போல்.

சாம, பேத, தான, தண்டமென்னும் சதுர்வித உபாயத்தால் வசப்படுத்தி 12-பேர்வரையில் பார்வதி பதியை வணங்கிவரும்படிச் செய்தனர். அவர்களும் இவர் சொன்னபடியே சர்வேசனுடைய அளவிறந்த நாமங்களை தோத்தரித்தும் ஆடிப்பாடியும் தொண்டுபுரிந்து வந்தனர். இவர்கள் விஷயத்தில் செய்த நன்றிக்கும் மகிமைக்கும் உமாமகேசனே கருணைபுரிந்து விடளிப்பவராகும். "நன்றிக்குவித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கமென்று மிடும்பை தரும்." என்னும் குறள்படி, நந்தனொழுக்கம், 'முத்திக்குவித்தாகு முதல்வனடிதொழில் எத்திக்கும்புகழைத்தரும்.'' என்றதற்கிணங்க கீர்த்திபெற்றுவரும்நாளில் சிலர் சிதம்பரத்தில் மார்கழி மாதத்தில்நடக்கும் ஆருத்திரா தரிசனத்திற்குப் போகிறவருடன் தானும் செல்லக்கருதி தன்னை அடிமைகொண்ட மறையோரிடஞ்சென்று உத்தரவுகேட்டனர். அவ்வந்தணர் விடைதராததனால் சிதம்பரேசனை ஸ்மரித்து மனம்வருந்தி நாளைச் சிதம்பரம் போவேனென்று சொல்லிவந்தனராதலால் "திருநாளைப்போவார்" என்னும் பெயருண்டாயிற்று. வேதியரை இவர் பலதடவைகளில் வந்து கேட்குந்தோறும் அவர் பல இம்சைகள் செய்தனரேயல்லாது விடையளித்தவரல்லர். இவர் வேதியரிடம் உத்திரவுபெற்றுச் செல்வதே ஞாயமென்று தீர்மானித்திருந்தனர். இவரிவ்வாறு 10-வருஷகாலம் "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்" எனும் மொழிப்படி தொட்ட காரியத்தைவிடாது முயன்று தெய்வபக்தியிற் சிறந்து மெஞ்ஞானமுணர்ந்து ஊணுறக்கமுதலியதும் விட்டு, பரமன் திருவடிக்கே உடல் பொருளாவி மூன்றும் தத்தஞ்செய்து தமது வியவசாய முதலிய அடிமைத்தொழில் யாவையும் கைவிட்டனர்.

ஜெகநாதனுடைய திருவடியைநம்பியே யாவையும் கைவிட்ட தமது அதிதீவிரதர பக்குவியாகிய நந்தனருடைய மனதறிந்த ஸர்வ அந்தரியாமியானவர் வெகுநாள் சித்திரையே வாரா நந்தனருக்கு சித்திரைவரும்படி செய்தும், சொற்பனத்தில் தரிசனந்தந்தும் எமது பக்த சிரோன்மணியே அஞ்சேலென்ற நன்புரிந்தும், இன்றிரவில் நமது பூதகணங்களாலுமது வேதியருடைய கழனியாவையும் நட்டு நாளை அறுப்பறுக்கும்படி செய்தருளினேம். வேதியரிடஞ்சென்று தெரிவித்தால் விடைதருவாரென்று திருவாய்மலர்ந்தருளி தில்லைப்பெருவெளிகாட்டி மறைந்தனர். நந்தனார் கழனிகளைப்போய் பார்க்க தான் கனவிற்கண்டபடி இருக்க, களிப்புற்று தம் பிராமணரிடஞ் சென்று தெரிவிக்க, அவர் வந்து பார்த்து மகிழ்ந்தனர். நேற்று மாலைவரையில் தரிசாயிருந்த தன் 40-வேலி நஞ்சையும் இன்றறுக்கும்படி முதிர்ந்து நன்றாய் விளைந்திருக்கும் செந்நெல்லைக் கண்ணுற்றதிசயித்து நந்தனருடைய மகிமையின் அற்புதக்காட்சியை வியந்து அவர் விஷயத்தில் தான் அபராதியானதை மன்னிக்க விரும்பினர். பின்னும அவர் நந்தனார் நோக்கி "நீர் கீழ்குலத்திற் பிறந்தும் உருத்திரமூர்த்திக்குத் தொண்டுபுரிந்தமையால் நீரே மேற்குலத்தனரானீர். யான் மேற்குலத்திற் பிறந்தும் ஈஸ்வரபக்தி யில்லாததனால் தாமரைத் தடாகத்திலுள்ள தவளையானது அம்மலரிலுள்ள தேனைப் புசியாதிருந்ததுபோல் யான் வீண் ஜென்மமானேன். காட்டிலிருக்கும் வண்டானது வந்து கஞ்சமலரிலுள்ள தேனைக் கிருகித்ததுபோல் நீர் பரமசிவபக்தி ரசத்தைப் புசித்த அருள்பெற்றவரானதால் யான் பரகதியடையும்வண்ணம் குருவுபதேசம் செய்யு"மென்று கேட்டனர். அதற்கு நந்தனார் தான் நீசனும், அடிமையுமானதால் செய்யத்தகாதென்று பலதரம் மறுத்தும், அவர் கேளாமல் செய்யவேண்டுமென்று வருந்தினர். ஆனால் பொதுவாய் பக

வத் பாதாரவிந்தத்தின் மகிமையையும் ஞானுபவங்களையும் நந்தனார் எடுத்துரைக்க வேதியர் கேட்டு ஆனந்தமடைந்து "நந்தனரே! இன்று உம்மகிமையைக்கண்டேன். கலிதீர்ந்தேன், ஜென்மசாபல்யமாயிற்று: நீர் சிதம்பரேசனுக்கே அடிமை, உமக்கு யானடிமை" என்று மகிழ்ந்துசொல்லி விடைதந்தனர். நந்தனாரும் விடைபெற்று சிதம்பரக்ஷேத்திரத்திற்கு வந்து ஊர்வெளிவலம் வந்திருந்தனர்.

இதற்கு முன்னிரவில் தில்லைமூவாயிரவர்களுக்கும் பொன்னம்பலவாணர் கனவிற்றோன்றி "தில்லைவாழந்தணர்காள்! நீசர்குலதிலகனும் நமது பரமபக்தனுமாகிய நந்தனென்பவர் நாளை ஊர்வலம்வருவார் நீங்களெல்லோருஞ் சென்றழைத்துவந்து குண்டத்தில் தீவளர்த்து அதில் ஸ்நானஞ்செய்வித்து நமது சந்நிதிமுன் கொணர்க" வென்றருளினர். இவ்வண்ணமே நந்தனருக்கும் சொற்பனஞ்சாதித்து மறைந்தனர். தில்லை வாழந்தணர்களியாவரும் பரமனிருவார்த்தைக் கதிசயித்து எதிர்பார்த்திருக்குமளவில் நந்தனரும் கடவுள் திருநாமங்களைச்சொல்லி கீர்த்தனஞ்செய்துக் கொண்டானந்தபரிதராய் வந்துகொண்டிருந்தனர். அவரை மறையோர் எதிர்கொண்டழைத்துவந்து அக்கினிகுண்டத்தில் மூழ்கச்செய்தனர். அவ்வெரியினின்றும் வேதபிராமண முனிவடிவமாய்த் தூயதேகம் பெற்றெழுந்த நந்தனரை நடராஜர் சந்நதி முன்கொணர்ந்தனர். அவர் அகண்டஜோதிமயமாய் பிரகாசித்து தில்லைப் பெருவெளிக்குள் வெளியாய்க்கலந்து மறைந்தனர். இவ்வற்புதத்தைக்கண்ட யாவரும் கண்டு ஆனந்தபரவசராய் நந்தனருடைய பக்திக்கும், மகிமைக்கும், புகழ்ந்தும், தோத்தரித்தும் மங்களவாழ்த்துக் கூறினர்கள்.

இங்ஙிவ்வாறு அழியாத்தூயதேகம்பெற்று அகண்டஜோதிமயமாய்ப்பிரகாசித்த நந்தனருடைய ஜோதிசொரூபமானது கைலாயகிரியின்கண் தேவர்களும் முனிவர்களும், பக்தசேவடிகளும், பதினெண்கணங்களும் சூழ்ந்துவணங்கப்பெற்று கொலுவீற்றிருக்கும், சிருஷ்டி; திதி, சம்ஹாரம், திரோபவம், அனுக்கிரகம், முதலாகிய பஞ்சக் கிருத்தியங்களையுமுடைய சர்வஜீவ தயாபரரான கௌரிமனோகரனுடைய அஞ்சித ரஞ்சித, குஞ்சித, பாதபங்கயத்தில் வந்துகலந்தது. இவ்வுண்மையறிந்தவரும் ஆதியில் சப்தசாகரங்களையும் பானம்செய்து பூத பௌஷியவர்த்தமான மென்னுந் திரிகால ஞானியருமான உபமன்னியமகரிஷியானவர் எழுந்து சிரசின்மேற் கைகுவித்து தோத்தரித்து இவரின் குணானுபவங்களைப் புகழ்ந்து நிற்குமளவில் மற்றேனையர்களும் எழுந்து அதிசயமுற்று பன்முறை துதித்து இவ்விபப்பைத் தெரிந்துகொள்ள விரும்ப, அம்மகரிஷியானவர் இத் திருநாளைப்போவாரென்னுமவர் சரித்திரத்தை ஆதியோடந்தமாய் திருவாய்மலர்ந்தருளினர்.

இதுவுமல்லாமல் பரமசிவ பக்தனிருக்கும் சேரியே கைலாயமென்றும், சிவபெருமானுக்கு பக்திபண்ணியவர் பறையாயிருப்பினும் பதினான்குலகத்தையும் பரிசுத்தமாக்குவாரென்றும், ஜெகநாதனைப் பணிவதோடும், பக்திவைராக்ய சித்திபெற்ற பக்தகோடிகளின் சரித்திரத்தைகேட்பதே முத்தியைப்பெறும் உபாயங்களில் மேலானதென்றும் திருவாய்மலர்ந்தருளினர். அதை அங்குள்ள யாவரும் பக்திசிரத்தையாய்க் கேட்டு களிப்புற்றனர். ஏனெனில் "திருநாளைப்போவாரென்னும் சரித்திரம் தேனினும், பாலினும் இனியது கண்டீர்." என்று நந்தனார்சரித்திர மகிமையைக்குறித்து கீர்த்தனம் செய்தவர்களும் சொல்லியிருக்கின்றனர். ஆகையால் நால்வகைப் பிறப்பு எழுவகைத்தோற்றம் யானை

முதலெறும் பிறகவுள்ள எண்பத்துநான்கு லக்ஷ ஜீவபேதங்களில் மானிடஜென்மமே முதன்மையென்றும், கடவுள் தம்மை வணங்குவதற்கே நம்மைப் படைத்தாரென்றும் தெரிய வருகிறது.

நாம் யாவரும் "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்னும் செய்யுட்கு விரோதமன்னியில் நடந்தும் ஆலயங்களிற்சென்று கடவுள் பாதங்களைத் தலையால் வணங்கியும் கண்ணாற்கண்டும் அவர் நாமங்களையே செவியாற்கேட்டும், வாயால் வாழ்த்தியும் மனதால் சிந்தித்தும் விடாது முயல்வதோடும் நம்மாணாக்கர்களுக்கும் கல்விப்பயிற்சியோடும் இளமையிலேயே தெய்வபக்திவருவதற்கு ஆலயத்திற்சென்று கடவுளைவணங்கும்படி வற்புறுத்தல்வேண்டும். ஏனென்றால் தொட்டிற்பழக்கம் சுடுகாடுவரைத் தொடருமானதால் துவக்கத்திலேயே நற்பழக்கங்களில் கொண்டுவர வேண்டியதவசியம். நாம் ஒவ்வொருவரும் கடவுளுக்குப்பயந்து வீணபராதி யாகாவண்ணம் நின்மலனை வணங்குவதும் அவர் நாமங்களை வாழ்த்துவதும் தியானிப்பதும் முடிவில் நிஷ்டையாம். அவ்வாறு பிறரையும் வணங்கவும் வாழ்த்தவும் தியானிக்கவும் செய்வது பொதுக் கடமையாயும் நாம் மானிட ஜன்மமெடுத்து உபாத்தியாயராயிருப்பதற்கு இன்றியமையாத எளிதிலடையும் பிரயோஜனமாயுமிருக்கின்றது.

வேதமும்விண்ணோர்வாழி வேதியர்விஞ்சைவாழி
கோதிலாத்தவத்தோர்வாழி குருமார்கள்சங்கம்வாழி
போதமெய்யடியார்வாழி புலவர்சங்கீதம்வாழி
ஆதிநாயகன்றுள்வாழி ஆலயம்நீடுவாழி.

SHORT STORY: SANGAMPUTHAI ANDI.

சிறுகதை: சங்கம் புதையாண்டி.

பெருமாள் சன்னதித்தெருவின் கடைசி வீட்டின் திண்ணையில் கௌரீசங்கம், ஏகமுகம் முதலிய ருத்ராக்ஷங்களுக்கு பொன்கட்டுகளிட்ட மாலை கண்டத்தில் பிரகாசிக்கவும், விபூதி திரிபுண்டரமாக அங்கமெங்கும் விளங்கவும், தாம்பிரத்தகடுபோல் துலாம்பிரமாய்க் காணப்பட்ட பஞ்சகச்ச சோமன் இடையில் விளங்கவும், கையில் தேவநாகர அக்ஷரங்களால் எழுதப்பட்ட சில ஏடுகளைத் தாங்கி சாய்வு திண்ணையில் சாய்ந்து பழுத்த பழம்போல் ஒரு விருத்தாப்பியர் அமர்ந்திருந்தனர். இவருக்கு முன்னால் தெருவில் கொட்டியிருக்கப்பட்ட சாமணலில் கோயில்கட்டி விளையாடிக்கொண்டு, அதிக ரூபலாவண்ணியமுள்ள ஒரு சிறுபெண் தென்பட்டனள். இவளுக்கு வயது சுமார் 6 இருக்கலாம். இப்பெண்ணின் கழுத்தில் காத்திரமாய் விளங்கப்பட்ட ஜோடி திருமங்கல்யமணிகளைக் கோர்க்கப்பட்ட மஞ்சள் நூலிழையையும், இடமூக்குக் குத்தி நூதனமாய்க் கறுப்புநூலிட்டிருப்பதையும் நோக்கும்பொழுது, விவாகமாய் வெகு நாளாகாத பெண்போல் காணப்பட்டனள்.

திண்ணையில் உட்கார்ந்துக்கொண்டு கண்ணுக்கு மூக்குக்கண்ணாடிகளிட்டு படித்துக் கொண்டிருந்த விருத்தாப்பியர், அடிக்கடி தன் மூக்குக் கண்ணாடியைக் கையிலெடுத்துக் கொண்டும், கண்ணிலணிந்துகொண்டே தலையைக்குனிந்து குனிந்து இச்சிறுபெண்ணை நோக்கியும், அடி குட்டி மணலை இறையாதே உள்ளேபோடி, சங்கம்புதையாண்டி கண்டால் பிடித்துக்கொண்டுபோய்விடுவான் என்று பயமுறுத்தினர். பெண்ணோ இலக்ஷியஞ்செய்யாமல் விளையாடிக்கொண்டே இருந்தனள். சற்றுநேரத்திற்கெல்லாம் ஒரு ஸ்திரீ வீட்டுக்குள்ளிருந்து வெளியேவந்து விளையாடிக் கொண்டிருந்த பெண்தலையில் நறுக் நறுக்

[illegible]று நான்கு குட்டுகள் குட்டி, கன்னத்திலும், முதுகிலும் அறைந்து மென்னியைப்பிடித்துத் தள்ளிக்கொண்டு வீட்டுக்குள்ளேபோய், ஒரு மூலையில் தள்ளி காலாலும் கையாலும் வேண்டியமட்டும் புடைத்தாள். "ஐயோ, அப்பா! ஐயோ, அப்பா! இனிமேல் இல்லை"! என்ற சப்தமும் அழுகையும் மாத்திரம் கேட்டது. தெருத்திண்ணையிலுட்கார்ந்திருந்த கிழவர் கிடக்கட்டும்விடு, கிடக்கட்டும் விடு என்று சொல்லிக்கொண்டிருந்தாரே யன்றி இருந்த இடத்தைவிட்டு எழுந்துபோய்த் தடுக்கத் துணியவில்லை. இந்த நடவடிக்கைகளைக் கண்ணுற்று பரிதாபமடைந்த பீமன் அவ்வக்கிராரத்திற்கு நூதனமானதால், இவர்களை இன்னாரென்றும் இப்போர்க்கொத்தவர்களென்று மறியாதிருந்தபோதிலும், அவ்விருத்தாப்பியரை மாமாவென்றழைத்து தாங்களாவது விலக்கலாகாதாவென்று கேட்டான். யாரப்பா நீ புதிதாயிருக்கிறது? கிட்டுமைத்துனன்தானே! உட்காரு. நம்ம ஆத்துக்காரி என்ன சாமானியமானவளா? (நடையைத்திரும்பிப் பார்த்துக் கொண்டு மெதுவான தொனியுடன்) நான் விலக்கப்போனால் எனக்கும் இரண்டுவிழும். அந்தப்பெண்ணோ தாய்வீட்டுக்கு ஒரே பெண். தாய் தகப்பன்மார்கள் 15-வருஷம் சந்ததி இல்லாதிருந்து, பெண்ணைப்பெற்று, வெகு அருமையாகவும் செல்வமாகவும் வளர்த்தினார்கள். அப்பெண் மூலமாய் நமது சீமந்தபுத்திரன் நீலகண்டனுக்கும் கொஞ்சம் சொத்து சேருமென்ற எண்ணத்துடன் பெண் சிறியதாயிருந்தாலும் பாதகமில்லையென்று, சென்ற சித்திரை மாதத்தில் விவாகஞ் செய்துமுடித்தேன். பெண்ணின் தாய்தகப்பன்மார்கள் இருப்பது ஒரு காததூரத்திலுள்ள சேந்தமங்கலம் என்ற ஊராதலால் பெண்ணைப் பார்க்க வேணுமென்று அடிக்கடி வந்து 2, 3 நாள்களிருந்துவிட்டுப்போகிறார்கள். பெண் ருதுவாகிறவரையில் தங்களிடமிருக்கட்டுமென்று பலதடவைகளில் நல்ல வார்த்தைகள்சொல்லிக் கேட்டும், அதிசயமாய் நாட்டுப்பெண்ணையடைந்த இந்த நீலி அனுப்பமாட்டேனென்று சொல்லிவிட்டாள். அவர்களோ சொல்ல முடியாத மனஸ்தாபத்துடன் கோபித்துக் கொண்டு போய்விட்டார்கள்.

இவள் பெண்ணையாவது பிரியமாகவைத்துக் கொண்டிருக்கிறாளோ வென்றால் அதுவுமில்லை. நின்றால் குற்றம், எழுந்தால் குற்றம். என்ன செய்யுமிளங்குழந்தை! இன்னம் 6-வயது நிறையவில்லை.

இவள் இப்படி அக்குழந்தையை அடிக்கிறதைக் கண்டால், நீலகண்டன் கண்ணுங்கண்ணீருமாய் வெளியே போய்விடுகிறான். அவனுக்கு இன்னம் 12-வயதாகவில்லை. ஆசைக்காக 11-வயதிற்கே 5-வயதுப் பெண்ணை விவாகஞ்செய்வித்தேன். அந்தப் பெண்ணுக்கு புத்திவரும்படியாக பலநாள் பட்டினியும் போட்டாள், இரண்டுநாள் சூடும் போட்டாள், காலுக்கு முட்டியும் போட்டாள்; கம்பத்தில் கட்டியடித்தும்பார்த்தாள்; உபயோகமில்லை. அப்பெண்ணும் காரியஞ் செய்கிறதில்லையென்று சொல்லக்கூடவில்லை. தினப்படி எட்டுமாட்டுச்சாணியை ஏகமாய் வாரியெடுத்து முட்டை தட்டுகிறாள். தயிர் கடைந்து வெண்ணெய் எடுக்கிறாள். அரைமைல் தூரத்திலிருந்து பத்துக்குடம் தண்ணீர் கொண்டுவருகிறாள். வீடுவாசல் பெருக்கி மெழுகிக் கோலம் போடுகிறாள். இவைகளைவிட இன்ன மதிகமான வேலைசெய்ய அவளுக்கு என்ன வயதாய்விட்டது. எல்லாம் தலைவிதியென்று முதுர்தபண்டிதர் சொல்லி முடித்தார்.

பண்டிதரே! "விவாகேவித்திய நாசாய,
"சர்வனுசாய சோபனம்"

"என்பதை யறியமாட்டீரோ! ஒரு பெண்ணை விவாகஞ்செய்துகொள்வது இன்னதிற்கென்பதை யறிய வயதுவராத சிறு பிள்ளைகளுக்கும், புருஷனால் தனக்கு உண்டாகிறஇன்பமின்னதென்று அறியத்தகுந்த வயதாகாத பெண்குழந்தைகளுக்கும் விவாகஞ்செய்வதா

லென்ன உபயோகம்? இதையறியாது நடத்துவதாலன்றோ, நமது தேசத்தில் விதவைகள் விசேஷமாய் அதிகரித்தது. தங்கள் குமாரன் சிரஞ்சீவியாக இருக்கட்டும். "அநித்தியானி சரீராணி" என்று தங்களைப் போன்ற பெரியோர்கள் சொல்லுகிறபடி நீலகண்டன் இப்பொழுது காலகதியடைந்துவிட்டால், இன்னும் 6-வயதாகாத கைம்பெண்ணின் கதி என்ன? வைத்தியன் வீட்டில் வியாதியும், ஜோசியன் வீட்டில் விதவையும் அதிகமென்ற பழமொழியை நீரறியாதவரன்றே! சாராயக் குடி கெடுதலென்று தெரிந்தும், குடிக்கிறவனை மூடனென்று சொல்ல நீர் கூசுவீரோ? நீலகண்டனுக்கு சொத்து சேருமென்று விவாகஞ் செய்துவிட்டேனென்று சொன்னீரே? நான் சொன்னபடி நடந்தால் என்ன சொத்து சேரும்? நீர் சொன்னபடி நடந்துபோன விவாகத்தை தலைவிதிப் பிரகாரம் முடிந்ததென்று வைத்துக்கொள்வோம்! உமது சம்சாரம் அச்சிறுபெண்ணை வையலாம், திட்டலாம், தீராச் பசூடும் அடித்தாலுந்தகும். சூடு போட்டாளென்றும், கம்பத்தில் கட்டியடித்தாளென்றும், நீரே வாய்கூசாமல் சொல்லுகிறீரே! இவைகள் 'கிரிமினல்' குற்றமாகுமென்பதை யறியீரோ! என்னிடஞ் சொன்னதுபோல் வேறிடத்தில் சொல்லவேண்டாம். யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக்கொள்வதுபோல், உமது சம்சாரத்திற்கு நீரே முதல் சாக்ஷியாகி, ஜெயிலுக்கு அனுப்புவீர்போல் தோற்றுகிறதே! உமது சம்சாரம் செய்கிறது தப்பிதமென்று உமக்குத்தெரிந்தும் அவளையடக்க சக்தியற்றவராய், பயந்து, திரும்பித் திரும்பிப்பார்த்துக்கொண்டு சொல்லுகிறீரே! இதுவா புருஷத்தனம்! உமக்குப் பிறர் மரியாதை செய்யவேண்டுமென்று நீர் நினைத்தால், நீர் அவர்களை மரியாதையாய் நடத்தினாலன்றோ, உமக்கு மரியாதைகிடைக்கும். உமது மருமகளையும் சம்சாரத்தையும் நீரே 'அடி, அடீ' என்றும், 'போடி, வாடி' என்றுமழைத்தால், உம்மையவர்கள் எப்படி மரியாதை செய்வார்கள்? வாங்கோ, போங்கோ என்று அழையாத போதிலும், பூர்த்தியான பெயரைச்சொல்லி யழையுமே! "வாசமனையாளைப் பஞ்சணையில்" என்றபடி சயனக்கிரகத்தில் உமது சம்சாரத்தை அடி, பிடி என்று சொல்வதை யார்தடுக்கவல்லவர்! நீர் சொல்லுகிறபடி நானும் உமது சம்சாரத்தையாவது, நாட்டுப் பெண்ணையாவது, 'அடி' யென்று கூப்பிட்டால் உமக்குச் சம்மதமாகுமா? அல்லது அவர்கள் தான் சும்மா இருப்பார்களா?

"ஒருநாள் எமக்கு கோயமுத்தூரில் இஷ்டரான ஒரு பிராமணவக்கீல் வீட்டிற்குப் போயிருந்தோம். அவர் உட்கார்ந்திருந்த மண்டபமானது, மேஜை, நாற்காலி, அலமாரி முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு வெகு அழகாகவும், சுத்தமாகவுமிருந்தது. வேளாளர்களான சில கக்ஷிக்காரர்களுமிருந்தார்கள். வக்கீலானவர் தனது ஆசனத்திலிருந்துகொண்டே இரண்டு, மூன்று தடவை வாயிலிருந்த எச்சிலை சமீபத்தில் துப்பிக்கொண்டார். இவர் இது எதற்காகக் கைகொண்டாரோ அறியோம். இவற்றைக் கண்ட கக்ஷிக்காரரில் தாம்பூலமும், புகையிலையும் வாயில்போட்டு மென்றுக்கொண்டிருந்த ஒருவன் தான் உட்கார்ந்திருந்த பெஞ்சியினடியில் 'புரிச்' என்று துப்பினான். அது இரத்த வர்ணமாய் ஏறக்குறைய ஒரு சதுர அடியகலம் பாவிற்று. வக்கீல் கோபங்கொண்டு மூர்க்கமாய் 'என்னவோய் இங்கேயே இப்படித்துப்பினீர்?' என்று அதட்டிக்கேட்க கக்ஷிக்காரன் வெகுபயந்து, 'சாமிகளே மன்னிக்கவேணும், தாங்களும் வெற்றிலை போட்டுக்கொண்டு துப்பினால் இப்படித்தானிருக்கும்' என்றனன். வக்கில் தகுந்த மறுமொழி சொல்ல சக்தியற்றவராய் மௌனம் சாதித்து, அந்நாள் முதல் தம் குற்றத்தையறிந்துகொண்டு நடந்தனர்.

"அப்படியே நீரும் உமது குற்றத்தை நீக்கிப் பிறருக்காகவாவது நல்லமரியாதையானவழு[illegible] நடந்து காட்டுமே! அப்பெண்ணை சங்கம் புதையாண்டியிடத்தில் பிடித்துக்கொடுக்கிறேனென்று பயமுறுத்துகிறீரே! அதுயார்?" என்றுகேட்க.

பண்டிதர், சும்மா விளையாட்டாக இவ்வூரில் சொல்வது வழக்கந்தானென்று மறுமொழி புகன்றார்.

"விளையாட்டுக்காக இல்லாததை யுண்டுபண்ணி இச்சிறு வயதிலேயே பயத்தையும், திகிலையும் குழந்தைகளுக்கு ஏன் உண்டுபண்ணுகிறீர்? இக்காலத்தில் பெண்களைப் பேய் பிடித்துக்கொண்டதென்று சொல்வதெல்லாம் இக்கெட்டவழக்கத்தால் வருகிறதன்றோ? நமது குழந்தைகளைப் பேடிகளாக்குவதற்கு இதைவிட வேறு வேண்டுமோ?" என்று சொல்லிவிட்டு எழுந்துவிட்டான் பீமன்.

பிறகு நாட்டுப்பெண் வேதம்மாளை மாமியார் வருத்தும்மாதிரியைக் கொஞ்சமும் சம்மதியாத முகுந்தபண்டிதர், 'ஏன் நமது குமாரனுக்கு இச்சிறு வயதில் விவாகஞ்செய்தோம்! வயது வந்தபிறகு செய்திருந்தால், தாயார் தன் பெண்சாதியைச்செய்கிற கஷ்டங்களைப் பொறுக்கமாட்டானன்றோ?' என்றெண்ணி, தாம் செய்தது அவிவேகமென்றறிந்து உள்ளமுருகுவர். இவர் தன் சம்சாரத்தை இவ்விஷயத்தில் அதட்டியடக்கி, மருமகளை ஆதரணை செய்யத்தகுந்த துணிகரமில்லாதவரானபோதிலும், சும்மாவிருக்க முடியவில்லை. அப்பெண்ணையவள் நடத்துகிற விஷயத்தில், தானும் அனுசரணையுள்ளவராக நடித்து, தன் மனைவியை சந்தோஷப்படுத்தவேண்டியிருந்தது. இதற்காக அடிக்கடி அப்பெண்ணை தன் சம்சாரம் கண்டிக்கும்பொழுதெல்லாம் தானும் 'சங்கம் புதையாண்டியிடம் பிடித்துக்கொடுத்துவிடு' வென்று பயமுறுத்துவார்.

சாதாரணமாய் ஒவ்வொரு ஊரிலும் பல வீடுகளில் குழந்தைகள் ஏதாவது விஷமங்கள் செய்தால், பெரியவர்கள் அக்குழந்தைகளுக்கு ஒரு பயத்தை யுண்டுபண்ணவேண்டுமென்ற கருத்துள்ளவர்களாய் 'பூச்சாண்டி வருகிறான்!' 'ஜெலீத்தாராம் வந்துவிட்டான்', என்று சொல்லி பயமுறுத்திவைப்பது சகஜம் தானே! கோயமுத்தூரில் 'ஜெலீத்தாராம்' என்ற ஒரு பிச்சைக்கார பைராகியுண்டு. இவன் வந்துவிட்டானென்று சொன்னாற் போதும், சிறு பிள்ளைகள் நமனைக்கண்டவுயிர்போல் தியங்குவார்கள்.

இவ்விதம் இக்ராமகிரிப்பேட்டையில் சங்கம் புதையாண்டியென்று ஒருவனுண்டென்றும், அவன் ஒரு சங்கம்புதரில் வசிக்கப்பட்ட மந்திரவாதி என்பதாகவும், விகார ரூபத்துடனிருப்பதாகவும் சொல்லக்கேள்வியன்றி நேரில் அறிந்தவர் சொற்பமாயினும், ஊரில் இவன் பெயரைச்சொல்லி, சிறு பிள்ளைகளை பயப்படுத்தாதவரில்லை. இவன் பெயரைச் சொன்னவுடன் சிறுபிள்ளைகளுக்கு உயிர் போய்வரும். பிள்ளைகளை பயங்காளிகளாக்குவதற்கு இதைவிட வேறு மருந்தும் வேண்டுமோ! ஒருநாள் நமது வேதம் தெருவில் விளையாடிக்கொண்டிருக்கவும் முகுந்தபண்டிதர் திண்ணையிலுட்கார்ந்து 'அடிபெண்ணே சங்கம் புதையாண்டியண்டை 'பிடித்துக்கொடுத்துவிடுவேன் ஓடிப்போடி" யென்று சொல்லவும், அதேசமயத்தில் சங்கம் புதையாண்டி உருமாறித் தெருவில் போகவும், ஏது இக்கிழவர், இச்சிறு பெண்ணை நமக்குத் கொடுக்க பிரியமுள்ளவராகவிருக்கிறார் என்று பலவாறு எண்ணி, நாமாக இவரைக்கேட்டால கொடுப்பாரோ, அல்லது மறுப்பாரோ, எப்படியானுமாகட்டுமென்று சற்று மறைந்திருந்து, இவர் ஏதோ காரியமாக வீட்டிற்குட்செல்லவும், பெண்ணின் பக்கத்தில்வந்து அம்மணி உன்தாயார் உன்னை ஒருவருக்குந் தெரியாமல் எடுத்துக்கொண்டு வரச்சொன்னாளென்பதாகச் சொல்லி, சில பக்ஷணங்களைக்கையில் கொடுத்து முச்சந்திவேளையில் பெண்ணைத் தூக்கித் தோளில்வைத்துக்கொண்டு நடந்துவிட்டான் சவாரி.

வேக்வேகென்று வழிநடந்து ஆறுமைல் தூரத்திலுள்ள தன் சங்கம்புதரில் நுழைந்தான். அங்கு ஒரு திவ்வியமான சிறிய அரண்மனையொன்று காணப்பட்டது. அதைச்சுற்றி பலவித அபூர்வமான புஷ்பச்செடிகள் வைத்து வெகு மனோகரமாயிருந்தது. அரண்மனை தலைவாசலண்டை விதம் விதமான பச்சைக்கிளி, பஞ்சவர்ணக்கிளி, மைனா, காடை, கௌதாரி முதலிய பக்ஷிஜாதிகள் அதற்குத் தக்கவிதமான கூண்டுகளிலடைக்கப்பட்டு சிங்காரமாகக் கத்திக்கொண்டிருந்தன. ஒரு புறத்தில் புள்ளிமானும் மற்றொருபுறத்தில் ஒரு கருங்குரங்கும், அடுத்த பின்புறத்தில் இரண்டு அழகான கறவைப்பசுக்களும் கட்டப்பட்டிருந்தன. இந்த வீட்டுக்கு வேலியிட்டது போல் நாலுபுறமும் சங்கம்புதர் படர்ந்திருந்தது. வீட்டின் முன் அறையில் சில நாற்காலிகளமைக்கப்பட்டும், சுவரில் வெகுநேர்த்தியான கண்ணாடிப்படங்கள் தூக்கப்பட்டும், அலமாரிகளில் அநேக விநோதப்பொருள்கள் வைக்கப்பட்டுமிருந்தது. அடுத்த அறையில் சில போஜன பாத்திரங்கள் வைக்கப்பட்டிருந்தன. இதற்கு இரண்டு புறத்திலும் இரண்டு அறைகள் காணப்பட்டன. அதிலொன்றில் எல்லாபோஜன பதார்த்தங்களும் பாத்திரங்களில் நிரப்பிவைக்கப்பட்டிருந்தது. மற்றொன்றில் படுக்கைசாமான்கள் கட்டிலின்பேரில் போடப்பட்டும், சுவரில் இரண்டு நிலைக்கண்ணாடிகளும், [illegible] ங்களும் மாட்டப்பட்டிருந்தது. சமையலறையும் ஸ்நானவறையும் பின்புறத்தில் கட்டப்பட்டிருந்தன. சங்கம்புதராகிய வேலிக்கடுத்தோடிக்கொண்டிருந்த காற்றிலிருந்து, கால்வாய் வெட்டி ஜலம் கொண்டுவரப்பட்டிருந்தது. சுருங்கச்சொல்லுங்கால் ஆண்டிவீடு போலன்றி அரசன் மாளிகை போற்றோன்றிற்று. எக்காரணத்தினாலாவது ஜலம் வருவதற்குத்தடைபட்டால், நமது வேதாம்பாள் தானகவே கால்வாயைப்பற்றிப் போய் தண்ணீரைத் திருப்பிக்கொண்டுவருவாள். என் தாயாரிடத்தில் அழைத்துக்கொண்டுபோய் விடுவதாகச்சொன்னாயே, அவர்களெங்கே என்று வேதம் கேட்டபொழுதெல்லாம், சங்கம்புதையாண்டி, அவர்கள் சீக்கிரத்தில் வருவார்கள் என்று சொல்லுவான். தவிர, இவன்தான் சங்கம்புதையாண்டி என்பதையும் வேதமறியாமற் காலங்கழித்தாள்.

இவ்விடத்தில் இவள் ஏழுவருஷகாலம், விசனமென்பதையறியாதவளாய் வளர்ந்தனள். இவளுக்கு வேலைசெய்ய நான்கு சிறு பிள்ளைகளுமிருந்தார்கள். சங்கம்புதையாண்டி காலையில் சமையல் செய்து இப்பெண்ணுக்கும் மற்றப்பிள்ளைகளுக்கு மிட்டு தானுமுண்டு 10-மணிக்கு வெளியேபோய் சாயந்திரம் 6-மணிக்கு வீடுவருவான். வேதத்திற்கு தினந்தப்பாமல் வேண்டிய கனிவர்க்கங்களும், தின்பண்டங்களும், விதம் விதமாய்க்கொண்டு வந்து கொடுப்பான். புருடன் வீட்டில் பட்ட கஷ்டங்களை நினைத்து விசனப்பட்டாளேயன்றி, தன்னைத் தனியாகக் கொண்டுவந்து வைத்திருப்பதற்காக விசனப்பட்டவளல்ல. அதிக ஆதரவாய் யாதொரு குறைவுமின்றி வளர்க்கப்பட்டு வந்தபடியால், சுபலக்ஷணங்களமைந்து வெகு அழகமைந்த கன்னிகையானாள். சங்கம்புதையாண்டி கல்விசற்றவனும், வைத்தியத்திலும், மாந்திரீகத்திலும் பூர்ண பாண்டித்திய முள்ளவனுமாதலால், அவனிடத்தில் பழகிய வேதமும்

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினுமவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவரெனுமிது வழக்கே
உருண்டவாய்தோறும் பொன்னுருளுரைத்துரைத்
இருண்டகல்லையுந் தன்னிறமாக்கின விரதம்." [தோடி

என்றபடி படிப்பு, வைத்தியம், மாந்திரீகம் முதலியவைகளில் வெகு சீக்கிரத்தில் தேறினள். இவளை சங்கம்புதையாண்டி எடுத்துக்கொண்டு போனது, இவளைவளர்த்தி, தான் பெண்டுசெய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடனன்று. ஆனல், தன் வீட்டுக்கு ஒரு பெண்ணிருப்பது அழகென்று நினைத்தே,

"THE CHILDREN'S DAY" CELEBRATION OF THE VICEROY'S BIRTHDAY.

The King-Emperor as Colonel-in-Chief of King George's Own Lancers (Indian Army.)
மாட்சிமைதங்கிய நமது சக்ரவர்த்தி
(இந்திய ராணுவ உடையில்.)

H. E. LORD HARDINGE WITH FAMILY.
லார்ட் ஹார்டிஞ்ச் அவர்களும் அவருடைய குடும்பமும்.

SUPPLEMENT TO "THE CHILDREN'S DAY" FESTIVAL NUMBER.

The Faith That Made a Nation Whole.

"I give you the message of Faith"—*H. E. Lord Hardinge.*

INDIA'S ONE MESSAGE :
"PEACE AND GOOD WILL
BE UNTO THEE."

'India's Future':
'A Crown of Glory
to the British Nation'
and A Tower of Strength to the
Kingdom of God on Earth.

"DALAPANGALA":
"THE STRIVING STRUGGLING
MARCH OF CIVILISATION."

"EDUCATION IS AT BEST ONLY A PROCESS OF DEVELOPING WHAT HEREDITY HAS IMPLANTED IN THE MIND."

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it," But, *"Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : Aum

'New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEYA JAYATE. "Approved"

புத்தகம். 23.] ராக்ஷஸஸூ ஆனிமீ, 1915ஸூ ஜூன்மீ [சஞ்சிகை 3.

THE VIVEKA CHINTAMANI.

THE VIVEKACHINTAMANI.—This well-known journal has now entered on the 23rd year of its publication and the first number of the new volume enunciates the basic principle underlying the work of the Editor and his co-adjutors all these years, which is : "God helps those who help themselves." Dr. Duncan, who had intimately watched the work of the Editor, on his retirement, wrote to him to say : "Very few of your countrymen have taken up this question of religion and education with the conviction and fervour that you manifest."—The "Hindu," 12th June, 1915.

"The May number of this excellent Tamil Magazine deals with the Problem of Child Education and gives the new Educational Minister's views on the same. The other articles of interest are those on the new Minister of Education, Srimati Swarnakumari Devi (Mrs. Ghosal), the Pass of Thermopylæ, Proverbs as Aids to Child-Study, and a brief sketch of the History of India in verse suitable for school children to recite. There is also an article on the Excellence of Temple Worship, which is one of Auvaiyar's Sayings. The short story for the month deals with the evils of early marriage. We are glad to find the magazine is being well appreciated in educational circles."—*Ibid.* Among the numerous official opinions expressed on the merits of the magazine, the following by the Inspectress of Girls' Schools is typical of what others have said or are saying:—"The Inspectress considers the magazine, which has been converted into a school journal, suitable for use in all the Tamil Elementary Schools for girls, both under public and private management, and therefore requests that the (Inspecting) officers (of the circle) will be good enough to address the Presidents of Taluq Boards, the Chairmen of Municipal Councils and the correspondents of Aided Girls' Schools in their respective ranges to subscribe for copies of the journal and to see that every Tamil School in the circle is provided with one copy at least." The subscription to the journal is Rs. 4 for popular Edition and Rs. 5 for the School Edition on thick paper. The address of the journal is: "Lalitalaya, 19, Adam Street, Mylapore, Madras."

RACE CULTURE AND INDIVIDUAL CULTURE, OR EUGENICS AND EDUCATION.

"Eugenics is the science of race culture and advocates the practical application of the laws of heredity to the improvement of mankind, tending to the realisation of the greatest comfort. The social artifices like Sanitation, Education and other institutions endeavour to help the individual to develop the best in him by creating a suitable atmosphere..................

"A facetious critic has characterised our educational system as a process of cram and emetic; and considering the extremely mechanical form in which it is moulded, we have to regard that the comparison is by no means inappropriate. It is almost an admitted fact that education so far has failed to fulfil the high purpose at which it aims, *viz.*, the all-round efficiency of the race; and the failure is not to be attributed to any one cause in particular. An ideal scheme of education would regard with equal importance the qualifications of the teacher, the principles of methods, the suitability of subjects, and above all the character of the "stuff" on which these operate. We had pinned too much faith in the past to the transmuting or creative powers of these agencies, ignoring the fact that *education is at best only a process of developing what heredity has implanted in the mind*, but is utterly incapable of drawing out what is not already there, even in spite of honest endeavours...............

"...In the bringing up of a child, two factors count, *viz.*, the mental heritage and the circumstances of environment; and in appraising their relative importance, we incline in favour of the former. No matter how high the potential of any one of these factors, the result is nothing if the other factor is also nothing. The deeper we recognise the correctness of this view, the nearer we come to the solution of the problem, *viz.*, the interpretation of the educational ideas in the language of heredity.'—*Vide* for particulars *Sir Francis Galton's* book "Inheritance of Human Faculty.'—*From the Educational Review.*

THE EXTENSION OF LORD HARDINGE'S VICEROYALTY.

ANNOUNCEMENT BY H. E. LORD HARDINGE.

H. E. THE VICEROY'S MESSAGE.

Simla, June 1914.—"The Secretary of State has asked me to give publicity to the following announcement made yesterday afternoon by the Prime Minister in the House of Commons:—'Under normal circumstances Lord Hardinge of Penshurst's term of office as Viceroy and Governor-General of India would have terminated in November next, but His Majesty's Government recognising the great services which Lord Hardinge has rendered India and desiring to retain the advantage of his experience during the coming winter have requested him to remain until the end of March next. Lord Hardinge has readily consented to comply with our wishes and the King has been pleased to approve the arrangement. I am glad of the opportunity to express my sense of the public spirit which in spite of great strain of his labours and in face of heavy private sorrows has led Lord Hardinge to place his services unreservedly at our disposal."

While fulfilling the wishes of the Secretary of State in making public this announcement, I desire to say that while in the critical times through which the Empire is passing I feel that it is my bounden duty to fall in with the wishes of His Majesty's Government whatever they may be, it is with no light heart that I have agreed to this prolongation of the onerous responsibilities that fall to a Viceroy's lot but I do not forget that many of the Ruling Chiefs of India and many bodies representative of various communities and interests have given expression to a wish that the tenure of my office should be extended and the feeling that I have the friendly confidence of so many gives me courage to continue to fulfil my duties to the best of my ability and for the welfare of India and her people."

[illegible]தகம்-23.] [சஞ்சிகை-3.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

ராக்ஷஸ௵ ஆனி௴ } விவேக சிந்தாமணி { June-July 1915.

ESTABLISHED 1892

REGISTRAR ... MADRAS.

"பெற்றோர்கள் தாழுவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றோ மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்ந்த
யாச்சரிய மோதா னவர்க்கு."

அரசர் பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்சவர்கள்.

ஜூன்மீ 12உ சாயந்திரம் பிரதான மந்திரி மிஸ்டர் ஆஸ்க்வித் அவர்கள் பார்லிமெந்து காமன்ஸ் மஹாசபையில் கனம் பொருந்திய லார்ட் ஹார்டிஞ்சவர்களுடைய உத்தியோக நியமனகாலம் அடுத்த நவம்பர்மாசத்திலிருந்து மார்ச்சுமாசம் முடிவுவரையில் ஒத்திவைக்கப் பட்டிருக்கிறதாகவும் அவர் மந்திராலோசனை சபையார் வேண்டுகோளுக்கிணங்கி இன்னும் 5-மாசகாலம் தம்முடைய சொந்த சௌகரியத்தை கவனிக்காமல் பொதுஜன க்ஷேமத்தைக் கருதி இந்தியாவில் நீடித்திருக்கச் சம்மதித்திருப்பதற்காக மந்திரிகளெல்லாரும் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறார்களென்றும் அவருடைய பொதுநலப் பிரியத்தை ஸ்தோத்தரித்து அறிக்கை செய்தார். அந்த சமாசாரத்தை இந்தியா மந்திரியாகிய கனம் மிஸ்டர் ஆஸ்டின் சாம்பர்லேன் அவர்கள் அரசர் பிரதிநிதிக்குத் தந்திமூலமா யனுப்பி அது விவரத்தை இந்தியா மஹாஜனங்களுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டபடி கனம் லார்ட் ஹார்டிஞ்சவர்களும் அச்சமாசாரத்தைத் தெரிவித்து குறித்த 5-வருஷ கெடுவுக்குமேல் இன்னும் 5-மாசம் இருப்பது தனக்கு சொந்தத்தில் கஷ்டமாக விருப்பினும் பொதுஜனங்கள் எங்கும் கூட்டம் கூடி அவருடைய ஆளுகை 5-வருஷத்துக்குமேல் நீடித்திருக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டதால் அவர்களுடைய நம்பிக்கையிருக்கிற வரையில் தாம் பொது நலத்தை நாடிச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யத் தாமுலாகாதென்று மந்திராலோசனை சபையாருடைய வேண்டுகோளுக்கிணங்கி யிருக்கிறதாகவும், தம்மிடத்தில் நம்பிக்கை வைத்துத் தமது துரைத்தனத்தை அங்கீகாரம் செய்து பேசிய மஹாஜனங்களுக்குத் தாம் நன்றி கூறுவதாயும் சொல்லி எல்லாருக்கும் சமாச்சாரம் அனுப்பியிருக்கிறார். அவரனுப்பிய சமாச்சாரத்தை அப்படியே இங்கிலீஷில் இதற்கு முன்பக்கத்தில் அச்சிட்டிருக்கிறோம்.

RACE CULTURE AND INDIVIDUAL CULTURE, OR EUGENICS AND EDUCATION.

சமஷ்டி வியஷ்டி வித்யா சம்பத் சாதனம்.

"வித்தை" என்பது "வித்"=அறிதல் என்னும் தாதுவிலிருந்துண்டான பதம். அதன் அர்த்தம் அறிதலுக்கு அனுகுணமாயிருப்பது என்று சொல்லலாம். "சம்பத்" என்பது "ஆபத்" என்பதற்கு எதிர்மொழி. நிர்ப்பயமாக வசிப்பதற்கான பாக்கியம் என்பது அதன்பொருள். பயம் மூன்றுவிதமாய் வரத்தக்கது. அவை: (1) ஆதிபௌதிகம்,—பூதசம்பந்தமானவைகளாலுண்டாவது; இதுஸ்தூலகாரணமாயுள்ளது; (2) ஆதிதைவிகம்,-தைவிகசம்பந்தமானவைகளாலுண்டாவது; இது சூக்ஷ்மகாரணமாயுள்ளது; (3) அத்யாத்மிகம்

தனக்குட்டானேயிருந்துண்டாவது; இது ஆத்மகாரணமாயுள்ளது, அதாவது அவித்யா சம்பந்தத்தாலுண்டாவது. இம்மூன்றுவித பயங்களும் ஸ்தூல, சூக்ஷ்ம, காரணமாயுள்ள பிரகிருதி தர்மத்தின் காரியங்களாக விருக்கின்றன.

(1) ஸ்தூல காரணமான பயம் பூதபௌதிக சாஸ்திர ஞானசம்பத்தால் நீங்கும். இதையேதான் "Nature Study" என்றும் "Knowledge of Nature" என்றும் சொல்லுவர் மேலோர். இப்பொழுது நடந்துவரும் மஹாபார'த யுத்தத்தில் ஜெர்மானியர் ஒரு பக்கம், அவருக்கு எதிரிகளாயிருப்பவர்கள் ஒருபக்கம், இருதரத்தாரும் அவரவர்களுக்குத் தெரிந்த பூதபௌதிக ஞானவிசேஷத்தால் எதிரிகளையும் சண்டையில் சம்பந்தப்படாத சாமான்ய ஜனங்களையும் பயங்கொள்ளச் செய்துவருகிறார்கள். ஜெர்மானியர் விஷக்காற்றை உபயோகித்து எதிரிகள் படைகள் திக்குமுக்காடிப் போகச்செய்ததும், 23, 24 மைல் தூரத்துக்கப்பாலுள்ள பீரங்கியைக்கொண்டு டன்கர்க் (Dunkirk) பட்டணத்தைத் தகர்த்து நகரமாக்களை பயந்தோடச் செய்வதும் இதற்கு உதாரணமாம்.

(2) சூக்ஷ்மகாரணமானபயம் தைவிகஞானத்தால் நீங்கும். "தைவிகம்" என்பது "திவ்" என்னும் தாதுவிலிருந்துண்டான பதம். அதாவது ஜோதிமயமாயுள்ளது என்று அர்த்தம். இந்த ஜோதி, நேத்திரேந்திரியத்துக்குப் புலனாகாது. இந்திரியங்களை ஜயித்தவர்களான ஜிதேந்திரியர்களுடைய அறிவுக்கே யெட்டுவதாயிருக்கிறபடியால், இது சூக்ஷ்மலோக ஸம்பந்தமானதுபற்றி, "அதிஷ்டான தேவதை அல்லது தேவதாரூபம்" என்று சொல்லுவர். இது யோகஞானத்தால் சித்தவிருத்தி நிரோதம் செய்து மனதினுடைய சங்கல்ப விகல்பங்கள் இரண்டையும் நீக்கி அலையோய்ந்த சமுத்திரம் போலுள்ள மனதின் நிர்விகல்ப நிலையிலிருந்து ஆராயத்தக்கவர்களுக்கே சித்திக்கத்தக்கது. மனுஷபலம் கேவலம் ஸ்தூல சம்பந்தமானது. தைவிகபலமோ "ஜ்யோதிமனம்" என்று சொல்லும் தூயமன சம்பந்தமானது. தூயமனம் தூயஹிருதயமின்றி சித்திக்காதாதலால் ஸ்வயநயம் பாராட்டுகிறவர்களுக்கு தைவிகபலம் பூரணமாய் சித்திக்கமாட்டாது. சித்தித்தாலும் அநுகூலம்போலிருந்து பிரதிகூலம் விளைக்கும். இதற்கு ஜெர்மானியருடைய தந்திரமந்திர ஸ்தூலபலமெல்லாம் அவற்றிற்கு அதிஷ்டானமாயுள்ள தெய்விகபலமின்மையால் முதலில் அநுகூலம்போல் காட்டிப் பிரதிகூல ஹேதுவாய் மாறியிருப்பது உதாரணமாகும்.

(3) மூன்றாவதான அத்யாத்மிக காரணமான பயம் (தனக்குள் தானேயிருந்துண்டாவது) தன்னைத்தானறிவதாம் ஆத்மஞானத்தால் நீங்கும். இந்த பயம் நீங்கப் பெற்றவர்கள் ஆத்மரக்ஷைபெற்று ஆஸ்திகசித்தர்களாயிருந்து லோகரக்ஷார்த்தம் உழைக்க வல்லவர்களாகிறார்கள். ஏசுகிறிஸ்துவும் மற்றுமுள்ள இருஷிகள், ஞானிகள், அவதாரபுருஷர்கள் (*Saints, Sages and avatars*) இவர்களெல்லாரும் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களாவார்கள்.

வித்தையென்பது அறிவுக்குக் கருவியாயிருந்தும் மனதின் பயிர்ச்சியாகும். இந்த மனப்பயிர்ச்சியும் தேஹப்பயிர்ச்சியின்றிப் பூரணமாய் சித்திக்காது. ஆகையால் தேஹமனோ சுத்தமின்றி வித்யாப்பியாஸம் பலித்துப் பயனைத்தராது. வித்யாப்பியாஸம் என்றாலும் மனப்பழக்கம் என்றாலும் ஒன்றே. Concentration and assimilation என்று சொல்லும் ஏகாக்ரசித்த சுப்தியோடு, தைலதாரைபோல மனம் நினைத்தோர் நினைவுதானாகி, அந்த நினைவும் நினைத்தவிஷயமதாகி யிலங்கி, காண்பான், காட்சி, காண்பொருள் ஆகியமூன்றும் தானேயாகி "திரிபுடிஞானம்" என்று சொல்லும் அறிவின் மூன்றுபடியான இலக்ஷணங்களும் இலக்ஷியத்தன்னோடு அபேதமாய் ஒன்றுபட்டு

விளங்கக்காண்பதுதானே யோகசித்தி என்றும் "Inner Perception" என்றும் "Knowledge of Things *Per Se*" என்றும் பலவாறு வித்வான்களால் சொல்லப்பெறும். இதற்குத்தான் "மனத்தெளிவு" என்று சொல்வது. இந்த மனத்தெளிவு சித்திக்கப் பழகுவதுதானே வித்தியாப்பியாசத்தின் நோக்கமாகும் (Aim of Education). இந்த வித்தியாப்பியாசமும் சாதனசாதகமென இருவகைத்தான இலக்ஷணமுடையதாயிருக்கும். சாதனமென்பது (Environment) என்று சொல்லும் புறப்பொருளிலக்ஷணம். இத்தலைப்பின்கீழ் போதனாசிரியர் யோக்கியதாம்சமும் போதிக்கும் சாதனமுறையும் அடங்கும். இவற்றைத்தான் "Qualifications of the teacher and the principles of methods" என்று சுட்டிக்காட்டியுள்ளார் முகட்டில் அச்சிட்டிருக்கும் இங்கிலீஷ் குறிப்பில், மற்றிரண்டு இலக்ஷணங்களான "Suitability of the subjects and above all the character of the "stuff' on which these operate" என்று கூறியுள்ள இரண்டும் பக்குவமறிந்து போதித்தல், அதிகாரிலக்ஷணம் என்கிற தலைப்பிலமைந்து அகப்பொருளிலக்ஷணமாம் சாதகம் தானாகும்.

"சாதனமின்றிச் சாதிப்பாரில்லை." சாதகமின்றிச் சாதனமும் அமையப்பெறாது. இவ்விரண்டும் பொருந்தியிருந்தால் தான்பிள்ளைகளைத்தேறிப்பிழைக்க வழியுண்டாகும். இதைத்தான் இங்கிலீஷ் முகட்டில் கடைசியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். அது மிகவும் முக்கியாம்சமாக இருப்பதுபற்றி அதனையே மீண்டும் இங்கெடுத்தச்சிட்டுக்காட்டுகிறோம்.

"In the bringing up of the child two factors count, *viz*, the mental heritage (அகப்பொருளிலக்ஷணமான சாதகம்) and the circumstances of environment (புறப்பொருளிலக்ஷணமான சாதனம்); இவற்றில் "சாதகமின்றிச் சாதனமமையா" தாதலால், அதையே மேலாக மதிப்பர் மேலோர். ஆயினும் "சாதனமின்றிச்சாதிப்பாரில்லை" யாதலால், என்னதான் மேலான சாதகம் அமையப்பெற்றிருப்பினும் சாதனமின்றி அது சாதிக்கத்தக்கதாகாது. இதையே இங்கிலீஷிலும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

ஸர் ப்ரான்ஸிஸ காலடன் (Sir Francis Galton) என்பவர் எழுதியிருக்கும் "பாரம்பரிய மனோசக்தி"—"Inheritance of Human Faculty" என்னும் புஸ்தகத்தில் இந்த உண்மைகளைப்பற்றி அவர் நன்றாக விளங்க எழுதியிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. இந்த உண்மைகள் ஸநாதநமாக (எப்பொழுதும் உள்ளவையாக) விருப்பதால் மேற்றிசையாரில் அவர் நூதனமாயிதை யுணர்ந்து உணர்த்தினாராயிருப்பினும் பிராசீன வித்தையில்சேர்ந்த இந்த உண்மைகள் "வேதம் அநாதி" யென்றது போல் காலவரையறைக்குள்பட்டதாயின்றி எப்பொழுதும் அகக்கண் பார்வையுள்ளவர்களுக்கு விளங்குவதாயிருந்து வந்திருக்கின்றன.

இக்காலத்துப் பள்ளிப் படிப்பைப்பற்றி ஒருவர் சொல்லியிருப்பதை இங்கிலீஷ் முகட்டில் காணலாம். அவர் இந்தப் படிப்பை "A process of cram and emetic"—உள்ளுக்குள் திணிப்பதும் வெளிப்பட வாந்தி செய்வதுமான முறைக் கொப்பாயிருக்கிறதென்று உவமை கூறியிருக்கிறார். இந்த உவமை உண்மையென்று போதகராயிருக்கும் ஒருவர் ஒப்புக்கொண்டு அதை உறுதியாகக் கூறியிருக்கிறார். "பாலைப் புகட்டலாம் பாக்கியத்தைப் புகட்டலாமா?" என்றொரு பழமொழியுண்டு. வித்தியாசம்பத்து பால் புகட்டுவது ('போட்டுவது') போல் புகட்டத்தக்கதல்லவென்பது ஸர்வஸம்மதமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. அப்படியிருந்தும் இக்காலத்தில் பள்ளிக்கூடங்களில் படிப்பைப் "புகட்டியே" வருகிறார்கள். பரீக்ஷை காலத்தில் அதை வெளிப்பட வாந்தி பண்ணுவோன் பரீக்ஷையில் தேறினவனாகிப் பின்னால் "வித்வத்" பட்டம் பெறுவானாகிறான். இந்த "வித்

வத்" பட்டங்கள் என்ன பிரயோசனத்தைத் தரும்? இவ்விப்ரயோசன மானவையாக விருக்கிறதென்றே இதான புத்தியுள்ளோர் எல்லாரும் சொல்லி வருகிறார்கள். இதற்குக் காரணம் என்னவாயினும் "என்னைச் செலவே யன்றி பின்னை பிழைப்பது பூஜ்யம்தான்" என்கிற வசனத்துக்கு இலக்கா யிருக்கிறது இக்காலத்து பள்ளிப் படிப்பு என்கிறார், இது வாஸ்தவம்தானே.

மனிதன் (வியஷ்டிபாவத்தில்) முன்னுக்கு வருவதெல்லாம் சமஷ்டிபாவத்தில் தேறித்தெளிந்தவனாக வென்றேயன்றி வேறு எதற்குமல்ல. பிள்ளையாண்டான் படித்து பரீக்ஷையிற்றேறிப் பெற்றோர் மனமகிழ வரசொல்லம் நிரம்ப வாங்கிக்கொண்டு இவனைத்தேடி வாழ்க்கைப்பட்டவள் குடிதாழ, பூனை குட்டிபோடுவதுபோல் சில குழந்தைகளைப் பிஞ்சில் பழுத்த வம்பல்வடுபோல் பெற்றுவிட்டு தப்புக்கெட்ட ஜீவனம் செய்து தானும் சுகப்படாமல் தன் மனைவிமக்களும் சுகப்படாமல் உண்டு கொழுத்தோ அதற்கும் வழியின்றி இளைத்தோ உழவு மாடுபோல் ஜீவனம் செய்து வருவது படிப்பின் பயனில்லை. இவ்வித வியஷ்டிபாவ ஜீவனமுறையால் சமஷ்டிசேதன சௌக்கியத்துக்கு எத்தாலும் குறைவேயன்றி நிறைவொருக்காலும் உண்டாகமாட்டாது.

ஆதலால் சமஷ்டி சேதனவிர்த்திக்கு அனுகுணமான பலனை யளிக்கும்படிப்பே வித்யாம்சத்தில் சேர்ந்ததாகும். இந்த வித்யாகலைக்கு "Eugenics" என்று நவீன பேர் கொடுத்து மேற்றிசையில் வித்வத் சிரேஷ்டர்களாயுள்ளவர்கள் இந்த கலைக்ஞானம் விர்த்தியாகவேண்டுமென்று உழைத்து வருகிறார்கள். தற்கால நாகரிக படாடோபங்களுக்கின்றியமையாத வியஷ்டிபாவ ஜீவன முறையானது சமஷ்டிபாவ சேதன விர்த்திக்கு முற்றும் பிரதிகூலமாயிருக்கிறதுபற்றி ஜனசமூகங்கள் வரவர சிற்றின்பங்களை நாடிப் பேரின்ப வாழ்வை யிழக்கு சமஷ்டி சேதனக்ஷயத்துக்குக் காரணமாயிருக்கிறதை யுணர்ந்து உள்ளுறச் சிந்தித்து அதன் உண்மைதேர்ந்தவர்கள் தாங்கள் உணர்ந்ததை உணர்த்த முயற்சித்து வருகிறார்கள். அவர்களுக்கு நூதனமாயிருப்பது பிராசீனமான நமக்குப் புராதனமாயும் நமது இருஷிகள், ஞானிகள், அவதார புருஷர்கள் என்றென்றைக்கும் உள்ளதாக உணர்ந்து உணர்த்திய பூர்விக சம்பிரதாயமாயுமிருக்கிறது.

பூர்விக சம்பிரதாயம் என்றால் புராதனமாயுள்ள சத்பழக்கம் என்று அருத்தம். அந்த சம்பிரதாயத்தின் வழி இரண்டொரு தலைமுறை சிறுவர்கள் நவீனவழிபற்றி நவநாகரிகம் கொண்டாடி வருவதால் அழிந்து போகாது. பல்லாயிர வருஷங்களாகச் சமஷ்டிசேதன விர்த்தியில் ஈடுபட்டு ஜாதிவர்ணாச்ரம தர்மங்களாக ஏற்பட்டு உறம்பெற்ற சமஷ்டி வித்யா வாசனை (Race culture) வியஷ்டி பாவத்தில் ஒரு சாரார் முறை பிறழ்ந்து நடந்து வருவதால் வலி குறைந்து வாசனை கெட்டுப்போகாது. ஆகையால் இந்தப் பூர்வ வாசனை நமது (Race culture) சமஷ்டி சேதன விர்த்தியாம்சமாயிருக்கும்போது தானே நாம் உண்மைவழிப்பட்டு ஸ்தூல, சூக்ஷ்ம, காரண மூன்றிலும் கடைத்தேறி உய்யும் வழியுணர்ந்து அதுபற்றி நடக்கவேண்டும். இதற்குத் தற்கால வித்யாசாலைகள் அனுகுணமாக விருக்கவேண்டுமென்பதே இந்தியா கவர்ன்மெண்டாருடைய நோக்கமும் முயற்சியுமாயிருக்கிறது. இந்த நோக்கமும் முயற்சியும் நன்கு விள[illegible] வேண்டுமென்றே ஸர் சங்கரன் நாயர் அவ[illegible]ளைப்போன்ற இந்திய சிரேஷ்டரை வித்யாமந்திரியாகத் தெரிந்தெடுத்து நியமித்திருக்கிறார்கள். அவர்களுடைய நல்லெண்ணம் நிறைவேற சத்துக்களெல்லாரும் சாதகபுருஷர்களாயிருந்து சாதனந்தேடிச் சாதிக்கப்பிரயாசைப் படவேண்டும்.

"INDIA AND THE WAR."

OPPORTUNE HELP FROM INDIA.

(By Sir Francis E. Younghusband, K. C. I. E.)

இந்தியாவும் யுத்தமும்.

உற்றவிடத்துதவி.

Speaking of the opportune arrival of the Indian troops in France, Sir Francis Younghusband, K. C. I. E., in his lecture on 'India and the War" delivered under the auspices of the Royal Colonial Institute, on May 11th, said: "A year ago it would have been thought impossible. Ten thousand troops had been sent from India to Natal in the South African War, but no one would have supposed that as many as 70,000 could have been sent as far away as to France. The specially satisfactory point to note is that they reached the fighting line in the very nick of time when they were most urgently needed. They arrived when the Germans, foiled in their rush to Paris, were making their tremendous lunge at Calais. Just at the moment when our line, thin to breaking point had to hold back the incessant and terrific onslaught of the Germans, this contingent of troops from India came upon the scene, and in their first serious action, on October 28, carried the village of Neuve Chapelle, since become so famous. Had we not been able to bring up these reinforcements from India, had our position there been so precarious that we could not afford to take them away and *a fortiori* had we been under necessity to send out more British troops to strengthen our position in India, then in all probability our [illegible] Flanders would not have been able to [illegible] German onrush, and our brave little army would have been swept off the Continent. That Indians were able to help the French, the Belgians, and ourselves in stopping a blow which the Germans had prepared for years is a thing of which they may be proud, and for which we should always be grateful to them."

ஸர் ப்ரான்ஸிஸ் யங்ஹஸ்பண்ட், கெ. ஸி. ஐ. இ. அவர்கள் இந்தியாவில் துரைத்தன நிர்வாகம் செய்து பெயர் பெற்றவர். இவர் சென்ற மேமீ 11உ செவ்வாய்க்கிழமையன்று லண்டன் ராயல் கலனியல் இன்ஸ்டிடியூட் சபையாரின் ஆதரவில் "இந்தியாவும் யுத்தமும்" என்னும் விஷயமாய் ஒரு வியாஸம் எழுதி வாசித்தார். அப்பொழுது பார்லி [illegible] சார்ல்ஸ் இ. ஹாப்ஹௌஸ்" அவர்கள் அக்கிராசனம் வகித்து இந்தியர்கள் எவ்வளவு ஊக்கத்தோடும் உருக்கத்தோடும் ராஜ விசுவாஸம் காட்டிச் சண்டை போட்டு வருகிறார்கள் என்பதை ரூபிக்க சண்டைமுகத்திலுள்ள இந்தியன் ஆபிஸர் ஒருவர் காயம்பட்டு ஆஸ்பத்திரியிலிருந்து அவருக்கு எழுதின கடிதமொன்றை வாசித்துக் காட்டினார். அதில் அவருடைய கடமையெல்லாம் அரசன் வெற்றி பெறத் தன் உடலைக்கொடுத்துச் சண்டை செய்யவேண்டியதொன்றே யென்றும் அந்தக் காரியம்மட்டும் நிறைவேறி விட்டால் தான் காயம்பட்டுக் கிடந்தாலும் போர்முகத்தில் மடிந்து வீர சுவர்க்கம் சேர்ந்தாலும் அதைப் பற்றி அவருக்கு விசாரமில்லை யென்று எழுதியிருந்தார்.

ஸர் ப்ரான்ஸிஸ் யங்ஹஸ்பண்ட் அவர்கள் இந்தியா ஜனுவங்கள் உற்ற விடத்துதவியாக வந்து ஆதரவு அளித்ததைப்பற்றி வெகு உருக்கமாகப் பேசினார். ஒரு வருஷத்துக்கு முன்னால் இந்திய ஜானுவங்கள் ஐரோப்பிய யுத்தத்தில் வந்து உதவி செய்வது முடியாத காரியமென்று நினைத்திருப்பார்கள். தென் ஆப்ரிகாவில் நடந்த யுத்தத்திற்கு 10-ஆயிரம் துருப்புகள் இந்தியாவிலிருந்து நட்டாலுக்கு அனுப்பப்பட்டன. ஆனால் இப்பொழுது நடக்கும் பாரதப்போருக்கு 70-ஆயிரம் துருப்புகள் இந்தியாவிலிருந்து வந்திருக்கின்றன. இதில் ஒரு விசேஷ மென்னவெனில் அவர்கள் சண்டைமுகத்தில் உற்றவிடத்

துதவியாக நல்ல சமயத்துக்கு வந்து சேர்ந்தார்களே அது தான் பெரிது என்றார். ஜெர்மானியர்கள் பாரிஸைக் கைப்பற்றச் செய்த முயற்சி பயன்படாதொழிய ஆவேசம் கொண்டு காலே (Calais) பட்டணத்தைப் பிடித்துக்கொண்டு அது மூலமாக இங்கிலாந்தைத் தாக்கப் பெருமுயற்சிசெய்து வந்தார்கள். அந்த சமயம் பிரிடிஷ் சைனியம் சண்டைமுகத்தில் தேய்ந்து எதிரிக்கு ஈடுகொடுத்து நிற்பது கஷ்டமாகவிருந்தது. அந்த சமயத்தில் இந்தியராணுவங்கள் சமயசஞ்சீவியாக வந்து சேர்ந்து ஜெர்மானியர்களையெதிர்த்து நியூவ்சாபெல் சண்டையில் அவர்களைப் புறங்காட்டி யோடும்படிச் செய்தார்கள். இது அக்டோபர்மீ 28உயில் சம்பவித்தது. மார்ன் சண்டையைவிட நியூவ் சாபெல் (Neuve Chapelle) கிராமத்திடத்தில் நடந்த சண்டை ஒருவிதத்தில் மிகவும் விசேஷ பிரக்யாதி பெற்றதாய்விட்டது. மார்ன்நதி தீரத்தில் நடந்த சண்டையினால் ஜெர்மானியார் பெருவெள்ளம் போல் எல்லாவற்றையும் அவர்கள் சைனிய பலத்தின் முன் துரத்தியடித்து பாரிஸ் நகரை பிடிக்க விருந்தது விருதா யத்தனமாக மாறியது. நியூவ்சாபெல் சண்டையினால் அவர்கள் காலே (Calais) பட்டணத்தைப் பிடித்துக்கொண்டு அங்கிருந்து இங்கிலாந்தைத் தாக்கச் செய்த யத்தனம் பலிக்காது போயிற்று. இந்தியா அனுப்பிய இராணுவங்கள் சமயசஞ்சீவியாக வந்துதித்து இந்தப் பேருதவி செய்ததற்காக பிரிடிஷார் இந்தியர்க்கு என்றென்றைக்கும் நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்று அவர் சொன்னார். அவர்கள்மட்டும் அப்பொழுது வந்திராவிட்டால், ஜெர்மானியர் 'காலே' பட்டணத்தைப் பிடித்துக்கொண்டு அங்கேயுள்ள மலைக்குன்றுகளின்மேல் அவர்களுடைய பெரிய "லாங்ரேஞ்சு" பீரங்கிகளை யேற்றி 23, 24-மைல் தூரத்துக்கப்பாலுள்ள டன்கர்க் பட்டணத்தை அவர்கள் அப்பொழுது தகர்த்து வருவது போல் இங்கிலாந்திலுள்ள டோவர் பட்டணத்தைத்தகர்த்து டோவர் ஜலசந்தியில் கப்பல் போகாதபடி நன்றாக அதை வசப்படுத்திக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட அபாயம் நேராமல் காத்தது இந்தியராணுவங்கள் சமயசஞ்சீவியாக யுத்தகளத்தில் தோன்றி எதிரிகளை முறியடித்தோடச் செய்ததனால் வாய்த்ததென்று நன்றாக விளங்கவெடுத்துச் சொல்லிப் பிரசங்கித்தார். இந்தியராணுவ உதவிமட்டும் அப்படி சமயசஞ்சீவியாக வந்துதித்து உற்றவிடத்துதவி செய்திராவிட்டால் பிரிடிஷ் சைனியங்கள் ஐரோப்பா கண்டத்திலிருந்து சண்டைசெய்ய முடியாதபடி அவைகளை துடைத்தொழித்திருப்பார்கள் ஜெர்மனியர். அவ்வளவு ஆக்குரோஷத்தோடு அவர்கள் பிரிடிஷ் சைனியங்களையெதிர்த்து பிரிடிஷ் நாட்டைத் தாக்கமுயற்சித்தார்கள். ஜெர்மானியர் பலவருஷங்களாகச் சிந்தித்து அதற்கு வேண்டிய ஆயுதங்களெல்லாம் முன்யோசனையோடு செய்தும் கடைசியில் அவர்கள் உத்தேசத்தை நிறைவேற்றி விடுவார்கள் போலிருந்த சமயத்தில் இந்திய துருப்புகள் சமய சஞ்சீவியாக அனேக ஆயிரம் மைல்கள் தூரம் கடந்து வந்துதித்து எதிரிகள்செய்த பகீரதப் பிரயத்தனமெல்லாம் பலிக்காதபடிச் செய்து பிரிடிஷாருக்கும், ப்ரெஞ்சுக்காரர்களுக்கும் பெல்ஜியம் தேசத்தாருக்கும், உற்றவிடத் துதவியாயிருந்துபகரித்ததைப் பற்றி அவர்கள் பெருமைப் பட்டுக்கொள்ள காரணமிருக்கிறதென்றும் அவர்கள் செய்த இந்தப் பேருதவிக்காக நாம் (பிரிடிஷார்) அவர்களுக்கு எப்போதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோமென்றும் சொன்னார்.

THE "CHILDREN'S DAY" CELEBRATION OF THE VICEROY'S BIRTHDAY.

"ஹார்டிஞ்சு ஜயந்தி" யென்னும் பாலர் திருவிழாக் கொண்டாட்டம்.

லார்ட் ஹார்டிஞ்சு அவர்கள் இவ்வருஷம் நவம்பர்மீ இந்தியாவை விட்டுப் போகவிருந்தவர் அடுத்த மார்ச்சுமாசம் முடிவுவரையில் 5-வருஷத்துக்குமேல் இன்னும் 5-மாசகாலம் நீடித்து இங்கிருக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவரும் பொதுக்ஷேமத்தைநாடி சொந்த சௌகரியத்தைப் பாராட்டாது அப்படியேயிருக்கச் சம்மதித்திருக்கிறார். அவர் இந்தியாவைவிட்டுப் போனபிறகும் கூட அவரும் அவருடைய பெருமாட்டியாரும் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்த "பாலர் திருவிழா"க் கொண்டாட்டமானது ஒவ்வொரு வருஷமும் நம்மால் கொண்டாடத் தக்கது. சிறுவர்களுடைய சுபாவமென்னவென்றால், ஒருவர் செய்வதைப்பார்த்து அதைப்போல் செய்வது. இதற்கு "Imitative faculty" என்று பெயர். பெரியோர் நல்லகாரியம் செய்தாலும் தப்பான காரியம் செய்தாலும் அதைப்போலவே செய்வார்கள். அதனாலேயே பெரியோர்கள் "குலத்தளவே யாகுமாம் குணம்" என்றும் 'சகவாஸ தோஷ"மென்றும் சொல்லியிருப்பது. குழந்தைகள் குணம்பெற வென்றே வீட்டில் பெரியோர்கள் ராமாயணம், பாரதம், பக்தர்கள் சரித்திரம் முதலியவைகளைப் படிக்கச்சொல்லு[illegible] ஸ்திரீகள் அவைகளைப் பாட்டுகளாக [illegible]த்தனங்களாகவும் சொல்லுவதும். [illegible]ார்டிஞ்சு அவர்களும் அவர்களுடைய பெருமாட்டியாரும், டில்லி நகர் பிரவேசம் செய்யும்பொழுது இடரொன்று அகஸ்மாத்தாய் நேர்ந்த ஆபத்து வேளையில் (யாரோ ஒரு காதகன் அவ்விருவர்பேரிலும் வெடிகுண்டைப் போட்டபொழுது) பக்தி வைராக்கியத்தோடு சாந்தமே பூஷணமாயிருந்ததினாலேயே, மலைபோல் வந்துற்ற துன்பத்தைத் தாங்க வல்லவர்களானார்கள். அதுவும் தெய்வ கடாக்ஷத்தால் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கினது. தேசத்தின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடி வரையிலும் அலைமோதினாற்போல் பரவின ஜனப்பிரீதி அனுதாபத்திற்கு நன்றியறிவைக்காட்டவும், ஆபத்துவேளையில் கடவுள் கிருபைகூர்ந்த வைபவத்தைக் கொண்டாடவும் இதர கொண்டாட்டங்களை விட்டு "பாலர் திருவிழாக்" கொண்டாட்டத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரச்செய்தது அவ்வுள்ளன்பும் பக்தியுமே. குழந்தைகள் மாசற்றவர்களாதலால் மனதில் ஒவ்வொன்றும் பசுமரத்தாணிபோல் பதியும் சுபாவமுள்ளவர்கள்.

இது "ஹார்டிஞ்ச் ஜயந்தி" கொண்டாடத்துவக்கின மூன்றாம் வருஷம். முதல் வருஷம் ஹார்டிஞ்சு பிறந்தநாள் மகோற்சவத்தை குழந்தைகள் தமக்கேயுரிய நாளாகக் கொண்டாடினார்கள். குழந்தைகள் ஹிமாசல முதல் கன்யாகுமரி வரையில் ஒரே மனதுள்ளவர்களாய் லார்ட் ஹார்டிஞ்சு அவர்களும் அவருடைய பெருமாட்டியாரும் அகஸ்மாத்தாய் நேர்ந்த ஆபத்து வேளையில் பக்தி வைராக்கியத்தோடு சாந்தசீலராய் மலைபோல் வந்துற்ற துன்பத்தைத் தாங்கி, பகவத் கடாக்ஷத்தால் அது சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கப்பெற்ற வைபவத்தைக் கொண்டாடினார்கள்.

அவ்வருஷம் ஜூன் மாதம் 20ந்தேதி சாயங்காலம் சென்னையைச் சேர்ந்த ராயப்பேட்டையிலுள்ள "பாட்டர்ஸ் கார்டன்" என்னும் விசாலமான தோட்டத்தில் சுமார்

20,000 பேர்கள் வரையில் பள்ளிப் பிள்ளைகள் கூடியிருந்தார்கள். அநேக விளையாட்டுகளும் வேடிக்கைகளும் நடந்தன. விளையாட்டுப் பந்தயங்களில் ஜெயித்தவர்களுக்கு மிஸ்டர் ஜெ. எச். ஸ்டோன் அவர்கள் அக்கிராசனாதிபதியாக விருந்து பென்ஸிலும் பேனாவுமாகப் பரிசு வழங்கினார். பாலருக்காகவென்று அச்சிடப்பட்ட விவேகசிந்தாமணி அனுபந்தத்தின் 2000 பிரதிகளை வைத்துக்கொண்டு 20,000 பேர்களுக்கும் வழங்குவதெப்படியென்று ஒரு சிறுவன் தவித்தான். அக்கர்ம சங்கடத்திலிருந்து அக்கிராசனாதிபதியவர்கள் அச்சிறுவனைக் காப்பாற்றினார். அப்பிரதிகளை அவனிடமிருந்து வாங்கி ஒவ்வொரு பரிசோடும்கூட வைத்து வழங்கினார். இப்படியாகச் சென்னையில் "பாலபோத சமஷ்டி சேவை ஸாதனம்" அமுலுக்கு வந்தது. பிறகு நமது அரசர் பிரதிநிதி சென்னைக்கு விஜயமாக வந்தபொழுது குழந்தைகள் யாவரும் அவருக்கும் ஹார்டிஞ்சு பெருமாட்டியாருக்கும் வந்தன வழிபாடாக ஒரு பத்திரம் சமர்ப்பித்தார்கள். அதில் லார்ட் ஹார்டிஞ்சு அவர்கள் குழந்தைகளுக்கு சொன்ன புத்திமதிகளை "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்றபடி சிறுவர்கள் அமிர்த வசனமாகக் கொண்டு அந்தப்படி நடப்பதாக வாக்களித்தார்கள்.

அந்த வாக்குத் தவறாமல் குழந்தைகள் நடந்து வர அவர்களுக்கு குடும்பத்தில் வைக்கக்கொண்ட விவேகசிந்தாமணியை பாலர்களுக்குபயோகமாகும்படி நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இதைப்பற்றி வித்யா இலாகா அதிகாரிகளுக்கு எழுதியதில் அவர்களும் அனுகூலமாகவே யிருந்தார்கள். சிறுவர்களுக்கென்றே உழைக்கவேண்டுமென்றார்கள். அப்படியே பிரமாணிக்கவும் வா[illegible] கொண்டார்கள். அவர்களும் இன்னல் செய்யாது ஸாதகமளிப்பதாகப் பிரமாணிக்கம் செய்து வாக்களித்தார்கள். இது நிற்க.

இரண்டாம் வருஷம்

வெளி ஆடம்பரங்களில்லாமல் "ஹார்டிஞ்சு ஜயந்தி" என்று பாலர் திருவிழா இங்கே வீடுகள்தோறும் குடும்ப ஸஹிதமாய்க் குழந்தைகளால் கொண்டாடப்பட்டது. லார்ட் ஹார்டிஞ்சு அவர்களும் இப்படிக் கொண்டாடப்பட்ட "பாலர் மஹோத்ஸவ தினம்" வீண் போகலாகாதென்று ஸிம்லாவில் சுமார் 15,000 குழந்தைகள்சேரக் களியாட்டம் கொண்டாடி மஹோத்ஸவத்தைச் சிறப்பித்தார்.

மூன்றாம் வருஷம்.

இவ் வருஷமும் சென்ற வருஷம்போல் குழந்தைகளெல்லோரும் வீட்டில் ஹார்டிஞ்சு ஜயந்தி கொண்டாடுவார்களென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வருஷம் மே மாதம் 18-ந்தேதியன்று ஸிம்லாவிலுள்ள பாலர் திருவிழாக் கூட்டகமிட்டியார் பாலர் மஹோத்ஸவ தினத்தை கொண்டாடினதோடுகூட, வருஷந்தோறும் அதைக் கொண்டாடுவதற்கான ஏற்பாட்டையும் செய்தார்கள். கல்கத்தாவிலும் கொண்டாட ஏற்பாடுசெய்து வருகிறார்கள். நம்தமிழ் நாட்டுச்சிறுவர்கள் இவ்வருஷம் "ஹார்டிஞ்ச் ஜயந்தி" கொண்டாடுவதற் கனுகூலமாக நாம் சிறுவர்களுக்காகவென்று அமைத்த "சமஷ்டியானை" அல்லது "ஜலலக்ஷ்மி" யென்கிற சித்திரப் படத்தையும், லார்ட் ஹார்டிஞ்சு அவர்களின் குடும்பப் படத்தையும் இம்மாசச் சஞ்சிகையில் பிரசுரித்திருக்கிறோம். "சமஷ்டியானை" சித்திரமானது முதலில் "விவேகசிந்தாமணி யுத்த காண்டத்தில்" பிரசுரிக்கப்பெற்று எல்லாருக்கும் வழங்கப் பெறலாயிற்று.

THE CHILDREN'S DAY FESTIVAL
(Celebrations at Home)
ANTHEMS, HYMNS AND CIVIC SONGS FOR CHILDREN.

வீடுகள் தோறும் பாலர் திருவிழாக்கொண்டாட்ட மகிழ்வுரை.

THE CHILDREN'S PRAYER.
(From Gitanjali)

வரகவி ரவீந்திரநாத் தாகோரியற்றிய

"பிரார்த்தனைக் கொத்து."

---

1. அண்ணலே யுன்றனடிபணிந் தன்பன் செய்
விண்ணப்ப மீதையே வேண்டினேன் வரந்தரு
[வாய்!

2. ஏழையே னுள்ளத் துறைதரித்திர மத்தனையும்
பிழை திருத்தி நிர்மூல மாகவே தீர்த்திடுவாய்!

3. துக்கமொடு சந்தோஷம் வருவனவெ லாமையே!
மிக்கவெளி தாகநான் பொறுக்கவலி தந்திடுவாய்!

4. அன்புமிகுந் துனைத்தொழவே யாசைகொண்டே
[னம்மானே!
என்பணியும் வளரவேதா னெனக்குவர மருள்
[வாய் நீ!

5. 'ஏழைபங் காளிநீ' யெனவறிந்தே னுனையுள்ளத்
தேழைகளை யொறுக்காவண்ண மெனக்குவலி தந்
[திடுவாய்!

6. கர்வமிகு வல்லாள கண்டரைக் கண்டுழிநான்
'ஸர்வமுநீ' யென்றவரைப் பணியாத படியெனக்
[குத் திடமருள்வாயென்னீச!

7. தினமெனக்கு நேருசிறு தொல்லைகளில் தலையி
[றங்கி
மனஞ்சிதரு துன்மனஸே சித்திக்க வரமருள்
[வாய்!

8. என்வலிதா னெவ்வளவே யாயிடினு மத்தனையும்
உன்வலியே யென்றுணர்ந் துலக்கடிமை யாகு
[மொரு
*தன்வலியை வேண்டினேனுன் எனக்கிந்த வலி
[யீன்று
என்னீச! எனையுனக்கின் னடிமையாக்கொ ளரு
[ள் புரிந்தே!

---

*[illegible]வலி—ஆத்மசக்தி.

[illegible]சக்ரவர்த்தி' யென்று இராஜப்பிரதிநிதியவர்களால் புகழ்பெற்ற ஸ்ரீமத் டாக்டர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் 'கீதாஞ்சலி' யென்னு மவர் மஹிமை பெற்ற கிரந்தத்திலிருந் தெடுத்து ஸ்ரீஹார்டிஞ்ச்ஜயந்தியை குழந்தைகள் திருநாளாக திருவிழாக் கொண்டாடும் பாலர்களுக்காகத் தமிழ் செய்யப்பட்டது இது.— C. V. S.]

CHILDREN'S TRIBUTE OF LOVE TO THE VICEROY.

அரசர் பிரதிநிதி வாழ்த்து.

ஸ்ரீ ஹார்டிஞ்ச் பிரபு ஜயந்தி.

குழந்தைகள் வாழ்த்துத் துதி.

"மூவாறுமாகி நின்றான்: வித்தையொ டவித்தையாம்
கலைகளென்ன காமிய மென்ன!"—தேவிதுதி.

ஹார்டிஞ்ச் பிரபுவே! யருள்வலி யுடையோம்!
பாரிடிஞ்சாலும் வானிடிஞ்சாலும் பொய்யுரை
[சொல்லோம்!

பேரிடி முழக்கம் போலுயிர் வாங்கும் பாதகக்
கூர்வெடி குண்டினு லின்னுயிர் வாங்கவே
மாரிடி நெஞ்சம் நினைத்த வஞ்சகப் பேய்களின்
கூரிடிகாயம் பட்டுப் பதைத்து மூர்ச்சித்தபோதும்—
சீரடி சாந்தம் குறையா துள்ளம் தடுமாறாது
மானிடவெள்ளம் போலுள கூட்டத் திடையிருந்
[தையே

நுண்ணிடை மின்னு னுன்பணி செய்யவே
கண்ணுடை வள்ளலே கருணையே உருவாய்
மின்னிடைத் தோன்றிய பொன்னுருவெளிபோல்
மன்னிடைத் தோன்றிய மாதவக் கொழுந்தே!

உன்திரு நாளைப் பெருநாளாக் கொண்டாடக்
கூடின குழந்தைகள் நாங்க ளெல்லோரும் குதூஹ
[லத்துடனே

வாழிமிக வாழியென்று வாழ்த்துகிறோம் ஐய!
[வும்மை

பதிவிரதா சிரோமணியாய்ப் பாரிலுன்னோர் துதி
[க்குமம்மை

ஹார்டிஞ்சுபெருமாட்டியன்பிலேநீ ரெந்நாளும்
துன்பின்றி வாழ்கவென்று துதிக்கிறோம்
[கடவுளையே!

THE FESTIVE CALL.

To celebrate "the Children's Day Festival."

(20th June, 1915.)

"பாலர் திருவிழாக் கொண்டாடுவோம் வாரீர் !"

(Specially composed to celebrate the *Children's Day Festival*, 1914.)

பல்லவி.

பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்வாரீர் !
சீல முடன் மெத்த கோலம தாகவே,—
—பாலர் திருவிழாக் கொண்டாடுவோம் !

சரணங்கள்.

(1) பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்நாங்கள்
சாலவு மெத்தநல் ஹார்டிஞ்ச்ப்ர பூமகிழ்
வேலவன் லீலைசெய் ஞாலமெ லாம்புகழ்
சீல மிகுபால தேவனைத் துதித்துள்ளே,—
—பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்வாரீர் !

(2) மேலைநாட் சீர்மையில் நாமெல்லாம் பெரியோராய்
வேலைசெய் வேளையில் வில்லங்கம் வாராமல்
நாலைந்து மொன்றாக நாம்வளர்ந் துற்றபோ
தாலையிற்க ரும்பேபோலன்புமிகுந் தென்புருக,—
—பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்வாரீர் !

(3) தாய்தந்தை மகவெனும் திரிமூர்த்தி தேவர்கள்
வாய்பொத்திச் சேவைசெய் பகவான் ஒருவனைத்
சேயென்று மகிழ்ந்தனர் தாய்வாரிக் கொண்டாப் [போல்,
தேயமெலாம்புகழ் 'ஹார்டிஞ்சஸ்' நாமாக 'ஹிரு [தாஞ் சலீ'பாடி,—
—பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்வாரீர் !

(4) துன்பம்வந் துற்றாலும் என்புறக் கிழியவே
அன்புமி குந்தம்மா ! பாலரைச் சிந்தித்துள்
என்புதோல் போற்றிய வித்தேகம் வருந்தினும்
அன்புரு வாம்பாலர் மகிழ்வே பெரிதென்ற வள் [ளலை நினைந்து
—பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்வாரீர் !

(5) தாயைப்போல் மகளென்னும் தூயர்சொல் மெய்க் [கவே
சேயைப்போல் தாய்தந்தை மகவுந்தான் கூடியே
காயைப்பழ மாக்குபரங் கருணையோ டொன்றான
சேயைப்போல் மகிழ்ந்தாடு 'டயமண்ட்' பெண் [மணிவாழ,—
—பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்வாரீர் !
சீல முடன் மெத்த கோலம தாகவே,—
—பாலர் திருவிழாக் கொண்டாடுவோம் !

THE CHILDREN'S DAY FESTIVAL.

In Sacred Memory of H. E. Lady Hardinge.

God Save

THE FOUNDER OF THE CHILDREN'S DAY.

பாலர் திருவிழா.

தாயன்பாலென்னம்மை ஹார்டிஞ்சு பெருமாட்டி
தூயவராம் குழந்தைகளைத் தன்னிதயத் துன்னிரு [த்தி
சீயவராம்காவலர்கோன் ப்ரதிநிதியாம் பர்த்தாவின்
ஸ்ரீஜயந்தி கொண்டாடச் சொன்னவர்தம்குடியனைத் [தும் காத்தருள்வாய்!

அம்மா, தாயே ! காப்பாற்று !
அடியேம் குழந்தைகள் சொற்கேட்டு.

'இன்றைப்போல் என்றைக்கும் கொண்டாடுவோம்.'

The Annual Celebration of the Day.

The Children's Resolve.

அம்மா, தாயே ! மஹாராஞ்ஜி !
அடியேம் குழந்தைகள் உனைத்தொழுவோம் !
மிடிதீர ஹார்டிஞ்சு ஜயந்தி இன்றைப்போல்
என்றைக்கும் 'குடிவாழக்கோன்வாழக்' கொண் [டாடுவோம் !

அம்மா, தாயே ! காப்பாற்று !
அடியேம் குழந்தைகள் சொற்கேட்டு.

வாழி-Prayer for Blessings on the Country and the King.

வாழிமிகவாழியென்று வாழ்த்தவலி தந்தருள்வாய்
"வரப்புயர !" வென்றம்மை வாழ்த்தினர் கோனை [யல்லோ
"வரப்புயர, வயலுயரக், குடியுயரக், கோனுயர"
வரந்தருவாய் ! அம்மாதாயே ! இதுநாங்கள் கேட் [கும் பழம்.

அம்மா, தாயே ! காப்பாற்று !
அடியேம் குழந்தைகள் சொற்கேட்டு.

—*From the Children's Anthem or Hridanjali.*

TO THE HONORABLE DIAMOND HARDINGE.

தாயைப் போல் மகளென்னும் தூயர்சொல் மெய்க் [கவே
சேயைப் போல் தாய்தந்தை மகவுந்தான் கூடியே
காயைப்பழ மாக்குபரங் கருணையோ டொன்றான
சேயைப் போல் மகிழ்ந்தாடு 'டயமண்ட்' பெண் [மணிவாழ

பாலர் திருவிழாக் கொண்டாடி னோம்
சீலமுடன் மெத்த கோலம தாகவே—
—பாலர் திருவிழாக் கொண்டாடி னோம்.

[illegible]

ECHOES OF WAR.

Exploits of Bussy.

வெடிமருந்தும், வேறுபாஷையும்.

சுமார் 170 வருஷங்களுக்கு முன் விஜயநகரத்தையாண்ட விஜயராமராஜனுக்கும் பொப்பிலியையாண்ட இரங்காராவுக்கும், தொன்றுதொட்டு நீடியபகையிருந்ததனால், விஜயராமராஜன் அப்பகையை விட்டு நேசமாகவேண்டுமென்று எண்ணி அதற்காகப் பலவாற்றானும் முயன்றான். கோழிப்பந்தயத்தில் இவ்விருவருக்கும் பிரியமுண்டாதலால், விஜயநகரராஜ்யத்தில் ஒருபந்தயம் விட்டு வேடிக்கைபார்ப்பதற்குப் பொப்பிலியார் அழைக்கப்பட்டார்கள். இருநாட்டாரிலும் பெரியோர் சிறியோர் யாவரும் தாம்வளர்த்துப்பழக்கிய கோழி, டேகை, மயில், வல்லூறு முதலிய பறவைகளை யெடுத்துக்கொண்டு ஓரேயிடத்தில் சந்தித்து வேடிக்கை நடத்தினார்கள். பொப்பிலிராஜனுடைய கோழி நெடுநேரம் விஜயராமனுடைய கோழியுடன் யுத்தம் செய்து வென்றுவிட்டது. ஒருதரத்தார் தாம் வென்ற செருக்காலும், மற்றொரு தரத்தார் தாம் தோற்ற அழுக்காற்றாலும் ஏற்றத்தாழ்வான வார்த்தைகளை வழங்கியதனால் இப்பந்தயம் ஸமாதானம் உண்டுபண்ணுவதற்குப்பதில் மனஸ்தாபத்தை யதிகரித்தது.

அக்காலத்தில் புதுச்சேரியிலிருந்து, கோலகொண்டா நவாப்பைப் பார்க்கப்போயிருந்த பிரான்ஸி லா புஸி (Francis la Bussy) என்னும் பிரெஞ்சு ராஜ்யதந்திரி, அவரிடம் விடைபெற்றுக்கொள்ளும் பொழுது, கீழ்த்தேசங்களைப்பார்க்கவேண்டுமென்று தனக்குள்ள ஆவலைத் துவிபாஷ் இலக்ஷ்மணய்யா மூலமாய்த் தெரிவித்துக்கொண்டார். இந்த இலக்ஷ்மணய்யா இருபாஷையும் நன்றாயறிந்த[illegible]ல், பிரெஞ்சு தெரியாத சுதேச அர[illegible]லும், சுதேச பாஷை யறியாத புஸி முத[illegible]வராலும் சன்மானிக்கப்பட்டுவந்தான். புஸி கருத்துக்கிணங்கிய நவாப்பு தன் மித்திரர்களாகிய விஜயராமனுக்கும் இரங்காராவுக்கும், அவன் வருவதையும் அவனுக்குச்செய்யவேண்டிய மரியாதைகளையும் பற்றி, இலக்ஷ்மணய்யாவை நிருபங்கள் எழுதச்செய்து அனுப்பினர்.

வெள்ளைக்காரர்கள் ஒருவரும் அறியாத நாட்டினரென்றும், முரடரென்றும், குடியரென்றும், அக்காலத்தில் அறியாத ஜனங்கள் பரப்பிய வதந்தியால், கொஞ்சமகலங்கிய விஜயராமன் பொப்பிலியார் மீது தனக்குள்ள அறுவறுப்பை விட்டுத் தாங்களிருவரும் ஒன்று சேர்ந்து புஸியை எதிர்கொண்டழைக்கலாமென்று சூசிப்பித்து, இரங்காராவுக்கு நிருபம் அனுப்ப, ரங்காராவின் தமையன் மகன வெங்களராவு அதைக்கொலுவில் படித்துப் பார்த்து ஆண் பிள்ளைகளும இப்படிப் பயந்து பிறானை நாடலாமா என்று தூஷித்துக் கிழித்தெறிந்து, கடிதம் கொண்டுவந்த தூதரையும் அவமானப் படுத்தியனுப்பிவிட்டான். இதனாலும் விஜயராமனுக்குக் கோபம் அதிகரிக்க, அவன் துவிபாஷ் லக்ஷ்மணய்யாவைச் சிநேகம்பண்ணிக்கொண்டு, புஸி தன்னாட்டிற்கு வருமுன்னமே விலைபெற்ற காணிக்கைகள் தயார் செய்து, புஸி சமூகத்தில்வைத்துக் கண்டு அவனுடைய தயவைச் சம்பாதித்து, அவன் மூலமாய் இரங்காராவுக்குத் தீங்கு செய்ய வழி தேடினான்.

புஸி வருகிறதையறிந்த இரங்காராவு, தன் மைத்துனனும் சுத்தவீரனுமாகிய பாபாராயனைத், தன் ராஜதானியினின்று ஒரு காட்டயணத்தூரமுள்ள ஒரு கிராமத்துக்குப்போய் அவன் வரும் வழியிற காத்திருந்து இட்டு வரும்படி யனுப்பினான். பொப்பிலிராஜர்கள் துஷ்டரென்றும், ஒருவரையும மதியாதவனென்றும் அவரைஜெயித்துத தனக்குப் பட்டம் கட்டிவைத்தால் தக்கவெகுமதி கொடுப்பதாயும் சொல்லிப் புஸியை மனதைத திருப்பித் தன் வசமாக்கிய விஜயராமன், அவருடன் இலக்ஷ்மணய்யாவும் தன்பட்டாளமும பின்.

தொடரச்சென்று பொப்பிலியினின்றும் 60-மைல் தூரமுள்ள ஒரு ஊருக்குப்போய்த் தங்கினன். பாபாராயன் எதிர்கொள்ள வந்து காத்திருக்கிறதைக்கேட்ட விஜயராமன், நல்ல பாதையை விட்டுக் காட்டுமார்க்கமாய்ப்போவது யுக்தமென்று யாவருக்கும் மெய்ப்பித்து, பாபாராவு காத்திருப்பதைப் புலி அறியாதபடி செய்து, எதிர்கொண்டு வாராமல் தன்னை யவமதித்ததாய் அவனுக்குத் தோன்றுமாறும் செய்தான்.

காட்டுவழியாய்ச் சென்ற புலிதுரையும் விஜயராமனும், வழியில் தென்பட்ட ஊர்களையெல்லாம் கொள்ளையிட்டு அங்குள்ள காப்பாளர் கொடியயுத்தம் செய்து தமது சேனையில் சேதம் உண்டுபண்ணியும், சுதேசிகளுக்குத் தெரியாத பொருள்களாகிய வெடிமருந்தினுலும் குண்டுகளினுலும் அவரைக்கொன்று, சீக்கிரத்தில் பொப்பிலிக்கோட்டையைச் சமீபித்து அதைச்சூழ நாற்புறத்திலும் கூடாரமடித்துத் தங்கினர்கள். கோட்டையிலுள்ளே கவலையன்றி வாழ்ந்த இரங்கராவுக்கு இவர்கள் வருகையும் பாபாராவு வாராமையும் ஆச்சரியத்தையும் மனச்சஞ்சலத்தையும் உண்டுபண்ணியது. யுத்தத்தின்பொருட்டே வந்தார்களென்பதை யுக்தியாலறிந்த இரங்கராவு, தன் கொலுவுக்கு திவான் தர்மராயரையும், தமையன் மகன் வெங்களராயரையும் அழைத்து, ஊரைவிட்டு வலசைபோய்ப் பிறகு விஜயராமனுக்குப் புலி சகாயமில்லாத காலத்தில் வந்து அவனை வென்று தம் தேசத்தை மீட்டுக்கொள்வது என்ற தன் யோசனையை வெளியிட அவர்களால் அது மானக்கேடென்றும், நேரில் புலியிடம்போய்ச் சமாதானத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்வது நலமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இலக்ஷ்மணய்யாவுக்குத் தக்க பரிசுகொடுக்கப்பட்டதனுல் திவானுக்குப் புலியுடைய பேட்டி கிடைத்தது. புலி தன் சிநேகனுகிய விஜயராமனிடம் கேட்காமல் சமாதானத்தைப்பற்றிப்பேச முடியாதென்று சொல்ல, திவான் எங்களிருவருக்கும் உள்ள விவாதத்தில் நீ பிரவேசிக்காமல் வேடிக்கைபார்த்துக்கொண்டிரு என்று வேண்டினர். அதற்கும் அவன் இணங்கானுக, தர்மராவு கோபத்துடன் தன் கத்தியையுருவிப் புலியைக் கொன்றுபோடுவதாய் ஓங்க, அப்போது இலக்ஷ்மணய்யா "பொறுங்கள். தங்கள் யுக்தம்போலத் துரை நடக்க ஒத்துக்கொள்ளுகிறார். தங்கள் ஆண்மையைப்பற்றி வியக்கிறார்" என்று பொய்யாகப் புலி சொல்லும் வார்த்தைகளுக்குப் பொருளுரைத்து, அவரைத் தன் கூடாரத்துக்கு அனுப்பிவிட்டுத் தான் தனியே அரசன் கூடாரத்துக்குச்சென்று இங்கு நடந்ததையுரைத்தான். அவன் தன் சிப்பாய்களையேவித் தர்மராவை உயிருடன் திரும்பிப்போக வொட்டாமல் கொண்டுவரும்படி சொன்னன். தர்மராயரோ, தன் பரிவாரத்தினராகிய எல்மதுரைகளென்னும் வீரருடன், குதிரையேறிச் சேனையின் நடுவே தங்கள் கைவாள்களினுல் வழிசெய்துகொண்டு சென்று தப்பித்தார்.

மறுநாள் முதல் கொடுமையான யுத்தம் நடந்தது. கோட்டைக்குள்ளிருந்து வெங்களராவு, பாபாராவுக்கு ஒரு கடிதம் எழுதியதைக் கீரைவிற்கும் பெண்கள்போல் வேஷம் தரித்த இரண்டு வீரர் வசம் அனுப்ப அதை விஜயராமன் காவலாளர் பிடித்துக்கொண்டு அவ்விருவரையும் பீரங்கிவாயில் சுடும்படிசெய்தார்கள். கற்பிற்சிறந்தவளும் உத்தமஸ்திரீயுமாகிய பட்டத்தாசி மல்லம்மதேவி தன்னையும் தன் இளம் குழந்தையையும் மற்றும் ஊரிலுள்ள ஏழைக்கிழவரையும் ஸ்திரீகளையும் பற்றி மனமிரங்கித் தாங்கள் ஒரேகுலத்திலுதித்ததையும் நினைத்து இந்தத்தடவை மன்னிக்கவேண்டுமென்றும் தனக்கு மங்கிலியபிக்ஷை கொடுக்கவேண்டுமென்றும் ஒரு கடிதம் எழுதி விஜயராமனுக்கு அனுப்ப அதையவன் கிழித்து இராணியைத் தூஷணமாய்ப்பேசிக் கடிதம் கொண்டுவந்த தாதியையும் அவமானப்படுத்தியனுப்பினன்.

இரங்கராவு தன் சேனாதிபதிகளை ஒவ்வொருவராய்ச் சண்டைக்கனுப்ப, அவர்களும் அவர்கள் சேனைகளும் தங்கள் பாகுபலத்தினுலான வரையில் யுத்தம் செய்து கடைசியாக புலியுடைய வெடிமருந்தின் வலியால் மாண்டார்கள்.

இப்படியாகவே, மல்லம்மதேவி வருஷம் நிரம்பாத தன் புதல்வன் வெங்கடராயனையும், தன் தாதிகளுள் புத்தியிலும் வயதிலும் மூத்த வெங்கடலக்ஷ்மியையும் மாறுவேஷம் பூணச்செய்து, கடைசியாகத்தன் மகனுக்குப் பால் கொடுத்துத் தழுவி முத்தமிட்டு அவனைக்காப்பாற்றும்படி கடவுளைப் பலவாறு உள்ளம் நொந்து பிரார்த்தித்துக் கோட்டைக்கு வெளியே பாபாராவிடம் சேரும்படி சொல்லியனுப்பினள். அவர்களையும் அரசன் காப்பாளர் பிடித்து அரசனிடம்விட, அவன் இரங்கராவு மகன் என்பதை யுணர்ந்து தன் கத்திக்கிரையாக்கவேண்டுமென்று கோரினன். இப்பாவி நெஞ்சின் கடினத்தன்மையை வெறுத்த புலி அக்குழந்தையைத் தன் மடிமீதேற்றி முத்தமிட்டு அவனிடம் விளங்கும் சுபலக்ஷணங்களைக் கண்டு மகிழ்ந்து தன் சேனையாளரில் சிலர் வசம் ஒப்புவித்து அவ்விருவரும் அபேக்ஷிக்கும் இடம்வரை காத்துச் செல்லும்படி உத்தரவிட்டான்.

கடைசியாய் யுத்தத்தில் வெங்களராவும் இறந்துபோகவே, இரங்கராவு தான்மட்டும் தனித்திருப்பதை யுத்தேசித்துத் தானிறந்தால் எதிரிகள் தனக்கு மானக்குறைவான காரியம் செய்ய இடமில்லாதபடி, மைத்துனன் நரஸராயனிடம் தன் கத்தியைக்கொடுத்த தன்னை (இவ்வுலகத்துக்குக்) கட்டும் கயிறுகளை யறுத்துவிடும்படி வேண்டினன். இவ்வார்த்தைகளின் குறிப்பையறிந்து நரஸராவு அந்தப்புரத்துக்குச்சென்று மல்லம்மதேவி முன்னிற்க இவன் எண்ணத்தை யூகித்தறிந்த அம்மாது நான் அரசனுக்ஞைக்கு வணங்கினேனென்று தலைசாய்ந்து நின்றாள். விரித்துக் கூறுவானேன். கோட்டையிலுள்ள ஸ்திரீகளெல்லாம் தங்கள் கணவராலும் உறவினராலும் கொல்லப்பட்டார்கள். கீர்த்தியாகிய தேகத்தை மாசுபடாமல் காப்பதே முக்கியமென்று கருதும் வீரருக்கு, என்பு தோல் முதலிய சேர்த்து, எவ்விதமும் அழிவதற்கே யமைத்த யாக்கை பெரியதன்றல்லவா?

இரங்கராவும் தன் பரிவாரத்தாராகிய எல்மதுரைகளும், தாங்கள் பாழாக்கிய கோட்டையைவிட்டு வெளியேறித்தாங்கள் அரிதென்று எண்ணிய பொருள்களையெல்லாம் வலியத்துறந்ததற்குக் காரணரான விரோதிகளோடு கடும்போர்புரிந்தார்கள். யுத்தத்தின் கொடுமையையும் முக்கியமாய்த் தன்னைக் கொல்லவே விரைந்து வரும் வேகத்தையும் கண்ட விஜயராமன் அந்த வீரர்கள் கண்ணுக்ககப்படாமல் ஓடிபொளிந்துகொண்டான். யாவரையும் வென்று அமர்க்களத்தில் புலிகள் போலுலாவும் இவர்கள் வரும்வழியில் கடைசியில் வஞ்சகமாய் மருந்தையும் குண்டுகளையும் பரப்பி, நல்லசமயத்தில் கொளுத்திவிடவே, யாவரும் கீழேவிழுந்து, தங்கள் விரலேனும் அசையச் சக்தியுள்ளதாயிருக்கும்வரை போராடி மாண்டனர்.

குண்டுகள் அனேகம் தேகத்தில் புகுந்ததனுல் களைத்துவிழுந்த இரங்காராவைப் புலி வந்துபார்த்து இத்தகைய போர்ச்சிங்கத்தைக் கொன்றதற்காக மனம் வெம்பி விஜயராமனைச் சாலவெறுத்தான். ஆயினும் வெற்றியடைந்ததனுல் இராணுவத்திலுண்டான ஆரவாரங்களும் மறுநாள் விஜயராமனுக்குப் பட்டங்கட்டும் பெரியகாரியத்தின் முன் செல்வனவாகிய தமாஷ்களும் இரவில் நெடுநேரம்வரை யிருந்தன.

தன்சகோதரி குமாரன் வெங்கடராவு தனியே வருகையையும் இராஜ ஆடம்பரங்களின்மையையும் கண்டு அதிசயித்த பாபாராவு, தானிருக்கும் நேர்வழியைவிட்டுக் கள்ளமார்க்கமாய் விரோதிகள் சென்றார்களென்பதையும்,

தன் அருமையான உறவினர்மாண்டார்களென் பதையும் அப்போதுதான் அறிந்து மிகத்துய ரெய்திக், குழந்தையைத் தக்க சம்ரக்ஷணையில் வைத்து, இரண்டு வீரரும் தானும் உருமாறிப் புறப்பட்டு, விஜயராமன் மந்திரியினிடமிருந்து கடிதம் கொண்டுவந்த தூதர்களென்று கூறி அவன் கூடாரத்தையடைந்தான். பிறகு நள்ளிரவில் கொடியோனாகிய அவ்வரசன் படுக்கையறையை யடைந்து, தன் சகோதரியை யவன் தூஷித்தகாலத்துச் சொன்ன கடுஞ்சொற்கள் கைக்குவலிமைகொடுக்க, கையீட்டியால் அவனைக்குத்திக் கொன்று பிறகு "பாப்பாராவு யுத்தத்துக்கு வந்தான்" என்று உரக்கக்கூவி உறங்கும் சேனைகளை யெழுப்பி விட்டான். இருட்டில் மித்திரரென்றும் சத்ருக்களென்றும் அறியாமல், விஜயராமன் சிப்பாய்கள் ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டு கொலையாடினார்கள்.

இப்போராரவம் கேட்ட புஸி, இலக்ஷ்மணய்யாவை யழைத்து, இஃது யாதென்று வினவ, உண்மைசஞ்சரியாத நாவினனாகிய அவன், விஜயராமன் இரவில் உன்னைக்கொன்று நானையுனக்குத் தருவதாகச் சொன்ன பணத்தை மிகுக்கலாமென்று முயலுகிறான் என, அவன் விஜயராமன் சேனைகளைத் தயையின்றிக் கொல்லும்படி தன் சேனைக்கு உத்தரவு கொடுத்தான். அங்ஙனமே, அவ்வரசன் சேனைகளும் வெடிமருந்துக் கிரையாய்ப்போயின. காலையில் புஸி தன் சேனைகளுடன் புதுச்சேரிக்குப் பயணமாக, இலக்ஷ்மணய்யாவும், வந்த பொழுதைக் காட்டிலும் மிகுந்த தனவானைத் தன்னூராகிய பர்தருக்குச் சென்றான்.

இவ்வளவு உயிர்ச்சேதத்துக்கும் காரணமாகிய கவிபாவ் இலக்ஷ்மணப்பா சேக்ஷமமாயும் பொப்பிலிநகரம் பாழாயுமே வெகுகாலம் இருந்திருக்கக்கூடும் என்று இதை வாசிப்பவர்கள் கணமேனும் எண்ணுவார்களா? வாஸ்தவத்தில் வெங்கடராவுக்கு விபரம் தெரிந்து தன் பெற்றோர் அடைந்த கஷ்டங்களைக் கேட்டவுடன், நேரில் தோல்கொண்டா நவாபினிடம் சென்று அவருதவியையடைந்து; துரோகியாகிய இலக்ஷ்மணய்யாவைக் கொல்வித்துத் தன் தகப்பன் வீற்றிருந்த சிம்மாசனத்தில் ஏற்றிவைக்கப்பட்டு நெடுங்காலம், புதிதாய் வளம்பெற்ற பொப்பிலியை ஆண்டு வந்தான்.

THE VIVEKACHINTAMANI WAR NUMBER.

A HOUSE HOLD NARRATIVE OF CONTENDING FOLKS IN THE GREAT WAR OF 1914.

WITH AN INTRODUCTION

BY H. O. D. HARDING ESQ., I. C. S.

Reissued in one Volume.

Price Rs. 1—2—0 net. Cash or V. P. P.

EXTRACTS.

"One of our teachers to whom I gave the War Number of the "Vivekachintamani" to read the other day, was quite engrossed in it after a few moments."—Miss C. Kofel, Superintendent of Olcott Panchama Free Schools, Adyar, Madras, S, tated 1st June 1915.

THE VIVEKACHINTAMANI WAR NUMBER.—We have received a copy of the "Household narrative of contending folks in the Great War of 1914," re-issued in one volume with an introduction by Mr. H. O. D. Harding, I. C. S., from the Lalita Publishing Co., Mylapore. The story of the Great War is well described in the volume with striking illustrations and maps. The March number of the Vivekachintamani contains many interesting articles such as the meaning of University life, the goal of Education, the origin and issue of the War, etc. The simple style and the vivid description of the details of the war are sure to commend themselves to the Tamil reading public and the War Number has a historic and literary value. —*The Hindu, dated 4th May* 1915.

THE VIVEKACHINTAMANI.—We have received a copy of the Vivekachintamani War Number, which is illustrated well got up, and has an introduction written by Mr. H. O. D. Harding, I.C.S., who aptly remarks that "there is much room for such a book." The little book sets forth in simple language the origin of the war, an account of how things are going, interesting description of the different nations involved, accounts of their resources and of their capacity to go on bearing its enormous cost.—*The Madras Times, dated 5th May* 1915.

Only a limited Number of copies of the Reissue available.

Apply Sharp to:—THE SOLE AGENTS & MANAGERS

"THE VIVEKACHINTAMANI"

Lalitalaya, 19, Adam Street, MYLAPORE.

A BRIEF SKETCH OF THE HISTORY OF INDIA.

இந்துதேச சரித்திர ஏலப்பாட்டு.

THE BRITISH CONQUEST.

III. அங்கிலேயர் விஜயம்.

அன்புடனே நமையாளும் - மன்னர்
ஆனவிங்கி லீஷ்துரைகள்
முன்பிந்நிலம் முழுவதையும் - ஜயித்த
முறைமையினை யினிக்கேளாய்.

முடுகு.

1. தென்புடனேமுந்நூறு வருஷங்கள் முன்னே
தேசத்தைவிட்டிங்கு சேசத் தொடன்னுர்
செப்புமொருவர்த்தகம் வைப்பினிடை முந்தாச்
செய்யவுத்தேசமொடு பையவே வந்தார்.

2. இன்பமொடுவர்த்தகம் செய்யுமவர் பற்றி
எளியோரைநேசித்து வலியோரை வெற்றி
இசைவாகவேகொண் டிராச்சியம் அமைத்தார்
எல்லார்க்கும்நல்லா ரெனும்பேர் சமைத்தார்

3. முன்புவங்காளத்தை முற்றிலும் கொண்டார்
மூடத்துருக்கரசு கேடென்று கண்டார்
மோதிவருஜூஜாவ தௌலாவை எத்தால்
முனைவென்றுவலிகொண்டு பணியப் படுத்தார்

4. மொய்ம்புடனெதிர்த்துவரு தொம்பனும் ஹைதர்
மூரனோறுமவன்மைந்தன் ரணசூர பஹதர்
முதலானபலவீரர் அதமாகக் கண்டார்
முனிவின்றிக்குடிகளைக் கனிவோடு கொண்டார்

5. பின்புமஹாராஷ்டிரர் தம்பலம் அறுத்தார்
பெரிதாகக்கொண்டவவர் விருதுகள் பறித்தார்
பிஷ்வாவையாதரித் துறவு கொண்டாடப்
பேதையதையோரான் வளர்த்த வொருமாடு

6. வன்புடனேமார்பிலே பாய்ந்தவித மேவ
மருவாதுபகைகொண்டு பொரவந்து தாவ
மற்றவனைமுற்றவும் வெற்றிகொண்டப் பால்
மதியாதபிந்தாரி யினமுற்றும் இப்பால்

7. துன்பமொடுமடியச் சிதைத்தனர் கழித்தார்
தோன்றுமொருசிக்கர்தம் மாக்கமும் அழித்தார்
துன்னிகட்டவர்களுக் கிடையூறு செய்யும்
துரோகமுறுசிப்பாய்கள் ஏகமாய் வெய்ய

8. கம்பமுறவென்றுகொடி கட்டினார் செல்லக்
கருதியேதாம்வென்ற தேசங்கள் எல்லாம்
கருணையுறுமஹாராணி கையிலே உய்த்தார்
கண்ணிணைபோலெந்நாளும் காத்தருள வைத்தார்
ஏலேலோ ராபஜயம்.

THE BRITISH RULE IN INDIA.

IV. இங்கிலீஷ் அரசாட்சி.

(5)

ஆதரவா நமையாளும் - மன்னின்
அரசியலை யறிந்திடவே
ஏதமற இனியுரைப்பேன் - மானே
இன்பமுடன் நீகேளாய்.

மூடு.

1. ஓதுமித்தேசமுழு தும்வென்ற பின்பு
உற்றதனை நலமாக ஆளவே அன்பின்
உபாயங்களில்மிக்க வல்லோர்க ளாலே
உரியபலபிரிவாகச் செய்ததன் மேலே

2. ஏதமறுவங்காளில் ஒருதுரைத் தனமும்
இயலானபம்பாயில் ஒருதுரைத் தனமும்
இலகுமதிராஸிலே யொருதுரைத் தனமும்
ஏற்றமுறுபஞ்சாபிலொ ருதுரைத் தனமும்

3. தீதில்வடமேற்குமா காணத்தில் ஒன்றும்
செப்புமொருமத்தியமா காணத்தில் ஒன்றும்
தேடுமஸ்ஸாமுதற் பிரிவுகளில் வேறும்
திறமாகவேற்பாடு செய்துபல வாறு

4. மேதகையினிந்திய துரைத்தனம் என்று
விளம்புமிவையாவுக்கும் மேலான தொன்று
விரிவா அமைத்துவரு குடிகளைக் காக்க
விதமானபலசட்டம் புதிதாக ஆக்கி

5. மோதிவருகலகஞ்செய் துஷ்டரை அடக்கி
முரணழித்துப்பேழைப் பாம்பா யடக்கி
முன்னுளில்சுக்ரீவ ஆக்கினைய தென்பார்
மொழியுமிவராக்கினைக் கிணையேது திண்பார்

6. சோதரர்கள்போலவே எல்லோரும் வாழத்
துன்பமுறுகள்ளர்பயம் முதலான வீழச்
சுதமானபலகட்டுக் காயிதாச் செய்து
சொல்லுமொருபொருள் தன்னை யளவின்றிப் பெய்து

7. நீதிபுரியதிபர்களை நன்கு நிய மித்து
நிலவுகுடிகட்குதவி யாக ஒரு மித்து
நிகரில்பலசாலைகால் வாய்கள் பாலங்கள்
நெடிதான கல்லணைகள் முதலாகத் தங்கள்

8. போதமலிகல்வியின் பொலிவா லமைத்துப்
புந்திமகிழ்ரயில்வண்டி தந்திகளி ணைத்துப்

போக்குவரவுகள் வர்த்த கம்வியா பாரம்
புவியெங்குமெளிதாக நலமாகச் சேர

9. வேதனைசெய்பிணிகட்கு வைத்யங்கள் செய்ய
விதம்விதமா ஆஸ்பத்ரிகள்கட்டி வெய்ய
வேறுபிணிமேலும்வா ராமல் தடுக்க
மிக்கானசுகவிர்த்தி சாதனம் அடுக்கிக்

10. காதலொடுபல்கலைச் சாலைகள் அமைத்துக்
கனமானபண்டிதரை யங்குநிய மித்துக்
காணுமக்கழகங்க ளிற்கற்கும் மைந்தர்
கருதுமனவிருள்முற்றும் ஒழியப் புரிந்து

11. பேதைமையையறிவெனும் சுடரால் அகற்றிப்
பிழையிலறிவைப்பரவச் செயலாலே முற்றும்
பேசரியகொடியபல் வழக்கங்கள் கெட்டுப்
பெட்பாரும் நாகரிக நடைகள்மே விட்டு

12. நாதமலிபெருமையினை எல்லோரும் மேவி
நண்ணரியசமயகலை ஞானங்கள் யாவும்
நவைதீரஉள்ளங்கைக் கனிபோலக் கண்டார்
நலமாகராஜாங்கத் தலைமையும் கொண்டார்

13. சோதியுறவின்னுமே லாகத்தி ருந்தச்
சுகமாகப்பலசீர் திருத்தம் பொருந்தத்
துணையானவலிகொண்டு திரைகடல் கடந்து
தோன்றும்மேல்கீழ்சீமை யெங்கணு மடைந்து

14. கோதகலுமுத்யோக மேன்மைபல முற்றிக்
கொள்ளவருகௌரவம் பலவாகப் பெற்றுக்
குழியானவர்த்தகம் கைத்தொழில்க ளோடு
குறையாதவிவசாயம் மிகைபெற்று நீடி.

15. சீதமலிபூர்வபட் சத்துமதி போலே
செல்வமொடறம்தன்னி லோங்கிமென் மேலே
தேடரியநன்மையெல் லாம்வந்து சூழச்
செப்புமஹாராணியவர் குடைநிழலில் வாழ

16. மாதமும்மாரிபெய் துலகெங்கும் வாழி
மன்னுமங்கலம்வாழி இந்தியா வாழி
மகிமையுறுவிக்டோரி யாபுத்ரர் வாழி
வாழையடிபோலேயவள் வமிசமென்றும் வாழி
ஏலேலோ ராமஜயம்.

(முற்றும்.)

ADVENTURES WITH A JELLY FISH.

ஜல்லிமீனால் நேரிட்ட அவஸ்தைகள்.

உலகத்தில் அற்புதமான பொருள்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றுள் ஜல்லிமீன் என்பதொன்று. இதைப்பற்றி ஒருவர் பின் வருமாறு எழுதுகின்றனர்.

ஒருநாட்காலையில் நான் கடற்றுறையில் இறங்கி நீந்திக்களித்துக்கொண்டிருந்தேன். அப்போது சிறிதுதூரத்தில் மணற்றிட்டுப்போல் ஒரு பொருள் தோன்றியது. அலைகள் ஓங்கி அடித்துக்கொண்டிருந்தமையால் அப்பொருள் அலையில்முழுகி யெழுந்து தோன்றுவதும் மறைவதுமாகவிருந்தது.

இக்கரை எனக்கு நன்றாகத் தெரியுமாதலின் அவ்விடத்து மணற்றிட்டு இருக்கக் காரணமில்லையே என்று கருதி அப்புதுமையான பொருளை நோக்கி நீந்திச்சென்று அதற்குப் பத்துப் பன்னிரண்டு கஜதூரத்திற் சென்றதும் அது ஏதோ ஒரு பிராணி என்று தெரிந்துகொண்டேன். அதை யடுத்து நோக்கவெனக்கு இஷ்டமில்லாமையால் கப்பலினின்று தவறிக் கடலில் வீழ்ந்த ஏதோ ஒரு பிராணியின் உடலம் என்று நினைத்து அதைவிட்டு விலகினேன். அதை நான் அடுக்கும்போது என்னிடதுகால் விரல்களில் ஏதோ சுறீரென்றது. எனக்கு ஏற்கனவே காலில் வெடிப்புக் கண்டிருந்தமையால் நீந்தும்போது வலியுண்டாகுமாதலின் ஊசி குத்துதல்போலும் அவ்வெடிப்பின் வலியென்று எண்ணினேன். ஆகலால் அதை அதிகமாய்க் கவனிக்கவில்லை. ஆயினும், சிறிது நேரத்துக்கெல்லாம் அவ்வலி வரவர அதிகமாகி காஞ்சொறித்தினவுபோலத் தோன்றியது. உடனே சங்கதி இன்னதென்று மனத்திற் பட்டது. கரைக்குக் கூடியசீக்கிரத்தில் திரும்பினேன். அப்படித் திரும்புகையில் என் வலதுகையை ஜலத்துக்குமேலே தூக்க அதில் முப்பது [illegible]பது மெல்லிய தெளிவான நூல்கள் தொ[illegible]கிக்கொண்டிருக்கக் கண்டேன். அன்றியும் அந்நூல்கள் ஒரு மீனின் கால்களென்றும் அம்மீன் நாற்பது ஐம்பது அடிக்கு அப்புறத்தே இருந்தபோதிலும் அதன் தொடர்ச்சி விடவில்லை என்றும் தெரிந்துகொண்டேன். நான் கரையைச் சாருமுன்னே வலிபொறுக்க முடியாமற்போயிற்று. குளிர்ந்த ஜலத்தைவிட்டு நீங்குதலும் அவ்வலி இன்னும் பாதை மிகுந்தது. எங்கெங்கே அந்நூல்கள் என்னுடம்பில் ஒட்டிக்கொண்டிருந்தனவோ அவ்விடங்களில் எல்லாம் சிவந்தகோடு கிழித்தது போலத் தோற்றியது. வலி பழுக்கக் காய்ச்சிய ஊசியொன்றை மெல்ல நரம்புகளூடே ஏற்றினாற்போல இருந்தது. உடை மேலே எவ்வளவாவது படினும் பொறுக்க முடியாமல் இருந்தது. என்னிருப்பிடத்தைச் சேர்தற்கு இரண்டுமைல் தூரம் நான் நடக்கவேண்டியிருந்ததனால் நான் அதற்குள்ளாக அடைந்த அவஸ்தைகளைச் சொல்லவேண்டியதில்லை. நீங்களே ஊகித்துக்கொள்ளலாம். இவ்வலி இவ்வளவு கடினமாயிருப்பினும், அக்கொடிய ஆயுதங்களால் உண்டான மற்ற அவஸ்தைகளை நோக்க அது ஆயிரத்தில் ஒரு பங்குகூட இராது. சுவாசமும் நெஞ்சின் அடிப்பும் இரத்தத்தின் ஓட்டமும் இரண்டும் நின்றுவிட்டன. இடையிடையே, மார்பின்வழியாய் சுறீர்சுறீரென்று ஒரு குத்தல் மார்பினூடே துப்பாக்கி ரவையொன்று பாய்ந்ததுபோல் தோன்றும். பின்பு மார்பின் அடிப்பு ஒரு கணமும் ஒருயுகமென்று தோன்றும்படி சிறிது நேரம் நின்று பின்பு மார்பைப் பிளந்துகொண்டு வெளியே வருவதுபோல ஆறு ஏழு தாண்டல் ஒரேமுட்டாகத் தாண்டும். சுவாசகோசம் செயலற்றுச் சுவாசம் உட்செல்லாமல் நின்றுவிடும். பின்பு சுருக்கென்னு மவ்வலி மார்பினூடே பாயும். இவ்விதமாகவே மாறிமாறி உண்டாகும். எனக்கு இரண்டு நிமிஷம்

இரண்டு வருஷம் போல தோன்றியது. என்னிருப்பிடம் சேருமுன் நானபட்ட அவஸ்தைகள் இவை. வீடுசேர்ந்ததும் தயிலமொன்று வைத்திருந்த குப்பியை எடுக்க, இவ்விதமான அசந்தர்ப்பங்களில் நேரிடுவதுபோல அதில் பொட்டளவேனும் தைலமில்லை. அதனால் இன்னொரு குப்பி தயிலம் தருவிக்கும்வரையில் பொறுத்துக்கொண்டிருக்கவேண்டியதாயிற்று. தயிலம் உடம்பிற் பட்டதும் கடுப்புச் சற்று நின்றது. ஆயினும் எதிரிருந்த கண்ணாடியில் அகஸ்மாத்தாய் என் முகத்தை நான் பார்க்க நேரிட்டபொழுது அது எனக்கு ஜாடை தெரியவேயில்லை. முற்றிலும் வெளுத்துச் சுருங்கிப்போய் வேர்வை முத்துமுத்தாய் நிரம்பியிருந்தது. நான் வலி நீங்கி எப்போதும்போல் நடப்பதற்கு நாலைந்துநாட் சென்றது. மூன்றரை மாதம் வரையில் அந்தச் சுருக்கு வலி மார்பில் நாலில் இரண்டில் தோற்றும். ஆயினும் இவ்வளவோடு போயிற்றே அதுவே பெரிது. அவ்விஷக் கால்களின் அவஸ்தை இவ்வளவு கடுமையாயிருப்பினும் அவைகள் தாக்கிய இடங்கள் கொஞ்சங்கொஞ்சமாய் இரண்டு மூன்று இடங்களே தவிர அதிகமல்லை. ஒரு காலில் முழங்காலுக்குச் சற்று மேலும் வலதுகையின் பெரும்பாகமும் முகத்தில் நாலைந்துவரைகளும்தான். இன்னும் உடம்பு நெடுகத் தாக்கியிருக்குமாயின் என்னால் கரைக்குவந்து சேரக்கூடுமென்று நான் நினைக்கவில்லை. இப்படிப் பட்டு அறிந்ததை [illegible] மறக்கமாட்டேனென்று உங்களுக்கே [illegible]ந்துகொள்ளலாம். அது முதலாக நான் எப்பொழுதாவது ஜலத்தில் இறங்கினால் என்னை இவ்வளவு அவஸ்தைப்படுத்திய இந்த ஜல்லிமீன் மீசையுந் தாடியுமாய் எங்கு நிற்குமோ வென்று வெகு ஜாக்கிரதையாய்ப் பார்த்துவிட்டுத்தா னிறங்குவேன்.

FIRUZ SHAH—THE BENEFICENT.

பிருஸ் ஷா வென்னும் பேருபகாரி.

இத்தேயத்தில் முற்காலத்தில் ஆண்டுவந்த மகமதீய அரசர்களுக்குந்தற்காலத்தில் ஆண்டுவருகிற அங்கிலேய துரைத்தனத்தாருக்கும் பற்பல விஷயங்களிலும் உள்ள பற்பல பேதங்களினும், ஒன்று அதி முக்கியமானது. அம்மகம்மதிய அரசர்கள் குடிகளிடத்தில் வாங்கியவரிகளைத் தத்தம் சுகத்துக்கும் மனோபீஷ்டத்துக்கும், சிலபோது தமது மனக்குறுக்குக்கும் தக்கபடி அரண்மனைகள் ஆஸ்தானங்கள் பள்ளிகள் கோபுரங்கள் கோரிகள் ஸ்தம்பங்கள் உத்யானங்கள் உபவனங்கள் முதலான கட்டடங்களிலும் வெட்டிவேலைகளிலும் செலவுசெய்தார்களே யன்றி ஜனோபகாரமான சாலைகள் பாலங்கள் கால்வாய்கள் கல்விச்சாலைகள் முதலானவைகளிற் செலவுசெய்தார்களில்லை. ஆயினும் முற்றிலுமே ஒருவரும் செய்ததில்லையென்று கூறக்கூடாது. ஒருவர் இருவர் அருமருந்துபோலச் சிற்சில உபயோகமான காரியங்களைச் சிறக்கச்செய்திருக்கின்றனர். அவர்களில் முக்கியமானவர் இருவர். அவ்விருவரினும் முந்தினவரும் சிறந்தவரும் பிருஸ் ஷா என்னும சக்கிரவர்த்தி. இவர் வீரம் கல்வி முதலான அநேக நற்குணங்களைப் பெற்றிருந்தும் அநேகம் கொடுமையும் புத்தியீனமுமான பித்துத்தொழில்களைச் செய்து ஜனங்களை எமனைக்கண்ட உயிர்போல நடுங்கச்செய்துவந்த மகா கொடியோனாகிய மகமத் பின் டோக்ளாக் என்னும் வன்கண்ணனுக்குப்பின் சிங்காசனம் ஏறி அரசுபுரிந்தவர். அவன் காலத்திற் குடிகளுக்குண்டாகிய துன்பங்களாகிய வல்லிருளை நீக்கி இன்பமென்னும் இளவெயில்காயத் தோற்றினதோர் புண்ணிய சூரியன் என்னும்படித் தோன்றினவர். ஜனோபகாரமான அநேக சற்காரியங்களைச் செய்து கீர்த்திபெற்றவர். போரும்புடைப்புமே தொழிலாகக்கொண்டு எவ்வகைச் சாகசங்களுக்கும்

அஞ்சாத வீரர்களாகிய அப்கானியர் வம்சத்தில் ஜனித்தவராயினும் இவ்வரசர் யுத்தஞ்செய்து வெற்றிகொள்வதில் இஷ்டப்பட்டதில்லை. சாந்தமும் சமாதானமுமே மேலாக எண்ணினவர். தண்டெடுத்துச் சென்று இதரதேசங்களைக் கவர்ந்துகொள்ளவேண்டுமென்னும் ஆசை இவருக்குக் கொஞ்சமேனும் இல்லை. ஆசைக்கு அளவில்லையென்பதும், கோரின பொருள்களைப் பெறப்பெற ஆசை மேலிடுமேயன்றி ஒருபோதும் திருப்தியுண்டாகாதென்றும் இவர் நன்றாயறிந்தவர் ஆதலின் வீணாகத் துராசைகளில் மனசைப்போக்கித் துயர்ப்படாமல் தாம் பிரபுத்துவம் செய்து வந்த 37-வருஷகாலமும், தேசத்திலோரிடத்திலும் கலகங்கள் உண்டாகாமல் காத்துப் பலவிதமான கைத்தொழில்களை விருத்திபண்ணுவதிலும் பற்பலவான சாஸ்திரச் சங்கங்களைக் கூட்டிவைப்பதிலும், வியவசாயத்தொழில் மேன்மேலும் விருத்தியடைதற்கு வேண்டிய காரியங்களைச் செய்விப்பதிலும், தன் பூர்வீகர்கள் எப்போதும் இடைவிடாமல் யுத்தமும் கலகமும் செய்து இடுக்கண் விளைத்ததனால் ஜனங்கள் இழந்துபோன சுகங்களைமறுபடியும் அவர்கள் முன்னிலும் அதிகமாகப்பெறச்செய்யும் வகைகளைத் தேடுவதிலுமே நோக்கமாக இருந்தனர்.

மேன்மை பொருந்திய இச்சக்ரவர்த்திதமது பிரஜைகளின் சுகாபிவிருத்தியின்பொருட்டு, அவர்களுக்குபயோகமாகக் கட்டுவித்த கோயில்களையும் வைத்து வளர்ப்பித்த தோட்டங்களையும், மான்யங்கள் கொடுத்து ஸ்தாபித்த பாடசாலைகளையும், இயற்றுவித்த சத்திரங்களையும் சாவடிகளையும், வைத்தியசாலைகளையும், கோரிகளையும், குளங்களையும், 50-கால்வாய்கள், 100-பாலங்கள், 15[illegible]-கூபங்கள், ஆகிய சற்காரியங்களைப்பற்றி ஒவ்வொரு சரித்திரக்காரரும் மிகவும் பிரீதியோடு என்றும் புகழும்படியான நாசமில்லாத பெருங்கீர்த்தியைப் பெற்றனர்.

மகா விவேகியாகிய இச்சக்ரவர்த்தி செய்த சத்காரியங்கள் அவரோடு நசித்துப்போகவில்லை. எமுனாநதிக்கும் சாகார நதிக்கும் மத்தியில், அவ்விருநதிகளையும் ஒன்றோடொன்று சேர்த்து வெட்டுவித்த கால்வாயும், 'ஹிஸ்ஸார்', 'பிருசபாத்' என்னும் இடங்களில் கட்டுவித்த அதிரமணியமான ஏழு பெரிய பாலங்களும், முற்றிலும் எரிந்து பாழாகிப் பாலைவனங்களான 'சர்ஹிந்து,' 'ஹிஸியாஞ' வென்னும் இடங்கள் நன்றாக ஜலம் பாய்ந்து செழித்து விளையும்படி வெட்டுவித்த மிகப்பெரியவான கால்வாய்களும், இவர் ஆளுகையின் சிறப்பை எல்லாருக்கும் தெரிவிக்கும் நிரந்தரசாக்ஷிகளாகக் காணப்படுகின்றன. அக்காலத்தில் இவர் செய்வித்த ஜனோபகார காரியங்களுக்குச் சாக்ஷியாக அவற்றால் மிகச் செழிப்படைந்த பூமியும், குடிகள் மிகப்பெற்ற தேசமும் தவிர வேறொன்று வேண்டுமோ? இவருக்குப் பின்வந்த அரசர்களும் இவரைப் போலவே ஆண்டிருப்பாராயின் இப்போது இவ்விந்துதேசம் எவ்வளவு நல்ல நிலைமையை அடைந்திருக்கும் !

முற்காலத்தில் சொற்பமாக ஒருபோகமே பயிர்செய்துவந்த பல்லாயிரம் ஏகரா நிலங்கள் இவர் காலத்தில் இருபோகமும் அபரிமிதமாக விளைவனவாயின. அவ்விதமான நல்ல விளைவுகளாயினும் நல்ல துரைத்தனமாயினும் இல்லாத பல தேசங்களிலிருந்தும் இலக்ஷோபலக்ஷம் ஜனங்கள் பொன்விளையும் நாடான இத்தேயத்தில் நாளுளும் மிகுதியாகவந்து குடியேறினார்கள். இவர் வெட்டுவித்த பெரிய கால்வாய்களின் இரண்டு பக்கங்களிலும் கிராமங்கள் வரிசையாக ஏற்பட்டன. வயல் வெளிகளில் ஆடு மாடுகள் அளவில்லாமல் நெருங்கி மேய்வனவாயின. இம்மன்னர்தாம் வெட்டுவித்த கால்வாய்களால் செழிப்படைந்த நிலங்களில் விளைந்த விளைபொருள்களில் பத்தில் ஒருபங்கு மாத்திரமே நீர் வரியாக வாங்கிக்கொண்டனர். இப்பொருளையுங்கூட தே

சோபகாரமான காரியங்களுக்கே உபயோகப்படுத்தினார். துருக்கர்கள் புதிதாக ஐரோப்பா கண்டத்தில் பிரவேசித்த அக்காலத்தில் இத்தேயத்தில் ஏகச்சத்திராதிபதியாய் அரசுபுரிந்து வந்த இவ்வரசர் மற்ற இராஜாக்களெல்லாம் தம் வழியைப்பிடித்து நடக்கும்படி ஜனோபகாரத்தின் மகிமையும் நன்மையான செங்கோலின் முறைமையும் இப்படிப்பட்டவையென்று தாம் அவலம்பித்துக்காட்டினார்.

இவர் இறந்துபோகும்போது இவருக்கு வயது தொண்ணூறு. இவர் மேலே விவரித்த நற்காரியங்களைச் செய்ததேயன்றி டில்லி நகருக்குச் சமீபத்தில் 'பிருஸ்பாத்' என்று தம் பேரால் புதியதோர் நகரும் கட்டுவித்தனர். அன்றியும் அநேக குற்றங்களுக்கு ஏற்பட்டிருந்த கொலைத் தண்டனையைமாற்றி வேறு இலகுவான தண்டனைகள் ஏற்படுத்தினார். வரிகளை வசூல்செய்யும் உத்யோகஸ்தர்கள் அக்கிரமமாக ஜனங்களை நெருக்கிக் கடும்வரிகொள்ளாமல் வரிகளை இவ்வளவென்று வரையறுத்து நிர்ணயித்தனர். கைகால்களைக் குறைத்து அங்கவீனம்செய்வதைச் சில குற்றங்களுக்குரிய தண்டனையாக மகம்மதீயசட்டங்கள் விதித்தபோதினும், அத்தண்டங்கள் மிக்க கொடியவாதலின் அவற்றைக் கூடாதென்று விலக்கினார். இவரது ஜனோபகாரமான பூபரிபாலத்தின் மகிமை நெடுந்தூரம் பரவி அக்காலத்தே மகம்மதீய சக்ரவர்த்தியாய் துருக்கி தேசத்தில் ஆண்டுவந்த காலிப் என்பவர் இவருக்கு பெருமையாக ஆடைகளையும் உபசார கடிதங்களையும் அனுப்பி இவரது பெருமையையும் நன்மையையும் உவந்துகொண்டனர்.

இவர் தமது ஆளுகையைப்பற்றித் தாமே எழுதிவைத்த சில சாசனங்கள் இருக்கின்றன. அவற்றில் பின்வருவது நாமெல்லோரும் படிக்கத்தக்கது.

"சொற்பக்காரியங்களுக்காக மகம்மதீயர்களின் இரத்தத்தைச் சிந்துதலும், அற்பக்குற்றங்களுக்காகக் கை கால்களைக் குறைத்து, கடூரமாக ஒறுத்துக், காதை மூக்கை அறுத்து, கண்ணைக்கெடுத்து, உயிரோடிருப்பவர்களைப் பெரும் குண்டுக்கற்களைக்கட்டி யுருட்டி எலும்புகளை முறித்துப்பொடித்து, உடலை நெருப்பாற் சொளுத்திச், சிலுவையிலறைந்து கொன்று, நகக்கண்களைப்பெயர்த்து, உயிரோடு தோலையுரித்து, சாட்டைகளாலடித்துக் கண்டதுண்டமாக உடலை நறுக்கிச் சித்திரவதை செய்து தண்டித்தல் முற்காலத்தில் வழக்கமாயிருந்தது. தமது பேரருளாலே என்னை அரசனாக்க உளம்புரிந்த கடவுள் இக்கொடிய வழக்கங்களை மாற்றி நன்மையைச் செய்ய வேண்டுமென்னும் ஆசையையும் எண்ணத்தையும் எனக்குக் கொடுத்திருக்கின்றார். அன்றியும், தினந்தோறும் ஆலயங்களில் எனக்கும் என் ராஜவம்சத்தாருக்கும் நன்மை யுண்டாகச் செய்யும் பிரார்த்தனைகளில், இனிமேல் எனக்குமுன் இந்த டில்லி ராஜ்யத்தை ஆண்டுவந்த அரசர்கள் பெயரையும், அவ்விதமாகக் கடவுளுக்கு அவர்மேலுள்ள கோபத்தை ஒருவாறு தணிவித்து அவரது கருணைக்குப் பாத்திரராக்கக் கருதிச்சேர்த்துப் பிரார்த்திக்கச் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கிறேன். சில்லரை வியாபாரிகளால் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்துவரப்படும் சில வெறுப்பான வரிகளையும், சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் ஆடு மாடுகளை மேய்ப்பதற்காக இடையர்கள் பெற்றுக்கொள்ளவேண்டிய அநுமதிப்பத்திரங்களையும், பூ விற்பவர், மீன் விற்பவர், பருத்தி ஆய்பவர், சமைபற்காரர், இவர்களுக்கிடப்பட்ட வரிகளையும், சில்லரைக்கடைக்காரர்கள், மது விற்பவர், இவர்களுக்கிடப்பட்ட தீர்வைகளையும், இனிமேல் தள்ளிவிடும்படி இதனால் உத்தரவுசெய்கின்றேன். இவ்விதமான வரிகளை, வசூல்செய்வோர் இஷ்டத்தைப் பொறுத்தவாகவிட்டு அதனால் ஜனங்களுக்கு அநேக நிர்ப்பந்தங்களை யுண்டாக்கி வசூல்செய்வதைப்பார்க்கிலும், அவற்றை முற்றிலும் இழத்தலே நலமாகும். அன்றியும் இனிமேல் சட்டபுஸ்தகங்களில் வியக்தமாகக் கண்டவரிகளையன்றி மற்றொரு வகையான வரிகளும் வாங்கப்படமாட்டா. உயுத்தத்தில் அபகரிக்கப்பட்ட பொருள்களில் ஐந்திலொருபாகம் போர்ச்சேவகர்க்கென்றும், மற்ற நான்குபாகமும் துரைத்தனத்தாருக்கென்றும், ஒரு ஏற்

பாடு கெடுகோளாய் வழங்கிவருகிறது. இனிமேல் அப்பொருள்களில் நான்குபாகம் சேவகர்களுக்கும், ஒரு பாகம் மாத்திரமே அரசனுக்கென்றும், நான் உத்தரவுசெய்கின்றேன். பின்வரும் குற்றங்களைச் செய்பவர்களை இராஜ்யத்தில் இருந்து தூரத்தும்படிச் செய்வேன். அவர் யாவரென்னில்: தெய்வத்தை ஒப்புக்கொள்ளாத நாஸ்திகர்கள், துர்மார்க்கங்களைப் பழக்கிவைப்பவர், கைக்கூலி வாங்கும் உத்தியோகஸ்தர்கள், கைக்கூலி கொடுப்பவர்கள் என்பவர்களாம். எனது பிரஜைகள் என்னைக்கண்டு பழகும்படி டாம்பீகமான பட்டுடைகளையும் ஆபரணங்களையும் தரிப்பதில்லையென்று தீர்மானித்தேன். வழிப்போக்கர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சத்திரங்கள், மசூதிகள், கிணறுகள், தடாகங்கள், வாய்க்கால்கள், கால்வாய்கள், வைத்தியசாலைகள், தர்மசத்திரங்கள், பாடசாலைகள் முதலாக ஜனோபகாரகாக என் முன்னோர்களால் செய்விக்கப்பட்ட ஒவ்வொரு கட்டடத்தையும் பழுதுபார்த்துப் புதுப்பிக்கக்கருதி அவற்றின் செலவுகளுக்கும் வரிகளிலிருந்து ஒரு வீதம் ஏற்படுத்தியிருக்கின்றேன். அன்றியும் எனக்குமுன் அரசுபுரிந்த மகமது டோக்ளாக்கென்பவரின் அக்கிரமத்தண்டனைகளால் இறந்துபோனவர்களின் பந்துக்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு உபகாரச்சம்பளங்கள் கொடுத்து அவ்வரசனை முற்றிலும் மன்னிக்கும்படிச்செய்து, அவர்கள் அவ்வாறு செய்ததைத் தக்க சாக்ஷிகளோடு பத்திரங்களில் எழுதுவித்து அவற்றையெல்லாம் எனக்குக் கிடைத்தவரையில் சேர்த்து ஒரு பெட்டியில் போட்டுப் பூட்டி அவ்வரசன் கல்லறைக்குள்ளே புதைத்துவைக்கும்படிக் கட்டளையிட்டேன். என்னுடைய இராஜ்யத்தில் உள்ள கல்விமான்கள் புண்ணியவான்களாகிய பெரியோர்களையெல்லாம் சென்று கண்டு அவர் அனுக்கிரகத்தைப்பெற்று அவர்களைக் காப்பாற்றி வருகின்றேன். என் இராணுவவீரர்களில் எவரேனும் வயோதிகத்தாலாவது காயங்களாலாவது வேலைசெய்வதற்கு அருகமில்லாதவரானபோது, ஜீவபரியந்தம் அவர்களுக்கு முழுச்சம்பளமும் உபகாரார்த்தமாகக் கொடுக்கும்படித் திட்டஞ்செய்திருக்கிறேன். என்னைக் கொல்லுதற்கு இருமுறை பிரயத்தனப்பட்டார்கள் ஆயினும் பலிக்கவில்லை."

THE SCENERY OF THE CAUVERY.

காவேரி நதியின் அழகிய காட்சி.

I

காவேரி நதியைப்பார்க்கிலும் பரிசுத்தமான நதி இவ்விந்துதேசத்தில் வேறேயில்லை. மலைநாடாகிய குடகுதேசத்தில் இதன் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து தீபகற்பத்தைக் கடந்து நெடுந்தூரம்சென்று, எண்ணிறந்த கிளைகளாகப்பிரிந்து, திரிச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் என்னும் ஜில்லாக்களைச் செழிப்பித்து, வரையாது வழங்கி வறுமையடைந்த வள்ளலார்போல ஒடுங்கிச்சுருங்கி வங்காளக்கடலில் சங்கமமாகும் வரையிலும் ஓரிடம் ஒழியாமல் இதன் மகிமை கொண்டாடப்படும்.

இந்தக்குடகு நாடானது மைசூர் ராஜ்யத்துக்கு மேற்புறத்தில் மலைகளின் மத்தியில் உள்ள ஒரு சிறு தேசம். இதில் பிரமகிரியென்று உயர்ந்தமலையொன்று இருக்கின்றது. இம்மலை சமுத்திரமட்டத்துக்கு 5000-அடி மேலுயர்ந்திருக்கின்றது. இம்மலையின்மேல் நவம்பர் மாதத்தில் காலைவேளையில் மப்புமந்தாரம் இல்லாதபோது நின்று நோக்கினால் நாற்புறமும் காணப்படும் காட்சி வெகு மனோகரமாயிருக்கும். கண்ணுக்கெட்டியவரையிலும் புல்லும் மரமும் அடர்ந்துவளர்ந்த காடுகள் நெருங்கிய குன்றுகள் அநேகம் காணப்படும். இக்குன்றுகள் சிற்சில விடங்களில் அலைகள்போல மட்டமாக உயர்ந்தும் சிலவிடங்களில் கூரிய கொடுமுடிகளாக ஓங்கியும் இருக்கும். மேற்புறத்தில் நெடுந்தூரத்துக்கப்பால் கருநீலம் பாய்ந்த இந்துமகா சமுத்திரம் [illegible] பொருந்திய வளைந்த அநேக ஆறுகள் பாயும் அகன்ற பிரதேசத்துக்கப்புறம் கண்ணுக்குத் தோன்றும்.

மேலேகூறிய பிரமகிரியின் உச்சியில் தலைக்காவேரி யென்னும் விடத்தில் காவேரிநதி முதலில்ஓர் சிற்றருவியாக உற்பத்தியாகின்றது. [illegible] இது இருண்ட குகையினின்றாயினும் [illegible]ந்த பனிக்குகையினின்றாயினும் உற்பத்தியா[illegible]றதில்லை. பசியமலைப்பக்கத்தில் நின்றுண்டாகி, அடியில் ஒரு கற்றொட்டியில் வீழ்ந்து, அங்கு நின்று மூன்றடியாழமும் முப்பதடி சமசதுரமுமான ஓர் தடாகத்திற் பாய்கின்றது. இக்கற்றொட்டிக்கு மேலே ஒரு சிறிய கோயில் உள்ளது. இங்கு நின்று ஒரு வாய்க்கால் வழியே நீர் வெளியே செல்லுகின்றது. இதுதான் இந்நதியின் உற்பத்தி.

வருஷந்தோறும் அக்டோபர் மாதத்தில் இந்த மகா பரிசுத்தமாகிய ஸ்தலத்தில் ஒரு உற்சவம் நடத்தப்படும். அவ்வுற்சவத்துக்கு எண்ணிறந்த ஜனங்கள்வந்து கூடுவார்கள். குடகு தேசத்தில், ஒவ்வொரு வீட்டாரிலும் ஒன்றிரண்டுபேருக்குக் குறையாமல் வருவதன்றி, மைசூர், கன்னடம், மலையாளம் முதலிய தேசங்களிலிருந்தும் ஜனங்கள் ஆயிரக்கணக்காய் வருவார்கள். இவர்கள் சிங்காரமான உடைகள் தரித்து கும்பல் கும்பலாய்ப் பற்பல பாதைகளூடே மலைச்சார்புகளில் ஏறிச் செல்வதைக்காண வெகு விசித்திரமா யிருக்கும். பாட்டும் ராகமும் எங்கு பார்த்தாலும் ஒலித்துக்கொண்டே யிருக்கும். இது உற்சவம்கொண்டு உவக்கும் காலமாதலால் இக்காலத்தில் மழைகள் நீங்கித் தாழ்வரைகளில் நெற்பயிர்கள் விளைந்து கதிர்முற்றிக், காடுகளும் குன்றுகளும் செழித்துத்தளிர்த்து பச்[illegible] காந்தியோடு விளங்கிக்கொண்டிருக்[illegible]

[illegible]குடகு நாட்டார் மிக்க தைரியமும் சுறுசுறுப்புமுள்ள ஜனங்கள். பார்வைக்கு உயர்ந்து அழகாயிருப்பார்கள். பெண்கள் அநேகமாகச் செகப்பாயும் அழகாயும் ஓங்கிவளர்ந்துமிருப்பார்கள். இவர்கள் தம் நாட்டை வெகு ஆவலோடு நேசித்து உலகிலுள்ள மற்றெத்தேயத்திலும் அதைச் சிறந்ததாகச் சிலாகித்துக் கொள்வார்கள்.

இவர்கள் எப்போதும் பாடிக்கொண்டே யிருப்பவர்கள். இவர்களுக்குள்ளே ஒவ்வொரு பிரகிருதத்துக்கும் ஒவ்வொரு பாட்டு ஏற்பட்டிருக்கும். அப்பாடல்களில் அநேகம் பின்வருமாறு ஆரம்பிக்கும்.

> "பெயர்மலி சம்புப்பெருந்தீவதனில்
> செயன் மலிவளனுறதிருவளர் நாடுகள்
> பற்பலவுள்ள அற்புதமானவை;
> அன்னறவற்றெல்லாம் துன்னியவரைகளில்
> பொன்மலைபோலவும், நன்மலர் பூத்துப்
> பொதுளியகாவிடைமதுமலிசண்பகப்
> புதுமலர் போலவும், பொலிந்திடுமொங்கே,
> முத்துநன்மாலிகை முழுவனப்பதனை
> ஒத்திடும் குடகெனு மொண்ணுடதுவே;
> ஆயவந் நாட்டில் அமர்ந்தனை நண்ப
> நேய மோடுவாழ்குக நெடிதே."

இந்த உற்பத்தி ஸ்தானத்திலிருந்து காவேரியாறு குடகு நாடூடே முப்பது மைல்தூரம் இருகரைகளிலும் ஓங்கிவளர்ந்த பொழில்களின் வழியே வளைந்துசென்று அநேக உபநதிகளைப்பெற்று மைசூர் நாட்டின் எல்லையை அடையுமுன் ஓர் பெரிய ஆறாகப் பெருகுகின்றது. ஸ்ரீரங்கப்பட்டணத்தை அடையும் காலையில் அது அகன்று பரந்த பெருநதியாகப் பிரவாகித்து அத்தீவைச்சூழ்ந்து கற்களும் பாறைகளும் செறிந்த அடித்தரையூடே கிழித்துச் செல்லுகின்றது.

இச் சீரங்கபட்டணத்தீவில் உள்ள கோட்டை ஒளிர்ந்து சரித்திரத்தில் அங்கிலேயர் வெற்றிகளில் மிகவும் பேர்போனது. இது சிறிதும் ஒழுங்கில்லாமல் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மதில்கள் மிகவுயர்ந்திருப்பினும் பார்வைக்கு அந்தமும் தோற்றமும் இல்லாமலிருக்கும். அக்காலத்தில் அங்கிலேயர் இடித்துப்புகுந்த அபாயமான மதிற்சந்து, அநேகம் போர்வீரர்கள் சமர்புரிந் துயிர்துறந்த வன்றைப்போலவே இன்றும் உள்ளது. உள்மதிலில் திப்புசுல்தான் அன்று கடும்புலிபோல வீராவேசங்கொண்டு போர்செய்து மடிந்து பிணக்குவியலில் புதைந்துகிடந்ததாகிய குறுகிய திப்பு

சுல்தான் வாசல் இன்னும் அப்படியே யிருக்கின்றது. அவனை அன்று கொன்றவன் இன்னானென்று ஒருவரும் அறியார்கள். அவன் குரூரனும் தயையில்லாதவனும் வஞ்சகனுமானாலும் கடைசியில் அரசனைப்போலவும் வீரனைப்போலவும் போர்செய்து மரண மடைந்தான். இக்கோட்டைக்கு ஒன்றரைமைல்தூரத்திலேகாந்தமான ஒரு தோட்டமிருக்கின்றது. இத்தோட்டத்தில் இருபுறமும் ஓங்கிவளர்ந்தமரங்களுக்கிடையே ஓர் பாதை செல்லுகின்றது. அப்பாதை வழியாகச் சென்றால் பளபளவென்று கண்ணைப் பறிக்கின்ற வெண்ணிறமான கோபுரங்களும் ஸ்தூபிகளுமாகச் சிரித்துச் சிங்காரிக்கப்பட்ட எண்கோணுகிருதியான ஒரு உயர்ந்த சமாதி மண்டபம் காணப்படும். இதைச் சுற்றிலும் வழவழவென்று இழைத்த கருஞ் சலவைக்கற் கம்பங்கள் நிறுத்திய தாழ்வாரம் ஒன்றும் உள்ளது. இம்மண்டபத்தின் மூன்று பக்கங்களிலும் அழுத்தமான கருங்காலிமரத்தாற் செய்யப்பட்டுத் தந்தமிழைத்த ஓங்கியுயர்ந்த இரட்டைக்கதவுகளும் கண்ணாடிபோலப் பளபள வென்று பிரகாசிக்கின்ற கருஞ்சலவைக்கற்களால் அமைக்கப்பட்ட வாயில்களும் உள்ளன. இவ்வாயில்களில் ஒன்றினூடே உள்ளேநோக்கின் அம்மண்டபத்தின் மத்தியில் ஒன்றின் பக்கத்திலொன்றாய் மூன்று கோரிகள் காணப்படும். இவற்றுள் ஹைதராலியும் அவன் மனைவியும் அவன் மகனாகிய திப்புசுல்தானும் கிடந்து உறங்குகின்றனர். திப்புவின் சமாதி பூக்கள்போட்ட விலையுயர்ந்த பட்டினாலும் மற்றவை யிரண்டும் பொற்சரிகையிட்ட சிகப்புப்பட்டாலும் மூடப்பட்டுள்ளன.

இங்கிருந்து சுமார் நாற்பது மைல் அளவும் காவேரி நதி நன்றாகப் பயிர்செய்யப்பட்டுக் குளங்களும் நகர்களும், கிராமங்களும் அங்கங்கே அமையப்பெற்ற சமநிலங்களினூடே பாய்ந்து, கடைசியில் மைசூர் நாட்டுக்கும் கோடை வெயிலால்தபிக்கும் பள்ளநிலங்களாகிய கர்நாடக தேசத்துக்கும் நடுவில் உள்ள மலைப்பிரதேசத்தை யடைகின்றது. இங்கு இந்நதிகால் மயில் அகலமுள்ளதாய் இரண்டு கிளைகளாகப் பிரிந்து சிவசமுத்திரம் என்னும் தீவைச்சுற்றி யோடுகின்றது. இத்தீவில் ஒரு நகரமும் புராதனமான பிரசித்திபெற்ற கோயிலும் இருக்கின்றன.

இங்கு ஆறு அதிவேகமாய்ப் பாய்தலினாலும் ஆற்றின் அடித்தறை மேடும் பள்ளமுமாயிருத்தலினாலும் அதைத் தாண்டி இத்தீவைப்பகைவர்கள் அடுப்பது பிரயாசமாகும். இதன் தலைப்பக்கத்தில் இந்நதியின் இரண்டு கிளைகளையும் கடந்து செல்ல வெகு விசித்திரமானவையும் இந்துக்கள் கைப்பாடென்று எளிதில் தெரிந்துகொள்ளத் தக்கவையுமான பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நதியின் அடித்தறையில் அங்கும் இங்கும் சிதறிக்கிடக்கும் பாறைகளின்மீது சதுரமான அடிகள் வைத்த உருண்ட கம்பங்கள் இணையிணையாக நிறுத்தப்பட்டு அவற்றின்மேல் குறுக்காக உத்திரங்கள் பாய்ச்சி அவ்வுத்திரங்கள் மேல் பாதையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இணையிணையாக நிறுத்தப்பட்ட கம்பங்கள் ஐந்நூறு சோடுகளுக்கு மேலேயுள்ளன. அஸ்திபாரம் பலமாயிருத்தல் இன்றி யமையாததலாலும், பாறைகள் தொடர்ந்து நில்லாமல் பிரிந்து நிற்றலினாலும் எங்கெங்கே அடிப்பலம் கொடுக்குமோ அவ்வழியாக இப்பாலம் கோணி நெளிந்து போயிருக்கின்றது. இப்பாலத்தைச் சிற்பநூலார் கண்டு திருப்தி யடையமாட்டார்களாயினும் மற்றவர்களுக்கு இதன் வளைவும் வடிவும் வெகு நேர்த்தியாயிருக்கும். இப்பாலத்தின்மீது இருபுறமும் நுழைகள் அழைத்த கைபிடிச்சுவர்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இதன் மீது வண்டிகள் அபாயமின்றிச் செல்லக்கூடும். பாம்பு நெளிதல்போலக் கோணிச்செல்லும் இப்பாலத்தில் இந்துக்களுக்கு விசித்திரமாகத் தோற்றுவது ஒன்றும் இல்லை; நதி வளைந்து செல்லும்போது அதன்மேற் செல்லும் பாலமும் ஏன் வளைந்திருக்கக்கூடாது என்பார்கள்.

[illegible]துக்கு ஒருமைல் கிழாகக் காவேரி நதி மேட்டில் நின்று பள்ளத்தில் விழுகின்றது. இங்குதான் பள்ள நிலங்களை அடைதற்கு இந்நதி முதல் முதல் கீழ்நோக்கி அடியெடுத்து வைக்கின்றது. இத்தீவின் இருபக்கத்திலும் இந்நதியின் இரண்டு கிளைகளிலும் ஒவ்வொரு வீழ்ச்சி யிருக்கின்றது. வடகிளையிலுள்ள வீழ்ச்சிதான் மிகவும் பயங்கரமானது. இத்தீவு ஒருவரையும் அண்டவொட்டாமல் துரத்தியடித்து அதைக் காத்துக்கொண்டிருக்கும் ஒரு பூதத்தின் சாபத்தை யடைந்திருக்கிறதென்றும் இங்கு அநேகம் கோரமான கொலைகள் நடந்திருக்கின்றனவென்றும் சொல்லுவதற்கேற்ப இக்காட்சி பார்ப்பவர்களுக்கு மிக்க பயங்கரமாயிருக்கும்.

இங்கு நின்று ஐம்பதுமைல் வரையில் ஊளை யிடும் காடென்று உண்மையில் சொல்லத்தக்கதும், மலைகளின் அழகு சிறிதும் இல்லாமல் வறண்டு வற்றிக் கல்லும் கறடுமாய் விஷஜ்வரத்துக்கு இருப்பிடமாயுள்ளதுமான முட்செடிகள் வளர்ந்த காடுகளால் மூடப்பட்ட பயங்கரமான மலைப் பிரதேசத்தூடே இந்நதி கிழக்கு நோக்கிச்செல்லுகின்றது. இப்பிரதேசத்தில் ஆழ்ந்த குழிகளில் அங்கங்கே சிறிது ஜலம் காணப்பட்டு அவ்விடங்களில் புல்லும் புதரும் உயர்ந்து நெருங்கிவளர்ந்திருக்கும். இந்தகோரமான பிரதேசம் பாலைவனம்போலத் தீய்ந்து மடிந்து கிடப்பினும் இங்கு பெருங்காடுகளிலும் அதிகமாக விலங்குகள் நெருங்கியிருக்கும். பலவகையான மானினங்கள் நிச்சத்தமான புதர்களுக்கிடையே அலைந்துதிரியும். இவற்றிற்குச் சமீபமாகவே பயங்கரமான [illegible]ப் பிடித்து அமைத்ததுபோல உரு[illegible] சிறுத்தைப்புலிகளும் வேங்கைப் புலிகளும் பதுங்கியிருக்கும்.

இந்த அபாயமும் பயங்கரமுமான பிரதேசத்தின் வழியே, இருபுறமும் கரைகள் இருநூறு முந்நூறடி செங்குத்தாக உயர்ந்திருக்க ஒரு குறுகிய பள்ளத்தாக்கினிடையே இந்நதி செல்லுகின்றது. இங்கு இருபுறமும் நெடுந்தூரத்துக்கு மனிதர்கள் சஞ்சரிக்கும் பாதைகளாவது கிராமங்களாவது இல்லாமையினாலே இந்நதியின் இப்பாகத்தை ஜனங்கள் இலகுவில் கண்டுபிடிக்க முடியாது. பூமி காடுகரம்புகள் நீங்கி வெட்டவெளியாகத் தோன்றுகின்ற இடங்களில் மனிதசஞ்சாரமும் வீடுகளும் காணப்படும். தென்பக்கத்தில் காடுகள் கறைந்து விளைநிலங்கள் காணப்படுகின்றதனால் அங்கு குதிரைகளையும் எருது மாடுகளையும் மாத்திரமே கொண்டு செல்லக்கூடிய ஒரு குறும்பாதை போகின்றது. இது மலைநாட்டுக்கும் கீழ்நாட்டுக்கும் இன்றைக்கும் போக்குவரவு செய்தற்கு முக்கியமான வழியாயிருக்கின்றது.

முன்னொருகாலத்தில் ஒருவாறு ஜனவடர்த்தியுள்ளதும் உழுது பயிரிடப்பட்டதுமாயிருந்த பிரதேசத்தின் வழியே இந்நதியைத் தொடர்ந்து இருபதுமைல்தூரம் செல்லின் காவேரிபுரம் கணவாய்க்கு வந்து சேரலாம். இது ஒருகாலத்தில் இந்தமலைப்பிரதேசத்துக்கும் கீழ்நாடுகளுக்கும் இடையில் உள்ள இரண்டு மூன்றுவழிகளில் ஒன்றாய்ப் பிரசித்தி பெற்றிருந்தது. இந்தமலைக்கணவாயின் ஆரம்பத்தில் முன்னேயிருந்த கிராமத்தின் சேஷமாக இப்போதுள்ளது ஒரு பெரியகோயில் ஒன்றுதான். இதன் கற்கம்பங்கள் நிறுத்திய விசாலமாகிய புறந்திண்ணை இப்போதும் பிரயாணிகளுக்குத் தங்கும் சாவடியாக உபயோகப்படுகின்றது.

நம்வழியைத் தொடர்ந்து முன்னோக்கிச் செல்லின் கணவாய்க்கு வந்து சேருவோம். இக்கணவாய் செங்குத்தாய் மரம்செடியற்றுப் பயங்கரமான குன்றுகளுக்கு மத்தியில் பதினெட்டுமைல்தூரம் படிப்படியாக இறங்கிச்

கடைசியில் காவேரியில் வந்து முடிகின்றது. இதன் ஓரமாக ஒரு சிறு அருவி ஓடுகின்றது. மேற்கூறிய பாதை இவ்வருவியைத் தொடர்ந்து சென்று இவ்வருவியின் அடித்தறையை ஒன்பதுதரத்துக்குக் குறையாமல் கடக்கின்றது.

இங்கு ஒரு மேட்டு நிலத்தில் நின்று பார்த்தால் இம்மகாநதி இருகரைகளிலும் மரங்கள் நெருங்கிப் பசுமையாகிய பள்ளத்தாக்கின் வழியாகத் தெற்குமுகமாகத் தகதகவென்று ஒளி வீசிக்கொண்டு வருவதைக் காணலாகும். இப்பள்ளத்தாக்கின் இருபக்கங்களிலும் மலைத்தொடர்கள் சுவரெடுத்ததுபோல நிற்கின்றன. மேல்புறத்தில் காவேரிபுரம் கணவாய் இத்தொடர்களுக்கு மத்தியில் பரவியிருக்கின்றது.

இவ்விடத்தில் இந்நதி தான் நெடுந்தூரம் திரிந்துவந்த மலைநாடுகளைக்கடைசியாக விட்டு நீங்கித் தென் முகமாகத்திரும்பி நாற்பதுமைல் தூரம் ஒரேபார்வையாக இருபுறமும் வெள்ளம் கரைபுரள அகன்று ஓடுகின்றது. ஆயினும் இதன் இருபுறமுமுள்ள பிரதேசங்கள் இன்னம் விளைவின்றிக் கல்லும் காடுமாயே உள்ளன. இதன்கரைகளும் நீரேறிப்பாய வொண்ணாதபடி உயர்ந்திருக்கின்றன. இங்கு இந்நதியிடையே மரங்கள் நெருங்கிவளர்ந்த மூன்று நான்கு தீவுகள் இருக்கின்றன. ஜூன், ஜூலை, ஆகஸ்டுமாதங்களில் நதியில் பிரவாகம் பூரணமாகி இத்தீவுகளைச்சுற்றி ஜலம் அதிவேகமாக ஓடிக்கொண்டிருக்கும் சமயத்தில் எண்ணிறந்த நீர்ப்பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தற்கு இங்குவந்து சேரும். மரங்கள் எல்லாம் இப்பறவைகளின் கூடுகளால் நிறைந்துபோகும். பலவகையான கொக்குகளும் நாரைகளும் தமது அகன்ற சிறகுகளை விரித்துக்கொண்டு இடைவிடாமல் வட்டமிட்டுக்கொண்டிருக்கவாயினும், அல்லது மரங்களின் உச்சியில் வரிசை வரிசையாக விசித்திரமாக உட்கார்ந்திருக்க வாயினும் நூற்றுக்கணக்காகக் காணப்படும்.

இங்குநின்று இந்நதி மேனோக்கிச்சென்று பவானி யென்னும் ஊருக்கருகில் நீலகிரி மலையிலிருந்து வருகின்றதும் பவானியென்னும் அவ்வூரின் பெயரையே கொண்டதுமான பெரிய உபநதி யொன்றைப் பெறுகின்றது. அவ்விரண்டு நதியின் சங்கமத்துக்கு நடுவே ஒரு பட்டணம் இருக்கின்றது. இங்கு சங்கமத்துக்குச் சற்று மேலாக அநேகம் கண்களுள்ள இரண்டு பெரிய பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இதற்குச் சிறிது தூரத்துக்கப்பால் 'ஈரோட'ண்டையில் இந்நதிமேல் இருப்புப்பாதைப் பாலமொன்று செல்லுகின்றது. இங்கு ஒரு பெரிய ரெயில் ஸ்டேஷனும் அநேக வேலைகளும், கட்டடங்களும் இந்துக்களுடைய தூங்கற்றனத்துக்கு எதிரிடையாக ஐரோப்பியரது பெருமுயற்சியானது இன்னதென்று விளங்கச் செய்வதுபோல அடியும் இடியும் ஓசையும் பூசலுமாகக் காணப்படும். போகப்போகப் பிரவாகம் பொங்கி அகலமும் பெருகிக்கொண்டு ஐம்பது மைல்தூரம் முன்னோக்கி விரைந்து புரண்டோடுகின்றது. கிழக்கு நோக்கிச் செல்லச்செல்ல இருபுறமும் சுபிக்ஷமான விளைவயல்களும் தோப்புகளுமாய் வெகு அலங்காரமாயிருக்கும். கருவூரைச் சாரும்போது இந்நதி ஒருமைல் அகலமுள்ளதாய் ஆனைகள் சஞ்சரிக்கும் ஆனைமலைகளிலிருந்தும் வருகின்ற அமராவதி யென்னும் உபநதியைப் பெறுகின்றது. இவ்விரண்டு நதிகளின் சங்கமத்துக்கு மத்தியிலுள்ள பிரதேசம் ஆற்றின் அடித்தறையினின்று அடித்தொதுக்கப்பட்ட மணற்குன்றுகளால் மூடப்பட்டுள்ளது. இந்த அலைபோலெழுந்த மணற்குன்றுகள் அடிக்கடி இடம்பெயர்ந்து தென்மேற்குக் காற்றடிக்கும்போது முன்னோக்கிச் சென்றும் வடகிழக்குக் காற்றடிக்கையில் பின்னிடைந்தும் இருக்கும். இவை அநேக வயல்களையும் வேலிகளையும் மூடியதுமல்லாமல் ஒரு காலத்தில் ஒரு கோயிலையும் உட்புதைத்து விட்டன. இக்கோயிலின் மேற்கூரையின் ஒரு பாகமும் கோபுரமும் மாத்திரமே இப்போது இம்மேடுகளுக்குமேல் தெரிகின்றன. பனைகளும் தெங்குகளும் பாதிக்குமேல் புதைந்துபோயிருக்கின்றன

(இன்னும் வரும்.)

THE PRINCIPLE AND METHOD OF TEACHING CHILDREN,

பாலபோத சாதக சாதன முறை.

A REVIEW OF THE NEW "TAMIL INFANT PRIMER"

BY

S. G. DANIEL B.A., *

பாலர்களுக்குப் போதிப்பதில் அவர்கள் மனமறிந்து போதிக்கும் திறமை ஆசானுக்கு இருக்கவேண்டியது அவசியம், அத்திறமையில்லாவிட்டால் அவர்களுக்குப் போதிக்கும் சக்தி ஆசானுக்கு உண்டாகமாட்டாது.

போதனை யென்பது புத்தியின் கற்பனை. "கற்றதோர் கல்வியும் மனப் பழக்கம்" என்றதனால் மனப்பழக்கமின்றி கல்வியில்லை. "மனப் பழக்கம் என்றால் என்ன?" என்கிற கேள்வி பிறக்கலாமே. அதையும் விளங்கக் கூறுவோம்.

மனம் சங்கல்ப-விகல்ப ரூபமாயிருப்பது: அப்படியென்றால், நினைத்தலும் மறத்தலுமே தொழிலாயுள்ளது. இந்தத் தொழிலில் அதைப் பழக்குவதாவது எப்படியென்று கேட்கலாம். அதை ஒரு உதாரணத்தால் விளக்குவோம். ஏன் எனில் மனம் சூக்ஷ்மரூபமுடையதாலும் அதன் தொழிலைக் கவனித்து அறிவது ஸ்தூலபாவனையில் தானே பழகினவர்களுக்கு கஷ்டசாத்தியமா யிருக்குமாதலாலுமென்க.

மனதுக்கு பதிலாக குதிரையைப் பழக்குவதை யெடுத்துக் கொள்ளுவோம். அதற்கு ஓடுவதும் நிற்பதும் சுபாவமான தொழில். குதிரையைப் பழக்குவதாவது, அது மனிதன் இஷ்டப்படி ஓடவும் நிற்கவும் பழக்குதலாம். அப்பொழுதுதான் அது சவாரிக்கு யோக்கியமானதாகும். குதிரை அதற்குத் தோன்றியபடி ஓடுவதும் நிற்பதுமாயிருந்தால் சவாரி செய்வோன் பாடு திண்டாட்டமாகத்தான் முடியும். ஏனெனில் திடீரென்று ஒன்றைக்கண்டு மருண்டு ஓடும். மறுபடியும் திடீரென்று தானே மற்றொன்றைக் கண்டு நின்று விடும். இப்படி திடீரென்று ஓடுவதாலும் திடீரென்று நிற்பதாலும் சவாரி செய்வோனுக்கு ஆபத்து விளையுமென்பது நிச்சயம். அதை சவாரி செய்வோன் இஷ்டத்துக்கிசைந்து ஓடவும் நிற்கவும் பயிற்றுவது தானே அதைப் பழக்குதலாகும். அதேமாதிரியாக நினைத்தலும் மறத்தலுமே சுபாவமாக வமைந்துள்ள மனதை தான்தோன்றியாக அதுவிஷயங்களைப் பற்றி ஓடவிடாமல் "இஷ்டம்" என்கிற மனச்சாட்சியின் சக்திக்கு அடங்கி நடக்கப் பழக்குதல் தானே மனப்பழக்கமாம்.

குதிரைக்குக் கடிவாளமும் லகானும் எப்படியோ அப்படி மனதைப் பிடித்துப் பழக்கக் கவனமும் மனனமும் சாதனங்களாகும். கவனம்—என்பது குறித்த விஷயத்தில் மனதைச் செலுத்தி அதைப்பற்றி நிற்கும்படிச் செய்தல். மனனம்—என்பது மனம் பற்றினதைப் பற்றுவிடாமல் பிடித்து நின்று தைலதாரைபோல் மனமும் விஷயமும் ஒன்றுபட்டுத் தொடர்பிடியாய்த் தொட்டுத் தொடர்ந்து நிற்பது.

குதிரையைப் பழக்கக் கடிவாளமும் லகானுமிருந்தாலும் அதை அவற்றிற்குப் படிந்து நடக்கச்செய்ய சவுக்கும் வேண்டும். அதுபோலவே கவனம் மனனம் இரண்டும் மனப்பழக்கத்துக் கின்றியமையாத சாதனமாயினும் அச் சாதனம் பயன்படுவதாக 'பிரசனோத்தரரூப" சம்பாஷணை யென்னும் "சவுக்கு" வேண்டும்.

சவுக்கால் தட்டி குதிரையின் கவனத்தைக் கிளப்பி அதை ஓடவும் நிற்கவும் பழக்குதல் போல, பிரசனோத்தரரூப சம்பாஷணையினால் குழந்தையின் மனதைக் கிளப்பி நினைத்தலும் மறத்தலுமாயிருக்கிற அதன் தொழிலை ஆசான் செலுத்தும் வழியில் முறைப்படி செல்லப் பயிற்றல்வேண்டும்.

* Approved by the Director of Public Instruction; With Hints to Teachers as A Supplement to the Tamil Infant Primer, by the same Author C. L. Society, Madras.

உதாரணம் வேண்டில் சொல்லிக் காட்டுவோம். செப்புவைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருக்கிற குழந்தையின் கவனத்தைப் பற்ற ஆசான் அதை அடித்துப் பிடித்து உட்காரவைத்து இந்தப் பாடத்தைப் படியென்று புஸ்தகத்தைக் கையில் கொடுத்தால் அது பலிக்காது போம். ஆனல் செப்புவைத்து விளையாடுகிற குழந்தையினிடம் "இந்தா அப்புச்சி" யென்று சிறிது வெல்லத்தை அல்லது மிட்டாயைக் கொடுத்து, அந்த மிட்டாயின்மேல் ஈ மொய்க்கிற சமயம் பார்த்து "இதோ பார்த்தாயோ ஈ!" என்று அந்தப் பூச்சியைக் காட்டி "அது என்ன?" வென்று உடனே குழந்தையைக் கேட்டால் "ஈ" என்று சந்தோஷம் பொங்க அது பதில் கூறும். நாவுக்கு உருசி எப்படியோ அப்படியே அறிவானுக்கு அறிவு உருசிகரமாயிருக்கும்.

குழந்தையின் உள்ளறிவைக் கிளப்பிவிட்டால் அது அறிவு தேடி ஆனந்திக்கும்.

குழந்தையின் கவனம் ஈ என்கிற ஜந்துவின் பேரிலிருக்கும்பொழுது அதன் கால்கள், இறக்கை முதலியவற்றைக் காட்டி அவைகளைக் கவனிக்கும்படிச் செய்யவேண்டும். பிறகு பாடப் புஸ்தகத்திலுள்ள ஈயின் படத்தைக் காட்டி ஈ என்கிற ஜந்துவின் உருவத்தை அதன் படத்தில் கண்டுகளிக்கப் பழக்கவேண்டும். பிறகு ஈ என்கிற பொருளைத் தள்ளி அதன் சப்த மாத்திரையான ஈ என்னும் உயிரெழுத்தில் குழந்தையின் மனத்தை நிறுத்தவேண்டும். அப்புறம் அந்த சப்த மாத்திரையின் வடிவத்தை அக்ஷரமாக வரைந்து காட்டவேண்டும். அப்படி வரைந்து காட்டுவதிலும் ஈயின் காலையே உவமானமாகக் கொண்டு சூக்ஷ்ம சப்தமாகிய ஈ என்னும் எண்ணத்திற்கு வர்ணரூபமாயமைந்த அக்ஷரம் அல்லது எழுத்தின் வடிவத்தை இரண்டு கால்களும் மேலே ஒரு கோடும் கீழே அரைக்கோடும் இடையே ஈயின் கண்கள் போல் இரண்டு புள்ளிகள் அதற்குக் கண்களாக அமைந்துள்ளதாயும் சொல்லி "ஈ" என்கிற எண்ணும் எழுத்தும் குழந்தையின் மனக்கண்ணுக்குப் பிரத்தியக்ஷமாகப் படும்படிச் செய்து காட்டவேண்டும். இதற்குச் சாதனங்கள் பல கிண்டர்கார்டன் முறையில் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படிப் போதிப்பது அக்ஷராப்பியாசமாம் வித்யாரம்பம் முதல் ஆதிபகவனைக் காட்டும் வரையிலுள்ள "வித்தியாப்பியாச முடிவு" வரையில் உண்மையாக வழங்கும் உபதேசமுறையாம்.† இதற்கு "உருக்காட்டி உருமறைத்தல்" என்று சொல்கிறது. "ஈ" என்கிற ஜந்துவின் உருவைக்காட்டி, அந்த ஜந்துவின் உருவை மறைத்து ஈ என்கிற சப்தத்தின் சூக்ஷ்மாதத்தையும் அதன் ஸ்தூல வடிவாம் எழுத்தையும் காட்டிப் போதிப்பது போலவே குழந்தைமனம் மாறாத முமுக்ஷுக்களுக்கு மனோபக்குவமறிந்து குருமூர்த்தமாயவதரித்த பகவான் "ஈம்" என்கிற பீஜாக்ஷரத்தை உபதேசித்து அதன் தேவதா ரூபத்தை (திவ்ய-தேஜோமய-ரூபத்தை)க் காட்டிப் பின்னர் அந்த உருவை மறைத்து அதின் மறைபொருளாயுள்ள தன்னைக் காட்டிக் கடைத்தேறச் செய்வார். இதை யொரு பெரியவர் பூர்வத்தில் குழந்தைகளுக்கும் அவதானமாகும் பாட்டாகக் கற்பித்துள்ளார். அதை மிஸ்ஸஸ் ப்ராண்டர் தயார் செய் கிண்டர்கார்டன் பாடப் புஸ்தகத்தில் சேர்க்கச் செய்தோம். அப்பாட்டு கிண்டர்கார்டன் விளையாட்டு முறைக்கு (Action Song) இசைந்ததாயிருப்பதுபோல் இன்னும் எத்தனையோ ஆதிதொட்டு பழக்கத்தில் வழங்கி வந்துள்ளன. இதை இதன்பி[illegible] அச்சிட்டிருக்கிறோம். அகாரத்தை [illegible]வின்றி மொண்ணையாக அச்சிட்டுக்காட்டும்[illegible] நாகரிகப் பணம் பெரிதாய்ப் போதிக்கும் முறையினித் தலை காட்டாது மறைந்து போகலாம்போலும், அந்த ஆபாஸ முறை தலை சாய்த்தொடுங்கவும் கிரமமான வித்யாபோத[illegible]முறை தலையெடுக்கவும், அகாரத்தைக்கொன்று ஆகாரத்திரிபு காட்டி அக்ஷரத்தை க்ஷரமாகச் செய்யும் ஜாலவித்தை யொடுங்கவும் புதிதாய் "பாலர் பாடம்" ஒன்று அமைத்து அதை அச்சிட்டு வெளிப்படுத்திய பிரதி யொன்று நமது பார்வைக்கு வந்துள்ளதைக் கண்டு களித்து அக்களியாட்டத்தில் இதை யெழுதலானோம். அப்புஸ்தகத்தின் பெயரும் விவரமும் கிரயமும் அடியில் அச்சிடப்பட்டிருக்கின்றன.* அதை ஆக்கியோர் பேர் மிஸ்டர் எஸ். ஜி. டானியல் அவர்கள் பி. ஏ. அவர் தம் முகவுரையில் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—

"தெரிந்தவிஷயங்களைக் கொண்டு தெரியாதவற்றைப் படிப்படியாகப் போதிப்பதே கற்பிக்கும் முறை." முகக் கண்ணுக்குத் தெரிந்தவற்றைக் கொண்டு அக்கண்ணுக்குப் புலப்படாமல் அகக்கண்ணால் கண்டறியவேண்டியவற்றை படிப்படியாகக் கிரமேணப் போதித்தல் தானே வித்யாப்பியாசமுறை யென்று பொருள் படக்கூறினதாகக் கொண்டு, புறப்பொருள் அகப்பொருள் வேற்றுமை ஒற்றுமைகளை யுள்ளாய்ந்து ஓர்ந்துணர்வார் விவேகிகளாவார். இந்த விவேகமில்லாதவர்கள் முகக்கண் பார்வையைக் கொண்டு மனக்கண் பார்வை விளங்க குழந்தைகளுக்குக் கண் திறக்கப் போதிக்க அருகராகார். இந்த யோக்கியதை யுள்ளவர்கள் "கிண்டர்கார்டன் முறை" யென்று பிரசித்திபெற்றதைத் தாமே சுபாவமாக அனுஷ்டிப்பர்.

பின்னுமவர்: "போதிக்கும் விஷயத்தைச் சித்திரம் வரைதல், விதை வைத்தல், குச்சு வைத்தல், களிமண் வேலை முதலிய பல வித தொழில்களோடு சம்பந்தப்படுத்துவதால் பிள்ளைகளுக்கு உற்சாகமும் சந்தோஷமும் உண்டாவதுடன் விஷயமும் அவர்கள் மனதில் ஸ்திரமாய்ப் பதியும் என்பது அனுபவசித்தாந்தம். போதிக்கும் விஷயத்துக்குச் சம்பந்தமில்லாத அனாவசியமான காரியங்களை இடையில் நுழைப்பதால் பிள்ளைகளுடைய கவனம் முக்கியமான விஷயத்திற் செல்லாமல் சிதறிப்போவதற்கிட முண்டாகும் என்பதுவும் வாஸ்தவமே."—என்று உரை யெழுதியிருக்கிறார்.

இவ்விஷயங்களைக் கவனித்துப் பாலர் வகுப்பு உபாத்திமார்களுக்கும் பிள்ளைகளுக்கும் உபயோகமாக "பாலர் பாடம்" தயார் செய்து, அதற்கு அனுபந்தமாக "உபாத்தியாயர்களுக்குக் குறிப்பு" என்று ஒரு புஸ்தகமும் பிரசுரித்திருக்கிறார். இவ்விரண்டு புஸ்தகங்களையும் வாங்கி வாசித்துப்பார்த்து அதன் உள்ளுறையான சாதன முறையை உள்ளபடி யறிந்து கைப்பற்றுவோர் நாலுமாசகாலத்தில் பிள்ளைகளுக்கு எழுதப் படிக்கப் போதிக்கலாமென்று ரூபித்துக் காட்டியிருக்கிறார்.

"ஈ" தன்னையறிந்த கதை.

ஒரு "ஈ" ஒரு அம்மையார் வீட்டுக்குப் பிச்சைக்குச் சென்று "அம்மா பிச்சை!" யென்றது.

அது கேட்டு அந்த அம்மையார் "உன் பேர் என்ன?" என்று கேட்டாள்.

"ஐயோ! என் பேரா! எனக்குத் தெரியவில்லையே, மறந்து போய்விட்டேனே அம்மா!" என்றது அந்த ஈ.

† இதைத்தான் "ஹரி: ஓம்" என்று சொல்லுகிறது.

* Tamil Infant Primer (பாலர் பாடம்) by S. G. Daniel B. A. (1½ An.) writh Hints to Teachers as A Supplement to the Tamil Infant Primer by the same anthor (1 அணா) The Christian Literature Society, Madras.

"அப்படியானால் பிச்சையில்லை போ!" என்று அதட்டியோட்டினாள் அந்த அம்மையார்!

"அம்மா, அம்மா, பசி அடிக்கிறது! பிச்சை போடவேணும்!" என்று கேட்டது அந்த ஈ.

"உன் பேரென்ன வென்று அறிந்துகொண்டு வந்து சொன்னாயானால் பிச்சை போடுகிறேன்" என்று சொன்னாள் அம்மையார்.

"ஆனால் சரி!" யென்று அந்த ஈயும் பசி அடித்தாலும் தன் பேரை விசாரித்துக்கொண்டு வந்து சொல்லி பிச்சை வாங்கி யுண்ணலாம் என்று எண்ணி (Hope) சந்தோஷப்பட்டுக்கொண்டு ஆரவாரம் செய்துகொண்டு புறப்பட்டது.

பக்கத்தில் கொழு கொழு வென்று கொழுத்துத் துள்ளிக்கொண்டிருந்த ஒரு இளங்கன்றுக்குட்டியின்மேல் போயுட்கார்ந்து அதன் காதைக் கடித்துக்கொண்டு "கொழு கொழு கன்றே என் பேரென்ன?" என்று கேட்டது.

"அது எனக்குத் தெரியாது என் தாயைக் கேள் போ!" என்று சொல்லிவிட்டு அதைத் தள்ளிக்கொண்டு துள்ளியோடி விட்டது. அந்த ஈ, பாபம்! அதன் தாயைத் தேடிச் சென்று அதையும் அப்படியே கேட்டது.

அதுவும் "எனக்குத் தெரியாது; என்னை மேய்க்கிற ஆயன் அதோ இருக்கிறான். அவனைக் கேள்" என்று ஒரு உதை உதைத்துத் தள்ளிவிட்டது.

இப்படியே அந்த ஈ ஒன்றைவிட்டொன்றைப் பற்றிக் கடைசியாக புலத்தில் மேய்ந்துகொண்டிருக்கிற குதிரை யொன்றை யண்டி அதை "என் பெயர் என்ன?" என்று கேட்க, அது "ஈ-ஹீ-ஹீ-" என்று கனைத்தது. இத்தனை பாடு பட்ட அந்த ஈயும் தன் பேர் ஈ என்று அறிந்து கொண்டு அம்மையாரிடம் சென்று அதை ம... க்காமல் தானே ரீங்காரம் போட்டு ஊதிக்கொண்டுபோய்ச்சொல்லிற்று. அவளும் சந்தோஷப்பட்டு வாக்குத்தவறாமல் பிச்சை போட்டாள். *ஈயும் அவளிட்ட பிச்சையைக்கொண்டு அதன் ஜன்மம் ஈடேறப் பிழைத்துப் போய்விட்டது என்பது கதை. இந்தக் கதையைப் பின்வரும் பாட்டு நன்றாகச் சொல்கிறது.

> கொழு கொழு கன்றே,
> கன்றின் தாயே,
> தாயை மேய்க்கிற ஆயா,
> ஆயன் கைக் கோலே,
> கோலையீன்ற கொடிமரமே,
> மரத்தின் மேலிருக்கும் கொக்கே,
> கொக்கு நீந்தும் குளமே,
> குளத்தைக் காக்கும் கரையே,
> கரையின் மேலிருக்கும் குசவா,
> குசவன் கைச்சட்டி,
> சட்டிசெய்யும் மண்ணே,
> மண்ணெடுக்கும் பள்ளமே,
> பள்ளத்தின்மேல் புல்லே,
> புல்லைமேயும் குதிரையே,
> என் பேர் என்ன?"—என்றது.

இக் கதையின் விவரத்தை முன்னொரு... விவேகசிந்தாமணியில் பிரசுரித்துள்ளோம். அதைப் படித்த குழந்தைகள் இப்பொழு... பெரியவர்களாகி அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்திருக்குமாதலால் அதையே தேடிப்ப... த்து இக்காலத்துப் பாலர்க்குபயோகமா... படியும் இன்னொரு சமயம் பிரசரிப்போ...

* உபதேசமுறையில் மனோபக்குவமறிந்தபின் ... வானவர் அந்த அம்மையாரை "விருத்தாசலத்... என்று காட்டி அந்த ஈ யும் "சிதாபாலன்" அ... வேறல்லவென்று சொல்லாமற்சொல்லிச் சுரீ... காட்டுவரென்று ஸ்வானுபவச் செல்வம் படைத்... சொல்லுவர்.

"WORK IS OF A RELIGIOUS NATURE:— WORK IS OF A BRAVE NATURE; WHICH IT IS THE AIM OF ALL RELIGIONS TO BE."

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 23.] ராக்ஷஸ௵ ஆடி௴, 1915௵ ஜுலை௴ [சஞ்சிகை 4.

THE GREAT "WORLD-WAR" AS AN EYE-OPENER.

"In fact, the man who can ennoble money is he who cares very little for it. The War makes all things plainer to us than they were in times of peace. We now see greed for money as it is, and we no longer reverence the rich man because of what he might do with his money since we have other tests forced upon us than these possibilities. We value a man for what he does, not for what he might do; his actual personal qualities rather than for possessions. In that we are like people in a sinking ship, for whom the customary social values are destroyed and a man is a man only if he proves himself one .....The money test is for the time abolished. We know by our own experience at last that a man may be poor, not because he is a fool or a weakling, but because he cares for other things than money. But shall we remember this when peace comes again? ....there is nothing which hinders us from exercising our own judgement as the reverence for money. It hides from us our own greed and the greed of others. It spreads a fog of decorum where there ought to be no decorum at all; it makes us think there is peace where there is a sharp material war. And this War not purely material opens our eyes to the nature of the other. It will have one good result at least if it keeps them open."—*The (London) Times.*

"The War will leave the world poorer in wealth but simpler in habits and more real in all its doings."—*An English Gentleman to a friend.*

ON THE UPLIFTING POWER AND RELIGIOUS NATURE OF WORK.

"THE SACREDNESS OF WORK."

"There is a perennial nobleness and even sacredness in Work. Were he never so benighted, forgetful of his high calling, there is always hope in a man that actually and earnestly works: in Idleness alone is their perpetual despair. Work, never so Mammonish, mean, *is* in communication with Nature; the real desire to get Work done will itself lead one more and more to truth, to Nature's appointments and regulations, which are truth.

"THE GOSPEL OF WORK."

The latest Gospel in this World is: know thy work and do. 'Know thyself:' long enough has that poor 'self' of thine tormented thee: thou will never get to know it, I belive! Think it not thy business, this of knowing thyself; thou art an unknowable individual: Know what thou canst work at; and work at it, like a Hercules! that will be thy better plan.

"THE SIGNIFICANCE OF WORK."

It has been written, 'an endless significance lies in Work;' a man perfects himself by working......Consider how, even in the meanest sort of Labour, the whole soul of a man is composed into a kind of real harmony, the instant he sets himself to work' Doubt, Desire, Sorrow, Remorse, Indignation, Despair itself, all these like helldogs lie beleaguering the soul of the poor dayworker, as of every man: but he bends himself with free valour against his task, and all these are stilled, all these shrink murmuring far off into their caves. The man is now a man. The blessed glow of Labour in him, is it not as purifying fire, wherein all poison is burnt up, and of sour smoke itself there is made bright blessed flame.

"Blessed is he who has found his work; let him ask no other blessedness. He has a work, a life-purpose; He has found it, and will follow it

"THE RELIGIOUS NATURE OF WORK."

Work is of a religious nature:—Work is of a *brave* nature; which it is the aim of all religion to be. All work of man is as the swimmer's: a waste ocean threatens to devour him; if he front it not bravely, it will keep its word. By incessant wise defiance of it, lusty rebuke and buffet of it, behold how it loyally supports him, bears him as its conqueror along. 'It is so,' says Goethe, 'with all things that man undertakes in this world.'—Extract from the lesson on Labour from Thomas Carlyle's 'Past and Present.' (*Vide the Matriculation Text for* 1915.)

"LABOUR IS LIFE."

"Labour is Life: from the inmost heart of the Worker rises his God-given Force, the sacred celestial Life-essence breathed into him by Almighty God: from his inmost heart awakens him to all nobleness,—to all knowledge, 'self-knowledge' and much else, so soon as Work fitly begins. Knowledge? The knowledge that will hold good in working, cleave thou to that; *for* Nature herself accredits that, says Yea to that. Properly thou hast no other knowledge but what thou hast got by working, the rest is yet all a hypothesis of knowledge; a thing to be argued of in schools, a thing floating in the clouds, in endless logic-vortices, till we try it and fix it. 'Doubt of whatever kind, can be ended by action alone.'—*Ibid.*

"YOU WILL NOT, I HOPE, LOSE HEART."

"I have not forgotten the important work you are striving to initiate among your fellow-countrymen. Owing mainly to the ceaseless pressure of my official duties in Madras, I was not able to give you that help which I wished to give, or that encouragement which you so well deserved. I have now leisure and if I can in this country do anything to help you, I hope you will let me know. I hope your European friends in Madras are supporting you, and I also trust you will in time gather round you a band of native fellow-workers of influence and education. At times, the progress will seem to you so slow that you will feel inclined to give the work up in sheer despair. But you will not, I hope, lose heart. Every sound improvement of a fundamental kind is slow in its operation and a movement like yours, which affects the ideas and sentiments and confirmed habits of centuries, cannot but be slow in manifesting its effects."—Dr. D. Duncan, M.A., D.Sc. late Director of Public Instruction, Madras.

[...கம்-23.] [சஞ்சிகை-4

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

சாவடிலனு } விவேகசிந்தாமணி { July-August 1915.
அடிமீ

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெத் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

THE GREAT WORLD-WAR AS AN EYE-OPENER.

பார'தப்போரும் நாரதமுறையும்.

"பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு" என்பது ஸ்வானுபவத்தின் விசேஷத்தை யெடுத்துச் சொல்லும் ஓர் சிறந்த பழமொழி. நாரத முனிவர் இதன் உண்மையில் மிக நம்பிக்கையுடையவர். ஆகையால் அவர் "யதார்த்தவாதி வெகுஜன விரோதி" யென்கிற உலக வசனப்படி உண்மையைப் பேசி வெகுஜன விரோதம் சம்பாதித்துக்கொள்வதைவிட "விதைத்தான் வினையறுப்பான்" ஆதலால் அவனவன் எண்ணத்தின் பலனை அவனே அனுபவித்துப் பார்த்தபின் உண்மையறிந்து கொள்ளட்டுமென்று அவனவன் போனதே போக்காகப் போகவிட்டு வேடிக்கை பார்த்துவந்தார். உண்மையை ஒளிக்க முடியாதாகையால் அது எப்படியும் வெளியாகிவிடும். நாரதர் உண்மையை உள்ளபடி யுரைப்பதே விரதமாகக்கொண்டவர். உலகபந்தத்தை யறுத்து திரிலோக ...சியாக பொதுநலஞ் செய்வதே பூரணமான ...வதாராதனையாகக் கொண்டு திரிலோக சஞ்சாரஞ்செய்து வந்தார். அவர் உண்மையை ஒளிக்காமற் சொல்லிவந்ததால் அவருடைய வார்த்தைகள் விஷயப் பற்றுடையாருக்குள் கலகத்தை விளைத்து வந்தது. ஆதலால் அவருக்கு "கலகப்பிரியர்" என்கிற சொட்டுப்பேர் வரலாயிற்று. ஆனால் உண்மையில் கலகஞ்செய்யவேண்டுமென்று கோட் சொல்லித் திரிந்தவரில்லை. "பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு" என்று அவரவர் செய்கையின் பலனை அவரவர் அனுபவித்துப்பார்த்து அப்புறம் உண்மை தெரிந்துகொள்ளட்டுமென்பது அவருடைய கொள்கை. இதுதான் சாசுவதமான ஞானசாதனமென்று இப்பொழுது நடந்துவரும் பார'தப் போரால் தெரியவருகிறது.

இந்தச்சண்டை துவங்குமுன்னர் பணத்தின் பெருமையே பெருமையாக விருந்தது. எல்லாரும் பணத்தையே விசேஷமாக மதித்து வந்தார்கள். பணத்தைவிட குணம் பெரிது என்பதை மறந்துபோய் விட்டார்கள். பணச்செருக்கு, பண ஆசை, பணப்பைத்தியம் ஆகிய இம்மூன்று பேய்களும் ஒன்று விட்டால் ஒன்று மனிதனைப் பிடித்து ஆட்டிவந்தது. ஆயினும் பணத்தால் ஆவது என்ன? அது தன்னால் ஆசை பூர்த்தியாவதில்லை. ஆனால் ஆசைப்பட்டதைத் தேடிக்கொள்ள அது ஒருசாதனமாயிருக்கிறதுபற்றி அதையெல்லாரும் விசேஷமாக மதித்து வந்தார்கள். பணம் கையிலுள்ளவன் பணச்செருக்குப்பிடித்து மமதைகொண்டு தன்னை யறியாமல் கண்டதேகாட்சி கொண்டதே கோலமென்று தலைவிரிகோலமாய் விஷய சுகம் புசிப்பதில் கண் பஞ்சடைந்து பழம் பெருச்சாளியாய் வசித்து வந்தான். பணமில்லாதவன் பணவாசைகொண்டு உலகிற் செய்யாததையெல்லாம் செய்து பணம் ஒன்றே பெரிதாக நினைத்து அதைப்பெற பொய்வழி சென்று படாத பாடெல்லாம் பட்டுழன்றுவந்தான். பணம் சேர்ப்பதில் கை தேர்ந்தவர் பின்

னும் பணவாசை மேற்கொண்டு பணம் தேடிக் குவிப்பதே தொழிலாகப் பணப்பேய் பிடித்துப் பேயாட்டம் ஆடிவந்தார்கள். இப்பொழுது பணத்தின் பெருமை குலைந்து போய் விட்டது. பணக் குவியல் எதிரியை எதிர்த்துச் சண்டைபோடத் தக்கதல்லவென்று கண்டு கொண்டார்கள். குண்டு வெடிகளால் சண்டை போடுவது எளிதெனப்பட்டாலும் குண்டு வெடிகள் செய்ய ஆள் மாகாணமும் மனிதன் உழைப்பும் இன்றியமையாததென்று கண்டு கொண்டிருக்கிறார்கள். பணத்தைவிட குணமும் மணமுமே பெரிதென்று நினைக்கத் துவங்கி யிருக்கிறார்கள். இந்த நினைவு எத்தனை காலமிருக்குமோ அதுதான் சந்தேகம். சண்டை யோய்ந்து சமாதானம் வந்ததும் இதையெல்லாம் மறந்து விடுவார்களோ வென்று லண்டன் டைம்ஸ் பத்திரிகை அஞ்சுவதாகக் கூறுகின்றது.

இப்பொழுதுநடக்கும் பார'தப்போருக்குக் காரணம் இன்னதென்று உத்தியோக முறையில் வெளியிட்ட சங்கதிகளை யாராய்ந்துணர்ந்து அவற்றைச் சுருக்கமாய் வெளியிட்டெழுதி யுள்ளோம். ஆனால் உளக்கண்ணாற் பார்க்கில் இந்தச் சண்டை யெப்போதும் நடந்து கொண்டே தானிருந்தது என்று டைம்ஸ் பத்திரிகை கூறுகின்றது. பணக்காரன் பணத்தைக் குவித்துவைக்க, ஏழைகள் நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட வுழைத்துவிட்டுச் சீவனவகை கிட்டாது வருந்தினார்கள். இது ஏழைகளுக்கு எவ்வளவு கஷ்டம்! இந்தக் கஷ்டத்தைத் தானே இப்பொழுது ஏற்றத் தாழ்வின்றி யெல்லாரும் சண்டைமுகத்தில் அனுபவிக்கிறார்கள். பணமே பெரிதென்றுழைத்த காலத்தில் பணந் தேடுவதிலுண்டான கஷ்ட நஷ்டங்கள் ஏழைகளைப் பாதித்து வந்தன. இப்பொழுது பட்டனுபவித்தபின் பணம் பெரிதல்ல குணமே பெரிதென்று தோன்றுகிறது.

இந்தச்சண்டை எப்பொழுது முடியுமோ சொல்வதற்கில்லை. ஆனால் எப்படியும் ஒருவிதத்தில் முடிவுக்கு வந்துதானே ஆகவேண்டும். அப்பொழுது இச்சண்டையினால் உலகம் மிக ஏழைப்பட்டிருக்குமென்றும் மனிதர்கள் போலிக்குழைப்பதைவிட்டு உண்மைக்குழைக்க நேரிடுமென்றும் ஒரு ஆங்கிலேய கனவான் அவருடைய நண்பருக்கு எழுதிய கடிதத்தில் வெளியிட்ட அபிப்பிராயத்தை மேலெடுத்தோதியிருக்கிறோம்.

இச்சண்டையினால் பொய்யும் புனைசுருட்டும் ஒழியுமானால் அதுவும் நல்லதுதான் என்று நினைக்கிறார்கள். ஆனால் அது பட்டனுபவித்தவர்களுக்குத் தான் தெரியுமேயன்றி மற்றப்படியிருகப் பிராயமாய் உண்டுடுத்துறங்குவதே தொழிலாய் நடந்து வரும் மூடாத்மாக்களுக்குத் தெரியாது. ஆனால் இவர்கள் எப்பொழுதும் ஆட்டுமந்தையைப்போல் தலையாடு போன வழியில் போகிறவர்கள். ஆதலால், புத்தியுள்ளவர்கள் பட்டனுபவித்து நல்வழிப்பட்டால் அவர்களைப்பார்த்து இவர்களும் பின்பற்றுவார்கள். இந்தமட்டில் உலகம் நல்வழிப்படுமாயின் அதுவும் ஒருவிதத்தில் நல்லது தான்.

"LABOUR IS LIFE."

"பிழைக்கும்வழி உழைக்கப் பழகுவதே."

இது மிகவும் மேலான ஒருமூதுரை. இதிலே "பிழைக்கும்வழி" யென்பது இகபரமிரண்டுக்கும் ஒக்கப்பொருந்தும். அப்படியே உழைக்கப்பழகுவதும் ஸ்தூல ஸூக்ஷம காரணமாம் மூன்று தேஹத்துக்கும் பொருந்தும்.

"திடகாத்திர, ஆயுர், ஆரோக்கியம்" என்கிற மூன்றுவித சம்பத்தும் இகபரமிரண்டுக்கும் இன்றியமையாத சாதனங்களாம். திடகாத்ரம்: சரீரப்பயிற்சியின்றி சரீரத்துக்குத் திடமில்லை; அதுபோல் மனப்பயிற்சியும் கூடவே யிருக்கவேண்டும். ஏனெனில், மனோதைரியமில்லாத தேஹதிடன் பிரயோசன மற்றதாகும். தேஹமனோதிடன் இரண்டும் அமைய

162039

பெறினும் "உயிருடல் உறவறியும் உண்மை யறிவு" இல்லாவிடில் ஆயுஸ் தீர்க்கமில்லை. ஆயுஸ் இருந்தாலும் ஆரோக்கியமில்லை. ஆரோக்கியமில்லாத ஆயுஸ் உள்ளவர்கள் "கெட்டுயிர்ப்போடுற்ற பிணம்" ஆவர். ஆகையால் தேஹம், மனம், உள்ளறிவு என்றுசொல்லும் அந்தக்கரணம் ஆகியமூன்றும் பயிற்சியினால் தேர்ச்சியடைந்து சுத்தப்படவேண்டும். இதைப்பற்றி மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குக் குறிப்பிட்ட இங்கிலீஷ் பாடத்திலிருந்து ஒரு பகுதியை யெடுத்து இங்கிலீஷில் தானே அச்சிட்டுள்ளோம். இதேவிஷயமாய் விவேகசிந்தாமணியில் வெளிவந்த கர்மதர்மத்தை யுணர்த்தும் விஷயத்தின் கற்போதனை "தாமஸ் கார்லைல்" என்னும் ஆங்கிலேய வித்வான் உழைப்பின் மஹத்துவத்தைப்பற்றி யெழுதியிருக்கும் உண்மைக்கும், "லாங்பெல்லோ" என்னும் ஆங்கிலேய கவிவாணவர் கருமானைக் கருமவழி காட்டுவோனாகத் தூக்கி வைத்து எழுதியிருக்கும் அருமையான திருவருட்பாவுக்கும் ஒத்திருப்பதால் "பிழைக்கும்வழி: உழைக்கும் வழி" என்னும் தலைப்பெயரிட்டு ஸ்ரீஸத்யானந்த சாந்த சர்மா எழுதிய அவ்விஷயத்தைப் பாலர்க்கும் பாலபோதசிக்ஷை செய்யக்கடமைப்பட்ட அவர்களின் பெற்றோர்கள் போதகாசிரியர்க்கும் பயன்படும்பொருட்டுக்கீழே திருப்பிப் பிரசுரிக்கிறோம். இதைப் பல பத்திரிகாசிரியர்களும் எழுதினோர் பேரை யொளித்து அவர் அனுமதியின்றி வெளியிட்டிருக்கிறார்கள். திருட்டுப்படிப்பு குருட்டு வழி காட்டுமென்றிருப்பதால் குருத்துரோகமின்றி உண்மையுணர்ந்துய்யவேண்டும். குருத்துரோகம் நினைப்பார் உருப்படமாட்டார்.

* * * * *

இங்கே "தாமஸ் கார்லைல்" எழுதியிருப்பதின் கருத்தைச்சுருக்கி ஆங்கிலமறியாரும் அவர் பாவனைவிசேஷமஹிமையை உணர வேண்டிக் கீழே வெளியிடுகிறோம்:—

"உழைப்பின் மஹத்துவமும் அதனால் லபிக்கும் நிருபசாந்தியும் கவனிக்கத்தக்கது. அவிவேகியாயினும் உழைப்பில் உழைத்து உழைக்கும் வழிகற்றுக்கொண்டு அதனால் கர்ம தர்மமுணர்ந்து மனஸ்தை[illegible] ஸாம்ராஜ்யத்துக்கும் பாத்திரனாயிருப்பான். ('லாங்பெல்லோ'வின் "The Village Blacksmith!" என்னும் கவியின் நீதிபோதனையை யுணர்த்த "கருமானே,—கருமவழிகாட்டினோனே!" யென்றெழுதியிருக்கும் விஷயத்தை யூன்றிப் படித்துப்பார்க்க இது விளங்கும்.)

"கர்மதர்மத்தை யுணர உழைத்துத் தேறினபின், 'பிரகிருதியின் உண்மையில் பரமனைக் காணலாம்' என்றபடி சோபான முறையாக (படிப்படியாக, கிரமேண) ஸத்யத்தையறிந்துய்யலாம். பணவாசைப்பட்டுழைப்பவனும் உண்மையிலுழைக்க, உழைப்பினால் வரும் கர்மதர்ம பலனையனுபவிக்காது போவான்.

"ஆத்மஞானம் தேடிப்பிழைப்பது கிடக்கட்டும். கலிமுற்றிய இக்காலத்தில் கருமமே பிரதானம். ஆகையினாலே ஸ்வதர்மம் தவறாமல் கர்மவழிப்பட்டுச் செய்யவேண்டிய கருமத்தைச்செய்துழைப்பாராக. உழைப்பின் பலனாய் வரும் கர்மதர்மஞானத்தினால் ஆத்மஞானமும் படிக்கிரமத்தில்தானே ஸித்திக்கும். கர்மலோபம் மட்டும் செய்யாதே! மோக்ஷம் வந்து விடும்!

"உளவறிந் துழைப்பான் உண்மையிற் றலைவ"னாதலால், "தன்னையறிந்தவன் தலைவனாவான்" என்னும் ஞானமார்க்க வுண்மையைக் கேட்டு நீ மயங்கவேண்டாம். புத்திசாலிகள் கருடனைப்போல் ஆகாசத்திற் பறந்து மோக்ஷவழி தேடட்டும். எறும்பு ஊறும் வழியை நீ மறந்து விடாதே. "எறும்பூறக் கல்லும் தேயும்" என்றிருப்பதால், உழைப்பைக் கொண்டு உன் ஆத்மா பிழைக்கும் வழியையும் நீ தேடிக்கொள்ளலாம் என்பதை மறவாதே! தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் (அறம், பொருள், இன்பம், வீடு) என்கிற புருஷார்த்தம் நான்கும் கர்மவழியில் ஸித்திக்கும். ஆத

லால் "கர்ம மார்க்கத்தில்" புருஷார்த்தம் நான்கும் அடங்கியிருக்கிற தென்று பெரியோர் சொல்வாக்குப் பொய்யல்ல.

"வீண் மனோராச்சியம் செய்யாது கைக்கு வந்த வேலையைத் திரிகரணசுத்தியாய் கர்மலோபமின்றிச் செய்வாயாக! அப்பொழுது உழைப்பின் மஹத்துவத்தை நீ உண்மையில் உணர்வாய்! கோபதாபங்க ளெல்லாம் உழைக்கும் வழியிலுழைப்பவனை விட்டோடிப்போம். ஏனெனில் கர்மத்தீ தாபஸாக்னியைப் போல் மனதிலுள்ள அழுக்கு ஆறையும் எரித்துத் தஹித்துவிடும். அழுக்காறு நீங்கவே மனத்தெளிவும் சாந்தமும் ஹிருதயசுத்தியோடு தானே வந்து லபிக்கும்.

"ஸ்வதர்மம் பிசகாமல் கர்மவழிப்பட்டவன் பாக்கியமே பாக்கியம். அவனுக்கு வேறு பாக்கியம் தேவையில்லை. இடம் பொருள் ஏவல் மூன்றும் அவனுக்கு கர்ம தர்ம பலத்தினாலே சொன்னபடி கேட்கும் ஊழியராக நின்று தவும்.

"கர்மவழிதானே தர்மவழி காட்டும்('Work is of a religious nature'). அதுவே தீரத்தையும் அளிக்கும். ('Work is of a *brave* nature'). எல்லா வேலையிலும் அலையுமனத்தை யடக்கியாளுதல் மஹா பெரிய வேலை! நந்தன் கரும வழியிலிருந்தே தருமவழிப்பட்டான். அவன் தருமவழிப்பட்ட பின்னும் கருமவழியை விடவில்லை. கோயிலில் வாத்திய கோஷம் முழங்குவதற்கின்றியமையாத வார், தோல் இவைகளை திருப்பணி (Sacred Work) வேலையாகச் செய்துவந்து சாலோக, சாமீப, சாருப்ய, சாயுஜ்ய பதவியெல்லாம் பெற்றுக் கடைசியில் அகண்டாகாரமானானேயன்றி, அவன் தன்தொழிலைவிட்டு வேதமோதவும், சாஸ்திரம்படிக்கவும் ஆசைப்பட்டலைந்தானில்லை. எல்லா சாஸ்திர ஞானமும், எல்லா வேத உண்மையும் கர்ம வழிப்பட்டு கர்மதர்மம் தவறாமல் உழைப்பவனுக்குத் திருவருட் பிரஸாதமாகத் தானே கிடைக்கும்.

"கர்மவழியிலுழைப்பவன் சமுத்திரத்தில் நீந்துவோனை யொப்புவன். எங்கு மொரே பிரளயமாகப் பரவிய சமுத்திரவெள்ளம் அவனை விழுங்கிவிடப் பார்க்கிறது! அவனோ அஞ்சாத நெஞ்சனாய், அதை யெதிர்த்து நின்று, கையாலும் காலாலும் அம்மஹாவெள்ளத்தை உதைத்துத் தள்ளியும் அணைத்துத் தழுவியும் ஐயசீலனாக நீந்திச்செல்கிறான். அப்படியே இவ்வுலகில் கர்மவழிப்பட் டுழைப்போனும் அதற்கு விரோதமாயிருக்கும் தடைகளை யெதிர்த்து வென்று கர்மத்தைச் சாதித்துக்கொள்வான். "இதுவே கர்மதர்மம்: உலகதர்மமும் இதுவே" யென்று கீதே (Goethe) மஹாகவி கூறுகின்றார்."

* * * * *

"தாமஸ் கார்லைல்" அவர்கள் அபிப்பிராயத்தைச் சாங்கோபாங்கமாய்ச் சொல்லிமுடித்தோம். இனி "பிழைக்கும் வழி: உழைக்கும் வழி" யென்னும் தலைப்பின் கீழ் ஸ்ரீ ஸத்யானந்த சாந்த சர்மா விவேகசிந்தாமணிக் கெழுதினதை யெடுத்துக் கீழே பிரசுரிக்கிறோம். இரண்டையும் நன்றாகப் படித்து அடுத்துவரும் "கருமானே,-கர்மவழிகாட்டியோனே" என்று "லாங்பெல்லோ" எழுதியுள்ள கவியின் சாரத்தை யனுசரித்து எழுதியுள்ள விஷயத்தையும் ஊன்றிப்படித்து ஆய்ந்தோய்ந்து உண்மையறிந்து கொள்ளக்கடவீர். இவற்றோடு "பாரதப்போரும், நாரதமுறையும்" என்னும் விஷயத்திற்கண்ட வுண்மையையும் உள்ளத்தமர்த்திச் சிந்திப்போர் இவ்வுலகம் போகும் போக்கை ஒருவாறு உற்று நோக்கியுணரத் தவறார்.

THE GOSPEL OF "STRENUOUS LIFE."

"WORK TO LIVE AND LIVE TO WORK."

(*Vide "Labour is Life." in p. 98.*)

"பிழைக்கும் வழி: உழைக்கும் வழி."

(ஸ்ரீ ஸத்யாநந்த சாந்த சர்மா எழுதியது.)

I

"பிழைக்கும்வழி உழைக்கப்பழகுவ"தென்றுருண்மையே!
உழைக்கும்வழியை உரைத்திடக் கேண்மினோ:
உழைப்பெனப்படுவது இழுக்கறப்பிழைத்தலாம்;
பிழைப்பும் உழைப்பும் பிழைபடாச்செல்வம்:
உழைப்பவன் பிழைப்பன், பிழைப்பவன் உழைப்பன்;
உளவறிந்துழைப்பான் உண்மையிற்றலைவன்;
பிழையறப் பிழைப்பவன் பெரியோனவன்;
உழைப்புக்கும் பிழைப்புக்கும் ஒற்றுமை வேண்டும்;
உழைப்பொடு பிழைப்புமே யொன்றாகில்
நுழைவழி கண்டு நுழைந்திடும் வறுமை,
பிழையறப் பிழைக்கும் வழியுமே தேயும்,
ஏழைகள் வருந்தக் கோழைப்படுமறம்;
கோழைப் பட்டுக் குன்றும் அறமாயின்
ஏழைமைப்பட்டு அழிந்திடும் ஆக்கம்;
அழிந்திட ஆக்கம் குறைந்திடும் ஊக்கம்;
எப்படியென்பது இயம்பக்கேண்மின்:—

II

"உழைப்பவ னுழைத்தும் பிழைப்பில னாகில்
பிழைப்பவ ரெல்லாம் பிழைபடு செல்வராம்;
பிழைப்பே உழைப்பும் உழைப்பேபிழைப்புமாய்
ஏழைக்கிரங்கு மீசன் படைத்தான்;
பிழைபட அவன்விதி யெல்லாம் பிழைபடும்;
ஏழைகள் எளிமையில் வருந்தியே நலிவர்;
கோழை மனத்தர் குவித்திடுவர் தனம்;
பாழையுழுது பண்படுத்தவாற்றாதார்
ஏழைகளுழுதிட வுய்த்துப்பிழைப்பர்;
உழைப் பெரிதாய் உகந்துமே கூறி

கூழைக்குடித்துப் பாழையுழுவென்பர்;
உழுதழுதுழைத்தவன் கூலியைப்பிடித்துப்
பொழுது போனதும் பழுதுபாராட்டுவர்:
பழுதுகள்சொல்லி யுழுதவன்கூலியை ஒட்டப்பிடிப்பர்,
உழுதவன் அழுதயிர் ஒட்டிப் போகப்
பழுது சொன்னவன் பணத்திற் பெருப்பன்."

III

"பணம் பணமென்று பணவர்சைப்பட்டு
பிணமதுபோதும் பணத்தைச் சுமப்பர்;
பணத்தைச்சுமப்பார் குணத்தைமறப்பார், பின்
மாசணம்போலுண்டு மயங்கிக்கிடப்பார்;
காசுபணம்வேண்டிக் கர்மத்தைமறப்பார் *
தாசிவேசியோடு நேசித்திருப்பர்;
வசிழுவீன மேலிற்றும் உள்ளழி வதனை
வேசிய ருறவால் நேசியா தொழிவர்;
காசிராமேச்வரமென்று பேசியே திரிவார்
நாசிமேல் நாட்டம்வைத்து வாசியை யறியார்;
கூசிடாது பணத்தைக் குவித்துமே வைத்து
புசிக்கும்வகை யறியாது புலாலை வளர்ப்பார்;
நேசித்துப் பானத்தை வானத்தை யொறுப்பார்
பூசித்துநேசித்த புண்யத்தைமறப்பார்;
ரேசித்துப்பூரித்து வாசிவசம்செய்யார்
வாசித்துவழக்குரைத்து வகைமோசம்போவார்."

IV

"வகைமோசம் தாம்போவார் பகைமோசம் செய்வார்;
நகைமோசம் † செய்தவர் வர்மோசம்செய்வார்;
வகைவகையாப் பேசியவர் வார்த்தைகளை வளர்ப்பார்;
சிகைசிகையா ‡ வேதத்தைச் சிச்சியென்றொறுப்பார்
பகையென்றும் உறவென்றும் பாராது பேசியவர்
நகையென்றும் நட்டென்றும் பணத்தையே சேர்ப்பார்;
வகைவகையா அவர்செய்யும் மோசத்தைச்சொல்லில்
பகைபகையாச்சொன்னோரைப் பகைத்துப்பேசுவாரென்பர்;
ஆகையினாலே அனைத்தையுஞ்சொல்லாது இனத்தையே கோதி
வகையி னாலேயிதை உணர்ந்திடுமென் றுரைப்பேன்."

* கர்மம் வளரும் தர்ம விதியை மறப்பார்.

† பொய்ச்சிறிப்புக்காட்டி.

‡ குடுமிவைத்தவர் = குடித்தனக்காரர் ஒவ்வொருவரும்.

V

"ஏழைகள் பிழைக்கும் வழியெதுவென்றேசில்,
கோழைகள் தாமாகிக் குழையாது பிழையாது
ஏழைக் கிரங்கும் ஈசனே துணையென்று
வாழைக்கண்டஞ்சாது வாழ்வினையை வளர்க்காது
நாழிகை தோறும் நமனுண்டென்றஞ்சாது" *
வாழுழிகாலமா யுள்ளதொரு ஆத்மன்
† ஆழி கையேந்தியே ஏழைதம் முள்ளத்தில்
நாழிகைதோறும் ஆள்கிறானென்றெண்ணி
கோழை மனத்துடைக் குணக்கேடரைவிட்டு
‡ ஏழைபங்காளன் இனத்தோடேசேர்ந்து
"உழைப்பேனுழைப் பேனுய்யவே யுழைப்பேன்"
"இழைப்பேனிழைப்பேன்வல் விதியையுமிழைப்பேன்" $
என்றுறங்கொண்டு உள்ளத்தேயுணர்ந்து
கன்றுதன் தாய் பால் குடித்தோடுமோபோல்
"வருக்குழைத்தா லாதரியாவேனென்"
றூரையும் தஞ்சமென் றஞ்சியடையாது
பேரையும் வரையும் பெரிதாகவெண்ணாது
சாரையும்பாம்பும் சேர்ந்துறையுந் தன்மைபோல்
தானுந்தன்னீசனுஞ் சேர்ந்துழைக்கவல்லீரேல்
ஏழையும் பிழைக்கலாம் எழுலகும் ஆளலாம்
இது சத்தியம் சத்தியம், சத்தியமிது சத்தியம்."

* தேஹோதமும் என்கிற பாவனையிலேயே சாவுக்கஞ்சும் பயமுண்டாகிறது.

† சக்ரதரனாய்.

‡ ...துக்களுடைய சாதுசங்கம் பாராட்டி.

$ ...தான் முன்னஞ்செய்த விதி வழிதானல்லால், வான் முன்னஞ்செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லை' ...திருமந்திரம். Compare Longfellow in "THE VILLAGE BLACKSMITH."

"... at the flaming forge of life
Our fo... ...t be wrought
Thus on its sounding anvi...
Each burning deed and thought.

THE VILLAGE BLACKSMITH

I

Under a spreading chestnut-tree
  The village smithy stands :
The smith, a mighty man is he,
  With large and sinewy hands ;
And the muscles of his brawny arms
  Are strong as iron bands.
His hair is crisp, and black, and long ;
  His face is like the tan ;
His brow is wet with honest sweat,
  He earns whate'er he can,
And he looks the whole world in the face,
  For he owes not any man.

II

Week in week out, from morn till night,
  You can hear his bellows blow ;
You can hear him swing his heavy sledge,
  With measured beat and slow,
Like a sexton ringing the village bell,
  When the evening sun is low.
And children coming home from school
  Look in at the open door ;
They love to see the flaming forge,
  And hear the bellows roar,
And catch the burning sparks that fly
  Like chaff from a threshing-floor.

III

He goes on sunday to the church,
  And sits among his boys ;
He hears the parson pray and preach,
  He hears his daughter's voice
Singing in the village choir,
  And it makes his heart rejoice.
It sounds to him like her mother's voice
  Singing in Paradise !
He needs must think of her once more,
  How in the grave she lies ;
And with his hard, rough hand he wipes
  A tear out of his eyes.

IV

Toiling,—rejoicing,—sorrowing,
  Onward through life he goes ;
Each morning sees some task begin,
  Each evening sees it close ;
Something attempted, something done,
  Has earned a night's repose.
Thanks, thanks to thee, my worthy friend,
  For the lesson thou hast taught !
Thus at the flaming forge of life
  Our fortunes must be wrought ;
Thus on its sounding anvil shaped
  Each burning deed and thought.

H. W. Longfellow.

THE LESSON OF "THE VILLAGE BLACKSMITH."

(AFTER H. W. LONGFELLOW.)

" கருமானே,—கருமவழிகாட்டியோனே ! "

1. வாதுமைமரமொன்று பரந்துவிரிந்து நிழல்தந்து நிற்கவே
சாதாரணங்கட் குபகாரமாகும் கருமான்பட்டடை யதன்கீழே
காதாவென் றவன்தினமும் காலைவேலை தொடங்குவனென்பார் !
வேதாவென்றவன்விசம் [illegible] கரும்பொன்னை இஷ்டம்போலுருவா[illegible]
[விக்[illegible]

2. பாரவன் தேக வலிமை அம்மா !
பாரவன் கையின் வன்மையை நீ !
பாரவன் கைவலி யாலிரும்[illegible] யெல்லாம்
ஊரவர்க் குதவி[illegible] ருவியா வமைக்கிறனே !

3. மயிர்க்குச் செடுக்கமிக மயிர் கறுத்து வளர்ந்திருக்க
உயிர்ச்சலிப் பின்றியே உள்ளம்வேலை லமர்ந்திருக்க
பயிர்ச்சியா லவன்தேகம் பதப்பட்டு வியர்வைசொட்ட
வயிற்றுவளர்ப்புக்காத் தினமானம் வந்ததையன்றன்று தேடியுண்பானவன்.

4. உண்பா னவனூனும் ஊரார்கை பார்க்காமல்
கண்பார்வை யவனுக்குப் பணத்திலில்லை! கண்டுணர்வீர்!
விண்பார்வை யுண்டவன் பட்டடைக்கா லுலகத்தா
ரெண்சார்புந்தயவும் தேவையில்லைப் போலவற்குப் பயமுமில்லை!

5. தினமானம் அவன்கொல்லைத் துருத்தி யூதும்
தினமானம் அவன்கைச்சம் மட்டிபோடி வேலைசெய்யும்
தினமானம் அவன்மோன கானம்செய் தடிசம்மட்டி
தினமானம் தொழுவழைக்கும் கோயின்மணி போன்றதே !

6. பள்ளியிற் படிக்கும் சிறார்மாலை விடுபோங்கால்
வெள்ளியம் பலக்கூத்துப் போலவே பட்டடையில்
துள்ளிக் குதித்தவன் வேலைசெய்காட்சியைக் கண்டுபோவார்
கள்ளமில்லாதவன் பட்டடைவேலையிற் பறக்கும்பொறியைப் பதறென்றள்ளி !

7. ஆதிவாரந் தோறும்ஆலயத் தொழுவதற் கவன்போவான்
நீதிலா அவனுள்ளம் அவன்மக்கள் நடுவிருந்தே
ஆதியைத் தொழுங்கீத காதக்குழாமி லவன்மகளும்
காதலுஞ்செய் நல்லிசை குரலைக்கேட் டுவக்கும்பாரே !

8. அருமையா மவன்மகள் குரலைக்கேட் டவனுமுன்னே
அருமையா யவனுயி ரில்வாழ்க்கைத் துணையாகி
அருமையா யிருந்தவள் தேகம்விட் டாவியம்மா !
மறுமைக்குச் சென்றதை நினைந்துமே தானழுவான்.

9. கண்ணீரை யவன்கையாற் சுண்டியெ றிந்துடன்
தண்ணீர்போ லவனுள்ளம் ததும்பியே பூரித்துத்
தண்ணீர்போ லிசைந்த பாத்திரத் துருவமையத்
தண்ணீர்போ அருகிப்பின்கட்டியா' சுகதுக்கசமபாவம் கொண்டுழைப்பான்;

10. உழைப்ப உழைத்தப்பின் உண்ப வுண்டு
உழைப்பினால் வினைகளை மாற்றுமோர் சகித்திரையில்
உழைப்ப உழைக்கவென் றவன்தானும் பின்னெழுந்து
உழைப்பினால் உழைப்பில்லாச் சாந்தனு யானென்பாரே !

11. தொல்லுலகி லடியேனும் கருமானே ! யுனைப்போலவே,
சொல்லுலைக்கூடத்திற் கரும்பொன் னுருவமையச் செய்யுமாபோல்,
வல்லுலகில் வன்னெஞ்சர் செய்துன்பை இன்பாக்கித்
தொல்லுலகிற் கருமஞ்செய் வழியறிந்தேன் பெருமானே !

12. அறிவுனக்கா இப்பாவை இனஞ்சேயு மூனைப்பார்த்து
விதியறிந்து பிழைக்கவென்றே இயற்றினேனுன் கருமானே !
மதியிருந்தால் விதியறிந்து பிழைக்கலாமென் றெவ்வுயிர்க்கும்
கதியளிக்கும் கர்மவழிகாட்டியோனே ! கருமஞ்செய் பெருமானே !

தொல்லை, கொல்லுலை.

BEWARE OF EVIL HABITS.

கெட்ட பழக்கங்களை முளையிலே பிடுங்கிவிடவேண்டும்.

கெட்ட பழக்கங்களும், நாட்டங்களும் எத்தனையோ சுளுவாய் மனிதனுடைய உள்ளத்தில் நுழைந்து வேரூன்றின பின்னர் அம்மனிதனுக்கு நல்லுணர்வு பிறந்து அவற்றை வேரோடு பிடுங்கி நல்லெண்ணங்களை நாட்ட அளவிறந்த அவாக்கொண்டவனாயிருப்பினும் சாதாரணமாய் அது கூடாத காரியமாகவே போவது அனுபவ சித்தியால் யாவரும் அறிந்த விஷயமே.

முன்னொரு காலத்தில் வசந்தபுரமென்னும் ஊரில் ஏழைத் தையற்கார னொருவன் கடைவீதியில் ஓர் வீட்டில் சிற்றறை யொன்றை குடிக்கூலிக்கு அமர்த்தி அதிலிருந்து தையல் தைத்து வரும் ஊழியத்தால் கவலையின்றி காலக்ஷேபஞ் செய்து வந்தான். இவ்வாறிருக்கையில் ஓர்நாள் அவ்வூர் அரண்மனை யானைகளிலொன்று பாகனைமீறி தெருத் தெருவாய் அலைந்துதிரிந்து கடைசியில் நமது தையற்காரனிருந்த கடைவீதி வழியே உலாவ ஆரம்பித்தது. ஒவ்வோர் கடையிலும் திறந்திருந்த பலகணியின் வழியாய் தன் துதிக்கையை நீட்டிப்பார்க்கவே கடைக்காரர் உடனே அதை அடித்துத் துரத்திப் பலகணியின் வாயிலைச் சாத்தினார்கள். இவ்வாறு துரத்தப்பட்ட யானையோ சற்றும் மனஞ்சலியாமல் அவ்வீதியிலேயே நடமாடிக் கொண்டிருந்து, நமது தையற்காரனுடைய சிற்றறைக் கதவு திறந்திருப்பதைக் கண்டு வெளியில் நின்று வழக்கம்போல தன் துதிக்கையை உள்ளே நீட்டினது. தையற்காரன் வேலையில் கருத்தாயிருந்ததனாலோ வேறென்ன முகாந்தரத்தாலோ அதை சற்றும் கவனிக்கவில்லை. ஆகவே யானை சற்று தைரியங்கொண்டு ஓர் அடி முன் வைத்து முறம்போல விரிந்தகன்ற தன்னிரு காதுகளையும் அசைத்து, முகத்தை முற்றிலும் உள்ளேவிட்டு தன் சிறு கண்களால் சிற்றறையை சுற்றுமுற்றும் பார்த்து ஆராய்ச்சிசெய்தது. தையற்காரன் இந்த தடவை யானையைக் கண்டாலும் அது தனக்கோர் தீங்குவிளைக்காது, சற்றுநேரத்துக்குள் தன்வழியே போய்விடுமென்றெண்ணி சும்மாவிருந்தான். இதைக்கண்ட அம்மிருகம் அதிக தைரியம் படைத்து முதலில் ஒருகாலும், பின் மற்றொரு காலும், பின்னர் தன்னுடலமும், தன் பின்னங்கால்களும் வாலுமாக தன் அவயவத்தை ஒவ்வொன்றாய் வெகு சுலபமாக உட்செலுத்தி அறைக்குள் சந்தோஷத்துடன் நுழைந்துவிட்டது. அதுவரையில் அசட்டையாயிருந்த தையற்காரன் இப்போது அம்மிருகத்தை வெளியில் துரத்த எத்தனித்தான். மூர்க்ககுணமுள்ள அந்தப்பிராணி ஏழைமனிதனுக்குக் கிஞ்சித்தும் பயப்படாமல் அவனை யெதிர்க்கத் தலைப்பட்டது. தையற்காரனுடைய அறை வெகு நெருக்கமாயிருந்தபடியாலும், யானை மதங்கொண்டதாகத் தோன்றினபடியாலும் அதையெதிர்த்து வெல்ல தன்னாலாகாதென்று கண்டு தையற்காரன் தன் கடையைவிட்டு தப்பிப் பிழைத்தோடும்படி நேரிட்டது—என்று ஒரு கதையுண்டு.

இவ்வண்ணமே அநேக துர்ப்பழக்கங்கள் சிறுவரிடத்தில் சுலபமாய் போய்ச்சேர்ந்து வேரூன்றி, பின்னர் அவர்களை வெகுவாய் பிடிக்கின்றன. பிறகு அவர்கள் இவற்றாலுண்டாகும் திரவிய நஷ்டத்தையோ, தேக அசௌக்கியத்தையோ, மானக்குறைவையோ நன்குணர்ந்து, தங்களை யிறுக்கக் கட்டியிருக்கும் தளைகளாகிய துர்ப்பழக்கங்களை அறுத்தெறியவெண்ணி என்ன முயற்சி செய்தும் பலிக்காமல் தாங்கள் முதலில் விளையாட்டுப்போலிடங்கொடுத்த வினைகளுக்கு அடிமைகளாகி மடிகிறார்கள். தையற்காரனைப்போல் விவேகமற்றவரிவரே. இப்போது புகைச்சுருட்டு உபயோகிக்கும் பெரியவர்களில் எத்தனையோ பெயர் சிறுவயதில் சிநேகிதர் இப்படி குடிக்கிறார்களே நாமும் குடிப்பதால் மோசமென்னவென்று தொடங்கிய பழக்கமதுவென்று ஒப்புக்கொள்வார்கள். இத்தன்மையாகவே கட்குடித்தல், சூதாடல், கொள்ளைவிரும்பல் ஆகிய வெவ்வேறு விஷப்பழக்கங்கள் இளவயதிலே இலகுவாய் வந்தடைந்து வருத்துவனவாதலின் துர்ச்செய்கையென்று கண்டவுடன் தையற்காரனைப்போலிராமல், மற்றக் கடைக்காரரைக் கண்டுபாவித்து, அவற்றைவிட்டகன்று, உங்களுள்ளத்தின் கதவை யிறுக சாத்துவீராயின் என்றும் சுகமடைவீர்.

A VIEW OF THE ANCIENT HISTORY OF EGYPT.

எகிப்துதேசத்தின் பூர்வீக சரித்திர சங்கிரகம்.

முற்காலத்தில் எகிப்து தேசம் நமது ஆசியாகண்டத்தின் ஒரு பகுதியாக விருந்தமையாலும், அதன் அரசாட்சி, சங்கங்கள், நடை, உடைபாவனைகள் எல்லாம் ஒருவாறு கீழ்நாட்டாரை யொத்திருந்தமையாலும், அதன் பூர்வசரித்திரம் இன்னதென சற்று கவனிப்போம். இத்தேசம் ஆப்பிரிகாவிலுள்ள நீலநதி பாயப்பெற்று நீர்வளம், நிலவளம் உடைய ஓர் படுகையைப் போன்றது. வடக்கில் மத்தியதரைக்கடலும், தெற்கே பில்லித்தீவும், யானைத்தீவுகளும், அதன் எல்லைகளாம். இவ்விரண்டு தீவுகளில் பூனையும், யானைகளும் இருந்ததால் இப்பெயர் வாய்ந்ததெனக் கொள்ளலாம். முன்னோர்கள் இந்நகரத்திற்கு சேஷமி நகர் எனப் பெயரிட்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர் ப்ராசீன வேதபுஸ்தகத்தில் மிஸ்ரமபுரி (Mizraim) என்று இதற்கு ஒரு நாமமுண்டு. நீலநதி ஒன்றே இத்தேசத்து ஜனங்களுக்கு முக்கிய ஆதாரமாயுள்ளது. பிரதி வருடமும் இந்நதி பெருக்கெடுத்து வருவதைப்பற்றி குடிகள் தங்கள் இல்லங்களை உயர்த்திக் கட்டிக்கொண்டார்கள். மழை யில்லாக்காலங்களில் ஆற்று வெள்ளத்தின் மிகுதியை பள்ளத்தாக்குகளிலும், ஏரி, குளங்களிலும் தேக்கிக்கொள்வதால் தண்ணீர்க் குறைவே கிடையாது. ஆனதுபற்றி வெகு காலத்திற்குப்பிறகு இதைக் கைப்பற்றிக்கொண்ட உரோமஜாதியார் இதை தானியக் களஞ்சியமெனக் கொண்டாடினார்கள். ஆற்றின் பெருக்கால் அநேக புலங்கள் மூடப்பட்டுப்போம். அப்போது தண்ணீரை வாய்க்காலின் வழியாய் விட்டுக்கொண்டு மேட்டுப்பிரதேசங்களை சாகுபடி செய்துகொண்டார்கள். அந்நிய தேசங்களாகிய ஆபிசீனியா, இதியோபியா, மலை செறிந்தவைகளாதலாலும், பிரசண்ட குளிர்காற்றுவந்து மோதுவதாலும் ஆற்றின் வெள்ளத்திற்குக் காரணமாகும். இதைப்போல நீர்வளமுள்ள நாடு உலகிலெங்குமில்லை. இதைக்கொண்டே ஜனங்கள் செருக்குற்று கவலையின்றிக் காலங்கழித்தனர். இந்தப் பிரவாகத்திற்குப் பக்கத்தே அருகாமையிலுள்ள மலைகளினின்று வெட்டி யெடுக்கப்பட்ட கருங்கற்பாறைகளால் கட்டப்பட்ட கட்டடங்களில் வசித்தார்கள். இத்தேசத்தின் பெருமையையும், ஜனங்களின் ஊக்கத்தையும் வியந்து அந்நிய நாட்டாராகிய கிரேக்கர் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வந்து சில வருடங்கள் இருந்ததாகத் தெரிகின்றது. ஆனால் ஜனங்களின் தன்மையும், நடை, உடைபாவனையும் வேறெந்த நாட்டாரோடும் சம்பந்தப்படாமல் அற்புதமானவைகளாய் இருந்தன. ஏனெனில் தங்கள் நாடுதான் தாய் நகரென்றும், தாங்கள்தான் இம்மாநிலத்து மூலபுருஷரெனவும் எண்ணங் கொண்டிருந்தார்கள். அவர்கள் பாஷையினின்றும் கற்கம்பங்களிலுள்ளவைகளினின்றும் இன்ன வகுப்பு ஜனங்களெனச் சிறிது புலப்படுகிறது. எகிப்து தேசத்திலுள்ள கிறிஸ்தவர்கள் தற்காலத்தில் பேசிக்கொண்டிருக்கும் காபதிக பாஷையானது தங்கள் முன்னோர்களின் தேவபாஷையாக விருந்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். சமஸ்கிருத பாஷையை இந்துக்களும், லத்தீன் பாஷையை உரோமஜாதியாரும் எவ்வாறு மதிக்கின்றனரோ அவ்வாறே முற்காலத்தில் எகிப்தியர்கள் காபதிக பாஷையை மதித்திருந்தார்கள். இந்த பாஷையைக் கொண்டு 'செமிடிக்' * வம்சத்தைச் சேர்ந்தவர்களெனச் சொல்ல சற்று இடமுண்டேனும், இந்தியா, ஐரோப்பா வம்சத்தாரென சொல்ல இடமில்லை. அவர்கள் தங்களைப்பற்றி கற்சிலைகளிலும் பிரேதங்களை சுகந்தமிட்டு காப்பாற்றப்பட்டுவந்த கற்பேழைகளின் மீதும் எழுதிவைத்திருக்கும் சங்கதிகளை ஆராயுங்கால் பற்பல ஜாதியார் கலந்த ஒரு மிஸ்ரமவகுப்பா

* Semitic Race.

ரெனத் தோற்றுகின்றது. இந்தக் காரணத்தாலேயே அவர்கள் தேசத்திற்கு மிஸ்ரமபுரி என்று பெயர் வந்திருக்கலாம். அவர்கள் உயர்குலத்தோர், இழிகுலத்தோர் என இருவகையாய்ப் பிரிந்திருந்தார்கள். பார்வைக்கு சுந்தரமாயும் கல்விப்பயிற்சியடைந்து விவேகம் பூரணமாயுள்ளவர்கள் மேலான வகுப்புக்குரியவர்களென்றும், அந்நிய தேசத்தாரோடு சம்பந்தஞ்செய்துகொண்டு பொலிவிழந்து சிறிது அவலக்ஷணமாக கருமேனி யுடையவர்கள் இழிகுலத்தாரெனவும் விளங்குகின்றது. இவர்கள் ஆசாரம், உடை, பாவனைகள் எல்லாம் ஒருவாறு நமது பூர்விக இந்தியாவின் ஆரியர்களின் ஆசாரத்தை ஒத்திருத்தலின் இவர்களுடைய செல்வாக்கு வெகுதூரம் பரவி இருக்கவேண்டுமென்றே தோற்றுகின்றது. மேலும் இத்தேசத்தார் முகச்சாயல் ஆசியரின் முகச்சாயலை ஒத்திருந்தது. எகிப்து தேசத்தின் உத்தரபாகம் இதியோபியா வென்றும், தட்சணபாகம் மேருவென்றும் வழங்கிவந்தன. இங்கே குருக்களென்ற மேற்சாதிதான் அரசாண்டு இதை ஓர் திலகம்போல் துலங்கும்படி செய்தனர். அரசனை தாங்களே தெரிந்தெடுத்துக்கொண்டு நீதி தவறாது ஆண்டுவருகிறானென்று பார்த்துவந்ததுந்தவிர கொடுங்கோன்மை செய்யத்தலைப்பட்டால் அவன் தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் வகையையும் தேடி இருந்தனர். இது ஓர் பெரிய வாணிபஞ்செய்யு மிடமாயுமிருந்தது. அரேபியா, இந்தியா முதலிய அன்னிய தேசங்களுக்கு தங்கள் சரக்குகளை படகிலாவது, ஒட்டகங்களின் மீதாவது ஏற்றிக்கொண்டுபோய் வியாபாரஞ்செய்து வந்தார்கள். இதனால் இந்தியஜனங்கள் போக்கு வரவுசெய்து தங்கள் ஆசாரங்களையும் ஒருவாறு கற்பித்திருக்கலாமென யூகிக்கலாம். சிலர் இத்தியோபியாவினின்றுதான் இத்தேசம் நாகரிகமடைந்த தெனச் சொல்லுகிறார்கள். இந்தியாவைப் போலவே எகிப்துதேசத்தைப்பற்றி ஒரு சுதேசியாவது எழுதவில்லை. என்றாலும் கிரேக்கர் எழுதி வைத்திருக்கும் சரித்திரங்களாலும் கிறிஸ்[illegible] வர் ப்ராசீன வேதபுஸ்தகத்தாலும், சிற்பிகள் தங்கள் முழுவல்லமையுங்காட்டி கட்டியிருக்கும் சித்திரகற்சிலைகள், கல்லறைகள் இவைகளில் செதுக்கியிருக்கும் ஒருவித சங்கேத தேவபாஷையாலும் எகிப்தியரின் வரலாறு சிறிது புலப்படுகின்றது. பிரான்ஸ் தேசத்[illegible] பிரசித்திபெற்ற மன்னவனை நெபோலியன் படையெடுத்து இந்த அற்புதங்களைக் [illegible]ணுற்று வெளியிட்டபிறகு தான் எல்லோ[illegible]கள் சிரத்தை எடுத்துக்கொண்டு சங்கதி[illegible] நன்றாய் ஆராய்ந்தறியவேண்டுமென்கிற [illegible]கங்கொண்டார்கள். நீலநதி பாயும் தீர [illegible]மாகிய திபேயா பூர்வ இராஜதானி. இதி[illegible] பிரயாணிகள் கண்ணைக்கவர்ந்து விழித்த[illegible] விழித்தபடிபார்த்து பிரமித்து நிற்கும்[illegible]ணம் அளவற்ற கல்மண்டபங்கள், ஸ்[illegible] விசித்திரமான வேலைப்பாடமைந்த [illegible] மிட்டு அடக்கஞ்செய்திருக்கும் பிரேதக்[illegible]லறைகள் நிறைந்திருந்தன. கொஞ்ச மை[illegible] தூரத்தில் கர்னுகேச, இலக்ஷேசா (Karnak and Luxor) என்று பெயர்படைத்த இர[illegible] கோவில்கள் கருங்கற்பாரைகளால் கட்டப்[illegible]டிருக்கின்றன. இவைபோன்ற கோவில்[illegible] உலகில் எங்குமில்லை. கர்னுகேசகோ[illegible] மண்டபத்தில் இருபக்கத்திலும் அதி உன்[illegible]மான கற்சிலைகள் கைதேர்ந்த சிற்பிக[illegible] கொத்துவேலைக்காரரும் பார்த்து இதுவும்[illegible] தால்தான் அமைக்கப்பட்டதோ வென [illegible]றும்படி இருந்தன. நூற்றுக்கணக்கான [illegible] மான்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்[illegible] மையத்தில் அமைந்துள்ள பன்னிரண்[illegible] கள் ஒவ்வொன்றும் 6 பேர் சேர்ந்து தழுவினாலும் தழுவமுடியாத சுற்றள[illegible]தும், இரண்டு பனைமரம் உயரமுள்ள[illegible] அவற்றின் ஒவ்வொன்றின் உச்சியில் [illegible] குறைய நூறுபேர் ஏறி நிற்க இடமிருக்[illegible] றால் அதன் பரிமாணத்தை நீங்களே [illegible] துக்கொள்ளுங்கள். நீல நதியின் மேற்[illegible] கரையில் "விக்ரஹபிரதேசம்" என்ற ஒ[illegible]

[illegible]ர இடமுண்டு. இதில் முன்னால் வைத்திருக்கும் இரண்டு சிலைகள் ஒவ்வொன்றும் ஏறக்குறைய இரண்டு பனைமரம் உயரமுள்ளது. இதில் ஒன்று அருணோதயமானதும் ஒரு இனிமையான பேரிசைக்கூச்சல் முன்பு போட்டுக்கொண்டிருந்ததாம். இந்த கோவில்களிலேயே இராஜாக்களின் கொலுமண்டபங்களுமிருந்தன. தேவிஸ் இராஜதானி முதற்கொண்டு ஐந்து மையில் தூரம் பூமியைச் சுரங்க மிட்டுக்கட்டிய கல்லறைகள் பல உள. இவற்றால் அக்காலத்தவரின் சரித்திரம், இல்லற வாழ்க்கை, ஜீவனோபாயங்கள், மரணாந்தரம் ஒருவன் படும் அவஸ்தைகள், எல்லாம் வெளியாகின்றன. இவ்வெழுத்துக்களைப் பார்த்தால் இன்றுதான் எழுதியதோ வென அவ்வளவு சுத்தமாயிருக்கின்றன. கிரேக்கர் எழுதி வைத்திருக்கும் சில நூல்களும் இச்சுரங்கங்களில் கிடைத்தன. தனவான்களுக்கும் ஏழைகளுக்கும் யாதொரு வேற்றுமையின்றி கல்லறைகள் சமைக்கப்பட்டன. இவை எல்லாம் கி. மு. ஆயிர வருடங்களுக்குமுன்பே சமைக்கப்பட்டன வென்றால் இவர்கள் சிற்பவேலையில் பயிற்சியடைந்தகாலம் இதற்கு முன்னரே இருந்திருக்கவேண்டுமென யூகிக்கலாம். இவைகள் ஏற்பட்ட காலம் அறியவேண்டுமென அன்னியதேயத்து வித்வான்கள் பலவாறு முயன்றபோதிலும் முன்பு சாத்தியப்படாமல்போயிற்று. சென்ற நூற்றாண்டில் சங்கேத தேவபாஷையை மொழிபெயர்க்கும் வகையை கண்டுபிடித்தார்கள். பிராஞ்சுக்காரரோ செட்டாநகரத்தில் கண்டு எடுத்த ஒரு கற்சிலையில் மூன்று பாஷைகளில் சிலவற்றை எழுதக்கண்டார்கள். அந்த கற்சிலை லண்டன்மா நகரத்து விநோதக்காட்சி மண்டபத்தில் இன்னுமிருக்கின்றது. Dr. Young என்ற ஒரு சிறந்த பண்டிதர் இதில் எழுதியதை வாசித்தறிந்து கி. மு. 200 வருடங்களுக்குமுன்பு அது எழுதியதென்றும், அதன் சங்கேதபாஷை சில அறிகுறிகளாலும், ஒலி வேற்றுமையாலுந்தான் உணரத்தக்க தென்றும் சொல்லியிருக்கிறார். இந்த ஆதாரத்தைக் கொண்டே பிரான்சுதேசத்துப் புலவர் 'சம்போலியன்' என்பவர் இவற்றை செவ்வையாய் வாசித்து பொருள் உணரும் வழியைகண்டுபிடித்தார். பரிசோதித்துப் பார்த்தளவில் இக்கற்சிலைகளைக் கட்டின அரசர்களின் வரலாறும், பாவலர்கள் இவர்களைப்பற்றிப் புகழ்ந்து பாடிய பாக்களுமே யல்லாமல் சமயநூலாவது, சாஸ்திரங்களாவது, சரித்திரமாவது அவற்றில் எழுதக்காணோம். என்றாலும் இவற்றால் அரசாண்ட மன்னர்களின் பெயரும், காலமும், வெற்றிகளும் நன்கு விளங்குகின்றன. பூர்வத்தில் எகிப்து தேசத்தில் நமது தேசத்தைப் போலவே வர்ணாச்ரம தர்மங்கள் ஏற்பட்டு பிரபலமாயிருந்தன. சரித்ரக்காரர்களில் Strabo என்பவர் இவர்களை ஆசாரியர், பொருநர் என்றும், Diodorus என்பவர் யாதவர், வைசியர், சிற்பிகள் என்றும், Herodotus என்பவர் யாதவர், பண்டிதர், வைசியர், மாலுமிகள், வராகபாலர் (பன்றி ஒட்டர்கள்) என்ற 5-ஜாதியாராகவும் பிரித்திருந்தபோதிலும் ஆசாரியர், பொருநர் தான் மேலான வகுப்பாரெனச் சொல்லுகிறார்கள். ஆகவே இந்தியாவின் வருணபேதத்தை நன்றாய் ஒத்திருக்கிறதெனத்தெளிவாகின்றது. மேற்சொன்ன மேல்வகுப்பார்தான் சிம்மாசனாதிபர்களா யிருந்தனர். பொருநரில் எவனாவது அரசனாக நேமிக்கப்பட்டால் அவனை ஆசாரிய கருமங்களைச் செய்ய யோக்யனாக்க ஓர்வித சடங்கை ஏற்படுத்தியிருந்தார்கள். அரசன் அதிகாரத்திற்கு எல்லை இல்லை. சனங்கள் அவனை தெய்வமாகக்கருதி மேன்மை பாராட்டினார்கள். அரசனும் அநுசரிக்கவேண்டிய பலவித நிர்ப்பந்தங்களுக்குள் முக்கியமாய் அவன் இன்ன காலக்ஷேபந்தான் செய்யவேண்டுமென்றும், இன்னதுதான் புசிக்க வேண்டுமென்றும் விதி கண்டிப்பாய் இருந்தது. ஆசாரியர்கள் மந்திரியாக இருந்துகொண்டு கொடுங்கோன்மை இயற்றாமல் அரசாளச்செய்து வந்தனர். இதனால் மேல்வகுப்பாருள் சிற்சில சமயங்

களில் மனஸ்தாபங்கள் உண்டாயிற்று. ஆசாரி
யர்களுக்குள் ஏற்றத்தாழ்வு உண்டு. பெரிய
தேவஸ்தானதிபர்களுக்கு சில்லரை தேவ
ஸ்தானதிபர்களைக் காட்டிலும் மரியாதை
அதிகம். படித்தவர்கள் இவர்களாதலின் பற்
பல தொழிலைச்செய்து வந்தார்கள். ஆதலின்
சர்க்கார் உத்யோகஸ்தர், வக்கீல்கள், வித்
வான்கள், வைத்தியர்கள், சிற்பிகள், முதலான
வர்களாயிருந்து வேலைபார்த்தவரும் இவர்
களே. இவர்கள் மிதமாய் புசிக்கவும், குடிக்
கவும் வேண்டுமென்றும் ஒரேதாரத்தைத்தான்
மணம் புரியவேண்டுமென்றும் விதி உண்டு.
இதனால் ஏனையோர்கள் பல பெண்களை விவா
கஞ் செய்துகொண்டதாகத் தெரிகின்றது.
மேல்வகுப்பாருக்கு மானியங்கள் விடப்பட்
டதுமல்லாமல் சர்க்கார் செலவிலேயே அன்ன
பானதிகள் நடந்தேறிவந்தன. சுமார் 4,10,000
பேர் அடங்கிய காப்புச் சேனையில் உள்ள பல
பொருநர்களுக்கும் மானியங்கள் ஏற்பட்
டிருந்தன. போர்த்தொழிலை விசேஷமாய்ப்
பயின்று அதில் மிக்க வல்லவராயிருந்தனர்.
அன்னியதேசத்தாரோடு சண்டைசெய்து தங்
கள் தேசத்தைப் பலமுறை பாதுகாத்த அர
சர்களின் வெற்றியைக்குறித்துப் புகழ்ந்திருக்
கிறார்கள். பெண்பாலாரும் அரசுபுரிந்து
கீர்த்தியடைந்திருந்தனர். முற்றுகைப்போட்டு
ஒரு பட்டணத்தை பிடிப்பதில் இவர்கள் செய்
யும் சாகசங்கள் மிக விநோதமெனத் தெரிகின்
றது. முக்கியமாய் குருக்கள் என்ற ஜாதி
தான் அரசுபுரிந்து வந்தனர். முன்பு எகிப்து
கடவுளாலும், பிறகு தேவதைகளாலும் அதற்
குப் பிறகுதான் மனிதர்களால் அரசாளப்
பட்டதென எண்ணங்கொண்டிருந்தார்கள்.
மரணதண்டனையானது கொலைசெய்தவர்கள்,
பொய்ச் சத்தியம் பண்ணினவர், புரட்டுருட்டுச்
செய்தவர்கள், அக்கிரமமான வாணிபஞ்செய்த
வர்கள், ஆகிய இவர்கள்மேல் விதிக்கப்பட்
டிருந்தது. பயங்காளிகளையும், யுத்தத்தில்
முதுகுகாட்டி ஓடினவர்களையும் மிகவும் அவ
மதித்து இகழ்ந்தார்கள். அந்நியதேசத்தார்
இங்கேவந்து வியாபாரம் செய்தார்களே ஒழிய
தாங்கள் வெளியூர்களுக்குப் போகவில்லை.
திபேயாநகரத்தில் சீனதேசத்துப் பாத்திரங்
கள் இருந்ததற்கு அந்த பாஷையிலேயே
எழுதின கற்கம்பங்கள் சில உள. பிரதேசத்
தாரைச் சிறிதும் மதிக்காமற்போனதற்குக்
காரணம் அவர்களுடைய விசித்திரமான
நடவடிக்கைகளும், கோட்பாடுகளும், பலவித
நிர்ப்பந்தங்களுமென ஊகிக்கலாம். வேளா
ண்மை, ஆடுமாடு மேய்த்தல், அம்பும் வில்லு
மாய் வேட்டையாடுதல், மீன் பறவை முதலிய
வைகளைப்பிடித்தல், தச்சவேலை, சிற்பவேலை,
தட்டாரவேலை, நெசவு தொழில், சித்திர
மெழுதல், இன்னும் இவைபோன்ற பலவித
தொழில்களைச் செய்ததாக கற்கம்பங்களில்
வெகு விசித்திரமாய் காட்டப்பட்டிருக்கின்
றனவே ஒழிய வேறேதாவது பழைய கிரந்
தங்கள் உண்டோவென்று சந்தேகிக்க இடம்
காணோம். நீல நதிக்கரையில் நாணலைப்
போன்ற ஓர் வகைச்செடி அபரிமிதமாய்
வளர்ந்திருந்தன. அதன் கிழங்கை ஆகாரமாக
வும், இலைகளை காகிதங்களாகவும் உபயோகித்
தார்கள். இரசாயனசாஸ்திரம் சிறிதளவு
தெரிந்திருந்தது. இவற்றையெல்லாம் பார்க்கு
மளவில் நாகரிகத்தில் சிறந்தவர் எனக் கொள்
ளல்வேண்டும். தர்பார் மண்டபங்களில் அநே
வரும் தங்கள் பெண்பாலாரோடு சேர்ந்து,
நாட்டியப் பெண்களை நடனமாடச்செய்தும்,
வித்வான்களை வரவழைத்து பாட்டுக்கச்சேரி
வைத்தும் உல்லாசமாய்க் காலங்கழிப்பதும்
உண்டு. மதுபானம்செய்யும் வழக்கமும் இவ
ரிடம் இருந்தது. மனிதரின் ஆயுள் சொற்ப
மென்றும், ஆதலால் உலக இன்பங்களை ஒரு
வன் அநுபவிக்கவேண்டுமென்றும் வற்புறுத்
தும்பொருட்டு ஒரு பிணத்தின் தலையை கூட
யிருக்கும் அதிதிகளுக்குக் காண்பிப்பது வழக்
கம். கடவுள் ஆராதனையின்றி ஒரு காரிய
மும்செய்யத் தொடங்குகிறதில்லை. அவர்கள்
பிருதவியை வணங்கினார்கள். மிருகஜாதிக
ளில் மிகவும் உபயோகமுள்ளவைகளைத்தான்

தெய்வமாக பாவித்துப் போற்றிவந்தார்கள்.
அமரேசன் என்ற இந்துக்கள் தெய்வம்போல
'அமன்' என்ற ஒரு தெய்வத்தையும் நம் பிதா
மகனைப்போன்ற பிதா வென்ற தெய்வத்தை
யும் வணங்கினார்கள். எருது, நாய், பூனை,
வல்லூறு இவற்றை எகிப்திலும், திபேயா
நகரத்தில் ஆட்டையும், மெந்திய நகரத்தில்
வெள்ளாட்டையும், இலசுஷபோலியில் ஓநாயை
யும், இலியாண்டோபோலியில் சிங்கத்தை
யும், அந்திரபசாவில் சுண்டெலியையும் வண
ங்கிவந்தார்கள். யாராவது இவற்றைத் தெரி
ந்து கொன்றால் மரணதண்டனைக் காளாவார்
கள். தற்செயலாய் இவைகளைக்கொன்றால்
ஒரு பெரிய அபராதம் கொடுத்துத் தப்பலாம்.
ஒரு பட்டணத்தில் வணங்கிவரும் மிருகங்களை
வேறொரு பட்டணத்தில் வசிப்போர் மதிக்கா
மலும் இருப்பார்கள். இதனால் கலகங்களும்
உண்டாவது உண்டு. உரோம, கிரேக்க ஜாதி
யார் அரசாண்டகாலத்திலும் ஜனங்கள் இந்த
வழக்கத்தை விடாமல் இருந்ததினால் அவர்கள்
இதை கேலிக்கிடமாக வைத்திருந்தார்கள்.
ஒரு வீட்டில் ஒரு பூனை இறந்துபோனால்
அதில் உள்ளவர்களெல்லாம் தங்கள் புருவங்
களை சிரைத்துக்கொள்ள வேண்டுமென்றும்,
ஒரு நாய் செத்துப்போனால் ஆடவர்கள் சர்
வாங்கக்ஷவரம் செய்துகொள்ளவேண்டுமென்
றும் கண்டிப்பான ஏற்பாடு இருந்தது. இதைக்
கேட்க யார்தான் நகையார்கள். மேலும் இச்
சவங்களை வாசனைப்பெட்டிகளில் வைத்து மனி
தர்களைப்போலவே கல்லறைகளில் வைப்ப
துண்டு. மிருகங்களில் நந்திகேஸ்வரனைப்
போன்ற ஒருவகை இடபத்தை (எருதை)
[illegible]ாதித்தார்கள். இவ்வெருது கருப்பாயும்,
[illegible]ற்றியில் முக்கோணவடிவுள்ள வெள்ளைப்
புள்ளியுடையதாயும், கழுத்து கழுதைபோல
வும், இருந்தால்தான் பூஜைக்குருகமென்றும்,
அதை வளர்த்துவரும் பூசாரிக்கு ஆரூடஞ்
சொல்லும் சக்தி தானாகவே அமையுமென்
றும் நம்பியிருந்தனர். இந்த எருதை 25-வரு
[illegible]
இறந்துபோனால் அவ்வூராரெல்லாம் பிணக்
கோலங்கொண்டு மயானம் குறுகி உத்தரக்கி
ரியைகளை வெகு ஆடம்பரத்துடன் நடத்தி
வந்தார்கள். மேற்சொன்ன அடையாளங்க
ளமைந்த வேறொரு எருது கிடைக்கிறவரை
யில் ஒப்பாரியிட்டு தினமும் அழுவார்கள்.
அது அகப்பட்டதும் அடக்கமுடியா ஆனந்
தமடைவார்கள். செத்த எருதின் ஆவி
இதனுள் பிரவேசிக்கிறதாக நம்பினார்கள்.
இதனால் மறுஜன்மம் உண்டென்று தோற்று
கின்றது. ஒருவன் மரித்தபிறகு அவனுக்கு
அந்த மானிட ஜன்மமே வரவேண்டுமானால்
மூவாயிரம் வருடம் தரை, கடல், ஆகாயம்,
இவற்றில் வசிக்கும் பலவித ஜீவராசிக்குள்
பிறந்துழலவேண்டுமென்று, ஒரு கிரேக்க சரித்
திரக்காரர் சொல்லியிருக்கிறார். யமபுரம்
போல அவர்கட்கும் யமந்தி (Amenthi)
என்ற ஓர்பட்டணமும் அங்கே குற்றத்திற்குத்
தக்கவாறு தண்டனை விதிக்கப்படுகிறதென்றும்
நம்பிக்கையுண்டு. ஒரு கற்சிலையில் யமன்
ஒரு கையில் திராசுத்தட்டுகளை ஏந்தி தீர்ப்புச்
சொல்லுகிறதாகக் காட்டியிருக்கிறது. ஒருவன்
இறந்துபோனாலும் அவனை பிரதிவாதியாகச்
சேர்த்து பிராதுசெய்யலாம். இறந்துபோன
வன் ஒரு குற்றவாளியாக ஏற்பட்டால் அவ
னுக்கு யாதொரு உத்தரக்கிரியைகளை நடத்
தக்கூடாதென்றும் இவ்வளவுகாலம் அச்ச
வத்தை புதைக்கக்கூடாதென்றும், விதி இருந்
தது. இதனால் அரசர்கள் கொடுங்கோன்மை
புரியாமல் செவ்வையாய் அரசாண்டதற்கு
ஒரு காரணமாகும். இத்தேயத்தவர்கள் கல்
லறை சமைப்பதில் தங்கள் அந்தஸ்துக்கு
மீறியே செலவுசெய்தார்கள். இதற்கு இடை
யூறு ஏதேனும் நேர்ந்தால் அதை ஒரு
கெட்டசகுனமாக எண்ணிப் பரதவிப்பார்கள்.
பிணத்தை ஆடையாபரணங்களால் அலங்க
ரித்து ஒரு பெட்டிக்குள்வைத்து அதன்மேல்
தங்கள் தேவபாஷையில் அதைப்பற்றி சிறப்
பித்து சிலவற்றை எழுதுவதுண்டு. இவ்வாறு
செய்தால்தான் ஆன்மா மரிக்கிறதில்லையென

நம்பினார்கள். இந்துக்களுக்கு சாரதா என்ற தெய்வம் படிப்புக்கு எவ்வாறோ அவ்வாறே இவர்களுக்கு 'தாத்' என்ற தெய்வம் வழங்கிற்று. இந்த தெய்வம் கணிதம், க்ஷேத்திர கணிதம் (Geometry) வான சாஸ்திரம், லிபி சாஸ்திரம், இவற்றைக் கற்பித்துப்போனதாக எண்ணினார்கள். ஆற்றின்வெள்ளத்தால் மண்மேடிட்டுப் புலங்களின் எல்லை அறிவது வருத்தம். அதனால் க்ஷேத்திர கணிதம், வானசாஸ்திரம் இவ்விரண்டையும் கற்கவேண்டியது அவசியமாயிருந்தது. எந்த வித்தையையும் அபிவிர்த்திசெய்யாமல் பூர்வ ஸ்திதியிலேயே வைத்துக் காப்பாற்றினார்கள். தங்கள் வைத்தியநூலில் சொல்லியிராத ஏதாவதொரு விஷயத்தை ஒருவன் பிறதேயத்தாரிடம் பயின்று அதை ஒரு நோயாளிக்கு உபயோகித்து அதனால் அவன் இறந்துபோனால் வைத்தியனையும் மரணதண்டனைக்கு ஆளாக்கினார்கள். லிபி சாஸ்திரத்தை இவர்கள்தான் முதலில் கண்டுபிடித்தார்கள். ஏனெனில் பூர்விக ஹிப்ரு, பினீஷியன், பாஷைகளின் எழுத்துக்கள் இந்த ஆதாரத்தைக்கொண்டே கண்டுபிடிக்கப்பட்டன. பிரசங்கம், செய்யுட்பாடம் என்பதே அவர்கள் அறியார்கள். சங்கீதவித்தையில் சிறிதுதான் தேர்ச்சியடைந்திருந்தார்கள். தம்பூர், வீணை, மிருதங்கம், கைத்தாளம் முதலியவற்றை உபயோகித்தார்கள். ஆனால் பிறநாட்டார் எக்காலத்தும் பார்த்து வியந்து பிரமிக்கும் வண்ணம் சிற்பவேலையிலும் சித்திரவேலையிலும், வெகு நிபுணராயிருந்தனரென்பது அவர்கள் கட்டிய அதி உன்னதமும், பிரம்மாண்டமுமான கற்சிலைகள், கற்கோபுரங்களைக்கொண்டே தெரிகின்றது. சிபிசக்கரவர்த்தி சுமார் 450-அடி உயரமும், அடிவாரத்தண்டை 716-அடி அகலமுமுள்ள ஒரு கோபுரத்தைக்கட்டி முடித்தார். இவ்வித உயரமான கட்டடங்கள் ஐரோப்பாவில் இருந்தபோதிலும் இத்தன்மையான பிரம்மாண்டபரிமாணத்தையுடையவைகள் கிடையா. இவற்றிற் பதித்துவைத்திருந்த பலவர்ணக்கற்களை அராபியர் பேர்த்துக்கொண்டு போய்விட்டதால் அதில் உள்ள சித்திரங்களும் அழிந்துபோயிருக்கின்றன. இந்த கோபுரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சமாதியிருக்க ஐரோப்பியர் கண்டதால் இவைகள் எல்லாம் முன்பு கல்லறைகளாகத்தான் இருந்திருக்கவேண்டுமெனச் சொல்லுகிறார்கள். இக்கட்டடங்களில் அமைக்கப்பட்ட மனித உருவங்களைக்காட்டிலும் மிருக உருவங்கள் மிகவும் நேர்த்தியாகவிருந்தன. தெய்வச் சிலைகளெல்லாம் மானிடசரீரமுடையதும் மிருகங்களின் முகமுடையதாகவும் இருந்தன. முக்கியமாய் செம்மறிக்கடா, வல்லூறு, எருது, இவைகளின் முகத்தைத்தான் தெய்வத்திற்கு அமைத்திருந்தார்கள். பெரிய விக்ரஹங்களுக்கு சிங்கத்தின் உடம்பும், மனிதரின்தலையுமிருந்தன. Herodotus, Diodorus என்ற கிரேக்க சரித்திர வித்வான்கள் தங்கள் தேசத்தைவிட்டு எகிப்து சரித்திரம் எழுத இங்கே சில வருடங்கள் இருந்து ஆசாரியர் மூலமாய் சங்கதிகள் தெரிந்து எழுதியிருந்தபோதிலும் ஒருவர் சொன்னபடி ஒருவர் சொல்லவில்லையெனத் தெரிகின்றது. 3-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இத்தேசத்தை அரசாண்ட "டாலமி பிலடல்பஸ்" என்பவன் 'ஹெலியோ போலிஸில்' வசித்த "மானதி" என்ற ஒரு எகிப்து ஆசாரியப்புலவரை கிரேக்பாஷையில் ஒரு சரித்திரம் எழுதும்படி வேண்டிக்கொள்ளவே அவர் அதிக சிரத்தையுடன் எழுதாமற்போனபோதிலும், கற்கம்பங்களில் தேவபாஷையில் உள்ளவைகளை ஒப்பிட்டுப் பார்த்தளவில் இரண்டும் ஒத்திருந்தமையால் உண்மையெனவே கொள்ளல்வேண்டும். இவர் இந்த எகிப்து தேசம் கி. மு. 3892-ல் மனு (Menes) என்பவனால் நிர்மாணஞ் செய்யப்பட்டதெனச்

சொல்லியிருக்கிறார். இதில் முறையே பூர்விக ராஜாக்கள், பாரசீகர், கிரேக்கர், உரோமஜாதியார் அரசாண்டார்கள். இதில் ஆண்ட சுதேச ராஜாக்களில் சிலரைப்பற்றி எழுதுவோம். 'சீசார்த்தேசன்' என்ற ஒரு அரசன் ஆசியா, ஐரோப்பாவின்மேல் படையெடுத்து அவற்றைக் கைவசப்படுத்திக்கொண்டான். "திமேசன்" என்ற அரசன் காலத்தில் அராபியர் இந்த நாட்டை கைவசப்படுத்தி, ஜனங்களை அடிமைகளாக்கி கோவில்களையும், பட்டணங்களையும், எரித்துவிட்டுப்போனார்கள். கி. மு. 712-ல் அரசாண்ட சேதாஸ் என்பவன் காலத்தில் Sennacrib (சென்னாகிரிப்) என்ற ஆசிரியாதேசத்து பிரசித்திபெற்ற போர்வீரன் ஒருவன் படையெடுத்துவந்ததாயும், அவனை எதிர்க்கத் தன் சேனை உதவி செய்யாததால் சேதாஸ் இரவில் தான் கண்ட கனவின்படி வர்த்தகர்கள், தொழிலாளிகள், இன்னுமற்ற சாதாரண ஜனங்களைக்கொண்டு ஒரு சேனையைச்சேர்த்தான். ஆனால் தெய்வானுகூலத்தால் எதிரியின் அம்பு, வில், கேடயங்கள் முதலானவைகளை நடுசாமத்தில் சுண்டெலிகள் கூட்டமாய்வந்து தங்கள் பற்களால் கெடுத்துவிட்டுப்போனதால் 'சென்னாகிரிப்' சேனை இருந்த இடம்தெரியாமல் மறுநாட் காலையில் சிதறிப்போயின. மேற்சொன்ன சுதேச ராஜாக்கள் ஆண்டபின் எகிப்து தேசம் பாரசீகராலும், கிரேக்கராலும், உரோம ஜாதியாராலும் ஆளப்பட்டு வெகு நாகரிகமடைந்து முற்காலத்தில் உலகத்திற்கே ஒரு நடுநாயகமாக விளங்கிற்று.

COAL.

நிலக்கரி.

நிலக்கரியென்பது அடுப்புக்கரிபோல ஒருவிதமான கரியேயாகும். ஆயினும் இது அடுப்புக்கரிபோலன்றிச் சிறிது இதர பதார்த்தங்களோடு கலந்திருக்கும். நெடுங்காலத்துக்குமுன்னே பூமிக்குள்ளே யாதோகாரணத்தினால் புதைந்துபோன மரங்களும் செடிகளுமே இப்போது நிலக்கரியாகக் காணப்படுகின்றன. இது பூமிக்குள் மிகவும் படைபடையாக ஒன்றன்மேலொன்றாய் அமைந்திருக்கும்.

நிலக்கரி, மரங்களும் செடிகளும் புதைந்துபட்டுப்போய் உண்டானதே யென்பதற்கு அநேக நியாயங்கள் இருக்கின்றன. நாம் நிலக்கரிக்கனிகளுக்குள்ளே போய்ப்பார்த்தால் அங்கு சுரங்கங்களின் பக்கங்களிலும் மேற்பாகத்தும் இலைகள் செடிகள் முதலியவற்றின் சுவடுகளை நன்றாகக்காணலாம். அன்றியும் ஒருதுணுக்கு நிலக்கரியை யெடுத்துச் சுறண்டிப்பார்ப்பினும் அதிலும்கூட இச்சுவடுகள் காணப்படும்.

நிலக்கரியிற் சேர்ந்திருக்கும் பொருள்களில் முக்கியமானது. கார்பன் என்னும் கரிப்பதார்த்தமே. இது தவிர ஹைட்ரஜன், ஆக்ஸிஜன், நைட்ரஜன் என்னும் மூவகையான வாயு பதார்த்தங்களும் சில உலோக பாதார்த்தங்களும் கலந்திருக்கும்.

நிலக்கரியில் கார்பனென்னும் கரிப்பதார்த்தம் கலந்திருப்பதைக்காட்ட ஒரு துணுக்கு நிலக்கரியையெடுத்து வாய்திறந்த ஒரு பாத்திரத்திலிட்டுக் கொளுத்திவிட்டுப் பின்பு அதில் சுண்ணாம்புத் தண்ணீரை விட்டால் அச்சுண்ணாம்புநீர் உடனே பால் நிறமாக மாறும். இதனால் அதில் கார்போனிக் ஆஸிட் என்னும் கரிகலந்த வாயு உண்டாயிற்றென்று புலப்படும். இவ்வாயு கார்பன் என்னும் கரிப்பதார்த்தமும் ஆக்ஸிஜன் என்னும் வாயுப்பதார்த்தமும் கலந்து உண்டாவதாகும்.

நிலக்கரியிற் பற்பல பேதங்களுண்டு. அவற்றுள் முக்கியமானவை இரண்டு. ஒன்று மிகவும் கடினமானது. மற்றொன்று மிகவும் மென்மையானது. இந்தக் கெட்டிக்கரிக்கு அந்த்ரஸைட் (Authracite) என்று பெயர். இது இரும்புபோலக் கருப்புவருணமாய்க் கொஞ்சம் உலோகஜாதியின் பிரகாசமும் உள்ளது. இதில் நெருப்பு இலகுவில் பிடிக்காது. எரியும்போது ஜ்வாலையும் சொற்பமாகவே யுண்டாகும். புகையவேமாட்டாது. இதில் 100-ல் 90-பாகம் கரிப்பதார்த்தமேயாம். வாயுவஸ்துக்கள் விசேஷமாகவில்லை. இக்கரி நீராவியந்திரங்களை முடுக்குவதற்கும் உலோகங்களை யுருக்குவதற்கும் அதிக காங்கை வேண்டியிருத்தலினால் அக்காரியங்களுக்கு விசேஷமாக உபயோகிக்கப்படும்.

மிருதுவான வகைக்கு கீல்கரி (Bituminous Coal) என்று பெயர். இதில் கரிப் பதார்த்தம் நூற்றில் எழுபத்தொன்பது பாகம்தானுள்ளது. அது திறந்த வெளியான இடங்களில் கூட முழுதும் எரிந்துபோகாது. இது நிலக்கரிவாயு (Coal gas) உண்டுபண்ணுவதற்கு விசேஷமாக உபயோகிக்கப்படும்.

நிலக்கரியைக் காற்றோட்டமான திறந்த விடங்களில் எரித்தால் அதிற் சேர்ந்திருக்கும் பொருள்கள் அநேகமாக ஆகாயவாயுவிலுள்ள ஆக்ஸிஜனோடு கலந்துபோம். சிற்சில பொருள்கள்தான் அப்படிக் கலவாமற் சேஷித்துச் சாம்பலாய்த்தங்கும். இச்சாம்பலில் உப்பும் மண்ணும் கலந்திருக்கும்.

நிலக்கரியை வாய்மூடின பாத்திரத்திலிட்டெரித்தால் அதன் பாகங்கள் ஒன்றைவிட்டொன்று பிரிந்துகலந்து நிலக்கரிவாயு (Coal-gas) முதலிய பதார்த்தங்களாகமாறும். இந்நிலக்கரி மிகவும் உபயோகமானது. நிலக்கரியைப் பொடித்து கெட்டியான இருப்புக்கொப்பரைகளில் போட்டுச் சந்தில்லாமல் மூடி அவற்றின் கீழெரியிட்டு அக்கொப்பரைகளினின்றும் குழாய்களோடே இவ்வாயுவைச் சேர்ப்பார்கள். இவ்வாயுவில் அநேக வாயுபேதங்கள் சேர்ந்திருக்கும். அவற்றுள் சில ஒளியும் சில உஷ்ணமும் கொடுக்கும். இவ்வாயுவுக்குச் சுத்தமாயிருக்கும்போது நிறம், வடிவு இல்லாமையால் கண்ணுக்குத் தோன்றாது. வாசனைமட்டும் சிறிது இருக்கும். இது மிகவும் இலேசானது. ஆகாயவாயுவைவிட எட்டுப்பங்கு இலேசானது. ஆதலால் இது பல்லூன் (Balloon) என்னும் ஆகாயகமனம் செய்யும் வாகனத்திற்குபயோகிக்கப்படும். நெருப்பைக் கண்டால் புஸ்ஸென்று பற்றிக்கொள்ளும். இது எண்ணெய் போலொளிதந்தெரியுமாதலால் இதை இப்பொழுது அநேகபட்டணங்களில் வீதிகள், கூடங்கள் முதலிய இடங்களுக்கு விளக்குப்போட உபயோகிக்கிறார்கள். நிலக்கரியில் உள்ள கார்பன் ஹைட்ரஜன் என்னும் வஸ்துக்கள் இந்தக்கரிவாயுவிலும் உண்டு.

நிலக்கரிச் சுரங்கங்களில் முற்காலங்களில் அடிக்கடி நெருப்புப்பற்றி வெடித்து அநேக சேதங்கள் உண்டாவதுண்டு. இதற்குக் காரணமென்னெனில் இச்சுரங்கங்களின் வெடிப்புகளிலிருந்து சதுப்புவாயு என்று ஒருவிதமானவாயு விஸ்தாரமாக உண்டாகும். இதன் பத்துமடங்குகொண்ட ஆகாயவாயுவோடாயினும் இருமடங்குகொண்ட ஆக்ஸிஜனென்னும் பிராணவாயுவோடாயினும் சேருமாயின் துப்பாக்கி மருந்துபோல வெடிக்கும் சுபாவத்தைப்பெறும். அச்சுரங்கங்களில் வேலைசெய்யும் வேலையாட்கள் உபயோகிக்கும் விளக்குத்தீயால் நெருப்புப்பற்றிப் பயங்கரமாகவெடித்து அநேகருக்கு மரணத்துக்குக் காரணமாகும். இவ்விதமான கொடிய அபாயங்கள் பின்பு டேவி (Davy) என்பவர் நிருமித்த ஒருவகைச் சூக்ஷ்ம தீபத்தினால் நிவிர்த்திசெய்யப்பட்டன. இத்தீபம் சாதாரணமான எண்ணெய்விட்டெரிக்கும் விளக்கேயாம். ஆயினும் காற்றுத்திறப்பாய் விடப்படாமல் நுண்ணிய கம்பிகளால் வஸ்திரம்போலச் செய்த ஒருவகைக் கம்பிவஸ்திரத்தைக் குழாயாகச்செய்து அக்குழாய்க்குள்ளே வைத்து

மூடப்பட்டிருக்கும். இக்கம்பிக்குழாய் விளக்கின் ஜ்வாலையை வெளிவாராமல் தனக்குள் அடக்கிக்கொள்ளும் சுபாவமுடையது. அதனால் இத்தீபச்சுவாலையால் நெருப்புப் பிடிக்க வழியில்லை. தீபமும் கம்பிச் சந்துகளூடே வெளிச்சம் கொடுத்துப் பிரகாசிக்கும். இது சொற்ப யுக்தியானாலும் இதனால் எவ்வளவோ ஜனங்கள் கொடிய ஆபத்தினின்று காக்கப்படுகிறார்கள்.

இங்கிலாந்தின் பெருஞ்செல்வத்துக்குக் காரணமாயிருப்பவைகளுள் நிலக்கரியும் ஒன்று. இது அத்தேயத்தில் அபரிமிதமாக எடுக்கப்பட்டு அத்தேயத்தாரால் தமது சொந்தக்காரியங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளப்படுவதன்றிப் பிறதேசங்களுக்கும் விஸ்தாரமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஐரோப்பா கண்டத்தில் உபயோகிக்கப்படும் நிலக்கரியில் முக்கால்வாசியும் இங்கிலாந்திலிருந்தே போகிறது. இது அங்கு மேலே கூறியபடி நீராவியந்திரங்களை முடுக்குவதற்கும் செம்பு முதலிய உலோகங்களை உருக்குவதற்கும் மாத்திரமேயன்றி மற்றச் சமையல் முதலிய நித்தியவிர்த்தி கிருககிருத்தியங்களுக்கும் நாம் இங்கு விறகு உபயோகப்படுத்துவதுபோல உபயோகிக்கப்படும். யந்திரம் முதலானவைகளில் அநேகம் நிலக்கரியில்லாமற்போனால் பிரயோசனம் அற்றுப்போம். பிரபஞ்சத்திலுள்ள பிரதானமான நிலக்கரிக் கனிகளில் இரண்டு இங்கிலாந்திலிருக்கின்றன. அக்கனிகள் சமுத்திரத்தின்கீழ் நெடுந்தூரம் பூமிக்குள் வெட்டப்பட்டிருக்கின்றன. அச்சுரங்கங்களின் மேலுள்ள சமுத்திரத்தில் பெரிய கப்பல்கள் பாய்விரித்து ஓடும். இந்தியாவிலும் நிலக்கரி பற்பல விடங்களில் வெட்டியெடுக்கப்படுகின்றது. பங்காளத்தில் 'ரானீகஞ்சிலும்" 'பண்டல்கண்டிலும்,' மத்தியமாகாணங்களிலும், நிஜாம் இராஜ்யத்திலும், அஸ்ஸாமிலும்வேறிடங்களிலும் இதுவிசேஷமாகக் காணப்படுகிறது. சில வருஷங்களுக்கு முன்னே நம் தேயத்தில் இருப்புப்பாதைப் புகைவண்டிகளுக்கும், கைத்தொழில் செய்யும் இடங்களில் எந்திரங்களுக்கும் வேண்டிய நிலக்கரி இங்கிலாந்திலிருந்தாயினும், ஆஸ்திரேலியா, ஜப்பான் முதலான தேசங்களிலிருந்தாயினும் தருவித்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது. இப்போது பங்காளம், சிங்கரேணி முதலிய கனிகளிலிருந்து வருஷம் ஒன்றுக்கு (35,37,000) 35-லக்ஷத்து 37-ஆயிரம் டன் நிறையுள்ள நிலக்கரி வெட்டியெடுக்கப்படுகின்றது. இக்கரி இத்தேயத்தில் வேண்டிய செலவுகளுக்குப் போதுவதேயன்றி அயல்தேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. உலக முழுவதிலும் ஒருவருஷத்தில் வெட்டியெடுக்கப்படும் நிலக்கரி 50-கோடிப்பாரம் ஆகுமென்று மதிக்கிறார்கள். இங்கிலாந்தில் மாத்திரம் ஏறக்குறைய முப்பதுகோடி யெடுக்கப்படுகின்றது.

THE VIVEKACHINTAMANI WAR NUMBER.

A HOUSEHOLD NARRATIVE OF CONTENDING FOLKS IN THE GREAT WAR OF 1914.

WITH AN INTRODUCTION
BY H. O. D. HARDING, ESQ., I. C. S.
Reissued in one Volume.

Price Re. 1—2—0 net. Cash or V. P. P.

EXTRACTS.

"One of our teachers to whom I gave the War Number of the "Vivekachintamani" to read the other day, was quite engrossed in it after a few moments."—Miss C. Kotel, Superintendent of Olcott Panchama Free Schools, Adyar, Madras, S., dated 1st June 1916.

Only a limited number of copies of the Reissue available.

Apply sharp to:—THE SOLE AGENTS & MANAGERS,
"THE VIVEKACHINTAMANI,"
Lalitalaya, 19, *Adam Street*, *MYLAPORE*.

THE SCENERY OF THE CAUVERY.

காவேரி நதியின் அழகிய காட்சி.

II.

இந்தப் பேராற்றைத்தொடர்ந்து முப்பது மைல் மேல்நோக்கிச்செல்ல திரிச்சிராப்பள்ளி மலையின் சிகரம் தோன்றும். இதற்கு ஆறு மைல் மேற்கே ஸ்ரீரங்கமென்னும் விசுத்தமாகிய தீவினால் இந்நதி இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. இக்கிளைகளில் ஒவ்வொன்றும் அரை மைல் அகலமுள்ளதாய் இத்தீவின் இருபுறமும் ஓடுகின்றது. தென்கிளை தன் பெயரையே தரித்திருக்க வடகிளை கொள்ளிடம் என்னும் புதுப்பெயரைக் கொள்ளுகின்றது. இக்கொள்ளிடம் இங்கு இத்தீவின் முனையினின்று மறு கரைவரையில் மேலைக் கல்லணையென்று பெயரிடப்பட்ட ஒரு கல்லணைபால் கடிவாளம் பூட்டியதுபோலத் தடுக்கப்பட்டுள்ளது. இக்கல்லணையாவது, எண்ணூறு கெஜ நீளமும் எழடியுயரமுமாகிக் கொள்ளிடத்தின் அடித்தரைமீது குறுக்காகக் கட்டப்பட்ட ஒரு கற்சுவராகும். இதனால் காவேரியின் ஜலமானது தஞ்சாவூர் ஜில்லாவின் செழிப்பான விளைநிலங்களுக்கு நீர் வழிப்பாயும்படி உயர்த்தப்படுகின்றது. இவ்வாற்றின் கிளைகள் அநந்தம் கால்வாய்களாகப் பிரிந்து இந்நாடு முழுதும் பரவுகின்றன. இந்த அத்தியந்த ஜனோபகாரமானவேலை 1836-ம்௵ ஸர். ஆர்தர் காட்டன் (Sir Arthur Cotton) என்பவரால் மூன்று லக்ஷம் ரூபாய் செலவு செய்து கட்டி முடிக்கப்பட்டது.

ஸ்ரீரங்கமென்னும் இந்த அழகிய தீவானது 12-மைல் நீளமும் ஒரு மைல் அகலமுமாகி எங்கும் தோட்டங்களும் பழமரங்களின் தோப்புகளும் உழுது பயிர்செய்த செழிப்பான வயல்களுமாயுள்ளது. இதன் மத்தியில் சப்தப்பிராகாரங்களையுடைய ஸ்ரீரங்கம் என்னும் விசாலமான கோயில் இருக்கின்றது. இங்கு சதுரமாகிய ஏழு மதில்கள் ஒன்றினுள் ஒன்றாய்ச் சுற்றியிருக்கும். இம்மதில்கள் 25-அடி உயரமும் நான்கடிக் கனமுமாகி ஒவ்வொரு பக்கத்திலும் வெளிமதில் ஒரு மைல்தூரம் பரவியிருக்கின்றது. இம்மதில்களுக்கிடையே நூற்றுப்பன்னிரண்டு கஜம் விசாலமுள்ளது. ஒவ்வொரு பக்கத்திலும் நடுவில் வெகு வேலைப்பாடுபெற்ற கல்லிற் சித்திரிக்கப்பட்ட கோபுரங்களையுடைய உயர்ந்த வாயில்களும் இருக்கின்றன. வெளிமதிலின் வடக்கு வாயிற் கோபுரம் முற்றிலும் கட்டப்படவில்லை. முதல் நிலைமாத்திரமே கட்டி முடிந்திருக்கின்றது. இதுமாத்திரம் முழுதும் கட்டப்பட்டிருக்குமாயின் இத்தேசத்திலுள்ள கோபுரங்கள் எல்லாவற்றிலும் உயர்ந்ததாயிருக்கும். இதன் கால்கள் முப்பத்துமூன்றடி நீளமும் ஆறடிச் சதுரமுமாகி ஒரே கல்லினால் சமைக்கப்பட்டிருக்கின்றது. அளவிறந்த செல்வத்தைப்பெற்ற இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் கடவுள் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் அவதாரம். இவர் எல்லாவற்றிற்கும் உள்மதிற்குள்ளே ஒரு சிறிய கோயிலில் எழுந்தருளி யிருக்கின்றனர். வெளிப்பிராகாரங்களில் கோயில் அர்ச்சகர்களும், ஸ்தல தரிசனம் செய்யவந்தவர்களும் வசிக்கின்ற அநேக வீடுகளும் அவர்களுக்குபயோகமாக ஏற்பட்ட கடைகளுமாயிருக்கும். இக்கோயிலின் பொக்கிஷத்திலுள்ள எண்ணிறந்த உயர்ந்த நகைகளையும் அவற்றிற் பதித்த அற்புதமான காந்தியை வீசுகின்ற வச்சிர வைடூரிய கோமேதக மரகத புஷ்பராகாதி அளவிறந்த அருமையான இரத்தினங்களையும் விவரிக்க இங்குஇடமில்லை. இங்குள்ள விக்கிரகத்துக்குச்சாத்தும் அளவிறந்த இரத்தினங்கள் பதித்துத் தக தகவென்று ஜாஜ்வல்யமாய் ஜொலிப்பதான பொற்கவசமும், அரசனையும் விலைக்குவாங்கும் அரிய இரத்தினஹாரங்களும், லக்ஷோபலக்ஷம் விலையுயர்ந்த முத்துக்கோத்துத் தைத்த வஸ்திரங்களும் கொடைகளும் பத்தரைமாற்றுத் தங்கத்தாற்செய்த ஏராளமான நீர்க் குடங்களும் அண்டாக்களும் இங்கு உள்ளன.

இவை அநேக கற்கம்பங்கள் நிறுத்தப்பட்ட உன்னதமான ஒருமண்டபத்தில் பார்க்க வந்தவர்களுக்கு வைத்துக் காட்டப்படும். இம்மண்டபத்தின் முன்பக்கத்தில் சித்திர வேலை செய்யப்பெற்ற எட்டு ஸ்தம்பங்கள் உள்ளன. ஒவ்வொரு ஸ்தம்பத்திலும் ஒரு மனிதன் குதிரைமேலேறிச் சவாரிசெய்வது போலவும், அக்குதிரைக்குப் பின்பு அதன் முதுகில் ஒரு புலி விழுந்து பாய்வதுபோலவும் அப்புலியை இரண்டு காலாள்கள் அடர்ப்பதுபோலவும் ஒரே கல்லில் உயிரளவுள்ளவாய்ச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது.

இங்கு ஒவ்வொன்றிலும் முப்பத்திரண்டு உயர்ந்த கண்வாய்கள் உள்ள இரண்டு நீண்ட பாலங்கள் இத்தீவை இருபுறமும் ஆறுகளுக்கு அப்புறத்துள்ள கரைகளோடு இணைக்கின்றன. இப்பாலங்களின்மேல் ராஜபாட்டை திருச்சிராப்பள்ளியை நோக்கிச்செல்லுகின்றது.

இந்தப் பெயர்போன புராதனபட்டணத்தின் நடுவே பிரசித்திபெற்ற மலைக்கோட்டையொன்றுள்ளது. இம்மலை மேருமலையின் சிகரங்களில் ஒன்றென்றும் தேவர்களால் இங்கு சேர்க்கப்பட்டதென்றும் இந்துக்கள் சொல்லுவார்கள். பன்றியின் முதுகுபோல உருவமைந்த இத் தனிப்பாறையானது ஒரு முனையில் மிகவுயர்ந்து ஆற்றுமட்டத்துக்கு 350-அடி யோங்கிய கொடுமுடியாகி உச்சியில் ஒரு சிறிய தேவாலயத்தையுடையது. அதன் அடிவாரங்களில் வீடுகளும் மருந்தறைகளும் நான்குபக்கமும் அதனைச் சூழ்ந்து இருக்கின்றன. இதற்குச் சற்றுமேலே ஒரு விநோதமான தெருவு இதைச்சுற்றி யோடுகின்றது. கொடுமுடியின் கீழே அதற்குப் பாதி உயரத்தில் கோட்டைபோன்ற ஒரு பெரியகோவில் இருக்கின்றது, அகன்ற கற்படிகள், இருபுறமும் சுவர்களும் மேலே மண்டபமும் ஆகிக் கோவிலுக்குச் செலுத்துகின்றது. மலையின் உச்சிக்குப்போவதற்கு அம்மலையைச்சுற்றிப் படிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இம்மலையின் உச்சியில் இருந்துபார்த்தால், அதியற்புதமான அழகிய காட்சி கண்ணுக்கு நெடுந்தூரம் தெரியும். இதையடுத்துக் கீழே, நீண்ட நேரான வீதிகளையுடைய பட்டணமும், கர்நாடக நவாபுகளின் இடிந்துபோகின்ற அரண்மனையும்' கோவில்களும், பள்ளிகளும் அவற்றின் சிகரங்களும் தோன்றும். வெளியோரங்களில் ஐரோப்பிய சேனைத்தானத்தைச்சேர்ந்த அனேகம் வெண்மையான கட்டிடங்களும் பங்களாக்களும் தோன்றும்.

இந்தப்புராதனமான மலையைச்சுற்றி ஆயிரம் வருஷகாலமாக அநேக யுத்தங்களும் முற்றுகைகளும் நடந்திருக்கின்றன. இதைப் பெறும்பொருட்டு முதன்முதல் தென்தேயத்தில் பழமையான இந்து இராஜவமிசங்களின் இராஜாக்கள் சண்டையிட்டனர். பின்பு மகமதியரும், மகாராஷ்டிரரும்' பிரெஞ்சுக்காரரும், கடைசியாக இங்கிலீஷ்காரரும் வந்தார்கள். இக்கோட்டையினிடத்து நடந்தது போல இத்தனை யுத்தங்களும் முற்றுகைகளும் துணிகரமான வீரச்செய்கைகளும் ஜயாபஜயங்களும் வேறு ஒரு கோட்டையிலும் நடந்திரா. இங்கு கிளைவ் என்னும் இங்கிலீஷ் சேனாநாயகர் நூறுமடங்கு அதிகரித்த படைகளையும் இலக்ஷியம்பண்ணாது பொருது வெற்றி கொள்ளுந் திறமையும் ஆளும் வன்மையும் முதன் முதல் இவ்விடத்தே தமக்குத் தோன்றக்கண்டனர். இந் நகருக்கு வெளியேயுள்ள பொன்மலை, பிரெஞ்சுமலை, எறும்பீச்சுரம் என்னும் இடங்களில் லாரன்ஸ் என்னும் இன்னொரு இங்கிலீஷ் தளகர்த்தர் பிரெஞ்சுக்காரரோடு அதிபயங்கரமாக அநேக போர்கள் செய்தவற்றை இன்னும் அவ்விடங்கள் எடுத்துக் கூறுகின்றன.

ஸ்ரீரங்கத்திலிருந்து கொள்ளிடம் அதன் வழியே 60-மைல் தூரம் வரையில் யாதும் மாறுபாடில்லாமல் சென்று சிதம்பரம் என்னும் பெரிய தேவாலயத்திற்குச் சிறிதுதூரத்திலுள்ள * பறங்கிப்பேட்டைக்குச் சமீபமாகச் சமுத்திர சங்கமமாகின்றது. இந்த

* Porto Novo.

உன்னதமாகிய சிதம்பரக்கோயில் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியகரமாய் இருக்கும். இதன் சுவர்கள் 40-அடி நீளமும் ஐந்தடி கனமும் உள்ள. ஏகாண்டமான கருங்கற்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கற்கள் 100-மைல் தூரத்திலிருந்துகொண்டு வரப்பட்டிருக்கவேண்டும். இவ்வாலயம் இப்போது சைவ சமயத்தாரதாயினும் இது உண்மையில், அறியப்படாத கடவுளுக்கே பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளது. இதன் உள்ளே இரகசியம் என்று கதவுகளாவது ஜன்னல்களாவது இல்லாத ஒரு அறை இருக்கின்றது. இவ்வறையில் நாமரூபங்கள் இல்லாத பராபரன் நிவசித்திருப்பதாக நம்புகிறார்கள். இதற்குள்ளே போய்ப் பார்த்தவர்கள் ஒருவரும் இல்லையாயினும் இதற்குள்ளே போவதற்கு ஒரு இரகசியமான வழியுண்டென்றும் அவ்வழி கோவில் தீக்ஷிதர்களில் ஒருவருக்கே தெரிந்திருக்குமென்றும் அவர் தமது மரணகாலத்தில் தமக்குப் பின்வருபவனுக்கு அந்த இரகசியத்தை வெளியிடுவாரென்றும் சொல்லுகிறார்கள்.

ஸ்ரீரங்கத்தின் கிழக்குக்கோடியில் கொள்ளிடமும் காவேரியும் அனேகமாய் ஒன்றோடொன்று கிட்டத்தட்டச் சேருகின்றன. அவற்றைச் சேராமல் ஒரு பெரிய சுவர்போல் காவேரியின் குறுக்கே கட்டப்பட்ட பெரிய கல்லணை ஒன்று உள்ளது. மிதந்த ப்ரவாக சமயங்களில் அளவுக்குமிஞ்சின ஜலம் பள்ளத்தரையில் ஓடுகின்ற கொள்ளிடத்தில் பாயும். இது வெகு பழமையானவேலை. முற்காலத்தில் இந்துக்களுக்குள்ளே பெறப்பட்டிருந்த கல்வியையும் சாமர்த்தியத்தையும் தெரிவித்து இதனால் உத்தேசிக்கப்பட்ட காரியம் முற்றும் நிறைவேற்றுகின்றது. 'டெல்டா' நிலங்களுக்கு நீரோடிப் பாய எவ்வளவு உயரம்வேண்டுமோ, அவ்வளவு உயரம்மட்டும் வைத்து அதிக சலத்தை கழித்துவிடுகின்றது. இது நெளிந்து பாய்புபோல் செல்லுவதால் இதன்மேல் உள்ள பாலமும் நெளிந்து செல்லுகின்றது. பார்வைக்கு சிவசமுத்திரம் பாலம்போலவே இதுவும் விசித்திரமாகத்தோற்றும். தென்தேசத்துக்குப் பூம்பொழில் போன்ற தஞ்சை நாட்டுக்கு இதுதான் ஆரம்பம். இந்த சலத்தினால் வருஷந்தோறும் ஏழு இலட்சம் ஏகரா நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. பெரிய கல்லணையிலிருந்து காவேரி அநேகம் பெரிய கிளைகளாய் சாகுபடிக்கு உபயோகமாகப் பிரிந்து செல்கின்றது. அவற்றில் ஒவ்வொன்றும் ஒரு பெரிய நதிக்குச் சமானமாகும். இக்கிளைகள் வேறு அனேகம் சிறு கிளைகளாகப் பிரிந்து அவற்றினின்றும் அனேகம் கிளைகள் பிரிந்து தேசமெங்கும் நதிகளும் கால்வாய்களுமாய்ப் பின்னிக்கொண்டிருக்கும். இந்நதி மேலுள்ள பட்டணங்களில் முக்கியமான இன்னொரு பட்டணம் கும்பகோணம். இங்கு இந்நதி கூடிய வரையில் அகலம் உள்ளதாய் உருவத்தில் சுருங்காமலே இருக்கின்றது. இந்நகரின் ஜனத்தொகை 50,000. இது தென்னிந்தியாவில் உள்ள புண்ணியஸ்தலங்களில் ஒன்றாகப் பாவிக்கப்படுகின்றது. இங்கு சர்க்கார்வேலையிலிருந்து பென்ஷன்பெற்றுக்கொண்ட அனேக சுதேச உத்தியோகஸ்தர்கள் வாசம் செய்கிறார்கள். ஜனங்கள் வெவ்வேறு தேசத்துக்குத் தக்கபடி தமது அபிருசிகளில் வேறுபடுவதற்கு இது நல்ல திருஷ்டாந்தமாகும். ஒரு தேசத்தாருக்கு எது மிகவும் இஷ்டமானதோ அது மற்றொருதேசத்தாருக்கு ஸஹ்யமாயிருக்கும். இதுவே திருஷ்டாந்தமாகும். இந்துக்கள் மலைநாடுகளையும் அவ்விடத்தி சீதோஷ்ணஸ்திதிகளையும் வெறுக்கிறார் ஐரோப்பியர்களோ அப்பிரதேசங்களை விரும்பிச்செல்கிறார்கள். இக்கும்பகோணப் பட்டணமானது உக்கிரமான வெயிலும் நான்கு பக்கத்திலும் முடிவில்லாத நன்செய் வயல்களும் தோப்புகளுமாய் எவ்வளவு இந்துக்கள் விரும்புகிறார்களோ அவ்வளவு ஐரோப்பியர்களுக்கு வெறுப்பாயிருக்கும். இங்கு அரிசி முதலிய பதார்த்தங்கள் மலிவாக இருப்பதனாலும் வெயில் கோடைக்கும் மாரிக்கும் அதிக பேதப்படாமல் ஒரே சீராக இருப்பதால்

...டம் கவிக்கக் குன்றேறி இறங்கவேண்டியாதலாலும் பத்துப் பன்னிரண்டு தேவாலயங்களும் ஸ்நானபானங்களுக்கு யோக்கியமான புண்ணிய நதியும் இருத்தலாலும் இது அவர்களுக்கு அவ்வளவு இனிமையாய் இருக்கின்றது. கும்பகோணத்திற்கு இரண்டு மூன்று மைல் கிழக்கே இந்நதி தன் பெருங்கிளைகளில் கடைசியானதொன்றைப்பெற்று, அதன் பின்பு ஒரு அற்பமாகிய சிற்றாறுபோற் குறுகிப்போகின்றது. மனிதன் தன் முடிவுகாலத்தில் எப்படிக் குழந்தைத்தன்மையை மறுபடியும் அடைகின்றானோ அதுபோலவே இதுவும் குறுகி மெலிந்துபோயிருக்கின்றது. உலகத்திலுள்ள நதிகளில் இதுபோலத் தன் ஜலத்தை ஒரு துளிகூட வீண்போக்காமல் மனிதருக்கு உபயோகமாக்கும் ஆறு விசேஷமாய் வேறு இல்லையென்றே சொல்லவேண்டும். பலகிளைகளாகப் பிரிந்து நீரெல்லாம் இழந்து சொற்ப ஜலத்துடன் சிறுசிறு என்று பாய்கின்றமணற்றரையின்மீது நாணில் நின்றந் நீவுகளூடே சுற்றிச் சுற்றிச்செல்லும் வழிப்போக்கன்போலச் செல்லும் இதன்கதியை நாம் தொடர்ந்து செல்லுதல் அவசியமில்லை. கடைசியில் ஆசைப்பட்டு அடையவந்த அலைகளிரைச்சலைக் காதால் கேட்கப்பெற்றுப் பிரகாசமானதும் அமரிக்கையானதும் நக்ஷத்திரங்கள் எழுந்து கீழ்த்திசையில் ஒளிவிட்டுத்தோன்றப் பெற்றதும், ஆன ஜலதியைத் தனக்கு முன்னே விரிந்து தோன்றவும் காணப்பெற்று மணமகனைத் தேடியடையும் காதலியைப் போலக் களிப்புற்றுக் கலக்கின்றது.

இதன் கீழ்த் திருநயம்கிருஷ்ணபாரதிகள் என்னும் செந்நாப்புலவர் இயற்றியருளிய திருவையாற்றுக்கப்பலில் இருந்து, காவேரிச்சிறப்பென்னும் பாடலை எடுத்து வரைகின்றோம். இப்பாடலில் காவேரியுற்பத்தியானது முதல் சங்கமமாகும் வரையில் உள்ள முக்கியமான ஸ்தலங்கள் வரிசையாக விவரிக்கப்பட்டிருக்கின்றன.

காவிரித் திருநதிச்சிறப்பு.

கப்பல்பாட்டு.

அம்புயன்மால் தேடரிய—திருவை
யாற்றில் விதம அறம்வளர்த்தாள்
அம்பிகைதன் அருளாலே—பெருக்கம்
அணிந்துவரும் காவேரி.

பூதே.

1. அம்பரம் தொடுசையமலையில் மிலை பெற்று
அகத்திய மஹாமுனி கடத்தினில் உதித்து
அண்டர் புகழும் பிர்மகுண்டமதில் வந்து
அறிவோனுப்பாதாள சித்தியினை அடைந்து,
2. இன்புவியிலே ராமநாதபுரம் கூடி
திருவேணி சென்று ருத்திரர் அடியை நாடி
ஸ்ரீரங்கபட்டணத்திருபால் திகழ்ந்து
ஸ்ரீகண்ட நரசிங்கபுரமதில் இணைந்து,
3. வம்பு பெருகும்யானைக்குந்திமலை துன்னி
மாதேவபுரம் சிவசமுத்திரம் மன்னி
மாவிலத் துயரும் பவானியை அடுத்து
வாகுவைரிய வீரோடொருஞ்சனூர் உற்று,
4. மும்புகொடு முடிவந்து வேலூரைச் சேர்ந்து
மோகனூர் கண்டு நெரியூரருகில் சார்ந்து
மோதிவருகின்ற அமராவதியைத் தேக்கி
முக்கடல் மாப்தூர் அபிஷேகத் தாக்கி,—
என்றிருக்கிறது.

* * * *

SNAKE STORIES.

பாம்பைப்பற்றிய கதைகள்.

ஒருநாள் காலையில் பாம்புபிடிக்கும் ஜாதியைச் சேர்ந்த பிடாரஸ்திரீ மூன்று வயதுள்ள ஒரு குழந்தையை இடுப்பிற் கட்டிக்கொண்டு ஒரு பாம்பைக் கழுத்தில் சுற்றிக்கொண்டு நானிருந்தவீட்டில் பிச்சைக்கு வந்தாள். அந்த வீட்டிலுள்ள 5-வயதுக் குழந்தையொன்று அவளிடத்திருந்த பாம்பைக் கண்டு பயந்தது. இந்தக்குழந்தை பாம்பைக்கண்டு பயப்படுகிறதே அவளிடுப்பிலிருக்கும் சிறுகுழந்தை பயப்படுகிறதா பார் என்றேன். நான் இப்படிச் சொல்லவும் அவள் தன் கழுத்திலிருந்த பாம்பையெடுத்து அவள் குழந்தையினுடைய கழுத்தில் சுற்றிவிட்டாள். அக்குழந்தை அதைத் தனக்குக்கழுத்திலிட்ட சரப்பளி ஹாரம்போல் கையினால் அப்பாம்பைப் பிடித்து வாயில்வைத்துக்கொண்டு விஷமம் செய்து விளையாடிக்கொண்டிருந்தது. இந்தக் காக்ஷியைக காணவும் அதைக்கண்டு பயமுற்ற 5-வயதுக்குழந்தை முற்றும் பயந்தெளிந்து கிட்டவிருந்து வேடிக்கைபார்த்தது. இதனால் பாம்பைப்பற்றிய பிரஸ்தாபம் வளர்ந்தது. சாரைப்பாம்புக்கு வாயில் விஷமில்லையாதலால் கடித்தால் குற்றமில்லையென்றாள் அப்பிடாரச்சி. சாரைம்பாம்புகடித்தால் தோஷமில்லையா வென்ற கேள்விபிறந்தபொழுது, சாரைக்கு "வாலில் விஷம்", கடித்துவிட்டு கடித்தவிடத்தை வாலாலடித்தால் தோஷமுண்டு என்றாள். பிறகு ஸர்ப்பம் அல்லது நல்லபாம்பைப்பற்றி வார்த்தைபிறந்தது. நல்லபாம்புக்கு "நல்ல" என்கிற அடைப்பெயர் என் வந்ததென்றால் அது கடித்தால் ஹிம்ஸையின்றி உடனே விஷம் தலைக்கேறி மரணமுண்டாவதால் அதற்கு அந்த அடைமொழி கொடுக்கப்பட்டதென்று பண்டிதர் ஒருவர் எனக்குச் சொன்னார். நல்லபாம்பு தனக்குத் தீங்கு நினைத்தாலன்றி ஒருவரைக்கடிப்பதில்லை யென்றுசொல்கிறார்களே அது [illegible]வமாவென்று நான் கேட்டேன். அ[illegible] கெடுதல் செய்தால் கடிப்பதோடு அதற்கு அ[illegible]சினாலும் கூசினாலுங்கூடக் கடிக்குமென்றா[illegible] இதற்கு ஸாதாரணமாக கோயிலுத்ஸவங்களில் தேவடியாள் நல்லபாம்பை மாலையாக அ[illegible]துகொண்டு, அது அவள் தோளின்மேல் ப[illegible]மெடுத்து அசைந்தாட அவள் ஸ்வாமியின்மு[illegible] நர்த்தனம் செய்வதுண்டென்றும் அதையவ[illegible] அநேகந் தடவை பார்த்திருக்கிறதாகவும் சொன்னாள். இந்த ஆட்டம் காஞ்சிபுரத்தில் நவராத்திரி உத்ஸவகாலத்தில் ஆடுவதுண்டாம். அதை நான் பார்த்ததில்லையானாலும் இதரர்கள் பார்த்ததாகச் சொல்லக்கேட்டதுண்டு. இதற்கு ஆதாரமாக, டைம்ஸ் பத்திரிகையில் "ஹோம் பேபர்" என்னும் சீமையில் பிரசுரமாகும் ஒரு பத்திரிகையிலிருந்து "ஸர்ப்பமும் மனிதனும்" என்ற விஷயமொன்று எடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருந்ததில், பல அம்சங்கள் இந்தக்கொள்கைக்குப் பொருந்தினதாயிருக்கக் கண்டேன். அதில் கண்ட உண்மையுதாரணங்களில் சிலவற்றை இங்கு எடுத்துரைப்பேன்.

"கூத்தாடி நல்லபாம்பை மேலே விட்டுக்கொண்டு கூத்தாடுகிறானே; அதற்கு ஆத்[illegible] முண்டாகும்படியாக ஒன்றும் நேரிடாம[illegible]டில் அவனுக்கும் பயமில்லை அதுவும் ஒன்[illegible] செய்யாதுதான்: ஏதோ அவனன்றி இதர[illegible]ணங்கள் எதனாலாவது அதற்கு ஆத்திர[illegible]டாகநேரிட்டால் உடனே அப்பாம்[illegible]ளிக்கும் மாரகனை மாறிவிடுகிறது."

"1860-ம் வருஷத்தில் ஒரு வித்தைகா[illegible] சென்னையில் பகிரங்கமாய் வித்தைகாட்டிக்கொ[illegible]ண்டிருக்கும்பொழுது மலைப்பாம்பு ஒன்[illegible] அவன்மேல் சுற்றும்படிவிட்டு நின்றுகொ[illegible]டிருந்தான். இந்த மலைப்பாம்பின் [illegible] ஆனையோ வேறு எதையோ தன்னுடம்[illegible]ரு நெருக்கு நெருக்கினால் தவிடுபொடி[illegible]செய்துவிடும். இப்பாம்பு இவனை யொன்றும் செய்கிறதில்லையென்று காட்ட இவன் அதைத் தன்னுடம்பில் சுற்றிக்கொண்டு நின்று வேடிக்கைகாட்டுகிறது வழக்கம். குறித்ததருணத்தில் அவன் வேடிக்கைகாட்டிக்கொண்டு நின்றபொழுது மடமடவென்று முறுக்கு நொறுக்கினாற்போல் அமர்ந்த சப்தமொன்று கேட்டது. உடனே நின்றுகொண்டிருந்த மனிதன் சுற்றின பாம்பு சுற்றினபடியிருக்க வெட்டிச்சாய்ந்த மரம்போல் கீழே விழுந்துவிட்டான். பிறகு அந்தமனிதனுடலைப் பரிசோதனைசெய்து பார்த்தபொழுது 180 இடங்களில் எலும்பு நொறுங்கியிருக்கக் காணப்பட்டது. பாம்பைப் பரிசோதித்துப் பார்த்ததில் அதனுடலில் 2-அங்குல அகலத்துக்கு சதை கிழிந்து காயம்பட்டிருந்தது. அதன் காரணத்தை ஆராயுங்கால், அந்த வித்தையாடி தேகத்தில் பொதிந்திருந்த தமருசி யொன்று பாம்பின் சரீரத்தில் பட்டுக் குத்த அது உடனே தன் உடம்பை நெருக்க இந்த வில்லங்கம் விளைந்ததென்று தெரியவந்தது."

"இப்படியே அமெரிக்காவில் ஒரு மாணாக்கன் ஒரு மலைப்பாம்பை இரவல்வாங்கி அதன் குணசுபாவங்களையறிந்துகொள்ளும்பொருட்டு அதைத் தான் படிக்கும் அறையில் கூண்டை[illegible]வெளியில் அதனிஷ்டப்படி போகவிட்[illegible]திருந்தான். அப்பொழுது அந்த அறை[illegible] கதவு ஒருக்களித்து சாத்தப்பட்டிருந்தது. அதன் வழியாக ஒரு பூனை உள்ளேவர ஒரு நாற்காலியைச் சுற்றிக்கொண்டிருந்த அப்பாம்பு அதன் உடலை நெருக்கி அந்த நாற்காலியை சுக்குநூறாகப் பொடிசெய்துவிட்டு அந்த அறையில் பரபரப்போடு ஆத்திரப்பட்டு ஓடத்தலைப்பட்டது. இதன் உண்மைக்காரணம் ஆராய்ந்தறியாதவர்கள் உள்ளே பூனை வந்ததனால் அதைக்கண்டு மருண்டு அப்பாம்பு அச்சேஷ்டைசெய்ததென்பார்கள். அது உண்மையதுவல்ல. உள்ளபடி ஆராயும்பொழுது அந்நாற்காலியில் நீட்டிக்கொண்டிருந்த ஆணிமுனை யொன்று பாம்பின் உடலில் குத்த அதனால் அந்த சேஷ்டை செய்யநேரிட்டதென்று தெரியவந்தது. அந்த ஆணிகுத்தின காயம் பாம்பின் உடலிலிருந்து உபத்திரவம் செய்ததால் அது அறையில் ஆத்திரப்பட்டு ஓடியலைந்தது."

பெங்களூரில் மூன்று ஸோல்ஜர்கள் நல்ல ஸர்ப்பம் ஒன்று ஒரு புதரில் சுற்றிக்கொண்டு கிடக்க மூன்றுநாள் வரையில் அவர்கள் அதைத் தொட்டுத்தடவி விளையாடிவர அவ்வளவுக்கும் அது ஒன்றும் செய்யாமல் பெட்டிப் பாம்புபோல் அடங்கியிருந்தது. கடைசியில் அதையிழுத்துக் கீழேபோட்டு அடிக்கப்போகையில் சீறிக்கொண்டு படமெடுத்துக் கடிக்கச் சென்றதாம். வெள்ளைக்கார ஸோல்ஜர்கள் நல்லபாம்பென்று பார்ப்பார்களா? அவர்கள், அதை யடித்துக் கொன்றுவிட்டார்கள். இதைக் கண்ணால்கண்ட ஒருவர் பத்திரிகைக்கு இதைப்பற்றி யெழுதியிருக்கிறார். பத்திரிகையில் இன்னொரு உண்மையான பாம்புக்கதை சொல்லப்பட்டிருக்கிறது. திருவாங்கூரிலுள்ள பிரிடிஷ் ரெஸிடெண்டவர்கள் திருவனந்தபுரத்திலிருந்து குற்றாலத்துக்குப்போய்க்கொண்டிருக்கையில் வழியில் 12-அடி நீளமுள்ள பெரிய மலைப்பாம்பு ஒன்று குறுக்கே படுத்துக்கொண்டிருக்கக் கண்டார்கள். ரெஸிடெண்டவர்களுடைய குதிரைக்காஸ்தாரிகள் இருவர் அதை வழியைவிட்டுப்போகும்படி என்னதான் செய்தும் அது அசையாமற் படுத்துக்கொண்டிருந்தபடியால் அவர்கள் அதைச் சுருட்டி ஒரு பாயில்வைத்துப் பொட்டலம்போல்மூடிக் கயிற்றால்கட்டி குளத்துப்புழையில் ரெஸிடெண்டு தங்கியிருந்த கூடாரத்திற்கு அதைக்கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அங்கு

போய் அதை அவிழ்த்துக்காட்ட 12-அடிக்கு மேல் பெரிதாயிருந்த அப்பாம்பு மெதுவாக நெளிந்து ஊரத்துவக்கிற்று. அது ஊர்ந்து செல்லும்பொழுது அது போகக்கூடாத இடங்களுக்குப் போய்விடாவண்ணம் ஒரு குதிரைக்காஸ்தாரி அதன் வாலைப்பிடித்து இழுத்து நிறுத்திவந்தான். அது மெதுவாக ஊர்ந்ததானும் சௌக்கியமான ஸ்திதியிலிருந்ததாகத் தெரியவந்ததால் ரெஸிடெண்டவர்கள் அதை மறுபடியும் பாயில் போட்டு சுருட்டிக் கட்டி திருவனந்தபுரத்தில் மஹாராஜா தோட்டத்தில் விலங்குவகைகள் வைத்துவளர்த்து வரும் உத்தியோகஸ்தருக்கு அனுப்பும்படி உத்தரவு செய்து பத்மநாதபுரம் தாசில்தாரிடம் அதை ஒப்புவித்தார். அந்தத் தாசில்தார் அப்பாயின் ஓரங்களை நன்றாகத் தைத்து இரண்டு கூலிகளைவிட்டு அதை 40-மைல் தூரம் சுமந்து கொண்டுபோய் திருவனந்தபுரத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கச்செய்தார். திருவனந்தபுரத்தில் வனவிலங்குகள் வைத்துக் காப்பாற்றி வரும் உத்தியோகஸ்தர், அவருக்கு வந்த அம்மூட்டையைப் பிரித்துப் பார்த்தபொழுது அது மிகவும் அபூர்வமான ஒரு பெரிய மலைப்பாம்பு என்றும், அந்தப் பாம்பு கிடைத்தது அவருக்கு ஒரு பெரிய பொக்கிஷம் கிடைத்ததுபோலாயிற்றென்றும் சொல்லி மிக அதிசயப்பட்டுக் கொண்டாடினர். இந்தப்பாம்பின் சுபாவமின்னதென்று அவர் சொல்லத்தெரிந்து கொண்டபின், அதைக்கண்ட குதிரைக்காஸ்தாரிகள் முதல் அதைத் திருவனந்தபுரத்துக்குக் தூக்கிக்கொண்டுபோன கூலிகள் ஈறாக, ரெஸிடெண்டு, தாசில்தார் எல்லாரும் அப்பாம்பினால் மாளாமல் தப்பியது அவர்கள் அதிஷ்டந்தான் என்று இவ்விஷயத்தை பத்திரிகைக்குத் தெரிவித்தவர் சொல்கிறார். ஆனால் இப்பாம்புகளை நாம் உபத்திரவம் செய்யாவிட்டாலும் அதன் கோபத்தைக் கிளப்பி விடாவிட்டாலும் அது நம்மை யொன்றும் செய்கிறதில்லை யென்றும் உண்மை இவ்வுதாரணங்களால் இன்னுமதிகமாய் உறம்பெற்றதன்றி வேறில்லை.

பாம்புகள் கடிப்பதற்கு அவற்றின் தேகம் ஒரு விதமாகவளைந்து நெளிந்துகொண்டிருக்க வேண்டிய தவசியமாம். அவ்விதவளைவு நெளிவுக்கு இடமின்றி ஒரு பாம்பின் உடலைத் தலை முதல் வால் வரையில் ஒழுங்காக விருக்கும்படி நேர் நீட்டிவிட்டால் அதை நாம் என்னசெய்த போதிலும் அதற்குத் தீங்குசெய்ய முடியாமற் போகிறது. இந்த சூக்ஷ்மத்தைப் பாம்புபிடிக்கிறவர்கள் வெகு சீக்கிரத்திலறிந்து கொள்ளுகிறார்கள். புத்திலிருக்கும் பாம்பை இந்த தைரியத்தைக்கொண்டே சரசரவென்று பிடித்திழுக்கிறார்கள். புத்தைவிட்டு வெளிவந்ததும் பாம்பு வளைந்துகொண்டு மேல்விழுந்து கடிக்காதபடி அதைக் கரகரவென்று தலையைச்சுற்றிச் சுழற்றி அதன் நரம்புகளெல்லாம் வலுவிழந்து போகும்படி செய்து அதைத் தரையில் தொப்பென்று போடுகிறார்கள். சுற்றிச்சுழற்றின் விசையில் வலியிழந்த பாம்பு பழுதைபோல் நீண்டு கிடக்கும்பொழுது அதன் பல்லைப்பிடுங்கி விஷத்தை யெடுத்துவிடுகிறார்கள். நானிருந்த ஊரில் பாம்புபிடிக்கும் பிடாரன் ஒருவன் இந்த உபாயத்தைக்கொண்டு எத்தனையோ மகாபெரிய ஸர்ப்பங்களையெல்லாம் பிடித்து பழுதையைச் சுருட்டுவதுபோல அதைச் சுருட்டிக் குடத்திலடைக்க நான் பார்த்திருக்கிறேன்.

பாம்பினிடத்தில் உயர்ந்த ஞானகுணமும் மிக்க கொடிய விஷகுணமும் சேர்ந்திருப்பதால் அதை ஆத்மஞான போதத்தில் அடிக்கடி உதாரணமாக வெடுத்துக் கூறியிருக்கிறார்கள் ஹிந்துக்கள்மட்டும் நல்லபாம்பை விஷமுள்ள ஜந்துவென்று அறிந்தும் அதை சுப்பிரமணிய ஸ்வாமி யென்று சொல்லி ஈசுவரனின் பிள்ளையாகப்பாவித்துக் கொண்டாடுகிறார்கள். பைபிலில், ஏவாளைப் பாபவழியில் செல்லத் தூண்டினது பாம்பென்று சொல்லியிருந்தாலும் ஏசுகிறிஸ்து ஓரிடத்து "ஸர்ப்பத்தின் ஞானம் போல்" என்று அதன் ஞானகுணத்தை உயர்த்திச் சொல்லியிருக்கிறார். இதைப்பற்றி விரித்தெழுதுவதில் விஷயம் வளர்ந்துவிடுமென்று இவ்விஷயங்களைக் குறிப்பிட்டுக்காட்டியதோடு நிறுத்துகிறோம்.

OPEN COLUMN.

Admission to these pages are subject to our usual rule which gives the Editor complete control over the Mss. placed in his hands.

EDUCATION OF GIRLS:—SOME DEFECTS AND REMEDIES.

"பெண்கல்வி"—அதன் குறைநிறை.

(நமது பெண்களும் அவர்களது தற்காலப் படிப்பும்.)

எல்லா வகைச் செல்வங்களிலும் சிறந்தது கல்விச் செல்வம். அது நம் பெண்களுக்கு மிகவும் அவசியமானது. வீட்டுக் குடும்ப காரியங்கள் பலவற்றையும் நடத்துகிறவளும், கணவனுக்குப் பலகுடும்ப விஷயங்களிலும் உதவிசெய்பவளுமாயிருக்கும் மனைவிக்கு கல்வியறிவு இல்லாவிட்டால் அந்தக் குடும்ப காரியங்கள் சீராக நடத்தப்படமாட்டாது. கல்வியறிவேதான் பேதமை, அஞ்ஞானம் முதலியவற்றை நீக்கிப் பெருந்தன்மை, தயாளம், கருணை, புத்திவிசாலம் முதலியவற்றைக் கொடுக்கும். மேலும் பிறந்ததுமுதல் வயது வருகிறவரை நம் குழந்தைகள் தகப்பனைவிட அதிகமாக தாய்மாரிடத்திலேயே காலத்தைக் கழிக்கின்றன. தாய் படித்தவளாயும் விசால அறிவுள்ளவளாயு மிருப்பாளானால் தன் குழந்தைகளுக்கு சிறுவயதில் நல்ல பயிற்சி கொடுத்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரக் கூடும். தாய் மூடமாயிருந்தால் பிள்ளைகளின் சுயசக்தியையும்கூட கெடுக்கும்படியானவளாயிருப்பாள். சிறு பிள்ளைகள் மூத்தோர் செய்யும் செய்கைகளையும், வழக்கங்களையும் பார்த்து தாமும் அதேமாதிரி செய்யப் பிரயத்தனப்படுகின்றனர். ஆகையால் நம் பெண்களுக்கு கல்வி அவசியம்.

இனி நம் பெண்களுக்குப் போதிக்க வேண்டிய கல்வி எவ்வாறு இருக்க வேண்டுமென யோசிப்போம். படிக்கவும், எழுதவும் கற்றுக் கொடுப்பதே பூர்த்தியான கல்வியாக மாட்டாது. கல்வி யென்பது விசாலமான அர்த்தபாவமுள்ள பதம். அதில் படிக்க எழுதத் தெரிவதும்,வீட்டுக்குடும்ப காரியங்கள் பலவற்றையும் சரிவர நடத்தத் தெரிவதும், மானிடர்க்குச் சிறந்த ஆபரணமாயுள்ள "ஒழுக்கம்" முதலியன அடங்கும். நம் நாட்டில் தற்காலப் பெண்கள் 'படிப்பு' என்பது படிக்க எழுதத் தெரிவதுதான் என்று நினைக்கிறார்கள். தமிழில் ஒரு கடிதம் எழுதத்தெரிவதும், கதை, நாவல் முதலிய புஸ்தகங்களை வாசிப்பதும் இங்கிலீஷில் இரண்டு வார்த்தைகள், தெரிந்திருப்பதுமே பூர்த்தியான கல்வியென்று நினைக்கிறார்கள். கொஞ்சம் படித்தவுடனே கர்வமடைந்து தங்களுக்கு முக்கியமான வீட்டு வேலை முதலியவற்றைக் கற்காமல் நிற்கிறார்கள். பெண்களுக்கு ஏற்பட்ட சமையல் வேலை முதலியவற்றை சரிவரக் கற்காமலும், வீட்டுக் காரியங்களில் சரிவரக் கவனம் செலுத்தாமலுமிருக்கிறார்கள். சமையல்வேலை செய்வதே தங்கள் படிப்புக்கு கௌரவக்குறைவென நினைக்கிறார்கள். அனேகமாய் நமது சிறு பெண்கள் தாம் சமையல் கற்கவேண்டிய காலங்களில் தங்கள் நேரத்தை பூராவும் புஸ்தகம் படிப்பதிலும், தையல் வேலை செய்வதிலும் செலவழித்து விடுகிறார்கள். ஆகையால் தாங்கள் தங்கள் கணவர் வீடு புகுந்ததும் சமையல் வேலையே ஒன்றும் தெரியாதவர்களாய் சமையல் செய்ய ஒரு ஆளின் உதவியைத் தேடுகிறார்கள். சமையல் வேலை தெரிந்த பெண்களும் படித்த கணவர் வீடு புகுந்ததும் சமையல் அறைக்குள்ளே நுழையாமல் தம் காலத்தைப் படிப்பு, சங்கீதம், தையல் வேலை முதலியவைகளிலேயே செலுத்தி சமையலுக்கு ஆள் வைக்கிறார்கள். நம்முள் படித்த கணவர்களும் தம் பெண்களை அவ்வாறே காலத்தைக் கழிக்கத் தூண்டுகிறார்கள். இதனால் வீட்டுக் காரியங்கள் சரிவர நடத்தப்படுகிற

இல்லை. குடித்தனச்செட்டு உள்ளபடி ஏற்படுவதற்கில்லாமற் போகிறது. ஆள்காரன் சரிவர வேலை செய்கிறதில்லை. அவர்களில் அநேகர் கடனுக்காக வேலை செய்கிறார்கள். சமையல் ஆள்களும் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. அவர்களும் அடிக்கடி ஓடிப்போகிறார்கள். சில வீடுகளில் ஒரு நாள் சமையல்காரன் இல்லாவிடில் பெண்சாதியோடு புருஷனும் சேர்ந்து சமையல் செய்ய நேரிடுகிறது. இல்லாவிடில் 'கிளப்புக்கு' ஆள் அனுப்ப வேண்டியிருக்கிறது. இது கொண்டு நம் பெண்களுக்கு சமையல் முதலிய முக்கியமான பாகங்கள் தெரியவேண்டிய தவசியம். ஆள்வைத்து வேலை வாங்கக்கூடிய பணக்காரன் வீட்டிலிருந்த போதிலும் பெண்ணுக்கு சமையல் தெரிந்தால் மட்டுமே சமையல்காரனைக் கொண்டு சரிவர வேலை நடத்த முடியும். சமையல்காரன் இல்லாத வேளைகளில் சமையல் செய்யவும், சமையல்காரனுக்குத் தெரியாத சிற்றுண்டி முதலிய பதார்த்தங்களை தாம் செய்யவும், குடும்பத்தைச் செட்டாக நடத்தவும் முடியும்.

மேலும் நம் பெண்கள் தம் படிப்பை உபயோகமான வழிகளில் செலுத்துகிறதில்லை. தையல் தைப்பது அவர்களுக்குப் பிரியமான வேலையென்று பேர். ஆயினும் தங்கள் ரவிக்கைகளையும், குழந்தை உடுப்புகளையும், தலையணை உறை போன்ற சாமான்களையும் எத்தனை பெண்கள் வீட்டில் தைக்கிறார்கள்? ஓரங்களுக்குதெரிந்த தையல் வேலையிலிருந்து உபயோகமான ரவிக்கை, உடுப்பு முதலியவைகளைப் பெண்கள் தைத்தால் உபயோகமாயும், குடும்பத்துக்கு ரொம்ப செட்டாகவு மிருக்கும். தையல் வேலையில் கைப்பழக்கம், கண்பழக்கம், மனப்பழக்கம் எல்லாம் அடங்கியிருக்கிறது. இந்தப் பழக்கங்கள் கை கூடிவராவிட்டால் அது பிரயோசனமற்றுப் போகிறது.

வாசிப்பிலும் நம் பெண்கள் உபயோகமற்ற 'நாவல்' கதைப்புஸ்தகங்களையே பெரும்பாலும் வாசிக்கிறார்கள். அவர்கள் [illegible] அகப்படும் புஸ்தகம் அநேகம் நல்ல புஸ்தகங்களல்ல. பாக சாஸ்திரம், சுகாதாரவிளக்கம், சிக்குக்காரரை பராமரித்தல், குடும்ப வைத்தியம், நீதிநூல் முதலிய புஸ்தகங்களைப் பெண்கள் வாசிக்க வேண்டியதவசியம். பாக சாஸ்திரம், சுகாதாரவிளக்கம் முதலிய நூல்களை நன்றாய்க் கற்பதால் அந்தக் கல்வியை நாம் நம் வாழ்நாளில் உபயோகப்படுத்தி அநுகூலமடையலாம். அதல்லாமல் எப்போதும் பொழுதுபோக்குப்புஸ்தகங்களான 'நாவல்' முதலியவைகளையே படிப்பதனால் மனம் [illegible]யாமல் சிதறிப்போகிறது. பாகசாஸ்திரம்போன்றஉபயோகமான நூல்களையும், நல்லறிவு புகட்டக்கூடிய நீதிநூல் வசனங்களையும், உலக சமாசாரம் முதலியவற்றை அறிவிக்கக்கூடிய "விவேகசிந்தாமணி," போன்ற மாதாந்தப் பத்திரிகைகளையும், பேப்பர்களையும் படிப்பது நல்லது.

பின்னும் தம் குழந்தைகளைப் படிப்பிக்கும் விஷயத்தில் நம் பெண்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும். சிறுவயதில் தாய்மார் கற்றுக்கொடுக்கும் கல்வியும், பழக்கங்களும் வெகு நாளைக்கு நிலைநிற்கும். படிக்க எழுதத் தெரிவதிலும், நற்குண நற்செய்கைகளிலும் தாய்மார்கள் தம் சிறு பிள்ளைகளுக்கு சரியான கல்வி புகட்டல்வேண்டும்.

இவ்வாறு நடக்க நம் பெண்களுக்குப் பூர்த்தியான கல்வி சாதனமிருக்க வேண்டும். கல்வியென்றால் மனப்பழக்கமே. மானிடர்க்கு ஆபரணமாயுள்ள "ஒழுக்கம்" என்பது மனப்பழக்கமின்றி அமையாது. மங்கையர்க்குப் பிராணனிலும் சிறந்த "கற்பும்" பெண்களுக்கு கல்விசாதனமின்றி அமையாததாகும். இவைகளைக் கற்பிக்கக்கூடிய சாஸ்திரங்களை பெண்கள்படிக்கவேண்டும். பலசாஸ்திரங்களையும், சமையல் வேலை, தையல்வேலை, முதலியவைகளோடு பாட்டுப்படிப்பு முதலியவற்றையும் கற்றால் மிகவும் அநுகூலமாயிருக்கும். இவ்வாறு பூர்த்தியான கல்வி இருந்தால் தான் பெண்கள் கர்வமடையாமல் தம் [illegible] சரிவர உணர்ந்தும் தம் இல்லறத்தைத் [illegible]கும் தம் குடும்பத்தாருக்கும் நல்லறமாகும்படி சரிவர நடத்தியும் யாவருக்கும் சந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடும்.

"CHILDREN'S PAGE."

சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

கடவுள் வணக்கம்.

நிலனுநீரு வியிர கனல்வாயுவு
மிலகுஞாயிறுமின் கதிர்குதிக்களு
மலமில்வானுமணியிய மானுமாய்
உலகமெங்கும் மொளிர்பொருட் போற்றுவாம்.

அவையடக்கம்.

கசடறக்கற்றோர் கல்விக்கழகந்து
கழறுமென்னறிவிலாக் கல்வியின் றுணிபு
கடலிற்கடுகிட்டுக் கடைந்தமுதின் சுவை
காணப்புகுந்த காரணம்போலவும்
கனகவம்பலத்துட் கடவுட்டிருநடம்
கண்டுபேய்நடஞ்செயக் கருதல்போலவுமே.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

அன்னையும் = தாயும், பிதாவும் = தகப்பனும், முன்னறி = முன்னே காணப்பட்ட, தெய்வம் = தெய்வங்களாவார்.

(இ-ள்.) தாயும் தகப்பனும் முன்னே காணப்பட்ட தெய்வங்களாவார்.

இதன்விரி.

முன்னறிதெய்வம் என்றதனால் மற்றியலறி தெய்வம் பின்னறி தெய்வமென்றாகிறது.

(1) முன் = ஆதிகாலத்திலேயே, அறி = தெரிந்து கொண்ட, தெய்வம் = தெய்வங்களாவார்.

(2) முன் = பிரத்தியக்ஷத்தில், அறி = தெரிகின்ற தெய்வம் = தெய்வங்களாவார்.

(3) முன் = முதன்மையாக, அறி = தெரிந்து [illegible]வேண்டிய, தெய்வம் = தெய்வங்களாவார்.

[illegible]று காலத்திலும் தெரிந்துகொள்ளத்தக்க தெய்வம் தாய் தந்தையர்களேயாம். முன்னறி என்றதினால் பின்னறி என்றாகிறது; முன்னறி தெய்வம் தாய் தகப்பனென்றதனால் பின்னறி தெய்வம் கடவுளென்றாகிறது. பின்னறி தெய்வமாகிய கடவுளைக் காண்கிறதற்கு முன்னறி தெய்வமாகிய தாய் தகப்பனே காரணமாகிறார்கள்.

எதினாலென்றால் தாய் தகப்பன் புத்திரர்களைப் பெற்று வளர்த்து நோய்கள்முதலியவை அணுகா வண்ணம் காத்து ஐந்தாண்டு முதல் கல்வி நல்லொழுக்கங்களில் பயில்வித்து நல்லினம் சேர்க்கை சாஸ்திர ஆராய்ச்சி முதலியவைகளால் சித்தசுத்தி பெறுவித்து சித்தசுத்தியினால் கடவுளைக் காணச் செய்கிறார்கள். தெய்வம் என்ற பன்மைக்கு சத்தி சிவமென்னும் தெய்வங்களாகிறது. தாய் சத்தியையும் தந்தை சிவத்தையும் ஒப்பாகிறார்கள். சத்தி சிவம் சேர்ந்து நால்வகைப்பிறப்பு எழுவகைத்தோற்றம் எண்பத்துநான்கு லக்ஷம் ஜீவபேதங்கள் தோற்றுவதற்குக் காரணமாயிருக்கின்றது. தாய் தகப்பன் சேர்ந்து புத்திரர்கள் தோன்றுவதற்கு காரணமாயிருக்கிறார்கள். தாய் தகப்பன் முன்னறிதெய்வம் என்பதை நிலைபெறச்செய்ய, "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" "ஆலயந்தொழுவது சாலவு நன்று" என்றாள் ஔவை. இந்நூல் முதலில் அன்னையும் பிதாவு முன்னறிதெய்வ மென்றதினால் தாய் தகப்பனாகிய தெய்வத்தினால் அறம்பொருள் இன்பம் வீடு நான்கையும் அடையலாமென்றாகிறது. கடவுள் ஜீவர்களைப்படைத்து ரக்ஷித்து தீய ஒழுக்கங்களில் பிரவேசித்த விடத்து தண்டித்து அறிவு மேலெழச்செய்து சுகமுறச்செய்கிறார். தாய் தகப்பன் புத்திரர்களைப்பெற்று வளர்த்து அப்புத்திரர்கள் மண்தின்றதினால் உண்டாகிய சோகநோயை நீக்கி அவர்களுக்குப் பிரியமாகிய வெல்லத்தில் மருந்தை யொளித்து உண்ணச்செய்து நோயைநீக்கி கல்வி நல்லொழுக்கங்களில் பிரவேசிக்கச்செய்து சுகமடையச் செய்கிறார்கள்.

(1) தாய் தந்தையினும் அருமையான பொருள் வேறொன்றில்லை. "தாயிற்பெறும் பொருடான் பிறிதில்லை." எல்லாப்பொருளையும் பொருளினாலும் அறிவினாலும் சம்பாதித்துக்கொள்ளலாம். தாய் தகப்பனை சம்பாதித்தல் அரிது. தாய் தகப்பனிடத்தில் உள்ளபடி விசுவாசமுடையவனானால் கடவுளிடத்தும் உடையவனாகிறான். கடவுளுக்கு தாயும்

தகப்பனும் உபமானமாகிருர்கள். கடவுள் உபமேயமாகி "அப்பனீ அம்மைனீ" என்ருர் திருநாவுக்கரசு சுவாமிகள். கடவுள் கருணைக்கு தாயின்கருணை உபமானமாகிறது. தாயின் கருணைக்கு உபமானமில்லை. "தாராத வருளெலாந் தந்தருளுமௌனியாய் தாயனைய கருணைகாட்டி" என்ருர் தாயுமானசுவாமிகள். "இனமுமண் ணுகர் பின்ளைநோய்க்கிரங்கி தீம்பண்டம் எதிர்காட்டி கனமருந்தகள் ஒளித்துவைத்தழைக்கின்ற கருணையாம் தாய்போல" என்ருர் தாண்டவராய சுவாமிகள்.

இவ்வித கடவுள் தன்மையும் கருணைத் தன்மையும் உடைய தாய்க்கு புத்திரர் செய்யவேண்டியது.

(1) தாயை பிரத்தியக்ஷ தெய்வமென்று நினைத்தல்.

(2) உண்டு உடுத்தல் வந்தனை வழிபாடு முதலியவைகளில் குறைவின்றி நடத்தல்.

(3) தாயின்சொற் கடவாதுநிற்றல்.

(உ-ம்.) "தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை" ஸ்ரீராமனைப்போல் மாதுருவாக்கிய பரிபாலனஞ் செய்தல்

(4) தாய்க்கு தன்னை யோக்கியனென்று பிறர் சொல்லும்படி செய்தல்.

(உ-ம்.) ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் சான்ருேனெனக் கேட்டதாய்.

புத்திரன் தகப்பனுக்கு செய்யவேண்டியது.

(1) வழிபாடு செய்தல்.

(2) சொல்லியவண்ணம் நிற்றல்.

(உ-ம்.) "தந்தைசொல் மிக்க மந்திரமில்லை" பரசுராமனைப்போல் பிதுர்வாக்கிய பரிபாலனஞ்செய்தல்.

(3) இப்புத்திரனைப்பெற இவன் தகப்பன் என்ன தவம் செய்தானோவென்று பிறர் சொல்லும்படி செய்தல்.

(தாய் செய்ததற்கு தனயன் செய்வதில்.)

வேதபுரி என்னும் பட்டணத்தில் வேதபாரகனும் பிராமணோத்தமன் சுகுணியெனும் கற்பு வாய்ந்த மனைவியோடு இல்லறம் வழுவாது நடத்திவருங்கால் அவர்களுக்கு புத்திரரின்றி அவர்கள் அருந்தவமியற்றி வேதவித்தெனும் புதல்வனைப் பெற்றனர். அப்புத்திரன் கல்வி அறிவு அடக்கம் வாய்மை நித்தியகர்மம் முதலியவைகளில் சிறந்து வரும் நாளில் அவனுடைய பிதா மரித்தனர். அவன் தந்தைக்குரிய கருமங்களை முடித்து தான் காசியாத்திரை செல்லவேண்டுமென்ற தன் தாயாகிய சுகுணியைக் கேட்டனன். அதற்கவள் மகனே உன்னை விட்டுப் பிரிந்து உயிர்தரியேன், யானும் உன்னுடன் கூடவருகிறேன் என்றனள் "தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை" "தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லை" என்கிற நியாயத்தைக்கொண்டு தாயையும் அழைத்துக்கொண்டு காசிக்குச் சென்றனன். செல்லுமார்க்கத்தில் தாய் முதுமையினால் வருந்தி நடக்கமுடியாமையைக்கண்டு தன் முதுகிற்சுமந்து சென்று அங்குள்ள கங்கையில் ஸ்நானஞ்செய்வித்து தானும் செய்து ஜப தபஹோமாதி பிதுர்ஸ்ராத்தங்களை முடித்து விஸ்வநாதர் விசாலாக்ஷி அம்மனை தரிசனம்செய்து மீண்டு தன் நகரத்திற்கு வரும்போதும் தாயை முதுகிற்சுமந்து தன் கிரகத்தில் இறக்கிவிட்டு சுமந்துவந்த பிரயாசத்தால் "அப்பா" என்றனன். அதைக்கேட்ட தாய் அருமைப்புத்திரா காசிக்குபோய்த் திரும்பிவருமளவும் என்னை முதுகில் சுமந்துவந்ததினால் அன்றோ இவ்வளவு சிரமத்தை அடைந்தாய். உன்னைப்போன்ற சற்புத்திரர் இவ்வுலகத்திலில்லை என்றனள். ஆயினும் உன்னை யான் உதிரத்தில் ஒன்பதாவது மாசம் சுமந்து வீட்டின் வாயிற்படியை ஒருதரம் தாண்டியவருத்தத்திற்கு நிகரல்ல என்றனள். அச்சொல்லைக் கேட்டச்சுமந்து தாய் புத்திரருக்குசெய்யும் உதவிக்கு புத்திரர்செய்யும் உதவி இல்லையென்றுணர்ந்து அதுமுதல் தாயையே தெய்வமாகக்கொண்டு உண்டுடுத்தல் வந்தனவழிபாடு முதலியவைகளில் குறைபாடின்றி நடத்திவந்தனன். உலகத்திற்கு மேகம்செய்யும் உதவிக்கு கைம்மாறு இல்லாததுபோல தாய் தகப்பன் செய்யும் உதவிக்கு கைம்மாறு இல்லையென்றுணர்ந்து அவர்களை முன்னறி தெய்வமாகக்கொண்டு எந்நாளும் நடப்போமாக.

வாழி.

வாழி நான்மறை வாழி நல்லன்பர்கள்
வாழி நல்லற மன்று மறிஞர்கள்
வாழி மேற்றிருக்காட்டுப்பள்ளிமகார்
வாழி கல்விக்கழகமும் வாழியே.

"WE SHOULD BE WARY WHAT PERSECUTION WE RAISE AGAINST THE LABOURS OF PUBLIC MEN."

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேபயவன் : அறுவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 23.] ராக்ஷஸ ஞு ஆவணி மீ, 1915 ஞு ஆகஸ்டு மீ [சஞ்சிகை 5.

"WE SHOULD BE WARY WHAT PERSECUTION WE RAISE AGAINST THE LABOURS OF PUBLIC MEN."

"THE SANCTITY OF A GOOD BOOK."

Books are not absolutely dead things, but do contain a potency of life in them to be as active as that soul was whose progeny they are; nay they do preserve as in a vial the purest efficacy and extraction of that living intellect that bred them. I know they are as lively, and as vigorously productive, as those fabulous Dragon's teeth; and being sown up and down may chance to spring up armed men. And yet, on the other hand, unless wariness be used, as good almost kill a Man as kill a good Book; who kills a Man kills a reasonable creature, God's Image; but he who destroys a good book kills reason itself, kills the Image of God, as it were in the eye. Many a man lives a burden to the Earth; but a good book is the precious life-blood of a master-spirit imbalmed and treasured up on purpose to a life beyond life. 'Tis true, no age can restore a life, whereof perhaps there is no great loss; and *revolutions of ages do not of recover the loss of a rejected truth*, for the want of which whole nations fare the worse. *We should be wary therefore what persecutions we raise against the labours of public men*, how we spill that seasoned life of man preserved and stored up in Books; since we see a kind of homicide may be thus committed, sometimes a martyrdom, and, if it extend to a whole impression, a kind of massacre, whereof the execution ends not in the slaying of an elemental life, but strikes at that ethereal and first essence, the breath of reason itself, slays an immortality rather than a life."—Extract from Milton's *Areopagitica* (taken from the University Selections for the Matriculation Examination of 1915.)

WORK, FAITH AND HELP:

"We need help from above."—*Sir John Jellicoe*

"LIVE IN 'HOPE', WORK IN 'FAITH' AND REALISE IN 'LOVE.'"

"Work is of a religious nature :—Work is of a *brave* nature ; which it is the aim of all religion to be." *Every noble work is at first 'impossible.'* But to God's worker,—the labourer in the vineyard—working in Faith, help is ever *nigh* at hand though it comes *silently* and unperceived as the blessed dew-moisture from the kind Immensities.

"Yes, all manner of help, and pious response from Men or Nature, is always, what we call silent ; cannot speak or come to light, till it be seen, till it be spoken to. Every noble work is at first 'impossible'. In very truth, *for* every noble work the possibilities will be diffused through immensity; *inarticulate*, undiscoverable except to **Faith.** Like Gideon thou shalt spread out thy fleece at the door of thy tent ; see whether under the wide arch of Heaven there be any bounteous moisture, or none. The heart and life-purpose shall be as a miraculous Gideon's fleece, spread out in silent appeal to Heaven, and from the kind Immensities, what from the poor unkind Localities and town and country Parishes there never could, blessed dew-moisture to suffice thee shall have fallen."—*Thomas Carlyle.* (Extracted from the *Matriculation* text for 1915.)

We have undertaken to work *for* children. We have spent a life-time working for them. We were asked in the name of educational authority to pledge ourselves to it by solemn oath and we did it. May the Lord God in whose living Presence on All Saints' Day we pledged our word, give us health and strength to keep it and carry out His work to the Glory of His Name. He knows the secrets of men's heart and judges them aright. We work with unfaltering faith in Him and in the efficacy of His Grace and are content to leave the rest to His Judgment which never fails.

TRUTH OFTEN UNWELCOME AT FIR[illegible]

The time is racked with birthpangs : every hour
Brings forth some gasping truth, and truth new-born
Looks a misshapen and untimely growth
The terror of the house-hold and its shame
A Monster coiling in its Nurse's lap
That some would strangle, some would starve ;
But still it breathes and passed from hand to hand,
And suckled at a hundred half-clad breasts
Comes slowly to its stature and its form
Calm the rough ridges of its dragon scales,
Changes to shining locks its snaky hair,
And moves transfigured into Angel guise,
Welcomed by all that cursed its hour of birth,
And folded in the same encircling arms
That cast it like a serpent from their home.

OLIVER WENDELL HOLM[illegible]

ABOU BEN ADHEM AND THE ANGEL.

Vide 'Transfusion Column ;'

Abou Ben Adhem (may his tribe increase !)
Awoke one night from a deep dream of peace,
And saw within the moonlight in his room,
Making it rich and like a lily in bloom,
An angel writing in a book of gold.
Exceeding peace had made Ben Adhem bold,
And to the presence in the room he said,
"What writest thou ?" The vision raised its head,
And, with a look made of all sweet accord,
Answered, "The names of those who love the Lo[illegible]
"And is mine one ?" said Abou. "Nay, not so,"
Replied the angel. Abou spoke more low,
But cheerily still, and said "I pray thee, then,
Write me as one that loves his fellowmen."
The angel wrote and vanished. The next night,
It came again with a great awakening light,
And showed the names whom love of God had blessed,
And, lo ! Ben Adhem's name led all the rest.

LEIGHT HUNT.

[Vol. 23.] "The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide." [சஞ்சிகை-5.

விவேக சிந்தாமணி

August-September, 1915.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றோ மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

"THE SANCTITY OF A GOOD BOOK"

"A GOOD BOOK IS THE PRECIOUS LIFE-BLOOD OF A MASTER SPIRIT IMBALMED AND TREASURED UP ON PURPOSE TO A LIFE BEYOND LIFE.'

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்."

"சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம். கற்றோர் கல்வியும் மனப்பழக்கம்"—ஔவையார்.

"எண்" என்றால் என்ன? எழுத்து என்றால் என்ன? "கண்" என்றால் என்ன? எண்ணும் எழுத்தும் கண்ணாவது எப்படி? குழந்தைகளே! இந்நான்கு கேள்விகளையும் நன்கு மனதில் வாங்கிக்கொண்டு சிந்தியுங்கள்.

"தோ! குஞ்சம்மா, இங்கேவா, "எண்" என்றாலென்ன? என்கிற முதல் கேள்விக்கு நீ பதில் சொல்லு, பார்க்கலாம்." உபாத்தியாயரம்மா இப்படிவினவ, பேர்சொல்லிக் கூப்பிட்டு உசா[illegible] குழந்தை எழுந்து "அம்மா, "எண்" [illegible]ல் 'ஒன்னு', 'இரண்டு' என்று எண்ணு[illegible]ங்களுக்குப்பேர். மனதில் நினைக்கிற [illegible]வுக்கும் பேர். 'எண்ணிலேன் என்ன மிது ஸ்வாமி!' என்று ஒருபாட்டுக்கூட இருக்கிறது."—என்றாள்.

உபாத்தியாயர் அம்மா:—சரி, ஒன்று, இரண்டு என்கிற எண்களுக்கும் மனதில் உதிக்கிற எண்ணத்துக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்று பார்ப்போம். அதோ அந்த சின்னக் குழந்தை பட்டம்மாளுக்கு 'ஒன்று' என்று சொல்லிக்கொடு பார்ப்போம்.

குஞ்சம்மா:—அம்மா அக்குழந்தைக்கு இன்னும் 'நான்' என்று நினைக்கத் தெரியவில்லையே! எப்படி ஒன்று, இரண்டு சொல்லிக்கொடுக்கிறது? வயிற்றைப்பசித்தால், "அம்மா, பட்டுக்கு வயத்தைப் பசிக்கிறது" என்று மழலை பேசுகிறதேயொழிய எனக்கு வயிற்றைப் பசிக்கிறது என்று சொல்லத் தெரியவில்லை. 'நான்' என்கிற மூளைகண்ட பின்தான் "நீ" என்கிற பேதம் ஏற்படும். அப்போ 'நான்' ஒண்ணு, 'நீ' இரண்டு, என்று சொல்லிக்காட்டினால் தெரியும், என்று எங்கள் அம்மாள்சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படித்தானே அது?

உபாத்தியாயர் அம்மா:—ஆம் அது நிஜம்தான். இப்பொழுது 'எழுத்து' என்றால் என்ன? என்பதற்கு பதில்சொல்லு பார்ப்போம்.

ராஜம்:—அம்மா, நான் சொல்லுகிறேன். அ, ஆ என்று சொல்கிறோமே அதுதான் எழுத்து. அதை எழுதிக் காட்டட்டுமா?

உபாத்தியாயர்அம்மா:—சரி, எழுது பார்ப்போம். எழுதிக்காட்டக் கூடியதாயிருப்பதால் தான் அதற்கு 'எழுத்து' என்று பேர்வந்தது. அப்படியே ஒன்று, இரண்டு என்கிற எண்களும் மனதினால் 'நான்', 'நீ' யென்று எண்ணி அறியக்கூடியதாயிருப்பதால்தான் "எண்" என்று அதற்குப் பேர்வந்தது. எண்ணுக்கு உருவம் மனத்திலும் (அறிவிலும்), எழுத்துக்கு உரு

வம் புறத்திலும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் சிந்தித்து மனதில் வைத்துக்கொண்டால், அடுத்த கேள்விக்குப்போகலாம். அது "கண் என்றால் என்ன?" இதற்கு யார் பதில் சொல்கிறீர்கள்?

பாலம்மா:—அம்மா, அம்மா, நான் சொல்கிறேன். இதோ இருக்கே "கண்" (கண்ணைத் தொட்டுக்காட்டி) இதுதான் அது.

உபாத்தியாயர் அம்மா:—"கண்" எத்தனை?

பாலம்மா:—இரண்டு இருக்கிறது.

உபாத்தியாயர் அம்மா:—இரண்டு கண்கள் இருக்கின்றனவே உனக்கு, அவற்றைக்கொண்டு அந்தக்கண்ணால் அந்தப்பக்கமும் இந்தக் கண்ணால் இந்தப் பக்கமும் பார், பார்ப்போம்.

பாலம்மா:—ஏககாலத்தில் இருபக்கமும் பார்க்கமுயன்று முடியாமல், "அது ஏன் அம்மா அப்படி பார்க்க முடியவில்லையே! இரண்டும் ஒரு பக்கமாகவே திரும்பிவிடுகிறதே. இந்தக்கண்ணால் இந்தப்பக்கம் பார்த்தால் மற்றொரு கண்ணும் இந்தப் பக்கமே தான் பார்க்கிறது" என்றாள்.

உபாத்தியாயர் அம்மா:—சரி, அது கண்களினுடைய ஸ்வபாவம். அப்படியென்றால் ஸ்வாமி அப்படியே சிருஷ்டித்திருக்கிறார். ஆதலால் தான் "கண்ணிரண்டும் ஒன்றையே காண்கிறான் பார்" என்று மேலோர் உதாரணம் எடுத்துச்சொன்னார்.

பாலம்மா:—கண் இரண்டிருந்தாலும் ஒன்றையே காண்பதுபோல, எண்ணும் எழுத்தும் இரண்டாயிருந்தாலும் ஒன்றையே காட்ட வேண்டும். அப்படித்தானே யம்மா!

உபாத்தியாயர் அம்மா:—அவசரப்படாதே. அதற்குத்தான் வருகிறேன். எண்ணுக்கு அகத்திலே (மனத்திலே) உருவமும், எழுத்துக்கு புறத்திலே (வெளியிலே) உருவமும் அமைகிறது என்று கண்டு நிச்சயித்துள்ளோமல்லவா? அதைச்சற்று நிதானித்து மனதில் வையுங்கள். இப்போது இன்னொரு அதிசயம் சொல்லப்போகிறேன். அதையும் கேளுங்கள்.

குழந்தைகள்:—அது என்ன, சொல்லுங்கள், கேட்கிறோம்.

உபாத்தியயார் அம்மா:—கண்ணுக்குத் தோன்றுவதெல்லாம் மனதுக்கும் தோன்றவேண்டும். இல்லாவிட்டால் வெளித்தோற்றம் கண்ணுக்குப் புலப்படாது.

பாலம்மா:—அது எப்படி? விளங்கவில்லையே!

உபாத்தியாயர் அம்மா:—அதோ அந்தக் கறுப்புப்பலகையில் "அ" என்று எழுதியிருக்கிறது பார்த்தையா?

பாலம்மா:—பார்த்தேன். அதைப்போய் தொட்டுக்காட்டவா?

உபாத்தியாயர் அம்மா.—"அதை எழுதிக் காட்டு." பாலம்மா கறுப்புப் பலகையண்டை சென்று "அ' என்கிற எழுத்தை எழுதிவிட்டு வந்து, "அதோ எழுதியிருக்கிறேன், பாருங்கள்" என்றாள்.

உபாத்தியாயர் அம்மா.—"இப்பொழுது அந்தப் பலகையில் 'அ' என்கிற எழுத்து எத்தனையிருக்கிறது?" என்று கேட்டாள்.

குஞ்சம்மாள் குதித்தெழுந்து "இரண்டு இருக்கிறது" என்று இருவிரல்களைக் காட்டிக்கொண்டு பதில்சொன்னாள்.

வாத்தியார் அம்மா.—அது உனக்கு என்னமாகத் தெரிந்தது?

குஞ்சம்மாள்.—"நீங்கள் எழுதியது ஒன்று; பாலம்மாள் எழுதியது ஒன்று; ஆக இரண்டு அதோ இருக்கிறதே, பாருங்கள்" என்றாள்.

"பாலம்மா, அதோ தோட்டக்காரன் வேலை செய்து கொண்டிருக்கிறானே, அவனைக் கூப்பிடு. அவனுக்குத் தெரிகிறதா கேட்போம்" என்று உபாத்தியாயரம்மா சொல்ல, பால[illegible] குதித்தோடிப்போய் தோட்டக்காரன் [illegible] அழைத்தோடி வந்தாள்.

உபாத்தியாயார் அம்மா:—வீராசாமி, அதோ அந்தப் பலகையில் உன் கண்ணுக்கு என்ன தெரிகிறது பார்த்துச்சொல்லு பார்ப்போம். இந்தக்குழந்தைகளெல்லாம் உன்னைக்கேட்க வேண்டுமென்று சொல்கின்றனர்.

வீராசாமி:—எனக்கு எழுதப்படிக்கத தெரியாதே, என்னவோ இரண்டுகோடு கிறுக்கியிருக்கிறது. அதுதான் தெரிகிறது.

உபாத்தியாயர் அம்மா:—"சரி, நீ போகலாம், போ!" என்று தோட்டக்காரனுக்கு விடைகொடுத்துவிட்டு "குழந்தைகளே, உங்களுக்கு 'அ' என்னும் எழுத்தாகத் தோன்றினது அவனுக்கு வெறும்கோடு மட்டுமாகத் தெரிந்தது. அவன் மனதில் 'அ' என்னும் எழுத்தின் வடிவம் அமைந்திருந்தால் இதைப்பார்த்ததும் அவன் 'அ' வென்று அறிந்துகொள்ளுவான்.

பாலம்மா:—ஆம், அம்மா, எனக்கு முதலிலே எழுத்துப்பாடம் சொன்னபோது இந்த எழுத்தின் வடிவம் மனதில் பிடிபடுகிறது மிகவும் கஷ்டமாயிருந்தது. மனதில் பிடிபட்ட பிறகுதான் எனக்கு 'அ' என்று குறிப்பிட்டுச் சொல்லத் தெரிந்தது.

உபாத்தியாயர் அம்மா:—"நல்லது, இப்பொழுது கறுப்புப்பலகையில் ஒரு தாமரைப்புஷ்பம் வரைகிறேன். தோட்டக்காரனைக் கூப்பிட்டு அது என்னவென்று கேட்டுப்பார்ப்போம்." என்று வெகு அழகான தாமரைப்புஷ்பம் ஒன்று கறுப்புப்பலகையில் வரைந்தாள். தோட்டக்கார வீராசாமியும் அதைப்பார்த்தவுடன் "தாமரைப்பூ" என்று சொல்லிவிட்டான். இந்த உதாரணத்தைக்கொண்டு உபாத்தியாயரம்மா, குழந்தைகளுக்கு வெகுஅழகாய் உபதேசித்ததாவது:—

குழந்தைகளே, கண்ணுக்குத்தோற்றும் ஒவ்வொரு உருவத்துக்கும் அகத்தில் (மனத்[illegible]) அதை யொத்த வடிவம் (உருவம்) ஒன்று [illegible]பட்டிருக்கவேண்டும். அப்பொழுதுதான் கண்ணுக்குத்தோற்றினது இன்னது என்று மனதுக்கு அர்த்தமாகும், அர்த்தம் என்றாலும் எண்ணம் என்றாலும் ஒன்றுதான். மனதுக்கு வெளியில் தோன்றும் உருவம் மனத்திலுள்ளேயிருந்தால்தான் அது கண்ணுக்குப்புலப்படும். இல்லாவிட்டால் புலப்படாது. வெளியிலுள்ள பொருள்களைக்காண முகத்திலிரண்டு கண்கள் இருக்கின்றன. அவையிரண்டாயிருந்தும் ஒரே வஸ்துவைக்காண்கின்றன. அதே மாதிரி உள்தோற்றங்களைக்காண அகத்தில் (மனத்திலுள்ளே) இருகண்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று "உருவம்" அல்லது "வடிவம்" என்று ஏற்கனவே கண்டுகொண்டிருக்கிறோம். "ரூபம்" என்றாலும் இதற்கே பேர்.

இந்த உருவத்தோடு அதற்கு ஏற்பட்ட பேர் ஒன்றிருந்ததல்லவா? 'அ' எழுத்தை அகாரம் என்றும் தாமரைபுஷ்பத்தின் வடிவை தாமரைப்பூவென்றும் சொன்னதுபோல, ஒவ்வொரு வடிவத்துக்கும் ஒருபேர் உண்டு. "நாமம்" என்றாலும் பேர் என்றாலும் ஒன்றே. பேரையெல்லாம் ஒன்று, இரண்டு என்பது போல, நினைத்துத்தான் உணரவேண்டும். அந்தப்பேரின் வடிவம் அல்லது ரூபத்தையெல்லாம் 'அ' என்று எழுதி யுணர்ந்ததுபோலும், தாமரைப்பூவை வரைந்துணர்ந்ததுபோலும், எழுத்தினாலே யுணரவேண்டும். தடாகத்திலுள்ள தாமரைப்பூவும் எழுத்து ரூபமானதே. தண்ணீர்ப் பரப்பாகிய கறுப்புப்பலகையில் இதழ்களின் வடிவமாகிய வரைகள் (கோடுகள்) ஒன்றுசேர்ந்து வர்ணவிசேஷத்தால் அழகு பொருந்திய புஷ்பமாகிறது. அகத்துருவும், புறத்துருவும் ஒன்றுபட்டாலன்றி காட்சி, அல்லது பார்வை யென்பது ஏற்படாது. இவ்விரண்டும் ஒன்றுபட்டால்தான் கண்படைத்ததற்கு காட்சியுண்டு. இவ்விரண்டும் ஒன்றுபடாவிட்டால் முகத்தில் இரண்டு கண்களிருந்தும் அவை புண்ணுக்குச்சமானமேயாகும். ஏனென்றால் காட்சியேற்படாது. ஆதலால் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று சொன்ன ஒளவையார் அகத்துணர்வும் புறத்துணர்வும் ஒன்றுபட்டுக் காட்சி யென்கிற பார்வை யேற்படுகிறபடியால், அவ்விரண்டுக்கும் அடையாளமும் அறிகுறியுமான எண்ணையும் எழுத்தையும் சுட்டி "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று சொன்னார். கண்ணிரண்டும் ஒன்றையே காண்பதுபோல,

அஹந்துணர்வும் புறத்துணர்வும் ஒன்றுபட்டுப் பொருந்தினாலன்றி உண்மையான அறிவு தோன்றுவதில்லை. கண் அறியும் கருவியாதலால், கருவியும் கரணமும் ஒன்றுபட்டாலன்றி அவை சரியாக வேலைசெய்யா; ஆதலால், இரண்டின் உறவை யுணர்த்த கண் இரண்டாயிருந்தும் ஒன்றையே காண்கிற உதாரணத்தைக்கொண்டு அஹம் புறம் எனக் கரணங்கள் இரண்டுபட்டிருப்பினும் அவ்விரண்டும் ஒன்றையே அறிய ஏற்பட்டவையென்பதை ஸ்தூலமாகவும் சூக்ஷ்மமாகவும் விளங்கக்கூறினார்."—என்று சொல்லிப் போதித்துவிட்டு, பின்னும் சொல்கிறார்:—

"இது 'பொருள்பாடம்' சொல்வதில் முக்கியமான அம்சமாதலால், நீங்கள் இந்தஉண்மையை நன்றாக கவனித்து மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். இங்கே பள்ளிக்கூடத்திலாகட்டும், வெளியிலேயாகட்டும், கண்ணால் பார்த்து, காதால் கேட்டு, மூக்கால் முகர்ந்து, நாக்கால் ருசித்து, தோலால் ஸ்பரிசித்து, அறியும் எதையும் உள்ளத்தில் (அந்தக்கரணத்தில்) ஏற்பட்டிருக்கும் பெரிய பொக்கிஷமாகிய "ஞாபகம்" என்னும் சக்திஸ்தானத்தில் சாவதானமாகவும் ஒழுங்காகவும் சேமித்து வைக்கவேண்டும். இதற்கு 'கவனம்' பரமசாதகம்; சிரவணம் (போதிக்கக்கேட்டல்) சாதனம்.'—என்று குழந்தைகள் மனங்குளிர்ந்து மலரப் பட்சிகள் அடைகாப்பதுபோல் குழந்தைகள் மனத்தைக் கவர்ந்து தாம் சொன்னதெல்லாம் பசுமரத்தாணிபோல் அவர் மனத்திலேறக் குழந்தைகளின் பக்குவமறிந்து அவரவர் மனோபக்குவத்துக்குத் தக்கபடி பலவிதமாக உபமான உபமேயங்களைச் சொல்லியும் சித்தரித்துக்காட்டியும் விளங்கச்செய்தார்.

உபாத்தியாயர் சொல்லக்கேட்டதை சிந்தித்து மனதில் வாங்கிக்கொண்டு அது மனத்தோடு ஏகாக்ரமாகக்கலக்கும்படி அதை இடைவிடாது சிந்திக்கவேண்டும்."—இதுதான் மனப்பாடம் அல்லது சுருக்கமாக "மனனம்" என்று சொல்கிறது என்று தெரிவித்தார்.

சாப்பிட்டசாதம் எப்படி ஜீரணமாய் அன்னப்பால் ரக்தத்தோடு கலந்தால்தான் தேஹத்துக்குத்திடன் உண்டாகிறதோ, அப்படிப் போல, மனதுக்கு உணவுபோலுள்ள "கல்வி" யென்னும் கேள்வியுணர்வு மனத்தோடு ஒன்றுபட்டுக் கலக்கவேண்டும். அப்போதுதான் மனதுக்கு நற்பழக்கம் ஏற்படும். "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்ற ஔவை சொல் பொய்யாகாமல், நாப்பழக்கம், கைப்பழக்கங்களோடு மனப்பழக்கமும் அமையப்பெற்று மனோசங்கல்பத்தினால் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரவேலைகள் மூன்றையும் செய்யும் நிஜமான சக்தியேற்பட்டு, மனோதர்மத்தையுணர்ந்து, அதைக்கொண்டு ஈசுவர சங்கல்பத்தையும், ஈசுவர சிருஷ்டியையும், ஸநாதனமான ஈசுவர தர்மத்தையும் உணர்ந்துய்வது இலகுவாகும். கற்றதனாலான பயன் அப்பொழுதுதான் சித்திக்கும்.

குழந்தைகளே, உங்களுக்காக உழைக்கக்கண்ணங்கட்டி அதற்கென்று தீக்ஷையும் கொடுத்துவிட்ட வித்யா இலாகா தலைவர் வாக்குப் பொய்க்காமலிருக்கக் குழந்தை யொருவனோடு வித்யாசாலை மானேஜர்களான அதிகாரிகளையும் பிரதம வித்யா விசாரகர்களான அதிகாரிகளையும் கண்டுவரப் பிக்ஷாடனர் வேஷங்கொண்டு (வித்யாலக்ஷியமாம்) உயிர்ப்பிச்சை வேண்டி ஊரூராய்ச் சென்று திரிகையில் ஒரு வித்யாதிகாரி வீட்டில் ஸ்ரீவேணுகோபால மூர்த்தி நீலமேகவடிவெடுத்து வேணுகானம் செய்துகொண்டு நிற்க, அவினம் அவர் பாதபத்மங்களை நாவினால் வருடி, வண்டு தேனுண்டு களிப்பதுபோல அவரது பூரணஸ்வரூபத்[...] சிருந்தொழுகும் சிதாநந்த ரஸத்தைப்புசித்[...] கொண்டிருக்கப்பார்த்து அக்காட்சியால் க[...]ரப்பட்ட அடியார் ஒருவர் சத்சங்க விசேஷத்தால் இந்த வுண்மையைக் கிரகித்து இதைப் பாலபாடமாகத்தானே உங்களுக்கும் சொன்னேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள,
வித்யாலக்ஷ்மி உபாத்தியாயினி.

"EVERY NOBLE WORK IS AT FIRST 'IMPOSSIBLE'."

"WORK, FAITH AND HELP."

"Every noble work is at first 'impossible.' In very truth, for every noble work the possibilities will lie diffused through immensity; inarticulate, undiscoverable except to faith."

"It is true that work and no great reward is the lot of those in this life whose ideals exceed those of their neighbours, and this is really the better part."—An English friend writing on "Oath" and its significance.

"The heart and life-purpose shall be as a miraculous Gideon's fleece, spread out in silent appeal to Heaven: and from the kind Immensities, what from poor unkind Localities and town and country Parishes there never could, blessed dew-moisture to suffice thee shall have fallen."—Heaven's response to the Heart oppressed but is strong in faith and wavers not.

"நல்லகாரியத்திற்கு நாலாயிரம் தடை."

இது ஒரு உண்மையான பழமொழி. நல்ல காரியம் என்றால் என்ன? உலகத்துக்கு நன்மையை அளிக்கும் காரியம். "காரணமின்றிக் காரியமில்லை." ஆதலால், நல்லகாரியத்துக்குக் காரணம் நல்ல எண்ணம். இந்த நல்ல எண்ணம் நல்லுணர்விலிருந்து தான் உதிக்கவேண்டும். நல்லுணர்வு நன்மை தீமையை ஆராய்ந்து தீமையைவிலக்கி நன்மையைக் கிரகிக்கும் [...]வேக புத்தியாலுண்டாகிறது. இதற்கு [...]லை பக்ஷியை உதாரணமாகச் சொல்லுவர். அது பாலிலிருந்து நீரைப் பிரித்துப் பாலை மட்டும் பருகும் சக்தி வாய்ந்தது. பாலும் நீரும் போல் உலகத்தில் நன்மையும் தீமையும் கலந்தே யிருக்கிறது. ஹம்ஸ பட்சியைப் போல் விவேக புத்தியுள்ளவன் "குணநாடிக் குற்றமுநாடி மிகைநாடி மிக்கக்கொளல்" தர்மமென்று குணம் குற்றம் இரண்டையும் ஆராய்ந்து இவ்விரண்டும் மிச்ரமாய் (கலந்து) உள்ள உலகத்தில், "மிகைநாடி,"—குணமிகுந்ததை ஆராய்ந்து தேர்ந்து கிரகித்து குற்றமிகுந்ததைத் தள்ளவேண்டும். இப்படியாக "நன்மை கடைப்பிடி" யென்றபடி கடைசிவரையில் நன்மையையே 'கடைப்பிடி'யாக முடிவு வரையில் பிடித்து கிரகித்துக்கொண்டு போனால் உள்ளம் விவேக ஞானத்தால் தெளிவுறும். உள்ளம் தெளிபத்தெளிய உள்ளம் உருகி மனதிலுள்ள கள்ளம் கரையும். உள்ளம் உருகுவதாவது கள்ளம் கரையும். உள்ளம் உருகுவதாவது பச்சாதாபத்தால் ஜீவகாருண்யம் மேலிட்டு பரோபகாரம் கூடாதென்று துணிந்து பரோபகார சிந்தையே மேன் மேலும் விருத்தியாகி வருவதால் உண்டாகும் இளக்க நிருதியாம்.

கடினவஸ்து மற்றொன்றுக்குத் தன்னில் இடம் தராது. திரவமான வஸ்துவோ மற்றொன்றுக்கு இடங்கொடுக்கும். கடினமான கல்லில் வேறொன்றுக்கு இடமில்லை, திரவமான தண்ணீரோ கல் முதலான வேறு வஸ்துக்களுக்குத் தன்னில் இடங்கொடுக்கும். அதேமாதிரி கடினமான உள்ளம் உடையார் ஸ்வநயம் ஒன்றையே கருதுவாரன்றி பிறநயம் பாராட்ட மாட்டார். உருகின உள்ளமுடையோர் ஸ்வநயம் பாராட்டாது பிறநயம் பாராட்டுவர். இதற்குத்தான் உள்ளம் உருகுதல் என்று சொல்லுகிறது. 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று வயிறு புடைக்கத்தின்று தனது போக போக்கியங்களிலே மனம் சென்று கல்லாகப் போனவர் காருண்யம் என்பதை யறியார். ஆகையால் பட்டு அநுபவித்து தன்னைப்போல் பிறரையெண்ணும் பாவம் உதித்து உள்ளம் உருகக் கள்ளம் கரைந்து கருணைவெள்ளம் கரைபுரள அதில் மூழ்கியுள்ள மனமே பரோபகாரம் செய்யவல்லதாகும். பரோபகாரம் அதிகரிக்க அதிகரிக்க அஹம்பாவம் குறையும். அஹம்பாவம் குறையக்குறைய கர்வமின்மையால் தர்மத்துக்குப் பணிவும் தாழாமற் தாழும் தன்மையும் உண்டாகும்.

தாழாமற் தாழ்வதாவது:—அக்கிரமங்களுக்குத் தாழாமல், தர்மத்துக்குத் தாழ்ந்து நடந்

தல். அக்கிரமம் அசுர பாவனையால் சம்பவிப்பது. தர்மம் தெய்விகசுபாவமானது. தேவாசுர விரோதம் எப்போதும் இருந்துகொண்டேயிருக்கிற படியால், நல்லகாரியத்தை தர்மவிர்த்தியார்த்தம் செய்கிறவர்கள் அசுரபாவமிருந்தவர்களால் மிகவும் இடையூறு செய்யப்பெறுவார்கள். 'ஆயிரம்' என்கிற எண் "மிகைநாடி" யென்னும் சப்தார்த்தத்தை விளக்கும் தொகையாம். அது பிரவிருத்தி முதிர்ச்சியைக் குறிக்கும். மனுஷனுக்குப் பூர்ணாயுசு நூறு என்று சொல்வதுபோல கர்மத்துக்குப்பூர்ணத்துவம் ஆயிரத்தில் சம்பவிக்கிறது. "நல்லகாரியத்திற்கு நாலாயிரம் தடை" என்றதனால் தர்மவிருத்தியை நாடியுழைப்பவர்க்கு நாலா விதத்திலும் அனந்தம் இடையூறுகள் சம்பவிக்கும் என்பது பொருள். நாலுவிதமாவது:—தர்ம, அர்த்த, காம, மோக்ஷம்.

(1) முதலாவது, தர்மவிக்னமாவது என்னவென்றால் கர்மப்பிரவிருத்தியில் சிலசந்தர்ப்பங்களில் தர்மவழியின்னதென்று உணராது சங்கடப்படுதல். இதற்கு உதாரணம்:-"எருதுக்கு ஏறச்சொன்னால் கோபம்; முடவனுக்கு இறங்கச்சொன்னால் கோபம்" என்னும் பழமொழியில் காணலாம்." இந்தப்பழமொழியில் எப்படியும் பொல்லாப்பு சித்திப்பது நிச்சயமாயிருக்கும்பொழுது தர்மத்தையனுசரிக்கும் வழி யின்னதென்று தெரியாமை ஒரு பெரிய சங்கடமென்பதை நன்றாகக் காட்டப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களுக்குத்தான் தர்மசங்கடமென்று சொல்கின்றது. அர்ச்சுனன் யுத்தமுனையில் யுத்த தர்மம் இன்னதென்று தெரியாமல் சங்கடப்பட்டான். அத்தருணம் பார்த்து பகவான் அவனுக்கு கர்மதர்மத்தை உபதேசிக்கக்கருதி அவனது உண்மையான சொரூபத்தையுணர்த்தவேண்டி ஆத்மோபதேசம் செய்து விசுவரூபதரிசனமும் அளித்தார். ஆகையால் தர்மசங்கடம் அறிவுமயக்கம் ஒழிந்த விடத்திலேயன்றி மற்றப்படி நீங்காது. இதற்கு மூத்தோரிடத்திற் பக்திவிசுவாசம் வேண்டும். மூத்தோர் என்றால் அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்தோர் என்று அர்த்தம். ஆகையால்தான் "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்றார் ஔவையார்.

(2) இரண்டாவது, அர்த்த விக்னம். அப்படியென்றால் பொருளினால் வரும் இடையூறு. கர்மம் இனிது முடிய இடம், பொருள், ஏவல் என்னும் மூன்று அங்கங்கள் இன்றியமையாதனவாம். இவை மூன்றும் அர்த்த சம்பந்தமானவையே. ஏனெனில் இவை மூன்றும் பொருளின் ஒருவித சுபாவமெனச் சொல்லலாம். இடம் என்பது சந்தர்ப்ப விசேஷத்தை விளக்கும். இன்ன இடத்தில் இப்படி நடந்துகொள்ளவேண்டுமென்கிற சந்தர்ப்ப ஞானம் இருக்கவேண்டும். அரசனிடத்திலும் அதிகாரிகளிடத்திலும் நடந்துகொள்ள வேண்டிய விதம் வேறு. சம அந்தஸ்துடையவரிடத்து நடந்துகொள்ள வேண்டிய விதம் வேறு. ஏவலாளிகளிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய விதம் வேறு. இம்மூன்று வகையாகும் பொருள் பேதத்தினால் அந்தஸ்து பேதமுடையவர்களாதலால் அவர்களிடத்து நடந்துகொள்ள வேண்டியவிதமும் அர்த்த சாஸ்திர சம்பந்தமானதேயாம். இதற்கு சமயோசித சாமர்த்தியமென்று சொல்லுகிறது. கைப்பொருளில்லாமற் காரியம் நடவாது: ஆகை[illegible] அதுவும் வேண்டிய அளவுக்கு இருக்க[illegible]டும். ஏவல் செய்வோரின்றிக் காரியம் முடியாது. இதுவும் ஸ்பஷ்டம். இம்மூன்றில் முதலாவது அறிவு சம்பந்தமானது. இரண்டாவது ஞானேந்திரியங்கள் சம்பந்தமானது. மூன்றாவது கர்மேந்திரியங்கள் சம்பந்தமானது. இம்மூன்றின் பூர்ணபக்குவமிருந்தாலன்றி காரியம் இனிது முடியாது.

(3) மூன்றாவது, காம விக்னம். அதாவது கர்மத்தின் உளவு அல்லது தர்ம மறியும் குன்

[illegible]மையால் வரும் இடையூறுகள். அர்ச்சுனனுக்குச் சண்டைபோடுவது க்ஷத்திரியதர்மமாக ஏற்பட்டிருந்தாலும், அதிவீரிய பராக்கிரமமுடையவனாயிருந்தாலும், யுத்தத்தில் கர்மதர்மம் உணர்ந்து மனம் செல்லாமையால் அதில் அவனுக்குச் சுவையேற்படவில்லை. ஆதலால் கைசோர்ந்து, நாவரண்டு, சோகமூர்ச்சையினால் ஆயுதங்களை நழுவவிட்டுத் தவித்தான். கர்மம் பந்தத்தை விளைக்கக் கூடியதாகையால் கர்மபந்தத்தைக் கண்டு விவேகிகள் மலைத்துச் சோர்வுறுதல் சுபாவமே. ஆனால் இவ்வுலகம் கர்ம சுபாவம் பொருந்தியதாயிருப்பதாலும் இந்த தேகமே கர்ம வடிவாயிருத்தலாலும், கர்மத்தைச் செய்யாமலிருப்பதும் சாத்தியமில்லை. கர்மத்தைச் செய்யாமலிருக்கவோ முடியவில்லை; செய்தாலும் பந்தம் (கட்டு) ஏற்படுகிறது; இந்த சங்கடத்தில் கர்மத்தில் 'இன்பம்' உணர்வது எப்படி. இதை யுத்தேசித்தே பகவான் "கர்மபலனை ஈசுவரார்ப்பணம் செய்து கர்மத்தைச் செய்: அப்பொழுது கர்ம பந்தம் உன்னைத் தொடராது. கர்ம சுகம் இன்னதென்று தெரியவரும்" என்றார். ஆகையால் கர்மத்தினால் துக்கம் வராதிருக்க நிஷ்காம கர்மம் செய்யக்கற்று கர்மவிக்னத்தை நீக்கல்வேண்டும்.

(4) நான்காவது, மோக்ஷ விக்னம். இது எல்லாவற்றிலும் பெரியதடை யென்பர். ஆனால் [illegible]கர்மத்தை யுணர்ந்தவர்க்கு கர்மம் மோக்ஷ[illegible]காது மோக்ஷசாதனமாக அமையும். [illegible]யெனில் சொல்வோம். "மோக்ஷம்" என்றால் என்ன? "விடுபடுதல்" என்று அர்த்தம். எதிலிருந்து விடுபடுதல்? பிறவித்துன்பங்களாகிய பிணி மூப்பு மரணபயம் முதலிய துன்பங்களிலிருந்து விடுபடுதல். ஆனால் இவைகளெல்லாம் கர்மவசமாய்ச் சனித்ததேகத்துக்கேயன்றி கர்மாதீதமாய் எங்கும்நிறைந்து எல்லாம் தானாயிருக்கும் பரிபூரணசித்கன சொரூபத்துக்கு இல்லை. இதையறிந்து அனுபவித்து சகஜானுபவம் பெறுவதே மோக்ஷம் அல்லது வீடு. நிஷ்காமியகர்மத்தால் கர்மபந்த பயம் நீங்கினவனுக்கு கர்மத்தால் பேதபாவமுதித்து பேதஞானம் தடிக்கலாமென்கிற பயமன்றி வேறுபயம் இல்லை. அபேதஞானமாகிய அறிவானந்தம் சுககனமாய்த் தடித்து அனுபவஞானம் சகஜமாகி சகஜானந்தத்திலிருப்பவனுக்கு கர்மத்தால் மோக்ஷவிக்னமுண்டாவது எப்படி? உண்டாகாதாகையால் சகஜானுபவஞானத்தால் மோக்ஷவிக்னமும் நீங்கும்.

இப்படி நால் விதத்திலும் சத்கர்மத்துக்கு இடையூறாக நேரிடக்கூடிய (அனந்தமான) நாலாயிரம் தடைகளை யறுத்து "நல்லகாரியம்" (சத்கர்மம்) செய்பவன் யாரோ அவனே செய்யவேண்டியதைச் செய்து கிருதார்த்தனாவன். அவனுக்கு உதவிபுரிய வென்று தேவர்களெல்லாம் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பகவானே "தில்லை வாழ்ந்தணர்தம் அடியார்க்குமடியேன்" என்று தாம் அடியார்க்கடியனாகவிருக்கும் மஹிமையைத் தெரியப்படுத்தியிருக்கிறாராகையால், அவர் நல்ல காரியம் செய்கிறவர்களுக்குச் சகாயம் செய்வதே தொழிலாகப் பூண்டிருக்கிறார். ஆதலால் தான் அவருக்கு ஆபத்சகாயன் என்கிறபேர் வந்தது. அப்படிப்பட்டவரால் அடிமைகொள்ளப் பட்டவர்க்கு அடியார்கள் என்று பேர். அப்படியென்றால் கர்மத்துக்கெல்லாம் ஆதார பூதமாயிருக்கப்பட்டவர்கள் என்று அர்த்தம் கொள்ளவேண்டும். கடவுள் ஒருவரே சுவதந்தரமுடையவர். அதையுணர்ந்து அவர் வழிப்பட்டவர் யாவரேயாயினும் அடியார் என்னப்படுவர்.

இப்படிப்பட்டவர்கள் எல்லாச்சாதியிலும் எல்லாக்குலத்திலும் வருணாசிரம பேதமின்றி யேற்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு விதத்தில் உலகத்துக்கு உதாரணமாக விருப்ப

வராவர். (Types of Character). இப்படிப்பட்டவர்கள் அறுபத்திமூன்று பேர்கள் உண்டு. இவர்களுக்கு "அறுபத்திமூவர்" என்று பேர். இந்த "அறுபத்திமூவர்" உற்சவம் திருமைலாப்பூரில் விசேஷமாக வருஷந்தோறும் மிக்க வைபவத்தோடு கொண்டாடப்பட்டு வருகிறது. இஃதெல்லாம் சமஷ்டி சேவையார்த்தம் ஜனங்கள் பாலபோதம் பெற்றுக் குழந்தைமனமுடையவர்களாகிக் கள்ளங்கபடு நீங்கி ஹிருதயசுத்தியடைய வேண்டுமென்றேயன்றி வேறல்ல. அப்படிப்பட்ட அதி பரிசுத்தமான தினத்திலே, ஆண்டவனும் அடியார்களும் வெளியிற்போல் எல்லார் உள்ளத்திலும் உறையும் நாளில் பாலர்க்குழைக்கவென்று சத்தியம் வாங்கிப் பத்தியம் கெட்டு நாலாயிரந்தடையிழைத்தால் அதனால் கர்மலோபம் செய்யலாகுமோ. இதை ஈசன் தானே தீர்மானிக்க வேண்டுமன்றி மனிதனால் தீர்மானிக்க முடியாது. ஆகையால் அவன் "குஞ்சித சரணம்" னென்னும் திருநாமத்தை யோதிக்கொண்டு தில்லைவாழந்தணர் வாக்கால் அபயங்கொடுத்து தரிசனமும் அளித்ததை நம்பி அவனிட்டதோர் வேலையைத் தட்டின்றிச் செய்து முடிப்போம். தடையறக்கும் வேலை அவனது. இடையறா துழைப்பதொன்றே நம் கடமையாம் அதை நாம் கர்மலோபமின்றி, ஆண்டானடிமையாகச் செய்து வருவோம். இது நம் ஸத்யானந்த சபாநாயகர் இட்டதோர் கட்டளையாகும். இக்கட்டளை யினிது முடியவேண்டி குஞ்சிதசரணதீக்ஷை பெற்ற 'தில்லைவாழந்தணர்' அவருக்கு நித்தியார்ச்சனைசெய்து வருகின்றார். (அர்ச்சனையென்றால் 'உன்பாதமே சரணம்' என்கிற மந்திரத்தைக்கொண்டு பூசித்தல்.) இப்படிப்பட்டவரில் ஒருவரான 'அபூ பென் ஆதம்' சரிதையை ஆங்கிலத்திலிருந்தெடுத்து மொழிபெயர்ப்பு வித்தைக் குதாரணமாகக் கீழே தமிழ்ப்படுத்தி யிருக்கிறோம்.

TRANSFUSION COLUMN. *

["If a combined, honest and sustained effort is made to *transfuse* (not merely *translate*) good English......into Tamil, the effect will be to assist and stimulate the study of both languages."—Dr. G. U. Pope.]

மொழிபெயர்ப்பு வித்தை.

(1) "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" [Thought and Language are the very eyes (*i. e.*) true expressions of the Soul.]

(2) "விண்ணவனை நண்ணினோர்க்கெண்ணமெல்லாம் கண்ணாகும்" [The thoughts of those that have approached *the Light* are all transformed into *Visions bright*".]

* "No exercise of faculty is better and nobler for a *real man* than that of struggling with great thoughts and labouring to express them in such a way that they shall reach the heart, instruct the mind, stimulate the best feelings, and elevate the whole being of their fellow men around them!"—Rev. Dr. G. U. Pope on the *Viveka-chintamoni Series.*

ABOU BEN ADHEM AND THE ANGEL.

'அபூ பென் ஆதம்' என்பானும் தேவனும்.

I

"அபூ பென் ஆதம்" என்பான் ஒருசிலன்,
அற்புத பக்தியும் சிரத்தையு முள்ளவனும் :
கற்புடை யவன்சிந்தை ஆனந்த நித்திரையிலே
வெற்பினின் மிழிதெய்வ தேஜஸைக் கண்டது பார் !
தற்பரமானவத் தேவனும் அவன்முன்னே
சிற்பர மானவோர் கிரந்தத்தி லெழுதக்கண்
டற்புத சாந்தத்தால் அவனும் மனந்தேறிக்
கற்பித மானவோர் கந்தர்வ னுறவாலே
தற்பர மானவத் தேவனை விளித்தம்மா !
"சிற்பர கிரந்தத்தி லெழுதுவ தென்"னென்றான்.

II

தேஜோமயமான தேவனும் தலைநிமிர்ந் தவனைப்பார்த்து
"தேஜோமயானந்த தேவன்பா லன்புள்ளார் பேரைவரைகிறேன்
"தைஜஸனே" யெனவுகந் துத்தரம் தானளிக்க,—
"தேஜோமயானந்த தேவன்பா லன்புள்ளார் வரிசையில்
"ராஜஸம் நீங்காத நானுமொருவன் ஆவனோ" வென்றான்.
தேஜோமயமான தேவனு "மில்லை"யென் றுரைக்கக்கேட்டு,
தைஜஸ ரூபனும் 'அபூ பென் ஆதமும்' அன்புடனே
"தேஜோமயானந்த தேவனுக் கடிமைநா னில்லையென்றால்
"ராஜஸம் நீக்காநான் என்னொத்தமனிதரை நேசிப்பானெனக்குறி
"தேஜோமயமான தேவனே !" யென் றுரை யாடலானான்.

III

அப்படி யாவென்று செப்படி வித்தைபோல்
தப்படி வையாத தேவனும் பதிந்துகொண்
"டெப்படியானாலு மிதையீசற் கறிவிப்பேன் :
"இப்படி யானவன் எப்படியி துள்ளானோ !
"செப்படி வித்தைபோ லென்னீசன் செய்ஜாலம்
"எப்படி யிருக்குமோ அதையறி வே"னென்றான்.
"அப்படி, இப்படி, ஆனந்தப்படி, எப்படி
"எப்படி யிருந்தா லென் !"னென் றசரீரிவாக்கும்
தப்படி யின்றியே பிறந்த் "அவன் பேரையே
"எப்படி யாவுமென் அன்பரில்முதல்வனு யெழுதுக" வென்றதே.

IV

அப்படி யேயத் தேவனு மெழுதியே
இப்படி யாகவே யென்னீசன் வரைந்தா
ரெப்படி யாலுமீ சுசற்கன்பனே யிதையுணரென்று
தப்படித் தெப்படி யிருந்தாலு முள்ளன்புடையா
ரெப்படி யாலுமென் னீசற்கடியரே யெனப்பறை யறைந்தான்.
இப்படி யாயுள்ள அற்புதவன்பன் "அபூ பென் ஆதம்"
எப்படி யாலுமே வற்றப்பெற் றுலகிடை
"அப்படி இப்படி, ஆனந்தப்படி, எப்படி
"எப்படி யிருந்தாலென் ! தப்படி யில்லா
"மெய்ப்படி யாமுள் ளன்புடைசித்தமே சிவமென்" றுணர்த்தினன்.

K. S. S. A

SONGS.

பாட்டுகள்.

SAILING IN LOVE "OVER THE SEA OF BONDAGES."

"வாழ்வெனும் ஓடம்"—"பாசக்கடல்"—"நேசப்பாய்."

ராகம்-தோடி; தாளம்-சாப்பு.

பல்லவி.

பாசக்கடல்வழி மோசப்படாவகை
பேசக்கேளாய் மனமே.

அநுபல்லவி.

ஈசனருட்டென்றல் வீசிவரும்போது
நேசப்பாய்தூக்கி விச்வாசத்துழையிட்டுப் (பாசக்—)

சரணங்கள்.

(1) நெஞ்சத்து நேசக்கயிற்றை யிழுத்துக்கொள்
நின்றசிலேதவறாது விழித்துக்கொள்
சஞ்சலப்பந்தித் திரைகள் முறித்துவை
சாருந்துறை செல்லநேரிற் குறித்துவை (பாசக்—)

(2) புந்திச்சுக்கானைப் பிடித்தும் புயலெய்தும்
போதுதிரைமேற் பொறுமையெண்ணெய் பெய்தும்
வந்திப்பெனுந்திசைகாட்டியைநோக்கி
வாழ்வெனுமோடத்தைத் தாழ்வுடன் போக்கியே (பாசக்—)

ON UNIVERSAL LOVE.

"ஜீவகாருண்யம்."

ராகம்-கேதாரகௌளம்; தாளம்-சாப்பு.

பல்லவி.

செல்வத்திலே செல்வம் ஜீவகாருண்ணியம்
தெய்வத்தன்மையிதுவே.

அநுபல்லவி.

கல்வியிற்கல்வி நற்கர்மங்களின் வித்து
நல்வினைப்பேறண்ட நாதன் முடியில் முத்து (செல்வத்திலே—)

சரணங்கள்.

(1) நல்லறம்யாவினும் மிக்க நல்லதிது
நாடும்பதவி யெல்லாம் நல்கவல்லதிது
இல்லற வாழ்க்கையிலின்பந்தருவதிது
இங்குமெங்கு மின்று மென்றும் வருவதிது (செல்வத்திலே—)

(2) மாசற்றவரும் மதிக்கும் பெருமையிது
மக்கள் மனைவியிலும் மிக்க வருமையிது
காசற்றவர்க்குமோர் கற்பகமாமிது
கைப்பொருள் பொய்ப்பொருள் மெய்ப்பொருளாமிது (செல்வத்திலே—)

ON SELF-IMPORTANCE.

"பெருக்கம்."

ராகம்-கல்யாணி; தாளம்-சாப்பு.

பல்லவி.

இந்தப்பெருக்கம் மனமே நன்றோ—வின்ற
னேற்றமெல்லாம் நமையாற்றமன்றோ.

அநுபல்லவி.

சொந்தப்பொருளென்று தன்னித்துடிக்கிறாய்
சந்தம்மிவில்லாத தொந்தம் நடிக்கிறாய் (இந்தப்—)

சரணங்கள்.

(1) எல்லாவுயிரும்போல நீயோருயிரன்றே
எண்ணுமிலாயன்பு கண்ணுமிலாய் சென்றே
பொல்லாரைத் தண்டிக்கப் பொங்கிப் பறக்கிறாய்
பொல்லாங்குனக்கே யுண்டத்தைமறக்கிறாய் (இந்தப்—)

(2) நீயொருபொய் நீனைப்பதும்பொய்யின்று
நீட்டியுரைப்பதும் பொய் நிலைபொய்யென்று
வாயொரு கோடி பறையினும் ஈயினைவால்
வாட்டி நிமிர்த்தினும் கோட்டந்தீராதபோல் (இந்தப்—)

THE GRANDEUR OF CREATION.

சிருஷ்டியின் பெருமை.

சர்வ வல்லமை, சர்வ வியாபகம், சர்வ சக்தி முதலிய விசேஷத்தன்மைகள் அமையப்பெற்றவரும், தனக்கு ஒப்பு உயர்வு ஏதொன்றுமில்லாதவரும், அருள்வடிவருமாகிய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள் அனேக விதங்களாயிருக்கின்றன. அணுப்பிரமாணமுள்ள மணல், சிறுகல் முதலியவைகள் முதற்கொண்டு நமது பூமியும், சந்திரனும், சூரியனும் இன்னும் மற்றும் பரந்த ஆகாயவெளியில் சஞ்சாரஞ்செய்துகொண்டிருக்கும் கணக்கில்லாத நக்ஷத்திர கோளங்களும், அவையவைகளின் உபயோகங்களுக்குத் தகுந்தபடி கடவுளால் தீர்மானிக்கப்பட்டு அவைகளால் நடக்கவேண்டிய காரியங்கள் நடந்தேறிவருகின்றன. நமது பரிச உணர்ச்சியாலன்றி அறிந்துகொள்ளக்கூடாத வாயு ஆகாசமண்டலத்திற் பரவி, மனிதர்களும் தாவரவர்க்கங்களும் ஜீவித்திருப்பதற்கு அத்தியாவசியமான சுவாஸத்திற்கு அனுகூலமாயிருக்கிறது. தன தான்னிய அபிவிர்த்திக்கு மூலகாரணமாகும் மழை, சூரியவெப்பத்தால் ஜலத்தினின்றும் நீராவி ரூபமாய் ஆகாயத்தில் செலுத்தப்பட்டு மறுபடியும் ஜலரூபமாக பூமியில் பொழியுமாறு அகண்ட விஸ்தீரணமுள்ள மகாசமுத்திரம் கரையின்றி இவ்வுலகைச் சுற்றிப் பாவடமிட்டதுபோல் ஆண்டவன் ஆக்கினைக்குள் அடங்கி நிற்கின்றது. ஈ, எறும்பு முதலிய சிறிய ஜீவராசிகள் முதற்கொண்டு பெரிய உருவங்கள் படைக்கப்பெற்ற யானை முதலிய மிருகங்களும், நீரில் வாழும் சுறு, திமிங்கலம் முதலிய பெரிய மீனினங்களும், பகுத்தறிவு, ஞானம், புத்தி முதலிய மேன்மைக் குணங்கள் அமைந்துள்ள மனித ஜீவன்களும் அவையவைகளின் இயற்கைக்கு சாதகமாகும் அவயவங்கள் முதலியன யாதொரு குற்றம் குறைபாடன்னியில் அளிக்கப்பட்டு உலகத்தில் நடமாடுகின்றன. நாம் சாதாரணமாய் நடக்கும்போது நமது கால்களினடியில் அகப்பட்டு நசுங்கிப்போகும் அற்ப சுவாசமுள்ள எறும்புகளின் தேக அமைப்பையும், அவைகள் ஆகாரமுதலியன தேடுவதற்காக அணிவகுத்துச்செல்லும் மாதிரியையும், அவைகள் தங்களுக்குள் இருக்கும் பயம், பசி, முதலிய குறிப்புகளை ஒன்றிற்கொன்று காட்டிக்கொள்வதாய்க்காணும் குறிகளையும் சற்று ஊன்றி யோசித்திடில் கடவுளின் சிருஷ்டியின் பெருமையை அற்பமாய்த் தோன்றும், அவ்வெறும்புகளிடத்தும் பரிபூரணமாய்க்காணலாம். நமது புத்தி யுக்தி யூகங்களால் வண்டி முதலியவைகளை மனிதன் மாடு முதலியவைகளால் இழுக்காமல், மின்சாரத்தினாலும் நீராவியின் வலிமையினாலும் ஓட்டுவிக்கலாம். சமுத்திரத்தில் கப்பலையும் காற்றின்றியோட்டலாம். புகையின் வலிமையால் ஆகாயத்தில் கூடுகட்டிப்பறக்கலாம். ஆயினும், அற்ப ரூபத்துடன் காணும் ஒரு சிற்றெறும்பையேனும் சிருஷ்டித்து அதற்கு ஜீவனளித்து நாம் அதை நடத்த வல்லவர்களோ!

சற்றே நிதானித்து யோசித்தறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களன்றியில் சாதாரணமாய் நம்மைச் சுற்றி நாற்புறத்திலும் தோன்றும் பலவித காட்சிகளையும் அனேகம் கண்ணுக்கினிய விநோதத் தோற்றங்களையும் காடுகளில் வசிக்கும் சாமானியமான நாகரீகமற்ற பேதை ஜனங்களும் அதிசயித்து அனுபவியாமற் போகார். காலைப்பொழுதிலும் மாலைப்பொழுதிலும் சூரியோதயமாகும்போதும் அஸ்தமனமாகும்போதும் உண்டாகும் தோற்றங்களைக் கண்டு களிக்க ஏழைச்செம்படவர்கள் கும்பல் கும்பலாய் கடலோரங்களில் உட்கார்ந்து கொண்டிருப்பதை பலகாலும் கண்டிருக்கின்றோமல்லவா? மற்ற அனேகரும் இக்காட்சிகளைப் பார்த்து ஆனந்திக்க உலாவித்திரிவதைப் பார்த்திருக்கிறோம். சூரியன் உதயமாகுங்காலத்தில் ஒரு பெரிய அழகுற்றதழல் போலும், மாணிக்க வடிவம்போலும் விளங்

[illegible] யாவர் மனத்தையும் கவருவது [illegible]மோ! செழுஞ்சுடர்விட்டுப் பிரகாசிக்கும் இளஞ்சூரியனுடைய காந்தியால் ஆகாயமெங்கும் பரவி நாற்புறத்திலும் சிதறிநிற்கும் மேகங்கள் பிரகாசமுள்ள செந்நிறங்கொண்டு தோற்றும் காட்சியையும், பச்சை நிறமமைந்த மரங்களும் செடி கொடிகளும், பலவர்ணங்களோடு விளங்கும். மலை முதலிய பிரதேசங்களும் மாறுதல்களையடைந்து, இலைகளென்ன மரகதங்களாலும், மாணிக்கங்களாலும், வயிர வைடூரியங்களாலும் அமைக்கப்பட்டனவோ என மதித்து மயங்குமாறு செய்விக்கும் தோற்றத்தையும் வருணித்து எழுதியுமுடியுமோ! சூரியன் அடிவானத்திலிருந்து மேலே ஏற ஏற நிர்மலமாயும் கண்களால் ஏறெடுத்துப் பார்க்கமுடியாத வண்ணமாயும் தேஜோமயமான வெண்ணிறமடையுமித்தருணத்தில்; ஆகாயத்தில் சற்றுமுன்னர் செந்நிறங்கொண்டிருந்த மேகங்களெல்லாம் உருக்கிவார்த்த வெள்ளியால் அமைக்கப்பட்ட குன்றுகளோவென நினைக்கும்படியாய்த் தோன்றும் அற்புதக் காட்சி மிக விந்தையாயிருக்கும். முந்தின பகலின் சூரிய வெப்பத்தால் வாடி வதங்கித் தலைகுனிந்திருந்த மரங்களின் இலைகளும், செடி கொடிகளும் இரவின் குளிர்ந்த காற்றினால் பின்னும் தலைநிமிர்ந்து பசுமை நிறத்துடன் விளங்குகையில் அவைகளின் பேரில் சூரிய கிரணங்கள் மறுபடி தாக்கவே அனேகம் கோடி சின்னஞ்சிறிய சூரியர்கள் உதித்ததுபோல ஒவ்வொரு இலையிலும் சூரிய பிம்பம் பிரதிபலி[illegible]காண்பதை நோக்கவும் நினைக்கவும் [illegible] ஆனந்தமாயிருக்கும். பிரகாசமான சூரிய வெளிச்சம் மலைகளினின்றும் இழிந்துவரும் நீருவிகளின் பேரில் படவே அவை வெள்ளிப்பாளங்கள்போலத் தென்படும். மாலைப்பொழுதில் சூரிய அஸ்தமனவேளையில் சூரியன் அதிகாலையில் இருந்ததுபோல சிவப்பு நிறமாய் ஆகாயமெங்கும் ரம்மியமான செஞ்சுடரொளிவிட்டுப் பிரகாசிக்கும். இச்சமயங்களில் ஆகாயத்தில் சிதறிநிற்கும் மேகங்களில் சிலபாகம் நீல நிறமாகவும், சில பச்சை நிறமாகவும், சில ஊதாவாகவும், சில கருமை கலந்த பச்சை, செம்மை கலந்த கருப்பு முதலிய பலவித வர்ணங்களாகவும் காணும் இவ்வதிசயக் காட்சியின் பெருமையை எழுதியுமுடியாது; பாவலரால் பாடியுமுடியாது; சிற்பியால் சித்திரித்தும் உதவாது! என்ன செய்தபோதிலும் அக்காட்சியின் பெருமையை ஒருவாறுரைத்ததாகுமேயன்றியில், அப்பெருமையை முற்றிலும் உணர்த்தியதாயாகாது. கண்ணாரக்கண்டு களித்தலே முழு ஆனந்தமாகும்.

இரவின் இருட்டை ஒருவாறு ஒழித்து, உலகெல்லாம் தண்ணொளி பரப்பி இன்பமூட்டும் உருக்கிவார்த்த வெள்ளியென்று பிரகாசிக்கும் சந்திரனின் அழகையும், அதைச்சுற்றி புடைசூழ்ந்து நிற்பனவாய்க் காணும் நக்ஷத்திரங்களின் வனப்பையும் என்னென்று சொல்லலாம்! இப்பரந்த உலகத்தைக் கூடாரமிட்டுக் கவிந்ததுபோலக் காணப்படும் ஆகாயவெளியில் கோடானுகோடி வயிரமணிகள் பதிப்பித்ததாகத்தோற்றும் சந்திர நக்ஷத்திரங்களுடைய காட்சியைப் பன்முறை பார்ப்பினும் சலியாது. ஒவ்வொரு முறையும் ஆச்சரியமான தோற்றமாகவிருக்குமே ஒழிய சலிப்படையத்தக்க பழந்தோற்றமாயிராது.

ஒன்றுமறியாச் சிறு குழந்தைகள் அழுந்தருணங்களில், அவர்கள் அழுகையை நிறுத்துதற்பொருட்டு, அவர்களுக்கு வேடிக்கையாய்ச் சந்திரனைக் காட்டுவதும், அதைக் கண்டதும் அவர்கள் அழுதலை நிறுத்தி, 'அம்புலிமானே வா வா' என்றழைப்பதும், அதன் அழகிய உருவத்தைக்கண்டு மகிழ்ந்து தங்களுக்கு அதைப் பிடித்துத்தரவேண்டும் என்னும் குறிப்பாய்க் கைகளைக் காட்டுவதும் முகங்களைக் காட்டுவதும் நாம் அனுபவமா

யப் பார்த்திருக்கிறோமல்லவா! சந்திரனுடைய இதமான வொளியும் வனப்பான வடிவமுமல்லவோ குழந்தைகளின் மனங்களையும் கூடக் கவர்கின்றது! காடுகளில் வசிக்கும் மிலேச்ச ஜனங்களுமல்லவோ இராத்திரிகளில் நிலவு வெளிச்சத்தில் உண்டு நிமிர்ந்து கூத்துகளாடிப்பாடி ஆனந்தமடைகிறார்கள். நாமும் அடிக்கடி நிலாச்சாப்பாடு சாப்பிடுவதாகச் சொல்லி, உற்றார் உறவினருடன்கூடி மேல் மாடங்களிலோ, நிலவு வீசும் நிலங்களிலோ உட்கார்ந்துகொண்டு பலவித பக்ஷண பதார்த்தங்களுடன் உண்டி அருந்தி, 'இன்றைக்கு நிலவு நன்றாய் அடிக்கின்றது, வானமும் மப்பு மந்தாரமின்றி நிர்மலமாயிருக்கின்றது, நமக்கு நிலாச்சாப்பாடு சாப்பிட ஏற்பட்டநாளே நாள்,' எனப் பலவாறாகச் சந்திரனையும் அதளிக்கும் சுகத்தையும் குறித்துப் பேசிக்களிப்பதில்லையோ! இவைகளெல்லாம் சந்திரனிடத்து விளங்கும் வசீகரமான தன்மைகளால் உண்டாகும் அநுபவங்களென்று தெள்ளெனப் புலப்படும்.

சமுத்திர தீபங்களின் காட்சிகளும் மிகச் சிறந்தவைகளே. சமுத்திரத்தில் உண்டாகும் சிறிய அலைகள் சூரியகாந்தியால் பளபளப்புடன் பிரகாசித்துக்கொண்டு மணற்பாவிய கரைகளை அணுகவணுகப் பெரிய அலைகளாய்த்திரண்டு உருண்டு கரைகளின்பேரில் மோதுவதும், அதனால் தண்ணீர் சிறு திவலைகளாய்ச் சிதறிவிழுவதும், திரும்பவும் தண்ணீர் சமுத்திரத்தில் உள்நோக்கிச் செல்வதுமாகிய காட்சி வெகு நேர்த்தியாயிருக்கும். மீன் பிடிப்பதற்காக ஏழைச்செம்படவர்கள் கடலிற் செலுத்திக்கொண்டுபோகும் கட்டைமரங்களும் சிறு படவுகளும், அலைகளின் வலிமையினால் திடீரென மேலே கிளப்பப்படுவதும் மறுபடியும் குபீரென கீழே தள்ளப்படுவதுமாய் தத்தித்தடுமாறிச் செல்வதைப் பலகாலும் கரையோரங்களில் நின்று பார்க்கிறோமல்லவா! இது அலைகளின் வலிமையைக் குறித்து ஒருவாறு அதிசயிப்பதே. கடலில் கப்பல்கள், பாய்மரங்கள் விரிக்கப்பட்டுச் செல்வதும், புகைக்கப்பல்கள் தங்கள் புகைக் குழல்களினின்றும் புகையைக் கக்கிக்கொண்டு செல்லும் காட்சியும், வெகு அழகாயிருக்கும். நீல நிறத்தில் ஒன்றிற்கொன்று குறைவிலாதனவாகிய வானமும் கடலும் ஒன்றோடொன்று சேருவதாகக் காணும் அடிவானத்தில் சூரியோதய காலத்திலும் அஸ்தமன காலத்திலும் சூரியன் தண்ணீரிலிருந்து வருவதாகவும், தண்ணீரில் மூழ்கிப்போவதாகவும் காணும் காட்சிகள் மிகச்சிறந்தவை. இதுமாதிரியாகவே சமுத்திரக்கரைகளில் சந்திரோதயம் அதிக ஆனந்தத்தை விளைவிப்பதாகவிருக்கும். சந்திரகாந்தியால் அலைகள், கடல்நீரில் இருக்கும் *நீபாக்கினியின் (Phosphorus) தன்மையால் மின்சாரத்தை யொத்துப் பிரகாசிக்கும் தோற்றம் வெகு அற்புதமாயிருக்கும். சமுத்திர மத்தியில் கப்பலில் நின்று நாற்புறமும் நோக்கிடில், எப்புறமும் கரையே காணாது ஒரே பரப்பாய் நீர்நிலை இருப்பதும், வானம் ஒரு பிரம்மாண்டமாகிய கூடாரமிட்டுக் கவிழ்த்ததுபோல் சுற்றிலு மிறங்கியிருப்பதுமாகிய காட்சி மிக அச்சத்தையும் ஆச்சரியத்தையும் விளைவிக்கத்தக்கது. †தக்ஷிண உத்திர துருவப் பிரதேசங்களில் சமுத்திரங்களில் நீருறைந்து வெகு விஸ்தீரணமுள்ள பனிக்குக் கண்டங்களாகவும், அதிக உயரம் வளர்ந்த பனிக்குக் குன்றுகளாகவும் தோன்றும் தோற்றத்தின் சிறப்பை இவ்விடத்தில் எடுத்துரைத்து மாளாது.

மழைக்காலங்களில் வானமுழுதும் கார் மேகப்படலங்கள் கவிழ்ந்து நிற்பதும், அவைகளினடுவே சூரியன் ஒளிமழுங்கிப் பிரகாசிப்பதும், அத்தருணத்தில் ஆகாயத்தில் வில்லையொத்த வளைந்த வடிவமாய் ஊதா, நீலம், இந்திரநீலம், பச்சை, மஞ்சள், ‡செம்பீதம்,

* 'தீயெரி பாஷாணம்' என்றும் சொல்லப்படும்.

†South and North Polar regions ‡ Orange.

சிவப்பு ஆகிய கண்ணுக்கினிய ஏழு வர்ணங்களுடன் காணும் 'இந்திரவில்,' 'இராமர் தனுச,' என்னும் பெயர்களால் வழங்கிவரும் வானவில் தோன்றி மனோகரமாய்ப் பிரகாசித்து நிற்பதுமாகிய காட்சி வெகு ஆனந்தத்தை யளிக்கும்.

தோப்புகள், சோலைகள், வனங்கள், நதிகள் ஏரிகள் முதலிய இவைகளின் காட்சிகளும் மிக அழகானவைகளே. கமுகஞ்சோலைகளும், தென்னந்தோப்புகளும், இதமான குளிர்ந்த காற்றையும் நிழலையுமளித்து, ஆகாயத்தையளாவியிட்ட மரகதப் பந்தற்போன்று விளங்கும். மா, பலா, நாவல், கொய்யா, முந்திரி, கிச்சிலி, எலுமிச்சை, மாதுளை, வாழை முதலிய பழவர்க்கங்களளிக்கும் மரங்களும் செடிகளும் வளருகின்ற தோப்புகளில், அம்மரங்களின் தளதளத்த இளந்தளிர்களாலும், பச்சையான முதிர்ந்த இலைகளாலும் பலவர்ணங்களுடன் விளங்கும் புஷ்பங்களாலும் காய்கனிகளாலும் கண்களுக்கு இனிய காட்சிகளமைவதோடு, புஷ்பங்களால் நாசிகளுக்கினிய நறுமணம் வீசப்பெறுவோம். தேனருந்தும் பிரமரங்களும் சிறு பூச்சிகளும், புள்ளினங்களும் புஷ்பங்கள்தோறு முட்கார்ந்து இன்னமுதுண்டு களித்துப் பலவித ஸ்வரங்களால் பாடுவதும், நிழல்தரும் மரங்களில் உட்கார்ந்து கோகிலங்கள் இனிய பஞ்சமத்தொனியாய் கூவுவதும், கிளிகள், மைனாக்குருவிகள் முதலிய பட்சிகள் கூட்டங் கூட்டமாக மரங்கள்தோறு முட்கார்ந்து உருசியான கனிகளைத் தின்றுகொண்டே கொஞ்சிக் கொஞ்சி வார்த்தையாடுவதும், அணில்கள் கிளைகிளையாய்த் தாவிக்கொண்டு ஓடும்போது செய்யும் ஸ்ரீங்காரத்தொனியும் காதுகளுக்கினிய கானமாகும்.

வனங்களும் வனப்புள்ள தோற்றங்களில் குறைந்தவையல்ல. ஆகாயத்தையளாவி ஓங்கி வளரும் தேக்கு, கருங்காலி, வேங்கை, வாகை, பாதிரி, கடம்பன் முதலிய வலிவுள்ள மரங்களும், சந்தனம், அகில் முதலிய வாசனையளிக்கும் மரங்களும், சண்பகம், புன்னை, சுரபுன்னை, கொன்றை, மகிழம் முதலிய புஷ்பங்கள் தரும் தாருக்களும், பார்வைக்கு மிக அழகாயிருக்கும். அரசு, அசோகம், ஆலமரம் முதலிய அநேக விருக்ஷங்களும், உயர்ந்து வளரும் மூங்கிற் புதைகளும் வனங்களில் யதேச்சையாய் முளைத்து செழிப்புடன் நிற்பது வெகு கம்பீரமான காட்சியாய்த் தோற்றும். இரவில் நிசப்தமாயிருந்து, பொழுது விடிந்தவுடன் பட்டணங்களில் ஜனங்கள் நித்திரை நீங்கி அவரவர்கள் தொழில்களைச் செய்யப் புகுவதால் உண்டாகும் ஆரவாரத்தைப் போலவே இராப்பொழுதில் அரவமின்றி யிருந்த வனங்களும் சூரியோதயமாகவே பட்டணங்களையொத்து ஜீவிதமாகின்றன. காடை, கவுதாரி, மரக்கொத்தி, செம்போத்து, கிளி, குயில், குருவி, புறா முதலிய அநேகவிதப் பக்ஷிகள் அவைகளின் வாசஸ்தலங்களாகிய மரங்களிலிருந்து புறப்பட்டு இனமினமாய்க் கூடி இறை தேடச்செல்லும். யானைகளும், காட்டெருமைகளும், அதிக அழகுற்ற வடிவங்களமைந்த புள்ளிமான், கொம்புமான், கடம்பைமான் முதலிய மானினங்களும், புல்விளை நிலங்களை நோக்கி மந்தை மந்தையாய் மேய்ச்சலின் பொருட்டு புறப்படும். சிங்கம், புலி, செந்நாய், கோனாய், நரி, முதலிய மாம்சபக்ஷணஞ்செய்யும் மிருகங்கள் இரவை எதிர்பார்த்துப் பகலில் உறங்கிக்கிடக்கும். சுற்றிலும் மரங்களும், செழிப்பாய் வளர்ந்திருக்கும் நீர்நிலைகளில் செந்தாமரை, வெண்தாமரை, அல்லி, ஆம்பல் முதலிய புஷ்பங்கள் புஷ்பித்திருக்க, அன்னம், வனவாத்து, நீர்க்கோழி, கொக்கு முதலிய நீர்வாழும் பக்ஷிகள் நீந்திக்களிக்கும் காட்சி வெகு அழகாயிருக்கும். இருபக்கங்களிலும் கண்களுக்கினிய பசும்புற்றரைகளும், பச்சை வர்ணமதில்கள் எடுப்பித்தனபோன்று காட்டு-மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய பலவித அழகிய புஷ்பங்கள் மலரும் கொடிகளும் செடிகளும் இருகரைகளிலும் வெகு அடர்த்

தியாய் செழித்துக்கொழுத்து வளர்ந்திருக்கும் நதிகளில், சிறு மணல்களாலும், பருக்கைக்கற்களாலும், பாறைகளாலும் அமைந்த தரையில் நிர்மலமான பளிங்கையொத்த தெள்ளிய தண்ணீர் சலசலப்புச் சத்தத்துடன் ஓட, ஆங்காங்கே யானைக்கூட்டங்களும், மான் மந்தைகளும் நதியிலிருந்து நீரருந்தும் காட்சி மிக ஆனந்தமாயிருக்கும். சூரிய வெளிச்சத்தைக் கண்டு மகிழ்ந்து, மயிற்கூட்டங்கள் தங்கள் நீண்ட பலவர்ணங்கள் நிறைந்த மிக அழகிய தோகைகளை விரித்து ஆனந்தமாய் நிருத்தமிடுங்கோலத்தை வருணிக்க முடியுமோ! நமது முன்னோர்களாகிய அநேகம் மகா இருஷிகள், நாடுகளிலும் நகரங்களிலும் நாளுக்குநாள் விசேஷமாய் அபிவிர்த்தியாகிவரும் மண்ணாசை, பொருளாசை, பெண்ணாசை முதலிய குறைகளை யொழித்து, அமைதியும் சாந்தமும் முக்கியமாயுள்ள வனங்களின் பெருமைகளை யுணர்ந்தே அவ்விடங்களுக்குச் சென்று நதிக்கரைகளில் பர்ணசாலைகளியற்றிக்கொண்டு, பாபங்களை ஒழித்து, தருமநெறி சார்ந்து பிரம்மஞானிகளாய் வாழ்ந்து வந்தனர்.

மலைகளின் தோற்றங்கள் மிக கம்பீரமானவை. வெகு தூரத்திலிருந்து மலைகளை நோக்கிடில், அவைகள் ஆகாயத்தை யளாவு நீலநிறமாய் ஆகாயத்துடன் கலந்து நிற்கும் காட்சி வெகு அழகாயிருக்கும். மலைகளின் சமீபத்திற் செல்லச்செல்ல அவைகளில் தோன்றும் காட்சிகளின் பெருமை மேன்மேலும் அதிகமாய் விளங்கும். அவைகளில், பசுமையான புல்வகைகளும் செடி கொடிகளும் வளர்ந்திருக்கும் இடங்களும், பச்சைப்பூண்டொன்றுமின்றியில் வெறும் பாறைகளாலமைந்த பாகங்களும், உன்னதமாய் ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்கள் அடர்த்தியாய் விர்த்தியாயிருக்கும் பிரதேசங்களும், வெண்ணிறமுள்ள மேகங்கள் கவிழ்ந்துகொண்டிருக்கும் சிகரங்களும், தெள்ளிய நீரருவிகள் பாயும் பள்ளத்தாக்குகளும், சூரியகாந்தியில் பலவிதவர்ணங்கள் கொண்டு பிரகாசிக்கும் காட்சி வெகு காம்பீரமானதாயும், அழகானதாயும், கடவுளின் பெருமையை வற்புறுத்துவதாயுமிருக்கும். வனங்களைப்போலவே, இப்பிரதேசங்களிலும், அநேகவித மரங்களும், செடி கொடிகளும், புள்ளினங்களும், விலங்கினங்களும், மிலேச்சர்களான மனிதர்களும் உண்டு.

கடவுளின் சிருஷ்டியில் அமைந்திருக்கும் ஒவ்வொரு பொருளையுங்குறித்துத் தீரவிசாரிப்போமாயின், ஒவ்வொன்றிலும் அவர் பேரறிவும், ஞானம், பெருமையும் தெள்ளென விளங்கும். அற்பமான பூச்சிகள், புழுக்கள் முதலியவைகளின் அமைப்பிலும் அவர் பெருமையைக் காணலாம். கோடானுகோடி சீவராசிகள் உற்பவிப்பதும், மரங்கள், செடிகள் முதலியன சிறு பீஜங்களிலிருந்து மிகவும் பெரியதாய் வளருவதும், பூமியினுட்புறத்தில் பொன், வெள்ளி முதலிய உலோகங்களும், வயிரம், மரகதம், நீலம், இரத்தினம் முதலிய கற்களும் உண்டாவதும், ஆகாயத்தில் கோடானுகோடி கிரககோளங்கள் சஞ்சாரஞ்செய்வதுமாகிய, கடவுளின் அற்புத சிருஷ்டிகளின் பெருமைகளை எடுத்து விரித்துச் சொல்ல இவ்விடத்தில் இடங்கொள்ளாது.

சிருஷ்டியில் காணும் விஷயங்களைச் சிறுவர்களும் சிறுமியர்களும் கவனித்துப் பார்த்துப் பார்த்து அவைகளில் விளங்கும் பெருமைகளை யுணர்ந்து, அவைகளின் உற்பத்திக்குக் காரணமாகும் கடவுளிடத்தில் அழியா அன்பு பூண்டு, அவர் மேன்மையையுணருதற் பொருட்டே இவ்விடத்தில் சிருஷ்டியில், சாமானியமாய் யாவரும் கண்டுகொள்ளக்கூடிய பல காட்சிகளைக் குறிப்பாய் எடுத்துக்காட்டப்பட்டது. இவைகளின் அனுசரணையாய் சிறுவர்கள் தாங்கள் பார்க்கும் யாவற்றையும் வெறுங்கண்களுடன் பார்க்காமல் அவதானித்துப் பார்த்து யோஜித்துக்கேட்டறிந்து இன்னும் மற்றும் சிருஷ்டியின் விசேஷமுள்ள பெருமைகளை உணர்ந்துகொள்வார்களென்னும் எண்ணத்துடன் இந்த அத்தியாயம் எழுதப்பட்டது.

BIOGRAPHICAL SKETCHES-III.

MEERA BHAI, THE DEVOUT RANI OF CHITOOR.

சரித்திரமஞ்சரி-3.

மீராபாய் என்னும் புண்ணியவதியின் சரித்திரம்.

'பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.'—குறள்.

I.

நமது இந்தியாவில், 'பஞ்சாப்' தேசத்திற்குத் தெற்காகவும் பம்பாய் இராஜதானியைச் சார்ந்த 'சிந்து' மகாணத்திற்குக் கிழக்காகவும், இராஜபுத்திர அரசர்கள் பல்லோர் அரசாளும், பல சிறிய நாடுகளடங்கிய இராஜஸ்தானம்§ என்னும் தேசமிருக்கிறது. இதில் 'உதயபுரம்' அல்லது 'மீவார்' என்று வழங்கும் ஒரு புராதனமான இராச்சியம் தற்காலத்திலும் சீர் பெற்று விளங்கிக்கொண்டிருக்கிறது. இவ்விராச்சியத்தில் அரசுபுரியும் வேந்தர்கள், இராமாயணத்தின் கதாநாயகராகிய ஸ்ரீ இராமபிரானவதரித்த சூரியவம்சத்தில் பரம்பரையாய் வருபவர்களாகச் சொல்லப்படுவதுடன், மற்ற இராஜபுத்திரவரசர்களிலெல்லாம் மேம்பாடுள்ளவர்களாகவும் மதிக்கப்படுகிறார்கள்.

இம்மாதிரி கீர்த்திபெற்ற உதயபுர இராச்சியத்தில் சற்றேறக்குறைய மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பாக, அக்பர் பாதுஷா டில்லிச் சக்கிரவர்த்தியாய் அரசாண்டகாலத்தில், இராஜநீதி தருமங்களிலும், போர்வலிமையிலும் பேர்பெற்ற 'மகாராணு' † ஒருவர் அரசாண்டுவந்தார். இவருக்குப்பின்னர் பட்டத்திற்கு உரிமையுடையவனும் இளவரசுப்பட்டம் பெற்றிருந்தவனுமாகிய கும்ப சிம்ஹனென்று ஒரு செல்வக்குமாரனிருந்தான். இவனது இன்னுயிர்க்காதலியே இச்சரிதையின் கதாநாயகியாகிய மீராபாய். இவள் இராஜஸ்தானத்திலுள்ள 'நேரதா' (Nerata) என்னும் ஒரு குக்கிராமத்தில் யாவராலும் நன்குமதிக்கப்பட்டிருந்ததோர் நற்குலத்தில் பிறந்தவள். இவள் குலத்திற்குரிய எல்லாவித மேன்மைக்குணங்களும் இவள் சின்னஞ் சிறு பெண்ணாயிருக்கும்போதே இவளிடத்து விளங்கின. 'கண்டவர் மனமுங் கண்ணுங் கவர்ந்திட வனப்புவாய்ந்த' இவள் உருவின் பேரழகிற்கு இணையாகிய பெண்மணி இராஜஸ்தானமெங்கும் அக்காலத்தில் வேறெவரும் கிடையாது. கல்வி, செல்வம், வீரம், தீரம், நற்குணநற்செய்கை முதலியன அமையப்பெற்றவனும் 'கடிமலர்ப் பகழியேந்துங் காமனு நாணும்' கட்டழகமைந்த உருவத்தையுடையனுமாகிய இளவரசனும், மின்னற்கொடியை யொத்த மீராவும், அன்னமும் பேடும்போல ஒருவரையொருவர் மிகவும் நேசித்து வாழ்ந்து வந்தனர். மீராவும் 'தங்கணாயகரிற்றெய்வந்தவம் பிறிதில' வென்பதின் உண்மையை யுணர்ந்தவளாய்த் தனது கணவன் கருத்திற்கிசைந்து நடந்துவந்தாள். மீராவுக்கும் அவள் நாயகனுக்கும் பால்யமுதற்கொண்டே கானம் செய்வதில் அதிகப்பிரியம். அவர்கள் ஒழிந்த நேரங்களையெல்லாம் அரும் பாட்டுகள் இயற்றுவதிலேயும், பாடுவதிலேயும் செலுத்திவந்தார்கள். மீரா இளம்பிராயமுதற்கொண்டே தெய்வபக்தியில் சிறந்தவளாய், கடவுளின் பெருமைகளை யுணர்த்துவதாகிய அநேகம் பாடல்களைத் தனது இனிய குரலால் உள்ளங்கசிந்துருகி ஆனந்த பரவசத்துடன் அடிக்கடி பாடுவது வழக்கம்.

இவ்வாறாகக் காலம் சென்று வருகையில், மூப்புமேலிட்டிருந்த உதயபுரத்து மகாராணுவ

§ Rajaputana.

† மீவார் அரசர்களுக்கு உரித்தாயதோர் பட்டம்.

வர்கள் பரலோகமடைந்தனர். ஆகவே இதுவரையில் தனது உயிர்த்துணைக் காதலியைப் பிரியாது வாழ்ந்துவந்த இளவரசன் அதிக தொல்லையுள்ள இராச்சிய பாரத்தைத் தாங்க வேண்டியதாயிற்று. மீராவோ உதயபுரம் இராணியானவுடன், தெய்வபக்தி மேன்மேலும் அதிகரித்து எப்போதும் கடவுளின் பெருமையின் சிந்தனையிலேயே ஆழ்ந்தவளானாள். இவள் இந்துக்களின் விசேஷமாக வழங்கும் அநேகம் புராண இதிகாசாதிகளையும் நன்றாய் ஆராய்ச்சிசெய்து, அவைகளில் சொல்லியிருக்கும் ஒட்டுவமைச் சரித்திரங்களின் உட்கருத்துக்களாகிய தத்துவ அருத்தங்களைத் தெளிதற வறிந்து, 'அறிவினுக்கறிவாகி யாகந்தயமான ஆதியை' நேசித்து, 'நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச் சுத்தமுமாய்' அனந்த கலியாண குணங்களுடன் சுவப்பிரகாசராய் விளங்கும், அருட்பெருஞ்சோதியாகிய கடவுளின் பெருமைகளை அரும்பாக்களில் இசைத்து இனிது பாடிவந்தாள். இவள் பாடிய பாடல்கள், கடவுளிடத்தில் அழியா அன்பு வைத்தாலல்லது அற்பசுகத்தைத் தருவதாகிய இவ்வுலகவாழ்க்கையை யொழித்து என்றும் அழியாத பேரானந்தத்தை விளைவிப்பதாகிய சுவர்க்க சுகத்தைப் பெறுவது அசாத்தியமென்னுங் கருத்தை உணர்த்துகின்றன.

இவள் இராணியானவுடன், இவ்வுலகவின்பத்திற்கு உரித்தான, விலைபெற்ற ஆடைகளும், மணிகளும், பூணாரங்களும், உல்லாசமாயிருந்து பொழுதுபோக்க வசந்த மண்டபங்களும், கண்ணாடி மண்டபங்களும், பளிங்கு மண்டபங்களும், உத்தியான வனங்களும், உண்டுகளிக்க தேவாமிர்தம்போன்ற அதிக உருசிகரமான பலவித உணவுகளும், இன்னும் மற்றும் யாவும், தான் நினைத்தபடி கிடைக்கக்கூடிய சுயேச்சை யடைந்திருந்தபோதிலும் அவைகளிலொன்றையேனும் அவள் வேண்டினவளல்லள். அரசனும் தனது மனைவியினிடமிருந்த பரிபக்குவ தெய்வபக்தியைக் கண்டு வியந்து அவள் மனம் சென்றவழியே விடுத்தான். மீராபாயிடமிருந்த சம்பூரணமான தெய்வபக்தியினாலும், அதனிறுதியாய் உதயமாகிய ஞானாநுபவத்தினாலும், உலகவின்பத்தைப் பற்றாது அவள் பேரின்பமளிக்கும் வீட்டையடையும் மார்க்கத்தில் செல்ல வாய்ந்தது. அரசிக்குரிய நல்லாடைகளை யுடுக்கப் பலர் வருந்தியும் அவள் அணிந்தவளில்லை, சாமானிய ஆடையுடுத்தே காலம் கழிப்பாள். தன் அரண்மனை விஷயங்களிலாவது, அல்லது மற்றும் வேறு உலக வியாபாரங்களிலாவது, அவள் கொஞ்சமேனும் தலையிட்டுக்கொண்டவளல்லள். நாள்தோறும் இரவும் பகலுமாய்த் தன் தோழிப்பெண்களுடன் சேர்ந்து அரண்மனையிலாவது, அல்லது அதையடுத்த உத்தியான வனத்திலாவது, கடவுளின் நாம சங்கீர்த்தனங்களை அவள் பாடிப்பாடி ஆனந்தக்கூத்தாடுவது வழக்கம். அவள் இயற்றிய பாடல்களின் சொற்சுவையும், பொருட்சுவையும் மிகச் சிறந்தது; அவளது கண்டத்தின் ஒலியோ கோகிலத்தின் பஞ்சமத்தொனிக்கு இசைந்ததாகவிருந்தது. கருணாரசத்தை விளைவிக்கும் அவள் பாடும் மாதிரியானது, அவளது இருதய கமலத்திலிருந்து அன்புவெள்ளம் பெருக்கெடுக்கச்செய்து, அவள் பாடலைக் கேட்கும் மற்றோர் மனத்தையும் கொள்ளைகொண்டு, அனலிலிட்ட மெழுகுபோலும் உள்ளமுருகச் செய்து, கருணாநிதியாகிய கடவுளிடத்து மெய்யன்பு பூண்டு, ஆனந்தபரவசக்களிப்பையடையச்செய்யும்.

'எழுது சித்திரம்போன் மன்னியிழுமெனு மருவியோசை
முழவொலி கஞ்சநாதம் வலம்புரி முரலுமோசை
யொழுகிசை வண்டின்றாரி பொனவிசைச்குணனும் வோல்
விழுமிலை சொன்மீன்மேல் வீழ் வீழ்ச்சிபோற் பாடற்
[பண்பும்'

'பொருந்த மந்தரத்திநோடு மத்திமைதாரம் போக்கித்
திருந்திய அள்ளலாங்கன் மெலிவது சிறப்பச்செய்து [றும்
மருந்தன செய்புனோசையிசையோசை வழாமல் யார்க்
கிருந்தனச் செவியின் மார்க்கப்பாமனர் வேதநீர்.'

[illegible]வர்முதலியவற்றில் சித்திரக்காரர்) எழு[illegible] சித்திரப்பாவைபோல் அசையாமலிருந்து, இழுமென்று இனிமையாக வொலிக்கின்ற நீரருவியினது ஓசையும், மத்தளத்தினோசையும், வெண்கலக் கருவியினோசையும், வலம்புரிச் சங்கு ஒலிக்கின்றவோசையும், மலர்களை மூக்கினால் உழுது பாடுகின்ற வண்டினது குரலுமாகிய இவைபோன்ற இசையினது பண்புகளும், —மூங்கிலினின்று விழுகின்ற இலையினது வீழ்ச்சியும், மீன் கொத்திப்பறவை மீனின் மேல் விழும் விழுச்சியுமாகிய இவைபோல பாடுதலினது குணங்களும், — இசையும்படி, படுத்தலோசையும், சமனோசையும், எடுத்தலோசையுமாகிய இவை மூன்றிலடக்கி, சுத்தமான துள்ளலோசையும், தூங்கலோசையும், மெலிவோசையுமாகிய மூன்றும் சிறந்து நிற்கும்படி செய்து, தேவாமிர்தத்தோடொத்த பாடலினோசையும், பண்ணினதோசையும், ஒன்றோடொன்று மாறுபடாமல் எல்லோர்க்கும் விருந்தினர்க்கிடும் உணவுபோலக் காதுகளினாற்பருகும்படி வேதாந்தத்துவார்த்தங்களை யுணர்த்துவதாகிய கீர்த்தனங்களைப் பாடுபவளாகிய மீராபாய் இனிமையான கானம் செய்தனள்.

மீராபாய் பாடும்போதெல்லாம் அவள் சேடிப்பெண்கள் கூடப்பாடியும், அவள் ஆனந்தக்கூத்தாடும்போதெல்லாம் அவர்கள் ஆடியும் மெய்ம்மறந்து பரவசமாவார்கள்.

இப்படியாகக் கொஞ்சகாலம் செல்லுகையில், மீராவுக்கு அரண்மனையினுள்ளே அடைந்து கிடப்பது மிகவும் நிர்ப்பந்தமாகவிருந்தது. மற்றோர் மானிடருக்கும் கடவுளிடத்து அழியா அன்பு பூணுதலாகிய இன்னமுதை யூட்டுவிக்க எண்ணமுற்றோருக்கு, கூட்டிலடைத்த பறவையென்ன, ஓரிடத்திலேயே அடைந்துகிடக்க மனம்வருமோ? மீராபாய் தினந்தோறும் கோவிலுக்குப்போய், அவ்விடத்தில் உபாஸனா மூர்த்தியாய் அமைக்கப்பட்டுள்ள பிம்பத்தின் முன்நின்று, 'உண்ணிறைந்த பேரன்பாலுள்ளுருகி மொழிகுளறி உவகையாகிக் கண்ணிறைந்த புனலுகுப்பக் கரமுகிழ்ப்ப,' கடவுளின் பெருமையை நினைத்து நினைத்து, ஆனந்தக்கூத்தாடுவாள்; தனது தீங்குரலால் இனிமையாய்க் கடவுளின் அருமைப் பெருங்குணங்களைப் புகழ்ந்து பாடுவாள். இவள் பாடுதலைக்கேட்டோரில் இவளிடத்திலும் கடவுளிடத்திலும் அன்புகொள்ளாதாரில்லை. இவள் கோயிலுக்குப்போம்போதெல்லாம் நூற்றுக்கணக்காயும், ஆயிரக்கணக்காயும், ஆடவரும், பெண்டிரும், வயோதிகரும், குழந்தைகளும் இவளைப் பின்பற்றிச்சென்று இன்னமுதாகிய கானத்தை உட்கொண்டு மெய்ம்மறந்து களிப்படைவார்கள். இவ்வாறாக இவள் இருப்பிடம் கோவில்களும் மடங்களுமாயின.

இப்பெண்மணியின் அபூர்வ தெய்வபக்தியின் பெருமை நாடெங்கும் பரவத்தொடங்கிற்று. டில்லிச் சக்கிரவர்த்தியாகிய அக்பர் மீராவின் பெருமையையும், அவள் கானத்தின் சிறப்பையும் கேள்வியுற்று, அவளை நேரில் காணவும், அவள் கானத்தைக் கேட்டு மகிழவும் வேண்டுமென்று அதிக ஆவலுற்றான். அக்காலத்தில் சித்தூர் அல்லது மீவார் இராச்சியம் மொகலாயர் ஆட்சிக்கு உட்படாதிருப்பினும், மகாராணா அவனுக்கு அதிக பகைவனல்லாதிருப்பினும், ஒரு இந்து ஸ்திரீயை, அதிலும் ஒரு மகாராணியை நேரில் காண்பது அசாத்தியமான காரியமென்று மயங்கினான். இராஜபுத்திரர்கள் தங்கள் ஸ்திரீகளை அதிக கௌரவமாக நடத்தப்பட்டவர்களென்றும், தங்கள் ஸ்திரீகளுக்கு மானக்குறைவானது ஏதாவது நேரிடும்பக்ஷத்தில், தங்கள் உயிர்களையும் பாராட்டாமல் கொடும்போர் புரிந்தேனும் அவர்களைக் காக்கத் துணிந்தவர்களென்றும் நன்றாக அறிந்தவன். பதின்மூன்றாம் நூற்றாண்டின் கடைசியில், அல்லா உடீன் என்னும்

மகம்மதியவரசன் அரசாக்ஷிசெய்தகாலத்தில் அவன் அக்காலத்துச் சித்தூர் ராணியைப்பார்க்க விரும்பியதால் விளைந்த அனர்த்தங்களையெல்லாம் அறிந்திருந்தான். அப்பொழுது அல்லா உடீன் இராஜஸ்தானத்தின்பேரில் படையெடுத்துச்சென்று, சித்தூரை முற்றுகையிட்டு கொடும்போர் புரிந்தபோது இராஜபுத்திரர் மானங்காக்கவேண்டுமென்றெண்ணி அஞ்சாநெஞ்சராய் ஆண்மையோடு யுத்தம் செய்த சங்கதியும், இராஜபுத்திரர் மகம்மதியர் பெருஞ்சேனையை எதிர்க்கமுடியாதென்று கண்டவுடனே, மீவார் மகாராணியாகிய பத்மினி முதலிய ராஜபத்னிகளும், மற்றும் உயர்குலத்துப் பெண்களும் கற்பைக் காக்கும் பொருட்டு காஷ்டமேறி உயிர் துறந்த சங்கதியும், ஆடவரிலனேகர் கையில் கத்திபிடித்துக்கொண்டு எதிரிகள் கும்பில் புகுந்து தாம் மடியுமட்டும் சண்டைசெய்த சங்கதியும், ஆக்பர் அறிந்திருந்தான். ஆகவே அவன் மீராவை பகிரங்கமாய் நேரில் கண்டு அவள் கானத்தைக் கேட்க யத்தனிப்பானானால் இராஜபுத்திரருக்கும் மகம்மதியருக்கும்பெரிய யுத்தத்தை யுண்டாக்குவதாகுமென்று துணிந்து, தனது முக்கிய பாடகனை வருவித்து தானுமவனுமாக இந்து சந்நியாசிக்குரிய காஷாயவுடைதரித்து, வேற்றுருக்கொண்டு மீராபாய் தினந்தோறும் வந்துபோய்க்கொண்டிருந்த சித்தூர்க்கோவிலிற்குச்சென்று, அங்கேதான் இன்னாரென்று யாவரும் அறியாமலே அவளைக்கண்டு, கானத்தையும் கேட்டுவருவதே யுக்தமானதென்று தீர்மானஞ்செய்தான்.

அவ்வாறே அவ்விருவரும் மாறுவேஷமணிந்து ஓர்தினம் சித்தூர் கோவில்வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில் சேடியர் பல்லோர் புடை[illegible]ழ்ந்து பரவசமடைந்து நிற்கவும், மற்றோர் [illegible]கையரும் ஆடவரும் இவளீந்த கானமாகிய இன்னமுதமருந்தி, தேனுண்ட மந்திசனென மயக்குற்று மெய்மறந்து நாற்புறமும் சுற்றி நிற்கவும், அவர்களின் நடுவே மீராபாய் உள்ளமுருகி மெய்யன்புடன் பாடித், 'தன் சேர் கோலத்தின் னெழில்காணச் சதகோடி மின் சேவிக்கமின்னர சென்னும்படி' நின்ற கோலத்தையும் கண்டு, சக்கிரவர்த்தி அதிக வியப்படைந்து, மற்றவரடைந்த மயக்கத்தைத் தானுமடைந்து ஆனந்த பரவசமானான். கல்லினும் கடிய நெஞ்சினர் மனத்தையும் கவர்ந்து, கசிந்துருகச்செய்யும் கருணாரசமுள்ள அவள் கானத்தின் அன்பின் பெருக்கினால், மகம்மதியனாகிய ஆக்பர் மனம் குழைந்துருகி, தன் மதக்கோட்பாடுகளையும் ஒரு க்ஷணம் மறந்து, ஆனந்தமேலிட்டு, மீராபாயின் பாத கமலங்களில் அடியற்றமரம்போலும் விழுந்து, 'கருணைப்பெருக்காகிய பெண்ணரசியே, கடைத்தேரலுற்று மெய்யின்ப வீடாகியபேரின்பமடையக் கடையேனுக்கும் ஓர் வழிபுகட்டாயோ' வென இரந்து வேண்டிக்கொண்டான். உடனே அவன் தன் மத அனுசரணைக்கு மாறுபாடாய் நடந்ததை யுணர்[illegible] தரையை விட்டெழுந்து நின்று தன்[illegible]யில் மறைத்துவைத்திருந்ததோர் விலையேறப்பெற்ற மாணிக்கங்களாலாகிய மாலையை மீராபாயிடம் கொடுத்து, 'யாவராலும் பூஜித்தற்குரிய மங்கையற்கரசியே நாயேன் ஈந்த இவ்வற்ப கொடையாகிய மாலையை நினதன்பிற்கு அன்பாகக்காணும் கடவுளின் பிம்பத்திற்கு அணிவித்து இன்பமுறுவாய்,' எனப் பகர்ந்தனன்.

LIQUID AIR.

காற்றுத்திராவகம்.

நாம் புராணாதிகளிலும் கட்டுக்கதைகளிலும் அனேகவிதமான வித்தைகள் சிலர் செய்ததாக படித்தும் கேட்டுமிருக்கிறோம். மயில்ராவணன், வாலி முதலானவர்களும், சுக்கிரீவன், அனுமார் முதலானவர்களும், பீமசேனன் அருச்சுனன் முதலானவர்களும் செய்ததாகச் சொல்லியிருக்கும் அற்புதமான செய்கைகளெல்லாம், இந்த நாளில் வாஸ்தவமாக நடக்கும் ஆச்சரியங்களுக்கு முன்னிலையில் அபூர்வமானவைகளல்லனபோல் தோன்றுகின்றன. அசாத்தியமான காரியங்களென்று நினைக்கும் அவைகள் இப்போது சாத்தியமாகி விடுகின்றன. வித்தைகள் செய்வது ஜனங்களை மயக்குவதற்காகவல்ல. அவைகளால் உலகத்திற்கு வெகுவிதமான உபயோகங்கள் கிடைக்கின்றன. ரயில்வண்டியென்ன, தந்தித்தபாலென்ன, இவைகளின் ஆச்சரியத்தை யளவிடக்கூடாதென்றால், சென்னபட்டணத்தில் நெருப்பும் புகையுமில்லாமல்தெருத் தெருவாக வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. தந்தித்தபால் செல்லுவதற்காக, இரும்புக்கம்பங்கள் நாட்டி அவைகள்மேல் கம்பி போகிறது. அந்தக்கம்பியின் வழியாகத்தான் மின்தபால் செல்லுகிறது. ஆயிரம்மயிற்கப்புறம் இருக்கிறவர்களிடமிருந்து சமாசாரம் நிமிஷத்தில் வருகிறது இனிமேல் அந்தக்கம்பமும் வேண்டாம்போலிருக்கிறது: கம்பியும் வேண்டாம் போலிருக்கிறது. 15-வருஷங்களுக்கு முன்னாலே ஐரோப்பா[illegible] ஒரு வித்வான் கம்பமும் தந்திக் கம்பியுமில்லாமலே, ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு தந்தி சமாசாரம் அனுப்பலாமென்று சொல்லி அதையும் பண்டிதர்களுக்கு நிரூபணம் செய்து காட்டினார். இப்பொழுது கோட்டை மைதானத்தில் அக்கருவி ஆகாசமளாவி நிற்கிறது. இத்தேசத்திலும் தந்திக்கம்பங்களும் தந்திக் கம்பியும் இல்லாத மின்தபால் சமாசாரம் போய்வரக் காண்கிறோம். இவைகளையெல்லாம்பற்றி இப்போது சொல்ல அவகாசமில்லை. இவைகளைப்போன்ற இன்னொரு ஆச்சரியமான விஷயத்தைப்பற்றிப் பேசுவோம். அதாவது நம்மேல் அடித்து வீசிக்கொண்டிருக்கும் காற்றைத் திராவகமாக இறக்கி யிருக்கிறார்கள். அந்தத் திராவகத்தை வைத்துக்கொண்டு நெருப்பு கரி புகை யொன்றுமில்லாமல் ரயில் கப்பல் இவை ஓட்டலாம் போலிருக்கிறது. அதைப்பற்றிச் சொல்லுவோம்.

காற்றையாவது திராவகமாக இறக்கவாவது! வாயுபகவானை வருணனாகமாற்றி ஜயிலில் போட்டாற்போல சீசாவில் அடைக்கவாவது! இதெல்லாம் நம்ப முடியாததாகவே தோற்றும். ஆனாலும் அவ்வாறு செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்வது எப்படி சாத்தியமென்று யோசிப்போம். இப்போது கொஞ்சம் தண்ணீரை யெடுத்து அதை அடுப்பில் வைத்துக் காய்ச்சினால், அது ஆவியாகக் கிளம்பிப்போகிறது. இதை நீராவியென்று சொல்லுகிறோம். அந்த நீராவியினால் தான் ரயில்வண்டிகளும் புகைக் கப்பல்களும் ஓடுகின்றன. அந்த நீராவியே கொஞ்சம் குளிர்ந்தால் தண்ணீராக மாறிவிடும். சமையல் செய்வதற்காக அடுப்பில்வைக்கும் பானையின்மேல் மூடியிருக்கும் பாத்திரத்தின் அடியில் நீராவி தங்கியிருக்கும் அந்த மேல்பாத்திரத்தை வெளியில் எடுத்தவுடனே அதிலிருந்து சொட்டுச்சொட்டென்று ஜலம் விழுவதை நாமெல்லாரும் கண்டிருக்கிறோம். அந்த ஜலமானது ஆவியிலிருந்தே யுண்டாகிறது. தண்ணீரைக்காய்ச்சினால் ஆவியாக மாறுகிறது. ஆவிகுளிர்ந்தால் தண்ணீராக மாறுகிறது. சாதாரணமான தண்ணீரைச் செவ்வையாகக் குளிரும்படிச்செய்தால் பனிக்கட்டியாகவுறையும். இங்கிலாந்து முதலான குளிர் தேசங்களில், குளிர்நாளில் தண்ணீர் உறைந்து கட்டியாகும். மழையே கட்டியாகப்பெய்யும். நம்முடைய தேசத்திலேயே இமயமலையின் மேல் தண்ணீர் உறைந்து பாறையாகவே நிற்கும். பாறைபோலிருக்கும் பனிக்கட்டி உரு

கித் தண்ணீராக கங்கை முதலிய ஆறுகளில் பிரவாகிக்கின்றது. அவ்வளவு தூரம் போகாமலே பனிக்கட்டியை - அதாவது தண்ணீர்க் கட்டியை - சென்னபட்டணத்தில் தெருத் தெருவாக விற்கக்காணலாம். ஜலத்தைக் கட்டியாக மாற்ற இயந்திரங்களிருக்கின்றன. அவைகளால் தண்ணீரைப் பாறை பாறையாக உறைத்து ரயில் மார்க்கமாகவும் வெவ்வேறு ஊர்களுக்கு அனுப்புகிறார்கள். ஒரு கட்டியைத் தண்ணீரில் போட்டால் தண்ணீர் ஜில்லென்று போகிறது. இப்பனிக்கட்டி கோடைகாலத்தில் தண்ணீர் ஜிலுஜிலுப்பாயிருக்கிறதற்காகவும் இன்னும் சில காரியங்களுக்கும் உபயோகிக்கப்பட்டுவருகிறது.

இதனால் நமக்கு என்ன விளங்குகிறதென்றால்: தண்ணீரானது, உஷ்ணம் அல்லது குளிர் சேர்ந்தால் வேறுவேறாக உருவம் மாறுமென்பது தெரிகிறது. சாதாரணமாகத் தண்ணீராக விருக்கும்போது திரவமாயிருக்கிறது. அந்தத் தண்ணீரைக் காய்ச்சினால், அது உஷ்ணத்தை ஏற்றுக்கொண்டு, அதனால் உருவம் மாறி ஆவியாகிறது. தண்ணீரைக் குளிரச் செய்தால், அதாவது, அதின் உஷ்ணத்தை யெடுத்துவிட்டால், தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்து கடினமாகிவிடும். நம்முடைய தேசத்தில் தண்ணீரானது ஆறுகளிலும் வாய்க்கால்களிலும் ஓடிக்கொண்டிருப்பதும், குளங்களிலும் கிணறுகளிலும் தங்கியிருப்பதும் நமக்கு சாதாரணமாகத் தெரிந்தகாட்சி. பனிக்கட்டியைப் பார்க்காதவர்களோடு தண்ணீர் சில விடங்களிலும் சிலகாலங்களிலும் கட்டியாயுறைந்துபோகுமென்று சொன்னால் அவர்கள் அதை நம்பமாட்டார்கள். அப்படியே இமயமலையினுச்சியிலேயே வசிக்கும் ஒருவனுக்குத் தண்ணீரே தெரியாது. பாறையாயிருக்கும் பனிக்கட்டி தண்ணீராகிறதென்று சொன்னால் அவன் நம்பமாட்டான். அப்படியே பூமியின்மேரில் மிகவும் அதிக உஷ்ணமான தேசமிருக்கிறதாக நினைப்போம். அதில் உஷ்ணம் அசாத்தியமாயிருந்தால் ஜலம், தண்ணீராக விருக்க முடியாமல் ஆவியாகத்தானேயிருக்கும் [illegible] போது பூமியில் அப்படிப்பட்ட விட[illegible] பூமி சிருஷ்டிக்கப்பட்டபோது, வெகு வெகு காலங்களுக்கு முன்னாலே பூமியில் தண்ணீரேயில்லாமல், நீராவிதானிருந்ததாகப் பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அந்தக்காலத்து மனுஷன் ஒருவன் இருந்தால் அவன் நீராவி தண்ணீராக எப்படி மாறுமென்று கேட்பான். இப்போதும் சூரியமண்டத்தி லொருவனிருந்தால் அவன் தண்ணீரையே அறியமாட்டான். அவனுக்கு ஆவிதான் தெரியும். அவ்வாறே காற்றை கண்ணுக்குத்தெரியாத ஆவிரூபமாகவே யறிந்திருக்கும் நமக்கு அது ஜலரூபமாக மாறுமென்றால் நம்புவது கஷ்டம். இவ்வாறு பல உருவமடைவது தண்ணீர் மாத்திரமல்ல. நெய், தேங்காயெண்ணெய், இலுப்பையெண்ணெய் இவைபோல்வன குளிர்காலத்தில் கட்டியாகத்தோய்ந்து போகிறதும், கோடைகாலத்தில் உருகுகிறதும் நம்மெல்லாருக்கும் தெரியும். கட்டியாய் இருக்கிற ஈயத்தை உலையில் வைத்துக் காய்ச்சினால் உருகுகிறது. அப்படி உருகின ஈயத்தை இன்னம் காய்ச்சினால் அது புகை, அதாவது, ஈய ஆவியாகக் கிளம்புகிறது. நம்முடைய கருமான் உலையில் கிடைக்கக்கூடிய உஷ்ணத்தினால் அநேக கடினபதார்த்தங்களை உருக்கமுடியாது. இரும்பை உருக்கமுடியாது. கருங்கல்லை உருக்கமுடியாது. அவைகளுக்குத் தகுந்த உஷ்ணம் கொடுத்தால் உருக்கக்கூடும். வெள்ளைக்காரர்கள், இரும்பு கருங்கல் இவைகளைக்காட்டிலும் கடினமாயுள்ள வஸ்துக்களையும் எளிதில் உருக்கும்படியாய்ச்செ[illegible]கிறார்கள். காலாக்கினிபோல் எரிக்கும்[illegible]யான உலைகளில் உருகாத வஸ்து அநேக[illegible] ஒன்றுமில்லை. அவ்வாறே குளிர் உண்டாக்க வேண்டுமானால் பல உபாயங்களாலுண்டாக்குகிறார்கள். குளிரென்று தனியாக ஒன்றுமில்லை. ஒவ்வொருவஸ்துவினும் உஷ்ணமிருக்கிறது. இரண்டு கல்லை அடுப்பில் போட்டு அதிலொன்றை வெளியில் வைத்து விட்டால் அது மற்றொன்றைக் காட்டிலும் குளிர்ச்சியா

[illegible]ருக்கிறதாகச் சொல்லுகிறோம். அதாவது, [illegible]ப்போலிருந்த அதின் உஷ்ணம் [illegible] அதனால்தான்குளிர்ந்தது. ஜலத்தில் [illegible]வைத்தால் விரல் குளிர்ந்துபோகிறது. ஏனென்றால் குளிர்ந்த ஜலத்தில் உஷ்ணம் விரலைக்காட்டிலும் குறைவானதால் விரலின் உஷ்ணத்தை ஜலம் இழுத்துக்கொள்ளுகிறது. அதனால் அதனுஷ்ணமும் கொஞ்சம் அதிகப்படும்.

பலவிதமாகக் குளிர் உண்டுபண்ணலாம். தண்ணீரில் கொஞ்சம் ஸோடா உப்பைக்கரைத்தால் அது கொஞ்சம் ஜில்லென்றுபோய்விடும் நவச்சார உப்பைக் கரைத்தாலுமப்படியே. இப்படியே வேறு உபாயங்களால் அதிகக் குளிர் உண்டாக்கலாம். பனிக்கட்டியைக் கொஞ்சம் உப்போடுகலந்து இடித்தால் பனிக்கட்டியைக் காட்டிலும் நிரம்பக்குளிராகும். இப்படிப்பட்ட குளிரெல்லாம் கையினாலிவ்வளவென்று அறியமுடியாது. கட்டைத்தணலில் கையைவைத்தாலும் கைசுட்டுக் கொப்பளித்துப்போகிறது. பழுக்கக்காய்ந்த கரண்டிக்காம்பில் வைத்தாலுமப்படியேபோகிறது. இவை இரண்டில் எது உஷ்ணம் ஜாஸ்தி எது குறைவு என்று சொல்லுவது முடியாது. அப்படியே குளிரையும் கையினால்பார்த்து அளவிடமுடியாது. இவைகளை அளவிட சில கருவிகளுண்டு. அவைகளால் எளிதிலறியலாம்.

ஈயத்தை உருக்குவதற்கு வேண்டிய உஷ்ணத்தைக்காட்டிலும் இரும்பை உருக்குவதற்கு எப்படிஜாஸ்தியான உஷ்ணம் வேண்டியிருக்கிறதோ அப்படியே வெவ்வேறு ஆவி[illegible] திராவகயாகக் காண்பதற்கு சிலவற்றிற்[illegible]கொஞ்சமானகுளிரும் சிலவற்றிற்கு அதிகமான குளிரும் வேண்டியிருக்கிறது. நீராவி சுலுவாய்த் தண்ணீராகும். நாம் சுவாசம்விடும் காற்றைத் திராவகப்படுத்த வெகு அதிகமான குளிர் வேண்டும். அதிகமான குளிர் உற்பத்தி செய்யும்விதம் கண்டுபிடித்ததுமுதல் நவீனதத்துவசாஸ்திரிகள் பற்பல வாயுக்களைத் திராவகமாக இறக்க முயன்றார்கள். பல வருஷங்களுக்கு முன்னாலே நாம் விடும் மூச்சுக்காற்றை திராவகமாக்கினார்கள். அந்த மூச்சுக்காற்றைத்தான் கார்பானிக்வாயு (Carbonic acid gas) என்று சொல்லுவார்கள். சுண்ணாம்புக்காளவாயில் சுண்ணாம்புக்கல், கிளிஞ்சல் இவைகளைப்போட்டு எரித்தால் அதிலிருந்து கிளம்புகிற வாயுவும் இதுவே. அந்தப்புகையில் நாம் நின்றால் மூச்சுவிட முடியாமல் திக்குமுக்காடிச் செத்துப்போவோம். பெரிய தீவர்த்தி அல்லது எரிபந்தங்களை அந்தப்புகையில் காட்டினாலும் அணைந்துபோய்விடும். அந்தக் காற்றைத் திராவகமாகச்செய்து கெட்டியான கண்ணாடிசீசாவில் அடைத்து பெரிய கட்டடங்களில் தொங்கவிட்டிருப்பதைப் பார்க்கலாம். பார்வைக்குத் தண்ணீரைப்போலே காணப்படுகிறது. ஆனால் தண்ணீரைக்காட்டிலும் இலேசானதாகத் தெரிகிறது. கட்டடங்கள் நெருப்புப்பிடித்துக்கொண்டால் இந்த திராவகக்குப்பிகளை நெருப்பிலெறிந்தால் குப்பிவெடித்து அதிலடங்கியிருந்த திராவகம் கார்பனிக் வாயுவாகமாறி நெருப்பைத்தணிக்கும். கால்சேருள்ள திராவகத்திலிருந்து அசாத்தியமான ஆவி கிளம்பும். அது சுவாலையை அவிக்கும்.

அந்த வாயுவை (Carbonic acid gas) எப்படித் திராவகமாக மாற்றியிருக்கிறார்களென்றால்: முதலாவது, நாம் முன்னே கண்டபடி அதற்குவேண்டிய தகுந்த குளிர் வேண்டும். குளிர்மாத்திரம் போதாது அத்துடன் காற்றைக் கடினமாய் நெருக்கினால் திராவகமாகும். காற்றை எப்படி நெருக்குகிறது? அது கையிலகப்படுமா? என்று கேட்கலாம். கெட்டியான இரும்புப் பாத்திரத்தில் காற்றையடைத்து அதன் மூடி அந்தப்பாத்திரத்தில் நகரக்கூடியதாக விருக்கிறதென்று நினைப்போம். மூடிமேல் இயந்திரத்தினால் அதிக பளுவைத்துத் தாக்கினால், அது நகர்ந்து, பாத்திரத்திற்குள் காற்றிருக்குமிடம் குறையும். சிறுபையன்கள் பாவட்டங்குழாய் என்று வைத்துக்கொண்டு, ஒரு சின்ன மூங்கில் குழாயின் வ[illegible]

காய், கல்லு, கடுதாசியுண்டை இவைகளைத் துப்பாக்கி மாதிரி விடுகிறதைப் பார்த்திருக்கிறோம். அந்தக் குழாயை நுனியில் விரலால் அடைத்துக்கொண்டு மேல்கொம்பை அழுத்தினால் குழாய்க்குள்ளகப்பட்ட காற்றுத் தன் உருவம்குறைவதைப் பார்க்கலாம். இப்படியே யந்திரமூலமாய் அதிக நெருக்கத்தை உண்டாக்கலாம். காற்றடைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தைச் சுற்றி நாம் முன்னே சொன்ன அதிக குளிருண்டாக்கும் பதார்த்தத்தைவைத்தால், உள்ளேயிருக்கும் காற்றுத் திராவகமாக மாறிவிடும். இப்படிச் செய்யக்கூடுமென்று பல வருஷங்களுக்கு முன்னேயே அறிந்திருந்தபோதிலும் அதற்கு வேண்டிய குளிரும் நெருக்கமும் கிட்டாதபடியால், வெகுநாள் வரையில் அப்படிச்செய்ய முடியாமலேயிருந்தது. காற்றைத் திராவகமாக இறக்கமுடியாதென்றே முதலில் நினைத்தார்கள்.

ஆனால் யுக்தியும், வேண்டியசாதக சாதனங்களும் அதிகமாகவே, முன்னாலே திராவகமாக மாற்றமுடியாதென்று நினைத்திருந்த வாயுக்களையெல்லாம் ஒவ்வொன்றாக திராவகமாய் மாற்றிவிட்டார்கள். நாம் சுவாசத்தில் உட்கொள்ளும் (Oxygen) பிராணவாயுவென்று சொல்லும் காற்றை வெகு சிரமப்பட்டு பல வருஷங்களுக்குமுன்னாலே நீராக்கினார்கள். பனிக்கட்டிபோல் சிறு கட்டியாகவும் மாற்றினார்கள். அதற்கு கொஞ்சகாலம் பின்னாலே நம்மைச் சுற்றியிருக்கும் நம்மேல் வீசும் காற்றையும் திராவகமாக இறக்கமுடிந்தது. இப்படி திராவகமாக இறக்க ஆதியில் வெகுபணம் சென்றது. ஆகையால் அந்தத் திராவகத்தால் வேடிக்கையைத் தவிர வேறே உபயோகத்தையடைய முடியவில்லை. இப்போது சில வருஷங்களுக்கு முந்தி இந்நூற்றாண்டின் முதலில் ஒரு பெரிய பண்டிதர் அதிகபணமே செலவில்லாமல் காற்றுத்திராவகத்தை குடங்குடமாக இறக்கலாமென்று காட்டியிருக்கிறார். நாம் மேலே கார்பானிக்வாயுவை எப்படி திராவகமாக மாற்றலாமென்றோமோ அப்படியே இதையும் மாற்றலாம். வெகு பலத்தோடு நெருக்கப்பட்ட காற்றைச்சுற்றி அதிக[illegible] உண்டாக்குவதோடு கூட, அடைபட்[illegible] மெல்லியகுழாய் வழியாய் வெளியில் [illegible] படி விட்டால், கொஞ்சம் காற்றுப்போனவுடன், பாக்கியிருக்கிற காற்று தண்ணீராகப் போய்விடும்; இன்னும் கொஞ்சம்போனால் சிறு சிறு கட்டியாகக்கூடமாறும்.

இப்படி சம்பாதித்த காற்றுத்திராவகத்தின் குளிர்ச்சி எவ்வளவென்று அளவிடக்கூடுமாவென்று பார்ப்போம். உஷ்ணத்தையளக்கிறதற்கு சில பரிமாணங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். துணியளக்க முழத்தைப்போலவும், அரிசியளக்கப் படியைப்போலவும், உஷ்ணத்தை இவ்வளவு 'டிக்ரி' (Degree) என்று சொல்லுவார்கள். இக்காலத்தில் நம்மேலடிக்கும் காற்று 96-டிக்ரி. பனிக்கட்டி 32-டிக்ரி. அதாவது இந்தக் கோடை காலத்திலுள்ள நீரிலிருந்து 64-டிக்ரி உஷ்ணத்தைக் குறைத்தால், அது பனிக்கட்டியாகிவிடும். பனிக்கட்டியின் உஷ்ணத்தை 344-டிக்ரி குறைத்தால் காற்றுத் திராவகத்தின் குளிர்ச்சியின் அளவாகும்! அது எப்படிப்பட்ட குளிர்ச்சியென்று நாம் மனதினால் கூட அளவிடமுடியாது! பனிக்கட்டியைச் சற்றுக் கையில்வைத்துக்கொண்டால், கை தேள்கொட்டுகிறதுபோல் கடுக்கிறது. காற்றுத் திராவகத்தில் விரலைவைத்தால் விரலப்படியே கொப்பளித்துக் கருகிப்போய்விடும். அது பட்ட இடத்தைத்தவிர வேறேயிடங்களில் நின்றுகொண்டு போகாததினால், அதை ரணவயித்தியத்தில் வெகுவாய் உபயோகப்படுத்தக்கூடும். கட்டிச்சிரங்கு, புத்து[illegible]களின்மேல் ஒரு பொட்டுத் திராவக[illegible]டால் அவை அப்படியே செத்துக்கருகிப் போய்விடும். ரசத்தின்மேல் கொஞ்சம் திராவகத்தைப்போட்டால், ரசமப்படியே பாறையாக வுறைந்துபோகிறது. அந்த ரசப்பாறையால் கருங்கல்லைக்கூட உடைக்கலாமாம். உலகத்திற்கு இந்த திராவகத்தால் பெரிய உபயோகமுண்டாகலாமென்று தோன்றுகிறது.

[illegible]த இறக்கத்தலைப்பட்டவர் ஒரு வண்டி [illegible]கிறார். அது தானாகவே திராவகத்[illegible]றது. எப்படியென்றால் கொஞ்சம் திராவகத்தை யடைத்துவைத்தால் அது சுற்றியிருக்கும் காற்றைக் காட்டிலும் வெகு குளிர்ச்சியாயிருப்பதால் பக்கத்திலிருக்கும் உஷ்ணம் தாங்காமல் ஆவியாக வெளியில்கிளம்ப யத்தனித்து வண்டியைத்தள்ளுகிறது. தண்ணீரை அடுப்பில் வைத்துக்காய்ச்சினால் அதிலிருந்துண்டாகும் நீராவி எவ்வாறு வெளிக்கிளம்பிப் போகப்பார்க்கிறதோ அவ்வாறே இதுவும். ஆனால் தண்ணீருக்கு நெருப்புப்போட்டு எரிக்கவேண்டியிருக்கிறது. இதற்கோ நெருப்பே வேண்டியதில்லை. அதைச்சுற்றியிருக்கும் காற்றேபோதும். அது அதற்குப் பெரியநெருப்பு. ரயில்வண்டிகளிலும் புகைக் கப்பல்களிலும் நீராவியை உண்டுபண்ணி அதனால் அவைகளை எப்படி ஓட்டிவைக்கிறார்களோ, அப்படியே காற்றுத் திராவகத்தால் ஓட்டிவைக்கலாமென்று தோன்றுகிறது. அப்படியானால் ரயிலுக்கு நெருப்பு வேண்டியதில்லை; கட்டை, கரியும் வேண்டியதில்லை. இவைகளில்லாமலே ஓடக்கூடுமென்று நினைக்கிறார்கள். இன்னும் ரயில்வண்டிக்கும் புகைக்கப்பல்களுக்கும் போட்டுப் பரீட்சைபார்க்கவில்லை. பார்த்தால் முடியுமென்றே தோன்றுகிறது. ரயிலுக்குக் கரிதான் அதிகச்செலவு. கரியேயில்லாமல் [illegible]ஞ்சம் காற்றுத்திராவகத்தைக் கொண்டு [illegible]க் கூடியதாயிருந்தால் எவ்வளவு செலவில் [illegible]லும் அற்புதமாயுமிருக்கும். தந்திக் கம்பங்கள், கம்பிகள், இல்லாமல் தந்தித் தபாலும் நெருப்பு புகை கரியில்லாமல் ரயில் வண்டிகளும் ஒன்றுக்கொன்று ஆச்சரியத்தில் குறைவில்லை. இன்னும் இந்தத்திராவகம் சுலபமாய்க்கிடைக்கும்பட்சத்தில் எப்படிப்பட்ட உஷ்ணமான இடத்தையும் நீலகிரியாக மாற்றிக்கொள்ளலாமென்று தோன்றுகிறது. கடுங்கோடையில் நமக்கு வெப்பம் தாங்கமுடியாமலிருக்கிறது. அப்போது நம்முடையவீட்டில் ஒரு சீசா காற்றுத்திராவகத்தைக்கொணர்ந்து திறந்தால் நீலகிரியைப்போல் வீடு குளிர்ந்து போகும்.

ARGUING IN A CIRCLE.
பீஜாங்குர நியாயம்.

பல வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்திலேயுள்ள ஒரு சிறுவன் கல்விவிற்பனனாகும்படி பிரான்சுதேசத்துப் பிரதான நகரமாகிய பாரிஸ் பட்டணத்திற்கு அனுப்பப்பட்டான். அந்தச் சிறுவன் தெய்வபக்தியுள்ள தன் தாய் 'தெய்வமிகமேல்' என்பது முதலாகச் சொல்லிவந்த புத்திமதிகளையெல்லாம் மறந்துவிட்டு, அரைகுறையாகக்கற்ற ஆஸ்திகருடனே விதண்டாவாதஞ்செய்து அதப்படுத்தி நாத்திகவிருது பிடிக்கும் சில நாசகாலர்களுடனே கூடித் தன் மதத்தைப் பழிப்பதுடனே 'தெய்வமில்லை' என்றும் சாதிப்பவனாயினான்.

அப்பால் தன்னூரிற்குத் திரும்பிவந்த பிறகு, ஒருநாள் உறவினர் ஒருவருடைய வீட்டிலே இவனைவிருந்துக் கழைத்தார்கள். அந்த வீட்டிலே அன்று அநேகர் விருந்துண்ண வந்திருந்தார்கள்.

வந்தவர்களெல்லாம் சாப்பாட்டு வேளையாகிறவரையில், சிலர் சொக்கட்டான் ஆடிக்கொண்டும் சிலர் காகிதமாடிக்கொண்டும் சிலர் சதுரங்கம் ஆடிக்கொண்டும் இருக்க, இரண்டு சிறுமியர்கள் ஒரு பலகணித் திண்ணையின் மேல் உட்கார்ந்துகொண்டு படித்திருந்தார்கள். அப்போது பிஞ்சிலே பழுத்த அந்தச் சிறுவன் அந்தப் பெண்பிள்ளைகளின் அருகில் சென்று "வெகுகருத்தாய்ப் படிக்கின்றீர்களே, அதென்ன கதை?" என்று கேட்டான்.

"நாங்கள் படிப்பது கதையுமல்ல கண்ராவியுமல்ல," என்றார்கள்.

"கதையல்லவா? வேறென்ன படிக்கிறீர்கள்" என்று கேட்டான்.

"நாங்கள் பழவடியார்களுடைய வைபவங்களைப் படிக்கிறோம்" என்றார்கள்

"ஆனால், கடவுள் உண்டென்று நம்புகின்றீர்களோ?" என்று கேட்டான்.

அந்தக் கேள்வி கேட்டதும் அந்த இளந்தைகள் இருவரும் பாவம் அப்படியே அசந்து போய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து நின்றார்கள்.

பின்பு அவர்களில் மூத்தவள் "ஆனால் நீ கடவுள் உண்டென்று நம்பவில்லையோ?" என்றாள்.

அதற்கு அந்தப்பையன் "நான்கூட முன்னே நம்பிக்கொண்டுதான் இருந்தேன். அப்புறம் பாரிஸ் பட்டணம் போய் தத்துவசாஸ்திரம் படித்த பிறகு கடவுள் என்பது சுத்த சூந்யமான ஒரு வார்த்தை என்று தெளிந்தேன்" என்று சொன்னான்.

அப்போது அந்தப் பாலிகை "அப்பா! நான் பாரிஸ் பட்டணமும் போனதில்லை. தத்துவசாஸ்திரங்களும் படித்ததில்லை. நம்முடைய மதத்தை விளக்கும் வினாவிடைஒன்றுமே படித்திருக்கிறேன். ஆயினும் இவ்வளவுதூரம் படித்திருக்கிறாய். கடவுள் இல்லையென்றும் சாதிக்கின்றையே. எனக்கு நெடுநாளாய் ஒரு விஷயம் சந்தேகமாய் இருக்கிறது. அதை நிவர்த்தி செய்வது உனக்குக் கஷ்டமல்லவே" என்றாள்.

"அதென்ன சந்தேகம்?" என்று கேட்டான்.

"முட்டைகள் எங்குநின்று உண்டாகின்றன?" என்று கேட்டாள்.

இவர்கள் இப்படி பேசிக்கொண்டிருக்கிறதைக் கண்ட பெரியவர்கள் இந்த மொட்டைதட்டைகள் என்னவோ வாதாடுகின்றதுகளே அதென்ன பார்க்கலாம் என்று கிட்டே வந்தார்கள்.

அப்போது அந்தப் பெண் "அப்பா! நீ கடவுள் இல்லை என்று சாதிக்கிறாயே. தயை செய்து முட்டை எங்கிருந்து உண்டாகின்றதென்று எனக்குத் தெரிவி" என்று கே[illegible]

"பெட்டைக் கோழி முட்டை[illegible]" என்றான்.

அதன்மேல் அவள் "நல்லது, கோழி எதிலிருந்து உண்டாகிறது?" என்று கேட்டாள்.

"இது தெரியாதா! கோழி முட்டையிலிருந்து உண்டாகிறது" என்றான்.

"சரிதான். அவைகளில் முந்தினது எது? முட்டையா? கோழியா?" என்று கேட்டாள்.

"இந்தக் கேள்வி கேட்பதனால் உன்னுடைய கருத்து என்ன? அது கிடக்கட்டும். பெட்டைக் கோழிதான் முந்தினது" என்று சொன்னான்.

"சரி. அப்போது முட்டையிலிருந்து உண்டாகாத முதல் கோழி ஒன்று உண்டல்லவா?" என்று கேட்டாள்.

"பொறு! பொறு! முதலில் இருந்தது முட்டையென்று நான் சொன்னேனல்லவா?" என்றான்.

"இருக்கட்டும். அப்படியானாலும், கோழியிடாத ஒரு முதல் முட்டை இருந்திருக்க வேண்டுமல்லவா?" என்று கேட்டாள்.

"ஓ! இரு இரு! பொறு பொறு! வந்[illegible] நான்-அது என்ன-இதோபார்-நில்லு நில்லு" என்று தலை தடுமாறித் தத்தளித்தான்.

அப்போது அவள் "முட்டைக்கு முன்னே கோழியிருந்தது, அல்லது கோழிக்கு முன்னே முட்டையிருந்தது என்பது உனக்குத் தெரியவில்லை என்று காண்கிறேன்" என்றாள்.

"ஏன்! ஏன்! பெட்டைக் கோழியே முந்தி இருந்தது என்கிறேன்" என்றான்.

"சரி. நல்லது. அப்படியானால் முட்டையிலிருந்து உண்டாகாத ஒரு கோழி முதலிலிரு

[illegible]வா? மற்ற முட்டைகளுக்கும் கோழி[illegible]ம் பிறப்பிடமாயிருந்த இந்த முதற் கோழியைச் செய்ததார்? சொல்லுவாய்!" என்று கேட்டாள்.

"என்னை என்ன கோழி விற்கிற பையன் என்று நினைத்தாயோ? இந்த முட்டையும் கோழியுந் தானா? வேறொன்றுமில்லையா?" என்று கோபித்துக்கொண்டான்.

"அப்பா! நான் அப்படி நினைத்தவளே அல்ல. எல்லா முட்டைகளுக்கும் கோழிகளுக்கும் மூலாதாரமான முதற்கோழி எப்படி உண்டாயிற்றென்பதை எனக்கு தெரிவிக்கும்படி தானே கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றாள்.

"அதனாலாவதென்ன?" என்று கேட்டான்.

"உனக்குத் தெரியாததனாலே, நான் சொல்லுகிறேன், கேள். முதல் கோழியைச் சிருஷ்டித்தவர் எவரோ, அல்லது முதல் முட்டையைப் படைத்தவர் எவரோ, அவர்தான் இந்தப் பிரபஞ்சத்தை உண்டாக்கினவர், அவரைத்தான் நாம் கடவுள் என்கிறோம். பீஜாங்குர நியாயமென்று வித்துமுற்பட்டதா முளை முற்பட்டதா என வாதித்திருந்தால் முடிவேது? 'வித்தில்லாத சாம்பிரதாயம் மேலுமில்லை [illegible]ல்லை' என்பார்கள். சர்வத்துக்கும் முதல்[illegible]ாயுள்ள அந்த ஆதி மூலத்தை அந்தரத்தில் விட்டுவிட்டால் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சராசரங்களுக்கெல்லாம் ஆதிகாரணம் கற்பிக்க வேறுவழியில்லையல்லவா?" என்றாள்.

அதுகேட்டுப் பிஞ்சிலே பழுத்த அந்தத் தத்துவசாஸ்திரியானவர் வாய் திறவாமல் மௌனமாய்ப் போய் விட்டார்.

கீர்த்தி.

(சிறுவர்க்கான கதை.)

1. ஒரு கிராமத்தில் ஒரு தனவான் இருந்தார். அவர் தம் இளமையிலேயே பாடசாலையிற் கற்றும் கற்றோரிடத்தில் கேட்டும், தமக்கு ஜீவகாலத்தில் மிகவும் பயன்படக்கூடிய சாஸ்திரங்களையும் நீதிகளையும் ஆய்ந்தறிந்தவர். ஊரில் தம் நிலம் முதலிய சொத்துக்களை நன்றாய்ப் பார்வையிட்டு விருத்தியாக்கிப் பெரிய ஐசுவரியத்தைத் தேடினவர். பொருள் தேடுவதின் அருமை தெரிந்தவராதலால், வீண்விரயம் செய்யாமல் பாத்திரமறிந்து கொடுத்து ஔதாரியகுணத்துக்கு உதாரணமாக ஊராரால் எடுத்துச்சொல்லப்பட்டவர். பலவிதமான பேறுகளையும் அடைந்து, யாவருக்கும் நன்மையையே நாடினவராதலின் சுற்று கிராமத்தாரெல்லாரும் இவரை மிக நன்கு மதித்துவந்தார்கள். வெகுதூரதேசத்திலிருந்து வரும் அதிதிகள், அவர் சத்காரியம் செய்பவரென்பதை மற்றோரால் கேட்டு, அவர்பாற்சென்று அவரைமிகவும் வியந்து, தங்களுடைய பெயர் லோகப்பிரசித்தியாகியிருக்கிறது; அதனால் தங்களை நாடி வந்தோமென்று கூறி அவரால் செய்யப்படும் உபசாரங்களை ஏற்றுக்கொண்டு போவது வழக்கமாயிருந்ததுகொண்டு, அவர் தம்முடைய கீர்த்தியைப்பற்றி நினைத்து மகிழ்ந்து நாட்களைக் கழித்து வந்தார்.

2. இப்படி, சில வருஷங்கள் நிகழ்கையில் ஒரு நாள் நமது பெரியவர் ஒரு காரியத்தையிட்டு அடுத்த பட்டணத்துக்குப்போக வேண்டியிருந்தது. வெளியில் பயணம் பண்ணப் போகிறோமென்ற சந்தோஷமும் பல ஊர்களிலும் நமது கீர்த்தி எட்டியிருப்பதால் அங்குள்ளவர்கள் நம்மை விசேஷமாய் கௌரவப்படுத்துவார்கள் என்ற எண்ணமும் அவருக்கு இன்

மையான கனவுகளை உண்டாக்கின. வழியில் தம்மோடு கூடப்போகும் ஜனங்கள் தம்மை மிகவும் துதிப்பதாகவும், பட்டணத்தில் தம் வரவைப் பலர் எதிர்பார்ப்பதாகவும் எண்ணிக் களித்துக்கொண்டேயிருந்தார். புறப்படும் தினத்தில், வண்டி ஏறும் இடத்துக்கு, பந்துக்களும் வேலைக்காரர்களும் பயணம் பண்ணியனுப்ப அவர்களிடம் விடையெடுத்துக்கொண்டு வண்டியில் தம்மைப்போன்ற பிரயாணிகளோடு ஏறியுட்கார்ந்துகொண்டார்.

3. வண்டி சற்று நேரத்தில் அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்துசெல்ல ஆரம்பிக்கவும், நமது தனவான் தம்மோடு உட்கார்ந்திருந்த ஜனங்களை ஒவ்வொருவராய்ப்பார்த்தார். ஒருவரும் தமக்குத் தெரிந்தவர்களல்ல. (மிகவும் சாதாரண ஸ்திதியிலுள்ள ஜனங்கள் தானே.) தமக்கு அவர்களைத் தெரியாவிட்டாலும் தம்மை யவர்கள் அறியாமலிருப்பது அவருக்கு அத்தனைருசிகரமாயில்லை. என்ன! 'அண்டினவரையாதரிக்கும்' தாதா என்று உலகத்தில் பிரக்கியாதி பெற்ற நம்மை இவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். இவர்களுடைய அறிவின் சிறுமை அதிசயிக்கத்தக்கதே! என்று எண்ணிக்கொண்டிருந்தார். பிறகு வண்டி ஊர் ஊராய் வந்து நிற்கும் பொழுதெல்லாம் ஜனங்கள் ஏறுவதும் இறங்குவதுமாயிருந்தாலும் இவருக்கு அறிமுகத்தையே காணோம். ஒருவேளை, தம்மை நேரில் அறியாவிட்டாலும் தம்முடைய பேர் தமது ஸ்திதி கொடை முதலிய குணங்களைத் தெரிந்து பேசுவாருண்டோ என்று பலர் சம்பாஷணையையும் கவனித்தார். ஒவ்வொருவனும் தன் வீடு வாசல் முதலிய சொந்தவிஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததைத் தவிர தம்மைத் துதிப்பவரைக் காணோம். பாதகமில்லை; பட்டணத்துக்குப் போனால் நமக்குத் தெரிந்தவர்கள் பலர் இருப்பார்கள் என்ற எண்ணம் தம்மைத் தாங்கப், பட்டணத்துக்கு வண்டி எப்பொழுது போய்ச்சேருமோ என்று பார்த்துக்கொண்டிருந்தார்.

4. கடைசியாகப் பட்டணத்துக்கு வண்டி வந்து நின்றதும், நமக்குத் தெரிந்தவர்கள் யாராவது வந்திருக்கிறார்களோ என்று ஜன்னல் வழியே பார்த்துக்கொண்டுவந்த நமது ஐயர் கீழே இறங்கினார். ஒருவரும் தம்மையழைத்துக்கொண்டு போகவரவில்லை. கிராமத்தில் யாவராலும் நன்குமதிக்கப்பட்ட நம்மையறிவாரிங்கு காணோமே என்று எண்ணி மனம் நொந்துகொண்டே அவ்விடத்தைவிட்டு வெளியேறினார். ஒரு மூட்டைதூக்கி "எஜமான்களே மூட்டைதூக்க அடியேன் வரட்டுமா" என்று கேட்டான். (கொஞ்சம் மனதில் சந்தோஷம்.) "மூட்டை மிகவும் சிறியது அப்பா நானே கொண்டுபோகிறேன்" என்று ஐயர் இதமாய்ச்சொல்ல அவன் "சீ போ தரித்திரப்பார்ப்பான்" என்று சொல்லிவிட்டுப் போனான். ஐயருடைய மனதும் சிரசும் மிகவும் தாழ்ந்தன. தெருவழியே நடந்து போகையில், ஜனங்கள் நூற்றுக்கணக்காய் அவரவர்கள் காரியங்களைப் பார்த்துக்கொண்டு அதிவேகமாய்ப் போய்க்கொண்டிருப்பதையும், தெரு நிறைய ஜனங்கள் இருந்தும் அவர்களில் ஒருவராவது தம்மை யாரென்றுகூடக் கேட்காததையும், தம் முகத்தை ஏறிட்டுக்கூடப் பார்க்காததையும் நினைத்து நினைத்துப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு சிந்தையில் ஆழ்ந்திருக்கையில், ஒருவண்டிக்காரன், இவர் இந்தஊருக்குப் புதிதென்பதை குறிப்பினால் உணர்ந்து, எட்டிப்போ ஐயா என்று உரத்துக் கூவிக்கொண்டே இவர் கால் ஓரமாய் வண்டியை ஓட்டி, முகத்திலும் வஸ்திரத்திலும் நிறையத் [illegible]டிக்கும்படி செய்து சிரித்துக்கொண்டு போகவும் நமது பெரியவருக்கு எல்லாம் போதுமென்று ஆய்விட்டது.

[illegible] மிகவும் மனம் சலித்தவராகி, ஒரு வீடு[illegible] போஜனம்செய்தபின், ஐயர் தன் [illegible]திரத்தைத் திண்ணையில் விரித்து அதன் மேல் படுத்துக்கொண்டு பின்வருமாறு எண்ணமிட்டார். "மனிதனுடைய பெருமை எத்தனை சிறியது. நான் என் மனதில் எவ்வளவோ கீர்த்திமான் என்று எண்ணி மகிழ்ந்திருந்தேனே. நன்மைசெய்தால் உலகம் தலையசைத்து மெச்சுமென்றும், தீமைசெய்தால் முகத்தைச் சுளித்து வெறுக்குமென்றும் எண்ணியிருந்தல்லவோ ஏமாந்தேன். என்னுடைய கீர்த்தியெல்லாம் என் வீட்டிலும் ஊரிலும் தானே. அதற்கு வெளியில் ஒருவரும் என்னைக் கருதுவாரைக்காணேன். என்னுடைய ஸ்திதி மாத்திரமோ இத்தன்மையது. அடுத்த நாட்டிலுள்ள பெரிய மனிதருடைய பெயர் முதலிய அறிபவர் நம்மவரிற் சிலரேயெனின், நம் நாட்டிலுள்ள பெரியோருடைய கீர்த்தி எம்மட்டு? தமிழ் நாட்டை நீக்கிச் சென்றால் அங்கு கம்பராமாயணம் என்னும் பிரபந்தத்தைப்பற்றி யறிந்தவர் சிலர் தாமேயன்றோ? பாடசாலை பரீக்ஷைகளில் மிகவும் சிறப்புடன் தேறினேனென்றும், சர்க்காரிற்பெரிய வேலையிலிருக்கிறேனென்றும்; கோவில் குளம் கண்டேனென்றும், சிறியோர் பெரியோர் யாவரும் விசாரமின்றியன்றோ செருக்கடைகின்[illegible]? மனிதனுடைய சிறுமை எவ்வளவு வெளிப்படையாகத் தெரிகின்றது. உலகத்தார் [illegible] என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று எண்ணி நான் தானதர்மம் செய்வ[illegible] பயன் என்ன? ஒருவரிடமும் சொல்லா ம[illegible]முலைக் கையால் பிடிக்கிறேனென்று வீண் மு[illegible]சிசெய்வதுபோல், கீர்த்தியென்பதை [illegible]முயலாமலிருப்பதுவே நலம்" என்று சி[illegible]த்துக்கொண்டே சற்றுக்கண்ணயர்ந்தார்.

[illegible] அப்பொழுது சந்நியாசிபோலுடை தரித்த ஒருவர் அவரைப்பார்த்து "அப்பா உன் எண்ணத்தை நான் அறிந்தேன். உன்னைப் போன்றவர்களைத் தேடியலைவதே என்னுடைய தொழில். உன்னிடத்தில் மிகவும் எனக்குப்பிரீதி ஜனிக்கின்றதாதலால் உன்னோடு பேசவிரும்புகிறேன்" என்று மிகவும் இனிய குரலோடு அழைத்து அவர் கையைத் தமது கையிற்கொண்டு கூட்டிச்சென்றார். கொஞ்சதூரம் போனபின், அங்கு நின்ற ஒரு பெரிய தேவாலயம் எதிர்ப்பட சந்நியாசி தம்தோழரை அதனுள்ளே இட்டுக்கொண்டுபோனார். அந்த ஆலயம் மிக விசாலமானது. அதியுன்னதமான அதன் மேற்கட்டு எண்ணிறந்த சித்திரத்தூண்களால் தாங்கப்பட்டது. ஒவ்வொருபாகமும் ஒவ்வொரு மாதிரியாகக் கட்டப்பட்டிருந்தாலும் எல்லாம் ஒன்றுக்கொன்று பொருந்தி விசேஷமான அலங்காரத்தோடு கூடியிருந்தது. ஆனால் முக்கியமாய்க் காணப்பட்ட பகட்டுப் பொருள்கள் யாவெனின் அவ்வாலயத்தின் வெளிச்சத்துக்காக ஏற்றப்பட்டிருந்த பலவிதமான விளக்குகளே. சில இடங்களில் மிகவும் சிறிய விளக்குகள் மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண்டிருக்கச் சில இடங்களில் மிகவும் அழகான தீபங்களில் தெளிவாய் ஏற்றப்பட்ட வெளிச்சம் காண்போர் கண்ணுக்குக் களிப்புண்டாக்கிக்கொண்டிருந்தது. சில மிகவும் கலங்கியழுக்கடைந்த எண்ணெய் விடப்பட்டதனால் மங்கி எரிய, வேறு சில வாசனை பொருந்திய விலையுயர்ந்த எண்ணெய் வார்க்கப் பெற்று ரமணீயமாய்ஒளிவிசி வெகுதூரம்வரை பிரகாசம்கொடுத்தன. சில தீபங்கள் உயர்ந்த உலோகத்தாலும் சில மண்ணாலும் கல்லாலும் செய்யப்பட்டு இருந்தன. இப்படிப் பலவிதமான விளக்குகள் ஒருங்கே கூடிப்பார்வைக்கு அவலக்ஷணமாகத் தோன்றாமல், திவ்வியமானகாக்ஷியைக் கொடுப்பதைப்பார்த்து வியந்து, ஐயர் சந்நியாசியை நோக்கி, "சுவாமி நான் இதைக்கண்டு அதிசயிக்கிறேன். இங்கு

என்னைக் கொணர்ந்ததில் தங்கள் கருத்து என்ன?" என்று கேட்க அவர் "அப்பா நீ நிதானித்து யோசிப்பதனால் சிறந்த உண்மைகளைக் கற்றுக்கொள்ளுவாய் என்பதே என் கருத்து" என்றார். பிறகு கூர்ந்துபார்க்கையில், விளக்குகள் அணைந்துபோகாமல் இருப்பதற்கும், அடிக்கடி அவைகளைப் பிரகாசிப்பிப்பதற்கும், அநேக உத்தமலக்ஷணமுள்ள ஸ்திரீகள் அங்குமிங்கும் மெல்லென நடந்துகொண்டிருப்பதைக் கண்டார். அவர்கள் எல்லாரும் பார்வைக்கு ஒன்று போலிருந்தாலும், வேறுபோல் நடித்து, ஆங்காங்குச் சென்று விளக்குகளுக்கு வேண்டிய எண்ணெய் வர்த்தி முதலியன இட்டு அணைந்துபோன விளக்குகள் நீங்க வேறு விளக்குகள் ஏற்றி, ஆலயத்தைத் தங்களுடைய மிக மதுரமான கீதத்தினாலும், முகமலர்ச்சியுடன் செய்யும் தங்கள் பணிவினாலும் அலங்கரித்துக்கொண்டிருப்பதைக் கண்டு ஐயர் சந்நியாசியைப்பார்த்து "ஐயா இதை எனக்கு விளங்கக்கூறவேண்டு"மென்று கேட்டுக்கொண்டார்.

அவர் மிகவும் கருணையுடன் பின்வருமாறு கூறினார்: "இந்த ஆலயம் பல தேசங்களாகிய இவ்வுலகத்தைக் காட்டுகின்றது. இந்த விளக்குகள், செல்வத்தினாலும் வர்ணத்தினாலும் ரூபத்தினாலும் பல வேறு வகைப்பட்ட மனிதர்களைக் காட்டுகின்றன. இந்த ஸ்திரீகள் பக்தி, சத்தியம் பொறுமை முதலிய நற்குணங்களின் உருவகங்கள். பல விளக்குகளும் சேர்ந்தே ஆலயம் விளங்குவதுபோல் மனிதர்கள் பலதரமானவர்களுடைய நற்குணங்களினால் உலகம் விளங்குகிறது. ஒரு விளக்கின் ஒளி, கொஞ்சதூரந்தானே வீசுகிறது. அவ்விளக்கின் பயன் என்ன என்று ஒவ்வொரு விளக்கையும் அவித்துவிட்டால் அது பேதைமையன்றோ? ஆகையினால், ஒரு மனிதனுடைய நற்செய்கைகள் உலகத்தார் யாவருக்கும் தெரியாவெனினும் தன்னைச் சுற்றியிருப்பவர்களுக்குத் தெரிவதேபோதுமென்று திருப்தியடைந்து தான் நல்வழியில் நடப்பதே புத்திமானுடைய கருமமாகும். இதை நான் உனக்கு இன்னும் விளக்கவேண்டியதில்லையப்பா" என்றார். அதைக் கேட்டு விஸ்வாமிதராய், நமது ஐயர் தாம் கண்ணால் கண்டகாட்சியைக் கவர்ந்துண்பவர்போல் அதிக ஆசையோடு பார்த்துப்பார்த்துத் தன் புத்தியிற் புதிதுபுதிதாய்த் தோன்றும் எண்ணங்களால் ஆனந்தித்துக்கொண்டிருக்கையில், விளக்குகள் ஒவ்வொன்றாய்த் தமது கண்ணுக்கு மறையவும், கையைப்பிடித்துக்கொண்டிருந்த சந்நியாசியைப்பார்க்க அவரும் கைக்ககப்படாமற்போகவே திடுக்கென்று ஐயர் இடம் விட்டுப்பெயரவும், தன்னுடைய வஸ்திரம் கைநழுவி விழுவதையும் திண்ணையில் ...லர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பதையும் ...ண்டார்.

இங்கு சொல்லப்பட்ட ஐயர் எனது ...ந்தரங்கமான இஷ்டர்களில் ஒருவர். பட்டணத்துக்குப்போய் விட்டுவந்தது முதல் வேறு...ராய்க் காணப்படுகிறார். கொஞ்சநாள்க...கு முன் பேசிக்கொண்டிருக்கையில், "ஐயா ... றது தர்மகாரியங்கள் உமக்கு அதிகயா... யுச் சம்பாதித்து வைத்திருக்கின்றன" ...று உபசாரமாய்ச்சொல்ல, அவர் "ஒருதப ...பட் டணத்துக்குப்போய்வாரும்" என்று ...தந்த ஆப்திரத்தோடு கூறினார்.

"RIGHT WILL CONQUER. TRUTH WILL MAKE US FREE."

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR," "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** "Approved"

புத்தகம். 23.] ராக்ஷஸஸ்ரீ புரட்டாசிமீ, 1915ஸ்ரீ செப்டெம்பர்மீ [சஞ்சிகை 6.

"RIGHT WILL CONQUER. TRUTH WILL MAKE US FREE."

[*"Look beyond the trenches and beyond the graves of gallant youth for the explanation of that which baffles human understanding and crushes the hearts. Right will conquer. Truth will make us free."—Sir William Crookes' Message.*]

"IN MEMORIAM."

"One more among thousands gone for the sake of humanity .....So he played the game as well as he could and we have nothing left but memories. Have you realised that by this time 5 million men have died in this war and probably 50 million people are grieving for them."—*The Tribute of the 'hearts crushed' to the spirit of the departed Brave.*

IN MEMORIAM.

In loving and ever present memory of him—the eldest son of Mr. and Mrs. H.O.D. Harding—**who went to war and died in the field of battle playing his part well and thinking of his duty alone to the last. Seriously wounded 16th June 1915. Died 18th June 1915.**

Requiescat in pace.

—*The Children's Memorial to the Brave.*

"TO MY BROTHER-IN-ARMS IN THE EVER-LASTING BATTLE OF LIFE.

(*With Apologies to Lord Alfred Tennyson.*)

O My brother-in-arms in the e'erlasting Battle of Life!
Thou hast played thy part so well in the strife
And taken the shortest Road that leadeth to 'REST'!
Leaving the laggard 'I' to bear the burd'n of Life and all'ts contest.

* * *

"I know that this was Life,—the track
Whereon with equal feet we fared;
And then, as now, the day prepared
The daily burden for the back."

"But this it was that made me move
As light as carrier-birds in air;
I loved the weight I had to bear,
Because it needed help of Love;"

* * *

"When in the down I sink my head,
Sleep, Death's twin-brother, times my breath;
Sleep, Death's twin-brother, knows not Death
Nor can I dream of thee as dead."

ODE TO MEMORY.

"WE HAVE NOTHING LEFT BUT MEMORIES."

I

Thou who stealest fire,
From the fountains of the past,
To glorify the present ; oh, haste,
Visit my low desire !
Strengthen me, enlighten me !
I faint in this obscurity,
Thou dewy dawn of memory.

II

Come not as thou camest of late,
Flinging the gloom of yesternight
On the white day ; but robed in softened light
Of orient state.

* * * *

III

* * * *

In Sweet dreams softer than unbroken rest
Thou leddest by the hand thine infant Hope.
The eddying of her garments caught from thee
The light of thy great presence; and the cope
Of the-half attained futurity,
Though deep not fathomless,
Was cloven with the million stars which tremble
O'er the deep mind of dauntless infancy.
Small thought was there of life's distress
For sure she deemed no mist of earth could dull
Those spirit-thrilling eyes so keen and beautiful:
Sure she was nigher to heaven's spheres,
Listening to the lordly music flowing from
The illimitable years.

* * * *

IV

Come forth, I charge thee, arise,
Thou of the many tongues, the myriad eyes !

* * * *

V

Large dowries doth the raptured eye
To the young spirit present
When first she is wed ;
And like a bride of old
In triumph led,
With music and sweet showers
Of festal flowers,
Unto the dwelling she must sway.
Well hast thou done great Artist Memory,
In setting round thy first experiment
With royal frame-work of wrought-gold ;
Needs must thou dearly love thy first essay
And foremost in thy various gallery
Place it, where sweetest sunlight falls,
Upon the storied walls ;
For the discovery
And newness of thine art so pleased thee,
That all which thou hast drawn of fairest
Or boldest since, but lightly weighs
With thee unto the love thou bearest
The first-born of thy genius. Artist-like
Ever retiring thou dost gaze
On the prime labour of thine early days ;
No matter what the sketch might be ;

* * * *

My friend, with you to live alone,
Were how much better than to own
A crown, a sceptre, and a throne !
O strengthen me, enlighten me !
I faint in this obscurity,
Thou dewy dawn of memory."

"A VETERAN OF SCIENCE" ON THE PRESENT WAR.

SIR WILLIAM CROOKES AT 85.

Sir William Crookes, the distinguished scientist, who is a member of the Order of Merit and President of the Royal Society, is 85 years of age, and still has great mental vigour, as Mr. Harold Begbie shows in an interview in the "Chronicle."

"To be alive at 85 is a fine thing in itself but to be very vigorously and intellectualy, alive at this age. and by the same token to be working for the nation in its hour of trial with every faculty alert, only wishing that there was more work to do, this is a thing so fine and heartening that we may all cry 'Hats, off!' to Sir William Crookes, and in this salutation feel ourselves braced up to do still more in helping our country and the cause of the Alies," says Mr. Begbie.

"It would be dreadful if one had to record that this veteran of science was a noisy optimist, a bustling worker, a patriot boasting of his age, and cackling mere contempt of the enemy. Sir William is the reverse of this. He has always been one of the most modest as he has certainly been one of the most courageous inquirers of our day ; and the only effect of age noticeable in his mind is a deepening of this modesty, which shows itself in a more deliberate and careful manner of expressing an opinion and certain suavity on the soul making for graciousness and consideration.

"He told me that he is concious in himself of no change of faculty during the last thirty or forty years. He can work as hard, he can see as well, he can hear as well, he can bear fatigue as well, and, what is far more to the point, he is just as interested in life now as he was then. Indeed, he is inclined to doubt whether he is aware in himself of any physical inhibition for more years than this. "I feel," he said, "very much as I felt at thirty-five years of age."

புஸ்தகம்-23.] "The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide." [சஞ்சிகை-6

ராக்ஷஸ ஆவணி } விவேக சிந்தாமணி { September-October. 1915.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேத் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

A VETERAN OF SCIENCE ON THE PRESENT WAR.

SIR WILLIAM CROOKES ON THE PRESENT WAR

"The deeper scientific investigation goes, the more impossible is it to account for life on mechanical grounds. Although for nearly thirty years now Sir William has not continued his psychical investigations, he is convinced that there is survival of the identity after death. This war does not shake his faith in the providence of God. He sees that the utter immorality of German war methods is a serious blow for the prestige of organised religion, since the Germans are undoubtedly a religious people. Religion may possibly suffer on this account. Men will be more incredulous than ever concerning the value of ecclesisticism. But faith in the spiritual reality underlying an interpenetrating all physical appearance is not likely to suffer from the horrors of this war. Physical science can neither explain nor satisfy. Physical science works in a field which excludes the spirit of man, and the longings of the spirit, will always be directed away from that sphere. Clericalism may possibly go but religion is eternal, for religion is Man and his Destiny.

"Moreover, it is impossible to say at present whether this war is a blessing or a curse It looks to some men like a titanic struggle between the forces of Good and Evil, a struggle which may possibly be only a reflection on our particular star of some cosmic struggle which is now shaping the destinies of eternity. In the universe are Good and Evil, and between Good and Evil there must always be contention, contention blazing up at certain moments into the conflagration of war. Fire spreads. It may even reach from star to star.

"RIGHT WILL CONQUER. TRUTH WILL MAKE US FREE."

"This vetern of science bids us in quiet and modest tones entertain no doubt of the conflict's issue, bids us work for victory, sure that victory is on the side of righteousness, and to look beyond the trenches and beyond the graves of gallant youth for the explanation of that which baffles human understanding and crushes the hearts. Right will conquer. Truth will make us free."

இப்போது நடக்கும் யுத்தத்தைப்பற்றி ஒரு வித்யாவிற்பன்னர் அபிப்பிராயம்.

SIR WILLIAM CROOKES AT 85.

ஸர் உவில்லியம் க்ருக்ஸ் என்பவர் ஆங்கிலேய சாஸ்திர விற்பன்னர்களில் பிரதமஸ்தானம் பெற்றவர். இவர் மனோதத்துவ சாஸ்திர விசாரணை செய்வதிலும் பூததத்துவ சாஸ்திர விசாரணை செய்வதிலும் துணிந்திறங்கித் திர விசாரிக்கும் சக்தி வாய்ந்தவர். பல வருஷங்களுக்கு முன் இவர் மனோதத்துவ சாஸ்திர விசாரணை சங்கத்தலைவராயிருந்த பொழுது அத்துறையில் துணிந்திறங்கி விசாரணை செய்தவராய் ஆத்மதத்துவம் என்று சொல்லும் அறிவு மயமான சித்சக்தி பாவனாதீதமானது (Meta-psychic) என்று தீர்மானித்துப் பறை

யறைந்துள்ளார். பூததத்துவ சாஸ்திர விசாரணை செய்வதில் தீரர் என்று பேரெடுத்தவர். "Radio-metre" என்று சொல்லும் "தேஜோமானம்" என்கிற ஒளியளக்கும் கருவியைக் கண்டுபிடித்து நிர்மித்தவர் இவரே. இந்தக் கருவியினால் கட்புலனுக்குப் பிரத்தியக்ஷமாகாத ஒளியையும் குறிப்பிட்டு அளக்கலாம். இவருக்குப் இப்பொழுது வயது 85-ஆய்விட்டது. ஆனாலும் 35-வயதில் அவர் எப்படியிருந்தாரோ அப்படியே இப்பொழுதும் கருவி கரணங்களின் சக்திகுறையாமல் மனோசக்தி முதிர்ந்து வேலை செய்வதில் கர்மத்தின் சுவையறிந்துழைக்கும் சுபாவம் வாய்ந்தவராகவிருக்கிறார்.

பிரகிருதிவித்தையில் (Science of Nature) உண்மை விசாரம் செய்து தேர்ந்த வித்வான்கள் பிரகிருதியம்சமாகிய தேஹ மனோதத்துவங்களின் குணமறிந்தவர்களாக விருப்பார்களாதலால், அவர்களுக்குக்கருவிகரணங்கள்சொன்னபடிகேட்கும் என்பது யோகிகளின் அனுபவ சித்தாந்தம். யோகியென்றால்என்னவோஎன்று மலைத்து விடாதீர்கள். "அலையும் மனத்தை அடக்கும் அவனே யோகி, அத்தீரன், பரன்" என்று மூத்தோர் சொல்வார்த்தை யிருப்பதால், குரங்கைப்போல் கிளைவிட்டுக் கிளைதாவியோடிக்கொண்டு விஷயங்களில் ஆழ்ந்தலைந்த வண்ணமாயிருக்கும் மனத்தை எவனொருவன் விவேகபுத்தியால் அடக்கி ஆண்டு நன்றாகப்பழக்கிய குதிரையைப்போல் அதை அவன் இஷ்டம்போல் நடக்கப்பழக்கியிருக்கிறானோ அவனே "யோகி"; அவனே மேலான தத்துவத்தை நிதரிசனமாகக்கண்டு "தற்பரன்" இப்படி மனத்தையடக்கியாளுதல் இலகுவான வேலையல்லவாதலால் அப்படிப்பட்டவன் தானே "அதிதீரன்." இவ்விதக்குணங்கள் வாய்ந்தவர்களில் ஒருவர் ஸர் உவில்லியம் க்ரூக்ஸ் என்பவர்.

வயது 85-ஆகியும் அவருக்குக் கண், காது முதலிய இந்திரியங்களின் சக்தி சற்றும்குறையவில்லை. 35-வயசில் எவ்வளவு தீக்ஷண்யமாயிருந்தனவோ அப்படியே இப்பொழுதும் இருக்கின்றன என்கிறார். மனோசக்தியும் குறையவில்லை. வேலை செய்வதிலும் பின்வாங்குவதில்லை. இப்படிவயதில் மூத்தோராகியும் கருவி கரணங்களுக்கு மூப்பணுகா வண்ணம் மனோசக்தியினாலும் விடாமுயற்சியினாலும் திடகாத்ரசித்தராய் இருப்பது உண்மையில் உளவறிந்துழைப்போர்க்கு வாய்க்கும் உத்தமசித்திகளில் ஒன்றாம். அப்படிப்பட்ட திடகாத்ரம், திடசித்தம் இரண்டும் இவருக்கு லபித்திருக்கிறது. 35-வயதில் அவருக்கு இருந்த உற்சாகம் இப்பொழுது குறையவில்லை. ஆனால் அவருடைய அபிப்பிராயங்களை வெளியிடுவதில் ஆரத்தீர அமர்ந்து பேசும் சுபாவம் மட்டும் வயது முதிர்ந்ததின் பலனாக மேலிட்டிருக்கிறது. அன்றியும் அடக்கம் பொறுமை யிரண்டும் மிக அதிகரித்திருக்கிறது. இவையன்றி வேறு மாறுதல்கள் இல்லை; "மூப்பணுகா ஊக்கம்" அவரிடத்துப் பூரணமாயிருக்கிறது என்று இவரைக்கண்டு பேசின ஒருவர் ஒரு ஆங்கில பத்திரிகையில் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

SIR WILLIAM CROORES ON THE WAR.

இப்படிப்பட்ட மேலான குணங்களுடையவர் இப்பொழுது நடக்கும் பாரதப்போராம் மஹா யுத்தத்தைப்பற்றி என்ன சொல்கிறார் என்பதைக்கேட்க எல்லாருக்கும் ஆவலிருக்குமாதலால் அவர் சொன்னதை இங்கு வெளியிட்டு எழுதுகிறோம். மேலான விஷயங்கள் குழந்தைகள் மனதுக்குக் கோசரமாகாது என்று சொல்லுவர். இது உண்மையே. ஆனால் "விஷயங்கள்" என்பதின்பொருள் இன்னதென்றுணராமல், மேலான தத்துவ உண்மைகளும் குழந்தைகள் மனதில் ஏறுதென்று நினைக்கிறார்கள். தத்துவங்கள் எல்லாவற்றிலும் மிகமேலாய் உன்னத ஸ்தானத்திலிருப்பது உள்ளன்பு. இந்த உள்ளன்பைக் குழந்தைகள் உணருவதில்லையென்று சொன்

னால் யாராவது நம்புவார்களா? குழந்தைகளைப்பெற்று வளர்த்த தாய்மார் என்னதான் ஏட்டுப்படிப்பு இல்லாதவராயிருப்பினும் இந்த அபிப்பிராயம் தப்பு என்று அனுபவ சித்தாந்தமாய் உணர்ந்து உரைப்பரல்லவோ. பெரியோர் தத்துவவிசாரணை செய்வதெல்லாம் குழந்தைமனத்தின் சாதகம்கொண்டே யாதலால், குழந்தைகளின் பக்குவமறிந்து போதிக்கும் சக்தியின்மையினால் உண்டாகும் அநர்த்தத்தைக் குழந்தைகள்மேல் ஏற்றி அவர்களுக்கு சுபாவமாயுள்ள மனோசக்தியை மழுங்க அடிக்கிறார்கள். "பேதமையென்பது மாதர்க் கணிகலம்" என்றால் மௌட்டியத்தைப் பூஷணமாகச் சிறப்பித்துச் சொன்னதாக அர்த்தம்செய்து அநர்த்தம் விளைவிக்கும் மேதாவிகள் வேறு என்னதான் அநர்த்தம் விளைக்கமாட்டார்கள்! இது நிற்க.

ஸர் உவில்லியம் க்ரூக்ஸ் என்பவர் மனோதத்துவசாஸ்திர விசாரணைசெய்து இப்பொழுது 30-வருஷமாகிறது. அதில் சென்ற 30-வருஷகாலமாய் நூதன விசாரணையொன்றும் செய்திலர். ஆயினும் பூததத்துவ சாஸ்திரத்துறையில் பூரணமாய் விசாரணை செய்துள்ளார். அவர் தீரவிசாரணைசெய்து வந்துள்ளமுடிவு என்னவென்றால், 'ஜீவதத்துவத்துக்கு ஜடதத்துவாதாரத்தைக் கொண்டுமட்டும் காரணங்கூறுவது முடியாத காரியமாயிருக்கிறது" என்பதே. ("Impossible to account for Life on mechanical grounds.") மற்றொரு தீர்மானம் அவர் உள்[illegible]ளார் உண்மையாகக் கொண்டுள்ளார். அது [illegible]வென்றால், "நான்" என்னும் ஆணவ புருஷன் இந்த ஸ்தூலதேஹம் விழுந்துபோன பின்னும் (மரணத்துக்குப்பின்னும்) அஹம்பாவம் நீங்காமல்தானே வேறு லோகங்களில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறான், என்பது. இந்த உண்மையையே சிவவாக்கியர். "சித்திலாதபோது ஜீவன் இல்லை இல்லை யில்லையே" என்று பறையறைந்து ஓதியிருக்கிறார்.

அஹம்பாவ புருஷனாகிய சிதாபாஸன்தானே ஜீவன். இந்த ஜீவன் "சித்" இல்லாதபோது இல்லையென்று சொன்னார். அதனால் "சடம்" இல்லாதபோது இல்லையென்று அர்த்தமாகாதே. ஸர் உவில்லியம் க்ரூக்ஸ் "சடதேகம்" இல்லாமல் ஜீவன் இருக்கலாம் என்று சொல்கிறார். ஆதலால்தான் நம்மில் பெரியோர்களாயுள்ளவர்கள் தேஹத்தை ஸ்தூல, சூக்ஷ்ம, காரணமென மூவகைத்தாகப் பிரித்தார்கள். காரண தேஹமாகிய அவித்யா வாசனையாம் "அஹம்பாவம்" உள்ளவரையில் ஜீவனுக்குப் பிறப்பு இறப்பு சகடக்கால்போல் சுற்றிக்கொண்டே வருகிறது. ஸ்ரீபுரா ரஹஸ்யத்தில் இந்த உண்மையை வெகு அழகாக வெடுத்துக்கூறி யிருக்கிறார் தத்தாத்திரேயர்.

"This War does not shake his faith in the Providence of God" இந்தப் பாரதப்போர் நேர்ந்ததனால் எத்தனையோ பேர்கள் வீணாகக் கொல்லப்படுகிறார்கள். சண்டை 50 லக்ஷம்பேர் மடிந்திருக்கிறார்கள். சண்டை செய்யும் ஒவ்வொரு தேசத்தார் கக்ஷியிலும் சுமார் 10-லக்ஷம் பேர் விழுந்திறந்திருப்பார்கள். பிரிடிஷ் கவர்ன்மெண்டார் யுத்தச் செலவுமட்டும் ஒருநாளைக்கு 30-லக்ஷம் பவுன் ஆகிறது. இந்தமதிப்புப் போதுமானதாயின்றி இதற்கு மேலும்கூட செலவாய் வருகிறது. இப்படியே ஒவ்வொரு தேசத்தார் சண்டைச் செலவையும் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு நாளைக்கு இந்த யுத்தத்தினால் கோடிபொன் செலவாய் வருகிறதென்று சொல்லலாம். தினம் ஆயிரம் பதினாயிரம் என்று யௌவன புருஷர்கள் யுத்த களத்தில் விழுந்து மடிந்து போகிறார்கள்.

ஜெர்மானியர்கள் மதச் சார்புடையவர்களென்று உலகப்பிரசித்தி பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய மதம் இந்த சண்டையைக் கொண்டு பார்க்கில் கேவலம் லோகாயதமதமாக விருக்கிறது. ஜடசக்தியை பெரிதாகக் கொண்டாடுகிறார்களென்று தெரிகிறது;

இந்த லோகாயதமதம் இம்மஹா யுத்தத்தால் பிரக்கியாதி யற்றுச் சீரழியுமென்று ஸர் உவில்லியம் க்ரூக்ஸ் சொல்லுகிறார்.

மனோ சுத்திக்காக உழைத்து வந்த நம்மை மதசம்பந்தமாயுழைக்கிறவனென்று சொல்லிய மேதாவிகள் இவர் சொல்வதற்கென்ன சொல்வார்களோ! சட சக்தியையே பெரிதாக நம்பி மதபோதகர்களைக்கொண்டு "வல்லான் வகுத்த தே வாய்க்கால்" என்கிற சித்தாந்தம் ஜனங்கள் மனதிற் பதியப்போதித்து வந்த மதம் இச் சண்டையினால் அபவாதப்பட்டு அபக்கியாதிக் காளாகி யொழியுமானாலும், அந்தர்யாமியாயுள்ள சூக்ஷ்மப்பிரகிருதியில் ஆத்மசக்தி விளங்கும் உண்மையான ஆத்ம போதம் (Faith in the Spiritual reality underlying an inter-penetrating all physical appearance is not likely to suffer from the horrors of this war) ஜனங்கள் மனதைக் கவர்ந்து ஊசியைக் காந்தமிழுப்பதுபோல் அவர்கள் சித்தத்தை வசீகரித்து சித்தசுத்தியை யளிக்கும் உண்மையான உள்மதம் இந்த யுத்தத்தின் கொடுமைகளால் ஒரு போதும் குறையாது. அதிலுள்ள நம்பிக்கை யின்னும் அதிகமாகி ஆத்மசக்தியின் மஹிமை இந்தச் சண்டையினால் இன்னும் விசேஷமாய்ப் பிரக்கியாதி பெற்று விளங்கும் என்பது அவருடைய துணிபு என்று கூறியுள்ளார்.

"பூததத்துவ சாஸ்திர விசாரணை மட்டும் செய்து வந்தால் அதனால் உண்மை விளங்குவதாயில்லை. ஆத்ம திருப்தியும் ஏற்படுவதில்லை" யென்று சொல்கிறார். பூததத்துவ சாஸ்திரமென்பது ஜீவனின் ஆத்மானந்த சுகத்துக்கு அப்புறப்பட்டதா யிருக்கிறது. ஆத்மானந்த சுகவிருப்பம் எப்போதும் ஜீவனை ஜடதத்துவங்களை விட்டொழித்து ஆத்ம தத்துவங்கள் வேலை செய்யும் பூமிகையை நோக்கிப் போகச் செய்யும் என்பது திண்ணம் என்கிறார். "organised religion" மதக்கட்டுப்பாடும், அதன் பலனாகிய (clericalism) மதபோதகர் செல்வாக்கும் இச்சண்டையினால் சீரழிந்து சிதைவுறலாம்; ஆனால் சமயாதீதமான உண்மைமதம் ஒருக்காலும் அழியாது. அதற்கு ஒருபோதும் கேடில்லை. ஏனெனில் அது ஸநாதநமானது. அப்படி யென்றால் அழியாமல் என்றென்றைக்கும் சாசுவதமாயிருக்கப்பட்டது என்று உறுதி கூறியிருக்கிறார்.

இந்த யுத்தம் உலகுக்கு நன்மை பயக்குமோ தீமை பயக்குமோ என்று இப்பொழுது சொல்ல முடியாது என்கிறார். சிலருக்கு அது தேவாசுரர் யுத்தம் போல் தோன்றுகிறது. நன்மைக்கும் தீமைக்கும் எப்போதும் விரோதம் இருந்துகொண்டே தானிருக்கும். இப்படியாகவுள்ள நித்தியப்போர் வேறு எந்த அண்டத்தில் பிரமாதமாக நடக்கிறதோ தெரியாது. அதன் பிரதிபிம்பமாகவே இந்த யுத்தத்தைக் கருதுவாரும் உளர். நன்மை தீமை யென்கிற எதிர்மறை ஜோடி (தொந்தம்) உள்ளவரையில் தொந்தப்போரும் எப்போதும் நடந்துகொண்டேயிருக்கும். இந்த தொந்தப்போர் எக்காலத்திலும் உள்ளதேயாயினும் ஒவ்வொரு சமயம் காட்டுத் தீபோல் பெரிய யுத்தமாகத் தோன்றுவது முண்டு. அக்னி எங்கும் வியாபகமான சக்தி. தீக்குப் பற்றுதல் சுபாவம். அப்படி தீப்பற்றி யெரியும்பொழுது அதன் வேகம் ஒரு அண்டத்திலிருந்து மற்றொரு அண்டத்துக்கும் தாவிப்பரவலாம் என்கிறார்.

இப்படியாக இந்தயுத்தத்தின் காரணகாரியங்கள் எப்படியிருப்பினும் இதன் முடிவு எப்படியிருக்குமோவென்று மட்டும் சந்தேகிக்க வேண்டியதில்லை யென்று சொன்னார். "தர்மமேஜயம்" ("Victory is on the side of Righteousness") என்னும் வாக்கு ஒருக்காலும் பொய்க்காது. ஆகையால், தர்மத்தையே சரண்புகுந்து தர்மத்துக்காகவேயுழைக்கிறவர்கள் பக்ஷம் எப்படியும் ஜயிக்கும் என்று பூரணநம்பிக்கைவைத்து ஜயம்பெற வுழையுங்கள்: உண்மையே வெல்லுமென்று ஊக்கங்கொண்டு உழையுங்கள்.—என்று பறையறந்தாற்போல தர்மோபதேசம் செய்து உற்சாகமிகுந்தவராய் அவரை நெருங்கியவருக்கும் உற்சாகமுண்டாக வெகு தீரமாய்ப்பேசினாரென்று சொல்லியிருக்கிறார். அவருடைய கடைசிவாக்கு இது:—"Right will conquer. Truth will make us free." தர்மமேஜயம், ஸத்யமேவஜயதே; ஸத்யமே நமக்கு ஸ்வதந்த்ரமளிக்கும், என்று கூறினார்.

"MORAL INSTRUCTION IN ELEMENTARY SCHOOLS."

(Circular by the Director of Public Instruction.)

பாலபோதசிக்ஷா சாதனம்.

"பெற்றோர்கள் தாமுவ பார் பிள்ளைகளி னாசையுற்றோர் கற்றோ மெனவகந்த கற்பர்பின்னும்—மற்றோர்கள் மாச்சரியத்தா லிகழில் வந்ததென்னென் றேயிகழ்கை யாச்சரிய மோதா னவர்க்கு."

1. "All officers are informed that the journal "Vivekachintamani" of which they have each received a copy has been declared suitable for use in elementary schools in which Tamil is the medium of instruction."

2. "The journal might be read with advantage in Teachers' Associations and in connection with moral instruction in Schools"—Extracts from 'Circular Memo.' issued by the Inspector of Schools.

சென்னை வித்யா இலாகா தலைவர் பிரதம வித்யாசாலைகளில் படித்துத் தேறவிரும்பும் மாணவர்கள் நன்னடக்கை அல்லது ஸன்மார்க்க விஷயமாகவுள்ள முக்கியாம்சமான பிரதமவிதிகளையறிந்திருக்க வேண்டுமென்றும் அவைகளில் கேட்கும் கேள்விகளுக்கு உத்தரமளிக்கும் திறமையிருக்க வேண்டுமென்றும் சொல்லி ஒரு ஒட்டுத்தரவு (circular) பிறப்பித்திருக்கிறார். அது "இன்ஸ்பெக்ஷன்கோட்" என்று சொலும் வித்யா இலாகாதாரார் வெளியிட்ட விதிகளடங்கிய புஸ்தகத்தில் மூன்றாவது அனுபந்தமாக அச்சிட்டு வெளியாகியிருக்கிறது.

இதனால் பிள்ளைகளுக்குச் செய்யும் சன்மார்க்க உபதேசம் மதபோதனையோடு சேர்ந்து போதிக்கப்படலாம் அல்லது வேறுபாடங்கள், வாசகம், சரித்திரம் முதலானவற்றில் வரும் விஷயங்களைக்கொண்டு திருஷ்டாந்த தாஷ்டாந்தபூர்வகமாகப் போதிக்கப்படலாமென்று பரிஷ்காரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸன்மார்க்கமாவது ஸத்தியமார்க்கம். அதுவே நன்மார்க்கமாகும். ஸத்தியம் இரண்டுவிதம். என்றும் அழியாது யாராலும் அழிக்க முடியாததாய் தானேதானாய், தன்மயமாய், திரிகாலங்களிலும் மாறாது சாசுவதமாய் இருப்பது ஒன்று. இந்த ஸத்யம் அறிவுமயமாய் இருந்து அறிவானந்தமாய் விளங்குகிறது. இதைச்சுட்டுவான்தானே திருவள்ளுவநாயனார்.—

"கற்றதனா லாயபய னென்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."—என்று

ஓதியிருக்கிறார். மேலறிவுக்கிருப்பிடமாயுள்ள கடவுளின் திருவடியை உணர்ந்து உகந்து தொழப்பெறாதவர் கற்றகல்வியினால் என்ன பயனாகும்? என்று கூறியிருக்கிறார். அதாவது அந்தக்கல்வி பயனற்றது என்றபடி. பள்ளிப்பிள்ளைகள் நல்வழிபற்றி நடக்கப்பழகுவது அவர்களுடைய பெற்றோர்கள் போதகாசிரியர்கள் (உபாத்தியாயர்கள்) நடத்தையைப் பொறுத்ததாயிருக்கும். குழந்தைகளுக்கு நல்லொழுக்கம் படியும்பொருட்டு உபாத்தியாயர்கள் பிரதம வித்யாசாலைகளில் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டிய அம்சங்களை வித்யா இலாகாத்தலைவர் வெளியிட்டிருக்கும் (Circular) ஒட்டுத்தரவின் ஒருவாக்கியத்தில் சுருக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிரஹ்லாதன் "நமோநாராயணவித்தம்" என்று சொல்லி எவ்வகைக் கொடுமைக்கும் அஞ்சாது ஸ்திரமான ஆஸ்திகபுத்தியுள்ளவனாகக் காட்டியது அவன் கருப்பவாசமாயிருக்கையில் நாரதர் செய்த உபதேசத்தினால் பலித்தது என்கிறார்கள். இதையேதான் (Eugenics) எனப்போதிப்பார் 'பிறவிக்குணம்' என்பார்கள். இந்த (Law of Heredity) என்னும் பிறவிக்குணதர்மத்தை சிருஷ்டிதர்மங்களில் ஒன்றாக இந்தக்கதை (உதாரணத்தால்) விளக்கிக்காட்டினதன்றிவேறல்ல. இப்படியாக "விளையும் பயிர் முளையிலே" யென்றபடி பாலப் பருவத்திலேயே நல்லொழுக்கம் படிய பெற்றோரும் போதகாசிரியர்களும் குழந்தைகளுக்கு ஹிதோபதேசம் செய்து சத்சங்கப்பழக்கமும் சுபவாசனையும் விருத்திக்கச் செய்யவேண்டியது

அத்யாவசியகமாயிருக்கிறது. ஆதலால், வித்யா இலாகாத்தலைவர் இங்கிலீஷில் பிறப்பித்துள்ள உத்தரவிலிருந்து குழந்தைகளுக்குப்படியவேண்டிய நல்லொழுக்கங்கள் இன்னவையென்று குறிப்பிட்டுரைக்கும் வாக்கியத்தை அப்படியே இங்கிலீஷில் அச்சிட்டு அதன் கருப்பொருளை ஆங்கிலமறியாதாரு முணரும்படி தமிழில் விளங்கச் சொல்லுவோம்.

Para. 2. "It should be the aim of each teacher to see that the children are brought up in habits of cleanliness, punctuality, good manners and language and to impress on them the importance of cheerful obedience to duty—of patience—of consideration and respect for others—of honour and truthfulness in word and act—of temperance, courage and perseverance—of kindness towards all living creatures but especially to those weaker than themselves.......It will be found natural in most cases to base instruction on the relation of child and parents—and to advance therefrom to the relations of the child to his family—his teacher—his classmates and friends—and society at large as represented by residents of the locality."

"3. Whatever efforts may be made to stimulate the moral sense by instruction whether direct or indirect, it should always be remembered that example is more efficacions than precept and that the tone of the school depends largely on the personal character and conduct of the teachers."

"4. With religious teaching the department is in no way concerned and Inspecting officers will be asked to be most careful to avoid trespassing in this sphere ..At the same time it should be remembered that the instructions given above are not intended to encourage the treatment of moral instruction as a subject separate from religious instruction in schools where the latter kind of teaching is possible. *The Great truths of religion are common to all mankind and are liable to lose their force when treated in isolation from one another.*".

ஸர்வமத ஸம்மதமான உண்மைகள் மன்குலத்துக்கெல்லாம் பொதுவாயிருக்கின்றன. அவற்றைச் சிறப்பித்துச் சொல்லும் மதபோதனைகளினின்றும் அவ்வுண்மைகள் பிரித்துப் போதிக்கப்பட்டால் அவற்றின் போத சக்தி குறைந்து போம். ஆகலால் வித்யா விசாரணை கர்த்தர்கள் ஸன்மார்க்க போதம் சரியாக நடந்து வருகிறதா என்று பார்க்க குழந்தைகளின் மனப்பயிர்ச்சி யெப்படி யிருக்கிறதென்று மட்டும் தெரிந்துகொண்டு மதபோதனை விஷயங்களில் சிறிதும் தலையிட்டுக்கொள்ளக் கூடாதென்று கண்டிப்பாய் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள்.—இது நிற்க.

குழந்தைகளுக்குப் நல்லொழுக்கம் படியச் செய்வதில் உபாத்தியாயர்களுடைய நோக்கம் எப்படியிருக்கவேண்டுமென்று வித்யா இலாகா தலைவர் குறிப்பாய் விளக்கிக் காட்டியிருப்பதை யெடுத்துத் தமிழில் விளங்கக் கூறுவோம்.

குழந்தைகளுக்கும் பின்வரும் நல்லொழுக்கங்கள் படியும்படி உபாத்தியாயர்கள் ஜாக்ரதையாயிருந்து பார்த்து நடத்தவேண்டியது.

1. Habits of cleanliness.—சுத்தம், சுசி. இது தேஹ சுத்தம், மனோ சுத்தம், பண்டம் பாடிகளின் சுத்தம் ஆகிய இவையெல்லாவற்றிற்கும் பொருந்தும். இது அப்பியாச முதிர்ச்சியில் ஹிருதய சுத்தியை உண்டுபண்ணும். அதிலிருந்து 'திருவருட்பேறு' என்னும் கல்வியின் பயன் சித்திக்கும்.

2. Punctuality.—ஒழுங்கு தவறாது நடத்தல். இது ஸ்திரபுத்தி, தீர்க்காலோசனை, விசார ஞானம் என்கிற சம்பத்துக்களை யளிக்கும். "எண்ணித் துணிவது கர்மம், துணிந்தபின், எண்ணுவ மென்பது இழுக்கு" என்னும் வைராக்கிய தீரத்தை யுண்டுபண்ணி, நினைத்தது முடிக்கும் ஆற்றலை (சக்தியை) அளிக்கும்.

3. Good manners and language.—மட்டு மரியாதையோடு கூடிய நல்ல மாதிரி நடத்தை, சுபாஷித வாக்கு. இவ்விரண்டும் ஜனசமூகத்தில் ஹிதமாகப் பழகி வருவதற்கான சாதனங்களாயிருந்தவை அப்பியாச முதிர்ச்சியில்

படி ஞானத்தோடு சுகிர்த லாபத்தை யளிக்கும்.

4. Cheerful obedience to duty.—செய்கடனுக்குப் பின்வாங்காமல் உகந்து செய்யும் தன்மையும்பழக்கமும் படியச்செய்யவேண்டும். இது நிர்ப்பந்தத்தினால் படியச் செய்யக்கூடிய மனப்பழக்கமன்று. செய்கடனைச் செய்வதினாலுள்ள அறிவுவிர்த்தியாம் ஆத்ம லாபத்தை யுணர்ந்து உணர்ந்தபடி அவ்வழியில் நின்றுழைப்பதற்கான மனப்பழக்கம் வேண்டும் இதற்கு இந்திரியங்களை மனோ விலாசத்திலடக்கி, மனோ விலாசத்தை இஷ்டம்போல் அடக்கியாள்வதிலுள்ள சந்தோஷ மின்னதென்றுணரல்வேண்டும். இது சத்சங்க சுபவாசனையாலும் பாலசிசுக்ஷையில் பெரியோர் சகவாசம் லபிப்பதாலும், மேலோர் சரித்திரங்களைப் படித்துச் சிந்திப்பதாலுமே படியவேண்டும். பிள்ளைகளின் மனோ பக்குவத்தை யறிந்து அவர்களுடைய சக்திக்கு மிஞ்சின வேலையிடாது, சக்தியானுசாரம் வேலையிட்டு, இட்ட வேலையைத் தொடுபிடியாய்த் தொட்டுமுடிப்பதினால் உண்டாகும் மனக்கிளர்ச்சியும் அறிவுவிர்த்தியும் அதனாலுண்டாகும் இன்பமும் இன்னதென்று அவர்கள் உணரப் பழக்கல் வேண்டும். இந்தக் குணம் எல்லாக் குழந்தைகளிடத்தும் ஏறத்தாழ சுபாவமாகவே ஆத்ம சக்தியாக அமைந்துள்ளது. அதைப் பக்குவமறிந்து பயிர் செய்து வளர்க்கவேண்டும்.

5. Patienee.—பொறுமை, சாந்தம். "சக்திக்குவித்து தனது உபசாந்தமே" என்று பெரியோர் வாக்கிருப்பதால், இதற்கு முன்னே சொன்ன மனப்பழக்கம் படியப்படிய, "நல்ல காரியத்துக்கு நாலாயிரம்தடை" யென்பது உலக தர்மமாதலால், நல்ல காரியத்தைத் தடையறுத்து இனிது முடியச் செய்துமுடிக்க இடையில் நேரும் இடுக்கண்களைப் பொறுத்துக்கொண்டு அவற்றை வெல்வழி தேடும் குணமும், அந்த குணத்தினால் வரும் நினைத்தது முடிக்கும் ஆற்றலும், சாந்தம் என்கிற மனம் தடுமாறாது நிச்சலமாக விருக்கும் நிலையின்றி சித்திக்காதாதலால், சாந்தமும் தானே சித்திக்கும்.

6. Consideration and respect for others.—பரோபகார சிந்தை என்னும் மனப்பழக்கத்தில் இவை இரண்டும் அடங்கும். இதற்கு சுயநயம் பாராட்டாது பிறர்நயம் பாராட்டும் குணம் இன்றியமையாதது. இது தேஹ பாவனையும் அதனால் வரும் வயிற்றுப் பாடே பாடு என்கிற கொள்கையும் நீங்கினாலன்றி சித்திக்காது. "நாம் உழைக்கப் பிறந்தோம்: உழைப்ப உழைக்கின் எல்லாருக்கும் ஏற்றத் தாழ்ச்சியின்றி படியளக்கும் பகவான் கூலி கொடுக்காது போகார்" என்கிற திடசித்தம் உண்டாகவேண்டும். இந்த அந்தர்பாவம் அமைந்தால் தான் பிறர்நயம் பாராட்டல் சாத்தியமாகும். இஃதின்றி பரோபகாரம் செய்வதாகச் சொல்வதெல்லாம் வீண்வேஷமன்றி அதில் உண்மை யில்லை,

7. Honour and truthfulness in word and act.—இதற்குத் திரிகரண சுத்தியென்று சொல்கிறது. பொய் பித்தலாட்டம் செய்வதால் அறிவுக்குள்ள மஹிமை போய்விடும். அஃதோடு கண்யமும் போம். வாக்கும் நடத்தையும் ஒன்றுபட நடப்பது உண்மையுள்ளவர்களிடத்தில் தான் சகஜமாயிருக்கும். மற்றவர்களிடத்தில் இவை பேதப் பட்டேயிருக்கும். இது உலகசுபாவம். ஆயினும் அது அறியாமை காரணமாக ஏற்பட்டு நடப்பதால் அதனாலுண்டாகும் அனர்த்தபரம்பரைக்கு அளவு சங்கையில்லை. "கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் வெளியாகும்" என்கிற

பழமொழி ஸத்தியம் நிலைக்குமேயன்றி அஸத்தியம் நிலைக்காது என்பதை வற்புறுத்துவதாயிற்று. ஔவையார் "நிலையில்லாக் காரியத்தை நிறுத்தவேண்டாம்" என்று சொன்னதும் இது பற்றியே. "நல்ல காரியத்திற்கு நாலாயிரம் தடை" யென்பது உலகதர்மம். "கல்வியைக் கல்: கற்றபடி நில்" என்றார் பெரியோரும். கல்வியென்றால் மனப்பழக்கம். மனப்பழக்கத்தினால் வித்தியா சம்பந்தனாகும்படி வித்யாப்பியாசம் செய். அந்த அப்பியாசம் முதிர்ந்து சகஜானுபவமாகவேண்டி அந்த அப்பியாச வழியில்தானே 'கற்றபடி' (மனதை யடக்கக் கற்றபடி) நின்று பார். அப்பொழுது திரிகரண சுத்தியினாலுண்டாகும் பரமலாபம் நிதரிசனமாகப்படும். நினைப்பதொன்று சொல்வதொன்று செய்வதொன்றாகவுள்ள பழக்கம், மனதைக் குழப்பத்தில் விழச்செய்து சிந்தாகுலத்தை யுண்டுபண்ணிச் சீரைக்குலைக்கும்.

8. Kindness towards all living creatures—ஜீவகாருண்யம். இஃதன்றி மனிதன் மிருகப் பிராயனாகிறான்.

9. Especially towards those weaker than themselves.—"எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்" என்பதின் உண்மையை ஓர்ந்து ஏழைக்கிரங்கி, "ஏழைபங்காளனும்" பகவானுடைய கிருபைக்குப் பாத்திரமாகவேண்டும்.

10. இதற்குப் பரமசாதனமாயுள்ளது "Social-Service." இதைக் குழந்தைகளுக்குப் போதிக்கும்வழி சோபானக் கிரமமாக மேற்படி ஒட்டுத்தரவின் இரண்டாவது பாரா கடைசி வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப்பதினைந்து வருஷகாலமாக விவேகசிந்தாமணி போதித்து வந்ததெல்லாம் வித்யா இலாகாத்தலைவர் அவருடைய உத்தியோக முறையில் வெளியிட்டிருக்கும் இந்தப்பத்துப் போதனைகளில் அடங்கினவையன்றி இவைக்கு அந்நியமாக ஒன்றுமில்லை. அறிவைப் பரவச் செய்யவென்று நாமுழைக்கத்துவங்கி இப்பொழுது 30-வருஷ காலமாகிறது. இதில் சென்ற 20-வருஷகாலமாக ஸன்மார்க்க போதனையைப் பற்றித் தீரவிசாரம்செய்து சரியான போதனா முறையின்னதென்பதைப் பலவாற்றானும் ஆராய்ந்துணர்ந்து அநுபவபூர்வகமாய் மனதை நல்வழியில் பழக்கும் முறையை அநுசரித்துப்பார்த்துக் குழந்தைகளுக்கு நல்லொழுக்கம்படிய பாலபோத சிக்ஷைசெய்யும் வகையைக் கிரகித்து ஓதிவந்தோம். நாம் ஓதிவந்த உண்மைகள்தானே பாலபோத சிக்ஷா சாதனமாகப் பிரதம பாடசாலைகளில் போதிக்கப்பட வேண்டுமென்று வித்யா இலாகாத்தலைவர் உத்யோகமுறையில் பிறப்பித்திருக்கும் ஒட்டுத்தரவில் கண்டிருக்க, அதையெல்லாரும் உணர உணர்த்தலானோம்.

Moral Instruction in Elementary Schools—The Educational Committee of the Children's Movement has addressed a Circular Memorandum to Local Bodies and officers in charge ot Elementary education in schools, soliciting their co-operation, with a view to their taking early and effective action in the matter of providing an efficient aid for moral instruction in Elementary schools under their control. The Memorandum draws the attention of all concerned to the suitability of the *Vivekachintamani*, as an indispensable companion and aid to teachers in imparting moral instuction in Elementary schools, and appeals to them "to see that every Tamil school is provided with one copy at least" of the *Vivekachintamani*, which has been converted into a school-journal suitable for use in all Tamil Elementary schools and supplied to all the Government educational institutions and officers in charge of Elementary education in Tamil Districts, on the recommendation of the Director of Public Instruction, sanctioned by Government.-*The Madras Mail 1st Octr.* 1915.

CUTTLE FISH.

* கடல்நுரை ஜந்து.

நான் ஒருதடவை ஒரு தனவந்தர் வீட்டிற்குப் போயிருந்தேன். அங்கேயும் இன்னும் மற்ற பெரியமனுஷியர்கள் சிலர் வீடுகளிலும் வெகு நேர்த்தியான கையெழுத்துப் படங்கள் சில பார்த்திருக்கிறேன். இவைகள் அநேக வர்ணங்கள் உபயோகப்படுத்தி எழுதப்பட்டவைகளல்ல. ஒரே ஒரு வர்ணமே உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் அந்த வர்ணத்தை சில இடங்களில் மெல்லிதாகவும், சில இடங்களில் கனமாகவும் உபயோகப்படுத்தியிருந்தது. இந்த வர்ணத்தின் மாதிரி, வெகு கொஞ்சம் சிகப்புக்கலந்த நல்ல கறுப்பு மசிபோலிருக்கும். இந்த வர்ணத்தினால் எழுதப்பட்ட படங்கள் வெகு ஜாஸ்தி விலையுள்ளவைகள். ஏனென்றால் இந்த வர்ணம் அகப்படுவது எளிதல்ல. இந்த வர்ணம் ஸமுத்திரத்தில் வசிக்கும் ஒரு ஜந்துவின் உடம்பிற்குள்ளிருக்கிற சிறு பையிலிருந்து எடுக்கப்படுகிறது. இது நாம் ஸாதாரணமாகப் பார்க்கிற ஜந்துவில்லை. இந்த ஜந்துவின் உடம்புக்குளளிருக்கும், நம் தேகத்தினுள் உள்ள எலும்புக்கூடுபோல் கெட்டியான பாகம்தான் கடையில் வெகு ஸாதாரணமாக கடல்நுரை யென்று விற்கப்படுகிறது. இதைக் கற்பலகைகள் உபயோகப்படுத்துகிற சிறு பிள்ளைகள் தங்கள் பலகைகளைத் தேய்த்து சுத்தம்செய்ய எப்பொழுதும் தங்கள் சட்டைபையில் வைத்துக்கொண்டிருப்பார்கள். பள்ளிக்கூடங்களில் கணக்கு முதலியது எழுதி [illegible]விக்கவேண்டியதற்கு உபயோகப்படுத்து[illegible] முக்காலிமேல் தூக்கிவைத்திருக்கிற, கறுமை பூசிய பெரும் பலகைகளையும் இக்கடல்நுரை போட்டுத் தேய்த்தே சுத்தம் செய்கிறார்கள். காதில் குடைச்சல் உண்டானால் இக்கடல்நுரையில் பாலாக இருக்கும் பாகத்தில் சிறிது கிள்ளிப்போட்டு நல்லெண்ணையில் காய்ச்சி காதில் விட்டுக்கொள்ளுவார்கள்.

இக்கடல்நுரையின் ஒருபக்கம் எலும்பு போல் உறுதியாகவும் மற்றொருபக்கம் மிருதுவாகவும் இருக்கும். மிருதுவாயிருக்கும் பக்கத்தை உற்றுப்பார்த்தால் வரிசைவரிசையாகக் கோடுகள் தெரியும். இளம்பருவமான ஒரு ஜந்துவின் இவ்வெலும்புக்கும் முதிர்பருவமான ஜந்துவின் எலும்புக்கும் வித்தியாஸம் எலும்பின் பிரமாணத்தினால் மாத்திரமல்ல, இதின் உள்பக்கத்திலுள்ள மேற்சொன்ன மிருதுவான வஸ்துவின் அடுக்குகளின் எண்ணின் ஜாஸ்தி குறைவினால் கூட அறிந்துகொள்ளலாம். இம்மிருதுவான வஸ்து குணத்தில் சீமைச்சுண்ணாம்புக்கு ஒப்புள்ளது. ஜந்துவின் முதிர்வயதிற்குத் தக்கபடி இது அடுக்கடுக்காய் ஜாஸ்தியாகிக்கொண்டு வரும்.

கடல்நுரையின் ஒரு நுனியில் ஒரு முள்ளு இருக்கும். இந்த நுனி இருக்கும் பக்கம் ஜந்துவின் தலைப்பக்கம். இந்தப்பக்கத்தில் இஜ்ஜந்துவுக்கு பத்து (10) கைகள் உண்டு. இவை மெலிந்து நீண்டு இருக்கும். இப்பத்துக்கைகளுள் இரண்டுமாத்திரம் மற்றவைகளைக்காட்டிலும் வெகு அதிகமாக நீண்டிருக்கும். ஒவ்வொரு கையின் நுனியிலும் உருஞ்சும் வாய்கள் அநேகம் இருக்கின்றன.

இந்த ஜந்து மழைநாட்களில் விசேஷமாக நிலத்தில் ஊர்ந்துவரும் "பாம்புக்குத் தண்ணீர் கொண்டுபோகிறது" என்று பெயர் வழங்கும் நத்தையின் சாதியைச் சேர்ந்தது. இரண்டு பெரியகண்களுள்ளது. கைகளின் நுனியில் உள்ள உருஞ்சும் வாய்களைத்தவிர வேறு தனியாக வாய் கிடையாது. இந்த உருஞ்சும்வாய்கள் வழியாக அநேக சிறுபூச்சிகளை கடல்நீருடன் உருஞ்சிக்கொண்டு சாப்பிடும். இதின் அபானத்துவாரம் (anus) தலைப்பக்கத்திலேயே இருக்கிறது. இதன் தேகத்தில் சிகப்பான இரத்தம் ஓடுகிறது. இதன் இருதயம் கவனித்துப்பார்த்தால் வெகு வேடிக்கையாகவிருக்கும். இது சுவாசிக்கிறது மீன்களைப்போல. இதன் உடம்பினுள் ஒரு பை இருக்கிறது. இந்தப்பை ஜந்துவின் அபானவாயில் வழியாகவே திறக்கிறது. இப்பையில் தான் நான் முன்சொன்ன வர்ணம் சேர்த்து வைக்கப் பட்டிருக்கிறது. ஒருமுதிர்ந்த கடல்

* *Sepia officinalis.* Common uame—Cuttlefish.

நுரை ஜந்துவினிடமுள்ள இந்தப்பையில் ஒரு (tea spoon) சின்ன உத்தரணி அல்லது கரண்டிக்கு ஜாஸ்தியாக இந்தவர்ணம் இருக்கும்.

இந்த ஜந்துவின் இயற்கை வழக்கங்களில் இரண்டு விஷயங்கள் மிகவும் ஆச்சரியப்படத்தக்கவைகள்.

(1) இந்த ஜந்துவுக்கு உள்ள 10-கைகளில் இரண்டு வெகு நீண்டவைகள் என்று சொன்னேனல்லவா! இந்த இரண்டு கைகளும் மற்றக் கைகள்போலவே அநேக உறிஞ்சுவாய்களை உடைத்தானவைகள். ஆனால் இவைகளுக்கு சாப்பிடுகிறதைக்காட்டிலும் அதிகமான செய்கை ஒன்று உண்டு. அதாவது தன்னினப்பெருக்கு. தன்னினப்பெருக்கு விஷயமாக இரண்டு - அதாவது, ஆண்பெண் ஜந்துக்கள் கூடிப்பிரிந்தால் அவைகளுக்குத் தங்கள் தேக அவயவங்களில் யாதொரு லோபமும் நேரிடுகிறதில்லை. நம் கண்ணுக்கே தெரியாத நீரிலுள்ள வெகுவெகு சிறு ஜந்துவான (amœba) அமீபா வகுப்பில் இரண்டு சேர்ந்தால் மறுபடி உடனே பிரிகிறதில்லை. இரண்டும் ஒன்றாகவே ஒருமித்து ஒரே ஜீவன்போல சற்றுகாலம் வாழ்ந்து பிறகு இரண்டாகப் பிரிகிறது உண்டு. இப்படி ஒருமித்துப் பிரிகிறதினால் இந்த ஜந்துக்களுக்கு தன்னினத்தைப் பெருகச்செய்யும் சக்தி வருகிறதென்று தெரிகிறது. அமீபாவைக்குறித்து இன்னொருதடவை சொல்லுவேன். இந்த கடல்நுரை ஜந்துவின் ஆண்பெண் கலந்தால் அமீபாவைப்போல் முழுவதிலும் இரண்டும் ஒருமித்துப்போகிறதுமில்லை. சேர்ந்ததுபோல் பிரிந்து வருகிறதுமில்லை. சேருகிறதிலும் ஒன்றுடன் ஒன்று தேகமுழுவதும் ஒன்றுபட்டு நெருங்குகிறதில்லை. ஆணும் பெண்ணும் ஒன்றுடன் மற்றொன்று இந்த நீண்ட கைகளை நீட்டிச்சுற்றி உறிஞ்சும் உறுப்புகளால் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளவே இந்தக் கைகள் ஒட்டிகொண்டு விடுகின்றன. பிறகு பிரிக்க சாத்தியமில்லை. ஆகையால் இவைகள் பிரியும்போது ஆணின் நீண்ட கையின் நுனியானது அறுந்துபோகிறது. இந்த பாகம் பெண்ணின் கையுடன் ஒருமித்துப்போகிறது. இந்த ஒருமித்த இடம் கொஞ்சகாலம் தரித்து பெருத்து ஒரு கோவைப்பழம் போலாகிறது. இப்படி ஆகும் தருணத்தில் அந்தச் சிறு தலையணைபோன்ற வீக்கத்தினுள் கர்ப்பம் முற்றி முட்டைகள் நிரம்பி விடுகின்றன. பிறகு பெண்ணும் இந்தத் தன் கைநுனியை நழுவவிடுகிறது. நழுவவிடப்பட்ட கர்ப்பம் கடலில் மிதந்துபோய்க் கொண்டு வெடித்து தன்னுள்ளுள்ள சிற்றினங்களை வெளிப்படுத்துகின்றது.

(2) இதுதவிர மற்றொரு வெகு விநோதமான வாடிக்கை இந்த ஜந்துவினிடமுள்ளது. கடலில் வாழும் ஸகல ஜந்துக்களுக்கும் வைரிகளுள்ளன. ஒன்றை ஒன்று தின்று பசிதீர்த்தே காலம் தள்ளவேண்டியிருக்கிறதல்லாது நிலத்தில் நாய், பூனை, கிளி முதலியவைகளுக்கு நாமிடுவதுபோல் மீனுக்கும் நண்டுக்கும் கூப்பிட்டிடுகிறவர்கள் யார்?

தன்னை எந்த சமயத்தில் தன் விரோதி பிடித்து விழுங்கிவிடுமோ என்று ஸதா பயமுள்ள இந்த நீர் ஜந்துக்கள் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எத்தனையோ சாதன ஏற்பாடுகளுடன் அமைந்திருக்கின்றன. இந்த ஏற்பாடுகளுள் கடல்நுரை-ஜந்துவிற்கமைந்துள்ள ஏற்பாடானது வெகுயுக்தியுடனுள்ளதாக இருக்கிறது. இதினுடம்பிலுள்ள பையைக்குறித்து முன்னமே சொன்னேன். இதில் கறுப்பானமை ஒன்று இருக்கிறதல்லவா! கடல்நுரை ஜந்து தன் வைரி ஸமீபத்தில் வருகிறதா இல்லையாவென்று பார்த்தறிந்துகொள்ள நேர்த்தியான கண்கள் இரண்டுள்ளதாகையால் ஸாதாரணமாக வைரியைக்கண்டு ஓடிப்போகிறது சுலபமே. ஒருக்கால் தன்னை அறியாமல் வைரி சமீபித்துவிட்டால் உடனே இந்தஜந்து தன் பையிலிருக்கும் மையை வெளியில் தன் வைரி இருக்கும் பக்கமாகப் பீச்சிவிடுகிறது. இந்த மை தண்ணீரில் கலந்து தன்னைச்சுற்றி ஒரு பெரிய மேகம் கவர்ந்துகொண்டதுபோல் இந்த ஜந்துவை மறைத்துவிடுகிறது. இந்த மறைவால் காப்பாற்றப்பட்ட கடல்நுரை ஜந்து உடனே கடலில் ஓடி யொளிந்துவிடுகிறது.

சென்னையிலுள்ளவர்கள் கடற்கரையில் மீன் பிடிக்கிறவர்களிடம் சொன்னால் சுலபமாக இந்த ஜந்துவைத் தருவித்து நேரில் பார்க்கலாம். மற்றும் கடற்கரை யூர்களில் உள்ளவர்களும் நேரில் பார்க்கலாம். நேரில் பார்த்தால், ஐயோ! இதுவரையில் இந்த விநோதமான ஜந்துவைப் பார்க்கவில்லையே என்று வருத்தப்படுவீர்கள்.

THE STREET OF BY-AND-BYE.

(ADAPTED)

'பின் செய்வோம்' என்னும் பேதை நெறி.'

நேரிசை வெண்பா.

1. பின்செய்வோம் என்னுமொரு பேதைநெறிக் கேகாதீர்!
என்செய்யும் என்பதனை எண்ணிடுவீர்;—பொன்செய்பூண்
மைந்தர்காள், ஆங்கணடி வைத்தார்க்கு மற்றில்லைச்
சிந்தையுறு சீர்நிலைக்கட் சேர்வு.

ஏகாதீர் = போகாதீர்கள், ஆங்கண் = அவ்விடம், சீர்நிலை = உயர்ந்தநிலைமை.

2. கூடிக் கெடுக்கும் குணமுடையார் கொள்கைபோல்,
வேடிக்கை யாவிருக்கும் மேவுநெறி;—நாடியதில்
மெள்ளவரு தென்றற்கால் மெய்குளிர வீசுகினும்,
கள்ளமுடைத் தென்றகன்மின் கண்டு.

கொள்கை = குணம், தென்றற்கால் = தென்றற்காற்று, அகல்மின் = விலகுங்கள்.

3. எத்தனைபேர் யான்காண ஏதத்தின் நீங்கி அறம்
உய்த்தநெறி செல்ல உகந்தபேர்!—புத்தி
வகைமோசம் ஆக மடியின்வலைப் பட்டுத்
தகைவுண் டதிற்கிடந்தார் தாம்!

ஏதம் = தீயொழுக்கம், அறம் உய்த்தநெறி = நல்லொழுக்கம்.
உகந்தபேர் = விரும்பினபேர், மடி = சோம்பல், தகைவுண்டு = தளர்ந்து.

4. கல்விமுக டேறிக் கடக்கக் கருதினனால்,
ஒல்வகையால் ஓர் சிறுவன் ஊக்கமொடும்;—செல்வனவன்
புந்தியொளி ஒல்கிப் புரிந்ததனைச் சாராதென்?
அந்தநெறிக் கண்ணிருந்தான் ஆங்கு!

ஒல்வகை = பொருந்தும்வகை, ஒல்கி = குறைந்து, புரிந்தது = விரும்பியது.

5. எண்ணினன் ஓர்வணிகன் "எண்ணியவா றென் கருமம்
நண்ணுதலால் நன்னியம நல்கூர்ந்தோர்—உண்ணச்
சொரிந்திடுவேன்." என்னத்; துயர்துடையா தந்தோ!
இருந்தனனே அந்நெறிக்கண் எய்த்து.

6. "அந்தோ! நின் தம்பி அயர்ந்தான் அவன்பிழையைச்
சிந்தியேல், மன்னி" எனச்செப்பினேன்—"இந்தாநான்
மன்னிப்பேன் மாயும்முன்." என்றான் மடிந்திட்டான்,
அந்நெறிக்கட் டேராமுன் ஆங்கு!

7. வீணேநாள் எல்லாம் விழலுக் கிறைத்தயர்ந்த
மாணாதான் தன்மனத்தை வாங்கிப்பின்—சேணார்
பரநெறியில் நன்று பதிக்க நினைந்தும்
ஒருவிலனே அந்நெறிக்கண் உற்று.

விழலுக்கிறைத்தல் = பயனில்லாமற் போக்குதல், மாணாதான் = பெருமையில்லாதவன்,
ஒருவிலன் = நீங்கினானில்லை.

கண்டீரோ மைந்தர்காள்! காட்டும் இவர்க் குற்றகதி,
கொண்டீர்நீர் அந்நெறியின் குத்திரத்தை,—அண்டாது
தப்புவீர் மூப்புவந்து சாருமுன், சார்ந்தக்கால்
எப்பொழுதும் உய்வில்லையே நங்கு.

குத்திரம் = வஞ்சனை, உய்வு = பிழைப்பு.

BIOGRAPHICAL SKETCHES. III.
MEERABAI THE DEVOUT RANI OF CHITOOR.
சரித்திரமஞ்சரி—3.

மீராபாய் என்னும் புண்ணியவதியின் சரித்திரம்.

'பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.'—குறள்.

II.

மீராபாய் ஆரத்தைக்கொண்டதும் மாறுருக்கொண்ட ஆக்பரை நோக்கி உலகவின்பத்தைத் துறந்து சந்நியாசம் பூண்ட உம்மிடத்தில் இவ்வளவு விலை பெற்ற மாணிக்கமாலை வந்தவகையென்னவென்று வியந்து கேட்டாள். அதற்குத் துறவிவேஷம் பூண்டோன், யான் யமுனை நதிதீரத்தில் ஸ்நானஞ் செய்துகொண்டிருக்கும்போது ஆற்றினின்றும் அதைக்கண்டெடுத்தேன்; அதை நினதன்பிற்கு உரித்தாகிய கடவுளுக்கு அணிவித்தலன்றி வேறோர் நல்வழியில் உபயோகிக்க வகையறியாததால் நின்பால் கொணர்ந்து கொடுத்தேனென்று விடையளித்தனன். அது கேட்டு மீராவும் அவனிடம் விளங்கிய அன்பிற்காக வெகுவாய்ப்புகழ்ந்து மெச்சினாள். பிற்பாடு சக்கிரவர்த்தியும் அவன் பாடகனும், அவர்கள் மாறு கோலத்தை யாவரும் அறிந்துகொள்ளாமலே வெளியேறி டில்லி நகரம் வந்து சேர்ந்தார்கள்.

விலைபெற்ற அம்மாணிக்கமாலை மீராவுக்குக் கொடுக்கப்பட்ட சமாசாரம் ஊரடங்கலும் பரவிற்று. மீராவின் கணவனாகிய அரசன் அம்மாலையைப் பார்க்கவேண்டுமென்று சொன்னபடியால் அது அவனிடம் கொண்டுவரப்பட்டது. அரண்மனை இரத்தினப் பரீக்ஷைக் காரர்களைக்கொண்டு அதைச் சோதித்ததில், அது பத்து லக்ஷ ரூபாய் பெறுமானதென்று அவர்கள் சொன்னதோடு, அவர்களிலொருவன் "இது ஆக்பர் பாதுஷாவுக்கு கொஞ்சகாலத்திற்கு முன்னர் விற்ற மாலையைப் போன்றிருக்கிற"தென்று சொன்னான். ஒருக்கால் சக்கிரவர்த்தியே கோவிலிற்கு வந்துபோயிருக்கக் கூடுமென்று அரசன் ஐயமுற்று, அவ்வாறு வந்துபோனவர்களின் அங்க அடையாளங்களை விசாரித்ததில், ஆக்பரே நேரில் தன் மனைவியை வந்து பார்த்துப்போனதுமல்லாமல் அவளைத்தொட்டு இரத்தினமாலையைக் கொடுத்துப்போனதாகவும் அரசனுக்குத் தெரியவந்தது. தெரிந்தும் மீராவின் பெருமையை நன்கே யுணராத அவ்வரசன் மிகவும் சினந்து, அவள் மகம்மதிய அரசனைக் கண்டதாலும், அவன் தொட்டுக்கொடுத்த ஆரத்தை வாங்கியதாலும், அவள் சாதியிழந்தது மன்றியில் மீவார் ராஜவம்சத்திற்கே பேரவமானம் கொணர்ந்தாளென்று கடிந்து, தனது நாட்டு ஜனங்கள் என்ன அவதூறு சொல்வார்களோ வென்று பயந்து, அவ்வவமானத்தை யொழித்தற்பொருட்டு மீராவைக் கொன்றுவிடவேண்டுமென்று உத்திரவு பிறப்பித்தான். மீராபாயிக்கு மாறுவேடம்பூண்டு வந்தவன் டில்லிச் சக்கிரவர்த்தியென்று கொஞ்சமேனும் தெரியாது. தெரிந்தாலுங்கூட, அவன் உள்ளன்புடன் அவளிடம்வந்து மெய்ஞ்ஞான மார்க்கத்தைத் தனக்குப் போதிக்கவேண்டுமென்று கேட்டிருக்கும்பக்ஷத்தில்; அவளுக்குக் கொஞ்சமேனும் தடையிருந்திராது. கடவுளின் சிருஷ்டியில் அமைந்திருக்கும் மனிதர்களில் சண்டாளரேனும், பிராமணரேனும், மகம்மதியரேனும், மற்றும் யாவரேனும் அவர்களெல்லோரும் கருணைக்கடலாகிய கடவுளின் அன்பிற்கு சமமான பாத்திரமுள்ளவர்களென்று மீராபாய் நன்றாயுணர்ந்திருந்த ஞானியாதலால் அவளுக்கு யாதோர் வேற்றுமையும் தோற்றியிராது.

மகா பக்திசிரோமணியாகிய மீராபாயைக் கொன்றுவிடும்படி அரசன் பிறப்பித்த உத்தரவைச் செய்துமுடிக்க ஒருவரும் துணியவில்லை. மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களைத் தூக்கிலிடும் தொழிலாளர்களாகிய கிராதகக் கொலைஞர்களும் மீராவைத் தீண்டப் பின்னடைந்தனரென்றால், மற்றோர் அக்காரியம் செய்ய எப்படித் துணிவர். அவள், ஏழைகளிடத்தும் செல்வவான்களிடத்தும், பாபிகளிடத்தும், புண்ணியவான்களிடத்தும், பாலியர்களிடத்தும், வயோதிகரிடத்தும், ஒரே சமமாய் அன்பு பாராட்டி தெய்வபக்தியை யூட்டி வந்தபடியால், அவளை உலகம் உய்யும்பொருட்டு அவதரித்த உலகமாதாவென்று பல்லோரும் கொண்டாடிவந்தார்கள். இப்பேர்ப்பட்ட புண்ணியவதியை உயிர்மாய்த்திட யாவர்தான் மனங்கொள்வர். இதுகண்ட மெய்ஞ்ஞானமற்ற அவ்வரசன், அரசி தற்கொலைபுரிந்து உயிர் துறந்திடவேண்டுமென்று இரகசியமாய் மறு உத்தரவு பிறப்பித்தனன். ஒருநாள் சாயங்காலம் மீரா கோவிலினின்றும் பஜனைகள் முடித்துக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பி வந்தபோது, மந்திரிகளிலொருவன் மேற்குறித்த உத்தரவை இராணிவசம் கொடுத்தான். அவள் அதை முற்றிலும் படித்துப்பார்த்துவிட்டு, நான் உயிர் துறப்பதற்கு முன்னர் மகாராணாவை ஒரு முறையேனும் பார்க்கமுடியுமோவென்று வினவ, அதற்கு மந்திரி, அது அரசன் ஆக்ஞைக்கு விரோதமென்றும், பார்க்கமுடியாதென்றும் விடைசொன்னான். அது கேட்டு, 'நல்லது அப்படியே ஆகுக, நான் எனது பர்த்தாவின் உத்தரவின்படியே நடந்துகொள்கிறேன் என்பதை அவருக்கு அறிவி' யென்று மந்திரியிடம் சொல்லிவிட்டு, தன்னுடன் கூடவந்திருக்கும் நகரவாசிகளாகிய ஆடவர்களும் பெண்டிர்களும் இச்செய்தி யுணர்ந்தால் துக்கத்திலாழ்ந்தி வருத்தமடைவார்களென்று எண்ணி, ஒருவருடனும் ஒன்றும் சொல்லாமல் அரண்மனையின் உட்புறம் சென்றாள்.

மீரா தனது இல்லம்சேர்ந்ததும் அன்றிரவு போஜனமருந்தி தன் சயனவறையுட்சென்று தூக்கம் பிடிக்காமல் வெகு நேரம் உட்கார்ந்துகொண்டிருந்தாள். நான் ஒருவருக்கும் யாதொரு தீங்கும் செய்தவளல்லவே; எக்காலத்தும் தீய எண்ணமுங்கொண்டவளல்லவே; என் பேரில் சாட்டப்பட்ட குற்றமும் குற்றமாகத்தோற்றவில்லையே; துறவறவுடை தரித்துக்கடவுளிடத்தன்புகொள்ளும் மார்க்கத்தைப் புகட்டும்படி வருந்திக்கேட்டுக்கொண்ட சந்நியாசியின் மனோரதத்தை நிறைவேற்றாமல் விட்டுவிடுவது நல்லறமாகுமோ; மெய்யன்பு கொண்டு தெய்வார்ப்பணமாகக்கொடுத்த நன்கொடையை யான் கடவுளின் பொருட்டு ஏற்றுக்கொண்டதிலும் குற்றமொன்றும் காணவில்லையே; சந்நியாசி வேடம் பூண்டவன் ஆக்பர் சக்கிரவர்த்தியென்றும், அவர் என்னைப் பரிசோதிக்க வந்தவரென்றும் யான் அறிந்திலேனல்லவோ; எது எப்படியாயினென்ன, இவைகளெல்லாம் ஊழின்பயனல்லவோ வெனப் பலவாறு யோசிக்கலானாள். எனது அன்பிற்கன்பாயிருந்த என் கணவனும் என்னை இகழத் துவக்கினர். அவரது பிரியமில்லாவிடின் எனது உயிர்வாழ்க்கை என்ன பிரயோஜனமுடையது. கணவன் அன்பிற்கு மாறுபாடாய் நடந்த நான் இருந்தென்ன போயென்ன; மேலும் மீவார் இராஜ்ஜியத்திற்கு என்னால் அவமானமுண்டாவதானால் என்னுயிரை மாய்த்து மானத்தை நிலைநிறுத்துவேன். கற்பிற்சிறந்த பெண்டிரனேகர் மானங்காத்தற் பொருட்டு உயிர் துறந்திருக்கின்றன ரல்லவோ. கணவன் பெயருக்குக் கீர்த்தியுண்டாக்குவதெனது கருமமாயிருக்க அவருக்கபக்கியாதி

யுண்டாக்கி யான் உயிர் வாழ்வதிலென்னபயனே. என்றைக்கிருந்தாலும் ஒருநாள் இக்கட்டையைக் கழித்திடவேண்டுமல்லவோ; எனது கணவனின்பொருட்டு வாழ்ந்திருந்த நான் அவரன்பை யிழந்தால் இனியொருக்கணமும் உயிரைவைத்திருக்க மனம் பெறேன், மேலும்,

'புன்புலா னரம் பென்புடைப் பொய்யுட
லன்பர் யார்க்குமருவருப்பல்லவோ
வென் பொலாமணியே யிறையே யித்தாற்
றன்பமன்றிற் சுகமொன்று மில்லையே.'

இவ்வாறு மீரா பலவிதமும் யோசித்து, கடைசியாய் 'பாராதிதனிலுள்ள செயலெலா முடிவிலே பார்க்கினின் செயலல்லவோ'வென்றும்,

. . . . அகில மீதென்னையாட்டி
பாடல் கண்டவனுங் பாடுகின்றவனுங் பருகுநீ மௌனஞான
தாதாவுநீ பெற்றதாய்தந்தை தாரமுநீ தமருநீ யாவுநீகாண.

-என்று கடவுளைத்துதித்து, மெய்ஞ்ஞானவுணர்ச்சி கொண்டு, மரணதண்டனையை ஒரு பொருட்டாயெண்ணமல் தேறுதலடைந்து சாந்தமடைந்தாள். அன்றிரவு நடு நிசிவேளையில் யாவரும் நன்றாயயர்ந்து நித்திரைசெய்து கொண்டிருக்கும்பொழுது மீரா எழுந்திருந்து, ஒரு சாமானிய ஆடைதரித்து, அவளுக்குப் பிரீதியாயிருக்கும் எல்லாவற்றிலும் பற்றையொழித்து அரண்மனையை விட்டுப் புறம்போந்து ஒரு நதிக்கரையை வந்தடைந்தாள்.

அவள், கரையின்மேரில் நின்றுகொண்டு "பொய்யுடலை நிலையன்றெனைப், போதநெறி தந்ததுஞ் சாசுவதவானந்தபோகமே யிடென்னவே, நீராளமாயுருக வுள்ளன்புதந்து நின்னருளின்னு மின்னு, நின்னையே துணையென்ற வென்னை"க்காற்றுப் பேரின்பவீட்டை யளிப்பாயென்று கடவுளைத் துதித்துப் பின்னர் அலைகளடித்துப் புரண்டோடும் ஆற்று வெள்ளத்தில் அரசன் உத்தரவின்படி செய்து முடிக்கத் திடமெனப்பாய்ந்து விழுந்தாள். பாய்ந்ததும் அவளுக்கு என்ன நேர்ந்ததென்று அவள் அறியவில்லை. அவள் உடம்பு ஆற்று நீர்ப்பெருக்கால் வெகுதூரம்வரையில் அடித்துக்கொண்டு போகப்பட்டு, நதியின் தாழ்ந்திருந்த வொரு கரைப்பக்கத்தில் ஒதுக்கப்பட்டது. இம்மாதிரி அவள் வெகுநேரம் கிடக்கையில் யாதோ வொரு திவ்விய தேஜோமயமுள்ள மகாபுருஷன் தன் முன் தோன்றி அருள் நோக்கமும், புன்சிரிப்புமுலாவிய வதனத்துடன் 'ஓ பெண்மணியாகிய மீராவே, நீ உன் கணவன் ஆக்ஞைப்படி நடக்க உன் உயிரை மாய்த்துக்கொண்டாய்; ஆயினும் நீ உலகத்தார் உய்யும் பொருட்டுச் செய்யவேண்டிய காரியம் பாக்கி யுளது; மனிதர்களின் துக்கத்தை யொழித்து மெய்ஞ்ஞான சுகத்தைக்கொடுப்பதாகிய கடவுள் பக்தியை நீ ஜனங்களுக்குள் பரவச்செய்து அவர்களுக்குச் சன்மார்க்க நெறியைப் போதிக்கக் கடவை; அதற்காக நீ உடனே புறப்படவேண்டும்,' என்று இவ்வாறு சொன்னதாக வொரு காட்சியைக் கனவிற் கண்டாள். அவள் உடனே திடுக்கிட்டெழவும், தான் தன்னுடைய ஊருக்கப்பால் வெகு தூரத்தில் ஆற்றுவெள்ளத்தால் ஒதுக்கப்பட்டுக் கிடப்பதையுணர்ந்தாள். கண்ட கனவை அவள் நினைத்து, 'என்பெலாம் நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்ப வுடலிளகமனது அழலின்மெழுகாயிடையறாதுருக வருமழைபோலிரங்கிய இருவிழிகணீரிறைப்பக்' கடவுளைப் பலவாறு தியானித்து மெய்யன்பினல் மூர்ச்சையானாள். மூர்ச்சை தெளிந்ததும், அவள் உடம்பு தண்ணீரில் அலைகளாலடிபட்டு அதிகமாய் நொந்திருந்தாலும், அவள் விழித்தெழுந்தபோது பொழுதேறியிருந்தபடியால் வெயிலின் தீட்சண்யம் அதிக கொடுமையாயிருந்தபடியாலும், அவள் தண்ணீரிலிருந்து எடுத்துக் கரையில் போடப்பட்ட மீன்போலவும் வெயிலில் போடப்பட்ட மாலைபோலவும் வாடி வதங்கி துர்ப்பலமாயிருந்தாள். நதிக்கு இருபுறமுமிருந்த நிலம் காடு முரடாயும் களர் மண்ணுள்ளதாகவுமிருந்தபடியால் செடி கொடி மரங்கள் யாதொன்றுமில்லாமல் வெயிலின் தாபம் அதிகமாகவிருந்தது. அக்காட்டில் கண்களுக்கெட்டியதூரம் வரையில் ஜீவஜெந்துக்களே அவளுக்குத் தென்படவில்லை.

ஏகவெங்கன லரசிருந்த காட்டினிற்
காகமுங்கரிகளுங் கரிந்து சாம்பின
மாகவெங்கனலெனும் வடவைத்தீச்சுட
மேகமுங்கரிந்திடை வீழ்ந்த போலுமே.

சற்றே களைப்பாறியபிற்பாடு மீரா வெப்பத்தால் அப்பொட்டல் நிலத்தின் வழியாய்ச் செல்லமாட்டாமல் ஆற்றோரமாகவே தத்தித் தள்ளாடி நெடுந்தூரம் நடந்து, அங்கோர் ஆயர் பாடியுட்சென்று, அங்குள்ளோர் கொடுத்த பாலையருந்தி கொஞ்சம் திடங்கொண்டு, 'வடமதுரை'க்கு (Mathura)* அருகாமையிலிருக்கும் 'பிருந்தாவனம்' என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தை நாடி, கடவுளின் நாம சங்கீர்த்தனங்களைப்பாடிக்கொண்டே வழிநடந்தனள். இவ்வாறு இவள் சென்ற கிராமங்களிலும், பட்டினங்களிலும், தெருக்களில் விளையாடிக்கொண்டிருக்கும் பிள்ளைகள் விளையாடுதலையொழித்து, அந்தந்த ஊர் எல்லை வரையிலும் அவளைப்பின்பற்றிச்சென்று அவள் சொல்லும் கடவுளின் திருநாமங்களைத் தாங்களும் சொல்லி அவளுடன் ஆனந்தக் கூத்தாடுவார்கள். அவ்வவர்கள் தொழில்களைச் செய்துகொண்டிருக்கும் ஆண்களும் பெண்களுமாகிய ஜனங்கள் வேலைகளை நிறுத்திவிட்டு மீராவைத் தரிசிக்கவும், அவளது இனிய பஜனையைக் கேட்கவும் கும்பல் கும்பலாய் வருவார்கள். தெய்வபக்தியில் முதிர்ந்த சிலர் அவளுடன் சேர்ந்து பஜனை செய்துகொண்டே பிருந்தாவன யாத்திரைப் போகப் புறப்பட்டனர். அவள் சென்ற ஊர்கள்தோறும் ஜனங்கள் அவளுக்கு ஏராளமான ஆடைகளும், பணங்காசுகளும், உண்பதற்கு இனிய பலவித உண்டிகளும் கொண்டுவந்து கொடுத்தார்கள். ஆனால் அவர்களின் அன்பிற்காக வந்தனமளித்ததைத் தவிர, அவள் அவைகள் யாதொன்றையும் ஏற்றுக்கொண்டவளல்லள். பசித்தபோது கொஞ்சம் பால் சாப்பிடுவதைத்தவிர அவள் வேறுவிதமான உணவைப் புசித்ததில்லை. இவள் பிருந்தாவனம் வந்து சேர்ந்தபோது கிராமங்கள் தோறுமிருந்து இவளைப் பின்பற்றிச்சென்ற ஜனங்கள் ஆயிரக்கணக்கானார்கள். பிரமதேஜஸ் மிகவும் விளங்கிய இவள் வதனத்தைப் பார்த்தவர்களும், பிரம்மதத்துவார்த்தங்களை புணர்த்துவதாகிய பாடல்களை வெகு உருக்கத்துடன் அன்பு மிகுந்த இவள் பாடுவதைக் கேட்டவர்களும், ஜனங்கள் திரள்திரளாய் இவளுடன் பஜனைகள் செய்துகொண்டு தொடர்ந்துசென்ற காட்சிகளைக் கண்டவர்களும், கடவுள்தான் பெண்ணுருக்கொண்டு மானிடருக்கு முக்தியளிப்பதாகிய பேரின்பமார்க்கத்தைப் புகட்ட வந்தனரோவென்று வியந்தனர்.

* Now known as *Muttra.*

'நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.'

(நீதியையுந் தருமத்தையும் விரும்பிய பயனுடையவர் குணத்தை உலகத்தார் புகழ்வர்.)

மீராபாய் பிருந்தாவனம் வந்து சேர்ந்த சங்கதி நாடெங்கும் பரவியது. அவள் பாடிய பாடல்களும் நாட்டுப்புறங்களிலும் பட்டினங்களிலும், அரசர் அரண்மனைகளிலும் புலையர் பாடிகளிலும், சிறியோராலும் பெரியோராலும், ஆண்களாலும் பெண்களாலும், பஜனைரூபமாகப் பாடப்பட்டன. சித்தூர் நகரிலிருந்து மீரா காணமற்போனது முதற்கொண்டு அந்நகரத்து ஜனங்களெல்லோரும் அவளுக்கு யாது துயர் நேர்ந்ததோவென்று அதிக வருத்தமுற்றிருந்தார்கள். அரசன் மீரா தற்கொலை புரிந்துகொள்ளவேண்டுமென்று 'இரகசிய உத்தரவு' பிறப்பித்திருந்ததால் அவ்வூர் ஜனங்களுக்கு அவ்விஷயம் யாதொன்றும் தெரியாது. ஆகவே, அவள் பிருந்தாவனத்திலிருப்பதைச் சித்தூர் ஜனங்கள் அறிந்ததும், அவளை முன்னமே பார்த்திருந்தவர்களும், அவளுடைய தெய்வபக்திவிசேஷத்தை இப்போது கேள்வியுற்ற மற்றோரனேகருமாக பிருந்தாவனத்திற்கு யாத்திரையாகப் புறப்பட்டு அவளை தரிசித்து வரப்போனார்கள். மீவார் தேசத்து மகாராணியாயிருந்த மீராபாய் இப்போது ஏழைப் பரதேசியாயிருந்தபோதிலும், ஜனங்களுக்கு அவள் இராணியாயிருந்தபோது இருந்ததைக் காட்டிலும் பதினாயிரமடங்கு அன்பு மேலாகவே யிருந்தது. மானிடரிடத்தில் கருணைகொண்டு அவர்கள் கடைத்தேறுவதற்கான மார்க்கத்தைக் காட்டவல்ல அருட்குணமுடையோர், உயர்குடிப் பிறந்தோரேனும், கடையரேனும், ஆணேனும், பெண்ணேனும், யாதோர் வேற்றுமையுமின்றி அவர்கள் யாவராலும் பூஜிக்கப்படுவார்களென்பதற்கு ஐயமுண்டோ!

'நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினு மஃதே துணை.'

PRIDE GOETH BEFORE FALL.

"அகம்பாவம் பொல்லாது."

ஒருநாள் ஒரு ஊரிலிருந்து பத்துப்பெயர்கள் வந்தார்கள். அயலூரில் வியபாரம் செய்துவிட்டுத் தங்களுக்குத் திரும்பி வரும்போது வழியில் மூன்று கள்ளர்கள் வந்து மறைத்துக்கொண்டார்கள். திருடர்கள் கையில் ஆயுதமிருந்தமையால் இந்தப் பத்துபெயர்களும் அவர்களை எதிர்க்கக்கூடாமல் போய்விட்டது. திருடர்கள் வியாபாரிகளைப் பார்த்து அவர்கள் கையிலிருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு, குண்டித்துணியைக் கூடவிடாமல் அவிழ்த்தெடுத்துக்கொண்டு, இந்தப்பத்து வியாபாரிகளையும் எதிரில் கோவணத்துடன் நிறுத்தி "அடா நீங்கள் எல்லாரும் நடனஞ்செய்யுங்கள் பார்ப்போம்" என்றார்கள். இந்த வியாபாரிகள் பார்த்து "இந்தத் திருடர்கள் நம் சொத்தை எல்லாம் குண்டித்துணிவிடாமல் பிடுங்கிக்கொண்டு நம்மை இப்பொழுது ஆடச்சொல்லுகிறார்கள். இதுவும் நமக்கு வந்த பொல்லாதகாலம்" என்று வருத்தப்பட்டவர்களாய் ஆட ஆரம்பித்தார்கள். இவர்களில் ஒருவன் வெகு புத்திசாலி. அவன் தான் நடனம் பண்ணுவதற்குச் சாதகமாக ஒரு பாட்டை எடுத்துக்கொண்டு பாடினான். அதாவது :—

"நாமனும் புலிப்பேர்
தாளனும் திருப்பேர்
சாவன்னு தாளனை
திருவணத் தாளன்சுற்றினால்
சாவன்னுத் தாளன் மீதி!
தா, தை, தோம், ததிங்கண!"

இந்த மாதிரியாய்ப் பாடி சுற்றிச் சுற்றி நடனம் செய்தார்கள். இந்தப் பாட்டின் அருத்தம் வியாபாரிகளுக்குமட்டும் தெரியுமேயல்லாதுமற்றவர்களுக்குத் தெரியவேமாட்டாது. வியபாரிகளுக்குள் எண்ணிக்கைகளுக்குச் சங்கேதம் உண்டு. முக்கியமாய் நம்முடைய பாட்டுக்கு வேண்டிய சங்கேதங்கள்: சா என்றால் ஒன்று, திரு என்றால் மூன்று, புலி என்றால் பத்து. இந்தப் புத்திசாலி பாடின பாட்டின் அருத்தம். "நாமனும் புலிப்பேர்"—நாமோ பத்துபெயர்கள்; "தாளனும் திருப்பேர்"—திருடனும் மூன்று ஆசாமிகள். 'முண்டனுக்கு இரண்டாள்' என்பது பழமொழி. அதற்குப் பதிலாக "சாவன்னு தாளனை திருவணத்தாளன் சுற்றினால்" என்றால் ஒரு திருடனுக்கு மூன்றுபெயர்களாய்ப் புகுந்து பிடித்துக்கொண்டால் "சாவன்னுத் தாளன் மீதி"—நம்மில், மூன்று திருடர்களுக்கும் மும்மூன்று ஒன்பதுபேர்போக பாக்கி ஒருவனிருக்கின்றான். அவன் இவர்கள் கால்கைகளைத் துணியால் கட்டிவிட்டால் நாம் நம்முடைய சொத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிடலாம் என்று கருத்துள்ள பாட்டைப் பாடி நடனம் செய்துகொண்டே வந்து "தா, தை, தோய், ததிங்கண" என்னும்போது ஒவ்வொரு திருடன்பேரிலும் மும்மூன்று வியாபாரிகளாகப் பாய்ந்து பிடித்துக்கொண்டார்கள். அதற்குள் மிகுந்தவன் துணிகளைக் கிழித்து இவர்கள் கைகால்களைக் கட்டி உருட்டினான். இவர்கள் அசையாமற் கட்டுண்டபிறகு "விழுந்திருங்கள்" "அகம்பாவம் பொல்லாது" என்று மூன்று திருடர்களையும் கட்டி உருட்டிவிட்டு பத்துவர்த்தகர்களும் தங்கள் தங்கள் சொத்தை எடுத்துக்கொண்டு வீடுவந்துசேர்ந்தார்கள். திருடர்கள் முதலில் தங்கள் காரியமாயும் அகம்பாவத்தால் கெட்டார்கள். ஆகையால் அகம்பாவம் யாவருக்கும் கூடாதென்பது இச்சிறு கதையின் கருத்தாம்.

MAHABALIPURAM—I.

'மஹாபலிபுரம்' என்று வழங்கும் மாமல்லபுரம்.

மஹாபலிபுரம் என்னும் ஊரானது சென்னைக்குத் தெற்கே 32-மையில் தூரத்தில் செங்கற்பட்டு ஜில்லாவில் கோவளம், சதுரங்கப்பட்டணம் இவைகளுக்கு மத்தியில் கடற்கரையிலிருக்கிறது. நமது தென்னிந்தியாவில் நாணயத்திற்கும் ஆச்சரியத்திற்கும் பெயர்பெற்ற சிற்பவேலைகள் எவ்விடமிருக்கின்றனவென்றால் மஹாபலிபுரத்தில்தான். இந்தக்காரணத்திற்காகவே அநேக வெள்ளைக்காரர்கள் ஒவ்வொரு விடுமுறைதோறும் மஹாபலிபுரம் போய்ப் பார்த்துவருவது வழக்கம். அன்றியும் மஹாபலிபுரத்தைப்பற்றியும் அவ்விடத்திய சிற்பத்தைப்பற்றியும் அநேக புஸ்தகங்களில் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். நம்மவர்களில் அநேகர் மகாபலிபுரத்தைப் பார்த்தேயிருக்கமாட்டார்கள். செங்கற்பட்டில் அல்லது சென்னையிலிருக்கும் சிலர் மாத்திரம் இந்த ஊரைக்கண்டுகளிக்கும் பாக்கியம் பெற்றிருக்கக்கூடும். அங்கேயுள்ள அபூர்வக்காக்ஷியை எல்லோரும் போய்ப்பார்த்து வியப்பை அடையும்பொருட்டு நாமிந்த சஞ்சிகையில் இந்த ஊரைப்பற்றி எழுத முயலுகிறோம்.

முதல்முதலில் மஹாபலிபுரம் என்ற பெயரைப்பற்றி சற்று விசாரிப்போம். இந்த ஊரில் மகாபலிசக்கிரவர்த்தி யாண்டதாகவும் அதன் நிமித்தம் இந்த ஊருக்கு 'மகாபலிபுரம்' என்று பெயர்வந்ததாகவும் சிலர் சொல்லுவார்கள். மகாபலிசக்கிரவர்த்தி கதை எல்லாருக்கும் தெரிந்தவிஷயமானதையாலதை நாமிங்குஎடுத்துக் கூறுவது அனாவசியம். ஆனால் இந்த ஊரிலிருக்கும் சாஸனங்களில் ஒன்றாவது மகாபலிசக்கிரவர்த்தியைப்பற்றிச் சொல்லாததினால் மகாபலிபுரமென்று இந்த ஊருக்கு வந்த பெயரானது காரணமின்றி ஜனங்களால் சப்தானுஸாரியாய் கொடுக்கப்பட்டதாக ஊகிக்கவேண்டியிருக்கிறது. 'மகாபலிபுரம்' என்பது எந்த சப்தத்தை அனுசரித்து வந்தது? ஆனால் இந்த ஊரின் சரியான பெயர் என்ன? என்றுகேள்விகள் பிறக்கலாம். சாஸனங்களாலும் சரித்திரத்தாலுமிந்த ஊரின்பெயர் 'மாமல்லபுரம்' என்று ஏற்படுகிறது. மல்லான் என்பது பல்லவ வம்சத்து அரசர்களின் பட்டப்பெயர். இவர்கள் சோழ அரசர்களுக்கு முந்தி தொண்டமண்டலத்திலாண்டுவந்தவர்கள். 'மா' என்றால் 'பெருமை பொருந்திய' என்பது எல்லாருக்கும் தெரிந்த அருத்தம். 'பெருமை தங்கிய மல்லவர்களுடைய பட்டணம்' என்பது இதன்பொருளாகும். இந்தச் சிறு ஊர் பழைய காலத்திலிருந்தபடியாலிதற்கு 'மாமல்லபுரம்' என்று பேருண்டாயிற்று. மாமல்லபுரம் என்ற சப்தங்களுக்கு பிற்காலத்தில் அதிலடங்கிய சரித்திரம் தெரியாமற்போகவே அங்கிருந்த ஜனங்களுக்கு அருத்தம் விளங்கவில்லை. அந்த சப்தங்களை ஒருவாறு மாற்றி மகாபலிபுரம் என்று வைத்துவிட்டார்கள். இந்த 2-பெயர்களுடனும் இன்னமொருபெயர் இந்த ஊருக்கு உண்டு. அதாவது 'Seven pagodas'—ஏழு கோவிற்கள். இந்தப் பெயர் பார்க்கும்பொழுதே இங்கிலீஷ்காரர்களிடமிருந்து. உண்டானதாகத் தெரிகிறது. 100,—150-வருஷங்களுக்கு முன் இந்த ஊருக்குச் சமீபத்தில் கப்பல்கள் போகும்போது மாலுமிகள் கரையோரம் 7-கோவில்கள் தங்களுக்கு தோற்றினபடியால் இந்த இடத்திற்குத் "Seven Pagodas" "ஏழு கோவிற்கள்" என்று பெயரிட்டார்கள். இதை ஒரு நிச்சயமாய் வைத்துக்கொண்டு முதல் முதலில் இவ்விடத்தில் 7-கோவிற்களிருந்ததாகவும் அவைகளில் 6-சமுத்திரத்தில் முழுகிப்போயின என்றும் இப்போது ஒன்றுதான் கரையோரம் இருக்கின்றதென்றும்

ஜனங்கள் சொல்லுகிறார்கள். இது சுத்தப் பிசகு. ஏனெனில் இப்போது மாலுமிகள் மாமல்லபுரம் சமுத்திரத்தின் வழியாகப் போகும்போது கரையோரமிருக்கிற இந்த ஒரு கோவிலைக்கூடக் கண்டுபிடிப்பது முடியாதகாரியம். ஏனெனில் அது வெகு தாழ்ந்திருக்கிறது. ஆனால் உயர்ந்த குன்றுகளையும் அக்குன்றின் சிகரங்களையும் தூர இருந்து பார்க்கலாம். அவைகள் 7-உருவங்களாகக் காணப்படுகிறபடியால் இந்த ஊருக்கு Seven Pagodas என்று அவர்கள் பெயரிட்டுவிட்டார்கள். குன்றின் சிகரத்தில் எப்போதும் ஹிந்துக்கள் கோவில்கட்டியிருக்கிறார்கள் என்பது அவர்களின் அபிப்பிராயம். அப்படி அவர்களிட்ட பெயர் நாளது வரையில் வழங்கியும் வருகிறது. ஆகையாலிந்த ஊருக்கு மூன்று முக்கியப் பெயர்கள் உண்டு:— மகாபலிபுரம், மாமல்லபுரம், ஏழு கோவிற்கள். இவற்றுள் மாமல்லபுரம் என்பதுதான் சரியான பெயர்.

இந்தப் பெயருக்குத்தகுந்தபடி இது முற்காலத்தில் ஒரு பெரிய பல்லவ பட்டணமாயிருந்தது. தற்காலத்தில் பல்லவர்களுடைய விசித்திரமான சிற்ப சாஸ்திரவேலைகளைப் பார்க்கவேண்டுமென்றால் மாமல்லபுரம்போனால்தான் தெரியும். இந்தப் பட்டணமானது (இப்பொழுது சிறு கிராமம்,) சமுத்திரக்கரையிலிருக்கிறது. பட்டணமிருந்து 'பாப்பாஞ்சாவடி' யிற் போய் படகேறினால் ஒரு ராத்திரியில் போகலாம். அல்லது சாயந்திரம் தென்னிந்தியா ரயிலேறி செங்கற்பட்டிலிறங்கி திருக்கழுக்குன்றம் மார்க்கமாய் ஒரு ராத்திரியில் மாமல்லபுரம்போய்ச் சேரலாம். தூரத்திலிருந்து பார்க்கும்போது குப்பல் குப்பலாய் சில கற்கள் கண்ணுக்குத் தென்படும். இந்த இடத்திலும் ஆச்சரியமிருக்கிறதா என்று ஜனங்கள் சந்தேகிக்கக்கூடும். குன்றுகளைக் கடந்து ஊருக்குள்வந்து அவைகளின் முன் நின்றுவிட்டால் நேத்திரங்களுக்கு உண்டாகுமானந்தத்திற்கு அளவேயில்லை. அநேக விசித்திரவேலைகள் நாலுபக்கங்களிலும் கண்ணைக்கவரும்போது 'இதுவென்ன அற்புதக் காக்ஷி, கதைகளில் வர்ணிக்கப்பட்டிருக்கிற இந்திரலோகக்காக்ஷியா, இது என்ன !' வென்று சந்தேகிக்கும்படி தோன்றும். இவ்விடத்திய சிற்பவேலைகளின் அற்புதமென்னவென்றால் அநேகமாய் எல்லாம் ஒரேகல்லில் குடைந்தெடுத்தவேலை. இவ்வேலையை அங்கிலேய சிற்பசாஸ்திரிகள் "Monolithic caves''—ஒரு கல்லில் செதுக்கப்பட்ட குகைகள் என்பார்கள். இது தான் இங்கு வெகுவிசேஷம். மாமல்லபுரத்தைத் தவிர வேறு ஒரு இடத்திலும் தென்னிந்தியாவில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட குகைகளும் கட்டடங்களும் கிடையவே கிடையா. பம்பாய்க்கு சமீபத்தில் 'எலிபான்டா' (Elephanta) என்னும் குகைகளும் தக்காணதேசத்தில் 'எல்லோரா' (Ellora) என்னும் இடங்களும் மாமல்லபுரத்தைப்போல் ஒரு கல்லில் செதுக்கப்பட்ட குகைகளையுடையவைகள். ஆகையால்தான் இந்த ஊருக்கு இவ்வளவு மகிமை வந்தது. ஒவ்வொரு வேலையும் சிற்ப சாஸ்திரத்தை அநுசரித்து ஒருவித பழுதுமில்லாமல் கடைசல் பிடித்தாற்போல் தோன்றும்.

முதல் முதலில் மாமல்லபுரத்தில் நமது கண்ணுக்குத்தென்படுவது 90-அடி நீளமும் 30-அடி உயரமுமான ஒரு பெரும்பாறை. இதற்குப்பெயர் 'அர்ச்சுனன் தபசு' என்று சொல்வார்கள். நாம் இதை முதலில் வரைவோம். இது அதிவிசித்திரமானவேலை. இது ஒரு பாறை என்று முன்னமே சொன்னோமே; இதில் 150-200 உருவங்கள், மனுஷன், மிருகம், பக்ஷி, இவை இந்த லோகத்தில் எத்தனை வகைகளுண்டோ அத்தனையும் தன் தன் [illegible]வத்தில் மேலெடுத்துக் காட்டி கொத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் அழகின் அவதாரமாகத் தென்படுமேயல்லாது அற்பஸ்வற்பமாகக் காணாது. நல்லது, இத்தனை உருவங்களை மேலெடுத்துக்காட்டிக் கொத்திய சிற்பசாஸ்திரிகள் எவ்வளவு கைதேர்ந்தவேலைக்காரர்களாக இருக்கவேணும். ஒரேகல்லில் 150—200 பிம்பங்கள் வேலைசெய்யப்பட்டிருக்கின்றன.

ஒரு பிம்பம் ஊனப்பட்டால் எல்லாம் போயிற்றே; அப்படி வராது என்கிற தைரியமிவர்களுக்கு இருக்க எத்தனை கைப்பழக்கமும் தேர்ச்சியுமிவர்களடைந்திருக்க வேண்டும். ஒவ்வொன்றையும் பார்த்தால் உயிர் ஒன்றொழிய அதேபாவனையாயிருக்குமேயல்லாது வேறு வித்தியாசம் கொஞ்சங்கூட இராது. இந்த வேலைக்கு 'அர்ச்சுனன் தபஸ்' என்ற பெயர் வந்ததற்குக் காரணம் என்னவென்றால் இந்த சித்திரத்தின் சற்றேறக்குறைய நடுமையத்தில் ஒருவன் ஆனந்தத்தால் கூத்தாட நாம் காண்போம். அவன்தான் அர்ச்சுனன். சிவபெருமானிடம் பாசுபதாஸ்திரம் வாங்க இவன் காட்டிற்கு வந்தான்; இவன் தவத்தில் உட்காரும்போது அந்தக் காட்டிலிருந்த எலி, புலி, காக்கை, கௌதாரி, யானை, கரடி, பூனை, பாம்பு முதலான எல்லா ஜந்துக்களும் இவனுடன் தவத்திற்கு வந்துட்கார்ந்தனவாம். அங்கிருக்கும் பிம்பங்களின் அருத்தம் இதுவே. இவன் தவம் பலித்து, ஈசுவரன் கையில் சூலாயுதம் ஏந்தினவரா யிவன் கண்ணிற்குப்பிரசந்நராகவே, இவன் ஆனந்தக் களிப்பால் தாண்டவமாடினான். அருச்சுனனுக்குப் பக்கத்தில் சூலபாணியாகிய ஈசுவரனை இந்த சித்திரவேலையில் நாம் காணலாம். இந்தத் தபசியாகிய அர்ச்சுனன் அநேக நாளாய் பட்டினி கிடந்து தோலொட்டி எலும்பு தோன்றியிருப்பதையும் அப்படியே நாம் காணலாம். அதல்லவோ சிற்பம். இந்த அற்புத சிற்பத்தைப் பாராக் கண்கள் வீண்கண்கள்.

இதற்குச் சமீபத்தில் கிருஷ்ணமண்டபம் [illegible]ஒரு மண்டபமிருக்கிறது. இதுவும் ஒரே [illegible]ல் கொத்தியிருக்கப்பட்டவேலை. இதில் 100-பதுமைகள் மாடும் மனிதனுமாகக் கொத்தப்பட்டிருக்கின்றன. வெகு விசித்திரவேலை. கிருஷ்ணபிரானுடைய கோகுலவாஸம் இதில் பொளியப்பட்டிருக்கிறது. புல்லாங்குழலூதிக்கொண்டு கண்ணன் நிற்க, அவனைச்சுற்றி 50 - மாடுகள் மதத்துடன் நிற்பதையும், சிலர் மாடு கறப்பதையும், இடைச்சிகள் தயிர்க்கூடையைத்தலையிற் சுமந்துபோவதையும், குழந்தைகள் இடுப்பிலும் தோளிலும் தொத்திக்கொண்டிருப்பதையும், சிலகிழங்கள் தடியையூன்றி நடப்பதையும், சில சிறுபெண்கள் உல்லாசமாய் சிரித்துக்கொண்டுபோவதையும், பிள்ளைகள் விளையாடுவதையும், கன்றுக்குட்டிகள் துள்ளுவதையும், தாய்மடியில் ஊட்டுவதையும் இந்தக் கிருஷ்ண மண்டபத்தில் காணலாம். இவ்வுளவு வேலையும் ஒரே கல்லில்.

அங்கிருந்து கொஞ்சதூரம் மலை ஏறிச்சென்றால், 'சேஷசாயிக் குகை' என்ற ஒரு குகைக்கு நாம் வருவோம். இதுவும் ஒரே கல்லில் செய்யப்பட்டிருக்கும்வேலை. இதில் பிரதானமாய் நடுவில் ஒரு சிவன்கோயிலிருக்கிறது. பார்வதியுடன் பரமசிவன் ஒரு ரிஷபத்தின் மேல் தன் காலைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்க நாம் காண்போம். இடது பக்கத்தில் ஆதிசேஷன்மேல் பெருமான் பள்ளிகொண்டிருக்கிறார். இந்தக் குகையின் வலது பக்கத்தில் மகிஷாசுரவதம் காட்டப்பட்டிருக்கிறது. இந்த சித்திரவேலைதான் வெகு எடுப்பாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. பார்வதியம்மை தனது வாகனமாகிய சிங்கத்தின் முதுகிலேறிக்கொண்டு தனது பரிவாரங்களுடன் மகிஷாசுரனை எதிர்ப்பதையும் அவனும் தனது பரிவாரங்களுடன் கதையால் அம்மனை அடிக்க வருவதையும் ஒரு யுத்தகளத்தில் இரண்டு சத்துருக்கள் எதிர்த்து நிற்பதை எவ்வளவு பயத்துடன் நாம் பார்ப்போமோ அப்படிப்பார்க்கலாம்.

வராகக்குகை.—இதுவும் மற்றவைகளைப் போல ஒரேகல்லில் செய்யப்பட்ட விசித்திர வேலை. அநேக பிம்பங்களிதிலடங்கியிருக்கின்றன. விஷ்ணுவராகாவதாரஞ்செய்து பூமாதேவியை ரக்ஷித்ததையும், அப்புறம் வாமனவதாரஞ்செய்து ஆகாயத்தை அளந்ததையும் லட்சுமி அம்மை கொலுவிருப்பதையும், அதே லட்சுமி அம்மையை கஜங்கள் தண்ணீர்க்குடங்களால் ஸ்நானஞ்செய்துவைப்பதையும் காணலாம்.

இம்மாதிரி அநேக குகைகள் இருக்கின்றன, இவற்றுள் முக்கியமானவைகளைப்பற்றி வரைந்தோம். இன்னுமனேக குகைகள் பாதி வேலை யாரம்பித்து வேலைமுடியாமற் சிலவும், வேலை கொஞ்சங்கூட துவக்காமல் சிலவும் கொத்துங் குறையுமாகவிருக்க நாம் பார்க்கலாம். எல்லாம் அழகாகவேயிருக்கும். இனி குகைகளை விட்டு கோவில்களுக்குப் போவோம்.

கடற்கரையோரமிருக்கும் கற்கோவில் அதியற்புதமான வேலை. கோவிலென்றால் நாம் பெரும்பாலும் பார்த்திருப்பதுபோல செங்கற் சுண்ணாம்பு கட்டடமாக எண்ணவேண்டாம். அடிமுதல் நுனிவரையில் ஒரேகல்லில் செய்யப்பட்டிருக்கிற வேலை. இம்மாதிரி அருகாமையில் இரண்டு கோவில்களிருக்கின்றன. ஒன்று சிவனுக்கும் மற்றொன்று விஷ்ணுவுக்கும் கட்டப்பட்டவைகள். ஒவ்வொன்றிற்கும் கூர்ச்சாய் முடியுங் கோபுரங்கள் இருக்கின்றன. இவைகளில் ஒன்று பெரிய கோபுரம் மற்றொன்று சிறியது. பெரிய கோபுரத்தின் உயரம் 60—65 அடி. இது முழுமையும் ஒரேகல்லால் கட்டப்பட்டிருக்கிறது. இந்த சிற்ப வேலையை ஒருநாள்முடியப் பார்த்திருந்தபோதிலும் கண்ணின் அவா தீராது. ஐயோ காலத்தின் கொடுமை, இப்பொழுது சமுத்திரம் கரையோரம் நெருங்கிவிடவே இந்தக்கோவிலில் அலைகள் மோதுகின்றன. அநேக அற்புத வேலைகள் அழிந்து போயின. என்னமாயிருந்தாலும் அழகு மட்டில் குறையவேயில்லை. இந்தக் கோவிலைச்சுற்றி 14—15 அடி உயரம் பிராகாரமுண்டு. இக்காலத்தில் வெளிக்கோபுரம் பெரியதாகவும் உள்கோபுரம் கர்பகிருகத்தின்மேல் சிறியதாகவும் கட்டுவது வழக்கம். அப்படியல்ல பழையவேலைக்காரர்களுடைய கோட்பாடு. கர்பகிருகத்தின் கோபுரந் தான் உந்நதமாயும் அழகாயுங் கட்டுவது வழக்கம். அந்தவழக்கத்தை மாமல்லபுரத்திலும் தஞ்சாவூர் பிரகதீச்வரஸ்வாமி கோவிலிலுந்தான் காணலாம். இந்த கடற்கரையோரமுள்ள கோவில்களில் லிங்கம், பார்வதி பரமசிவன், இன்னும் மற்ற சில பிரதிமைகள், ஜலசாயியாயிருக்கும் விஷ்ணு, இவைகளைக் காணலாம். அலைகளால் மோதப்பட்டு உவர் நீரில் முழுகியிருக்கிற இந்தக் கோவில் கொஞ்சங் கொஞ்சமாகச் சேதப்பட்டுக்கொண்டு வருகின்றது.

ரதங்கள்.—ஊருக்கு 1-மயில் தூரம் தெற்கில் கடற்கரை ஓரமாக 5-ரதங்களிருக்கின்றன. ரதங்கள் என்றால் ரதங்கள்போல் ஒரே கல்லில் செதுக்கப்பட்டு பிரகாசித்துவரும் கோவிற்கள். ஒவ்வொன்றும் தனித்தனிக் கல்லில் குடையப்பட்டு அற்புதமாய் விளங்கிவருகிறது. இவைகளிலொன்று கொஞ்சம் மேற்கே ஒதுங்கி நிற்கிறது. இதின் ஆகிருதி கஜபிருஷ்டாகிருதி என்று ஜனங்கள் *வாஸ்து போத சாஸ்திரப் பிரகாரம் சொல்லுவார்கள். கஜபிருஷ்டம் என்றால் யானையின் பின்பக்கம். அதைப் போன்ற உருவம், அதாவது கோவிலின் ஒருபக்கம் குதிரை லாடம்போல் வளைந்திருக்கும். இந்த ரதத்தின் நீளம் 18-அடி; அகலம் 11-அடி; உயரம் 16-அடி; இந்த ரதம் முற்றும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டு அநேக பதுமைகளுடன் விளங்குகிறது. சாஸனங்கள் வெகுவாய் இருக்கின்றன. இந்த ரதத்திற்கு தர்மராஜ ரதம் என்று பெயர் கூறுவார்கள். இதையும் மற்ற ரதங்களையும் 'அத்யந்தகாமன்' என்ற பல்லவன் கட்டிவைத்தான். அவனது காலம் முதலியவைகளைப்பற்றிப் பின்பு விசாரிப்போம். இந்த ரதத்தில் அவன் பிருதுகள் அநேகம் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவைகள், புவனபாஜனன்—இந்த லோகத்திற்கு உடையவன்; த்ரைலோக்ய வர்த்தனன்—மூன்றுலோகங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கப்பட்டவன்; அத்யந்தகாமன்—அளவற்ற ஆசையுள்ளவன்; அமேய மாயன்—அளவிட முடியாத தந்திரி; இவைகள் போன்றவைகள். இந்த ரதத்திற்கே 'அத்யந்தகாமபல்லவேச்வரகிருகம்' என்கிற பெயர் சாசனத்தில் வரையப்பட்டிருக்கிறது. அதாவது இந்தப் பெயருள்ள பல்லவன் சிவனுக்காகக் கட்டிவைத்தகோவில் என்பது அருத்தமாகும்.

* வாஸ்துபோதம் என்பது ஹிந்து சிற்பசாஸ்திர நூல்கள் 32-ல் ஒன்று.

மற்ற 4-ரதங்கள் இதற்கு அருகாமையிலிருக்கின்றன. இந்த 4-கோவில்களுக்கும் அர்ச்சுனன் ரதம், பீமன் ரதம், நகுலன் ரதம், சகாதேவன் ரதம் என்று ஜனங்கள் சொல்வார்கள். இவைகள் தர்மராஜன் ரதம்போல அந்தமுள்ளவைகள். அழகாய்த் தோன்றும். ஒவ்வொரு ரதமும் ஒரேகல்லில் துடைத்துவிட்டாற்போல் செதுக்கிவிடப்பட்டிருக்கிறது. இந்த 5-ரதங்கள் மத்தியில் வழக்கப்படி ஒரே கல்லில் ஒரு பெரிய சிங்கமும் யானையும் வெட்டப்பட்டிருக்கின்றன. சிங்கம் 9-அடி உயரம்; அதற்குத் தகுந்த காத்திரம். யானையோ 14-அடி நீளம், 12 அடி உயரம். யானைமட்டில் கொஞ்சம் குறைந்த வேலையிலேயே விட்டுவிடப்பட்டதாகவும் முற்றிலும் முடியவில்லை என்றும் தோற்றுகிறது. இந்த ரதங்களுக்குக் கிழ்ப்பக்கத்தில் ஒரு அழகான நந்தியுமிருக்கிறது. இந்த ரதங்களில் சில சரிவர செதுக்கப்பட்டு முடிவு பெறாமல் அரைகுறையாக விடப்பட்டிருக்கின்றன. அதுவும் ஒரு அழகாகவேயிருக்கிறது. ஐயோ காலத்தின் கொடுமை, சில இடங்களில் இடிவிழுந்து ஒரு ரதம் நடுவில் இரண்டாக பிரிவுபட்டிருக்கிறது. இவைகளின் கோபுரங்கள் பருப்புத் தேங்காய் (Pyramid) போல முடியும். ஒரே கல்லில் ஒன்றின்மேலொன்றாக அநேக அடுக்குகள் குடைந்து மேற்புரம் சிங்காரமாகச் செதுக்கப்பட்டிருக்கிறபடியால் மனதைக் கவரும். இந்த ரதங்களை மாமல்லபுரத்திலிருக்கும் பழைய கல்வேலையாக நாம் போகப் போகக் காட்டுவோம்.

இந்த ஊருக்கு 2-மையில் தூரம் வடக்கில் 'சாளுவன் குப்பம்' அல்லது 'இடையன்புடல்' என்று 2 பெயர்கள் வழங்கிவரும் ஊரில் பல்லவ குகை ஒன்று இருக்கிறது. அதையும் மாமல்லபுரத்து சிற்பவேலையில் சேர்த்து வரைவது வழக்கம். இந்தக் குகைக்கு அருகாமையில் ஒருமண்டபமுண்டு. அதை கோவிலென்றும் சொல்லலாம். மாமல்லபுரத்து வேலையைப்போல இவ்விடத்திலும் சிற்பசாஸ்திரம் அதிக அந்தமாய் விளங்குகிறது. இவ்விடத்தில் அநேக சாஸனங்களுமுண்டு. இடையன் புடலி லிருக்கும் கோவிலில் ஒரு நேர்த்தியான லிங்கமிருக்கிறது.

இவ்வளவு தூரம் நாம் சிற்பத்தின் அழகையும் குகைகளையும்பற்றி எழுதிவந்தோம். மாமல்லபுரம் குன்றுகளுக்கு வடபக்கத்தில் அர்ச்சுனன் தபசுக்கு வடமேற்கில் 'கணேசன் குகை' என்று ஒரு குகை இருக்கிறது. இதுவும் மற்றக்குகைகளைப்போல அழகாயிருப்பதுடன் ஒரே கல்லில் கொஞ்சம் கோபுரம் முதலானவைகளும் செதுக்கப்பட்டதாயிருக்கிறது. சிறியதாயினும் வெகு அந்தம். இந்த கணேசகோவிலில் முக்கியமான ஒரு சிலாசாஸனமிருக்கிறது. அது பல்லவ கிரந்த எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த சாஸனத்தைப்பற்றியும் இந்த மாமல்லபுரம் உண்டான காலமிவைகளைப்பற்றியும் பல்லவ அரசர்களைப் பற்றியும் பின்விவரிப்போம்.

THE AGE OF MAN. (AN OLD FABLE).

மனிதனுடைய வயது.

(ஒரு ஹிந்துவினாற் சொல்லப்பட்ட ஒரு பழைய கற்பனைக் கதை).

இந்த வுலகத்திலுள்ள ஜீவஜெந்துக்களைச் சுவாமியானவர் சிருஷ்டித்தவுடனே, கழுதையும், நாயும், குரங்கும், மனிதனும் ஒன்றாய்ச் சந்தித்துத் தனக்குத் தனக்குக் குறிக்கப்பட்டிருக்கிற வயதையும் வேலையையும் சுவாமியினிடத்தில் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்வது உசிதமென்று தீர்மானஞ் செய்துகொண்டார்கள். முதலில் யார் சுவாமிக்குச் சமீபமாய்ச் சென்று தன்னுடைய பிரார்த்தனையை விண்ணப்பஞ் செய்கிறதென்று கொஞ்சநேரஞ் சந்தேகித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கழுதை அதிக ஆத்திரத்துடனே தான் முதலிற் போவதாய்ச் சொல்லி, மற்றக் காரியங்களைக் கவனித்துக்கொண்டிருக்கையில் சுவாமியின் சன்னிதானத்தில் சென்று, தனக்கு நியமிக்கப்பட்டிருக்கின்ற வேலைகளைத் தனக்குச் சொல்லும்படி திடீரென்று கேட்டது. கழுதையின் படபடப்பினால் சுவாமி கோபங்கொண்டு அதற்குப் புத்தி கற்பிக்கப் பிரியமுடையவராய், அது தன்னுடைய முதுகில் மற்றவர்களுடைய மூட்டைகளைச் சுமந்து யாருக்காக இழிவும் கஷ்டமுமான வேலை செய்கிறதோ அவர்கள் ஏதாவது கொடுத்தால் அதைத் தின்றுகொண்டு ஜீவிக்கிறது தான் அதற்கு வேலை யென்று சொன்னார். தன்னுடைய விதியைக்கேட்டு மனங்கலங்கி தன்னுடைய ஆயுளுக்களவு சொல்லும்படிப் பிரார்த்தித்தது. "முப்பது வருஷம்" என்று சுவாமி சொன்னார். "கிருபாநிதியே, அடியேன் மேல் கிருபை கூர்ந்து என்னுடைய ஜீவகாலத்தைக் குறைத்தருளும். இரக்கமில்லாமல் மட்டுக்கு மிஞ்சிப்போடப்பட்ட சுமைகளைத் தாங்கி என் முதுகுவளைந்து ஓயாத நடையால் என்கால்கள் இரத்தம் ஒழுக நெடுங்காலமாகிய முப்பது வருஷங்களுக்கு இந்த விதமாய்க் கஷ்டப்பட என்னால் முடியாது. ஏனென்றால் என்னுடைய வேலை யின்னதென்று தெரிந்தவுடனே மனிதர்களும் ஸ்திரீகளும் கொஞ்சநேரங்கூட என்னை வேலையன்றி சும்மா விருக்க விடமாட்டார்கள்" என்று கண்ணுங் கண்ணீருமாகக் கழுதை சொல்லிற்று. தயாநிதியாகிய சுவாமிக்கு கிருபை வந்து கழுதையின் வயதை 18 ஆக்கி அதைப் போகும்படி நியமனஞ் செய்தார்.

உடனே தன்னுடைய வயதையும் வேலையையுந் தெரிந்துகொள்ள நாய் போயிற்று. சுவாமி வேறு வேலையிலிருப்பதைப் பார்த்து தன்னுடைய கோரிக்கையை விண்ணப்பஞ் செய்ய அநுகூலமான சமயம் வருகிற வரை தானிருக்கிறது ஒருவருக்குந் தெரியாதபடி ஒரு மூலையில் நல்ல புத்தியுடனே ஒதுங்கியிருந்தது. இருந்த வேலையை முடித்து விட்டுச் சுவாமியானவர் சுற்றிப் பார்த்தவுடனே நாயானது அந்த நல்ல சமயத்தில் பயபக்தி வினயத்துடனே இரக்க முண்டாகும்படி தன் வாலை யாட்டிக்கொண்டு சிம்மாசனத்தண்டை போயிற்று. நாயினுடைய தாழ்மையான நடக்கையையும், நல்ல புத்தியையும், விசுவாசத்தையும் பார்த்து அதற்கு வேண்டியதென்னவென்று சுவாமி கேட்டார். தான் செய்யும்படி நியமிக்கப்பட்டிருக்கிற வேலைகளைத் தனக்குச் சொல்லும்படி தூரத்தில் மரியாதையுடன் நின்று தாழ்மையுடனும் பயத்துடனுங் கேட்டது. "யாராவது ஒரு மனிதனிடத்திற்குப் போய் என்னிடத்தில் நடந்துகொண்டதுபோல் அவனிடத்தில் நடந்துகொள். அவனுக்குப் பயந்து மரியாதையாய் நட. தாழ்மையாய் அவன் வீட்டைக் காத்துக்கொண்டிரு. அவனிஷ்டத்தோடு கொடுக்கிறதைச் சாப்பிட்டு அன்னமிடுகிறவனுக்கு உண்மையாயிரு. அவனுக்குத் தெரியாமல் அவன் வீட்டிலிருந்து ஒரு சாமானும் வெளியில் போகாமல் பார். யாராவது அப்படி யெடுத்துக்கொண்டு போக நீ கண்டால் குரைத்துக் [illegible] அவன் பின்னாலேயே போயாவது வேறெந்த விதமாயாவது திருட்டுப்போன சொத்து எஜமானுக்கு வந்து சேரும்படி செய். இது உன்னுடைய வேலை, போய் வேலையைப் பார்" என்று சுவாமி சொன்னார். இவ்விதமாக எவ்வளவு காலம் தன் எஜமானுக்குத் தானூழியஞ் செய்யவேணுமென்று கேட்க அதற்கு ஆயுள் காலம் 30 வருஷம் என்று சொல்லிவிட்டு "ஆனால் கழுதையானது 30 வருஷகாலம் தனக்கு ஜாஸ்தி காலமென்று சொல்லிக்கொண்டதினால், 18 வருஷமாகக் குறைத்தேன். நீ ஏதாவது கேட்டுக்கொள்ள வேண்டுமா" என்று சுவாமி கேட்டார். "கருணைக் கடலே, என்னுடைய தென்பது ஒன்றுமில்லாமல் ஒரு எஜமானுக்கு ஊழியஞ் செய்வதற்கு 18 வருஷமோ அதிக ஜாஸ்தியான காலம். இரவும் பகலும் காவல் காத்துக்கொண்டிருக்கிறது மிகவும் சங்கடமான வேலை. நான் திருடர்களைப் பார்த்துக் குரைக்கவேணும். அவர்களைக் கடிக்கவேணும். அவர்களைத் தொடர்ந்து ஓடி என்னுடைய எஜமான் சொத்தைக் கைப்பற்றிக்கொண்டு வரவேணும். நானிறந்து போகிறதற்கு அநேக வருஷங்களுக்கு முன்னேயே வேலைக்குபயோகமில்லாமல் கிழமாகப் போய்விடுவேன். மிகுந்த நற்குணமுள்ள மனிதன்கூட நான் வேலைசெய்யச் சக்தியோடிருக்கிறவரை எனக்கு இரைபோட்டுவிட்டு, அவன் வாசற்படியண்டை காத்துக்கிடப்பதைத் தவிர வேறே ஒரு வேலையுஞ்செய்ய முடியாத கால[illegible] பிரயோஜனமற்ற நாயென்று என்னை [illegible]ல் தள்ளிவிடுவான்; ஆனதினால் என் [illegible] ஆயுள் காலமுடிவாகிறதற்கு முன் பட்டினியாய் அனேக வருஷங்களிருக்கும்படி நேரிடும். ஆகையால் மனமிரங்கி ஆயுள்காலத்தை யின்னுங் குறைக்கவேணும்" என்று மனங்கலங்கி நாய் கேட்டுக்கொண்டது. இந்த மனுவைக்கேட்டு சுவாமி நாயின்வயதை 12 வருஷமாக்கினார்.

அதற்குப் பின்னாலேபோன குரங்கானது சுவாமி வேலையாயிருக்கிறதைப் பார்த்துச் சரியான சமயம் வருகிறவரை காத்துக்கொண்டிருக்கப் பிரியப்படாமல் சுவாமிக்கு முன்பாகவிருந்துகொண்டு தன்னை எப்படியாவது பார்க்கும்படி செய்யவேணுமென்கிற எண்ணத்துடனே சிரிப்பும் பரிகாசமுமுண்டாகக் கூடிய விதமாய், புருவத்தை நெறித்துக்கொண்டும், பல்லைக்காட்டிக்கொண்டும், கீச்சுகீச்சு என்று சப்தம் போட்டுக்கொண்டும், கைகால்களைக்காட்டி அபிநயஞ்செய்துகொண்டும் அங்கசேஷ்டைகள் செய்துகொண்டிருந்தது. சுவாமி குரங்கைப்பார்த்து இங்கே எதற்காக வந்தாயென்று கேட்டார், "எனக்குக் குறிக்கப்பட்டிருக்கிற வேலையைத் தெரிந்துகொண்டு போக வந்திருக்கிறேன்" என்று குரங்கு சொல்லிற்று. "இவ்வளவு வேடிக்கையாக எல்லாரும் மெச்சும்படி நீ இப்பொழுது செய்தாயே இதுதான் உன்னுடைய வேலை. உலகத்திலேபோய் அங்கே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற எல்லா ஜெந்துகளுக்கும் சந்தோஷமுண்டாகும்படி உன்னுடைய சேஷ்டைகளைச் செய்துகொண்டிரு. அவர்களுன்னைப் பார்த்துச் சிரிப்பார்கள். ஆனால் அவர்களுக்கு வேடிக்கையாக நீ நடப்பதினால் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய நல்ல வஸ்துகளை உனக்குக் கொடுப்பார்கள். அதை நன்றாய்த் தின்றுகொண்டு 30 வருஷம் ஜீவித்திரு. உனக்குமுன்னே வந்த கழுதையையும் நாயையும் போல வயதைக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளாதே. உனக்குத் திருப்திதானா,' என்று சுவாமி கேட்டார். "ஐயோ, இந்த ஸ்திதியில் 12 வருஷமிருக்க என்னால் முடியாது. நான் எங்கேயிருந்தாலும் என் சமீபமாய்ப்போகிற ஒவ்வொருவர் முன்பாகவும் என் கோரணியையும் சேஷ்டைகளையுந் திரும்பத்திரும்பச் செய்துகொண்டிருப்பது மிகவும் இழிவான நித்தியவேலை. அதிலும் பத்துப் பேரில் ஒருவரைத்தான் என் செய்கைகளினால் பிரியப்படும்படி செய்யலாம். என்னுடைய

சேஷ்டையைப் பார்த்துப் பிரியப்படாத அனேகர் என் மேலே கல்லெறிந்து அடித்துத் துன்பஞ்செய்வார்கள். என்னுடைய சேஷ்டைகளில் பிரியப்படுகிற சிலருங்கூட தங்களுடைய வஸ்துக்களில் நல்லவைகளை எனக்குக்கொடாமல் அதிகக் கேவலமானவைகளைக்கூட எனக்கு அவைகள் மிகவு முயர்த்தியான சாப்பாடென்கிற எண்ணத்துடன் கொடுப்பார்கள். ஆனதினால் என்னைச் சிருஷ்டித்த சுவாமியே என்னுடைய வயதை இன்னுங்குறைக்கவேண்டும்" என்று குரங்குகேட்டுக்கொண்டது. குரங்கினுடைய முகாந்தரங்களையெல்லாம் ஒப்புக்கொண்டு அதினுடைய வேண்டுகோளின்படி வயதை 10 ஆகக்குறைத்தார்.

பிற்பாடு மனிதன் எழுந்திருந்து சுவாமிக்கு முன்னே நின்று தான் செய்யவேண்டிய வேலையைப்பற்றித் தனக்குச் சொல்லும்படி பிரார்த்தித்தான். உலகத்தில்போய் நன்றாய்ப்படித்து கல்வியைப் பெற்றுக்கொள். கலியாணஞ்செய்து குழந்தைகளைப்பெறு. சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற மற்ற ஜெந்துக்களுக்கெல்லாம் அதிகாரியாகவிரு. பாழ்நிலத்தையெல்லாம் உழுது செழிப்பாக்கு. அன்புடனும் சந்தோஷத்துடனும் ஜீவித்திரு" என்று சுவாமி சொன்னார். என்னுடைய ஆயுளுக்கெல்லையென்ன. நியமியும்" என்று மனிதன் கேட்டான். "பூரணமான 30 வருஷம்" என்று சுவாமி சொன்னார். ஐயோ! எவ்வளவு அற்ப ஆயுள். இவ்வளவு இன்பத்தை அனுபவிக்க இவ்வளவு குறைந்தகாலமா. 7, 8–வயது வரை என்னைச் சூழ உலகத்திலிருக்கின்ற வஸ்துக்களைப்பற்றி ஒன்றுந் தெரியாமல் காலங்கழியும். 20 வயதுவரை உபயோகமான அறிவைப் பெறுவதில் காலம்போய்விம். 30-வயதுவரை இவ்வளவு கஷ்டத்துடன் கற்ற கல்வியைக்கொண்டு பொருள் தேடுவதில் காலத்தை உபயோகிக்கவேண்டும். 30-வது வயதில் இப்படிச் சம்பாதித்த பொருளின் சுகத்தை அனுபவியாமல் விட்டுவிடவேணும். இது என்னுடைய கதியாகிறது. கல்யாணஞ்செய்து குழந்தைகளைப்பெறவும் வீட்டிலுள்ள சமுசாரவின்பங்களை அனுபவிக்கவும் மூகத்துவேர்வை நிலத்தில் விழும்படி கஷ்டப்பட்டுச் சம்பாத்தியஞ் செய்த சொத்துகளை அனுபவிக்கவும் ஐயோ! காலம் எங்கேயிருக்கிறது. ஆனதினால் சுவாமி மனமிரங்கி இதற்கு ஜாஸ்தியான காலம் ஜீவித்திருக்கும்படி கிருபை செய்யும்" என்று திருப்தியில்லாத மனிதன் சொன்னான். "உனக்குக் கழுதையினுடைய வயது 18-ம் சேர்த்துக் கொடுக்கிறேன். நீ சந்தோஷமாய் போய் சுகமாக வாழ்ந்திரு" என்று சுவாமி புன்னகையுடன் சொன்னார். "சுவாமி அப்பொழுது 48 வயது தானே ஆயிற்று. எனக்கு அனுபவிக்கும்படி கொடுத்திருக்கிற செல்வத்திற்கு இது குறைந்த காலம்" என்று தனக்குக்கொடுப்பட்ட வயது அதிகக்குறைவென்று அதிர்ப்தியாக விருந்த மனிதன் சொன்னான். "ஆனால் நாயின் வயதுஞ் சேர்த்து கிழவயதாகிய 60 வயது வரை ஜீவித்திரு" என்று மனிதனுடைய பஞ்சரிப்பைச்* சகிக்கமாட்டாமல் சுவாமி சொன்னார். தனக்குக் கிடைத்த வரத்தினாலின்னும் திருப்தி பெறாமல் அந்த மனிதன் சுவாமியின் காலில் விழுந்து "இன்னும் ஜாஸ்திகாலம் ஜீவித்திருக்க அனுக்கிரகஞ்செய்யக்கூடாதா" என்று கெஞ்சிக் கேட்டான். சுவாமிக்கு அதிகக்கோபம் வந்து "குரங்கினுடைய வயதையுஞ் சேர்த்துக் கொடுத்திருக்கிறேன். இதற்கு ஜாஸ்தியாக உனக்கு வயது கொடுக்கமாட்டேன் போ! எவ்வளவு நன்றாய் ஜீவித்திருக்கலாமோ அப்படி உயிரோடே வாழ்ந்திரு" என்று சொல்லிவிட்டார். இதைக் கேட்டுக் கொண்டு, சுவாமியினிடத்திலிருந்து தனக்கு ஜீவகாலம் 70 வருஷம்பெற்றுக்கொண்டு வந்துவிட்டதாக மனிதன் தனக்குள்ளே குதூகலித்துக்கொண்டுபோய்விட்டான்.

ஐயோ! பேதையே சுவாமியினுடைய நிர்மானத்தை நீ தப்பாக அர்த்தஞ்செய்துகொண்டாய். கல்வியைத்தேடுவதிலும் பொருள் சம்பாதிப்பதிலும் உன்னுடைய முதல் 30 வருஷமுஞ் சென்ற பிற்பாடு பொறுமையுள்ள வேலைக்காரனாகிய கழுதையாகிறாய். உன்னுடைய சொந்தத் தேகசுகத்தைப்பற்றிக் கவனமன்னியில் உன் பெண்சாதிக்காகவும் பிள்ளைகளுக்காகவும் உன்னைச் சார்ந்திருக்கும் மற்றவர்களுக்காகவு முழைக்கிறாய். இவ்விதமாக நெடுங்காலமாகிய 18 வருஷம் கஷ்டப்பட்டபிற்பாடு நாயின் வேலையை யெடுத்துக் கொள்ளுகிறாய். அதாவது 12 வருஷத்துக்கு வீட்டு வாசலிலிருந்துகொண்டு வீட்டையும் அதிலிருக்கிற சொத்தையுங் காவலாகக் காத்துக்கொண்டு நீ பணஞ் சேர்த்து வைத்ததற்கு உன் விஷயத்தில் நன்றியறிவில்லாமல் மன எரிச்சலோடு உன் மனைவியும் பிள்ளைகளுங்கொடுக்கிற அற்பப் போஜனத்தைப் புசித்துக்கொண்டிருக்கிறாய். 60-வயது சென்ற பிற்பாடு நீ குரங்காகிறாய். உன்னைப்பார்த்து உன்னுடைய சொந்த ஜனங்களும் அயலார்களுஞ் சிரிக்கத்தக்கவனாகிறாய். உன்னை மரியாதையுடன் நடத்தாமல் அவமதித்து அனுசரிக்கிறார்கள். உன் குழந்தைகளும், குழந்தைகளின் குழந்தைகளும் உன்னை உபயோகமற்ற ஜெந்துவாகபாவித்து அசட்டையாக நடத்துவதுடன் தங்களுக்கு வேண்டியிராத போஜனத்தை யுனக்குக் கொடுத்து உன்னு[illegible] கிழத்தனத்தின் கோரணையைப்பார்த்[illegible] சிரிப்பார்கள். இவ்விதமாக சுவாமியினிடத்தில் வருத்தப்பட்டு 30 வருஷத்தை 70 வருஷமாக்கின காலத்தில் நீ எண்ணின [illegible]ங்கள் ஒன்றையும் அனுபவியாமல் 70 வயதுவரை ஜீவித்திருந்து இறந்துபோகிறாய். ஐயோ! பேதையே! இதுதான் உனது கதி.

* பஞ்சப்பாட்டென் பாடிக்கெஞ்சல்.

A FEW HINTS ON DOMESTIC SANITATION.

சுகாதார விதிகளைப்பற்றிய சில குறிப்புகள்.

"பானைசுசி சட்டிசுசி, பாங்கான தேஹம்சுசி"

அழுகின பதார்த்தங்களும் மலமூத்திரங்களும் துர்க்கந்தத்தை வீசும். துர்க்கந்தம் அளாவிய காற்றைப் பூரித்தாலும், அந்தக் காற்று உடம்பிலே பட்டாலும், மலமூத்திரங்களை மிதித்தாலும், மலமூத்திர பூமியிலே உண்டாகிய பதார்த்தங்களைப் புசித்தாலும், மலமூத்திர அழுக்குச் சேர்ந்த ஜலத்தை உபயோகித்தாலும், பலவித நோய்கள் உண்டாகி, மனிதருக்குச் சடிதியிலே மரணத்தை விளைவிக்கும். ஆதலினாலே, மனிதர் சஞ்சரிக்கும் இடமெல்லாம் சுசியுடையதாய் இருக்கும்படி பாதுகாத்தல் பெருந் தருமம்.

வீட்டுக்குச் சமீபத்திலே மலமூத்திரங்களை விடுதலும், எச்சிலிலைகளையும் குப்பைகளையும் போடலும், எச்சிலுமிழ்தலும், கை கால் கழுவலும் ஆகாவாம்.

வீட்டைச் சேர்ந்த கொல்லையெங்கும் மலமூத்திரங்களினாலும், எச்சிலினாலும், குப்பையினாலும் அசுசி அடையாவண்ணம், அந்தக் கொல்லையிலே, வீட்டுக்குத் தூரத்திலே, மலகூடமும், எச்சிலிலைக் குழியும், குப்பைக்குழியும் அமைப்பித்தல் வேண்டும்; இப்படிச் செய்தால், கொல்லையும் வீடும் அசுசியடையாமல், சுசியுடையவைகளாயே இருக்கும்.

வீட்டுக்குச் சமீபத்திலே சிறு குழிகள் உண்டானால் அவைகளைத் தூர்த்துப் போடல் வேண்டும். அப்படிச் செய்யா தொழிந்தால், அவைகளிற சென்ற தண்ணீர் அங்கே தங்கிச் சேறாகித் துர்க்கந்தத்தை வீசும்; அந்தச் சேற்றிலே புழு முதலிய ஜெந்துக்கள் உண்டாகும். அந்தத் துர்க்கந்தத்தினாலே சுர முதலிய வியாதிகள் வரும்.

கொல்லையில் உதிர்ந்த இலைகளையும் சருகுகளையும் நாடோறும் பெருக்கி, குப்பைக் குழியிலே கொட்டல்வேண்டும். கொல்லையிலே முளைத்த பயன்படாத செடிகளெல்லாவற்றையும் காலந்தோறுங் களைந்து, குப்பையுடனே போடல்வேண்டும். இப்படிச் சேர்க்கிற திரளான குப்பை பயிர்களுக்கு நல்ல எருவாகுமே.

யாவரும் தங்கள் தங்கள் வீட்டுக்கொல்லைகளிலே உபயோகமாகும் பயிர்களையும், சிறந்த மரங்களையும், அழகிய புஷ்பச்செடிகளையும் வைத்து, அந்தக்கொல்லைகளை மிகச் சிறப்பித்தல் வேண்டும்: இத்தன்மையுடைய கொல்லைகளிலே உண்டாகும் நல்ல காற்று ஆரோக்கியத்தை விளைவிக்கும். பனைமரங்களையும் தென்னமரங்களையும் வீட்டுக்குச் சமீபத்தில் வைக்கலாகாது.

கிணற்றினுள்ளே இலைகள் உதிர்ந்து அழுகினாலும், சூரியகிரணம் படாதொழிந்தாலும், ஜலங் கெட்டுப்போம்: ஆதலினாலே, கிணற்றுக்குச் சமீபத்திலே பெருமரங்களை வைக்கலாகாது. பழஞ்சலமும், தூர் அதிகமாக உள்ள ஜலமும், வியாதியை உண்டாக்கும்: ஆதலினாலே கிணற்று ஜலத்தைக் காலந்தோறும் முழுதும் இறைத்துத் தூர் வாரிச் சுத்தி செய்வித்தல்வேண்டும். இரண்டு மூன்று நாளுக்கொரு தரம் கிணற்று ஜலம் முழுவதையும் இறைப்பித்து வந்தால், கொல்லையிலுள்ள மரங்களுக்கும் செடிகளுக்கும் பயிர்களுக்கும் உபயோகப்படும்: அது மட்டோ, ஜலம் நன்றாயிருக்கும். புதிது புதிதாக ஊறும் ஜலம் நல்ல சுவையுடையதாயும், வியாதியை விளைக்காததாயும் இருக்கும்.

சுசியுடைமை சரீரத்துக்கு ஆரோக்கியத்தையும், மனசுக்குச் சௌக்கியத்தையும் கொடுக்கும். இவ்வுண்மை அவிவேகமுள்ள ஏழை ஜனங்களுக்குத் தெரியாது: ஆதலினாலே பக்கத்திலுள்ள விவேகிகள் இதை அவர்களுக்கு நன்றாகத் தெரியும்படி சொல்லல் வேண்டும்.

CHILDREN'S PAGE.

300 Lives Saved By A Doll.

சிறுவர்க்கான பக்கம்.

ஓர் பொம்மையினால் முன்னூறு பெயர்கள் உயிர்தப்பியது.

அமெரிக்கா தேசத்தில் 'யூனைடெட்ஸ்டேட்ஸ்' என்னும் மாகாணத்தின் தென்பாகத்தில் ஒரு காட்டு ஜாதியார்கள் இருந்தார்கள். அவர்கள் வெகு மூர்க்கர்கள். வேலைசெய்து ஜீவனம் செய்வதென்பதே தெரியாது. அவர்களுக்கு பக்கத்திலிருப்பவர்களைக் கொள்ளையடித்துத்தான் வயிறு வளர்க்கவேண்டும். கொல்லுக் கொலைக்கு அஞ்சவேமாட்டார்கள். குழந்தைகளென்றும், ஸ்திரீ ஜாதியென்றும் கூடப்பார்ப்பது கிடையாது. அவர்களுள் ஒருவருக்காவது இங்கிலீஷ் தெரியாது. இவர்களை அடக்கி ஜனங்களைக் காப்பாற்றும் பொருட்டு சர்க்காரில் ஒரு சேனையை அனுப்பினார்கள். அச்சேனைத் தலைவருக்கு இவர்களை நாசம் செய்துவிடாமல் நயமாக நல்வழிக்குக் கொண்டுவரவேண்டுமென்று கருத்து இருந்தது. முன் ஸ்பானிஷ் ஜாதியார் இவர்களை மிகவும் வருத்தியிருந்தமையால் எல்லா வெள்ளைக்காரரும் தங்களுக்கு விரோதிகள்தான் என்ற எண்ணம் அவர்களுக்கிருப்பதாக அவருக்குத் தெரிந்திருந்தமையால், தாங்கள் அப்படியல்லவென்று அவர்களுக்குக் காண்பிக்கவேண்டுமென்பது அவர் எண்ணம்.

அவ்வாறே அவர் தன்னுடைய சைன்னியத்தை ஓசைப்படாமல் அவர்கள் இருப்பிடமாகிய மலையடிவாரத்தில் ஒரு கிராமத்தில் தங்கவைத்து சில வேவுகாரர்களை அனுப்பி அவர்களுடைய சமாசாரமெல்லாம் அறிந்துவரும்படி அனுப்பினார். அவர்கள் நாலுபக்கமும் செங்குத்தான மலையால் சூழப்பட்ட ஓர் இடத்தில் அச்சாதியார் குடியிருப்பென்றும், எல்லாருமாக மொத்தம் முன்னூறு பெயர்கள் இருந்ததாயும் அறிந்துவந்தார்கள். அவர்களை அங்கேபோய்ச் சண்டையிடமுடியாது. அவர்கள் செத்தாலொழிய யுத்தகளத்தைவிட்டு ஓடமாட்டார்கள். அப்போர்க்கெ

[illegible]ர்களாகையால் சேனைத்தலைவர் தக்க சமயம் வரட்டுமென்று காத்திருந்தார்.

அப்படியே சில நாளைக்கெல்லாம் அவர்களுள் சிலர் மலையடிவாரத்திற்கு வந்து மூன்று பிரிவாகத் தங்கினார்கள். சிபாய்களெல்லாம் இதுதான் சமயம், நாம் எல்லாரும் ஒரு அடியாய் அவர்கள்பேரில் விழுந்து நாசம்செய்துவிடவேண்டுமென்றார்கள். ஆனால் தலைவிரருக்கு மாத்திரம் அப்படி எண்ணமில்லை. நன்றாய் வழிதெரிந்த சிலருடன் சில சேனவீரர்களை அனுப்பி அவர்களைச் சிறைசெய்து வரும்படி சொன்னார். அவர்களும்போய் மரங்களின் மறைவில் பதுங்கிக்கிடந்து, இரவில் யாவரும் தூங்கவிட்டு அவர்கள்பேரில் விழுந்து, அவர்களுள் தலைவர்களைத் தூங்குகையில் குண்டுக்கட்டாய்க் கட்டி எல்லாரையுமாக வெகு வேகமான குதிரைகளில் வைத்துக் கொண்டுவந்து சேர்த்தார்கள். மூன்று ஜாகையிலும் மூன்று சம்சாரம் தங்கியிருந்தது. ஒருவராவது தப்பிப்போய் மற்றவர்களுக்குச் சமாச்சாரம் தெரிவிக்கவில்லை. இவர்கள் எல்லாருமாக வந்து சேரும்போது இராத்திரி இரண்டுமணி. உடனே தலைவிரரும் இவர்களும் பேசுவதற்காக இவர்கள் பாஷை தெரிந்த சிலருடன் வந்து சேர்ந்தார்.

இவர்கள் உட்கார்ந்திருந்ததைப் பார்க்க வெகு வேடிக்கையாயிருந்தது.

புருஷர்கள் உடம்பெல்லாம் பச்சை குத்திக்கொண்டிருந்தார்கள். தலையில் ஒரு கம்பளியைச் சுற்றியிருந்தது. அதில் சிலசிறகுகளைச் செருகி வைத்துக்கொண்டு வாயைத்திறப் [illegible]பதொன்று கையைக்கொண்டு முழந்தாளைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய பெண்சாதிகள் அவர்கள் காலின்கீழில் மூச்சு விடாமல் உட்கார்ந்திருந்தார்கள். * குழந்தைகள் மாத்திரம் நடந்த சங்கதிகள் என்னவென்று அறியாதவைகளாய் விளையாடிக்கொண்டிருந்தன. எல்லாரும் உடனே மரணம் சம்பவிக்குமென்று காத்திருந்தார்கள். அவர்களுக்கு பயமென்பதே தெரியாதாகையால் வெகு தைரியத்துடனிருந்தார்கள்.

இவ்விதமாக இரண்டு நாள் முழுமையும் கேட்டகேள்விகள் ஒன்றுக்கும் பதில்சொல்லாமல் ஒரேபிடிவாதமாயிருந்தார்கள். சிபாய்களுக்கு இவர்களை என்னசெய்வதென்றுதோன்றவில்லை. படைத்தலைவர் தன்னுடைய கீழ் அதிகாரியொருவருடன் சிறைச்சாலைக்குட்புகுந்து அங்கிருந்த குழந்தைகளில் ஒன்றைக்கையில் தூக்கிக்கொண்டார். மற்றொருவரும் மற்றொன்றை எடுத்துக்கொண்டார். குழந்தைகள் கதறின. அவர்களுக்கெல்லாம் மனம் பதபதைத்தது. அப்பொழுதும் அவர்கள் வாயைத்திறக்கவேயில்லை. படைத்தலைவர் குழந்தைகளை தன்னுடைய கூடாரத்திற்குக்கொண்டுபோய் தன்னுடைய மடியில் உட்காரவைத்துக்கொண்டு தன்னாலியன்ற மட்டும் சமாதானம் செய்து பார்த்தார். அவராவது போகிறது பிள்ளைகுட்டிக்காரர் எப்படியோ சமாளித்தார். கீழ் அதிகாரி ஒருவர் இருந்தாரே அவருக்கு குழந்தைகள் கிடையாது. அதுகள் கதறுவதையும், கடிக்கிறதையும், உதைக்கிறதையும், நகத்தைக்கொண்டு பிராண்டுவதையும் பொறுக்கமாட்டாமல் வெகு சிரமப்பட்டார். இருந்தாலும்குழந்தைகளுக்கு ஒரு தீங்கும் செய்யாமல், அவர்களை ஓடவிடாமல் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருந்தார். படைத்தலைவர் சர்க்கரை, கற்கண்டு என்ன என்னவோ கொடுத்துப் பார்த்தார். ஒன்றும சாயவில்லை. குழந்தைகள் ஒன்றின் பின் ஒன்றாய் அயர்ந்துபோய்த் தூங்க ஆரம்பித்தன.

படைத்தலைவர் குழந்தைகளைத் தன் படுக்கையிலேயே தூங்கவிட்டு நன்றாக மூடிவைத்துவிட்டு தன்னுடையவேலைக்காரனை குழந்தைகள் உள்ள வீடொன்றுக்கு அனுப்பி,—எ

---

* எதிரிப்படை இவ்வளவு சமீபத்திலிருப்பது அறியாதவர்களாகையால் தங்களுடைய பெண்டு பிள்ளைகளையும் கூடக்கொண்டு வந்திருந்தார்கள்.

ன்ன வாங்கிக்கொண்டுவரச்சொன்னார்? ஒரு பொம்மை. குழந்தைகளெல்லாம் எந்தச்சீமையிலும் ஒரேமாதிரிதான். பொம்மையைக்கண்டால் விளையாட ஆரம்பித்துவிடுமென்று அவருக்குத்தெரியும், பொம்மையைக்கொண்டுவந்து குழந்தைகள் தூங்குகிற படுக்கையிலேயே அவைகள் கண்ணைவிழித்துப் பார்த்தவுடனே கண்ணிற் படக்கூடிய இடத்தில்வைத்துவிட்டு அவர் கூடாரத்தில் ஒரு மூலையில் மறைவாய் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். பொம்மை வெகு நேர்த்தியாக இருந்தது. கண்டுவைத்தபாவாடையும் ரவிக்கைமேலாக்கோடு கையில் ஒரு குழந்தையை எடுத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தது. மரப்பாச்சியென்றால் பெட்டைக்குட்டிகளுக்கு என்ன உற்சாகமுண்டாகிறது. இதுகளும் பெட்டைகள்தான். பொம்மை பென்பதே இன்னவென்று அதுகளுக்குத் தெரியாது. பார்த்ததேயில்லை. ஆகையால் கண்ணைத் திறந்து பார்த்துபொம்மையைக் கண்டதும் அதுக்கு அதிக ஆச்சரியமுண்டாகி அதை உற்றுப்பார்த்து இடுப்பில் எடுத்துக்கொண்டு வெகு உற்சாகத்துடன் கூடத் தூங்கிக்கொண்டிருந்த தன் தங்கையைத் தட்டி எழுப்பிக் காண்பித்து இரண்டும் கையைக்கொட்டிக் கொண்டு குதூஹலத்துடன் கூத்தாட ஆரம்பித்தன. இந்த உற்சாகத்தில் குழந்தைகளுக்கு தாங்கள் எங்கிருக்கிறார்களென்பது மறந்துபோய்விட்டது. இவைகள் இப்படி விளையாடிக்கொண்டிருக்கையில் படைத்தலைவர் கற்கண்டு சர்க்கரையெல்லாம் கொண்டுவந்து மெதுவாகப்பக்கத்தில்வைத்தார். இப்பொழுது குழந்தைகள் நல்ல பசியாயிருந்தபடியால் அவைகளைத்தின்றன. உடனே அவர் சிறைச்சாலைக்குச் சொல்லியனுப்பி குழந்தைகளின் தாயாரைக் கொண்டுவரச்சொன்னார். அவள் வந்ததும் போய்விட்டது என்று தான் வருத்தப்பட்டுக் கொண்டிருந்த குழந்தைகள் பொம்மை வைத்துக்கொண்டு வெகுசந்தோஷமாய் விளையாடிக்கொண்டிருப்பதையும் படைத்தலைவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு கற்கண்டு கொடுத்துக்கொண்டிருப்பதையும், கிழிகாரி குழந்தைகளுக்குக் காகிதத்தினால் குதிரைகள் கத்திரித்துக்கொடுத்துக் கொண்டிருப்பதையும் கண்டு தான் காண்பதெல்லாம் மெய்யோ பொய்யோ என்று தோன்றாமல் பிரமித்துக் கொண்டு நின்றாள். குழந்தைகள் உயிரோடிருப்பதைக் கண்டதும் அவள் ஹோ! என்று கதறிக்கொண்டு ஆனந்தபாஷ்பம் பொழிவதைப் பார்த்ததும் படைத்தலைவருக்கு நம்முடைய காரியம் ஜயித்ததென்று நன்றாய்த்தெரியும். குழந்தைகள் சந்தோஷமாயிருப்பதைப் பார்த்துத் தாயாருக்கும் சந்தோஷம் வருவதைப் பார்த்து அவர் இனி மேல் நம்முடன் சிநேகமாய் வருவார்களென்று உறுதியாய் எண்ணி அவளைக் குழந்தைகளுடன் சிறைச்சாலையிலுள்ள மற்றவர்களிடம் போய் நடந்ததைச் சொல்லட்டுமென்று அனுப்பினார். அவர்களுக்கும் இந்த வெள்ளைக்காரர்கள் தங்களைக் கொல்லவந்தவர்களல்லவென்று தெரிந்தவுடன் இவர்களுடன் வந்து சகஜமாய்ப் பழக ஆரம்பித்தார்கள். கொஞ்ச நாளைக்குப் பின் இவர்களைத் தங்களுடைய மற்ற ஜனங்களுக்கும் தெரிவிக்கும்படி அனுப்பினவத்தார். எல்லாம் சமாதானமாகவே முடிந்தது. இவ்வாறாக இந்தப் படைத்தலைவர் நன்மையினால் தீமையை விலக்கினார்.

வெள்ளைக்காரரும் அந்தக் காட்டு ஜாதியாரும் அதுமேலாக ஒருவருக்கொருவர் பகையொழித்து வெகு அந்நியோன்யமாயிருந்து காலங்கழித்து வந்ததெல்லாம் இந்த பொம்மை செய்த வேலையென்று அவர்கள் சொல்லிக் கொள்ளுவார்கள். அவர்களையும் மிருகங்களைப் போல சுட்டெறியவேண்டிய செலவில்லாமல் முடிந்தது இந்த பொம்மையின் வேலையே.'

WAR NOTES.

யுத்தசமாசாரக் குறிப்புகள்.

ஐரோப்பாவில் நடந்துவரும் பாரதப்போர் உக்கிரங் குறையாமல் நடத்தப்பட்டு வருகிறது. ஜெர்மானியர் நாலாபக்கத்திலும் எதிரிகளால் நெருக்கப்பட்டு வருகிறார்கள். இதுவரையில் அவர்கள் தங்கள் எல்லைக்கு வெளியிலே தானேசென்று இதரதேசங்களில் சண்டையை நடத்திவந்தாலும், இந்தச்சாதனம் என்றென்றைக்கும் நிலைத்திருக்குமென்று சொல்வதற்கில்லை. மேற்புரத்தில் பிரிடிஷ் சைனியங்களும் ப்ரெஞ்சு சைனியங்களும் பெல்ஜியம் சேனைகளோடு அவர்களை நெருக்கிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் முற்றிலும் பின் வாங்காவிட்டாலும் இங்கும் அங்கும் முக்கியமான இடங்களைவிட்டுத் துறத்தப்பட்டு வருகிறார்களென்று பீல்ட் மார்ஷல் ஸர்ஜான் ப்ரெஞ்சு அவர்கள் அனுப்பியிருக்கும் ரிபோர்ட்டுகளால் தெரியவருகிறது. கீழ்ப்புறத்தில் ருஷியரையெதிர்த்து ஜெர்மானியர் போலண்ட் தேசத்தில் படையெடுத்துச் சென்றவேகம் வரவரக் குறைந்து வருகின்றது. தெற்கே இத்தலிதேசத்தார் அவர்களைநெருக்கி வருகிறார்கள். பிரிடிஷ் கப்பற்படைகள் ஜெர்மன் கப்பல்களை சமுத்திரத்தில் தலை காட்டாதபடி செய்துவருகின்றன. ஜெர்மானியர் தண்ணீரில் மூழ்கி [illegible] 'ஸப்மாரின்' படகுகளால் பிரிடிஷ் [illegible]களையும் இதர கப்பல்களையும் அடிக்கடி உடைத்துத் தகர்த்துவருவது உண்மையாயினும் இது முடிவில் ஜயத்தைக் கொடுக்குமென்று தோன்றவில்லை. ஆகாய ரதங்களிலேறியும் சண்டைபோட்டு வருகிறார்கள்.

யுத்தச்செலவு.

ஸெப்டம்பர்மாச மத்தியில் பார்லிமெண்டு சபை கூடியபின் முதல் மந்திரி மிஸ்டர் ஆஸ்குவித் அவர்கள் ஏழாவது முறை 25 கோடி பவுன் யுத்தச்செலவுக்கு வேண்டுமென்று பார்லிமெண்டு சபையாரைக்கேட்க அவர்கள் அத்தொகையைக் கடனாகவோ வரியாகவோ சேர்த்துச் செலவழிக்க அனுமதி கொடுத்திருக்கிறார்கள். சண்டை யாரம்பமுதல் இது வரையில் பார்லிமெண்டு சபையார் செலவிடக் கொடுத்த பணத்தொகை மொத்தம் 126 கோடியே 20-லக்ஷம் பவுன் ஆகிறது. சென்ற ஏப்ரல்மீ முதற்கொண்டு சண்டைச் செலவுக்கு என்று பார்லிமெண்டு சபையார் கொடுத்த தொகை 90 கோடி பவுன் ஆகிறது.

நித்தியப்படிச் செலவு.

ஏப்ரல்மீ 1௳ முதற்கொண்டு ஜூலைமீ 17௳ வரையிலுள்ள 108 நாட்களின் செலவு தினமானம் 29-லக்ஷம் பவுன். ஜூலைமீ 18௳ முதல் ஸெப்டம்பர்மீ 11௳ வரையிலுள்ள 56-நாளைக்கும் தினந்தோறும் 42-லக்ஷம் பவுன் செலவாகியிருக்கிறது. இதில் பட்டுவாடா செய்யப்படாத தொகைகளும் கொஞ்சம் சேர்ந்திருக்கின்றன. சராசரியில் யுத்தத்திற்காக பிரிடிஷ் கவர்ன்மெண்டாருக்குப் பிடிக்கும் தினப்படிச்செலவு தினமொன்றுக்கு 35-லக்ஷத்துக்குக் குறையாமலாகிறது. மிஸ்டர் ஆஸ்குவித் பேசிய பேச்சிலிருந்து யுத்தச் செலவு ஒருவாரத்துக்கு 3½கோடி பவுன் சராசரியாகுமென்று தெரியவருகிறது. யுத்தத்துக்கு முன்னால் பிரிடிஷ் சைனியங்கள் முழுவதின் செலவு ஒருவருஷத்துக்கு 3½கோடியாயிற்று.

பிரிடிஷ் சைனியம்.

சண்டையாரம்பத்தில் ஒன்றரை லக்ஷம்பேர் கொண்ட சைனியத்தைப் படையெடுப்புச் சேனையாக ப்ரான்ஸுக்கு அனுப்பினார்கள். இப்பொழுது பிரிடிஷ் சைனியத்தின் தொகை அதைவிட 20-மடங்கு அதிகமாயிருக்கிறது. யுத்தகளத்தில் நின்றும் யுத்தஞ்செய்யும் சைனியத்தொகை இவ்வளவென்று சொல்லா விட்டாலும் முன்னிலும் பதின்மடங்கு அதிகமான சைனியங்கள் அனுப்பப்பட்டிருக்கிறதாக மட்டும் தெரிவித்தார்.

சேவைநிர்ப்பந்தம் (Conscription)

இந்தயுத்தம் தொடங்குமுன் ஜெர்மானிய

இராஜ்யத்திலும் ப்ரான்ஸிலும் இராணுவசேவை செய்வது நிர்ப்பந்தமாக ஏற்பட்டிருந்தது. இப்பொழுதும் அத்தேசங்களில் இராணுவசேவை பலமுள்ள புருஷர்களுக்கெல்லாம் நிர்ப்பந்தமாகவேயிருந்து வருகிறது. பிரிடிஷ் தீவுகளில் மட்டும் நிர்ப்பந்த சேவையேற்பாடு ஊர்ஜிதத்தில் இல்லை. அப்படியிருந்தும் தன்னிச்சையாகச் சேர்ந்தவர்களைக் கொண்டு ஒரு மஹா பெரிய சைனியப்படை சேர்த்துவிட்டார்கள். சேர்ந்திருந்தாலும் அது போதாதென்றும் 18-வயது முதல் 65-வயது வரையில் உள்ள புருஷர்களெல்லாரும் தேசபாதுகாப்பின்பொருட்டு அவரவர்களால் செய்யக்கூடிய வேலையைச்செய்ய நிர்ப்பந்தமான ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று சிலர் சொல்கிறார்கள். நிர்ப்பந்தசேவை ஸ்வதந்தரத்துக்கு ஒவ்வாததலால், அது கூடாது என்றும் தன்னிச்சையாகச் சேருகிறவர்கள் தொகை ஏராளமாயிருப்பதால் அதைக்கொண்டே யுத்தத்தை நடத்தலாமென்று சிலரும் அபப்பிராயப்படுகிறார்கள். இந்த விஷயம் பத்திரிகைகளில் பேசப்பட்டதிலிருந்து இப்பொழுது பார்லிமெண்டு சபையிலே ப்ரஸ்தாபத்துக்கு வந்திருக்கிறது. மந்திராலோசனை சபையிலுள்ள மந்திரிகளிலும் இது விஷயமாய் இருகக்ஷி யேற்பட்டிருக்கிறதாகத்தெரிகிறது. ஒருசாரார் நிர்ப்பந்த சேவை அவசியமென்று சொல்ல இன்னொரு தரப்பார் அது கூடாது என்று அபிப்பிராயப்படுகிறார்களெனத் தெரியவருகிறது. இது எப்படித்தீர்மானிக்கப்பட்டாலும் சரி, இந்த மஹா யுத்தத்தை எப்படியும் ஜயகரமானமுடிவுக்குக் கொண்டுவர என்ன கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தாலும் அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு போக ஜனங்கள் சித்தமாயிருக்கிறார்கள் என்பது ஒன்றுமட்டும் திண்ணமாய் விளங்குகிறது.

லார்ட் கிட்சனர் அபிப்பிராயம்.

யுத்தமந்திரியாகிய லார்ட்கிட்சனர் அவர்கள் இதுவரையில் நடந்தயுத்தத்தைப் பற்றிப் பேசியதில் ஜெர்மானியர் இன்னும் முறியடிக்கப்படவில்லையாயினும், அங்கங்கே அவர்கள் கைசோர்ந்து வருகிறார்களென்று தென்படுகிறதென்றும் கூட்டாளிகள்கை வரவர பலப்பட்டு வருகிறதென்றும், நமது கையை இன்னும் பலப்படுத்த நிர்ப்பந்தசேவை யேற்பாடு வேண்டுமா என்று யோஜிக்கப்பட்டு வருகிறதென்றும் சொன்னார். அவர் பேசியதிலிருந்தும், நமது அரசர் பிரதிநிதி லார்ட்ஹார்டிஞ்சவர்கள் சட்டநிரூபண சபையில் பேசியதிலிருந்தும் ஜெர்மானியர் என்னதான் வலுத்தகையாகவிருந்தாலும் அவர்கள் முடிவில் கைசளைத்துத் தோல்வியடைவது நிச்சயமென்று யுத்தமர்மங்களின் உளவு தெரிந்தோர் அபிப்பிராயப்படுகிறார்களென்று தெரியவருகிறது.

பத்திரிகைகளின் பொறுப்பு.

சமாதானகாலத்தில் பத்திரிகைகள் என்னதான் தாராளமாகப் பேசினும் யுத்தகாலத்தில் அப்படிபேசுவது யுக்தமில்லை யென்று தானேபடும். இதற்காகவே இராஜ்பப் பாதுகாப்புச் சட்டம் என்று புதிதாய் ஒரு சட்டம் செய்திருக்கிறார்கள். இச்சட்ட நிபந்தனைகளின் படி யுத்தகாலத்தில் பஹிரங்கமாகப் பேசக்கூடாத விஷயங்கள் என்று கவர்ன்மெண்டாருக்குத் தோன்றுவதைப்பற்றி அத்துமீறிப் பேசினதாகத் தோன்றும் பத்திரிகைகளை ஸர்க்கார் கோர்ட்டிலிழுத்துக் கண்டித்து வருகிறார்கள். நிர்ப்பந்தசேவை (Conscription) விஷயமாக அபிப்பிராயம் இரண்டுபட்டிருப்பதால் அனேக பத்திரிகைகள் இது சம்பந்தமாகப் பேசுவதில் சட்டவரம்பு கடந்து பேசியிருக்கலாமென்று தோன்றுகிறது. இந்தக் கேஸ்களெல்லாம் கோர்ட்டுகளில் அந்தரங்கமாகப் பைஸல்செய்யப்பட்டு வருவதால் அவற்றின் உண்மையறிவது கஷ்டமாயிருக்கிறது என்று ஒரு தரப்பார் பார்லிமெண்டு சபையில் இதை ப்ரஸ்தாபத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

"THE EDUCATION OF THE CHILD MUST HAVE IN IT THE MAKING OF THE MAN IN THE CHILD."

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

" HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். **28.**] ராக்ஷஸஹு ஐப்பிசிமீ, **1915**ஹு அக்டோபர்மீ [சஞ்சிகை **7.**

"THE EDUCATION OF THE CHILD MUST HAVE IN IT THE MAKING OF THE MAN IN THE CHILD."

REFORM OF RURAL EDUCATION.

Some Thoughts and Reflections.

Sir C. Sankaran Nair, the newly-appointed Minister of Education, goes to Simla, it appears, with definite and well-matured views on the great and pressing problems of Education which are sure to engage his attention and tax all his energies in finding a satisfactory solution for the same. Among the most pressing problems that await his consideration will be the question of rural education, which urgently calls for immediate reform. The unsatisfactory state of things now existing, to speak mildly of it, is well known to all. And yet the educational machinery is allowed to go on grinding the minds of impressionable children and shaping them all into one inefficient dead level of uniform mediocrity or something worse. The reform of rural education will, it is hoped, engage his early attention. In dealing with the Memorial of the English Committee on the Improvement of Female Education, the reform of rural education will obviously make itself felt by the Honorable gentleman who has already given expression to his views on the most pressing needs of village life and rural education which includes Female Education. The newly appointed Member for Education has the reputation of being a bold thinker who is not afraid of his own thoughts. He has the knack of giving expression to them in terse, clear and telling language which drives the truth home to unbiased minds; while it sets even biased minds busy a thinking and reviewing their preconceived notions of things which have settled down and become more or less conventional with them.

"Language in the slave of thought," while "thought is the slave of a self-controlled mind." The power of thought is even greater than the power of long-range-guns and fort-exploding-monsters. For its range and mobility is unlimited and illimitable. And the subtle force and irresistible power with which it works its way through all material obstacles and sets the greatest and subtlest of all mechanical contrivances, the human mind, to work, is simply marvellous and inimitable. Emerson rightly warns the world of this. He says: "Beware when the Great God lets loose a thinker on earth." A Thinker can work wonders which even Kaisers cannot resist or undo.

It is creditable to His Excellency Lord Hardinge's power of inner perception that he perceived this quality of the thinker in the new Member for Education and wished to give him an opportunity of using his marvellous powers in the only fruitful field where it could with advantage be employed for the benefit of humanity. The child is the father of man and the education of the child must have in it the making of the man in the child. Man-making is far more important and difficult than money-making and we all do hope and trust that Sir Sankaran Nair will have an excellent account to render of his stewardship when the five years' term of his office is over.

National and social life is based largely on village life. The truism that "the nation lives in the cottage" is not without significance to us in India who, from ancient times, have developed village life to a marvellous extent though its manifestation at present is not what it might be under other and more favourable circumstances.

"The basis of village life must be a proper system of education devised to suit the needs of the village." In that one sentence there is the conception of a whole system of good and excellent work that awaits the hand of the master-worker. Sir Sankaran Nair has grasped this truth and gives lucid expression to his thoughts on the subject, which are full of vigour and force. "The first need of the village is education suited to its needs." And the efficient or inefficient supply of this "first need of the village" as in "first aid" in the emergencies of physical life, will go a great way to make or mar the process that may later be found necessary to adopt in saving the vigour of life from running to ruin and waste. His thoughts on the influence of education in this connection have been so well and clearly expressed in his article recently published in the "Modern Review" which we all have read and pondered over. Already the Secretary of State, on one side, has found "an excellent reason" in the novel appointment of our honoured countryman to tell Mrs. Fawcett who waited on him the other day at the head of a deputation to the India Office, that they should all wait to see what recommendation, if any, he would make in the matter of the improvement of Female Education.

We who knew him well and have watched his career with interest, will, on the other hand, wait and watch with close and ceaseless attention, for equally excellent and obvious reasons, how far his new and exalted position will really give him the freedom of movement necessary to translate his excellent and well-thought-out ideas on the improvement of rural education (which includes by the way Female Education and the establishment of village life on a sound, self-contained, healthy basis)—into practical action, and thus carry out a reform which is sure to be far-reaching and highly beneficial in its effect.

We heartily wish him Godspeed in the noble work of making the manhood of the nation and preparing it for its impending destiny.—*Mr. C. V. Swaminatha Iyer in the Madras Dailies of 19th October 1915.*

புஸ்தகம்-23.] [சஞ்சிகை-7.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

ராக்ஷஸ ஐப்பசி } விவேகசிந்தாமணி { October-November. 1915.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேச் செய்கைதனை
யாச்சரிய மோதா னவர்க்கு."

THE REGISTRAR OF … 1 … 1915 MADRAS

REFORM OF RURAL EDUCATION.

Some Thoughts and Reflections.

AS OTHERS SEE US: A RECORD OF PAST WORK.

"It is to be hoped that the republication, in pamphlet form, of Mr. Swaminatha Aiyar's essays on 'Vernacular Studies in Madras' (1898) will serve to draw increased attention to this important and much discussed subject. [The views therein set forth have now been accepted by Sir Harcourt Butler from his place in the Viceroy's Council.] The essayist has shown, I think, that there is very much more in the question than appears at first sight. For instance, he has pointed out in a very able manner, that there is a social as well as an educational side to it: and, as the *Indian Social Reformer* has rightly observed, "unless this is realised, one cannot look for any practical results" in the promotion of a wider and deeper knowledge of the indigenous languages of this part of India. Mr. Swaminatha Aiyar is not a mere theorist or essayist: he has done much practical work in the encouragement of Vernacular Studies through his Diffusion of Knowledge Agency and by means of his excellently conducted periodical, the *Vivekachintamani*. He can, therefore, be considered to have established a claim to make his voice heard in this matter.—*Henry Beauchamp, Editor, "Madras Mail."* (Introduction to 'Vernacular Studies in Madras' by C. V. Swaminatha Aiyar, Madras Mail Press, 1898.)

[*The writer has now worked for 80 years in the field of Vernacular literature and to his experiences therein gained has brought to bear on the subject the result of ten years of continued work in social service.*]

"The leader in the *Madras Mail* (of 9th September 1898) makes the suggestion which you have practically carried out. You will have to be disappointed of the result of that experiment, but as I have already written to you such disappointments are inevitable. You should make another experiment under more favourable circumstances. I feel sure you will succeed."—*The late Hon'ble Justice Rao Bahadur M. G Ranade.*

THE CALL TO WORK AGAIN FOR CHILDREN.

THE LATE MR. JUSTICE RANADE'S SUGGESTION.

"If you will again come down to the school-level, I will do all in my power to help it forward to attain its former position among schools."—Mr. J. H. Stone in October, 1913.

"Mr. Stone...will personally take up your matter for consideration."—Mr. A. Mayhew, Special Dy. Director in January 1914.

'I have done my very best for your Journal. If the point is that copies of the Journal may be recommended to all the Elementary Schools, I will do so."—The Hon'ble Mr. J. H. Stone on the 8th April 1914. (All Saints' Day).

"The Journal has considerably changed its tone; it is to be remembered that the Editor will have to minister to the School boys entirely. I recommend that it be supplied to all the Primary and Secondary schools."—"All the four requests of the Editor may be granted."—The Reporting Officer. (Inspector of Schools and Chairman of the Tamil section of the Text Book Committee.)

We join the Educational Committee of the Children's Movement in appealing to Local Bodies and Educational Officers soliciting their hearty co-operation in providing every school under their control with a copy of the *Vivekachintamani* and thus help the cause of rural education by helping "the promotion of a wider and deeper knowledge of the indigenous language of the people" which "has a social as well as an educational side to it."

"I am glad that you have made a correct diagnosis of the defects in the present system of Indian Education. In spite of the many improvements that have recently been made, it has to be said with regret that there is still a good deal of the forcing in of the so-called knowledge-matter, instead of the drawing out and invigorating of the faculties of children by cultivating their observation in new fields of God's glorious work. Your magazine makes an earnest and honest attempt to remedy this defect.....the boys and girls who may be habitual readers of your magazine will surely become useful citizens of our country with true devotion to their God and their King and to the sweet service of their great motherland."—*Mr. A. Panchapagesa Iyer, M.A., L.T.*, (Secy. S. I. Teachers' Union.)

REFORM OF RURAL EDUCATION.
Some Thoughts and Reflections.
நாட்டுப்புறத்தார்க்குபயோகமான வித்யாசீர்திருத்தம்.

THE CONSTITUTION OF THE STATE.

இராஜாங்க அமைப்பு.

ராஜாங்கத்தின் முக்கிய அங்கங்கள் நான்கு. அவை: (1) அரண், (2) படை, (3) நாடு, (4) குடி அல்லது பிரஜை.

1. அரண்வலியின்றிப் படைவலி சிறக்காது. இதுவரையில் அரண்வலி யென்றால் கோட்டை கொத்தளங்களுக்குரிய பேராகவிருந்தது. இப்பொழுது நடக்கும் பாரதப் போரின் அனுபவத்தில் எப்பேர்ப்பட்ட அரண்வலி பெற்றகோட்டைகளையும் வேரோடு பிடுங்கியெறிந்து நாசம் செய்யத்தக்க பெரிய பீரங்கிகள் வார்த்துபயோகிக்கப் பட்டுவருகின்றனவென்று தெரிகிறது. ஆகையால் அரண்வலியென்றால் பகைவர் அண்டாதபடி காப்பதற்கான பந்தோபஸ்து காலத்துக்கேற்றபடி எதுவுண்டோ அதற்கேயர்த்தமாகக் கொள்ளவேண்டியது.

2. படைவலி யென்றால் சைனியபலம்; இதன் அர்த்தத்திலும் இப்பொழுது நடக்கும் யுத்தத்தினால் அர்த்தபேதத்துக்கு இடமுண்டாயிருக்கிறது. ஒருதேசத்தின் படைவலி அத்தேசத்தரசன் சைனியபலத்தைப்பொறுத்தது என்பது வாஸ்தவமாயினும் அந்தந்த தேசத்தின் சைனியபலம் குறித்தகாலத்தில் சேனைப்படையில் சேர்ந்திருப்பவர்புஜபலபராக்கிரமமட்டுமாகவின்றி அந்நாட்டிலுள்ள ஆண் மக்களனைவர்களுடைய புஜபலபராக்கிரமத்தைப் பொருத்ததாகவிருக்கிறது. 'புஜபலம்' என்பதின் அர்த்தமும் மாறுபட்டிருக்கிறது. ஏனென்றால் சண்டையிலுபயோகிக்கும் யந்திர தந்திர உபாயங்கள் மிகவும் விர்த்தியாயிருக்கின்றன. அந்த உபாயங்கள் அனைவற்றையும் உள்ளபடி குற்றங் குறையின்றி உபயோகிக்கத்தக்கவன்மை 'புஜபலம்' என்னும் வார்த்தைக்குரித்தான வாச்யார்த்தமாக விருக்கிறது. (அரணில் யந்திர தந்திர உபாய வலியும், படையில் கொடியும் அடங்கும்.)

3. நாடு--இதில் நாட்டுவளப்பமட்டுமின்றி அதனுடைய இருப்பு, படைப்பு, அடைப்பு முதலான சாதகங்களும் அடங்கும்.

4. குடி அல்லது பிரஜையென்பதில் குடிகளின் தொகை மிகுதிமட்டுமன்றி அவர்களின் குணகுண விசேஷங்களும் தேஹ மனோவிர்த்திகளும் அடங்கும்.

COUNTRY-LIFE AND CITY-LIFE.

நாட்டுப்புற நகர்ப்புறவாசம்.

பிரஜைகள் வாசஸ்தான விசேஷத்தையொட்டி நாட்டுப்புறத்தார், நகர்ப்புறத்தார் என இரண்டு முக்கிய பிரிவாக வகுக்கப்படுவர். நாட்டுப்புறம் என்பது நாட்டுப்பக்கம், அல்லது கிராமவாசம். நகர்ப்புறம் என்பது நகர்ப்பக்கம் அல்லது பட்டணவாசம். எத்தேசத்திலும் நாட்டுப்புறத்தார், நகர்ப்புறத்தார் இவ்விருவருக்கும் அவரவர்களுடைய வாசயோக்கியத்தால் சில முக்கிய பேதங்கள் உண்டு.

நகர்ப்புறத்தில் ஜனநெருக்கம் மிகுதி. அத்தோடு வர்த்தக வியாபார கைத்தொழில் உத்தியோக விர்த்திகளும் மிகுதிப்பட்டே விளங்கும்.

நாட்டுப்புறத்திலோ இடவெளி மிகுதியால் ஜனநெருக்கம் என்பது இல்லை. ஜனங்கள் சிறிதும் பெரிதுமான கிராமங்களில் வசித்து உழுதுண்டுவாழ்வாரா யிருப்பார்கள். நிலத்தைக்கொண்டு கைவேலை செய்து பிழைப்பவர்களாயிருப்பதால் பிரகிருதி வாசனை மிகுந்தவர்களாயிருப்பார்கள். 'பிரகிருதிவாசனை' யென்றால் பொருளின் பகுதியாகிய இயற்கை, செயற்கை யென்னுமிரண்டில் ஈசுவர சிருஷ்டியாகவுள்ள முன்னதின் பழக்கமும் அதனால் படிந்த பழக்கவாசனையு முள்ளவர்களாயிருப்பதற்குச் சொல்லும் வசனமாகக்கொள்ள வேண்டும்.

EDUCATION SUITED FOR CITY-LIFE.

நகர்ப்புற வாசிகளுக்கான வித்யாசிக்ஷை.

"கெட்டவன் பட்டணம் சேர்" என்பது பழமொழி. பட்டணத்தில் நல்லார் பொல்லார் என்றுள்ள பலவகை ஜனங்களும் வந்துகூடியிருப்பர். ஆதலால் அண்டை அயல் என்கிற உறவுமுறை யேற்படுவது கஷ்டம். ஏனெனில் ஜனங்கள் வருவதும் போவதுமாயிருந்து மாறிக்கொண்டே யிருப்பார்கள். ஜீவனகஷ்டம் அதிகமாயிருப்பதோடு ஜீவன உபாயங்களும் மிகுதி. நாணயஜீவனம் செய்வார் நடுவே நாணயங்கெட்டவர்களும் வந்து சேருவதால் ஒருவரையொருவர் ஏமாற்றி மோசம் செய்வது சகஜமாயிருக்கும். ஒருதரம் மோசம் போனவர்கள் மறுபடி மோசம்போகாமலிருக்க மிக உஷாராயிருக்கவேண்டிய தவசியமாகும். இப்படியாக அவர்கள் உஷாராக விருக்கவே அவர்களையும் ஏமாற்றிப் பிழைக்கும் வஞ்சகர் சாமர்த்தியம் அதிகரிக்கும். இப்படியாக ஜனங்கள் கூடிவாழ்வதிலே புத்திதீக்ஷண்யம் அதிகரிக்கும். அதை நல்விதத்திலுபயோகிப்பவர்களுமிருப்பர். கெட்ட விதத்திலுபயோகிப்பவர்களு மிருப்பர். அது அவரவர்கள் குணகுணத்தைப் பொறுத்தது. இந்த விசேஷத்தோடு வர்த்தக வியாபாரங்களும், அவை மூலமாக வியவஹாரங்கள் வழக்குகளும் அதிகரிக்கும். துரைத்தன காரியங்கள் பெரும்பாலும் பட்டணவாசத்திலே மிகுதியும் நடப்பதால், அதுபற்றியும், ஐசுவரிய விர்த்தியினாலுண்டாகும் பல தொழில் விர்த்திகாரணமாயும் ஜீவனோபாயங்கள் மிகுதியாகவும் வசதியாகவும் ஏற்படும். இவை போன்றவை நகர்ப்புறம் என்று சொல்லும் பட்டணவாச லக்ஷணங்களாம். இவர்களுக்கு வேண்டிய வித்யாசிக்ஷையும் மனப்பயிற்சியும் நாட்டுப் புறத்தாருக்கு அவ்வளவு உபயோகமாக இராது. ஏனெனில் அங்கே இந்த நகர்ப்புற சாதகங்கள் கிடையா.

EDUCATION SUITED FOR COUNTRY-LIFE.

நாட்டுப்புற வாசிகளுக்கான வித்யாசிக்ஷை.

நாட்டுப்புறத்தாருக்குக் கபடசூதுகள் கற்க அனுகூலங்கள் அவ்வளவாக அமைந்திரா. நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட உழைத்து ஜீவனம் செய்வதொன்றே அவர்களுக்குள் சிறப்பைத் தருவதாகும். அக்கிரமம்செய்கிறவர்கள் அங்குமிருப்பார்களாயினும் ஜனசமூக ஏற்பாட்டின்விசேஷத்தால் அவர்கள் அவ்வளவாகத்தீங்கிழைக்கத்தக்கவர்களாகார். அப்படியே ஆனாலும் சீக்கிரத்தில் அகப்பட்டுக்கொண்டு அவர்கள் கொட்டம் அடங்க ஒடுங்கிவிடுவார்கள். நாட்டுப்புறத்தாருக்கு வேண்டிய படிப்பு அவர்களுடைய நித்தியப்படி ஜீவனத்துக்கேற்றதாக விருக்கவேண்டும். இல்லாவிடில் அவர்கள் படிக்கும் படிப்பு வியர்த்தமாகும். ஏட்டுப் படிப்பினால் மட்டும் அவர்கள் ஜீவனோபாயம் தேடிப்பிழைப்பது துர்லபம். நகர்ப்புறத்தானுக்கெளிதாயிருப்பது நாட்டுப்புறத்தானுக்கு துர்லபமாக விருக்கும். ஆதலால் நாட்டுப்புறத்தார்க்கு வேண்டிய படிப்பு நித்தியப்படி ஜீவனத்துக்குபயோகமாயிருக்கவேண்டியது.

AN INEFFICIENT SYSTEM OF EDUCATION.

'ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது.'

வராகனுக்குப் பதின்மூன்றுபடி விகிதம் அரிசியின் விலையானால் 53-படி அரிசி விற்று முதல் செய்தவன் கையில் எவ்வளவு பணமிருக்கவேண்டு மென்கிற கேள்விக்கு பதில்சொல்ல இக்காலத்திற் பள்ளியிற் படிக்கும் பிள்ளைகளுக்கு மட்டுமன்று, அவர்களுக்குபாலசிக்ஷை செய்யும் மெட்ரிகுலேஷனில் தேறி தர்பித்து பெறற உபத்தியாருக்கும் தெரிய வில்லையென்று பாலவித்யா விசாரணை கர்த்தர்கள் (Sub-Assistant Inspectors of Schools) வித்யாவிஷயமாய்ப் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்த தம் நண்பரோடு சொல்லிப் பிரலாபித்ததை நாம் நேரில் கண்டும் கேட்டுமிருக்கிறோம். இவ்விதப் படிப்பினால் கிராமத்தார்

களுக்கு என்ன பிரயோசனம்? பிள்ளைகளின் பாலப்பருவம் அவர்களுடைய நித்தியப்படி ஜீவனத்துக் குபயோகமான தொழில்களில் உபயோகமற்ற ஏட்டுப்படிப்பு படித்து, இருக்கிற புத்தியும் மந்தமாகப்போய் அவதிப்பட வேண்டியதாக விருக்கிறது. இந்த உதாரணம் ஏகதேசத்தில் சொன்னதன்று. எங்கும் இப்படியே இருக்கிறது. "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்பது பழமொழி. இது காரியத்துக்குதவாத படிப்புப் பிரயோசனமில்லை இயன்பதைக் குறிப்பதற்காக ஏற்பட்ட பழமொழி. அப்படியிருந்தும் இப்பொழுதுள்ள பாடசாலைகள் பலவற்றிலும் ஏட்டுச் சுரைக்காயைக்கொண்டு கறிசெய்யும் வகையாகிய காரியத்துக்குதவாத படிப்புச்சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது.

"THE LETTER AND THE SPIRIT."

"எண்ணெழுத்திகழேல்."

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றார் ஔவையார். அவற்றில் 'எண்' என்கிற மனக்கணக்குதான் இப்படி குருடாய்ப்போவதாயிருக்கிறதே, மற்றொரு கண்ணாகிய எழுத்துவாசனையாவது நன்றாகப்படிந்து வருகிறதா வென்று விசாரித்துப்பார்த்தால் அதுவுமில்லை.

இலக்கிய இலக்கணம்.

"இலக்கியம் கண்டதற்கிலக்கணம் இயம்புவர் புலவனார் என்பர்" என்ற சூத்திரத்தை மறந்து அதற்கு விரோதமாய் அர்த்தம் தெரியாமல் குருட்டுப்பாடம் செய்துவைக்கிறார்கள். வாக்கில் பிறக்கும் வார்த்தைக்கு மனதில் லக்ஷியம் இல்லாவிடில் அது பயனற்ற வாக்காகிறது. பதத்துக்குப் பதார்த்தம் (Meaning of the letter), வாச்சியார்த்தம் (Context), லக்ஷியார்த்தம் (ideal) என மூன்றுபொருள் உண்டு. இது சப்தமாத்திரத்தாலும், சந்தர்ப்ப விசேஷத்தாலும், உள்ளுணர் உண்மையாலும் மேலே சொன்னபடி முப்பொருளைத்தரும். உதாரணமாக, 'அ' என்னும் முதலெழுத்தைஎடுத்துக்கொள்வோம். எழுத்து மாத்திரத்தால் அது வாயைத் திறப்பதால் உண்டாகும் சப்தஸ்வரத்தைக்குறிக்கும், அது எழுத்து வரிசைகளில் முதலெழுத்தாயிருப்பதால் 'அகர முதல வெழுத்து,' என்று திருவள்ளுவர் கூறிய சிறப்பிலக்கணமே அதற்கு வாச்சியார்த்தம். எழுத்துகளுக்கெல்லாம் அகரம் முதலாகவிருப்பதுபோல, ஆதிபகவனை முதலதாய் (மூலகாரணமாய்) உடையது உலகு என்று நாயனார் கூறிய உண்மையை உள்ளுணர்தல்தானே அதற்கு லக்ஷியார்த்தமாம்.

"வாயேன்! உனக்குள் 'அ' அறியாதென்னென்று
"மாயே! நீ மறைந்துபின் காலைவந்தோதினை."

—யென்றுள்ள வேறு உதாரணங்களாலும் இதனுண்மையை ஓர்ந்துணரலாம்.

CRAMMING.

'பொட்டைப் பாடம்.'

இப்படி நம்மவர்களான மேலோர் ஸ்தூல, சூக்ஷ்ம, காரணம் என்கிற முக்கரணங்களுக்கு இசையவாக்கின் அர்த்தமும் மூவிதப்பட்டிலங்குமென்று காட்டியிருக்க, ஒவ்வொரு பாஷையிலும் அறிவுக்கொத்தபடி மனதும், மனதுக்கு ஒத்தபடி வாக்கும் பிறந்து பரிணமிக்கும் என்றுசொல்லிப் பெரியோர் ஸ்தாபித்திருக்க, அதற்கு விரோதமாக 'பொட்டைகெட்டுரு' என்கிற 'அநர்த்தம் விளைக்கும் பொட்டைப்பாடம்' சொல்லி வருகிறது நமது பள்ளிக்கூட வழக்கமாயிருக்கிறது. இதனால் இருக்கிறபுத்தியும் மழுங்கிப்போய்விடுகிறது. இதுகாரணத்தாலே "குழந்தைக்கு உலக்கைக்கொழுந்தும் குந்தாணி வேருமாகத்தான் புத்தி வளருகிறது" என்று விநோதமான உழமொழி நம்முள் வழங்குவதாயிருக்கிறது. உலக்கை உபயோகிக்க உபயோகிக்க நுனி பழுங்கும். குந்தாணி இடிக்க இடிக்க இடம்விட்டு நகரும். இவைபோல் பொட்டைகெட்டுருப்பாடத்தினால் நுட்பபுத்தி குறைந்து இருக்கிற புத்தியும் மழுங்கிப் போவதோடு ஸ்திரபுத்தியும் இல்லாமல் மனது சபலப்பட்டுப் போகிறது. புத்திக்கு தீக்ஷண்யக்குறைவும் ஸ்திரமில்லாத சலனத்தன்மையும் ஏற்பட்டுவிட்டால், எமர்ஸன் (Emerson) சொல்வாக்குக்குப் பொருந்த புத்தி வியபசரிப்பதாகிறது. அதற்கு இலக்ஷணமாயுள்ள கற்புநிலை தவறிப்போகிறது. கற்பு என்றால் என்ன? "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை." வாக்குக்கு வீரியம் உண்டாக வேண்டுமானால் 'சொல் தவறாமை' என்கிற கற்புலக்ஷணம் அதற்கு எப்போதும் இருக்கவேண்டும். நினைப்பதொன்றும் சொல்வதொன்றுமாக வாக்கு வியபசரித்தால் வாக்குக்கு வீரியம் குன்றிப்போம். வாய்மையின்மையால் அகந் தூய்மைகெட்டு மனதில் கபடும் கல்மஷமும் படியும். இந்த துர்க்குணங்கள் நன்றாகப்பழக்க வழக்கத்தால் படிந்துவிட்டால்எமர்ஸன் சொன்னபடி "Intellect is a whore" என்பது வாஸ்தவமாய் விடுகிறது. அகத்தூய்மை யில்லாதபுத்தி வியபசாரியே என்று அவர் நன்றாகச்சொன்னார்.

சமீபகாலத்தில் பாலபோத சிக்ஷா விஷயமாக பிரதம பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு பிதுர் ஸ்தானத்திலிருக்கும் பொறுப்பைவகித்த ஸ்தானீகர்களான உத்யோக பதவியுள்ளவர்களைப் (Local bodies) பார்த்துவர வேண்டிய நிமித்தம், "பாலர்க் குழைக்கவென்று பரிந்துமிக வழைத்துச், சாலவுநாவிக் துறையினுக்குதவி செய்வேனென்று' அடியார்க்குரிய திருநாளில் ஸத்யங்கொடுத்து ஸத்யம் வாங்கினவர்களுடைய வாக்கை பகலான் திருவுளச் செய்கையாகிய நம்பிய பாலன் ஒருவன் அடியார் துணைக்கொண்டு அத்துறையிலுழைக்கவென்று கங்கணம்கட்டிப் புறப்பட்டுச் சென்றான்.

"INTELLECT IS A WHORE."

புத்தி வியபசார தோஷம்.

உலகில் பெரிய அந்த ஸ்திதியுள்ளவர்கள் அக்குழந்தைக்கு அபயம்கொடுத்து உகரிப்பதாகச் சொல்லிவிட்டு, அரைமணிநேரம் கழியுமுன், அவர்களே அநுகூலமா யிருப்பவர்களையும் கலைத்துப் பிரதிகூலம் விளைக்கமுனைந்து அப்பாலன் மனம்புண்ணாகத் தீங்கிழைத்து விட்டார்கள். இதற்கெல்லாம் காரணம் புத்திக்கு தீக்ஷணியமும் ஸ்திரத்தன்மையும் ஒத்துவாய்க்காத காரணத்தால் புத்தி வியபசரிக்கத் தொடங்கின தோஷம் ஒன்றே தவிர மற்றப்படி ஒருவர்க்கொருவர் தீங்கிழைக்கவேண்டுமென்கிற எண்ணமில்லை. ஆதலால், தொட்டில் பழக்கம் முதற்கொண்டு வாக்குக்கு வாய்மையும், அதனால் அகத்துக்குத் தூய்மையும் ஏற்பட்டாலன்றி கல்விக்கழகாயுள்ள மனப்பழக்கம் ஏற்படுவது துர்லபம். எத்தனையோ பேர்கள் படித்துப் பரீக்ஷைகள் கொடுத்துப் பெரிய பெரிய உத்யோகங்களும் பதவிகளும் பெற்று அப்பதவிக்கேற்ற பொறுப்போடு நடந்து கொள்வதற்கேற்ற நல்ல மனப்பழக்கமின்றி 'வல்லான் வகுத்தது வாய்க்கால்' என்று பதங்குலைய நடந்துகொள்கிறார்கள். இக்குற்றமெல்லாம் பாலசிக்ஷை முதல் ஏற்பட்டதாகையால் அதைச் சீர்திருத்தினாலன்றி பிற்காலத்தில் நற்குணம் அமையப் பெறுதல் துர்லபம்.

VILLAGE-LIFE, THE BASIS OF NATIONAL LIFE.

கிராமச் செழிப்பும் தேசச் சிறப்பும்.

நாட்டுச் சிறப்பும் நகர்ச்சிறப்பும், கிராமச் செழிப்பைப் பொறுத்ததாகும். கிராமம் பாழாக நாட்டுக்கும் நகருக்கும் சிறப்புண்டாக மாட்டாது. ஏனெனில் நாட்டுக்கும் நகருக்குப் கிராமங்களே ஆதார பூதமாக விருக்கின்றன.

அஃதேபோல தேசத்தாரின் சமஷ்டி பாவயோக க்ஷேமங்கள் கிராமத்தார் யோகக்ஷேம விசேஷத்தைப் பொறுத்ததாயிருக்கிறது. சமுதாயம் பொதுவாய் நாட்டுக்கும் நகருக்கும் பொருந்துமானாலும், இத்தேசத்தில் அது முக்கியமாய் கிராம சமுதாயத்துக்கே சிறப்பிலக்கணமாகப் பொருந்தும்.

கிராம வாசத்தின் யோக க்ஷேமம் எப்படியோ அதற்கேற்றபடி தானிருக்கும் நாட்டு க்ஷேமமும், நகர க்ஷேமமும், ஜனக்ஷேமமும். ஆதலால் தான் ஔவையார் "வரப்புயர !" என்று அரசனை வாழ்த்தினார்.

வரப்புயர வயலுயரும் போலக், குடியுயரக் கோனுயரும்.

REFORM OF RURAL EDUCATION.

நாட்டுப்புறபாலபோதசிக்ஷைச் சீர்திருத்தம்.

ஆகலால் கிராம க்ஷேமத்துக்கு இன்றியமையாதது கிராமத்தாருக்கு வேண்டிய உண்மையான பாலபோத சிக்ஷை.

இந்தப் பாலபோத சிக்ஷை இப்பொழுது கிராமத்தார்யோகக்ஷேமத்துக்குப்பொருந்தினதாகவின்றி, அதற்குப் பொருந்தாத ஒருவழியில்நடந்து வருகிறது. அதனால் ஏட்டுப்படிப்பு விர்த்தியும், அதனாலுண்டாகும் புத்தி க்ஷயமும் கிராமங்களில் அதிகரித்து பட்டணவாசங்களில் பொய்யும் புனைசுரட்டும் குதர்க்கவாதமும், அநர்த்த வினைவும் மிதமிஞ்சி மலிந்து பரவி வருகின்றது. இதனால் க்ஷேமக் குறைவும் க்ஷாம நிறைவும் அதிகரித்து ஜனங்களைப் பிடித்து வருகிறது.

THE HON'BLE SIR C. SANKARAN NAIR'S GRASP OF THE PROBLEM.

கனம். ஸர் சங்கரன் நாயர் கிராஹிய சக்தி.

இந்த உண்மைகளை யெல்லாம் ஸர் சங்கரன் நாயர் அவர்கள் ஓர்ந்துணர்ந்து இதற்கு வேண்டிய சீர்திருத்தம் செய்யவேண்டியது அத்யாவசியகமாயிருக்கிற தென்று அவருடைய அபிப்பிராயத்தைத் தீரத்தெளிய நீள நினைந்து வெளியிட்டெழுதியிருக்கிறார். அதன் கருத்தைச் சுருக்கமாய் விவேசிந்தாமணியில் வெளியிட்டெழுதியு மிருக்கிறோம். அப்படிப்பட்ட உணர்ச்சியுள்ளவர் இப்பொழுது இந்தியா முழுமைக்கும் வித்தியா மந்திரியாக நியமிக்கப்பெற்றிருக்கிறார். இவர் நவம்பர்மீ 2-2 ஸிம்லாவில் அவருடைய வேலையை ஒப்புக்கொள்ளப்போகிறார். இவர் சென்னையை விட்டுப் போகுமுன் இந்நகரிலுள்ள பத்திராசிரியர்கள் சேர்ந்து இவருக்கு விருந்தளித்து உபசாரமுகமன் கூறியனுப்ப அக்டோபர்மீ 16உ யன்று சாயந்திரம் 8-மணிக்கு மா-ா-ா-ஸ்ரீ, கஸ்தூரிரங்க ஐயங்கார் அவர்களுடைய கிரஹத்தில் ஒன்று கூடினார்கள். அவர் விருந்தோம்பி எல்லோரையும் உபசரித்து ஸர் சங்கரன் நாயர் அவர்களுக்கு மங்கள முண்டாவதாக வாழ்த்து வசனங்கள் கூறியனுப்பினார். அப்பொழுது அவர் பதிலுரைத்ததிலிருந்து, அவரை வித்தியா மந்திரிஸ்தானத்துக்கு நியமித்தது சாதாரணமாக உத்தியோகம் உயரவேண்டிய முறையிலல்லவென்றும், அவர் வித்தியா போதன விஷயமாக லார்ட் ரிப்பன் நியமித்த "எடியுகேஷன் கமிஷன்" சம்பந்தமாகப் பாடுபட்டுழைத்திருக்கிறதாகவும், அவருடைய அபிப்பிராயங்கள் அவரை நியமித்த மேலதிகாரிகளுக்குத் தெரிந்தே யிருக்கிறதென்றும், அவர் வித்யா இலாகா, ஸ்தானீக சுய ஆக்ஷியிலாகா, சுகாதார சம்பந்தமான இலாகா இம்மூன்றுக்கும் அதிகாரியாக நியமிக்கப் பட்டிருக்கிறார்களென்றும்; இம்மூன்று இலாகாக்களும் ஒன்றோடொன்று சேர வுடன்பட்டுக்கலந்திருக்கின்றனவென்றும், இவைகளில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் தேசத்தின் யோகக்ஷேமத்துக்கு இன்றியமையாத சாதனங்களாயிருக்கின்றனவென்றும், அவர் ஸிம்லாவில் போய் உத்தியோக அந்தஸ்தை மட்டும் அனுபவிப்பதாக எண்ணமில்லையென்றும், அவருடைய கடமைகளைச் சரிவரச் செலுத்த வேண்டுமென்கிற பொறுப்பு மிகுந்து அதைச் செலுத்தக் கருதிப் போகிறதாகவும் சொன்னார்.

இவர் கிராமாந்தரங்களில் பாலபோத சிக்ஷை செய்யும் முறையை முற்றும் மாற்றிச் சீர்திருத்த வேண்டுமென்று ஏற்கனவே

அவருடைய அபிப்பிராயத்தை வெளியிட்டெழுதி யிருக்கிறாரென்று சொல்லி யுள்ளோம். அவற்றைச் சுட்டிக் காட்டி இவர்செய்ய வேண்டிய சீர்திருத்தங்களில் கிராமாந்திர பாடசாலைகளைச் சீர்திருத்தி பாலபோத சிக்ஷை அவர்களுக்குப் பயன்படுவதாகச் செய்ய வேண்டியது முதற்காரியமா யிருக்கிறதென்று காட்டி, அவ்வேலையை முடிக்க அவருக்குள்ள யோக்கியதாம்சங்களையும் சுட்டிக்காட்டி (Reform of Rural Education) என்னும் தலைப்பின் கீழ் தினசரிப் பத்திரிகைகளுக்கு இங்கிலீஷில் ஒரு விஷயம் வரைந்துள்ளோம். அதையே இதற்கு முன்னோடாக வெடுத்து அச்சிட்டு, அவர் கவனிக்கவேண்டிய விஷயங்களில் முக்கியமான பால போத சிக்ஷை (இதில் பெண்கல்வியும் அடங்கும்), கிராம சமுதாயச் சீர்திருத்தம், கிராம வாசச்சிறப்பு இவைகளைச் சொல்லாமற் சொல்லி சுட்டிக் காட்டி யெழுதியுள்ளோம். அவற்றையே நம்மவர்கள் அறிய வேண்டியதினிமித்தம் அதற்குப்பின்நேர்ந்த அனுபவங்களின் பயனையும் கூட்டி இங்கே வெளியிடலானோம்.

THE IMPORTANCE OF 'VILLAGE LIFE ON A SOUND BASIS.'

கிராம சமுதாயயோக க்ஷேம விசேஷம்.

கிராமாந்தரங்களின் யோக க்ஷேமம் குன்றி வருவதால் கிராம வாசத்துக்குச் சிறப்புக் குன்றினால் மற்றப்படியுள்ள நாட்டு க்ஷேமம் நகர க்ஷேமம், ஜனக்ஷேமம் என்கிற எல்லா [illegible]த யோக க்ஷேமங்களுக்கும் ஹானிவருமென் [illegible]ணம். ஏனெனில் கிராமவாசமே [illegible]ளின் சமுதாய க்ஷேமத்துக்கு இன்றியமையாத மூலாதாரமாக விருக்கிறது. இதை இன்னும் விரிக்கிற் பெருகுமென்று சுருக்கமாய்ச் சொல்லி சுட்டிக்காட்டினோம். புத்திசாலிகள் அவர்களுடைய தீக்ஷண்யபுத்தி விசேஷத்தாலும் அனுபவ ஞானத்தாலும் இது விஷயத்தைப் பின்னும் [illegible]தெளிய யோசித்துச் சிந்திக்க இது ஒரு [illegible]ண்டுதலா யிருக்குமாயின் நாம் இவ்வளவு [illegible]ம் பாடுபட்டு பரியாலோசனை செய்தெழுதி[illegible] பலன் அதுவேயாகும்.

THE LATE Mr. JUSTICE RANADE'S SUGGESTION.

கனம். ரானடே அவர்கள் அபிப்பிராயம்.

ஸ்வபாஷா விர்த்திக்காக உழைத்ததிலிருந்து அது விஷயமாக நமக்கு அனுபவரீதியாகப்பட்ட அபிப்பிராயத்தை வெளியிட்டு 1895-ம் வருஷத்தில் சென்னை மெயில் பத்திரிகைக்கு நாலு வியாஸங்கள் எழுதினோம். அதைத்திரட்டி அச்சிடவேண்டிப் பலர் கேட்டுக்கொண்டதற்கிணங்கச் சிறு புஸ்தகரூபமாகவும் அதை அச்சிட்டோம். அப்புஸ்தகத்துக்கு முகவுரை யெழுதிய மெயில் ஆசிரியரான மிஸ்டர் ஹென்ரி பீசம்ப் அவர்கள் ஸ்வபாஷாவிர்த்தி விஷயம் வித்யா ஸம்பந்தமானதாக மட்டுமில்லாமல் ஜனசமூக யோகக்ஷேமத்துக்கும் அது இன்றியமையாததா யிருக்கிறதென்பதை அப்புஸ்தகத்தில் நன்றாக வெடுத்து நிரூபிக்கப்பட்டிருக்கிறதென்றும் அதைத் [illegible] உணர்ந்தாலன்றி உண்மையானபடி சீர்திருத்தம் செய்வது சாத்தியமாகாது என்றும் சொல்லி வற்புறுத்திக்கூறியிருக்கிறார். இது விஷயமாக இந்த விவேகசிந்தாமணியாலும் அறிவைப் பரவச்செய்யும் ஏஜன்ஸியாலும் உண்டாயிருக்கும் நலத்துக்கும் அவர் நற்சாக்ஷி பகர்ந்திருக்கிறார். இந்த வியாசங்களைப் படித்த கனம் ராவ் பஹதூர் மஹாதேவ கோவிந்த ரானடே அவர்கள் (மிஸ்டர் கோகலேயின் குரு) நாம் செய்த முயற்சி சரிதான் என்றும் அது பொதுஜன ஆதரவில்லாமையாற் பலிக்கவில்லையென்றும், பின்னொரு முறை அநுகூல சாதனங்களேற்படும்பொழுது முயற்சித்தால்

அம்முயற்சி சித்தியைத்தருமென்பது நிச்சயமென்றும் நமக்கு எழுதியுள்ளார். அப்படிப்பட்ட அனுகூல சாதனங்கள் 1913-ல் 'பாலர் திருவிழா' ஏற்படுத்தியதனாலும், அதற்கு அத்தியக்ஷகரா யிருந்த கனம் மிஸ்டர் ஜெ. எச். ஸ்டோன் நமக்கு அவராலான உதவியெல்லாம் செய்வதாக வாக்குக்கொடுத்து அதையொட்டி அவருடைய பிரதிநிதியானவர் நம்மிடம் பாலர்க்குழைக்க வேண்டுமென்று ஸத்தியம் வாங்கிக்கொண்டு இதர ஆதரவுகளை விட்டுவிட்டு பள்ளிப் பிள்ளைகளுக்கே உதவிசெய்து உழைக்கவேண்டுமென்றும் பிரதம பாடசாலைகளிலும் இதர பாடசாலைகளிலும் இந்த விவேகசிந்தாமணியை வாங்கிவாசித்து வருவதற்கான ஆதரவளிப்பதாகவும் வாக்குறுதி கூறிய சமயத்தையே அநுகூல சாதனமாகக் கொண்டு மறுபடியும் இம்முயற்சியிலிறங்கி உடல் பொருள் ஆவியையும் ஈசுவரார்ப்பணமாகத் தத்தம்செய்து உழைத்து வருகிறோம்.

சமஷ்டிசேவை சாதகம்.

நம்மவர்கள் இதற்கு வேண்டிய சதாகமளிப்பார்களென்று நம்பியே இத்துறையிலிறங்கியுள்ளோம். எல்லார் திருவுள்ளத்திலும் வசிக்கும் எம்பிரான் அகத்திலே யிருந்து நம்மைத் தூண்டியதுபோல் புறத்திலே யிருந்து நமக்கு வேண்டிய உதவி செய்தருளுவாரென்று நம்பித் துணிந்து இக்காரியத்தில் பிரவேசித்துள்ளோம். நம்பினோற் கைவிடாத நாதன் திருவருளைச் சிந்தித்து எல்லாரும் இந்த கைங்கரியம் இனிது முடிய உதவி புரிவார்களென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறோம்.

MORAL INSTRUCTION FOR GIRLS.

பெண்கள் நீதிவிளக்கம்.

பிரதம பாடசாலைகளில் பாலசிக்ஷையார்க்கும் நீதிபோதம் செய்யவேண்டியதின் அவசியத்தைப்பற்றிச் சென்ற சஞ்சிகையில் வித்யா இலாகாத் தலைவருடைய ஒட்டுத்தரவை யனுசரித்து அதிலடங்கிய முக்கியாம்சங்களையெடுத்து விளக்கினோம். பாலசிக்ஷை எப்போதும் இயற்கை தர்மத்தை யொட்டியே யிருக்கவேண்டியது. தர்ம விரோதமான காரியங்கள் எப்போதும் வில்லங்கத்தை யுண்டுபண்ணும். ஆனால் புருஷப் பிரயத்தனத்தால் பிரகிருதியையும் வென்று "வீடுபெற நில்" என்ற ஔவை வாக்கியத்துக்கு இலக்காயிருப்பதல்லவோ புருஷலக்ஷணம் என்பர் சிலர். ஆம்! அது உண்மைதான். ஆனால் வார்த்தைகளை உபயோகிப்பதில் அவற்றின் உள்ளர்த்தத்தை மயக்கமின்றி உள்ளபடி யுணர்ந்துபயோகிக்க வேண்டும். இல்லாவிட்டால் "கஞ்சி வாதப்பா!" என்றால் "எங்கு வாதப்பா?" என்றவன் கதையாக முடியும். இயற்கையென்பது ஈசுவர சங்கல்பத்தையொட்டி நடக்கும் பிரகிருதி தர்மம். அதை ஈசுவர சிருஷ்டியாகிய ஜீவன் தன் சொந்தப் பிரயத்தனத்தினால் வெல்லது முடியாததாகும். ஆனால் ஜீவனுக்குள் ஜீவேசுவர ஐக்கியத்தை யுணர்த்தும் அந்தராத்மா என்று சொல்லும் உள்ளறிவு இருக்கின்றது. அந்த அறிவை, 'உயிருக்குயிர்' என்பதுபோல் அறிவுக் கறிவாயிருக்கும் பேரறிவு என்று சொல்லுவர் மேலோர். இந்தப் பேரறிவு எல்லா ஜீவகோடிகளிடத்திலும் மறைபொருளா யிருக்கிறது. இது விளங்கப்பெற்று நிற்பதே "வீடுபெறநில்" என்று சொன்னதின் உட்பொருளாம்.

"கங்கைக்குப்போனாலும் கர்மம் தொலையாது" என்பது பழமொழி. அப்படியென்றால் புண்யம்செய்து பாபத்தைப் போக்கமுடியாது. வேம்பும் கரும்பும் ஒருநிலத்தில் பயிரானாலும் வேம்பு வேம்புதான். கரும்பு கரும்புதான். வேப்பம் வித்தைப்போட்டு அதைக் கரும்பு ஆகமாறச் செய்யமுடியாது. இப்படி இயற்கை தர்மத்துக்கு விரோதம் செய்யமுடியாது என்பதை விளக்கத்தான் திருவாழ்த்தான் கருப்புநாயை வெள்ளைநாயாக்குகிறதாகப் பாசாங்குசெய்து அரசனுக்குப்புத்தி புகட்டலானான்.

"அபேத தரிசனம் ஞானம்" என்று சுருதி முறையிடுகின்றது. அப்படியென்றால் என்ன? இவ்வுலகமே நாமரூபபேதங்களால் அமைந்திருப்பதாகச் சொல்லுவர் மேலோர். குயவன் மண் ஒன்றையே சட்டியாகவும் பானையாகவும் தொட்டியாகவும் தோண்டியாகவும், ஆனை குதிரைகளாகவும் செய்கிறான். அவையெல்லாம் மண்ணால் செய்யப்பட்டுள்ளன என்றமட்டில் அவற்றின் காரணம் அபேதமாகவிளங்கினும், காரியமாகிய பானை, சட்டி தொட்டி, தோண்டி, ஆனை, குதிரை, இவையெல்லாம் அபேதமாயிருக்கிறதாகச் சொல்லது சரியல்ல. ஏனென்றால் அது உண்மைக்கு விரோதமாகும். இந்த உண்மையை விளக்குவான் பெரியோர், "மரத்தை மறைத்தது மாமத யானை" யென்று சொன்னார். மரத்தாலான யானை ஒன்றை அதன் நாமரூபங்களைச் சிந்தித்துப் பார்க்கும்பொழுது அது மரத்தினாலானது என்கிற உண்மையை நாம் மறந்துவிடுகிறோம். யானை யென்கிற சப்தத்திலடங்கிய நாமரூப அமைப்புகள், மரம் என்கிற சப்தத்திலடங்கிய அபேத காரணத்தை மறைத்துவிடுகிறது. பின்னும் அதையே யானை யென்கிற பாவத்தைவிட்டு அது எதனால் செய்யப்பட்டது என்று விசாரித்தறியப் புகுந்தால் அப்பொழுது 'அது மரம்' என்கிற உண்மை ஒன்றைத்தவிர மற்ற நாமரூப அமைப்புகளெல்லாம் அதில் ஒடுங்கிவிடுகின்றது. இந்த உண்மையைத் தானே "மரத்தில் மறைந்தது மாமத யானை" யென்னும் வாச்சியத்தால் விளக்கியிருக்கிறார். இப்படியாக உலகத்தில் பேதங்களும் அபேதமும் ஏற்படுவது உலகத்தைச் சிந்திப்பவர் சிந்தனாபாவத்தால் ஏற்படுகிறதன்றி மற்றப்படி அவர்களுக்கு அந்நியமாகவுள்ளதொன்றில்லை. இப்படி மனம் ஒன்றைச் சிந்திக்கும்போது தோற்றும் பேதாபேதங்கள் சிந்தனாமாத்திரத்தினால் தோன்றி மறைவதாயிருப்பதால் இதை மனதின் காரியம் அல்லது மனோபாவம் என்று சொல்வதற்கு பதிலாக ஈசுவராஜ்ஞையை உத்தேசித்து மாயை என்று சொல்கிறது. மனம் என்றாலும் மாயை என்றாலும் ஒன்றே. மனம்வியஷ்டி பாவம். மாயை சமஷ்டி பாவம். மனுஷனுக்கு மனமாயிருப்பது சமஷ்டி கர்த்தாவாகிய ஈசுவரனுக்கு மாயையாக விருந்துதவுகிறது. ஜீவன் மனதினால் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் மூன்றும் செய்கிறான். ஈசுவரன் மாயையினால் அதே முத்தொழிலையுமியற்றுகிறான். ஆனால் பேதமென்ன? மனதின் காரியம் க்ஷணிகமாத்திரமாயுள்ளது. ஈசுவர மாயையின் காரியம் யுகாந்தரமாய் விளங்கும். இப்படி நாம் மனப்பயிர்ச்சியைக்கொண்டே ஈசுவரஞானம் பெறவேண்டியிருப்பதால் அந்த மனப்பயிர்ச்சி எல்லாருக்கும் ஜன்மசாபல்யத்துக்கு இன்றியமையாத சாதனமாகவிருக்கிறது.

அந்த மனப்பயிர்ச்சியும் தேஹமின்றிச் சாத்தியமில்லை. எப்படியெனில் சுவரின்றிச் சித்திரமில்லைபோல். சுவற்றை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுதவேண்டும். அதேபோல தேஹத்தை வைத்துக்கொண்டுதான் மனப்பயிர்ச்சி செய்யவேண்டும். மனுஷதேஹமோ பால்வேற்றுமையோடு கூடியதாகவிருக்கிறது. அதாவது ஆண், பெண் என்கிற வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. முடிவில் இந்த வேற்றுமையும் அற்றுவிடத்தே "வீடுபெறல்" சாத்தியமென்று ஏற்பட்டாலும், பிரதமத்தில் இதைக் களைந்துவிடுவது சாத்தியமில்லை. ஆகையால் ஆணும் பெண்ணும் இவ்வுலகில் ஒத்து வாழவேண்டிய தர்மத்தை யனுசரிக்க வேண்டும். இயற்கை தர்மம் மேற்பார்வைக்கு ஒன்றுக்கொன்று விரோதமாகத் தோன்றி

னும், ஊன்றிப் பார்க்கில் உண்மையில் எல்லாம் ஒன்றுக்கொன்று இசைவாகவே ஏற்பட்டிருப்பது விளங்கும். இப்படி ஆணும் பெண்ணும் ஒத்து வாழ்வதை இல்லறதர்மம் என்று சொல்லிப் பெரியோர் அதையே "இல்லறம்" என்று ஏற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்லறமாகிய இல்லறத்தை நடத்த பாலசிக்ஷை முதற்கொண்டே ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள உறவு முறையையும் அதை யொட்டியுள்ள தர்மங்களையும் அவர்கள் உணர உணர்த்தல்வேண்டும். இது ஜாதி, மத, குலாசாரங்களை யொட்டி வேற்றுமைப்பட்டிருப்பினும் அவ்வேற்றுமைகளெல்லாம் காரிய மாத்திரத்திலேயன்றி காரணத்தில் இல்லை. தர்மம் என்பது ஒன்று. அதில் புருஷதர்மம், ஸ்திரீ தர்மம் என்று வேற்றுமை காணப்பட்டால் அது புருஷசப்தம், ஸ்திரீ சப்தம் சேருவதனால் தொழில் வேறுபாட்டையுத்தேசித்து உண்டானதன்றி, மற்றப்படி மூல காரணமாக அதில் வேற்றுமையில்லை. இல்லையாயினும் காரியத்தில் வேற்றுமை யேற்பட்டே விளங்கும். இதையெல்லாம்பற்றி விரித்துரைக்கில் விஷயம் வளர்ந்துவிடும். ஆகலால், புருஷர்கள் தம் கடமையைச் செலுத்துவதற்கான குணங்களைப் பெற்றிருக்க வேண்டியது போல, ஸ்திரீகளும் அவர்கள் கடமையைச் செலுத்துவதற்கானகுணங்களைப்பழக்கவழக்க விசேஷத்தால் பாலசிக்ஷை முதல் பெறற் பெற்றுப் பழகவேண்டும். முன்னது "ஆண் தன்மை" பின்னது "பெண் தன்மை". "பேதைமை யென்பது மாதர்க்கணிகலம்" என்றால் பெண்கள் படியாத மூடர்களாயிருப்பது அவர்களுக்கு பூஷணம் என்று அர்த்தம் செய்துகொண்டு அநர்த்தம் விளைக்கிற இந்தியர்களும் அதிகாரத்தில் இருக்கிற இக்காலத்தில் பெண்களுக்கு இலக்ஷணமாகஏற்பட்டுள்ள நீதிகள் இன்னவென்று விளங்கக்கூறவேண்டியது மிகவும் அவசியமாகவிருக்கிறது. ஆசார அனுஷ்டான விஷயங்களில் எப்போதும் ஜன சமூகத்தில் சீர்திருத்தங்களுக்கு இடம் இருந்துகொண்டே தானிருக்கும். அதனால் தர்ம விரோதம் ஒன்றுமேற்படமாட்டாது. தர்மம் ஈசுவர ஆஞ்ஞையை யொட்டிப் பிரவர்த்திப்பது. ஆசார அனுஷ்டானங்கள் சிஷ்டாசாரத்தை யொட்டி சிஷ்டானுசாரமாக ஏற்படுவது. இவ்விரண்டுக்குமுள்ள பேதத்தை மறந்துவிடக் கூடாது.

"மனைமாட்சி யில்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை, எனைமாட்சித் தாயினுமில்"— என்று திருவள்ளுவநாயனார் ஓதியிருப்பதால், அப்படிப்பட்ட மனைமாட்சி, இல்லாள்கண் அமைந்திருக்கவேண்டில் அதற்கு எவ்வித பாலசிக்ஷை வேண்டுமென்பதை யுணர்ந்துகொள்ள எல்லாரும் ஆவலாயிருப்பார்கள் அவர்கள் "பெண்கள் நீதிவிளக்கம்" *என்கிற வினாவிடை ரூபமா யெழுதப்பட்ட சிறு புஸ்தகத்தை வாங்கி வாசித்தால் அவர்களுக்கு "மனைமாட்சி" லக்ஷணம் இன்னது இனியது என்று நன்றாக விளங்கும். "பெண் என்றால் யார்?" என்கிற வினாவுக்கு அவர் விடை பகர்ந்திருப்பதிலிருந்து அப்புஸ்தகத்தின் அருமை தெரியவரும். இப்பெரிய பிரமாதமான கேள்விக்கு மேற்கிசையார் பற்பல விதமாக விடையளித்தும் உண்மை விளங்கப் பெறாது உழல்கிறார்கள். இச்சிறு புஸ்தகத்தை யெழுதினவர் தனை தலைப்பாரமாக ஒன்றையும் எடுத்துப்போட்டுக் கொள்ளாமல் நீதி வெண்பாவிலிருந்து ஒரு பாட்டை யெடுத்துச் சொல்லி அதன் அர்த்தம் எல்லாருக்கும் விளங்கும்படி வியாக்கியானம் மட்டும் செய்திருக்கிறார்.

"அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னின் அழகும் புவிப்பொறையும் —வன்னமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசில் இவையுடையாள் பெண்."

ஔவையார் ஒரு இல்லான் வீட்டிற்கு அதிதியாகச்செல்ல, அவன் குணமிலாளாகிய தன்

* To be had of the Compiler, மயிலாப்பூர் குப்புசாமி நாயகர், நெ. 5, பிச்சுபிள்ளை தெரு, மயிலாப்பூர். விலை அணா 4.

பெண்டாட்டிக்கு பயந்து அவளுக்கு மனங்குளிர வேண்டிய உபசாரங்களெல்லாம் செய்து "ஒரு பழுத்தகிழவி கொஞ்சம் கூழுக்கு வந்திருக்கிறாள்" என்று அவளுக்குத் தெரிவித்தான். அதைக்கேட்ட அவள் உடனே தீயில் விழுந்த பாம்புபோல் சீறி அவனுக்குச்செய்த உபசாரங்களை ஔவையார் தானே அவள் திருவாக்கால்பாடி இருக்கிறாள். அதையும் அந்தச் சண்டாளியைப் பெண்டு கொண்டவனுக்கு அவள்கூறியுள்ள புத்திமதியையும் கீழே யெடுத்துப் பிரசுரிக்கிறோம். அதில் முன்னது இது:—

"இருந்து முகந்திருத்தி யீரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப—வருந்திமிக
வாடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தாற்
சாடினாளோடோடத் தான்".

பின்னதுபின்வருமாறு:—

"சண்டாளி சூர்ப்பனகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே—
தொண்டா
செருப்படிதான் செல்லாவுன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்."

அன்பில்லாவொருத்தி ஔவையாருக்கு அன்னமிட்டபோது அவர் அந்த அமுதையுண்டு பட்ட பாட்டை உலகறியக்கூறியுள்ள இப்பாட்டையும் அச்சிறு புத்தகத்திலே காணலாம்.

"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லாள் இட்ட அமுது."

இப்படியே உலகத்தில் அன்பிலாது பண்பிலாது உண்பதும், உடுப்பதும், உறங்குவதுமே தொழிலாய் மிருகப்பிராயமாய் வளர்ந்து வரும் மனிதர்கள் ஆண், பெண் இருபாலாரி[illegible] எத்தனையோ பேர்கள் காசும் பணமும் [illegible] அந்தஸ்தும் அதிகாரமும் பெற்று வன[illegible]கள்போல் ஏழைகளை வருத்தியுண்டு கொழுத்துத் திரியக் காணலாம். இவர்களையெல்லாம் அடக்க ஔவையைப் போன்ற அருள்வாக்குடையோர் பிக்ஷாடனமூர்த்தியாகத்திரிந்து இவர்கள் வேஷத்தைக்கலைத்துப் புழுவைக்குலைத்து 'விதைத்தான் வினையறுப்பான்'என்றபடி இவர்கள் வினைப்பயனை யாவருமறிய வெடுத்துக்கூறிப் புத்திபுகட்டல் வேண்டும், இதுவே அடியார்தம் பெருங்கடமையாம்.

அப்படிப்பட்ட அடியார்கள்தானே 'மெய்யடியார்' எனப்படுவர். அவர்களுக் கர்ப்பணமாக கமலாம்பாள் சரித்திரம் நான்காவது பதிப்பைச் சமர்ப்பித்திருக்கிறது. இச்சிறு புத்தகத்துடன் அந்த அருமையான கிரந்தத்தையும் ஒவ்வொரு பாடசாலையிலும் பாடமாக வைத்துப் போதிக்கவேண்டியது அவசியமென்று பாலசிக்ஷை செய்வார் பலர் நமக்கெழுதி யிருக்கிறார்கள். கமலாம்பாள் சரித்திரம் ஏற்கனவே 'ப்ரைமெரிடீச்சர்ஸ் ஸெர்டிபிகேட்' பெறுவதற்கான பரீக்ஷைக்குப் பாடமாகவைக்கப்பட்டிருக்கிறது. பாலசிக்ஷை செய்வார் ஒவ்வொருவரும் "பெண்என்றால் யார்?" என்னும் கேள்விக்குப் "பிரசன்னோத்தர பூஷணமாக" விளங்கும் அப்புஸ்தகத்தை வாங்கிப் படிக்கவேண்டும். "பெண்கள் நீதி" யெல்லாம் திரண்டுருண்டு உருவெடுத்தது போல் விளங்கும் அக்கதாநாயகியின் ஏகபுத்திரி லெட்சுமியின் உதாரணத்தை மனதிற் பதியவைத்து அவள் கணவன் ஸ்ரீனிவாசனைப்போல் வித்தியா சம்பத்துப் பெற்று விளங்கல் வேண்டுமென்பதே நமது ஹிருதய பூர்வமான பிரார்த்தனை. "கமலாம்பாள் கருவுதித்தான்" ஆகிய "நடராஜா" தானே தில்லைவனத்திலும் திருவாலவாயிலும் "காலூன்றிக் கால் தூக்கிப்பாடி" உலகுய்ய உண்மையுணர்த்தி யாவருக்கும் பரமாசாரியனாக விளங்குகிறான். அவனுடைய நிருத்த தரிசனம் கண்ட மெய்யடியார் பாததூளியைச் சிரவில் தரிப்பதே நமக்குக் குஞ்சிதசரண தீக்ஷையாகும். ஆதலால் கமலாம்பாள் சரித்திரத்தோடு அதன் சாராம்ஸத்தையே விளக்கிவரும் விவேகசிந்தாமணியாம் இவ்வருமணியையும் அவர்களுக்கே அர்ப்பணமாகச் சமர்ப்பித்து அவர்களுடைய பாததூளி மஹிமை விசேஷத்தால் பாலர்க்குழைக்கும் பாக்கியம் பெற்றோமாக அத்திருவம்பலவாணனைத் துதிக்கிறோம்.

"பாலர்க்குழைக்கவென்று பரிந்துமிகவுழைத்துச்
சாலவுநானித்துறையிலுனக்குதவி செய்வேனென்
றாலயத்திலறுபத்து மூவர்திருவிழா நடக்கச்
சேவுடனுடல்பொருளாவியுமொன்றாக்கைக்கொண்டு
பாலசிக்ஷைசெய்வார்தம் உளம்புகுந்தான்
பாலனாய் வந்தவதரித்தான் கமலாம்பாள்கருவுதித்தான்
ஆலமுண்டான் தில்லைவாழந்தணர்தமடியார்க்கு மடிய
[னென்றான்
முயலகன்மேற்காலூன்றிக்கால்தூக்கியாடினான்
கயல்விழியாள்காண அவன் திருக்கூத்துத்தரிசனங்கண்
டயலொன்றறியா' மெய்யடியார்க் கர்ப்பணமாமீதென்
[றறி."

THE INDIA OFFICE-1.
இந்தியா ஆபீஸ்-1.

லண்டனிலுள்ள "இந்திய ஆபீஸ்" என்னும் கட்டிடம் மாக்ஷிமை பொருந்திய ஜார்ஜ் அரசரின் மந்திரிகள் வாசஞ்செய்து ராஜாங்க காரியங்களை நடத்துவதற்காகப் பார்லிமெந்து சபைக் கட்டடத்துக்குச் சமீபத்தில் நூதனமாகக் கட்டியுள்ள பெரிய கட்டடவரிசைகளில் ஒரு கோணத்திலிருக்கிறது. முதல் மந்திரியின் அரண்மனையும் அவருடைய ஆபீஸ் கட்டடமும் 'டௌனிங்தெருப்' பக்கத்திலிருக்கிறது. அத்தெருவிலுள்ள வாசல் வழியாக உள்ளே நுழைந்தால் ஒரு பக்கத்தில் உள் நாட்டு மந்திரி, குடியேற்ற நாட்டு மந்திரி யிவர்களுடைய ஆபீஸ் கட்டடங்களிருக்கின்றன. மற்றொரு பக்கத்தில் பிறதேச விஷயங்களை மேன்பார்வை செய்யும் மந்திரியின் ஆபீஸ் இருக்கிறது. உள்ளே காணும் சச்சவுக்கமான முற்றத்தின் எதிர்ப்பக்கத்தில் "இந்தியா ஆபீஸ்" கட்டடமிருக்கிறது. 'இந்தியா ஆபீஸ்' கட்டடத்தின் ஒரு பக்கம் 'ஸெண்ட் ஜேம்ஸ் பார்க்' என்னும் சிங்காரத்தோட்டத்தை ஏறிட்டுப்பார்த்துக்கொண்டு அதன் ஒரு பக்கத்திலிருக்கிறது. இந்தப் பாரிக்கட்டடத்திலிருந்து இந்தியா துரைத்தன விஷயங்களையெல்லாம் மேன்பார்வை செய்து நடத்திவரும் அதிகாரிக்கு மாக்ஷிமைதங்கிய அரசரின் இந்தியா மந்திரியென்று பேர். அவர் மந்திராலோசனைசபையைச்* சேர்ந்த மந்திரிகளில் ஒருவர். அவருக்கு இங்கிலீஷில் "Secretary of State for India"—இந்தியாவுக்கான ராஜாங்க காரியதரிசி, அல்லது சுருக்கமாக "இந்தியா செக்ரிடெரி" யென்று பெயர். மிகவும் முக்கியமான விஷயங்களில் மந்திராலோசனை சபையார் தீர்மானத்துக்குள்பட்டு இந்தியா துரைத்தன விஷயங்களை நடத்திவரும் முக்கிய அதிகாரி யிவரே. இவருக்கு ஆலோசனை சொல்ல "இந்தியா கௌன்ஸில்" என்று இந்தியாவில் உத்தியோகம் செய்து அனுபவம் பெற்ற பழைய உத்தியோகஸ்தர்கள்சபை யொன்று இருக்கிறது. அச்சபைக்கு 15-மெம்பர்களிருக்கவேண்டுமென்றிருந்து சில வருஷங்களுக்கு முன் அத்தொகையை சமயம்நேர்ந்தபொழுது 10-வரையில் குறைத்துப் போடலாமென்று செய்த சட்டத்தினால், அத்தொகை குறைந்துவிட்டது. பிறகு செய்த ஒரு சட்டத்தினால் அச்சபையில் இருவர் இந்தியர்களாகவிருக்க ஏற்பாடுசெய்து அமுலுக்கு வந்திருக்கிறது. இந்தியா மந்திரிக்கு வருஷம் 5,000 பவுன் சம்பளம். அவருடைய கௌன்ஸில் மெம்பர்களுக்கு வருஷம் 1,200 பவுன் சம்பளம். இவர்களையன்றி உதவிசெக்ரிடெரிகளிருவரும் டிபார்ட்மெண்டு செக்ரிடெரிகள் பலரும், ஏராளமான ஆபீஸ்சிப்பந்திகளுமிருக்கிறார்கள். இவர்களுடைய சம்பளங்கள் மற்றச் செலவுகள் எல்லாம் இந்தியா அரசிறை வருமானத்திலிருந்தே கொடுக்கப் பட்டுவருகிறது. இந்த இந்தியா ஆபீஸ் கட்டடத்துக்குப் பிடித்த செலவுகூட இந்தியா அரசிறை வருமானத்திலிருந்தே கொடுக்கப்பட்டது.

இந்தியா 1858-ம் வருஷம் மஹாராணியாரின் நேராளுகைக்குள் வந்தபிறகுதான் இந்த ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டன. அதற்கு முன் இந்தியா கும்பினி இராஜ்ஜியமாயிருந்த பொழுது ஈஸ்திந்தியா கம்பெனியாரின் விசாரணை-கர்த்தர்களே முதலில் யாதொரு தங்கு தடையின்றியும், பிறகு கவர்ன்மெண்டார் ஏற்படுத்திய மேன்பார்வைக்குட்பட்டும் இந்தியா துரைத்தன விஷயங்களை லண்டனிலிருந்து மேல்விசாரணை செய்து வந்தார்கள். முதலில் அவர்கள் வியாபார விஷயங்கள் மட்டும் மேன்பார்வைசெய்து வந்தபொழுது லண்டனிலுள்ள அவர்களுடைய தலைமை ஸ்தானத்துக்கு "ஈஸ்திந்தியா அவுசு" என்று பேராயிருந்தது. பிறகு இந்தியாவில் நாடு நகரங்கள் கிடைத்து துரைத்தன அதிகாரமும் பெற்றபின் லண்டனிலிருந்து [illegible]கள் மேன்பார்வை செய்து வந்த தலைமை [illegible]னத்துக்கு "இந்தியா ஆபீஸ்" என்னும் பேர் வந்தது. அந்தப் பெயரே நாளது வரையில் தரித்து நிற்கிறது. "இந்தியா ஆபீஸ்" என்ற பேர் முதலில் இடத்தைக் குறிப்பதாயிருந்து பிறகு அங்கிருந்து மேல்விசாரணை செய்து அதிகாரம் செலுத்தும். அதிகாரிகளைக் குறிப்பதாகி இப்பொழுது அது பின் சொன்ன அர்த்தத்திலே சாதாரணமாக வழங்கி வருகிறது. ஆகையால் இங்கு "இந்தியா ஆபீஸ்" என்றால் இந்தியா துரைத்தன விஷயங்களை லண்டனிலிருந்து மேல் விசாரணை செய்துவரும் அதிகாரம் செலுத்துவோர் என்று அர்த்தம் செய்துகொள்ளவேண்டியது. இந்தியாவை சீமையிலிருந்து ஆளும் அதிகாரிகள் இந்த "இந்தியா ஆபீஸ்" காரர்களே. இந்த அதிகாரம் ஆதியில் கம்பெனியாரின் விசாரணை கர்த்தர்களால் செலுத்தப்பட்டு பிறகு பல மாறுபாடுகளுக்குள்பட்டுக் கடைசியில் இப்பொழுதிருக்கும் ஸ்திதிக்கு வந்த விவரம், இந்தியா என்னமாக ஆளப்படுகிறது என்று அறிய விரும்புவோர் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டியதாயிருப்பதால் அதன் வரலாற்றைச் சுருக்கமாய் எடுத்துச்சொல்லி விளங்கவைப்போம்.

ஈஸ்திந்தியா கம்பெனியார் 1601-ம் வருஷத்தில் எலிஜபெத் அரசியிடம் முதல் முதல் அதிகாரப்பத்திரம் பெற்று வர்த்தகம் செய்ய ஏற்பட்டார்கள். இவர்கள் வரவர வியாபாரத்தில் விர்த்தியடைந்து வந்ததன்றி இந்தியாவில் எங்கும் உள்நாட்டு மன்னர்கள் சண்டைச்சச்சரவுப்பட்டுக்கொண்டு துர்ப்பலப்பட்டிருந்ததால் நாட்டில் செல்வாக்கும் அதிகாரமும் பெற்று பலத்தகையானார்கள். இவர்கள் செல்வாக்கும் அதிகாரமும் விர்த்தியாக ஆக சுதந்திரமும் அதிகமாகப் பெற்றுக் கடைசியில் நாடு நகரங்களைக் கட்டியாளவும் சைனியங்கள் சேர்த்துப் போர் முதலானது நடத்தவும் அதிகாரம் பெற்றார்கள். இப்படி வரவர மிகுந்த அதிகாரம் பெற்று வியாபாரம் செய்யும் வர்த்தகர்களாகமட்டுமென்றி நாடுகளையாளும் அதிகாரிகளாகவும் வந்தபின் கம்பெனியாருத்தியோகஸ்தர்கள் இந்தியாவில் செய்த அக்கிரமங்கள் பார்லிமெந்து சபைக்கு எட்ட, அவர்கள் கம்பெனியார் விஷயங்களில் பிரவேசித்து உண்மையை விசாரித்துக் கடைசியில் இந்தியாவிலுள்ள கம்பெனியாருக்காதீனமான நாடுகளின் துரைத்தன காரியங்கள் சீராய் நடத்திவரப்படுவதற்காக கவர்னர்-ஜெனரல் என்று ஒருவரை நியமித்து இந்தியாவில் கம்பெனியாரின் துரைத்தன விஷயங்களெல்லாம் அவரும் 'சுப்ரீம் கௌன்ஸில்' மெம்பர்களுமாகச் சேர்ந்து நடத்தி வரவேண்டுமென்று ஏற்பாடு செய்து 1773-ம் வருஷத்தில் ஒரு சட்டம் செய்தார்கள். இந்தச் சட்டத்தினால் இந்தியாவில் துரைத்தன காரியங்களை நடத்த விசேஷ ஏற்பாடு செய்யப்பட்டபோதிலும் கம்பெனியார் லண்டனிலிருந்து மேல்விசாரணை செய்துவந்த அதிகாரம் இதனால் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. அந்த அதிகாரம் எப்போதும்போல கம்பெனியாரின் விசாரணை கர்த்தர்களாகிய "கோர்ட் ஆவ் டைரெக்டர்கள்" என்னும் சங்கத்தாரால் எவ்வித இடையூறுக்கு மிடமின்றிச் செலுத்தப்பட்டு வந்தது. இவர்கள் இப்படி தங்குதடையின்றி அதிகாரம் செலுத்திவந்தது 1784-ம் வருஷம்வரையில் நடந்தது. அப்பொழுது பார்லிமெந்தார் இவர்கள் விஷயத்தில் பிரவேசித்து "கோர்ட் ஆவ் டைரெக்டர்கள்" செய்வதை மேன்பார்வைசெய்து அவர்களை ஒருவிதக் கட்டுக்குள்படுத்தவேண்டுமென்று தீர்மானித்து அவர்களுக்குமேல் "போர்ட் ஆவ் கன்ட்ரோல்" என்று ஒரு மேன்பார்வைச் சங்கமேற்படுத்த விரும்பி அந்தப்படி பார்லிமெந்து சட்டமொன்று செய்தார்கள். இந்த மேன்பார்வைச் சங்கத்துக்கு 6-மெம்பர்களிருக்கவேண்டுமென்றும் அந்த 6-மெம்பர்களில் மூன்று மெம்பர்கள் அப்பொழுதிருந்த இரண்டு 'ஸ்டேட் செக்ரிடெரிகள்' அல்லது ராஜாங்க மந்திரிகளும் லார்ட் சான்

ஸலருமாகவிருக்கவேண்டுமென்றும், மற்ற மூன்றுபேர்கள் ‘ப்ரிவிகௌன்ஸில்மெம்பர்க’ளிலிருந்து அதற்காகப் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டவர்களா யிருக்கவேண்டுமென்றும், மேன்பார்வைச் சங்கத்தின் அதிகாரத்தைச் செலுத்த இந்த 6-பேர்களில் மூன்றுபேர்கள் சேர்ந்தால் போதுமென்றும், இப்படி மெம்பர்களாக நியமிக்கப்படும் கமிஷனர்களுக்குரிய சம்பளம் இந்தியா வருமானத்திலிருந்து கொடுக்கப்படவேண்டுமென்றும், லார்ட் சான்ஸலரும் இரண்டு இராஜாங்க மந்திரிகளும் இல்லாதபோது மற்ற கமிஷனர்களில் பிரதமஸ்தானத்திலுள்ள கமிஷனர் ப்ரஸிடெண்டு ஸ்தானத்தை வகிக்கத் தக்கவரென்றும், இந்தச் சங்கத்துக் கமிஷனர்களெல்லாம் பார்லிமெந்து சபையில் மெம்பர்களாக வுட்காரலாமென்றும் ஏற்பாடு செய்தார்கள் இந்த மேன்பார்வைச் சங்கத்து நடவடிக்கைகளெல்லாம் வாஸ்தவத்தில் உத்தியோகஸ்தரல்லாத மற்ற மூன்று கமிஷனர்களாலேயே முற்றும் பார்க்கப்பட்டுவந்தது. இவர்களுடைய நடவடிக்கைகளை மந்திராலோசனை சபையாருடைய அதிகாரத்துக்குள்பட்டதாகக் கொண்டுவரவேண்டுமென்று லார்ட் சான்ஸலரையும், அப்பொழுதிருந்த இரண்டு இராஜாங்கமந்திரிகளையும் அந்த மேன்பார்வைச்சங்கத்து மெம்பர்களாகப் போட்டார்கள். இந்த ஏற்பாடு சில மாறுபாடுகளுடன் 1858-ம் வருஷம் வரையில் நடந்துவந்தது. அப்பொழுது 1857-ம் வருஷத்தில் நடந்த பெரியகலகத்தின் பயனாக ஈஸ்திந்தியா கம்பெனியே ஒழிந்துபோய் இந்தியா துரைத்தனம் மாக்ஷிமைதங்கிய மஹாராணியார் அவர்களுடைய நேராளுகைக்குள்ளாக வந்தது. அந்த வருஷத்தில் இதற்காகச் செய்யப்பட்ட சட்டம் பார்லிமெந்து சபையில் பாஸாகி 1858-ம் வருஷம் ஆகஸ்டுமீ 2௳ மஹாராணியார் அவர்களுடைய அங்கிகாரம் பெற்றது. 1858-ம் வருஷம் ஸெப்டம்பர்மீ 1௳ மாக்ஷிமை தங்கிய விக்டோரியா மஹாராணியவர்கள் இந்தியாவுக்கரசியாகவந்தனர். அன்றைக்கே ஈஸ்திந்தியா கம்பெனியென்கிற பேரும் மறைந்து மண்ணிற்கிரையாகப் போயிற்று. இந்த 1858-ம் வருஷத்துச் சட்டத்தினால் தான் ‘இந்தியா செக்ரிடெரி’ யென்கிற உத்யோகமும் ‘இந்தியா கௌன்ஸில்’ என்கிற சபையும் முதல் முதல் ஏற்படுத்தப்பட்டது.

இந்த நூதன ஏற்பாட்டைப்பற்றிச் சொல்லுமுன் “போர்ட் ஆவ் கன்ட்ரோல்” என்னும் மேன்பார்வைச் சங்கமிருந்த காலத்தில் இந்தியா துரைத்தன விஷயங்கள் லண்டனில் மேன்பார்வைசெய்து நடத்தப்பட்டு வந்த வைபவத்தைப்பற்றிக் கொஞ்சம் சொல்வது உசிதமாயிருக்கும்.

‘போர்ட் ஆவ் கன்ட்ரோல்’ என்னும் மேன்பார்வைச் சங்கம் 1784-ம் வருஷத்தில் செய்யப்பட்ட பார்லிமெந்து சட்டத்தினாலுண்டு பண்ணப்பட்டதென்று சொன்னோம். அந்தச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகள் 1793-ம் வருஷத்தில் செய்யப்பட்ட ஒரு பார்லிமெந்து சட்டத்தினால் ஒருவாறு மாற்றப்பட்டன. 1793-ம் வருஷத்துச் சட்டப்படி ‘போர்ட் ஆவ் கன்ட்ரோல்’ ஏற்படுத்துவதற்கான அதிகாரப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட முதல் கமிஷனரே போர்டு ப்ரஸிடெண்டாவாரென்றும், ப்ரிவிகௌன்ஸில் மெம்பர்கள் அல்லாதவர்களிலிருந்து இரண்டு கமிஷனர்கள் தெரிந்தெடுத்து நியமிக்கப்படலாமென்றும், போர்டு செக்ரிடெரி பார்லிமெந்து சபைமெம்பராகவிருக்கலாமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மாறுபாடு செய்யப்பட்டபின் போர்டு மெம்பர்கள் ஒன்று சேர்ந்து நடவடிக்கை நடத்துவது பேருக்குமட்டுமிருந்ததேயன்றி காரியத்தில் அப்படியொன்றுமில்லை. போர்டு ப்ரஸிடெண்டும் அவருடையசெக்ரிடெரியுமே எல்லாக்காரியங்களையும் வாஸ்தவத்தில் நடத்திவந்தார்கள். 1833-ம் வருஷத்தில் செய்த இந்தியாவைக்குறித்த பார்லிமெந்து சட்டத்தில் இந்த போர்டுக்கு நியமிக்கப்படுகிறவர்கள் ப்ரிவிகௌன்ஸில் மெம்பர்களாக விருக்கவேண்டுமென்கிற நிபந்தனையையே முற்றும் ஒழித்துவிட்டு, கமிஷனர்கள் இத்தனைபேர்களிருக்கவேண்டுமென்கிற வரையறையும் நீக்கிவிடப்பட்டது. மாக்ஷிமைதங்கிய அரசர் தகுதியானவரென்று கருதி நியமிக்கிறவர்கள் இந்தியா விஷயங்களை மேன்பார்வைசெய்து வருவதற்கான கமிஷனர்களாவார்களென்று மட்டும் அந்தச்சட்டத்தில் காணப்பட்டிருந்தது. இந்த ஆக்ட் பாஸானபிறகு கமிஷனர்கள் தொகை ஆறாகவிருந்தது நாலாகவும், நாலாகவிருந்தது பிறகு இரண்டாகவும் குறைக்கப்பட்டது. 1841-ம் வருஷத்தில், இருவர் நியமிக்கப்பட்டு வந்ததும்போய், போர்ட் ஆவ் கன்ட்ரோலின் ப்ரெஸிடெண்ட் ஒருவர்மட்டுமே நியமிக்கப்பட்டார். அந்த வருஷத்துக்குப்பின் போர்ட்மெம்பர், ப்ரெஸிடெண்ட் எல்லாம் ஒருவரே. பேர்மட்டும் பலர் கூடினசங்கம் என்னும் பொருள்பட ‘போர்ட் ஆவ் கன்ட்ரோல்’ என்றும், அதற்கு நியமிக்கப்பட்ட ஒரேகமிஷனருக்கு ‘போர்ட் ஆவ் கன்ட்ரோலின் ப்ரெஸிடெண்டு’ என்றும் வழங்கிவந்தது. வாஸ்தவத்தில் அந்த போர்டாருடைய அதிகாரங்களைச் செலுத்த நியமிக்கப்பட்டு அவ்வதிகாரங்களைச் செலுத்திவந்தவர் ஒருவரே. இப்படி வாஸ்தவத்தில் ஒரே உத்தியோகஸ்தர் இருந்துவந்தாலும் கடைசிவரையில் பேர்மட்டும் ‘போர்ட்’ என்கிற கூட்டப்பெயரே வழங்கிவந்தது.

இதுவரையில் ‘போர்ட் ஆவ் கன்ட்ரோல்’ ஏற்பட்டது முதல் அது 1858-ம் வருஷத்தில் நிவர்த்திக்கப்பட்டது வரையில் அதன் அமைப்பில் உண்டான மாறுபாடுகளை யெடுத்துச்சொன்னோம். இனி அவர்கள் அமுல் செலுத்திவந்த விதத்தைப்பற்றிக் கொஞ்சம் விவரமாய் எழுதுவோம். 1784-ம் வருஷத்தில் ‘போர்ட் ஆவ் கன்ட்ரோல்’ ஏற்பட்டபோது அதே சட்டத்தில் அவர் கம்பெனியார் அதிகாரஞ் செலுத்துவதைச் சரியாக மேன்பார்வைசெய்து வருவது சாத்தியமாகும்படி, ஈஸ்திந்தியா கம்பெனியாரின் தஸ்தாவேஜிகள் கடிதப்போக்குவரத்துகள் இவைகளெல்லாம் அவர்களுக்கு முற்றும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ‘கோர்ட் ஆவ் டைரெக்டர்கள்’ இந்தியாவுக்கனுப்பும் உத்தரவுகள் கடிதங்கள் எல்லாவற்றிற்கும் அவை அனுப்பிய 8 தினங்களுக்குள் ‘போர்ட் ஆவ் கன்ட்ரோலுக்கு’ அவற்றின் நகல்களை அனுப்பிவைக்க வேண்டுமென்றும் அப்படியே இந்தியாவிலிருந்துவரும் கடிதங்களுக்கும் அவை வந்தவுடன் நகல்கள் எடுத்து அனுப்பவேண்டுமென்றும் திட்டம் செய்யப்பட்டிருந்தது. ‘கோர்ட் ஆவ் டைரெக்டர்கள்’ இந்தியாவுக்கு அனுப்பும் எந்த உத்தரவையும் முன்னாடி ‘போர்ட் ஆவ் கன்ட்ரோலுக்கு’ அனுப்பி அவர்களுடைய அங்கீகாரம் கிடைத்த பின்னே அந்த உத்தரவை இந்தியாவுக்கு அனுப்பவேண்டும். ‘போர்ட் ஆவ் கன்ட்ரோல்’ சங்கத்தார் தங்களுடைய அங்கீகாரத்துக்கு அனுப்பப்படும் கடிதங்கள் உத்தரவுகளை தங்களுக்கு யுக்தமாய்த் தோன்றியபடி திருத்தலாம், மாற்றலாம், அல்லது முழுவதையும் அடித்துவிட்டு முற்றும் நூதனமாக அவ்வுத்தரவை எழுதச்சொல்லலாம். அவர்களால் திருத்தப்பட்ட அல்லது நூதனமாய் எழுதச்சொல்லப்பட்ட உத்தரவை ‘கோர்ட் ஆவ் டைரெக்டர்கள்’ அந்த போர்டார் அபிப்பிராயப்படி திருத்தி இந்தியாவுக்கு அனுப்பவேண்டியது நிர்ப்பந்தம். அவர்கள் 14-நாள் கெடுவுக்குள் அப்படிச் செய்யத்தவறினால் போர்டார் தாங்களே தங்களபிப்பிராயப்படி நூதனமான உத்தரவு அல்லது கடிதமெழுதி ‘கோர்ட் ஆவ் டைரெக்டர்களுக்கு’ அனுப்பலாம். அந்த உத்திரவு அல்லது கடிதத்தைக் ‘கோர்ட் ஆவ் டைரெக்டர்கள்’ தாங்கள் சொந்தத்தில் தயார் செய்ததுபோலவே மதித்து தங்களிடமிருந்து வருவதாக அனுப்பவேண்டியது நிர்ப்பந்தம். போர்டாருக்கு இரகசியமான விஷயங்களை நடத்த ‘கோர்ட் ஆவ் டைரெக்டர்களில்’ இரண்டு மூன்று பேர்கள் சேர்ந்த ‘இரகசிய கமிட்டி’ ஒன்று

ஏற்பட்டிருந்தது. இவர்கள் இந்தியாவிலிருந்து வரும் 'இரகசிய' விஷயங்கள் எல்லாவற்றையும் உடைத்து தாக்கல் செய்துகொண்டு மற்ற டைரெக்டர்களுக்குத் தெரிவிக்காமல் அவைகளை 'போர்ட் ஆவ் கன்ட்ரோலுக்கு' அனுப்பிவைத்து வந்தார்கள். போர்டார் இந்தியாவுக்கு இரகசியமான உத்தரவுகள் ஏதாவது அனுப்பவேண்டியிருந்தால் அவற்றை இந்த இரகசிய கமிட்டியார் மூலமாக அனுப்பிவைப்பார்கள். இப்படி அனுப்பப்பட்ட விஷயங்கள் இந்த இரகசிய கமிட்டி மெம்பர்களாகிய அக்கிராசனாதிபதி, உதவி அக்கிராசனாதிபதியிவர்களைத் தவிர மற்ற டைரெக்டர்கள் யாருக்கும் தெரியவழியில்லை. இப்படி இந்தியா விஷயங்களை மேன்பார்வை செய்துவர 'போர்ட் ஆவ் கன்ட்ரோல்' என்னும் சங்கத்துக்குப் பூரண அதிகாரமிருந்தும் கோர்ட் ஆவ் டைரெக்டர்கள் மூலமாயன்றி அவர்கள் நேரில் இந்தியா கவர்ன்மெண்டோடு கடிதப்போக்கு வரத்து வைத்துக்கொள்ளக் கூடாதென்கிற ஏற்பாட்டால், ஜனங்களுக்கு இவர்கள் உள்ளிருந்து அதிகாரஞ் செலுத்துவது தெரியாமல், எல்லா அதிகாரமும் 'கோர்ட் ஆவ் டைரெக்டர்களாலே' செலுத்தப்பட்டு வருகிறதென்றும், எல்லா உத்திரவுகளுக்கும் அவர்களே காரணஸ்தர்களென்றும் ஒருவித தப்பபிப்பிராயம் எங்கும் சகஜமாய்ப் பரவிவந்தது. சுமார் 75-வருஷகாலத்துக்கு எல்லா மேன்பார்வை அதிகாரமும் விசேஷமாய் போர்டாராலே செலுத்தப்பட்டு வந்தபோதிலும் அவர்கள் பேர் எந்த உத்தரவு அல்லது கடிதத்திலும் காணப்படாமையால் வாஸ்தவத்தில் அவர்கள் செய்த உத்தரவுகளுக்குக்கூட 'கோர்ட் ஆவ் டைரெக்டர்களே' காரணஸ்தர்களாக எண்ணி அதனாலுண்டான பழிபாவங்களுக்கும் அவர்களே பாத்திரர்களாகக் கொள்ளப்பட்டார்கள். இரகசிய கமிட்டி யேற்பாட்டினால் கோர்ட் ஆவ் டைரெக்டர்கள் அறியாமலே அனேக பிரமாதமான விஷயங்கள் நடந்துவந்தன. அவற்றிற்கும் பாபம் அவர்களே [illegible] தரவாதிகளாகக் கொள்ளப்பட்டார்கள். [illegible] மையில், நடந்தவிஷயம் மற்ற ஜனங்களுக்குத் தெரிந்தபோதே அவர்களுக்கும் தெரியவந்திருக்கின்றன. உதாரணமாக 1838-ம் வருஷம் ஆப்கானிஸ்தான்மீது படையெடுத்துச் சென்றது 'போர்ட் ப்ரெஸிடெண்டு' முறையில் 'ஸர் ஜான் ஹாப்ஹவுஸ்' அவர்கள் செய்த உத்தரவை இரகசிய கமிட்டியார் தங்களது போல் இந்தியாவுக் கனுப்பினதன்றி வேறல்ல. இந்த உத்தரவினால் விளைந்த அநர்த்தத்துக்கெல்லாம் கோர்ட் ஆவ் டைரெக்டர்களே உத்தரவாதிகளாக எண்ணப்பட்டார்கள். கடைசியில் பார்லிமெந்து சபைக்கமிட்டியார் செய்த விசாரணையில் 'ஸர் ஜான் ஹாப்ஹவுஸ்' அவர்களே சாக்ஷியம் சொன்னபோது, இது தன்னுடைய உத்தரவால் நடந்ததென்று சொன்னார். அவர் சொன்னது அப்பொழுது ஜனங்களுக்குள் அதிக ஆச்சரியத்தை யுண்டுபண்ணிற்று.

போர்டு ப்ரெஸிடெண்டு வேலைக்கு எப்போதும் மந்திராலோசனை சபையைச்சேர்ந்த மந்திரி யொருவரே நியமிக்கப்பட்டு வந்தபடியால் அவர் 'போர்ட் ஆவ் கன்ட்ரோல்' என்கிற வெளிவேஷப்பேரைக்கொண்டு இந்தியா விஷயங்களை யெல்லாம் நடத்துவதற்கான ஸர்வாதிகாரத்தையும் தாமே செலுத்திவந்தாரென்பது மேலே எடுத்துக்காட்டிய விவரங்களால் தெரியவருமே. அவர் என்னதான் மேலதிகாரமுள்ளவராயிருப்பினும், அவர் தாமாக ஒன்றைச்செய்ய யத்தனிக்கவாவது, இந்தியா[illegible]லுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச் [illegible]பளம், இனாம் அல்லது வெகுமதி கொடுக்கவாவது அவருக்கு அதிகாரமில்லை. எதுவும் 'கோர்ட் ஆவ் டைரெக்டர்கள்' பிரேரேபணையின்பேரில் அது விஷயத்தைப் பார்லிமெந்து சபைக்கு ரிபோர்ட்டுசெய்துவிட்டு அப்புறம் தான் செய்யவேண்டும். ஈஸ்திந்தியா கம்பெனியார் முதலில் ஈஸ்திந்தியாவிலும் கீழ்த்திசையிலும் வியாபாரம் செய்யும் பாத்தியதையை ஏகபோகமாக அனுபவித்துவந்தார்

கள். 1813-ம் வருஷத்தில் சீனா முதலிய கீழ்த்தேசங்களில் வியாபாரம் செய்வதற்கிருந்த சுதந்தரம் தவிர, மற்றப்படி இந்தியாவில் வியாபாரம் செய்வதற்கிருந்த சுதந்தரமெல்லாம் போய்விட்டது. 1833-ம் வருஷத்தில் வியாபாரம் செய்வதே கூடாதென்று தடுத்துவிடப்பட்டார்கள். வியாபாரமெல்லாம் போனபிறகு இந்தியாவிலுள்ள எல்லா உத்தியோகங்களுக்கும் நியமனம் செய்யும் சுதந்தரம்மட்டும் 'கோர்ட் ஆவ் டைரெக்டர்களுக்கு' விடப்பட்டிருந்தது. கவர்னர்-ஜெனரல், கவர்னர் முதல் எல்லா ஸிவில் மிலிடெரி உத்தியோகங்களுக்கும் நியமனம் செய்யும் அதிகாரம் 'போர்ட் ஆவ் கன்ட்ரோல்' அங்கீகாரத்துக்குமட்டுமுள்பட்டதாய் 'கோர்ட் ஆவ் டைரெக்டர்களாலே' செலுத்தப்பட்டுவந்தது. வியாபாரம் செய்து ஏராளமான லாபம் கட்டிவந்தவர்களுக்குக் கடைசியில் இந்த உத்தியோக நியமன அதிகாரத்தைத் தவிர வேறு லாபகரமான வழியில்லாமற் போனதால் இதையே லாபத்துக்கிடாக வெண்ணி, உள்ள நியமனங்களை டைரெக்டர்கள் பங்குபோட்டுப் பிரித்துக்கொண்டு அவரவர்கள் பிள்ளை, மருமகன், மைத்துனன் முதலான உற்றார் சுற்றத்தார்களுக்கு ஜீவன வழியேற்படுத்திக்கொடுப்பதே தொழிலாக விருந்தார்கள். இந்த டைரெக்டர்ஸ்தானத்துக்கு நியமனம் பெறுவது சர்க்காராலன்றி, ஈஸ்திந்தியர் வியாபாரகம்பெனியில் மூலதனம் வைத்த பங்குச் சீட்டு வாங்கினவர்கள் கொடுக்கும் 'வோட்டு'களி[illegible] இந்த டைரெக்டர்ஸ்தானம் கிடைப்[illegible] விருந்ததால், அவர்களைப் பதப்படுத்[illegible]கைக்குள் போட்டுக்கொண்டு டைரெக்டராக வருவதற்காக ஒவ்வொருவர் செய்த யத்தனங்களும் விடாமுயற்சிகளும் இவ்வளவவ்வளவல்ல. பலதடவை தோல்வியடைந்தும் சலியாமுயற்சியோடு அந்தஸ்தானம் கிடைக்க யத்தனப்பட்டவர்களுக்குக் கடைசியில் அது கிடைத்துவிட்டால் உடனே இந்தியாவுக்குச் செய்யவேண்டிய நியமனங்களில் அவருக்குள்ள பங்குவீதம் கிடைத்துப்போம். அப்புறம் தங்கள் உற்றார் உறமுறையார், அண்டினோர் அடுத்தார் இவர்களுக்கு உத்தியோகம் தேடிக்கொடுப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வேலையில்லை. மிகவும் நெருங்கிய பந்துவாயிருந்தால் ஸிவில் ஸெர்விஸில் வேலைகொடுத்து இந்தியாவிற்கு ஸிவிலியனுத்தியோகஸ்தர்களைப் பழக்குவதற்காக ஏற்பட்ட ஹெய்லிபரி காலேஜுக்கு அனுப்பிவைப்பதும், தூரத்து பந்துவாயிருந்து அவ்வளவு பாத்தியதை யில்லாதவர்களாயிருந்தால் அவர்களை இராணுவ உத்தியோகத்துக் கனுப்ப உத்தேசித்து அதற்காக அடிஸ்கோம்பிலுள்ள இராணுவப்பயிற்சி பாடசாலைக் கனுப்புவதும் வழக்கமாயிருந்தது. சமீபபந்துவாயிருந்து ஸிவிலியனுத்தியோகத்துக் கனுப்பப்பட்ட வாலிபர் அதற்காகவுள்ள சொற்ப பரீக்ஷையிலும் தேறத்திராணி யற்றவராயிருந்தால் அவர்களுக்குக் குதிரைப் பட்டாளத்தில் தகுந்த வேலைசெய்து கொடுத்துவிடுகிறது வழக்கம். ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகங்களுக்குப் பின் குதிரைப் பட்டாளத்திலுள்ள உத்தியோகத்துக்கு நல்ல சம்பளம். அதற்கும் அடுத்த படியிலிருப்பது பதாதிப்பட்டாளத்துக்கு நேரில் நியமனம் செய்தனுப்புவது. மிக வேண்டியவர்களாகவின்றி அண்டினோர் அடுத்தார் இவர்களைப் போன்றவர்களை அடிஸ்கோம்ப் இராணுவப் பயிற்சிசாலைக்கு அனுப்புவது வழக்கம். அதில் தேறினவர்கள் தான் பீரங்கிப்பட்டாளத்துக்கும், இராணுவ இஞ்சினீர் வேலைக்கும் நியமிக்கப்படுவது. இந்த உத்தியோகங்களுக்குச் சம்பளம் மட்டாகவிருப்பதன்றி இவற்றில் 'ப்ரொமோஷன்' கிடைப்பதும் வெகு தாமதமாகக் கிடைக்கும். ஸிவில் மிலிடெரி உத்தியோகங்களுக்கு நியமனம் செய்வதற்கு யோக்யதா யோக்யதை யொன்றுமில்லை. டைரெக்டருக்கு வேண்டியவர்களாயிருந்து அவர்களால் பலமாகச் சிபார்சு செய்யப்பட்டால் அதுதான் எல்லா யோக்கியதையும் பொருந்தி

றுப்போலாம். இராணுவத்துக்கு நியமிக்கப்படுகிறவர் வைத்தியர்களால் திடகாத்திர முடையவர்களாவென்று கூடப் பரீக்ஷித்துப் பார்க்கப்படுவதில்லையாம். 'கோர்ட் ஆவ் டைரெக்டர்கள்' உத்தியோக நியமனம் செய்து வந்த வைபவத்தில் அவர்களுக்குள் இராணுவ காரியதரிசியாயிருந்தவர் லண்டனை விட்டு வெளியேறாத வரும் சண்டை முகத்தைக் கண்ணால் கண்டறியாதவருமான ஒரு பிரதம குமஸ்தாவாம். இப்படியே மற்றவைகளுமிருக்கும். வீணைச் சொல்லி வளர்த்துவானேன். இந்த 'கோர்ட் ஆவ் டைரெக்டர்களுக்கு' இந்தியா துரைத்தனத்தை மேன்பார்வை செய்துவர எவ்விதலாயக்குமில்லை. அவர்கள் வியாபாரம் போனதோடு அவர்களையும் விட்டுக்கனுப்பியிருப்பதே சரியாயிருக்கும். ஆனால் அவர்கள் வியாபாரத் துறையில் துணிந்து செய்த பெருமுயற்சிகளாலே ஆங்கிலேயருக்கு இந்தியாவில் நாடுநகரங்களும் இராஜ்ஜியங்களும் கிடைத்தபடியால், அதன்பலனை அவர்களனுபவிக்கட்டுமென்று மேலதிகாரஞ் செய்வதை மேலுக்குமட்டும் அவர்களதாகச்செய்து உண்மையில் எல்லாவற்றையும் 'போர்ட் ஆவ் கன்ட்ரோல்' என்கிற வெளிவேஷப் பேரை வைத்து மந்திராலோசனை சபையைச்சேர்ந்த ஒரு மந்திரிவசமாக ஒப்புவித்துவிட்டு, இந்தியாவிலுள்ள உத்தியோகங்களுக்கு நியமனம் செய்யும் லாபகரமான அதிகாரத்தைமட்டும் அவர்கள் வசம் விட்டுவந்தார்கள். இப்படி சுமார் 75-வருஷம் நடந்துவந்தது. பின்னும் நடந்துவந்திருக்கலாம். 'தன் வினை தன்னைச் சுடும்' என்றபடி அவர்கள் செய்துவந்த அக்கிரமங்கள் அவர்களுக்கே தீங்கு விளைக்க 1857-ம் வருஷத்தில் பெருங் கலகமுண்டாகி அவர்களடியோடு அழிந்து போகும்படிச் செய்துவிட்டது. 1858-ம் வருஷத்தில் இவர்களை யொழித்துவிட்டுச் செய்த ஏற்பாடுதான் அதிசொற்பமாறுபாட்டோடு இன்றுவரையில் நடந்துவருகிறது. இப்பொழுது சீமையிலிருந்து இந்தியாவை யாண்டுவருவதற்காகவுள்ள ஏற்பாட்டை இதன் முதலில் சுருக்கமாகக் குறிப்பிட்டுச் சொன்னோம். இந்த ஏற்பாடு 1858-ம் வருஷத்தில் அமுலுக்கு வந்தது முதல் இதுவரையிலுள்ள அதன் வரலாற்றைப் பின்னொரு சமயம் சஞ்சிகையில் எடுத்துரைப்போம்.

THE NAIGARA FALLS.

நயகரா நதியின் நீர்வீழ்ச்சி.

சென்ற ஆகஸ்டு மாதச் சஞ்சிகையில் கடவுளின் சிருஷ்டியில் அமைந்திருக்கும் வஸ்துக்களின் பெருமையை ஒருவாறு குறிப்பிட்டு எழுதினோம். இம்முறை அச்சிருஷ்டியில் இப்பூமண்டலத்தில் உள்ள அற்புதக் காட்சிகளில் ஒன்றாயதும் பல பிரதேசங்களிலும் உள்ள நீர்வீழ்ச்சிகளிலும் அதிக பெரியதும், வியக்கத்தக்கதுமான 'நயகரா நதியின் நீர்வீழ்ச்சி' (The Falls of Naigara) யைக் குறித்து எழுதுவோம். (ஒரு நதியின் நீர்வீழ்ச்சியென்பது, அந்நதி உன்னதமான மலை, குன்று [illegible] லிருந்தாவது அல்லது உயரமான மேட்டு [illegible] களிலிருந்தாவது பள்ளத்தாக்குகளில் [illegible] குத்தாய் இழிவதாம்.)

உருண்டைவடிவமுள்ள இந்தப் பூமண்டலத்தின் ஒரு பாதியில் நமது இந்தியா தேசமிருக்கும் ஆசியா கண்டமும், ஐரோப்பா, ஆப்பிரிக்கா கண்டங்களும், மற்றோர் பாதியில் அமெரிக்கா கண்டமும் இருப்பது அனேகருக்குத் தெரிந்திருக்கலாம். நமது கால்களுக்கு



The Niagara Falls.] [நயகரா நதியின் நீர்வீழ்ச்சி.

அடியில் பூமியின் கீழ் பாகத்திலிருக்கும் இந்த அமெரிக்காகண்டத்தின் வடபாகமாகிய வட அமெரிக்காவில் 'ஐக்கிய மாகாணங்கள்' (The United States) என்று வழங்கிவரும் தேசத்தில் ஏரிகள் அதிகமாயுள்ள பிரதேசத்தில் நயகரா நதியானது பாய்கின்றது. இந்நதி சமுத்திரமட்டத்திற்குமேல் 573 அடி உயரமாயுள்ள 'ஏரி' (Lake Erie) என்னும் ஏரியினின்றும் பிரிந்து, 30-மைல்தூரம் ஓடி 'அன்டேரியோ' (Lake Ontario) என்னும் ஏரியில் பாய்கிறது. அது ஏரியினின்றும் பிரவாகிக்க ஆரம்பித்ததும் முக்கால் மைல் விஸ்தீரணமுள்ளதாய் முதல் இரண்டு மூன்றுமைல் வரையில் அதிக வேகமாயோடி, இரண்டு பிரிவுகளாகப்பிரிந்து 'கிராண்ட் தீவு' (Grand Island) என்னும் தீவைச்சுற்றிலும் பாய்ந்து, பின்னும், பிணைந்து, பெரிய தடாகத்தையொத்து அதிக விஸ்தீரணமுள்ளதாய் அதன் நீரோட்டம் பரந்து, திரும்பவும் நீர்வீழ்ச்சி யுண்டாகும் இடத்திற்கு சமீபத்தில் திடீரென நதியானது அதிக குறுகலடைந்து ஒரு மயிலளவில் 52-அடி தணிவாய் வெகு தீவிர கதியுடனும் குழப்பத்துடனும் சென்று, உலகத்தில் இத்தகைய காட்சிக்கு இணையாகச் சொல்லற்பாலது வேறில்லையென்று கூறும் வண்ணமாய் அற்புதக் காட்சியையளித்து, பெரியமேட்டு நிலத்தினின்றும் 150-அடி முதல் 164-அடி ஆழமுள்ள பள்ள நிலத்தில் விழுகின்றது. நீர்வீழ்ச்சியுண்டாகும் இடத்தில் நதியின் அகலம் 4,750-அடி; இதன் மத்தியில் 1,000-அடி அகலமும் தண்ணீர் மட்டத்திற்குமேல் 40-அடி உயரமுமுள்ள 'கோட் தீவு' (Goat Island) என்னும் சிறிய தீவு இருக்கிறது. இந்தத் தீவிற்கு வலதுபுறத்தில் 164-அடி உயரமுள்ள வீழ்ச்சிக்கு 'அமெ

ரிக்கன் வீழ்ச்சி' (American Fall) யென்றும், இடதுபுறத்தில் 150-அடி உயரமுள்ள வீழ்ச்சிக்கு, அது குதிரைலாடத்தைப்போன்ற வளைவாய் வளைந்திருப்பதால், 'குதிரைலாடவீழ்ச்சி' (Horse-shoe Fall) யென்றும் பெயர். நயகரா நதியினின்றும் சற்றேறக்குறைய ஒரு கோடியே எண்பதுலக்ஷம் கன அடி அளவுள்ள தண்ணீர், வீழ்ச்சியின் வழியாய் 1,000-அடி அகலமும் 300-அடி ஆழமுமுள்ள ஆழியையொத்த பாதாளத்தில் வெகு குழப்பத்துடன் நுரைத்துக்கொண்டு விழுந்து, இருபுறமும் 200-அடி முதல் 350-அடி வரையில் உயரமுள்ள செங்குத்தான கரைகளமைந்த பள்ளத்தாக்கில் அதிவேகத்துடன் ஓடுகின்றது. நீர்வீழ்ச்சியுண்டாகும் செங்குத்தான இடத்தின் விளிம்புகள் கடினமான சுண்ணாம்புக் கற்படைகளால் அமைந்திருக்கிறது; நுரைத்துக்கொண்டு விழும் ஜலத்தின் வேகத்தின் காரணத்தால், சாமானிய கடினமுள்ள பாறைப்படைகளில் குகைகள்போன்ற குழிகள் உண்டாயிருக்கின்றன.

நயகரா நீர்வீழ்ச்சியால் உண்டாகும் அற்புதக் காட்சிச்சிறப்பு.

நயகரா என்னும் பதத்திற்கு 'தண்ணீரின் இடிமுழக்கம்' என்று அர்த்தம்; இந்தப் பெயர் அமெரிக்கா தேசத்துப் பூர்வீகக் குடிகளாகிய 'சிவப்பு இந்தியர்' (Red Indians) களால் இடப்பட்டதாகத் தெரியவருகிறது. தங்கள் பிரதேசத்தில் இருக்கும் அதிசயக் காட்சியின் அருமையும் பெருமையும் உணர்ந்தே அவர்கள் அந்நதிக்கு அப்பெயரினையிட்டனர்போலும். அமெரிக்காதேசத்தில் யாத்திரை செய்யும் யாத்திரீகர்கள் இந்நீர்வீழ்ச்சியின் விநோதக்காட்சியைக் கண்டு களிக்காமற்போவதில்லை. நமது சென்னை நகர் வாசியாகிய காலஞ்சென்ற மிஸ்டர் எஸ். சத்தியநாதன் அமெரிக்காவுக்குப் போயிருந்தபொழுது அவர் நயகரா நீர்வீழ்ச்சியைக் கண்டடைந்த ஆனந்தானுபவத்தையும், அக்காட்சியின் சிறப்பையும் குறித்து விஸ்தாரமாய் வருணித்து எழுதியிருக்கிறார்.

நீர்வீழ்ச்சியின் சுற்றுப்பக்கங்களில் தோன்றும் காட்சி வெகு ரமணீயமாயிருக்கும். ஆங்காங்கே ஓங்கி வளர்ந்து நிற்கும் மரங்களும், மேடுபள்ளமுமாயிருக்கிற அவ்விடங்களில் நிழலளிக்கும் செடிகொடிகளடர்ந்திருக்கும் உத்தியானவனங்களும், பாறைகள் நிறைந்த வெளியிடங்களும், இவைகளினடுவே வெகு உக்கிரத்துடனும், வேகத்துடனும் வெள்ளை வெளேலென்று நுரைத்துக்கொண்டு நாற்புறமும் நீர்த்திவலைகள் சிதறி மேகப்படலங்களையொத்து மேலே கிளம்பும்படியாயும், சூரிய வெளிச்சத்தில் பலவித வர்ணங்களுடன் பிரகாசித்துக்கொண்டும் நயகராநதியின் தண்ணீர் உயரமான பாறைப்படைகளில் விழுந்து மோதி அடித்துப் புறண்டோடுங் கோலமாகிய காட்சியும், அவைகளைக்கண்ணுறும் யாவர் மனத்தையும் கவர்ந்து களிப்புண்டாக்கும். இவ்வரிய காட்சியைப் பார்க்க வருபவர் யாவரும், நீர்வீழ்ச்சியின் சமீபத்தில் வந்து நின்றவுடன் தங்கள் முன்னர் தோன்றும் தோற்றத்தின் சிறப்பைக்கண்டு, தாங்கள் பார்ப்பது நிஜமான காட்சிதானோ, அல்லது கனவிற்காணும் வெளித்தோற்றந்தானோவென, ஐயமுற்றுத் திகைத்து நின்றவிடத்தைவிட்டு நிலைபெயராமல் ஸ்தம்பிதமாய் மெய்மறந்து நின்றுபோகிறார்கள். நயகரா நதியின் தண்ணீரானது வீழ்ச்சியின் சமீபத்திற்கு வரவர அலைகளாய் மாறி, கட்குடியர்கள் வெறியால் ஒருவரையொருவர் தாக்கி மோதி பேரிரைச்சலிட்டு மண்டைகளுடைபட்டு, காயங்களடைந்து திண்டாடும் காட்சிபோல், ஆங்காங்கே தண்ணீர் மட்டத்தில் கிடக்கும் பாறைகளின் தடையால் தடைப்பட்டு நிலைகுலைந்து வரும்போது, தண்ணீருக்கு மேலாகத் தலை நிமிர்

ந்து நிற்கும் பாறைகளில் மோதி, வெறிகொண்டாற்போலுமாறி, குழப்பங்கொண்டு வீழ்ச்சியின் விளிம்புகளிலுள்ள கரடுமுரடான பாறைகளில் அடிபட்டுச் சிதறுண்டு, பெருங்கடாரத்தில் அதிக சூட்டினால் தளதளவென்று மேலே கிளம்பிக் கொதித்துக்கொண்டிருக்கும் திரவம்போன்றும் கொந்தளித்துக்கொண்டிருக்கும் பாதாள வாழியில் நுரைத்து விழுந்துகொண்டிருக்கும். இம்மாதிரியாக பாறைகள் விசேஷமாய் நிறைந்துள்ள பாதாளத்தில் அருவிநீர் விழுந்து, அவ்விடத்தில் முன்னரே வந்து நிறைந்திருக்கும் தண்ணீரில் தாக்கவே, புதுஜலத்தின் வேகத்தைத் தாளமாட்டாமல் தங்கிநின்ற தண்ணீர் நாற்புறமும் வீசப்பட்டு, வரை வரையாய் மேலே கிளம்பி விழும் காட்சி வெகு விந்தையான தோற்றமாயிருக்கும். இவ்வருமையான காட்சியைப் பின்னும் அதிக அழகுண்டாக்க வேற்பட்டனவோ வென வியக்குமாறு, நீர்விழும் பள்ளத்தாக்கின் இருபுறத்தினின்றும், அவ்விடத்தில் வானமெங்கும் பரந்துநிற்கும் அணுப்பிரமாணமுள்ள நீர்த்துளிப் படலங்களில் சூரிய ரஸ்மி தாக்கும் காரணத்தால், வான விற்கள் தோன்றி மனோரம்மியமாய் எழுவகை வர்ணங்களோடும் பிரகாசிக்கும். நீர்த்துளிமேகங்கள் வானமெங்கும் ஓங்கி நிற்க, வானவிற்களும் அழகுடன் பிரகாசிக்க, நீர்வீழ்ச்சியின் அரவமோ இடியையொத்து கர்ச்சிக்க, கார்காலக் கடுமழைதான் வருஷிக்கத்துவக்குகின்றதோவென மயங்கச்செய்யும். இந்த நீர்வீழ்ச்சியைப் பார்க்கப்பார்க்க ஒவ்வொரு நிமிஷமும் அதிக ஆச்சரியமும் மனக்களிப்பும் உண்டாய் அந்தவிடத்தை விட்டுப்போகக் கொஞ்சமேனும் மனம் வராதென்று, அவ்விடம்போய்வந்த யாத்திரீகர்கள் சொல்லியிருக்கிறார்கள். நமது சென்னை இராஜதானியில், திருநெல்வேலி ஜில்லாவில் குற்றாலம், பாபவிநாசம் என்னுமிடங்களின் நீர்வீழ்ச்சிகளும், கோயமுத்தூர் ஜில்லாவில் சிவன்சமுத்திரம் நீர்வீழ்ச்சியும், வெகு நேர்த்தியான காட்சிகளமைந்தவை யென்று அநேகர் கேட்டும், நேராகப் பார்த்தும் அறிந்திருக்கலாம். ஆயினும், இவைகளில் யாதொன்றையும் கொஞ்சமேனும் நயகரா நதியின் நீர்வீழ்ச்சிக்கு இணையாகச்சொல்லப் புகுவது யானையையும் சிற்றெறும்பையும் இணையாக ஒப்பிடுவதையொக்கும்.

இவ்வருவிநீர் பாய்ந்து விழும் காட்சியை இச்சஞ்சிகையின் 213-வது பக்கத்தில் படமாகச் சித்திரித்துக் காட்டியிருக்கிறது. படத்தின் வலதுபுறத்தில் வழிந்தோடுவதாகக் காணப்படுவதே குதிரை லாட வீழ்ச்சி; இடதுபுறங் காணுவது அமெரிக்கன் அருவி. இவைகளிரண்டிற்கும் மத்தியில் மரங்களாலும் செடிகொடிகளாலும் அடர்ந்திருப்பதாகக் காண்பதே 'கோட்' தீவு (Goat Island.) அதிக உக்கிரத்துடன் பாய்ந்து விழுந்தோடும் தண்ணீர் நுரைத்துக் கொந்தளிப்பதையும், சிதறுண்ட நீர்த்துளிக் கூட்டங்கள் ஆவியையொத்து மேலே கிளம்பி, மூடுபனியைப்போல் ஆகாயத்தைக் கவிந்து நிற்பதையும், சிற்சில நீர்வாழும் புள்ளினங்கள் கொந்தளிப்பில் அகப்பட்டுத் திண்டாடும் மீன்களை இரைகொள்ளும் பொருட்டு தண்ணீருக்கு மேலாகப் பறந்தோடுவதையும், நீர்வீழ்ச்சியின் முன்புறமாய்த்தோன்றும் காட்சியைக் கண்டு களிக்கச் சிலர் நீராவி மரக்கலமேறி அருவியை எதிர் நோக்கிச் செல்வதையும், படத்திற்காணலாம். இக்காட்சிகளை நேரிற் கண்ணுற்றவர்கள் அவைகளை வாய்மொழியால் விவரித்துரைக்க வாய்க்காதெனில், அக்காக்ஷிகளை சித்திரத்தினாலும் குறிப்பிக்கவொண்ணாதென்பதற்கு ஐயமுண்டோ. அவ்விடத்தில் நீர்ப்பெருக்கினால் உண்டாகும் பேரிடி முழக்கம்போன்ற கர்ச்சனையை, சித்திரமென்ன சிறப்பித்துக் காட்டவல்லதோ? துல்லிய வெண்ணிறத்துடன் நுரைத்தெழும் தண்ணீர்க் குழப்பத்தில் சூரிய வொளி பிரதிபலிக்க உண்டாகும் தேஜோமய வெண்ணிறத்தையும், நீர்த்துளிப் படலங்கள் சூரிய கிரணங்களால் பலவர்ணங்கள் பூண்டு வெகு விந்தையாய்ப் பிரகாசிக்கும் கோலங்களையும்,

நமது வர்ணவகைகளென்ன ஈட்டவல்லனவோ? நிமிஷத்துக்கு நிமிஷம் புதுமை புதுமையான தோற்றங்களை உண்டுபண்ணும் இவ்வற்புதக் காட்சியைச் சித்திரம்தான் எப்படி சித்திரித்துக் காட்டக்கூடும்! காட்டிடினும், அது அவ்விடத்திற்காணும் நிஜத்தோற்றத்திற்குக் கொஞ்சமேனும் நிகராகாது. கண்ணாரப்பார்த்து அனுபவித்தலே அனுபவமாகும்.

நயகரா நதியின்வேகத்தால் யந்திரங்களையியற்றச்செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு.

நயகரா நதியின் காட்சிச் சிறப்பை ஒருவாறு சொன்னோம். அந்நதி அதிகவேகமாய்ப் புரண்டோடும் வேகத்தைக் கொண்டு மின்சாரமியற்றப்பட்டு, கைத்தொழில்களுக்கு உபயோகமாவதைக்குறித்து எழுதுவோம். ஆதிகாலத்தில் கஷ்டசாத்தியமான யாதொரு காரியமும் மனிதனுடைய தேகவலிமையினாலும், குதிரை, எருது, யானை முதலிய மிருகங்களின் உதவியாலும், செய்யப்பட்டு வந்தது. பிற்பாடு கொஞ்சகாலத்திற்கு முன்னர் கண்டுபிடிக்கப் பட்டதாகிய நீராவியின் வலிமையால், மானிடர் பலர் ஒன்று கூடிச்செய்தற்குமரிதாகிய பல கஷ்டமான காரியங்களும் இலகுவில் செய்யப்பட்டுவருகின்றன. முப்பது, முப்பத்தைந்து பெரிய வண்டிகள் ஒன்றாய்ப் பிணைக்கப்பட்டு அதிக பாரமேற்றப்பட்டும், வெகு சுலபமாயும் அதி தீவிர கதியுடனும் ஓடுவதும், அனேகம் பஞ்சாலைகளிலும், நூல் புடைவை முதலியவை நூற்கப்படும் யந்திரசாலைகளிலும், உலோகங்கள் உருக்கப்பட்டு அனேகவிதமான பாண்ட ரூபங்களாக அமைக்கப்படும் உலைக்கூடங்களிலும், இன்னும் மற்றும் வேறுவிதங்களான தொழிற்சாலைகளிலும், மானிடர் தேகப்பிரயாசையை விசேஷமாயொழித்து, சுலபமாய் காரிய சாதகங்களை யாக்குவதற்கு அனுகூலமாயிருப்பதும், நீராவியின் வலிமையாலென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அதற்குப்பின்னர், மின்சாரத்தின் வேகத்தைப் பிரயோகிக்கச் சில உபாயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, நீராவியின் உதவியால் செய்யப்படும் பல அருமையான காரியங்களையும் மின்சாரத்தால் செய்து முடிக்கக் கூடியதாயிருக்கிறது. (மின்சாரமென்பது மழைக்காலத்தில் உண்டாகும் இடிமுழக்கங்களுக்கு முன்னதாகக் காணப்படும் மின்னலொளியை ஒத்தது.) தந்திகளின் வழியாய் செலுத்தப்படும் மின்சாரத்தின் வலிமையினால் நாம் ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பவேண்டிய சமாசாரங்களை, அங்கங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கடிகாரங்கள்போன்ற பெட்டிகளிலிருக்கும் முட்கள் ஆடுவதால், மற்றோர் அதிக காலதாமதமின்றிச் சுலபமாய், சில குறிப்புகளைக்கொண்டு அறிந்துகொள்வதற்கு அனுகூலமாயிருக்கிறது. மேலும் நமது சென்னை நகரில் சில முக்கியமான தெருக்களில் நெருப்பின்றியும், நீராவியின்றியும், வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் 'டிராம் வண்டிகள்' Tram Cars)மின்சாரத்தின் வேகத்தால் இழுக்கப்படுகின்றனவென்று யாவரும் அறிவார்கள். 'பவர் ஸ்டேஷன்' (Power Station) என்னும் பிரதான யந்திரசாலையில் நீராவி யந்திரங்களின் வலிமையால் சில பெரிய சக்கிரங்களைச் சுழற்றுவித்து, அவைகளின் உதவியைக்கொண்டு சில யந்திரோபாயத்தால் மின்சாரமியற்றுவித்து, அதை டிராம்வண்டிகளோடும் தெருக்கள்தோறும் தோரணமிட்டதுபோல நாட்டியிருக்கும் செப்புக்கம்பிகளிற் பாய்ச்சி அவ்வேகத்தை வண்டிகளுடன் பிணைத்து ஓட்டுவிக்கும் விஷயம் சென்னை நகர்வாசிகள் பலரும் அறிந்ததே.

நீராவியின் உதவியால் மின்சாரமியற்றுவது, ஆவியுண்டாக்குவதற்கு அத்தியாவசியமான நிலக்கரி, விறகு முதலியவைகளினால் அதிக பணச்செலவு பிடிக்கக்கூடியது. ஆயினும், இதுகாறும் கண்ணுக்கினிய அற்புதக்காட்சியொன்றையே யளிப்பதாய் விளங்கிய நயகரா நதியின் கரடுமுரடான தரையில் அலைகளெடுத்து, வெகு உக்கிரத்துடனும் வேகத்துடனும் பிரவாகித்துக்கொண்டிருக்கும் நீர்ப்பெருக்கின் வேகத்தைக்கொண்டு, நீராவியானுற்பவிக்கும் வேகத்திற்கிணையான சக்தியையுண்டு

பண்ணி அச்சக்தியினின்றும் மின்சாரமியற்ற ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இதற்காக நயகரா நதியின் நீர்வீழ்ச்சிக்குக் கொஞ்சதூரம் மேலாக அந்நதியினின்றும் ஓர் வாய்க்கால் வெட்டப்பட்டிருக்கிறது. இந்த வாய்க்காலில் அனேக மதகுகள் உண்டு. இவைகளின் வழியாய்ப் பாயும் ஜலம், அவ்விடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அதிக உந்நதமும், நெட்டுக்குத்தாயுமுள்ள பென்னம்பெரிய உருக்குக் குழல்கள் வாயிலாக 7-அடி குறுக்களவும், 140-அடி உயரமுமுள்ள ஜலஸ்தம்பங்களை யொத்து, கீழே அமைக்கப்பட்டிருக்கும் படுகுழிகளில் நாட்டியிருக்கும் பெரிய வெண்கலச் சக்கிரங்களின்பேரில் அதிக வேகத்துடன்தாக்கி, அவைகளைத் தீவிர கதியுடன் சுழலவிடச்செய்து, குழிகளின் மட்டத்திற்குக் கீழாக சமீபத்தில் உண்டாக்கப்பட்டிருக்கும் சுரங்கக்கால்வாயிற்பாய்ந்து திரும்பவும் நயகரா நதியில் விழுகின்றது. இச்சுரங்க வாய்க்கால் தரைமட்டத்திற்கு 200-அடி கீழாகக் கடினமான கருங்கற்பாறை நிலத்தில் குடையப்பட்டு சுமார் 7,000 அடி நீளமும், 21-அடி உயரமும் 14-அடி அகலமுமுள்ளது. மேற்சொல்லிய குழிகளில் நாட்டப்பட்டிருக்கும் பெருஞ் சக்கிரங்களுக்கும், தரைமட்டத்திற்குமேல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் யந்திரசாலைகளில் அமைந்துள்ள யந்திரங்களுக்கும், நீளமான உருக்குச் சட்டங்களால் சம்பந்தமுண்டாக்கியிருக்கிறபடியால், அச்சக்கிரங்கள் சுழலமிடுவதாலுண்டாகும் வேகமானது மேலே இருக்கும் யந்திரங்களைச் சுற்றச்செய்கிறது; இப்படிச் சுற்றும் யந்திரங்களைக்கொண்டு அவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்கும் யந்திர சூக்ஷ்மங்களால் மின்சாரவேகம் விசேஷமாய் இயற்றப்படுகிறது. இவ்விடத்தில் நாட்டப்பட்டிருக்கும் மின்சாரமியற்றும் யந்திரங்கள் ஒவ்வொன்றும் 5,000 குதிரைகள் சேர்ந்து உண்டாக்கக்கூடும் வேகத்தை உற்பத்தி செய்யவல்லனவாம். இப்போது செய்திருக்கும் ஏற்பாடுகளைக்கொண்டு 1,20,000 குதிரைகளால் உண்டுபண்ணக்கூடிய வேகத்தை உற்பத்தி செய்யப்போதுமான யந்திரங்களை ஸ்தாபிக்க வகையிருப்பதாக ஊகிக்கப்படுகிறது. இந்த வேலை 5-வருஷகாலமாய்ச் செய்யப்பட்டு வந்து 1895-ம் வருஷம் முடிவுபெற்றது; இதற்குச் செலவான தொகை 30,00,000, அமெரிக்கன் 'டாலர்' (Dollar). (ஒரு டாலர் ஏறக்குறைய ஒரு வராகனுக்குச் சமமானது.) வேலைகள் முடிந்த பிறகு இப்போது அவ்விடத்தில் உண்டாகும் மின்சாரவேகத்தைச் செப்புக்கம்பி வடங்களால் பக்கத்திலிருக்கும் தொழிற்சாலைகளுக்குச் செலுத்துவித்து, சுலபமாய் வேலைகள் நடத்திவர ஆரம்பித்திருக்கிறார்கள். மேலும் இவ்விடத்திலுண்டாகும் மின்சாரத்தின் வேகத்தைக்கொண்டு சுற்று மாகாணங்களாகிய 'பென்ஸில்வேனியா' (Pennsylvania), 'ஒகியோ' (Ohio), 'மிசிகான்' (Michigan) முதலியவற்றிலுள்ள வியாபார ஸ்தலங்களுக்கும், ஐக்கிய மாகாணங்களின் தலைமை நகராகிய 'நியூ யார்க்' (New York) பட்டணத்திற்கும், தெருக்கள் தோறும் தீபமேற்றப்படுவதற்கும், மற்றும் சமீபப் பிரதேசங்களிலுள்ள கைத்தொழிற்சாலைகளிலுள்ள யந்திரங்களையோட்டுவிப்பதற்கும் சாத்தியமாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது மாதிரியாகவே மதுரை ஜில்லாவில் சமீபகாலத்தில் கட்டிமுடிந்த பெரியாற்றுப் பாசனவேலைப் பிரதேசத்தில் உண்டாகும் நீர் வேகத்தைக்கொண்டு யந்திரங்களை ஓடச்செய்து மின்சாரமியற்றுவித்து, அதைக்கொண்டு பெரிய தொழிற்சாலைகளில் யந்திரங்களை யோடச் செய்வதும், மதுரை, திருச்சினாபள்ளி, சென்னபட்டணம் முதலிய பெரிய பட்டணங்களில் தீபமேற்றுவதும் சாத்தியமாகுமென்று, 'லந்தன்' (London) நகரத்திலுள்ள மின்சார சாஸ்திர நிபுணர்கள் சிலர் சொல்லியிருப்பதை அனேகர் கேட்டிருக்கலாம். மைசூரிலும் பம்பாயிலும் இப்படியே செய்திருக்கிறார்கள்.

இவ்வாறாக, நுரைத்துக்கொண்டு நீர்ப்புகை எழும்ப அதிவேகமாயோடும் நயகராநதியின் வேகமானது மின்னலையொத்த மின்சாரவேகமாக்கப்பட்டு பலவித சுகசாதகங்களையுண்டாக்குவதாயிருக்கிறது. பார்வைக்கு மிகவும் இனிய காட்சிகளையமைத்து, கடவுளின் பெருமையை விளக்குவதாகிய இவ்வருவியின் வேகத்தினால் உண்டாகக்கூடும் பிரயோஜனங்களை உணர்ந்து, தக்க சாதகங்களால் அதன் வலிமையைக் கைக்கொண்டு, பலவிதத்தொழில்கள் ஓங்கிவளரவும் அவைகளினிறுதியால் அனேகர் ஊதியம்பெற்றுப் பிழைக்கவும் கூடினதான வேலைகளைச்செய்து முடிக்கத்தேவையான புத்தி யுக்தி சாமர்த்தியங்களை கருணைநிதியாகிய கடவுள் மனிதர்களாகிய நமக்குக் கொடுத்திருப்பதை நினைத்து நாமெல்லோரும் அவரிடம் அழியா அன்புவைத்து வாழவேண்டும்.

BIOGRAPHICAL SKETCHES III.
MEERABAI THE DEVOUT RANI OF CHITTOOR.

சரித்திரமஞ்சரி—3.

மீராபாய் என்னும் புண்ணியவதியின் சரித்திரம்.

'பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேராதார்.'—குறள்.

III.

மீராபாய் பிருந்தாவனத்திற்கு வந்ததும் அங்குள்ள தேவாலயங்கட்குச் சென்று கடவுளைத் துதித்தும் மற்றோர்களையும் கடவுளை வழிபடும்படி வேண்டிக்கொண்டும், பக்திசெய்துவந்தாள். இவளுக்கு அங்குள்ள தேவாலயங்களே வாசஸ்தலமாயிற்று. பலவிடங்களிலிருந்தும் இவளைப்பார்க்க வரப்பட்டவர்களுக்கெல்லாம், பிறவித்துன்பமாகிய கடலைத்தாண்டிச் செல்லத் தகுந்த மரக்கலம் கடவுளிடத்து மெய்யன்புகொண்டு அவரை வழிபடுதலே யென்று சொல்வாள்.

'மின்னனைய பொய்யுடலை நிலையென்று மையிலகு
விழிகொண்டு மையல் பூட்டு
மின்னார்களின்பமே மெய்யென்றும் வளர்மாட
மேல்வீடு சொர்க்கமென்றும்,
பொன்னையழியாது வளர் பொருளென்று போற்றியிப்
பொய்வேஷ மிகுதிகாட்டிப்
பொறையறிவுதுறவீதலாதி நற்குணமெலாம்
போக்கிலே போகவிட்டு'

மெய்ப்பொருளாகிய கடவுளை வழிபடாதார்க்கு முத்தியையளிக்கும் பேரின்ப வீடு கிட்டாதென்று சொல்வாள்.

'கல்லாத வறிவுமேற் கேளாதகேள்வியுங் கருணைசிறிதேதுமில்லாக், காட்சியுங் கொலைகளவு கட்காமமாட்சியாய்க் காதலித்திடு நெஞ்சமும், பொல்லாத பொய்மொழியு மல்லாதநன்மைகள் பொருந்துகுணம்'—

ஏதுமறியாமல் காலத்தைக் கழித்தால், கடவுளின் அருளைப்பெற வாய்க்காதென்று மீரா அடிக்கடி போதிப்பாள்.

'எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான் இயாதினுமரிதரிதுகாண், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ' வென்றும், 'இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்றெண்ணவோ திடமில்லையே' யென்றும், ஆதலால் 'இந்திரசாலம், கனவு, கானலினீரென'க்காணும் இந்த அநித்தியமான உலக வாழ்க்கையைப் பற்றறக்களைந்து, 'செப்பரிய முத்தியாங் கரைசேர' வழியைக்கண்டுகொள்ளுங்களென்று அடிக்கடி பகருவாள் மீராபாய்.

மனிதர்கள் தண்ணீரிலிருப்பதனாலேயே அவர்களுக்கு மோக்ஷங்கிடைக்குமானால், நீரில் வாழும் எல்லா ஜெந்துக்களுக்கும் சுலபமாய் மோக்ஷங் கிடைக்கவேண்டுமே; கந்தமூலபலாதிகளைத் தின்று ஜீவித்திருப்பதால் பேரின்ப வீடுண்டானால் அவைகளைத் தின்று வாழும் குரங்கு முதலிய மிருகங்களுக்கும் கிளி முதலிய பக்ஷிகளுக்கும் கிட்டவேண்டுமே; புல் பூண்டுகளைத்தின்று வாழ்வதால் முக்தியுண்டானால், அவைகளைத் தின்னும் மான்களுக்கும் ஆடுமாடுகளுக்கும் மோக்ஷமுண்டாக வேண்டுமே; பெண்டிரைத் துறந்து வாழ்வதினாலேயே மோக்ஷபதவி யுண்டென்றால், பெண்டிராசை யொழிந்த பேடியர்களுக்கும் மோக்ஷலாபமுண்டாகவேண்டுமே யென்றும்; கடவுளிடத்து மெய்யன்புகொண்டு நன்னெறி சார்ந்து அவரை வழிப்பட்டாலன்றி மனிதர்களுக்கு சாசுவத முத்தியைப் பெற முடியாதென்றும், மீரா பலகாலும் சொல்வாள்.

'பத்திநெறி நிலைநின்று நவகண்ட பூமிப்பரப்பை வலமாக வந்தும், பரவையிடை மூழ்கியு நதிகளிடை மூழ்கியும் பசிதாகமின்றி யெழுகாமத்தியிடை நின்று [illegible]சருகு புனல்வாயுவினை வன்பசிதனக்கடைத்து, [illegible]த்திருந்து மூயர்மலைநுழைவு புக்கியுமன்னுதசநாடிமுற்றுஞ், சுத்திசெய்தும் மூலப்ராணனோடங்கியைச் சோமவட்டத்தடைத்துஞ், சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்கோடு நிலைநிற்க வீறு, சித்திசெய்தும் ஞானமலது கதிகூடுமோ'

என்று, நமது தமிழ் நாட்டிலவதரித்த பிரம்மாநுபூதிச்செல்வராகிய தாயுமான ஸ்வாமிகளும் இனிது பாடியிருக்கின்றனரல்லவோ.

துறவறம் பூண்டு நிற்பதைக் காட்டிலும், மனிதர்கள் தங்களுடைய மனைவி மக்களுடனில்லறத்திலிருந்துகொண்டே இல்லறமுறை வழுவாது நடந்து எக்காலத்திலும் இடைவிடாது கடவுளிடத்து அன்புகொண்டு, தருமநெறியில் நின்று வாழ்வார்களானால் அதுவே மேலானதென்றும், அவ்வாறு இல்லறம் நடத்துபவர்கள் துறவிகளிலும் மேலான துறவிகளாவார்களென்றும் மீரா ஞானமுரைப்பாள். இதற்கிணங்க திருவள்ளுவரும் சொல்லியிருக்கிறாரல்லவோ.

'அறத்தாற்றினில் வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.'

'இயல்பினானில் வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.'

[illegible]ருவன் இல்வாழ்க்கையைத் தருமவழியாக [illegible]த்துவானாகில், துறவறத்திற்போய்ப் பெறும் பயனென்ன; தருமவியல்போடு இல்லறத்தில் வாழ்பவன் தவஞ்செய்வாரெல்லாருள்ளும் தலைவனாவான் என்பதாம்.

இவ்வாறு மீராபாய் செய்துவந்த ஞானோபதேசங்களால், பாபத்தொழில்களையே செய்துவந்தவனேகர் துஷ்ட கருமங்களையொழித்து சன்மார்க்க நெறிசார்ந்து தங்கள் ஜன்மங்களைச் சாபல்யமாக்கிக்கொண்டார்கள். தாங்கள் வெகு பாடுபட்டுத் தேடித் தருமவழியில் ஈயாமல் குவித்துவைத்திருந்த பெருஞ்செல்வத்தையே எல்லாம்வல்ல கடவுளென்று மதித்துப் பூஜித்துவந்த லோபியரனேகர், தங்கள் செல்வத்தை வறியோருக்குக் கொடுத்துதவுதல் முதலிய தரும வழிகளில் செலவிட்டுகிருதார்த்தர்களானார்கள். நாஸ்திக மதங்கொண்டு அஞ்ஞானத்திலாழ்ந்திக்கிடந்த சிலலோர், ஆஸ்திகம் பூண்டு மெஞ்ஞான மடைந்தனர். தங்கள் பெற்றோர்களையிகழ்ந்து நிந்தித்து வந்த வாலிபரனேகர், அவர்களை இவ்வுலகிற்காணும் தெய்வங்களென மதிக்கத்துவக்கினார்கள். தங்கள் கொழுநர்களைக் கடிந்து வந்த சிறுக்கியர் சிலலோர் இல்லறமுறை தழுவி வாழத் துவக்கினர்; கற்பிற் சிறந்த தங்கள் மனைவியர்களைக்கழித்து பாபத்தொழில் புரியும் பரத்தையரை நாடி, அவர்கள் வீடே முக்தியென்று கிடந்துழன்று வந்த காமுகர் பலர், அறநெறிசார்ந்து தங்கள் இல்லம்போந்து துக்கசாகரத்தில் ஆழ்ந்துகிடக்கும் தங்கள் பெண்டிரைத் தேற்றினர். மீராபாயின் தீவிர ஞான பரிபக்குவமும், அவள் செய்துவந்த ஞானோபதேசமுமே நாடெங்கும் பேச்சாயிருக்க, அவள்கணவனாகிய கும்பசிம்ஹன் தான் செய்த அடாத செயலைக்குறித்துப் பலகாலும் வருந்துவான். அவன் சித்தூரில் சென்ற பக்கமெல்லாம் மீராபாயைக்குறித்த சம்பாஷணையும், அவளியற்றிய பாடல்களுமே யாவர் மனத்தையும் கவர்ந்திருக்கக் கண்டான். உலகவாழ்க்கைக்கு உரித்தாகிய தனது அற்பமான இராஜபதவியைக் குறித்தும், அவனது மனைவி யாவரன்பிற்கும் பாத்திரமுள்ள தான மேலான பதவியை அடைந்திருப்பதைக் குறித்தும் அவன் நினைக்குந்தோறும், தான் அவளுக்கு விளைவித்த கொடுந்தீத்தொழிலால் உண்டான பாபத்தை எவ்வாறு போக்குவதென்று கரைந்துருகிக் கண்ணீர் பெருக்குவான். ஐயோ பாவம்; ஆக்பர் அரசன் மீராவைத்தொட்டு மாணிக்கமாலையைக்கொடுத்ததனால் தனது இராஜகுலத்திற்கு ஈனம் வந்ததாகத் தன் நாட்டு ஜனங்கள் சொல்வார்களோ,

வென்று அப்பேதையரசன் நடுங்கி அவளை ஊரைவிட்டு ஓட்டவும் கொல்லவும் துணிந்தான்! மீரா தனது குலத்திற்கு அவமானத்தை விளைவித்ததாக நினைத்த அவ்வரசன், இப்போது அவள் மீவார் வம்சத்திற்கு ஒரு தாரகமாய் விளங்குவதையுணர்ந்தான்! உலகெல்லாம் ஏத்திப்புகழும் அப்புண்ணியவதியாகிய இராணியை அரசன் சித்தூரில் தனது அரண்மனைக்குக் கூட்டிக்கொண்டுவராமல் மௌனமாயிருத்தலை ஜனங்கள் கண்டு அவனைப் பலவாறாக இகழத் துவக்கினார்கள்.

ஆகவே அரசன் தான் செய்ததைக் குறித்து துன்புற்றவனாய் மீராவைத் திரும்பவும் சித்தூருக்குக் கூட்டிக்கொண்டு வருவதற்காக மாறுவேடங்கொண்டு, கால்நடையாகவே பிரயாணப்பட்டு பிருந்தாவனம் வந்து சேர்ந்தான். வந்ததும் அங்குள்ள ஒரு கோவிலினுட் சென்று மீராவை அரசன் தேடுகையில், அங்கே அவள் ஒரு படியின்மீது தனியே உட்கார்ந்து கொண்டு,

‘அரும்பொனே மணியே யென்அன்பே யென்அன்பான
அறிவே யெனறிவிலூறும்
ஆநந்தவெள்ளமே’

என்றும்,

‘அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆரமிர்தே யென் கண்ணே யரியவான
பொருளனைத்துந் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனிதவாழ்வே

என்றும்,

‘சிந்தாகுலத்திமிர மகலவருபானுவே நினைனேன்
கரையேறவே, கங்கற்ற பேராசை வெள்ளத்தின்
வளரருட் ககன வட்டக் கப்பலே’

என்றும்,

‘விண்ணாதி பூதமெலாந் தன்னகத்திலடக்கி வெறு
வெளியாய் ஞானக், கண்ணூரக் கண்டவன்பர் கண்
ணூடே யாநந்தக் கடலாய், வேறொன்றெண்ணாதபடிக்
கிரங்கித் தானாகச் செய்தருளும் இறையே’

என்றும், இதுபோன்ற கடவுளின் பெருமைக் குணங்களை யுணர்த்துவனவாகிய பல பாடல்களை,

‘உடல் குழைய வென்பலா நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பியூற்ற, ஊசிக்காந்தத்தினைக் கண்
டணுகல் போலவே ஒருறவுமுன்னி யுன்னிப் படப
டெனநெஞ்சம் பதைத்துண்ணடுக்குற’

கடவுளைத் துதித்துப் பாடிக்கொண்டு மீரா பரவசமாய் உட்கார்ந்துகொண்டிருப்பதை அரசன் கண்டான். அது கண்டதும் அரசன் மீராவை நோக்கி, பெண்மணியே நீ எனக்கு ஏதாவது பிச்சை (பிக்ஷை) தரவேண்டுமென்று இரந்து வேண்டினான். நானோ மிகவும் ஏழை: செல்வவான்கள் யாரிடத்திலாவது நீபோய் யாசித்தால் அவர்கள் உனக்கு ஏதாவது கொடுத்துதவுவார்களென்று மீரா பதிலுரைத்ததும், அவள் கணவனாகிய மாறு வேடங்கொண்ட அரசன், சன்மார்க்க வழிதேடும் பரதேசிகள், பரதேசிகளையல்லவோ யாசிப்பார்களென்று விடைகூறினான். அது கேட்டதும் மீரா நான் உனக்கு எவ்விதமாய் உதவி செய்யக்கூடுமென்று அவனைக்கேட்டாள். நான் உனக்குச் செய்த கொடுந்தீங்குகளை நீ மன்னிப்பாயாக என்று சொல்லிக்கொண்டே அரசன் தன் வேஷத்தைக் களைந்தான். மீரா தன்முன் நின்றவனை உற்று நோக்கிட, அவ்விடத்தில் நிற்பது தனது இன்னுயிர்க் காதலனாகிய அரசனென்றறிந்து கண்களில் நீர்ததும்ப ‘ஐய, என் இறைவ, இப்பொழுதேனும் உமக்கு என் ஞாபகம் வந்ததோ’ வெனக்கேட்டாள். கேட்டதும் அரசன் தான் செய்ததையெல்லாம் நினைத்துக் கண்ணீர் பெருக்கிட்டான். பின்னர் மீரா அரசனை நோக்கி, ‘நீங்களெனக்கு யாதொரு தீங்கையும் விளைவிக்கவில்லை; இவ்வுலகத்தில் காண்பனவெல்லாம் அவனடிமையே, எல்லாம் அவனுடைமையே, எல்லாம் அவனுடையசெயலே யாதலால் நீங்கள் துன்பப்படவேண்டியதில்லை. விதியின் பயனை வெல்ல யாவரால் முடியும்.

‘ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.’

ஊழைமிட வலிமையுடையவை யெவையிருக்கின்றன; அதை விலக்கும்பொருட்டோ

ன்றை நினைப்பினு மவ்வூழே முன்வந்து நிற்கு[illegible]வோ. மேலும் அவ்வாறு நேரிட்டதாலல்ல[illegible]யான் பிருந்தாவனப் புண்ணிய நகருக்கு வந்து ஆண்டவன்பால் தொண்டுசெய்து என் ஜன்மம் ஸபலமாக நேரிட்டது. தாங்கள் செய்த உத்தரவாலல்லவோ எனக்கு இவ்வளவு பாக்கியமும் நேர்ந்தது. ஆதலால் நீங்கள், நான் நல்வழி சார்ந்து நடப்பதில் துணையாயிருந்தீர்களேயல்லது எனக்கு யாதோர் தீங்கும் செய்திடவில்லை யெனப் பலவாறு சொல்லித் தன் கணவனைத்தேற்றினாள். பிற்பாடு மீராவும் அரசனும் பிருந்தாவன நகரில் கொஞ்சகாலம் தேவநாம சங்கீர்த்தனைகளில் கழித்து அந்நகரைவிட்டுச் சித்தூர் வந்து சேர்ந்தார்கள். அவளுக்கு பிருந்தாவனத்தை விட்டகலக் கொஞ்சமேனும் மனம் வரவில்லை. ஆயினும் அவள் தன் கணவன் இஷ்டத்திற்கு மாறுபாடாய் நடக்காத உத்தமியாதலாலும், சித்தூர் நகரவாசிகள் தங்கள் அன்புள்ள இராணியாரைப்பார்க்க விரும்பி, அந்நகருக்கு வரவேண்டுமென்று பலகாலும் வேண்டிக்கொண்டபடியாலும் அவள் சித்தூர் வரவேண்டியதாயிற்று. அவள் வந்து சேர்ந்ததும்,—

‘மண்களித்தது மாதிரங் களித்தன மலர்மேற்
பெண்களித்தனள் பேரறங் களித்தன கண்டோர்
கண்களித்தன களித்தன கலைவலோர் நெஞ்சம்
விண்களித்தன களித்தது சித்தூர்மா நகரம்.’

மீராவுக்கு மறுபடியும் பலவிதமான இராஜ[illegible] பாக்கியங்கள் வந்தபோதிலும், அவள் [illegible]யொன்றையும் பாராட்டியவளல்லள். தன் கணவனுக்கு இனிமையாய் இல்லறத்தேயிருந்துகொண்டு, இடைவிடாத தெய்வபக்தி பூண்டவளாய், எப்போதும் தேவநாம சங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டும், மற்றவர்களும் பக்திமார்க்கம் புகும்பொருட்டு அவர்களுக்கு ஞானோபதேசங்கள் செய்துகொண்டும், அவள் இவ்வுலகத்திலிருந்த அளவும் சித்தூரில் ஆறு மாதகாலமும், பிருந்தாவனத்தில் ஆறுமாத காலமுமாக வாழ்ந்துவந்தாள்.

மீராபாய் காலஞ்சென்று ஏறக்குறைய 300-வருஷங்களுக்குமேலானபோதிலும். அவள் பெயரோ இன்றும் அழியாமல் வானத்தில் அழுந்திக்கிடக்கும் நக்ஷத்திரங்களென்னப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இவளியற்றிய தெய்வபக்தியில் மிகுந்த பாடல்கள் இன்றும், சிந்து கங்காதீரங்களுக்கும் இமோத்கிரி விந்திய கிரிகளுக்கும் மத்தியிலுள்ள பிரதேசங்களில் யாவராலும் பாடப்பட்டு வருகின்றன. ஆடுமாடுகள் மேய்க்கும் இடையர் கூட்டங்களிலும், தெய்வபக்தியில் சிறந்த பக்தர் குழாங்களிலும், பஜனைகள் செய்யும் பாகவத கோஷ்டிகளிலும், நடனக்கணிகையர் செய்திடும் ஆடல்பாடல் கச்சேரிகளிலும் மீராவின் பாடல்களை இன்றும் கேட்கலாம்.

‘நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.’

என்றபடி எக்காலத்தும் வேறுபடாத நற்குடியிற் பிறந்தவர்க்கு உரித்தாகிய வறியவர் சென்றவிடத்து முகமலர்ச்சியும், உள்ளவை கொடுத்துதவுதலும், இன்சொற் சொல்லுதலும், இகழாமையுமாகிய இந்நான்கு நற்குணங்களும் மீராபாயிடம் நிறைந்திருந்ததால் அவள் யாவரன்பிற்கும் பாத்திரமுள்ளவளாய் அன்பிற் சிறந்திருந்தாள்.

‘கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.’

‘செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்
செல்வத்து ளெல்லாந் தலை.’ வஞ்]

‘ஒருவற்கு அழிவில்லாத செல்வம் கல்வியாம், பொன், மணி முதலானவை செல்வமல்லவாம்; சிறப்புடைய செல்வம் கேள்விச்செல்வமே, இச்செல்வம் எல்லாவற்றிற்கும் தலைமையுடையது’ என்பதற்கிணங்க மீராபாயிடம் கல்வி கேள்விகளாகிய பெருஞ்செல்வங்கள் சம்பூரணமாயிருந்த படியாலல்லவோ, அவள் தன்னுடைய இராஜபதவியிலிருந்து தவிர்க்கப்பட்டுப் பரதேசியாயிருந்த காலத்திலும் தனது ஞானமான சிறந்த செல்வத்தால் உலகத்தாருக்குத் தெய்வபக்தியாகிற பேருதவியைப்புரிந்து வந்தாள்.

மிராவின் கணவனாகிய அரசன் ஊர்வாயை யடக்கக்கருதி அவளைத்தற்கொலை புரிந்துகொள்ள உத்தரவுசெய்து ஊரைவிட்டு ஓட்டியும். ' ஐந்துவகையாகின்ற பூதபேதத்தினால் ஆகின்ற யாக்கை நீர்மேல் அமர்கின்ற குமிழியென' அவளெண்ணி அவ்வாறு செய்யத்துணிந்து, பிற்பாடு தெய்வசங்கற்பத்தினால் அவள் உயிர் நீங்காது பிழைத்து பிருந்தாவன க்ஷேத்திரம்வந்தடைந்த காலத்தில், அரசன் அங்குசென்று அவளைத்திரும்பவும் சித்தூர் வரக்கேட்டுக்கொண்டவுடன், கொடிய பாதகவுத்தரவுகளைப் பிறப்பித்த தன் கணவன்பேரில் கடிந்து சீற்றங்கொள்ளாமல் அவனுடன் அவள் சென்றது, மங்கையற்கரசியாகிய இவ்வுத்தமியின் அரிய பதிவிரதா தருமத்தின் பெருமையையும், துறவியையொத்த சாந்தகுண பூஷணத்தையும் விளக்குகின்றதல்லவோ !

'இன்னாசெய்தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு'

கன்றபடி மிராவின் கணவன் அவளுக்குத் துன்பங்களை விளைவித்திருந்தபோதிலும், அவனுக்கு அவள் இனியவைகளைச் செய்யாவிட்டால், அவளிடத்தில் நிறைந்துநின்ற பல நற்குணங்களாலும், அவைகளை யாளுதற்றன்மையாலும் பிரயோசனமொன்றுமில்லாமற் போகுமல்லவோ.

பதிவிரதா சிரோன்மணியும், தெய்வபக்தியில் சிறந்தவளுமாகிய மிராபாயின் இச்சரித்திரத்தைப் படிக்கும் வனிதையர்காள், நீங்களும் மிராவையொத்து அவளிடம் விளங்கிய நற்குணங்களைப்பெற்று உங்களையண்டிய ஏழைகள், வயோதிகர், வியாதியஸ்தர் முதலியவர்களுக்கு உங்களாலான உதவி புரிந்தும்; கல்வி கேள்விகளால் ஞானமளிப்பதாகிய தெய்வபக்தியை எய்தப்பெற்று உங்கள் சுற்றத்தாருக்கும் குழந்தைகளுக்குங் கடவுளிடத்தன்பை யூட்டுவித்தும், உங்கள் கணவர்கடிந்து கோபித்திடினும் வேறு தீத்தொழில் செய்திடினும் முனிவரையொத்த உங்கள் சாந்த குணத்தால் அவர்களை நன்மார்க்கத்திற்குத் திருப்பியும், இல்லறமுறை வழுவாது உங்கள் காதலருடனும் மக்களுடனும் இனிது வாழ்ந்திருந்து, பேரின்ப பாக்கியத்தைப்பெற எல்லாம்வல்ல கடவுள் அருள்புரிவாராக.

'பொருளாகக்கண்ட பொருளெவைக்கு முதற் பொருளாகிப் போதமாகித், தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப் பருக வந்த செழுசதேனாகி, யருளானோர்க்ககம் புறமென்றுன்னாத பூரணவானந்தமாகி: யிருள்தீர விளங்குபொருளியாதந்தப் பொருளினை யாமிறைஞ்சி நிற்பாம்;

SONGS.

பாட்டுகள்.

ON THE FINITENESS OF HUMAN MIND.

I.

"இந்தமனமொரு சிந்தனையந்த்ரம்."

ராகம் - பியாகு - ஆதிதாளம்.

இந்தமனமொரு சிந்தனையந்த்ரம்
ஈசனியற்றி யியக்கியதந்த்ரம்.

சொந்தமும் பொய்யே சுதந்த்ரமும் பொய்யே
அந்தமிலானன்றிலையென்பது மெய்யே (இந்தமன—)

(1) நன்மைசெய்தாற் சில தீமையிற்றாவும்
தீமையென்போ மவை நன்மையில்மேவும்
நன்மை தீமை யென்று நம்முடையேக்கம்
நன்றல தொன்றிலை யீசன்றன்னோக்கம் (இந்தமன—)

(2) ஓர் முடிவெண்ணுவம் சிற்றறிவாலே
ஒரு கோடியாமீசன் முற்றறிவாலே
சீர் முடிவாகச் *சிவன் சித்தம்வேண்டும்
*சிவன் சித்தமாகிலதெத்தையுந்தாண்டும் (இந்தமன—)

(3) சித்தந் தனக்குற்ற சீரையேதேடும்
தெய்வம் ஜெகத்துக்கெல்லாம்நன்மைநாடும்
சுத்த சுதந்தர சூக்ஷமநோட்டம்
தோன்றலுக்கேயுண்டகம்பொம்மலாட்டம், (இந்தமன—)

II.

ON LOVE AND AUTHORITY.

அன்பேபாடதிகாரம்.

ராகம் - பூர்வகல்யாணி - தாளம் ரூபகச்சாப்பு.

அன்பதிகாரம்போலின்பங் கொடுக்குமோ
வன்பதிகாரங்களே.

மன்பதை மன்னவன் பின்பெதினுஞ் செல்வ
ரென்பது தீர்ந்திடுந் துன்பங்களென்றன்றோ. (அன்பதிகா—)

(1) அன்பொடு நீதி நடத்தல் செங்கோலே
ஆணைசெலுத்திவிடலாங்கொடுங்கோலே
அன்பிற்கடங்காததில்லை மண்மேலே
ஆணைக் கடங்குதலச்சத்தினாலே. (அன்பதிகா—)

(2) அன்பு சுகம் வளர்க்கும் புகழ்நாட்டும்
ஆணை வளர்தொறு மின்பத்தை வாட்டும்
அன்பினுண்டாவன நல்லறம் யாவும்
ஆணைவழி நடந்தாற் றீங்குகள் மேவும். (அன்பதிகா—)

(3) அன்பிற்களவில்லை யாணைக்குண்டெல்லை
அன்பு ப்ரம்மரூபமே யாணைவன்றொல்லை
அன்பு சுதந்தரமே யாணை புன்பாசம்
அன்புமாணையு மஜகெஜத்தின் வித்பாசம். (அன்பதிகா—)

III.

ON SELF-ABNEGATION.

தன்னாசைமறுத்தல்.

ராகம் - நாதநாமக்ரியை - தாளம் ரூபகச்சாப்பு.

இந்தமலையிலோ ரூற்றிருக்கின்றது
சொந்தம் நமக்கதுவே—மனமே.

பந்தவினையெனும் வீடு விட்டப்புறம்
வந்தவர்க்கென்று மானந்தந்தருகின்ற (இந்தமலையி—)

(1) யானெனுங் கோட்டை யெனதெனுங் காவலா
மிவ்விரண்டுங் கடந்து—திவ்ய
ஞானமெதற்கு முறைவிடமொன்றெனும்
ஞாயவழி நடந்து—பல
கானகந்தாண்டிக் கழனிகள் தாண்டிடில்
மோனமிலை நின்று வானமளாவிய (இந்தமலையி—)

(2) ஈசன்மலையென்பரிங்கிதிலூறுவ
தீசனருள்வெள்ளமே—கிட்டி
நேசமுடன் சென்று நிற்பவர் நிர்மல
ராவர் தமதுள்ளமே—நாமுல்
லாசம் பெருகிட ஸ்நானஞ்செய்வோமதில்
பாசந்தவிர்த்திடப் பானஞ்செய்வோமதை (இந்தமலையி—)

STANZAS ON FREEDOM.

சுதந்திரம்.

(உண்மைச் சுதந்திரம் இன்னதெனல்.)

1. சவுரியமும் சுதந்திரமும் உறப்பெற்ற பெருந்தகையோர் தனிக்குலத்தில்
பவுருஷமாய்ப் பிறந்தேமென் றுவப்பெய்தும் மானிடர்காள், பாரின் மீதே
எவனிடையா யினுமொருவன் அடிமையுயிர்ப் பொறைசுமந்தே யிருப்பா னென்னின்,
நவிலுமுங்கள் சுதந்திரமும் சௌரியமும் உண்மையென நயத்தற் பாற்றோ?

(சுதந்திரத்துக் குரியவர் இன்னாரெனல்.)

2. நும்போலு மொருமகற்கு நோய் செய்யும் நெடுந்தளைதான் நுமது காலில்
துன்புறப் பூண்டதெனத் துயர்கொள்வீ ராமாயின், சொல்லின் நும்போல்
கொன்பாரி விழிதகைசே ரடிமையெவர் பிறருண்டே கூறீ ரெங்கண்?
அன்பார வடைந்துறநுஞ் சுதந்திரத்துக் குமக்குரிமை யாதுண் டாங்கே?

(இன்னது சுதந்திரமன்றெனல்.)

3. உண்மை நிலைச் சுதந்திரம்தான் உள்ளுவக்கும் நமக்கேயாங் குற்ற தான
திண்மையுறும் தளையதனைச் சிதைத்தெறிந்து செயிரகன்றங் கிருத்த லாமோ?
தண்மையுறுந் துவக்கதுபோல் மனநெகிழ்ச்சி யறத்தவிர்ந்து, தவறிலாது
வண்மையுறப் பிறர்க்கிழைக்கும் கடனுண்டென் பதைமறந்து மருவ லாமோ?

(இன்னதே சுதந்திரம் ஆமெனல்.)

4. ஆகாவ லொருநாளும். அணையதொரு சுதந்திரம்தான், அன்பு கூர்ந்து
வாகான சோதரர்போன மக்களெறும் தொடக்கதனை வாங்கி நாமும்
போகாது தரித்தவர்க்குச் சுதந்திரத்தைப் புணர்த்திடற்குப் புந்தி நேர்ந்து,
சேகாரும் மனத்தாலும் கரத்தாலும் உரியவற்றைச் செய்த லாமே.

(அடிமையாவார் இன்னாரெனல்.)

5. மெலிந்தார்க்கும், சிறுமையினில் வீழ்ந்தார்க்கும், வருமுறுகண் விலக்க வேண்டிப்
பொலிந்தார்த்துப் பிரியாதா ரவர்காணும் பூவுலகி லடிமை யாவார்.
வலிந்தார்கள் பலர்க்கஞ்சி வனப்புளதென் றறிந்ததனை மருவி நாளும்
நலிந்தார்கள் சிலருடனே நண்ணுதார் தாமவரும் அடிமை தாமே.

(இதுவுமது.)

6. பல்லோர்செய் நிந்தனையும், பழிமொழியும், வெறுப்பதுவும், பார வஞ்சிச்,
சொல்லாரும் சிந்தையுறச் சூழ்ந்துகொளற் குரியதொரு துலங்கு முண்மை
கல்லாது மனமெலிந்து கைவிடுக்கும் பேதையரும், காணி னம்மா!
எல்லாரு மிகழ்ந்து வெறுத் திடற்குரிய அடிமைகளா மியம்பின் மாதோ.

ON THE URGENCY OF VERNACULAR EDUCATION.

VIEWS OF THE DEWAN OF TRAVANCORE.

CALICUT, NOVEMBER 8.—In the course of his reply to the address presented by the people of Paravoor during his visit Dewan Bahadur M. Krishnan Nair, Dewan of Travancore, made interesting observations on the language problem. He was very glad to note that they were one with the Government in the policy adopted by them regarding vernacular education and heartily appreciated the exertions of the Government to raise the status of the vernaculars. "It is very important," said the Dewan, "that people should appreciate the actual bearing of this momentous question in all respects. All over India there is a new sense of responsibility felt towards the vernaculars. The national consciousness has been awakened; the public have been roused to the extreme urgency of giving greater prominence to vernacular education." They all recognised the great benefits that have accrued to India and must accrue in future from English education, but he was sure they would agree with him when he believed English language would never be the language of the people in India. The West could be explained to millions in the East only through their vernaculars; that was what they had to do in Japan and that was what would have to be done in India also. Philosophy, Science, art and literature of the West would reach the masses in India only through their mother-tongue. The Travancore Government realised this and were trying to do their part of duty. The Dewan exhorted citizens who received English education to translate great books of the West, strengthen the passion for the vernacular and spread modern knowledge among their countrymen through vernaculars.

SOME THOUGHTS ON VERNACULAR STUDY AND COMPOSITION.

SIR,—My attention having been drawn to the correspondence on the subject now appearing in the columns of the *Hindu*, I desire to make a few observations on the subject in your columns, with your permission. I have in a series of articles contributed to newspapers and reprinted in a pamphlet form discussed the question of Vernacular studies in Madras. It was published in 1898 and though fifteen years have now elapsed and we see a number of books, good, bad and indifferent, advertised by a number of concerns, the defects then pointed out remain more or less the same. Without recapitulating them here, I may refer to the remedies which I then suggested. The first and the most salient point to keep in mind is: "The work of educating the masses is such a large one that it could not be satisfactorily performed either by the Government or the educated classes working alone. It is a gigantic work which would absorb all the energies and resources of both the Government and the educated class; and, therefore, what little of these, either of them could bring to it should be utilised in a cordial spirit of mutual help and co-operation, so that as little of the energies and resources employed for the purpose may be wasted as possible."

I then said that the Government should so arrange the system of education that it imparts in schools, especially in the Primary and Lower Secondary Departments, as to give a good grounding in the vernacular to the young student who goes up to the Upper Secondary Department and create in him a taste for his native language." This is far from being done yet, though there has been much reform or overhauling of the system of school-education. To repeat what I said 15 years ago, "a reform in the system of Primary and Lower Secondary education is more urgently called for, in the interests of the vernaculars," than anything else. The principle of *discrimination* is still wanting in many of those who appear as the accredited representatives of "schemes" for the improvement of vernacular studies and composition.

"In speaking of popular Vernacular literature" I wrote in 1898, "care should be taken to discriminate between a healthy growth of that literature and a *production* of it. Healthy growth implies production and distribution. Production without distribution, will be mere accumulation and not real growth. The present decay of the vernaculars is due as much to the want of good literary activity (as distinguished from the mere book-making proclivity which is now in evidence to some extent) among the educated classes as to the absence of a

healthy taste for reading among the literate portion of the people. Our aim in any attempt at reform should be to provide for the supply of both these wants. A good grounding in the Vernacular and the creation of a real taste for the same in the early days of school life is absolutely essential for the success of any reform that aims at the improvement of the vernaculars as a medium for the diffusion of useful knowledge among the mass of the people. I have personally known cases of youngmen who have acquired a taste for their Vernacular in early boyhood but who have taken to the study of Sanskrit from the fourth form upward, having kept touch with their mother-tongue, owing to the early taste imbibed, to such an extent as to be able to wield it with much greater force and ease in the diffusion of useful knowledge on subjects they have themselves studied, than most of the graduates who have carried their vernacular studies up to the B. A. Degree Examination." My views thus expressed 15 years ago, I see no reason to change in spite of the multiplication of books which I see and welcome as a sign of the times but which is not yet sufficiently developed to form a sign of "healthy growth." For, most of the young writers are poor in thought and poorer in the method of giving expression to what little they are able to think.

"Language is the slave of thought" and only a cultured mind that can well control the process of thinking and use it according to its own enlightened will," can command that "facility of expression" which is really at the bottom of what we term "literary style."

Most of our educated men who have essayed hard to produce a "book" in the vernacular with rare exceptions, have shown themselves to be poor thinkers and most of the young men who take to the "making of books" as a makeshift are no thinkers at all. It is the facility and aptitude of expression as well as its amplitude when language is used as a vehicle for the expression of thought and emotion as well as mental pictures formed of "things percevied" by the apperceiving mind that really go to the making of *literature* in any language and judged by this standard our current literature is woefully poor and not worth the name. It is only *thinkers* that can find fitting expressions for the thoughts they think and not traffickers in borrowed thoughts.

C. V. SWAMINATHA IYAR.

—*The Hindu of 23rd July* 1913.

APPEAL FOR CO-OPERATION.

(*From the Hindu of July 28th*, 1913.)

Sir,—In thanking you for promptly publishing my first few thoughts on the subject, I beg leave to point out that it is a most important work and is of such a nature that we cannot afford to dally with it as some people seem inclined to do. In concluding the third of my series of articles (1898) in which I took a brief survey of the question of vernacular studies as affecting the education and enlightenment of the masses, I laid stress on the necessity of "real hard work" as opposed to "paper schemes" merely for reclaiming the wild waste of popular ignorance. Now, as I said before, "I do not mean to minimise the importance of schemes" as facilitating the production of maximum results with minimum waste of energy and labour: but I feel that we are relying too much on "Schemes" for results, while doing too little of work to achieve them."

In this view I was heartily supported by almost all the prominent educationists of the time, and Dr. Duncan and Mrs. Brander, as well as many others, helped me with their ready sympathy and valuable advice in the carrying out of my work. Among those who took a kindly interest in my efforts and encouraged me in my work was the late Rao Bahadur M. G. Ranade, then a Judge of the Bombay High Court. Writing to me at the time on the subject he remarked:

"I have read these articles with great interest. . . . With much you have written I entirely agree. *Earnest work is what is wanted*, but in this matter as in others, there is room for all workers and I should myself not come in the way of any experiment being tried from various quarters." (The italics are mine.) Writing later on, after reading a leader which appeared in the newspaper which published these articles, he wrote to me to say:—"The leader in the *Madras Mail* of 9th September, makes the suggestion which you have practically carried out. You will have to be disappointed of the result of that experiment but as I have already written to you such disappointments are inevitable. You should make another experiment under more favourable circumstances. I feel sure you will succeed."

As I went on working and spending myself almost single handed, taking up the question of village sanitation for some time, I found my health break down, and before I could recover my shattered health, misfortunes came to me in battalions, so to say, and laid me low, striking me as an English friend said "the heaviest of blows that could befall a man." I have again returned to my "old love"—the encouragement of vernacular study and composition. The well-conceived organisation of 'Association of Helpers' which was more or less in working order all through the villages, unobtrusively working to create a taste for general reading with "reading circles" in almost every village where there was a well-established school, public or private, hath fallen into desuetude. But the spirit is there and still working and I shall be glad to have the co-operation of all good men and true in my self-imposed task. I have grown old but with age hath come wisdom while my heart is yet quite young and tender like that of a child. With this my new resolve hath come a new life to the *Viveka-chintamani* which after 21 years of approved service is now transformed again into a Boy's Journal conducted by boys for the use of young-folk in which term I include all those who have not lost their young hearts and the buoyancy of spirit which it ever conveya.

C. V. SWAMINATHA IYER.

'UNCONTROLLED THIS "WILL" MEANS UNIVERSAL STRIFE FOR SURVIVAL BY DESTRUCTION OF ALL ELSE.'

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

'HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 23.] ராக்ஷஸ௵ கார்த்திகைமீ, 1915௵ நவம்பர்மீ [சஞ்சிகை 8.

'UNCONTROLLED THIS "WILL" MEANS UNIVERSAL STRIFE FOR SURVIVAL BY DESTRUCTION OF ALL ELSE.'

POWER.

The Psychic Conditions of the Present War.

"Wars in the past have come about either from conflicts of Races, Castes or Creeds in the endeavour to secure monopolies of the land, or to command the Trade or the profits of production and distribution of the world's commodities,; or finally from an uncontrolled expansion of the population in excess of the food-supply possible to be obtained.

In effect we have here, applied to masses of humanity, the psychic conditions common to every individual; and which have been summed up by German professors as the leading instinct of all creation, "The will to power."

Uncontrolled, this 'will' means universal strife for survival by destruction of all else. But Religions all teach control of the will, by which the individual and the masses can co-exist in co-operation, instead of some surviving by destruction of others.

Religion teaches the doctrine of the 'useful Limit' (*Control*) of all desires, and the proper exercise of every power, for the harmonisation of the human will with that of the Creator; the first object of which is, the efficient and economical use of human effort for the work of the world: and not only for the work of an individual, or a particular mass of humanity.

Teutonic interpretation of 'the will to power,' combined with certain accidental causes, has led Germany to a cult of pure materialism, in which Religion has lost its dominating power,"

THOUGHTS ON THE PRESENT WAR.

"The aggressive materialism which is characteristic of the rise and fall of empires, has now reached the stage in Europe when half the states are ranged against the other half in deadly warfare. The logical conclusion we may draw from the fact is, that the empires chiefly responsible for failure to keep the peace internationally must give way to a federal union of the whole of the Nationalitiesof the European Continent, with an organisation which will ensure the peace for the future.

This is the more imperative because the future will see the federation of the Continents of North and South America, Africa and Asia, for defensive purpose, against the aggressiveness of Europe, if the cult of materialism is to reign supreme.

The Engineer, the Mechanic, the Scientist and Financier have a great field before them wherewith to make humanity glad or sad, according as they can control the use to which their wits are put. We witness the abuse of their powers in the craze for power of a single (Teutonic) Caste.

Pepole who crave for power, often do not know when they have got it, or with what object, they should use it and how to set about it! The greatest power for good being exercised universally is that bequeathed to humanity by those who disclaimed the grasping of temporal power, who loved and protected the poor and the humble. It is this power which will conquer in the present or any other war. This is the power the Entente wills behind its action.

It is already taking effect in ways the Teutons little imagine or suspect, because it is God's will as expounded by the Christ. Secret service, Bribery and Treason to the neighbour have not the ghost of a chance against it; and the scientists of no nation can keep their secrets from those of another. Treachery and deceit are mere negations of the will to power demonstrating the unfitness of the person to exercise it, and the danger to himself, in conceiving it.

Bismark, the statesman responsible for the diplomacy that led to the war against France in 1870, lived to see a *coup d'etat* by the present Emperor and his friends, (after his summary dismissal), which became possible by the Imperial constitution, which failed to place any real check on the German Emperor. The very thing Bismark cautioned the German people against, *viz.*, raising a general coalition against them has happened. . . . . . .

The enormous centralisation of power which the Kaiser has caused, by his own actions, and the desire of the military, and the Jews working the Finances, has led to a momentum of power that no one has been able to control, and least of all the Kaiser, who has been made a tool of by a certain Ring around him.

It is easy to trace the effect of this in speeches of the members of the Bureaux, when endeavours are being made, to lay down laws for the world, which it will in nowise accept.

The excuses put forward by the Berlin Bureaux for the fearful blunders committed by Germany in the policy and direction of the war serve the very good purpose of showing the world the impossibility of the Imperial regime."—*'Miles' in the "Wednesday Review."*

புஸ்தகம்-23.] [சஞ்சிகை-8.
"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."
ராக்ஷஸ ஆண்டு கார்த்திகை } விவேக சிந்தாமணி { November December. 1915.
ESTABLISHED 1892

OFFICE OF THE REGISTRAR ... 15 DEC 1915 ... M...

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றோ மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னே சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

"THE PSYCHIC CONDITIONS OF THE PRESENT WAR."

யுத்தகாரணம்: மனோபாவ நிலைமை.

இச் சஞ்சிகையின் முதற் பக்கத்தில் இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்டவர் மனோபாவ உண்மைகளைப்பற்றி ஆங்கிலேய வித்வான் ஒருவர் எழுதிய அபிப்பிராயத்தை யெடுத்து அச்சிட்டிருக்கிறோம். அதிலே பொதுவாய் சண்டைக்கெல்லாம் காரணம் இன்னதென்றும் வியஷ்டி பாவத்தில் உண்மையாயிருக்கிற மனோபாவமெல்லாம் சமஷ்டி பாவத்திலும் உண்மையாகவே நடந்து வருகிறதென்றும் "இச்சா சக்தி" (இஷ்ட சித்தி) ("the power to will") பலமே யெல்லா நன்மைக்கும் தீமைக்கும் காரணமா யிருக்கிறதென்றும தெளிவாய்க் கூறி யிருக்கிறார்.

"மண்கொட்டு, குந்தாலி, கடப்பாரை இவை யெல்லாம் வலிமைக்குப் பேர் போனவை: இவை யெல்லாவற்றிலும் வலிது இஷ்டம். இந்த இஷ்டம் தானே ஈசன் அருள் ஆகும்" என்று திருமூலர் சொல்லியிருக்கிறார். 'இஷ்ட சித்தியானது' (the power to will) சித்த விருத்தி ரூபமான ஆசையை அடக்கியாளுவதினாலும் ஈசுவரோபாசனையினாலும் பெறக்கூடியதோர் அற்புத சக்தி. இஃதுடன் 'அகத்தூய்மை' என்னும் ஹிருதய சுத்தியும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்து விளைவது நிச்சயம். அகத்தூய்மை, ஜீவகாருண்யத்தினாலும் பரோபகார சிந்தை முதிர்வினாலுமே சித்திக்கத்தக்கது. சித்தவிருத்தி நிரோதனமாகிய 'ஆசையை அடக்கியாளல்' யோகஸித்திகளைப் பெற விரும்புகிறவர்களால் சாத்தியமாய் சாதிக்கப்பெறலாம். ஆனால் அந்த 'ஸித்தி சாதனங்களை' அவர்கள் நல்வழியில் உபயோகிப்பார்களோ தீவழியில் உபயோகிப்பார்களோ அது அவர்களுடைய 'ஹிருதய சுத்தி'யைப் பொறுத்தது. இராவணன் இஷ்ட சித்தி பெற்று திரிலோகாதிபதியாக ஆண்டான். ஹிருதயசுத்தி யில்லாமையினால் தீவழிச் சென்று அழிந்தான்.

இராமர்க்கு 'ஹிருதய சுத்தி' அவருடைய அவதார விசேஷத்தால் ஸ்வபாவமாகவே (அதாவது, பிறவிக்குணமாக) அமைந்திருந்ததினால் அவர் தம்முடைய அபார சக்தியை நல்வழியிலே உபயோகித்தார்.

உலகத்திலுள்ள சண்டை சச்சரவுகளுக்கெல்லாம் காரணமென்ன? 'மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை' யென்று பொதுவியல் கொண்டு வகுக்கப்பட்ட மூன்று ஆசையே எல்லாச் சண்டை சச்சரவுகளுக்கும் மூலகாரணமாம்.

மண்ணாசை யென்பதில் இராஜ்யத்தை யபகரித்தலும் வேறு தேசங்களில் குடியேறி அந்நாடுகளைக் கைப்பற்றுதலும் அடங்கும். பெண்ணாசை யென்பதில் காமம் வெகுளி யிவற்றால் நேரும் பாதகங்களெல்லாம் அடங்கும். பொன்னாசை யென்பதில் வியாபார வர்த்தகாதி லோப மோக மத மாச்சரியாதி குணங்களால் உண்டாகும் பாதகங்களெல்லாம் அடங்கும்.

வியஷ்டி பாவத்தில் பிரதிநபர்களுள் உண்டாகும் சண்டை சச்சரவுகளெல்லாம் இந்த மூன்றுவித ஆசைகளை அடக்கியாளாமையினால் உண்டாவது போலவே சமஷ்டி பாவத்திலும் அதே காரணம் பற்றி ஜாதி, மத, தேச

த்தார்க்குள் நடக்கும் யுத்தங்களும் சண்டைகளும் உண்டாகின்றன.

ஆசையை அடக்கி யாளவேண்டுமென்று ஒவ்வொரு உண்மையான மதமும் போதிக்கிறது. ஆசையை யடக்கலே 'தவம்' ஆகும். தவத்தின் பலனால் உண்டாவது 'இஷ்டசித்தி' (the power to will). இந்த 'இஷ்டசித்தி'யைத்தானே 'யோகசித்தி' யென்றும் சொல்லுவர் மேலோர். இஷ்ட சித்தி ஈசுவரானுக்ரகத்தினாலே பெறற்பாலதாயினும், பத்மாசுரன் பாணாசுரன், இராவணேசுவரன் போன்ற அசுரசுபாவம் (materialistic tendencies) உள்ளவர்கள் தபஸிருந்து ஈசுவரானுக்ரகத்தால் இஷ்டசித்தி வரன்பெற்று அதை ஈசுவரதர்மத்துக்கு விரோதமாகப் பிரயோகித்திருக்கிறார்கள். இதற்குத்தான் 'துர்வினியோகம்' என்று சொல்கிறது. இராவணேசுவரன் முதலான அசுரசுபாவமுள்ளவர்கள் 'இஷ்டசித்தி' யைப்பெற்று துர்வினியோகப் படுத்தினதுபோல, 'டியூடன்' ஜாதியார்களான ஜெர்மானியர் ('ப்ரஷ்யா' தேசத்தார் பிரதானஸ்தர்) 'இஷ்டசித்தியின்' மஹிமையையுணர்ந்து அதைக் கைப்பற்ற வேண்டிச்செய்த முயற்சியால் அசுரபாவமிகுந்துள்ளவர்களாய்த்தானே இஷ்டசித்தி சாதனங்களைக் கையாண்டு ஒரு விதத்தில் சாத்தியங் கண்டுவிட்டார்கள். "தேளுக்கு மணியங்கொடுத்தால் நிமிஷத்துக்கொருதரம் கொட்டும்" என்கிற பழமொழிப்படி அவர்களுக்கு இஷ்டசித்தி சாதனங்கள் அமைந்தது எல்லாரையும் தங்கள் இஷ்டத்துக்குட் பட்டவர்களாகச் செய்துக்கொள்ள வேண்டுமென்கிற துராசையில்முடிந்து அதுகாரணமாக இப்பொழுதுண்டாயிருக்கும் 'பாரஹதப்போர்' நேர்ந்திருக்கிறது என்பது அவருடைய தீர்மானம். இது உண்மைக்கு ஒத்ததாயிருக்கிறதென்பது நம்முடைய அபிப்பிராயம். ஆகையால் அவருடைய அபிப்பிராயத்தை நம்மவர்கள் ஆராய்ந்துணர்ந்தறியவேண்டி இந்த யுத்த விஷயமாய் அவர் பொதுவிற் சொல்லியிருப்பதை முதற் பக்கத்திலும், சிறப்பிலக்கணம் தழுவிச் சொல்லியிருப்பதை 2-வது பக்கத்திலும் எடுத்து அச்சிட்டிருக்கிறோம்.

எல்லா ஆசையிலும் இஷ்டசித்தி யாசை பெரிது. அஹத்தூய்மை சித்தியாமல் இந்த எண்ணம் நிறைவேறப்பெறுகிறவர்கள் 'குரங்கின் கையில் கொள்ளிக்கட்டையைக் கொடுத்ததுபோல்' எல்லாருக்கும் தங்களுக்கும் ஆபத்து விளைப்பவர்களாவார்கள். ஆகையால்தான் 'இஷ்சித்தி' கைவந்தவர்களான சித்தர்கள் தனக்கென்று ஒன்றும் செய்வதில்லை. 'உருவிலாகும் விருத்தியெல்லாம் உலகத்தோர்க்கே' யென்றபடி, அவர்கள் பரோபகார சிந்தை மேற்கொண்டு ஈசுவராஞ்ஞையை ஒட்டியே நடப்பார்கள். இதைக்குறிக்கவே "சித்தன்போக்கு சிவன்போக்கு" என்கிற பழமொழி நமக்குள் வழக்கத்தில் வந்திருக்கிறது.

AN APPEAL TO OUR READERS.

விவேகசிந்தாமணியை வாசிப்போருக்கு ஒரு விண்ணப்பம்.

சென்ற சஞ்சிகையில் "நாட்டுப்புறத்தார்க்குபயோகமான வித்யாசீர்திருத்தம்" என்னும் தலைப்பின் கீழ் நமக்குத்தோன்றிய முக்கியமான சிலவிஷயங்களையும் அபிப்பிராயங்களையும் வெளியிட்டெழுதி யிருந்ததோடு, அதே விஷயமாய் 'மதராஸ்மெயில்' பத்திரிகைக்கும், சென்னை 'ஹிந்து' பத்திரிகைக்கும் நமது அபிப்பிராயங்களைக் குறிப்பிட்டு இரண்டு கடிதங்கள் எழுதியிருந்தோம். அன்றி 1913-ம் வருஷத்தில் இது விஷயமாய் எழுதியிருந்த விஷயங்களையும் சேர்த்தச்சிட்டு 1898-ம் வருஷம் நாம் சாங்கோபாங்கமாய் வெளியிட்டெழுதிய வியாஸங்களுக்கு முகவுரையாக மெயில் பத்திராசிரியர் மிஸ்டர் ஹென்றிபீசம் அவர்கள் எழுதியிருந்த அபிப்பிராயத்தையும், பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜாயிருந்த கனம மிஸ்டர் மஹாதேவ கோவிந்த ரானடே அவர்கள் நமக்கு எழுதியிருந்த கடிதத்திலடங்கிய அபிப்பிராயத்தையும் அச்சிட்டு பிரதமவித்யாசிக்ஷையில் அக்குஸா, அதிகாரம், சிரத்தை உள்ள எல்லாருக்கும் அவரவர்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து ஒரு கடிதமும் எழுதியனுப்பியிருக்கிறோம். பாலசிக்ஷை செய்யும் உபாத்தியாயர்களும் அதில் சிரத்தையுள்ள பெற்றோர்களும்கூட அவர்கள் அபிப்பிராயத்தை எழுதியனுப்பினால் பாலபோத சிக்ஷை சம்பந்தமான 'எடியுகேஷனல் கமிட்டி' யென்னும் வித்யா சங்கத்தார் அவர்களுக்கு நன்றி யுடையவர்களாயிருப்பார்களென்பதை இது மூலமாய் தெரிவித்துக்கொள்கிறோம்.

THE NATURE AND METHOD OF THE PRESENT WAR.

"The War has been termed a "War of attrition." As such it has been sharply distinguished from all previous wars. The distinction is incorrect. Many wars of the past have been wars of attrition. The distinction is not in the method but in the thing "attrited." (Attrition—wearingdown by constant friction or rubbings). In the bulk of previous compaigns the thing 'attrited' has been the Army. Armies being defeated or captured no trained military force remains to resist the invader. Then the beaten ruler has capitulated. To-day "attrition" is not of armies but of nations: for the army and the nation are indistinguishable. And if the war is fought to a finish, not only the army, but a good part of the nation of the defeated Power will have ceased to exist.

"You can trace through history the passing of war from the manœuvering and skilled manipulations of trained armies, to this brutal slaughter, which may indeed prove the end of war, by war itself encompassing its own destruction.

"That is why the old strategy and tactic have ceased to exist; even the weapons of war are changing. You pound to pieces the sector of a line five hundred miles in length with high explosive shell. You don't aim especially at trench, artillery or enemies' 'detected presence.' You must deluge that sector with shell until you have blown the whole landscape to pieces; villages, railways, churches, forests, ploughed land and the remains of all human beings, vanishing as if ground to pulp by some gigantic mill. Then your men rush in on this scene of cosmic desolation armed with double sharpened knives, weighted sticks, bombs for throwing—and (save for prisoners) kill everything that still moves, concealed in cellars or underground. You have not reached your destination, for behind the sector you have thus converted into ruin and decay lies trench behind trench, and fortification behind fortification. But you bring up your artillery after a time, and perform the same act on another sector. You do not count the yards of the enemies' ground gained. You count the numbers of the enemies' soldiers killed. That is "attrition." It is a task utterly deficient in the ancient glories and intelligences of war. But when you have finished,—and sooner or later you must finish—you have not only defeated an army. You have—for a generation at least—almost destroyed a nation."—*The Nation.*

இப்பொழுது நடக்கும் யுத்தத்தின் இயல்பும் முறையும்.

NATURE OF THF WAR: "ATTRITION,"

போரியில்: "தேய்பிறை வழக்குரை"—'பார'தப்போர்.'

இப்பொழுது சென்ற 15-மாதங்களுக்கு மேலாக நடந்துவரும் மஹாயுத்தத்தை "பாரஹதப்போர்"—'பார'தப்போர்' என்று நாம் குறிப்பிட்டுரைத்தோம். அந்தப் போர் அதற்கு இயல்பில் பொருந்தியதாக விருக்கிறது. இந்த யுத்தத்தை "War of Attrition" "பார'தப்போர்" என்று ஐரோப்பியரும் சொல்லிவருகிறார்கள்.

"SPIRITUAL IS GREATER THAN MATERIAL FORCE."

"எறும்பூரக் கல்லுந் தேயும்."

"எறும்பூரக் கல்லும் தேயும்" என்கிற பழமொழி கேட்டிருக்கிறீர்களே. அதன் அர்த்தம் என்ன? எறும்பு பார்வையிற் சிறியதும் அற்பமாய் நினைக்கக்கூடியதுமான ஜந்து வாயினும் அதன் சுறுசுறுப்பும் விடாமுயற்சியும் வியக்கற் பாலதாயிருக்கிறது. "கல்லும்" என்று சொன்னதனால், எறும்போடு ஒப்பிட்டுப் பார்க்கில் கல்லின் உறுதியும், வலிமையும், கனமும், உருவமும் மிகப் பெரிதாக விருந்தாலும், அற்பஜந்துவாகிய எறும்பு விடாமல் ஊறுவதினால் அதுவும் தேய்ந்துபோம் என்று வற்புறுத்திக் கூறினதாகிறது. இந்த உண்மையை உள்ளபடி உணர வேண்டுமானால் இந்த உவமானத்திலிருந்து உவமேயத்தின் தன்மையை கிரஹித்து உட்கொள்ள வேண்டும். எறும்பு உருவத்திற் சிறியதாயினும் அறிவுள்ள ஜந்து, அதாவது ஜீவன். கல் உருவத்திற் பெரியதாயினும் அறிவில்லாத ஜடவஸ்து. ஜடசக்தி பெரிதாகத் தோன்றினும் ஜீவசக்தியினால் அது தேய்வுறும். இதையே "Spiritual is greater than material force" என்று எமர்ஸன் சொல்லியிருக்கிறார்.

ஜீவசக்தி ஜடசக்தியைவிட ஏன் பெரிதென்று சொல்லவேண்டும்? என்று கேட்கில், அதற்குக் காரணம் இயல்பினால் தானே விளங்கும். ஜீவன் வளர்பிறை வர்க்கத்தைச் சேர்ந்தது. அதற்கு அழிவில்லை. அப்படியென்றால் ஜீவனை உபாதியாகக்கொண்ட சித்சக்திக்கு (அறிவுக்கு) அழிவில்லை: யென்று அர்த்தம். ஜடசக்தியோ அழிவுள்ளது. அழிவில்லாத தொன்று அழிவுள்ள தொன்றைவிடப் பெரிதுதானே. அஃதேபோல் தேஹம் அழிவுள்ளது; ஜீவன் அழிவில்லாதது. ஆதலால் தேஹத்தைவிட ஜீவன் பெரியது. சுருதியும் (வேதமும்) தேஹத்தை தேவாலயமாகவும் அதில் வசிக்கும் 'கேவல சீவனை' சிவமாகவும் சொல்லப்படுகிறதென்று முறையிடுகிறது.

"ATTRITION"

"தேய்பிறை வழக்குரை"

"Attrition" (அட்ரிஷன்) என்கிற பதத்துக்கு அர்த்தம் என்னவென்றால் "எறும்பூரக் கல்லும் தேயும்" என்கிற தர்மத்தையொட்டித் தேய்பிறை வர்க்கத்தைச் சேர்ந்த தொன்றைத் தேய்ந்து அழிந்துபோகச் செய்தலுக்குச் சொல்கிறது. இதற்குச் சுருக்கமாய் "தேய்பிறை வழக்குரை" யென்று சொல்லலாம். "War of Attrition" என்பதைத் "தேய்பிறை யுத்தம்" என்று தமிழ்ப் படுத்தலாம். அதாவது சண்டை போடுகிற இருதரப்பாரில் ஒருவரோ இருவருமோ தேய்பிறைச் சந்திரனைப்போல் தேய்ந்து அவர்களுடைய அழியாத ஆத்மா (அறிவு) ஆகிய ஒன்றுமட்டும் மிஞ்சச் சண்டை யொழிவதாம். இதைத்தான் உருவகமாகப் "பாரதப்போர்" என்று சொன்னோம். இங்கே நமது புராணகதைகளில் ஒன்று ஏற்ற உதாரணமாக அமைவதால் அதைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்போம்.

THE PARABLE OF THE MOON.

சந்திரன் கதை: (உவமானம்)

முன்னொருகால் சந்திரன் (மனதிற்கு அதிஷ்டான தேவதை) வியாழபகவானிடத்தில் ஞானோபதேசம் பெறவேண்டி குருகுலவாசம் செய்து வருகையில் குரு விதித்த சிக்ஷா தீக்ஷைகளில் தேறி குருவினுடைய அனுக்ரகம் பெற்று ஞானதீக்ஷை பெறாமல், தானாக மிஞ்சித் தாரகயோகத்தால் ஞானசாதனம் தேடி ஆத்மலாபம் (அழியாத பெறற்கரும் பேரின்பசுகம்) பெற யத்தனித்தான். ஹிருதய சுத்தியின்றி அழியாப்பேறு (ஆத்மலாபம்) பெற்றால் அது இராவணாதி அசுரயோகிகள் விஷயத்தில் நேர்ந்ததுபோல் ஆபத்து விளைப்பதாய் முடியுமாதலால், முறைதப்பி குருவருள் பெறுமுன் ஆத்மலாபம் தேடிய குற்றத்திற்காக வியாழபகவான் சந்திரனை அவன் கலைகள் தேய்ந்துபோகச் சாபமிட்டனுப்பிவிட்டார். அந்தச் சாபம் பலிக்கவே சந்திரனுக்குள்ள கலைகளெல்லாம் தினம் ஒன்றாகத் தேய்ந்துவர அவன் ஒளியிழந்து அந்தகாரத்தில் மூழ்க விருந்தான். அச்சமயம் அவன் தனது குற்றத்தை நினைந்து மனமுருகிக் கருணாநிதியாகிய கடவுளைக் காத்தருளவேண்டுமென்று எஞ்சிநின்ற ஆத்மகலை (16-வது கலை) ஒன்றினால் மட்டும் பக்தி பூர்வமாய் தியானிக்க, ஏழைக்கிரங்கியாகிய பகவான் அவனுடைய தீனஸ்திதியைக் கண்டு எஞ்சிநின்ற ஒரு கலையையும் அவருடைய திருமுடியில் புனைந்து இனித் தேய்ந்த கலைகளெல்லாம் தினம் ஒன்றாக வளருவதாகவென்று வரமளித்தார். சந்திரனுக்கு துர்ப்புத்தி யொழிந்து சற்புத்தி யுண்டாக அவன் கலைகளும் தினமொன்றாக வளர்ந்து பூரணமாயின. ஆகியும் சிஷ்டாசாரத்துக்குக் கேடு வரக்கூடாதென்று வியாழபகவான் இட்ட சாபத்தை முற்றும் மாற்றிவிடாமல், பக்ஷம் மட்டும் அது பலித்தது தான் என்று சொல்லி அவன் கலைகள் தேய்ந்து வளர்ந்து உலகுக்கு நல்வழிகாட்ட ஒருதாரணமாக விருக்கட்டுமென்று அநுக்ரகித்தார்.

[இதைத்தான் பாமரஜனங்கள் சந்திரன் குருபத்னியோடு வியபசரித்தான் என்றும், அதனால் குருவினுடைய சாபம் பெற்று ஈசுவரனருளையால் விமோசனமடைந்தான் என்றும் சொல்லிவருகிறார்கள்].

இந்தப் புராணக் கதையினால் விளங்கும் நீதியென்னவென்றால்: சன்மார்க்கப் பிரவிர்த்தியே வளர்பிறை யொத்து விளங்குமென்றும் துன்மார்க்கப் பிரவிர்த்தி தேய்பிறையொத்து அழிவுறு மென்றும் உதாரணங்கொண்டு போதித்ததாக ஊகித்துணரத் தெரியவரும். இதை நம்மவர்களில் மேலோர் "தர்மம் தலைகாக்கும்" என்றும் "அதர்மம் அழிவுறும்" என்றும் முதுமொழியாக வெடுத்தோதியிருக்கிறார்கள்.

'RIGHTEOUSNESS WILL TRIUMPH IN THE END.'

"தர்மம் தலைகாக்கும்"

"தர்மம் தலைகாக்கும்" என்றால் என்ன? 'தர்மம்' என்பது இயற்கைவிரோதமில்லாத கர்மப் பிரவிருத்தியைச் சுட்டிக் காட்டிநிற்க, 'தலை" என்பது சந்திரனுடைய "16-வது, கலைக்கு" ஒப்பான ஆத்ம சூக்ஷமத்தைக் குறிப்பாயுணர்த்திநிற்கும். "எண்சாணுடம்புக்குச் சிரசே பிரதானம்." அதுபோல தத்துவங்களினெல்லாம் மேலானது பரதத்துவம். அதுதான் ஜீவனுடைய அழியாத கலை. தேஹமுள்ளமட்டும் கர்மத்தைச் செய்யாமலிருப்பது அசாத்தியமாதலால், தர்மவழி பற்றிக் கர்மத்தைச் செய்யவேண்டும். தர்மங்களினெல்லாம் மேலானது "அஹிம்சை"— பிறருக்குத் துன்பம் விளைக்காமை. பிறருக்குத் துன்பம் விளைக்காமலிருப்பது எப்பொழுது சாத்தியம்? ஜீவகாருண்யத்தால் எல்லாந் தானாக உணரும்போதுதான் சாத்தியம். எல்லாந்தானாக வுணரும் உணர்ச்சிவந்தபொழுது இந்த எண்சாணுடலே "நான்" என்கிற அறியாமையால் வந்த உணர்ச்சி தேய்ந்து நசித்துப்போம். இந்த 'தேஹம் நான்' என்கிற பாவம் நசித்தால் 'எல்லாம் நான்' என்கிற பாவம் உதித்து வளர்பிறைச்சந்திரனைப்போல் வளரும். அதற்குத்தான் ஸம்ஸ்கிருதத்தில் "விருத்தி ஞானம்" என்று சொல்கிறது. அதாவது, மேன்மேலும் விசாலித்துப்பெருகும் அறிவு. இந்த அறிவு பெற்றவர்களே அரசியல் தர்மமுணரத்தக்கவர். அவர்கள் ராஜ்யபாரமே "ராமராஜ்யம்" என்னும் சிறப்புப் பெயர் பொருந்தப் பெறும். மற்றப்படி அஹம்பாவச் செருக்கால் "புத்திவியபசாரதோஷம்" நீங்காமல் "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்று முரட்டு பலத்தால் இராவணாதிகளைப்போல் உலகைவென்று ராஜ்யபாரம் செய்வோர், எப்படியும் அதர்மவழியிலிறங்கி அழிவுறுவார்களென்பது நிச்சயம். ஆகையால் அவர்கள் ராஜ்யம்தானே "இராவணராஜ்யம்" என்று சொல்லப்படும். இப்பொழுது நடக்கும் சண்டையினால் "இக்கலியுகத்தில் இராமராஜ்யம் ஸ்திரமா? இராவணராஜ்யம் ஸ்திரமா?" என்றுதிக்கும் சந்தேகம் தீர உலகுக்கு உண்மையுணர்த்தும் காலம்வந்தது போல் தோற்றுகிறது. ஏனெனில் இந்த மஹாயுத்தம் காட்டுத்தீபோல் வரவர எங்கும் தொற்றித்தொடர்ந்து பரவிவருகிறது.

THE SPREADING OF THE CONFLAGRATION OF WAR.

"காட்டுத்தீபோல் பற்றிப் பரவிவரும் யுத்தம்."

ஜெர்மனி - ஆஸ்திரியாவைச் சுற்றியுள்ள தேசங்களெல்லாம் இச்சண்டையில் சம்பந்தப்பட்டுவிட்டன. முதலில் துருக்கி ஜெர்மனியைச் சேர்ந்து கொண்டதனால் ஐரோப்பாவில் நடந்த யுத்தம் ஆசியா கண்டத்திலும் பரவநேரிட்டு "ஆசியாமைனர்" (Asia-Minor) என்னும் பாகமும் போர்க்களமாக மாறியது. அங்கே நேர்ந்த சண்டைமுடியுமுன்னமேதானே தெற்கே இத்தலிக்கும் ஜெர்மனி-ஆஸ்திரியாவுக்கும் சண்டை நேரிட்டு விட்டது. இப்பொழுது "பால்கன்" தீபகர்ப்பத்திலுள்ள நாடுகளில் ஒன்றான பல்கேரியா ஜெர்மனியோடு சேர்ந்துகொண்டு "ஸெர்பியா" நாட்டை யெதிர்க்கத் தொடங்கியிருக்கிறது. இதனால் யுத்தகளம் ஐரோப்பாவிலிருந்து ஆசியாகண்டத்துக்கும் எகிப்துக்கும் பரவும்போலிருகிறதென்கிறார்கள். ஸெர்பியாதோற்றுபோனால் அந்நாட்டுவழிஜெர்மனியும்ஆஸ்திரியாவும்

பல்கேரியாவும் அவர்கள் சைனியங்களை துருக்கியின் சைனியங்களோடு சேர்த்துக்கொண்டு எகிப்து நாட்டையும் மேலக் கோடியிலுள்ள ஆசியாவின் முக்கிய பாகமாகிய 'டைக்ரிஸ்' நதி தீரத்தையும் (Tigris Valley) கைப்பற்றிக் கொண்டு அங்கிருந்து சண்டையை மேன்மேலும் கிழக்குநோக்கிவரச் செலுத்துவார்கள் போலும் தோன்றுகின்றது. ஆனால் அவர்கள் ஜயித்துவிடுவது சுலபமென்று சொல்வதற்கில்லாமலிருக்கிறது.

'WONT-LEAVE' *vs.* 'WONT-GIVE'

"விடாமுண்டன் கொடாமுண்டன்"

"விடாமுண்டன் கொடாமுண்டன்கதையாக" இருதரத்தாரும் முனைந்து சண்டை போட்டு வருகிறார்கள். சண்டையென்றால் முன்காலத்துச் சண்டைகளைப்போல் இரண்டு சைனியங்களும் சண்டைபோட்டு மண்டையையுடைத்துக்கொள்ள சண்டையில் சம்பந்தப்படாத ஜனங்கள் "இராமன் ஆண்டாலென்ன! இராவணனாண்டாலென்ன!" என்று அவர்கள் பாட்டைப்பார்த்துக்கொண்டு காலத்தைத் தள்ளிவந்தார்களென்று சொல்வதற்கில்லை.

THE METHOD OF WAR.

இச்சண்டையின் முறை.

இப்பொழுது நடக்கும் சண்டையின் முறை அதன் இயல்புக்குத் தக்கப்படி மாறுபட்டிருக்கின்றது. முன் சைனிய பலத்தைக்கொண்டு மட்டும் அரசர்கள் சண்டை செய்து வந்தார்கள். ஆகையால் ஒரு தரப்புச் சைனியம் முறியடிக்கப்பட்டால் அந்தப்பக்கத்து அரசன் கீழ்ப்படிந்து எதிரிக்கு உள்பட்டவனாகி வந்தான். இப்பொழுது தேசமெல்லாம் சைனியமாயிருக்கிறது. அதாவது சண்டைசெய்யும் வயதுள்ளவர்களெல்லாம் இராணுவ சேவகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் பற்றி இராணுவத்துக்கும் தேசப்பிரஜைகளுக்கும் வித்தியாசமின்றிப்போய்விட்டது. இது காரணத்தால் இச்சண்டையை முடிவுற நடத்தவேண்டுமென்றால், சண்டைபோடுகிற இருதரப்பாரில் ஒரு தரப்பாரோ இருதரப்பாருமோ அழிந்து நாசமானால்தான் சண்டை முடியும் போலிருக்கிறது. அது எப்படியென்றால்:—

500-மைல் விஸ்தீரணமுள்ள சண்டைமுகம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இவ்வளவு தூரத்துக்கு இரு தரப்பாரும் அங்கங்கேயெதிர்த்து நின்று போர்புரிந்து வருகிறார்கள். எப்படி போர் புரிகிறது? என்று கேட்டால்: அந்த விநோத முறையைச் சொல்லக்கேளுங்கள்:

"COSMIC DESOLATION"

"பிரளயகாலப் பெருவெளி."

இந்த 500-மைல்தூரமுள்ள சண்டைமுகத்தில் ஒரு பாகத்தையெடுத்துக்கொண்டு அங்கேயுள்ள நாடு நகர் கிராமம் கோயில் காடு உழுது பயிர்செய்த நிலம் முதல் எல்லாம் பாழாகும்படி வெடிகுண்டுகளைப் போட்டுத் தகர்த்து நிர்த்தூளி செய்து விடுகிறார்கள். பிரளயகாலப் பெருவெளிபோல் இப்படியாக்கப்பட்ட பொட்டை வெளியில் இராணுவங்களைப் புகவிட்டு அங்கே மிச்சம் மிகுதியுள்ளவைகள் ஆடோ, மாடோ, குதிரையோ, ஆணோ, பெண்ணோ, குழந்தையோ வங்குவளைகளில் எங்கேயிருந்து எது நகர்ந்தாலும் அவற்றைக் கொன்று நாசம் செய்துவிடுகிறார்கள். கைதிகளாகப் பிடித்தவர்களை மட்டும் கொல்லுவதில்லை. இவ்வளவு நிர்த்தூளிசெய்தும் காரியம் ஆனபாடில்லை. ஏனெனில் பாழாக்கப்பட்ட இடத்துக்குப்பின்னால் அகழ்கள் பத்தியாய் வெட்டப்பட்டு அவைகளில் சேனைகள் பதுங்கிக் கிடக்கிறார்கள். அவர்களுக்குப் பின் கோட்டைகள் ஒன்றின்பின் ஒன்றாய்க் கோர்வையாகச் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இவைகளை யெல்லாம் பழையபடி நிர்த்தூளி செய்ய வேண்டும். அதற்காகப் பாழ்செய்யப்பட்ட இடத்தில் பீரங்கிப்பட்டாளங்களைக்கொண்டு வந்து பாளையம் போட்டுக் கொண்டு அதற்கப்பாலுள்ள பாகத்தை மறுபடியும் வெடிகுண்டுகளினால் தகர்த்துப் பாழாக்குகிறார்கள்.

இப்படி இருதரத்தாரும் போட்டி போட்டுக்கொண்டு நிர்த்தூளி செய்யத்தலைப்பட்டிருக்கையில் எதிரியினுடைய இடத்தில் எவ்வளவுபற்றிக் கொண்டோம் என்று யாரும் சிந்திப்பதில்லை. கொல்லப்பட்ட இராணுவ வீரர்கள் எத்தனைபேர் என்று மட்டும் கணக்கெடுத்துக் கொள்கிறார்கள். இப்படியாக முன்னணி பின்னணிகள் ஒன்றின்பின் ஒன்றாக முன்னுக்கு வருகின்றன. அவை மடியவும் மூலஸ்தானத்தில் புதிதாகச் சேர்த்துள்ள ராணுவங்கள் தர்பீதுசெய்யப்பட்டு சண்டைமுகம் போகத்தயாராக விருக்கின்றன. இப்படியாக சண்டைபோடத்தக்கவர்களெல்லாரும் மாண்டு மடிந்து மண்ணுக்கிரையாகப் பாக்கியுள்ளவர்கள் குழந்தைகளும் ஸ்திரீகளும் தான் ஆவார்கள்.

இதற்கு முன் சரித்திரத்தில் நடந்திருக்கிற இம்மாதிரி 'பார'தப்போர்" இரண்டு மூன்றில் குழந்தைகளும் ஸ்திரீகளும் மாத்திரமாவது மிஞ்சவிட்டார்கள். இப்பொழுது நடந்து வரும் யுத்தமுறையில் இவர்களும் மிஞ்சுவது யுத்தம் நடந்த இடங்களில் அருமையாகிவிடுமென்று தோன்றுகிறது.

GERMAN MILITARISM *vs.* ALLIES' DETERMINATION.

வல்லடிவழக்குச் சொல்லிடிவழக்குப் போராட்டம்.

இப்படிப்பட்ட சண்டை தொடுத்திருப்பதற்குக்காரணமென்ன வென்று கேட்டால் ஒவ்வொருவரும் எதிரிகள்மேல் பழிசுமத்திப் பேசுகிறார்கள். ஜெர்மானியர் வல்லடி வழக்குத் தொடுக்கிறார்கள். கூட்டாளிகள் உனக்கு [illegible] இளைத்தேனா பார்ப்போம் என்று சொல்[illegible]க்குத் தொடுக்கிறார்கள். இப்படியாக [illegible]தாரும் முனைந்து சண்டை தொடுக்க யுத்தம் காட்டுத்தீபோல் கண்டதை யெல்லாம் பற்றி விழுங்கிக்கொண்டு பரவிவருகிறது. இப்பொழுது 15-மாதங்களுக்கு மேலானாலும் யுத்தம் எப்படிமுடியுமென்று சொல்வது சாத்தியமாயில்லை. பல்கேரிய தேசத்தார் ஜெர்மனியை ஜயிக்கலாமென்று அவர்கள் பக்கம் சேர்ந்து கொண்டதாகச் சொல்கிறார்கள். அவர்கள் எண்ணம் பலிக்குமென்று சொல்வதற்குமில்லை. ஏனெனில் ஜெர்மானியர்கள் ஏராளமாக மனிதர்களையிழந்து வருகிறார்கள். அவர்களுடைய தேசத்து ஆண்மக்களில் அநேகமாய் சண்டைபோடும் திறமையுள்ளவர்களெல்லாம் சைனியத்தில் சேர்ந்திருப்பதோடு 17, 18-வயதுச் சிறுவர்களையும் சண்டையில் பழக்கி வருகிறார்களாம். இது உண்மையாயிருந்தால் இப்படி அவர்கள் தங்கள் தேசப்பிரஜைகள் இரத்தத்தைஆறாகப்பெருகவிட்டு வருவது எத்தனை காலத்திற்கு சாத்தியமாய் வருமோ வென்கிற சங்கை உதிக்கிறது. ஏற்கனவே அவர்கள் படை வலிகுன்றியிருக்கிறதாகச் சொல்கிறார்கள் சிலர். ஆயினும் அவர்கள் யந்திர தந்திர சூக்ஷ்மப்பிரயோகங்களால் எதிரியை மேலெழவிட்டாமல் மடக்கி முடுக்கி வருகிறார்களென்றும் சிலர் சொல்கிறார்கள். உண்மையெப்படியோ பகவானுக்குத் தான் தெரியும்.

CARRYING THE WAR TO A FINISH.

'உண்டு இல்லை யென்று பார்க்கும் முடிவு.'

உண்மையெப்படியாயினும் இந்த நாசகாலப் போர் எப்படியும் ஒரு முடிவுக்கு வந்தே தீரவேண்டும். அப்பொழுது இச்சண்டையில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாரும் தேய்பிறைச் சந்திரனைப்போல் ஒளிமங்கி இருள்மண்டி வலி குறைந்து நிற்பார்கள் என்பது திண்ணம். ஆனால் யார் முற்றும் தேய்ந்தொழிவார்களென்றுசொல்லவாவது ஊகிக்கவாவது இன்னம் காலம் முந்தவில்லையென்று தெரிகிறது. உண்டு இல்லையென்று பார்த்து விடுகிறதொன்றே முடிவாகுமென்று இருதரத்தாரும் முனைந்து சண்டைசெய்து வருகிறார்களென்பது மட்டும் ஸ்பஷ்டமாயிருக்கிறது. 'எல்லாம் வல்ல கடவுள் எவ்வழிவிடுவரோ! அவர் எவ்வழி விட்டாலும் அதுவே நல்வழி' யென்று நம்பி தர்மத்தைக் கைவிடா திருப்பவர்கள் எப்படியும் ஜயிப்பார்களென்று மட்டும் நாம் உறுதியாய்ச் சொல்லக் கூடியதாயிருக்கிறது. மேற்றிசை வித்வத்ஜனங்கள் விற்பன்னர்களுடைய அபிப்பிராயமும் இதுவேயாகவிருக்கிறது.

THE BLOCKADE.

மறியல்யுத்தம்.

இப்பொழுது நடந்து வரும் பார'தப்போர் தேய்பிறை வழக்குரைக்கிலக்காக யுத்தம் செய்வோர் ஒருவரை யொருவர் ஒழித்துவிடப் பார்ப்பதாயிருக்கிற தென்று சொன்னோமல்லவா. அப்படி எதிரியைத் தேய்ந்தழிந்து போகச் செய்யும் உபாயங்களில் முக்கியமான தொன்று 'மறியல் யுத்தம்' செய்தல். அப்படியென்றால் என்ன? என்று கேட்கலாம். அவர்களுக்கு விஷயம் விளங்கச் செய்யவேண்டி ஓர் சின்ன உதாரணத்தைச்சொல்லி அதைப் பெரிய உதாரணத்துக்குப் பொருந்தப் பொருத்திக்காட்டுவோம்.

மறியல் சாதனம்.

ஒருவன் மற்றொருவனுக்குக் கடன் கொடுத்துக் கடன்காரன் கொடுத்த கடன் தொகையைக் கடன்பட்டவன் திருப்பிக் கொடாமல் 'சால்ஜாப்புச்' சொல்லி வந்தால் கடன் காரன் கடன்பட்டோன் வாசலில் மறியல் கிடந்து கடன் தொகையை வசூல் செய்கிறவழக்கம் இத்தேசத்தில் பூர்வந்தொட்டு பிரபலமாயிருந்து வந்தது. புதுநாகரிகத்தில் அது போய் கோர்ட்டுக் கிழுக்கிறவழக்கம் ஊர்ஜிதத்துக்கு வந்திருந்தாலும் பழைய ஏற்பாட்டில் சாதனச் சிறப்பு மிகவுண்டு என்று சொல்லத்தடையில்லை.

ராமன் பீமனுக்குக் கடன் கொடுத்தான் என்று வைத்துக்கொள்வோம். பீமன் வலுத்தகையாக விருப்பது கொண்டு ராமனுக்குக் கொடுக்க வேண்டிய கடனைக்கொடாமல் 'சால்ஜாப்பு' † மட்டும் சொல்லி இழுக்கடிக்கிறான். ராமனுக்கு பீமனிடத்தில் நம்பிக்கையுள்ள மட்டும் அவன் சொல்லும் ஜவாபுகளை நம்பிக் காத்துப்பார்க்கிறான். அவனிடத்தில் நம்பிக்கை யில்லாவிட்டால் ஒருநாட் காலமே யெழுந்து பீமன் வீட்டுக்குச்சென்று கடனைக் கேட்கிறான். "ஆகட்டும் தருகிறேன்" என்று அவன் ஜவாபு சொன்னால் "சரி அப்படியே ஆகட்டும் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று வாசலில் உட்கார்ந்து விடுகிறான். பொழுதோ புலர்கிறது. சூரியன் வரவர மேலெழுந்து தன் உக்கிரமான கிரணங்களை வீசுகிறான். ராமன் "ஓடுமீனோட ஒருமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு" என்றபடி வணக்க ஒடுக்கமாய் முகம்வாடி வாசலில் தானே யுட்கார்ந்திருக்கிறான். காலமே மணி 10-ஆகிவிட்டது; ராமன் இன்னும் உட்கார்ந்த விடம் விட்டு எழுந்திருக்கவில்லை. பீமன் வீட்டுக்கு வரத்துப்போக்கா யிருக்கிறவர்கள் அவன் வாடி வதங்கி யுட்கார்ந்திருப்பதைப் பார்த்து "அந்த மனிதனை யேன் அப்படி காக்கப்போட்டிருக்கிறாய், என்ன சமாசாரம்?" என்று பீமனை யோகக்ஷேமம் விசாரிக்கிறார்கள். பீமன் அவர்களுக்கும் ஏதோ ஒரு விதமாக 'சால்ஜாப்பு' சொல்லித் தப்புகிறான். மணி 11-ஆய்விட்டது. 12-ம் ஆய்விட்டது. எல்லாரும் சாப்பிடுகிற சமயம் வந்துவிட்டது. ராமன் மட்டும் பல்லுக்கூட விளக்காமல் அப்படியே உட்கார்ந்துகொண்டிருக்கிறான். அவனிடத்துப் பரிதாபமுற்று, போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லாம் அவனைக்கண்டு என்ன சமாசாரம் என்று கேட்கிறார்கள். அவன் கேட்டவர்களுக்கெல்லாம் தன் கதையை ஒளிக்காமற்சொல்லிவருகிறான், பீமன் 'குட்டு' வெளியாகிவிட்டது. ஊரெல்லாம் அவன் பேச்சே பேச்சாயிருக்கிறது. பீமனுடைய சிநேகிதர்கள் அவன் வீட்டில் நுழைய அஞ்சுகிறார்கள். மற்றவர்கள் அவனைப் பற்றித் தாராளமாய் தங்கள் அபிப்பிராயத்தைத் [illegible]விக்கொண்டு போகிறார்கள். இப்பொழுது ஊரெல்லாம் பீமன் செய்தி பரவிவிட்டது. எல்லாருக்கும் ராமனிடத்தில் ஒருவித பச்சாதாபமும் பீமனிடத்தில் ஒருவித அருவருப்பும் உண்டாய்விட்டது. மத்தியானம் 1-மணி, 2-மணி, 3-மணி யாகிவிட்டது. இன்னும் கேள்விமுறையில்லை 'பாவம் ராமன் பசியினால் களை போட்டுக்கிடக்கிறான்.' பீமன் இன்னும் கொடாமுண்டனாகவே யிருக்கிறான். ராமனும் விடுகிற பேர்வழியாகவில்லை. மாலை 5-மணியாய்விட்டது. 6-மணியும் அடித்துவிட்டது. சந்தியா தேவி திருத்தமிடும் காலம் வந்துவிட்டது. பீமன் உள்ளேயே நாணிக்கொண்டு பதுங்கிக்கிடக்கிறான். ராமன் மூர்ச்சித்து வாசற்படியில் தானே விழுந்து கிடக்கிறான். உள்ளேபோகவோ வழியில்லை. அவனைத் தாண்டிக்கொண்டு போனால் போகலாம். ஆனால் தேவதைகளும் வரம் கிடக்கிறவனைத் தாண்டிக்கொண்டு போகத் துணியார்கள். சந்தியா தேவி உள்ளே நுழைய மாட்டாமல் வெளியில் தானே நின்று மறியல் கிடப்பவனைத் தாண்டிப்போகமாட்டாமல் போய்விடுகிறாள். அவன் வீடு வெறித்துக்கிடக்கிறது. ஊரிலுள்ளார் எல்லாரும் அதைச் செத்த வீடு போல் கருதி விலகிப்போகிறார்கள். உள்ளேயிருக்கிறவர்களுக்கும் அவனைத் தாண்டிக்கொண்டு போகக்கூடவில்லை. தாண்டிச் சென்றால் பிரம்மஹத்தி தோஷம் சம்பவிக்கும். பீமன் தன் வீட்டில் தானே முற்றுகை போடப்பட்டவனாய் விட்டான். ஊராரோடு அவனுக்குப் பேச்சு வார்த்தையில்லை. நெருப்புக்கொடுத்து வாங்குவாரும் இல்லை. இது அவனுக்குப் பெருந் துன்பமாகவிருக்கிறது. எல்லாரும் அவனை நடைப்பிணமாக மதித்து அவனைக் கண்டால் ஓடுகிறார்கள். இந்த ஹிம்சை அவனுக்குப் பொறுக்க முடியவில்லை. கடைசியில் அவனுக்கு மிகவும் வேண்டியவர்கள் சிலர் அவனைச் சமீபித்து வர, அவர்களிடம் செம்பு தவலை பண்டம் பாடிகளை யெல்லாம் அடைமானம் வைத்துக் கடன் தொகையை வாங்கிக் கொடுத்து விடுகிறான். ராமனும் வந்தனத்துடன வாங்கிக்கொண்டு துரும்பாயிளைத்து வீடு போய்ச் சேருகிறான். பீமன் லச்சையினால் மனம் நொந்து இளைத்துக் களைத்து உருமாறிவிடுகிறான். ராமனும் 'தாரணை' [illegible] சிரமத்தினால் உடல் கருகி மனம் சுரு[illegible]வம்பிப்போகிறான். இப்படியாக நடக்[illegible]ம்பிரமத்துக்கு "மறியல் கிடக்கிறது" அல்லது "தாரணை" யென்று பேர்.

மேலே சொன்ன உதாரணத்தில் ராமனைக் கூட்டாளிகளாகவும் பீமனை சண்டைக்காரராகிய ஜெர்மானிய ரினத்தாராகவும் வைத்துக்கொண்டு மறியலை, தேக சிரமம் இவற்றிற்கு பதிலாக படைவலி, களபலி இவற்றை யுத்த சாதனமாக வைத்துக்கொண்டு சிந்தித்துப் பாருங்கள். பீமன்வீடு ஐரோப்பா கண்டத்தின் மத்தியபாகமாகிய ஜெர்மனி, ஆஸ்திரியா ராஜ்யங்களிருக்கும் ஸ்தானமாம். அவர்களுக்கு வெளியில் போக்கு வரத்தில்லாதபடி கடலில் எங்கும் மறியல் போட்டு அவர்களைத் தரையிலும் நாலாபக்கத்திலும் யுத்தம் தொடுத்து நெருக்கிவருகிறார்கள். ஊரார் என்று சொன்னது சண்டையில் சம்பந்தப்படாத இதர தேசத்தார்கள். களபலியென்றது பெல்ஜியம். அத்தேசத்தரசனைக் குடி, படை, நாடு, அரண் என்கிற நாலு அங்கங்களோடு அநியாயமாய்க் களபலி யிட்டுவிட்டார்கள். மற்றொரு பக்கத்தில் ஸெர்பியாவை நசுக்கிவிட வழி தேடிவருகிறார்கள். கூட்டாளிகள் ஜெர்மானியரை இப்படி மறியல் போட்டு அவர்கள் பலம் குன்றித் தேய்ந்து போக அவர்கள் சேனையை ஹதம் செய்துவர, ஜெர்மானியரும் ஆஸ்திரியா தேசத்தாரும் வெறி கொண்டு பக்கத்திலுள்ள தேசங்களைப் பிடித்தமட்டில் துவம்சம் செய்து நிர்த்தூளியாக்கி வருகிறார்கள். மேலும் ஜெர்மானியர் பிரிடிஷார்மீது தீராத கோபங்கொண்டு, பிரிடிஷ் தீவுகளைச் சுற்றி மறியல் போட்டிருப்பதாகச் சொல்லி அவர்கள் கப்பல்களையும் அங்கே வரும் இதர கப்பல்களையும் 'ஸப்மாரின்' கடலில் மூழ்கிச்செல்லும் படகுகளால் உடைத்துத் தகர்த்து நிர்த்தூளிசெய்து வருகிறார்கள்.

ஜெர்மானியர் இப்படி நெருக்கடி செய்யப் பெறவே, அந்த இடுக்கண் பொறுக்கமாட்டாது சீறிச்சினந்து பெல்ஜியம் வழியாக வடகடல் (North Sea) சேர யத்தனித்ததுபோல, ஸெர்பியாவை நசுக்கி அது வழியாக துருக்கியில் பிரவேசித்து பாக்டாட் மார்க்கமாய் ஆசியா கண்டத்தில் தலைகாட்டி ஸூயெஸ் கால்வாயை யடைத்து ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்குமுள்ள வழியில் மறியல் போட்டு பிரிடிஷாருடைய கீழ்நாட்டு ஸ்தலங்களைச் சீர்குலைக்கப்பார்க்கிறார்களாம். அதைத் தடுக்கக் கூட்டாளிகள் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். இந்தப் பிரமாதம் விளைக்கும் யுத்தம் இப்பொழுது பால்கன் தீபகர்ப்பத்தில் (Balkans) நடந்து வருகிறது.

† இது 'சவால்-ஜவாப்பு' என்பதன் திரிபாயிருக்கலாமென்று நினைக்கிறோம். கேட்டால், 'ஆகட்டும் தருகிறேன்' என்று கேட்ட சவாலுக்கு ஜவாபு மட்டும் சொல்லி வருகிறது.

NATURE STUDY.
பிரகிருதி வித்தை.

OBSERVATIONS OF A WALK ON THE BEACH.
கடற்கரை யுலாக்காட்சி.
(A Talk about Jelly-Fish.)

சென்ற வெள்ளிக்கிழமை சாயங்காலம் நானும் என் சிறு தம்பி சாமாவும் கடலோரம்போயிருந்தோம். நான் பட்டணம்வந்து சில வருஷங்களாயிருந்தபோதிலும் சாமா இங்கேவந்து சில நாட்கள்தான் ஆயின. ஆகையாலும் அவன், இதற்குமுன் சமுத்திரத்தையே பார்த்திருந்ததில்லையாதலாலும், அன்று சாயங்காலம் வெகு ஆனந்தமும் ஆச்சரியமும் அடைந்தான். நாங்கள் கடற்கரைக்குப் போகும்போது மணி 6. மேலும் அன்று அமாவாஸையானதால் முன்னிருட்டாகவுமிருந்தது. அன்று வெள்ளிக்கிழமையாதலால் செம்படவர்கள் இருட்டுக்குமுன் வலைகளைக் கரையேற்றி அகப்பட்ட மீன்களை கடைக்கு அனுப்பிவிட்டு கட்டை மரங்களைப் பூஜைசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

அன்று சாயங்காலம் நாங்கள் அலையோரமாக நடந்துகொண்டிருந்தோம். சாமா முதலில் அலையைக்கண்டு பயப்பட்டான். பிறகு பழக்கமாய்விட்டது.

“அண்ணா, எனக்கு அதுக்குள்ளே அலையினிடமிருந்த பயம் போய்விட்டதே; அக்காளுக்கு இன்னம் போகவில்லையே” என்றான்.

“சாண்பிள்ளையாகிலும் ஆண்பிள்ளையல்லவா.” என்றேன்.

சற்று தூரம் நடந்துபோகையில் செம்படவர்கள் வலை கரையேற்றின அதேயிடத்துக்கு வந்தோம். இங்கே அவர்கள் பொறுக்கிப்போன மீன்கள்போக இன்னும் அநேக பூச்சிகளும், கிளிஞ்சல்களும் கிடந்தன. இதில் அலை தாறுக அடித்துக்கொண்டு போன சிறிய பூச்சிகள் போக பெரிதாக சில கிடந்தன. அதில் ஒன்று ஒரு சிறிய ஆமையவ்வளவு பெரிது இருந்தது. ஆனால் ஆமையைப்போல் கடினமாகவும், கறுப்பாகவும் இருக்கவில்லை.

“அண்ணா, இதென்ன சமுத்திரப்பனை நொங்கோ? இவ்வளவு பெரிதாயிருக்கிறதே” என்றான் அதைப்பார்த்ததும் சாமா.

“ஐயோ, அதையெடுத்துத் தின்றுவிடாதே அது ஒருவிதப் பூச்சி” என்றேன்.

“என்ன? பூச்சியா, இப்படிப் பளபளவென்று கண்ணாடிபோல் இருக்கிறதே.”

“ஆம், இது பூச்சிதான், இது சமுத்திரத்தில் நீந்திக்கொண்டு நீரிலேயே ஜீவித்து இருக்கிறதினாலும், இதற்கு இதைக்காட்டிலும் ஜாஸ்தி பலமுள்ள சத்துருக்கள் அநேகமிருக்கிறதினாலும், அவைகளின் கண்ணுக்கு சுலபமாகத் தெரியாமலிருக்கும்பொருட்டு இந்த மாதிரி தனக்குத் தனிநிறமில்லாமல் சமுத்திர ஜலத்தில் மிதக்கும்போது அந்த ஜலத்தின் நிறத்தையே தன் உடம்பு வழியாகக்காட்டி தண்ணீர்க்கும் தனக்கும் வித்தியாசமில்லாமல் செய்துகொள்ளக் கூடியதாக உண்டாக்கப்பட்டிருக்கிறது.”

சாமா “இவ்வளவு சமத்காரமா!” என்று சொல்லிக்கொண்டு “சற்று இதைப்பார்ப்போம், அண்ணா,” வென்று என்னையும் அழைக்க அதினிடம் நாங்களிருவரும் உட்கார்ந்தோம்.

“அண்ணா, இது பூச்சி யென்கிறீர்களே இதற்கு உயிரிருக்கிறதோ?”

“இப்போ செத்துப்போய்விட்டது. ஏனென்றால் தண்ணீரைவிட்டு வெளியில்வந்து நேரமாய்விட்டதல்லவா.”

“நேரமானால் செத்துப்போய்விடவேணுமா?”

“தண்ணீரில் ஜீவிக்கிற ஜெந்துக்கள் நம்மைப்போல் தரையிலும் ஓடியாடிக்கொண்டிருக்கத் திறமையுள்ளதானால் இங்கேயும் ஆகாரம் கண்டிபிடித்துப் பிழைத்திருக்கும். ஆனால் இது தண்ணீரில் மாத்திரம்தான் ஓடியாடிக்

கொண்டிருக்கக்கூடியது. உன்னை இப்பொழுது இதோ சமுத்திரத்தில் போட்டுவிட்டால் என்னசெய்வாய்?”

சாமா, “சரிதான். இந்த ஜெந்துதான் செத்துப்போய்விட்டதே அதைத் தொடலாமோ?” என்று கேட்டவன் உடனே “தொட்டால்தான் என்ன” என்று அதைக் கையில் எடுத்தான். எடுத்ததும் “ஐயோ!” என்று திடீரென்று கதறிக்கொண்டு அதைத் தொப்பென்று கீழேபோட்டுவிட்டுக் கையைக் கையை உதறினான். அவனைப்பார்த்து நான்,

“என்னடா? ஏனடா அவசரப்பட்டாய்?” என்றதற்கு அவன்,

“இல்லை, அண்ணா, நன்றாய்க் கடித்துவிட்டாப்போலிருந்தது. ஆனால் பாதகமில்லை” யென்று வலதுகையின் மணிக்கட்டின் உள்பக்கத்தை இடது கையால் தேய்த்துக்கொண்டு அண்ணாவைப்பார்த்து பரிதாபப்படத்தக்க மாதிரியாய் “என்ன அண்ணா தேள் கொட்டினாப்போல் இருந்ததே, செத்துப் போச்சென்றீர்களே” என்றான்.

“அவ்வளவு அவசரப்படாமலிருந்தாயானால் நான் அதை யெடுக்கிறமாதிரி சொல்லியிருப்பேன். ஆனால் பரவாயில்லை. இந்த ஜெந்துக்கள் அதன்வாய்ப் பக்கங்களுக்குச் சமீபத்திலெல்லாம் இந்த மாதிரிகொட்டிக்கடுக்கச்செய்யக்கூடிய வெகு சிறிய உறுப்புகளை உடைத்தாயிருக்கின்றன. மனுஷனை உனக்கே இவ்வளவு கடுக்குமானால், இன்னும் வெகு சிறிய ஜெந்துக்களுக்கு எவ்வளவுதான் கடுக்காது. இதின் ஒத்தாசையால்தான் இந்த ஜெந்து தனக்கு இரையாகக்கூடிய சிறிய ஜெந்துக்களைக் கொட்டி அவைகளைக்கொன்றோ [illegible] மூர்ச்சையடையச்செய்தோ தின்னு[illegible].”

“அப்படியானால் இந்த ஜெந்துவுக்கு வாயெங்கேயிருக்கிறது அண்ணா? இதற்கு என்ன பெயர்.”

“இது மேலேபட்டால் கடித்தாப்போல் தினவுகாண்கிறபடியால், இவ்விடத்துச் செம்படவர்கள் இதற்குச் சொறி யென்று பெயரிட்டிருக்கிறார்கள். இங்கிலீஷில் இதற்கு ஜெல்லி-பிஷ் (Jelly-Fish) என்று பெயர். இதில் சில ‘ஜெல்லி பிஷ்’களுக்கு கீழே வயிற்றுப் பக்கத்தில் நடுவில் ஒருவாய் இருக்கும். சிலதுக்கு நடுவிலிருக்கும் வாய் இல்லாமல் மூடப்பட்டு அந்த இடத்திலிருந்து புறப்படும் (tentacles) என்று சொல்லப்படும் மீசை போன்ற உறுப்புகளில் சிறிதுசிறிதாக அநேக ஆயிரம் வாய்த்துவாரங்கள் இருக்கும். இதோ (கையில் ஒன்றைவைத்துக்கொண்டு காட்டி) இந்த ஜெந்துவுக்குப் பின்சொன்ன மாதிரிதான் வாய்கள் இருக்கின்றன.

“சரிதான். இது என்னமாகத் தண்ணீரில் ஓடும் அண்ணா! இதற்குக் காலைக்காணேனே.”

“இதற்குக் கையாவது காலாவது கிடையாது. அதனால்தான் இதைத்தாழ்ந்த ஜெந்துவென்றும், கைகால் உறுப்புகள் உள்ள ஜெந்துக்களை உயர்ந்தவைகளென்றும் சொல்லுகிறார்கள். இதன் மீசைகள் தான் இதற்கு கைகள்போலும். இதற்குக் காலுக்குப்பதிலாக வேலைசெய்யும் இடம் இதோ தெரிகிறதே அதன் விளும்பு இதுதான். இது ஒரு சிறிய குடைபோலிருக்கிறது பார்த்தாயா. இதன் மீசைகளெல்லாம் இந்தக் குடையின் நடுவில் குடைக்காம்புக்குப்பதிலாக இருக்கிறது. ஆனால் வெகு குட்டையாகவிருக்கிறது. இது தன் குடைபோலிருக்கும் உடம்பின் கீழ் வரம்பை வேண்டும்போதெல்லாம் சுருக்குப்பை வாய்போல் சுருக்கக்கூடும். இப்படிச் சுருக்குவதினால், ஆகாசத்தில் பறக்கும பக்ஷி எப்படித் தன் விரித்த சிறகுகளைக் கீழே நறுக்கென்று காற்றைக் கவ்வுவதுபோல் மடக்கி அடித்தவுடன் குப்பென்று சிறிது மேலே கிளம்புகிறதோ அதேமாதிரியாகத் தன் உடம்பையும் தண்ணீரில் கிளம்பச்செய்து கொள்ளக்கூடும். நேரே மேலே கிளம்பவேணுமானால், தன் உடம்பைச் செங்குத்தாக வைத்துக்கொண்டு தண்ணீரை உதைத்துக் கிளம்

பும்; ஒருபக்கமாகப் போகவேணுமானால், சாய்த்துப்பிடித்த குடைபோல் தன் உடம்பைச் சாய்த்து வைத்துக்கொண்டு தண்ணீரை உதைத்துக் கிளம்பும்."

"அண்ணா, இது 'நேரப்போகவேணுமென்றால்,' 'சாய்த்துப்போகவேணுமென்றால்' என்று சொல்லுகிறீர்களே இதற்குக் கண் தெரியுமா? தெரியுமானால் கண் எங்கேயிருக்கிறது?"

"இதற்குக் கண், காலுக்குச் சரியான அதன் விளிம்பிலேயே இருக்கிறது. இதோ பார், சற்று கறுத்த மஞ்சள் நிறமாக புள்ளிகள் தெரிகின்றன, இவை தான் இதன் கண்கள். இதற்கு கண்கள் மாத்திரமல்ல, காதுகளும் இன்னும் தொட்டால் உணரும்படியான உறுப்புகளும் இந்த விளிம்பில் இருக்கிறதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது."

நாங்கள் இப்படியாகப் பேசிக்கொண்டிருந்ததில் பொழுதுபோனது தெரியாமல் இருட்டு அதிகமாய்விட்டது. மேலும் செம்படவர்கள் பூசைக்காக விளக்குகள் ஒருபக்கத்தில் கொளுத்தியிருந்ததால் அந்தப் பிரகாசத்தைப் பார்த்த கண்ணுக்கு மற்ற இருட்டியிருக்கும் பக்கமெல்லாம், இன்னும் மையிருட்டாகவிருந்தது. "இவ்வளவு இருட்டிப்போய் விட்டதே" என்று இருவரும் எழுந்தோம்.

"அண்ணா, இதென்ன சற்றுமுன்னே இந்த அலையெல்லாம் வெள்ளையாகவிருந்தது, இப்போ தங்கமாட்டமாகவிருக்கிறது: ரொம்ப வேடிக்கையாயிருக்கே!" என்றான் சாமா.

"ஏனடா, தங்கமாட்டமாகவா இருக்கிறது அது?"

"ஆமா அண்ணா, பளிச்சு பளிச்சென்று இருக்கு, மின்னினாலிருக்குமே அப்படியிருக்கு."

"வேறே ஒன்றும் நீ பார்த்ததுக்குள்ளே இந்த மாதிரி இல்லையா? அகத்திலே......,' யென்று சொன்னவுடன்,

சாமா "ஆமா, அண்ணா, அகத்திலே அம்மா விளக்கேற்றும்போதெல்லாம் பார்த்திருக்கிறேன். நெருப்புக் குச்சியை இருட்டிலே தேய்த்தால் இப்படித்தான் இதே மாதிரியான வெளிச்சம் தெரிகிறது. இதென்ன அண்ணா?"

"இது 'பாஸ்பரஸ்' phosphorus (அதாவது, தீ யெரி பாஷாணம்) என்று சொல்லப்படும் வஸ்து. எப்பொழுதும் இதைத் தண்ணீர்க்குள்ளேயே வைத்து வைப்பார்கள். வெளியில் எடுத்தாலாவது சூடுபட்டாலாவது வெகு சுளுவில் நெருப்புப் பிடித்துக்கொள்ளும். இதுவும் அந்த (phosphorus) வஸ்துவின் வெளிச்சம்தான்."

"எப்படி! அப்பா! இவ்வளவு phos-phos—அது என்ன அண்ணா?"

"'Phosphorus' நீதான் 3-வது கிளாஸ் வரையில் படித்திருக்கிறாயே. இது சொல்ல வரவில்லையா!"

"இவ்வளவு 'பாஸ்பரஸ்' (phosphorus) கடலில் இருந்தால் மத்தியானம் வெயில் நெருப்பாட்டமா அடிக்கும்போதெல்லாம் திறந்து தானேகிடக்கிறது, தானே நெருப்பு பிடிச்சுக்காதோ?'

"அப்படியில்லை. இந்த phosphorus எல்லாம் அப்படியே கட்டிகட்டியாய் தனியாகக் கிடக்கவில்லை. வெகு சிறிய அணுக்கள் போன்ற அநேக ஜெந்துக்கள் உடம்பில் சேர்ந்திருக்கிறது. இந்தப் பூச்சிகள் இராவேளையில் தான் மேலே மிதந்துவருகின்றன. பகலில் உள்ளே ஆழத்தில் அழுந்தியிருக்கும். இரவிலும் இந்தப் பூச்சிகள் கடலில் எங்கேயும் இருந்தாலும் அலை முதலானதுகளால் [illegible]படும் இடங்களில்தான் இப்படி [illegible]காசமாகத் தெரியும். இதோபார் அலை அடித்துப்போகிற இடத்தை! அலையுடன் மிதந்து வந்த ஜெந்துக்கள் அநேகம் பெரிய குன்றுமணிகளளவு கிடக்கிறதுபார். வா, அதை யெடுத்துப் பார்ப்போம். இதோ பார்த்து

யா, இது எவ்வளவு சிறிதாகவிருக்கிறது. தூரத்திலிருந்து பார்த்ததினாலும், இது அதிக வெளிச்சமுடையதாகையாலும் அத்தனை பெரிதாகத் தெரிந்தது. கையில் எடுத்ததும் எவ்வளவு சிறிதாகவிருக்கிறது! கையில் நெருடினால் அகப்படக்கூடவில்லை. இதைப் பகலில் பார்த்தால் கண்டுபிடிக்கிறது வெகு கஷ்டம். கடல் ஜலத்தை ஒரு வெள்ளை சீசாவில் எடுத்துவைத்துப் பார்த்தால் கஷ்டப்பட்டுக் கண்டுபிடிக்கலாம். அதை நன்றாய்ப் பார்க்கவேணுமானால் பூதக்கண்ணாடியில் வைத்துப் பார்த்தால் செவ்வையாக அதன் உறுப்புகளெல்லாம் தெரியும்."

"அப்படியா! அண்ணா, இதோ இந்த சொறியை—அதென்ன அண்ணா அந்தப் பெயர் நன்றாகவில்லை—அதன் இங்கிலீஷ் பேர் என்ன—ஜெ-ல்-லி-பி-ஷ்—இதைப் பார்த்தீர்களா, இதுவும் பளபளவென்று இருக்கிறது! இதிலும் 'பாஸ்பரஸ்' (phosphorus) இருக்கிறதா?"

"இல்லை. ஆனால் இது இந்த சிறிய phosphorus உள்ள ஜெந்துக்களை சாப்பிடுகிறதினாலும், இந்த ஜெந்துவின் தோல் ஊடே வெளிச்சம் தெரியக்கூடியபடி தெளிவுள்ளதாய் இருக்கிறபடியாலும், உள்ளே சாப்பிட்டிருக்கப்பட்ட சில ஜெந்துக்களின் வெளிச்சம் வெளியிலும் தெரிகிறது. மேலும் இந்த (Jelly-Fish) ஜெந்துவின்மேலேயும் இச்சிறு ஜெந்துக்கள் அநேகம் ஒட்டிக்கொண்டிருக்கலாம்."

சாமா, "தூரத்திலிருந்துபார்த்தால் பளிச்[illegible]று எரியும் ஒரு சிறிய விளக்குப்போல் கா[illegible]போலிருக்கிறது" என்று சொல்லிதான் நாலுபுறமும் பார்த்தான். வெகு இருட்டாகவிருந்தது. செம்படவர் பூஜைசெய்துவிட்டு ஏதோ கத்த ஆரம்பித்துவிட்டார்கள். கடலோரம் காத்துவாங்கவந்தார்கள் ஏற்கனவே தங்கள் வண்டிகளுடன் வீட்டுக்குத் திரும்ப ஆரம்பித்துவிட்டார்கள். சாமாவோ [illegible]யும் அலையையும், அதன் வெளிச்சத்தையும், இந்த Jelly-fishயும் பார்த்துப்பார்த்து மலைத்துக்கொண்டு நின்றான்.

நான் அவன் தோளைத் தடவிக்கொண்டு "அகத்துக்குப் போகவேண்டாமா?" வென்று சொன்னவுடன், சாமா திரும்பி, "எனக்கும் பசிக்கிறது அண்ணா, அம்மா, அக்கா எல்லாரும் காத்துக்கொண்டிருப்பார்களே." என்றான்.

"சரி, இன்றைக்கு இவ்வளவு போதும்; வீட்டுக்குப் போவோம் வா" என, இருவரும் வீட்டுக்குத் திரும்பினோம்,' 'அண்ணா இந்த மாதிரி நாளைக்கும் வருவோமா? இதெல்லாம் ரொம்ப அதிசயமாயிருக்கு அண்ணா!"

"இந்த மாதிரி அதிசயம் சமுத்திரக்கரையொன்றில் தானிருக்கிறதென்றில்லை. எங்கே பார்த்தாலும் இது போன்ற அதிசயங்களிருக்கின்றன. நமக்கு அவைகளைப்பார்க்கத் தெரியாமல் நாய் கபோதிபோல் போகிறோம். எதையும் நன்றாக நோட்டமிட்டுப் பார்க்க அறிந்தவர்களுக்குக் கண்ட விடமெல்லாம் கண்கொள்ளாக் காக்ஷியாகவிருக்கும். ஆகையால் நீ இப்பொழுதே உன்கண்களையும் காதுகளையும் நன்றாக உபயோகிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்."

The "MADRAS MAIL" on RURAL EDUCATION.

"Mr. C. V. Swaminatha Iyer, Editor of the *Vivekachintamani*, has in recent months made his journal the special organ of "The Children's Educational Movement" in the furtherance of which he has been taking a keen interest. In the current issue he has some thoughts and reflections on the reform of rural education, in which a proper system devised to suit the needs of the village ought, to be in his opinion, to be a special feature. He also urges the need for all education in earlier stages being imparted through the indigenous languages, a point of view which has met with the approval of many eminent educational officers and noted publicists in the country. In this laudable and self-imposed task, Mr. Swaminatha Iyer is seeking the co-operation of all well-wishers of the country."—*The Madras Mail of 23rd November* **1915.**

ON THE GREATNESS OF CHASTITY.

கற்பின் மகிமை.

நளாயினி கதை.

‘கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை’ யென்றார் மேலோர். அப்படியென்றால் கணவன் சொல் தவறாமை யென்று அர்த்தம் செய்கிறார் சிலர். ‘சொல்’ என்பது வாக்குக்கே சிறப்புப் பெயர். ‘வாக்குத் தவறாமை’ தானே சொற்றிறம்பாமையாகும். சாவித்திரி ஸத்தியவானை மனதால் வரித்துவிட்டு அவன் அற்ப ஆயுசுள்ளவன் என்று நாரதர் சொல்லக் கேட்டும் தன் ‘வாக்குத் தவறாமை’ யாகிய கற்பின் சிறப்பால் அவனையே மணந்து அவனுயிரைக் காப்பாற்றினாள். இப்படியே தன் வாக்குத் தவறாதவர் இல்லறம் புகுந்தபின் கணவன் சொற்றவறி நடக்கார் என்பது இயல்பினாலே ஏற்பட்டு அமையும். பெண்களுக்குக் கற்பினும் சிறந்த கருமமில்லை; அதைவிட மேலான ஒழுக்கமும், கொடையும், தவமும் குணமுமில்லை. அதுவே ஞானத்தை யளிக்கும். அதுவே கடவுளையும் காட்டிக் கொடுக்கும். உதாரணம் வேண்டில் சிவவாக்கியர் மனைவி தன்னுடைய கற்பின் மஹிமையினால் கொங்கண சித்தருடைய தவச்செருக்கை யடக்கினாளல்லவோ! “கொக்கென்றெண்ணினையோ கொங்கணவா!” என்று அவர் வாக்கு இப்பொழுது ஓர் உசித பழமொழியாக வழங்கி வருகிறதல்லவா!

“கற்பினு மதற்குமேலாங் கருமமு மொழுக்கமில்லை
கற்பினு மதற்குமேலாங் கொடையுநற் றவமுமில்லை
கற்பினு மதற்குமேலாங் குணமுமெய் ஞானமில்லை
கற்பினு மதற்குமேலாங் கடவுளும் யாதுமில்லை.”
“கற்பிற்கு வேறு கருதினு மொன்றுமில்லை
கற்பிற்கு வேறு காரிகை தனக்கொன்றில்லை
கற்பிற்கு வேறு சத்தியங் கீர்த்தியில்லை
கற்பிற்கு வேறு குணமுமே யாதுமில்லை.”

உலகவழக்கில் கடவுளையும் கற்புடைப் பெண்டிரையும் சோதிக்கலாகாது என்று சொல்லுவர். மௌத்கல்ய ருஷி நளமஹாராஜாவின் புத்திரி நளாயினியின் பதிவிரதா லக்ஷணத்தைத் தன் ஞானக்கண்ணால் அறிந்துணர்ந்தும் அவ்வளவு மேலான கற்புநிலை ‘குடத்துவிளக்குப்போல்’ கிரஹஸ்தன் வீடு மட்டில் விளங்கிமங்காது உலகுக்கெல்லாம் ஒளிவிளக்காய் விளங்கச் செய்யவேண்டுமென்று தீர்மானித்து அப்பெண்ணை அரசன்மகள், ‘கிடைக்கரிய வஸ்து’ என்றுன்னி மயங்காமல் தனக்குப் பத்தினியாகவிருக்க பாணிக்கிரகணம் செய்து கொடுக்கவேண்டுமென்று நளமஹாராஜாவை அண்டிக்கேட்டு யாசித்தார். கேட்டார்க்கில்லை யென்னாத அந்த அரசவள்ளலும் அப் பெண்மணியின் சம்மதம் பெற்றீரேல் அப்படியே செய்கிறேன் என்ன, அவரது தவமஹிமையால் அப்பெண்ணின் மனதைக்கவர்ந்து அவள் தன்னாலே வரிக்கப்பெற்று அப்பெண்ணரசைக் கைப்பற்றினார். பிறகு அவர் செய்த பரிசோதனைகளும் அப்பரிசோதனைக்கிளைக்காமல் நாளாயினியின் கற்புநிலை உருக்கினதங்கம் போல் மேன்மேலும் மாற்றேறிப் பிரகாசிக்கவும் கடைசியில் அவர் தபவலியின் தவமஹிமையிலும் அவளது கற்பின் மஹிமையே சிறந்ததென்று உலகறிய ரூபித்துக் காட்டியானபின், அவளுக்குத் தகுந்த புருஷனாயிருந்து இல்லறம் நடத்தியதும் எல்லாரும் கதை கதையாய்ச் சொல்லக் கேட்டிருக்கிறார்கள். ஆயினும் இக்காலத்தில் அப்படிப்பட்ட கதை சொல்லும் பாட்டியார் அதிகமாயில்லாமையால் தற்காலத்தில் பள்ளியிற்படிக்கும் குழந்தைகள் அதை நன்றாகக் கேட்டறிந்திருக்க மாட்டார்கள். அக்கதையை அவர்கள் நன்றாக அறியவேண்டி பெண்கள் நீதிவிளக்கத்திலிருந்து எடுத்து எல்லாரு[illegible] உபயோகமாகும்படி கீழே பிரசுரிக்கி[illegible]

நளாயினி கதை.

நளமகாராஜனுக்கு நளாயினி என்று ஓர் புத்திரி இருந்தாள். அவளுடைய பர்த்தாவாகிய மௌத்கல்யர் மிகுந்த தவசிரேஷ்டர். தனது பத்தினியின் கற்பைச் சோதிக்கும் பொருட்டு தன்னிடத்தில் தன் பத்தினிக்கு வெறுப்புண்டாகும்படி மௌத்கல்யர் விருத்தராயும் குஷ்டரோகத்தால் மிகவும் வருந்துபவராயும் வடிவந்தரித்தனர். நளாயினி தன்பர்த்தா விருத்தரும் வியாதியஸ்தருமாக இருந்தபோதிலும் “கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்” என்ற வாக்கியப்படி தான் கிஞ்சித்தும் மனஞ் சலியாது அவருக்கு வேண்டிய பணிவிடைகளை அதிக அன்புடன் செய்து வந்தாள். நளாயினியின் கற்பை இன்னும் பரிசோதிக்க மௌத்கல்யர் பெருவியாதியினால் அங்கமெல்லாம் குறைந்து அழுகி துர்நாற்றம் வீசும் துர்நீர் சொட்டும்படியான தன்மையை அடைந்தனர். நளாயினி சிறிதும் வெறுப்புறாத தன் கணவனைக் கடவுள் என மதித்து அவர் இஷ்டப்படி அவரை ஒரு கூடையில் வைத்துக்கொண்டு அநேக திவ்ய தீர்த்தங்களுக்குப்போய் அவரை ஸ்நானம் செய்வித்து வந்தாள். இப்படித் தீர்த்தயாத்திரை போகுங்கால் அவள் கற்பை முற்றிலும் பரிசோதிக்க முனிவர் ஒரு தாசியின்மேல் மோகங்கொண்டதாக நடித்தார். இதனாலும் நளாயினி மனங்கோணாது கணவருடைய தாபத்தை நிவர்த்தி செய்வது பத்தினிகளின் கடமையாதலால் தனது முனிவரின் இஷ்டத்தை நிறைவேற்றும் பொருட்டு பிரதி தினமும் விடியற்காலையில் அத்தாசி வீட்டிற்குச் சென்று சாணம் தெளித்து அழகிய கோலங்களைப் போட்டு வந்தாள். பொழுது விடிந்த பிறகு அந்தத் தாசி விழித்தெழுந்து சாணம் தெளிக்கக் கத[illegible]த் திறந்து வெளியே வந்தபோது பிரதி[illegible]மும் சாணம் தெளித்து விசித்திர கோலங்[illegible]ட்டு இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்து இப்படி யார் செய்வது என்று தெரியவேண்டிய ஆவலுடையவளாகி ஒருநாள் நித்திரை செய்யாமலே மறைவிடமாக ஒளிந்து காத்துக்கொண்டிருந்தாள். நளாயினி அதிகாலையில் சாணம் தெளித்துக் கோலமிட நேரில் கண்டு அந்த தாசி “அம்மா! நீர் யார்?. ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்?” என்று கேட்க நளாயினி தன் பர்த்தாவின் கருத்தைத் தெரிவிக்க, தாசியும் இதற்குச் சம்மதிக்க, நளாயினி தன் பர்த்தாவைத் தாசியிடத்தில் சேர்ப்பிக்க, அவர் தனது நிஜ ரூபத்தை அத்தாசிக்குத் தெரிவித்து, தனது இஷ்டத்தை நிறைவேற்றினவராக நடித்தனர்.

பின்பு ஒருநாள் நளாயினி தனது முனிவரைச் சுமந்துகொண்டு போகும் வழியில் தம்பிவாலில் குச்சு சொருகின குற்றத்திற்காக கழுவேற்றப்பட்டிருந்த ஆணிமாண்டவ்யரின் கால் இவள் தலைக்கூடையில் தட்ட, அவருக்கு மிகுந்த வலி உண்டாயிற்று. அப்பொழுது மாண்டவ்யர் வலியின் உபத்திரவத்தால் “இன்று சூர்யோதயம் ஆனதும் நீ மாங்கல்யம் இழக்கக்கடவாய்” என்று சபித்தார். நளாயினி மௌத்கல்யரின் பிரிவைச் சகியாதவளாய் “சூர்யோதயம் ஆகாதிருக்கவேண்டும்” என்று பிரதி சாபம் கூறினாள். இதனால் எட்டுநாள் சூர்யோதயமாகாமலே யிருக்க உலகம் தவிக்கத்தொடங்கிற்று. தேவர்களின் வேண்டுகோளால் மாண்டவ்ய ரிஷி, தன் சாபத்தை மாற்ற, நளாயினியும் தன் சாபத்தை நிவர்த்திக்க இடம் கொடுத்தாள். பிறகு சூர்யோதயமாகி யாவரும் க்ஷேமமடைந்தனர். உடனே மௌத்கல்யர்தான் மேற்போட்டுக்கொண்ட காரியம் முடிந்ததென்று தன் விகார உருவத்தை மாற்றிவிட்டு சுந்தர ரூபங்கொண்டு அன்று முதல் நளாயினி களிப்புறும்படி இல்லற வழிபற்றி நடந்து கொண்டனர்.

இந்த திருஷ்டாந்தத்தால் கற்புடைய பெண்கள் தம் கணவர் விருத்தராயினும் வியாதியஸ்தராயினும் மனஞ்சலியாது அன்புடன் (அவர்கள் அம்மிமிதித்து அருந்ததி காட்டப் பார்த்துக் கொடுத்தவாக்குத்தவறாமல்) கற்புநெறி நின்று காப்பாற்றுவார்களென்றும், தங்கள் கற்பின் வலிமையால் முனிவர்களின் சாபத்திற்கும் பிரதிசாபமிட்டு முனிவர்களின் சாபம் பொய்த்துப் போகும்படியும் தங்களுடைய சாபம் சத்திய வாக்காகும்படியும் செய்துகொள்ளக் கூடிய மேலான சக்தியைத் தவசிகளைப் பார்க்கிலும் அடையக்கூடியவர்களென்றும் நன்றாய் விளங்குகிறது.

THE SCENE FROM THE HILL FORT AT TRICHINOPOLY.

திருச்சினாப்பள்ளி மலைக்கோட்டையிலிருந்து காணும் காட்சி.

சமீபத்தில் நானும் என் தகப்பனாரும் பாலர்க்குழைக்கவென்று கொண்டதீக்ஷையை யனுசரித்து ஸ்தலயாத்திரை புறப்பட்டுப் போயிருந்தோம். அங்கே பற்பல காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தோம். "ஆறிரண்டும் காவேரி அதினடுவே ஸ்ரீரங்கம்" என்று பாடப்பெற்ற ஸ்ரீரங்கக்ஷேத்திரம் சென்று அரங்கநாதர் திருப்பள்ளிகொண்டிருக்கும் கோயில் தரிசனங்கண்டு கோபுரவாயிலிருந்து புறப்பட்டுத் திருச்சினாப்பள்ளி வரும்வழியில் அவ்வூர் மலைக்கோட்டையின் காட்சி கண்கொள்ளக்காட்சியாகவிருந்தது. மலை உச்சியில் உச்சிப்பிள்ளையார் பாலர்க்குப்பாலனாய்ச் சீலர்க்குச்சீலனாய் மூலர்க்குமூலனாய் எல்லாம் தானாகி விளங்கும் காட்சி ஹிருதயத்தைக் கொள்ளைகொண்டு ஊசியைக் காந்தமிழுக்கின்றவாறு மனதைக் கவர்ந்திழுப்பதாயிருந்தது. இது மெய்யடியார்க்கின்பந்தருவதாயிருப்பதன்றி என்னைப்போன்ற உலகறியாப் பள்ளிப்பையனுக்கும் இன்பந்தருவதாயிருந்தது. இது ஒரு பக்கம் நிற்க. இந்த மலையுச்சியிலிருந்து காணும் காட்சி எல்லாருக்கும் இனிப்பைத் தருவதாயிருக்குமாதலால் அதை நான் படித்துணர்ந்தது உணர்ந்தபடியிருந்ததால் அதையே என்னைப்போன்ற பிள்ளைகள் அனைவரும் படித்து மகிழவென்று கீழேயெடுத்து வரைகிறேன்.

"திருச்சிராப்பள்ளியானது சென்னை இராஜதானியிலுள்ள இருபத்திநான்கு ஜில்லாக்களில் ஒன்றானதாகிய திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் தலைமைப்பட்டணம். பூர்வத்தில் தமிழ்நாட்டில் செங்கோல் செலுத்திவந்த சேர சோழ பாண்டிய வம்சங்களின் மன்னவர் காலத்தில் இந்நகரம் திரிசிரபுரமென்னும் பெயருடன் கல்விப்பெருக்கிலும் செல்வப்பெருக்கிலும் நிலநீர்வளத்திலும் சீர்பெற்றதாகவே யிருந்தது. பிற்காலத்தில் மதுரையிலரசாண்ட நாயகவரசர் காலத்திலும் தஞ்சாவூரில் துரைத்தனம் செய்த மகாராஷ்டிர இராஜாக்கள் காலத்திலும் கர்னாடகத்திலரசுபுரிந்த மகம்மதியமன்னர் காலத்திலும் இந்நகரம் கொடும்போர்க்களமாயிருந்து, பின்னர் ஆங்கிலேயராட்சியிலமைந்தது முதற்கொண்டு அஷ்ட ஐசுவரியமும்பொருந்தினதாய், ஜனப்பெருக்கிலும் வித்தியாவிஷயமுதலிய வற்றிலும், இவ்விராஜதானியின் தலைமை நகரமாகிய சென்னப்பட்டணத்திற்கு இரண்டாவதாக விளங்குகிறது. இதல்லாமல் இந்நகரின் வடபுறத்தில் மங்கிய செந்நிறத்துடன் ஆகாயத்தை யளாவிநிற்கும் கருங்கற்குன்றின் கம்பீரமான தோற்றத்தினாலும், அதன் முடிகளில், சூரியகாந்தியில் வெகு ரம்மியமாய்ப்பிரகாசிக்கும் தங்கக்கலசங்களுடன் அதிக அற்புதமாய்க் கட்டப்பட்டிருக்கும் ஹிந்துதேவாலயங்களின் காட்சியாலும், இந்நகரம் மிகச்சிறந்தது. நமது தேசத்தையாளும் இராஜப் பிரதிநிதிகளும், மற்றும் வடதேசத்து இராஜாக்களும், ஐரோப்பா அமெரிக்கா முதலான பிறதேசங்களிலிருந்து தேசசஞ்சாரத்தின் பொருட்டு வரும் யாத்திரீகர்களும் தென்னிந்தியாவில் பிரயாணஞ்செய்யும்பொழுது இந்நகரில் தங்கி மலைக்கோட்டையிலிருந்து தோன்றும் காட்சியைக்கண்டு களிக்காமற் போவதில்லை

இக்குன்று அதன் அடிவாரத்தில் செல்லும் முக்கிய ரஸ்தாவின் மட்டத்திற்குமேல் 27[illegible]-அடி உயரமானது; சமுத்திர மட்டத்திற்குமேல் சுமார் 503-அடி உயரமுள்ளது. இக்குன்றின்மேலே ஏறிப்போவதற்கு அதன் தெற்குப் பாகத்தில் கருங்கல்லால் அமைக்கப்பட்ட படிக்கட்டு இருக்கிறது. இது நேர்த்தியாயும் விசாலமாயுமிருப்பதுடன், வெயிலில் தாபமில்லாமலிருக்கும்படியாய் இருபுறமும் கருங்கற்சுவர்கள் கிளப்பப்பட்டு கல்லுத்திரங்களால் மேற்றளமிடப்பட்டு நிழலளிப்பதாயிருக்கிறது. இவ்வழியில் முதல் படிக்கட்டு வரிசைகளைத் தாண்டினவுடன் குன்றைச்சுற்றிலுமிருக்கிற தட்டையான விளிம்பில் அநேக வீடுகளுள்ள ஒரு தெரு அழகாய் அமைந்திருக்கிறது. படிக்கட்டுகளின் இருபுறத்திலும் சிறியகோவில்களும், மண்டபங்களும், நேர்த்தியானவேலைப்பாடுள்ள இரண்டுபெரிய மண்டபங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. கடைசிப்படிக்கட்டு வரிசைகளைத் தாண்டினவுடன் ஒரு பெரிய சிவாலயமிருக்கிறது. (இதற்கு தாயுமானஸ்வாமி கோவில் என்று பெயர்). இந்தக் கோவிலிலுள்ள ஒரு மண்டபத்தின் மேற்றளத்திலமைக்கப்பட்டிருக்கும் ஒரு கல்லுத்திரத்தில் ஒரு பெரிய தாமரைப் புஷ்பமும், அதைச்சுற்றிலும் அநேகங் கிளிகள் உட்கார்ந்துக்கொண்டு புஷ்பத்தின் தேனை அருந்துவதாகவும் சித்திரிக்கப்பட்டிருக்கும் சிற்பவேலையையும், இந்தப்புஷ்பத்தின் நான்கு புறத்திலும் தொங்கிக்கொண்டிருக்கும் இரண்டு மூன்று அடி நீளமுள்ள கற்சங்கலிகளின் வேலைத்திறத்தையும், இன்னும் சிற்சில அழகிய பிம்பங்களையும் தவிர, அதிக விசேஷமான சிற்பவேலைப்பாடுகள் இவ்விடத்தில் வேறில்லை. ஆயினும் இக்கோயிலில் சுற்றுச்சுவர்களை நோக்கிடில், அவைகள் சற்றேனும் சரிதலில்லாமல் செங்குத்தாயிருக்கும் பாறையின் விளிம்பிலிருந்து அதிக உன்னதமாய்க் கட்டப்பட்டிருப்பது, யந்திரங்கள் முதலியன இல்லாத பூர்வகாலத்தில் எவ்வளவு கஷ்டசாத்தியமான காரியமாயிருந்திருக்குமென்பது புலப்படும். இந்தக் கோவிலிலிருந்து குன்றின் உச்சிக்குப்போகப் பாறையிலேயே படிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. குன்றின் உச்சியில் ஒரு சிறிய விநாயகராலயம் கட்டப்பட்டிருக்கிறது. இக்கோவில்களுக்கு தெய்வந்தொழுவதற்காகவும் கண்காட்சிக்காகவும் அநேகர் வந்துபோவதுவழக்கம். மலையின் அடிவாரமுதல் முடிவரையில் சற்றேறக்குறைய சிறிதும் பெரிதுமானபடிகள் 400 இருக்கின்றன. விநாயகர் கோவிலின் மேற்றளத்தில் ஒருமூலையில் ஆங்கிலேயர் கொடிக்கம்பம் நாட்டப்பட்டிருக்கிறது.

இதனருகில் நின்று நாற்புறமும் நோக்கிடில், ஆ! என்ன கம்பீரமான காட்சி! என்ன பெருமை! என்ன சிறப்பு! என்று ஒவ்வொருவரும் வியந்து ஆனந்தபூரிதர்களாய் பிரமித்துப்போவார்கள். ஆ! இவைகளெல்லாம் கடவுளின் பெருமையல்லவோ, அவர் சிறப்பைப் புகட்டுகின்றனவல்லவோவெனக் குதுகலிப்பார்கள். பூமியானது கண்களுக்கெட்டிய தூரம்வரையில், பசுமை நிறைந்த பயிர்களாலும் சோலைகளாலும், அங்கங்கே விளைச்சலில்லாத செம்மண் கரிசல்மண்ணுள்ள நிலங்களாலும், இடையிடையே குறுக்கிட்டோடும் ஆறுகளாலும், அருவிகளாலும் பல, வர்ணங்களமைந்த இரத்தின கம்பளம் விரிக்கப்பட்டதுபோலும், நாற்புறமும் பூமியுடன் சேருவதாகக் காணப்படும் வானமானது இந்திர நீலவர்ணமமைந்த பட்டுச்சீலையால் பூமியின் மேற்பாகத்தில் பென்னம்பெரிய கூடாரமிட்டதுபோலும், இவ்வளவு பெரிய கூடாரத்திற்குத் தகுந்த ஜகத்ஜோதி விளக்காய்ச் சூரியன் கூடாரமுகப்பில் பிரகாசிப்பதுபோலும் தோன்றும்.

தென்புறகாட்சி.

குன்றின் தென்புறத்தில்தான் திருச்சிராப்பள்ளிநகரம் முக்கியமாய்ப் பரந்திருக்கிறது. அடிவாரத்திலிருந்து குன்றிற்குப் போகும்படிக்கட்டு மார்க்கத்திற்குநேராக, பெண்டிர்கள் அளகத்தைப் பகுக்கும் வகுடைப்போலப் பட்டணத்தை இரண்டாகப்பாகித்து, பலபண்டங்களும் இராசி இராசியாய்க் குவிக்கப்பட்டு வியாபாரமாகும் கடைத்தெரு சற்றேறக்குறைய ஒரே ஒழுங்காய் ஊடுருவிச் செல்கிறது. இப்பாட்டையில் ஜட்காவண்டிகள் முன்னும் பின்னுமாக ஓடிக்கொண்டிருப்பதையும், பல்லோர் ஆடவரும் பெண்டிர்களும், சிறுவர்களும் சிறுமியர்களும் பண்டங்கள் கொள்வதற்கும் கொடுப்பதற்கும் கும்பல் கும்பலாய்ப் போய்க்கொண்டிருப்பதையும் குன்றின் சிகரத்திலிருந்து காண்பது வெகு நேர்த்தியாயிருக்கும்.

"வாய்பறுமணியும் பொன்னுமார முங்கவரி வாலுஞ்
சாத்தினை ... மருங்குறைத் தோகையுங் கம்பிக்கொம்புங்
குரம்பினை நிறப்புமள்ளர் குவிப்புறக் கரைகடோறும்
பரப்பியபொன்னியன்னவா வளம்பலவுங்கண்டார்."

பட்டணத்தின் முக்கியமான இப்பாகத்தின் அநேகமாயிரம் வெண்ணிறமுள்ள மாடிவீடுகளும், சிவப்புநிறமுள்ள தட்டோடுகள் போர்த்திய வீடுகளும், உயர்ந்த கோபுரங்களமைந்த கிறிஸ்தவர் கோவில்களும், மகம்மதியர் மசூதிகளும், தென்னிந்தியா ரயில்வேகம்பெனியாருடைய அதிகார மாளிகைகளும், திருச்சிறைப் பள்ளி 'ஜங்ஷன் ஸ்டேஷனை'ச்சார்ந்த அநேக கட்டடங்களும், இடையிடையே அங்கங்கே வளர்ந்திருக்கும் சிறிய செடிகளும் பெரியவிருக்ஷங்களுமாகக் கலந்திருப்பது, இது என்ன! வீடுகளின் காடோவென வியக்கும்படி தோன்றுகின்றது. இப்பாகத்திற்கு முப்புறமும் செழித்து ஓங்கி வளர்ந்திருக்கும் தென்னந்தோப்புகளும், வாழைச்சோலைகளும், இளம்பசுமையுடன் விளங்கும் நெற்கழனிகளும், பட்டணத்தை ஆவரணமிட்டதுபோல வில்வளைவாய் வளைந்து அழகிய தோற்றத்தை யுண்டாக்குகின்றன. தென்கிழக்கிலும் தென்மேற்கிலும் பொன்மலை பக்கீர்மலை என்ற இரண்டு சிறு குன்றுகள் சூரியவெளிச்சத்தில் பலவர்ணத்துடன் நேர்த்தியானகாட்சியை அளிக்கின்றன.

மேற்குப்பக்கத்துக் காட்சி.

குன்றின் மேற்குப்புறத்தில், நான்குபக்கத்திலும் அழகிய மதிலமைந்த ஒரு பெரியதடாகமும், அதனடுவில் ஒருசிறிய நீராழிமண்டபமும், பக்கங்களில் பாதிரிமார் வித்தியாசாலைகளும், அவர்கள் வசிக்கும் மாடங்களும், உன்னதமாய்க் கட்டப்பட்ட கிறிஸ்தவர் கோவிலும், சிற்சில இந்து தேவாலயங்களின் சிகரங்களும், வெகுநேர்த்தியாய்த் தோன்றும் கண்களுக்கெட்டியவரையில் பசுமை நிறத்துடன் காணும் அடர்ந்த தென்னந்தோப்புகளும், பாத்திகள் வகுக்கப்பட்டுப் பாசங்கொண்ட கடலென்ன வியக்குமாறு ஒரேபரப்பாய்ப் பரந்த நெல்வயல்களும், இடையிடையே காற்றோட்டத்தால் சிறு அலைகளுண்டாக்கப்பட்டு அவைகளில் சூரியபிம்பம் பிரதிபலித்துப் பளீர்பளீரென்று பிரகாசிக்கும் நீர்நிலைகளும், ஆகிய இவைகளின் தோற்றமும், இக்காட்சிகளின் நடுவே மதவெறிகொண்ட சிற்றானைகள் ஒன்றின்பின் னொன்றாய் வெகு ஆக்கிரோஷத்துடன் தொடர்ந்து ஓலமிட்டுச் செல்வதையொத்துத் தென்னிந்தியா ரயில்வண்டித்தொடர்கள் தஞ்சாவூர்மார்க்கமாயும்,ஈரோட்டைநோக்கியும், சோலைகளினடுவே யிருந்து வெளிவந்தோடி, மறுபடியும் சோலைகளில் மறைந்து செல்லும் தோற்றமும் யாவர்க்கும் இன்பத்தை யுண்டாக்கும்.

வடபக்கத்துக் காட்சி.

இப்புறத்துக் காட்சி ஒப்பு உவமையில்லாதது. திருச்சிராப்பள்ளி நகரத்திற்குச் சற்றேறக்குறைய 11 மைல்தூரத்திற்கு மேற்காகக் காவிரி நதியானது இரண்டு கிளைகளாகப் பிரிந்து, ஒன்று காவிரி என்னும் பெயருடன் தென்கிழக்காய் ஓடி, மற்றொன்று வடகிழக்காய்க் கொல்லிடமென்னும் பெயருடன் பாய்ந்து, திரிச்சிராப்பள்ளிக்குச் சுமார் 10 மைல் கிழக்கே தஞ்சாவூர் ஜில்லாவைச்சார்ந்த கோவிலடியென்னும் கிராமத்திற்கருகாமையில் மறுபடியும் ஒன்றுசேர்ந்து ஓடுகிறது. இவ்விருகிளைகளுக்கும் நடுவே உண்டாயிருக்கும் அழகிய தீவில்தான் இந்து தேவாலயங்களில் பெயர்பெற்ற ஸ்ரீரங்கமும், ஜம்புகேஸ்வரமும் இருக்கின்றன. காவிரி கொல்லிட நதிகளாலும், அவைகளின் மத்தியிலிருக்கும் சோலைகள் நிறைந்த தீவின்காட்சியாலும் வடபக்கத்துக் காட்சிமிகநேர்த்தியானது. கோடைகாலத்தில் வெண்ணிற மணற்பரவிய ஆற்றுக்கால்களில் சூரிய வெளிச்சத்தால் மணலானது விசேஷ வர்ணத்துடன்பிரகாசிப்பதும் ஆற்றுநீர் சுண்டி அதிக கோஷமில்லாமல் 'சலசல' சத்தத்துடன் பாம்பின்கதியை யொத்த வளைந்த பள்ளக்கால்களிற் பாய்ந்து மந்தகதியுடன் செல்வதும், பாலைநிலத்து மணலையொத்த ஆற்றுமணலின் வரண்ட தோற்றத்திற்கு மாறாகத் தீவிலுள்ள சோலைகள் குளிர்ந்த பசுமைநிறத்துடன் தோற்றுவதும், நேத்திரானந்தமாகவிருக்கும். இத்தீவிலெங்கும் ஓங்கிவளர்ந்த தென்னந்தோப்புகளும், கமுகஞ்சோலைகளும், வாழைத்தோட்டங்களும், மா, பலா, முந்திரி, கொய்யா, மாதுளம், கிச்சிலி, நெல்லி முதலிய பழங்களளிக்கும் விருக்ஷங்கள் வளரும் தோப்புகளும், அரசு அசோகுமுதலிய அழகிய விருக்ஷங்களும், புஷ்பங்கள் மலரும் நந்தனவனங்களும் பசும்புற்புலங்களும் நிறைந்திருப்பதால், இதுவென்ன! பூலோக சுவர்க்கமோவென வியக்குமாறு எங்கும் ஒரே பசுமையுடன் ஆனந்தக்காட்சியை யுண்டாக்குகிறது. இத்தீவிலுள்ள சோலைகளின் சிறப்பு, கவிஞரின் திலகராகிய கம்பர் இராமாயணத்தில் விதேகநாட்டில் உள்ள சோலைகளின் சிறப்பை வருணித்திருப்பதற்கு இசைந்ததாகவே யிருக்கிறது.

"வரம்பில்வான் சிறைமதகுகண் முழவொலிவழங்க
வரும்புநாண்மலர சோகங்களலர்விளக்கெடுப்ப
நரம்பினுன்ற தேன்றாரை கொணறுமலர்யாழிற்
சுரும்புபாண்செயத்தோகை நின்றாடுவசோலை."

மேலும் நமது ஜம்புத்வீபத்திலுள்ள தேவாலயங்களெல்லாவற்றிலும் மிகப்பெரிதானதும், அநேக யாத்திரிகர்கள் வரத்துப்போக்குள்ளதுமான திருவரங்கம் பெரியகோவிலைச் சேர்ந்த கோபுரங்களும், ஜம்புகேஸ்வரத்திலுள்ள கோவிலின் கோபுரங்களும், தீவிலுள்ள சோலைகளின் நடுவேயிருந்து கிளம்புவதாகத் தோன்றி ஆகாயத்தை யளாவிநிற்கும் காட்சி வெகு அழகாயிருக்கும். பால்ய முதல் மூப்புவரையில் உலகத்தில் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை முதலிய வீணாசைகளால் கட்டுண்டுழன்று பரதவிக்காமல் சாசுவதானந்த யோகவாசையைக் கொடுக்கவல்லதான இச்சோலைகளினடுவே மறைந்துகிடக்கும் அரிய நிக்ஷேபத்தைக் கைக்கொள்ள வாரும் சகத்தீரே யென்றழைப்பதுபோல,

"காடுங்கரையுமனக்குரங்கு கால்
விட்டோட வதன்பிறகே
ஓடுந்தொழிலாற் பயனுளதோ
வொன்றாய்ப் பலவாயுயிர்க் குயிராய்
ஆடுங்கருணைப் பரஞ்சோதி
யருளைப் பெறுதற்கன்புநிலை
தேடும்பருவமிது கண்டீர்
சேரவாருஞ் சகத்தீரே."

யென்று சோலைகளினின்றும் மேலெழுந்து வானத்தை யளாவி நிற்கும் கோபுரங்கள் கூவியழைப்பதாகத் தோன்றுகின்றன.

கார்காலத்திலோ வானம் சரமாரிபொழிய வெள்ளப் பெருக்கெடுத்து காவிரி கொல்லிட நதிகளின் இருகரைகளும் புரண்டு சிவப்பு நிறமுள்ள நீருடன் நுரைத்துக்கொண்டும் கரையோரங்களிலிருக்கும் மரங்களை வேர்ப் பிடுங்காய்ப் பிடுங்கி வாரியடித்துக்கொண்டும் பெரிய யானைகளையொத்த வைக்கோற் போர்களை மிதக்கடித்துக்கொண்டும் வெகு வேகத்துடன் தீவைச்சுற்றிக்கொண்டு சமுத்திரத்தை நோக்கிப் பிரவாகித்துச் செல்வதைக்குன்றின் மீதிருந்து நோக்கிட கம்பீரமான காட்சியையளிக்கும்.

கிழக்குப்பக்கத்துக் காட்சி.

இந்தப்பக்கத்துத் தோற்றமும் அழகியதே. வெகுதூரம் பரந்த வாழைச்சோலைகளும்,நெற்புலங்களும், கண்களைப் பறிப்பனவாயிருக்கும். ஒரு புறத்தில் வாழைக்கன்றுகள் நடுவதற்காக பூமியில் வரிசை வரிசையாய்க் கிடங்குகள் வெட்டப்பட்டு அவைகளில் தேக்கப்பட்டிருக்கும் தண்ணீர் சூரியகிரணங்களால் பிரகாசிப்பதும், மற்றோர்புறத்தில் சற்றே வளர்ந்த வாழைகள் இளங்காற்றில் மெதுவாய் அசைந்துகொண்டிருப்பதும், வேறோர்புறத்தில் முதிரவளர்ந்த வாழைக்கூட்டங்கள் தாறுகள் சாய்த்துக் கம்பீரமாய் நிற்பதும், இதுமாதிரியாகவே நெல்நாற்று நடுவதற்காக ஒருபக்கம் தண்ணீர் தேக்கப்பட்டிருப்பதும், மறறோர்புறம் இளம்பயிர்கள் தலைநிமிர்ந்து நிற்பதும், வேறோர்புறம் பொன்னிறமான கதிர்களையுடைய முதிர்ந்த பயிர்கள் தலை வணங்கி நிற்பதுமாகிய இக்காட்சி நேத்திரானந்தத்தை யுண்டாக்கும். நீர்ப்பாய்ச்சலின் உபயோகத்திற்காக கொல்லிடநதியின் குறுக்காகக் கட்டப்பட்டிருக்கும் (Grand Anicat) "பெரிய அணை"யும சற்றே தென்கிழக்கில் இருக்கும் திருவெரும்பூர் குன்றென்னும் ஒரு தட்டைப்பாறையின் மேரில கட்டப்பட்டிருக்கும் சிவாலயமும் அழகாய்க் காணப்படுகின்றன. தஞ்சைநகரிலுள்ள பிரசித்தமான சிவாலயத்தின் கோபுரமும் திரிச்சிராப்பள்ளிக்குன்றிலிருந்து நோக்கிடில் ஒரு சிறிய குச்சுப்போன்று தோன்றுகிறது.

இவ்வாறாக மலைக் கோட்டையிலிருந்து சுற்றிலும் பார்த்திடில் இயற்கையழகும செயற்கையழகுமாய்க்கலந்த அற்புதக் காட்சியை அநுபவிக்கலாம். இவ்வதிசயக் காட்சியை இவ்விடத்தில் ஒருவாறு எழுதப்புகுந்ததே யொழிய, நேரில் கண்டால் உண்டாகும ஆனந்தானுபவத்திற்கு இவ்விடத்திலுரைத்திருப்பது கொஞ்சமேனும் ஈடாகாதென்பது நிச்சயம்."

ON THE EFFICIENCY OF FAITH.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

திருச்சிராப்பள்ளிக்கு இரண்டு மயில் தூரத்தில் மேற்கே யுள்ளதும், முன்னொருகாலத்தில் சோழவமிச ராஜாக்களுடைய இராஜதானியாய் மிகச் சிறந்து விளங்கியதுமாகியது உறையூர் என்னும் பட்டணம் அநேகமாக எல்லாருக்குந் தெரிந்திருக்கலாம். சற்றேறக் குறைய இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு, அவ்வூர்ச் சிவாலயத்தின் கோபுரவாசலிலே, ஒருநாள் மாலைப்போதிலே, உத்தேசம் பத்து வயதிருக்கலாம் என்று மதிக்கக்கூடிய ஓர் அழகிய வாலிபன் வாடிய தாமரைமலர்போன்ற முகத்தோடுகூடியவனாய்க் கைகூப்பி நின்றுகொண்டு பின்வரும் பாடலொன்றைச் சொல்லித் துதித்துக்கொண்டிருந்தான்.

"நினையல்லால் பாலன் றனக்குண்டோபற்று."

"நறையூருங் கொன்றை நளிர்சடையாய்! நாளும்
உறையூருள் வாழு மொருவா! —கறையூரும்
நீல மணிமிடற்றாய்! நித்தா! நினையல்லால்
பாலன் றனக்குண்டோ பற்று."

என்னும் இந்த வெண்பாவைச் சிறுபிராயமுள்ள அவ்வாலிபன் பக்தி பரவசனாய் இன்னிசையோடு உருக்கமாய்ப் பாடுவதை அங்கே வந்திருந்தவர்களெல்லாருங் கூட்டமாய் நின்றுகேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே தற்செயலாய்ச் சுவாமி தரிசனார்த்தமாக வந்த காந்திமதிநாத முதலியார் என்னும் பெயரையுடைய பிரபு ஒருவர் உருக்கிவிட்ட தங்கம் போன்ற தனது மேனியில் கட்டுக்கட்டாய் விபூதியைப் பூசிக்கொண்டு கைகூப்பி நிற்கும் அப்பையனையும், அவனது சிவபக்தியையும், பட்டமரமும் பாலாயுருகும்படி சங்கராபரண ராகத்திலே பாடுகின்ற அப்பாடலையுங் கவனித்து, மிகவும் ஆச்சரிய மடைந்து, அவன் பாடிமுடிக்கும் வரை அங்கேயே நின்றுகொண்டிருந்து, பாடிமுடித்ததும், அப்பையனைக்கூப்பிட்டு, 'குழந்தாய்! நீயார்? உன்முகம் சிறிது வாட்டமடைந்திருப்பதுபோல் தோற்றுகின்றதே. அதற்குக் காரணமென்ன? உனக்குத் தாய் தகப்பனார் இருக்கிறார்களா?' என்று பிரியத்தோடு கேட்டார். அதற்கு அப்பையன் 'ஐயா! இவ்வூரில் மிக்க பிரவித்தியோடு ஏனாதி வேங்கடாசல முதலியார் என்று ஒருவர் இருந்ததாகத் தாங்கள் கேள்விப்பட்டிருக்கலாமே. நான் அவருடைய பேரன்; என் பேர் நல்லசாமி. எனக்குப்பிதா இல்லை. மாதாமாத்திரந்தான் இருக்கிறாள். பிதா சமீபத்தில் தான் சிவபதமடைந்தார். இன்னும் ஆறுமாதங்கூட ஆகவில்லை.' என்று சொல்லும்போதே அவனுடைய கண்களினின்றும் முத்து முத்தாய் நீர்த்துளிகள் கீழே வீழ்ந்தன. பிரபு அதைக்கண்டு, 'அப்பா, குழந்தாய்! ஏன் விசனப்படுகிறாய். எல்லாந்தெய்வச்செயல். இருப்பதும் இறப்பதும் நம்முடைய செயலாக இல்லை. கொடுத்து வைத்தது அவ்வளவுதான். என்ன அழுதாலும் போனவர் திரும்பிவரப் போகிறார்களா? கண்ணீர்விட்டழுவதில் காரியமில்லை. நீயோ புத்திசாலியாகக் காணப்படுகிறாய். நீகூட இப்படி அழலாமா? இஃதிருக்கட்டும். உன் முகம் வாடியிருப்பதற்குக் காரணமென்ன வென்று கேட்டேனே. அதற்கு ஏன் பதில் சொல்லாதிருந்துவிட்டாய். உன் மனத்திலிருக்கின்ற குறையென்ன? சாத்தியமானால் நான் என்னாலியன்ற வரையில் அக்குறையை நிவர்த்திக்க வழிதேடுகிறேன். ஒளிக்காமல் உள்ளது உள்ளபடியாகச் சொல்லு' என்று சொல்லி அப்பையனுடைய முதுகைத் தடவிக்கொடுத்துக் கேட்டார்.

"தோழனோடும் ஏழமை பேசேல்."

அதற்கு அந்தப்பையன் மிக்க வணக்க ஒடுக்கத்தோடு "ஐயா! 'தோழனோடும் ஏழைமை பேசேல்' என்ற வசனத்தை நினைத்து, நம்முடைய கஷ்டாகஷ்டங்களை யெல்லாம் பிறரிடம் சொல்லுவானேன் என்று எண்ணி நான் தாங்கள் கேட்டதற்கு உத்தரஞ் சொல்லவில்லை. அதற்காக என்னை மன்னிக்கவேண்டும். இவ்வளவுதூரம் தாங்கள் விசுவாசத்தோடு கேட்கிறபடியால் சொல்லுகிறேன், கேளுங்கள் என்று அவன் வரலாற்றைப் பின்வருமாறு சொல்லலுற்றான்.

"இந்த மாதத்திற்கு இன்னும் சம்பளம் செலுத்தவில்லை."

நான் திருச்சிராப்பள்ளியில் நாஷனல் ஹைஸ்கூலில் 4-வது பாரத்தில் படிக்கிறேன். இந்தமாதத்திற்கு இன்னும் சம்பளம் செலுத்தவில்லை. தேதி இருபதிற்குமேல் ஆகிவிட்டபடியால் சம்பளமில்லாமல் [illegible] வருப்பில் உட்காரக்கூடாதென்று சொல்லி உபாத்தியாயர் என்னை வீட்டுக்கனுப்பிவிட்டார். இதுவரையில் தவறாமல் சம்பளம் அனுப்பிவந்த என் மாமா, 'இனிமேல் என்னால் பையனுக்குச் சம்பளம் அனுப்பமுடியாது. குடும்ப நிர்வாகமே நிரம்பவும் கஷ்டமாயிருக்கிறபோது புத்தகம்சம்பளம் முதலியவைகளுக்குப் பணங்கொடுத்துப் பையனைப் படிக்க வைப்பது அசாத்தியமான காரியமாகத் தோற்றுகின்றது. எங்கேயாவது ஒரு செட்டிகடையில் கணக்கு [illegible]த் தெரிந்துகொள்ளும்படி பையனை யனுப்புவதுதான் உசிதம்' என்று கரூரிலிருந்து நேற்றுக் கடித மெழுதிவிட்டார். அவரைத்தவிர வேறு யாரும் எங்களை ஆதரிப்பாரில்லை. ஒரு பரீக்ஷையாவது கொடுப்போம் என்று எண்ணியிருந்த என் எண்ணம் திடீரென்று இப்படி வீணாய்ப்போனதை நினைக்கச் சிறிது விசாரமுண்டாயிற்று. இதுதான் என் முகவாட்டத்திற்குக் காரணம்" என்று சொன்னான்.

"இந்தா இதை வைத்துக்கொள்."

இதைக்கேட்டதும் காந்திமதி முதலியாரது மனம் இளகிவிட்டது உடனே தம் சட்டைப்பையிலிருந்து ஒரு நூறு ரூபா நோட்டை யெடுத்து 'இந்தா இதை வைத்துக்கொள். இன்னமும் அவசியமானபோது எழுது! வேண்டியதை அனுப்புகிறேன். இனி உனக்குப் பணக்கவலை யென்பதுவேண்டாம். எவ்வளவு தூரம் உனக்குப் படிக்கவேண்டுமென்று ஆசையிருக்கிறதோ அதுவரையிலும்படி. புத்தகமோ, சம்பளமோ, எது வேண்டியிருந்தாலும் நான் தருகிறேன்! என்று சொன்னார். நல்லசாமி அந்த நோட்டைப் பெற்றுக்கொள்ளாமலே, "ஐயா, ஏழையாகிய என்மீது மிக்க இரக்கங்கொண்டு தாங்கள் கூறிய அருண்மொழியை இங்கே எழுந்தருளியிருக்கின்ற சிவபிரானது மொழியாகவே நான் நினைக்கிறேன். எனது மாதா அல்லது மாமாவினது அனுமதியின்றி நான் இந்த ரூபாயைப்பெற்றுக்கொள்வது கூடாது. நாங்கள் கஷ்டஜீவனம் பண்ணிக்கொண்டிருந்தாலும் இதுவரையில் பிறரிடங் கைநீட்டி யாதொன்றையும் யாசித்ததில்லை.

"எனக்கு இதுவேண்டாம்."

பேருவகையோடு தாங்களாகவே யுபகரிக்கின்ற இது, யாசனமாகாவிடினும் பெரியோர்களுடைய அபிப்பிராயத்தையறியாமல் நான் இதைப் பெற்றுக்கொள்வதற்கில்லை. மேலும், மிகப் பெருந்தொகையாகிய இதை நான் அவர்களிடங்காட்டினால், எனக்கு இது ஒருவரால் இரங்கிக் கொடுக்கப்பட்டதென்று அவர்கள் நம்ப[illegible]டார்கள். தவிர, என் நடத்தையிலும் சந்தேகப்[illegible]. ஆகையால், எனக்கு இது வேண்டாம். [illegible] மறுப்பதற்காகத் தாங்கள் என்மீது கோபிக்காம[illegible]க்கப் பிரார்த்திக்கின்றேன்" என்று மிகுந்த வணக்கத்தோடு தன் குலப்பெருமை தோன்றப் பதிலுரைத்தான்.

"விளையும் பயிர் முளையிலே தெரியும்."

வாலிபனது இவ்வார்த்தையைக் கேட்டதும் அப்பிரபு முன்னையினும் பதின்மடங்கு மகிழ்ச்சியும் இரக்கமுங்கொண்டு, "விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்றபடி இவன் அதிமேதாவியாய் ஒருகாலத்திலே நல்ல பேரும் பிரதிஷ்டையும் பெற்று ஒரு பெரிய கனவானாக வாழ்வான் என்பது இவன் இப்போது பேசும் வார்த்தைகளினால் நன்றாக வெளியாகின்றது. எப்படியாவது நாம் இப்பையனை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும். மேலும், இவன் நம்முடைய குலத்தைச் சேர்ந்தவனாகவும் இருக்கிறான். இவனை நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வந்தால் நம்முடைய குலத்துக்கே ஒரு கவுரவம் உண்டாகும்" என்று இவ்விதம் தம் மனத்திலே சிந்தித்து, 'அப்பா, நல்லசாமி! பெரியோர்கள் வைவார்களோ என்ற யோஜனை உனக்கு வேண்டாம். நான் ஒரு கடிதம் எழுதித்தருகிறேன். இதை உன் தாயாரிடம் கொண்டுபோய்க்கொடு; மாமாவுக்கும் இதை அனுப்பச்சொல். அவர்கள் பார்த்து என்ன சொல்லுகிறார்களோ அந்தப்படி செய். அவர்களுக்கு இந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ள இஷ்டமில்லையானால் கடிதத்திற்கண்ட என் விலாசத்திற்கு திருப்பி யனுப்பிவிடட்டும்' என்றுசொல்லி ஒருகாகிதத்தையும் நூறுரூபாய் நோட்டையும் அப் பையனிடங்கொடுத்து, 'குழந்தாய்! நாழிகையாகிறது; முன்னிருட்டு; ஜாக்கிரதையாகப் போதோடு வீட்டுக்குப்போ. நோட்டைத் தலைப்பிலே முடிந்துகொள். நாளைக்கே திருநெல்வேலி விலாசத்திற்குக் கடிதமெழுது.' என்று சொல்லிப் பையனைத் தட்டிக்கொடுத்து அனுப்பினார். நல்லசாமி காகிதம் நோட்டு இரண்டையும் பெற்றுக்கொண்டு "ஐயா! போய் வருகிறேன். உத்தரவு கொடுங்கள். தாங்கள் செய்த இப்பேருபகாரத்தை நான் ஒருநாளும் மறக்கமாட்டேன்" என்று அவருக்கு வந்தனம் செலுத்திவிட்டு, ஆலயத்தைப் பிரதக்ஷிணம் செய்து, ஸ்வாமியைத் தரிசித்துத் தனக்குத் தெரிந்த தோத்திரப் பாடல்களைச் சொல்லி வணங்கி, விபூதிப் பிரஸாதத்தையும் பெற்றுக்கொண்டு இருட்டுக்குமுன வீடுபோய்ச் சேர்ந்தான்.

"இந்தா இந்தக் கடிதத்தைப் பார்."

வெளியிற்போன பையன் இன்னும் வரவில்லையேயென்று விசாரத்தோடு தன் குமாரனது வருகையை எதிர்பார்த்து வாசற்படியிலேயே நின்றுகொண்டிருந்த அவனது தாயார் அம்மணி அம்மாள் பையனைக் கண்டதும், "அப்பா, நல்லசாமி! ஏன் இத்தனை நேரம்? இரண்டாந்தரங்கூடச் சாப்பிடவில்லையே. வீட்டிலுள்ளவர்கள் விசாரப்படுவார்களே என்பதை நீ கவனிக்கிறதேயில்லை. போகட்டும். இனிமேலும் இப்படி வராதே. எங்கே போனாலும் என்ன

காரியமிருந்தாலும் அஸ்தமிக்கிறதற்குமுன் இங்கே வந்துவிடு" என்று சொன்னாள். நல்லசாமி: "அம்மா! இன்றைத்தினம் ஸ்வாமி தரிசனத்திற்குப் போனேன். போனஇடத்தில் ஒரு பெரிய மனுஷ்யரைக் கண்டு பேசும்படி நேரிட்டது. அதுதான் தாமதத்திற்குக் காரணம். இந்தா இந்தக் கடிதத்தைப் பார்' என்று தன் கையிலிருந்த கடிதத்தை நீட்டினான். அம்மணி அம்மாள் அந்தக்கடிதத்தை, "யாரப்பா கொடுத்தார்?" என்று சொல்லிக்கொண்டபடியே வாங்கி வாசித்தாள். அதிற் பின்வருமாறு எழுதியிருந்தது:—

"உபயக்ஷேமம். என்னை இன்னானென்று நீங்கள் தெரியாமலிருக்கும்போது நான் உங்களுக்கு இக்கடிதம் எழுதத்துணிந்த பெரும்பிழையை மன்னிக்கக் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் குமாரன் சிரஞ்சீவி நல்லசாமியை நான் இன்று சாயங்காலம் சந்தித்தேன். அவனுடைய குணமும், சிவபக்தியும், பணிவும் என் மனத்தை முற்றிலுங் கவர்ந்துவிட்டன. மிக்க ஸந்தோஷத்தினால் நான் அவனுக்குக் கொடுத்த ரூபா நூறையும் தாங்கள் அங்கீகரிக்கும்படி பன்முறையும் பிரார்த்திக்கிறேன். தங்கள் பெரியவர்களுக்கும் என் முன்னோர்களுக்கும் சம்பந்தமிருந்து விட்டுப்போனதை நான் தங்கள் குமாரன் மூலமாகப் புதுப்பித்து விருத்தி செய்துகொள்ள விரும்புகிறேன். தங்கள் குமாரனை என் கிருகத்திலேயே வைத்துக்கொண்டு படிப்பிக்கிறதற்குத் தாங்கள் அனுமதி கொடுப்பீர்களானால் நான் அதைப் பெரிய பாக்கியமாக நினைப்பேன். தங்கள் கடிதத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இங்ஙனம் தங்கள் அன்புள்ள,
காந்திமதிநாதன்".

"அம்மா நாளைக்கே நான் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து படிக்கலாமல்லவா."

இக்கடிதத்தைப் பார்த்ததும் அம்மணியம்மாளுக்குண்டாகிய மெய்ப்பாட்டை நாம் இங்கே எழுதுவது ஸாத்தியமல்ல. ஒருமுறைக் கிருமுறையாக அக்கடிதத்தைப் படித்துப்பார்த்தாள். சிறிது நேரம் வாய்பேசாமல் நின்று, பற்பலவிதமான விஷயங்களைச் சிந்தித்துக்கொண்டிருந்தாள். அப்போது அங்கே அவளது இன்னுயிர்த்தோழியாகிய ரங்கநாயகி அம்மாள் வந்துபோனதைக்கூட அவள் பார்க்கவில்லை. அம்மணி, அம்மணி, என்று பலதரம் கூப்பிட்டதும் அவள் காதில் விழவில்லை. இந்த நிலையில், பித்துப் பிடித்தவள்போலப் பதினைந்து நிமிஷம் வரையில் ஒன்றுந் தோன்றாமலிருந்துவிட்டு, 'நல்லது, நல்லசாமி! பணம் எங்கே' என்று கேட்க, பையன், 'அம்மா, இதோ பார்' என்று சொல்லித் தன் தலைப்பில் முடிந்து வைத்திருந்த அந்த நூறுரூபா நோட்டை எடுத்துத் தன் தாயாரிடங்கொடுத்தான். அவள் அதை வாங்கிப் பத்திரமாய்ப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு, 'அப்பா, மற்றதெல்லாம் அப்புறம் பேசிக்கொள்வோம்; கைகால்களைச் சுத்தி செய்துகொண்டு சாப்பிடவா' என்றதும், 'அப்படியே, இதோ வந்துவிட்டேன்' என்று சரேலென நல்லசாமி கைகால்களைச் சுத்தி செய்துகொண்டு சாப்பிட உட்கார்ந்தான். அம்மணியம்மாள் இலைபோட்டுப் பரிமாறினாள். அப்போது அப்பையன் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே தன் தாயாரைப்பார்த்து, "அம்மா, நாளைக்கே நான் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து படிக்கலாமல்லவா. நேற்றைப் பாடம் மாத்திரந்தான் விட்டுப்போயிருக்கிறது. சனி ஞாயிற்றுக் கிழமையில் அதைப்படித்துவிடுவேன். நாள்கழித்துப்போனால் படிப்பது கஷ்டமாயிருக்கும். என்ன, ஒன்றுஞ் சொல்லாமலிருக்கிறாய்? பணத்தைத் திருப்பி அனுப்பிவிடப்போகிறாயோ?" என்று கேட்டான். அதற்கு அம்மணியம்மாள் தன் கருத்தை வெளியிடாமலே, பையன் என்னசொல்லுகிறான் பார்ப்போம்என்று நினைத்து, "ஆமாம், திரும்பி யனுப்பத்தானே வேண்டும். யாரோ முன்பின் தெரியாத ஒருவரிடத்திலிருந்து நாம் பணத்தை வாங்கிக்கொள்வது சரியா? பார்க்கிறவர்கள் பரிகாசம் பண்ணமாட்டார்களா?" என்று பதில் சொன்னாள். தாயார் சொன்ன இவ்வுத்தரத்தைக் கேட்டதும் நல்லசாமி "அம்மா, பணத்தைத் திருப்பியனுப்புவது சரியன்று; அந்தப் பெரியமனிதர் இதை அவமரியாதையாக நினைப்பார். நமக்குப் பூர்வபந்துவாயும், பெரியபிரபுவாயும் இருக்கும் அவரிடத்தில் நாம் எந்த உபகாரத்தையும் பெறலாம். நீ நினைக்கிறபடி, அதை எவரும் இழிவாக நினைக்கமாட்டார்கள். மாமாவையும் ஒரு வார்த்தை கேட்டு விட்டுப் பின் சௌகரியம்போலச் செய்" என்று சொன்னான். 'நல்லது உன் இஷ்டப்படியே செய்கிறேன். காலைவண்டிக்குக் கரூருக்குப்போய் நேரில் கலந்து பேசித் தீர்மானம்பண்ணிக்கொண்டு இராத்திரி வந்துவிடுகிறேன். நீயுங் கூட வருகிறாயா?' என்று அம்மணியம்மாள் கேட்க, நல்லசாமியும் வருகிறதாக ஒப்புக்கொண்டான். அன்றிரவு போஜனம் முடிந்ததும் தாயும் மகனும் வெகுநேரம் வரை இவ்விஷயமாகவே பேசிக்கொண்டிருந்து பிறகு சிறிது கண்ணயர்ந்தார்கள்.

II

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே."

"எல்லாம் பசுபதீசுவரன் கிருபை, நம்மால் என்ன முடியும்."

மறுநாட் காலையில் அம்மணியம்மாள் தன் குமாரனையுமழைத்துக்கொண்டு கரூரில் தன் சகோதரனிருக்குமிடத்துக்கு வந்துசேர்ந்தாள். அப்போது, ரயிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த அவள் சகோதரர் சிதம்பரநாத முதலியார் என்பவர் இவர்களைக்கண்டதும் பயணத்தை நிறுத்தி, "வா, அம்மா; நல்லதாச்சு! உட்காரு. இப்போது நான் அங்கே வருவதற்காகத்தான் பிரயாணப்பட்டுக்கொண்டிருந்தேன் நல்லவேளையாய் நீங்களே இங்கு வந்துவிட்டீர்கள் ரொம்பவும் ஸந்தோஷம். திடீரென்று நீங்களிருவரும் புறப்பட்டு வந்ததற்குக் காரணம் என்ன?" என்று கேட்க, அம்மணியம்மாள் உத்தரமொன்றுஞ் சொல்லாமலே, கடிதத்தையும் நூறுரூபா நோட்டையும் தமையன் கையில் கொடுத்தாள். வாங்கி வாசித்துப்பார்த்துவிட்டுப் பரம ஸந்தோஷத்துடன், "எல்லாம் நல்லசாமியினுடைய அதிர்ஷ்டந்தான். மகாயோக ஜாதக மென்று சோதிடர்கள் சொல்லியிருக்கிறார்கள். தீர்க்காயுளுடன் க்ஷேமமாயிருக்கவேண்டும். எல்லாம் பசுபதீசுவரன் கிருபை நம்மாலென்ன முடியும்? எனக்கும் நேற்று ஒரு கடிதமெழுதியிருக்கிறார். விசாரித்ததில் அக்காந்திமதிநாத முதலியார் நம்முடைய குடும்பத்தார்க்கு உறவாம். பெரிய பிரபுவென்று கேள்வி. ஆண் ஸந்ததி யில்லையாம். ஒரே யொரு பெண்தானாம். அந்தப்பெண்ணை நல்ல இடத்தில் கொடுத்து மாப்பிள்ளையை வீட்டோடு வைத்துக் கொள்ளவேண்டுமென்ற அபேக்ஷையுடனிருப்பதாகத்தெரிந்தது. நல்லசாமியை அங்கே யழைத்துக்கொண்டுபோய்ப் படிப்பிக்க விரும்புவதுங்கூட இந்த அபிப்பிராயத்தைக் கொண்டுதான். உனக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் குறிப்பாகத்தெரிகிறது. நம்முடைய கௌரவத்தை நினைத்துப் பையனுடைய க்ஷேமத்தைக் கெடுப்பது நியாயமன்று. பையனை யனுப்பிவிடவேண்டு மென்று நினைக்கிறேன். அம்மணி, உன் அபிப்பிராயமென்ன? நல்லசாமி என்ன சொல்லுகிறான்? என்ன தீர்மானம் செய்திருக்கிறீர்கள்?" என்று சிதம்பரநாதமுதலியார் அக்கசோதரியைக் கேட்டார்.

'தெய்வம் வேண்டியவரையில் என் விஷயத்தில் சோதித்தாய்விட்டது."

அதற்கு அந்த அம்மணி "எங்களுக்கென்ன தெரியும், யோஜிக்கவும் தீர்மானிக்கவும். நீங்கள் பார்த்து எதைச்சொன்னாலும் அப்படியே செய்யக் காத்திருக்கிறோம். உங்களுக்கில்லாத கவலையும் பொறுப்பும் எனக்கென்ன இருக்கிறது? உங்கள் பாடு, பையன் பாடு. எப்படியாவது க்ஷேமமாக இருக்கவேண்டும். தெய்வம் வேண்டிய வரையில் என் விஷயத்தில் சோதித்தாய் விட்டது. குழந்தை [illegible] டுமே" என்றாள். இப்படிச் சொல்லி முடிக்கும்போது கடிகாரத்தில் ஒன்பதுமணி யடித்ததைப் பார்த்துச் சகுனமும் நன்றாகத்தானிருக்கிறது என்று தம் மனத்தில் அதிக ஸந்தோஷமடைந்தவராய், "சரி, நீங்கள் ஸ்நானத்தைப்பண்ணிச் சாப்பிடுங்கள். நான் காலையிலே போஜனஞ் செய்தாய்விட்டது. தபாலாபீசு வரைக்கும் போய்வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சிதம்பரநாத முதலியார் வெளியே போய்விட்டார்.

"உத்தமமான காரியம்."

இங்கே இப்படியிருக்க, திருநெல்வேலிக்குத் திரும்பிச்சென்ற காந்திமதிநாத முதலியார் தம் வீட்டிற்குப் போனதும் தமக்கு ஆப்தமான சில பந்துக்களையும் சிநேகிதர்களையு மழைத்துவரச்சொல்லி, உறையூரில் தாம் கண்ட பையனையும், அவனது குடும்ப வரலாற்றையும், அவனது ரூபம், வயது, கல்வி, குணம், தெய்வபக்தி முதலியவைகளையும்பற்றிச் சொல்லி, "அவனுக்கு என்னுடைய பெண்ணைக் கலியாணஞ் செய்துகொடுக்க உத்தேசம் இருக்கிறது. அதைத் தற்காலம் வெளியிடாமல், பையனை மாத்திரம் அழைத்து வந்து படிப்பித்து அவன் பரீக்ஷையில் தேறிய பின்னர், இந்த அபிப்பிராயத்தை வெளியிடப்போகிறேன்; இவ்விஷயத்தில் உங்களபிப்பிராயம் எப்படி யிருக்கிறது?" என்று யோஜனை கேட்க, அவர்களெல்லாரும், 'உத்தமமான காரியம். சமான சம்பந்தமென்றால் இதைத்தான் சொல்லவேண்டும். ஏனாதி வேங்கடாசல முதலியா ரென்றால் அழுதபிள்ளையும் வாய்மூடும். நம்முடைய குலத்தில் ஏனாதி என்ற பட்டத்தை முதன்முதல் பெற்றவர் அந்தக் குடும்பத்தவர்தாம். நல்ல யோஜனை. அப்படியே செய்யுங்கள். பையனை உடனே வரவழையுங்கள்.

இதனால் கவுரவம் புண்ணியம் இரண்டுமுண்டு. இன்னொரு தரம் இதைப்பற்றி யோசிக்க வேண்டாம்" என்று ஒரே மனதாய்ச் சொன்னார்கள். "நீங்களெல்லாரும் அனுமதி கொடுத்தால் செய்கிறேன்" என்று சொல்லி வாய்மூடுமுன், தபாற்காரன் ஓடிவந்து ஒரு தந்தியைக் கொண்டுவந்து கொடுத்தான். சாந்திமதிநாத முதலியார் அதை வாங்கி உடைத்தார். அதிற்கண்ட விஷயமாவது:—"சிரஞ்சீவி நல்லசாமியை அழைத்துப்போகத் தடையில்லை. யாரையாவது [illegible] யனுப்பப் பிரார்த்திக்கிறேன். தங்கள் பேருபகாரத்தை நான் [illegible] மறவேன்.

இங்ஙனம்,

கரூர் - சிதம்பரநாத முதலியார்."

"பயலே, நல்ல பையன் என்று பேரெடுக்க வேண்டும்."

இந்தத் தந்தியை மற்று அங்கே வந்திருந்தவர்களும் வாங்கி வாசித்துப்பார்த்து, "சந்தர்ப்பம் நிரம்பவும் நன்றாக இருக்கிறது. காரியஸ்தரை அனுப்புவதாகத் தந்திகொடுத்துவிடுங்கள்" என்று சொல்லவே, "உங்களபிப்பிராயப்படியே செய்கிறேன்" என்றுரைத்து அவர்களை மரியாதை செய்தனுப்பிவிட்டுச் சிறிதும் தாமதியாமல் சாந்திமதிநாத முதலியார் பதில் தந்தி கொடுத்துவிட்டார். சாயங்காலம் ஐந்து மணிக்கெல்லாம் தந்தி கரூர்போய்ச் சேர்ந்துவிட்டது. தந்தி வந்த சமயத்தில் சிதம்பரநாத முதலியார் வீட்டிலில்லை. அவருக்காகக் கையெழுத்துச் செய்து நல்லசாமி அதை வாங்கிக்கொண்டான். ஆறுமணியாகியும் தன் தமையன் வராமையால் அம்மணியம்மாள் தன் குமாரனைக் கூப்பிட்டு, "நல்லசாமி! மாமா அனேகமாகக் கோயிலில்தான் இருப்பார். தந்தியைக் கொண்டு போய்க் கொடு. அவசரகாரியமாக இருந்தாலும் இருக்கலாம். நாம் அவர் வருகிறவரையில் இங்கே வைத்திருப்பது தவறு. சீக்கிரம் போ" என்று சொல்லவே, நல்லசாமி அந்தத் தந்தியை எடுத்துக்கொண்டு ஆலயத்தை நோக்கிப் புறப்பட்டான். சிறிது தூரஞ் சென்றதும், மாமாவை வழியிலே சந்தித்து, "மாமா! தங்களுக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. ஐந்து மணிக்கே வந்துவிட்டது. இதுவரையிலும் வராமையால் எடுத்துக்கொண்டுவந்தேன்" என்று சொல்லித் தந்தியைக் கொடுத்தான். "ஐந்துமணிக்கே வந்துவிட்டதா? வெகு சீக்கிரமாக இருக்கிறதே. நாளைக்குத்தான் வருமென்று நினைத்தேன்" என்று சொல்லிக்கொண்டே அந்தத் தந்தியைப் பிரித்துப் பார்த்து மிக்க மனமகிழ்ச்சியினால் உடல்பூரித்தவராய், "பயலே! உன்னை அழைத்துப்போக நாளை மனுஷ்யரை யனுப்புவதாக எழுதியிருக்கிறார். திருநெல்வேலிக்குப் போகிறாயா? தனியாய் இருக்கமுடியுமா? நல்லபையன் என்று பேரெடுக்கவேண்டும், கெட்ட பிள்ளைகளோடு சேர்ந்து தறிதலையென்று சொல்லும்படி திரியாதே" என்று இவ்விதம் மருமகனுக்குப் புத்திபுகட்டிக்கொண்டபடியே அதிவேகமாகச் சிதம்பரநாத முதலியார் தமது வீட்டுக்கு வந்தார்.

"சுபகாரியங்களைச் சீக்கிரமாகவே செய்யவேண்டும்."

அப்போது, கூடத்திலே போட்டிருந்த ஊசலிலுட்கார்ந்து சிவரகசியம் என்னும் இதிகாசத்தைப் படித்துக்கொண்டிருந்த அம்மணியம்மாள் தமையனைக் கண்டதும் எழுந்திருந்து, 'தந்தியில் விசேஷமுண்டோ?' என்று வணக்கமாகக் கேட்க, "ஆம், நல்லசாமியை யழைத்துப்போக நாளை உதயத்திற்கு இங்கே முதலியாரவர்கள் காரியஸ்தர் திருநெல்வேலியிருந்து வரப்போகிறார். வியாழன் தெற்கே சூலம். வெள்ளி சனிக்கிழமைகள் அவ்வளவு சிலாக்கியமான நாட்களாக இல்லையாம். ஆகையால், நாளைப் புதன்கிழமை சாயங்கால வண்டிக்கே பையனை யனுப்ப வேண்டுமென்று கண்டிருக்கிறது. சுபகாரியங்களைச் சீக்கிரமாகவே செய்யவேண்டும். அனுப்பலாமல்லவா?" என்று முதலியார் தமது சகோதரியை நோக்க, அந்த அம்மாள், "என்னைக் கேட்பானேன்? மனம்போல அனுப்புங்கள், 'கைம்பெண் வளர்த்த கசடன்' என்று பேரெடுக்காமல், குழந்தை நாலெழுத்துப் படிக்கும்படியாயிருப்பதை நான் ஏன் தடை செய்யவேண்டும்? இஷ்டப்படியே அனுப்புங்கள். போகும்போது நல்லதாக இரண்டு அங்கவஸ்திரம் வாங்கிக்கொடுங்கள். இருப்பதெல்லாம் கிழிசல். உடுத்திக்கொள்ள [illegible]யாமலிருக்கிறது" என்று சொன்னான். "இரண்[illegible] நாலாக வாங்கிக்கொடுக்கிறேன். துணிக்குக்கூடவா பஞ்சம் வந்துவிட்டது. அஃதிருக்கட்டும்.

"அரைக்கீரையில் பிரியம் அதிகம்."

தகுந்த இடத்திலிருந்து வருகிறபடியால் நாமும் ஏற்றபடியாக அவர்களை உபசரிக்கவேண்டும். அந்தப் பக்கத்தார்க்கு அரைக்கீரையில் பிரியம் அதிகம். வாச

[illegible]தால் வாங்கி வை. ஆம்பிரவதியில்தான் ஸ்நானத்துக்குப் போவார்கள். எதற்கும் கொஞ்சம் வெந்நீரும்போட்டு வை. ரயில் 8-மணிக்கு இங்கே வருகிறது. பலகாரம் பண்ண முடியுமானால் பண்ணு. இல்லையானால் காப்பி மாத்திரம் சித்தமாக இருக்கட்டும். கிறுமலைப்பழம் வாங்கி வைத்திருக்கிறேன், போதும். சமையல் பத்து மணிக்குள்ளாக நடக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டுச் சிதம்பரநாத முதலியார், மறுநாள் ரயிலுக்குப்போக வண்டி திட்டம் பண்ணுவதற்காக வெளியே போய்விட்டு, இரவு 10-மணிக்குத் திரும்பிவந்தார். வந்ததும் எல்லாருமாகப் போஜனஞ் செய்ய உட்கார்ந்தார்கள். சாப்பிடும்வேளை தொடங்கி நித்திரை போகும்வரை இவ்விஷயத்தைப் பற்றியே வீட்டிலுள்ள எல்லாரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"வாருங்கள்."

சிதம்பரநாத முதலியார் அதிகாலையிலேயே எழுந்திருந்து காலைக்கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு, கடைக்குப்போய் விருந்துக்குவேண்டிய கறிகாய்களையும் பழவகைகளையும் வாங்கி வீட்டிற்கனுப்பிவிட்டு எட்டடிப்பதற்குச் சிறிது முன்னாகவே முதனாளிரவு திட்டஞ்செய்து வைத்திருந்த குதிரைவண்டியில் ஏறிக்கொண்டு ரயிலடியிற்போய்க் காத்துக்கொண்டிருந்தார். எட்டடித்துப் பத்து நிமிஷத்திற்கெல்லாம் வண்டியும் வந்துவிட்டது. இரண்டாவது வகுப்பிலிருந்து ஒரு பெரிய மனுஷ்யரும், அவரது நிலைமைக்குச் சிறிது தாழ்ந்தவரென்று மதிக்கக்கூடிய மற்றொருவரும் கீழே இறங்கினார்கள். சிதம்பரநாத முதலியார், அவர்களைக்கண்டு வணங்கித், 'தாங்கள்தாம் திருநெல்வேலியிலிருந்து வருகிறீர்களோ?' என்றுகேட்க, 'ஆம். நாங்கள்தாம். நான் முதலியாரவர்களது மைத்துனன். இவர் எங்கள் குடும்ப காரியஸ்தர். [illegible]ப்பிள்ளையை அழைத்துப் போவதற்காக வர்[illegible]' என்று அவ்விருவர்களில் பிரதானமாகக் [illegible]ட்டவர் பதிலுரைத்தார். 'நிரம்பவும் ஸந்தோஷம். தங்களுடைய மாப்பிள்ளையென்று சொல்லும்படியான அவ்வளவு பெரிய பாக்கியம் நல்லசாமிக்கு இவ்வளவு சமீபத்திலிருப்பதை நாங்கள் தெரிந்துகொள்ளவில்லை. ஏழையென்பதொன்றைத்தவிரப் பையனுக்கு வேறு ஒரு குறையுமில்லை. மகா புத்திசாலி. முகத்தில் லக்ஷ்மீ விலாசமிருக்கிறது. என் மருமகப் பையனென்று நான் சொல்லவில்லை. உள்ளபடி அவன் மகாகுணசாலி. அதிர்ஷ்டமும் அதற்கேற்றபடி ஒத்திருக்கின்றது. வாருங்கள். நாழிகையாகிறது. வெகுதூரத்திலிருந்து வருகிறீர்கள். போஜனத்துக்குப் பிறகு சாவகாசமாய் வார்த்தை சொல்லிக்கொள்ளலாம். யாரடா, வண்டிக்காரன் சமான்களை வண்டியிலெடுத்துவை. தாங்கள் வண்டியிலேறிக்கொள்ளலாம்' என்று விநயமாக வார்த்தை சொல்லி அவ்விருவர்களையும் தம் வீட்டிற்கு அழைத்துவந்தார்.

"விருந்துபசாரம்"

வண்டியைவிட்டுக் கீழே இறங்கியதும் சிதம்பரநாத முதலியார் அவ்விருந்தினரிருவர்களையும் உள்ளே அழைத்துக்கொண்டுபோய்க் கூடத்தில் விரித்திருந்த உயர்ந்த ரத்னகம்பளத்தில் உட்காரும்படி செய்து ஒரு வெள்ளித்தட்டில் தாம்பூலம் கொண்டுவந்து வைத்துவிட்டு, 'இன்று ஸுதினம். தங்களைப்போன்றவர்களுடைய தரிசனமும், பரிச்சயமும் எனக்குக்கிடைத்தது. எல்லாம் பெரியவர்களுடைய அனுக்கிரகந்தான்' என்று சொல்ல, 'எங்களுக்குமுன் தாங்கள் முந்திக்கொண்டீர்கள். இவ்வளவும் நாங்கள் சொல்லவேண்டிய வார்த்தைகள். உங்களைப்பற்றியும், உங்களுடைய முன்னோர்களைப்பற்றியும் நாங்கள் வெகுவாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். உங்களுடைய சம்பந்தம் இப்போது கிடைத்ததைப்பற்றி நாங்கள் அடைந்துள்ள ஸந்தோஷத்திற்களவில்லை. இந்த ஸம்பந்தம் மேன்மேலும் அபிவிருத்தியடையும்படி பகவான் கிருபை செய்யவேண்டும்' என்று முதலியாரது மைத்துனராகிய சாலிவாடீசுர முதலியாரும் உபசாரமாகச் சொன்னார். இவ்விதம் சிறிது நேரம்வரை அவ்விருவரும் அளவளாவிக்கொண்டிருந்தார்கள். பிறகு எல்லாருமாக ஆம்பிரவதி நதியில் ஸ்நானஞ்செய்து, பூஜையை முடித்துக்கொண்டு போஜனத்திற்குட்கார்ந்தார்கள். பொரியல், அவியல், வறுவல், துவையல் முதலிய கறிவகைகளும், வாழை, மா, பலா முதலிய கனிவகைகளும், லட்டு ஜிலேபி முதலிய பக்ஷணவகைகளும், சித்திரான்னங்களும் தேவாமிர்தமாகச் செய்யப்பட்டிருந்தன. விருந்தினரிருவரும், "இதென்ன, பிரமாதமாயிருக்கிறதே! இன்னதைச் சாப்பிடுகிறதென்றுகூடத் தெரியவில்லை. ஒன்றுக்கொன்று சுவையுள்ளதாயிருக்கிறது. எங்கள் பக்கத்தில் கலியாணகாலத்திலேகூட இவ்வளவு செய்யமாட்டார்கள், செய்யவுந் தெரியாது. சாப்பிடுவதற்கு வயிற்

றில் இடமில்லையே யென்ற குறைதான் பெரிதாக இருக்கின்றது" என்று சொல்லித் துதித்துக் கொண்டே திருப்தியாய்ப் போஜனஞ்செய்தார்கள். போஜனானந்தரம், நல்ல கலவைச்சந்தனத்தைப், போதும் போதும் என்று சொல்லும் வரையில் சிதம்பரநாத முதலியார் தம் கையாலேயே அவ்விருவர்களுக்கும் பூசி, மற்றவர்களுக்கும் கொடுத்து, நல்ல சுருள்பாக்கும் வெற்றிலையும் கொண்டுவந்து வைத்தார். சாலிவாடீசுர முதலியார் தமக்கு நடக்கும் உபசாரங்களைக் கண்டு, பரமஸந்தோஷத்தை யடைந்தவராய், "நாங்கள் மூன்றரைமணி வண்டிக்கே புறப்படவேண்டும். அப்போதுதான் நல்லவேளை, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து எங்களை யனுப்பவேண்டும்" என்றுசொல்லச் சிதம்பரநாத முதலியார், "அப்படியே. மூன்றுமணிக்கே வண்டி கொண்டுவரச் சொல்லுகிறேன். இன்னும் இரண்டுநாள் இருந்துவிட்டுப் போகலாம்: அப்புறம் நல்லநாளாக இல்லை யென்று சொல்வதால், நான் தங்களை நிர்ப்பந்திப்பதற்கு முடியவில்லை. நல்லது, தாங்கள் கொஞ்சம் சிரமபரிகாரம் பண்ணிக்கொள்ளுங்கள்" என்று சொல்லி நல்ல விரிப்புக்களைக் கொண்டுவந்து போடவே, அவ்விருவரும் சிறிதுநேரம் அதிற் படுத்து நித்திரை செய்தார்கள்.

"இனி இவன் உங்கள் பையன்."

மூன்றடித்ததும் வண்டி தயாராக வந்துவிட்டது இதற்குள் சிதம்பரநாத முதலியார் தம் மருமகனுக்கு வேண்டிய சில சாமான்களை வாங்கிக்கொடுத்துப் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார். சாலிவாடீசுர முதலியார் நித்திரை தெளிந்து எழுந்திருந்தும், "ஊருக்குப்போய் வர அனுமதி கொடுக்கலாமல்லவா?" என்றதும், "சரி, இஷ்டம்போற் செய்கிறது. இரண்டாம் வேளைக்குச் சிறிது ஆகாரம் பண்ணிக்கொள்ளுங்கள்" என்று சிதம்பரநாத முதலியார் சொன்னார். 'ஒன்றுமே வேண்டாம். இன்னும் நாலுநாளைக்கு எங்களுக்குப் பசிக்காது' என்று அவர்கள் என்ன சொல்லியும் கேட்கவில்லை, பிடிவாதமாக, ஏதாவது சிறிது சாப்பிடத்தான் வேண்டுமென்று கட்டாயப் படுத்தினதின்மேல் அவர்கள், கொஞ்சம் காப்பியை மாத்திரம் சாப்பிட்டுவிட்டுப் பிரயாணப்பட்டார்கள். சிதம்பரநாத முதலியார் தம் மருமகப்பையனை யழைத்துச் சாலிவாடீசுவர முதலியாரிடம் ஒப்பித்துத், "தந்தை நாதனித் தாயும் நீயிவர்க்-கெந்தை தந்தனன் இயைந்த செய்கென்றான்" என்று சொல்லித் தசரத சக்கரவர்த்தி ஸ்ரீராமபிரானை விசுவாமித்திர மகரிஷியுடன் அனுப்பியதுபோல "இனி இவன் உங்கள் பையன். சிறிது ஏறத்தாழ நடந்தாலும் கண்டித்து நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவந்து வைக்கவேண்டிய கவலையும் பொறுப்பும் தங்களைச் சேர்ந்தது. அதிகஞ் சொல்வதற்கில்லை" என்று சொல்லி அவர்களோடுகூடவே ரயிலடிக்குச் சென்று அவர்களைப் பிரயாணப்படுத்தி அனுப்பினார்.

III

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங் கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."

'வரப்போகிற மருமகப்பிள்ளை.'

மறுநாட் காலை எட்டரைமணிக்கு வண்டி திருநெல்வேலிப் பாலம் போய்ச்சேர்ந்தது. சாலிவாடீசுர முதலியார் தம்மோடுகூட வந்தவரைப்பார்த்துப் பெட்டி படுக்கை முதலிய சாமான்களை எடுத்துவரச் சொல்லிவிட்டுத் தாம் நிமிஷமும் தாமதஞ்செய்யாமல், நல்லசாமியை யழைத்துக்கொண்டு, தங்களுக்காக வெளியேவந்து காத்துக்கொண்டிருந்த அழகிய பெட்டி வண்டியிலேறித் தெற்குரதவீதியிலுள்ள தங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். வண்டியை விட்டுக் கீழே யிறங்கியதும் காந்திமதிநாத முதலியார் வாசற்படியண்டை வந்து நல்லசாமியைப்பார்த்து "தம்பீ, வா. ஊரில் எல்லாரும் க்ஷேமமாக இருக்கிறார்களா?" என்று க்ஷேமம் விசாரித்தார். நல்லசாமியும் தக்கபடியாக விடையளித்துவிட்டு முதலியாரையும் அவர் மனைவியையும் மற்றும் அங்கிருந்த பெரியோர்களையும் நமஸ்கரித்துவிட்டு ஒதுங்கி நின்றான். பையனது குணத்தையும் அடக்கத்தையும் பார்த்து, எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். வரப்போகிற மருமகப்பிள்ளை யெப்படி யிருப்பானோ தெரியவில்லையே என்றி ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த முதலியாரது மனைவி அப்பையனைக் கண்டதும் கரைகடந்த சந்தோஷத்தை யடைந்து, அவனிடத்தில் அபிமானம் பாராட்டி அவனை உள்ளே அழைத்துக் கொண்டு போய்ப் பாலும் பழமும் கொடுத்துச் சாப்பிடச்சொன்னாள்; தலையைத் தைலம் தடவி வாரி முடித்துப்

பிச்சிப்பூவைக் கொண்டுவந்து சூட்டினாள். இம்மட்டோ? பெட்டியைத்திறந்து விலையுயர்ந்த கடுக்கனை யெடுத்துப் பையனது காதிலணிந்தாள். மாப்பிள்ளை யென்ற அபிமானம் அப்பொழுது தொடங்கியே உண்டாகிவிட்டது. மனைவிக்குண்டாகிய அபிமானத்தைப் பார்த்து முதலியார் பரமானந்தமடைந்தாரென்பது சொல்லவும் வேண்டுமா?

பகவான் திருவருள்.

அடுத்த சோமவாரத்தன்று ஒன்பது மணிக்குமேல் நல்ல வேளை பார்த்து, நல்லசாமியைப் பள்ளிக்கூடத்திற் சேர்க்க வேண்டுமென்ற கருத்துடன், காந்திமதிநாத முதலியார் அப்பையனையும் அழைத்துக்கொண்டு இந்து காலேஜை நோக்கிப் புறப்பட்டார். பத்தடி தூரஞ் சென்றதும் இரண்டுபேர் பிராமணர்கள் எதிர்ப்பட்டு, "சாஸ்திரிகளே நான் சொல்லுவதைக் கேளும். பையனை ஏழையென்று பார்க்கவே வேண்டாம். தைரியமாய்ப் பெண்ணைக் கொடும்; ஏழை பணக்காரனாகிறதற்கும் பணக்காரன் ஏழையாகிறதற்கும் எத்தனை நாள் செல்லும்? குலங்கோத்திரம் நன்றாயிருக்கிறது. கண்ணுக்கு ராஜவடிவாயிருக்கிறான். சின்னஞ்சிறுபிள்ளை. குணசாலி. படிப்பில் வெகு துடியாயிருக்கிறான். அரை நிமிஷம் புத்தகத்தைக் கீழே வைக்கிறதில்லை. நாலைந்து வருஷத்திற்கெல்லாம் பெரிய ஹைகோர்ட்டு வக்கீலாக வந்துவிடுவான். நீர் ஒருவர் பேச்சையுங் கேளாமல் பெண்ணைக் கொடுத்து விட்டு மறுகாரியம் பாரும்" என்று தம்முட் பேசிக்கொண்டுவந்தார்கள். முதலியார் அவ்வார்த்தைகளைக்கேட்டு, "நம்மை நோக்கிப் பகவான் இந்தப் பிராமணர்முகமாகக் கட்டளையிடுகிறாரே தவிர வேறில்லை" என்று நிச்சயித்து அதிக ஸந்தோஷமடைந்தவராய் அப்பையனை யழைத்துக்கொண்டு போய் இந்துகாலேஜில் நான்காவது பாரத்திற் சேர்த்துச் சம்பளம் முதலியவைகளையும் கொடுத்து விட்டு வந்தார்.

"முயற்சி திருவினையாக்கும்."

நல்லசாமியும் அன்றுமுதல் ஒழுங்காகப் பாடசாலைக்குப்போய்க் கவலையுங் கருத்தும் வைத்துத் தன் பாடங்களைப் படித்துவந்தான். கலாசாலைக்கு நேரங் கழித்துப் போதல், போகாமல் நின்றுவிடுதல், வகுப்பிற் சந்தடி செய்தல், உபாத்தியாயர் பாடஞ்சொல்லும்போது பராக்கா யிருத்தல், கெட்டபிள்ளைகளோடு கட்புச் செய்தல் முதலிய துர்க்குணங்கள் ஏதுவும் நல்லசாமியிடத்திற் காணப்படவில்லை. நாள் தவறாமல் குறித்த நேரத்தில் பள்ளிக்கூடஞ் சென்று மிகவும் அமரிக்கையாய் உபாத்தியாயர்க்குக் கீழ்ப்படிந்து, அவர் சொல்வனவற்றைக் கவனமாய்க் கேட்டு ஞாபகத்திலே வைத்தும், முக்கியமான அம்சங்களைக் காகிதத்திற் குறித்துக்கொண்டும், தெரியாதவைகளைக் கேட்டுத் தெரிந்தும், தனக்குத் தெரிந்தவற்றை மற்றப் பிள்ளைகளுக்குச் சொல்லியும் பாடங்களைச் செவ்வையாகப் படித்து வந்தமையால், நல்லசாமியினிடத்தில் உபாத்தியாயர் முதலிய எல்லாருக்குமே பிரீதியுண்டாயிற்று. சனி ஞாயிறு முதலிய விடுமுறை நாட்களை நல்லசாமி மற்றைப் பிள்ளைகளைப்போலச் சோம்பேறியாய் வீணிற் கழிப்பதில்லை. பழம்பாடங்களைச் சிந்தனை செய்வதிலும், வீட்டிற் பார்க்க வேண்டிய கணக்குக்களைப் பார்ப்பதிலும் செலவழிந்த காலம் போக, மற்றைக்காலங்களையெல்லாம் ஆலய வழிபாட்டிற் செலவழித்து வந்தான். இத்தனை காரியங்களுக்கு மிடையே நமது நல்லசாமி, முதலியாரின் புத்திரியாகிய சிவபாக்கியத்திற்கு நன்றாக எழுதப் படிக்கத் தெரியும்படி கல்வி கற்பித்துக்கொண்டும் வந்தானென்றால், நாம் அவனது விடாமுயற்சியையும், சுகுணத்தையும் பற்றி என்ன சொல்வது! அதிசீக்கிரகாலத்தில் 'நல்லசாமி' என்று பெரியோரிட்ட பெயரைக் காரணப்பெயரென்னும்படி செய்துகொண்டான். காந்திமதிநாத முதலியாருக்கும் அவரது மனைவி முதலிய மற்றையோருக்கும் நாளுக்குநாள் நல்லசாமியினிடத்தில் அதிகமான பிரீதி யுண்டாயிற்று.

We have, as promised in our letter of the 10th instant to the press, sent a marked copy of the *Vivekachintamani* containing our views on the important question of Rural Education to all educational officers and others in charge of Elementary Education, as well as Honorable Members of Council who are interested in finding a satisfactory solution of this problem; and we re-print a review of the article on Rural Education that appeared in the October issue for the information of those whose knowledge of Tamil together with the pressure of business on their time, will not permit of their reading and grasping the points therein presented for consideration.—*Ed.*, "*V.C.*"

A Review of the Article in the "Viveka-chintamani."

The October issue of the *Vivekachintamani* opens with an Article on the Reform of Rural Education in which the Editor passes in review the present system of Elementary Education in schools and the waste resulting therefrom. It has been said that Children form the greatest wealth and asset of a nation and this truism is trebly more correct at the present juncture when the blood of the adults are being poured like water in sea and land.

'The people' form one of the four chief constituents of the 'State' and their officiency is therefore one of the important factors on which the efficiency of the State depends. From this necessity of "efficiency" of the people in the well-being of the State, he proceeds to classify the life of the people as "Country-life and City-life," giving the chief characteristics that distinguish them. He then draws attention to the education "suited for country-life" and that "suited for city-life," there being no good done to the country-people by the "inefficient system of education" that is now imparted in all elementary schools throughout the Presidency, deducing the same from observations made by himself as well as those in charge of Elementary Education. He then draws pointed attention to the importance of "the letter and the spirit" in the teaching of Children and exposes the defects of "Cramming" and of a purely intellectual system of training unrelieved by a corresponding cultivation of the heart which is the true basis of moral power and growth of character. He also asserts and illustrates the dictum of Emerson that "Intellect is a whore' and gently passes on to a consideration of "Village Life" as "the basis of national-life" and of the true prosperity of the country.

He then refers to the waste of life which the present inefficient system of Education produces in rural-life and the resort more and more to town-life which is detrimental to the true interests of the people as well as of the country. He alludes in passing to the Hon'ble Sir C. Sankaran Nair's grasp of the Problem as evidenced by his published writings and pronouncements on Education and urges the importance of reforming Rural Education so as to place "Village-life on a sound and self-contained basis. He has himself worked for many years in the field maintaing an Agency for the Diffusion of knowledge these 25 years and "has done much practical work" through that Agency "and by means of his excellently conducted periodical, the "Vivekachintamani."—so well acknowledged by the public and by the late Mr. Henry Beaucahamp who as long ago as 1898, considered him to have established a claim to make his voice heard" in matters invelving "the promotion of a deeper and wider knowledge of the indigenous languages of the people in this part of India." The writer has now worked for 30 years in the field of Vernacular literatnre and to his experience therein gained has brought to bear on the subject, the result of ten years of continued work in Social Service.

The late Mr. Justice Ranade of Bombay with his mature experience and judgment of work done in the same field wrote to say that Mr. Swaminathaiyar has practically carried out the suggestion which the leader-writer in the *Madras Mail* made in reviewing his essays on "Vernacular Studies in Madras" first published in 1898, and he added: "you will have to be disappointed of the result of that experiment, but as I have already written to you, such disappointments are inevitable. You should make another experiment under more favourable circumstances. I feel sure you will succeed."

That opportunity which he was so long waiting for, arrived, he thought, when the Hon'ble Mr. Stone, now Director of Public Instruction, advised him to convert the magazine again into a school-journal promising that he "will do all in his power to help it forward to attain its former position among schools." We recently noticed in our columns the appeal issued by the Educational Committee of the Children's Movement and we now understand that the supply of copies of the journal to schools has been recommended by educational officers of the Department. It now remains for the Local Bodies and Managers of aided institutions to make up their minds and to supply every one of the Elementary and Lower Secondary Schools under their control with a copy of the *Vivekachintamani* and thus help the Editor in pushing his present work through to success. We understand that the Editor has pledged his word to give up the support the journal was enjoying from the general public for years in order "to minister solely to school boys" as it was suggested to him and we trust that he will not be made to suffer for his faith in a cause to which he has consistently devoted himself for 30 years, giving the best part of his life, time and talents in the service of it which has few of the attractions of worldly life and demands an amount of self-saficing labour which the ascetic spirit alone can well render and endure without loosing heart or hope.

REFORM OF RURAL EDUCATION.

To the Editor of the "Madras Mail."

SIR,—I am sure that all good thinkers and true educationists will welcome the movement in favour of encouraging vernacular education which is being slowly recognised by practical administrators. In 1898 I contributed a series of essays on "Vernacular studies in Madras" to the *Madras Mail*, which attracted the attention of the then Governor of Madras, Sir Arthur Havelock, and all prominent educationists from Dr. Miller downwards. It was republished in pamphlet form. The views therein set forth have now been accepted by Sir Harcourt Butler from his place in the Viceroy's Council, and his successor in office, I have reasons to believe, attaches the greatest importance to the reform of rural education. I am devoting the current issue of the *Vivekachintamani* to the question of rural education, and am giving therein some thoughts and reflections" which occurred to me in the light of my thirty years' work in the field of vernacular literature..

In this connection I desire to draw the attention of the public to the pronouncement of the Dewan of Travancore, whom I interviewed some months ago and who, I am glad to learn, has not allowed the grass to grow under his feet. Replying to an Address of Welcome presented by the people of Paravoor he is reported to have said:—"It is very important that people should appreciate the actual bearing of this momentous question in all respects. All over India there is a new sense of responsibility felt towards the vernaculars. The national consciousness has been awakened; the public have been roused to the extreme urgency of giving greater prominence to vernacular education." This in no way deprecated the importance of English education, but the enlightenment and uplift of the masses must come and can be effected only through the vernaculars. I wish this truth was realised and acted upon by those who are in immediate charge of Elementary education.

MADRAS, 20th November 1915. } C. V. SWAMINATHA IYER.

REFORM OF RURAL EDUCATION.

To the Editor of the "Hindu."

SIR,—In July 1913 I wrote a letter to the *Hindu* recording the thoughts which occurred to me on the question of "Vernacular study and composition" which was then vigorously discussed in your correspondence column. I therein summarised in brief my views on "popular vernacular literature" and remarked: "my views thus expressed 15 years ago, I see no reason to change in spite of the multiplication of books which I see and welcome as a sign of the times but which is not yet sufficiently developed to form a sign of 'healthy growth.' For, most of the young writers are poor in thought, poorer in the method of giving expression to what little they are able to think." Since then, I have been actively engaged in diagnosing the defects in the present system of Indian Education and the conclusion I have come to has been confirmed by no less an authority than the late able Secretary of the S. I. Teachers' Union, whose remarks it will be interesting to quote here:

"I am glad that you have made a correct diagnosis of the defects in the present system of Indian Education. In spite of the many improvements that have recently been made, it has to be said with regret that there is still a good deal of the forcing in of the so-called knowledge-matter, instead of the drawing out and invigorating of the faculties of children by cultivating their observation in new field of God's glorious work."

This system of "forcing in" is particularly disastrous in its results on the children of rural population, whose natural powers of observation are dulled by the grinding in of indigestible stuff which passed muster for "knowledge," the word "practical" added to it being merely an embellishment, as no "knowledge" which the mind cannot grasp and assimilate can have any the least-practical effect on the life of the child. I therefore resolved to devote myself to the question of child education and, on the promise of help given to enable me reach all

the Elementary and Secondary Schools in Tamil Districts, I took the pledge of giving up the support which the *Vivekachintamani* for years was enjoying from the general public with a view "to minister to the school boys entirely." I have since travelled to some extent and observed much as to what is being done in the name of Elementary Education in rural parts. As you are aware, Sir, I am one of those who do not believe in destructive criticism, though it has its own value on occasions. What we want is constructive talent—to take up things as they are and set about reforming them so as to bring them within the scope of those divinely operating Laws of Nature which govern all healthy growth. In this constructive work we need the co-operation of all.

"The work of educating the masses" as I at first observed and have since been repeating again and again, "is such a large one that it could not be satisfactorily performed either by the Government or the educated classes working alone. It is a gigantic work which would absorb all the energies and resources of both the Government and the educated classes; and therefore, what little of these, either of them could bring to it should be utilised in a cordial spirit of mutual help and co-operation, so that as little of the energies and resources employed for the prupose may be wasted as possible."

It is with this firm conviction of the needs of the situation, I readily took the pledge demanded of me, thereby placing myself materially to some extent at the mercy of those who are in actual charge and control of Elementary and Lower Secondary Education, relying however on the pledge of active support that was given by the head of the Educational Department.

It is not an easy thing to retrace one's steps and the science of tacties will teach any one who has carefully studied it that in any "forward movement" (of whatever kind it may be) it is far more costly and disastrous to retrace one's steps than to stick to one's position and fight to maintain it to the last.

Having therefore converted the magazine into a school-journal and pledged myself to work for school-children, it has become my bounden duty to carry on my work to the last; and though the resources and energies employed for the purpose are to a large extent wasted by the apathy and indifference of those in immediate charge of Elementary Education and the divided authority which pervades all through the rank & file, I feel greatly strengthened in spirit by the consciousness that the work is one which has to be done at any cost.

I am therefore glad to notice the pronouncement of the Dewan of Travancore on "Vernacular Education" which appeared in the telegraphic columns of the *Hindu* last night (9th) and I write this to say that I am devoting the current issue of the *Vivekachintamani* to elaborating in Tamil the few thoughts and reflections which occurred to me as the result of my practical experience in the work of educating the masses for a quarter of century now.

I hope to be able to send you Sir, and to all interested in solving the knotty problem of Rural Education an advance copy of the current number for the expression of their views thereon; but I cannot let slip the present opportunity of calling prominent attention to the hold that the important question of Vernacular Education is taking on the minds of practical administrators and statesmen. My views which I put forth in 1898, have now found acceptance in the highest counsels of the realm. Sir Harcourt Butler from his place in the Viceroy's Council and the Hon'ble Mr. Sharp, the Able Educational Secretary, have both given expression to their views which practically endorse what I said 20 years ago. But it is to be remembered that "the question has a social as well as an educational side to it" and mere "experts" are apt to forget this. Dewan Bahadur M. Krishnan Nair has hit the nail on the right head when he said that "the national consciousness has been roused," and it demands a correct and immediate solution of the problem of Vernacular Education no one can deny. But this can never be done without a proper reform of Rural Education of which more anon.

MADRAS, 10th November 1915. } C. V. SWAMINATHAIYAR, Editor of the *Vivekachintamani*.

"A GOOD BOOK IS THE PRECIOUS LIFE-BLOOD OF A MASTER-SPIRIT IMBALM'D AND TREASUR'D UP ON PURPOSE TO A LIFE BEYOND LIFE."

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** "Approved"

புத்தகம். 23.] ராக்ஷஸ௵ மார்கழி௴, 1915௵ டிஸம்பர்௴ [சஞ்சிகை 9.

"A GOOD BOOK IS THE PRECIOUS LIFE-BLOOD OF A MASTER-SPIRIT IMBALM'D AND TREASUR'D UP ON PURPOSE TO A LIFE BEYOND LIFE."

A GOOD BOOK.

We take the following from the preface to the fourth and improved edition of Kamalambal (Tamil-Text for the Preliminary-Examination for Teacher's Certificates, Elementary Grade.) which speaks for itself :—

"It is now five years since the last edition of this book was issued and many things have happened during that period, calculated to change the phase of life. A "new angle of vision" to look at, has become absolutely necessary for all, whether they be individuals or nations. But the moral worth and sanctity of a GOOD BOOK remains the same.

It has well been said that "Many a man lives a burden to the Earth ; but a GOOD BOOK is the precious life-blood of a master-spirit imbalm'd and treasur'd up on purpose to a life beyond life. 'Tis true no age can restore a life, whereof perhaps there is no great loss ; and revolutions of ages do not oft recover the loss of a rejected truth, for the want of which whole nations fare the worse. We should be wary therefore what persecutions we raise against the labours of public men, how we spill the seasoned life of man preserved and stored up in books."

If the stirring events of the time and the 'cosmic desolation' of this 'war of attrition' we are now going through, teach men how to understand and appreciate 'the sanctity of good books' and make them wary of the consequences to whole nations perhaps, 'of what persecutions they raise against the labours of public men' they would not have happened in vain.

I therefore make no apology for dedicating this fourth and improved edition by inspiration of the Grace that guides the footsteps of nations as well as individuals to those True Servants of God who having no wants of their own to satisfy, work for the good of their fellow-men and the ultimate uplifting of social life by their silent and unobtrusive, yet none the less effective, labours in the cause of humanity.

The question of Rural Education demands the immediate attention of statesmen and publicists and the editor having pledged himself to work for school-children cannot do better than call pointed attention to this composite picture presentation of Rural Life with all its excellences, faults and frailties, and yet so sound at the core of it.

From the pleasant chit-chat of happy Home Life with which it starts to the great catastrophe which it gradually leads up to and the final Triumph of Faith and Goodness over heart-rending persecutions of petty, selfish minds, and its coming *out of all* the trials and tribulations of life 'well-seasoned' and shining resplendant with the *glory* of the *Light* that lighteth every heart, bringing with it an ever-enduring presence of peace and emancipation,—from the playful chit-chat beginning to the serious and calm and blissful end, it is one panoramic view presenting a composite picture which is a true and faithful reflection of Rural Life embracing the actual in the Ideal and,the Ideal in the Actual, merging the "new angle of vision" in that holy magnetic Centre of the Magic Circle (of Life) which gives an all-round and truly pervasive vision that sees through the appearance of things to the *reality* at the core."

THE HON'BLE SIR HAROLD STUART ON EDUCATIONAL EFFICIENCY.

"NEARER TO GRACE."

"This is not perhaps an opportune time to press the claims of general education, when a people who were probably the best educated in Europe have plunged the world into the greatest War in history, not to defend or advance any noble ideal but in a spirit of egotism of the basest and most brutal type; and when, added to this, we find them committing atrocities which would have disgraced the dragons in their time, we may well pause and ask whether education and culture are indeed blessings, whether the simple and kindly unlettered peasant is not nearer to Grace than the highest product of the University . . . .

"THINGS OF THE SPIRIT"

To-day most of you have completed the long educational course to which you have devoted the years of childhood and youth. The struggle for all but the brilliant few has been a hard one and behind this hour of success are many hours of self-denying toil, much self-restraint in preferring to live laborious days rather than seek worthless pleasures, a vast amount of patience and persistence in grappling with obstacles both intellectual and moral. These influences on character are of greater value than the knowledge you have accumulated or even the practice of thinking and precise expression which you have no doubt acquired, and *it is regrettable that our system of test by literary examination gives no weight to those things of the spirit.* If it did, perhaps, a good many of those who at one stage or the other have fallen out of the race would be in your ranks to-day. Let us at least send them a message of sympathy and encouragement. Not all in vain have been their labours, not altogether useless their unsuccessful fight:

> *Great is the facile conqueror;*
> Yet haply he who wounded sore,
> Breathless, unhorsed, all covered o'er
> With blood and sweat,
> Sinks foiled, but fighting even more,
> Is greater yet.

"WASTEFUL OF VALUABLE YEARS."

The wonder to me is not that so many fail but that so many succeed; for the great majority of you *have been compelled to receive your education through the medium of a foreign language.* This opens up a subject on which men much more competent than I am to form a sound opinion hold divergent views but it seems to me very difficult to believe that 24 million Telugus and 18 million Tamils can receive all but the elementary stages of education through the medium of English. *You cannot change the mother-tongue of populations of that magnitude, and progress in the diffusion of education must be very seriously hampered if all teaching in the higher classes is to be given in a foreign language.* So much effort must be expended on trying to understand the language of the teacher that there is little energy left for grasping the substance of the lesson and such a system of education strikes the lay observer as *not only mechanical in method and result but wasteful of valuable years—years when the youthful mind is most open to impressions and receptive of ideas.* English must, of course, always occupy a most prominent place in the curricula of schools and colleges, *for it would be an evil day indeed for India if her doors ceased to be flung wide open to the glorious and shining influences of English literature, rich in noble ideas and glowing with inspiration to noble deeds.*

"CULTIVATE SERENITY OF MIND."

Cultivate a habit of serenity of mind. This is the advice given by one who was once Viceroy of India:

> Be quiet. Take things as they come;
> Each hour will draw out some surprise.
> With blessings let the days go home;
> Thou shalt have thanks from evening skies.

புஸ்தகம்-23.] [சஞ்சிகை-9.
"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."
ராக்ஷஸ ௵ மார்கழி ௴
விவேக சிந்தாமணி
December 1915-January 1916.
ESTABLISHED 1892

> "பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
> கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
> மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
> யாச்சரிய மோதா னவர்க்கு."

THE HON'BLE SIR HAROLD STUART ON EDUCATIONAL EFFICIENCY.

வித்யாப்பியாசம்: கடைத்தேறுமுறை. கனம் ஸர் ஹாரல்ட் ஸ்டேவர்ட் அபிப்பிராயம்.

'உயிர்நீங்கிய உடல்.'

சென்னை 'யூனிவர்ஸிடி' யென்னும் ஸர்வ கலா சங்கத்தின் வருஷாந்தக்கூட்டம் சென்ற நவம்பர்மீ 25உ வியாழக்கிழமை சாயங்காலம் கடலோரத்திலுள்ள 'ஸெனேட்' மாளிகையில் நடந்தேறியது. அப்பொழுது சென்னை கௌன்ஸில் மெம்பரும் கவர்னருடைய ஆலோசனை சபையின் வைஸ்-ப்ரஸிடெண்டுமாகிய கனம். ஸர் ஹாரல்ட் ஸ்டேவர்ட் அவர்கள் வித்தியாவிஷயமாய்ச் செய்யும் வழக்கமான பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தில் கடைத்தேறுவதற்கான வித்யாப்பியாச முயற்சி இன்னபடி இனியும் நடக்கவேண்டுமென்று குறிப்பிட்டுக் கூறினார். முதலாவது ஸர்வகலா சங்கமென்றால், பரீக்ஷை செய்வதும் பட்டமளிப்பதுமாயிருக்கும் ஸ்தாபனம் மாத்திரமாயிருப்பதன்று. அது உயிர் நீங்கிய உடல்போல வித்யாலக்ஷ்யம் இன்றி க்ஷீணித்துப்போம். 30-வருஷங்களுக்கு முன் சென்னைச் சர்வகலாசங்கம் இந்த ஸ்திதியில் தானிருந்தது. இப்பொழுதும் அது ஏறத்தாழ அந்நிலையைவிட்டு மேலேற முயற்சித்துவரினும் அதன் முயற்சி முற்றும் பலித்ததாகத் தோன்றவில்லை. ஸர்வகலா சங்கமென்றால் வித்யாகலை சோபித்துக்கொண்டிருக்கவேண்டும். அதற்கு வித்யா விற்பன்னரும் மாணாக்கரும் குருசிஷ்ய முறைபற்றி ஒத்துழைக்கவேண்டும். அப்படிப்பட்ட 'யூனிவர்ஸிடி' இன்னும் ஏற்படவில்லை. ஏற்பட்ட காலத்தில் அது உயிர்வாழ்க்கைக்கு இனியதோர் துணைக்கருவியாகவும் பிரஜைகளில் நகரமாக்கள் செய்முயற்சிக்கு வழிகாட்டியாகவும் இருந்து விளங்கும். அப்படிப்பட்ட ஸ்தாபனமிருந்தால் அது தேசத்தாருடைய மனோபாவங்களையும் அவர்களுடைய நடத்தைகளையும் நல்வழியில் செலுத்துவதாகவிருக்கும்.

ஒரு 'யூனிவர்ஸிடி' மாத்திரம் போதாது.

இவ்விராஜதானியில் 5-கோடி ஜனங்களிருக்கிறார்கள். இத்தனை ஜனத்தொகை மிகுந்துள்ள ராஜதானிக்குச் சென்னையில் ஒரு 'யூனிவர்ஸிடி' மாத்திர மிருப்பது போதாது. இது நிச்சயம். இந்தக்குறையைப்பற்றி ஸர் ஹாரல்ட் ஸ்டேவர்ட் அவருடைய நெருங்கிய சிநேகிதராகிய காலஞ்சென்ற திவான் பஹதூர் எஸ். ஸ்ரீனிவாஸராகவையங்கார் அவர்களோடு அடிக்கடி கலந்து பேசிக்கொண்டதுண்டு. எது எப்படியாயினும் வடக்கே இராஜமஹேந்திரத்தில் கோதாவரிநதிக்கரையில் தெலுங்கு தேசத்துக்கு ஏற்றதாய் ஒரு யூனிவர்ஸிடியும், தெற்கே கும்பகோணத்தில் காவேரி நதிக்கரையில் தமிழ் நாட்டுக்கேற்றதாக ஒரு யூனிவர்ஸிடியும் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். அந்த எண்ணம் இன்னும் பலிக்காவிட்டாலும் அவை

நடந்தேறப் பலவருஷங்கள் செல்லாவென்று நினைக்கிறதாக அவர் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார். சென்னை 'யூனிவர்ஸிடி' போய் விடலாமென்றே நினைத்தார்: இப்பொழுது சென்னை யூனிவர்ஸிடிக்கு பயமில்லையென்றும் ஒன்றுக்கு மூன்றாயிருந்துழைப்பது எல்லாவிதத்திலும் சாதகமளிப்பதாயிருக்குமென்றும் நினைக்கிறதாகச் சொன்னார். சிலர் உயர்தரவித்தையையே ஆதரித்து வருவது வித்தியாலயத்தைத் தலையிலிருந்து கட்டிவருவதாகச் சொல்லி யிகழ்ந்திருக்கிறார்கள். அந்த உருவகம் அவ்வளவு நேராகவில்லை. உயர்தரவித்தையை காவேரியின் ஊற்றுக் கண்களுக்குச் சமானமாக ஒப்பிடலாம். ஊற்றுக்கண்களில் நீர்ப் பெருக்கெடுத்தால் அவை இழிந்து நதி வழியாகப் பிரவாகிக்குமேயன்றி நீரோட்டம் தலை நோக்கியோடத் தொடங்கிவிடு மென்கிற பயமில்லை. அதுபோல, உயர்தரவித்தை பரவப் பரவ கீழ்தரப்படிகளிலுள்ள வித்தையும் அதனால் பரவுமேயன்றி மற்றப்படி பாதகமொன்றும் விளைக்காது என்று சொன்னார்.

'வித்யா லக்ஷியம்.'

இந்த சந்தர்ப்பத்தில் பொதுவாய் வித்யா முயற்சியின் பயனைப்பற்றிப் பேசலாமென்றால் அதற்குக்காலம் ஏற்றதாகவில்லை. ஏனென்றால் ஜெர்மானியர் வித்தையில் தேர்ந்தவர்கள் என்றும் வித்தியாப்பியாசத்திற் சிறந்தவர்களென்றும் பேரெடுத்தவர்கள். அவர்களுடைய கல்விச்சிறப்பின் அழகு இப்பொழுது நடக்கும் யுத்தத்தினால் வெளியாகிவிட்டது. யாதொரு உந்நதலக்ஷியமுமின்றி அகம்பாவச் செருக்கு தலைக்கேறி 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்று வல்லடி வழக்குரைத்து உலகெலாம் பரவியுள்ள மஹாபெரிய பார்ஹதப்போர் விளைத்தது அவர்கள் தான். ஆதலால் வித்யா முயற்சியின் பயனைக்கருதி அதன் லக்ஷியம் எப்படியிருக்கவேண்டுமென்று விசாரிக்கப் புகில் அதற்குக் காலம் போதாது. ஆகையால் அதைவிட்டு ஜெர்மன் முறையில் நல்லதாயுள்ள சாதனங்களெல்லாம் பின்னால் நாகரிக விர்த்திக்குக் காரணமான வித்யாமுயற்சி செய்வதில் உபயோகப்படுமென்று மட்டும் எண்ணுவதாகச்சொன்னார்.

'உயிர்வாழ்க்கைக் குற்றதோர் துணை.'

வித்யாபட்டம் பெற்ற வித்யார்த்திகளைப் பார்த்து அவர்கள் இதுவரையில் இடறுகளைத் தவிர்த்துக் கொண்டே செய்து வந்த வித்யா முயற்சி அந்தமட்டும் பலித்து அவர்கள் வித்யாபட்டம் பெற்றதற்காகச் சந்தோஷமுகமன் கூறி, அவர்கள் படித்துள்ள ஏட்டுப்படிப்பிலும் இடறையென்று காரியத்தைச் சாதித்துக்கொள்வதில் அவர்கள் செய்து வந்த கடைப்பிடி முயற்சியால் அவர்களுக்குண்டான குணவிசேஷங்களும் ஸன்மார்க்க சாதனங்களும் உயிர்வாழ்க்கைக்கு உற்றதோர் துணையாகவிருக்குமாதலால் அதுவே மேலென்றும், பட்டம் பெறாதவர்கள் செய்த முயற்சியும் பட்டம் பெறுவதில் பலிக்காவிட்டாலும் அவர்களுடைய குணத்தையும் மனத்தையும் விசேஷ சாபல்யமுடையதாகச் செய்திருக்குமென்றும் சொன்னார்.

'அந்நியபாஷா நிர்ப்பந்தம்.'

பிறகு வித்யாபட்டம்பெற்றவர்களை நோக்கி, வித்யார்த்திகளில் அனேகர் வித்யாபட்டம் பெறத்தவறினது எனக்கு அதிசயமாகவில்லை; இத்தனைபேர்கள் தேறிவிட்டீர்களே, அதுதான் அதிசயமாயிருக்கிறது என்று சொன்னார். ஏனெனில் பிரதமவித்யாதரப் படிப்பில் சிறு பாகம் தவிர மற்றப்படிப் பெல்லாம் அந்நிய பாஷையில் படித்துத் தேறும்படியான நிர்ப்பந்தத்துக்குள்பட்டு நீங்கள் தேறியிருக்கிறீர்கள். தாய்பாஷையைவிட்டு அந்நியபாஷையில் சிறுவர்களுக்கு வித்யாபோதனை செய்யும் விஷயம் மிகவும் முக்கியமான ஒரு பெரிய விஷயம். அதைப்பற்றி அவரினும் நன்றாகமதிக்கக் கூடியவர்கள் அபிப்பிராய பேதப்பட்டிருக்கிறார்களென்று அவருக்குத் தெரிந்தாலும், ஒரு தேசத்தாரின் தாய்பாஷையை இம்மாதி

ரிப் பள்ளிப்படிப்பினால் மாற்றிவிடுவது சாத்தியமாயிருக்குமென்று அவருக்குத் தோன்றவில்லை. 2 கோடியே 40 லக்ஷம் தெலுங்கர்களும், கோடியே 80-லக்ஷம் தமிழர்களும் இவ்விராஜதானியிலிருக்கிறார்கள். இத்தனை பெரிய ஜனத்தொகையுடைய ஜனசமூகங்களின் தாய்பாஷையை பள்ளியில் அந்நியபாஷையை உபயோகிப்பதால் மாற்றிவிடலாமென்பது கூடாத விஷயம். அன்றி பாலப்பருவமுதல் அந்நியபாஷையில் வித்யாபோதனை செய்து வருவதால், போதகாசிரியருடைய பாஷையையறிந்துணர்வதில் செய்யவேண்டிய மனோ முயற்சி அபாரமானதாயிருக்கும். அதனால் மனம் களைத்திளைத்து போதிக்கப்பட்ட விஷயத்தைக் கிரஹித்துக்கொள்ளச் சக்தியற்றதாய் விடுமென்பது நிச்சயம்.

"விருதாகாலக்ஷேபம்."

இதனால் சிறுபிராயத்தில் மனப்பயிர்ச்சி குன்றி பள்ளிப்பருவத்தில் பெருங்காலம் விருதாவில் கழிகிறது. இப்படி விருதாகாலக்ஷேபமாகக் கழியும் காலம் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் மிகவும் உபயோகமானபடி மனப்பயிர்ச்சியில் செலுத்தப்படவேண்டும். அப்படிக்கின்றி அக்காலம் விருதாவில் கழியுமானால் அதனால் விளையும் தீங்குகளுக்குக் கணக்கில்லை. இதனால் இங்கிலீஷ்படிப்பு வேண்டியதில்லை யென்று சொன்னதாக அர்த்தமில்லை. இங்கிலீஷ் படிப்பு அவசியம் வேண்டியதுதான். ஆனால் அது பாஷாவிர்த்திக்குவேண்டிய மட்டிலும் அதிலுள்ள உத்சிரேஷ்டமான இலக்கிய கிரந்தங்களைப் படிப்பதில் உபயோகிக்கப்படவேண்டும். இது ஸ்வபாஷாவிர்த்திக்கு அனுகுணமாகவிருக்க வேண்டுமேயன்றி அதற்கு இடையூறாக விருக்கக்கூடாது.

"இதென்ன விபரீதம்."

இப்படி விவேகிகள் யாவராலும் கண்டிக்கப்படும் வித்யாமுறை இன்னமும் பிரபலமாகவேயிருந்து வருகிறது. சென்ற நவம்பர் 23உ முதல் கூடிய சட்டநிருபணசபை மீட்டிங்கில் கனம் மிஸ்டர் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் அவர்கள் திருவல்லிக்கேணியிலுள்ள கவர்ன்மெண்டு பெண்பாடசாலையில் எந்த பாஷையில் படிப்புச் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று கேட்டதற்கு, கனம். வித்யா இலாகாத்தலைவர் மூன்றாவது ஸ்டாண்டார்டு முதல் அதற்குமேலெல்லாம் இங்கிலீஷிலே எல்லாப்பாடங்களும் போதிக்கப்பட்டு வருகின்றனவென்றும், அப்படிப் போதிக்கச்செய்ய எடியுகேஷனல் கோட் 69-வது விதி வித்யா இலாகாத்தலைவருக்கு யுக்தமென்று தோன்றுகிறபடி செய்ய அதிகாரம் கொடுத்திருக்கிறது என்றும் சொன்னார். அன்றி அப்பள்ளியிற் படிக்கும் பெண்களின் பெற்றோர்கள் அவர்களுடைய பெண்மணிகள் இங்கிலீஷில் எவ்வளவு படிக்கலாமோ அவ்வளவு படிக்கவேண்டுமென்று விரும்புவதாலும், பெண்கள் பள்ளியிற் படிக்கும் பருவம் சொற்பமாயிருப்பதாலும் அப்படிச்செய்து வருவதே யுக்தமென்று நினைக்கிறதாகச் சொன்னார்.

"சம்பிரதாயத்தை மாற்றுவது எளிதல்ல."

"இதென்ன விபரீதம்! குழந்தைகள் இங்கிலீஷ்படிக்க வேண்டுமென்றால பாலப்பருவம் முதற்கொண்டு அந்நிய பாஷையில் எல்லாப் பாடங்களையும் போதித்து வந்தால் அவர்களுக்கு என்ன மனப்பயிர்ச்சி தேறப்போகிறது! புத்தி மழுங்கிப் போய்விடாதா?" என்று பலர் நம்மைக் கேட்கிறார்கள். இது உண்மைதான். ஆனால் ஒருவித வித்யாமுறை ஏற்பட்டுப் பிரபலமாக அனுஷ்டானத்துக்கு வந்து விட்டால சம்பிரதாயத்தை மாற்றுவது எளிதல்லவே. இடீரென்று எல்லாப்பாடமும ஸ்வபாஷையில் தான் போதிக்கவேண்டுமென்று ஏற்பட்டால் ஸ்வபாஷாஞானமில்லாத வாத்தியார்களையெல்லாம என்ன செய்கிறது! அதற்கேற்றபடி புதுவாத்தியார்களைத் தேடி நியமிக்கும் அபாரமான பொறுப்பை யார் வகிக்கிறது? இதெல்லாம மஹாஜனங்கள பெருமுயற்சியினாலும உற்சாகத்தோடு கூடிய ஊக்கத்தினாலும

நடக்கவேண்டியகாரியம். 'உற்சாகமும் ஊக்கமும் மாமூல்முன் செல்லுமா?' என்று ஒரு கேள்வி பிறக்கிறது. வித்யா இலாகாத்தலைவருக்கு பாலர்க்கு அந்யபாஷையில் போதிப்பது தப்புமுறையென்று சொந்தத்திற் பட்டிருந்தாலும் அதை உத்தியோக முறையில் ஊர்ஜிதத்துக்குக்கொண்டு வருவது சுலபமான காரியமாயிருக்குமென்று அவருக்குத் தோன்றவில்லை.

பெற்றோர் கடன்.

காரியவிசாரணையில் ஆயிரங்கஷ்டங்களிருக்கலாம். அவையெல்லாம் தப்பான போதனைமுறையைச் சரியானதாகச் செய்யமாட்டா. ஆதலால் ஜனங்கள் தாமே சொந்தமுயற்சியால் பாலபோதசிக்ஷை பெறுதலில் தம் குழந்தைகள் ஸ்வபாஷைப் பயிர்ச்சியின்றி புத்தி மழுங்கிப்போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது. குழந்தைகளை முன்னுக்குக் கொண்டுவருவது பெற்றவர்கள் கடமை. சர்க்கார்செய்முயற்சி அதற்கு உபபலமாகவிருக்க வேண்டியது: அதற்குமாறாகவிருந்தால் அதைச் சீர்திருத்தி வழிக்குக் கொண்டுவரவேண்டியது மஹாஜனங்களுடைய கடமை. இக்கடமையை ஜனங்களுள் சிரேஷ்டர்களாயிருக்கிறவர்கள்தான் மேலெடுத்துப் போட்டுக்கொள்ள வேண்டும். அவர்கள் ஏனோதானோ வென்றிருந்தால் காரியம் கெட்டுப்போம்.

துச்சாதனங்களைப் பூண்டோடு களையவேண்டும்.

ஏனெனில் பாலப்பருவம் விருதாவில் கழிவது விளைநிலத்தில் புல்லும் புதரும் விளையவிடுவதற்கு ஒப்பாகும். பின்னால் களைபிடுங்குவது கஷ்டமென்பது மட்டுமல்ல. நிலத்தைப் பயிர் செய்வதே கஷ்டசாத்தியமாகப்போய்விடும். உதாரணமாக தண்ணீரில் மிதக்கும் 'Water Hyacinth' என்கிற ஒரு பிரபலமான பூண்டைப்பற்றி வியவசாய இலாகாத்தலைவர் நமக்கு அனுப்பியிருக்கும் விஷயத்தை மற்றோர் பக்கத்தில் அச்சிட்டிருக்கிறோம். அந்தப்பூண்டைத் தண்ணீரிலிருந்து அரித்தெடுத்துத் தரையில்போட்டால் போதாதாம். ஏனெனில் அதனுடைய வித்து கொஞ்சம் ஈரமுள்ள மண்ணில் விழுந்தாலும் பிழைத்திருந்து முளைத்துப் பரவிவிடுமாம். ஆகலால் அதை வேரோடு களைந்தெடுத்து உலரவைத்து தீயிட்டெரித்துவிட வேண்டுமென்கிறார். கரையான் பூச்சியும் இப்படித்தான் ஈரம்பற்றிப் பிழைத்திருந்து விர்த்தியாகிக் கட்டடங்களையெல்லாம் நாசம்செய்துவிடும். அவைபோல, குழந்தைகளில் பாலப்பருவத்தை உண்மையானபடி மனப்பயிர்ச்சி செய்வதில் உபயோகிக்காமல், அந்யபாஷையில் போதித்தல் முதலான துச்சாதனப் பிரயோகங்களால் விருதாவில் கழியவிட்டால் அதனால் மனம் என்னும் விளைநிலத்தில் 'Water Hyacinth' என்று சொல்லும் பூண்டைப்போன்ற துர்க்குணப் பூண்டுகள் முளைத்துப் பரவி என்றென்றைக்கும் மனத்தெளிவு சித்திக்காதபடி உள்ளுணர்வைக் கெடுத்துவிடும். இதனால் இகபரசாதனங்கள் பலிக்காமல் பிரதிநபர்களும் குடும்பங்களும் மட்டுமன்றி தேசமொத்தத்தில் ஜனங்களும் புத்திவிசாலமின்றி க்ஷீணகதி யடைவார்கள். இந்தக்குற்றம் ஏற்கனவே படித்தவர்கள் குடும்பத்தில தலைகாட்டிவருகிறது. ஆகையால் இதை உடனே வேர்களையவேண்டும் என்பது புத்திமான்கள் அபிப்பிராயம்.

அரசர் பிரதிநிதி, ஸர் ரவீந்திரநாத் தாகோர் இவர்கள் அபிப்பிராயம்.

இது எழுதியானபின் மேன்மைதங்கிய நமது இராஜப்பிரதிநிதியவர்களும் ஸர் ரவீந்திரநாத் தாகோர் அவர்களும் இதுவிஷயமாய் டிஸெம்பர் 10உ-யில் அவர்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டுப்பேசியிருக்கிறார்கள். மேன்மைதங்கிய லார்ட் ஹார்டிஞ்சவர்கள் லாஹூரில் பஞ்சாப் வெடரினரி காலேஜ் திறக்கும் சந்தர்ப்பத்தில் யூனிவர்ஸிடி பட்டம்பெற்று மேல் படிக்கிறவர்களுக்கன்றி மற்ற எல்லாருக்கும் சுபாஷைமூலமாகத்தானே கல்விபோதிப்பது மேலென்பதிற் சந்தேகமில்லையென்று சொன்னார். ஸர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் கல்கத்தாவில் அதே தேதியில் யூனிவர்ஸிடி படிப்புக்கூட ஸ்வபாஷையிலும் நடத்தப்பட்டுவர ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஆதரித்துப்பேசினார்.

ON THE EFFICIENCY OF FAITH AND THE URGENCY OF GODLY EDUCATION.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"

ஆதலால் "பகவத் சிந்தனை அவசியம்"

இக்கலைப்பின்கீழ் சென்றமாஞ்சிகையின் இறுதியில் நற்குலத்திற் பிறந்து வறுமையின் கொடுமையினால் பள்ளிக்கூடச் சம்பளம் கொடுக்க முடியாமற் போக அதிகாரிகளால் விடுக்கப்பட்ட பாலன் ஒருவன் அவனுடைய குழந்தைப் புத்தியைக்கொண்டு கோயிலுக்குச் சென்று கடவுளிடம் தன் குறையைச் சொல்லி முறையிடுவான் "நித்தா! நினையல்லால் பாலன் தனக்குண்டோ பற்று." என்று மனமுருகிப் பாடிக்கொண்டிருந்ததைக் கண்ட சிவபக்தர் ஒருவர் அவனது உருக்கமான முறையீட்டைக் கேட்டு அவன் மனக்குறையை விசாரித்து, அதைத்தீர்ப்பான் அப்பையனைத் தன்னூருக்கே யழைத்துப் போய்ப் படிக்கவைத்த கதையை நமது பார்வைக்கு வந்த புஸ்தகம் *ஒன்றிலிருந்து எடுத்து அச்சிட்டோம். அப்படி அச்சிட்டதற்குக் காரணம் என்னவெனில் அதை நாம் பார்வையிட்டு அக்கதையைச் சொல்வதிலும் உண்மைக்கு ஒப்பினதாய்ச் சொல்நயம் வாக்குநயத்தோடுகூட இளமனத்துக்கேற்ற ஹிருதய சிந்தையோடு வாய்ந்த குணநயமும் வாய்க்கப்பெற்ற காந்திமதிநாதர் பிதாவை யிழந்த நல்லசாமி யென்கிற பையனுக்கு "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்கிற மூத்தோர் வாக்குப்பலிக்க "முன்னறி தெய்வமாக" வந்துதவிய பாங்கும் அது ஈசுவரானுக்ரகத்துக்கு ஒத்ததாயிருந்த [illegible]ம்பற்றி நமக்கு அதை அனுப்பியவர் வேண்டு[illegible]க்கிதமாகவு மிருக்குமென்பதை யுணர்[illegible] அப்படிச் செய்தோம். அன்றி அது பாலபோத சிக்ஷையிலூக்கங் கொண்டிழைக்கும் வினைகாருக்கு 'அருள்' என்னும் ஆத்மசக்தியின் பெருமையை உணர்த்துவதாயுமிருக்குமென்று அப்படிச் செய்தோம். நல்லசாமியைப் போல் நல்ல பிள்ளைகள் மாசுபடியாத அவர்கள் உள்ளக்கணர்வால் மனமுருகிச் செய்துகொள்ளும் விண்ணப்பத்தை, பிரகாசியாநின்ற ஆத்மபக்திக்கு அதிஷ்டான தேவதையும் ஏகமானவனாயிருக்கிற ஜீவன்களுக்கெல்லாம் பதியும் நாதனுமாயுள்ளவனை பசுபதீசுவரன் கேட்டு அவனுடைய விபூதி மஹிமையினால் "எண்ணினார்க் கெண்ணின வண்ணமிருந்தருளியும் ஈசன்" என்றிருப்பதால் அவரவர்களுடைய மனோபாவத்துக்குத் தக்கபடி தோன்றி திருவருள் சாதிக்கிறான் என்பது இக்கலிகாலத்திலும் எக்காலத்தும் உண்மை. ஹிருதய சுத்தியும் பக்திசிரத்தையும் மன உறுதியும் மட்டும் வேண்டும். இம்மூன்று மிருந்து விட்டால் மனிதனால் ஆகாத காரியம் ஒன்றில்லை. ஏனெனில், அவன் ஈசுவர கிருபைக்குப் பாத்திரனாய்விடுகிறானாதலால் என்க. இக்கதையை முற்றமுடிய வாசிக்க விரும்புகிறவர்கள் அப்புத்தகத்தையே வாங்கி வாசிக்கவேண்டும். "உருக்காட்டி உருமறைத்தல்" என்னும் தெய்விக நூதன முறைப்படி, அப்புத்தகத்தின் ருசி காட்டி [illegible] தந்திரத்துக்காக யாரும் நம்மேல் தோஷம் சொல்லார் என்று நினைக்கிறோம்.

"இவ்விதம் நல்லசாமி யென்னும் நமது சிறிய வாலிபன்," "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்னும் மூதுரைக்கு இலக்கியமாக காந்திமதிநாத முதலியார் வீட்டில் மாப்பிள்ளை யுபசாரத்தோடு போஷிக்கப்பட்டு "எல்லோருக்கும் நல்லவனாக நடந்துகொண்டு, அவ்வருஷக்கடைசியில் நடந்த பரீக்ஷையில் முதற்பையனாகத் தேறினான். அதனால் அவன் அடுத்தவருஷம் முதற்கொண்டு சம்பளமில்லாமற் படிக்க அனுகூலமுண்டாயிற்று. ஐந்தாவது பாரத்திலும் முதற்பையனாகவே தேறி மெட்ரிகுலேஷன் வகுப்பில் சேர்ந்து

* "மூத்தாள் இளையாளான கதை: பண்டிதர் பாலஸரஸ்வதி பி. ஆர். கிருஷ்ணமாசாரியரால் இயற்றப்பட்டு சென்னை எஸ். வைத்தியா அண்டு கம்பெனியாரால் வெளியிடப்பட்டது. விலை. அணா 4."

வாசித்துக்கொண்டிருக்கும்போது பித்தவாதக்காய்ச்சலால் பிடிக்கப்பட்டு இடையே இரண்டு மாதகாலம் பள்ளிக்கூடத்துக்குப் போகாமலிருக்கும்படி ஸம்பவித்தது. அதனால் அவ்வருஷம் நடக்கும் பரீக்ஷையில் அவன் ஒப்பேறுவது கூடக் கஷ்டம் என்று எல்லாரும் எண்ணியிருந்தார்கள்." யார் என்ன எண்ணினாலென்ன! மனிதஜன்ம மெடுத்தவன் கலங்காத சித்தமுடையவனாக விளங்கவேண்டும். அது தான் தீரம், வீரம் எல்லாவற்றிற்கும் காரணம். "கலங்காத சித்தம்" என்றால் மனம் கல்லாகச் சமைந்து போகிறதில்லை. கற்புடை மகளிர்க்கு விவாக காலத்தில் அம்மி மிதித்து அருந்ததி காட்டும் வழக்கம்போல, கல்லொத்த மனவுறுதி வேண்டும். இந்த மனவுறுதி "அருந்ததி காட்டல்" என்னும் லக்ஷியம் இன்றிச் சித்திக்காது. ஆகையால் உயர்பாவ சித்தனை, நக்ஷத்திரங்களைப்போல் எட்டாத உயரத்தில் அவனுடைய அந்தர்லக்ஷியம் இருந்தாலும், அந்த உயர்லக்ஷியத்தை திராக்ஷப்பழக்குக் காசைப்பட்ட நரியைப்போல் 'கைக்கெட்டாதது புளிக்கும்' என்று கைவிடாது, தருக்க சிக்ஷை தீக்ஷைகளால் மனதைப் பழக்கி அது குரங்குபோல் சேஷ்டை செய்துகொண்டு கிளைவிட்டுக் கிளைதாவிச் செல்லும் சுபாவமுள்ளதால் அதையடக்கி தைலதாரைபோல் குறித்த குறிப்பு ஒன்றிலேயே பகவத் சிந்தனையினால் அதைப் பூட்டி நிலைத்திருக்கச் செய்து எவன் உழைக்கிறானோ அவனுக்கு எத்தாலும் "முயற்சி திருவினை யாக்கும்" என்பது திண்ணம். ஆதலால் அவனுக்கு வேண்டியவர்கள் எல்லாரும் மனங்குழம்பினாலும் நல்லசாமிக்கு மட்டும் "சிறிதும் தைரியம் குறையவில்லை" யென்று வாசிக்கச் சந்தோஷப்படுகிறோம். ஏனெனில் சுகத்திலும் துக்கத்திலும் சரிசமமாக பகவானையே நம்பியிருக்கும் குணம் அவனிடத்திலிருக்கிறதென்பதற்கு இது ஒரு அத்தாக்ஷியாம். "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" என்கிற முதுரையை நம்பித் தன்னாலியன்றமட்டும் படித்துவர அவன் கடைசியில் பரீக்ஷையில் இராஜதானியில் எல்லாருக்கும் முதல்வனாக முதல் வகுப்பில் தேறினான்.

இங்கே இவன் கதையை நிறுத்தி இவனுடைய தாயார் அம்மணியம்மாள் தன் செல்வக் குமாரனைக் கண்டதும் அவனை யுபசரித்தழைத்த வார்த்தைகளை யெடுத்துரைத்து அதில் அவள் தாயன்பின் ஸ்வபாவத்தையும் அது வார்த்தையில் வரும்பொழுது குறைவுபட்டு நிறைவுபடாது அவலம்பித்து உபசாரவழக்காய் முடிவதிலுள்ள அதிநுணுக்கமான வித்பாஸத்தையு மெடுத்துக்காட்ட வேண்டுமென்கிற இச்சையிருந்தும் அக்கதையை நாம் சொல்லிவிட்டால் இதர் அப்புஸ்தகத்தை வாங்கி வாசிப்பார்களோ என்னவோ என்று அஞ்சும் நெஞ்சுக்கபயம் அளிக்கவேண்டியதவசியமென்கிற எண்ணத்தினால் அதையும் அதற்குப்பின் அவனுக்கு வந்த பாக்கியம் எப்படிப்பட்ட தென்பதையும் இதை வாசிப்போர் அப்புஸ்தகத்தில் தானே கண்டு கொள்ளட்டுமென்று கதையை இம்மட்டோடு நிறுத்துகிறோம். புஸ்தகம் விற்கிறவர்களுக் கனுகூலமாயிருந்து விவேகசிந்தாமணியை வாசிப்பவர்களுக்கு ஆசைகாட்டி மோசம் செய்வதாக நினைக்க இடமில்லை. ஏனெனில் நாம் சொல்லவந்தது: பாலர்க்கும், சிலர்க்கும், யாவர்க்கும் 'பகவத்சிந்தனை அவசியம்" என்பதே. இதை வற்புறுத்த வென்றே விவேகசிந்தாமணியாரம்பித்தவுடன் அதில் வெளிவந்த கமலாம்பாள் சரித்திரத்தைத் தனியாக அச்சிட்டுத் திருத்திப் பிரசுரித்துள்ளோம். அப்புஸ்தகம் இப்பொழுது பாலசிக்ஷை செய்வார்க்கு யோக்கியதை யளிக்கப்படும் 'ஸெர்டிபிகேட்' கொடுப்பதற்கான பரீக்ஷைக்குப் பாடமாக வைக்கப் பட்டிருக்கிறது. அதன் பிற்கூற்றில் இந்தக்கட்டுரையின் உட்கருத்தை வற்புறுத்தியிருக்கக் காணலாம். அன்றி அந்தக் கமலாம்பாள் சரித்திரம் இப்பொழுது பள்ளியிலுபயோகிக்கத் தக்கதாக இருபிரிவாகப் பிரித்து விரித்துச்

சீர்பெற நான்காமுறை அச்சியற்றப்பட்டிருக்கிறது. உண்மையைப் போதிக்க ஒருதரம் இருதரம் அதை வற்புறுத்தினால் போதாது. பலவகையாலும் அதன் கருத்து உள்ளத்துறைக்கப் பெறுமாறு போதித்துவரல்வேண்டும். "ஸத்யமேவஜயதே நாந்ருதம்"-என்று உபநிஷத் முறையிட்டோதியது. அதைப் பறையறைந்து பரவச்செய்ய இன்னமும் உத்தமர் உழைத்துவருகிறார்கள். அதமர் அதற்குப் பங்கம் செய்கிறார்கள். மத்திமர் இப்படியும் அப்படியுமாக விருந்து "சந்தையிற் கூட்டமாகச்" சேர்ந்து சந்தடிசெய்கிறார்கள். இந்தச் "சந்தையிரைச்சலிலே குடியிருந்து கெட்டேனே!" யென்று தபஸிகள் வீடுவிட்டு வாசல்விட்டு நாடுவிட்டு நகர்விட்டு எல்லாம் "விட்டேன், விட்டேன்" என்று ஓடி மோனகுருநாதர் தம் சீர்பாதம் தேடித்திரிகிறார்கள். பகவான்செய்யும் கபடநாடகம் இப்படியிருக்கிறது. ஆனால் அவர் உண்மையில் எல்லார் உள்ளத்திலும் ஏற்றத்தாழ்வின்றி அந்தர்யாமியாய் வசித்து தான்மட்டும் அசையாமல் ஆடிக்கொண்டு உலகெலாம் ஆட்டிவைக்கிறார். அவர் மஹிமையை அறிந்து அவனுடைய நற்றாள் தொழுவதுதானே "கற்றதனாலாய பயன்." அந்தப் பயனைப்பெற்று கருணாசமுத்திரமாகிய அவனது பரங்கருணை மிகுதியால் தனக்கென்றொன்று வேண்டியிராவிட்டாலும் பரோபகாரார்த்தம் வருந்துழைப்பதே தொழிலாயுள்ள அவனது அடியார்கள் பெருமையை யாரறிவார்கள். அவர்களுக்குத் தொண்டுசெய்து அடியார்க்கடியனாயிருந்துழைப்பவர்களே யறிவார்களாதலால், இக்கலி காலத்தில் கடவுளை யண்டிப் பிழைப்பதிலும், அவனைக்காணுமற் கண்டு 'ஆண்டான்--அடிமை' உறவுபூண்டு சச்சிதானந்த ஸ்வாமிகளைப்போல் அவன் திருவருளைச் சிந்தித்து அவன் இட்டது சட்டமாக இருந்துழைத்துப் பரிபக்குவமறிந்து பிறரையும் அத்துறையிலிறங்கிக் கரையேறத் துணையிருந்துதவி பணத்திலும் குணமே பெரிதென்று யாவரும் 'வீடு பெறவில்' என்ற ஔவையார் ஆஜ்ஞையை அனுஷ்டிக்க வழி காட்டிகளாயிருக்கும் அப்பெரியோரை நமஸ்கரித்து அவர்களுக்கு அர்ப்பணமாக இந்நான்காம் பதிப்பைச் சமர்ப்பித்திருக்கும் காரணத்தை பதிப்பாசிரியர் முகவுரையில் கூறியிருப்பதையும் எடுத்து இதன்முகட்டில் அச்சிட்டிருக்கிறோம். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" ஆதலால் எழுத்தினாலாய நல்ல கிரந்தம் குருவுக்குச் சமானம். அது நித்தியபோதம் செய்துவரும் சிறப்பை நல்ல புஸ்தகத்தை வாசித்து நற்பயனடைந்தோர் தாமே அறிவார். அப்புத்தகத்தின் அர்ப்பண பாகம் இது:—

"பாலர்க்குழைக்கவென்று பரிந்துமிகவழைத்துச்
சாலவுநானித்துறையிலுனக்குதவி செய்வேனென்
றாலயத்திலறுபத்தி மூவர்திருவிழா நடக்கச்
சேலமுடனுடல்பொருளாவியுமொன்றாக்கைக்கொண் [டு
பாலசிக்ஷைசெய்வார்தம் உளம்புகுந்தான்
பாலனாய் வந்தவதரித்தான் கமலாம்பாள்கருவுதித்தான்
ஆலமுண்டான் தில்லைவாழந்தணர்தமடியார்க்கு மடிய [னென்றான்

மூயலகன்மேற்காலூன்றிக்கால்தூக்கியாடினான்
கயல்விழியாள்காண அவன் திருக்கூத்துத்தரிசனங்கண்
டயலொன்றறியா'மெய்யடியார்க்கர்ப்பணமாமிதென் [றறி."

THE WATER HYACINTH.

[Mr. D. T. Chadwick, I.C.S., in asking us to give publicity to the general facts contained in his leaflet which we gladly give below, writes: "This pretty weed has a faculty of spreading very rapidly in slow moving or stationary fresh water, and has been a cause of great trouble and expense in many of the tropical parts of the earth. It is now causing difficulty in Burma and since the preparation of this leaflet I have heard of its appearance in the waters of Bengal." We make a reference to this destructive weed by way of illustration in our leading article.]

"வாடர் ஹயஸிந்து" என்னுமோர் பூண்டு.

(பூவின் உருவம் காட்டியபடம் விளக்கும் சித்திரக்கட்டை அனுப்பப்படவில்லையால் அச்சிடக்கூடவில்லை.) இதற்கு இங்கிலீஷ் பாஷையில் "வாடர் ஹயஸிந்து" அல்லது "லைலெக் டெவில்" என்று பெயர். தென் அமெரிக்காவின் உஷ்ணபாகந்தான் இதன் சுதேசம். அங்கிருந்து யுனைடட் ஸ்டேட்சுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இது கொண்டுபோகப்பட்டது. தற்காலம் இதை இவ்விராஜதானியிலும் கூட பலவிடங்களில் காணலாம். இதன் வெகு அழகிய நீல புஷ்பங்களினாலும், தசைப்புள்ள தடித்த இலைகளினாலும் எவரும் இப்பூண்டை எளிதில் அறியலாம். மனதைக் கவர்ந்துகொள்ளுமவ்வளவு அழகைப்பெற்றதாயினும் இதை மனிதர்களுக்கு விரோதிகளில் ஒன்றாகவே எண்ணவேண்டும். கிணறுகளிலும், குட்டைகளிலும், ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் மற்றும் ஜலமுள்ள எல்லாவிடங்களிலும் இது வெகு விரைவாய் வளர்கிறது. இலைக்காம்புகளில் ஓர் பாகத்தில் காற்று நிறைந்திருப்பதால் அப்பாகம் பருமனாய்க் காணப்படுகிறது; இதனால் இலைகளும் மிதக்கும் செடியும் ஜலம் அதிகமில்லாதிருந்தாலும் அல்லது ஆழமாகவிருந்தாலும், வாழ்ந்து வளரும், இச்செடியானது விதைகளிலிருந்தும், பக்கக் கன்றுகளிலிருந்தும் விர்த்தியாகிறது. விதையும் பக்கக் கன்றுகளும் இலேசாயிருப்பதனால் இவை காற்றில் அடித்துக்கொண்டு போகப்படுகின்றன. ஆனால் இது வெகு விரைவில் பரவுவது பக்கத்திலுண்டாகும் அநேக புதிய சிறு செடிகள் கிளம்புகிற சிறு கிளைகளினால் தான். அபரிமிதமான இலைகளினாலும், நெருங்கிய வளர்ச்சியினாலும், வேர்களுக்குள்ள ஜலம்கிரகிக்கும் சக்தியினாலும் இது நீரோட்டத்தைத் தடுப்பதோடு சிறுகுளங்களை முழுதும் தூர்ந்துபோகச்செய்யும். அமெரிக்காவில் சில பாகங்களில் சில நதிகளில் இது பரவியிருப்பதனால் கப்பல்களின் போக்குவரத்து தடுக்கப்பட்டதாம். பர்மாவின் சில பாகங்களில் வெகு நெருக்கமாய் வளர்ந்திருப்பதனால் இதைப் பெருந்துண்டுகளாக வெட்டி சிறு புகைப்படகுகளினால் இழுத்துக்கொண்டு போய் சமுத்திரத்தில் போடுகிறார்கள்,

2. அமெரிக்காவின் உஷ்ணபாகத்தில் வெகு விரைவாய் இப்பூண்டு பரவியதினால் ஆறுகளிலிருந்தும் இதைத் தொலைப்பதற்கு அநேக ஆயிரம் பவுன்கள் செலவு செய்யவேண்டியதாயிற்று. நம் ராஜ்யத்தில் இது பரவினால் ஜனங்களுக்கு சுகத்துக்குக் காரணமாயும் பயிர்களுக்குப் பாய்ச்சலுக்கு வேண்டியதாயுமிருக்கும் ஜலத்தைக் குறைத்துவிடும். இந்த ராஜதானியின் க்ஷேம லாபங்களும், சுகமும் ஜல சமுர்த்தியைப் பொருத்தது. செங்கற்பட்டில் இப்பூண்டு அதிகமாய் நெருங்கி வளர்வதனால் கொசுக்கள் தங்கி விருத்தியடைவதற்கு இது மிக வசதியான இடமாகிறதென்று தெரியவருகிறது. நமது இலாபம், சுகாதாரம் இவற்றின் பொருட்டு எல்லோரும் ஒருங்கக்கூடி இதை ஒழிக்கவேண்டும்.

3. இந்தப் பூண்டானது சென்னையில் அடையாற்றுக்கருகிலும், தென்னாற்காடு, தஞ்சாவூர் ஜில்லாக்களிலும் முக்கியமாய் சிதம்பரம் மாயவரத்தின் அருகாமையிலுள்ள வாய்க்கால்களிலும் செங்கற்பட்டில் அகழ்களிலும், செங்கற்பட்டு, காஞ்சீபுரம், வந்தவாசிக்குமிடையிலும் காணப்படுகிறபடியால் இதை வெறும் எச்சரிக்கையாக எண்ணக்கூடாது. மாயவரத்தில் சில பழைய கிணறுகளிலும், மலையாள ஜில்லாவில் அநேகவிடங்களில் மாப்பிள்ளைமார் மசூதிகளின் குளங்களிலும் இது காணப்படுகிறது.

4. இதை இளம்பருவத்திலேயே வாரியெடுத்து உலர்த்திக் கொளுத்திப்போடுவது எளிது. ஈரமான மண்ணில் இதன் விதைகள் அதிவேகமாய் முளைப்பதனால் இதை நசிக்குமென்று கண்டவிடத்திலும் அழுகவிடக்கூடாது. யாராவது தன் ஆதீனமான இடங்களில் ஜலத்தில் இப்பூண்டைக் கண்டால் உடனே அதை வேருடன் கல்லி கொளுத்திவிடவேண்டிய தவசியம். அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் எந்நேரமும் எதிர்த்துப் போராடவேண்டிய கொடிய பூண்டுகளில் இது ஒன்று. பர்மாவிலும் இது வெகு கெடுதிவிளைக்குமவ்வளவு வேகமாய் பரவிக்கொண்டு வருகிறது. ஆகையால் இதர தேசங்களில் இதனாலுண்டாகும் கெடுதியினாலும் அத்தேசத்தாரின் அனுபோகத்தினாலும் நம் ராஜதானியில் இதைப் பரவவொட்டாமல் தடுக்கவேண்டும். எல்லா கனவான்களும் இதை ஒழிப்பதற்கு உதவிபுரியவேண்டும். இதைத் தடுக்காமல் பரவவிட்டுவிட்டாலோ இது வெகு கஷ்டத்துக்கு காரணமாகும். முக்கியமாய் ஓட்டமின்றி நிற்கின்ற அல்லது மந்தமாய் ஓடுகின்ற நீர் நிலைகளான சுத்த ஜலத்தில் தான் இது செழிக்கின்றது. இது எழுதி முடிந்தபின் இந்தப் பூண்டு வங்காளத்திலுள்ள நீர் நிலைகளிலும் தோன்றியிருக்கிறதாகக் கேள்விப்படுகிறேன்.

டி. டி. சாட்விக்,
வியவசாய இலாகா டைரெக்டர்.

'THE LAW OF ACTION AND REACTION' *KARMA, DHARMA A STORY.

'வினைவிதைத்தவன் வினையறுக்கிறான்.' கர்மதர்மத்தைப்பற்றிய ஒரு கதை.*

I.

புத்தமதம் ப்ராபிக்கப்பட்ட காலத்தில், நமது இந்துதேசம் மிக மேலான ஸ்திதியிலிருந்தது. அக்காலத்திய ஆர்யஜனங்கள் விசேஷ நாகரிகத்தை யடைந்திருந்தார்கள். பெரியநகரங்கள், கைத்தொழிலும், வர்த்தகமும், வித்தையும் செழித்து விளங்கும் இடங்களாயிருந்தன.

அந்தக்காலத்தில் ஒருநாள் பிராமணகுலத்தைச் சேர்ந்த பாண்டு வென்னும் பெயருள்ள ஒரு நகை வியாபாரி, விசேஷ லாபங்கொடுக்கும் ஏதோ ஒரு அலுவலின்பொருட்டாக காசிநகருக்குப் போய்க்கொண்டிருந்தான். அவனது குதிரைகளைப் பாதுகாக்கும்பொருட்டு ஒரு அடிமையும் அவனுடன் சென்றான்.

அவ்வியாபாரி தன் குறிப்பிடத்திற்கு அவசரமாய்ப் போய்ச்சேரவேண்டியவன்போலிருந்தது. ஒரு பெருமழையடித்துக்கொண்டு ஆகாயம் குளிர்ந்து மிகவும் இனிமையாக இருந்ததினால் குதிரைகள் விரைவாகச்சென்றன.

சிறிதுதூரம் போகும்பொழுது, வழியில் ஒரு சமணனைக் † கண்டார்கள். எவரும் கண்டால் வணங்கும் அம்மகானது முகத்தைப் பார்த்ததும், வியாபாரி, "இவர் மிகப்பரிசுத்தமுள்ளவராய்த்தோற்றுகிறார். நல்லோர்களின் சகவாசம் நன்மையைத் தருகிறது. இவரும் காசிக்கே வருவதாயிருந்தால் என்கூட வண்டியிலிருக்கச் சொல்லுகிறேன்" என்று மனதில் எண்ணி அவரை வணங்கினான். தான் போகும் இடத்தையும் காசியில் தான் தங்கப்

* Karma :-A Story of Early Buddhism, by Dr. paul Carus, Open Court Publishing Co., Chicago. Adapted and rendered into Tamil by kind permission.

† சமணன் - புத்தசந்நியாசி.

போகிற சத்திரத்தின் பெயரையும் சொல்ல, நாரத னென்ற பெயரையுடைய அத்துறவியும் அவ்வழியே போவதையறிந்து தன்வண்டியில் உட்காரும்படி கேட்டுக்கொண்டான்.

அத்துறவி அதற்கு இசைந்த சித்தமுடையவராய் "வெகுதூரம் நடந்துமிகக் களைப்புற்றிருக்கும் சமயத்தில் இவ்வுதவிசெய்ததற்கு உனக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு இவ்வுலகில் யாதொரு பொருளும் இல்லாததினால் உனக்கு காசுபணமாக யாதொரு பிரதியுபகாரமும் என்னால் செய்யமுடியாது. ஆனால், மஹா குரு பகவான் புத்தரைத் தொடர்ந்து செல்லும் நாளையில் அவரிடமிருந்துபெற்ற ஞானபொக்கிஷத்திலிருந்து உனக்கு ஏதாவது சிறிதுகொடுக்க முடியலாம்" என்றுசொல்லி வண்டியிலேறியுட்கார்ந்தார்.

வழியில் பாண்டு நாரதனது அறிவுபுகட்டும் சம்பாஷணையைச் சந்தோஷத்துடன் கேட்டுக்கொண்டேபோனான். இப்படிச் சிறிதுநேரம் செல்லுகையில் காலமே பெய்தமழையினால் அறுக்கப்பட்டிருந்த ஒரு கொடியை யடுத்தார்கள். அவ்விடம் கடந்துபோவதற்கு மிகக்கஷ்டமாயிருந்ததோடுகூட, அரிசிப் பாரமேற்றிய குடியானவனது வண்டி ஒன்று வழியை முழுவதும் அடைத்துவிட்டது. ஒரு பைதாவின் சாவி நழுவி விழுந்துவிட்டதால், அச்சக்கரம் கழன்றுகிடந்தது. அந்தவண்டிக்கு உடையவனான தேவலன் என்பவன் அதைச் சரிப்படுத்திக்கொண்டிருந்தான். அவனும் தன்னரிசியை விற்பதற்காகக் காசிக்கே போய்க்கொண்டிருந்தான். ஒருநாளாவது தாமதித்தால் அவ்விடத்து அரிசிவியாபாரிகள் நகரத்தை விட்டுவிடவோ, தமக்குவேண்டிய சரக்கை வாங்கிவிடவோ செய்வார்களாதலால் மறுநாள்காலைக்குள் காசிபோய்ச்சேர ஆவலாயிருந்தான்.

அக்குடியானவனது வண்டி அவ்விடமிருந்து நீங்கினாலல்லது தனதுவண்டிபோகாதென்றுகண்டதும், வியாபாரி மிகுந்தகோபத்துடன் அரிசிவண்டியைத் தள்ளும்படி மகாதூதனென்ற தன் அடிமைக்கு உத்தரவுகொடுத்தான். பாதையின் ஓரத்தில் இருந்தது நிமித்தம், அப்படித் தள்ளுவதினால் அரிசியெல்லாம் சிதறிப் போமென்று குடியானவன்வற்புறுத்திச் சொல்லியும் கேட்கவில்லை. பிறருக்குவரும் கேட்டினால் சந்தோஷத்தையடையும் குணமுள்ள அவ்வேலைக்காரன், மிகுந்த பலசாலியாதலால், யஜமான் சொல்லி முடியுமுன், சமணன் வந்து தடுப்பதற்கு இடமில்லாமல், வண்டியைத் தள்ளிவிட்டான். பாண்டு தன்வழியே செல்லவாரம்பிக்கும்பொழுது, சமணன் வண்டியிலிருந்து குதித்து வியாபாரியைப்பார்த்துச் சொன்னான்: "நான் இங்கு உன்னைவிட்டுப் பிரிவதற்காக தயவுசெய்து மன்னிக்கவேண்டும். வண்டியில் இந்நேரம் சவாரிசெய்ய இடங்கொடுத்ததற்கு உனக்குமிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் என்னைப் பாதையில் கண்டபொழுது மிகவும் களைப்புற்றிருந்தேன். இப்பொழுது உனது தயவினால் என் சிரமம் தணிந்தது. இக்குடியானவன் உன் முன்னோர்களில் ஒருவருடைய அவதாரம். இவனுக்கு இந்தக்கஷ்டகாலத்தில் உதவிசெய்வதைவிட நீ எனக்குக் காண்பித்த தயவிற்கு யாதொருபிரதியும் செய்யமுடியாதாதலால் நான் இங்கேயே நிற்கிறேன்" என்றார்.

அவ்வேதியன் மிகுந்த ஆச்சரியத்துடன் சந்நியாசியை உற்றுப்பார்த்து, "இந்தக்குடியானவன் என்முன்னோர் ஒருவருடைய அவதாரமென்று சொல்லுகிறீர்? அப்படி ஒருபொழுதும் இராது" என,

சந்நியாசி "உன்வாழ்வையும், இவன் வாழ்வையும் சேர்த்துக்கட்டும் பந்தங்களொன்றையும் நீயறியமாட்டாய். சுற்றிலுமுள்ள பதார்த்தங்கள் குருடனுக்கெப்படி புலப்படும்? இதனால் நீ உனக்கே தீமை விளைத்துக்கொள்கிறாயே யென்று விசனிக்கிறேன். நீ யுனக்கிழைத்துக்கொள்ளும் தீங்குகளினின்றுன்னை. விடுவிக்க முயலுவேன்" என்றார்.

அத்தனிகன், இதுவரை தன்னை மற்றவர்கள்கண்டிக்கக் கேட்டதில்லை யாதலால், சமணன்சொன்ன சொற்கள் மிகுந்த தயவுடன் உச்சரிக்கப்பட்டபோதிலும் பலமான நிந்தனையோடு கூடியிருந்ததையறிந்து, வேறு தாமதமின்றி வண்டியை யோட்டும்படி தன் வேலைக்காரனுக்கு உத்தரவு கொடுத்தான்.

சமணனும் தேவலனிடம் சென்று, வண்டியைச்சரிப்படுத்தி, வெளியே தள்ளப்பட்ட அரிசிமூட்டைகளை மறுபடியும் வண்டியில் ஏற்றத்தொடங்கினான். வேலை வெகுவிரைவாக நடந்தது. தேவலன் தனக்குள், "இச்சமணன் நிச்சயமாய் ஒருமஹானாயிருக்கவேண்டும். தேவர்கள் மறைவாயிருந்து அவருக்கு உதவி புரிவதுபோல் தோற்றுகிறது. அக்கர்வநிறைந்த பிராமணன் எனக்கு இவ்வித கொடுமைபுரியும்படி நான் யாதுசெய்தேனென்று இவரிடம் கேட்கலாம்" என்று எண்ணிக்கொண்டு, அத்துறவியைப்பார்த்து "சுவாமீ! என்னால் ஒரு தீங்கையும் அடையாதமனிதன் எனக்கு இவ்வித அநியாயம் செய்வதற்குக் காரணம் யாதென்று தாங்கள் சொல்வீர்களா?" என,

சமணன் "நண்பனே, உனக்கு இப்பொழுது அளக்கப்பட்டது அநியாயமல்ல. நீ முன் ஜன்மத்தில் இவ்வியாபாரிக்குச்செய்த கேட்டையே உனதுகர்மம் உனக்கு இப்பொழுது ஈந்திருக்கிறது. நீ யாது விதைத்தாயோ அதையே அறுக்கிறாய். 'உன் தலைவிதி' என்பது நீ செய்த கருமங்களின் பயன்தான். நீ இப்பொழுது வாழும் வாழ்வு நீ முன்ஜன்மங்களிற் செய்த கருமந்தான்." என்றார்.

குடியானவன், "என்னுடைய கர்மம் ஏது?" என்று வினவ, துறவி, "ஒருவன் இச்சன்மத்திலும் முன் ஜன்மங்களிலும் செய்திருக்கும் நல்லதும் தீயதுமான செய்கைகளின் கூட்டம் அவனது கர்மம். மனிதரது சுபாவமான அபிவிர்த்தியில் உண்டான செய்கைகளின் தொடர்ச்சிதான் உன் வாழ்வு. இச்செய்கைகளும் அவற்றாலான வாசனைகளும் தலைமுறை தலைமுறையாக வழங்கப்பட்டு வருகின்றன. நமக்குக் கொடுக்கப்பட்டவாசனைகள் நம் செய்கைகளால் மாறுதலையடைந்து நமது சுபாவமாகிறது. இப்படி, எது செய்கிறோமோ அதின்படியே நாம் மாறிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய கருமமே நம்முடைய குணமாகிறது. நாமே நமது தலைவிதியின் சிருஷ்டிகர்த்தாவாயிருக்கிறோம்" என்றார்.

அதற்கு தேவலன் "நீங்கள் சொல்வது உண்மையாயிருக்கலாம். ஆனால் எனக்கும் அந்த இறுமாப்புக்கொண்ட பிராமணனுக்கும் யாது சம்பந்தம்?" என,

சமணன் "உன் சுபாவம் அவனது சுபாவத்தைப்போலவேதான். உன் தலைவிதி யின்னதென்று வரையறுத்தகருமம் அவனது கருமத்தினின்று அதிக வித்தியாசப்படவில்லை. உன் மனதில் நிகழும் எண்ணங்கள் நான் ஊகிப்பதுபோலவேயிருந்தால், அவ்வியாபாரி உன் ஸ்திதியிலிருந்து, உன்னிஷ்டம்போல் செய்யக்கூடிய பலமான அடிமையும் உன்னிடமிருந்தால் நீயும் அவனுக்கிப்படியே செய்வாயென்றெண்ணுகிறேன்" என்றார்.

குடியானவன் யோசித்துப்பார்த்து, தனக்கு சக்தியிருந்து மற்றொருவன் தன்வழியையடைத்தானானால் இன்று தன்னைப்பிராமணன் நடத்தியதுபோல அவனுக்குச் செய்வதற்கு யாதொரு சந்தேகமுமிராதென்று ஒப்புக்கொண்டான். ஆனால் இவ்வித கொடியசெய்கைகளினால் வரும் பெரியதண்டனையை யுத்தேசித்து இனி அவ்விதம் மற்றவர்களை நடத்தாமலிருக்கத் தீர்மானஞ் செய்துகொண்டான்.

மூட்டைகளெல்லாம் வண்டியிலேற்றியானவுடன், இருவரும் காசியை நோக்கிநடந்தார்கள். போகும்வழியில் ஓரிடத்திற்கு வரும்பொழுது குதிரைதிடீரென்று ஒருபக்கம்குதித்தது. உடனே குடியானவன் "பாம்பு! பாம்பு" என்றுகத்த, சமணன் குதிரை கண்டு கலைந்த வஸ்துவை உற்றுப்பார்த்து, வண்டியிலிருந்து குதிக்கவே, அது பொன்னாணயம் நிறைந்த ஒரு பை

யென்று கண்டான். கண்டதும், அத்தனிக வியாபாரியைத் தவிர வேறொருவரும் இப்பையை இழந்திருக்க முடியாதென்ற எண்ணம் அவன் மனதிற்பட்டது. பையையெடுத்துக் குடியானவன்கையில் கொடுத்துச்சொன்னான்: "இதை வைத்துக்கொள்; காசிக்குப் போனவுடன் நான் சொல்லும் சத்திரத்திற்கு வண்டியை ஓட்டிக்கொண்டுபோய், பாண்டுஎன்னும் பிராமணனை விசாரித்து அவன்கையில் இதைக் கொடு. காலமே உன்னிடம் முரட்டுத்தனமாய் நடந்ததற்கு மன்னிப்புக்கேட்பான். முன்னமேயேமன்னித்துவிட்டதாகச்சொல்லு. அவன் எடுக்கும் பிரயத்தினங்களில் எல்லாம் அவனுக்குஜயமுண்டாகும்படிவேண்டிக்கொள். ஏனெனில் அவன் எவ்வளவுக்கெவ்வளவு க்ஷேமத்தையடைகிறானோ அவ்வளவும் உனக்கநுகூலம். அநேகவிதங்களில் உன் க்ஷேமம் அவன்க்ஷேமத்தைபொட்டியிருக்கிறது. அவன் இதைப் பற்றி ஏதாவது அறியவேண்டுவானாகில், அவனை மடத்திற்கு* வரச்சொல். அவனுக்கு வேண்டிய புத்தியைச் சொல்லியுதவ நான் அங்கு தயாராக விருப்பேன்". என்றான்

II.

காசியில்.

பாண்டு காசியை யடைந்த சமயத்தில் ஒரு துணிந்த வியாபாரி காசியிலுள்ள அரிசியை யெல்லாம்வாங்கி யடைத்துவிட்டான். பாண்டுவின் வியாபாரத் தோழனாகிய ஒரு பெரிய சாவகாரி மிகுந்த சங்கடத்திலிருந்தான். அவன் பாண்டுவைப் பார்த்து, "இப்பொழுதெங்கே உன்னுடன் வியாபாரம் செய்யப்போகிறேன்? அரசனது மடைப்பள்ளிக்கு ஒரு வண்டியரிசி நாளை விடியுமுன் கொடுக்காவிட்டால் எனக்கு நாசம் உண்டாவது நிச்சயம். நான் அரசனது மந்திரியிடம் நாளைக்காலமே உயர்ந்த அரிசியாக ஒரு வண்டியரிசி கொடுக்கும்படி குத்தகை யேற்றுக்கொண்டதை யறிந்து, எனது எதிரியான ஒரு சாவகாரி எனக்கு நாசமுறுத்த விரும்பிக் காசியிலுள்ள அரிசியை யெல்லாம் வாங்கிவிட்டான். மந்திரி ஏதாவது 'லஞ்சம் பெற்றிருக்கிறானோ, என்னவோ, என்னை என் குத்தகையினின்று விடுவிக்க மாட்டேனென்கிறான். ஈசுவரனே வந்துதவினாலல்லது எனக்கு வறுமை நேர்வது நிச்சயம்" என்றான்.

இவ்விதம் தன்னெதிரியால் தனக்கு நேரும் வறுமையை நினைத்து மல்லிகன் பிரலாபித்துக் கொண்டிருக்கும்பொழுது பாண்டு பையைத் தேடிப்பார்த்தான். எங்குதேடியும் அகப்படவில்லை. தனதடிமை மஹாதூதன்மேல் சந்தேகம் விழ, நகர்க்காவற்காரரை யழைத்து அவன்மேற் குற்றஞ்சாட்டி அக்குற்றத்தை யொப்புக்கொள்ளும்படி நானாவிதமாய் ஹிம்சைப்படுத்தினான். அடிமை காவற்காரர் தனக்கிழைத்த கொடுமைகளைப் பொறுக்கமுடியாமல், "ஐயோ! நான் ஒன்றுமறியேன். என்னால் இவ்வேதனை பொறுக்க முடியவில்லை, என்னைவிட்டுவிடுங்கள். இக்குற்றம் நான் செய்யவில்லை. முன் செய்த பாவங்களுக்காக இப்பொழுது படுகிறேன். ஐயோ, எனது எஜமானுக்காக இன்று காலமே அந்தக் குடியானவனுக்கபகாரம் பண்ணினேனே; நான் அங்கே காண்பித்த முரட்டுத்தனத்திற்கு இது தண்டனை போலும். இப்பொழுது அவன் இங்கிருந்தால் அவனிடம் மன்னிப்புக் கேட்பேன்." என்று சொல்லியழுதான்.

காவற்காரன் அடிமையின் முதுகில் கசையை யுபயோகித்துக் கொண்டிருக்கும்பொழுது குடியானவன்சத்திரத்தின் வாசலில் வந்திறங்கி, எல்லாரும் ஆச்சரியப்பட, பணப்பையையெடுத்து பாண்டு கையில் கொடுத்தான். மஹாதூதனும் தன் ஹிம்ஸகர் கைகளிலிருந்து விடுபட்டு, யஜமானினிடம் அதிருப்தியை யடைந்ததினால் காட்டிற்கு ஓடிப்போய் ஒரு திருடர்கூட்டத்தைச்சேர்ந்தான். சேர்ந்த சில நாட்களில், தனது புஜபலத்தாலும், தைரியத்தாலும் அவர்களுக்கதிபதியானான்.

அரசனது மடைப்பள்ளிக்கேற்ற உயர்ந்த அரிசி குடியானவன் விலைக்குக் கொண்டுவந்திருக்கிறானென்று மல்லிகன் கேட்டதும், இதுவரை தேவன் வாங்கியிருக்கிற உயர்ந்தவிலைக்கு மூன்றுபங்கு விலைகொடுத்து, ஒரு வண்டியரிசியையும் வாங்கிக்கொண்டான். பாண்டுதன் பணம் தன்கையில் திரும்பி வந்ததைக்குறித்து உள்ளங்களிக்க, சமணன் நாரதனைக் கண்டு இதன் தெளிவையறிய மடத்திற்குச் சென்றான்.

நாரதன் சொன்னதாவது:--"உனக்கு இதன் உண்மையைத்தெரியச்சொல்வதற்கு யாதொரு தடையும் இல்லை. ஆனால், ஆத்மார்த்தமான உண்மைகளை அறியும்படியான நிலையில் நீ யிப்பொழுதிராததினால், பேசாமலிருப்பதே நல்லதென்று எண்ணுகிறேன். ஆயினும் உனக்குச் சிலபுத்திமதிகள் சொல்லுகிறேன்:—"நீ சந்திக்கும் எல்லாரையும் உன்னைப்போலவே பாவித்து அவர்களிடம் நட. மற்றவர் உனக்கு யாது செய்யவேண்டுமென்று விரும்புகிறாயோ அப்படியே அவர்களுக்கும் செய். இப்படி நல்ல செய்கைகளை விதைப்பாயானால், அவற்றின் செழிப்பான பலனை நீ நிச்சயமாய் அடைவாய்," என,

வியாபாரி, "சுவாமீ! இதன் அர்த்தத்தை எனக்குத் தெரியச் சொல்லவேண்டும். அதினால் உமது சொற்பிரகாரம் நடக்க அதிக சக்தியுள்ளவனாயிருப்பேன" என,

அத்துறவி, "ஆனால் கேள்: இதன் இரகசியத்தை யுனக்குச் சொல்லுகிறேன். நான் சொல்வது ஒருவேளை உனக்கு புரியாமலிருக்கலாம். ஆனாலும், அதை நம்பு. 'நான்' என்பது பொய். அதையே பற்றித்தொடர்பவன் பாபமாகிய சேற்றில் அழுத்தும் ஒருகொள்ளிவாய்ப்பிசாசைத்தொடர்கிறான். உனக்கும் மற்றஜீவர்களுக்கும் உள்ள சம்பந்தத்தை யறியவொட்டாமல் தடுக்கும் மாயை 'நான்' என்ற அஞ்ஞானந்தான். உண்மையாகப் பார்க்கும்பொழுது உனக்கும் மற்றவர்களுக்கும் உள்ள உறவு உன் சரீரத்தின் உன் சரீரத்தின் அவயவங்களுக்குற்றுமுள்ள சம்பந்தத்தை விடப்பலமானது. மற்றவர்களிடத்தில் உன்னை நீ பார்க்கப் படிக்க வேண்டும். அறியாமை தான் பாபத்திற்குக்காரணம். உண்மையையறிந்தவர் சிலர். பின்வரும் நீதிமொழிகளை உனது இரக்ஷாபரணமாக வைத்துக்கொள்;—

1. "பிறருக்குத் தீமை விளைப்பவன் தன்னையே கெடுத்துக்கொள்கிறான். பிறருக்குதவி செய்பவன் தனக்கே யநுகூலியாயிருக்கிறான்

2. 'நான்' என்ற மோஹத்தை உன்மனதிலிருந்து தூரத்து; அதினால் நீ சத்தியமார்க்கத்தை யடைந்து அதிலேயே நடப்பாய்.

3. "மாயையினால் மறைக்கப்பட்ட பார்வையை யுடையவனுக்கு லோகம் அநேக ஜீவன்களாகத் தோற்றுகிறது. அநேகவித ரூபங்களுக்கடியில் அந்தர்யாமியாய் இருப்பது ஒரே உயிரென்று அவன் அறிகிறதில்லை. இவ்விதக்குழப்பத்தினால், ஜீவவஸ்துக்களை யெல்லாம் தன்னுள்ளடக்கும்படியான கருணை, அவனது பிரக்ஞைக்கு எட்டாமலே போய் விடுகிறது" என,

வியாபாரி: "ஐய! இந்த ஆழமானவார்த்தைகளை ஒருநாளும்மறவேன். காசிக்குவரும் வழியில், கொஞ்சமும் சிரமமில்லாத சிறிது தயவு, ஓர் ஏழைச்சமணனுக்குக்காண்பித்தேன். அதன் பலன் எவ்வளவு க்ஷேமகரமாக விருந்தது! தங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். தாங்களில்லாமற் போனால், என் பணத்தை யிழப்பதோடு காசியில் ஒருகாரியமும் செய்யமுடியாமலிருந்திருப்பேன். இந்தப்பணத்தினால் முடிந்தகாரியங்கொண்டு, என் செல்வம் மிகவும் அதிகமானதுமன்றி, இந்தக் காரியம் நடந்திராமற்போனால் நான் மிகக்கொடிதான வறுமையை யடைந்திருப்பேன். மேலும், உமது யோசனையினால், குடியானவனது வண்டி சரியான சமயத்தில் வந்து என் தோழன் மல்லிகனையும் காப்பாற்றிற்று. உமது வாக்கியங்களின் உண்மையை எல்லாரும் அறிந்தார்களானால் உலகம் இன்னும் எவ்வளவு நன்றாகும்! தீமைகள் எவ்வளவு குறையும்! ஜனங்களுடைய க்ஷேமம் எவ்வளவு விர்த்தியாகும்! பகவான் புத்தரது போதனை எங்கும் பரவி, அதையெல்லாரும் அறியவேண்டுமென்று ஆவல் கொண்டேன். அதற்காக என்னுடைய சுதேசமாகிய கௌசம்பியில் பகவானது சிஷ்யர்களுக்காக ஒருமடம் ஸ்தாபிக்கப்போகிறேன். தாங்கள் தயவுசெய்து என்னை அங்கே வந்து பார்க்கவேண்டும்" என்றான்.

* பிராகிருதத்தில் 'விஹார' என்றுபெயர். பௌத்தசந்நியாசிகள் வசிக்குமிடம்.

THE BRAHMIN PRIEST WHO BECAME A TAHSILDHAR.

தாசில் வேலையை விரும்பின அவிவேக புரோகிதன். *

சுமார் நூறுவருஷங்களுக்குமுன் சுண்டூர் ஜமீன்தாரிடம் பசவண்ணு வென்ெருரு புரோகிதன் இருந்தான். அவன் வைதீக விஷயங்களில் மிகத்தேர்ச்சி யடைந்தவன். ஜமீந்தாருக்கு அவனிடத்தில் ரொம்பப் பிரீதி உண்டு. ஒருநாள் ஜமீன்தார் வெற்றிலை போட்டுக்கொண்டு கச்சேரியில் உட்கார்ந்து விநோதமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது பசவண்ணுவைப் பார்த்து "என் அன்புள்ள புரோகிதரே பூஜை முதலிய விஷயங்களில் மிகக்கருத்துள்ள உம்மைப்பார்க்க எனக்கு வெகு இன்பமாயிருக்கிறது. உமக்கு இச்சமயத்தில் ஏது தேவையோ அதைக்கேளும், அளிக்கச் சித்தனுயிருக்கிறேன்" என்று சொன்னர். இதைக்கேட்ட பசவண்ணு சந்தோஷப்பட்டுச் சொன்னதாவது : "ஐயா எனக்கு வெகு காலமாய் தாசில்தாராக இருக்கவேண்டும் என்ற அவா ஒன்றிருக்கிறது. தாங்கள் அதை நிறைவேற்றுவதே எனக்குச் செய்யும் பேருதவி" என்றுன். ஜமீன்தாரும் அதற்குச்சம்மதித்தார். மேலும் அவன் அதிர்ஷ்ட வசத்தினல் அப்போதுதான் அவ்வூரைச் சேர்ந்த ஓர் தாலூக்காவின் தாசில் வேலை காலியாகி இருபது நாளாயிருந்தது. வைதீகவிஷயத்தில் சாமர்த்தியமுள்ளவன் தாசில் வேலையைப் பார்க்கத்தக்கவன்தான் என்று எண்ணி ஜமீன்தார் இவனை அவ்வேலைக்கு நியமித்தார் போலும். சிலநாள் சென்று அப்பசவண்ணு வேலை ஒப்புக்கொள்ள ஊருக்குப் போகும்போது ஜமீன்தார் அவனைக் கூப்பிட்டு சிலபுத்திமதிகளைச்சொல்லி அனுப்பினர். அவை என்னவென்றல்: (1) முகத்தை எப்போதும் கருப்பாக வைத்துக்கொள் (அதாவது கடுமையாக இருத்தல் வேண்டும்.) (2) ராஜாங்கத்தைப்பற்றிப் பேசும்போது காதைக் கடித்துப் பேசு (அதாவது சமீபத்தில் நின்று ரகசியமாய்ப் பேசவேண்டும்.) (3) அனைவருடைய குடுமிகளையும் உன்கையில் வைத்துக்கொள். (அதாவது எல்லோரும் உனக்குக் கீழ்ப்படிந்திருக்கும்படி நடந்துக்கொள்.) பசவண்ணு இவைகளை வெகு கவனத்துடன் கேட்டுக்கொண்டு உத்தரவு பெற்று வீடு சேர்ந்தான். ஜமீன்தாரும் புதிதாய் நியமிக்கப்பட்ட தாசில்தார் ஒருவர் சீக்கிரம் அவ்விடம் வந்து சேருவார் என்று கீழ் உத்தியோகஸ்தர்களுக்குச் செய்தி சொல்லியனுப்பினர். மறுநாள் காலையில் பசவண்ணு தோய்த்த வஸ்திரங்களுடைய மூட்டை ஒன்றைக்கையில் எடுத்துக்கொண்டு குடை முதலியவைகள் ஒன்றுமின்றி பிரயாணப்பட்டான். போகும் வழியில் தர்ப்பை ஏராளமாய் முளைத்திருக்கக்கண்டு அதை விட்டுப்போக மனம் வராமல் அதைச்செதுக்கிக்கொண்டே வழி நடந்தனன். கடைசியில் சுமார் பன்னிரண்டு மணிக்கு ஊர் போய்ச் சேர்ந்தான். தாசில்தார் வரப்போகிறார் என்ற பயத்தினல் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் மத்தியானகாலமாயினும் போஜனத்திற்குச் செல்லாமல் அவ்வூர் வாயிலண்டை காத்திருந்தார்கள். பசவண்ணு உடம்பெல்லாம் வியர்க்க அவ்வழியாய் வர அவனைத் தாசில்தார் என எண்ணுமல் யாரோ ஒரு புரோகிதன் என்று அலக்ஷியம் செய்தனர். ஆனல்

* இது கன்னடதேசத்தில் வழங்கிவரும் ஒரு பூர்வகாலக்கதை. இதையெழுதினவர் மைசூரில் இக்கதை சொல்லக்கேட்டதாகச் சொல்கிறர். பண்டித நடேசசாஸ்திரியார் அவர்கள் இங்கிலீஷில் பிரசுரித்திருக்கும் பூர்வகாலக்கதைகளில் இது ஒன்றாகவிருக்கக் காண்கிறோம். ஊர்பேர் மாறுதல்களைத்தவிர இரண்டிற்கும் வேறு வித்தியாசம் இல்லை. இது இங்கிலீஷில் பிரசுரிக்கப்பட்டிருப்பினும் தமிழில் முதல் முதல் இவ்விவேகசிந்தாமணியில் அச்சிட்டு வெளியானதைத்தவிர வேறுபிரசுரமாயிருப்பதாகத் தெரியவில்லை. இப்பொழுது உண்மையில் நடந்த சில சந்தர்ப்பங்களினல் இக்கதையின் நீதி உதகரிக்கப்பட்டது கொண்டு மறுபடியும் இதை இங்கு எடுத்து அச்சிட்டு தவலாயிற்று.

புரோகிதன் முதல் முதல் வருவதினல் தாசில்தார் ஒருக்கால் இவ்வழியே வரக்கூடுமென்று எண்ணி அவ்வூர் 'தரோகா' (Daroga) தாசில்தாரைப்பற்றி ஏதாவது தெரியுமாவென்று இவனை வினவினன். அதற்கு நம் பசவண்ணு மூட்டையைக் கீழேவைத்துத் தர்ப்பையைக் கையில் ஏந்திக்கொண்டு ஸந்நத்தைக்காட்டி தன்னைத்தான் அந்த அதிகாரியாகஏற்பாடுசெய்திருக்கிறர் என்றுன். இதைக்கேட்கவே உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் பஞ்சாங்கக்காரனை தாசில்தாராக நியமித்ததைப்பற்றி அதிக வியப்பும் துக்கமும் அடைந்தார்கள். பசவண்ணு தாசில்தாரெனத்தெரியவே மேளதாளத்துடன் இந்து ஜெயபேரிகை முழங்க அவனை நகரத்திற்குள் அழைத்துச்சென்றுர்கள். பசவண்ணு காலைமுதல் ஆகாரம் ஒன்றும் புசிக்காமையினல் மிகக்களைப்படைய உடனே தரோகாவின் வீட்டில் போஜனத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் சரிவரச்செய்யப்பட்டன. பசவண்ணுவும் ஸ்நானம் ஜபதபமுதலியவைகளை முடித்துக்கொண்டு போஜனத்துக்கு உட்கார்ந்தான். இவன் போஜனவிஷயத்தில் ஒருகாசு கூட செலவழித் தவனல்ல. எப்போதும் அயலார் உணவையே அருந்தினவன். ஆகையால் இலையில் பரிமாரினவைகளில் ஒன்றையும் விடாமல் பூர்த்தியாகச் சாப்பிட்டு எழுந்தான். உடனே கைகளைச் சுத்திசெய்துகொண்டுத் தெருத்திண்ணையில் உட்காரவே, வெற்றிலை பாக்கு முதலியவைகளைக் கொண்டுவந்து வைத்தார்கள். தாம்பூலம் எடுத்து பசவண்ணு தக்ஷிணை எங்கே எனவே, விருந்தளித்தவன் திகைத்து ஒருக்கால் லஞ்சம்வாங்குகிற சுபாவமோ என்னவோவென்று 500 ரூபாயுள்ள ஒரு பையைக் கொண்டுவந்து வைத்தான். ஒரேகாலத்தில் 500 ரூபாய்களைப் பார்க்கவே பிராமணனுடைய களிப்புக்கு அளவு இல்லை. இப்பெரிய தொகையை ஏககாலத்தில் கனவில்கூட தக்ஷிணையாக வாங்கினவனுமல்ல. ஆகையால் பையை அவிழ்த்து ரூபாய்களை ஒவ்வொன்றாக எண்ணி மூட்டையில் வைத்துக் கட்டிக்கொண்டான். பிறகு வெற்றிலையை மடித்துக் கிராம்புடன் ஒரேமூச்சில் வாயிலடைத்துக்கொள்ள இச்செய்கைகளால் இவனுடைய மெய்யான இயற்கைக் குணங்கள் வெளிப்பட்டன.

பசவண்ணு அவ்வூர் சிரஸ்தேதாரிடம் தான் இன்னும் ஒருநாழிகைக்குள் கச்சேரிக்கு வருவதாகச் செய்திசொல்லியனுப்ப அவன் கிரமப்படி அவ்விடம்சென்று தயாராய்க்காத்துக்கொண்டிருந்தான். பசவண்ணு ஜமீன்தார்போதித்த மூன்று புத்திமதிகளை மறக்கவேயில்லை. அவைகளில் முதன்மையான 'எப்போதும் கருப்பாயிருத்தல்வேண்டும்.' என்பதை இவன்கரிபூசிக்கொள்ள வேண்டுமென்று பொருட்செய்துகொண்டு, சமையலறைக்குட் சென்று கரியை முகத்தில் பூசித் துணியினல் மறைத்துக் கச்சேரிக்குட் பிரவேசித்தனன். இவ்விதம் முகத்தை விகாரப்படுத்திக் கொண்டு பசவண்ணு தனக்குரிய ஆசனத்தில் உட்கார்ந்து அடிக்கடி உத்தியோகஸ்தர்கள் சரியாக வேலையைச் செய்கிறர்களா வென்று சோதிப்பதற்கு முகத்தைத் திறப்பதும் மூடுவதுமாயிருந்தான். ஆனல் அது உத்தியோகஸ்தர்களுக்கு தெரியாமற் போகவில்லை. பயத்தினல் சும்மா இருந்தார்கள். சூரியாஸ்தமனமாகவே சிரஸ்தேதார் கையெழுத்துக்காக சிலபத்திரங்களை எடுத்துக்கொண்டு தாசில்தாரிடம் வந்து சற்று தூரத்தில் நின்றுர். அவனைப் பார்த்தவுடன் பசவண்ணு "சமீபத்தில்வா" என்றுன். சமீபத்தில்வர இன்னும் கிட்டநெருங்கவேண்டுமெனவே காதண்டை வந்து நின்றுன். உடனே இவன் ஜமீன்தார்சொன்னமொழிகளை நினைத்து வாய்திறந்து சிரஸ்தேதாரின் காதைக்கடித்து 'எல்லோரும் க்ஷேமமாயிருக்கிறர்களா' என்றுன். சிரஸ்தேதார் பயத்தினல் நடுநடுங்கி எல்லோரும் க்ஷேமந்தான் என்று உரக்கக்கதறினன். ஆனல் பசவண்ணுவோ கொஞ்சத்தில் விடவில்லை. கடைசியில் இருபதுமுறை கத்தின பிறகு காதைவிட்டுவிட்டான். சிரஸ்தே

தாரும் காது பெரிதாய் வீங்கவே வலிபொருக்கமாட்டாமல் கச்சேரியைவிட்டு ஜமீன்தாரிடம் முறையிடும்பொருட்டு சுண்டூருக்குப் புறப்பட்டுப்போனான்.

பசவண்ணா ஜமீன்தாரின் உத்தரவின்படி இரண்டு புத்திமதிகளைச் சரிவர நடத்திவிட்டான். மூன்றாவதாகிய "அனைவர் குடுமிகளையும் உன்கையில் வைத்துக்கொள்" என்பதுதான் மிகுதி. சூரியன் மலைவாயில்விழ இருள் பிரபஞ்சத்தை மெள்ளமெள்ள மூடிக்கொள்ளத் தொடங்கிற்று. தாசில்தார் ஆசனத்தில் உட்கார்ந்திருந்தபடியே இருந்ததினால் உத்தியோகஸ்தர்களும் அங்கேயே இருக்கவேண்டியதாயிற்று. இவ்வண்ணம் இராத்திரி பத்துநாழிகை ஆய்விட்டது. தாசில்தார் வெளியே போகிறவனாயக் காணோம். ஆனால் சும்மாவிருந்தாரோ அதுவுமில்லை. அடிக்கடி எல்லோரும் தூங்கினார்களா வென்று பார்க்கும்பொருட்டு முகத்தின்மேலிருக்கும்துணியைவாங்குவதும் மூடுவதுமாயிருந்தான். எல்லோரும்உறங்கின அளவில் அவர்கள் குடுமிகளைக் கையில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சமயம் பார்ப்பவன்போல் பசவண்ணா தென்பட்டான். ஆனால் உத்யோகஸ்தர்களுக்கு இவன் எண்ணம் இன்னதென்று தெரியாததினால் சந்தேகமின்றித் தூக்கம் மேலிடவே சற்றுகண் அயர்ந்தார்கள். சமயம் வாய்த்தவுடனே பசவண்ணா ஓர் கத்திரியினால் அவர்கள் குடுமிகளைத் துண்டித்து ஒரே மூட்டையாய்க் கட்டிக்கொண்டு தரோகாவின் வீட்டிற்குப் பாதிராத்திரியில் வந்து கொஞ்சம் போஜனம்பண்ணிவிட்டு ஜமீன்தாரிடம்போய் தான் செய்தவைகளைச்சொல்லி புகழ்பெறவேண்டுமென்று சுண்டூரைநோக்கிப் பிரயாணப்பட்டான். மறுநாட்காலையில் விடிந்த இரண்டு நாழிகைக்குப் பசவண்ணா ஜமீன்தார் சபைக்கு வந்து சேர்ந்தான். அப்போதுதான் சிரஸ்தேதார் அங்குவந்து இரண்டு நிமிஷம் ஆயிற்று. தாசில்தாரைப்பார்த்ததும் அவன்பயந்து தனக்குநேர்ந்த அவமானத்தை ஜமீன்தார்முன் விண்ணப்பம்செய்ய சற்று அஞ்சினபோதிலும் காது பெரிதாய் வீங்கியிருந்ததினால் ஜனங்கள் அதைப்பற்றி விசாரிக்கத்தொடங்கினார்கள். ஜமீன்தாரைப்பார்த்து கருத்த முகத்துடன் பசவண்ணா சொல்லத்தொடங்கினான். "ஐயா தாம் கட்டளைசெய்தபடி ராஜரீகமுறைமைக்காக முகத்தைக் கருப்பாக்கிக்கொண்டேன்: பாரும் இன்னும் அதை நீக்கவேயில்லை. மேலும் தாங்கள் காதைக்கடித்துபேசச்சொன்னீர்கள். அதற்காகத்தான் இச்சிரஸ்தேதார் காதைக்கடித்தேன். குடுமிகளையும் இந்த மூட்டையில் வைத்திருக்கிறேன்" என்றான். அநேக கௌரவ உத்தியோகஸ்தர்களுடைய குடுமிகளை இந்த அவிவேகன் சேதனம் பண்ணிவிட்டான் என்றுதெரிந்தவுடனே ஜமீன்தாருக்கு ஆறாத துயரமும், வெட்கமும், தீராக்கோபமும் உண்டாய்விட்டன. உடனே அவர் தன்னை மன்னிக்கும்படி சிரஸ்தேதாரைக் கேட்டுக்கொண்டு அதுமுதல் உத்தியோகஸ்தர்களை நியமனம் செய்யும் விஷயத்தில் அதிகசாக்கிரதையுள்ளவராயிருந்தார். பசவண்ணாவின் கதியோவென்றால் அவன் தாசில் வேலையிலிருந்து நீக்கப்பட்டதுமன்றி பஞ்சாங்கவேலையிலிருந்தும் தள்ளப்பட்டான். ஆகையால் நாம் ஏதாவது ஒன்றைச்செய்யவேண்டுமென்று விரும்பினால் அதின் அனுகூலபிரதிகூலங்களை யோசித்தபிறகுதான் அதில்பிரவேசிக்க வேண்டும். மேலும் நமக்கு அகாதகாரியத்தில் பிரவேசித்தால் சுயபுத்தியை உபயோகிக்கவேண்டும். இல்லாவிடில் பிறர் சொற்படி நடக்கவேண்டும். "ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு" என்பதுபோல் அவசரமாகச் செய்தால் அவமானத்திற்கு இடமாகும் என்பது இக்கதையின் கருத்தும் நீதியுமாயிருக்கிறது. நாகரிகமிகுந்த இக்காலத்தில் பசவண்ணாவைப்போன்ற மேதாவிகள் தங்கள் அதிகாரதோரணையைக்காட்ட 'கரி'க்கு பதிலாக 'பொய்' என்கிற கரியைப் பூசிக்கொண்டு 'கரு[illegible]யிருக்கிறார்கள். காதைக்கடிக்காமல் கை[illegible] கடித்துப்பேசுகிறார்கள்: அப்படியென்[illegible] மெய்ப்பொருளைவிட்டு கைப்பொருளைக் கொளவு கிறார்கள். குடுமியை அறுத்து மூட்டை கட்டிக்கொள்ளாமல் தானே திருப்பதிநிலை[illegible] கொடுக்கக் கற்றிருக்கிறார்கள்,

SANITATION COLUMN.
ON THE AIR WE BREATHE
காற்றைப்பற்றிய சுகாதாரக் குறிப்புகள்

காற்றைப்பிடித்துக் கரகத்தி லடைப்பதும் மணலைக் கயிறாகத்திரிப்பதும் செய்யமுடியாத வித்தை யென்று கேள்விப்பட்டிருக்கிறோம். இந்நாளில் இந்த வித்தைகளையும் இன்னும் இதைப்போன்ற வேறு வித்தைகளையும் சுலபமாய்ச் செய்கிறார்கள். இப்போது ஒவ்வொரு வீட்டிலும் வழங்கிவருகிற சீசாக்கள் கண்ணாடி விளக்குகள் முதலானவைகள் மணலை உருக்கிக் கயிறாகத்திரிக்கும் வித்தையினால் உண்டானதேதவிர வேறில்லை. காற்றையும் கரகத்திலடைத்து அது இன்னதென்றும், அதன் உறுப்புகள் இன்னவையென்றும் அவைகளின் குணங்களையெல்லாம் பரிசோதித்துப்பார்த்திருக்கிறார்கள். காற்றைத் திராசில்வைத்துக்கூட நிறுத்துப்பார்த்திருக்கிறார்கள். இவ்வாறெல்லாம் சோதனைசெய்து நல்லகாற்று இன்னதென்றும் கெட்டகாற்று இன்னதென்றும் அதனால் விளையும் தீங்கின்னதென்றும் அறிந்திருக்கிறார்கள். உலகத்தில் உண்டாகிற வியாதிகள் அநேகங்களுக்குக்காரணம் கெட்டகாற்றும் கெட்டதண்ணீரும். இப்போது காற்றினால் உண்டாகும் குணாகுணங்களைக் காண்போம். கெட்டகாற்றினாலும் கெட்டதண்ணீரினாலும் சில குரூரமான வியாதிகளுண்டாகின்றனவென்றால் சாமானியமாய் அநேகர்கள் நம்பமாட்டேனென்கிறார்கள். வாந்திபேதி கண்டால் சர்க்காரார் வீடுகளைச் சுண்ணம்பிட்டு சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் தெருவில் வீட்டில் அசுத்தம் சேரகூடாதென்றும் தண்டோராப்போட்டு நிபந்தனை செய்கிறார்கள். இதைப்பற்றி ஒரு பெரியவரிடத்தில் பேசிக்கொண்டிருந்தேன். சுத்தமாயிருந்தால் கலரா முதலான வியாதிகளைத்தடுக்கலாமென்றேன். அதற்குஅவர் பதில்சொன்னார்: "இதென்ன! பைத்தியந்தான்: வெள்ளைக்காரன் என்னவோ சொல்லுகிறான், நீங்களும் அதைக் கேட்டுப்படித்தும்கெட்டுப்போகிறீர்கள். மனுஷியாளால் இதெல்லாம் தடுக்கமுடியுமா. விதியிருந்தால் வந்துவிட்டுப்போகிறது. விதியைத் தடுத்துவிடலாம்போல் பேசுகிறீர்களே. நம்முடைய ஜாக்கிரதையில் என்ன இருக்கிறது." இவ்வாறு சொல்லுகிறவர்கள் அநேகர். விதியைத்தடுக்கமுடியாதென்று சாஸ்திரங்கள் சொன்னபோதிலும், அந்த சாஸ்திரங்களிலே மனுஷியன் பிரயாசையால் விதியைக்கூடத் தடுக்கமுடிந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறதே! பதினாறுவயதில் மரணமென்று விதித்திருந்த மார்க்கண்டேயர் சாகாமல் பிழைத்ததாகச் சொல்லவில்லையா? அவருடைய பக்தியினாலும் செய்கையினாலும் அவருடைய விதி விலக்கப்பட்டது. சாவித்திரி, சத்தியவான் அற்பாயிஸுள்ளவனென்று தெரிந்திருந்தும் தான் அவனை மனதால்வரித்தபின் வேறொருவனை நினைக்கவும் கூடாதென்று அவனையே விவாகம் செய்துகொண்டு தெய்வபக்தியினாலும் முன் சாக்கிரதையினாலும் யமன் கொண்டுபோன உயிரைக்கூட மீட்டுக்கொண்டு வந்ததாகச்சொல்லப்பட்டிருக்கிறதே. இதெல்லாம் விதியை வெல்வதும் அசாத்தியமன்று என்று காட்டவில்லையா? மேலும் விதிப்படித்தான் நடக்குமென்றிருந்தாலும் நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமலிருப்பது பாபம் என்று நம்முடைய சாஸ்திரங்களே முறையிடுகின்றன. அதையறியாமல், சர்க்காரார் சுத்தமாயிருக்க வேண்டியதற்காக ஏற்படுத்தும் நிபந்தனைகள் நமக்குத் தொந்தரவு செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டன வென்று அபிப்பிராயப்பட்டு அவைகளை எப்படியாவது அனுஷ்டானம்செய்யாமலிருக்கவேண்டுமென்று பார்க்கிறார்கள். குளத்தில் ஆற்றில் தண்ணீரை அசுத்தம் பண்ணக்கூடாதென்றால் காவலாளிகள் வருவதற்கு முன்னமே தெரியாமல் மாட்டைக்குளிப்பாட்டிக்கொண்டு கால்கழுவிக்கொண்டு வந்துவிடுகிறது. குப்பை அழுக்கு முதலானவை சேர்ந்

தால் கெட்டகாற்று வருமென்று வாசலில் அவைகளைப் போடக்கூடாதென்றால், அவைகளைக் கண்காணாமல் புறக்கடையில் போட்டு வைக்கிறது. இதனால் தான் வந்தவியாதி சீக்கிரத்தில் தீராமல் உபத்திரவம் செய்கிறது. நம்முடைய முன்னோர்கள் நிரம்ப பலசாலிகளாகவும் பூரண ஆயிசுள்ளவர்களாகவும் இருந்ததாக நமக்குத்தெரிகிறது. கலியுகத்தில் வரவர நமக்கு பலன்குறைந்தும் நம்முடைய உருவம் குறைந்தும் அங்குஷ்டமாத்திரம் போய்விடுமோவென்று அனேகர் சொல்லக்கேட்டிருக்கிறோம். நம்முடைய முன்னோர்கள் பலசாலிகளாக விருந்ததற்கும் நாம் அப்படிக்கில்லாததற்கும் காரணமென்ன? அவர்கள் தேகசௌக்கியத்திற்காகச் செய்யவேண்டிய கருமங்களை நன்றாக அறிந்து நடத்தினார்கள். காய்கிழங்குகளைத்தின்று ஜீவனம் செய்துகொண்டிருந்தபோதிலும் நம்முடைய ரிஷிகள்நல்ல ஜலம்சாப்பிட்டு நல்லவாயுவை சுவாசம்பண்ணிக்கொண்டிருந்தபடியால் பிணியில்லாமலிருந்தார்கள். ராமாயணத்தில் வால்மீகியானவர், நல்லஜலத்தைக்கண்டாலும் நல்ல நிர்மலமான பிரதேசங்கள் வந்தாலும் அவைகளை ஆனந்தத்தோடு வர்ணிக்கிறதைப் பார்த்தால் அதியாச்சரியமாகவிருக்கின்றது. ஆனால் இந்தக்காலத்தில் நாமெல்லாம் அந்தமாதிரி நல்ல இடங்கள் வேண்டுமானால் காட்டுக்கா போகிறது? இல்லை: நல்லஜலமும் நல்லகாற்றும் தேக ஆரோக்கியத்திற்கு அவசியமென்றறிந்து நாமிருக்கிற இடங்களைச் சரிவரவும் நமக்குச் சமீபத்திலுள்ள ஜலத்தைச் சுத்தமாகவும்வைத்துக்கொண்டால் போதும். கேவலம் தேகசௌக்கியத்திற்காக மாத்திரம் நம்முடைய பெரியோர்கள் நல்ல ஸ்தலங்களைத் தேடவில்லை. அவர்களுக்கு முக்கியமான செயல், சாஸ்திரவிசாரணையும் பகவத்பக்தியும். பிணிவந்தால் இவைகளுக்கு இடையூறாகுமென்று அவ்வளவு ஜாக்கிரதையா யிருந்தார்கள், நமக்கும் இகத்திற்காகவும் பரத்திற்காகவும் செய்யவேண்டிய கர்மங்கள் பலவுண்டு. ஒருவரும் தனக்கு வியாதிவரவேண்டுமென்று சொல்லமாட்டார். எல்லாவியாதிகளையும் மரணத்தையும் நம்மால் தடுக்கமுடியாதாகிலும் நாம் நடக்கவேண்டியபடி நடந்தால் பலவகை வியாதிகள் தீரும்.

காற்று நமக்கெதற்காக வென்று கேட்டால் சுவாசம் விடுவதற்காக என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். சுவாசமென்றால் என்ன? எதற்காகக் காற்றுவேண்டுமென்று விசேஷமாகத் தெரியாது. காற்றில்லாத இடத்தில் ஒரு நாய் அல்லது வேறே ஜீவஜந்துவையடைத்துவைத்தால் அது சீக்கிரத்தில் மரணமடையும். சுவாசம் விடும்போது ஒருதரம் காற்று நாசித்துவாரத்தின் வழியாக உள்ளேபோய் உடனே, அதின்வழியாய்க் காற்று வெளியே வருகிறது. இந்தமாதிரி ஒரு நிமிஷத்திற்குள் பலதரம் சுவாசம் விடுகிறோம். மூக்கின்வழியாய்ப்போகும்காற்றிற்கும் அதன்வழியாய்வெளியேவரும் காற்றிற்கும் நமக்கு ஒரு வித்தியாசமும் கண்ணுக்குத் தெரியாது. காற்று கண்ணுக்குத்தெரிகிறதில்லை. காற்றுப்போகிறதும் வருகிறதும் மாத்திரம் தெரிகிறது. இவ்விரண்டிற்கும் நிரம்பவித்தியாசமிருக்கிறதென்று சோதனை செய்துபார்க்கலாம். இரண்டு வெள்ளைச் சீசாக்களில் தெளிவான சுண்ணாம்புத் தண்ணீரை வைத்துக்கொண்டு ஒன்றில் மூக்கின்வழியாய் வெளியில் வருகிற காற்றைச் செலுத்துகிறது. ஒருசின்னக்குழாய் அல்லதுவைக்கோல் துரும்பின்வழியாக மூச்சுவிடலாம். மூக்கில் வைத்துக்கொண்டு விட்டால் உள்சுவாசம் வாங்கும்பொழுது அஜாக்கிரதையாயிருந்தால் தண்ணீர் ஒருக்கால் மூக்கில் ஏறலாம். வாயால் ஊதினால் சுவாசம்விட்ட காற்று அதில்செல்லும். இந்தமாதிரிசெலுத்தினபிறகு அந்தச் சீசாவை மூடிவிட்டு நன்றாகக் குலுக்கினால் தெளிந்திருந்த சுண்ணாம்புத் தண்ணீரானது கலங்கிப் பால்போல் வெளுத்துப்போகும். மற்றொரு சீசாவில் நம்மைச்சுற்றியுள்ளதும் மூக்கின்வழி நாம் உள்வாங்குவதுமான காற்றை விசிறியால் விசிறிச்செலுத்தினாலும்சரி, ஒரு பீச்சாங்குழலினால் (Syringe) செலுத்தினாலும் சரி, அப்படிச் செலுத்தினபிறகு சீசாவைக் குலுக்கினால் அந்தச் சுண்ணாம்புத் தண்ணீர்கலங்காது அப்படியேயிருக்கும். அதின் வர்ணம் மாறுகிறதில்லை. இதனால் இந்த இரண்டு காற்றுக்கும் வித்தியாசம் இருக்கிறதென்றும் தேகத்திற்குள்ளே போகிறகாற்றே வெளியே வருகிறதில்லையென்றும் தெரிகிறது.

மூக்கின்வழியாய் வெளியேவரும் காற்று அசுத்தமான காற்று. நல்லகாற்று உள்ளேபோய் அதற்குப் பதிலாகக் கெட்டகாற்று வெளியே வந்து விடுகிறது. இது எப்படியென்று முழுவதும் இப்போது சொல்லமுடியாது. நாம் நடப்பதாலும் ஓடுவதாலும் சிந்தனைசெய்வதாலும், இன்னும் இவ்வாறுசெய்யும் வேலைகளாலும் வேலைகளுக்குத் தக்கபடி சரீரத்தின் அணுக்கள் பஸ்பமாய் இந்தக் கெட்டகாற்றாக மாறுகிறது. ஒரு நீராவியந்திரம் வேலைசெய்ய வேண்டுமானால் அதற்கு விறகு, நிலக்கரிபோட்டு எரித்தால்தானே அது வேலைசெய்கிறது. அதேமாதிரிதான் நம்முடையதேகமும். அந்தக்கெட்டகாற்றானது ரத்தத்தில் கலந்து சுவாசப்பையில் வரும்போது அதியற்புதமாக நல்லகாற்று உள்ளேபோய் கெட்டவாயுவைவெளியில் துரத்திவிடுகிறது.

இந்தக்கெட்ட மூச்சுக்காற்றானது ஜனங்கள் நிரம்ப அடர்த்தியாயிருக்குமிடத்தில் ஜாஸ்தியாகக் காற்றில் சேருமல்லவா. அதனால் தான் பட்டணவாஸங்களிலுள்ள காற்றானது ஜனங்களதிகமாயில்லாத கிராமங்கள் மலைப்பிரதேசங்களிலுள்ள காற்றைக்காட்டிலும் அசுத்தமாயிருக்கும். இந்தமூச்சுக்காற்றைத்தவிர வேறே பலவிதமான கெட்டவாயுக்களும் பட்டணங்களில் உற்பத்தியாகி நாம் சுவாசம்விடும் காற்றைக்கெடுக்கும். மலம் ஜலம் சரியாய் எடுபடாமல் அவைகளிலிருந்து கெட்டகாற்றுக்களுண்டாகும். சாக்கடைத்தண்ணீரிலிருந்தும் ஒருவிதமான கெட்டவாயு உண்டாகும். இவ்விதமாகப் பட்டணங்களிலுள்ள காற்றானது கெட்டுப்போக பலஹேதுக்களுண்டு. தோல்கிடங்கு, கசாப்புக்கடை முதலான இடங்களிலிருந்துண்டாகும் காற்று துர்க்கந்தமும் கெடுதியுமுள்ளது.— இப்படிப்பட்ட அசுத்தங்கள் சேர்ந்த காற்றைச் சுவாசம்பண்ணினால் தேகத்திற்கு அசௌக்கிய முண்டாகுமென்பதற்குக் கேட்பானேன். முன்னே தேகத்திலுள்ள அசுத்த வாயுவானது வெளியில்போய் அதற்குப் பதிலாக நல்லகாற்று ரத்தத்தில் கலக்கவேண்டுமென்று கண்டோம். நாம் உட்கொள்ளும் காற்றே அசுத்தமாயிருந்தால், இதன் அசுத்தமும் இரத்தத்தில் கலந்து பலவியாதிகளுக்கு ஏதுவாக ஆகிறது. மலைக்காச்சல், பித்தவாதசுரம், கபவாதசுரம், 'கலரா' என்னும் விஷபேதி, வயிறுகடுப்பு முதலான வியாதிகள் காற்றின் அசுத்தத்தாலுண்டாகிப்பரவுகின்றனவென்று கண்டறிந்திருக்கிறார்கள். 20-வருஷங்களாக இத்தேசத்தின் சிலபாகங்களில்புதிதாக 'ப்ளேக்' என்னும் கொள்ளைக்காய்ச்சலொன்றுண்டாகி வெகு உபத்திரவம் பண்ணிக்கொண்டுவருகிறது. அது ஒரு கொடிய தொற்றுவியாதி யாதலால் அது இந்தப்பக்கத்திற் பரவவொட்டாமல் சர்க்காரார் எவ்வளவோ ஜாக்கிரதை யெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அக்கரையுள்ள விடத்திலிருந்து வருகிறவர்களையெல்லாம் சோதித்துப்பார்த்து அந்த வியாதியில்லாமலிருந்தால்தான் பட்டணத்துக்குள் விடுகிறார்கள். கொஞ்சம் சந்தேகமிருந்தால் அவர்களை நிறுத்தி பத்துப் பதினைந்து நாளைக்கு வேறிடத்தில் வைத்திருந்து பிறகு அனுப்புகிறார்கள். இப்படியெல்லாம் செய்வதினால்தான் அந்தக் கொடும்வியாதி இங்கே வராமலிருக்கிறது. இது முதலில் பம்பாய்க்கு எப்படி வந்ததென்று நிச்சயமாய்த்தெரியவில்லை. 'சீனா' தேசத்தில் இந்தவியாதி யிருந்ததாம். அங்கிருந்து வந்தவரிடத்தில் ஒட்டிக்கொண்டு வந்திருக்கவேண்டும். மூட்டை முடிச்சு வஸ்திரம் முதலானவைகளில் அந்த வியாதியின்

காற்றானது ஒட்டிக்கொண்டிருக்கலாம். அது பம்பாயில் வந்தவுடனே அங்கே முளைத்து மேன்மேலும் விருத்தியடைந்ததுபோலிருக்கிறது. காற்றினால் இப்படிப்பட்ட வியாதி பரவுமென்கிறதற்குச் சந்தேகமில்லை. சென்ன பட்டணத்திற்கூட பம்பாயிலிருந்து வந்தவர்கள் இரண்டொருவருக்கு அந்தவியாதி கண்டதினால் அவர்களிடத்திலிருந்தும் அவர்கள் துணி மணிகளிலிருந்தும் அந்த விஷக்காற்று பரவாமலிருக்கும்படியாக அவர்களைத்தனித்து பட்டணத்துக்குவெளியே வைத்து அவர்கள் துணிமணிகளையும் கொளுத்தி ஜாக்கிரதை செய்தபடியால் அந்த வியாதி அதிகாரிகளுடைய முன் ஜாக்கிரதையினாலும் தெய்வசகாயத்தாலும் இதுவரையில் இங்கே பரவவில்லை. ஒரு வித்து முளைக்கவேண்டுமானால் அது நல்ல பூமியில் போடப்படவேண்டும். அது நன்றாக வளர்ந்து பயிராகவேண்டுமானால் அதற்கு வேண்டிய தண்ணீர், காற்று, எரு முதலானவை வேண்டும். அதுபோலவே 'கலரா' முதலான வியாதி வித்துக்கள் ஏதோ சில காரணங்களாலுற்பத்தியாகிக்காற்றில் சேர்ந்தால் அவைகள் எங்கெந்த இடங்களுக்குப் போய்ச்சேருகின்றனவோ அவ்வவ்விடங்களில் முளைத்துக்கிளம்பி ஓங்கும். அசுத்தமான இடங்களிற்போய்ச்சேர்ந்தால் அது வளருகிறதற்கு வேண்டிய ஆகாரமிருப்பதால் அவ்விடங்களில் நன்றாகப் பலிக்கிறது. அசுத்தமில்லாமல் சுத்தமாய் இருந்தால் இந்தவியாதி வித்துக்கள்வந்தாலும் அவைகள் வளருகிறதற்கு வேண்டிய ஆகாரமில்லாததினால் முளைக்கா. அதனால்தான் அசுத்தமான இடங்களில் இந்த வியாதிகள் வந்தால் சீக்கிரத்தில் தீருகிறதில்லை. அதனால்தான் வீடுகளையும் புறக்கடைகளையும் சாக்கடைமுதலான எல்லா இடங்களையும் பரிசுத்தமாகவைத்துக்கொள்ள வேண்டுமென்று சர்க்காரார் நமக்கு நிபந்தனை செய்கிறார்கள். அப்படிவைத்துக்கொள்ளுவது எவ்வளவு அவசியமென்று கண்டோம். வைத்தியனிடத்தில் மருந்துசாப்பிடுகிறது பெரிதல்ல; அவன் சொன்னபடி பத்தியமிருந்தாலல்லவா வியாதி தீரும். வைத்தியனாற் சொன்னதாற்பாதி நாம் செய்வதாற்பாதி அப்படியிருந்தால் தான் வியாதி சுவஸ்தமாகும். அப்படியே சர்க்கார் நிபந்தனை இல்லாமலே நாம் வீடு முதலானவைகளைச் சுத்தமாய் வைத்துக்கொண்டால்தான் பல குரூரவியாதிகள் வராமலிருக்கும். ஒருக்கால் எப்படியாவது வந்தாலும் சீக்கிரம் தீரும்.

நாம் வசிக்கும் வீடுகளிலும் படுக்கும் அறைகளிலும் காற்று அடைபடாமல் வெளியில் போயும் உள்ளேவந்துகொண்டும் இருக்கவேண்டும். காற்றுச்சரியாய்ப் போகவர முடியாவிட்டால் ஒரு அறையிலுள்ள ஜனங்களின் மூச்சுக்காற்றெல்லாம் அதிலேயே தங்கியிருக்குமாதலால் அந்தக்காற்றின் சுத்தம் குறைந்துபோகும். ஒரு அறை பின் கதவு ஜன்னல்களைச் சாற்றிவிட்டு அதில் பலபேரிருந்தால்சீக்கிரம் அதன் காற்றெல்லாம் கெட்டுப்போகும். அதைச் சுவாசித்தால் தலைமயக்கம் தலைவலி காணும். தினந்தோறுமிவ்வாறே செய்தால் உடம்பு அசௌக்கியப்பட்டு ஆயுசும் குறையும். அதனால்தான் வீடுகளுக்குப் பெரிய ஜன்னல்களிருக்கவேண்டும். நாம் படுத்துத் தூங்குகிற இடமானது ஜன்னலுக்கு நேரேயிருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. ஒரு ஜன்னல்வழியாகக் காற்று உள்ளேபோய் மற்றொரு ஜன்னல் வழியாக வெளியே போனாற் போதும். ஜலத்தைக்காட்டிலும் எண்ணெய் லேசென்று தெரியும். அதைச் சுலபமாயறியலாம். ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வைத்து அதில் ஒரு சொட்டு எண்ணெயை விட்டால் அது உள்ளே அமுங்காமல் மேலேயே மிதக்கும். தண்ணீரில் ஒரு கல்லைப்போட்டால் அது அமிழ்ந்து விடுகிறது. ஒருகட்டையைப்போட்டால் மிதக்கும். ஒருவஸ்து தண்ணீரைக்காட்டிலும் இலேசாயிருந்தால்மிதக்கும். அதைக்காட்டிலும் கனமாயிருந்தால் அமிழ்ந்துவிடும். அப்படியே இலேசான பதார்த்தங்கள் காற்றில் மிதக்கின்றன.

கனமாயிருந்தால் மிதக்க முடியாது. ஒரு மெல்லிய இறகு காற்றில் பறக்கும். ஒரு சின்னக்கல்லைப் போட்டால் அது காற்றில் பறக்குமா? பறக்காது. இவ்வாறே பரிசோதனை செய்து பலவிதமான வாயுக்களிருக்கின்றவைகளில் எது இலேசு எது கனம் என்று பார்த்திருக்கிறார்கள். நம்முடைய தேகத்திலிருந்து வெளியேவரும் மூச்சுக்காற்றும்சாக்கடைமுதலான இடங்களிலிருந்துண்டாகிற காற்றுக்களும் நம்மைச் சுற்றியிருக்கும் சாதாரணக்காற்றைக்காட்டிலும் கனமென்று அறிந்திருக்கிறார்கள். அதை எளிதில் காணலாம். குழந்தைகள் காட்டாமணக்குப் பாலினால் கொப்பளம் விடுகிறதுண்டு. அந்தப்பாலை அதன் இலையில் கறந்துக்கொண்டு ஒரு வைக்கோற்காம்பின் நுனியை அதில் தோய்த்து மற்றொரு பக்கத்தாலூதினால் கொப்பளம் உண்டாகும். அந்தக் கொப்பளம் உயரக்கிளம்பாமல் கீழே அமிழ்வதைப் பார்க்கலாம். அந்தக் கொப்பளத்திற்குள் மூச்சுக்காற்றிருக்கிறது. அது சுற்றிலுமுள்ள காற்றைக்காட்டிலும் கனமுள்ளதனால் தானே அது அமிழ்கிறது. இன்னும் ஒருவிதமாகவும் காணலாம். ஒரு சீசாவின் வாயை ஒரு காகிதத்தால் மூடி அதில் ஒரு துவாரம் பண்ணி ஒரு குழாயைச் செலுத்தி அதின் வழியாக மூச்சுக்காற்றை அதில் போகும்படிச் செய்கிறது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சீசாவிலிருந்த சாதாரணக்காற்றைப் பெரும்பாலும் வெளியே துரத்திவிட்டு அதில் இந்த வாயு தங்கிவிடும். இதற்கு முன்னாலே ஒரு பஞ்சபாத்திரத்திற்குள் ஒரு விளக்குக் கொளுத்தி வைத்திருந்து, அதில் சீசாவிலுள்ள காற்றைக் கொட்டுவதுபோல் கொட்டினால் அந்த விளக் கவிந்துபோய்விடும். * இப்படி அந்தக்காற்று சாதாரணக்காற்றைக்காட்டிலும் கனமுள்ளதாகவிருப்பதால் பூமிக்குச் சமீபத்தில் தங்கியிருக்கும். காற்று வீசிக்கொண்டிருந்தால்தான் நல்லது. இந்தக்காரணத்திற்காகத்தான் தரைக்குமேல் கட்டில் முதலான [illegible]ம் உயரமான படுக்கையில்படுக்கிறது [illegible]மென்று சொல்லுவார்கள்.

* நாம் வெளியேவிடும் சுவாசக் காற்றில் ஜீவப்பிராணிகள் வசிக்க முடியாததுபோல் விளக்கும் அதில் எரியாது.

SHORT STORY.
THE DOG AND THE WOLF.
சிறுகதை: நாயும் ஓநாயும்.

சந்திரன் பிரகாசித்த ஒரு நாளிரவில், மிகுந்த பசியால் வருந்தி யிளைத்த ஓர் ஓநாய், நன்றாகத் தீனியைத்தின்று கவலையில்லாமல் மதோன்மத்தனாக அலைந்து திரிந்த ஒரு நாயைக் கண்ணுற்று, வழக்கப்படியே தகுந்த மரியாதைசெய்து தலை குனிந்து வணங்கி, "அண்ணா! நீங்கள் மிகவும் கொழுத்து வளர்ந்து அழகுள்ளவர்களாக இருக்கின்றீர்களே! இவ்வளவு கோமளகரமான சரீரத்தோடிருக்கின்ற மற்றோர் பிராணியை இதுகாறும் நான் கண்டதேயில்லையென்று உண்மையாக உரைப்பேன். ஆனால், நீங்கள் என்னைக் காட்டிலும் இனிமையான வாணாளை அனுபவிக்கின்றீர்களே: அதெப்படி என்பதை எனக்குச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நானோ உம்மைக் காட்டிலும் ஐம்பதுமடங்கு அதிகமான ஊக்கமுடையவனாகவே இருந்துகொண்டிருக்கிறேனே. இது உமக்குந் தெரிந்த விஷயந்தானே! ஆனால், எனக்குப் பசிமாத்திரம் ஒரு நாளும் சாந்தமாகிறதில்லையே!" என்றது.

இதைக்கேட்ட நாய், "நான் செய்கிறபடியே நீயும் செய்தால், நீயும் அவ்வளவு சுகமாகக் காலத்தைக் கழிக்கலாம்," என்று நம்புகிறேனென்றது.

"அந்த வழிதான் என்னவென்கிறேன்," என்று ஓநாய் வினவிற்று.

"இராவேளையில் எஜமானன் வீட்டிலே திருடர்கள் நுழைந்துவிடாமல் பாதுகாத்துக் கொள்வதுதான்," என்று நாய் மறுமொழி கூறிற்று.

"அப்படியே, சம்மதம்!—இது செய்யக் கூடாதா? இப்போது நான் படுகிற அவஸ்தைக்கு இது செய்யக்கூடாதா? காட்டிலே யலைந்து திரிந்து படாதபாடெல்லாம் பட்டு மழையிலும், பனியிலும் அல்லாடித் தவிக்கின்ற எனக்கு மிகுந்த உபசரணை செய்யக்கூடிய எஜமானன் வீட்டிலே நல்ல உணவுகளை வயிறுறவுண்டு சுகித்திருப்பதில் கஷ்டமுண்டோ?" என்று ஓனாய் கூறிற்று.

இதைக்கேட்ட நாய், "உண்மை!—ஆகையால், நீ இப்போது என்னோடு வருவாய்," என்று ஓனாயை யழைத்தது. ஓனாயுஞ் சம்மதித்து, "இனி நமக்கு உய்யும்வகை கிடைத்தது" என்றெண்ணி நாயோடு பின்றொடர்ந்து குதூஹலத்தோடு செல்லும்போது, அந்நாயின் கழுத்திலே வட்டமாகப் படர்ந்திருந்த தேமலொன்றைக் கண்டு, "எவ்வாறு இத்தேமல் படர்ந்தது?" என்ற விஷயத்தை யறிந்துகொள்ள மிகுந்த பேரவாக்கொண்டு, நாயை நோக்கி "அண்ணா! இதுவென்ன?" என்றது.

நாய், "ஒன்றுமில்லை," என்ன, ஓனாய் மறுபடியுமிடித்து வினவிற்று.

அப்போது, நாய், "உனக்கு இது இன்னதென்று தெரியவேண்டுமோ? நல்லது. சில வேளைகளில் நான் கொஞ்சம் மூர்க்கத்தனமாக இருக்கிறபடியால், வீட்டுக் குழந்தை குஞ்சுகளைக் கடித்துவிடுவேனோ வென்கிற பயத்தினாலே பகல்வேளை யெல்லாம் என் எஜமானன் என்னை ஒரு ஸ்தம்பத்திலே கட்டிப்போடுவான். சூரியன் குடவாயிலில் விழுந்தவுடனே தான் என்னை யவிழ்த்துவிடுவான். நான் பிறகு எதேச்சையாகத் திரிவேன். எஜமானனுக்கு வேறொரு கருத்துமுளது—பகல் வேளையெல்லாம் என்னைக் கட்டிப்போட்டிருந்தால், நான் நன்றாகத் தூங்குவேன். இரவிலே விழித்த கண்ணோடு உறக்கங்கொள்ளாமல் நன்றாகக் காவற் செய்வேனன்றோ? கட்டுத்தறியினால் இப்புண்ணுண்டாயிருக்கிறது அப்பா!—ஆனாலும் எஜமானன் மிகுந்த அன்புடையவன். எனக்கு மிகவும் திருப்திகரமான உண்டியுணவுகளையும், எலும்புகளையும் தனது கையினாலே கொண்டு வந்து கொடுப்பான். வீட்டிலே தின்பண்டங்களின் எச்சிலெல்லாம் என்னுடைய பாகமே. குழந்தை குஞ்சுகள் முதல் யாவரும் என்னை நேசிப்பார்கள்" என்றது.

இவ்வார்த்தைகளைக் கேட்ட ஓனாய் தலையையாட்டிக்கொண்டு சற்றுத் தயங்கி நின்றது. அப்போது நாய் ஓனாயைப் பார்த்து, "ஏன் அப்பா! தயங்குகிறாய்?" என்று வினவிற்று.

ஓனாய், "உங்களுக்கொரு நமஸ்காரம் ஐயனே! உங்களுடைய அநுபவத்தை யெல்லாம் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். நானோ சுவாதீனப் பிரியன். நீர் சொல்லுகிற நிபந்தனைக்குள்பட்டுக்கொண்டு ஓர் அரசனாகக்கூட இருக்கமாட்டேன்." என்று சொல்லிக்கொண்டு புறங்காட்டி ஓடியே போய்விட்டது.

மிகவுங் கேவலமான பாமர ஜனங்களோடு ஈனஸ்திதியிலிருந்து நிபந்தனைகளுக்குள்பட்டு தகுந்த அந்தஸ்திலிருப்பதைப் பார்க்கிலும் சுயேச்சையாக விருத்தல் நன்று. முட்டி புகுந்தாலும் புகலாம். அந்நந்நாள் விறகு வெட்டியாகிலும் மண்கொத்தியாகிலும் உஜ்ஜீவிக்கலாம் அடிமையாக விருத்தல் கூடாது. ஆதலால் நீங்கள் மிகவுமற்பமான [illegible]களைச் செய்துகொண்டு அடிமையாக இராதீர்கள். மானத்தோடிருங்கள். அடிமைத்தனத்தில் வெட்கமறியாத வொருவன் கொலைக்குக்கூட அஞ்சமாட்டான்.

ON INDEBTEDNESS.

கடன்படல்.

சரீரசுகத்தின் பொருட்டாவது, தருமத்தின் பொருட்டாவது, யாவரும், தங்கள் தங்கள் வரவுக்கேற்ப, மட்டாசச் செலவுசெய்தல் வேண்டும். வரவுக்குமேலே செலவுசெய்யப் புகுவோர் கடன்படத் தலைப்பட்டுப் பெருந்துன்பத்தையும் அவமானத்தையும் அடைவர். கடனுடையவருக்கு இம்மை மறுமை இரண்டினும் இன்பமே இல்லை. எத்துணைப்பெருஞ் செல்வராயினும், கடன்படத் தலைப்படுவோர், விரைவிலே தங்கள் செல்வமெல்லாம் இழந்து, தரித்திரராவர். இம்மையிலே மனிதர்கள் அநுபவிக்குந் துன்பங்களெல்லாவற்றினும், கடனால் உண்டாகுந் துன்பத்தின் மிக்க துன்பம் யாதொன்றுமில்லை. தனிகனைத் தாயைக் கண்டாற்போலப் பேரானந்தத்தோடுகண்டு அவனிடத்தே கடன்பட்டவர், பின்பு அவன் எதிற்படும்போது அவனைப் பேயைக்கண்டாற்போலப் பெரும்பயத்தோடு கண்டு, நடுநடுங்கி ஒளிப்பிடந்தேடி ஓடுவர், தனிகன் - கடன் கொடுக்கிறவன்,

பொருளில்லையானால், கூலித்தொழில் செய்து வயிறு வளர்க்கினும் வளர்க்கலாம்; பிச்சையேற்று உண்ணினும் உண்ணலாம்; பசிநோயால் வருந்தி இறக்கினும் இறக்கலாம். இவைகளெல்லாம் அவமானங்களல்ல, இவைகளினாலே பிறருக்கு யாதொரு கேடும் இல்லை; இவைகளினால் ஒருவருக்கும் அஞ்சவேண்டுவதில்லை. இவைகளாலே துன்பம் உண்டாயினும், அத்துன்பமோ மிகச் சிறிது; அச்சிறு துன்பமும், நல்லறிவோடு அமைந்து சிந்திக்கும்போது நீங்கிவிடும். கடனோ இப்படிப்பட்ட[illegible]. பெருவியாதி முதலிய கொடுநோய்களினால் உண்டாகுந் துன்பத்தைப்பொறுக்கினும் பொறுக்கலாம்; கடனால் உண்டாகுந் துன்பத்தைப் பொறுத்தல் அரிது அரிது.

கடன்படக் கூசாதவர் பொய் சொல்லக் கூசார்; பொய்ப்பத்திரம் பிறப்பிக்கக் கூசார்; பொய்வழக்குப்பேசக் கூசார்; விசுவாசகாதஞ் செய்யக் கூசார்; வழக்குத் தீர்ப்பிலே பரிதானம் வாங்கக் கூசார், களவுசெய்யக் கூசார்; கொலைசெய்யக் கூசார். கடன்படல் எல்லாப் பாவங்களையும் வலிந்து கைப்பிடித்தழைக்குந் தூது. கடன்படல் இவ்வளவு பாபத்துக்குங் காரணமாகுமானால் வட்டிக்குக் கடன்கொடுப்போன் தொழிலும் இழியதே யென்பதை உத்தேசித்துத்தான் மஹம்மதியமதம் வட்டிக்குக் கடன்கொடுப்பதை ஈனமாகக்கொண்டு தர்மவிரோதமெனத் தள்ளியிருக்கிறது.

ஒருவனுக்குத் தன்பொருளிற் சிறிது கடனாகக் கொடுத்தவன், அம்முதற்பொருள் வட்டியோடுவரும் என்று நெடுங்காலம் எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றான்; சிலபோது தனக்கு முட்டு வந்தவிடத்துத் தன்முதற்பொருளையும் வட்டியையும் நம்பித்தான் பிறனிடத்தே கடன்படுகின்றான் : தான்கொடுத்த கடன் வாராதபொழுது, தன் பிறமுயற்சிகளை விடுத்துக் கடனுடையவனைப் பலநாளும் பலதரமும் தேடித்தேடிக் கேட்டுக் கேட்டு, அலைந்து திரிகின்றான்; அவன் அக்கடனைத்தீராதபோது அவன்மீது தருமசபையிலே வழக்குத் தொடுத்து, தன் காலத்தையும் தன்னெஞ்சிய பொருளையும் பலவாற்றாலும் அவ்வழக்கிலே போக்குகின்றான் ; அவ்வழக்கை நடத்துதற்குத் தன்னெஞ்சிய பொருள் போதாதபோது, பிறனிடத்தே கடன்படுகின்றான் ; நெடுங்காலஞ் சென்றபின், தான் அவ்வழக்கிலே தோல்வியடையாது வெல்லியடைந்தானாயினும், கடனுடையவனிடத்தே தாவரசங்கமப்பொருள் உண்டோ இல்லையோ என்று பலநாளும் ஆராய்ந்துகொண்டு திரிகின்றான் ; தாவரசங்கமப் பொருள் இல்லாதபோது, ஏங்கி வருந்தி மாய்கின்றான். தாவரசங்கமப்பொருள் கண்டு விக்கிரயஞ்செய்தவிடத்தும் ; அவைகளின் விலை தனக்கு வரற்பாலனவாகிய முதலுக்கும் வட்

டிக்கும் வழக்குச் செலவுக்கும் போதாதபொழுது தான் பிறனிடத்தே வாங்கிய கடனைத் தீர்த்துவிட்டு 'என்செய்வேன் என்செய்வேன்' என்று பெருமூச்செறிந்து கவலைக்கடலின் மூழ்கித் தன் மனைவி மக்களோடு பட்டினியிருந்து மாய்கின்றான். இது இப்படி இருக்க, தன்பொருளனைத்தையும் திருடரால் இழந்தவனோ, சிலநாண்மாத்திரம் கவலையுற்றுப் பின்பு அக்கவலையை ஒழித்து விட்டுத் தன்னால் இயன்றதொழில் செய்து மகிழ்ச்சியோடு சீவனஞ்செய்கின்றான். ஆதலினாலே, ஒருவனுடைய பொருண்முழுவதையும் திருடுதலினும், அவன்பொருளிற் சிறிதையேனும் கடனாகவாங்கிக் கொண்டு அதனைத் தீர்க்காமை பெருங் கொடும் பாவம் பாவம்!

நம்முடைய தேசத்தாருள்ளே கடன்படும் வழக்கம் மிகப் பெரிது. கடன்படாதவர் நூற்றுவருள்ளே ஒருவர் கிடைப்பதும் மிக அரிது. அநேகர், சுபா சுபகருமங்களிலே பிறர் செலவுசெய்வதைப் பார்த்து, தாங்களும் அப்படியே செலவு செய்யாதொழிந்தால் தங்களுக்கு அவமானமாகும் என்று எண்ணி கண்ணை மூடிக்கொண்டு, அகப்படுமட்டும் கடன்பட்டுச் செலவுசெய்கின்றார்கள். கடன்பட்டு வட்டி வளர்ந்தபின் முன்னுள்ளதும் இழந்து பசிநோயால் வருந்துதலும் கடனைத்தீர்க்க இயலாது தனிகர்குடியைக் கெடுத்தலும் அவமானமல்லவாம்; வரவுக்கேற்ப மட்டாகச் செலவுசெய்து முட்டின்றிவாழ்தல் அவமானமாம். ஐயையோ! இவர்கள் அறியாமை இருந்தபடி என்னே,

நம்முடைய தேசத்தார்கள் சுபாசுபகருமங்களிலே செலவிடும் பொருள் பெரும்பாலும் யாவரிடத்தே சேர்கின்றது? தொழில்செய்து சீவனஞ்செய்யச் சத்தியுடையவர்களாய் இருந்தும் அது செய்யாத சோம்பேறிகளிடத்தன்றோ? யாசித்துப் பொருள் சம்பாதிக்கும் இச்சோம்பேறிகளுள்ளே அநேகர் உண்டுடுத்து, எஞ்சிய பொருள்கொண்டு ஆபரணஞ் செய்வித்து, வீடு கட்டுவித்து, விளைநிலம் தோட்டமுதலியவை வாங்கி, நூற்றுக்கு இரண்டு மூன்று வீதம் வட்டிக்குக் கொடுத்துக்கொண்டு, செல்வர்களாய் இருக்கின்றார்களே. தொழில் செய்து வருந்திச் சம்பாதிப்பவர்களுள்ளே அநேகர் சுபாசுபகருமங்களிலே இவர்களிடத்திலே கடன்பட்டு, இவர்களுக்கே இறைத்துவிட்டு, வட்டி வளர்ந்தபின், இவர்கள் தங்கள் வீட்டு வாயிலில் வந்து சிறிதும் கண்ணோட்டமின்றித் தங்களை வாயில் வந்தபடி பேச, அவமானமடைந்து, தங்கள் தாவரசங்கமப்பொருளை விற்றுக் கொடுத்து விட்டு, அன்னத்திற்கு அலைகின்றார்களே.

அநேகர் ஆபரணஞ் செய்வித்தற்கும், வண்டி குதிரை வாங்குதற்கும், வீடு கட்டுவித்தற்கும், விளைநிலம் தோட்டமுதலியவை வாங்குதற்கும், கடன்படுகின்றார்கள். வட்டி வளர்ந்தபின், கடன்தீர்க்கப் பிறிது வழியின்மையால், அவ்வாபரணமுதலியவற்றை விற்கின்றார்கள். அவைகள் வாங்கிய விலைக்கு விலைப்படுதலே அரிது. அப்படியாகவே, அவைகளின் விலைப்பொருள் வட்டிக்கும் முதலுக்கும் எப்படிப்போதும்! போதாமையால், தங்களிடத்து முன்னுள்ள தாவரசங்கமப்பொருளையும் விற்றுக் கொடுத்து விட்டு, வறியவர்களாய் வருந்துகின்றார்கள்.

கடன்பட்டு ஆபரணந்தரிப்போரும், பண்டி குதிரை ஏறுவோரும், பவனிவருவோரும், பிறர் பார்த்து இன்பம் அநுபவிக்க, தாங்கள் தங்கள் கடனை நினைந்து நினைந்து நெஞ்சந் திடுக்குத் திடுக்கெனப் பெருமூச்செறிந்து, துன்பமே அநுபவிக்கின்றார்கள். தாங்கள் துன்பக்கடலின் மூழ்கியும் பிறருக்கு இன்பத்தைக் கொடுக்கும் இந்த டாம்பிகர்களுடைய சீவகாருணியத்தை யாது சொல்வோம்!

வாணிகஞ்செய்ய விரும்புவோர் இயன்றமட்டும் தங்கள் கைப்பொருளைக்கொண்டு வாணிகஞ்செய்வதே தகுதி. கைப்பொருளில்லாதவர் கடன்சொல்லிச் சரக்குக்களை வாங்கி

வாணிகஞ்செய்ய முயன்றால், கடன் கொடுப்பவன் வட்டிவாசிகளை அச்சரக்கின் விலையோடு சேர்த்தே கொடுப்பான். ஆதலினால், அவ்வாணிகம் தலையெடுக்காது.

கைப்பொருள் சிறிதும் இல்லாதவர், நிலத்திற்கென்றும், கலப்பைக்கென்றும், மாட்டுக்கென்றும், விதைக்கென்றும், இறைக்கென்றும், கடன்பட்டுப் பயிர்த்தொழில் செய்கின்றார்கள். கடன்கொடுத்தவர்களெல்லாரும் அறுப்புக்காலத்தில் வந்திருந்துகொண்டு, ஒற்றைக்கு இரட்டையாக அளந்துகொண்டு போக, தாங்கள் போசனத்துக்கு முட்டுப்பட்டு வருந்துகின்றார்கள்.

கடனில் மூழ்கினவருள்ளே அநேகர், உத்தியோகத்தினாலே சீவிக்கப் புகுந்தும், தங்களுக்குக் கிடைக்கும் வேதனத்தைத் தனிகர்கள் மாசந்தோறும் வந்து வட்டியின்பொருட்டு வாங்கிக்கொண்டு போய்விட, தாங்கள் செலவுக்கு முட்டுப்படுகின்றார்கள். கடன் தீர்க்க வழியில்லாமையால் உத்தியோகத்தை விட்டு ஒளித்துக்கொண்டு திரிவாரும், ஊரை விட்டு ஓடிப்போவாரும், அநேகர். சிலர், இப்படிச் செய்தற்குக் கூடாமையால், மனவருத்தத்தினாலே நாடோறும் சரீரமெலிந்து துயருறுகின்றார்கள்.

கடனுடையவர் சிலர், ஒரு தனிகனுக்குக் கொடுக்கவேண்டிய முதலையும் வட்டியையும் மற்றொரு தனிகனிடத்து வாங்கித் தீர்த்தும், சிலகாலஞ் சென்றபின், அக்கடனையும் அப்படியே மற்றொரு தனிகனிடத்தில் வாங்கித் தீர்த்தும், வருகின்றார்கள். இப்படியே கடன் விருத்தியாய்விட, முடிவிலே தங்கள் தாவரசங்கமப் பொருள்களெல்லாவற்றையும் விக்கிரயஞ்செய்து கொடுத்துவிட்டு, வருத்தமடைகின்றார்கள். ஆதியிலே, வட்டி வளர்தற்கு முன்னரே, தங்கள் தாவரசங்கமப் பொருள்களிலே சிலவற்றை விற்றுக் கடனைத் தீர்த்து விட்டு, எஞ்சிய பொருளைக்கொண்டு முட்டின்றிச் சீவிக்கலாமே. ஐயையோ! இவர்கள் பேதைமைக்கு யாது செய்யலாம்! பரிதாபம் பரிதாபம்!

கடன்படத் தலைப்படுவோர், தாம் கடன்படுதற்கு முன்பே 'இப்போது நமக்கு இந்தப் பணத்தொகை ஆவசியகமா? இந்தக்கடனைத் தீர்த்தற்குப் பொருள்வரும் வழி உண்டா? பொருள் விரைவில் வருமா? தாமதத்தில் வருமா? தாமதத்தில் வருமாயின், இதற்கு வட்டி வளர்ந்து விடுமன்றோ? பொருள் வராதவிடத்து இக்கடனைத் தீர்க்கப் பிறிதுவழி உண்டா! இப்பொழுது அப்பணத்தொகை ஆவசியகமே யாயினும், கடன்பட[illegible]து [illegible]டைய தாவரசரங்கமப்பொருளிலே சிலவற்றை விற்றே செலவுசெய்யலாமே. இப்படிச் செய்தால் வட்டி மிஞ்சுமே! இப்படிச்செய்யாதொழிந்தால், வட்டி வளர்ந்தபின், நம்முடைய தாவரசங்கமப்பொருள் முற்றும் போய்விடுமே! அதன் பின்பு சீவனத்துக்கு யாது செய்யலாம்' என்று இவைகளெல்லாவற்றையும் செவ்வையாக ஆலோசிக்கக்கடவர்.

அநேகர், பலர் குடியைக் கெடுத்துத் தாமே வாழ நினைந்து, அவரிடத்தே கடன் வாங்கிக்கொண்டு, அவரை வஞ்சிக்கும்பொருட்டு, எல்லாப்பொருளையும், தங்கள் பந்துக்களுள் யாரையேனும் நம்பி, அவரிடத்தே வைத்துவிட்டு, பின்பு தாம் அவராலே வஞ்சிக்கப்பட்டு, யாதொன்றும் பேசமாட்டாது, ஏங்கி வருந்துகின்றார்கள். தாம் பிறரை வஞ்சித்தும், தம்மைப் பிறர் வஞ்சியார் என்று நினைக்கும் பேதைமையை யாது சொல்லலாம்! "நாமொன்றெண்ணத் தெய்வமொன்றெண்ணியது" என்னும் பழமொழியின் உண்மையை இவர்களிடத்தே காணலாம்.

அநேகர் தாங்கள் சிறிதும் கடன்படாதவர்களேயாயினும், கடன்படத் தலைப்பட்டுப் பிறர்பொருளை நம்பித் திரிகின்றவர்களோடு சிநேகஞ்செய்து, அவர்கள் பொருட்டுப் பிணைநின்று, தங்கள் தாவரசங்கமப் பொருளெல்லாம் இழந்து, தங்கள் பெண்டிர் பிள்ளைகளாலும் அவமதிக்கப்பட்டுப் பசிநோயால் வருந்துகின்றார்கள்.

நம்முடைய தேசத்தாருள் அநேகர் கடன்பட்டுப் பிறர்குடியைக் கெடுத்துத் தருமஞ் செய்கின்றார்கள். இது தருமமாகுமா? ஆகாது. பொருளினாற் செயப்படுவனவாகிய தருமங்களைப் பொருளுடையார் செய்யாமை பாவம். வறியவர் செய்யாமை பாவமன்று. பொருளின்றிச் செயப்படுவனவாகிய தருமங்கள் எண்ணில்லாதன உண்டு. அவை கடவுளைச் சிந்தித்

தல், துதித்தல், வணங்கல், அவர் குணமகிமைகளைக் கேட்டல், அவைகளைப் பிறருக்குப் போதித்தல், கொல்லாமை, பிறர்பொருளிச்சியாமை, பிறன்மனையாளை விரும்பாமை, வாய்மை பொறை, இரக்கம் முதலியவைகளாம். பொருளில்லாதவருக்கு இத்தருமங்களே அமையும். பொருளுடையவருக்கோ, பொருளாற் செயப்படுந் தருமங்களோடு இத் தருமங்களும் வேண்டும். இத்தருமங்களின்றி அத் தருமங்கள் சிறிதும் பயன்படாவாம்.

கடனுடையவன் தான் வாங்கின கடனைக் கொடாவிடின், அவன் செய்த புண்ணியமெல்லாம் தனிகனைச்சாரும். வாங்கின கடனைத்தீராமல் இறந்துபோன கடனுடையவன், அளவில்லாத காலம் நரகத்துன்பத்தை அனுபவித்தபின்பு, தனிகன் வீட்டிலே, கூலியாளாகவும், பெண்ணாகவும், அடிமையாகவும், குதிரையாகவும், மாடாகவும், கழுதையாகவும் பிறந்துழைப்பான்.

ஒருவன், தன்னிடத்தே பிறனால் நம்பி வைக்கப்பட்ட பொருளைத் தன்புத்திரனைப்போலக் காத்து, பொருளை வைத்தவன் கேட்கும் பொழுதே கொடுக்கக்கடவன். அப்படிப்பொருளைக் காத்துக் கொடுத்தால், அவன் இரணியதான முதலிய தானங்களைக் கொடுத்தவனுக்கு உண்டாகும் பலத்தையும், அடைக்கலம் புகுந்தவனைக் காத்தவனுக்கு உண்டாகும் பலத்தையும் அடைவான். அந்தப்பொருளைக் கவர்ந்தவன் தன்புத்திரனையும் சிநேகன் முதலானவர்களையுங் கொன்ற பாவபலத்தை அடைவான்.

ஒருவன் வாக்குத்தத்தம் பண்ணின பொருளைக்கொடாது விட்டாலும், கொடுக்கப்பட்டதை மீட்டும் கொள்ள விரும்பினாலும், அவன் பாவியாவான். ஒருவன் வாக்குத்தத்தம்பண்ணினபொருளைக் கொடாவிடின், அந்தப்பொருள் கடன்பொருளைப்போல அவனை இம்மையினும் மறுமையினுந் தொடரும். அவன் பலவகையாகிய நரகங்களை அடைந்து, நாய்ப்பிறப்பு முதலிய இழிவாகிய பிறப்பையும் அடைவான். தருமந்தப்பி நடக்கின்றவன்பொருட்டு வாக்குத்தத்தம் பண்ணினபொருளைக் கொடாதவன் குற்றமுடையவனல்லன்.

THE ELEMENTS OF HIGH ART IN "CHEATING."

'புரட்டு உருட்டு,' அல்லது; ஜகத்புரட்டு ஜாலவித்தை.

"A famous novelist, Lord Lytton, has raised the art of cheating to the dignity of a fine art: but to attain this dignity it must be practiced with success and without peril to the artist. It is only when the cheat stoops to great pains for small gains (the maxim of the miser) and gets run in that this noble art becomes despicable."—From the '*Englishman*' of Calcutta.

புரட்டு என்னும் பதம் 'புரள்' என்னும் வார்த்தையிலிருந்து வந்தது. 'புரள்' என்றாலும் 'உருள்' என்றாலும் ஒன்றுதான். புரள் என்பது அடிக்கடி விடாமல் இடம்மாற்றி அல்லது பக்கம்மாற்றித் கிடக்கிறதற்குச் சொல்கிறது. 'உருள்' விடாமல் வட்டாகாரமாய் நகர்ந்துகொண்டிருக்கிறது. கட்டையைப் புரட்டுகிறோம். சக்கிரத்தை உருட்டுகிறோம். இதனால் புரட்டுக்கும் உருட்டுக்குமுள்ள தாரதம்மியம் இன்னதென்று தெரிந்துகொள்ளலாம்.

புரட்டு என்பது இடம்மாற்றல், ஆள்மாற்றல்,' முகம்மாற்றல், பேர்மாற்றல் முதலான பலவகைப்பட்ட பேதச் செய்கைகளுக்கும் பொருந்தும்.

உருட்டு என்பதில் இடம்மாற்றல் மட்டுமன்றி ஸ்திரமில்லாமல் உருண்டோடிக்கொண்டிருக்கிற தன்மையும் அதில் சேர்ந்திருக்கிறது. ஆதலால் 'புரட்டல்' ஸ்தூலபாவனை மிகுந்ததாயிருக்க, 'உருட்டல்' சூக்ஷ்மபாவனை மிகுதியைக்காட்டும். இந்த பாவனாபேத விசேஷத்தால் 'புரட்டல்' ஆள்மாறாட்டத்துக்கும் 'உருட்டல்' புத்தி மாறாட்டத்துக்கும் பொருந்துவதாயிற்று.

கமலாம்பாள்சரித்திரத்தில் பேயாண்டித்தேவன் முத்துஸ்வாமி அய்யருக்குத் தான் செய்த தீங்குகளுக்குப் பரிகாரம் செய்ய வேண்டுமென்று அவரைத் தேடிக்கொண்டு புறப்பட்டபோது ஒருநாள் இரவில் ஒரு வீட்டு வாசற்றிண்ணையில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். நடுநிசிக்குள் அவ்வீட்டில் ஒருவர்மேல் ஒருவர் கொடுங்கோபத்துடன் கலகப்படுவது அவன் காதில்விழ, அவன் தூக்கத்தை உதறிவிட்டு கவனிப்பானாயினான். கவனிக்கவே அவ்விருவரும் பம்பாயில் முத்துஸ்வாமி அய்யருடைய பெருந்திரவியத்தைக் கூட்டுக் கொள்ளையடித்து ஊர்விட்டோடிய திருட்டு பிராமணர்களென்றும் அத்திரவியத்தைப் பங்கிட்டுக்கொள்வதில் அவ்விருவரும் தர்க்கித்துக்கொண்டிருப்பதையுமறிந்து, தந்திரமாய் அக்கணமே அவ்வீட்டுள் புகுந்து போலீஸ் உத்தியோகஸ்தனைப்போல நடித்து அவர்களைக் கலக்க அவர்கள் கலங்கி அவன் கையிலகப்பட்டார்கள். பிறகு பணத்தை சொந்தக்காரரிடம் சேர்த்துவிட்டால் அவர்களை சர்க்கார் தண்டனைக்குக் காட்டிக்கொடுப்பதில்லையென்று அவர்களுக்குச் சத்தியம் செய்துகொடுத்து அவர்களை இட்டுக்கொண்டுபோய் பணம் புதைத்து வைக்கப்பட்ட இடஞ்சென்று அதைக் கைப்பறிக்கொண்டு மூவருமாகக் காசியை அடைந்து முத்துஸ்வாமி அய்யர் தங்கியிருந்த மடத்துக்கே வந்து சேர்ந்தார்கள்.—என்று சொல்லியிருக்கிறது.

இந்த சம்பவம் நடந்ததில் பேயாண்டித்தேவன் போலீஸ் உத்தியோகஸ்தனாக நடித்தது 'புரட்டு'—அதாவது 'ஆள்மாறாட்டம்.' அவர்கள் போலீஸாரகையில் அகப்பட்டுக்கொண்டுவிட்டதாயும் அவர்கள் திருட்டு வெளி[illegible]ன்றி சர்க்கார் தண்டனைக் காளாய்விட[illegible]ளென்பது நிச்சயமென்றும் அவர்களை நம்[illegible]து அந்த நம்பிக்கை காரணமாக அவர்கள் மனம் ஸ்திரமின்றி உருளையைப்போல், உருண்டோடி இந்த ஆபத்திலிருந்து தப்புவது எப்படியென்று தோன்றாமல் திகில்பட்டு நிலைகுலையச் செய்தது 'உருட்டு.'

அவன்செய்த புரட்டினால் (ஆள்மாறாட்டத்தினால்) முதலில் அவர்களை மருள் (அச்சப்பட)ச் செய்தான். மருள் (அச்சம்) பற்ற, அவர்கள் மனம் தேறித்தெளிய அவகாசமின்றி ஒன்றினும் பற்றாது உருண்டோடச் செய்ததைத் தான் 'கலக்கம்' என்றது. கலக்கல் மனம் நிலையற்றுத் தவித்துத்தத்தளிக்கச் செய்யல்.

இதனால் தேஹம், மனம் என்கிற இரண்டு காரணமும் ஸ்தூல-சூக்ஷ்ம பேதத்தால் வேறுபட்டும் ஒன்றுகொன்று உடலும் உயிரும் போல் இணைபிரியாத சம்பந்தமுள்ளதாயிருக்கிறதென்பது ஸ்பஷ்டமாக விளங்குகிற உண்மை சிறிது ஆய்ந்தோய்ந்து சிந்தித்துப்பார்க்க விளங்கும்.

பேயாண்டித்தேவன் ஆள்மாறாட்டம் செய்ததுபோல், ஈசுவரனது தேஹமாகிய இந்த ஜகத் (தோற்றப்பிரபஞ்சம்) மாறச் செய்து காட்டுவது 'ஜகத்புரட்டு' இது ஜனவழக்கில் 'ஜகப்புரட்டு' என்று மருவியது.

புரட்டுக்கு உருட்டு எப்படியோ, அப்படிப் போல ஜகப்புரட்டுக்கு ஜாலவித்தை சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. ஒருவன் இருட்டு வெளியில் ஒரு வீட்டிற புகுந்து திடீரென்று வீட்டார் முன்தோன்றி தான் திருடவந்தவன் என்பதைக் காட்டாமல், தான வந்தகாரியத்துக்கு அவர்கள் இடையூறு செய்யமுடியாதென்று அவர்கள் எண்ணும்படி கொள்ளைக்காரன்போலவும், கலகைக்காரன் போலவும், பூசினிக்காய்த் திருடனைபோல் சில சமயம் தேவலோக வாசிபோலவும் நடித்து ஆள்மாறாட்டம் செய்கிறான். இவன் இரகசியமாய் இரண்டொருவர் அல்லது சில்லரைப் பேர்வழிகளை மட்டும் ஏமாற்றுவதால் சில்லரைப் புரட்டன் அல்லது திருடன் என்று சொல்லப்படுகிறான்.

இதே ஆள் பட்டப்பகலில் எல்லாரும் அறியவராரும், உலகத்தாரும், அதிகாரிகளும், விழி

த்த பேர்வழிகளான பண வியாபாரிகளும் (பாங்கிக்காரர்களும்) வர்த்தகர்களும் ஒருமிக்க இவன் நடித்தலை நம்பி மயங்கிப்போகச் செய்வானானால் அவன் 'ஜகப்புரட்டன்' என்னப்படுகிறான். இதனால் திருடன் அல்லது புரட்டுக்காரனுக்கும் ஜகப்புரட்டனுக்கும் வித்தியாசம் என்னவென்றால் காலதேச விஸ்தீரணத்தில் உள்ள வித்தியாசம் தான் என்று தெரிய வருகிறது.

ஒருநாள் இரவு நடுச்சாம வேளையில் திடீரென்று யாருமறியாமல் வீட்டுட் புகுந்து அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போகிறவன் திருடன் அல்லது புரட்டன். பல நாள் நீடித்திருந்து இராப்பகல் என்கிற பேதமின்றி எந்நேரமும் எல்லாரும் அறிய பகிரங்கமாய், உன் வீடுதேடி வருகிற சிரமம் அவனுக்கில்லாமல், ஜனங்களை அவன் இருப்பிடத்துக்கு வரும்படியான தந்திரஞ்செய்து கைப் பணத்தை யிழந்தோமென்று கூடத்தெரியாதபடி, ஒரு காசு, இரண்டு காசு என்று சில்லரைத் தொகைகளில் ஆசை வைக்காமல் லக்ஷக்கணக்காய் ஜனங்கள் பணத்தை பாங்கிகள்மூலமாகவும் வேறு மாமூல் வழியாகவும் ஏராளமாகப் பறித்துக்கொண்டு, போகும்போது ஆயிரக்கணக்கான சொத்தை இருந்த விடத்தில் தானே போட்டுவிட்டுப் போகிறவன் 'ஜகப்புரட்டன்' என்று சொல்லப்படுகிறான். இவன் போலீஸார், பாங்கியார், ஸர்க்கார், சொத்தைப் பறிகொடுத்தார் இவர்கள் கையில் அகப்படாமல் எல்லாருக்கும் ஒரே நாமம் என்று இத்தனைபேர்களையும் ஏமாற்றிவிட்டுத் தான்மட்டும் ஏமாந்துபோகாமலிருக்கிறவன் எவனோ அவனே "மஹான்" என்று ஜனங்களால் இகழ்ந்தும் புகழ்ந்து பேசப்படுகிறான். பணப்பறி, மனப்பறி எனகிற இரண்டுவிதமான பறிகொடுப்பதில், பணப்பறி அல்பவித்தை; மனப்பறி சில்பவித்தை யென்று சொல்லத்தக்க சீர்மையுடையது.

ஆதலால் ஜனங்கள் ஜகப்புரட்டனை பணப்பறி கொண்டதற்காக இகழ்ந்தும் அவன் தன் காரியம் ஆகும்வரையிலும் அவர்களுக்கு உளவு தெரியாதபடி அவனுடைய ஜாலவித்தைகளால் (ஜலத்தைப்போல் நெகிழ்வுள்ள தந்திர வித்தைகளால்) அவர் மனதைப்பறித்துக்கொண்டு அவர்களைத் தன்னுடைய தந்திர வலையில் அகப்பட்ட மான் இனங்கள்போல் வசியப்படுத்திக்கொண்டிருந்து தன் காரியமானதும் எக்கேடு கெட்டுப் போங்கள் என்று இருந்த விடம் தெரியாமல் "அந்தர்த்தானம்" ஆய் விட்டதால் அவனை "மஹான்" என்று புகழ்ந்து பேசுகிறார்கள்.

இதனால் தேஹபலம் மனோபலம் இரண்டிலும் தேஹபலத்தைவிட மனோபலம் பெரிதென்று ஜனங்கள் விவரமறியாமற்றானே ஒப்புக்கொள்கிறார்களென்பது பிரத்தியக்ஷமாக விளங்கும். 'கற்றறிமூடர்' கதையில், தொன்னைக்கு நெய் ஆதாரமா? நெய்க்கு தொன்னை ஆதாரமா? என்ற சந்தேக முதிக்க அதை ஆய்ந்தறிவான் நெய்த்தொன்னையைக் கவிழ்த்துப்பார்த்தமூட வித்வானைப்போல், உடலுக்கு உயிராதாரமா? உயிருக்கு உடல் ஆதாரமா? என்று சந்தேகங்கொண்டு 'காயமாம் ஓடந்தன்னை'க் கவிழ்த்துப்பரிதவிக்கும் புத்திமான்கள் நிறைந்த இவ்வுலகில் 'தேஹமேநான்' என்கிற பாவனை மிகுந்து முரட்டு பலங்கொண்டு 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்று அட்டகாசம் செய்கிறவர்களைக் காட்டிலும், 'மனமே நான்' என்று நம்பி அதன் மாயா ஜாலத்தை யெல்லாம் கற்று மனோசிந்தனையால் தேஹபலத்தைக்குலைத்துச் சிதைக்கும் தீரர்கள் எத்தனையோ பேரிருக்கிறார்கள். இவர்களில் பார்க்காய்க்குப் பங்கைவிற்றகதையாக ஆத்மலாபத்தை யுணராமல், பணமே பெரிது பணத்தால் கிடைக்கும் போக போக்கியங்களே பெரிதென்று நம்பி அருமையாய்க் கிடைக்கத்தக்க உண்மையான ஆத்மானந்த சுகத்தையிழந்து பொய்யாம் மெய்ச்சுகத்தைப்பெற (உடல் சுகிக்கும் மார்க்கத்தை யடைந்தனுபவிக்க) அவர்கள்

கற்ற சாமர்த்தியங்களையெல்லாம் உபயோகித்து உலகையெல்லாம் ஏமாற்றிப் பிழைக்கக் கடைசியில் தாங்களே ஏமாந்து போகிறார்கள்.

இப்படிப்பட்ட தோஷம் சம்பவிக்கக் காரணம் 'குணநாடிக்குற்றமுநாடி, மிகைநாடி மிக்கக் கொளா' என்கிற முதுரைப்படி தீர்க்க விசார புத்தியும் விவேகஞானமும் இல்லாமையே யென்பது தீரத்தெளிய சிந்தித்தார்க்கு விளங்கும்.

கல்கத்தாவில் ஒருவன் 'ஊமையூன் ராஜா' என்று சொல்லிக்கொண்டு, பிரபலமாய் வந்து தங்கி, விருந்து வேடிக்கைகளும் தமாஷாக்களும் செய்து ராஜகோலம் போட்டுப் பணக்காரர்களையெல்லாம் தன் வீட்டிற்கு விருந்தினராகத் தருவித்துக் குடிமயக்கத்தில் அவர்களோடு சூதாடி ஏராளமான பணத்தைப் பறித்துக்கொண்டுவர, அவனுடைய சிநேகிதர்களில் ஒருவன் மட்டும் விழித்த பேர்வழியாக விருக்கக்கண்டான். அவன் அநேக கப்பல்கள் வைத்து வியாபாரம்செய்கிறவணிகன். அவனை விருந்துக்கழைக்கும் போதெல்லாம் அவன் சென்று விருந்துண்டு மது மயக்கத்தை மட்டும் கட்டோடே யொழித்தவனாகி, அவன் வலையிற் சிக்காமலிருந்து வந்தான். புரட்டு வித்தையில் பிரபலனான 'ஊமையூன் ராஜாவுக்கு' இந்த ஆளை மயக்கி இவனிடத்திலுள்ள பணத்தைப் பறிக்காவிட்டால் தான் கற்றவித்தைக்கு கௌரவமில்லையென்று பட்டது. ஆகவே விருந்து வேடிக்கைகளாலும் மற்ற ஆரவாரத்தந்திரங்களினாலும் வசப்படுத்த முடியாத இந்தப் பேர்வழியை வசப்படுத்தி அவன் பணத்தைப் பறித்தாலன்றி அவன் கற்றவித்தை வித்தையல்லவென்று கருதலானான். ஆகவே இந்தப் பெருச்சாளியைப் பிடிக்கவேண்டி அதற்கேற்ற கூண்டொன்று தயார்செய்து வைத்தான். உடனே அவன் தந்திரம் பலித்தது. கப்பல் வியாபாரி திருட்டு ராஜா வீசிய மோசவலையில் சிக்கினான். இந்த மட்டும் கிருதார்த்தனானோமென்று அவனும் கல்கத்தாவைவிட்டு 'அந்தர்த்தானமாய்'ப் போய்விட்டான்.

அவன் செய்த தந்திர மென்னவென்று இதை வாசிப்போர் ஆவலாய்க் கேட்பார்கள், ஒன்றுமில்லை: 'உருக்காட்டி உருமறைத்தல்' அல்லது 'கள்ளனைக்கொண்டு கள்ளனைப்பிடி' யென்கிற தத்துவார்த்தத்தை யுணர்ந்தவனாகி திரை கடலோடித்திரவியம் சேர்த்தவன், குடியிலும் கூத்தியிலும் கட்டுப்படாமை அதிசயமல்ல வென்றுணர்ந்து அவனுடைய மனோதர்மத்தையுணர்ந்து அதற்கேற்ற தந்திரம் செய்தான். அதாவது:—தான் ஜெட்டாவுக்கு அரிசி மூட்டைகள் ஏற்றிக்கொண்டு போகப்போகிறதாகவும், அதற்காகப் பல கப்பல்கள் வேண்டியிருக்கிறதென்றும் தன் சிநேகிதனாகிய அந்த வணிகனுடைய கப்பல்களில் மூன்றுகப்பல்கள் அதற்காகச் சத்தத்துக்கமர்த்திக்கொள்ள யோசிக்கிறதாகவும் சொன்னான். இது தான் சமயம் என்று வணிகன் அந்த ஏற்பாட்டுக்குச் சம்மதித்தான். சம்மதிக்கவும் அந்தப்படி கட்டுப்பாடு செய்துகொள்ள வேண்டுமென்று உடன்படிக்கைப் பத்திரம் கேட்டான். அதில் அவன் உடன்பாட்டுக்குப் பிசகுவராமல் நடப்பதற்காக வென்று 50-ஆயிரரூபாய் ரொக்க ஜாமின் கட்டவேண்டுமென்று நிபந்தனையேற்படுத்த, அப்படியே செய்வதாகச் சொல்லி வணிகன் 50-ஆயிரரூபாயை ரொக்கமாக அனுப்பிவைத்தான். அதை வாங்கிக்கொண்டு கள்ள ராஜா பணம் வரப்பெற்றதாகவும் உடனே சரியானபடி ரசீது தயார்செய்து அனுப்புவதாகவும் அவனுக்கு எழுதியனுப்ப, அவன் இரண்டொருநாள் காத்திருந்தான். இரண்டுநாள் கழித்து, அவனுக்கு ஒரு ரசீது வந்து சேர்ந்தது. அதில், 'சீட்டாடித்தோற்றுப் போனதில் பட்ட கௌரவகடன் முற்றும் தீர்ப்பதற்காக வென்று ரூ. 50-ஆயிரம் பெற்றுக் கொண்டேன்' என்று எழுதியிருந்தது.

வணிகன் பார்த்துப் பிரமித்து 'ஊமையூன் ராஜா'வைத் தேடி யலைந்தான். ராஜா 'ஊமை'யாய் 'ஊன்'மயமாய் இருந்தது மறைந்து எல்லாம் வெட்டவெளியாக விருந்தது. ஐயோ தெய்வமே! யென்று கெட்டலைந்து கடைசியில் அந்த இரசீதை லாயரிடம் காட்டினான். லாயர் அவன் நன்றாக மோசம் செய்யப்பட்டான் என்றும் போலீஸாரிடம் போய் முறையிடுக வென்றும் வணிகனுக்கு ஆறுதல் சொல்லியனுப்பி

னர். அப்படியே செய்ய, போலீஸார் கண்விழித்துப்பார்க்கப் பின்னும் சிறிது காலம் பிடித்தது. அதற்குள் ராஜா போனவிடம் இருந்தவிடம் தெரியாமல் எல்லாம் பொட்டை வெளியாகப் போயிற்று. போகும் பொழுது லக்ஷரூபா சொத்தைப் போட்டு விட்டுப் போய்விட்டான். போலீஸார் 'உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பினி கதை'யாக விருந்துவிட்டார்கள்.

மறைந்து போன 'ராஜா' மறுபடியும் சில காலம் சென்றபின் காசி மஹாக்ஷேத்திரத்தில் ஒரு ராணியின் திவானாக வந்துதித்து தானதர்மங்கள் மிகச்செய்து கங்கைக்கரையில் காலஞ்சென்ற ராஜாவின் ஞாபகார்த்தம் வெண்சிலை மண்டபமும் கோயிலும் கட்டுவதாகச்சொல்லி அதற்காக அனேக லக்ஷரூபாய் பிடிக்கும்படியான வேலை செய்ய 'டெண்டர்கள்' வேண்டுமென்று விளம்பரப்படுத்தி ஒவ்வொரு 'டெண்டர்' அனுப்பும் போது கூட 1000-ரூபாய் 'ராணியின் மந்திரியின் பேரால் பாங்கியில் கட்டி ரசீதை யவருக்கு அனுப்பவேண்டு'மென்று விளம்பரப்படுத்தினர். 30-பேர்கள் 'கண்டிராக்ட்' எடுக்க மனுச்செய்து கொண்டார்கள். ஒவ்வொருவரும 1000-ரூபாய் பாங்கியில் ரொக்கஜாமீன் கட்டினதோடு, கண்டிராக்டு தனக்கே கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று மந்திரிக்கு லஞ்சம் கொடுத்த வகையில் ஒன்றரை லக்ஷரூபாய் சேர்ந்தது. சேர்ந்ததும், பாங்கியிலுள்ள ஜாமீன் ரொக்கத் தொகைகளை உடையவருக்குத் திருப்பிக்கொடுக்க வாங்குவதாக வியாஜம் வைத்து எல்லாவற்றையும் கைப்பற்றிக் கொண்டு, மந்திரி தந்திரமாய்க் கம்பி நீட்டிவிட்டார், 'குட்டு' வெளியானபின், போலீஸார் ராணி யம்மாளைப்பிடித்துச் சோதிக்க அவள் ஒரு பாவமும் அறியாத அப்பாவியென்று தெரிந்தது. இலக்ஷ்மணபுரியில் எவளோ ஒருத்தி 'அழகு துரைச்சி' யாயிருக்கிறாளென்று அவளைப்பிடித்து வந்து 'ராணி' யென்று சொல்லிக்கொண்டு தான் மந்திரியாயிருந்து எல்லாருக்கும் ஒரு சொட்டு வைத்து விட்டு மறுபடியும 'அந்தர்த்தானம்' ஆய்விட்டார்.

இப்படிப்பட்ட சங்கதிகள் சாதாரண ஜனங்களுக்குத் தெரிகிறதில்லை. 'காணியாசை கோடி கேடு' என்றுள்ளபடி அற்பமானலாபத்தையுத்தேசித்து அதிக சிரமமெடுத்துக் கொண்டு ஈப்தனைப்போல் திருட்டுத் தொழிலிலும் லோபமோஹ பாசங்களால் கட்டுப்பட்டுழல்கிறவர்கள் போலீஸார் கையில் சிக்கிக்கொண்டு அம்பலமேறி அவமானப்பட்டு அழிகிறார்கள். இவர்கள் செய்திதான் பத்திரிகைகள் மூலமாக வெளியாவதைப்படிக்கக் 'கண்மூடி' வித்தை செய்யும் சாமர்த்தியவான்கள் இப்படிப்பட்ட ஜகப்புரட்டு ஜாலவித்தைகற்ற "மஹான்" களின் பிரபாவத்தை யறியவகையில்லை. அறிந்தாலும் கட்டுக்கதைபோல் தோன்றுமேயன்றி அவர்கள் புத்திக்கு இவ்வளவு பெரிய ஜாலமும் சாத்தியமாகுமா வென்றுதான் தோன்றுகிறது. இது சகஜந்தானே! 'பணப்பறி' யிலாசையையாது இந்த வித்தையைச்செய்வது தெறி. அதற்கு இந்திரஜாலம் என்றும் மஹேந்திர ஜாலம் என்றும் பேர்.

THE "VIVEKACHINTAMANI."—The November issue of this Tamil Magazine for children begins with a homely explanation of what has been described as "the Psychic Conditions of the Present War" which an English writer attributes to the German interpretation of "the will to power"—a principle which underlies all the conflicts of individual interests as well as the conflicts of races, castes or creeds. "The Nature and Method of the Present War" is then described in such a simple and homely way as to make it clear even to child-minds. "The Blockade" has an article for itself, the method of 'attrition' thereby caused being explained by well-known methods of folk-lore which give a simple story and leave the application of it to corresponding circumstances to thoughtful minds. The question of Rural Education is touched upon and there are several other articles of interest under Nature Study, descriptive scenery presented to the eye from the Hill fort at Trichinopoly and other stories in illustration of great moral and spiritual truths, all told in a direct, simple way to suit the tastes and understanding of children.—*The Hindu of the 16th December* 1915.

"CHILDREN HAVE A STRONGER DESIRE FOR FIRST PRINCIPLES THAN MOST PEOPLE SUPPOSE."

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

'HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE."

[God is Love : Knowledge is Power : *Aum*
அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.]

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். 23.] ராக்ஷஸஹு தைமீ, 1916ஹு ஜனவரிமீ [சஞ்சிகை 10.

"CHILDREN HAVE A STRONGER DESIRE FOR FIRST PRINCIPLES THAN MOST PEOPLE SUPPOSE."

PHILOSOPHY FOR PARENTS.

WHY "A CHILD COMES TO US WITH HIS INCESSANT 'WHY?'"

"*Children have a stronger desire for first principles than most people suppose.* That is a natural desire of the human mind, which is often so much thwarted and disappointed by life that they lose it as they grow older and come to think of it as a mere childish folly. Every one is born a philosopher, as every one is born an artist; but because philosophy is a pompous word, we suppose it to be only the concern of experts. Thus when *a child comes to us with his incessant 'Why?'* we put him off with vague answers or none at all. We are not philosophers ourselves, and we see no reason why he should be one. And yet we are philosophers, if only we know it; we have first principles, conscious or unconscious, and if they are unconscious they are likely to be dangerously accidental. There are many people who suppose that religion can take the place of philosophy for them and for their children. But there is philosophy in all religion, and if it is bad philosophy it spoils the religion. Thus if a child is told that he must be good so that he may go to Heaven, he is taught a falsehood about the nature of goodness. It is impossible to be good so that you may go to Heaven. A man can only be good for the sake of being good: and if he tries to be good for any other reason he is not good at all.

WORK FOR WORK'S SAKE: "THE PHILOSOPHY OF THE SPIRIT."

"A child is just as well able to understand that he must be good for the sake of being good as anyone else is. If the spirit exists in human beings the philosophy of the spirit can be understood by them; and the philosophy of the spirit is that spiritual activities, whether moral, intellectual, or æsthetic, are to be pursued for their own sake. If pursued for any other reason they are not spiritual activities. So one puts it in general and philosophical terms for parents; but they can, if they understand and believe it, put it more simply, and particularly to their children. They can tell them that their main object in life should be to be good for the sake of goodness, to discover the truth for the sake of the truth, and to do their work as well as they can for the sake of doing it well. This teaching, of course, can be given a religious form; indeed, without it religion is either a meaningless myth or a meaningless set of rules, as life itself is a meaningless struggle to go on living. *There is nothing in education so important as to convince a child that life has meaning and absolute values*; and this can only be done by means of that philosophy of the spirit which we have tried to express in the simplest terms.

THE DUTY OF PARENTS: "LIFE HAS A MEANING AND ABSOLUTE VALUES."

"The parent may be convinced that there is no such thing as the spirit, in which case he will teach his child that morality is enlightened self-interest and that the child's desire to find a meaning in life is a mere relic of superstition. But many parents who do not believe this, who do believe in the spirit, are yet unable to teach the philosophy of the spirit, because they have never grasped it and are not even aware of the need to grasp it. Often, indeed, they hold particular opinions that are contrary to it. They may believe that men should be good for the sake of goodness; they may be aware of the moral activities of the spirit, but not of its intellectual and æsthetic activities. At least they suppose that these are only subsidiary to its moral activities. But a child in whom the intellectual and æsthetic activities are naturally strong resents a merely moral teaching; feels, indeed, that there is something immoral in it. *It is the spirit in him which tells him that those activities should be pursued for their own sake, and not for moral reasons.* A life which is merely moral seems to him meaningless and without values, as, indeed, it is; and the result may be that he will revolt against morals altogether. Such revolts are common in the young, and they are usually the results of a bad philosophy, or of no philosophy at all, in their teachers."

A "REVOLUTION IN THE CONCEPTION OF EDUCATION."

"There has been two chief reasons why public education in England has reached a stage when a drastic revolution is necessary if the nation is to renew and magnify its imperial life after this war. . . . . . The conclusion of the Napoleonic wars found England practically illiterate and yet in a position to control the trade of the world. . . . . How was she to exercise that control when her people, her workers almost without exception, were uneducated and untrained. There is no more saddening story in the history of economics than the record of the way in which England played her part in the new industrial age. . .

"EDUCATION A BIOLOGICAL PROCESS."

. . The Education Act of 1870 and compulsory education were an expedient to meet the most terrible social situation that any nation had had to face. It was a poor expedient, but it at least secured the preparatory elements of educational progress for practically all children. . . . This conception has been one of the chief reasons why we are faced with our present problem. So long as the central Educational authority thinks in the terms of the Education Act of 1870 and the policy of which that Act was the crown, so long will educational, and therefore national progress will be impossible. The second reason why a revolution is necessary is the conception of the scope of education held by the education authorities. The country cannot escape from the limitations imposed by the educational ideas that are enshrined in the Acts of 1870 and 1876 until it has learnt to think of education not merely as a means for conveying to the masses of the people a certain minimum measure of book-learning, *but as a biological process for supplying to every child the outfit for life. We need a revolution in the conception of education in its relation to the life of the people* and we need machinery that will make the new conception operative. . . . . .

CHILDREN DOOMED TO LIFE-LONG FAILURE.

We have to-day two million children between the ages of twelve and seventeen years who are passing or have passed through the educational machine and are doomed to life-long failure. It is the principle that is wrong. No modification of the primary ideal can save the situation. Whether it stands alone or is supplemented by extensions representing other ideals it has failed to supply the children of the nation with an outfit for life.—*The Times' Educational Supplement.*

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

ராக்ஷஸ௵ தை௴

விவேகசிந்தாமணி

January-February, 1916.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

THE GOAL TO BE KEPT IN VIEW.

"*The goal of all true secondary teaching, is that training of the mind and personality in concentration, alertness, individuality, precision, taste, which results in the assimilation of knowledge and the formation of character.* The classical training is but one of a hundred ways of achieving the same end, but in the hands of a skilled teacher it is a valuable way, for it brings the scholar's mind into direct contact with the genius of the great writers of great ages. But, *nevertheless, it is the teacher, not the way, that really matters.* If the scholar has mastered his tools in the way of a thorough knowledge of reading, writing, and arithmetic and has been trained in discipline, then when the secondary teacher takes him or her in hand the goal will be reached, whatever the way chosen may be, and the way can be varied to suit both the capacity and the possible future of the child. Mr. Mathew Arnold, in an interesting passage, declares that—

"The idea of a general, liberal training, is to carry us to a knowledge of ourselves and the world. We are called to this knowledge by special aptitudes which are born with us; the grand thing in teaching is to have faith that some aptitudes of this kind every one has. This one's special aptitudes are for knowing men—the study of the humanities; that one's special aptitudes are for knowing the world—the study of nature. The circle of knowledge comprehends both, and we should all have some notion, at any rate, of the whole circle of knowledge."

The following remarkable passage is also from Mr. Arnold:—"If secondary instruction were organized on a great and regular scale, if it were a national concern . . . . . . its greatest boon to the off-spring of these classes would be its giving them great, honourable, public institutions for their nurture—institutions conveying to the spirit, at the time of life when the spirit is most penetrable, the salutary influences of *greatness, honour*, and *nationality*—influences which expand the soul, liberalize the mind, dignify the character."

Dr. Monroe, a great American Educational Thinker declares that in America "there is a dawning perception that secondary education must become universal first as a matter of expediency in securing social service and efficiency and then as a matter of necessity as political, economic and social problems become urgent."—*The Times' Educational Supplement.*

1915—1916.

THE LESSON OF THE LAST YEAR:

"THE GOAL TO BE KEPT IN VIEW."

பழையவருஷத்தின் படிப்பினை.

"ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தின்மேல் கண்ணாயிரு."

THE OLD ORDER CHANGETH GIVING PLACE TO NEW."

"பழையனகழிதலும் புதியனபுகுதலும்
வழுவல காலவியல்பினானே."

THE WHEEL OF TIME.

காலசக்ரம்.

பழையவருஷம் கழிந்தது. புதியவருஷம் புகுந்தது. காலசக்ரம் உருண்டுகொண்டே யிருக்கிறது. உருளும் தோறும் மருளும் தெருளும் விளைந்துகொண்டேயிருக்கிறது. மருள் என்றால் மயக்கம்; தெருள் என்றால் தெளிவு. காரணம் ஒன்றாகக் காரியம் இரண்டாவது எப்படி? இது ஒரு சின்னக்கேள்வி: இதில் பெரிய உண்மை பொதிந்து கிடக்கிறது. உலகமென்பது காரண-காரிய தோரணையால் உண்டான

தோர் சங்கிலித்தொடர் போன்றது. அறிவு ஒன்றே. ஆனால் அது உபாதி பேதத்தால் பல வேறுபட்டு விளங்கும். எப்படியென்றால், வெளிச்சம் ஒன்றாயிருக்க கண்ணாடியின் வர்ண பேதத்தால் அது பலவர்ணமாக விளங்குவது போலவாம். இந்தக் "காரணகாரிய தோரணை" யென்பது சிக்குண்ட கயிறுபோல் பின்னிக் கொண்டிருக்கிறது. இந்தச்சிக்கல் நீக்கும் வழியென்ன? முரட்டுத்தனத்தால் சிக்கல் நீக்க முடியாது: இது ஸ்பஷ்டம். முரட்டு பலமுபயோகித்தால் சிக்கல் நீங்காது கயிறு அறுந்து போம். ஆறத்தேற அமர்ந்து இருந்து சிக்கலின் போக்கறிந்து சுளுக்கு நீக்கிப்பிரித்தால் சிக்கல் விடுபட்டு நீங்கும். அதுபோல இவ்வுலகம் சன்னபின்னலாய்ச் சமைந்து நிற்பதைக் காரணகாரியதோரணையறிந்து சிக்கறுத்துப் பார்க்கல் வேண்டும். அப்பொழுது எல்லாம் ஒழுங்காயிருக்கும். இப்படி ஒழுங்குபடக் காண்பது தானே "தெருள்", அல்லது தெளிவு படக்காண்டல் ஆகும். சிக்கல் நீக்கம் இன்றிச் சன்னபின்னலாய்ப் பின்னிக்கிடப்பதைப் பார்த்து மயங்கித்தியங்குவது தானே "மருள்" அல்லது மயக்கமுறக்காணல் என்னப்படும்.

THE LAW OF CAUSE AND EFFECT.

காரணகாரிய தோரணை.

இப்படிக் காரணகாரியதோரணை மயமாயிருக்கும் ஏகவஸ்து பின்னப்பட்டுப் பலவேறுபாடாகத் தோன்றுவது புத்தியின் மயக்கத்தினாலாதலால், இப்படி புத்தியை மயக்குவதற்கு "மாயை" என்று பெரியோர் பெயரிட்டிருக்கிறார்கள். மாயை என்றால் மயக்கம், குழப்பம், என்று தான் அர்த்தம். மனக்குழப்பத்தையுண்டுபண்ணி அறிவு தெளிவுபடவிளங்காத வண்ணம் செய்வது எதுவோ அதுகாரணம் பற்றி மாயை என்று பேர்பெற்றது. ஆனால் இந்த மாயை யென்பது நிரந்தரமான ஒரு வஸ்து அல்ல. அதை "உண்டு, இல்லை" என்று நிர்ணயித்துச் சொல்வது கூடாமையாக விருக்கிறபடியால் அது "அநிர்வசனீயம்" என்று சொல்லப்படுகிறது. "மாயையென்பது மருளும் தெருளும், தெளிந்தார்க்கிலதாம் தெளியார்க்குளதாம்" என்பது பெரியோர்சொல் வசனம்.

'தெளிந்தார்—அறிவு தெளியப் பெற்றார்.'

'தெளியார்—அறிவு தெளியப் பெறாதார்.'

CLEARNESS AND CONFUSION.

தெருளும் மருளும்.

அறிவு ஸ்வயம்பிரகாசத் தன்மையுடையதால் அதற்குத் தெளிவும் தெளியாமையும் இல்லை. ஆனால் அது அந்தக்கரணமூலமாகவே பிரவிர்த்திப்பதால் கண்ணாடி வெளிச்சம் போல், அந்தக்கரணசுத்தி, அசுத்தியை ஒட்டி அதற்குத் தெளிவு, தெளியாமை யென்கிற குணம் ஏற்படுகிறது.

ஏகமாய், அனந்தமாய், நித்தியமாய், நிர்மலமாய், நிராமயமாயுள்ள அறிவு, உபாதிபற்றி ஸ்வயம்பிரகாசம் குன்றிக்குறைந்தும் மிகைப்பட்டும் விளங்குவதாகத் தோன்றும், இது தோற்றமாத்திரத்தாற் சித்திக்கும் குணமேயன்றி மற்றப்படி அதற்கு உண்மையாய் உள்ளபடியில்லை. சூரியக்கிரகணம் சம்பவித்தால் நடுமத்தியான வேளையில் இருள் மண்டித் தோற்றுவது சூரியன் ஒளியிழந்ததனாலல்ல. சூரியனுடைய பிரகாசம் அப்படியேயிருக்கிறது. ஆனால் சந்திரன் வந்து சூரியனுக்கும் பூமிக்கும் இடையே குறுக்கிட்டுக்கொண்டு சூரியகிரணங்கள் பூமியில் விழாதபடி தடுப்பதனால் அதன் நீழல் படும் பாகத்திலுள்ள பூமண்டலம் ஒளியிழந்ததாகிறதேயன்றி சூரியன் அதன் ஒளியை இழந்துவிடவில்லை. இப்படி உண்மையை உள்ளபடி ஆராய்ந்தறிவது "தெருள்" அல்லது தெளிவு. தோற்றமாத்திரத்தால் மயங்கி மதியிழந்து காரணகாரிய தோரணை விளங்கப் பரிசோதித்தறியாமல் நடுப்பகலில் பூமியில் இருள் மண்டியதால் சூரியன் ஒளியிழந்து விட்டதாக நினைப்பதும் நினைத்தபடி நடப்பதும் "மருள்". அல்லது. மயக்கம்.

TEACHING OR THE TRAINING OF THE MIND.

"கல்வி" அல்லது "மனப்பழக்கம்."

இந்தமயக்கம் அல்லது மாயை மனதுக்குண்டேயன்றி அறிவுக்கு இல்லை. ஆதலால் தான் பெரியோர் "மனமாயைமாயை மாயைமயக்க, மனமாயைதான் மாளும் மற்றொன்றுமில்லை, பினையாய்வதில்லை பிதற்றவும் வேண்டாம்,தனையாய்ந்திருப்பது தத்துவம் தானே"-என்று உண்மை ஓதியுள்ளார். அப்படியென்றால் மனதினுடைய மயக்கம் தானே "மாயை" என்றுசொல்லப் பெறுவது. அந்த மனமயக்கம் நீங்க அதை மயக்கினால் மனக்குழப்பம் நீங்கும், அவ்வளவுதான்; வேறு பிரமாதம் ஒன்றுமில்லை. மனதினுடைய மயக்கம் நீங்கி, மண்ணையுருக்கி ஸ்படிகமாக்கினதுபோல் மனந்தெளியப் பெற்றால் பின்னால் ஆராய்ச்சி செய்ய வேண்டிய தொன்றுமில்லை. ஏனெனில், எல்லாம் 'சிக்கல் நீங்கிய கயிறுபோல்' ஏகமாய், ஒழுங்காய், உண்மையாய் விளங்கும். மனம் மயங்கிப் பிதற்றினதுபோல் (ஒன்றை ஒன்றாக ஆரோபித்துப் பேசினது போல்) பிதற்றவும் வேண்டாம். பின்னை மனதுக்குத்தான் வேறு வேலை யென்னவென்று கேட்கிலோ, அது அறிவை ஆச்ரயித்து அறிவினால் விளங்கப் பெறுவதன்றி தனக்காக அறிவு ஒன்றுமில்லை யென்பதை உணர்ந்து 'தன்மயமாய் தானே தானாய் நிருபாதியாய் விளங்கும் அறிவை' 'உபாதி நீக்கம்' சித்திக்க ஆய்ந்து அறிந்து, அறிந்த அறிவு தானாகி இருப்பது ஒன்று தானே 'தத் துவம்'—'அது நீ" என்கிற உண்மை ஞானமாகும்.

"THE GOAL OF TEACHING":

"The Training of the Mind and Personality in Concentration."

"கற்றோர் கல்வியும் மனப்பழக்கம்."

இப்படி அறிவுமயமாயுள்ளதை யுள்ளபடி உபாதி நீக்கியறிவது தானே உண்மையறிவு. மற்றதெல்லாம் மயக்கத்தினால் ஒன்றை ஒன்றாக மயங்கி காரணகாரியதோரணை யுணராமல் காண்பதாதலால் மாயை அல்லது அறிவுமயக்கம். இப்படி மனதைக்கொண்டு அறிவு மயக்கம் உண்டாகச் செய்வது தானே 'மாயாகாரியம்" என்னப்படும். மனதிலிருந்து பிறந்து மனதோடு கூடி யுறவாடித் திரியும் இந்திரியங்களைக்கொண்டு மனந்தடுமாறி அறிவு மயங்கிப் போகச்செய்வதற்கு இந்திரஜாலம் என்று சொல்வது. உலகெலாம் மயங்கச்செய்வதற்கு மஹேந்திரஜாலம் என்றுபேர். இதையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நிதான புத்தியோடு ஆராய்ந்தால் போன வருஷம் நடந்த சம்பவங்களின் பலாபலன் இன்னதென்று ஊகமாய் உணர்ந்துகொள்ளலாம்.

மனந்தெளியப்பெற்று அறிவு மயக்கமின்றி உள்ளதையுள்ளபடி யுணர்வதே ஜன்மசாபல்யம். அப்படியென்றால் மனிதஜன்மமெடுத்ததற்குப்பலன், (ஜன்மம்-பிறப்பு.) இதைத்தான் தெருள் என்றும் தெளிவு என்றும் சொல்கிறது. இந்தத்தெளிவு ஏற்படாமல் மயங்கித் தியங்கி முயங்குவதே மருள் அல்லது மயக்கம்.

THE EVENTS OF 1915.

சென்ற வருஷத்து சம்பவங்கள்.

1915-ம் வருஷம் இறந்தொழிந்து கழிந்தது. அந்த வருஷம் கழிந்தொழிந்தாலும் அந்தக்காலத்தில் முளைத்த காரணகாரிய சம்பவங்கள் அஃதோடு ஒழிந்தனவாகவில்லை. இதை வழக்குரையில் சொல்லி அதன் உள்ளர்த்தம் விளங்காது மயங்குவதிலும், உண்மைவிளங்க இதைச்சொல்லி இதன் உள்ளர்த்தம் என்னவென்று விசாரித்துணர்வது மேல். ஆதலால் "1915-ம் வருஷம் கழிந்தது" என்னும் வழக்குரையை,உண்மையில் ஆராய்ந்து பார்ப்போம். அப்படி யென்றால் என்ன? இந்த பூமண்டலம் மாதமொருமுறை சந்திரன் தன்னைச் சுற்றிக் கொண்டே வந்து வளர்வதும் தேய்வதுமாய் விளங்க, தான் தன்னைச் சுற்றிக்கொண்டே சூரியனைச்சுற்றி ஒருபிரதக்ஷணம் வந்து விட்டது. இதைத்தான் "ஒருவருஷம் கழிந்தது" என்று நாம் சொல்கிறோம். பூமி தன்னைத்தான் சுற்றி

வருவதைத்தான் நாம் பகலென்றும் இரவென்றும் வழக்குரையில் சொல்கிறோம். சந்திரன் பூமியைச்சுற்றிவர ஒரு மாதம் செல்லுகிறது. இதில் பதினைந்து நாள் கிருஷ்ணபக்ஷம் அல்லது தேய்பிறை. அடுத்தபதினைந்து நாள் சுக்கில பக்ஷம் அல்லது வளர்பிறை. இப்படி 12-முறை சுற்றி வருங்காலத்தில் பூமண்டலம் சூரியனைச் சுற்றி ஒருதரம் பிரதக்ஷணம்செய்து முடிகிறது. இந்த 12-மாதங்களில் சூரியன் உச்சி மையத்திலிருந்து வடக்கும் தெற்குமாகச் சாய்ந்து திரும்புகிறது. வடபுறம் சாய்ந்து திரும்புவதற்கு உத்தராயனம் என்றும், தென்புறம் சாய்ந்து திரும்புவதற்கு தக்ஷிணயனம் என்றும் சொல்கிறது. இதற்கு மூன்றும் மூன்றும் ஆறு மாசம் செல்கிறது. இப்பொழுது தக்ஷிணயனம் 6-மாசகாலமும் அனேகமாகக் கழிந்துவிட்டது. ஜனவரி மீ 14உ உத்தராயண புண்யகாலம் அதாவது சூரியன் தென்புறம் சென்றதிலிருந்து திரும்பி வடபுறம் நோக்கித் திரும்புகிறான். இப்படியாரம்பிக்கும் சூரியனுடைய உத்தர யாத்திரை காலத்தில் ஜீவன்களுக்கு சூரியரஸ்மியால் சுபிக்ஷம் நேரிடுவதால் இதற்கு 'உத்தராயண புண்யகாலம்' என்று பேர்வந்தது. இப்பொழுது காலபரிச் சேதத்தைக்கொண்டு கிரகசாரங்களின் நோக்கை யறிந்தோம். இந்த உண்மைபற்றி பூமண்டலத்தில் நடந்த சம்பவங்களின் போக்கு எப்படியென்று விசாரித்துணர்வோம். பூமண்டலத்தில் நடக்கும் சம்பவங்களில் 'பாரதப் போர்' மிகமுக்கியமானது.

THE POSITION OF THE BELLEGERENTS IN 1915 & 1916.

1915-ம் வருஷாரம்பத்தில் இந்த பாரதப் போரில் சம்பந்தப்பட்டவர்கள் நிலையென்ன? இப்பொழுது அவர்களிருக்கும் நிலையென்ன?

1914-ம் வருஷம் ஆகஸ்டு மீ இந்தச் சண்டையாரம்பித்ததும் ஜெர்மானியர் பெல்ஜியத்தில் பலாத்காரமாய்ப் பிரவேசித்து நாடுநகரங்களையும் கோட்டைகளையும் பிடித்து நிவம்ஸம் செய்துகொண்டு பிரான்ஸில் புகுந்து பாரிஸ் நகருக்கருகாமையில் செல்லும் வரையில் எதையும் எதிர் நிற்கவிடாது பின்வாங்கச் செய்து கொண்டு போனார்கள். பிறகு மார்ன் நதி தீரத்தில் அவர்கள் படையெடுப்பு முறியடிக்கப்பெற்று ஏன் (Aisne) நதி தீரம் வரையில் பின்வாங்கி யோடச்செய்யப் பெற்றார்கள். 1915-ம் வருஷாரம்பத்தில் இந்த பாரதப் போர்முனை வடகடல்தொட்டு ஸ்விட்ஸர்லாந்து எல்லை வரையில் ஏன் நதிதீர மார்க்கமாய்ச்சாய்ந்து சென்றிருக்கக்கண்டோம். சென்ற தைமாதத்து விவேகசிந்தாமணியில் (January-1915) 315-ம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்த்து விவரம் தெரிந்துகொள்ளவும். விவேகசிந்தாமணியைப் புதிதாய் வாசிப்பவர்களும் "விவேகசிந்தாமணி யுத்தகாண்டம்" (Vivekachintamani War Number) கையிருப்பிலில்லாதவர்களும் இலகுவிலறிய அந்தப் படத்தை மட்டும் இங்கே பிரசுரிக்கிறோம். அதிலே பட்டையாகக் கறுப்புக்கோடு இழுத்து "சண்டைமுகம்" என்று எழுதிக் காட்டியிருப்பதைப் பாருங்கள். தைக்குத்தை ஒருவருஷமாகிறது. ஆனால் சண்டைமுகம் அதிகமாக மாற்றப்பட்டதாகவில்லை. இடை இடையே நேர்ந்த சண்டைகளில் ஒரு தரத்தார் எதிரியைத்தாக்கித் துரத்திச் சிறிதுதூரம் அந்தக் கோட்டுக்கு மேலும் கீழுமாகப் போர்முகம் மாறச்செய்ததுண்டு. ஒரு தரம் ஜெர்மானியர் நியூபோர்ட் வழியாக காலே (Calais) க்குச் சென்று அங்கிருந்து டோவர் பட்டணத்தைத் தகர்த்து விடலாமென்று ஆசை வைத்து அதைப்பிடிக்க பகீரதப்பிரயத்தனம் செய்து பார்த்தார்கள். ஆனால் அது பலிக்கவில்லை. பின்னொருதரம் பிரிடிஷ் சைனியங்கள் எதிரிகளை மடக்கியடித்து அவர்களுடைய அரண்வலிகுன்றச் செயம்பெற்று அவர்களுடைய வசத்திலிருந்து நியூவ் சாபெல் (Neuve Chapelle) என்னும் கிராமத்தையும் அதைச் சுற்றியுள்ள அகழ்களையும் தம் வசப்படுத்திக்

கொண்டார்கள். இந்த வெற்றியைத் தொட்டுத் தொடர்ந்துகொண்டு எதிரிகளை நெருக்கியடிக்க, அவர்களிடம் வெடிகுண்டு சாமான்கள் போதுமான படிக்கில்லாமையால், பாவம், நல்ல சமயத்தைக் கை நழுவவிட்டிருக்கவேண்டியதாக விருந்தது. இப்படியாக ஒரு கை வலுத்தும், ஒரு கை சளைத்தும் அங்கங்கே நேர்ந்த சிறு சண்டைகளில் ஜயாபஜயமுண்டான



போதிலும் 260 மைல் தூரமுள்ள சண்டைமுனையில் இந்த வெற்றியும் தோல்வியும் போர்முனையை மாற்றத்திறமைற்றொழிந்தன. பிரிடிஷார் எதிரிகளுடைய படை வலியை இப்பொழுது உள்ளபடி ஆய்ந்துணர்ந்து வெடிகுண்டுகள் தயார் செய்வதில் மிகமுனைந்திருக்கிறார்கள். இவர்களைவிட பிரான்ஸ் தேசத்தார் இந்த விஷயத்தில் விழித்த கண்ணோடு வேலைசெய்து வந்தார்கள் என்று தெரியவருகிறது. இருதரத்தாரும் மறியல் யுத்தம் செய்து எதிரியைத் தேய்பிறை வழக்குரைபற்றித் தேய்ந்து அழிந்து போகச்செய்வதே வெற்றி பெறுவதற்கான யுக்தியென்று நம்பி அந்த வழியில் பிரவேசித்தார்கள். பிரிடிஷ்படைகள் ஜெர்மனி-ஆஸ்திரியா தேசத்தார் கடலில் தலைகாட்டாதவண்ணம் பார்த்துக்கொண்டு, வெளியில் உலாவிவந்த எதிரிகள் கப்பல்கள் சிலவற்றை எதிர்த்துத்தாக்கி நாசம் செய்துவிட்டார்கள். ஜெர்மானியர் பிரிடிஷ் தீவுகளைச் சுற்றிமறியல் போட்டிருக்கிறதாகச் சொல்லி அங்கேவந்த கப்பல்கள் இன்னார் இனியார் உடையது என்று பாராமல்தானே கடலில் மூழ்கித் தாக்கும் ஸப்-மாரின் படகுகளால் 'டார்பிடோ' (Torpedo) என்னும் வெடி யந்திரம் கொண்டு தீர்த்துத் தகர்த்து நாசம் செய்யத்தொடங்கினார்கள்.

THE BLOCKADE AND ITS CONSEQUENCES.

இந்த மறியல்யுத்த மும்முரத்தில் சண்டையிற் சேராத தேசத்தார் கப்பல்களும் போர்க்கப்பலில்லாத சுத்த வியாபாரக்கப்பல்கள் அனேகமும் தாக்கித்தகர்த்து மூழ்கடிக்கப்பெற்றன.

இவைகளில் அமெரிக்கா யூனைடெட் ஸ்டேட்ஸ் என்னும் ஐக்கிய மாகாணங்களைச்சேர்ந்த தான லூஸிடானியா (Lusitania) என்னும் கப்பல் அத்தேசத்தார் சண்டையிற் சம்பந்தப்படாதவர்களாயிருந்தும் ஜெர்மானிய நீர்ப்படைகளால் தாக்கித்தகர்த்து மூழ்கடிக்கப்பெற்றதோடு அதிலிருந்த ஆண் பெண் குழந்தைகளாதியான பிரயாணிகள் ஆயிரம் பேரும் அதோகதியாக நீரில் விழ்த்தப்பட்டார்கள். இதனால் இருதேசத்தாருக்கும் மனஸ்தாபம் நேர்ந்து அது சண்டையில் முடியாமல் தானே ஒருவிதமாக அடங்கியும் அடங்காமல் புகைந்துகொண்டிருக்கிறது. பெல்ஜியம் கடற்கரையோரத்தில் ஒரு சிறுபாகம் தவிர மற்றவை முற்றும் எதிரிவசமாகவே யிருக்கிறது. பிரான்ஸின் வடபாகத்தில் ஏன் நதிக்கு வடக்கேயுள்ள மாகாணங்களும் எதிரிகள் வசமாகவே யிருக்கின்றன. சண்டை துவங்கிப் பதினேழு மாசமாகியும் தோற்பு கெலிப்புத் தெரியாமல் தானே இருதரத்தாரும் ஒருவரையொருவர் தீர்த்துவிடுகிறதென்று வைரம் சாதித்துச் சண்டை செய்துவருகிறார்கள். பிரிடிஷாருக்கு சண்டைச் செலவு தினம் ஒன்றுக்கு 50-லக்ஷம் பவுன் ஆகிறது ஜெர்மனியின் பாடு இன்னும் அதிக கஷ்டமானதாயிருக்கிறது. அத்தேசத்தார் சண்டைச் செலவு இன்னம் அதிகமானதே. கடன் வாங்குவதில் சூது வழிபற்றிப் பணம் சேகரித்திருக்கிறார்கள். இந்தச் சூது வெளியானால் ஜனங்கள் நம்பிக்கையிழந்து போவார்கள் தேசத்தில் எல்லாரும் சண்டை செய்ய நிர்ப்பந்தப்பட்டவர்களாதலால், அவர்களில் பெரும்பாலாரும் சண்டைமுனையிற் சென்று விழுந்துமடிந்து போய்விட்டார்கள். இப்பொழுது மீசைமுளைக்காத வாலிபர்களும் பையன்களும் தானிருக்கிறார்கள். ஆஸ்திரியாபாடும் இப்படியேதான் அந்தரத்திலிருக்கிறது. இப்படி உயிர் நஷ்டம் பொருள் நஷ்டம் ஏராளமாய் நேர்ந்துவிட்டபடியால், இனிமேல் மனிதர்கள் அகப்படுவதும், பணம் அகப்படுவதும் கஷ்டம்தான். இஃதோடு மறியல் யுத்தம் காரணமாக ஜனங்களுக்கு வேண்டிய ஆகாரமும் போதுப்போதாதாயிருக்கிறது. சென்ற 17-மாதங்களாக நடந்த யுத்தத்தின் பலன் இதுதான்.

THE EASTERN THEATRE OF WAR.
கீழண்டைப் போர்க்களம்.

கீழ்த்திசையில் ருஷியா ஜெர்மனியின்மேல் படையெடுத்துச் சென்றது போய் ஜெர்மானியரும் ஆஸ்திரியா சைனியங்களும் ருஷியரை போலண்டுக்கு வெளியே போகத்துரத்தி ருஷியாவில் சிறு பாகத்தைப் பிடித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். ருஷிய சைனியம் பின்வாங்கியும் முறியடிக்கப்பட்டதாகவில்லை. அத்தேசத்தில் குளிர் மிகுதியாதலால் எல்லாரும் குளிர் காலத்தில் சண்டைக்கோலம் சிறிது அடங்கி வசந்தகாலம் பிறந்ததும் மறுபடியும் மும்மரமாகச் சண்டை போடுவதற்கு வேண்டிய முயற்சிசெய்து வருகிறார்கள்.

TURKEY AND THE BALKANS.
துருக்கி—பால்கன்ஸ் சண்டை.

ஜெர்மனி மறியல் யுத்தத்தால் கடல் வெளியில் தலை காட்டவொட்டாமல் செய்யப்பட்டதைப் பொறுக்காமல், ஒரு பக்கத்தில் துருக்கியை வசப்படுத்திக்கொண்டு அவர்களைக் கிளப்பிவிட்டதன்றி பால்கன் தீபகர்ப்பத்தில் பல்கேரியா தேசத்தாரைக் கிளப்பிவிட்டு அவர்களுக்கு உடன் உதவியாகவிருந்து ஸெர்வியா (Servia) தேசத்தை முற்றும் பிடித்துக்கொண்டுவிட்டார்கள். பெல்ஜியம தேசத்து கவர்மெண்டு நாடுவிட்டோடி ப்ரான்ஸிலுள்ள ஹாவ்ரி (Havre) பட்டணத்தில் தங்கள் துரைத்தன ஸ்தானத்தை ஏற்படுத்திக்கொண்டதுபோல், ஸெர்வியா தேசத்தரசன் நாடுவிட்டோடி கிரேக் சமஸ்தானத்திலுள்ள ஸலோனிகா (Salonika) பட்டணத்தில் துரைத்தனஸ்தானம் வைத்துக்கொண்டிருக்கிறார். ஸலோனிகாவிலிருந்து பல்கேரியர்களை எதிர்த்துச் சென்ற கூட்டாளிகளின் சைனியங்களும் மறுபடியும் ஸலோனிகாவுக்கு திரும்பிவிட்டன. பெல்ஜியத்தைப்போல் ஸெர்வியா தேசமும் எதிரிகள் கைவசப்பட்டுவிட்டது.

துருக்கி தேசத்தாரை யடக்கவென்று டார்டினெல்ஸ் (Dardenels) குடாவை கைவசம் செய்துகொள்ள அனுப்பிய சைனியத்தை, தற்காலம் யுக்தமல்ல என்று வேறு இடத்திற்கு மாற்றிவிட்டார்கள்.

இந்த இரண்டு இடங்களில் எதிரிகளுக்கு நேர்ந்த அனுகூல ஆதரவினால் மத்தியதரைக்கடலில் அவர்கள் அட்டகாசத்தால் அச்சம் அதிகரிக்கலாயிருக்கிறது. 1916-ம் வருஷம் பிறக்கவே அங்கே பிரயாணிகள் சகிதம் இந்தியாவிற்குவந்த பேர்ஸியா என்னும் (P. & O. company) 'மெயில்' கப்பலை ஆஸ்திரிய ஸப்-மாரின் படகொன்று உடைத்துத் தகர்த்துவிட்டது. அதிலிருந்த பிரயாணிகள் ஆண், பெண், குழந்தைகள் உள்பட எல்லாரும் தண்ணீரில் விழுந்து சிதறிப் போய்விட்டார்கள். வெகு சிலர் தப்பிக்கொண்டார்கள். பலர் மாண்டார்கள். இதனால் நேர்ந்த நஷ்டம் பெரிது. சில இந்தியர்களும் ஒரு அமெரிக்க உத்தியோகஸ்தரும்கூட மாண்டுவிட்டார்கள்.

சுருங்கச்சொல்லில் 1915-ம் வருஷம் முற்றும் நடந்த பாரதப்போரினால் இருதரத்தாருக்கும் விளைந்த பலன்:—உயிர் நஷ்டம், பொருள் நஷ்டம், மனக்கிலேசம்—இவைதான். [illegible]ருந்து புதிய வழிகண்டு உழைக்கத் [illegible]டது ஒரு விசேஷம்தான். இந்த யுத்தத்தின் போக்கும் பலனும் பலன் இந்த வருஷம் குளிர்காலம் நீங்கி வசந்தகாலம் வந்தால் அப்பொழுதுதான் தெரியவரும் போலிருக்கிறது.

THE WORK OF THE SPIRIT: "WORK FOR WORK'S SAKE."

ஓடுகிறவன் ஓட்டத்தில் பிரியம் வைத்து ஓடுகிறான். பாடுகிறவன் பாட்டில் பிரியம் வைத்துப்பாடுகிறான். உழைக்கிறவன் உழைப்பில் பிரியம் வைத்து உழைக்கிறான். இவர்களெல்லாரும் அவரவர்கள் தொட்ட காரியத்தில் மனம்பதியப் பெற்றுத் தொடுபிடியாய் உழைத்துவருவதால் எப்படியும் கிருதார்த்தர்களாவது நிச்சயம்.

ஓட்டத்தில் பிரியமின்றி ஓடுகிறவனும், பாட்டில் பிரியமின்றிப் பாடுகிறவனும், உழைப்பில் பிரியமின்றி உழைக்கிறவனும் திரிகரண சுத்தியான முயற்சியின்மையால் கடைத்தேறமாட்டார்கள் என்பது நிச்சயம். இவர்கள் சிரமம் விருதாவில்கழிவதன்றி இவர்கள் சிரமப்பட்டதால் அடையவேண்டிய பலனை ஒருக்காலும் அடையமாட்டார்கள்.

RIGHTEOUSNESS WILL TRIUMPH IN THE END
தர்மமேஜயம்.

அஃதேபோல் சண்டை போடுவதிலும் திரிகரண சுத்தியிருக்கவேண்டும். அதாவது உடல் பொருள் ஆவியையும் ஒன்றாக அர்ப்பணம் செய்து சண்டைசெய்யவேண்டும். யாருக்கு அர்ப்பணம் செய்கிறது? ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். அப்படிக்கின்றி வைஷம்யத்தினால் ஒருவரை யொருவர் பகைத்து வர்மம் சாதித்து அசுரபாவம் மிஞ்சிச் சண்டை செய்வதால் நாசம் உறுவது நிச்சயமன்றி வேறுபலன் கிடையாது. இது வாஸ்தவமான ஒரு மூலக்கொள்கை. இந்தமூலக்கொள்கையை யார் சமஷ்டிபாவத்தில் மனமொப்பி அங்கீகரித்து அதற்கேற்ற சாதகசாதனங்களோடு கையாள்கிறார்களோ அவர்கள் தான் கடைசியில் வெற்றி பெறுவார்கள். "தர்மமேஜயம்" என்பது உண்மை. தர்மவழி பற்றிச்சென்றால் அது எப்படியும் ஜயகரமாகவேமுடியும். அதர்மம் என்னதான் ஜயிப்பதாகக் காட்டினாலும் அது கடைசியில் அழிந்து போவது நிச்சயம். ஜெர்மானியர் தர்மவழியை விட்டுவிலகி, அவர்களது முரட்டுபலத்தைக் கொண்டு எல்லாரையும் கலக்கிவிடலாமென்று பார்க்கிறார்கள், முரட்டு

பலத்தைக்கண்டு கலங்குகிறவர்கள் தான் கலங்குவார்கள். உண்மையில் தர்மசிந்தனையுள்ளவர்கள் ஒருக்காலும் கலங்கமாட்டார்கள். கூட்டாளிகள் தர்மவழிப்பட்டு நிற்பினும் திரிகரண சுத்தியோடுழைக்க வேண்டும். அதாவது மனம், மொழி, மெய் மூன்றும் ஒருவழிப்பட்டு ஒன்றுக்கொன்று வேறுபட்டுத் திரியாது நிற்க வேண்டும். இந்த திரிகரணசுத்தி யொன்று மட்டும் இருந்தால், அவர்கள் புஜபலபராக்கிரமமும் மனோதைரியமும் பன்மடங்கு பெருகிப் பிரபலிக்கும்.

A PARALLEL AND ITS MORAL.

“தேவி-பண்டாசுர” யுத்தத்தில், பண்டாசுரன் எத்தனையோ வரம் பெற்றிருந்தான். ஆகையால் தேவிக்குச் சரிசமமாக எல்லாவிதத்திலும் சண்டைசெய்தான். தேவி அவனை முற்றும் ஜயிக்கமாட்டாது தனதுபடைவலியெல்லாம் ஜயம் தருவதாயில்லை யென்பதை யுணர்ந்து, தன்பதியை நினைத்து மனதில் தியானம் செய்து அவரன்பு நிறைந்த உளத்திலுண்டான தர்மமர்மவுணர்ச்சியினால் காமேசுவராஸ்திரத்தைப் பிரயோகிக்க அது பண்டாசுரனை முடித்துவிட்டது. முரட்டுபலத்துக்கு முரட்டுபலம் ஈடாகமாட்டாது. தொந்தயுத்தத்துக்கு ஒருநாளும் முடிவில்லை. ஆதலால் தான் “வர்மமப்பா செல்வதில்லை, வாயாலொன்றுமாவதில்லை” யென்று செப்பினாள் ஸ்ரீ தேவி. இது அப்பராசக்தி தன்னுடைய சொந்த அனுபவத்திலிருந்துகண்டு சொன்ன உண்மையாதலால் ஒருக்காலும் பொய்க்காது. இந்தப் பார’த யுத்தத்துக்கு “War of attrition” என்று பேர் கொடுத்திருக்கிறார்கள். அப்படியென்றால் உண்டு இல்லையென்று பார்த்துவிடுகிற நாசயுத்தம் எனப் பொருள்படும்.

THE SPIRITUAL POWER OF MAN.

மனிதன் ஆத்மசிந்தனையோடு கூடினஜீவன். அதாவது அறிவுள்ளவன். வர்மம் பாராட்டுவதால் அறிவு விஷம்பற்றின ஜீவன்போல் ஒளி மறைந்து மங்கிவிடும். அறிவின் ஸ்வயம்ப்ரகாச ஒளி மங்குவதில்லையானாலும் அதை அவன் உணராதபடி மனக்குழப்பம்வந்து மலைத்துவிடும். ஆதலால் “சங்கல்பம் வீண்போகாது” என்கிற விதிப்படி, மனிதன் உள்ளத்தில் உள்ளபடி என்ன நினைக்கிறானோ அது எப்படியும் பலிக்கிறது. இது அவனிடத்திலுள்ள ஆத்மசக்தியின் மஹிமை. அதை யுணர்ந்து நல்வழியிலுபயோகித்தாலும் சரி, அறியாமல் கண்டபடி உபயோகித்தாலும் சரி, அந்த நினைப்பின் சக்தி மனிதனை விட்டு விலகுவதில்லை. அதைக்கொண்டு அவன் செய்யும் நன்மையும் தீமையும் அவனையே சுற்று மன்றி பிறரை யழிக்குமென்பது வெறும் பிரமையன்றி வேறல்ல. இது வியஷ்டிபாவத்திலுண்மையாவதுபோல் சமஷ்டி பாவத்திலும் உண்மையே.

மனிதன் பிரத்தியேகத்தில் வியஷ்டி பாவனன்; அதேமனிதன் தேசப்பொதுவில் அத்தேச சமஷ்டிபாவனன். மேற்கண்ட மனிதன் தானே உலகசிருஷ்டியில் ஜீவனாகவும் ஈசுவரனாகவும் விளங்குகிறான். ஈசுவரனுக்குள்ள சக்தியெல்லாம் ஜீவனுக்குமுண்டு. ஆனால் ஜீவன் சாணளப்பான் பூச்சிபோல் தன் தேஹபாவனை முதிர்ந்து சாண்வயிற்றுக்காக “பார்க்காய்க்குப் பங்கைவிற்றவன் கதையாக” தனது ஆத்மலாபத்தை விற்றுக் கர்மவசத்தனாய் உண்டுடுத்துறங்கிப் பிறப்பதும் இறப்பதுமாக உழன்றால் அது அவனுடைய சொந்தக்குற்றமேயன்றி ஈசுவரன் குற்றமல்ல. தன்விதிக்குக் கர்த்தா தானேயன்றி ஈசுவரனல்ல. ஜீவன் ‘தேஹம்நான்’ என்கிற பாவத்தைவிட்டு ‘எல்லாம் நான்’ என்கிற ஸர்வசாக்ஷி பாவத்தைக் கைப்பற்றினானால் அவன் ஜீவேசுவர பேதந்தாண்டி ஈசத்துவம் என்கிற வல்லமை பெற்று உலகையும் ஆட்டிவைக்கும் திறமை வாய்ந்தவனாகிறான்.

162039

THE LESSON OF 1915.
பழையவருஷத்தின் படிப்பினை.

1915-ம் வருஷம் பேதபாவத்திலும் வர்மஆவேசத்திலும் பலனற்றுக் கழிந்தது. 1916-ம் வருஷம் புதிதாகவந்து புகுந்தது. இந்த வருஷப் பலன் எப்படி யிருக்குமோ இதன்கடைசியில் தான் தெரியும். “பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல” என்றார் மேலோர்; ஏன் என்றால் அது காலத்தினுடைய இயல்பு அல்லது சுபாவம் என்றார். ஆதலால் சென்றுபோன வருஷத்தைநினைத்து வருந்தாமல், வந்து புகுந்தவருஷத்தில் முன்செய்த தப்புத்தவறுகளால் வந்த வில்லங்கங்களை நீக்கி, நல்வழிபற்றி நின்றுழைப்பதே விவேகிகள் செயற்பாலதாம்.

THE NEW YEAR'S INHERITANCE.
புதுவருஷப் பிதிரார்ச்சிதம்.

ஆதலால் இந்த விவேகசிந்தாமணியை வாசிக்கும் பாலரும், பெற்றோரும், மற்றோரும், பாலபோதம் செய்வோரும், லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் வித்யாபாக அனுபந்தத்தில் (Times' Educational Supplement)சொல்லியிருக்கிற உண்மைகளைப் பெற்றோர்க்கறிவுணர்த்தவென்று எடுத்துக் கூறியிருக்கிறபடி பிள்ளைகளும் வாசித்து, பாலப்பருவம் முதிர்பருவத்திலும் மனோசிக்ஷைக்கு ஏற்றகாலம் என்பதையுணர்ந்து ‘குழந்தை-மனத்துக்குள்ள ஸ்வபாவமான புத்தி தீக்ஷண்யத்தை’க்கொண்டு எதையும் பற்றற்ற நிலையிலிருந்து செய்வதே கிருதகிருத்திய சம்பத்தளிக்குமென்றுணர்ந்து “கல்வியைக் கல், கற்றப்படி நில்” என்றபடி [illegible]மோர்ந் துணர்ந்ததை அப்பியாசத்தில் [illegible]டித்துச் செய்யவேண்டியதைச் செய்முறையறிந்து செய்தவர்களாகும் பாக்கியத்தைப்பெற மனமொழி, மெய்களும் பொருந்த திரிகரணசுத்தியோடு உழைத்துவரவேண்டும் என்பதே 1915-ம் வருஷம் இந்தப்புது வருஷத்தில் நமக்கு வைத்துப்போன பிதிரார்ச்சித ஆஸ்தி.

THE VICEROY ON EDUCATIONAL EFFICIENCY.

His Excellency Lord Hardinge, the Viceroy, in opening the Punjab Veterinary College at Lahore on December 10th, made a speech in which he referred to the efficiency of education imparted in the Vernacular in the following indubitable language :—

“I have been particularly interested to learn that the main course of studies is conducted in the Vernacular, while English is the language of the post-graduate course. There is more than one school of thought as to whether the medium of instruction in our higher educational institutions should be English or the Vernacular but I think few will be found to question the wisdom of the policy adopted here, for many of those, who are most fitted by their home surroundings for a useful Veterinary career have neither the time nor the inclination to become versed in Western Culture and it is hardly open to question that it must be easier for them to imbibe a knowledge of Veterinary science when imparted in their own tongue than if it was complicated by the mysteries of a foreign language. On the other hand post-graduate studies necessitate the study of a wider range of Literature and there are obvious reasons for their being conducted in English.”

வித்யாப்பியாசத்தில் கடைத்தேறுமுறையைப்பற்றி இராஜப்பிரதிநிதியவர்கள் அபிப்பிராயம்.

நமது இராஜப்பிரதிநிதியாகிய மேன்மைதங்கிய லார்ட் ஹார்டிஞ்சவர்கள் நாளது டிஸெம்பர்மீ 10௳ லாஹோரிலுள்ள ‘பஞ்சாப் வெடரினரி காலேஜ்’ புதியகட்டடம் திறக்கும் சந்தர்ப்பத்தில் வித்தியாப்பியாசம் செய்வதில் கடைத்தேறுமுறையைப்பற்றி அவருடைய அபிப்பிராயத்தை சந்தேகத்துக்கிடமின்றி வெளியிட்டுப் பேசினார். அங்கே கால்நடை வைத்தியம் சொல்லிக்கொடுப்பதில் யூனிவர்ஸிடியில் வித்யா பட்டம் பெற்றபின் படிக்கிறவர்களுக்கன்றி மற்றவர்களுக்கெல்லாம் அவர்கள் சுதேச பாஷையில்தானே பாடம் போதிக்கப்பட்டுவருகிறதைக் குறித்து அந்த மாதிரி ஏற்

பாடு நடந்துவருவதில் அவருக்கு விசேஷ பிரியமென்று சொன்னார். மேல்வகுப்புப் பள்ளிக்கூடங்களில் வித்தியாபோதனைசெய்வது இங்கிலீஷிலிருக்கவேண்டியதா ஸ்வபாஷையிலிருக்கவேண்டியதா என்பதைப்பற்றி அபிப்பிராயபேதமிருக்கிறதென்று அவருக்குத்தெரியும். ஆனால் அந்த கால்நடை வைத்தியசாலையில் பாடங்களெல்லாம் ஸ்வபாஷையில் போதிக்கப்பட்டுவருவது உத்தமமான முறையென்பதைப்பற்றிச் சந்தேகமில்லையென்றும் அதை ஆக்ஷேபிக்க யாரும் துணியார்களென்றும் சொன்னார். ஏனெனில் குடும்ப சந்தர்ப்ப விசேஷங்களினால் கால்நடை வைத்தியம் கற்றுத் தேறிப்பிழைக்க யோக்கியமானவர்கள் எல்லாருக்கும் அந்நியபாஷை கற்று அதன் மர்மங்களையுணர்ந்து அந்த அந்நியபாஷை மூலமாய் வைத்தியம் கற்றுத் தேறுவதற்கான முயற்சி செய்வதற்கு வேண்டிய அவகாசமாவது இஷ்டமாவது இல்லையென்பது திண்ணம்; ஆதலால் அவர்கள்தம் ஸ்வபாஷையில் போதிக்கப்படும் கால்நடைவைத்தியம் கற்றுத்தேறுவது இலகுவும் சுலபமுமாயிருக்கும். யூனிவர்ஸிடி வித்தியாபட்டம் பெற்றபின் மேல் வாசிக்கிறவர்களோ விசேஷ ஆராய்ச்சிசெய்து அனேக கிரந்தங்கள் வாசிக்க வேண்டியதவசியமாயிருக்கிறபடியால் அவர்களுக்கு இங்கிலீஷ் மூலமாய் போதனைசெய்ய வேண்டியது நியாயமாயும் தகுந்ததாயுமிருக்கிறது என்று சொன்னார். இந்தச் சென்னையிலோ, மூன்றாவது ஸ்டாண்டர்ட் முதல் (பிரதம வித்தையாரம்ப முதல்) பெண்களுக்கு எல்லாப்பாடங்களும் இங்கிலீஷில் போதிக்கப்பட்டு வருகிறது. துச்சாதனத்தினால் ஸத்சாதனை சித்திக்குமா? அப்படியென்றால், கோணல்வழி பற்றிச்சென்றால் நல்லகதி கிடைக்குமா? கிடைக்காது என்று எல்லாருக்கும் தெரியும். தெரிந்தும் குழந்தைகள் படித்துக் கடைத்தேறி புத்திவிசாலமடையும் முறையைவிட்டு, கிளிப்பிள்ளைகளைப்போல் இங்கிலீஷில் வாத்தியார் சொன்னதைச்சொல்ல பொட்டைப்பாடம் செய்து கடைசியில் அதையும் மறந்துவிடுவதற்கு ஹேதுவான முறை சிலாக்கியமென்றெண்ணி அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. "குருடரும் குருடரும் குருட்டாட்டமாடிக் குழிவிழுந்தற்றே" யென்ற பெரியோர் வாக்கு இந்தக் கண்மூடி இராஜதானியில் நன்றாகப் பலித்துவருகிறது.

VEHICLE OF TEACHING.

SIR RABINDRA NATH TAGORE'S ADDRESS.

Calcutta, Dec. 11.—Last evening (Dec. 10th) Sir Rabindra Nath Tagore addressed a crowded meeting at the Rammohun Library Hall, the subject of the discourse being the "Vehicle of Teaching." He began by a reference to the system of education they have been used to, and remarked that they had something still wanting. *They felt they were not in their own element as their own tongue was not the medium of education.* In order to uplift the country, education must be spread more liberally; and in order to render it popular, it must be rendered cheaper and easy of attainment. The speaker could not conceive why the doors to higher education should be shut against those who were not so fortunate or opulent as to acquire proficiency in the English language. People should learn English as the language of the State and for hundreds of other reasons, but at the sacred altar of learning the vernacular-knowing man was no criminal or a Sudra. He knew as a teacher that there were students who were naturally wanting in language. They experienced the greatest difficulties in the higher classes and it was no wonder why cramming occupied the place of real learning. He suggested that the Calcutta University in its teaching branch should have a vernacular section in which education should be given in the Bengali. Let it be only a humble beginning and in the course of time it will force itself upon the University and claim its due position as a vehicle of teaching. There was no doubt a difficulty of books in the vernacular, but once the University recognised the vernaculars as even an optional medium of education, books would be forthcoming. There was a time, Sir Rabindra remarked, when English educated Bengalis neglected their own mother-tongue, but times had changed; they felt pride in their vernacular and he trusted his proposition would not be inopportune. With these remarks he placed the question before the country for the serious consideration of educational leaders. A discussion followed and with suitable remarks from the President, Dr. Brajendranath Seal, the meeting terminated.—(By wire) — New India.

வித்தியாபோத சாதனமுறை.

வித்தை யென்பது அறிவை விசாலிக்கச் செய்யும் முறைக்குச் சொல்கிறது. அந்த முறைக்கு அதிஷ்டான தேவதையாயுள்ள ஒன்றை வித்யேசுவரி, வித்யாதேவி யென்றும் ஸ்ரீவித்தையென்றும், ஸரஸ்வதி யென்றும் பலபேர் பலவிதமாகச் சொல்கிறார்கள். "கல்வி கரையில் கற்பவர் நாள்சில": ஆதலால் கரையில்லாத தொன்றைக் கற்று முடிப்போம் என்பது கூடாத காரியமாயிருக்கிறது. ஆனது பற்றி விஷயங்களை ஆராய்ந்து அவற்றின் உள்ளுறை உண்மைகளைத் தத்துவவாயிலாகத் தெரிந்துகொண்டு தத்துவங்களைக்கொண்டு ஜகத்தையும் தன்னையும் அறிந்துகொண்டு கடைசியில் அவற்றையுந் தாண்டியுள்ள கடவுளை வழிபடுதல் தானே கல்வியின் பயன்.

இந்தப்பயனைப்பெறச் செய்யு முயற்சியெல்லாம் வித்தியாப்பியாசமே. இந்த வித்தியாப்பியாசம் வித்தையை வசப்படுத்திக்கொண்டவர் முன்னிலையில் அவர்கள் ஓத சிரவண மனனத் தோடிருந்துணர்ந்து ஓதி யறிவதும், அறிந்ததை அனுபவத்திற்கண்டு ஸ்வானுபவத்தால் அபரோக்ஷப்படுத்திக்கொள்வதுமே உண்மை வித்தியார்த்திகள் கடமையாம்.

இந்தவிதம் வித்தைபயில்வதுதான் கல்வியின் பயனையளிக்கும்; மற்றவெல்லாம் அரைகுறைப்படிப்பாய் முடிந்து ஆபத்துவிளைக்கும். மேற்றிசையாரும் இந்தப் பாரத'யுத்தம் தொடங்கியபின் இதன் உண்மையை உணரத் தொடங்கியிருக்கிறார்கள். இதற்கு முன்னால் மேற்றிசை வித்வான்களில் விவேகிகளாயுள்ளோர்மட்டும் இந்தஉண்மையை யுணர்ந்திருந்தாரினும் அவருடைய போதனை மற்றவர் செவிக்கேறாமலிருந்தது. இப்பொழுது அரைகுறைப்படிப்பு ஆபத்து விளைக்கு மென்பதை யுண்மையில் அனுபவ மூலமாகவுணர்ந்து "நிறைகுடம் நீர்தளும்பலில்" ஆதலால் பூரண வித்தை சித்திப்பதற்கான முயற்சிசெய்ய முனைந்திருக்கிறார்கள். இந்த முயற்சி லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் வித்தியா சம்பந்தமான அனுபந்தத்தில் பிரசுரமாயிருக்கும் (Revolution in Secondary Education) மத்தியதரப்படிப்பில் முற்றும் மாறுதல் வேண்டுமென்று எழுதியிருக்கும் விஷயத்தாலும் "பெற்றோர்க்குப் போதனை" யென்னும் விஷயத்தாலும் இன்னும் இவை போன்ற பல குறிகளாலும் வெளியாகிவருகிறது.

நாட்டுப்புறத்துக் கேற்படிப்பு ஸ்வபாஷையில் போதிக்கப்படவேண்டுமென்று நாம் சென்ற இருபதுவருஷங்களாக வற்புறுத்தியும் அதற்கிசைய வுழைத்தும் வருகிறது இப்பொழுது எல்லாராலும் அங்கீகரிக்கப்பெற்று வருகிறது. சென்ற சஞ்சிகையில் கனம் பொருந்திய ஸர் ஹாரல்டு ஸ்டூவர்ட் அவர்கள் இது விஷயமாய்க்கூறியதை யெடுத்து விவரித்துக் கூறினோம். மேன்மைதங்கிய நமது அரசர் பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் லாஹோரில் பேசினபோது இதற்கு அனுகூலமாய் வெளியிட்ட அபிப்பிராயத்தையும் இச்சஞ்சிகையின் மற்றோரிடத்தில் எடுத்துக் கூறியுள்ளோம். அதேதினத்தில் (டிசெம்பர்மீ 10உ) ஸர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் கல்கத்தாவில் ஸ்ரீ ராம்மோஹன்ராய் புஸ்தகசாலை ஹாலில் வித்தியாபோத சாதனமுறையைப் பற்றி ஓர்பிரசங்கம் செய்தார். அதில் போதிக்கச்சாதனமாயுள்ளபாஷை ஸ்வபாஷையாகவிருக்கவேண்டியதின் அவசியத்தைப்பற்றி அவர் வற்புறுத்திக்கூறினார். அந்நிய பாஷையிற் தேர்ச்சிபெறுவது அனேகருக்குக் கஷ்டசாத்தியமாயிருக்கிறதென்பது எல்லாரும் அனுபவத்திற்கண்ட வுண்மை. இப்படிப்பட்டவர்கள் கல்வியின்பயனை முற்றுமிழக்கவேண்டுமென்பது நியாயமாயில்லை. கல்வியின்பயன் கடவுளை யடைந்து அவரை வழிபடுதல் என்று பொதுவாய்ச் சொல்லியிருப்பினும் உண்மையில் அது தன்னையும் ஜகத்தையும் அறியும் அறிவினாலேயே அறியத்தக்கதாயிருக்கிறது. தன்னையறியத் தத்துவம்வினங்கும். ஜகத்தை

யறியப் பிரகிருதிதர்மம்விளங்கும். கர்மத்துக்கு (செய்கைக்கு) தர்மமும் (ஸநாதனமான ஆத்ம ஞானத்தோடுகூடிய பிரகிருதிதர்மமும்) தர்மத்துக்கு (பிரகிருதி ஞானத்துக்கு) ஆத்மஞானமும் (அறிவின் ஸ்வரூபஞானமும்) இன்றியமையாத சாதனங்களாம்.

இந்தசாதனங்கள் அமையப்பெற வித்யாகுரு (போதகாசிரியர்) அக்ஷராப்பியாசம் முதல் தத்துவஞானம் வரையில் போதிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். இந்தப்போதனை முக்கியமாய் மனப்பழக்கத்தால்தானே மனதிலேற வேண்டும். மனப்பழக்கத்துக்கு "சங்கல்ப சாதகம்" என்கிற எண்ணங்களை யுணர்ந்துபயோகிக்கும்வழி தெரியவேண்டும். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்." ஆதலால் எண்ணினதோர் எண்ணத்தை உபயோகித்துக் காரியத்தில் பயன்படச்செய்ய கர்மேந்திரியங்களில் தலைமைபெற்றதான வாக்கின் உதவிவேண்டும். வாக்கினின்று பிறந்து இலக்கிய இலக்கண விசேஷத்தோடு கூடியது பாஷையென்னப்படும். இந்த பாஷை ஸ்வபாஷையென்றும் அந்நிய பாஷையென்றும் இருவகைத்தாகும். ஸ்வபாஷை யென்பது தானுகப் பூர்வ ஜன்மவாசனையின் உதவியால் இந்த ஜன்மத்தில் பிறந்தது முதல் ஸ்வபாவமாகப் பழகிவருவது. இது மனோதர்மத்தை யொட்டினதாகவேயிருக்கும். அந்நியபாஷை யென்பது ஸ்வபாவமான மனோதர்ம விலாசத்துக்கு அந்நியமாயுள்ளது. ஆதலால் பள்ளிக்கூடங்களில் இங்கிலீஷ் ராஜபாஷையானதாலும் இன்னும் எத்தனையோகாரணங்கள் நிமித்தமும் எல்லாராலும் கற்கப்படுவது உசிதமேயாயினும், மனப்பழக்கம்பெறுவதற்கான போதனையெல்லாம் அப்பாஷையொன்றில் தானே போதிப்பது இயற்கைவிரோதமாகவும் பெரும்பான்மையான ஜனங்களுக்குக் கல்வியின்பயனை மறுப்பதாகவும் இருக்கிறது. ஆகையால் இதுகூடாது; யூனிவர்ஸிடி யென்கிற ஸர்வகலாசாலைக்கு வேண்டிய பாடங்களைக்கூட ஸ்வபாஷையில் போதிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறபடியால் கல்கத்தா யூனிவர்ஸிடி சங்கத்தார் அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், "தாயைவிற்றடிமைகொள்ளும் பேதைகளாய்" நம்மவர்கள் ஸ்வபாஷையை மறந்து அந்நியபாஷை கற்பது வித்யாதர்மத்துக்கு விரோதமாயிருப்பதால் அது கூடாதென்றும் வற்புறுத்தி இதுவிஷயத்தையெல்லாரும் கவனிக்கவேண்டி அவர்தம் அபிப்பிராயத்தை வெளியிடுவதாக ஸர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் தெரிவித்தார். அவருடைய பிரசங்கத்தின் சாராம்ஸத்தை தந்திமூலமாய் வந்தபடி அச்சிட்டிருக்கிறோம். அப்பொழுது அக்கிராசனம் வகித்திருந்த டாக்டர் வ்ரயேந்திர நாத் ஸீல் அவர்கள் அவர் அபிப்பிராயத்தை ஆதரித்துப் பேசினார்.

சென்னையில் நடந்த கிறிஸ்தியன் காலேஜ் வருஷோற்சவ தினத்தன்று (டிசெம்பர்மீ 29உ) அக்கிராசனாதிபதியாக விருந்த சென்னை டிப்டி அக்கௌன்டென்ட் ஜெனரல் ம-ா-ா-ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாஸய்யர் அவர்கள் ஸ்வபாஷையில் வித்தைபோதிக்காது அந்நியபாஷையில் போதித்துவருவதால் விளையும் கேடுகளைப்பற்றி சவிஸ்தாரமாய்ப்பேசி ஸ்வபாஷைப் பயிற்சியில்லாவிட்டால் நாம் மேன்மேலும் க்ஷீணித்துப்போவது நிச்சயமென்றும் ஆதலால் இங்கிலபாஷையை பாஷா பாடமாகப் பயின்று வருகையில் எல்லாப் போதனையும் ஸ்வபாஷையில் தானே போதிக்கப்பட வேண்டுமென்றும் வற்புறுத்திப்பேசினார்.

BOOKS AND HOW TO READ THEM.
புஸ்தகவாசிப்பு.

புஸ்தகத்தெரிவு.

புஸ்தக வாசிப்பில் கவனிக்கவேண்டிய முக்கியமான முதல்விஷயம் புஸ்தகத்தெரிவு என்கலாம். "தீனி அறிந்து தின்றால் பிணியில்லை" என்றோர் பழமொழி உண்டு. அதன்படி ஒருவன் தான் இன்னது அருந்தத் தகும், இன்னது தகாது என்று அறிந்து, தகாததைத் தள்ளித் தக்கதைப் புசித்துவந்தால் அவன் தேகம் நோய்க்கு இடமாகாதாம். அதுபோல அறிவினம் என்னும் பிணி நீங்கி அறிவு என்னும் சுகம் வர்த்திக்க* புஸ்தகம் தெரிந்து வாசிப்பது அத்தியந்த முக்கியம். உலகத்தில் புஸ்தகங்கள் காணவும் கிடையாமல் அருமையாயிருந்த காலங்கள் உண்டு. பூர்வீகத்தில் எழுத்துக் கருவிகள் சொற்பம். எழுத அறிந்தவர்கள் அதிலும் சொற்பமாயிருந்தார்கள். ஆகையால் சில புஸ்தகங்களின் பிரதி, நகரத்துக்கொன்றும், நாட்டுக்கொன்றும், ராச்சியத்துக்கொன்றுமாய் மாத்திரம் இருந்தது. சிலவேளைகளில் ஒருபுஸ்தகம் ஒரு ராச்சியமெங்கும் தேடியும் கிடையாமல், அயல் ராச்சியங்களில் விசாரித்தடையும்படியாக அரசர்கள் ஒருவருக்கொருவர் கோலாகலமாய் ஸ்தானாபதிகளை அனுப்புவார்கள். அங்கிலேய தேசத்தில் அக்காலத்தில் ஒரு பட்டணத்தார் யாவரும் சேர்ந்து ஒரு புஸ்தகம்வாங்கி, அதை குறிக்கப்பட்ட ஸ்தலத்தில் சங்கிலியால் மேசையில் மாட்டி வைத்திருப்பார்கள். அதை இஷ்டமுள்ளவர்கள் போய் வாசிப்பார்கள். இப்போது கால்ரூபாய்க்குக்கிடைக்கும் ஒருபுஸ்தகம் அப்போது ஆயிரத்துச்சில்வானம்† ரூபாய் கொடுத்தாலும் கிடையாது. அறநூறு வருஷத்துக்குமுன் பேர்பெற்ற அங்கிலேய சமஸ்த வித்யாசாலையாகிய ஆக்ஸ்போட் (*Oxford*) கல்லூரியின் புஸ்தகசாலையில் ஐந்தாறு சிறு நூல்களை மாத்திரம் ஒரு சின்ன பெட்டிக்குள் வைத்துப் பூட்டிப் பெட்டிக்குச் சங்கிலிமாட்டி யிருந்தது. அஞ்ஞூற்றறுபது ஆண்டுகளுக்குமுன் பிரான்ஸ் தேசத்து அரசனின் வசம் நான்கு இலக்கிய சுவடிகளும் சில செப புஸ்தகங்களும் மாத்திரம் காணப்பட்டன. தேவர்களின் சொரூபங்களை கையில் புஸ்தகம் ஏந்தின பாவனையாய்ச் சித்திரிப்பது அவர்கள் ஐசுவரிய சம்பன்னர் என்பதற்குக் குறிப்பாயிருந்தது. செய்யுட்களின் பிரதிகள் கடனாக விலைபெற்ற நடுகள்பேரிலும், விலையாக முக்கியவான்கள் முன்னிலையில் எழுதப்பட்ட உறுதியான தஸ்தாவேஜுகளின் பேரிலும் கொடுக்கப்பட்டன. கல்வி வாஞ்சையுற்றவர்கள் கடல் மலை என்று பாராமல் அநேகவருஷமாய், தேசாந்திரம்போய் வருந்தி அறிவைச் சம்பாதித்தார்கள். இந்து தேசத்தில் உண்டாயிருந்த புஸ்தக வறுமைக்கும் மதிப்புக்கும் அநேக திர்ஷ்டாந்தங்கள் சொல்லலாம். சுவடிகளைக்குவித்துச் சரஸ்வதி பூஜைசெய்வது நாளதுவரை சகஜமே. ஒரு சுவடி எழுதி முடிந்தவுடன் அதைப் பல்லக்கில் ஏற்றிக் கீத வாத்திய முழக்கத்துடன் வெகு ஆடம்பரமாய்ப் பட்டணப்பிரவேசம் செய்விப்பார்கள்.

சுவடிகளின் முதல் ஏட்டில் "இந்தச் சுவடியை ஒருவரும் திருடக்கூடாது. திருடினால் கங்காதீரத்தில் காராம்பசுவைக் கழுத்தறுத்த தோஷத்தில் போவாராகவும்" என்ற அல்லது அதற்குச் சமனான வாக்கியம் வரைந்திருக்கும். இந்துக்களுக்குள் முந்தியகாலங்களில் நூல்களை இரவல் கொடுக்கிறதேயில்லை. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு முதலாய் மரணப்படுகையில் அந்நியருக்குக் காட்டுவதில்லை என்ற ஆணையின்பேரில் அவைகளை ஒப்புவிப்பார்கள்.

அச்சடித் தொழிலாகிய அதிசய வித்தை வெகுகாலத்துக்குமுன் சீனதேசத்தில் ஒருவாறு அறியப்பட்டிருந்தாலும், ஜர்மானிய

* வர்த்தித்தல் = வளர்தல்.

† 'ஆயிரத்துச் சில்லரை' என்றும்வழங்குவார்கள்.

தேசத்தில் கிறிஸ்தாப்தம் 1444-ம் வருஷத்தில் அபிவிர்த்தி செய்யப்பட்டது. அதுமுதல் உலகம் புஸ்தகப்பிரளயமாயிற்று. அங்கிலேய, பிரான்ஸிய, ஜர்மானிய பாஷைகளில் பிரசித்தமாயிருக்கும் நூல்களுக்குக் கணக்கில்லை. சில வருஷங்களுக்குமுன் இயற்றிய ஓர் கணக்கின்படி தமிழ்ப்பாஷையில் சுமார் நாலாயிரம் புஸ்தகங்கள் அச்சிட்டு தற்காலம்வரை பிரசுரமாயிருக்கின்றன. அவைகள் எல்லாம் வாசிப்புக்கு அனுகூலப்பட்டவை என்று சொல்ல ஏதுவில்லை.

"கல்வி கரையில், கற்பவர் நாள்சில ;
மெல்ல நினைக்கிற் பிணிபல; தெள்ளிதின்
ஆராய்ந்தமைவுடைய கற்பவே, நீர் ஒழியப்
பால் உண் குருகிற்றெரிந்து"

என்ற மூதுரைப்படி, கல்வி வரையறைப்படாததினாலும், அதனை முற்றக் கற்பதற்கு ஆயுள் நீடித்திராமையாலும், கற்பவர் சரீரமோ பிணிக்கெல்லாம் பிறப்பிடம் ஆகையாலும், "கண்டது கற்க பண்டிதன் ஆவான்" என்ற சாமானிய வாசகத்தை நம்பி, கடைமாணுக்கருக்கு உபமானமாகிய ஆடானது கண்ணுக்குத் தென்பட்டதையெல்லாம் ஓர் வாய் கடித்தாற்போல், கண்டதெல்லாமாகிய வாசிப்புக்கு உதவாத தந்தனப்பாட்டும், ரஞ்சனக் கூத்தும், காமத்தை, கர்வத்தை, கபடத்தை, குரோதத்தை ஜெனிப்பிக்கத்தக்கவின்கதை காவியங்களும் அடங்கிய அற்பநூல்களை வாசித்துப் பொழுதுபோக்காமல், தலைமாணுக்கருக்கு இணையாகி நீரைப் பிரித்து பாலைப் பருகும் அன்னப்பட்சியைப் போலச் சாஸ்திரங்களினது விசேஷ சாமானிய நியாயமே அமைந்த நல்லபுஸ்தகங்களைத் தெரிந்தடைந்து வாசிக்கவேண்டும்.

வாசிப்புக்கு உபயோகமான புஸ்தககங்கள் யாவருக்கும் ஒரேவகையாய் இருக்கக்கூடியதல்ல. ஒருவியாபாரிக்கு வேண்டிய புஸ்தகங்கள் யாவும் ஒரு வைத்தியனுக்கு உதவா. ஒரு வைத்தியனுக்கு அகத்தியமான யாவும் ஒரு வைதிகனுக்கு வேண்டியிரா. ஆகையால் யாவருக்குப்பொதுவில் அவசியமான நூல்களோடு, அவரவர் தொழில் துறைக்கு ஏற்ற நூல்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது. இவ்விஷயத்தில் ஸர்ஜான் லூபக்கு (*Sir Jhon Lubbock*) என்பவர் செய்ததை நாம் பின்பற்றத்தக்கது. அவர் தமக்கு அவசியமான கல்வித்துறைகளில் சிரேஷ்டமான நூறுபுஸ்தகங்களை மாத்திரம் தெரிந்து சேர்த்துவைத்தும் அவைகளை வாசித்தும் வந்தார். கார்லைல் (*Carlyle*) என்னும் வித்வான்சொல்லுகிறார்:— "நமது காலத்திலுள்ள யதார்த்தமான சர்வகலாசாலை யாதெனில், புஸ்தகங்களின் ஓர் கூட்டமே. இந்த புஸ்தக சேர்மானம் எச்சரிக்கையுடன் செய்யப்படவேண்டியது. மேலும் வேளைக்குவேளை அதில் களைபிடுங்கவேண்டும்: அதாவது பிரயோசனம் குறைந்த நூல்களை நீக்கிவிடவேண்டும்" என்பதே.

எத்தேசத்திலும் வழங்கிவரும் புஸ்தகங்களின் குணதோஷங்களைப் பொதுப்படக் கவனிக்குமிடத்து, இக்கன்ம பூமியில் நல்லோர் குறைவும் தீயோர் மிகுதியுமாய் இருக்கிறது போல், நல்ல புஸ்தகங்கள் சிலவும் பொல்லாத புஸ்தகங்களே பலவுமாய்க்காணப்படுகின்றன.

புஸ்தகங்களை உத்தமம், மத்திமம், அதமம் என்று மூன்று வகையாய் வகுக்கலாம். அவற்றில் சுத்த அப்பிரயோசனமும், அருவருப்பும், தொட்டோர் கேட்டோர் பார்த்தோர் மனங்களில் நித்திய கெடுதியை பிறப்பிக்கத்தக்கதுமான அதம நூல்கள் உலகத்துக்குக் கேடாய் உற்பத்தியாயிருக்கின்றன என்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு பெரியவர் குறித்தபடி, [illegible]வுலகத்தில் தீமைக்கிடமாகிய விஷ சர்ப்ப[illegible]ளும் காய்கனிகளும், பொதுமாதரும் கண்[illegible]க்கு அதிக பகட்டாய்த் தோன்றுவதுபோல், அதமபுஸ்தகங்களும் உத்தம நூல்களைப் பார்க்கிலும் சாதாரணமாய் அதிக சொற்சிறப்புற்றவைகளாய், நாவுக்கு நயத்தையும்செவிக்கு இன்பத்தையும் கொடுக்கிறவைகளாயிருக்கின்றன.

அவைகளில் அமைந்திருக்கும் பொருட்களோ ஆத்துமாக்களை சிற்றின்பம் அவபக்தி என்னும் மீளாக்கயத்தில் ஆழ்த்தி நித்தியநாசத்தை வருவிக்கத்தக்கவைகள். எத்தனையோ மனுக்கள் இவற்றால் நரகத்துக்கு இரையாய்ப் போனார்கள்! இவைகளை இயற்ற தங்கள் ஜீவநாள் முழுவதையும் போக்கின வித்துவான்களும், இவற்றை அச்சடித்து கடைகளில்வைத்தும், ஊர்தோறும் திரிந்தும் விற்பனை செய்கிறவர்களும் உலகத்துக்கு உபகாரிகளாவார்களா? அவர்கள் கள், கஞ்சா, அபின் என்பவற்றின் வியாபாரிகளுக்கு ஒப்பானவர்கள் என்கலாமே. அப்படியிருக்க இளைஞர் இவைகளின் பேரில் ஆசை கொள்ளத்தக்கதாக இவைகளைப் பாடிப் புகழ்ந்து காண்பிக்கும் பெற்றோரும் மற்றோருமோ எத்தன்மையானவர்கள் என்று சொல்லலாம்? இத்தேசத்தவருக்குள் நடமாடி வரும் இவ்வகை தீய நூல்கள் அநேகத்தின் பேர் விவரங்களை விளம்பக்கூடும். ஆகிலும் "தீயார் குணங்கள் உரைப்பதுவும் தீதே" என்றபடி அவற்றின் நாமங்களை இச்சந்தர்ப்பத்தில் கூறுவதும் கேட்பதும் முதலாய் ஒருவேளை பெரும் கேட்டுக்கு ஏதுவாகும் என்ற பயத்தால் அவைகளைப்பற்றி அதிகம் விவகரிக்காமல் இம்மட்டில் நிறுத்த வேண்டியதாயிருக்கிறது.

மத்திம புஸ்தகங்கள் விஷத்துளிகள் கலந்த நிறை பாற்குடம்போலும், மணலோடு விரவின அரிசிபோலும், நல்விஷயங்களும் தீயவிஷயங்களும் அமைந்தவைகளாயிருக்கின்றன. இவற்றால் என்னபயன்? பத்து சகதேகிகளிடையில் ஒரு சகவீனன் சேர்ந்திருந்தால் அவர்கள் சுகம் இவனுக்கு கிடைக்காது: இவன் தொத்துநோயோ அப்பத்துப்பேரையும் தாவி வாதிக்கும். அதுபோல இவ்வகை புஸ்தகங்களாலும் கொடியமோசம் விளையத்தக்கதால் அவற்றை முற்றும் விலக்கிவைப்பது அவசியம். ஒருவர் சொல்லுகிறபடி "இவ்வகையான நூல்களிலுள்ள நன்மை அதி வேகமும் மிக ஆழமுமான ஒரு ஆற்றின் அடியில் அமைந்திருக்கும் சில முத்துகள்போல் இருக்கிறது. இந்த முத்துக்களுக்காக முக்குளிப்பதில் உயிர்போவது நிச்சயம்."

மூன்றும் வகையனவாகிய உத்தம புஸ்தகங்கள் தொகையில் குறைவாயிருப்பினும், அவற்றில் நமது ஜீவகாலம் முழுவதும் கற்றுணரத்தக்க போதனைகள் உண்டு. விலங்குகளில் சிம்ஹமும், பட்சிகளில் ஆளியும், தருக்களில் சந்தனமும் ராஜத்துவம் உடைத்தாயிருப்பது போல, புஸ்தகங்களிலும் அந்தந்த சாஸ்திரத்துறைகளில் பொருள் நயம், சொல் நயம் முதலிய காரணமாய் அரசாயிருக்கப்பட்ட உத்தம நூல்களுண்டு. அவ்வகைப் புஸ்தகங்களைத் தெரிந்து வாசிக்கவேண்டும். மனிதர் வாசித்தறிய வேண்டிய சகல விஷயங்களிலும் ஆத்ம விஷயமே அத்தியந்த முக்கியமானது. அப்படிப்பட்ட உத்தம புஸ்தகங்களைத் தெரிந்தெடுத்து வாசிக்கவேண்டியது. தற்காலம் பாலர் முதல் விருத்தர் ஈறாக எல்லாரும் வாசிக்கத்தக்கதாய் பள்ளியிலுமுபயோகிக்கத் தக்கதாம் உள்ள புஸ்தகங்களில் விவேகசிந்தாமணிப் பிரசுரங்கள் சிறந்து விளங்குகின்றன. அவற்றிலும் கமலாம்பாள் சரித்திரம் மிக சிலாக்கியமானது. அதையெல்லாரும்வாங்கி வாசித்தல் உத்தமம்.

புஸ்தகங்கள் இவ்வளவு திரளாயிருக்க, அவைகளில்நல்லதின்னது தீயதின்னது என்று பகுத்தறிவதெப்படி என்று சிலர் கேட்கலாம். அறிவது அதிக பிரயாசமல்ல. எப்படியென்றால், ஒரு புஸ்தகத்தின் லட்சணத்தை, அதைச் செய்தவருடைய தன்மை, நோக்கம் முதலியவைகளை கவனிப்பதினாலும், அவர் செய்திருக்கும் மற்ற நூல்களின் பொது லட்சணத்தைக் கொண்டும், அப்புஸ்தகத்தின் பிரிவுகள் பொருள் அட்டவணைகளை நோக்குவதினாலும், இவைகளினால் விளங்காவிடில் அப்புஸ்தகங்களில் ஒரு பாகத்தை திட்பநுட்பமாய்த் வாசிப்பதினாலும் அறியலாம். ஒரு சுருக்கவழி என்னவென்றால் அப்புஸ்தகங்களைப் பற்றி, நம்மை

விட அறிவாளிகளும் யோக்கியருமானவர்களுடைய அபிப்பிராயத்தை அறிவதே. நல்ல மரங்களும் நச்சுமரங்களும் மிக்கவாயினும், உலகத்தில் பிரத்தியட்சமாய்த் தெரிந்திருக்கிறது போல, சற்குணரான வித்வான்களுக்கு நூல்களுடைய குணதோஷங்கள் களங்கமறத் தெரியுமாதலால் அவர்களைக் கேட்டு உலகப்பிரசித்தமான நல்ல புஸ்தகங்களைக் ஐயமின்றி வாசிக்கலாம். நமது தேசத்தில் வழங்கும் பல நூல்கள், ஒரு வித்வான் கூறினபடி, இரண்டும் இரண்டும் ஐந்து என்று பல தாஷ்டாந்த திர்ஷ்டாந்த பூர்வமாய் ரூபித்தாற்போல நியாய விரோதமான பொருள் அடங்கிய அகட விகட கற்பனைக் கவிகளாயிருக்கின்றன. அநேகம் சித்திரக் கவிகளும், வீண்பொழுது போக்குக்கேற்ற விரோதமான கதாப்பிரசங்கங்களும், நாமதேய வர்ணங்களும் அந்தாதிகளுமாய் சொல் விரிந்து பொருளை மிகவும் சுருங்கியிருக்கிறது. இப்பேர்ப்பட்டவைகளை வாசிப்பதினால் மனசு சாத்விக சற்குணம் அடையும் என்று கனவிலும் எண்ண ஏதுவில்லை. மேலும் வாசிப்புக்கு உபயோகமான புஸ்தகங்களை தெரிந்து சேர்ப்பதில் மேற்சொல்லியபடி ஸர் ஜான் லூபக்கு என்னும் வித்வான் அனுசரித்தமுறைமை நாம் உபயோகிக்கத் தக்கது. அவர் தமக்கு அவசியமான கல்வித் துறைகளில் பிரசித்தமாயருந்த சிரேஷ்டமான நூறு நூல்களை ஆராய்ந்து தெரிந்தடைந்து அவைகளை வாசித்து வந்தார். அவர் செய்தது நல்ல யுக்தி.

புஸ்தகங்களை இத்தனை திட்பநுட்பமாய்த் தெரிந்து வாசிக்கத் தேவையென்ன? என்று விசாரிக்க ஏதுவுண்டு. அது மிகவும் அவசியந்தான். எப்படியென்றால் நாம் வாசிக்கும் புஸ்தகங்களின் தன்மைக்குத் தக்கதாகவே நாம் அடையும் அறிவும் நமது சம்பாஷணைப்போக்கும், எழுத்துப் போக்கும், நமது மனோமுயற்சியும், நமது குணங்குறிகளும் நடபடிகளும், அவற்றால் லபிக்கும் இம்மை மறுமை அனுபவங்களும் ஒருவாறு இருக்கும். மனிதர் பிறக்கும்போது அவர்கள் மனம் அக்ஷரம் தீட்டாத வெற்றுக் கடுதாசிபோல அறிவின்மை பொருந்தியதாயிருக்கிறது. ஒரு கடுதாசியில் வரையப்படும் எழுத்துக்குத் தக்கதாக அது ஒரு காசு பெறுகதாயும் போகலாம், ஒரு கோடி ரூபாய் பிடிக்கிறதாயுமிருக்கலாம். அதுபோல, நாம் வாசித்துப் பழகும் புஸ்தகங்களின் தன்மைக்குத் தக்கதாக நமது மனதின் பெறுமதியும் இருக்கும். ஆகையால் மனம் என்னும் நமது கடுதாசியில் நல்ல நூல்களைத் தெரிந்து அவைகளிலுள்ள நல்ல விஷயங்களைப் பதிக்கவேண்டும். விசேஷமாய் பாலியத்தில் வாசிக்கும் புஸ்தகங்களைக் குறித்து கவனமாயிருப்பது அவசியம். ஏனென்றால், அவைகளால் உண்டாகும் அபிப்பிராயங்கள் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றபடி மனதில்பலமாய்ப்பதிந்து ஜீவகால முழுவதும் மனதோடுகூட வளர்ந்து ஸ்திரப்படும். மரப்பட்டைகளிலும் இலைகளிலும் வசிக்கும் அநேக பூச்சிகளின் நிறம் அப்பட்டைகள் இலைகளின் நிறமாகவே யிருக்கும். சுகந்த வாசனை கமழும் பூங்காவனத்தில் உலாவுகிறவர்களுடைய வஸ்திரமும் சுகந்தம்வீசும். பற்பல வியாபார ஸ்தலங்களிலும், 'கோர்ட்டு' கச்சேரிகளிலும், ராஜ சமுகத்திலும் சஞ்சரிக்கிறவர்களுடைய பேச்சு எழுத்துப் போக்குகளில் காணப்படும் பேதங்களுக்கு காரணம் அவரவர் செய்யும் சம்சர்க்க விகற்பமல்லவா? ஆகையால்,

"கல்லாரே ஆயினும், கற்றோரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர்,—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிபூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான் பயந்தாங்கு."

என்றதுபோல நாம் வாசிக்கும் புஸ்தகங்களின் சொல்லே நமது சொல்லாகும். அவற்றின் வாசக நடையே நாம் எழுதும் பேசும் வாசக நடையாகும். தகாத தன்மையுடைய ஒரே புஸ்தக வாசிப்பால் நமது குணங்குறிகள் இம்மையிலும் நித்திய கெடுதியடையக்கூடும். ஆகையால் சொல்லில் பொருளில் சிறந்த புஸ்தகங்களையே தெரிந்து வாசித்தல் எவ்வளவோ அவசியம்!

ON WAGES.

வேதனம் அல்லது கூலி.

ஒரு வேலைக்காரன் தனது வேலைக்காகப் பெறும் பாகத்திற்கு வேதனம் அல்லது கூலியென்று பெயர். இத்தகைமையான வேதனமென்பது சில ஸமயங்களில் தினந்தோறும் பட்வாடா செய்யப்படுகிறது. வெகுவாய் ஐரோப்பிய கைத்தொழிற்சாலைகளில் வாரத்திற் கொருதடவையாகக் கொடுக்கப்படுகிறது. உயர்ந்த தொகையுள்ள வேதனம் மாதாந்திரமாகக் கொடுக்கப்படுகிறது. சிறுபான்மை வருஷாந்திரமாகவீந்து கொடுக்கப்படுவதும் உண்டு. இப்படியாக எத்தன்மைத்தாயினும் முற்செய்த வேலையின் கூலியாகக் கொடுக்கப்படுவதற்கெல்லாம் பொதுவாக வேதனம் என்னும் பெயரைத் தருவோம்.

உலகத்தின்கண் உத்பத்தியாகும் ஸமஸ்த விதமான தனமும் முதல் முதல் நாணயரூபமாக வில்லையாதலாலும் மற்றும் வேலையாட்களுக்குக் கொடுப்பதோ நாணயரூபமாகற்றனிருப்பதாலும் வேதனவிஷயமான தத்துவமானது பதார்த்தங்களின் அகவிலை, புறவிலை முதலிய விலை மயக்கங்களாலும், நாணயங்களின் ஏற்ற வித்தியாசங்களாலும் பலவிதமாக பாதிக்கப்பட்டுச் செல்வநூலில் தேர்ந்த மகா பண்டிதர்களையும் மயக்கத்திற்கு உள்ளாக்கி வைத்திருக்கிறது. இவ்விதமயக்கம் நமக்கு நேராமலிருக்கவேண்டுமாயின் நாம் நாணய ரூபமான வேதனத்திற்கும், ஸாக்ஷாத் வேதனத்திற்கும் உள்ள வித்தியாஸத்தை முதலில் அறியவேண்டியது. ஒரு வேலைக்காரன் வேலை செய்வதென்னத்திற்கெனில் தனக்கு உண்டு உடுத்தனுபவிக்கவேண்டிய பதார்த்தங்கள் கிடைப்பதற்குத்தான். ஆகவே அவனுடைய உண்மையான வேதனம் இவைகளே. இவைகள் அவனுக்குப் போதுமானமட்டும் கிடைத்தாற்போதும். அவன் வேலைசெய்ய இணங்குவான். பணரூபமாக அவனுக்குக் கிடைப்பது குறைந்தாலும் சரி, அதிகரித்தாலும் சரி, இவ்வித்தியாசம் அவனுக்குத் தோன்றாது. ஆனால் பணரூபமான வேதனம் அதிகமாயினும், அவனுக்கு வேண்டிய ஸாமக்கிரியைகள் விலைகுறைந்து, போதுமானமட்டும் அவ்வுயர்ந்த வேதனத்திற்கும் கிட்டாவிடில் தன் சம்பளத்தைக் குறைச்சலாகவே அவன் பாவிப்பான். செலவுபோக மீதிநிற்பது எதுவோ அதுதான் ஒரு மனிதன் செல்வத்தைக் குறிக்கப் போதுமான நிலையறிகருவி (Plutometer). ஆகவே ஸாமான்யமாய்க் கூலியாட்கள் சுகமடையவேண்டுமாயின், ஒவ்வொருவனும் பெறும் நாணயரூபமான வேதனம் அதிகரிப்பதுடன், பதார்த்தங்களின்விலை ஸஹாயமாக வேண்டும். பதார்த்தங்களின் விலைகளில் அவைகளைச்செய்வித்த வேலைக்காரர் பெறும் கூலிகள் அடங்கியிருப்பதால் இப்படிப்பட்ட உயர்ந்த வேதனத்துடன் மலிவானவிலை யேற்படவேண்டுமானால் மூலதனத்தானும், எஜமானனும் பெறும் பாகங்கள் தக்கபடி குறைவடையவேண்டியது. ஆகையால் ஒரு ஜனஸங்கத்தில் உள்ள எல்லோருக்கும் பொதுவாக அதிக வேதனம் கிடைக்கவேண்டுமானால் வியாபாரஸ்தலத்திற்குக் கொண்டு வரப்படும் ஸௌக்கியத்திற்கு இன்றியமையாத ஒவ்வொரு பதார்த்தமும் சுலபமான விலைக்கு அகப்படவேண்டும். இதுவே இராச்சியம் முழுமையும் ஸுகமாயிருக்கப் பேணும்வழி. அப்படியன்றி பிரத்தியேகமான வியாபார விஷயத்திலும் தனைத்பத்திவிஷயத்திலும் வியாகிருதர்களான வேலைக்காரர்கள் பலவிதக்கட்டுப்பாடுகளால் தங்கள் வேதனத்தையுயர்த்தி அதனால் பதார்த்தங்களின் விலையை அதிகரிப்பித்தால் எல்லா ஜனங்களுடைய கைப்பணத்தினின்றும் அதிகமாக நாணயரூபமான வேதனத்தைக் கவர்ந்து, வேதனத்தைக் குறைப்பிக்க இடமாகும். இப்படியாக உண்மையான வேதனம் மனிதனுக்கு இன்றியமையாத ஆகாரத்திற்குறிபவை யாயி

னும், நாகரிகம் மிகுந்த நாடுகளில் மனிதனுக்கு வேண்டியவை பலவாகையாலும் அவை வெவ்வேறு தேசங்களினின்றும் வேவ்வேறு கைகள் மாறியும் வரவேண்டுமாகையாலும் ஜனங்களுக்குள் ஸுலபமாக கைமாறல் நடக்க ஸ்வபாவமாக உத்பத்தியாகபபட்ட உயர்ந்த லோகங்களாலாகிய நாணயமென்னும் ஸாதனக்கருவி வழங்கிவருகிறது. எல்லாவிதமான பதார்த்தவிலை மயக்கங்கட்கு உட்படுத்தி இவ்வித நாணயரூபமான வேதனத்தையே நாம் வேதனமாக பாவிக்கவேண்டியது.

இவ்வாறு மேலே விரித்துக்காட்டிய வேதனவிஷயத்தில் ஒரு வேலைக்காரனுக்கும் மற்றொரு வேலைக்காரனுக்கும் ஏன் வித்தியாசம் நேரிடுகிறது என்று நாமறிய முயலவேண்டியது. இப்படியாக வுண்டாகும் வித்தியாஸத்திற்கு வெகுவாய் அவரவர் ஸாமர்த்தியம் முதலியவைகளே காரணம். பலமுறை வேலையாட்களின் சரீரத்தினுடையவும் மனத்தினுடையவும் வலியே போதுமான காரணமாயிருக்கிறது. மற்றும் சில விடங்களில் இயற்கையான வித்தியாசம் இல்லாமலிருக்கினும் சிலர் உயர்ந்த இடங்களில் பிறந்து விசேஷமான கல்விகளைக்கற்று மற்றவர்களினும் அதிகம் வேதனம் பெறக்கூடியவராகிறார்கள். நாம் எல்லாமனிதர்களும் பொதுவாக ஸமானமானவர்களென்று சொல்வது தகாதது: ஏனெனில் பிறப்பிலேயே ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் உள்ள உயர்விழிவு நமக்கு நன்றாக அனுபவத்தில் பட்டிருக்கிறதும் தவிர மேற்கூறியபடி ஜன்மவசத்தால் நேரிடும் அப்பியாஸ அனப்பியாஸத்தாலும் வெகுவிதமாக வித்தியாஸம் ஏற்படுகிறது. ஆகையால் மனிதவாழ்க்கையுள்ள வரையில் இவ்வித்தியாஸத்தாலாகிய வேதன வேற்றுமை யிருந்தே தீரும்.

மேற்கூறிய வேதனவித்தியாஸம் எப்படி உலகில் ஸாதிக்கப்படுகிறது என்பதை செல்வநூலாசிரியரில் முதல்வரான ஆதாம் ஸ்மித் (Adam Smith) என்பவர் விகசிதமாக விளக்கிக்காட்டியிருக்கிறார். செல்வநூலில் மிக்கபடி வழங்கும் விதி: அவாவும் துகையும் எப்போதும் சரிஸமனான நிலையையே பேணி நிற்கும்—என்பதுதான். ஒரு வஸ்து போதாமல் இருந்தால் அதற்கு அவா (Demand) அதிகரித்து அதின் துகை (Supply) சரியாகும் வரையில் அதிகமாக அப்பதார்த்தத்தை வியாபாரஸ்தலத்திற்குக் கொண்டுவரச்செய்யும். இப்படியேதான் வேதனவிஷயத்திலும். ஆயினும் மனிதன் சிற்சில காரியங்களில் கௌரதையும் சிலவற்றில் அகௌரதையும் இருப்பதாக எண்ணி முற்கூறியவற்றில் பிரவேசித்தும் பிற்கூறியவற்றை வெறுத்தும் வருவதால் மேற்கூறிய அவாவையும் துகையையும் பற்றிய நியமும் நடவடிக்கையில் அதிக மாறுபாடடைகிறது. இப்படி மாறுபாடடையும் வழிகள்:

1. உத்யோகத்தின் மாதிரியை ஒத்து இருக்கக் கூடும். எப்படி எனில் ஒருவேலையானது ஸுகரமாயும், கண்ணியத்துடன் பார்க்கப்பட்டதாயும் இருப்பின் அதில் தாழ்ந்த வேதனம் கிடைத்தபோதிலும் பலபெயர்கள் நுழைவார்கள். உதாரணமாக நம்தேசத்தில் பி. எ. முதலிய பரீக்ஷைகளில் தேறிவிட்டு வாலிபர்கள் பலர் உத்தியோகத்திற்குப்போய் ஸ்வல்ப சம்பளம் பெறுவது அவர்கள் மேற்படி உத்தியோகத்தில் காணும் அந்தஸ்தும் கௌரதையுமே. கள், மாமிசம் முதலியவைகளை விற்பதில் பலர்கள் வெகு சீக்கிரம் விரம்ப திரவியத்தைச் சம்பாதித்துக்கொள்கிறாராயினும் அவர்களது கிருத்யம ஜுகுப்ஸையை உண்டாக்கக் கூடியதாகையால் துகை யவா நியமம் [illegible]தைபாராட்டுபவரை இவ்வியாபா ர[illegible] போகவிடவில்லை.

2. தொழிலைக் கற்பதில் உள்ள கடுமை முதலியன.

ஜனங்கள் வெகுவாய் எளியவராயிருத்தலினும், பல தொழில்கள் கற்பதற்கு வெகுகாலத்தையும் பொருளுதவியையும் வேண்டுகின்றனவாகையாலும், அநேகர் சிறுவயப்பருவம் முதலாமுன்னமே தங்கள் வயிற்றை வளர்க்க ஏதாவது ஒரு வழியைத்தேடிக்கொள்ள நேரிடுகிறது. ஆகையால் தங்கள் புத்தியுக்திக்குத் தக்க தொழிலைச்சேருவதற்கு அவகாசமில்லாதவர்களாக ஆயுள்நாள் வரையில் அற்பக்கூலிக்கு உழைத்து மரிக்கிறார்கள்.

3. தொழில் நீடித்திருத்தல், ஒருவாறு அற்ப வேதனத்திற்கு ஒரு சாக்காயிருக்கிறது. சில வேலைகள் சில மாதங்கள் மாத்திரம் நடந்தேறிவரலாம். பிறகு பல காரணங்களால் வேலை நின்றுபோய் அதில் உழைத்துவந்தவர்களுக்கு ஒரு போக்குமில்லாமல் விட்டுவிடலாய். இவ்விதவேலையில் பிரவேசிப்போர் அதிகமாக வருமானம்வந்தால் ஒழியபாந்தரமான வேலையில் குறைந்த சம்பளம் கிடைத்தபோதிலும் விட்டுவிடமாட்டார்கள்.

4. மேலும் பலதுறைகளில் வேலைகளில் நியமிக்கப்பட்டவர் வெகு நம்பிக்கைஸ்தராகவிருக்கவேண்டியிருப்பதால் அநேகர் தகுந்த ஸாமர்த்தியம் முதலியனவுடையாரேனும் நற்குணக்குறைவால் உயர்ந்த வேதனம் கொடுக்கக்கூடிய வேலையைப் பெறுகிறதில்லை.

5. கடைசியாக, வேலையில் பிரவேசித்த ஒவ்வொருவனும் பிரபலனாவது முடியாதகாரியம். பிராபல்யம் ஸர்வஜனஸாமானியமல்ல. பத்துப்பெயர் சேர்குலைந்தால் ஒருவன் தான் சிர் பெறுகிறான். ஆகவே எத்தொழில்களில் இவ்விதமாகப் பெறும் தகைமை ஸாமானியமன்றோ அவைகளில் சிலர் மிகவும் உயர்ந்த சம்பளத்தையும் பலர் அற்பவேதனத்தையும் பெறுவார்கள். இதற்குதாரணமாக வக்கீல்கள், வயித்தியர்கள், அதிகாரிகள் இவர்களைக்கொள்ளலாம். ஆனால் எத்தொழிலில் இவ்வித வித்தியாஸத்திற்கு இடமில்லையோ அங்கே எல்லாருக்கும் ஏறக்குறைய ஒரே வேதனப்பாடுதான். இக்காரணம்பற்றித்தான் போரில் தன்னுயிரை கொடுக்கவந்து முன்னிற்கும் வீரர்க்கு அவ்வளவு அற்பமான சம்பளம் கிடைப்பது.

THE OLD MAN'S COMFORTS AND HOW HE GAINED THEM.

ஓர் கிழவனுற்ற சௌக்கியங்களும் அவன் அவற்றை எவ்வாறுற்றானென்பதும்.

[ஒருவர் முதுமையும் தளர்ச்சியும் வந்த காலத்தில் தளர்வடையாமல் திடகாத்திரராய் மனமகிழ்ச்சியுற்றிருப்பதற்கும் தளர்ச்சியடைந்து நோயாலுழன்று வருந்தியிருப்பதற்கும் அவரவர் பாலியத்தில் நடந்து கொள்ளும் நடத்தையும் செய்யும் காரியங்களுமே காரணம் என்னும் இவ்வுண்மையை எடுத்துவிளக்கி, முதுமைப்பருவத்தில் நோய் நொடியில்லாமல் சுகமாகக் களித்துவாழவிரும்பும் இளைஞர்களுக்கு அதன் உபாயத்தையும் இது போதிக்கின்றது. இதனை எல்லாரும் விரும்பிப்படிப்பார்களென்று இங்கு தமிழ்ப்பாவால் எடுத்துக் கூறலாயினோம்.

இது ஒரு கிழவனுக்கும் இளைஞனுக்கும் நடந்த சம்பாஷணையாகக் கூறப்பட்டது. இளைஞன் கேட்கக் கிழவன் விடை பகர்கின்றான்:]

1. ஐயநீ நோக்குமின் முதுமை யார்ந்தனை,
கையனில் முடிமயிர் நரைத்த தாயினும்,
மெய்யுறு வலியொடு மேனி தேய்ந்திலாய்;
செய்யவில் விசித்திரம் செப்பு வாய்கொலோ?

(நீ முதுமையடைந்து முடிமயிர் நரைத்தாயாயினும் தேகவலியும் திடகாத்திரமும் இழந்தாயில்லை; இதற்குக் காரணம் யாது?)

2. செப்புவன் ; இளமையாற் சிறந்த நாட்களில்,
ஒப்பறும் அவைவிரைந் தொழிந்த லோர்தலால்,
கைப்படு வலியுநற் சுகமும் கண்டவா,
பிற்பொழு தயர்ந்திடப் பிதிர்த்தி லேனரோ.

(இளமைப்பருவத்தில் இளமையானது நிலையற்றதென்றறிதலினாலே என் பலத்தையும் சுகத்தையும் துர்வினியோகத்தில் போக்கிக்கொள்ளவில்லை, அதுதான் காரணம்.)

3. அத்தநீ ஆய்ந்திடின் முதியை ஆயினாய்,
பொத்திய மகிழ்வெலாம் இளமை யோடுபோம்,
சத்திய மாயினும், தணந்த நாட்களுக்
கெத்தனை யேனுமென் னிரங்கி லாயரோ ?

(நீயோ கிழத்தன்மையை அடைந்தாய்: மகிழ்ச்சியோ இளமையோடுப்போம். ஆயினும் நீ சென்ற நாள்களை நினைத்து ஏன் வருந்தவில்லை?)

4. சாற்றுவன் இளமையைச் சார்ந்த நாள்சில,
ஏற்றவை கழிந்திடும், என்ன ஓர்கலால்,
தோற்றிடும் நாட்களிற் றுயரு றுவகை,
ஆற்றுநற் செயல்களை அறிவின் ஆற்றினேன்.

(இளமையானது நிலை நில்லாததென்றறிதலினாலே பின் அதை நினைந்து வருந்தாதபடி செய்யும் காரியங்களைச் செவ்வையாகச் செய்தேன்.)

5. தாதநீ முதுமையைச் சார்ந்தை ; சாய்ந்தினி
ஓதிய உயிர்விரைந் தோடு மாயினும்,
தீதறு கனுப்பொடும் சேரும் மாய்வினைப்
பேதுற வின்றியே பேச லென்னையே ?

(நீ முதுமையை அடைந்தாய் ; இனி நீ வெகு நாளிருக்கப்போகிறதில்லை ; ஆயினும் உற்சாகமாயிருக்கிறாய் ! மரணத்தைப்பற்றிச் சஞ்சலமின்றிப் பேசுகின்றாய். அதெப்படி ?)

6. அறைகுவன் அகங்களித் திருக்கும் காரணம்,
நிறைகுணத் தருளொடு நிரம்பு மீசனைப்
பெறவரும் இளமையிற் பேணல் தீர்ந்திலேன்,
இறைவனும் மறந்திலா னென்னை யின்றரோ.

(நான் அகமகிழ்ச்சியோடிருப்பதற்குக் காரணம் பால்யத்தில் தெய்வபக்தியும் ஈச்வரசிந்தனையும் கைவிடாமல் கடவுளை வழிபட்டுவந்ததனால் அக்கடவுள் என்னை முதுமையடைந்த இக்காலத்தில் கைவிடாமல் ஆதரித்து வருகின்றார்.)

THE GOLDEN NECKLACE.

தங்க அட்டிகை.

I

அவள் 14-வயதுள்ள ஓர் இளமடந்தை. அவள் உருவமும் அழகும், ஒயிலும் நடையும் அவளை அந்தஸ்துக்கொண்டாடப் பிறந்தவளெனக் காட்டின. ஆனால் அவள் பிறந்துவளர்ந்தது ஒரு ஏழைக் குடும்பத்தில். அவள் வாழ்க்கைப்பட்ட கணவன் சொற்ப சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்தவன். மாதச் சம்பளம் ரூ. 15 ஆனாலும் சர்க்கார் உத்தியோகமானதால் கௌரவமாகப்பாராட்டப்பட்டு வந்தது. அந்தமட்டில் அது அவளுக்குச் சந்தோஷமாகவிருந்தாலும், அவள் தனக்குரித்ததென்று கருதிய கண்ணியம் பெருமையைப்பாராட்ட அவன் சம்பளம் போதாமையாகவிருந்தது. அவளுக்கு மிகவருத்தமும் மனஸ்தாபமு முண்டுபண்ணிற்று. இருந்தாலும், அவள் அதைரியப்படவில்லை. குடித்தனம் செய்வதில் அவள் மிகச் சிக்கனமாகச்செலவுசெய்து சமாளிக்கத்தக்கவளாகப் பிறந்தகத்துப் பழக்கத்தால் தேர்ந்திருந்தாள். அதைக்கொண்டு அவள் தனக்குத் தெரிந்த செட்டுச்சிக்கனமெல்லாவற்றையும் உபயோகித்து அவள் அந்தஸ்துப் பாராட்டுவதற்கு வேண்டிய நகைநட்டுகளையெல்லாம் செய்துகொள்கிறதென்று தன் மனதுக்குள் தீர்மானித்தாள். அவனும் அவள் இஷ்டத்திற்கு இரண்டுசொல்லாமல் போட்டதைப் புசித்துத் தன் வேலையைக் குறைவறப் பார்த்துவந்தான்.

இப்படிச் செட்டும் மட்டுமாக ஆறு வருஷ[illegible]ம் புருஷனும் மனைவியுமாக மனம்பொருந்[illegible]த்தனம் செய்துவந்தார்கள். இந்த [illegible]காலத்தில் அவள் முகம் கோணினதில்லை; அவன்முகம் கடுத்ததில்லை. இருவரும் சந்தோஷமாகச் சுகித்து வாழ்ந்து வந்தார்கள்.

அவளுக்கு வயது 20-ஆக அலர்ந்தமலர்போல் அவளிடத்துள்ள அழகுகளெல்லாம் பக்குவப்பட்டுப் பெருகிச் சொலித்தன. கருத்து நீண்டு சுருண்ட மயிர்களும், வேலன்ன விழிகளும், மதிபோன்ற வதனமும், உருண்டு நீண்டு கடைந்து விட்டதையொத்த கைகளும், புலியின் இடையையொத்த மருங்கும் மற்றுள்ள அழகுகளும் ஒன்றுகூடி அவளை ரதிதேவிபோல் விளங்கச்செய்தன. அவள் அழகு முதிரமுதிர அவள் புருஷனும் அதற்கு முற்றும் ஈடுபட்டவனாய் அவள் இட்டது சட்டமாக நடந்துவந்தான். அவள் அழகின் சிறப்பை அவளே நன்றாக உணர்ந்தவளாகவிருந்தாள். இயற்கை யழகு அவ்வளவிருந்தும் அவளுக்கு அது திருப்தியாகவில்லை. அவ்வளவு அழகிருந்தும் அலங்காரமற்றிருக்கவேண்டியிருக்கிறதேயென்பது அவளுக்கு மனதில் எப்பொழுதும்மாறாத ஒரு பெருங்குறையாகவிருந்தது. "யாரே அழகுக்கழகு செய்வார்" என்று பாடின கவி அழகின்னதென்றறியாத குருடனாகவிருக்கவேண்டுமென்று பலமுறையுஞ் சொல்லித்தூற்றுவாள். மனதில் என்னகுறையிருந்தாலும் புருஷன்மேல் குற்றஞ்சொல்ல அவளுக்குச் சிறிதும் மனமில்லை. அவனுக்குக் கிடைத்ததை அவளிடம் கொணர்ந்து அர்ப்பணஞ்செய்துவிட்டு அவள் இட்டது சட்டமாகப்பாவித்து அவளிடத்து மீளாக்காதல் வைத்து அடிமைபோல் நடந்துவந்த தன் கணவன்மீது குற்றங்கூற அவள் மனது சிறிதும் சம்மதிக்கவில்லை. ஆனால் அவள் அடிக்கடி பொதுவாகத் தன் விதியை நொந்துக்கொள்வாள். சில சமயத்தில் அவள் தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு "இத்தனையழகுமிருந்து என்னத்திற்காச்சு? சம்பத்துள்ள இடத்தில் பிறந்தேனா! அல்லது சம்பத்துள்ளவனைத் தான் தேடி மணந்தேனா? என்னவோ, விழலுக்கிறைத்த நீர்போல், காட்டிலிறைத்த நிலவுபோல், இந்தப்பூமியில் பிறந்து பூஞ்சாளம்பிடித்து மடியத்தான் ஜன்மமெடுத்தேன். எடுத்த ஜன்மத்தை எப்படியாவது கழித்துத் தீர்க்க வேண்டியதுதான்!" என்று தனக்குட் தானே

நிஷ்டூரமாகச்சொல்லிக் கொள்வாள். மற்றொரு சமயத்தில் இப்பேர்ப்பட்ட எண்ணங்கள் வந்து மனதில் மூண்டுகொள்ளும் பொழுது வாயைத்திறந்து ஒன்றும் சொல்லாது மனதுக்குள் "எண்ணாத எண்ணமெல்லா மெண்ணி யெண்ணி" ஏக்கமுற்றுக் கடைசியில் "விதியை வெல்ல மதியாலாகுமா?" என்று பெருமூச்செறிவாள்.

"எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி" என்றதனால் அவளுக்குத் தன்புருஷனிடத்தில் பிரீதியில்லையென்றாவது வேறு புருஷரிடத்தில் இச்சையுற்றாளென்றாவது இதை வாசிப்போர் ஒருவரும் நினைக்கவேண்டாம். அப்படிப்பட்டதோர் எண்ணம் அவள் சிந்தையில் எப்பொழுதும் நுழைந்ததேயில்லை. அந்த விஷயத்தில் அவள் பதிவிருதா தர்மத்துக்குக் குறைவு வரும்படியான சிந்தனையேதும் கனவிலும் நினைத்தாளில்லை. நல்லகுலத்தில் பிறந்த ஹிந்து ஸ்திரீ வாழ்க்கைப்பட்ட கணவனைவிட்டு வேறொருவனைச் சிந்தையிலும் கருதுவளோ? ஒருபொழுதும் கருதாள். நம் ஒயிலாம்பாள் (அதுதான் அவள் பெயர்: அவள் பாட்டியார் அவளுக்கு நன்றாக அந்தப் பெயரிட்டாள்) இது விஷயத்தில் மகா உத்தமஸ்திரீ. அவள் அழகுக்குத்தக்கபடி அலங்காரம் செய்துகொள்ள ஆபரணங்களில்லையே யென்பது தான் அவளுடைய பெருங்குறை.

நகைபூணாப் பெண்ஜன்மம் வீண்ஜன்மமென்பது அவளுடைய பலமான கொள்கை. நகைகளில்லாது மற்றென்ன சம்பத்துக்களிருந்தாலும் அவை சிறக்காவென்பது அவள் உறுதியாகக்கொண்ட எண்ணம். ஆகையால் எப்படியாவது நகைகள் செய்துகொள்ள வேண்டுமென்பது அவளுடைய மனதில் வெகுகாலமாகக் குடிகொண்ட பெரிய ஆசை. அந்த ஆசையைத் தீர்த்துக்கொள்ள அவள் விடாது உழைத்துவந்தாள். அவளுடைய புருஷனும் அவனாலான மட்டும் கஷ்டப்பட்டுழைத்துக் கிடைத்ததை அவளிடம் கொணர்ந்து கொடுத்துவந்தான். ஆறுவருஷகாலமாக வயிற்றை யொடுக்கி வாயை யொடுக்கிச் சிறுதனம் சேர்த்து ஸ்ரீதனம்கேட்டு 500-ரூபாய்க்கு நகைகள் செய்துகொண்டாள். இவ்வளவு தொகைக்கு நகைகள் சேர்ந்தும் அவளுக்கு முன்னுக்கிப்போது சிறிதாவது திருப்தியுண்டாகவில்லை. பார்க்கப்போனால் அதிருப்தி அதிகமாயிற்று. சிறுகச் சிறுகச் சேர்த்துச் செய்துகொள்ள வேண்டியிருந்ததால், அப்போதப்போது கையிலுள்ள தொகைக்குத்தக்கபடி ஒன்றிரண்டு நகைசெய்துகொள்வாள். சிறுகச் சிறுகச் சேர்ந்ததை வட்டிக்கிட்டுவைத்தால் மொத்தமாகச் சேர்ந்தபின் நல்ல பொறுக்கு நகைகளாகச் சில வாங்கிக்கொள்ளலாமென்று அவள் கணவன் ஒருமுறை ஜாடையாகச் சொல்லிப்பார்த்தான். "கையிலிருந்தால் செலவழிந்துபோகும். எத்தனை நாளைக்கு நான் கட்டையாக நிற்கிறது" என்று கண்ணில் ஜலம்தளும்பக் கொஞ்சிக்கொண்டு ஒயிலாம்பாள் ஸ்வரம்போட ஆரம்பிக்கவும் கணவன் பயந்து "இல்லை; நான் சும்மாச்சொன்னேன். உன்னிஷ்டப்படியே நடப்போம்" என்று அவள் மனம்போல் அவள் கேட்டதை வாங்கிக்கொடுக்கத் தீர்மானித்துவிட்டான்.

"தட்டானைக்கொண்டுவா" என்றால் "இதோ வந்துவிட்டான்" என்று அழைத்துவந்து விடுவான். "பவுன் வாங்கவேணும்" என்று அம்மாள் வாய்திறந்து சொல்லுமுன் "எத்தனை வாங்கிவரட்டும்" என்று சொக்காயைப் போட்டுக்கொண்டு நிற்பான். இப்படி சில்லறையாகச் செய்துவந்ததால் முதலில்செய்த நகை மூன்றாவது நகை செய்து முடிக்குமுன் 'மோஸ்தர்' தப்பிப்போவது வழக்கம். அது பழையநகையை விற்றுப் புதியமோஸ்தர்ப்படி நகை செய்யத்துவக்குவாள். இப்படித் தட்டான் வீட்டுக்கும் ஷராபுகடைக்கும் போய் வருவதிலே அவன் ஓய்வுகாலமெல்லாம் கழிந்துவந்ததன்றி இங்ஙனம் நடைபழகினதால் தேகசிரமம் அதிகரித்து, கச்சேரி

வேலையில் மனம் தளர்ந்துபோகலுற்றான். ஒரு நாளைக்கு ஆபீஸில் துரை தப்புசெய்ததற்காக மிக்க கண்டித்து அடுத்தமுறை பிழைசெய்தால் 'மேல் ப்ரொமோஷன்' நிறுத்தப்படும் என்று எச்சரிக்கைசெய்து உத்தரவு பிறப்பிக்க சாந்தசர்மா (அதுதான் அவன் பெயர்) வீட்டுக்குவந்து தன் மனைவியைப்பார்த்து ஆபீஸில் நடந்ததைச்சொல்லி, இனி தன்னை வீட்டுக்குவந்ததும் வெளியிலனுப்பி இழுக்கடித்தால் வேலையே போய்விடும். உண்கிற சோற்றில் மண்விழுந்தால் என்பேரில் குற்றஞ் சொல்லாதே யென்று சாந்தமாகச் சிறிதும் பதட்டமின்றிச் சொன்னான்.

ஒயிலாம்பாளுக்கு அவன் சாந்தமாகச் சொன்ன வார்த்தைகள் திகிலென்று அடிவயிற்றில் இடிவிழுந்ததுபோல் சென்று மனதிலுறைத்தது. அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும் சிறிதுநேரம் பிரமித்துச் சும்மாநின்று தன் பிரக்ஞை வந்ததும் அவள் "போதும், போதும், இந்தமட்டோடு நின்றது நல்லதாகப் போயிற்று. இனிமேல் நகைநட்டு வியாபாரம் ஒன்றையும் நான் உங்கள் காதில் போடவில்லை. உங்கள் வேலையை நீங்கள் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டுவந்தால் அதுவே போதுமானது! நீங்கள் ஆயிரம் நகை வாங்கிக் கொடுத்தாப்போல!" என்று சொல்லி நகைப்பேச்சை அதுமுதல் புருஷன் காதில் போடுவதை நிறுத்திவிட்டாள்.

சாந்தசர்மாவும் "கழுத்துக்குக் கத்தியாக வந்தது மாலையாக விழுந்ததே: இதுவே சந்தோஷம். 'கல்லன தீயனவாம் தீயனவும் நல்லனவாம்'," என்று தனக்குத்தானே ஞானோபதேசம் செய்துகொண்டு தன் உத்தியோக [illegible]களைக் கவனமாகப் பார்த்துவரத் தொடங்கினான். சிறிதுகாலத்தில் அவன் தனக்கு வந்த கெட்டபேரை நீக்கிக்கொண்டு நல்லபேர் வாங்கினதோடு 5-ரூபா அதிக சம்பளமுள்ள உயர் உத்தியோகமும் பெற்றான். வேலை யதிகமாகவிருந்தாலும் சம்பளம் கொஞ்சமாவது அதிகமானதைப்பற்றி சாந்தசர்மா சந்தோஷப்பட்டு உற்சாகத்தோடு வேலைசெய்துவந்தான். ஒயிலாம்பாளும் தன் புருஷனுக்கு 5-ரூபாய் சம்பள முயர்ந்ததினால் தன் அந்தஸ்தும் அதிகரித்ததென்று சந்தோஷப்பட்டு பெருமிதங்கொண்டாடி வந்தாள். சம்பள முயர்ந்தபின் முதல்மாசத்துச் சம்பளம் ஆபீஸில் பட்டுவாடா செய்யப்பட்ட அன்று சாயந்திரமே ஒயிலாம்பாள் கையில் வந்துசேர்ந்தது. "முதல் மாசத்துச்சம்பளம் நகைக்கு: இதை இப்படியே முடிந்து வைத்துவிடுவேன். இந்த மாசத்துச்செலவு அடுத்தமாசத்துச்செலவு இரண்டையும் அடுத்த மாசத்துச் சம்பளத்தைக்கொண்டு சரிப்படுத்திக் கொள்ளவேண்டும்" என்றாள், புன்னகையோடு புருஷனைப்பார்த்து முறுவலித்துக்கொண்டு.

"உன்னிஷ்டம்போல் செய்: எனக்கு ஆபீஸுக்குப் போகிறவேளைக்குமட்டும் இல்லை யென்னாமல் இத்தனை சாதம் போட்டால் போதும்" என்றான் புருஷனும்.

மறுநாட் காலமே அதிக சுறுசுறுப்போடு வீட்டு வேலைகளைப் பார்த்துவிட்டு பொரியல் வறுவலோடு புத்தமுது சமைத்து புன்னகை மாறாது புருஷனுக்குப் படைத்தாள். அவனும் சமயலை ஸ்தோத்திரம் செய்துகொண்டு பெண்டாட்டிமுகத்தைப் பார்த்துக்கொண்டே திட்டம் தெரியாது வயிறு புடைக்க உண்டுவிட்டு, அம்மாள் தாம்பூலம் மடித்துக்கொடுக்க வாங்கிப்போட்டுக்கொண்டு, தான்பட்ட கஷ்டங்களெல்லாம் அன்றை யொருவேளை யன்புக்கும் இன்புக்கும் விலைகொடுக்கக் காணாது என்று நினைத்து மனமகிழ்ந்துகொண்டு ஆபீசுக்குச் சென்றான். அன்று முழுவதும் சாந்தசர்மா ஆபீஸில் வேலைபார்க்கும்பொழுதுகூட நினைத்து நினைத்துப் புன்சிரிப்புச் சிரித்ததை அவன்கூட இருந்தவர்களெல்லாம் கண்டு பிரஸ்தாபிக்கலானார்கள். அன்று முழுவதும் அவனுக்கு ஆனந்தம்பொங்கி வழிந்துகொண்டிருந்தது. அவளுக்கும் அப்படியே.

மத்தியானம் மணி 12-ஆய்விட்டது. ஊரிலுள்ள புருஷர்களெல்லாம் அவரவர்கள்வேலை, வியாபாரம், தொழில்களைநாடி வெளியேபோய் விட்டார்கள். ஒவ்வொருவீடும் புருஷனற்று விளங்கியது. பெண்கள் கச்சேரிசெய்யத் துவக்கி விட்டார்கள். சென்னையில் சின்னக்கோர்ட்டு, பெரியகோர்ட்டு, ஸிவில்கோர்ட்டு, போலீஸ்கோர்ட்டுகளில் நடக்கும் சமாசாரங்களெல்லாம் பத்திரிகைகளில் வெளியாகிவிடுகின்றன. மத்தியானம் 12-மணிக்குக் கூடி மூன்றுமணிக்குக் கலையும் இந்தப் பெண்டீர் கச்சேரிகளில் நடக்கும் சங்கதிகள் மட்டும் வெளியாவதில்லை. ஆதலால் ஊர்ச்சேதியெல்லாமறிந்த அனேகருக்கு அவர்கள் வீட்டில் நடக்கும் சங்கதிதெரிய வகையில்லாமல் போகிறது. அப்படியிருந்ததினால்தான் இந்தக்கதையெழுதச் சரக்குக்கிடைத்தது. இல்லாவிட்டால் இல்லைதான்.

மத்தியானம் மணி 12 - ஆய்விட்டது ; கச்சேரி கூடும் காலம் கிட்டிவிட்டதென்று வீட்டிலுள்ள பெண்டீர் எல்லாரும் அவரவர் வேலையை அவசரமாய்ச்செய்து முடித்துவிட்டு, கைகால் கழுவி சுத்தி செய்துகொண்டு, வெற்றிலைத்தட்டையெடுத்துக்கொண்டு வெயிலுக்குக் காற்றுவாங்க வாசல் நடையில் வந்துட்கார்ந்தார்கள். ஒயிலாம்பாளும் அப்படியே வெற்றிலைத்தட்டும் கையுமாக அவள் அழகும் தேஜஸும் இன்றைக்கு அதிகமாக அவள் முகத்தில் ஜொலிக்க வாசல்நடைக்குவந்து 'அம்மாடி!' யென்று உட்கார்ந்தாள்.

'அம்மாடி!' என்றுசொல்லி இவள் உட்கார்ந்ததை யறிந்த எதிர்வீட்டு நாரதாம்பாள், "என்'டி, ஒயிலம், இத்தனை நாழிகையாச்சா இன்றைக்கு உனக்கு ?" என்று விசாரித்துக்கொண்டே அவளுக்கு எதிரில்வந்து உட்கார்ந்தாள்.

"வாடியம்மா, உட்காரு. இன்று காலையிலெழுந்திருந்தேன் ; உச் என்று உட்காரப் பொழுதில்லை ; இத்தனைநாழி, ஓடி ஓடி உழைத்தேன். இப்பொழுதுதான் காரியம்முடிந்தது. இன்னும் வெற்றிலை போட்டுக்கொள்ளவில்லை. இந்தா நீயும் போட்டுக்கொள்ளேன்" என்று வெற்றிலைத்தட்டை அவள் கிட்ட நகர்த்தினாள்.

" அதற்கென்ன போட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு வீட்டில் சமையல் பலமாட்டமாகத் தோன்றுகிறது!"

"பலமென்ன வந்தது! ஒன்றுமில்லை. தினம் வெற்றல் குழம்பும் தொகையலுமாகப் போட்டால் என்னமாகவிருக்கும் ! கொஞ்சம் பொரியல் வறுவல் செய்து வாய்க்கு ருசியாகச் சாப்பாடுபோடவேணுமென்று சமைத்தேன். அது இத்தனைநாழி வேலைவாங்கிவிட்டது."

இச்சமயத்தில் அடுத்த தெருவில் அனந்தையர் வீட்டு அடுக்களை வேலைக்காரியான எச்சம்மாள் என்னும் விதவை வெயிலைப்பார்க்காமல் வியர்க்கவியர்க்க நெற்றியிலுள்ள வியர்வையை விரலால் வழித்துக் கொட்டிக்கொண்டு வந்து சேர்ந்தாள். வந்தவள் 'உடகார்' என்று சொல்லுமுன் தானே இருவருக்கும் மத்தியிலுட்கார்ந்துகொண்டு, "ஏனம்மா ஒயிலாம்பாள், உங்களகத்துக்காரருக்கு சம்பள மூயர்ந்ததாமே, சொல்லக்கூடாதா?" என்று கேட்டாள்.

நாரதாம்பாள், " அதுதான் இன்றைக்கு வீட்டில் விருந்துச் சாப்பாடுபோலிருக்கிறது. அப்படிச் சொல்லு அதை. ஒயிலம், இதை எனக்குச் சொல்லப்படாதோ ! எனக்கொளித்த இரகசியமா ?"

" இதில் இரகசியமென்ன வந்திருக்கிறது. எத்தனையோ வருஷமாகக் கஷ்டப்பட்டுழைத்துவருகிறார். 5-ரூபாய் சம்பளமுயர்ந்தது. இதையொரு பெருமையாகச் சொல்லிக்கொள்ளவேணுமா வென்றிருந்தேன். அதேயொழிய வேறொன்றுமில்லை."

எச்சம்.—"இனிமேல் உனக்கென்ன, [illegible]ராசி, வேணுமென்கிற நகை பூட்டிக்கொள்ளலாம் ; நகையில்லை நகையில்லை யென்று சொல்லிக்கொண்டிருந்ததையே ; உன் குறைத் தீர்ந்தது; இனிமேல் உனக்கென்னகுறைச்சல் இராஜாத்தியாட்டமா விருக்கலாம்."

ஒயிலாம்பாள்.—" ஐயோ அம்மா ! நீங்களென்ன அப்படி சொல்கிறீர்களே ; 5-ரூபாய் சம்பளம் உயர்ந்ததினால் என்னவந்துவிட்டது! நானும் என்னாலான சாமர்த்தியங்களெல்லாம் செய்துபார்த்தேன். 7-வருஷமாச்சு : 500-ரூபாய் நகை யாகவில்லை. அதுவும் ஒடிந்ததும் கழிந்ததும், பழையதும் புதியதுமாக விருக்கிறது. நகையாசைப்பட்டுப் பிரயோசனமில்லையென்று நான் விட்டுவிட்டேன். அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதையாக நகை நகை யென்று நகையாசைப்பட்டால் வயிற்றுப் பிழைப்புக்கும் திண்டாட்டத்தில் வரும்போலிருக்கிறது. போதும் அம்மா நான் நகையாசைப்பட்டது ! வாயாற வயிறுற உண்டுடுத்திச் சௌக்கியமாயிருந்தாற்போதும்."

எச்.—"ஏதுடீ அதிசயம்: நீ இப்படிப் பேசுகிறது ! இப்படி திருப்திப்பட்டிருந்தால் இந்த 500-ரூபாய் நகையென்னமாச் சேர்ந்திருக்கும்! கையில் 500-ரூபாய் நகையாச்சு. சம்பளத்தில் கூட 5-ரூபாயாச்சு; சிறுகச் சிறுகச்சேர்த்தாலும் 500 ரூபாய் நகையை ஆயிரம்-ரூபாய் நகையாக்கப்படாதோ ! நன்னா இப்படிச் சொன்னை! உன்னைவிடத் தாழ்ந்த பதவியிலுள்ளவளெல்லாம், புளிச்சக்கண்ணும், சப்பட்டை மூக்கும், தட்டை நெற்றியுமாயிருந்தாலும் என்று நகை பண்ணிப் போட்டுக்கொண்டு குலுக்கிமினுக்கிக்கொண்டு நடக்கிறாளே. தங்கவிக்கிரகமாட்டமா உன்னைப்போல் உருக்கிவார்த்தாப் [illegible] பெண்ணுக்கல்லவோ போட்டுப் [illegible]னும்! இந்தக்காலத்திலே புருஷாள் தான் நகைவேண்டாம் நட்டுவேண்டாம் ஆம்படையானை பிரமன் சிருஷ்டித்தபடி பார்த்தாற் போதுமென்று சொல்கிறார்கள். நீயுமோ அப்படி நினைக்கவேண்டும்!"

"நான் என்ன செய்வேன் அம்மா ! என்னாலான சமர்த்தெல்லாம் செய்துபார்த்தேன். அவருக்கு ஆபீஸ்வேலை ஒழியவில்லை. வேறு பக்கமனுஷாள் உதவியில்லை. தட்டானுக்கும் கெட்டானுக்குமாகக் கொடுத்துக்கஷ்ட நஷ்டப்படுவதைக்காட்டிலும் இருப்பதைக்கொண்டு திருப்தியடைந்து 'அக்கடா' என்று சும்மாவிருப்பது ரிரம்ப உத்தமம் என்று தோன்றுகிறது" என்றாள் ஒயிலாம்பாள்.

" உனக்கு மனுஷாளில்லையென்று நீ குறைப்படவேண்டாம், எத்தனை நகைவேணுமானாலும் நான் வாங்கித்தருகிறேன். பழைய நகையை விற்றுத்தருகிறேன். ஐக்கோர்ட்டு வக்கீல் ஆதிசேஷய்யர் அகமுடையாளுக்கு ஒரு பதக்கம் வாங்கிக்கொடுத்தேன். பழைய தோடா ஒரு ஜோடி விற்றுக்கொடுத்தேன். வடக்குவீதி வீரபத்ராசாரி அகமுடையாள் ஒரு கொலுசு விற்றுக்கொடுக்கச்சொல்லிக் கொடுத்திருக்கிறாள். இன்னம் எத்தனையோ பேர் பெரியமனுஷாள் வீட்டுப் பெண்டுகளுக்கெல்லாம் ஆயிரம், இரண்டாயிரம் வரையில் நகைகள் விற்றும் வாங்கியும் கொடுக்கிறேன். நான் என்னவியாபாரம் செய்தாலும் புருஷாள் காதிலே படுகிறதில்லை: பெண்டுகளுக்குப் பெண்டுகன் பெண் கை வியாபாரமாகப் போகும். உனக்கென்ன வேணுமானாலும் நான் இருந்து ஒத்தாசை செய்கிறேன்." என்றாள் எச்சம்.

ஒயிலாம்பாள்.—" புருஷாளுக்குத் தெரியாமல் நகைகட்டுகளைக்கொடுத்து வாங்கி வில்லங்கத்தில் வந்து அகப்பட்டுக்கொண்டால், நகைக்கு நகையும் போய், மானத்துக்கு மானமும் கெட்டு, கோர்ட்டு கச்சேரி யென்று அலைந்து திண்டாடவந்தா லென்ன செய்கிறது ! அந்த வியாபாரமே எனக்கு வேண்டாமம்மா. வீட்டுக்குள்ளிருந்து புருஷாளோடு ஆயிரம் சண்டைபோடலாம். நாளைக்கு வாசலிலிழுக்கும்படி நேரிட்டால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகவேண்டும்." என்றாள்.

எச்சம்மா.—"ஐயோ அம்மா ! நீ யென்ன அப்படி சொல்கிறையே ! உங்களையெல்லாம் போல் நான் வாழக் கொடுத்துவைக்காவிட்டாலும், நான் புடைவைகட்டிய பொம்மனு

ட்டியில்லையா? எனக்கு மானம் வெட்கம் இல்லையா? அப்படி யேதாவது வித்தியாசமாக விருந்தால் இத்தனை பெரியமனுஷாள் வீட்டுப்பெண்களெல்லாம் என்னை நம்பிக் கொடுப்பார்களா? நான் முன்சொன்ன பேர் வழிகளன்றி, ரெங்கராமய்யராம்படையாள் விசாலாக்ஷி 300-ரூபாய் பெறுமான தோடாவும் காப்பும் கொடுத்திருக்கிறாள். நாகநாதய்யரகத்துத் தோலாம்பாள் ஒரு கொடியும் சரடும் கொடுத்தாள். எதிரகத்துப் பங்கஜத்துக்கு ஒரு சரடும் ராக்கிடியும் விற்றுக்கொடுத்தேன். ராஜாம்பாளுக்குத்தோடுவிற்றுக்கொடுத்தேன். மீனாக்ஷிக்கு ஒரு ஓலை விற்றுக்கொடுத்தேன். சீதாலக்ஷ்மிக்கு ஒரு காசிமாலை வாங்கிக் கொடுத்தேன். வராகலக்ஷ்மியம்மாள் நாலு புதுப்புடவை கொடுத்தாள், விற்றுக்கொடுத்தேன். இன்றைத்தேதியில் என்னிடத்தில் 5000-ரூபாய் நகையிருக்கிறது. என்னுடைய நாணயம் இங்கே யெல்லாருக்கும் தெரியும். வேணுமானால் உங்காத்துக்காரரைவிட்டு விசாரிக்கச்சொல்லு. என்னைப்பற்றி கேசவைய்யரைக்கேட்டால் சொல்லுவார்; ராமையருக்குத் தெரியும் என்னை; நடேசையருக்குத் தெரியும், முகுந்தய்யருக்குத் தெரியும், தட்டாரத் தங்காசாரிக்குத்தெரியும், லாகவபத்தருக்குத் தெரியும், கோவிந்தாசாரிக்குத்தெரியும், துணிவியாபாரம் திருமலாசாரிக்குத் தெரியும், ரெங்காசாரியருக்குத் தெரியும், இன்னும் எத்தனையோபேர் சொல்வேன்—" என்று வார்த்தைகளைச் சரமாரியாகப் பொழிந்து கொட்டினாள்.

இதையெல்லாம் கேட்டிருந்த ஒயிலாம்பாள் மனம் சஞ்சலப்பட்டு ஊஞ்சலாட, சற்றுநேரம் ஒன்றும் சொல்லமாட்டாமல் சும்மாவிருந்தாள். இதைக்கண்ட எச்சம்மாள் நீ நன்றாக யோஜித்துப்பார், உனக்கேதெரியும். பெண்ணாகப் பிறந்து ஒன்றுக்கும் உதவாத கைம்பெண்ணாகி விட்டோமே: பண்ணினபாவம் புருஷனோடு வாழக்கொடுத்துவைக்காமற்போனோம். பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்காவது ஒத்தாசையாக விருந்து பண்ணினகருமத்தையெண்ணித் தொலைக்கலாமென்று இதையெல்லாமெடுத்து மேலேபோட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் எனக்கென்ன ஒரு வயிறு சோறு! நாலு வீட்டில் போய் முட்டியெடுத்தாலும் ஆச்சு. நாழியாச்சு, நான் போய்வருகிறேன்" என்று எழுந்திருக்கிறபாவனையாக உடம்பை யசைத்தாள்.

அவள் போவதாகச்சொல்லி உடம்பையசைக்கவும், ஒயிலாம்பாள் சிந்தனையிலாழ்ந்திருந்தது நீங்கிப் பேசத்தொடங்கினாள். "இருமே, போகலாம். இன்னம் இரண்டு மணியாகவில்லை. கழுத்தில் போட்டிருக்கும் சரடு அவசரப்பட்டு முதலில்செய்தேன்; இப்பொழுது எல்லாரும் கடிகார அட்டிகை போட்டுக்கொள்கிறார்களே யன்றி இந்தமாதிரி சரட்டட்டிகை யார் போட்டுக்கொள்கிறார்கள். நஷ்டமில்லாமல் இதை விற்றுத்தரக்கூடுமானால்,—நேற்றுத்தான் இருபது ரூபாய் கொடுத்தார்; நகைக்கென்று எடுத்துவைத்தேன். அதையும் கூடப் போட்டு நல்லதாகப் புதுமோஸ்தரான கடிகார அட்டிகை யொன்று செய்து போட்டுக்கொள்ளலாம். போனவருஷம்தான் புதிதாகத்தங்கக்காப்பும் கொலுசும் ராகவபத்தரிடம் புது மோஸ்தர்ப்படி செய்து கொடுத்தார். கையில் அதைப்போட்டுக்கொண்டு, கழுத்திலே இதைப்போட்டுக்கொண்டால் ஒன்றுக் கொன்று பொருந்தாமல் விகாரமாகவிருக்கிறது. கழுத்தில் ஒன்று மில்லாவிட்டால் உள்ளங்கழுத்து வெறிச்சாப்போலிருக்கிற தென்று [illegible] போட்டுக்கொண்டு காப்பையும் கொ[illegible] அப்படியே மெருகுகலையாமல் உள்ளேவைத்திருக்கிறேன். இந்தச்சரட்டட்டிகையை விற்றுத்தந்தால் உபகாரமாக விருக்கும்." என்றாள்.

எச்சம்மாள்.—"இவ்வளவுதானே! இப்பொழுதுகொடு இன்னம் மூன்று நாளிலே பணம் தருகிறேன். இடைக்கிடை சவரன் விலை

கொடுத்தால் போதுமேயில்லையோ?" என்று கேட்டாள்.

ஒயிலாம்பாள்.—"ஐயோ அது வெள்ளைப் பொன்னாகவிருக்கிறதே. சவரன் விலை அதற்கு யார் கொடுப்பார்கள்?"

எச்.—"உனக்கென்ன நானல்லவோ விற்றுத்தருகிறேன். பணத்துக்கு நான் ஜவாபுதாரி, இதோ தட்டானையழைத்து வந்து இடைபோட்டுத் தடை கொடுத்துவிட்டு எடுத்துக் கொண்டு போகிறேன். இன்றைக்கு மூன்றாம் நாள் சவரன்விலை கடையில் விற்கிறபடி பணம் தருகிறேன். இல்லாவிட்டால் இடை குறையாமல் நகையைத் திருப்பி விடுகிறேன்" என்று சொல்லி, நகையை யெடுத்துக்கொண்டு போகப்புறப் பட்டாள்.

நாரதாம்பாள்.—"ஏன், எச்சம்மா, எங்காத்திலே, எங்கம்மாள்கொடுத்த பழைய ராக்கிடி யொன்றிருக்கிறது. அதையும் சற்று விற்றுக் கொடுத்து உபகாரம் செய்யக்கூடாதா?"

எச்சம்.—"ஆகா, அதற்கென்ன! இப்போ கொடுத்தால், இத்தோடு உனக்கும் பணம் கொணர்ந்து தருகிறேன்."

நாரதாம்பாள்.—"எங்காத்துக்காரரைக் கேட்காமல் கொடுக்கக் கூடாது; என்னை வீட்டைவிட்டுத் துறத்திவிடுவார். இது விற்றுப் பணம் கொண்டுவந்து கொடுக்கவருகிறபோது தருகிறேன். அதற்கு முன்னே எங்காத்துக்காரரோடு சொல்லி வாங்கி வைக்கிறேன்." என்றாள்.

இந்த சம்பாஷணை நடந்த மூன்றாநாள் மத்தியானம் 12-மணியடித்தது. எல்லாரும் வழக்[illegible]போல் நடையிலுட்கார்ந்து பேசிக்கொண்[illegible]ர்கள். இரண்டு மணிக்கெல்லாம் எச்சம்மாள் முகத்தில் புன்சிரிப்புத் தவழ வியர்வையை விரலால் வழித்துக் கொட்டிக் கொண்டு மடியிலுள்ள முடிப்பொன்றை இடக்கையால் பொத்திக்கொண்டு வந்துட்கார்ந்தாள்.

BROTHERLY LOVE.

சகோதர வாஞ்சை, அல்லது, ராஜா உடையரும் அவர் தம்பியும்.

இன்றைக்கு ஏறக்குறைய சுமார் மூன்னூறு வருடங்களுக்கு முன் மைசூர் ராச்சியத்திற்குப் பிரபுவாயிருந்த ராஜ உடையருக்குச் சாமராஜன் என்றோர் இளவல் இருந்தான். இவ்விராஜ உடையர் சத்துருக்களை வென்று அவர்களது நாடுகளையெல்லாம் கட்டிக் கொண்டு இவ்வாறாகத் தமது இராச்சியத்தை விஸ்தாரப்படுத்திக்கொண்டு வந்தார். அண்ணனுடைய கீர்த்தியையும் முதன்மையையும் கண்டு சகியாமற் சாமராஜன் ஒரு சிறுசேனையைத் திரட்டிக்கொண்டு அவனுக்கு விரோதமாய் நடக்கலுற்றான். ஆனால், பிரபு இவனை ஓர் உபாயத்தினாற் பிடிப்பித்துவிட்டார். தூதர்கள் சாமராஜனைக் கொண்டுவந்து எதிரில் நிறுத்தின வுடனே, பிரபு தமது ஆசனத்தினின்று இழிந்து, இளையோன் இயற்றிய துரோகத்தைக் கருத்தினில் வையாது, இயற்கையான பிரேமையுடனே அவனைக் கட்டித் தழுவப்போயினார். தன் தமயன் தன்னைக் கொல்லவந்தான் என்னும் மருளினாற் சாமராஜன் அரசனோடு கைப்போர் புரியத் தொடங்கினான். அதற்குள்ளாக அங்கிருந்தவர்கள் இவனை விடுவித்து விலக்கினர். பிரபு இவனைச் சில்நாள்வரையில், அரண்மனைக்கு அப்புறம் அவன் செல்லாவண்ணம், சிறிது நிர்ப்பந்தத்தில் இட்டிருந்தார். இதுநிற்க:

அரசவம்சத்தைச் சேர்ந்த இளைஞருள் ஒருவனாகிய நரஸராஜன் என்பவன்,—ராஜ உடையருக்குத் தம்பியின்மீது வெகுதுவேஷமிருக்கின்றது; ஆகையால் இந்தச் சாமராஜனுடைய கண்ணை யான்கிழித்து விட்டாற் பிரபுவுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும்; யான் பிரபுவின் விசுவாசத்திற்கு உரியவனாவேன் என்று துராலோசனைசெய்து, சாமராஜனது கண்

லைக்கிழிக்கும்பொருட்டுச் சில நீசர்களை நியமித்தான். ஒருநாள் வேற்றரசனது சீமையைச் சயிக்கும் உத்தேசத்துடன் சேனைகள் சூழ்ந்துவர வெளிப்போந்த ராஜஉடையார் இந்தச் சங்கதியைக்கேட்டு, உடனேபின் திரும்பி வந்து, நரஸராஜனையும் அவனுடைய தம்பியையும் வரவழைத்தார். அவர்களிருவரும் தம்முன்வந்து நிற்றலும், அரசன் நரஸராஜனைப் பார்த்து,—அடா! உன் தம்பியின் கண்களை இக்கணமே கிழிக்கக்கடவை எனக் கர்ச்சித்துக் கட்டளையிட்டார். நரஸராஜன் கடகடவென்று நடுங்கிக்கொண்டு,—இத்தகைய சிக்ஷை யடைவதற்கு என் தம்பி என்ன குற்றம் செய்தனன்? என்று கண்ணீர் "உதிர்த்து நின்றான். இதற்கு அரசன்,—அடா, சண்டாளா! நீ எம்தம்பியின் கண்ணைக் கிழிப்பதற்கு அவன் என்னகுற்றம் செய்தான்? இம்மாதிரியான துன்மார்க்கத்தில் நீ நடப்பாயாயின், உன்னைக் கற்செக்கிலிட்டு ஆட்டிக் கசக்குவோம்"—என்றுசொல்லி, இந்தக் கெட்டகாரியஞ்செய்வதற்கு உடன்பட்டிருந்தவர்களையுஞ் சிக்ஷித்து, தம்பியாகிய சாமராஜன் செய்திருந்த அபராதங்களையெல்லாம் மன்னித்து, அவனுக்குவேண்டிய அளவு திரவியத்தையுங் கொடுத்தார். மறுபடியும் இத்தன்மையான அபாயங்கள் எவையும் நேராவண்ணம் அரங்கசமுத்திரமென்னும் ஊரிற் சுகமாய் வசிக்கச் சாமராஜனை விடுத்தனர். இவ்வாறு, உடன்பிறந்தார் எக்குற்றஞ்செய்யினும், அவற்றை நாம் பாராட்டாமல் அவர்மீது அன்புகாட்டிப் பிரேமைவளர்த்துப் புகழுறுவோமாக. பிறக்குங்கால் அண்ணனுந்தம்பியுமாயிருந்து, வளருங்கால் தாயாதிகளெனவேண்டாம். சகோதரர்மீது அன்புவைக்கவேண்டுமென்னும் நீதியைப்புகட்டும் இக்கதையானது மைசூர் சரித்திரத்தினின்று எடுத்து அமைத்துக்கொள்ளப்பட்டது.

SANITATION COLUMN.

சுகாதார விஷயம்.

உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதாரமுறைகளை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமாவது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாக விருந்தது.—டாக்டர் டப்ளியூ. ஜி. கிங்.

சுகாதாரக் குறிப்புகள்.

குழந்தைகள் வளரவேண்டியகிரமப்படி வளர்ந்தால் 3-அடி உயரத்துக்குமேல் நாலடி உயரம்வரையில் ஒவ்வொரு அங்குல உயரத்துக்கும் 2-பவுண்ட் நிறை கனம் அதிகரிக்கவேண்டும். 4-அடிக்குமேல் 5-அடி உயரம்வரையில் ஒவ்வொரு அங்குல உயரத்திற்கும் $2\frac{1}{2}$-பவுண்ட் நிறையதிகரிக்கவேண்டும். பட்டணவாசங்களில் வளர்கிற குழந்தைகள் நாட்டுப்புற வாசங்களில்வளரும் குழந்தைகளைவிட வளர்ச்சி குன்றியிருப்பது சகஜமாயிருக்கிறது. இதற்குக்காரணம் அவர்கள் வளருவதற்கனுகூலமான நல்ல காற்று, தேகாப்பியாசம் முதலியவற்றிற்கு பட்டணவாசங்களில் அனுகூலமின்மை விசேஷமாகச் சொல்லப்படுகிறது.

*　*　*　*

தேகம் பருக்கிறதும் இளைக்கிறதும் சீதோஷ்ண நிலைமையையும் பூசாரவிசேஷத்தையும் பொறுத்தாகச் சொல்லப்படுகிறது. உலர்ந்த காற்றுள்ள இடத்தில் தேகம் பருக்கிறதென்றும், நீராவி யதிகமாகவுள்ள காற்றில் தேகம் இளைக்கிறதென்றும் தெரிகிறது.

*　*　*　*

அநேகர் ஹிருதயம் பலவீனமாகவிருக்கிறதென்றும், படபடவென்று மார்பு அடித்துக்கொள்ளுகிறதென்றும் முறையிடுகிறார்கள். இதற்குக்காரணம் பெரும்பாலும் ஹிருதயத்தில் ஒரு குற்றமுமிருக்கிறதில்லையென்றும், அஜீர்ணம், பட்டணவாசம், தேகாப்பியாசமின்மை இக்காரணங்களால் பலவீனப்பட்டிருக்கிறவர்களுக்கு அந்தச் சின்னம் தோன்றுவதுண்டென்றும், இவர்களுக்கு அஜீரணம் சொஸ்தமானால் அந்தச்சின்னம் மாறிப்போமென்றும் ஒரு வைத்தியர் சொல்லுகிறார். இடுப்பை மிக வொடுக்கிக் கட்டிக்கொள்வதாலும் அந்த சின்னம் நேரிடக்கூடும். ஒட்டியாணம் அல்லது கச்சையைத்தளர விட்டால் அது நிவாரணமாகும். ஸர் ராபர்ட் க்ரிஸ்டிஸன் என்னும் ஒரு வைத்திய நிபுணர் நன்றாகவும் விரைவாகவும் நடக்கிற அப்பியாசத்தினால் பலவீன ஹிருதயம் பலமடைகிறது என்று சொல்லியிருக்கிறார். இதனால் ஹிருதயத்தைப்பற்றிய நோய் இருப்பதாகநினைக்கும் அநேகரில் பெரும்பாலாருக்கும் உண்மையில் அந்நோய் இருக்கிறதில்லை யென்பதும், வேறு இதர காரணங்களால் தோன்றும் சின்னங்களை பலவீன ஹிருதயத்தின் சின்னமாக நினைத்து வீணாக மயங்குகிறார்களென்பதும் அவருடைய துணிபு. பட்டணவாசிகள் தேகாப்பியாசத்துக் கிடமின்றி கெட்ட காற்றைச் சுவாசம்செய்துகொண்டு ஜனநெருக்கமான இடங்களில்வசித்துவருவது எவ்வளவோ சுகவீனத்துக்குக் காரணமாகவிருக்கிறதென்று அவர் சொல்லுகிறார்.

*　*　*　*

தேகசக்தி மனோசக்தியென்னு மிரண்டில் தேகசக்தி மனதைப் பாதிப்பதைப்போல் மனோசக்தி தேகத்தைப் பாதிக்கிறதென்பது பிரத்தியக்ஷானுபவமாகக் கண்டறிந்தவிஷயமாக விருக்கிறது. டாக்டர் டியூராண்ட் என்னும் ஒரு வைத்தியர் மனோபாவனையினால் தேகசுகம் எவ்வளவு பாதிக்கப்படுகிறதென்பதை யறியும்பொருட்டு அவரிடம் வைத்தியத்திற்கு வந்தவர்களில் 100-பேர்களுக்கு தண்ணீரைத் திதிக்கச் செய்துகொடுத்தார். கொடுத்த 15-நிமிஷங்கள் கழித்து தான் ஏதோ தப்புசெய்துவிட்டவர்போல் பாவனை

செய்துகொண்டுவந்து அவர்களுக்கெல்லாம் பலமான வாந்திமருந்து ஒன்று தவறிப்போய்க்கொடுத்துவிட்டதாகச் சொல்லி அதற்காக வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமென்று தெரிவித்தார். 100-ல் 80-பேர்கள் உடனே நோவுகண்டுவாந்திமருந்துகொடுத்தால் என்னபாடுபடுவார்களோ அந்த சின்னங்களெல்லாம் காட்டினார்கள். இதனால் மனோபாவனையினால் தேகசுகம் விசேஷமாகப் பாதிக்கப்படுகிறதென்பது ஏற்படுகிறது.

*　*　*　*

இதற்கு இன்னொரு உதாரணமாகசமீபத்தில் வெளியான சென்னை கவர்ன்மெண்டு ரசாயன பரிசோதகர் ரிபோர்ட்டில் குறித்துள்ள சம்பவத்தைக் கூறலாம். ஒரு ஊரில் ஏதோ சொத்துத் திருட்டுப்போயிற்றென்று மந்திரவாதியைக் கூப்பிட்டு களவைக் கண்டுபிடிக்க யத்தனம்செய்தார்கள். மந்திரவாதி இல்லாத ஆடம்பரங்களெல்லாம் செய்து மாவிளக்குப் போட்டு, அந்த மாவை கூடியிருந்தவர்களுக்குக்கொடுத்து, திருடினவர்கள் அதைச்சாப்பிட்டால் மயக்கம்வந்து விழுந்துவிடுவார்களென்று சொன்னான். அதைச்சாப்பிட்ட ஒரு பையன் அப்படியே மயக்கம்வந்து பிரக்ஞையற்று விழுந்துவிட்டான். மந்திரவாதியேதோ விஷம்கலந்து கொடுத்துவிட்டானென்று சந்தேகப்பட்டு அந்த மாவை கவர்ன்மெண்ட் ரசாயன பரிசோதகருக்கு அனுப்பினார்கள், அவர் அதைப் பரிசோதித்துப்பார்த்ததில் அதில் குற்றமொன்றுமில்லாததுகண்டு, அந்தப் பையன் குற்றமுள்ள நெஞ்சுள்ளவனாய் பயந்து மூர்ச்சித்துப் போயிருக்கவேண்டுமென்று தெரிவித்தார். மனதுக்கு தேகத்தின் மேலுள்ள சக்தியை நன்றாக அறிந்துகொண்டே இவர்கள் இப்படி ஜனங்களை மயக்குகிறார்கள். மந்திரத்தினால் வியாதிசொஸ்தம் செய்வதாகச் சொல்வதும் இந்த ரகசியத்தைக்கொண்டே.

* * * *

வடஆற்காடு ஜில்லா வாலாஜாவில் ஒரு பிராமணன் அவன் வீட்டினுள்ளிருந்த கிணற்றைத் தூர்வாரி ஆழமாகப் பறிப்பதற்காகச் சில ஒட்டர்களைக்கொண்டு வேலைநடத்தினான். அந்த ஒட்டர்களில் ஒருவன் பாதிக்கிணறு இறங்கியதும் மயக்கம்வந்து சுழன்று கிணற்றில்விழுந்து இறந்து விட்டான். அவனையெடுப்பதற்காக ஒருவர்பின்னொருவராக நாலுபேர் கிணற்றில் இறங்கினார்கள் : இவர்கள் நால்வரும் அப்படியே திக்குமுக்காடிக் கிணற்றில்விழுந்து மாண்டுபோனார்கள். பிறகு போலீசார்வந்து கிணற்றைப் பரிசோதிக்க ஒரு பன்றியைக் காலைக்கட்டிக் கிணற்றில் விட்டார்கள். பாதிதூரம்போனபின் அதுவும் திக்குமுக்காடி இறந்தது. பிறகு ஒரு கோழியைவிட்டுப் பரீக்ஷித்தார்கள் : அதுவும் அப்படியேயிறந்தது. ஞானமற்ற மூடஜனங்கள் இந்தக்கிணற்றில் பேயிருந்தது பிசாசிருந்தது என்றுசொல்லி நடுங்குவார்கள். இதேமாதிரி இன்னோரிடத்தில் ஒரு கிணற்றைத் தூர் எடுக்கும்வேலையை சட்டைக்காரன் ஒருவன் ஒப்புக்கொண்டான். அவன் அந்தக்கிணற்றில் எடுத்ததும் தானிறங்காமல் ஒரு மெழுகுவற்றியைக் கொளுத்திக் கிணற்றினுள் விட்டான். பாதிக் கிணறு போனதும் ஒளி மங்கி அணைந்து போய்விட்டது. அதைக்கண்ட அவன் புருவத்தைத் தூக்கித் தலையையாட்டிக்கொண்டு 'அப்பா!' என்று சொல்லிக்கொண்டு ஒரு துணிக்குடை கொண்டுவரச் சொன்னான். அக்குடையை விரித்து ஒரு கயிற்றில் கட்டி ஜலத்தில் நனையாதபடி அதைக்கிணற்றுள் விட்டுவிட்டு மேலேயிழுத்து தண்ணீரிறைக்கிறபாவனையாக அந்தக்குடையைத் தரைமேல் கவிழ்த்து வந்தான். அந்தக் குடையில் தண்ணீர் ஒன்றும் வராமையால் கிட்டவிருந்தவர்கள் அ[illegible] பைத்தியக்காரனைப்போல் பாவித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இப்படிப்பலதரம் குடையைக் கிணற்றில்விட்டு மேலேயிழுத்துக் கொட்டினபின் அவன் மறுபடியும் கொளுத்தின விளக்கைக் கிணற்றில் விட்டுப்பார்த்தான் : தண்ணீர் மட்டம்வரையில்விட்டும் அது அங்கே நன்றாக எரிந்துகொண்டிருக்கக் கண்டான். இதைப்பார்த்திருந்தவர்கள் இப்பொழுது இளிச்சவாய்த்தனம் போனவர்கள் தாங்களேயென்றுணர்ந்து அவன் செய்தசெய்கையின் நோக்கமென்னென்று அவனை வினயமாய்க் கேட்கவும், அவன் முதலில் விளக்கணைந்தபொழுது கிணற்றில் 'கார்பானிக் ஆஸிட்' என்னும் கரிவாய்வு அதிகமாக விருந்ததால் விளக்கு அணைந்துபோயிற்றென்றும் அக்காற்று சாதாரணக் காற்றைவிட கனமானதால் குடையைவிரித்து கிணற்றில் தாழ்த்தி மேலே யிழுத்தால் அது குடையில் தங்கி மேலே வந்துவிடு மென்றும், அதை அப்படி கொண்டுமொண்டு கொட்டினதினால் அக்காற்று முழுவதும் வெளியேவந்துவிட இரண்டாந்தரம் கிணற்றில் தாழ்த்தப்பட்ட விளக்கு முன்போல்மங்கி அணைந்துபோகாமல் பிரகாசமாக எரிந்ததென்றுஞ்சொல்லி அவர்களுக்கு விஷயத்தை விளங்கவைத்தான். அறியாமையினால் ஓரிடத்தில் 5-பேர்கள் புத்திகெட்டு கிணற்றில் விழுந்து மாண்டார்கள். அறிவின் பயனாயுண்டானபுத்தி சூக்ஷ்மத்தால் அ[illegible] தர்ப்பத்தில் மற்றொருவன் தன்னுயி[illegible] பாற்றிக்கொண்டதுமட்டுமன்றி த[illegible] கொண்ட வேலையையும் தனக்கு ஹானிவராமல் சுலபமாகச்செய்துமுடித்து தனக்குள்ள கூலியை வாங்கிச்சென்றான். இதனால் புத்தி விவேகத்தின் பெருமை வெளியாயிற்று.

> "அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
> என்னுடைய ரேனுமிலர்"

என்று திருவள்ளுவநாயனாரும் கூறியுள்ளாரல்லவா.

" EDUCATION, IN FACT, IS AS IMPORTANT AS WAR SERVICE."

—"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

'HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். **23.**] ராக்ஷஸஹு மாசிமீ, **1916**ஹு பிப்ரவரிமீ [சஞ்சிகை **11.**

" EDUCATION, IN FACT, IS AS IMPORTANT AS WAR SERVICE."

"Education, as Important as War Service."

"THE EDUCATIONAL NEEDS OF THE HOUR."

It is well-known to all that this is a time "when education is being starved everywhere in British India on the ground that the war calls for economy in expenditure."

This is applying the shears at the wrong end as will be seen from the following observations "on the educational needs of the hour" which we take from the English papers. Lieut. General Sir Robert Baden-Powel says: "Retrenchment in education would be disastrous. Ultimate victory in this war will not be merely territorial but will rest with the nation that is able within a single gen ration, to rise from its exhaustion. To secure this, education on the most up-to-date lines is necessary, and development rather than retrenchment should be the rule. Education, in fact, is as important as war service."

"In the present crisis and in the immediate future, more education will be needed, not less, and that the available funds must by all means be augmented."—*The Executive of the National Education Association.* (England.)

LORD SELBOURNE, speaking on behalf of the Minister of Education . . . fully recognises the duty of stimulating the teaching of the duties of citizenship to school children. Sir Robert Baden-Powell would take the process back a stage further and begin with the basis of citizenship—CHARACTER. When the Spirit of duty, honour and self-sacrifice has been deve-

loped in the youth of the nation,—not by external teaching, but by wise and active training from tender years—the duties of citizenship will follow of themselves.

Professor Holmes, late Chief Inspector of Elementary Schools, writing in the *Nineteenth Century and After* on German Educational Ideals, points out the dire effect of that country's mechanical autocratic methods. Life is externalised, he says, and WILL "the mainspring of Life" is weakened.

"'Great men do not lose their Child-Heart,' and one of the lasting things which the Viceroyalty of His Excellency Lord Hardinge has done to renew and rejuvenate the drooping Spirit of India and uplift it to the glory of its ancient Ideals, is the foundation of the "Children's Day" in India, which has done (more than anything else could have done in so short a period), a great deal to awaken the **Child-Heart** and through it the child-mind to the duties and responsibilities resting on it as a civic factor in the uplift of Humanity to a higher and greater level of Earthly Life—"the Life Imperial"—from which alone it can realise the glorious destiny awaiting it in the near or distant future, according as the pace and the direction it takes to move along the Eternal Road of Evolutionary Growth, is quick and straight, or halting and crooked or round-about. Revolutions of ages cannot recover a lost truth which the child-mind fails to grasp at the proper stage in its evolutionary growth."—Extract from a Dedicatory Epistle to the Minister of Education.

The Viveka Chintamani.

The January Number of this Journal is as usual interesting. For Home Education of Children and women, this Journal is a necessity. The Tamil used in this Journal is very chaste and simple and the articles are instructive to those they are intended.—*The South Indian Mail, dated 24th January* 1916.

THE VIVEKACHINTAMANI.

The January issue of this excellently conducted Tamil monthly is tackling with the serious problems of Child Education and begins with an extract from *the Times' Educational Supplement* on the necessity for parents and teachers recognising the fact that "Children have a stonger desire for first principles than most people suppose." That is a natural desire of the human mind and the more it is recognised the better will it be for Society and State. This lesson is deduced by a lengthy survey in review of the events of the past year in which "the work of the spirit" which "works for work's sake" is illustrated and pointed out as the only way by which the triumph of righteousness in the end can be secured. The spiritless education now in vogue both in England and India is touched upon and the necessity of a complete change in the conception of education is pointed out as one of the most pressing educational needs of the hour. The lesson of the last year thus set forth is illustrated by a parallel from the traditional lore of the country and its moral is credited to the New Year's account as its "inheritance" from the past year. The Viceroy on Educational Efficiency and Sir Rabindranath's address on the vehicle of teaching are dwelt upon as giving weight to the plea for the "new conception of education which to India is as old as the Himalayas." Other articles of interest are: Books and how to read them; on wages: an economic lesson; the Old Man's comforts and how he gained them; the Golden necklace - a tale of modern times; a short story on Brotherly Love and Health notes under Sanitation Columns.—*The Indian Patriot, dated* 24th *january* 1916.

THE VIVEKACHINTAMANI.—The current number of this popular Tamil monthly contains a number of interesting articles illustrating that "children have a stronger desire for first principles than most people suppose." The "Viceroy on educational efficiency" "Vehicle of teaching"—"Sir Rabindranath Tagores' address" stories and illustrations form its most special features.—*The Hindu, dated 24th January,* 1916.

புஸ்தகம்-23.] [சஞ்சிகை-11
"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."
ராக்ஷஸ ஸூ மாசி மீ
விவேக சிந்தாமணி
February-March. 1916.
ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாமுவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றோ மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழ்வர் வந்ததென்னோ சேவிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

"EDUCATION, AS IMPORTANT AS WAR SERVICE."

யுத்தசிக்ஷையைப்போல் பாலசிக்ஷையும் அவசியமானதே.

இப்பொழுது நடந்துவரும் பாரதப்போர் வெகு விந்தையானது: ஏனென்றால் அதனால் ஜனசமூகங்கள் எல்லாம் அவரவர்கள் குற்றங் குறைகளை யோர்ந்து திருத்திக்கொள்ள இது தெய்விகமாய் வாய்ந்ததோர் சாதனமாயிருக்கிறது. இதனால் பணம் பெரிதென்று நினைத்திருந்தவர்களெல்லாம் பணக்குவியலால் மட்டும் ஆவதொன்றில்லை; பணத்திலும் குணத்தின் பெருமையே பெருமையென்று கண்டு கொண்டார்கள். இது மிகவும் முக்கியமான நற்போதனையல்லவா !

இரண்டாவது: "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்று வல்லடிவழக்குத் தொடுத்து வந்தவர்களெல்லாரும் ஜெர்மனியின் வல்லடி வழக்கையும் அதனால் உலகத்துக்கு விளைந்த அநர்த்த பரம்பரையையும் உணர்ந்துகொண்டு, முரட்டுபலம் பொதுஜன க்ஷேமத்துக்குப் பிரதிகூலாஸ்பதமேயன்றி அநுகூலாஸ்பதமில்லையென்று அறிந்துகொண்டிருக்கிறார்கள்.

மூன்றாவது: நாஸ்திகபாவமுள்ளவர்களெல்லாம், நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைப்பதையும், தெய்வசங்கல்பம் நிறைவேறுவதாயிருக்க மனிதசங்கல்பம் நிறைவேறாது நிலைகுலைந்து சிதறிப்போவதையு முணர்ந்து, மனிதனுடைய சிற்றறிவுக்கெட்டாததாய் பேரறிவுள்ளதும் நினைத்தது முடிக்கும் ஆற்றலுடையதுமாய் ஆத்மசக்தி யொன்று (அறிவின் திறன்) இருக்கிறதென்றும் அது தன்னைத்தானே தர்மவழிபற்றி யுழைத்துக்காரியத்தை முடித்துக்கொள்ளும் திறமை வாய்ந்ததாயிருக்கிறதென்றும் உணர்ந்து வருகிறார்கள்.

நான்காவது: ஆத்மசக்தி வேலை செய்து வரும் வகையானது மனிதன் தட்டுக்கெட்டுத் தடுமாறிக்கொண்டு முன் பின் பொருத்தாது உழைக்கும் உழைப்பைப்போல் இன்றி, நித்தியமாய், நிர்மலமாய், நிர்விகாரமாய், நிராலம்பமாய் (நிராதாரமாய், தானேதானாய்) இருக்கும் ஸ்வயம்பிரகாச அறிவு ஒன்றுக்குமட்டும் கட்டுப்பட்டு வேறெந்தத் தடைக்கும் கட்டுப்படாததாயிருக்கிறதென்று உணர்ந்து வருகிறார்கள். அந்த ஆத்ம சக்தியானது தாமரையிலை யிற்றண்ணீர்போல் விஷயப் பிரவிர்த்தியில் ஒட்டியும் ஒட்டாமல் விமுக்தமாயிருந்து நிஷ்காமியமாக வேலைசெய்வதால் அது சிக்கல் முக்கலான சங்கடங்களில் அகப்பட்டுக்கொள்வதில்லையென்றும் அகப்பட்டுக்கொண்டதாகத் தோன்றினாலும் அதனுடைய விமுக்த லக்ஷணத்தால் அது தளைகளையெல்லாம் அறுத்துக்கொண்டு தன் சக்திக்குக் குறைவுவாராமல் வேலைசெய்து வருகிறதென்றும் சிறிது உணர்ந்து வருகிறார்கள். ஸர் ராபர்ட் பேடன்-பௌ

வல் அவர்கள் நன்றாக எடுத்துச்சொல்கிறபடி இந்தப் பார'தயுத்தம் கடைசியாகப் போதித்த நீதி யென்னவெனில் இதுவரையில் குழந்தைகளைப் படிப்பித்துவரச் செய்யப்பட்டு வரும் முயற்சிகளெல்லாம் அக்குழந்தைகளின் ஆத்மசக்தியைக்(Spiritual activities)கிளப்பிவிட்டு பயிர்ச்சி செய்வதாயின்றி 'விழலுக்கிறைத்த நீர்போல்' விருதாவில் கழிந்தொன்றுள்ள 'ஞானம்' உதிக்கச் செய்ததே. இந்தப் பாடம் படிக்க ஐரோப்பிய தேசத்தார்கள் எல்லாரும் கிறிஸ்து பிறந்தபின் 2000-வருஷங்களா யுழைத்துவந்தும் இது அவர்கள் மனத்தில் ஏறினதில்லை. இப்பொழுதுதான் இந்த யுத்தத்தில் பட்டனுபவித்த சொந்த அனுபவங்களினுல் பாரதூரயோசனை செய்ய வல்லவர்களான சிலரால் ஊகித்துணர்ந்து போதிக்கப்பட்டு வருகிறது.

"சொக்கா சொக்கா சோறுண்டோ ?"

"சோழியன் வந்து கெடுத்தாண்டோ !"

என்றொரு அம்மையார் கதையுண்டு. அதை யெல்லாரும் கேள்விப்பட்டிருப்பார்கள். அதன் படிப்பினை யென்னவென்றால்: இருள் வெளியில் (மனவிருள் மண்டிய விடத்தில்) பசியாறவுண்டு பிழைத்துவரும் பேய் பிசாசுகள் (மருளிற் பிறந்த மனோபாவங்கள்) விளக்கு வெளிச்சத்தைக் கண்டால் (அறிவோதய மானவிடத்து)ப் பிழைப்புக்கெட்டு இருக்கவிடமின்றி ஓடிப்போம்-என்பதே. ஒருவன் இருட்டில் சோறுதின்றுவர அவன் கொல்லைப்புறத்திலுள்ள பிசாசுகள் அச்சோற்றின் ஸத்தான பாகத்தை அவனுணராமல் உண்டு கொழுத்து வந்தன. நடராஜ பக்தனாகிய சோழியன் ஒருவன் (தில்லைவாழந்தணர் கூட்டத்தான்) அவன் வீட்டுக்குவர, அவன் இருட்டில் சோறுண்டு, உண்ட சோறு உடம்பில் ஒட்டாமல் பரிதபித்துழல்வதைக் கண்டு, அவனுக்கு விளக்கு வெளிச்சத்தால் சோறுண்ணவேண்டியதின் அவசியத்தைப் போதித்துச் சொன்னான். அது முதல் பேய்களுக்குப் பிழைப்புக் கெட்டுப்போய்விட்டது. அவனும் சம்பத்தடைந்து வாழ்ந்தான். அந்த தரித்திரன் இருட்டில் சோறுண்டதுபோல, ஜனசமூகங்களுக்குத் தலைமை ஸ்தானத்திலுள்ள துரைத்தன காரியஸ்தர்கள் ஜனசமூகச் செல்வமாகிய ("Children are the chief asset of the Nation") குழந்தைகளுக்கு மனவிருட்டு நீங்காமற்றே (இருட்டில்) சோறு போட்டு வந்தார்கள். அதாவது, ஜீவனோபாயம் போதித்து வந்தார்கள். மனவிருள் நீங்காத காரணத்தால் அவர்கள் அஜ்ஞானத்திலுழன்று தானே ஜீவனவகைதேடி யுழைத்து, உழைத்த உழைப்புச் சிறக்காமல் சீர்கெட்டு சிறுப்பாணிப்பட்டார்கள். இந்த வுண்மை அவர்களுக்கு சாதாரண காலங்களில் விளங்கவில்லை. தரித்திரன் வீட்டுக்குச் சோழியன் விருந்தாக வந்ததுபோல், இந்த பார'தப்போரானது அதில் உடன்பட்டு ஈடுகொடுத்துத் தேறச் சக்தியில்லாதவர்களையெல்லாம் அதிலிழுத்துவிட்டு, அவர்கள் நாகரிகம்பெற்றதாகக் கொண்ட எண்ணங்களெல்லாம் தரித்திரன் உண்ட சோறுபோல் ஜனங்களின் சமஷ்டி சரீரமாகிய தேசப்பொதுசமூகத்தில் ஒட்டி உறங்கொடுக்காமல் கழிந்துபோனதைக் காட்டிவிட்டிருக்கிறது.

நிஷ்காம்ய கர்மம் செய்வதின் பெருமையையும் அதன் அவசியத்தையும் இப்பொழுதுதான் அவர்கள் உணரத்துவக்கி யிருக்கிறார்கள். ஏற்கனவே லண்டன் டைம்ஸ் பத்திரிகை இது விஷயமாய் பெற்றோர்க்கு ஞானபோதம் செய்யத் துவக்கியிருப்பதைச் சென்ற சஞ்சிகையின் முகட்டில் அப்படியே இங்கிலீஷில் அச்சிட்டு வெளியிட்டு அதன் உட்கருத்தை உதாஹரித்துக் காட்டி யெழுதி யிருந்தோம். "The philosophy of the spirit" என்று அந்த டைம்ஸ் பத்திரிகையில் போதிக்கப்பட்டிருந்த உண்மை பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் குருக்ஷேத்திரத்தில் யுத்த முனையிலிருந்து கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்குப் போ

தித்ததன்றி வேறொன்றுமில்லை. அதையே யேசுகிறிஸ்து அவருக்குப்பின் அவதாரமாகிப் போதித்துள்ளார். நித்திய பரம்பரையாக அவதாரமாகி ஆத்ம ஞானத்தை வளர்த்துவரும் யோகிகள், ஞானிகள், முனிவர்கள் எல்லாரும் ஆசைப்பட்டுழைப்பதெல்லாம் மனம் பற்றற்ற நிலையிலிருந்து அறிவையாச்ரயித்து நின்று, தனக்கென்று ஒன்று வேண்டாது பரோபகாரமாகத்தானே எல்லா வேலைகளையும் செய்துவரப் பழகல்வேண்டுமென்றே யன்றி வேறொன்றுக்குமில்லை.

"உருவிலாகும் சித்தியெல்லாம் உலகத்தோர்க்கே" என்றோதியதின் உண்மையும் இதுவே யன்றி வேறில்லை. ஆதலால் இச்சமயத்தில் சண்டைக்கு நிற்கக்கச்சைகட்டிக்கொண்டு புறப்படுகிறவர்கள் செய்யும் போர்ச் சேவகத்தைப்போல் குழந்தைகளை நல்வழியில் படிப்பிக்க முயற்சிப்பதும் தேசத்தின் யோகக்ஷேமத்துக்கு இன்றியமையாத சாதனமாயிருப்பதால் அத்துறையிலிறங்கிச் சாதகர்களா யிருந்துழைப்பவர்கள் செய் ஊழியமும் போர்ச் சேவகத்தைப்போல இந்த ஆபத்துச்சமயத்திற்கு இன்றியமையாததோர் முயற்சிதானென்று ஆங்கிலேயர் ஒருவர்தானே வற்புறுத்திக்கூறி அதற்காக உழைத்து வருவதைக்கேட்கச் சந்தோஷப்படுகிறோம்.

ஆங்கிலேய வித்யாமந்திரிக்காகப் பேசிய லார்ட் ஸெல்போர்ன் அவர்கள் பள்ளிப் பிள்ளைகளுக்குச் சமஷ்டிசேவையின் முக்கியத்தை (Duties of citizenship)ப் பற்றிப் போதிக்கவேண்டியது மிகவும் அவசியம் தானென்று ஒப்புக்கொண்டிருக்கிறார். சமஷ்டிசேவையின் முக்கியம் சமஷ்டி சேவையின் தர்மமுணர்ந்தவர்கள் மனத்தில் தானேயுதிக்குமாதலால், தன்மதிப்பு, தன்னறிவு, தன்னைக்கொடுத்தலாகிய 'ஸ்வஸ்வா:' என்னும் பெரிய ஆத்மவுணர்ச்சிகளுண்டாகக் குழந்தைகளுக்குப் போதித்தால் சமஷ்டிபாவத்தில் நகரமாக்களாகப் பொதுக்ஷேமத்துக் குழைக்கவேண்டிய கடமைகள்தானே செய்யவரும் என்று ஸர் பேடன்-பௌவல் வற்புறுத்திக் கூறுகிறார்.

ஆங்கிலேயருக்குப் புதிதாய்ப்படும் இந்த வுண்மைகளெல்லாம் இத்தேசத்தாருக்குப் புராதனமா யேற்பட்ட பிதிரார்ச்சித பொக்கிஷமாக விருக்கிறது. அதை யனுபவித்தாள அவர்களுக்குத் திறமையில்லாமலிருப்பது அவர்கள் மனப்பயிர்ச்சிக் குறைவினாலேற்பட்டது. இதனால் பாலப்பருவம் வீணில் கழிகிறது. இந்த வீண் நஷ்டம் நேராதபடி காக்க தற்சமயம் இந்த வுண்மைகளை யுணர்ந்த இந்தியர்தானே இந்தியாவின் வித்யாமந்திரி ஸ்தானத்திலிருக்கிறாராதலால், அவர் போர்ச் சேவகத்தைப்போல் இக்காலத்துக்கு மிக முக்கியமானதாயுள்ள சமஷ்டி சேவையைப் பிரபலப்படுத்தவேண்டிய முயற்சி யெடுத்துக்கொள்வார்களென்று எல்லாரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இது விஷயமாய் நமது இராஜப் பிரதிநிதியாகிய கனம் தங்கிய லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் "பாலர் திருவிழா" (Children's Day) ஏற்படுத்தினதில் ஏற்கனவே இத்தேசத்துக் குழந்தைகளுக்கு ஒரு பெரிய சாதகமளித்திருக்கிறார். அதை யொட்டி நாட்டுப் படிப்பிலும் அவசியமாகச் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்து கற்றகல்வி மனப்பழக்கம் தருவதாயிருக்கும்படிச் செய்யவேண்டும். "தன்னை வென்றவன் தலைவனவன்" என்றும் "தன்னைக் குடிகெடுக்கும் நெஞ்சுக்குக் குற்றேவல் செய்யின் பிடிபடுக்கப்பட்ட களிறு" என்றும் பெரியோர் வசனம் இத்தேசத்தில்பழமொழியாக வழங்கிவருவதால் இதற்கனுகுணமாகப் பள்ளியிற்போதிக்கச் சீர்திருத்தங்கள் செய்வது அவருக்கு முடியாத காரியமாயிருக்காதென்று நினைக்கிறோம்.

"A NATION RISES NO HIGHER THAN ITS MOTHERS."

SOME THOUGHTS ON THE EDUCATION OF WOMEN.

"If India was to develop, the Indian women must be allowed to develop on their own lines. They must be educated on lines beneficial to Hindus. To copy the European would only result in miserable imitation. Every Hindu woman no doubt possessed some of the qualities of Sita. There were other qualities in her which had to be developed. People often complain of the want of religious training in Hindu youths. But if the mothers were properly educated there would be no room for that complaint."—SIR S. SUBRAMANIYA IYER, *on the lessons taught by Sri Ramakrishna's life.*

"Miss Hughes insisted that understanding of the East was necessary before Europeans could attempt to instruct Orientals. The history of the country should also be known. No race could properly educate another, each race must evolve its own education."—Miss Hughes at a meeting of the N.I.A, London, on the "Education of the women of the Far East."

"If India is to have no future, then by all means leave the women ignorant, but if you look to a bright future, then for every day you postpone the education of your women, you postpone in equal measure, and in exact proportiou that bright future, for, "a nation rises no higher than its mothers."—Mrs. (Now Lady) Benson.

"தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை."

பெண்பாலார்க்குக் கல்விபோதித்தலைப்பற்றி.

இந்தியாவின் தற்கால நிலைமையும் வருங்காலச்சீரும் எல்லாராலும் மிகக் கவனிக்கப்பட்டு வருகிறது. பூர்வகாலத்தில் ஹிந்துக்கள் நாகரிகத்திலும் செல்வத்திலும் பேர்போனவர்களாயிருந்தார்களென்பதிற் சந்தேகமில்லை. அவருடையசந்ததியார்களாகியஇக்காலத்து ஹிந்துக்கள் ஒற்றுமையின்றி செல்விக்காய் மூட்டைகளாய் பிரிடிஷ் அதிகாரம் என்னும் கோணிப்பையினுல் கட்டுண்டு கிடக்கிறார்களென்பதும் ஸ்பஷ்டம். இப்பொழுது இந்தியர்கள் "முன்னுக்குவந்து சீர்பெற்று விளங்குவது எப்படி?" என்பது எல்லார் சிந்தையையும் கவரத்தக்க முக்கியவிஷயமாயிருக்கிறது. சிலர் சாஸ்திரங்களை அனுஷ்டித்தாலன்றி ஹிந்துக்கள் முன்னுக்குவாரார்கள் என்றுகிறார்கள். சிலர் இதரமதஸ்தர்களுடைய ஆர்ப்பாடங்கள் அடங்க ஹிந்துக்கள் உழைத்தாலன்றி கடைத்தேறார் என்கிறார்கள். சிலர் ஐரோப்பியர்களைப்பார்த்து நமது ஆசார அனுஷ்டானங்களைச் சீர்திருத்திக்கொண்டாலன்றி நாம் உருப்படோமென்கிறார்கள். இன்னும் சிலர் ஜாதிமதபேதங்களை யெல்லாம் விட்டொழித்து எல்லாரும் வித்தியாசமின்றி கலந்து ஒன்று பட்டாலன்றி நமக்கு கதிமோக்ஷமில்லை யென்கிறார்கள். இப்படி பலர் பலவிதமாகச்செல்லி 'ஒரு சாரார் மற்றொரு சாரார்மீது குற்றங்கண்டுபிடிப்பதும்' அவர்கள் வழிவகைகளைக் கண்டித்து தாங்கள் போகிறவழியே புனிதமானதென்று விதண்டாவாதம் செய்வதுமாயிருக்கிறார்கள். இது விஷயமாக பாராதூர யோஜனைசெய்து ஆர அமர ஆராய்ந்து சிந்திக்கில் இவையெல்லாம் மேலெட்டமானவழிகளேயன்றி மூலாதாரத்தைப் பற்றினவைபல்ல வென்று ஸ்பஷ்டமாய் விளங்கும். காலதேசவஸ்து பரிச்சேதங்களுக்குட்படாமலும் அவைகளால் மாறுபடாமலுமிருக்கும் வஸ்து ஒன்றே. அது "ஏவமேவாத்வைதம்" என்னும் சுருதி வாக்கியத்துக்கிலக்காய் இரண்டற்று ஏகமாய் விளங்கும் மூலகாரணப்பொருள் ஒன்றேயாம். இந்த ஏகமான நித்ய சுத்தமுத்தப்பொருளை யனுசரித்து விளங்கும் தத்துவங்கள் அநேகமுள. இத்தத்துவங்களை யாதாரமாய்க் கொண்ட கொள்கைகள் அநேக மிருக்கின்றன. இந்தக் கொள்கைகளையுள்ளபடியுணர்ந்து காலதேசவர்த்தமானங்களுக் கிசைய அவைகளைப்பொருந்த அமைத்து அனுஷ்டிப்பவர் யாரோ அவரே எத்தேசத்தராயினும் எம்மதத்தராயினும் எக்காலத்தவராயினும் உண்மையில் உள்ளபடி

கடைத்தேறிப் பிழைப்பவர்களாவார்கள். மற்றவர்களெல்லாம் உத்ஜீவிக்கப் போட்டிபோட்டுக்கொண்டு மாண்டு மடியவேண்டியவர்களேயாம். நமது சாஸ்திரங்களுக்கு ஏனவ்வளவு மேன்மையென்றால் அதைச் செய்தவர்கள் தீர்க்கதரிசிகளாய் உண்மைக்கொத்தவர்களாயிருந்து தங்கள் ஸ்வரனுபவச் செல்வப்பெருக்காலுண்டான ஞானதிர்ஷ்டி கொண்டு எக்காலத்துக்கும் பொருந்த ஜனசமூகங்களும் ஜீவகோடிகளும் சத்தியத்துக்கொப்ப சன்மார்க்கவழி யனுசரித்து சாம்பிராஜ்யம்பெற்றுய்யும் பொருட்டு 'விர்த்தி க்ஷய லய' முறைபற்றி முக்கியமான மூலக்கொள்கைகளை காலத்துக்கேற்கப் பொதுவாய் விளங்கத் திரட்டி சாஸ்திரங்களாக்கிவைத்தார்கள். இந்த சாஸ்திரங்கள் 'எக்காலத்துக்கும் பொருந்துபவையென்பது' காலாதீதமான தத்துவக்கொள்கைகள் எக்காலத்து மொன்றே யென்னுமர்த்தத்தில் பொருந்துமேயன்றி மற்றப்படி காலதேச வர்த்தமானங்களை யொட்டிப்பார்த்தால் பொருந்தாவாம். சாஸ்திரங்களை ஆதாரமாகக் கொள்வோர் சாஸ்திராதீதமாய் சாஸ்திரங்களுக்கெல்லாம் காரணமாயிருக்கும் உண்மையை யுள்ளபடி யறியாது வார்த்தைகளை மட்டுங்கொண்டு வாக்கியார்த்தம் செய்யப் பார்ப்பது முற்றும் பலிக்காமற்போகிறது. பூர்வகாலத்தில் ஹிந்து ராஜாக்கள் ஞானிகளைப் பூஜித்து அவர்கள் வாக்கைச் சிரமேல்கொண்டு இராஜ்ஜியபாரம் செய்து வந்தார்கள். இக்காலத்து கவர்ன்மெண்டாரும் அப்படியே தர்மத்தை மேலாக மதித்து இராஜ்ஜியபாரம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். ஆள்வோருக்கும் ஆளப்படுவோர்க்கும் ஜாதிமதவேற்றுமையும் இன்னும்பல்வேறுபாடுகளு மியல்பாயேற்பட்டிருப்பதால் அவர்கள் எக்காலத்துக்கும் பொதுவான சாஸ்திர உண்மைகளை யுணர்ந்து உள்ளபடி அதை இத்தேசத்தின் பூர்வசரித்திரத்துக்கும்ஜனங்களின்தேகமனே தர்மங்களுக்கும் பொருந்த அனுஷ்டிப்பது அவர்களுக்குசாத்தியமாகவில்லை. ஹிந்துமதமும் ஹிந்துநாகரிகமும் உண்மையில் உள்ளபடி ஐரோப்பியர் மதம் ஐரோப்பியர் நாகரிகம் இவற்றைவிட மேலானதாகவிருப்பது வாஸ்தவமானுல் (வாஸ்தவமென்பதிற் சந்தேகமில்லை) மேற்படியிலுள்ளவர்கள் கீழ்ப்படியிலுள்ளார் உண்மையையும் அனுபவத்தையும் உள்ளபடியறிந்து தங்கள் அனுபவத்திற்குக் கொண்டுவருவது சுலபமாம். கீழ்ப்படியிலுள்ளார் மேற்படியிலுள்ள நாகரிகத்தினுண்மையையுள்ளபடி யுணர்வது அசாத்தியமாம். அத்வைத சித்தாந்தம்பற்றி ஆத்மானந்தானுபவம் பெற்றவர்கள் 'விசிஷ்டாத்வைதம்' 'துவைதம்' 'சகுணோபாசனை' முதலியவற்றை எளிதிலறிந்து கொள்ளலாம். அப்படியே கீழ்ப்படியிலுள்ளவர்கள் மேற்படியுண்மையை அப்படியிலிருந்து உணர சாத்தியமில்லை. பகவத்கீதையை அனுபவார்த்தமாக அறிந்தவர்கள் கிறிஸ்துவையும் கிறிஸ்துபோதமாம் பைபிளிலடங்கிய உண்மைகளையும் உணருவது இலகுவாம். கிறிஸ்துவை சகுணோபாசனை செய்து அவ்வுபாசனுபலன் பெற்றவர்கள் நிர்குணோபாசனையை யுள்ளபடி யுணர்தல் எளிதன்று. இந்த வுண்மையை யுணராமல் சில கிறிஸ்தவ பாதிரிகள் பகவத்கீதை பைபிளுக்கு உபகாரண நூல் என்று சொல்லி வாதிக்கிறார்கள். இது அவர்கள் அறியாமையால் சொல்வது. அறியாமை யகன்றலொழிய அவர்கள் உண்மையை உள்ளபடி யுணரார். இது நிற்க. இப்பொழுது இவையெல்லாம் தலைப்பெயரிலுள்ள வாக்கியத்துக்குப் பொருந்துவதெப்படி என்கிற கேள்வி பிறக்கலாம். அதைக் கீழே சொல்கிறோம்.

ஹிந்துக்கள் முன்னுக்குவர வழியென்னவென்றால் தாய்மார்களை முன்னுக்குக் கொண்டுவருவதே உண்மையானவழி. "தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை" யாதலால், தாய் சீர்பட்டாலன்றி, பிள்ளை சீர்படாது. ஏனென்றால் நூல் எவ்வளவு சன்னமாயிருக்குமோ அவ்வளவு சன்னமாகத்தானிருக்கும்

சேலையும், நெசவுகாரணங்களும் நெசவு வேலைக்காரனும் எவ்வளவு மேன்மைப்பட்டிருக்கினும் நூலைவிட சந்நமான சேலை நெய்யமுடியுமா? புருஷர்கள் படித்துத்தேறி கல்விப்பயிற்சியில் மிகுந்தவர்களாயிருக்கிறார்களே தாயைப்போல தகப்பனும் உற்பத்திகாரணன் தானே, தகப்பனுடைய விர்த்தியும் சீர்மையும் பிள்ளைகளிடத்தில் விளங்காதா வென்று கேட்கலாம். ஆனால் அதற்குள்ள குறையைக் கவனிக்கவேண்டும். வித்து மட்டும் நல்லதாயிருந்து, விதைக்கும் நிலம் வளங்குன்றி வரட்டுத்தரையாக விருந்தால் அவ்வித்து உள்ளபடி பலனைக்கொடுக்குமா? "தண்ணீர்நிலநலத்தால் தக்கோர்குணங் கொடையால்" என்றிருப்பதால், தாய் தகப்பன் இருவருடைய குணங்களும் பிள்ளையினிடத்தில் பிரதிபலிப்பது உண்மையாயினும், தகப்பனுடைய சீர்மையும் மேன்மையும் தாயினுடைய நலத்தினளவாகவேயிருக்கும் பிள்ளையினிடத்தில். தண்ணீர் நலம் அதனூறும் நிலத்தினுடைய நலத்தினளவாகவேயிருப்பது போல் பிள்ளைகளின் நேர்மையும் சீர்மையும் தாயினது நேர்மை சீர்மையின் அளவினதாகவேயிருக்கும். இது ஒரு பெரிய உண்மை. இது மாறாத தத்துவக்கொள்கை. இந்த உண்மையை மிஸ்ஸஸ் பென்ஸன் துரைசானி வற்புறுத்திக்கூறி "ஹிந்துக்கள் முன்னுக்கு வரவேண்டுமானால் பெண்களைப்படிப்பித்து முன்னுக்குக் கொண்டுவரவேண்டும்: ஏனென்றால் ஒருஜாதியின் நேர்மையும் சீர்மையும் அச்சாதியிலுள்ள தாய்மார்களின் நேர்மை சீர்மைக்கு மேலானதாக ஒருக்காலும் ஆகாது" என்று சொன்னார். ஜஸ்டிஸ் ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்களும் இந்த உண்மையையே வற்புறுத்தி ஹிந்து ஸ்திரீகள் முன்னுக்குவந்தாலன்றி ஹிந்து வாலிபர்கள் முன்னுக்கு வரார் என்று சொன்னார். தாய்மார்கள் பக்திசிரத்தையுள்ளவர்களாயிருந்தால் பிள்ளைகளும் அப்படியேயிருப்பார்கள். நேற்றையதினம் நாம் பி. ஏ. பரீக்ஷையிற் றேறின ஒரு வாலிபனைக்கண்டு பேசிக்கொண்டிருக்கையில் அச்சிறுவரது உத்தமகுணத்தைக்கண்டு வியந்து "அப்பா உனக்கு இவ்வளவு தர்மசிந்தைபடிந்தது எப்படி? மதபோதனையினாலுண்டாயிற்றா?" என்று கேட்கலானோம். அதற்கு அவ்விளைஞன் கொடுத்த விடை மிகவும் உண்மையாயிருந்தது. 'நான் பக்திசிரத்தை நிறைந்த தாய் முதலானோர் நடுவேயிருந்து வளர்ந்தேன். அவர்கள் தர்மசிந்தனை பொன்னிருதயத்தை நானறியாதேபற்றி என்னையாண்டதன்றி பள்ளிப் பழக்கத்தினால் இந்த தர்மசிந்தையுண்டானதென்று சொல்வதற்கில்லை' யென்று செப்பினன். அவ்வாலிபச் சிரேஷ்டனை அவன் குடும்பத்தாரோடு நாமறிவோமாதலால் அவ்விளைஞன் உண்மையையே செப்பினனென்று நாம் உறுதியாய்க் கூறுவோம். பி. ஏ. பரீக்ஷையிற்றேறும்படி படித்தும், அவன் படித்த கலாசாலையில் மதபோதனையிருந்தும், அவன் உள்ளம் பாலப்பருவ முதல் பழகிய தன் தாயின் தர்மசிந்தனையால் உருகியுருவாயிற்றேயன்றி அவன் பள்ளியிற் படித்த படிப்பினாலில்லை. ஆகையால் ஹிந்துக்கள் முன்னுக்கு வரவேண்டுமானால், ஹிந்துக்களில் தாய்மார்களாகவிருப்பவர்களை முதல் முதல் முன்னுக்குக் கொண்டுவரல்வேண்டும். அதுவும் அவர்களைத் தங்கள் ஸ்வதாவில்விட்டு, ஹிந்துமதவழியில் அவர்கள் மேன்மையடைந்து விளங்கச்செய்யவேண்டும். அப்பொழுது தான் தீரமும், வீரமும், சத்தியமும் பொருந்திய புண்யாத்மாக்கள் புனர் ஜன்மமெடுத்து ஹிந்துக்களைக் கடைத்தேறச்செய்ய காருண்ய புருஷர்களாக வந்தவதரிப்பார்கள். சத்புருஷர்கள் நிறைந்துள்ள ஜனசமூகம் எப்போதும் உக்கமவழியில் விர்த்தியடைந்து உலகத்தில் பிரக்கியாதிபெற்று விளங்குவதோடு, இவ்வுலகமே அவர்களால் முன்னுக்கு வருவதாகும். ஐரோப்பியர்கள் ஹிந்துக்களுக்குப் போதிக்கவருமுன் ஹிந்துக்களுடைய குணங்களையும் அவர்கள் பூர்வசரித்திரங்களையும் அறியவேண்டியதவசியம். அப்படியே நாமும் ஆங்கிலேயர்களிடத்துச் செல்வாக்குப்பெற்று அவர்கள் வழியிலிறங்கி அவர்களது உண்மைகளையும் உத்தம குணங்களையும் நம்மில் விளங்கச் செய்துகொள்ளல்வேண்டும். இதுவே உண்மையில் முன்னுக்குவரும் வழியாம்.

THE BENARES HINDU UNIVERSITY.

ஸ்ரீகாசி ஹிந்து யூனிவர்ஸிடி.

Repairing "the weakest spot in our system."
'Education without Religion is of but little value.'

பிப்ரவரிமீ 4உ வெள்ளிக்கிழமை இந்தியாவின் வித்யா சரித்திரத்தில் மிகவும் முக்கியமான ஓர் நாளாய்விட்டது. அன்றையதினம் தியானம் கனம்பொருந்திய இராஜப்பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் இந்தியாவிலுள்ள ஸ்வதேசமன்னர்கள் பிரிடிஷ் இந்தியாவிலுள்ள இராஜதானி கவர்னர்கள், உதவிக்கவர்னர்கள், கௌன்ஸில் மெம்பர்கள் மற்றுமுள்ள பிரமுகர்கள் பண்டிதரத்னங்கள் சூழ்ந்திருக்க வெகு கோலாகலமாக காசியில் ஸ்தாபிதமாகத் தீர்மானிக்கப்பட்ட "ஹிந்து யூனிவர்ஸிடி" என்னும் ஹிந்து ஸர்வகலாசாலை ஸ்தாபனத்தின் அஸ்திவாரக்கல் வைக்கும் சடங்கை வெகு விமரிசையாக நிறைவேற்றினர். அந்தக்கல் வைத்ததோடு இந்தியாவின் வித்யாப்பியாச முயற்சியில் ஓர் புதியகொள்கை அங்கீகரிக்கப்பட்டது. இதுவரையில் இத்தேசத்தில் மதசிக்ஷையைத் தள்ளிப் படிப்புச்சொல்லிக்கொடுத்து வந்தார்கள். ஏனெனில், அநேக மதங்களிருப்பதால் சமயவேற்றுமையினால் வித்தியாசம் ஏற்படுமென்றும் அதனால் கலகமுண்டாகலாமென்றும் அஞ்சினதாகச் சொன்னார்கள். லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் அத்தருணம் செய்த பிரசங்கத்தில் லார்ட் ரிப்பன் காலத்தில் நியமிக்கப்பட்ட "எடியுகேஷன் கமிஷன்" என்னும் வித்யாசம்பந்தமாக விசாரணைசெய்து ரிபோர்ட்டு செய்வதற்கான கமிஷன் நியமிக்கப்பட்டதையும் அவர்கள் செய்த வேலையையும் குறித்துப் புகழ்ந்து அந்தக் கமிஷன்சபையார் குணத்துக்கு இன்றியமையாத மதசிக்ஷையைத் தள்ளிப் படிப்புச்சொல்லிக் கொடுப்பது ஒரு பெருங்குறையாயிருக்கிறதென்று சொன்னதைக் குறிப்பிட்டு, அது மிகவும் வாஸ்தவமென்றும், மதசிக்ஷையில்லாத படிப்பு மனப்பழக்கத்துக்குக் கேடு என்பதை ஒப்புக்கொண்டு, அந்தக்குறையை நிவர்த்திசெய்யும் பொருட்டே இந்த ஹிந்து யூனிவர்ஸிடி ஸ்தாபிக்கப்பட்டதென்றும், பள்ளிச்சிக்ஷையினாலும் உபாத்தியாயர்கள் போதகாசிரியர்கள் நற்பழக்கத்தினாலும் ஏதோ சிறிது குணவிசேஷம் லபிக்கலாமாயினும் அவை மதசிக்ஷைக்கீடாகா வென்றும் மதசிக்ஷையில்லாதபடிப்பு பிரயோஜனமற்றதாகிறதென்றும், குணப்பெருமைக்கு மதசம்பந்தமான சிக்ஷை தீக்ஷைகளைப்போல் அடுத்த சாதனங்கள் வேறு இல்லையென்றும் அவருடைய உள்ளமுணர்ந்த உண்மையை வற்புறுத்திக் கூறினர். ஹிந்து யூனிவர்ஸிடி, மற்ற யூனிவர்ஸிடிகளைப்போல், பரீக்ஷைமட்டும் நடத்துவதாகவின்றி, பிள்ளைகளை யூனிவர்ஸிடியில் வசிக்கச்செய்து, பூர்வம் குருகுலவாசம் செய்துவந்த வழக்கம்போல், போதகாசிரியர்களும் மாணாக்கர்களும் அங்கேயே வசித்து குரு - சிஷ்ய ஸம்பிரதாயம்பற்றி மனதைச் சிக்ஷைதீக்ஷைகளில் பழக்கி உத்தமகுண ஸம்பத்துக்கு அனுகூலமான சாதன சாதகங்களை அப்பியாஸித்து அனுஷ்டித்துவரச் செய்வார்களென்றும் அஃதோடு மேற்றிசை நாகரிகவித்தையில் உத்தமமான ஐசுவரிய விர்த்திக்கின்றியமையாத கலைகளும் போதிக்கப்பட்டு வருமென்றும் சொன்னார். பூர்வீகநாகரிக ஸம்பிரதாயத்தில் புது நாகரிக ஸம்பிரதாயமும் பொருந்தப் பொருக்கி முற்கால தற்காலவித்தைகளில் சிரேஷ்டமாகவுள்ளவைகளெல்லாம் அங்கு போதிக்கப்படுமென்றும் சொன்னார். அங்கு அவர் பேசியவற்றில் முக்கியமான அம்சங்கள் நாம் சென்ற 30-வருஷகாலமாக இந்த விவேகசிந்தாமணி மூலமாக வற்புறுத்தி வருவதற்கிசைந்தனவாகவே யிருக்கக்கண்டு சந்தோஷிக்கிறோம். இதுவரையில் இந்தியர்கள் ஏகாந்தமாக வுழைத்து வந்த உழைப்பு இனி இந்த ஹிந்து யூனிவர்ஸிடி மூலமாக நமது அரசாங்களுடைய அனுமதியும் அங்கீகாரமும் அனுதாப உதவியும் பெற்று நடைபெறுமென்று எண்ணுகிறோம். அப்படிப்பட்ட நல்லகாலம் துவங்கியதென்பதற்கு இந்த ஹிந்து யூனிவர்ஸிடியின் அஸ்திவாரக்கல் ஓர் புதிய அடையாளமாயிருக்கிறதென்று அரசர் பிரதிநிதியவர்களே சொன்னார். (This foundation stone will mark a definite step in the advance towards an ideal that has stirred to its very depths the imagination of India.) லக்ஷியமில்லாத மனோசிக்ஷை லக்ஷணம்பொருந்திச் சோபிக்காது. லக்ஷிய லக்ஷணமிரண்டிலும், லக்ஷியம் பிரதானம்; லக்ஷணம் அதன் விமர்சனம். லக்ஷியமின்றி லக்ஷணம் பிரகாசித்து விளங்காது. ஆகையால்தான் "இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்புவர்" என்று மேலோர் சொல்லியுள்ளார்.

"LYRICS AND LAY-SONGS OF TEMPLE-LEGENDS."

"The first help that our boys get here (Bolepur School) on this path (of Spiritual Culture) is from the cultivation of love of Nature and sympathy with all living creatures. . . . Music is of very great help to them—the songs being not of the ordinary hymn type, dry and dydactic, but as full of lyric joy as the author could put in them. You can understand how these songs affect the boys when you know that singing them is the best enjoyment they choose for themselves in their leisure time."—*Sir Rabindranath Tagore* (to an Englishman) *on Spirituality* in *Education.*

LYRICS AND LAY-SONGS OF TEMPLE-LEGENDS.*

நாத-கீத நாமகள் சிலம்பொலி.†

இப்புத்தகம் விவேகசிந்தாமணி பத்திராசிரியர் பஞ்சவிம்சதி பாக்கியம் என்கிற 25-வது அப்த பூர்த்தி யுற்சவத்தைக் கொண்டாடிய காலத்தும் அதற்குப் பின்னும் எழுதிய அருள்மொழி நிறைந்து பொருள் மிகச் சிறந்த விஷயங்களைத் திரட்டி விவேகமஞ்சரி 2-ம் புத்தகமாக அச்சிடப்பட்டிருந்ததைப் பல்லோர் வேண்டுகோளின்மேல் இப்பொழுது வெளியிடப்பட்டது. இதன் கருத்து அதன் ஆசிரியர் பின்னுரையிலிருந்து வெளியாகும்.

* Being a study in Temple-Traditions, Relegious Folklore and Children's Songs etc., Selected and reprinted from the Vivekachintamani, 1911-1913. on the occasion of the author's Silver-Jubilee as a Journalist: pp. xvi. A few copies in full cloth a Re. 1-4. *D. K. Agency, Lalitalaya,* 19, *Adam Street, Mylapore.*

† கோயிற் புராணம், சகபுராணம், திருவருட்சிறப்பு, அடியார் வழக்குரை முதலியன அடங்கிய விவேகமஞ்சரி புத்தகம்-2. (விவேக சிந்தாமணியிலிருந்தெடுத்தச்சிடப்பட்டது.) XVI+242 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1. சில புஸ்தகங்கள் மட்டும் காலிகோ கட்டடம் செய்தது: ரூ. 1-4-0. தபாற்கூலி பிரத்தியேகம். சென்னை, மயிலாப்பூர், லளிதாலயம் (19, ஆடம் தெரு) அ. ப. ஏஜன்ஸி.

அதை இங்கெடுத்துக் கீழே பிரசுரிக்கிறோம். ஸர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் 'போல்பூரில்' ஸ்தாபித்து நடத்திவரும் பள்ளிக்கூடத்தில் ஆத்மபோதம் செய்யுமுறையை அனுசரித்து ஸ்வாநுபூதிச் செல்வ பொக்கிஷத்திலிருந்து சமயத்துக்குத் தக்கபடி தெரிந்தெடுத்த பாடல்களும் விஷயங்களும் அடங்கியுள்ளன. அவை அது காரணம் பற்றியே "நாத-கீத நாமகள் சிலம்பொலி" யென்று பேரிடப் பெற்றன.

பின்னுரை.

"பிதற்றுமுணர் வையகத்துப் பிரபஞ்ச
விகற்பமறிவதே வீடு"—ஔவைகுறள்.

"ஆலயந்தொழுவது சாலவு நன்று."
"கோயிலில்லாவூரிற் குடியிருக்கவேண்டாம்."

"பூவதிரப் பிஞ்சுதிரக் காயுதிரக் கனியுதிர" வென்று பறைபறைந்த மஹான், சாதியில் எப்பிறப்பினனாயினும் குணத்தினால் நிறைந்தவன் அவன் கடமையைச் செய்ய வழியறியாது போகான் என்று காட்டிய மெய்யுதாரணம் உலகத்திற் பயன்படாதொழியவில்லை. இப்பொழுது நடக்கும் பாரதப்போர் காரணமாகக் கல்வியின் பயனைப் பல்தேசத்தாரும் உற்றுணர்ந்தோர்ந்து ஆராய்ந்து இதுவரையில் குழந்தைகளைப் பழக்கிவந்ததிலுள்ள குற்றங் குறைகளை யறிந்து அலசியம் தீர்ந்து திருத்துவான் முயற்சிசெய்து வருகிறார்கள். "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்ற ஔவை வாக்கின் லக்ஷியார்த்தத்தை அவர்கள் இப்பொழுது சிந்திக்கத் துவக்கியிருக்கிறார்கள். ஏட்டுப் படிப்பு வயிற்றுப்படிப்பினும் மனப்பழக்கமும் மனப்பழக்கத்தால் சித்திக்கும் குணத்தையுமே மேலானதும் இன்றியமையாததுமாயிருக்கின்ற உண்மையைக் கற்றோர் உணர்த்த உணருவாராயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சமயத்தில் "கற்ற கல்விக்கழகு (உளக்) கண்திறக்கப் பெறல்" என்னும் மூதோர் வசனத்தை ஆச்ரயித்து "கண்திறக்கப் பெறல்" ஒன்றே கல்வியின் பிரதான நோக்கமாக வுழைத்துவரல் அத்யாவசியமாகவிருக்கிறது என்பது நாம் சொல்

...லே அமையும். ஆதலால் உற்றசமயங் ...ண்டு ஏற்றகாலங்களில், இப், பிரபஞ்ச விகற்பம்' விளங்க,

"முகத்திற்கண் கொண்டுபார்க்கின்ற மூடர்காள்"
"அகத்திற்கண் கொண்டுபார்ப்பதே ஆனந்தம்."

—என்று சொல்லிய சித்தர் வாக்கைச் சிரமேற்கொண்டு நமது தேச, மத, ஜன, ஆசார, அனுஷ்டான சம்பிரதாயங்களில், கோயிற்புராணம், சகபுராணம், திருவருட்பேறு என்பவாகப் பொதிந்து கிடக்கும் உண்மைகளை ஆராய்ச்சிசெய்து வரலானோம். தற்போது பாலர்க்குழைக்க வேண்டி அதிகாரிகளோடு ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருப்பதாலும் பலர் நாம் பூர்வம் ஆராய்ச்சி செய்த விஷயங்களைப் பரிவுடன் படித்துணர விரும்பி வற்புறுத்தியதாலும் அவ்விஷயங்களிற் சிலவற்றைத் திரட்டி அச்சிட்டிருந்ததை வித்பாமந்திரிமூலமாய் அடியார்க்கர்ப்பணம் செய்து தனிப்புஸ்தகமாக வெளியிடத்துணிந்தோம். இதிலுள்ள குற்றங் குறைகளையும் மலிந்துகிடக்கும் அச்சுப்பிழைகளையும் பெரியோர் பொறுத்து "குணநாடிக் குற்றமுநாடி, மிகைநாடி மிக்கக்கொளல்" என்றபடி குணத்தைக்கிரகித்துக் குற்றத்தை யொறுப்பார்களென்று பிரார்த்திக்கின்றனன்.

C. V. S.

THE NEW VICEROY.

Dehi, January 6.—His Majesty the King-Emperor on the recommendation of the Prime Minister has been pleased to appoint Frederick John Napier Thesiger, Baron Chelmsford, C. C. M. A., as Viceroy and Governor-General of India in succession to H. E. the Right Honourable Charles Baron Hardinge of Penshurst, P. C., G. C. B. ete.

புதிய இராஜப்பிரதிநிதி.

கனம் தங்கிய லார்ட்ஹார்டிஞ்சுக்குப் பின் அரசர்பிரதிநிதி ஸ்தானத்தை வகிக்க லார்ட் செம்ஸ்போர்ட் (Lord Chelmsford) அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் மார்ச்சுமாசக் கடைசியில் (312) வந்து ஏப்பிரல்மீ முதலில் வேலை ஒப்புக்கொள்ளுவார். கனம்தங்கிய லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் ஏப்ரல்மீ 2-உ பம்பாய்க்குவந்து அன்றே கப்பலேறிச் சீமைக்குச் செல்வார்.

THOMAS ALVA EDISON—THE WONDERFUL INVENTOR.

அற்புத கற்பித சிகாமணியாகிய தாமஸ் ஆல்வா எடிஸன்.

(BORN 1847.)

இன்றைக்குச் சுமார் 54-வருஷங்களுக்கு முன் அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலுள்ள 'டிட்ராய்ட்' பட்டணத்தில் 14-வயதுள்ள ஒரு பையன் அவ்வூர் ரயில் ஸ்டேஷனில் சமாசாரப் பத்திரிகை விற்கும் தொழிலில் அமர்ந்திருந்தான். அந்த ஊரில் 'டிட்ராய்ட் ப்ரீப்ரெஸ்' என்று ஒரு சமாசாரப் பத்திரிகையிருந்தது. அப்போது அமெரிக்கர் இரண்டுபட்டு, ஐக்கியமாகாணவாசிகளே இரு கக்ஷியாகப் பிரிந்து இருவருக்கும் விவில் யுத்தம் நடந்துவந்தது. யுத்த சமாசாரம் தெரிந்துகொள்ள ஜனங்கள் ஆவலாயிருந்தார்கள். ரயில்வே ஸ்டேஷனில் போகும் பிரயாணிகளுக்கு அப்போதப்போது வெளியாகும் சமாசாரங்களைத் தெரிவிக்க ஒரு யுக்திசெய்து ரயில்வேஸ்டேஷனிலுள்ள கறுப்புப் பலகைகளில் முக்கிய சமாசாரங்களை எழுதி விளம்பரப்படுத்திவந்தான். இதனால் இப்பையன் பேர் பிரசித்தியடைந்து ரயில்ஸ்டேஷனில் நடக்கும் வியாபாரம் முழுவதும் இவன் கைவசமாகியது. ஒருமுறை யுத்தம் மும்மரமாய் நடந்தபொழுது 2-அணாப் பத்திரிகையை இவன் 10-அணாவுக்கு விற்றுமுதல்செய்து பெரும் லாபம் அடைந்தான். இந்தப் பெருலாபத்தோடு திருப்தியடையாமல், இதை மூலதனமாகக்கொண்டு, ரயில்வண்டித் தொடரிலேயே ஒரு பழையவண்டியில் தேய்ந்துபோன முத்திராக்ஷரங்களை சுலபவிலைக்கு வாங்கி தானே முக்கிய சமாசாரங்களைத் திரட்டி யச்சுக்கோர்த்து, அச்சிட்டு விற்று வியாபாரம் செய்யத்தலைப்பட்டான். இப்படி இத்துறையில் இவன் வியாபாரம் பல்கிப்பெருக இவன்

மிக விருத்தியடைந்துவந்தான். இப்படி நடந்துவருங்காலையில் ஒருநாள் தற்செயலாய் இவனுடைய தொழில் நடத்தியவண்டி தீப்பற்றிக்கொள்ள, வண்டித்தொடர் முழுவதுந் தீக்கிரையாகத் தெரிந்தது. நல்லவேளையாக அந்த அபாயம் நல்லசமயத்தில் கண்டுபிடித்துத் தவிர்க்கப்பட்டது. ஆனால் அதோடு இவன் தொழில் நின்றுபோக இவனுக்குப் பெரு நஷ்டம் வந்தது. இப்படி பலவிதத்தில் கஷ்டப்பட்டு தன் முயற்சியாலே ஜீவனம் செய்துகொண்டு மேன்மேலும் விர்த்தியை நாடி யுழைத்துவந்த வாலிபச்சிறுவன் தாமஸ் ஆல்வா எடிஸன் என்னும் பேருடையவன்.,

இப்பொழுது எடிஸன் என்னும் பேர் இவ்வுலகெங்கும்பரவியுள்ளது. 'Gramophone' என்னும் பேசும் யந்திரம் நிர்மித்து இந்திரஜாலவித்தை செய்துவரும் மந்திரவாதி யிவரே. உலோகங்களையும், பொம்மைகளையும், மனிதர்களுக்குச் சரியாய்ப் பேசவும் பாடவும்செய்து மனிதனும் ஜீவன், ஈசுவரன் சூத்திரதாரியாகவிருந்து ஆட்டிவைக்கும் சூத்திரப்பாவையென்று சொல்வதற்கொப்ப, தானும் ஒரு ஈசுவரன்போல் சூத்திரப்பாவைகள்செய்து அவைகளைப் பேசுவித்து பிரம்மபட்டத்துக்குப் போட்டிபோடுபவன்போல் விளங்கும் மகான் என்று பேர்பெற்றிருக்கிறார். விசுவாமித்திரர் திரிசங்குக்கென்று தனியாக ஒரு ஸ்வர்க்கம் நிர்மித்ததுபோல் எடிஸன் மனிதருக்குச் சமமென்று சொல்லத்தக்க சூத்திரப்பாவை கற்பித்து இன்னும் எத்தனையோ அற்புதங்கள் விளைவித்துவருகிறார்.

இப்படிப்பட்ட மகான் நல்ல குடியிற் பிறந்தும் குடும்பசொத்து நஷ்டப்பட்ட காரணத்தால், 14-வயதில் தனக்குத்தானே ஜீவனோபாயம் தேடிக்கொள்ளவேண்டி நேரிட்டது. நேரிடவும் பின்வாங்காது துணிந்துநின்று கைக்குக்கிடைத்த தொழிலில் ப்ரவேசித்து இவ்வாறு ஸ்வஜீவனம் செய்துவந்து அதில் விர்த்தியடைந்தபின் திடீரென்று அகஸ்மாத்தாக நேர்ந்த ஒரு அபத்தால் ஜீவனமிழந்து வேறு உபாயந் தேடவேண்டியவனாகவிருந்தான். இப்படி நூதன ஜீவனோபாயத்துக்கு வழிபார்த்துக் கொண்டிருக்கையில் ஒரு ஸ்டேஷன்-மாஸ்டருடைய பெண்குழந்தையொன்று ரயில் வந்துகொண்டிருக்கையில் தண்டவாளத்திடையே விளையாடிக்கொண்டுபோய்விட்டது. ரயிலெஞ்சினோ அதிவேகமாய் வந்துகொண்டிருக்கிறது. இன்னும் ஒரே நிமிஷம்! ஓடியாடி விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தை ரயில் வண்டியின் கீழகப்பட்டு துவையலாகப்போய் விடும். இந்த அபத்தைக்கண்டு எல்லாரும் திகைத்தார்கள். எடிஸன் என்னும் வாலிபனோ இதைக்கண்ட க்ஷணமே, ஒரு தாவல்தாவி கெருடன் மீனைக் கவர்ந்து செல்வதுபோல் குழந்தையைக் கையில் வாரிக்கொண்டோடி தண்டவாளத்தைக் கப்பால் குதித்து அக்குழந்தையைக் காப்பாற்றினான். இதைக்கண்ட ஸ்டேஷன்மாஸ்டர் மனமுருகி அவனுக்குப் பணத்தாலுதவிசெய்யக் கூடாதவனாயிருந்ததால் தந்திபடிக்கும் வித்தை கற்றுக்கொடுத்தார். இந்த வித்தையில் எடிஸன் மகாசமர்த்தனாகிப் பின்னால் மின்சாரவித்தையில் மிகத்தேர்ந்த விற்பன்னனானான். இப்படி பலதுறைகளிலிறங்கி ஜீவனோபாயநிமித்த முழைத்துவருகையில் ஒருமுறை ஒரு வியாபாரக் கம்பெனிக்குள் மாதம் 60-பவுன் சம்பளத்தில் ஒருவேலையிலமர்ந்தான். அந்த வேலையிலிருக்கையில் உண்டியல் பத்திரம் அச்சிடும் யந்திரமொன்று அதியற்புதமாக நிர்மித்து அதை 1000-பவுனுக்கு விற்க உத்தேசித்தான். அதைப்பார்த்த அவனுடைய எஜமான் வியாபாரக்கம்பெனியார் அவனுக்கு அந்த யந்திர நிர்மாண சுதந்தரத்துக்காக 8000-பவுன் அளித்தார்கள். எடிஸன் தான் எதிர்பார்க்காத இவ்வளவு பணம் அவர்கள் அளித்ததைப் பார்த்து பிரமித்து, இதில் ஏதோ சூதிருக்கிறதென்று தீர்மானித்து, எப்படியாகிறதோ பார்க்கலாமென்று விற்பனைப்பத்திரத்தில் கையெழுத்துப்போட்டு

[illegible]டு 8000-பவுனுக்குக் கொடுத்த 'செக்கு' [illegible]ம் உண்டியலை பெற்றுக்கொண்டு [illegible]மாற்ற பாங்கிக்குப் போனான். அங்கே பாங்கிகிளார்க்கு அதைப்பார்த்து என்னென்னவோ சொல்ல ஒன்றும் புரியாமல் மதிமயங்கி தைரியமிழந்து பாங்கியின் படிக்கட்டில் மனமயர்ந்து சோர்ந்துபோயுட்கார்ந்தான். இவன் ஆயுள்காலத்தில் இவன் மனமயர்ந்து சோர்ந்தது இதுதான் முதல்தடவை. பிறகு அந்த உண்டியலைக்கொண்டு தன்னுடைய கம்பெனி குமஸ்தா ஒருவரிடம் காட்ட அவர், சங்கதியை விசாரித்து, உண்டியல்பெருந்தொகைக்காக விருப்பதால் எடிஸன் இன்னொன்று மூதரிக்க வேண்டுமென்று சொன்னதாகவும், எடிஸனுக்குக் காது கேளாமையால் (இளமைப் பருவம்முதல் காது ஊமைமாகவேயிருந்ததென்று தெரிகிறது) தியங்கிப்போனானென்றும் தெரிந்தது. பிறகு அவரே ஆளை மூதரிக்க, 8000-பவுனும் கிடைத்தது. இதை மூலதனமாகக்கொண்டு சொந்தத்தில்தான் நூதன யந்திரங்கள் முதலானது கற்பிப்பதைச் செய்விக்க ஒரு வேலைச்சாலை நிர்மித்துக்கொண்டார். இந்த வேலைச்சாலை இப்பொழுது மேல்மேலும் வளர்ந்து பெருகி இப்பொழுது தேனீக்கூண்டுபோல் அதியற்புதமாய் விசுவகர்மா நிர்மித்த அற்புத ஆலயம்போல் விளங்கும் ஒரு பெரிய தொழிற்சாலையாக விருக்கிறது. அங்கே இப்பொழுது 68-வயதுள்ள எடிஸன் என்பவர் தினம் 20-மணிநேரம் ஓய்வொழிவின்றி மனதாலும் புத்தியாலும் திரிகரண பூர்வகமாயுழை[illegible] வருகிறார். அமெரிக்கா முழுமையிலும் [illegible]விடக் கஷ்டப்பட்டு வேலைசெய்வோர் வேறில்லை. மேற்றிசை நாகரிகம் இவர் ஒருவரது கற்பித சாமர்த்தியத்தால் எவ்வளவோ மாறியிருக்கிறது. இவரொருவரில்லாவிடின் இவ்வுலகமே இப்பொழுதுள்ளபடியிராது. நாகரிகத்திற்கு இவராலுண்டான உதவி அவ்வளவு பெரிதாய் மதிக்கற்பாலதாயிருக்கிறது! இவர் யந்திரதந்திரயந்திர வகைகளில் நூதனமாய்க் கண்டுபிடித்த கற்பிதப்பொருள்கள் அளவற்றன. அவைகளையெல்லாம் சொல்ல இங்கு சாத்தியமில்லை. ஆனால் இப்படி பஞ்சேந்திரியங்களில் ஒன்றாகிய செவியின் சக்தியிழந்தும் உலகமுழுதும் அற்புதமாக விளங்கும் அனேக நூதன கற்பிதங்களை நிர்மித்து, இவர் விசுவகர்மா அவதாரமோ, அல்லது பிரம்மாவாகவே யிருந்து பிரம்ம பட்டமிழந்து உலகில் வந்தவதரித்த அவதாரபுருஷனோவென்று அதிசயிக்கும்படியான இவர் வேலைசெய்யும் முறையும், வேலையிலாழ்ந்த சிந்தையுடையவராயிருக்கையில் இவருடைய மனோதத்துவ இயல்பும் மிகக் கவனிக்கத்தக்கது. சென்னையில் ஹைகோர்ட் ஜட்ஜியாயிருந்து 45-வருஷங்களுக்கு முன் பென்ஷன் பெற்றுக்கொண்டவரான காலஞ்சென்ற ஜஸ்டிஸ் ஜான்ஸ் அவர்களுக்குச் நாமெழுதிய ஒருகடிதத்தில் மேற்றிசையார் கண்டுபிடிக்கும் அதியற்புதமான நூதன உண்மைகளெல்லாம் தன்னைமறந்து, தன்மனது தான்சிந்திக்கும் பொருளோடு தத்துவத்திலொன்றுபட்டு லயித்தகாலத்தி லுதயமானவையே யன்றி வேறல்லவென்றும், யோகசாஸ்திரப்படி எல்லாவுண்மைகளும் உண்மையான எல்லா ஞானமும் 'லயயோகம்' என்னும் இந்த தத்துவ வழிபற்றியே பெறத்தக்கவையென்றும் எடுத்தெழுதி வற்புறுத்திக் காட்டினோம். அதற்கு உண்மையான உதாரணம் இவரிடத்திலிடைத்திருப்பதாயிருக்கிறது. இந்த உதாரணங்களில் சில பின்வருமாறு:—

(i) ஏதாகிலும் ஒரு தத்துவப் பொருளினுண்மையை யுணர மனங்கவர்ந்து ஏகாக்கிரந்த சிந்தையரா யதிலுழைத்துவரும்பொழுது அவர்மனது அதற்கு லெக்ஷியமான பொருளோடு கலந்து ஐக்கியப்பட்டுப் போவதால், மற்ற விஷயங்களைப்பற்றிய ஞாபகம் அவருக்கு கட்டோடு அற்றுப் போய்விடுகிறது. உதாரணம்:—ஒருதடவை "இரட்டைத்தந்திமுறை" (duplex telegraphy) விஷயமாய் ஆழ்ந்த சிந்தனையிலிருக்கும்பொழுது மிஸ்டர் எடிஸன்

தான் கட்டவேண்டிய முனிசிபல் வரியைக் கட்ட மறந்துவிட்டார். அதன்மேல் அவருக்கு ஒரு ஸம்மன் வந்தது. அதில் அடுத்தநாள் இத்தனை மணிநேரத்திற்குள் வரிகட்டியாகாவிட்டால் 100-க்கு 12½-விகிதம் அபராதம் செலுத்தவேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தது. மறுநாள் தான் செலுத்தவேண்டிய வரிப்பணத்தை யெடுத்துக்கொண்டு முனிசிபலாபீஸுக்குவந்தார். அங்கே பணம் வாங்குகிற ஷராபு கூட்டமிகுதியால் உடனே இவரிடத்தில் பணம் பெற்றுக் கொள்ள முடியாமலிருந்ததால், அங்கே மற்றவர்களோடு காத்திருந்தார். தன்னுடைய முறை வரும்வரையில் காத்திருக்கையில் இவருடைய மனசு இவர் சிந்தித்துக்கொண்டிருந்த (duplex telegraphy) விஷயத்தைப்பற்றிச் சிந்தனையிலாழ்ந்து ஏகாக்கிராந்தமாய்விட்டது. இவருடைய முறை வரவும் முனிசிபல் ஆபீஸர் இவரையண்டி அசக்கிக் குலுக்கி "ஏனப்பா, உன்பேர் என்ன! மணியாய்விடப்போகிறது, ஜாக்ரதை! உன்பேர்?" என்று கேட்டர்.

"எனக்குத் தெரியாது" என்று பதிலுரைத்தார் இவர். இன்னும் ஒரு வாரத்தில் உலகெலாம் வியந்து கொண்டாடும்படியான உண்மையைக் கண்டுபிடித்து வெளியிடவிருந்த இவரை சித்த சுவாதீனமில்லாத பித்தன் என்று ஒதுக்கிவிட்டார்கள். பிறகு இவருக்கு மனம் திரும்பி வியவகாரதசை யடைந்தபோது குறித்தகாலம் கழிந்துபோய்விட்டது. 100-க்கு 12½ அபராதம் சேர்த்து வரியைக் கட்டவேண்டி நேரிட்டது. இவர் உண்டியல் யந்திரம் நூதனமாய் கற்பித்து நிர்மித்தகாலையில் இவருக்கு வயது 17. இவர் 400-விதமான கற்பித யந்திரங்கள், சூக்ஷ்மங்கள், சூஸ்திரங்கள் கண்டுபிடித்து அவைகளுக்கு சுதந்திர பாத்தியம் பெற்றிருக்கிறார். இவைகளன்றி சில்லரையாக இன்னும் எத்தனையோ ஆயிரக்கணக்கான கற்பிதங்கள் நிர்மித்திருக்கிறார். இவருடைய கற்பித நிர்மாணங்களுக்கு சுதந்தரபாத்தியம்பெறக்கட்டவேண்டியஸ்டாம்புக் கட்டணம்மட்டும் வருஷத்தில் சராசரி 150-பவுனாகிறது. 17-வது வயதுமுதல் 50-வது வயதிற்குள் இதற்காக 5000 பவுன் செலுத்தியிருக்கிறார். இவர் ஒரு துறையில் தான் இறங்கி யுழைத்தாரென்பதில்லை. சமையல் அடுப்புமுதல் பார்லிமெந்து சபைக்கு வேண்டிய கருவிகள் வரையில் கண்டுபிடித்திருக்கிறார். செல்லரிக்கும் பாச்சைகளைக் கொல்வதற்கான மின்சாரயந்திர முதல் பார்லிமெந்து சபையில் வோட்டுகள் கணக்கெடுக்கும் மின்சார யந்திரம் வரையில் எத்தனையோ விதம்விதமான சூஸ்திரங்களும் சூக்ஷ்மயந்திரங்களும் கண்டுபிடித்து நிர்மித்திருக்கிறார். இவர் நிர்மித்த இன்னொரு யந்திரம் 8-அடி தூரத்துக்கப்பாலிருந்து மனுஷ தேகத்தின் உஷ்ணத்தை உள்ளபடி குறித்துக்காட்டுகிறது. இவர் நிர்மித்த இன்னொரு யந்திரம் ஆடு புல்மேயும்பொழுது புல்கடிக்கும் சப்தம் 6-மைல் தூரத்துக்கப்பால் கேட்கும்படி செய்வதாயிருக்கிறது.

இவர் 'பேசும்'யந்திரம் கண்டுபிடித்தவகை மிகவும் அற்புதமானது. ஒரு சமயம் பேசுந்தந்தியின் பேசுந் துவாரத்தில் (Mouth piece of a telephone) இவர் பாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது அதிலுள்ள அதிசயமான எஃகு முள் (Fine steel point) அவர் விரலில் குத்தியது. இதிலிருந்து அவர் யோஜனை செய்யத் துவக்கினார். "இந்த முள் அசையும் விதத்தைக் குறித்துக்கொண்டு அதேவிதமாக அதை நான் மறுபடியும் அசையச்செய்யக் கூடுமானால் அது ஏன் பேசக்கூடாதோ தெரியவில்லை! ஆகையால் அதைப் பரீக்ஷித்துப் பார்ப்பேன்" என்று பரீக்ஷைசெய்ய ஆரம்பித்தார். ஒரு தந்தித்தபால் காகிதத்தில் அந்த முள்ளின் அசைவுபடும்படி யமைத்து "Halloa" என்கிற சப்தத்தை உரத்துப்பேசினார். பிறகு அந்தக் காகிதத்தைப் பின்வாங்கி முன்போல் அந்த முள் அசையும்படி செய்தார், அந்த யந்திரத்திலிருந்து "Halloa, halloa" என்கிற சப்தம் அதி மிருதுவாக

வந்தது. இதிலிருந்து பேசும் யந்திரம் ஒன்று செய்யவேண்டுமென்று தீர்மானித்தார். இந்த எண்ணம் உதிக்கவும் இதை நிறைவேற்றுவதில் அவர் சிந்தை முழுவதுங் கவிந்துநின்றது. எத்தனையோநாள் இராத்தூக்கம் பகல்தூக்கமின்றி இதில் சிந்தைகவிழ்ந்துழைத்தார். அவர் இதற்கென்று புதிதாய் நிர்மித்த ஒரு யந்திரத்தில் "Spezia" என்கிற வார்த்தையைத் திருப்பித்திருப்பிச்சொல்ல அது ஒவ்வொருமுறையும் "Pezia" என்று சொல்லியது. முதலெழுத்தின் சப்தம் விட்டுப்போய் விட்டது. 6-மாதம் தினம் 15-மணி நேரம் இந்த பிசகைத்திருத்த ஊக்கமுடன் விடாமுயற்சி செய்துழைத்தார். கடைசியில் அவர் பொறுமையும் விடாமுயற்சியும் பலித்தது: "Spezia" என்கிற ஸப்தம் சரியாகவந்தது. இப்படியாக ஒவ்வொரு எழுத்துக்களும் அக்ஷர ஸப்தங்களும் அந்த யந்திரம் சரியாக உச்சரிக்கும்படிசெய்ய அநேககாலம் தினம் பல மணி நேரம் பாடுபட்டுழைத்தார். கடைசியில் காரியசித்தியடைந்து லண்டனிலுள்ள பளிங்குமாளிகையில் கூடிய ராஜசபையார் 4000-மைலுக்கப்பாலுள்ள எடிஸன் குரலை ஒரு யந்திரத்தில் கேட்டதிசயித்தார்கள். இப்பொழுது இந்த யந்திரம் கடைத்தெருவில் உத்ஸவகாலங்களில் ஓரணா காசுக்கு உலகிலுள்ள ஸங்கீதஸாஹித்திய மஹான்களுடைய பாட்டுகளையும், அரசர்கள் இராஜதந்திரிகள் முதலானோருடைய பேச்சுகளையும் பாடியும் பேசியும் காட்டி, சாமான்ய ஜனங்களையும் மகிழ்விக்கிறது.

மிஸ்டர் எடிஸன் ஒன்றுக்கு ஆதாரம் கண்டுபிடித்து அஸ்திபாரம்போட்டுவிட்டால் அப்புறம் அதை முடியாதென்று விடுகிறதில்லை. ...வருஷங்களுக்குமுன் பார்லிமெந்துசபைக் கமிட்டியார் தீர விசாரித்து மின்சார வொளியைப் பிரிக்கமுடியாதென்று தீர்மானித்தார்கள். ...னுமொருவருஷத்திற்கெல்லாம் மிஸ்டர் எடிஸன் அதைப் பிரித்துக்காட்ட ஒரு சூக்ஷ்மயந்திரமேற்படுத்தி காரியத்தில் அப்படியேசெய்து காட்டிவிட்டார்.

மிஸ்டர் எடிஸன் ஒரு காரியத்தைச்செய்ய ஸங்கற்பித்துக்கொண்டுவிட்டால், அதில் என்ன செலவு நேர்ந்தாலும் சரி, என்னகஷ்டம் நேர்ந்தாலும் சரி, பின்வாங்குவதில்லை. ஒரு முறை ஏதோ ஒரு அபூர்வமான நார் வேண்டியிருக்கிறதென்று அதற்காகத் தகுந்தவர் ஒருவரை இவ்வுலகமுழுவதும் சென்று தேடி அப்படியும் அதைக்கொண்டுவரும்படி செய்யவேண்டுமென்று தீர்மானித்தார். தகுந்த மனுஷன் ஒருவர் அகப்படவே அவருக்கு வேண்டிய செலவைக்கொடுத்து உடனே பிரயாணப்படும்படி யனுப்பினார். 12-மாசம் அலைந்து திரிந்து அந்நார் தேடப்போனவர் திரும்பிவந்தார். "அந்த நார் அகப்படாதா?" என்று மிஸ்டர் எடிஸன் கேட்டுவிட்டு பதில் கூறுவதைக்கேட்க நிற்காமல் போய்விட்டார். அவர் அந்த நார் தேடிக்கொண்டுபோயிருந்த காலத்தில் அந்த ஜாலவித்தைக்காரர் அதற்கு பதிலாக ஒன்றைக் கண்டு பிடித்துக் காரியத்தை முடித்துவிட்டாரென்று இன்னொருவர் அவருக்கு விவரந்தெரிவித்தார். அவ்வளவு சூக்ஷ்மபுத்தியும் சுறுசுறுப்புமுள்ளவர் அவர்.

மிஸ்டர் எடிஸன், பணம், பேர், புகழ், கீர்த்தி இவைகளில் குறைவின்றி உலகப்பிரசித்தராய் விளங்கினாலும், அவர் நடத்தையில் மிகவும் அடக்கமுள்ளவர். ஆர்ப்பாடங்களும் ஆடம்பரங்களும் அவரிடத்தில் சுத்தமாகக் கிடையாது. மகாகீர்த்திமானாகியும், தான் ஆதியில் ஏழைப்பையனாயிருந்து சமாசாரப்பத்திரிகை விற்று கஷ்டஜீவனம் செய்ததை ஒருபோதும் மறக்காது நினைத்துவருகிறார். நியூயார்க் நகருக்கருகில் க்ளென்மான்ட் (Glenmont) என்னும் அவருடைய வாசஸ்தலம் மிக நேர்த்தியானதாயினும் அங்கு அவர் அதிகமாய் வசிப்பதில்லை. வேலைச்சாலையிலேயேயிருந்து வேலைசெய்வதிலேயே தம் காலத்தைப் போக்கிவருகிறார். அவர் இருமுறை விவாகம் செய்துகொண்டார். உலகத்துக்கு அவரைப்போல் உபகாரம் செய்தவர் வேறு யாருமில்லை. ஆயினும் அவர் பூர்வகாலத்து இருஷிகளைப்போல கர்மயோகியாய் அவருடைய வேலையாச்சிரமத்திலே வசித்துவருகிறார். அவரைப்போலொத்த மகான்கள் உலகத்துக்குபகாரிகளாக அவதரித்து ஜனங்களுடைய க்ஷேமவிர்த்தியைநாடி யுழைப்பதே நோன்பாகக்கொண்டு உண்மையான கர்மயோகத்திலிருந்து காலந்தள்ளி தங்களுடைய அவதாரமகிமையினால் உலகத்தை முன்னிலுமதிகமாக விர்த்தியடையச்செய்து பூஜிதர்களாகப்போகிறார்கள். இவர்கள் புண்யாத்மாக்களே யென்பதிற் சந்தேகமில்லை.

"WAR AND SELF-DENIAL."

"The one great question which engrosses the attention of public men and politicians of the Empire, is how best to meet the growing war expenditure. . . The Officers of Government everywhere are preaching economy and the following table of the salaries of the chief officers in different countries should prove to be very instructive," says a contemporary.

யுத்தச்செலவும் செலவொடுக்கமும்.

ஆங்கிலேய முதல் மந்திரி சம்பளம் வருஷத்துக்கு ரூபா 75-ஆயிரம். அமெரிக்கா யூனைடெட்ஸ்டேட்ஸ் ப்ரெஸிடெண்டு, லக்ஷத்து 50-ஆயிரம். இந்தியா இராஜப்பிரதிநிதி—2-லக்ஷத்து 50-ஆயிரத்து 800. பம்பாய், வங்காளம், சென்னை கவர்னர்கள், (தலைக்கு) லக்ஷத்து 20-ஆயிரம். லெப்டினென்ட கவர்னர்கள், (தலைக்கு) ஒரு லக்ஷம். இராஜப்பிரதிநிதி மந்திராலோசனை சபை மெம்பர்கள் (தலைக்கு) 80-ஆயிரம். பிரிடிஷ் மந்திராலோசனை சபை மந்திரிகள் (தலைக்கு) 42-ஆயிரம். மத்தியமாகாணங்கள், அஸ்ஸாம் சீப்கமிஷனர்கள் (தலைக்கு) 62-ஆயிரம். கனடா கவர்னர்-ஜெனரல், லக்ஷத்து 50-ஆயிரம். கனடா முதல் மந்திரி, 37-ஆயிரத்து-500. தென் ஆஸ்திரேலியா கவர்னர்-ஜெனரல், லக்ஷத்து 80-ஆயிரம். ஆபிரிகா கவர்னர்-ஜெனரல், லக்ஷத்து 50-ஆயிரம். தென் ஆபிரிகா முதல் மந்திரி, 60-ஆயிரம்.

இங்கிலாந்தில் ஸிவில் ஸெர்விஸ் உத்யோகஸ்தர்களுடைய சம்பளம் உயர்ந்தது வருஷத்துக்கு 15-ஆயிரம்.

இலங்கையில் ஸிவில்ஸெர்விஸ் உத்யோகஸ்தர்களுடைய உயர்ந்த சம்பளம் மாசம் 1-க்கு 2000 ரூபா தான்.

மிஸ்டர் ஹார்ட்லி உவிதர்ஸ் என்பவர் யுத்தச்செலவுக்காகச் செட்டுச் செய்து பணம் மிகுக்கும் வழியைக்காட்டவென்று சீமையில் சர்க்காருக்கு உதவியாகவுழைத்து வருகிறார். ஏழைகள் செய்யும் செட்டில் பணம் அதிகமாய் மிகுக்கப்படுவது சாத்தியமாயில்லை. ஆதலால் உயர்ந்த சம்பளம் வாங்கும் மந்திரிகள் உத்யோகஸ்தர்கள் முதலானவர்கள் தங்கள் சம்பளத்தில் ஒருபாகத்தை விட்டுக்கொடுத்தால் மெத்த சாதகமாயிருக்குமென்று பிரஸ்தாபித்து வருகிறார்கள். ஏற்கனவே இந்தியா கௌன்ஸிலில் மெம்பராயிருந்த ஒருவர் அங்கே அவருக்கு வேலையதிகமாயில்லையென்று சம்பளத்தை விட்டுக்கொடுத்துவிட்டு சண்டைமுகம் போயிருக்கிறார். மிஸ்டர் சர்ச்சில் மந்திரிவேலையை ராஜிநாமா கொடுத்துவிட்டு சண்டைமுகம் போயிருக்கிறார். எப்படியும் இந்த யுத்தத்தில் ஜயிக்காமல் விடுகிறதில்லை, என்கிற உறுதியிருக்கிறமட்டும் பயமில்லை.

THE MADRAS EXHIBITION OF INDUSTRIES AND AGRICULTURE, 1915-1916.

சென்னைக் கைத்தொழில் வியவசாயக் காக்ஷி 1915-1916.

சென்னையில் வருஷந்தோறும் 'பீப்பிள்ஸ் பார்க்'என்று சொல்லும் தோட்டத்தில் கிறிஸ்த்மஸ் பண்டிகை காலத்தில் உத்ஸவக் கடைகள் வைத்து வேடிக்கை விநோதக்காட்சிகளும் விளையாட்டுகளும் நடத்துவதுண்டு. இந்த வருஷம் இப்பொழுது நடந்து வரும் பாரதப்போர்ச் செலவுக்காகப் பணம் சேகரிக்க உதவியாக விருக்கட்டுமென்று மேற்படி உத்ஸவக்காட்சி விநோதங்களை நடத்தும் ஏற்பாடு கனம் பொருந்திய கவர்னரவர்கள் ஆதரவில் நடத்தப்பட விடப்பட்டது. அவரும் இவ்விஷயத்தில் மனஞ்செலுத்தி "தென்னிந்திய ஆத்லெடிக் அஸோஸியேஷனைச் சேர்ந்த விளையாட்டுத் தொண்டியில் வழக்கம் போல் நடத்தப்படும் உத்ஸவக்கடைகளும் அச்சபையாரின் கட்டடத்துக்கு வடக்கேயுள்ள விஸ்தீர்ணமான வெளியில் சென்னைக் கைத்தொழில் வியவசாயக்காட்சி சாலையும் ஏற்படுத்தத் தீர்மானித்தார். இது டிசம்பர் 27உ முதல் ஜனவரி 16உ வரையில் கண்காட்சிக்கு சௌகரியமாக விருக்கும்படி திறந்துவைக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட பொதுக்காட்சிகள் வைக்கிறது ஜனங்கள் அறிவு விர்த்திக்காகமட்டுமன்றி கைத்தொழில் வியாபார விர்த்தியாவதற்கும் இது ஓர் முக்கியசாதனமாம். இந்தக்காட்சிக்குச் சென்னையிலுள்ள ஷாப்புக்காரர்கள் சிலரும் நெசவு முதலான கைத்தொழில் யந்திரம் விற்பவர்களும்சர்க்கார் கைத்தொழில் விசாரணைத் தலைவரும், வியவசாய இலாகா,காட்டிலாகாத் தலைவர்களும் மீன் இலாகாத்தலைவரும் ஆங்கிலேய புஸ்தக வியாபாரிகளில் லாங்மான்ஸ் க்ரீன் கம்பெனியும் மாக்மிலன் கம்பெனியும் காட்சிப்பொருள்கள்

சேகரம் செய்து காரியத்தை நடத்தினார்கள். எல்லாம் ஸர்க்கார் இலாகாத்தலைவர்களுடைய மேன்பார்வையில் நடந்ததனால் சிறப்பாகவே யிருந்தது. நீலகிரியிலிருந்து காபி, தேயிலை, ரப்பர் தோட்டக்காரர்கள் அந்த சரக்குகள் அனுப்பி யிருந்ததன்றி கொயினா (Quinine) சுவரப்பட்டை சம்பந்தமான பலவித சரக்குகளும் காட்சிக்கு வந்திருந்தன. திருவனந்தபுரம்,கொச்சி சமஸ்தானத்திலிருந்தும் காட்சிப்பொருள்கள் வந்திருந்தன. ஒவ்வொரு இலாகாதாரரும் அவர்களாலியன்றமட்டும் சிரத்தையெடுத்துக்கொண்டு கண்காட்சி சிறக்கச் செய்தார்களாயினும் வியவசாய இலாகாத் தலைவர் மிஸ்டர் சாட்ஸிக் எடுத்துக்கொண்ட முயற்சி மிகவுங் கொண்டாடத் தக்கதாயிருந்தது, அந்தக்காட்சிசாலை பொட்டை வெளியாய்க் கிடந்த விடத்தில் ஏற்பட்டதாயினும் சென்னை கவர்ன்மெண்டுக்கு 'கன்ஸல்டிங் ஆர்கிடெக்ட்' ஆகிய சிற்பாலோசனை சொல்லும் ஸர்க்கார் இஞ்சினீர் மிஸ்டர் தாமஸ் என்பவர் அவருடைய புத்தி நுட்பத்தாலு சிற்பசாஸ்திரஞானத்தாலும் அந்தப் பொட்டைவெளியை ஒரு கந்தர்வ நகரம் போல் மாற்றிவிட்டார். அந்த அற்புதங்களை வர்ணிக்க, அவற்றை அவகாசமாய்ப் பார்த்து நிதானித்து எழுத வேண்டும். கண்காட்சிக் கமிட்டியார் அதற்கு வேண்டிய அநுகூலங்கள் அளித்திருக்கவேண்டும்: அது இல்லாக்குறைவினால் அக்கடமையை நாம் நேரில் வகித்துச் செலுத்துவது சாத்தியமாயில்லை. ஆதலால் இக்காட்சியில் பிரதமஸ்தராயிருந்தவர்களுடைய அநுகூல சாதனங்களோடு வியவசாய ஞானமும் கூடிய கிருஷிகன் பத்திராசிரியர் இதைப்பற்றி எழுதியிருப்பதைச் சுருக்கிக்கீழே ப்ரசுரிக்கிறோம். அவர் வியவசாயக் காட்சியை நடத்துவதில் சம்பந்தப்பட்டவராயுமிருந்ததுபற்றி அவருடைய விருத்தாந்தம் கவனிக்கத்தக்கதாயிருக்குமென்று எண்ணுகிறோம்.

சென்னை விவசாயக்காக்ஷி.

இந்த டிபார்ட்மெண்டிற்குள் புகுந்ததும் முதல் அறையில் விவசாய விசாரணைஸ்தலம் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் ஓர் விவசாய உத்தியோகஸ்தர் இருந்துகொண்டு ஜனங்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஜவாபு சொல்லிக்கொண்டும், விவசாய டிபார்ட்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்ட பல துண்டுப்பத்திரிகைகளையும் பழைய விவசாயங்களையும் கேட்போருக்கு இனமாய்க் கொடுத்து வருகிறார். மேலும் ஆங்கிலேய பாஷையிலுள்ள "Facts and Figures of Agriculture" என்னும் புஸ்தகத்தையும், "South Indian Insects" என்னும் புஸ்தகத்தையும் முறையே 14-அணாவுக்கும், 6-ரூபாய்க்கும் விற்றுவருகிறார். அதற்கு எதிரில் அதே அறையில் கோழிமுட்டைகளை கோழி வடைகாக்காமலே யந்திரத்தின் மூலமாய் குஞ்சு பொறிக்கவைக்கும் யந்திரமும் பொறித்த குஞ்சுகள் எந்தவிதமான தீனிகள் கொடுத்து வளர்க்கவேண்டுமென்றும், பொதுவாகக் கோழிகளை நல்ல ஸ்திதியில் வளர்ப்பதற்கு வேண்டிய சாதனங்களெல்லாமும் மிஸ்டர் புல்மோர்துரை யவர்களால் வைக்கப்பட்டிருந்தது. அவருடைய வெள்ளை ஆர்பிங்க்டன் என்னும் ஜாதிக்கோழிகளில் பல காக்ஷி கட்டடத்துக்கு வெளியில் இரும்பு வலைகளமைக்கப்பட்ட இடத்தில் விடப்பட்டிருந்தன. மேலும் கோழிகளை வளர்ப்பதெப்படி என்னும் அவருடைய புஸ்தகமானது ஆங்கிலத்தில் காக்ஷி சாலையில் வைத்து விற்கப்பட்டது.

இதற்கு அடுத்த அறையில் பலவிதமான ரப்பர்கள், பலவிதமான காப்பிக்கொட்டைகள், தேயிலைகள், ஜாதிபத்திரி, கிராம்பு, ஏலக்காய் முதலியன தென் இந்தியாவிலுள்ள காபி தேயிலை முதலிய பயிர் செய்வோரின் கூட்டுச் சங்கத்தாரால்(United Planters' Association of Southern India) வைக்கப்பட்டிருந்தது. அதன் அங்கத்தினர்களுக்கு பாபா புரூடின்விலும், வட மைசூரிலும், தென் மைசூரி

லும், குடகிலும், வயநாட்டிலும் நீலகிரியிலும், சேர்வராய்மலையிலும், மலையாளத்திலும், ஆனைமலையிலும், கானன் டேவன் எஸ்டேட்டுகளிலும், மண்டகாயம், மத்திய திருவநந்தபுரம், தென் திருவநந்தபுரத்திலும் பல காப்பி தேயிலைத் தோட்டங்களிருக்கின்றன. அவர்கள் தாங்கள் பயிரிடும் சரக்குகளில் சிலாக்யமான காபி, தேயிலை, ரப்பர் முதலியவைகளை அனுப்பியிருக்கிறார்கள். இதைத்தவிற மீயர்ஸ், லெஸ்லி அண்ட் கம்பெனியும் அவர்களால் பயிர் செய்யப்படும் ஷை சரக்குகளை அனுப்பியிருக்கிறார்கள். தேயிலைச் செடிகளும் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

மூன்றாவது இடத்தில் நெல் தினுசுகளும் அவைகளைப்பற்றிய விவரங்களோடு வைக்கப்பட்டிருந்தன.

இதன் சமீபத்தில் சின்கோனா என்னும் செடியின் விதை முதல் (காய்ச்சல்) ஜ்வரத்திற்கு உபயோகிக்கும் கொய்னா பொடிசெய்யும் விதம் வரையில் ஏற்பட்ட பல மாறுபாடுகளைக் காண்பித்திருக்கிறார்கள். ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கிராம்பு, குண்டூர் புகையிலை முதலியவையும் இதன் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தன. இந்த இடத்திலிருந்து வெளியே போய்த்தான் மற்ற விவசாயப் பொருட்களைப் பார்க்கவேண்டியிருந்தது. அப்படி வெளியே போகும் பொழுது கட்டடத்திற்கு வெளியில் தினுசுப்பயிர்கள் செய்யப்பட்டு நிலைப்பயிராயிருந்தன.

இதைப்பார்த்தபின் மறுபடியும் விவசாயக் காட்சி சாலைக்குள் மற்றொரு வாசலின் வழியாய்போனால் கவர்ன்மெண்ட் பூஞ்சாண நோய் சாஸ்திரியார் (Mycologist) செய்யும் வேலை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

அடுத்த அறையின் ஒரு பக்கத்தில் தாவர சாஸ்திரியார் மனிதர் மூச்சுவிடுவதைப்போல் செடிகளும் மூச்சுவிடுகின்றன என்பதை நிரூபித்துக் காட்டினார். எப்படியெனில் ஒரு கண்ணாடிக் குப்பியின் அடிப்பக்கத்தில் சேப்பங்கிழங்கின் இலையை காற்றுப்புகாதபடி கெட்டியாய் வைத்து அப்புட்டியில் தண்ணீர் வார்த்து கார்க்போட்டு மூடினால் இந்த இலையானது மூச்சுவிட்டதும் ஒரு மனிதன் தண்ணீருக்குள் முழுகி மூச்சுவிட்டால் எப்படி தண்ணீரில் கொப்புளங்கள் கிளம்புமோ அப்படியே இந்த இலை சுவாசிப்பதாலும் கொப்பளங்கள் கிளம்புகின்றன. இது எப்படி மூச்சுவிடுமென்றால் இலையிலிருக்கும் கண்ணுக்குத் தெரியாத அநேகமாயிரம் துவாரங்களின் வழியாய் காற்றை இலையானது சுவாசித்து காம்பின் வழியாய் விடுகிறது.

இதற்கு எதிரில் புழுப்பூச்சி சாஸ்திரி (Government Entomologist) விவசாயிகளுக்கு நன்மை தீமைகளை விளைவிக்கும் அநேக புழுப்பூச்சிகளை வைத்து இன்னின்ன புழுக்கள் நன்மை செய்பவையென்றும் இன்னின்ன புழுக்கள் தீமை செய்பவையென்றும் வருபவர்களுக்கெல்லாம் காட்டி வந்தார். அடுத்த அறையில் 14-தினுசு பணிலாக்கொட்டைகளும் அவைகளைப் பயிரிடும் விதமும் காட்டப்பட்டிருந்தது.

அதற்கு எதிரில் 7-குதிரைச்சக்தியுடைய எண்ணெய் இயந்திரத்தால் ஓட்டப்பட்ட கரும்பு ஆலை மாவலி கம்பெனியாரால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிரில் வேர்க்கடலையை உடைக்கும் இயந்திரமும் அதனால் உடைப்பதின் பலனும் மாமூலாய் உடைக்கும் மாதிரியும் காட்டப்பட்டிருந்தது. அடுத்தாற்போல் சர்க்கார் பண்ணைகளிலிருந்து கொண்டுவரப்பட்ட 22-தினுசுக் கரும்புகள் அவைகளின் தனித் தனி பேர்களுடன் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.

அதன் சமீபத்தில் கரும்பின் விதைகள் (கரும்புத்துண்டுகளல்ல. கரும்புக் கதிரிலிருந்து எடுத்த விதைகள்) வைக்கப்பட்டிருந்ததோடு அவ்விதைகள் போட்டு முளைத்த சிறு நாற்றுகளும், அதற்குமேல், சற்று வளர்ந்த நாற்றுகளும் வைக்கப்பட்டிருந்தன. அதன்

சமீபத்தில் வெல்லம், நாட்டுச் சர்க்கரை, பனை வெல்லம், கற்கண்டு முதலியனவும், கருப்பஞ்சாற்றிலிருந்து சென்னையில் செய்த பெப்பர்மென்டுகளும், பலவிதமான நார்களும், அந்நார்களால் செய்யப்பட்ட கயிறுகளும், கம்போடி பருத்திக்காய்கள், பருத்திநூல் முதலியனவும் காட்டப்பட்டிருந்தன.

பருத்தி, வேர்க்கடலை முதலியவைகளை தரகர்கள் மூலமாய் விற்பதினால் விவசாயிகளுக்கு அதிக நஷ்டமுண்டாகிறதென்றும், அதைவிட கூட்டுறவுச் சங்கங்களால் நேரே பெருத்த வியாபாரியுடன் வியாபாரம் செய்வதால் அதிக இலாபம் அடையலாமென்றும் காண்பிப்பதற்காகத் தக்க பொம்மைகள் செய்து வைத்து காட்டியிருந்தார்கள். இதைத் தாண்டியதும் சலவைக்கற்களால் கட்டப்பட்ட பச்சைப்பாலிலிருந்து இயந்திரசகாயத்தால் ஆடையெடுத்து அவ்வாடையிலிருந்து கொஞ்சம்கூட கைதொடாமல் வெண்ணெயெடுக்கும் விவரங்களெல்லாம் காண்பிக்கப்பட்டது. அதைப்பார்த்து அடுத்த வாசலின் வழியாய் வெளியிற் சென்றதும் இரண்டு பக்கங்களிலும் பட்டுப்பூச்சி முட்டைகள் முதல் பட்டெடுத்துத் துணி செய்யும் வரையில் விவரமாய் எடுத்துக்காட்டினார்கள். அங்கு வந்திருந்த பட்டுப் பூச்சிவளர்ப்பவர்கள் கேட்பவர்களுக்கு தக்கபடி விடையளித்துக் கொண்டிருந்தார்கள். இதற்கடுத்தாப்போல் பெரியகலப்பை, மட்டக்கலப்பை முதலிய பல உபயோகமான விவசாயக்கருவிகள் வைத்திருந்ததோடு அங்கு விவசாய இலாகாதார் ஒருவர் இருந்துக்கொண்டு அவைகளின் விவரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார்.

LABOUR AS AN AGENT OF PRODUCTION.

A LESSON IN POLITICAL ECONOMY.

உத்யமம் அல்லது உழைப்பு:

தனோத்பத்தி சாதனம்.

தனோத்பத்திக்கு வேண்டிய ஸாதனங்களில் உத்யமம் அல்லது உழைப்பு என்பது ஒன்று. ஆயினும் சிலதூரம் வரையில் மனிதனது பிராகிருதங்களான காம்யங்கள் ஸுலபமாக இயற்கைப் பொருள்களாலேயே. தீர்க்கப்படுகின்றன. மனிதன் காட்டில் ஸஞ்சரித்துக்கொண்டு, குரங்குகள்போல காய்கனிகளை யுண்டு புரண்டு கொண்டிருந்த காலத்தில், செடி கொடிகளிலிருந்து இயற்கையாயுண்டாகும் பல வருக்கங்களைக்கொண்டு ஜீவனைத் தரித்துவந்திருக்க வேண்டியது. அல்லது மற்றைய கொடிய மிருகங்களைப்போலத் தாழ்ந்த ஜீவன்களை வதைத்துப் புசித்தாவது வாழ்ந்திருக்கவேண்டியது. இந்நிலைமையில் இருக்கும் காலத்தில் மனிதனுக்கு மனிதன் என்ற பெயரே தகாது. மிருகத்துடன் மிருகமாய்த்தான் ஓடி யாடிக்கொண்டு யாதொரு தேசஸ்ஸம்குணமும் இல்லாமல் இருந்திருக்க வேண்டியது. இப்படியிருப்பாருக்குத்தான் நம் முன்னோர்கள் கிராதர்கள் என்றும் வியாதர்கள் என்றும் பெயரிட்டிருந்தார்கள். அவர்களது கும்பல்கள் விந்தியமலையைச் சார்ந்த கானங்களில் நெடுநாள் வரையில் இருந்ததாக நம் முன்னோர் நமக்கீந்திருக்கும் காவ்யங்களில் காண்கிறோம். இப்படியாகி உழைப்பின்றி ஜீவிக்கிற வரையில் மனிதன் செல்வம் என்பதை யறிவதேயில்லை. ஆகையால் இவனைப்பற்றிச் செல்வநூலுரைப்பது யாதொன்றுமில்லை.

முதல் முதல் உழைப்பு என்பது காணப்படுவது இடையர் கூட்டத்தில்தான் (Pastoral tribes). முன்கூறிய வேடர் நிலைமையினின்றும்(Hunter state) நாளாவட்டத்தில் தனது இயற்கையான மேல்நோக்கிற்கேற்ற மனிதன் அபிவிருத்தியடைந்து மிருகத்துடன் மிருகமா

பிராமலும், கையிற் கண்டதையெல்லாம் நிர்மூலம்செய்து காலாந்தகனாகத் திரியாமலும், தனக்கு நாளைக்கு வேண்டியதை யின்றைக்கே தேடிவைத்துக்கொள்ள ஆலோசனைசெய்யும் திறமையடைந்து, எப்போதும் நிரந்தரமாய் ஆகாராதிகள் கிடைக்க ஆடுமாடுகளைப் பிடித்துப் பழக்கிவைத்து, அவைகளை மேய்த்து, அவைகளுக்கு நோய்வந்தபோது தகுந்தபடி சிகித்சை செய்து, அவைகளைக்கொண்டு ஜீவனம்செய்யத் துவங்குகிறான். இப்படி யபிவிருத்தியடைந்த நிலைமைக்கு இடையர் தம் நிலைமையெனச் சரித்திரதத்வபோதிகள் (Historical Philosophers) பெயரிட்டிருக்கிறார்கள். இந்நிலைமையில் அதிகமாக உழைப்பு வேண்டியிருக்கிறது என்பது விசதமாக விளங்கக்கூடிய விஷயமே. இப்படி இடையர் நிலைமையையடைந்த ஜனஸங்கங்களில் நாம் இரண்டு முக்கியமான குணங்களைப் பார்க்கிறோம். காலாகாலத்தில் ஆகாராதிகள் கிடைப்பதாலும், குளிர் முதலிய பாதைகள் இல்லாமல் தங்களைக் காத்துக்கொள்ளக்கூடிய சக்தியும் அறிவும் ஜனங்களுக்கு இருப்பதாலும் இந்நிலைமையர் சீக்கிரம் ஸங்கையில் அதிகரிக்கின்றார்கள். ஆயினும் முன்னால் அலைந்து திரிந்து ஜீவனத்திற்குப் போதாமல் தடுமாறிக்கொண்டிருந்த பூமியின் பாதிபாகத்திற்குள்ளாகவே தங்களுக்கு வேண்டியதைச் சம்பாதித்துக்கொள்ளும் திறமையைப் பெறுகிறார்கள். முன்னால் வேடராயிருந்த காலத்தில் ஒருவேளைப் பசி தீர்க்கக் கொல்லப்பட்ட ஆடுமாடுகள் இப்போது பாதுகாக்கப்பட்டுப் பல வேலைகளுக்குதவிப் பாலும், தயிரும் கொடுக்கின்றன. இப்படியே ஒவ்வொரு விஷயத்திலும் முந்திய நிலைமையைக்காட்டிலும் இப்போது ஜனங்கள் அதிகமாக வுழைத்து வேண்டியபடி பொருள்களை யுண்டாக்கிக்கொள்கிறார்கள். இம்மாதிரி உண்டாக்கப்பட்ட பொருள்களைச் சரியானபடி வேண்டிய காலங்களில் உபயோகமாகும்படி காத்தும் வைக்கிறார்கள். ஆகையால் இந்நிலைமையில் க்ஷாமம் என்பது அதிகமாகப் பீடிக்கிறதில்லை.

இதற்கு அடுத்தநிலை வேளாண்மை. (Agricultural state). முன்னிருந்ததைக்காட்டிலும் பலமடங்குநாகரிகம் அதிகரிக்க, மனிதன் பூமிகளை யுழுது மண்ணில் மழுங்கியிருக்கும் பிராகிருத சத்திகளை வெளிப்படுத்தி, முன்னால் தன்னைப்போல தானே விளைந்து புல்லாந்தரையாகக் கிடந்த விடங்களிலிருந்து, தன்நாவிற்கினியதான வுணவையும், தன் ஆடுமாடுகளுக்குப் போதுமான தீவனங்களையும் சம்பாதிக்கிறான். முன்னால் ஒரு இல்லத்தாருக்கு பல ஏகரா பூமி வேண்டியிருந்தால் இப்போது சில வேபோதும் ஜனங்களும் வெகுவாய் ஸங்கையில் அதிகரிக்கிறார்கள். ஆகாரத்தம் அலையவேண்டியதில்லை. இருந்தவிட மிருந்து ஆகாரத்தைப் பூமியினின்றும் விளைவிக்கிறார்கள். அலைந்து திரியவேண்டிய கட்டாயம் போகவே இருக்க ஸ்திரமான வீடுகளைக்கட்டவாரம்பிக்கிறார்கள். வேண்டியவை யெல்லாம் எப்போதும் கையிலேயே கொண்டுபோக வேண்டிய ஆவசியகம் குறையவே, புதுவகையான ஆசைகளும் அவைகளைப் பூர்த்திசெய்ய புதுவகையான செல்வமும் உண்டாக்கப் படுகின்றன.

இதற்கடுத்த ஸ்திதிதான் நாமிப்போதடைந்திருக்கும் தொழிலாண்மை. (Industrial state). வேளாண்மையுடன் இராமல் கைத்தொழிலினால் வெவ்வேறு பொருள்களை யுண்டாக்கி யனுபவித்து வருகிறோம். இப்படியாக மனிதர் அபிவிருத்தி யடைந்து வந்திருக்கும் மார்க்கத்தைப்பற்றி ஆலோசித்துப் பார்த்தால் இந்நான்கு நிலைமைகள்வழியாகத்தான் என்று நன்றாகத்தோன்றும். ஆயினும் இந்நிலைமைகள் பரஸ்பர விருத்தங்களானவைகள் அல்ல. இப்போது கைத்தொழில் அபிவிருத்தியடைந்திருக்கும் நமது காலத்திலேயே, வேடர்களும், இடையர்களும், வேளாளர்களும் இருக்கவேயிருக்கிறார்கள்: தங்கள் தங்கள் புராதன

மான விருத்தியை விடாமல் நடத்தியும் வருகிறார்கள். ஸாமானியமாக வொரு மனிதன் தனக்கு அநுகூலமான ஒரு பொருளை பொருதடவை உண்டாக்கக் கற்றுக்கொண்டால் அதை அவன் ஒருபோதும் கைசோரவிடமாட்டான். வாழ்நாள் முழுதும் ஒவ்வொருவனும் பிரகிருதியுடன் விடாப்போர்புரியவேண்டி யிருப்பதால் இப்போரில் ஒருதடவையடைந்த வெற்றியை யிழந்துவிட்டால் ஒருவித சௌக்கியமுமில்லை யாதலால் ஒரு நிலைமையில் அறிந்த விஷயமும் கற்ற கலையும் என்றைக்கும் பிரயோசனப்படுத்தப்படுகின்றன.

இப்படியாக எவ்வகைப்பட்ட நிலைமையிலும் உழைப்பு இருக்கவே யிருக்கிறது. உழைப்பால்தான் மூவகையரும் செல்வத்தை யுண்டுபண்ணுகிறார்கள். இப்படி யெங்கும் விளங்கும் உழைப்பின் சிறப்பானது (1) வேலைக்காரனது திறம் (2) உழைப்பின் விஷயமான கட்டுப்பாடுகள் (3) உழைப்பாளிகளின் தொகை ஆகிய இம்மூன்று காரணங்களைப்பற்றியதாயிருக்கிறது. இவைகளில் முதற்கூறிய காரணமான வேலைக்காரனது திறம் (The efficiency of the labourer) என்பதைப்பற்றி கொஞ்சம் விஸ்தாரமாய் இந்தப்பாடத்தில் வியவகரிப்போம்.

நன்றாக வேலைசெய்வதற்கு சரீர தார்ட்டியம் வேண்டியிருப்பதால் எவ்வளவுக்கெவ்வளவு வேலையாள் திடகாத்திரமுடையவனாகவிருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு வேலை சிறப்பாக நடக்கும். ஆகவே ஒரு இராச்சியத்தின் சீர்மைக்கு அதில் இருக்கும் செல்வம் காரணமாதலால், அச்செல்வத்தை யுத்பத்தி செய்விக்கும் வேலைக்காரர்களது தேகபோஷணையைச் சரியாக நடத்திவைப்பது இராஜாங்கத்தின் முக்கியமான கடமை. வேலையாட்களின் தேகதார்ட்டியத்திற்கு ஒரு பகுதி பிறப்புக்காரணமாயிருக்கிறது உண்மையே. தாய் தகப்பன்மார்களது சக்தியை யனுசரித்துத்தான் பிள்ளை. பெண்களுக்கு சரீரபலம் வருகிறது. மேலும் பிறப்பைதொட்டுவந்த இந்த வித்தியாஸம் தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதி, ஜனங்களின் ஜாதி முதலியவைகளைப் பொருத்தும் வாய்க்கிறது. இப்படியாக இயற்கையாயுண்டாகும் காரணத்தைமாற்றுவதற்கு மனிதரால் ஆகாது. ஆனதினால் இதைப்பற்றி நாம் இங்குரைக்கவேண்டியது யாதுமில்லை.

ஆயினும் உழைப்பாளியின் திறத்தை யதிகரிக்க வொரு முக்கியமான காரணம் அவனுண்ணும் உணவு. அவனவன் உணவின் அளவையும் ஸாரத்தையும் பற்றித்தானிருக்கும் அவனவன் திறம். எப்படி புகைவண்டிக்கு விறகு போட்டால்தான் வண்டிகளை யிழுக்கும் திறம் வருகிறதோ, அப்படியே மனிதனுக்கும் வயிறுநிறைந்தால்தான் வேலை செய்யச் சக்தியுண்டாகும். ஆகாரவிஷயத்தில் மனிதன் ஒரு யந்திரம்போலத்தான். எப்படி விறகாகப் பரிணமித்திருக்கும் சூரிய சக்தி நெருப்பாகமாறி நீரைக்காய்ச்சி நீராவியால் வண்டிகளையிழுக்கும்படி யுதவுகிறதோ அப்படியே தான் காய் கனிகளாயும், தானியங்களாயும், அல்லது இரைச்சியாயும் இரத்தமாயும் நீராயும் காற்றாயும் பரிணமித்திருக்கும் பாஸ்கரனது சக்தியானது நம்முள் ஆகாரரூபமாய்ச்சென்று நாம் செய்யும் ஒவ்வொரு கருமத்திற்கும், நாமெண்ணும் ஒவ்வொரு எண்ணத்திற்கும், நாம்வேண்டும் ஒவ்வொரு ஆசைக்கும் காரணமாகிறது.

ஆகையால்தான் 'சூரியநமஸ்காரம்' என்கிற சூரியோபாசனை தேஹசுகத்துக்குக் காரணமாகிறது. ஆகாரமூலமாய் கிரஹிக்கும் சத்தை சூக்ஷ்மமாகவும் கிரஹிக்கலாம். இந்த கிராஹிய சக்தியைப்பெறுவதே சூரியோபாசனையின் பலனும். இந்த சூரியனை பிராமணர்கள் "நமஸ்ஸவித்ரே" யென்னும் மந்திரத்தால் திரிகாலமும் வந்தித்து வழிபடுகிறார்கள். ஸந்தியா வந்தனம் தெரியாதவர்களுக்கு இது புதுமையாகவிருக்கும். ஆனால் சாஸ்திரக்ஞர்கள் இதை வெகு சாதாரணமாகக்கையாடி வருகிறார்கள்.

ஆகாரவிஷயத்தைப்பற்றிப் பேசும்போது மனிதனும் ஒருயந்திரவிசேஷமென்று சொல்வதில் யாதொரு பிசகுமில்லை. இந்த திருச்சியமான லோகத்தில் உள்ள சக்தி 'அக்ஷயமானதாகையாலும்' நம்முள்காணும் ஸமஸ்தமும் இந்த அக்ஷயமான சக்தியின் பரிணதி

கள் தாமாகையாலும் சக்திக்கெல்லாம் அதிஷ்டானம் பாஸ்கரதேஜஸ்தானாகையாலும், நம்முடைய திறத்தை அதிகரிக்க அப்பாஸ்கர தேசஸின் பரிணதியான ஆகாரத்தை நாம் உட்கொள்ளவேண்டியது. ஆயினும் எவ்வளவுக் கெவ்வளவு நாம் ஆகாரத்தை அதிகரிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு திறம் சமமாக அதிகரிக்குமென்று எண்ணக்கூடாது. சில தூரம்வரையில்தான் ஆகாரம் அதிகரிக்கவதிகரிக்க வேலைத்திறமும் சமமாக வதிகரிக்கும். எப்படியெனில் 'ஒருவனுக்கு நாளொன்றுக்கு 10-பவுன் நிறையுள்ள ஆகாரம் வேண்டியிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். 100-அவுன்ஸ் அல்லது சற்றேறக்குறைய 6½-பவுன் அவன் சாப்பிட்டால்' வயிறு நிறையாமல், சக்திகுறைந்துபோய் ஊர்ந்துகொண்டுதான் வேலைக்குப் போகவேண்டும். 100-அவுன்ஸை 125 - அவுன்ஸாகக்கொடுத்தால், கால்பங்கு மாத்திரம்தான் அவனது வேலைத்திறம் அதிகரிக்கும் என்று எண்ணக்கூடாது. அரைவயிறு நிரம்பவும்,சுறுசுறுப்புடன் வேலைசெய்யத் தொடங்குவான். 150-அவுன்ஸுக்கு ஆகாரம் உயர்ந்தால், சுகமாகப் பசிதீர்ந்து முன்னிலும் பலமுறை அதிகமாக வேலை நடக்கும். இப்படி யதிகரிக்கும் உணவிற்கு ஒரு எல்லையுண்டு. அதற்குமேல் போனால் அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாமென்கிறபடி விஷமாக உபத்திரவிக்கும். ஆகையால், வேண்டிய ஆகாரம் செல்லுகிறவரையில் ஆகாரத்தை லோபத்தனமாகக் குறைப்பது வேலைக்குக் கெடுதி உண்டாக்குகிறது. ஆகையால் ஒவ்வொரு இராசாங்கத்திலும் வேலை செய்கிறவர்களுக்கு தகுந்த ஆகாரம் கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்யப்படவேண்டியது. உயிருடன் வாழ்வதற்கு வேண்டிய ஆகாரத்துடன் கொஞ்சம் கூட்டினால் போதும்; சுகஜீவனத்திற்கு வேண்டிய பாகம் வந்துவிடுகிறது. சந்தைக்குக் கொண்டுபோகவைத்துக் காப்பாற்றும் ஆடுமாடுகளுக்குமன்றோ வேண்டியபடி ஆகாரம் போடுகிறோம். அது குறைந்தால் இளைத்துப்போகுமென்று பயப்படுகிறோம். மனிதன் விஷயத்தில் மாத்திரம் ஏன் இப்படி நிஷ்கருணையுடையவர்களாயிருக்கிறோம் என்பதை நன்றாக யோசிக்கிறதில்லைப்போலும்.

THE GOLDEN NECKLACE.

A TALE OF MODERN TIMES.

தங்க அட்டிகை.

தற்கால கதை.

II.

ஒயிலாம்பாள் இந்தவிசை எச்சம்மாளை "வா" வென்று அழைத்துபசரித்து காரியம் காயா பழமா வென்று விசாரித்தாள். அதற்கு,"நான் காயோடேயா திரும்பி வருவேன், பழம் பழுத்து மடியில் விழுந்து ஏந்திக்கொண்டு வந்திருக்கேன் பார்" என்று மடியைத் தட்டிக் காட்டினாள் எச்சம்.

நாரதாம்பாள் "என்ன செய்தி, என்ன ஆச்சு? எங்கே, பார்ப்போம்" என்று அவள் மடியை ஆராயப்போனாள்.

எச்சம்மாள், "சரடு ஒன்பதரையே அரைக்கால் வராகனிடை யிருந்ததாம். அதில் வீசம் வராகனிடை அரக்கு பொடி ஒட்டிக்கொண்டிருந்ததற்காக தள்ளிவிட்டான். பாக்கியுள்ளது சரியாக நாலேகால் சாவரனுச்சு. இதன் விலை சவரன் பதினைந்தே வீசம் விழுக்காடு 63¾-ரூபாய் 3 - தம்பிடியாகிறது. முக்கால் ரூபாய் 3- தம்பிடி சில்லரை யென்று தள்ளிவிட்டான். பாக்கிரூபாய் 63 இதோ இருக்கிறது. இஷ்டமானால் பணத்தை யெடுத்துக்கொள்; இல்லாவிட்டால் சரட்டை வாங்கிக்கொணர்ந்து தருகிறேன் இப்போ. விலையானால் எனக்குத் தாரு ரூ. 3 நீ தரவேணும்."

ஒயிலாம்பாள் மனமகிழ்ந்து பணம் வந்துவிட்டதேயல்லவோ சரிதான் போம். உமக்குத் தரகு பணம் இப்பவே கொடுக்கவேண்டுமோ? அப்புறம் கொடுக்கலாமோ வென்று விசாரித்தாள்.

"அதற்கென்ன மெள்ளக்கொடேன் உன்னிடத்திலிருந்தால் ஓடியா போகிறது. இன்னம் பழகப்பழகத் தெரியும் என்னுடையமாதிரி." என்றாள் எச்சம்.

நாரதாம்பாளுக்கு மனம் பொறுக்கவில்லை. அந்தச்சரடு உண்மையில் 40-ரூபாய்க்கு விலைப்போகாது. தரகு 3 ரூபாய் போனாலும் 60 ரூபாய் கலகல வென்று கொட்டியதைப்பார்க்க தன் ராக்கிடியையும் அப்படியே விற்றுக்கொடுக்கவேணுமென்று சொல்லி, அதை யெடுத்துக்கொண்டு வருவதற்காக வீட்டுக்கு ஓடினாள். அவளில்லாத சமயம்பார்த்து எச்சம்மாள், ஒயிலாம்பாள் கிட்டச்சென்று, மிக்க சொந்தம் பாராட்டி இரகசியமாக "ஒயிலம், ஒரு ராயர் வீட்டில் கலியாணம்; சாயங்காலம் போகிறார்கள். உன் காப்புக் கொலுசை ஆறு நாளைக்கு இரவில் கொடுத்தையானால் தேவலை. அவாள் ரொம்பவேண்டியவாள். நகைக்கு நான் உத்திரவாதி, நாள் ஒன்றுக்கு நகையை உபயோகப்படுத்துவதற்காக ரூ. 2½வாடகை வாங்கித்தருகிறேன். அவாளுக்கு வாங்கித்தருகிறேன் என்று சொல்லிவிட்டேன். உனக்குப் பணம்கொடுக்க வேணுமே யென்று வெயிலில் ஓடி வந்தேன். இல்லாவிட்டால் மைலாப்பூர் போய் வாங்கிக்கொடுத்துவிட்டு வருவேன். சாயங்காலமானால் வரமுடியாது, சொல்லிய கெடு தப்பிப்போமே யென்று இந்த ஓடிவந்தேன். இனிமேல் இந்த வெயிலில் மைலாப்பூருக்கு ஓடுகிறதென்றால் அலுப்பாயிருக்கிறது. என் தரகு தொகையை வேண்டுமானாலும் நீ யெடுத்துக்கொள். இந்த ஒத்தாசைமட்டும் நீ செய்யவேண்டும். இது சங்கதி யாருக்கும் தெரியவேண்டாம். நாளைக்குக் கலியாணம். முதல் 6-நாள்போக ஏழாநாள் மத்தியானம் உன் காப்பு கொலுசும் 15-ரூபாயும் நான் கொண்டுவந்து தருகிறேன். இன்றைக்கு வந்தாப்போல் சரியாக மத்தியானம் 2-மணிக்கு வருவேன். அவள் வருவதற்குமுன் போய் எடுத்துவா, போ, அதெல்லாம் ஒன்றும் யோஜிக்காதே. நான் அப்படி யொன்றும் நாணயப்பிசகாக நடக்கத்தக்கவளல்ல." என்று அவள் மனதிலேறச்சொன்னாள்.

ஒயிலாம்பாள் முதலில் யோசித்தாள்; பிறகு தயங்கினாள். எச்சம்மாள் அவசரப்பட்டு வற்புறுத்தவும், இவ்வளவு உபகாரம் செய்தவளுக்கு இல்லை யென்று சொல்ல வாய்வராமல் மனம் இசையாவிட்டாலும் மேலுக்குடன்பட்டு நம்பிக்கை காட்ட வேண்டி நேரிட்டதால் உள்ளிருந்த நகையைக்கொணர்ந்து இரகசியமாக அவளிடம் கொடுத்துவிட்டாள் 'அதை வாங்கிக்கொண்டதும், எச்சம்மாள், அவசரமாக நான் போகவேணும், அவாள் காத்துக்கொண்டிருப்பாள், நாரதாம்பாள் நகை கொண்டுவந்தால் நீ வாங்கி வைத்துக்கொள், நாளைக்கு வந்து வாங்கிப்போகிறேன்' என்று சொல்லிவிட்டு சடுதியிலெழுந்து அதிக அவசரமாக விரைந்தோடிவிட்டாள்.

அவள் போனதும், ஒயிலாம்பாள் மனம் திக் திக் என்று அடித்துக்கொண்டது. கொடுத்த நகையை யெப்படியாவது வாங்கிவிட்டால் நல்லது என்று நினைத்தாள். நினைத்து வாசல்மட்டும் சென்று அவளைக்கூப்பிடவும் பார்த்தாள். ஆனால் கண்ணிலகப்படாமல் போய்விட்டாள்.

இல்லையென்று சொல்லத்தெரியாத குறையினால் அவள் யாரையும் நம்பிக்கொடுக்காத நகையை யவளிடம் கொடுத்தாள். 6-நாளைக்கு 15-ரூபாய் வருமென்ற பேராசையினால் ஒரே நிமிஷம் அவள் மதிமயங்கிப்போனாள். அந்த நிமிஷத்தில் செய்த காரியத்தைமாற்ற அவள் சிந்திப்பட்ட பாடெல்லாம் பயனில்லாமற் போயிற்று.

இவள் இப்படி மனம் தடுமாறிக்கொண்டிருக்கையில் நாரதாம்பாள் ராக்கிடியை யெடுத்துக்கொண்டு பெட்டி, உள்கதவு, வாசற்கதவு எல்லாவற்றையும் ஜாக்கிரதையாகப் பூட்டிக்கொண்டு வந்து சேர்ந்தாள். அவள்முன் தான்

செய்தகாரியத்தினால் தனக்குண்டான தடுமாற்றத்தைத் தெரிவிக்க மனமில்லாதவளாய் தன்னெண்ணங்களை மாற்றிக்கொண்டு எல்லாம் ஈசன்செயலால் நல்லபடியாகவே முடியுமென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு, அவள் நகையை மறுநாள் வந்து வாங்கிப்போவதாகச் சொன்ன சங்கதியை விவரமாக அவளுக்கு எடுத்துச்சொன்னாள்.

இவர்களிருவருக்கும் அவளிடத்தில் சிறிதும் சந்தேகம் உண்டாகவில்லை. ஒயிலாம்பாள், தன் நகையை விட்டுப்பிரிந்த பிரிவாற்றாமல் தவித்தாளே யன்றி, எச்சம்மாள் மோசம் செய்வாளென்று நினைத்துத் தடுமாறவில்லை. நாரதம்பாளுக்கு, ஒயிலாம்பாளுக்கு நேர்ந்த லாபம் தனக்கு நேரவில்லையே யென்ற பொறாமை தவிர வேறு எண்ணம் ஒன்றும் அச்சமயம் அவள் மனதிலில்லை. ஒருக்கால், ஒயிலாம்பாளுக்குச் செய்த உதவி தனக்குச் செய்ய அவளுக்கு மனமில்லாமலிருக்குமோவென்று சிறிது சந்தேகப்பட்டிருந்தால் இருக்கலாம்.

மறுநாள் இரண்டு மணியாயிற்று. எச்சம்மாள் மணிதப்பாமல் வந்துசேர்ந்தாள். நாரதாம்பாளுக்கிருந்த சந்தேகமெல்லாம் நீங்கிற்று. அவள்வரவைப்பார்த்ததுமே தன் வீட்டுக்கோடிப்போய் ராக்கிடியை எடுத்து வந்து சீக்கிரமாக அவளிடம் ஒப்புவித்தாள். எச்சம்மாள் அதைப்பெற்றுக்கொண்டு, அந்தப் பொன் நல்லபொன்னாயிருப்பதால் எப்படியும் விற்றுவிடலாமென்றும், ஆனால் அது மிகவும் பழைய மோஸ்தராயிருப்பதால், இப்பொழுது அந்நகை தரிப்பார் அதிகமில்லாதது பற்றி அதைவிற்கக்கொஞ்சம் காலதாமதமாகுமென்றும், அவசரப்படாமல் பொருத்திருந்தால், நல்லபொன்னாயிருப்பதால் பொன் விலையோடு, கூலியிலும்பாதி சேர்த்து வாங்கிதருவதாகச் சொன்னாள். பாதிக்கூலி யென்றால் இன்னும் $2\frac{1}{2}$ ரூபாய் கூடக்கிடைப்பதாயிருந்தால் ஒயிலாம்பாளுக்குக் கிடைத்த லாபம் தனக்கில்லாமற் போகக்கூடாதென்று ஒருமாசத்துக்குள் அதை பாதிக்கூலி சேர்த்து இடைக்கிடை சவரன் விலைபோட்டு விற்றுக்கொடுக்கிறதென்று சொல்லிப் பேசி முடித்து அதற்குச் சம்மதித்தாள். எச்சம்மாள் "அனேகமாக 15-நாளுக்குள் விற்றுவிடுவேன், கூலியும் வாங்கவேண்டியிருப்பதால் கொஞ்சம் பேரம் தகரார்வரும், அதற்காக ஒரு மாசத்தவணை கேட்டேன்" என்று சொன்னாள்.

கூலிகேட்காவிட்டால் ஒரு வாரத்தில் விற்றுக்கொடுப்பதாக எச்சம்மாள் சொன்னபோதிலும் அதற்குமேல் வரும் $2\frac{1}{2}$-அல்லது 3-ரூபாயைவிட்டுக்கொடுக்க மனமில்லாமல் ஒரு மாதத்தவணைக்கே சம்மதித்தாள் நாரதாம்பாள்.

இரண்டு நாள், மூன்று நாள், நாலுநாளாயிற்று; எச்சம்மாள் நடுவில் ஒரேநாள் வந்தாள். முன்போல் நிற்காமல் இரண்டு வார்த்தைசொல்லிவிட்டு அவசரமாகப் போகவேண்டுமென்று போய்விட்டாள்.

ஒயிலாம்பாள் தான் சரடுவித்த சங்கதியைத் தன் புருஷனுடன் சொல்லச் சிலநாள் தாமதித்தாள். அவள் சரடுவித்த சந்தோஷம் காப்புக்கொலுசை விட்டுப்பிரிந்த துக்கத்தில் மூழ்கிவிட்டபடியால் அதை அவள் அவ்வளவாகப் பாராட்டவில்லை. ஆனால் எச்சம்மாள் அப்புறம் முன்போல் வந்துபோய்க்கொண்டிருந்ததில் அவளுக்கு ஒருவிதமனோதிடமும் தான்செய்ததில் பிசகு வாராதென்கிற நம்பிக்கையுமுண்டானதால் எப்போதும்போல் மனங்களித்து சந்தோஷமாயிருந்தாள். அப்படி மறுபடியும் சந்தோஷம் வந்தபொழுது தன் சாமார்த்தியமாய்ச் சரடுவித்த தொகையைத் தன் கணவனிடம் காட்டி, அறுபத்திமூன்றும் இருபதும் 83-ரூபாயிருக்கிறதென்றும், சொச்சத்தைப் போட்டு 6-சவரன் வாங்கிக்கொடுத்தால் கூலி வேறு பணத்திலிருந்து கொடுக்கலாமென்றும் புருஷனை வேண்டிக்கொண்டாள்.

சாந்தசர்மா மனைவியிடத்தில் எப்போதும்போல் மிக்க பிரீதியுள்ளவனாய், அவள் அழகில்

முற்றும் அகப்பட்டவனாயிருந்தாலும், அவனுக்குள்ள சாந்த குணத்தால் அவசரபுத்திக்கு மட்டுமவன் ஆளானதில்லை. ஆகவே, முதல் மாசத்து சம்பளமுழுவதையும் நகைக்கென்று எடுத்துவைத்துக்கொண்டு, இன்னம் 7-ரூபாய் கடனும் வாங்கிப்போட்டு சவரன் வாங்க இப்பொழுது என்ன அவசரம்! சற்றுப்பொறேன்: அடுத்தமாசச் சம்பளம் வந்தால் என்ன செய்யலாமென்று பார்ப்போமென்று சாந்தமாகச் சொன்னான்.

தன் வார்த்தைக்குச் சிறிதும் மாறாக ஏதாவது தன் கணவன் சொன்னால் அதையொரு பெரிய குற்றமாகப் பாராட்டி தன்னுடைய தௌர்ப்பாக்கியத்தால் தன்னழகையும் சிறப்பையும் மதிக்க உணராத புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு வருந்துவதாக நினைத்து முகத்தைத்தூக்கிக்கொண்டு ஒயிலாம்பாள் அட்டகாசம்செய்ய நினைத்த காலமுண்டு. அப்பேர்ப்பட்டசமயங்களில் அவள் முகம் கோணவும் சாந்தசர்மா தன் வார்த்தை யேறுதலையுணர்ந்து அவளிஷ்டப்படி விட்டு நடந்துவந்தானாதலால் அவன்பேரில் குற்றஞ்சொல்ல அவளுக்கு மனம் வாராமற் போயிற்று. வேலை போகும்படியான சங்கடம் நேர்ந்ததை யுணர்ந்தபொழுது எல்லாம் தன்னாலே நேர்ந்ததென்று தன்னைப் பற்றி அவ்வளவு பெருமையாக நினைத்துக்கொள்ளாமல், அவள் புத்திநிதானத்தோடு நடந்து வந்தபடியால், இப்பொழுது அவள் கணவன் சொன்னது நியாயமாயிருக்கக்கண்டு அப்படியே சரியென்று அவன் சொல்லியதற்குடன்பட்டாள். அதற்குள் தன் காப்புக்கொலுசும் நகைப் பணமும் வந்துவிடுமாதலால் தன் கணவனுக்கு எவ்வித கஷ்டமுமில்லாமலே தன்மனோரதத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்கிற எண்ணமும் அவளுடையநடத்தைக்கு ஒருவிதத்தில் காரணமாயிருந்திருக்கலாம். எப்படியாயினும் புருஷனும் மனைவியும் வெகு சந்தோஷமாக விருந்தார்கள்.

* *

எச்சம்மாள் குறித்த ஒரு வாரமுமாய்விட்டது. ஏழாம்நாள் குறித்த நேரத்தில் வந்து "கலியாணத்துக்குப்போனவர்கள் இன்றைக்கு வரவேணும்; வரவில்லை; நாளைக்கு வரலாம் வந்ததும் நகையும் பணமுமாக வருகிறேன்' என்று சொல்லிப்போனாள்.

மறுநாள் விடிந்து கழிந்தது. அடுத்த நாளும் அப்படியே சென்றது. மூன்றாம்நாள் எச்சம்மாள் வந்தாள். "கலியாணத்துக்குப் போனவிடத்தில் ஏதோ இழவுநேரிட்டதாம்' இன்னும் 15-நாளில் வருவதாகக் காகிதம் வந்திருக்கிறது. வந்ததும் கட்டாயம் நகையும் பணமுமாகக் கொணர்ந்து கொடுக்கிறேன். நகைக்குப் பாத்தியம் நானிருக்கிறேன்: நீ பயப்படாதே" யென்று தைரியம்சொல்லிப்போனாள்.

ஒயிலாம்பாளுக்கு மனதில் அச்சமுண்டாகத்துவக்கிற்று. உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பாத்திபோல் ஒன்றும் சொல்லக்கூடாமையால் தெய்வத்தின்மேல் பாரத்தைப்போட்டு 15-நாளையும் பல்லைக்கடித்துக்கொண்டு கழிப்போமென்று சும்மா விருந்தாள்.

குறித்த 15-நாளும் ஒயிலாம்பாளுக்கு 15-வருஷங்களாக விருந்தன. 16-ம் நாள் எச்சம்மாள் வருவாளென்று வாசலில்வந்து எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். வரவில்லை. 17-ம் நாள் எச்சம்மாளுக்கு ஆளனுப்பினாள். அவள் அவசரமாக மைலாப்பூருக்குப் போவதாகச் சொல்லி வெளியே போய்விட்டாள். 18-ம் நாள் தானே அவளை நேரப்போய் பார்க்கிறதாகத் தீர்மானித்து நாரதாம்பாளையும் கூட அழைத்துக்கொண்டு சென்றாள். அதற்காத்தான் நேற்று மையிலாப்பூருக்குப்போயிருந்ததாகவும் சாவி புருஷனிடத்திலிருந்தமையால் அதுவரையிலிருந்து வாங்கிவரத் தனக்குச் சரிப்படவில்லையென்றும் இன்னும் ஒருவாரத்துக்குள் கட்டாயம் வாங்கிவந்து கொடுப்பதாகவும் சொன்னாள். நாரதாம்பா

ளுக்கு குறித்தகெடுமுடிவில் பணம் கொடுப்பதாகச் சொன்னாள்.

"விற்கவேண்டாம் நகையைக்கொடு" என்று கேட்டாள் நாரதாம்பாள்.

"நகைவிற்று 20-நாளாய்விட்டது. குறித்த கெடுவில் பணம் வருமேயன்றி நகை வராது" என்று சக்கரவட்டமாகப் பதில் சொன்னாள் எச்சம்.

இருவரும் கையைப் பிசைந்துகொண்டு "தெய்வமே! என்னசெய்கிறது', என்று ஏங்கிக்கொண்டு வீடுவந்தார்கள்.

ஒயிலாம்பாளுக்குக் குறித்த ஒருவாரமுமாய்விட்டது. நாரதாம்பாளுக்குக்குறித்த ஒருமாசமும் ஆய்விட்டது.

வெயிலில் நடந்து ஒயிலாம்பாள் உடம்பெல்லாம் கருகிவிட்டது. கால் கொப்பளித்துவிட்டது. கன்னங்கள் ஒட்டிவிட்டன. அவளுக்குச் சாதம் செல்லவில்லை.

புருஷன் "உடம்பு என்ன"வென்று கேட்டான்.

"ஏதோ எனக்கு உடம்பு சரியாகவில்லை" யென்று சொன்னாள்.

"ஏதாகிலும் வியாதி உபத்திரவம் உண்டோ" என்றான்.

"அப்படி யொன்றும் சொல்வதற்கில்லை" யென்றாள்.

ஆனால் இளமசக்கை யென்று எண்ணி, "இராத்திரி சமைக்கப்பட்டால் சமை. இல்லாவிட்டால் வேண்டாம்" என்று சொன்னான்.

இப்படிச்சொன்னதில் அவளுக்கு ஒரு சாதகம் நேர்ந்தது. வெயிலில்வந்து வழக்கப்பட்டவளல்லவாதலால் எச்சம்மாளைத் தேடி யலைந்துவிட்டு வந்து இராத்திரி சமைப்பது அவளுக்கு மிகக்கஷ்டமாக விருந்தது. இப்பொழுது தள்ளாவிட்டால் இரண்டு நாழிகை இளைப்பாறப் படுத்திருந்து எழுந்திருக்க இடமுண்டாயிற்று.

ஒவ்வொரு நாளைக்குப் பகல் போஜனத்தையே மூடிவைத்திருந்து இராத்திரிக்கும் உபயோகித்துவந்தாள். சாந்தசர்மா எதற்கும் ஏனென்று கேட்கவில்லை. கையில் பணமுள்ளவனானால் பெண்டாட்டியை சமைக்கவேண்டாமென்று சொல்லி பரிசாரக னேற்படுத்தியிருப்பான். பணமில்லாததோஷம் அவள்போட்டது போதுமென்று பொறுமையாக சாப்பிட்டுவந்தான்.

* * *

ஒரு மாதமாயிற்று. ஆறு வாரமுமாயிற்று. ஒயிலாம்பாள் உடம்பு துரும்பாகப்போயிற்று. சாந்தசர்மா பார்த்து மிக வருத்தப்பட்டான். ஆனால் அவனுக்குக் காரணம் தெரியாது. தன் மனைவிக்கு மசக்கை யுபத்திரவமென்றே எண்ணியிருந்தான்.

நாரதாம்பாள் புருஷனறிந்து நகை கொடுத்தவளாதலால் ஒருமாத தவணையானதும் புருஷனை யேவி விட்டாள்.

அவள் புருஷன் அவளுடைய ஹிம்சைக்காக இசைந்தவனாதால் "போ போ அந்தப் பரிசாரக முண்டையைத் தேடிக்கொண்டு யாரலைவார்கள்! நகைபோனால் தலை முழுகிவிட்டு தீட்டுக்கழிந்ததென்று சும்மாவிரு" என்றான். இப்படி யொருவாரம் இரண்டுவாரம்கழிந்தது.

* * *

ஒருநாள் மத்தியானம் இரண்டுமணி யிருக்கும். வெளியில் வெய்யில் நெருப்பாக எரிகிறது. வீட்டுக்குள்ளிருப்பவர்களும் உஷ்ணம் தாங்காமல் மூச்சுவிடக் காற்றின்றித் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். வெயிலின் கொடுமையால் வெளியில் யாருமற்று ஊரவமடங்கி எங்கும் நிசப்தமாக விருந்தது.

"'ஐயோ' அப்பா! இல்லை, சொல்கிறேன்! இல்லை சொல்றேன்!" என்ற சப்தம் ஒருபெண்பிள்ளையின் அழுகுரலோடு சேர்ந்து ஆகாயத்தைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டது.

சற்றுநேரத்துக்கெல்லாம் வெல்லப்பாகை ஈ மொய்த்ததுபோல் அச்சப்தமுண்டான வீட்டைச்சுற்றிப் பலபட்டடையான ஜனங்

கள் ஏகமாக மொய்த்துக்கொண்டிருக்கக் காணப்பட்டார்கள்.

அன்றுசாயங்காலம் எச்சம்மாள் போலீசாரோடு டாணாவிற்குப் போனதைப் பலர் பார்த்தார்கள்.

மறுநாட் காலையில் சாதாரண உடைதரித்த போலீஸ் உத்தியோகஸ்தர் ஒருத்தர் சாந்தசர்மா வீட்டுவாசலில்வந்து அவர்பேரைச்சொல்லிக் கூப்பிட்டு' "'குட்மார்னிங் ஸார், உங்களோடு கொஞ்சம் காரியமாகப் பேசவேண்டும், பார்க்கலாமா" என்று கேட்டார்.

"'குட்மார்னிங்', உள்ளே வாருங்களேன்" என்று அவரை உபசரித்து நேசத்துவமாக வந்ததாக அவரோடு யோகக்ஷேமம் விசாரிக்க, அவர் நான் கொஞ்சம் போலீஸ் காரியமாக வந்திருக்கிறேன்: ஆகையால் உடனே காரியத்தை முடித்துக்கொண்டு போகவேண்டும்" என்று சொன்னார்.

இந்த வார்த்தை ஒயிலாம்பாள் காதில் படவே அவள் கீழேவிழுந்து மூர்ச்சித்துவிட்டாள்.

அவள் விழுந்த சத்தம்கேட்டு, சாந்தசர்மா வந்து பார்க்க, அவளுடைய நிலைமையைக் கண்டு திகில்பட்டு, அவளை வாரியெடுத்து மடியில்போட்டுக்கொண்டு, தனக்குப் பரிச்சயமானவரான போலீஸ் உத்தியோகஸ்தரைக் கூப்பிட்டு, கொஞ்சம் ஜலம் கொண்டுவரச் சொல்லி மூர்ச்சை தெளியச்செய்தார்.

மூர்ச்சித்துவிழுந்ததின் காரணத்தையுடனே யூகித்துணர்ந்த போலீஸ் உத்தியோகஸ்தர், சங்கதியைச் சுருக்கமாகச்சொல்லி, "காப்பும் கொலுசும் அகப்பட்டிருக்கிறது, நீங்கள் அவகாசப்பட்டதும் இன்ஸ்பெக்டர்வீட்டுக்கு வாருங்கள், நான் அதற்கு வேண்டிய வழி சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

சாந்தசர்மாவுக்குச் சங்கதி யப்பொழுதுதான் தெரியும். ஆனாலும் அந்த சமயத்தில் அவனுக்கு மனைவியின்மேல் சிறிதும்கோபமே தோன்றவில்லை. மூர்ச்சித்துவிழுந்தவள் பிழைத்தாளே அதுவே பெரியகாரியமென்று எண்ணி, அவளைச் சாந்தப்படுத்தி, "காப்பும் கொலுசும் போனதற்காகவா நீ இவ்வளவு கவலைப்பட்டு உடம்பைத் துரும்பாகவடித்துக் கொண்டாய்! ஐயோ, நான் மசக்கையென்றல்லவோ மோசம் போய்ச் சும்மா இருந்துவிட்டேன்; கிடக்கிறது. காப்பும் கொலுசும் அகப்பட்டிருக்கிறதாம், நான் இன்ஸ்பெக்டரைப் போய்ப் பார்த்து வருகிறேன்" என்று சொன்னான்.

"என்னைக் கோர்ட்டுக்கிழுப்பார்களோ என்னவோ! என்ன செய்வேன். இதைவிட நாக்கைப் பிடுங்கிக்கொள்ளலாம். எனக்கு நகையே வேண்டாம். இந்தமட்டோடு வெளியிலிழுக்காமல் விட்டுவிட்டால் போதும்" என்றாள்.

"அதற்குத்தான் ஏதோ வழி சொல்கிறேன் என்று சொல்லிப்போனார்; இன்ஸ்பெக்டரைக்கண்டு பேசிவருகிறேன். பின்பு நடந்ததென்னவென்று தெரியவரும்." என்றான் சாந்தசர்மா.

பின்னும் ஒரு மாசத்துக்கெல்லாம் கேஸ் விசாரணைக்கு வந்தது. சாந்தசர்மாவும் இன்னும் சிலரும் வாதிகளாகவந்து ஆஜரானார்கள்.

விசாரணைதினத்தன்று சுமார் 2,000-ரூபாய் பெறும்படியான சொத்துக்கள், நகை நட்டு துணிமணி வகைராக்களாகப் போலீசாரால் மீட்டுவந்து கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தப்பட்டன.

கைதிகள் நிற்கும் கூண்டில் எச்சம்மாளும் அவளுக்குடந்தையான இன்னொரு விதவையும் நின்றார்கள்.

எச்சம்மாள் சாட்டப்பட்ட குற்றங்களையெல்லாம் ஒப்புக்கொண்டபடியால் வாதிகளையும் இரண்டொரு சாக்ஷிகளையும் விசாரித்துவிட்டு நியாயாதிபதி எச்சம்மாளை இரண்டு வருஷம் கடுங்காவலிருக்கத் தண்டித்துவிட்டு கோர்ட்டு முன்னிருந்த உடைமைகளை உடையவர்களுக்குக் கொடுத்துவிடும்படி உத்தரவு செய்துவிட்டார். எச்சம்மாள், அகப்பட்ட அன்று மத்தியானம் நன்றாக அடிபடுமுன், அவளைக் கோர்ட்டுக்கிழுத்தால், அவளோடு வியாபாரஞ்செய்த ஸ்திரீகளெல்லாரையும் தன்னோடுகூடக்

கோர்ட்டுக்கிழுப்பதாகப் பயமுறுத்தியிருந்ததால், நகை பறிகொடுத்த ஸ்திரீகளெல்லாம் எங்கு நம்மையிழுக்கப்போகிறார்களோ வென்று, நகை போனாலும் போகட்டுமென்று நான் கொடுக்கவில்லை யென்று சொல்லிவிட்டார்கள். புருஷர்களும் அவர்கள் செய்யத்தக்கதொன்று மில்லாமையால், இவர்களுக்கு நன்றாகப் புத்தி வரட்டுமென்று சும்மா விருந்துவிட்டார்கள். அவள் குற்றம்செய்த 300-கேஸ்களில் சார்ஜ் செய்ய எடுத்துக்கொண்டது மூன்று கேஸ் தான். அதற்குமேல் சார்ஜ்செய்ய சட்டம் இடம் கொடுக்கவில்லை. இந்த மூன்று கேஸில் ஒயிலாம்பாள் காப்புக் கொலுசு அகப்பட்டது ஒரு கேஸாதலால் சாந்தசர்மா கட்டாயம் வாதியாகக் கோர்ட்டுக்குப் போகவேண்டி நேரிட்டது. கேஸ், போலீஸ் கேஸானாலும் ஒயிலாம்பாளைக் கோர்ட்டுக்கிழுக்காதபடி பார்த்துக்கொள்ள பெரியதொகை கொடுத்து ஒரு வக்கீலை நியமித்தான்.

அட்டிகைக்காகவைத்திருந்த பணமெல்லாம் இந்தக்கேஸில் செலவழிந்து போய்விட்டது.

காப்பும் கொலுசும் மட்டும் திரும்பிவந்தது.

ஒயிலாம்பாள் அட்டிகைக்கு வைத்திருந்த பணம் போனதைப்பற்றி வருத்தப்படவே யில்லை.

இனி நான் அட்டிகையே அணிவதில்லை யென்று விரதங்கொண்டு உள்ளங்கழுத்து ஒன்றுமில்லாமலிருந்தால் வெறிச்சாப்போலிருப்பதை மறைக்க சட்டைபோல் கழுத்து மூடிப்பொத்தான் வைத்துத் தைத்த ரவிக்கை போட்டுக்கொள்ளத் துவக்கி இன்றைக்கும் அப்படியே செய்துவருகிறாள்.

ஒயிலாம்பாளுக்கு இப்பொழுது நகைபாசையே கிடையாது.

அட்டிகையைவிட கழுத்துமூட ரவிக்கை போட்டுக்கொள்கிறது ரொம்ப அழகாயிருக்கிறதென்று அவள் தோழிகளுக்கெல்லாம் அன்று முதல் இன்றைக்கும் அவள் உபதேசம்செய்து வருகிறாள். "கடிகார அட்டிகை" யென்கிற பெயரைச்சொன்னால் இன்றைக்கும் அவள் உடல் நடுங்குவாள்.

நகைமேல் அடங்கா ஆசைகொண்டிருந்த ஒயிலாம்பாள் நகையாசை கூடாதென்பதைப் பற்றி அவள் தோழிகளுக்குபதேசம் செய்வதை நேரக் காதால் கேட்கவேண்டும்!

"நகையாசை" யென்பது சரியான வார்த்தைப் பிரயோகமல்ல, "நகைப்பைத்தியம்" என்று சொல்லவேண்டுமென்பாள். அவள் செய்யும் உபதேசங்களில் அவளுடைய சொந்த அனுபவத்தையே உதாரணமாக எடுத்துச்சொல்வதால், அவள் சொல்வதெல்லாம் அதிக உருக்கமாகவும் மனதிற்பதிவதாகவு மிருக்கிறதென்று அவள் தோழிகள் பலமுறையுஞ் சொல்லக் கேட்டிருக்கிறேன். C. V. S.

[This originally appeared in the "Vivekachintamani" in 1899 and has been copied by unscrupulous publishers. Hence its republication here in its original form—Ed. V. C.]

"WE ARE SEVEN".

(FROM WORDSWORTH).

நாங்கள் ஏழுபேர்.

["ஆன்மாவானது அழிவில்லாது நித்யமாயிருப்பதென்னும் கொள்கை மனிதர்க்கு இயற்கையாக உள்ளதொன்று. அனுபவமும, படிப்பும் இல்லாத ஒரு சிறு பெண்பிள்ளைக்குக்கூட இவ்வெண்ணம் உறுதியாக இருக்குமாயின் மற்றவர்களுக்குக் கேட்பானேன்" என்னும் கருத்தைக்கொண்ட இப்பாட்டு இங்கிலீஷில் வோர்ட்ஸ்வர்த் என்னும் மகாகவி இயற்றியது.]

நேரிசை வெண்பா.

1. மெள்ள வினிதுயிர்த்து வெள்ளையெல்லாம் பாலெனவே
கொள்ளும் குணத்துக் குழந்தைதான்,—விள்ளுமுயிர்
மெய்ததும்பக் காணுதலால், வீவதொன்றையெவ்வா
றெய்தவுணர் கிற்கு மிசை?

2. கண்டேனோர் ஏழைக் குலத்துவளர் கன்னிதனைக்
கொண்டவயதெட்டென்றாள் கூர்விழியாள்;—வண்டுசெறி
கூந்தலவள் சென்னிதனைச் சூழ்ந்து குவிந்ததுவால்
தோய்ந்தவிருள் போலச் சுருண்டு.

3. காடகத்தே வாழ்வார்தம் கன்னியெனத் தோற்றினளால்,
கூட்டுமுடை*யும்மதுவே கூறியதால்,—நாட்ட!
இணையிலெழில் உள்ளம் கவர்ந்திடலா லென்னே
அணைவில்மகிழ் வுற்றேனு னன்று.

4. "அன்னே, உடன்பிறந்தீர் எத்தனைபேர் ஆவீர்நீர்?
உன்னியுரை," என்னலுமே ஒண்டொடியும்—"துன்னிவரும்
யாங்கள் உடன்பிறந்தேம் ஏழுபேர்," என்றுரைத்துத்
தேங்கியெனைப் பார்த்தாள் திகைத்து.

5. "மற்றவர்தாம் எங்குள்ளார்? மாதேநீ கூறுவையோ
உற்றெனக்கிங்" கென்றயானோதுதலும்,—சொற்றனள்காண்
"ஏழுபேர் தம்மில் இருந்தார் இருவர்தாம்
வாழும் கான்வைப் பதியில் மற்று.

6. "பின்னு மிரண்டுபேர் போராழி யோடுவர்காண்;
இன்னமொரு சோதரனும் சோதரியும்,—மன்னிவளர்
ஆலயத்தின் சூழல்வா யாங்கு துயின்றிடுவார்,
சாலவினி தாகத் தனி.

7. "அன்னதொரு சூழற் கடுத்த குடிற்கண்ணே
துன்னிடுவேன் யானும் சுகமாக,—அன்னையவள்
தன்னோடு மன்னூர் சமீபம்" எனச் சாற்றினாள்
மின்னாடும் நங்கை விரைந்து.

8. "இருவர் திருப்பதியின் எய்திருப்பின், இன்னம்
இருவர் கடன்மிசையே யேகின்,—தெரிவையே
நீவிர்தா மெவ்வா றெழுவீர் நிகழ்த்து"கெனப்,
பாவையவள் சொல்வாள் பரிந்து:

9. "ஓகோ! மரத்தடியில் உற்றதொரு கோயிற்கண்
வாகா உறங்குநரை யேன்மறந்தீர்?—ஆகக்
கணக்காக ஏழுபேர் காண்பீர்யாம் ஆண்பெண்;
பிணக்கில்லை யென்றாள்" பெயர்த்து.

10. பெண்ணேநீ யோடிப் பெயர்ந்திடுவாய், பேருயிரால்
எண்ணுமுறுப் பெல்லாம் இலங்கிடுமால்;—மண்ணிற்
புதையுண் டிருந்தாரைப் பூமுகத்தாய் நின்னோ
டெதுகொண் டியம்பிடலா மிங்கு?"

11. "என்னேநீ ரிவ்வா றிசைப்பீர்? அவர்நயந்து
துன்னும் சமாதிதான் தோன்றாதோ?—வன்னம்
பசுமைவாய்ந் தெம்மிலத்திற் பத்தடிக்கே யப்பால்,
இசையுமவை பாங்காக இன்று.

12. "பல்காலும் ஆங்கே தரையிற் பரிந்திருந்தே
ஒல்காது தையல் உருற்றிடுவேன்,—சில்காலை,
உண்மகிழ்ச்சி கொள்வேன்நான் உற்றவர்கள் கேட்டுவக்கப்
பண்விளங்கப் பாடிப் பரிந்து.

13. "அத்தமித்த பின்னே, அரிய நிலாவொளிதான்
முத்திழைத்த தென்ன முதிர்பொழுதில்,—எத்தனைகால்,

* கூட்டும் + உடையும் என்று பிரியும்.

சொன்றிக் கலத்தோடும் துன்னியிருந் துண்டதுதான் ?
இன்றைக்குப் பொய்யோ விது ?

14. "ஏன்என்பாள் முன்ன மிறந்தாள், கிடந்தகிடை
ஆனவவள் பட்டதுயர் ஆர்காண்பார் ?—தானதனின்
நீங்கிடலு மீசன், நெடுந்துயரெல் லாமிங்கு
போக்கியவள் போருள் புரிந்து.

15. "ஆதலினால் அன்னனை ஆலயத்தின் சூழலிலே,
ஏதமற வைத்தார் இடம்கண்டு ;—காதலொடும்,
ஆடினேம் யோகானும் யானுமாய் அவ்விடத்தே
நாடியுறு வேனிலெலலாம் நன்கு.

16. "பின்னே பனியின் பெயலால் விளர்த்திருக்கும்
அந்நாளில், யானுடி ஓடிடவும்—,என்னைவிட்டுப்
போகவசப் பட்டுப்போய்ப் போனவவள் பாற்றுயின்றாள்
யோகனுன் தானுமங் குற்று.'

17. " ஆகவே, அவ்விருவர் வான்சென்ற மர்வாரேல்,
தோகையே, எத்தனைபேர் நீர்சொல்லாய்"—வாகா
இசைத்திட்டாள் பின்னும் "யாம் ஏழுபேர்" என்றே !
அசைக்கிற்பார் யாரவளை யாங்கு ?

18. "ஆமேகாண் அன்னார் இறந்திட்டார், வான்சென்று
தாமே யிருந்திடுவார், சாற்றுவதேன் ?—போமையா
வீணேகாண் வாதித்தல் வேறில்லை ஏழ்பெயர்யாம்
காணிர்நீர்" என்றாள் கனிந்து.

VAIN IMAGINATION.

வீண்மனோராச்சியம் அல்லது தபசியும் தேன் சட்டியும்.

ஓரானொரு காலத்திலே மேற்குமலைத்தொடரின் (The Western Ghats) ஒரு புறமாய் வழிந்தோடும் ஒரு நதிக்கரையின்மேல் ஓர் தபசி தனக்கு ஒரு பர்னசாலை கட்டிக்கொண்டு வசித்துவந்தார். அவர் இவ்வுலக வின்பங்களெல்லாம் அநித்தியமானவை யெனத்துறந்து சதா ஸர்வேசுவரனைத் தியானம் செய்வதில் தம் காலத்தைச் செலுத்திவந்தார். அவர் உறக்கங்கொள்வது வெகு அபூர்வம். நாள் முழுவதும் அழுதகண்ணுஞ் சிந்திய மூக்குமாய் எப்போது நமக்கு ஸர்வேசன் தரிசனமளிப்பார் என அவரைத் தியானித்துக்கொண்டே யிருப்பார். பகலவன் தனது கடமையைச்செலுத்திவிட்டு தனது ரதத்துடனும் மேற்கடலையடையும் சமயத்தில் இவர் மேற்சொன்ன சிற்றருவியின் கரையோரமாக இளந்தென்றற்காற்றை உட்கொள்ளும்பொருட்டு உலாவுவார். இவரது ஆகாரம் வாயுவே.

இவர் வசித்துவந்த இடத்தின் ஓரமாக ஓடிய நதியானது கொஞ்சதூரம் சென்றபின் சமவெளியில் பிரவேசிக்கின்றது. அந்த சமவெளியினின்று கொஞ்சதூரம் சென்றால் ஒரு பெரிய பட்டணத்தைக்காணலாம். அப்பட்டணத்தில் ஒரு பெரியவர்த்தகனிருந்தான். அந்தப் பிராந்தியத்திலுள்ளவர்கள் எல்லாரிலும் அவன் அதிக செல்வவான். இவனது புலன்களில் மல்லிகை, முல்லை, இருவாட்சி, கதலி, பலா, மா முதலிய புட்பச்செடிகளும் பழவிருக்ஷங்களும் ஏராளமாய் பயிராக்கப்பட்டு வந்தன. இம்மரங்களில் நாணித்தலைகுனிந்து புஷ்பித்திருக்கும் பூக்களிலுள்ள மதுவைக்குடிக்க தேனீக்கள் மொய்த்துக்கொண்டிருக்கும். இவன் தோட்டங்களிலுள்ள மரங்களில் தேனீக்கள் அநேகம் கூடுகள்கட்டி அவற்றை வெகு ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்துவந்தன.

ஒருநாள் இந்தவியாபாரி பொழுதுபோக்காக தன் அருமை மைந்தனுடன் மேற்சொன்ன நதியின் எதிர்முகநோக்கிப் போய்க்கொண்டிருந்தான்.

கொஞ்சதூரம் சென்றபின் "நாராயண நாராயண" என்றசப்தம் இவர்கள் காதில் விழுந்தது. உடனே "இங்கே இந்த சப்தம் வருவானேன் ? இங்கே யாரோ ஒருமஹான் இருத்தல்வேண்டும்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு தன் குழந்தையுடன் சப்தம் வந்த திசையைநோக்கிச் சென்றான். அங்கே போகையில் "இடறிவிழுந்தால் பிராணன்போகக்கூடிய" ஸ்திதியிலிருந்த ஒரு தபசியைக்கண்டான். சந்தியாகாலம் கிட்டிவிட்டபடியால் தபசி தமது நிஷ்டையிலிருந்து எழுந்து வெளியே சஞ்சாரஞ்செய்ய வழக்கப்படி புறப்பட்டார். வர்த்தகனும் அவனது மகனும் இவரிடத்திற்குக் கடுகிச்சென்று சாஷ்டாங்கமாய்த் தெண்டனிட்டார்கள். தபசியும் "நீங்கள் சகலசம்பத்துமுள்ளவர்களாய் நெடுங்காலம் வாழக்கடவீர்கள்" என்று ஆசீர்வதித்தார்.

பின்னர் வியாபாரி "இவரோ மிகவும் மெலிந்திருக்கிறார். தனது பசியை யாற்றிக்கொள்ள இவருக்கொன்றுங்கிடையாது. நமிடத்திலோ தேன் ஏராளமாயிருக்கிறது. தினமும்இவருக்கு சிறிதளவு கொடுத்தால் நமக்குக்குறைந்துபோவதொன்றுமில்லை" என்று தனக்குள் யோசனை செய்துக்கொண்டு தபசியை நோக்கி "தேவரீர் மிகவும் மெலிந்து எலும்புந் தோலுமாயிருக்கிறீர்கள். தேவரீருக்கு சம்மதமானால் அடியேன் தினந்தினம் கொஞ்சந் தேன் அனுப்பிவைப்பேன்" என மொழிந்தான். வியாபாரியின் மகன் :—"நானே கொண்டுவந்து இவருக்குத் தினமும் கொடுக்கிறேன் அப்பா" என்றான்.

தபசி.—"ஏதப்பா! குழந்தாய்! நீ உன் தகப்பனைவிட அதிக உதாரகுணமுள்ளவனாயிருக்கிறாய் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்" என்றார்.

வியாபாரி.—"சர்வவல்லவரான கடவுள் நமக்கு தேகதிடனும் மிகுந்த சம்பத்தும் என்னத்துக்காகக் கொடுத்தார்? அதிதிகளுக்கும் இரப்போருக்கும் கொடுத்துதவவே: அதிலும் ஒருவர் இல்லைமையையறிந்து அவர் "எனக்குத்தா" என்று கேட்பதற்குமுன் கொடுப்பது அதிவிசேஷமானது. இதுபற்றியல்லவா சகலமுமறிந்த குமரகுரு ஸ்வாமிகளுங்கூட

"கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற்றமும்
நிலவணங்கித்தாழப்பேறின்'"

என்று கூறியிருக்கிறார்.

தபசி.—"நாம் ஒருவரைப்போய் எனக்கில்லை கொஞ்சங்கொடு என்று கேட்பதுமில்லை. ஒருவருடையதை பலாத்காரமாய்ப் பிடுங்குவதுமில்லை. ஒருவர் வலியக் கொணர்ந்துகொடுத்தால் வேண்டாமென்று தள்ளிவிடுவதுமில்லை. "ஈவது விலக்கேல்" என்பது நமது மூதாட்டியால் உரைக்கப்பட்ட கட்டுரையல்லவா ? ஆகையால் நீர் உமதிஷ்டப்படி செய்யலாம்" என்றுரைக்க,

வியாபாரியும் அவனது மகனும் செலவு பெற்றுக்கொண்டுதங்கள் ஊர்வந்து சேர்ந்தார்கள்.

தான் வாக்களித்தபடியே வியாபாரியானவன் தினமும் ஒரு சட்டி நிறைய தேனைப்பெய்து தன் புதல்வனிடம் கொடுத்து தபசியிடம் சேர்க்கும்படி கட்டளையிடுவான். தபசியானவர் வியாபாரியின் மகனையும் வியாபாரியையும் வாழ்க்கி அநேக வந்தனங்களோடும் அந்த சட்டி தேனை வாங்கிக்கொள்வார்.

அந்தத்தேனில் ஒரு சிறுபகுதியைக் குடித்துவிட்டு மிகுந்ததை ஒரு சொட்டுக்கூட சேதப்படுத்தாமல் ஒரு பெரிய பானையில் ஊற்றிவைப்பார். இவர் இருந்தவிடத்தில் ரகசியமாக குகை ஒன்றுண்டு. அந்த குகையின் ஒரு மூலையில் ஒரு உரியைக்கட்டி அந்த உரியில் இந்தப்பானையை வைத்துவிடுவார். இப்படிக் கொஞ்சக்காலம் கழிந்தது. இருபணத்துவம் நாளுக்குநாள் அதிகரித்துவிட்டது. போலித்தபசியாய்விட்டார். வாய்விட்டு நாராயணனைக் கூப்பிடுவார். ஞாபகம்மாத்திரம் பானையின்மேலிருக்கும். எப்போதாவது உலர்ந்த சருகுகள் காற்றினால் அடிபடும்போது உண்டாகும் சத்தம் காதிற்கெட்டிவிட்டால் உடனே குகைக்குட்சென்று பானை சரியாயிருக்கிறதா என்று பார்ப்பார்.

ஒருநாள் அவர் தம் வாழ்க்கையைக் கேவலமாக மதித்து "இன்று ஒரு நாள் தபசுசெய்யாவிடில் என்ன கஷ்டம் வந்துவிடும்? இன்றைக்கு தபசில் உட்காருவதில்லை" எனத் தனக்குள் தீர்மானித்துக்கொண்டு தனது ரகசியமான குகையில்போய் சட்டியை வைத்திருந்த மூலையில் உட்கார்ந்துகொண்டார். அங்கே ஒரு நாளாகிலும் சூரியன் பிரவேசித்தறியான். ஆதலால் அது மிகக் குளிர்ந்திருந்தது. அங்கிருந்துகொண்டு பின்வருமாறு ஆலோசிக்கத் தொடங்கினர் :—

"என்னுடைய கஷ்டகாலம் சீக்கிரம் தீர்ந்துபோம். இவ்வளவு நாள் மழைக்கு நனைந்து வெயிலுக்குலர்ந்து கிடந்தேனானாலும் இனிமேல் எனக்கு நற்காலம் பிறந்துவிடும். கஷ்டமனுபவித்தபின்பு சுகமனுபவித்தல்தான் நல்லது. அப்படி அனுபவிக்கும் சுகம்தான் உண்மையான சுகம் இப்போது. பானை நிரம்பியிருக்கிறது. சிறுவிலைக்காலம் வந்தவிடத்து தேனை விலைப்படுத்துவேன். என்னிடமிருக்கும் தேன் குறைந்தது 10-பணத்துக்குப்போகும் (10-பணம் 2½-ரூபா) 10-பணம் ஒன்றல்ல இரண்டல்ல. 10-பணம் பத்தென்னுவதற்கே 10-நொடி செல்கின்றது. அதைக்கொண்டு ஓரிடையனிடத்தில் 5-ஆட்டுக்குட்டிகள் வாங்குவேன். அவை வருடத்திற்கிருமுறை சூலாகி தலைக்கு 2-வீதம் குட்டிபோடும். "சிறுகத்தொடங்கினால் பெருகவாழலாம்" என்று பெரியோர் புகன்றது பொய்க்குமா? ஒரு வருஷத்தில் 20-குட்டிகளாகிவிடும். 10-வருஷத்தில் அவைகள் எவ்வளவு என்று எண்ணுவது என்னாலாகாது. என்னண்டை ஆடுகளிருக்கும் சங்கதி கம்பளம் நெய்கிறவர்கள்கண்டால் எல்லாரும் ஆட்டுமயிருக்காக என்னிடமே குத்தகைகொள்வார்கள். கொஞ்சக்காலத்துக்குள் பெரியதனவானாகிவிடுவேன். எனக்கீடான பணக்காரன் இந்தப்பிராந்தியத்திலேயே ஒருவனுமிருக்கமாட்டான். பின்பு உயர்குலஸ்திரீ ஒருத்தியை மணம் புரிவேன். ஒருவேளை ராஜகன்னிகையே எனக்கு மனையாளாக வந்தாலும் வரும். அப்புறம் ஆகாயத்தை யளாவும்படியானதும் மிக விஸ்தாரமுள்ளதும் சகல சம்பத்துகளும் நிறைபப்பெற்றதுமான ஓர் உன்னதமாளிகை கட்டுவேன். வீட்டின் அடித்தரையை தங்கத்தினால் முலாம் பூசுவிப்பேன். கூரையை நவரத்தினத்தால் அமைப்பேன். எனது மாளிகையை மின்னலுந்தோற்றுப்போம்படி வெளிச்சமுள்ள விளக்குகளால் பிரகாசிக்கச்செய்வேன். அதனால் இரவும் பகல்போலத்தோற்றும். வீட்டைச்சுற்றியும் ஒரு சிங்காரவனம் நிருமிப்பேன். அதில் விதவிதமான புஷ்பச்செடிகளைப் பயிராக்குவேன். அவைகளுக்குத் தண்ணீருக்காக ஒரு நதியை தோட்டத்திற்குள் திருப்பிவிடுவேன். எப்போதுபார்த்தாலும் 'கம்'மென்று வாசனை வீசும், என் மாளிகைக்கு ஈடாக இந்த ஜமபுத்வீபத்திலேயே எங்கும் காணக்கிடைக்காது. எனக்குக் கலியாணமான பின் என் மனைவியை மாளிகைக்குக் கூட்டிவருவேன். கொஞ்சக்காலத்துக்கெல்லாம் எனக்கு ஒரு ஆண்பிள்ளை பிறக்கும். அவன் அதிசௌந்தரியமுள்ளவனாயிருப்பான். அவனை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்துவருவேன். அவனுக்கு வயது நாலானவுடனே வேதவிதிப்படி அவனுக்கு வித்தியாப்பியாசம் செய்விப்பேன். சகல வேதங்களையும் ஐயமறக்கற்பான். உலகத்திலுள்ள சகல பாஷைகளையும் கிரந்தங்களையும் வெகு சீக்கிரத்தில் கற்று வல்லவனாகிவிடுவான். இவ்வளவெல்லாஞ் செய்தபின் "பிள்ளைதான் வயதின் மூக்காற் பிதாவின் சொற்புத்திகேளான்" என்றதற்கிணங்க என் புத்தியைக் கேளாமல் முடக்கடி செய்வானானால் அவனை அதி கொடூரமான தண்டனைக்குள்ளாக்குவேன். அவனுக்குப் பின்னும் புத்தி வராவிட்டால் "இந்த தண்டத்தைக்கொண்டு பலமாக ஒரு அடி அடிப்பேன்" என்று தன்னண்டை கிடந்த ஒரு தண்டத்தை எடுத்துச்சுழற்ற பானையை அது பலமாய்த்தாக்கிச் சுக்கல் சுக்கலாக்கிவிட்டது. சட்டி உடைந்ததும் தேன் தபசியின் தலைமேல் வருஷித்தது. உடனே தபசி எழுந்து "இந்த மட்டோடாவது தப்பித்தேனே. இதில் ஏதாவது ஈக்கள் இருந்திருந்தால் அவைகள் என்னைக் கொடிய கஷ்டத்துக்குள்ளாக்கிவிடுமே! என் செய்வேன்! தெய்வமே என் கையிலில்லாத காரியங்களைப்பற்றி மனோராச்சியம் செய்ததின் பலனை இதோ அனுபவிக்கிறேன். நான் தெய்வத்தை தொழுதுகொண்டிருக்கவேண்டிய காலத்தை வீண் எண்ணங்களைக்கொண்டன. இதன்பலன் உடனே கைமேல் கிடைத்துவிட்டது.

"தெய்வமுளதென்பார் தீயசெயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றெறுக்கும்"

என்று பெரியோர் புகன்றது பொய்யோ! இனிமேல் நான் தேனைவாங்கி உண்பதில்லை. இவ்வளவு ஆனது போதும்!" என்று நினைத்துக்கொண்டு நேராக நதிக்குச்சென்று கருக்காய் வேஷ்டியைத் துவைத்துக்கொண்டு தன் தேகத்தையும் நன்றாய்த்தேய்த்து முழுகி தன் இருப்பிடம் வந்துசேர்ந்தார். மறுபடியும் தனது காமம்செய்ததை நினைந்து தேறி கடவுளை தியானிப்பதில் தன் காலத்தைச் செலுத்திவந்தார்.

"STRIVE, STRIVE AND STRIVE AGAIN, IN SPITE OF FAILURES, HAVING THIS HIGH IDEAL TO ENCOURAGE !"

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயகின் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். 23.] ராக்ஷஸஞு பங்குனிமீ, 1916ஞு மார்ச்சுமீ [சஞ்சிகை 12.

"STRIVE, STRIVE AND STRIVE AGAIN, IN SPITE OF FAILURES, HAVING THIS HIGH IDEAL TO ENCOURAGE!"

The Hon'ble Sir Harold Stuart's advice to the Young Men.

The Hon'ble Sir Harold Stuart, while unveiling the portrait of the late Hon'ble Mr. Gokhale at the Tinnevelly Association's Home, Madras, on 8th March 1916, made the following speech pointing out the chief characteristics of the departed patriot and urged the young men to follow Mr. Gokhale's footsteps :—

"It is always a satisfaction to me to do what in me lies to encourage young men who seek inspiration from the life of a very good and great man. I take it that in setting up a portrait in this Association's Home you wish to do something more than to do honour to the memory of Mr. Gokhale for he, alas, is past all earthly honour. I take it that your desire is that his life shall be an inspiration and a stimulus to the young men who find their home here. He himself was greatly inspired by the life of that good and great man whose follower he was always proud to declare himself to be, Mr. Justice Ranade, and many a time he has spoken to me with greatest respect, devotion and affection of that great Judge.

SELF-SACRIFICE.

I would first of all lay stress on his *Self-Sacrifice.* With his high intellectual attainments and his charm of manner, wealth and honour would have been obtained by him in abundance. He put them all aside and deliberately devoted himself to work for his country seeking neither riches nor honour. He was singularly devoid of personal ambition. He was filled with ambition to do public good. His early life was characterised by self-sacrifice that is both rare and highly commendable. Accepting merely a pittance for himself he devoted his capabilities to the public service, first in education and then in a wider field.

GREAT INDUSTRY.

The next quality I should impress upon you is his *great industry.* He recognised that no man could be properly equipped for a public

life unless he was prepared to undergo much toil and labour in acquiring the very necessary detail and complete knowledge. Behind them there were many hours of unremitting toil, much wading through dull official publications, much careful examination of the evidence that he was collecting and preparation of the manner in which he would present it. There was nothing superficial about his work. Those of us who heard him in debate and saw how quick he was in answering a point that had been taken by an opponent, knew how carefully he must have prepared himself for his immediate task. That was characteristic of him in all the work that he did—careful preparation. He knew his subject thoroughly and I commend that very much to the young men in this country who seek a public career. A mere superficial knowledge can never advance a cause. However eloquent, words will not gain success. Behind eloquent words there must ba a complete and detailed acquaintance with the subject.

TRANSPARENT SINCERITY.

The next great attribute that I will mention is his *Transparent Sincerity*, a quality which always struck me very forcibly. He never followed that school which suggests that end justifies the means. He recognised that the occasion was not always *suitable*, that the time was not always ripe, but he was no opportunist in the unfavourable sense of that word. He was always careful, studiously careful, to avoid exaggeration both of statement and of language and the result was when Mr. Gokhale made a statement it received marked attention. One felt in argument with him that he advanced no proposition which he was not fully able and prepared to defend and it is that which does more perhaps than any violence of language, however temporarily successful it may be, to win applause. It is that studied avoidance of exaggeration which really secures success for any cause that is worthy of your attention.

MARKED FAIRNESS.

The last quality I will mention is his *marked fairness* I have spoken on that subject before, but I mention it again this evening because it is a quality which is very often lacking in public men in all countries and it is a quality which gains for a man the respect of his opponents. He never took unfair advantage in debate. It is very often easy to take unfair advantage and for the moment you may gain a fancied success. If ever a man wishes to devote himself to public work, he should not make a few speeches and disappear in public life. He must cultivate a habit of fairness to his opponents and so secure their respect and gain for himself the influence which is of such great value.

THE GOAL AND THE WAY.

I think I have given a sufficiently hard task for the young men of this Association in mentioning these four qualities. If they will follow Mr. Gokhale in his self-sacrifice, his industry, his sincerity and his fairness, they will have gone a great way towards the attainment of the goal that he himself reached. It will, I know, be a very hard example to follow.

"STRIVE, STRIVE, AND STRIVE AGAIN."

Many a young man who earnestly and deliberately sets himself to do so will meet with much disppointment, but I hope that with this great example before him he will *strive, strive, and strive again, in spite of failures, having this high ideal to encourage him* and set before himself the life of your great countryman alike in its aims and in its conduct to be "a lamp unto his feet and a light unto his path." (Cheers).

HOOTING.

A PARABLE FROM THE STREETS.

"The motor horn echoing in naked ugliness through the darkened streets (of London), is a symbol and paragon strident as it is, and hideous in itself, it is perhaps a blast from the trumpet that is to proclaim the resurrection of many slumbering senses and discernments. The sense of proportion in ordinary social life; the power of discerning between what is and what is not tolerable between the individual and the community; an alert sensitiveness to the convenience of our neighbour comparable with that which safeguards our own—who can deny that these were in need of rousing. Who will soberly affirm that even the war is too great a price for their awaking? To die for the glory of one's country and for the slaying of a foul dragon is a great thing; but it is no less a thing to die that better ideals of kindness, civility and unselfishness may prevail in the world. The war and its miseries are to many of us almost intolerable. Yet nothing is more sure than that they will pass. That the war will end, that the miseries and sorrows will fade, that aching hearts will cease to ache, is as certain as that spring will powder the dread-fields of death with living green. But the fruits of a changed and improved ideal of life do not pass; they flourish and spread to an increase beyond human count or imagination. . . . .

It is not only the gross and audible outrage of the motor horn which the times are revealing. There are other forms of hooting, moral and spiritual, which are as prevalent, as unfair, and at least as disagreeable although many of them are inaudible. . . . . And remember that it is in one of only two ways that the nuisance can be abated. We can abstain from offensive hooting; or our horns can be taken away from us."—*The Times.*

புஸ்தகம்-23.] [சஞ்சிகை-12

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

ராக்ஷஸ இல பங்குனி மீ

விவேகசிந்தாமணி

March-April. 1916.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சர்யந் தாலிகழில் வந்ததென்னெந் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

HOOTING: A PARABLE FROM THE STREETS

"கெடுபிடி தடபிடல்"

வழிப்போக்குபாக்கியானம்.

"வழியே யேகுக! வழியே மீளுக!" என்பது பழமொழி. பழமொழியெல்லாம் வெகுஜனவாக்கு. வெகுஜனவாக்குச் 'சமஷ்டியில் சபலம்' என்பது நிச்சயம். அப்படியென்றால் ஈசுவர வாக்குக்கு ஒப்பாகும் என்பது பொருள். இதற்கு எதிராக, "ஆண்டிசொல் அம்பலமேறாது." அம்பலத்தில் வாழ்பவன் அம்பலவாணன். ஆண்டி யென்பவன் ஜனசமூகம் விட்டு நீங்கித் தனியனானவன். "கூட்டோடு கைலாஸம்" யாருக்கும் கிட்டாது. அங்ஙனேபோல் ஜனசமூகத்தோடு ஆண்டானடியையடைதல் அசாத்தியமாகும். ஏனெனில் ஆண்டவன் அடிபணிய ஏகும் வழி 'ஊசி முனை' போலும் கத்திமுனைபோலும் குறுகி இறங்கிக் கூராயுள்ளது. அவனவன் தான் பிழைக்கும் வழியைத்தேடி யுழைக்கலாம்: உழைத்தால், உழைப்ப உழைத்த பின், உழைப்பின் பலனாய் ஈசுவரன் அடிபணியப் பெறலாம். ஈசுவரனடிபணியப் பெற்றால் வியஷ்டி பாவம் (ஜீவபாவம்) நீங்கிச் சமஷ்டி பாவம் (ஈசுவர பாவம்) சித்திக்கும். ஜீவேசுவர பேதம் அற்றால் சமஷ்டியில் வியஷ்டியும், வியஷ்டியில் சமஷ்டியும் ஆக விளங்கப் பார்க்கலாம். அப்பொழுதுதான் "ஏகன், அனேகன்" என்கிற இரண்டும் அவனே யாவன். "அவனே நான்" ஆகவும் (சமஷ்டியில் வியஷ்டி பாவனையாகவும்), "நானே அவனாகவும்" (வியஷ்டியில் சமஷ்டிபாவனையாகவும்) விளங்கும் ரகஸியம் அநுபவத்தாலே கண்டறிய வேண்டியதாயிருப்பதால் அதைப்பற்றிச் சொல்வதில் பயனில்லை.

"வழியே யேகுக! வழியே மீளுக!" என்று சொன்னதின் அர்த்தம் என்ன? வழிதப்பிச் சென்றால் வில்லங்கம் வருமால், வழியே (பெரியோர் சென்ற வழியே—இதற்கு 'ஸ்மிருதி' யென்று பெயர்) லக்ஷியத்தை நாடிச் செல்லுக! சென்று லக்ஷியத்தைக் கண்டனுபவித்தபின், அந்த அநுபவத்திலும் தடுமாட்டம் வரும்: ஆகையால் தடுமாறாமல் சுருதி, யுக்தி, அநுபவம் மூன்றும் பொருந்தப் பொருத்திப் பார்த்து லக்ஷியம் தப்பாமல் தானே வழியோடே மீண்டும் திரும்புக. இதன் உண்மையைப் பெரியோர் வாக்கில் காணலாம்.

"வாசிக்கலாம் பூசிக்கலாம் வாசியேறி வகையறிந்து
ஊசிமுனை யேறி நின்றால்
பேசிக்கலாம் நேசிக்கலாம் போனவழி தானறிந்து
மீளவும் திரும்பக் கற்றால்"

என்றுள்ள சித்தவாக்கினால் "வழியே யேகுக! வழியே மீளுக!" என்பதன் வாக்கியார்த்தம் வெளியாகும். வழியே யேகவேண்டில் பிராணனை வசப்படுத்திக்கொண்டு அதைக் குதிரைபோல் வாகனமாகக்கொண்டு 'ஏறி' அதை நடத்தும் 'வகையறிந்து' ("நாடி வழக்கம் அறிந்து செறிந்தடங்கி" என்பது ஔவை வாக்கு) ஊசி முனைபோல் கூராயுள்ள (அணு

வுக் கணுவாயுள்ள—"அணோரணீயம்") மார்க்கத்தில் நடந்து சென்றால் லக்ஷியத்தைக்கண்டு "வாசிக்கலாம்"--அதாவது "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலாம்." "பூசிக்கலாம்"—அதாவது தாதாத்மியமாகக் கலந்து ஒன்றுபட்டு இரண்டற்ற அனுபவம் சித்திக்கப் பெறலாம்.

"ஞானமென்பது மோனவரம்பு" என்று ஔவை வாக்கிருப்பதால் அந்த மோன நிலை விட்டு மனோ மௌனங்கலையாது பேசவும் ஜனசமூகத்தில் கலந்து உறவாடி உள்ளன்பு தூண்டக் கொள்ளும் நேசம் பாராட்டவும் எப்பொழுது சாத்தியமென்றால், அதற்கு விடையாக "போனவழி தானறிந்து மீளவும் திரும்பக் கற்றால்" என்று சொல்லியிருக்கிறார்.

இப்படி வழியே போய் வழியே மீளும் அறிவுக்கு இடையூறு விளைப்பான் எத்தனையோ ஆவரணசக்திகள் வழியில் ஏற்பட்டிருக்கின்றன. அந்த ஆவரணசக்திகள் சோக மோகங்களை யுண்டுபண்ணி யாத்ரிகை (வழிப்போக்கனைக்) களைப்பிளைப்பினால் வழியைவிட்டு விலகி யோடச்செய்ய "கெடுபிடி தடபிடல்" செய்வதே தொழிலாயுள்ளன. இந்த ஆவரணசக்திகள் "தேஹாஹம்" என்கிற பாவனைக்குத்தோழர்களாயிருந்து அறிவையழித்து அஞ்ஞானம் விளைப்பதே தொழிலாக வுடையனவாதலால், இவைகளை "அசுரக்கூட்டம்" என்றும் "இருட்சக்தி" "மருட்சக்தி" என்றும் சொல்லுவர் மேலோர். ஆங்கிலத்தில் இந்தச் சக்திகளைச் 'சைத்தான்' என்றும் இவனுடைய சேனைகள் பூதப்பிரேதபைசாச லோகங்களில் வாசம் செய்துகொண்டு நல்வழியிற் செல்லும் மனிதரை இடையூறுகளினால் தடுத்து அவர்களுடைய மனோபலத்தையும் வைராக்கியத்தையும் சோதித்து வருமென்றும் ஐதிகமாகச் சொல்லுவர்.

இப்பொழுது நடக்கும் பாரதப்போரின் நிமித்தமாக லண்டனில் நள்ளிருள் சூழ்ந்ததும் ஜெர்மானியர் ஆகாயரதங்கள் (இவைக்கு "ஜெப்பலின்" என்றுபேர்) ஆகாசமார்க்கமாய் வந்து பட்டணத்தில் வெடிகுண்டுகளைப்போட்டுச் சேதம்செய்ய யத்தனித்து வருவதால், இராத்திரியில் மின்சாரம் முதலிய விளக்கு வெளிச்சங்கள் போடக்கூடாதென்று கண்டிப்பான உத்தரவு பிறந்திருக்கிறது. ஆகையால் லண்டன் தெருக்களெல்லாம் இரவில் வெளிச்சமின்றி இருள் மூடியிருக்கும். இந்த இருள் மூடிய தெருக்களின் வழியே "மோடார் ரதங்கள்" ஓடிக்கொண்டிருக்கும். அவை போகும் போது வழியில் போகிறவர்களை விலக்க வேண்டி கொம்பூதி "கெடுபிடி தடபிடல்" செய்வது வழக்கம். சென்னையில் மவுண்ட்ரோட்டு முதலான ரோட்டுகளிலும் மற்றத் தெருக்களிலும் 'மோட்டார்' வண்டியோட்டும் விமரிசையைப் பார்த்தவர்கள் இருந்திருந்தாப்போல் 'பர்புரு' என்கிற கெடுபிடி சப்தம், ஆந்தையின் கூக்குரல் 'சர்க்குரல்' காட்டிக் கேட்பதுபோல் காதில் படுமுன் அதிக தடபிடல் செய்துகொண்டு மோட்டார்வண்டி வழியில் யாரையும் லக்ஷியம் செய்யாமல் "கல்லுளிமுண்டன் போறவழி தடவு கிதவெல்லாம் தவிடு பொடி" யென்கிற 'கல்லுளிமுண்டன்' வாக்குக்கு லக்ஷியமாகப் பொருந்தினாற்போல, வழியிலகப்பட்டதையெல்லாம் தவிடு பொடியாக்கிப் புழுதியைக் கிளப்பிக்கொண்டு போகிறதைப் பார்த்தும் அந்த "கெடுபிடி தடபிடல்", அவசரத்தில் அகப்பட்டுக்கொண்டு 'திகிலங்க அனுபவித்தும் இருப்பார்கள். இப்படி மோட்டார் வண்டிசெய்யும் "ஆந்தையின் கூப்பாடு சாக்குரல்" என்பதுபோன்ற "கெடுபிடி சப்தத்தையும், அதனால் வழிப்போக்கர்களுக்கு உண்டாகும் 'உஷார்' தன்மையையும் 'ஜாக்[illegible] வல்லதையையும்' உன்னி இந்தமோட்டார் கொம்பு ஊதும் சத்தமானது செத்தவர் பிழைத்தெழும் பொருட்டுக் கடைசிக் காலத்தில் "ஜாக்ரத ஜாக்ரத:" என்று அடிக்கும் தம்பட்டக் குரலோசைக்குச் சமானமாக அதைக்கருதி, பாரதயுத்தம் காரணமாய் எல்லாரும் தன்

நயம் மறந்து பொதுநயம்பாராட்டும் குணம் அமையப் பெற்றிருப்பதைக்கொண்டு அது ஸ்வயநயக் குழியில் விழுந்திறந்து கிடந்த ஜீவர்களான ஆங்கிலஜனங்களை "பொதுநயப் பேரொளி வெளிச்சம் புலர்ந்தது ஜாக்ரத ஜாக்ரத:" என்று விழித்தெழச் செய்யும் தம்பட்ட ஓசைக்கு உவமானமாக "வழிப்போக்குபாக்கியானம்" என்று ஒரு உவமை தரிசன சிலாக்கியமான உபகதை (உபாக்கியானம்) எழுதியிருக்கிறார்.

'மோட்டார்'கொம்பூதினால் வழிப்போக்கர்க்கெல்லாம் "வந்தது விக்கினம்! விலகியோடுங்கள் அல்லது வழியில் தானே மாண்டு மடிந்து மண்ணோடு மண்ணாய் மறையுங்கள்!" என்று சாவோலை வந்ததுபோல் திகில் உண்டாகி கதிகலங்குவது அனுபவத்தால் யாரும் உணர்ந்திருந்தது. இப்படிச் சாவோலைக் குவமானமான சப்தம்தானே செத்தோர் பிழைத்தெழுந்து தர்மராஜன் முன் ஆஜராக வேண்டுமென்கிற சம்பட்ட ஓசைபோல், ஜனங்கள் உள்ளத்தில் மாண்டு மாய்ந்துகிடந்த சமஷ்டிபாவ சாதனங்களான ஜீவகாருண்யம், பரோபகாரசிந்தனை, சமஷ்டிசேவை, சமுதாயக்ஷேமம் போன்ற நல்ல பாவங்களைத் தம்பட்ட ஓசையினால் கிளப்புவதுபோல் கிளப்புவதாயிருக்கிறது என்றும், இப்படிப்பட்ட சத்பாவங்கள் உதிக்கச் செய்ய நேர்ந்தது நரபலி வாங்கும் இந்தப் பாரதயுத்தத்தினால்தான் என்றும் சொல்கிறார்.

பகவான் ஜனங்கள் நாலு அவசரங்களில் தன்னை நினைக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். அதில் ஒன்று, ஆபத்து வேளை; மற்றொன்று, வியாதி பீடை; மூன்றாவது, மூப்பு; நான்காவது மரணம். ஆங்கிலேய மனோபாவம் ஜடபாவம் மிகுந்ததால் அவர்களுக்கு பாவனாசக்தி மந்தகதி யடைந்திருக்கிறது என்றும், பாவனாசக்தியில்லாவிட்டால் இப்பொழுது பிரமாதமாக வந்துற்ற இந்தப் பாரதப் போரினால் விளையக்கூடிய பிரயோஜனங்கள் கூடப் பத்தில் ஒன்று பலிக்காது போய்விடுமென்றும் கூறுகிறார். ஆகையால் கடவுள் பாவனாசக்தியைக் கொடுக்கப் பிரார்த்திக்க வேண்டும்.

தேசக்ஷேமார்த்தம் பொதுநலத்தை நாடி பேகாள வாய்வாயுள்ள பகைவனைக் கொல்ல முயன்று அதில் பிராணனை விடுவது சிலாக்கியம்தான். ஆனால் உலகத்தில் ஜனங்களுக்குள் ஜீவகாருண்யம், பரஸ்பரநேசம் அல்லது ஆசாரோபசார மரியாதைகள், ஸ்வாபரயம் பாராட்டாமை அல்லது பரோபகார சிந்தை போன்ற நற்குணங்களில் மேலான லக்ஷியம் உண்டாக வுழைப்பதில் பிராணனை விடுவது அதிலும் சிலாக்கியமாக விருக்கிறது என்பதில் சந்தேகமில்லை யென்கிறார். ஏனெனில் யுத்தத்தினால் நேரும் கெடுதிகள் அநித்தியமானவை. அப்படி யென்றால் சிறிது காலம் மட்டும் தோன்றிப் பின் மறைந்துபோகும். நல்ல உயர் லக்ஷியத்தில் பதிந்த உத்தமபாவங்களால் உண்டாகும் நன்மைகளோ நித்தியமானவை வரவர விருத்தியாகி வளர்ந்து மனோபாவத்துக் கெட்டாத அவ்வளவு தூரம் அதன் குணமகிமை பரவிப் பிரகாசிக்கும். சண்டையினாலுண்டாகும் துன்பமும் துக்கமும் இதர கெடுதிகளும் என்னதான் கோரமும் கொடூரமுமாயிருக்கினும் காலக்கிரமத்தில் அவை மாறி மறைந்துபோம். சண்டை எப்படியும் ஒருநாளைக்கு நிற்கத்தான் போகிறது. சவக்காடாயிருக்கும் கோரமான ரணகளம் வசந்தகாலம் வந்ததும் உயிர்க்குவமையான பயிர் பச்சை வர்க்கங்களால் பட்டு விரித்தாற்போல் அழகாக மூடப்பெறும். ஒரு தலைமுறை சென்றால் இப்பொழுது உற்றார் பெற்றார் உடன்பிறந்தாரென்று கொண்டாடும் உறவின் முறையாரை யிழந்து துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கும் சோகம் நீங்கிப்போம். இப்படியாக யுத்தபாதகங்கள் அநித்தியமாய் சீக்கிரத்தில் மாறி மறைந்து போவனவாயிருக்க, உயர்பாவ லக்ஷியங்களால் பிரபலிக்கும் உத்தம சாதனங்கள் வாழையடிவாழை யாகக் கிளைவிட்டுச் செழித்து வளர்ந்து பரவிப் பலனைக் கொடுக்கும்.

இப்படியாகத் தெருவில் நடக்கும் சம்பவங்களில் விசேஷமானதும் அருவருப்பையுண்டுபண்ணத்தக்கதும் "ஆந்தையின் கூக்குரலில் அபமிருத்யு விருக்கிறது" என்கிற ஜன பாவத்துக்கொப்ப மோட்டார் வண்டியின் கொம்பூதும் சப்தத்தில் அபமிருத்யு விருக்கிறதென்று ஜனங்கள் பட்டனுபவித்த அனுபவஞானத்திலிருந்தும் ஆபத்து வேளையான தற்காலத்தில் அஹம்பாவச் செருக்கு அடங்கி பவோபவ சிந்தனை தோன்றியிருக்கும் தருணமான இக்காலத்தில் "அமேத்யத்திலும் அமிருதம் இருக்கிறது" என்றாற்போல அருவருப்புக்கிடமான அபமிருத்யு சின்னமென்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட மோட்டார் வண்டியின் கொம்பூதும் சத்தமானது, "பூவுதிரப் பிஞ்சுதிரக் காயுதிரக் கனியுதிர" என்று காருண்ய மிகுதியால் "ஜாக்ரத ஜாக்ரத:" என்று பறையறைந்து கொலைக்களத்தில் தூக்குப் போடுகிற தொழிலிலமர்ந்திருந்தும் ஜீவகாருண்யத்துக்குக் கேடு வராது பரங்கருணை மிகுதியால் பரமசாதகமளித்து, மரண தண்டனை விதிக்கப் பெற்றவர்கள் ஆத்மாவை இழந்து போகாமல் உய்த்தெழும் சூக்ஷ்மம் காட்டி இரக்ஷித்த பரமவெட்டியான உத்தமசிகாமணியைப்போல் ஆபத்துக் காலத்தில் அருமையாயுதிக்கும் பவோபவத்தால் உயர் லக்ஷிய சிந்தையும் உண்மைத்துழைக்கும் உயர்பாவனையும் சித்திப்பது சகஜமென்னும் ஸநாதந தர்ம விசேஷத்தை ஓர் உவமானக் கதையாக ("Parable of the Streets") வழிப்போக்கன் நிலையிலிருந்து வழிப்போக்குபாக்கியானமாக எழுதினவரின் உயர்நலவிசேஷமும் உத்தமபாவமும் சத்துக்கள் எல்லாரும் கொண்டாடத் தக்கதாயிருக்கின்றன. இவருடைய வியாஸம் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்தூல பாவத்திலிருந்து சூக்ஷ்ம பாவத்தில் ஜனசமூக க்ஷேமத்தை நோக்கி சமஷ்டி பாவகதி யடையும் வழியாகிய உத்தமயோக ஸன்மார்க்க நெறியில் தர்மம் தலைகவிழச், சாலையில் மோட்டார் வண்டியோட்டித் திரிகிற அதமர்கள் தங்கள் பணச் செருக்கால் கால்நடையாளிகளையும் வழிப்போக்கர்களையும் அபமிருத்யு சின்னமாகிய மோட்டார் கொம்பூதி கெடுபிடி செய்து தடபிடலாக வண்டியை விட்டடித்துக்கொண்டு போவது போல், சமஷ்டி சேவையாம் உத்தமமான உயர் லக்ஷிய சாதன மார்க்கத்தில் அகம்பாவச் செருக்கால் விக்கிரமம் பாராட்டி அக்கிரமங்கள் செய்து வருகிறவர்கள் மோட்டார் வண்டி யோட்டுகிறவர்கள் அவசின்னமாம் கொம்பூதுவது போலும், ஆந்தை கூவும் அபமிருத்யு சின்னக் குரல்போலும், சமஷ்டி பாவத்துக்குச் சேதமும் அதனால் பொதுஜன க்ஷேமத்துக்கு ஹானியும் செய்கிறவர்களாகிறார்களென்று வெகு அழகாய் உவமான உபமேயங் கூறியெடுத்துக் காட்டியிருக்கிறார். இப்படி அகம்பாவத்தால் "கெடுபிடி தடபிடல்" செய்யும் அக்கிரமஸ்தர்களான "மோட்டார் வண்டியோட்டுகிறவர்கள் போன்ற" துஷ்டர்கள் செய்கையை சமஷ்டி சேவையில் வழிப்போக்கர்களான சிஷ்டர்கள் அவர்களுடைய உயர் லக்ஷிய உண்மைக்குணபாவத்தால் தீயதை நல்லதாக்கித் தேறுதல் கொண்டு சென்றாலும் அவர்கள் அபமிருத்யு சின்னமாயிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை யென்று முடிவுகட்டி யெழுதியிருக்கிறார்.

இந்த அபமிருத்யு சின்ன ஆபாச ஆர்ப்பாடங்களைக் குறைக்க அஹம்-புறம் என்றுள்ளதைப் பற்றி நிற்கும் இரண்டே வழிகளுண்டு. ஒன்று, அகம்பாவச் செருக்காளர்

விவேகம் பெற்று தங்கள் ஆபாச ஆர்ப்பாடங்களைச் செய்யாதிருத்தல். மற்றொன்று, அவர்கள் "கெடுபிடி தடபிடல்" செய்ய வகையின்றி அபமிருத்யு சின்னமாகிய மோட்டார் கொம்புக்குச் சமானமான அஹம்பாவச் செருக்கை யறுத்துப் பறித்துவிடல். இவ்விரண்டு வழிகளில் ஒன்றினால்தான் இது அடங்கல்வேண்டும்.

"அகம்பாவத்தாலே அழிந்தான் துரியோதனன்" என்று மஹாபாரதக்கதை படித்து அதன் பாடத்தை மனதிற் கொண்டவர்கள் "தானே தனக்குப் பகைவனும் நட்டானும்" என்கிற உண்மையுணர்ந்து தனக்குள் தானே ஆராய்ந்து ஆர்ப்பாடந் தீர்த்து அகந்தையை விட்டு மோட்டார் கொம்பூதலாகிய "கெடுபிடி தடபிடல்" ஆபாசத்தைக் குறைத்து விடுவார்கள். ஜடபாவ மிகுதியால் அகந்தை மேலிட்டு ஆர்ப்பாடம் செய்கிறவர்கள் அகச்செருக்காகிய 'மோட்டார் கொம்பை' அரசர்க்கரசாகிய ஈசுவரன் தன் மாயாசக்தியால் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனார்த்தம் பிடுங்கி விடுவார். பாம்புக்கு விஷமுள்ள மட்டும், ஒன்று, அது கடிக்காமலிருக்கவேண்டும்; இல்லாவிட்டால் அதன் பல்லைப் பிடுங்கி விடவேண்டும். அதன் விஷத்தைக் கெடுக்க வென்று பாம்பைக் கொல்வதும் பாபத்தொழில என்பதை மேற்றிசை நாகரிகம் பயின்றுள்ளார் அறிவது அருமையாயினும், அவர்களில் உத்தமர்களாயிருப்பவர்கள் ஒருவாறு அறிந்துவருகிறார்கள் என்று காணச் சாதுக்களெல்லாம் சந்தோஷிப்பார்கள். சுபமஸ்து.

THE HON'BLE SIR HAROLD STUART'S ADVICE TO THE YOUNG MEN.

கனம். ஸர். ஹாரல்ட் ஸ்டுவர்ட் அவர்கள் ஹிதோபதேசம்.

சென்னையில் திருநெல்வேலியார் சங்கம் என்று ஒன்றிருக்கிறது. அந்த சங்கத்தார் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து சென்னைக்கு வரும் மாணாக்கர்களுக்கு விடுதி வசதியேற்படுவதற் கனுகூலமாக திருநெல்வேலியார் ஜாகை (Tinneevlly Home) யென்று ஒரு கட்டடம் வாடகைக்கு வாங்கி அங்கே ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் கட்டடத்தில் தானே மாணாக்கர்களுக்கு விடுதிகளும் அமைந்திருக்கின்றன. இப்பொழுது சுமார் 32-மெம்பர்கள் அங்கே தங்கியிருக்கிறார்கள். இதை மேல் பார்வை செய்து வருகிறவர்கள் திருநெல்வேலியார் சங்கத்தினர். இவர்கள் பரோபகாரமாக ஊதியமின்றி யுழைத்து வருகிறார்கள். இச்சங்கத்துக்கு சென்னைத் துறைமுக சங்கத்தார் ஆபீஸில் வேலையாயிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ இராமஸ்வாமி அய்யர் அவர்கள் காலஞ்சென்ற மிஸ்டர் கோக்கலே படம் ஒன்றை யளிக்க அச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய பாரிஸ்டர் மிஸ்டர் தேவதாஸ் அவர்கள் அப்படத்தை திருநெல்வேலியார் ஜாகையில் வைத்து அதைத் திறக்கும் சடங்கு நடத்த கனம். ஸர். ஹாரல்ட் ஸ்டுவர்ட் அவர்களை அழைத்தார். அப்பொழுது கனம். மிஸ்டர் ஸ்டோன் முதலாக இன்னும் அனேக கனதனவான்களும் திருநெல்வேலியார்களான உத்யோகஸ்தர்களும் வந்திருந்தார்கள். ஸர். ஹாரல்ட் ஸ்டுவர்ட் அவர்கள் மிஸ்டர் கோக்கலே படத்தைத் திறந்தான பிறகு, திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு வந்து வாசிக்கும் வாலிபர்கள் தங்கும் ஜாகையில் அவருடைய படத்தை வைக்கத் தீர்மானித்தது ஒரு நல்ல காரியமென்றும், அவருடைய திருவுருவப்

படத்தை வைத்து அவருக்கு கௌரவம் செய்யும் வழி அவ்வுருவப்படத்தைப் பார்க்குந்தோறும் அவருடைய ஞாபகம் வர அவருடைய குணமகிமைகளைச் சிந்தித்து அவருடைய வழிப்பட்டுழைக்க வாலிபர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அப்பொழுதுதான் அவருடைய உயிர்வாழ்க்கை மணம் பெற்று மணம் வீசும் தன்மையதாகுமென்றும் சொல்லி, அவருடைய குணமகிமைகளில் சிலவற்றை வாலிபர்கள் பின்பற்றி நடக்கச் சாதகமாக வெடுத்துரைத்தார். மிஸ்டர் கோக்கலேயவர்கள் பெருமைக்கும் மகிமைக்கும் காரணம் என்னவென்றால்,

SELF-SACRIFICE.

முதலாவது.— தன்னயம் பாராட்டாது ஊருக்குழைக்கும் உதார குணம் நிறைந்தவராயிருந்தார்.

GREAT INDUSTRY.

இரண்டாவது.—பொது விஷயங்களிலிறங்கி யுழைக்கிறவர்கள், நுணிப்பில் மேயும் புத்தி யுடையவர்களாயிருந்தால், அவர்களால் பொதுஜன காரியங்கள் எதுவும்பார்க்க முடியாதென்று அவர் நன்றாயுணர்ந்து, உணர்ந்தபடி நடந்து கொண்டார். "ஊருக்குழைக்கிறேன்" என்று தலைப்படுகிறவர்கள் களைப்பு இளைப்புக்கஞ்சாத உழைப்புடையவர்களா யிருக்கவேண்டும். எதையும் பூராகத்திர ஆராய்ந்துமுடிக்கும் சக்தி யிருக்கவேண்டும். ஒன்றைத் தொட்டால் அதைத் தொடுபிடியாகத் தொட்டுத் தொடர்ந்து விடாமுயற்சியால் "நன்மை கடைப்பிடி" யென்கிற மூதுரை கொண்டுழைக்கத் தயாரா யிருக்கவேண்டும். இதற்குவிசேஷ மனப்பழக்கம் வேண்டும். அந்த மனப்பழக்கத்தோடு கருவி கரணங்கள் சொன்னபடி கேட்டுழைக்கும் உழைப்புக்குணமும் அப்பியாச முதிர்ச்சியினால் அமையப் பெற்றிருக்க வேண்டும். அவர் இராஜப்பிரதிநிதி ஆலோசனை சபையில் ஒரு விஷயத்தை யெடுத்துப் பிரஸ்தாபிக்கத் தொடங்கினாரானால் அதன் விவரங்கள் எல்லாவற்றையும் அதிக திட்பநுட்ப புத்தியோடு ஒன்று விடாமல் ஆராய்ந்து தேர்ந்து தெளிந்த சித்தமுடையவராயிருக்கிற உண்மை அவர் பேசுவதைக் கேட்பவருக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் பிரத்தியக்ஷமாகப்படும் என்று சொன்னார். ஆகையால் எதையும் பூரணமாய் ஆராய்ந்து தேர்ந்து தெளிந்து நினைத்தது முடிக்கும் ஆற்றலுக்கின்றியமையா விடாமுயற்சியிருக்க வாலிபர்கள் பழகித் தேறல் வேண்டும்.

TRANSPARENT SINCERITY.

3-வது, அவரிடத்திலுள்ள இன்னொரு சிறந்த குணம் என்னவென்றால் அவருடைய நடையுடை பாவனைகளிலும் பேச்சு வார்த்தை செய்கைகளிலும் அவர் யதார்த்தவாதி, உண்மையாயிருந்து உண்மைக்குழைக்கிற குணமமைந்தவர் என்பது எல்லாருக்கும் ஸ்பஷ்டமாய்த்தெரியும். இது ஸர் ஹாரல்ட் ஸ்டுவர்ட் நேரிலறிந்த குணம். இந்த உண்மைக் குணம் பிரத்தியக்ஷமாக விளங்காவிட்டால் "ஊருக்குழைத்தல்" சாத்தியமில்லை. எதையும் உள்ளதுள்ளபடி கூட்டிக் குறைத்து விகாரப்படுத்தாமல் "கறந்தபால் கறந்தபடி" உண்மையாக உரைப்பார். வார்த்தைகளை உபயோகிப்பதில் அர்த்தத்துக்குத் தக்கபடி தன் மனோபாவம் பிறர்மனத் துறுத்தும்படி வார்த்தைகளைப் பொறுக்கி யெடுத்துபயோகிப்பார். மிகைபடக்கூறல் குறைபடக்கூறல் என்கிற சொல்லிழுக்கு அவரிடம் சுத்தமாகக் கிடையாது. இதனால் அவருடைய வாக்குச் சக்தி விருத்தியடைந்து பிரபலமாகப் பரவியது. இந்த குணமும் வாலிபர் தங்களுக்கு அமையப்பெறவுழைக்க வேண்டியதே.

MARKED FAIRNESS.

4-வது, அவரிடத்தில் விளங்கிய மற்றொரு விசேஷ குணம் வாலிபர்கள் முக்கியமாய் பழகப் பெறல்வேண்டியது என்னவென்றால், "நடுவுநிலை கோடாமை." அப்படி யென்றால்

எந்த விஷயத்திலும் எதிரியை வெல்லவேண்டி 'வீறுவாதம்' செய்ய நினைக்காமல், எதிரியுடைய பலமறிந்து, குணமறிந்து, மனமறிந்து, அவ்வளவையும் உள்ளபடி ஒப்புக்கொண்டு அதற்காக எதிரியைநன்குமதித்து, அவர் கொள்கை பிசகென்று காட்டுவதில் சிறிதும் விட்டுக்கொடுக்காது நடுவு நிலையில் நின்று நேர்மையான தர்க்கவாதம் செய்து உண்மையை உள்ளபடி யாவரும் உணர, எதிரியும் ஒப்புக்கொள்ளத்தக்க விதமாக வெகு விமரிசையாய் எடுத்துரைப்பார். பொதுவிஷயங்களி லிறங்கி யுழைக்கிறவர்கள் எப்போதும் எதிரிகளிடம் நடுவுநிலை தவறாது நடந்துகொள்ளப் பழகல் வேண்டும். இந்த உத்தம குணமில்லையேல் அவரது பொதுமுயற்சி பயன்படாதொழியும். ஆதலால், தன்னைக் கொடுத்தல், தீர விசாரித்துத் தேறித் தெளிந்துணர்வதற்கான அபார உழைப்பு, உண்மனக்கு விரோதமின்றி யதார்த்தவாதியாயிருத்தல், எதிரியின் "குண நாடிக் குற்றமு நாடி மிகைநாடி மிக்கக்கொளல்" ஆகிய "நடுவுநிலை கோடாமை" யென்னும் உத்தமகுணம் ஆகிய இவைகள் மிஸ்டர் கோக்கலேயின் விசேஷ குணங்களாயிருந்தன. அந்த குணங்கள் தமக்கு அமையப் பெறவுழைத்தலே அவர் ஞாபகத்தை உண்மையாகக் கொண்டாடலாகும்; ஆகையால் திருநெல்வேலி வாலிபர்கள் இந்த நற்குணங்கள் அமையப்பெற வுழைப்பதற்கு அவருடைய திருவுருவப்படம் அவர்களுடைய ஜாகையில் சோபித்துக் கொண்டிருப்பது அவர்களுக்கு ஓர் பெரிய சாதனமாக வமைந்து இடைவிடாத் தூண்டுகோலாயிருக்குமென்று ஸர் ஹாரல்ட ஸ்டுவர்ட் அவர்கள் செய்த ஹிதோபதேசம் வாலிபர்கள் எல்லாருக்கும் நன்மை பயக்குமென்று இவ்வளவு விரி[illegible]க இங்கெடுத்தெழுதலானோம். இதையெல்[illegible] கவனித்து குணமும் மணமும் பெற [illegible]த் துழைக்கவேண்டும் என்பது நம்முடைய பிரார்த்தனை.

REFORM OF NATIONAL EDUCATION.

"The broad outlines of a scheme for the reform of our national education which has been sketched in these columns in order to awaken the public to the urgent dangers that beset the economic future of our people, has created widespread interest among professional bodies and has apparently stirred the Government to some form of action......... We believe that the Government and the Board of Education feel as keenly as educational thinkers outside those charmed circles, that our national system of education stands in need of an immediate revolution. Indeed with 2,000,000 (Two Million) children under the age of seventeen years at this moment running to waste—this is the admission of the Government Blue-books—no sane statesman or administrator could feel otherwise. We therefore hope that the Government will at once appoint a committee of educational experts to examine the position and to report within a fixed period."—"*The Times Educational Supplement.*"

தேசப்படிப்புச் சீர்திருத்தம்.

நாட்டுப்புறத்தில் வித்யாபோதனை செய்வதில் பாலசிக்ஷை செய்யும் வகையில் சீர்திருத்தங்கள் செய்யவேண்டிய தவசிய மென்பதைப் பற்றி லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் எழுதப்பட்டிருந்ததைக் குறிப்பிட்டு விவேகசிந்தாமணியில் பிரஸ்தாபித்ததன்றி வித்யா இலாகா மந்திரி கனம். ஸர். ஸங்கரன்நாயர் அவர்களுக்கு எழுதிய கடிதத்திலும் அதைப்பற்றியே சொல்லி வற்புறுத்திக் கூறியுள்ளோம். மேலே யெடுத்து அச்சிட்டிருக்கிற சமாசாரத்தால் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் இது விஷயத்தில் கவனம்வைத்து முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. டைம்ஸ் பத்திரிகையானது கவர்ன்மெண்டார் வித்யா விற்

பன்ன சிரேஷ்டர்கள் சிலரைப் பொறுக்கி யெடுத்து ஒரு கமிட்டியாக நியமிக்கவேண்டுமென்று கோருகின்றது. பிரிடிஷ் கவர்ன்மெண்டார் வெளிப்படுத்தியிருக்கும் ரிபோர்ட்டுகள் ரிகார்டுகளால், பதினேழு வயதுக்குள் பட்ட பாலர்கள் 20-லக்ஷம் பேர், தங்கள் இளமைப்பருவம் தற்காலப்படிப்பால் விருதாவாகி வீண்காலப் போக்குச்செய்து வருகிறார்கள் என்று கூறுகிறது. ஆகையால் கவர்ன்மெண்டாரும் வித்யா இலாகா போர்டாரும் இதர வித்யா விற்பன்னர்களைப்போலவே தேசப் படிப்பு முற்றும்சீர்படுத்தப்பெறவேண்டுமென்றும் அதற்கு வித்யாப்பியாஸத்தில் விற்பன்னர்களா யிருக்கிறவர்களைப் பொறுக்கி ஒரு கமிட்டி யேற்படுத்தி விசாரிக்க வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறுகிறது.

கனம். ஸர் ஸங்கரன்நாயர் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதம் அடங்கிய "நாதகீத நாமகள் சிலப்பொலி" யென்னும் புஸ்தகம், இந்தியா கவர்ன்மெண்டு வித்யா மந்திரி இலாகாவில் கவர்ன்மெண்டு உதவி காரியதரிசியாகவிருப்பவரால் அவருடைய உத்தரவின்பேரில் வந்தனத்துடன் வரவேற்றுக்கொள்ளப் பெற்றிருக்கிறது. யுத்தம் நடக்கிறதென்று அதைச் சாக்கிட்டுக் கொண்டு வித்யாப்பியாச இலாகாக்களில் செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்களை உடனே தேறித்தெளிந்து செய்யாமல் "அப்புறமாகட்டும்" என்று போட்டுவைப்பது யுக்தமா யில்லை யென்றும் சண்டை நடந்துகொண்டிருக்கையிலே தான் ஸமாதான காலத்துக்கு வேண்டிய சீர்திருத்தங்களை முன் யோசனையோடு செய்யவேண்டுமென்றும் வற்புறுத்துகிறது.

IN MEMORIAM H. O. D. HARDING.

In loving and ever present memory of Mr. H. O. D. Harding, I.C.S., an officer of long service, honourable repute and sympathy with the people of India. Died 22nd February 1916, at Trichinopoly in the discharge of his duty foully pierced to the heart by the dagger of a fanatic assasin.*

Requiescat in Pace.

[The late Mr. H. O. D. Harding was one of that little band of men who had unconsciously outgrown the limits of their own race and become a "citizen of the world" breaking loose the bonds of clime and age and living the life of thought in ethereal regions where Ideals are built up and flourish with luxuriance. He was a keen sportsman and "Seek Truth wherever you can find it" was the illuminating thought which guided the whole course of his life. The death of his Eldest Son, L. C. Harding who fell fighting in the front in Flanders, has entered his soul as iron and left its mark there which his heroic forbearance, while hiding it from vulgar gaze, cannot help revealing itself in all the sacredness of sorrow to the parental heart which has realised the loss of a well-beloved child in the prime of life. The heroism of the mother in this case appealed to one even more than the familiar heroism of the father. The tragic end of his career reminds one of those incidents in History which deprived the world of such stars in the firmament as Lincoln in the Far West and Mayo in the East.]

*The following report of the occurrence appeared in the dailies:— At 12-40 P.M., on the 22nd February, Mr. Harding was at the entrance to the Court House, when one Syed Ismail rushed and stabbed him in the chest, the blade of knife entering the lungs and the heart. The man was seized by the Duffadar, but broke loose and again stabbed Mr. *Harding* inflicting a mortal wound. The assasin was secured and handed over to the Police. . . . . . . Mrs. and Miss Harding were at once sent for, but Mr. Harding had breathed his last.

IN MEMORIAM H. O. D. HARDING.

(With Apologies to Lord Alfred Tennyson.)

"REACH OUT DEAD HANDS TO COMFORT ME."

I

Strong Son of God, Immortal Love,
Whom we, that have not seen Thy face,
By faith and faith alone, embrace,
Believing where we cannot prove.

II

Thine are these orbs of light and shade;
Thou madest Life in man and brute.
Thou madest Death ; and lo, thy foot
Is on the skull which thou hast made.

* * * * *

III

Forgive my grief for one removed,
Thy creature, whom I found so fair
I trust he lives in Thee, and there
I find him worthier to be loved.

* * * * *

IV

If, in thy second state sublime,
Thy ransom'd reason change replies
With all the circle of the wise,
The perfect flower of human time.—

* * * * *

V

Just turn thee to the doubtful shore,
Where thy first form was made a man,—
Ah ! I loved thee, Spirit, and love, nor can
The Soul of Shakespeare love thee more.

* * * * *

VI

And see my passion hath not swerved
To works of weakness, but I find
An image comforting the mind
And in my grief a strength reserved.

S. S. S.

TRANSFUSION COLUMN.

IN MEMORIAM H. O. D. HARDING.

"எச். ஓ. டி. ஹார்டிங் பிரிவாற்று இளவலியற்றிய இரங்கற்பா.

(After Lord Alfred Tennyson.)

1

குமரனே, குருவே, குஹனே யழியாஅன்பே,
சமரில்வெல் வேலாயுதனே யுன்திருமுக தரிசனம்
எமக்கில்லையாயினும் பக்தியா லுன்னைப் பற்றினேம்
எமக்குக்குமரனு முனையலாற் குருவே யிலையால்.

2

மும்மண் டலமுநீ படைத்தனை படைவேலா !
எம்மண் டலமுமன்பதை மிருகமுடை யுயிரும்
இம்மண் டலமுளகாலனும் உன்னால் உயிர்த்தனர்!
அம்ம ! நீ தாங்கியவேலினால் காலனும் காய்வனே !

3

அண்ணலே எனைவிட் டகன்றன னென்றுநான்
கண்ணிலேநீர்சொரியப்படு துயர மாற்றிப்பொறுப்பாய்!
எண்ணிலே எனைப்பிரிந்தான் உன்னிலே யடங்கினன்
பண்ணிலே யுனைப்பாட அவனுமங்கே யிருந்தனனே!

4

எனைப்பிரிந்தே யுனையடைந்தா னவனு மங்கே
எனைப்பிரிந்துன் னடியாரோ டளவளாவி யிருப்பினும்
எனைப்பரிந்தே யன்புகூர்ந் திகநோக்கச் செய்யென்
றுனைப்பரிந்தே யுள்ளன்பால் வேண்டினேன் வேண்டு
[கின்றேன்!

5

கணப்பொழுதென் னிடநோக்கி யுளம்கனிந்தே
கணப்பொழுதில் என்னன்பு மாறாது மாற்றுயரக்
குணப்பெருங்குன்றே யுனையடைந்தான்திருநோக்கால்
கணப்பொழுதென் னுளநோக்கி யுள்ளமுந்தான் பூரிப்
[பச்

6

செய்துபினும் என்னாசை யென்னன்பு மிளப்பமுறு
தெய்துவகை தான்காட்டி. யுன்னாசை யுன்னன்பால்
மெய்துலங்கச்செய்துமன விருள்தானும் போக்கியருள்
பெய்துள்ளத் துயரிலுமோ ருயர்பாவத் திடனளிப்பாய்.

THE LATE Mr. H. O. D. HARDING, I. C. S.

மாஜி எச். ஓ. டி. ஹார்டிங் துரை.

திருச்சினுப்பள்ளி டிஸ்திரிக்ட் அண்டு ஸெஷன்ஸ் ஜட்ஜியாக விருந்த மிஸ்டர் எச். ஓ. டி. ஹார்டிங் அவர்கள் பிப்ரவரிமீ 22உ செவ்வாய்க் கிழமையன்று மத்தியானம் கோர்ட்டுக்குவந்து வண்டியை விட்டிறங்கி குதிரையைத் தட்டிக்கொண்டிருக்கையில் ஒரு முரட்டுத் துலுக்கனல் தாக்கி ஹிருதயத்தில் கத்தியால் குத்திக் கொன்று விடப்பட்ட பரிதாபமான சமாச்சாரத்தைக்கேட்டு ஆறுத்துயரிலாழ்ந்தோம். மிஸ்டர் ஹார்டிங் அவர்கள் நன்றுகத் தமிழ் பயிலக்கற்றவர். தமிழில் நன்றுகப் பேசுவார். அவர் மிகவும் யதார்த்தவாதி. தீனதயாளு. யாரோ ஒரு மஹம்மதியன் தன் பெண்டாட்டியையோ வைப்பாட்டியையோ வேறு எவனே இழுத்துப்போக அவனை மீட்டுக்கொடுக்கவேண்டி போலிஸாருக்கும், கலெக்டருக்கும் மனுக்கொடுக்க யத்தனித்துப் பலிக்காமல், ஜட்ஜி ஹார்டிங் துரையைத்தேடி வந்தான். அவர் அவனை கலெக்டரிடம் அல்லது மாஜிஸ்திரேட்டிடம் போய் புகார்செய்து கொள்ளும்படி சொல்லி யனுப்பினர். அவன் கேளாமல் அவரைத் தொந்திரவுசெய்ய போலீஸார் அவனைப்பிடித்து காவலில் வைத்திருந்ததாகவும் ஜட்ஜி துரை அவனை அனுவசியமாகக் காவலில் வைக்கவேண்டாமென்று அபிப்பிராயப்பட்டதின்மேல் விட்டுவிடப்பட்டானென்றும் வதந்தி யுலாவுகிறது! பிப்ரவரிமீ 22உ செவ்வாய்க் கிழமையன்று சதிபாதகன் கோர்ட்டில் பதுங்கியிருந்து ஜட்ஜி துரை கச்சேரிக்கு வந்த சமயம்பார்த்து அவரைக் குத்திக் கொன்றுவிட்டான். ஒரு முரடன் காமவெறியால் மதிமயங்கி, தங்கமான மனுஷரை அநியாயமாகக் கொன்றுவிட்டான். மிஸ்டர் ஹார்டிங் துரையை நாம் 20-வருஷத்துக்கு மேல் நன்றுக அறிவோம். "விவேக சிந்தாமணியுத்தகாண்டத்துக்கு" அவர் முன்னுரை யெழுதிய பின் சென்ற வருஷம் நாம் அவரைப் பார்க்கவென்று திருச்சினுப்பள்ளி போயிருந்தோம். அவருடைய குண விசேஷங்களையும் தர்ம சுபாவத்தையும் பற்றி நாம் என்ன சிலாகித்து எழுதினுலும் அவருக்குப் பொருந்தும். அப்படிப்பட்ட நல்ல மனுஷரை வெறி முண்டன் ஒருவன் வீணே கொலை செய்து விட்டான். ஈசன் செயல் இருந்தவாறென்னே! அவருடைய பத்தினியாரும் குழந்தைகளும் அவரையிழந்து தவிக்கும் இத்தருணத்தில் உபசார வார்த்தைகள் ஒன்றும் பலிக்காது. கடவுள் தான் அவர்களுக்கு அருள்புரிந்து தேறுதல் உண்டாகச் செய்யவேண்டும். "அடிக்கும் ஒரு கை அணைக்கும் ஒரு கை" என்பது கடவுள் விஷயத்தில் உண்மையே யென்பதிற் சந்தேகமில்லை. அவருடைய பிரிவாற்றுது அவருடைய பரிச்சயம்பெற்ற ஒரு இளைஞன் இங்கிலீஷில் டென்னிஸன்சி மொழியில் வரைந்துள்ள ஞாபகக்கவியை இச்சஞ்சிகையில் பிரசுரித்து அதன் உட்கருத்தை யெல்லாரும் அறியும்படி அதற்குச்சரியாகத் தமிழ் மொழியில் இரங்கற்பா வியற்றி அதை முன்னேட்டில் பிரசுரித்திருக்கிறோம்.

* [ஆல்ப்ரெட் டென்னிஸன் பிரபு மாக்ஷிமை தங்கிய விக்டோரியா மஹாராணியவர்கள் காலத்தில் கவியரசுப் பட்டம்பெற்று புன்னைசூடிப் பிரகாசிக்கலானவர். அவர் சரித்திராசிரியராகிய 'ஹாலம்' என்னும் அவருடைய நண்பரின் புத்திரன் கடல் யாத்திரை செய்து கதியடைந்து செல்ல, அவ்விளவலது பிரிவாற்றுது அவருடைய ஞாபகார்த்தம் "In Memorium A.H.H." என்று ஒரு சிறந்தகவி பாடலாயினர், அதில் பிறப்பிறப்பின் குணமறிந்து மணமறிந்து குட்டுமறிந்து ஓதியபாடல்கள் பலவிருக்கின்றன. உண்மைக் குறைவிடமாயுள்ள அப்பாடல்களின் வார்த்தைகளை தன் கருத்துக்கிசையச் சுறிது கூட்டிக்குறைத்து. மிஸ்டர் ஹார்டிங் அவர்கள் My old Friend's son" என்று ஆர்வநிறைந்து அன்பு பாராட்டப்பெற்ற இளஞ்சேய் அவருடைய பிரிவாற்றுது தான்பட்ட ஆறுத்துயரை ஆற்றிவைத்த குமரனும் (Son of God) குருபரனுக்கு அர்ப்பணமாக அது தமிழ் செய்யப்பட்டுளது.]

THE CHILDREN'S EDUCATIONAL MOVEMENT."

பாலசிக்ஷை போதனு சங்கம்.

"This world is no blot for us
Nor blank ; it means intensely and means good.
To find out its meaning is my meat and drink"
—Browning.

பிதற்று முணர்வை யறுத்துப் பிரபஞ்ச
விகற்ப முணர்வதே வீடு."—ஓளவைதுரள்.

"The eighth Annual Meeting of the Madras Society for the Protection of Children will be held in the Pachaiyappa Hall, on Saturday 26th February 1916. at 6 P.M. The Hon. Sir P. S. Sivaswamy Ayyar, B.A., B.L., has kindly consented to preside on the occasion. The Hon. Mr. A. Butterworth, the Hon. Dr. T. M. Nair, and the Hon. Mr. Gordon Fraser will address the meeting. You are cordially requested to be present.—*M. Vijiaraghavulu, Honorary Secretary.*"

"In the *Madras Mail* of the 23rd Novr. there is a note relating to "The Children's Educational Movement."......we are deeply interested in all matters pertaining to the education of the children of India. I write therefore to ask if you could send me an article...giving your views in regard to the "Childrens Educational Movement"........"—*Editor.*

"It is not until many trees have been cleared away that we begin to see the wood. It is not until the harmonies and overtones have been dissipated that the true note of the bell is distinguished. The babel and clamour of foolish tongues must fall silent before the ageless and eternal voices can be heard. And something must happen to abolish the multitudes of petty activities and occupations in which we commonly entangle ourselves before the true purpose and trend of our lives can [illegible]..........Pray for imagination...... [illegible] (" the inspiration or gift of imagi- [illegible] the discipline of war cannot have a tithe of its effect, although it is certain that already the national imagination has been in some degree quickened by the war."—*The Times* (London).

["மரம் அடர்ந்து செறிந்திருக்கத் தோப்புத் தெரியுமா? அனேக மரங்கள் வெட்டப்பட்டபின் இடைவெளி தோன்றினுல்தான் தோப்புத் தெரியும். நாதகீதத் துவனியடங்கினுல்தான் மணியோசையின் நாதம் தெரியும். அதுபோல உயிர்வாழ்க்கையின் உண்மை (நித்தியமான தத்துவம்) உணரவேண்டின் அற்ப வாழ்க்கை ஒழியவேண்டும். அற்பத் தனத்தாலும் மூடத்தனத்தாலும் 'சணப்பன்வீட்டுக்கோழி போல்' சில்லரை விஷயங்களில் தலையிட்டுக்கொண்டு உழலும் ஓய்வொழிவில்லா வீண் ஜோலிகளை விட்டொழித்து விச்ராந்தி பெறல்வேண்டும். பாவனுசக்தி பெறத் திருவருளைச் சிந்திக்கவேண்டும். பாவனு தீக்ஷையால் சித்திக்கும் பாவசமாதி†யின்றி பாரதப் போரின் "சிக்ஷா பலன்" பிரயோஜனப்படமாட்டாது. பிரிடிஷ் தேசத்தார் பாவனுசக்தி இந்தப் பாரதப் போரால் கொஞ்சம் விருத்தியாகியிருக்கிறது." என்பது லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் அபிப்பிராயம்.]

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" என்பது பழமொழி. அப்படியென்றல் அன்புள்ள இடத்தில்தான் குழந்தையும் தெய்வமும் பிரத்தியக்ஷமாக விளங்கும்; மற்றவிடங்களில் உருமாறியும் உருக்குலைந்தும் திரிந்தும் விரிந்தும் பிரிந்தும் இருந்து விளையாடும். "தண்ணீர்நிலநலத்தால்" மேன்மைபட்டு விளங்குவதுபோலும், பயிர், நிலவளம் நீர்வளம் பொருந்தியவிடத்தில்செழித்தோங்கிவளர்ந்து பலனைத்தருவதுபோலவும், குழந்தையும் தெய்வமும் "அன்பிலே பிறந்து அன்பிலே வளர்ந்து அன்புருவேயாகி ஆனந்த மயமானுன் என் தாயார்" என்று ஓதிய அருட்குழவியின் திருவாக்குப்படி அன்பே ஆதாரமாக அன்புமயமாக விளங்குந் தன்மையனவாதலால், உள்ளன்புகொண்டு ஆடுமிடத்தில் கூடவிருந்து விளையாடும். உள்ளன்பு இல்லையேல்

†" பாவசமாதி,
" கற்பனையற்றுக் கனல்வழியே சென்று
சிற்பனையெல்லாம் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினைநாடிப் புணர்மதியோடுற்றுத்
தற்பரமாகத் தகுந்தண் சமாதியே."

மழைமுகம் காணாப் பயிர்போல் வாடி வதங்கிக் கருகிவிடும். "God is Love' என்றார் ஏனையோரும். "அன்பும் சிவமுமிரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவதாருமறிகிலார்" என்றார் நம்முன்னோரும். ஆகையால் உயிர்க்குயிராய் உண்மைக் கிருப்பிடமாயிருப்பது அன்பு. அந்த அன்பு தானே தத்துவங்களெல்லாம் கடந்துள்ள கடவுள். குழந்தையை தெய்வத்தோடு சேர்த்துச் சொன்னது ஏனென்றால் அதுவும் அன்பிலே பிறந்து அன்பிலே வளர்ந்து வரும் சுபாவமுள்ளது பற்றியென்க. மஹான்களாயிருக்கப்பட்டவர்களெல்லாம் குழந்தைகளைக் கொண்டாடுகிறவர்களாயிருக்கிறார்கள். ஏனென்றால் உள்ளம் மாசுபடியாது ஸ்படிகம்போல் விளங்குவதால் குழந்தைகள் உள்ளத்தில் தெய்வம் நித்தியமாய்க் குடிகொண்டிருக்கிறது. மஹான்கள் உள்ளமும் ஹிருதயசுத்தியால் மாசுமருள் அற்றிருக்கிறது. ஹிருதயத்து அழுக்கு நீங்கினால் 'மன அழுக்கு ஆறும்' நீங்கும். அவை: காமக், குரோத, லோப, மோஹ, மத, மாச்சரியம் எனப்படும்.

காமம், ஆசையை உண்டுபண்ணி விஷயப்பற்றை விளைவிக்கும். குரோதம் கோபத்தை யுண்டுபண்ணித் தன்னைமறந்து "தன்னைக் குடிகெடுக்கும் நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யப்"பழக்குவிக்கும். லோபம், லுப்தத்தன்மையால் ஜீவகாருண்யத்தை யழித்து ஹிருதயத்தில் தரித்திரத்தை யுண்டுபண்ணும். மோஹம், விஷயப்பற்று, தன்னைமறத்தல், ஜீவகாருண்யமின்மை ஆகிய இவை காரணமாக "நிறைகுறை"ந்து, "சிறை நிறை"ந்து "குறைவு"பட்டு அறிவைக் கலக்கி ஒன்றையொன்றாக மருள்கொண்டு குழம்பச் செய்யும். இந்த மனக் குழப்பத்தினால் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" எனக் கருதி மதங்கொண்ட யானைபோல நித்தியாநித்திய வஸ்து விவேகமின்றி "வீறுவாதம்" செய்யுங்குண மதம் ஏற்படுகிறது. மாச்சரியம், என்பது அசூயை காரணமாகப் பிறந்த பொச்சாப்பு. இந்த ஆறும் உள்ளழுக்கு. இவை மனத்தைப்பற்றி அதன் தூய்மையைக் கெடுக்கின்றவைகளாயிருக்கின்றன.

இந்த உலகம் அநாதியாகவுள்ள பராசக்தியிலிருந்துண்டாகி வளர்ந்து ஒடுங்கி மறுபடியும் அந்தப் பராசக்தியில்தானே லயமாகிறது. அப்படிப்பட்ட உலகத்தை பேதபுத்தியினால் ஆராய்ந்து பேதஞானத்தால் அறிந்துவிடலாமென்பது 'ஆற்றுமணலை யெண்ணிவிடலாம்' 'ஆகாசத்தை வளைத்துவிடலாம்' என்று நினைப்பதுபோலாகும். ஆனால் இந்தப் பிரபஞ்சமெல்லாம் தத்துவக் கூட்டமாதலால், தத்துவ ஆராய்ச்சியால் அறியப்படத்தக்கது. அப்படி தத்துவஞானம் பெற்றவர்களும் உலகத்தை யடக்கி யாளலாமே யன்றி அதை "முற்றும் அறிந்துவிட்டோம்" என்று சொல்வதற்கு இல்லை. ஏனெனில், "ஆதியிலுள்ளான் அநாதியொன்றே, ஆதியநாதியுமவனே யாவன்" என்றபடி, அநாதியாயுள்ள சக்தியை யறியாமல், உலகத்தை யறியச் சாத்தியமில்லை. அந்த அநாதி சக்திதானும் "அவனை" (கடவுளை) யறியார்க்கு அறிவாலறியச் சாத்தியமில்லை. அது எப்படியென்றால், "தாயின்றிப் பிள்ளையில்லை; பிள்ளையின்றித்தாயில்லை" யென்பது உண்மையாமாயினும் தாய்க்கும் பிள்ளைக்கும் காரணமாயிருக்கிற புருஷனாகிய தகப்பனின்றித் தாயுமில்லை பிள்ளையுமில்லை யென்பதுபோல இருக்கிறது. தந்தை தாய் மகவெனவுள்ள திரிமூர்த்தங்களும் வெவ்வேறாகத் தோன்றினும் காரண காரிய தோரணை வழிபற்றிப் பார்க்கில் ஒன்றின்றி மற்றிரண்டும் அமைவது அசாத்தியமாக முடியும். தகப்பனைத் தள்ளிப்பார்த்தால் "தாய் பிள்ளை" யென்பது "மலடிமகன்" எனப் போலியாய்விடும். தாயைத் தள்ளிப் பார்த்தால் "தந்தை மக"வென்பது "ஆகாசத் தாமரை" போல் அபாவமாக முடியும். பிள்ளையைத் தள்ளிப்பார்த்தால் தாயுமில்லை தந்தையுமில்லை. அவை "முயல்கொம்பு" என்பதுபோல் விருதா நாமமாக மாறிவிடும்.

இப்படி இணைபிரியாது காரணகாரிய தோரணையினால் பின்னிக்கிடக்கும் மூன்றுக்குத் 'திரிபுடி' யென்று பெரியோர் பெயர் சொல்லி வழங்குவர். இது அறிவு எல்லாவற்றிற்கும் உள்ள இலக்ஷணம். ஆனால் இதற்கு இலக்ஷியமாயிருப்பதோ இந்தத் திரிபுடி ஞானத்துக்கு எட்டாததாக விருக்கிறது. அது எப்படியென்றால் "வெல்லப் பிள்ளையாருக்கு எந்தப் பக்கம் தித்திக்கும் என்கிறது?" என்று சொல்லும் பழமொழிபோல் இருக்கிறது. தித்திப்பே உருவமாக வுள்ளது வெல்லம். அந்த தித்திப்புருவு தானே ஸ்வரூபமாகவுள்ள பிள்ளையாருக்கு எல்லாப் பாகமும் தித்திக்குமாபோல், "சுககனமாய்" உள்ள திரிபுடி தாண்டிய லக்ஷியத்தை "காண்பான், காட்சி, காண்பொருள்" எனத் திரிபுடி பாகம் செய்து உணர்வதும் உரைப்பதும் கூடாத காரியமாயிருக்கிறது. உப்பால் செய்த பதுமையானது அப்புவை (தண்ணீரை) அறிந்துவருவேன் என்று தண்ணீரில் முழுகினால் அது எப்படி "அப்போடுப்பு" கலந்து உருவமிழந்து கண்ணுக்குப் புலப்படாமற் போயினும் சுவைமாத்திரத்தால் அதனிருப்புக் கெடாமலிருக்கிறதோ அப்படிப்போல திரிபுடி சஹிதமான லக்ஷணத்தையுடைய அறிவால் திரிபுடி ரஹிதமான லக்ஷியத்தை யாராயப்புகுந்தால் விலக்ஷணமான அந்த லக்ஷியத்தில் திரிபுடி லக்ஷணத்தோடு கூடிய "அறிவு" உருவழிந்து லக்ஷணங்கெட்டு திரிபுடிரஹிதமாகி லக்ஷியானந்த சுககனமாய் 'அப்பில்உப்புப்போல்' 'விளங்காமல் விளங்கிக்கொண்டிருக்கும்.' ஆகலால் தான் குருகுலவாசம் செய்து வித்தை பயின்றும் திரிபுடிஞானம் கழலாமல்தானே வீடு வந்து சேர்ந்த ஸ்வேதகேதுவுக்கு அவனுடைய தகப்பனார் அப்பிலுப்புப்போல் "தத்துவமஸி ஸ்வேதகேது" வென்று மஹாவாக்கியார்த்தம் பலிக்க ஓதி அவனுடைய வித்தையைப் பரிபூரணமாகச் செய்தார்.

தகப்பனை யறிந்தவள் தாயாவது போலும் தகப்பனை யறிந்து மறியாமல் பிள்ளைப் பெற்றவள் தாஸியாவது (பணிப்பெண்ணாவது) போலும், லக்ஷியத்தை யறிந்து அப்பிலுப்பைப் போல் கலந்து உருவழிந்து அருவாயும் சுவை கெடாதிருப்பவர் ஆனந்த மயமாகி சுககனமான லக்ஷியத்தில், கற்கண்டில் ருசிபோல் சுகருசியாக விருப்பர். அப்படிக் கலந்தும், கலவை மயக்கத்தில் லக்ஷியத்தை யுணர்ந்தும் உணராது திரிபுடிவசப்பட்டிருப்பவர் (பிராரத்த)கர்மம் கழியாத காரணத்தால் கர்மவசப்பட்டும் காமவசப்படாது கர்மயோகத்தில் நின்று நைஷ்கர்மசித்தியால் கர்மபந்தத்தில் சிக்காமல் தானே (தாஸியின் உவமானத்தைப்பற்றியே) "பார்த்தவிடமெல்லாம் நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தப் பொருளை" யடைகிறார்கள். இப்படியாக ஆனந்தம் பதிவிருதா லக்ஷணத்தால் "லக்ஷியானந்தம்"* என்றும், தாஸியின் நித்திய சுமங்கலிய லக்ஷணத்தால் "தேவடியாள்மகன்" என்பதுபோல் 'நித்தியானந்தம்'† என்றும் சொல்லப்படும். ஆதலால்,—

"பாலர்க்குழைக்க வென்று பரிந்து மிகவழைத்துச்
சாலவு நானித்துறையிலுனக் குதவிசெய்வேனென்
றாலயத்தி லறுபத்துமூவர்திரு விழா நடக்கச்
சீலமுட லுடல்பொருள வியுமொன்றாக் கைக்கொண்டு
பாலசிக்ஷை செய்வார்தம் உளம்புகுந்தான்
பாலனுய்வந் தவதரித்தான் எனைக்கொண்டே தனை [யளித்தான்
ஆலமுண்டான் தில்லைவாழந்தணர்த மடியார்க்குமடிய [னென்றான்
முயலகன்மேற் காலூன்றி கால்தூக்கி யாடினன்
கயல்விழியாள்காண அவன் திருக்கூத்துத்தரிசனங்கண்
டயலொன்றறியாமெய்யடியர்கட்கர்பணமீதெனிறறி."

யென்று அறுபத்துமூவர் உற்சவம் நடக்கையில் வாக்குக்கொடுத்து வாக்குவாங்கி உண்மையாகவே ஸ்தூல சூக்ஷ்ம மிரண்டிலும் என் "உடல் பொருள் ஆவியு மொன்றாக்கைக்கொண்டு" என்னைப் பம்பரம்போல் ஆட்டிவந்த ஈசன்தானே இச்சென்னையில் ஏற்பட்டு நடக்கும் பாலரக்ஷண்ய சங்கத்தின் எட்டாவது

* இது ஞானயோகத்தால் சித்திக்கும் 'அகண்டானந்தம்' எனவும் சொல்லப்பெறும்.

† இது 'யோகானந்தம்' எனப்படும்: இராஜ யோகத்தில் தேறிக் கர்மயோகத்தில் கைவந்தவர் அநுபவிக்கும் ஸஹஜானந்தம் எனினும் பொருந்தும்.

வருஷோற்சவத்துக்கு வரும்படி அழைத்தும் அதற்குப் போகக்கூடாதபடி தேஹபலங் குன்றத்தடுத்தும், திருவிளையாடல் செய்துவந்ததை யுன்னியுன்னி உளங்கனிந்துநொந்து கிடக்கையில், மார்கழீ 1உயில் "பாலசிக்ஷா போதனா சங்க" விமரிசையைப்பற்றி ஒரு வியாசமெழுதியனுப்பக்கேட்டு வாக்கு வாங்கியிருந்த பத்திராசிரியர்க்குரிய கடனைச்செலுத்தி, மேல் ஒன்றும் செய்யத்தோன்றாது தேஹதிடன் குன்றச் செய்திருக்கையில், உபாஸனாகாலத்தில் பதிவிருதாலக்ஷணம்பற்றி, "தர்மவழி பற்றில்" என்றோதிய ஆஜ்ஞை கடவாது "தாய்" என்று கொண்டாடிய "லக்ஷ்மியானந்தம்" தானே மார்கழீ 10உ குரு பூஜையென்று சொல்லியழைக்க, கர்மவழிப்பட்டு (கர்மயோகத்திலிருந்து) பாலர்க் குழைக்கவுடன்பட்டேனாகிய யான் பாலசிக்ஷையிற் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றி வித்யா இலாகா மந்திரியவர்களுக்கு அர்ப்பணமாக எழுதியனுப்பிய காலிகிதம் அச்சிடப்பெற்ற "நாதகீத நாமங்கள் சிலம்பொலி" சாக்ஷியாக "பாலனாய் வந்தவதரித்தான்", பாலானந்த குருவடிவாய் அமர்ந்துள்ளான், கும்பரவி, சுக்லசஷ்டிகூடிய கிருத்திகைதினத்தில் குரு மூர்த்தமாகக் கொண்டாடப் படும்பொழுது "பாலர் திருவிழா"க் கொண்டாடும்பொருட்டு வரகவி ஸர் ரவீந்தரநாததாகோர் "கீதாஞ்சலி"யாக இயற்றிய மாலையிலிருந்து பறித்தெடுத்த "பிரார்த்தனைக்கொத்து" ஒன்றையே நான்செய்யும் பூஜார்ச்சன விதானமாக இப்பரதகண்டத்தில் உற்பவித்துள்ள பாலர்களெல்லார் பொருட்டும் உளங்கனிந்து உண்மைவிளங்க குமாரக்கடவுள் பாதத்தில் அர்ப்பணம் செய்கிறேன். இச்சமயம் மேலெழுதச் சக்தி குன்றியிருக்கிற காரணத்தால் வித்யாமந்திரிக்கெழுதியுள்ளதை விரித்தெழுத வாய்க்கவில்லை. ஆனால் அதில் கண்டிருப்பவெல்லாம் விவேகசிந்தாமணியில் பிரஸ்தாபிக்கப் பட்டவையன்றி வேறொன்றுமில்லையால் அதன்விவரம் பள்ளியில் பாலசிக்ஷை செய்வார் அறியவேண்டி அதை அப்படியே இங்கிலீஷில் எடுத்துப் பின்னொரு சஞ்சிகையில் அச்சிடக் கருதியிருக்கிறோம். பிரார்த்தனைக்கொத்தின் இங்கிலீஷ் பாகத்தோடு இதர விஷயங்களும் "நாதகீதநாமதன் சிலம்பொலி" யென்னும் விவேகமஞ்சரி 2-ம் புஸ்தகத்தில் திரட்டிபெடுத்து அச்சிடப்பட்டிருக்கிறது. [அதன் விலை ரூ. 1. காலிகோகட்டம் செய்தது ரூ. 1-4.] இதுவிஷயத்தில் சிரத்தையுள்ளோர் அதை வாங்கிவாசித்து குருமுகமாய் ஆராய்ந்து அதுத்தூய்மையால் உண்மையுணர்ந்து உளம்பூரிப்பாராக.

பிரார்த்தனைக்கோத்து.

1. அண்ணலே யுன்ற னடிபணிந் தன்பன்செய்
விண்ணப்ப மீதையே! வேண்டினேன் வரந்தரு
[வாய்!

2. ஏழையே னுள்ளத் துறைதரித்திர மத்தனையும்
பிழைதிருத்தி நிர்மூல மாகவே தீர்த்திடுவாய்!

3. துக்கமொடு சந்தோஷம் வருவனவெ லாமையே!
மிக்கவெளி தாகநான் பொறுக்கவலி தந்திடுவாய்!

4. அன்புமிகுந் துனைத்தொழவே யாசைகொண்டே
[னம்மானே!
என்பணியும் வளரவேதா னெனக்குவர மருள்
[வாய் நீ!

5. 'ஏழைபங் காளிநீ' யெனவறிந்தே னுனையுள்ளத்
தேழைகளை யொறுக்காவண்ண மெனக்குவலி தந்
[திடுவாய்!

6. கர்வமிகு வல்லாள கண்டரைக் கண்டுழிநான்
'ஸர்வமுநீ!' யென்றவரைப் பணியாஅத படியெ
[னக்குத் திடமருள்வாயென்னீச!

7. தினமெனக்குநேருசிறு தொல்லைகளில் தலையிறங்கி
மனஞ்சிதறு துன்பனஸே சித்திக்க வரமருள்வாய்

8. என்வலிதா னெவ்வளவே யாயிடினு மத்தனையு
முன்வலியே யென்றுணர்ந் துனக்கடிமை யாயு
[மொரு

9. தன்வலியை வேண்டினேனன் எனக்கிந்த வலி
[யீன்று
என்னீச! எனையுனக்கின் னடிமையாக்கொ ளருள்
[புரிந்தே."

பாலாநந்த 'பமநீ' தருவேநம:

A POVERTY STRICKEN SCHOLAR.

வறுமையிற் புலமை.

"...ஆரடியங்கே நானெத்தனை நாழியா எண்ணெயும் தலையுமாய் இப்படி நிற்பேன்? ஸ்நானம் பண்ணுவதற்குத் தண்ணீரை மண்ணீரை கொண்டுவந்து தொலைக்க மாட்டாயா?"

"அவசரப் பட்டாலென்ன பண்ணுவேன். வெந்நீர் சுட்டுத்தானே கொண்டு வரவேண்டும். நம் மாக்கினைக்குப் பயந்து அடுப்பு சுருக்கப் பற்றிக்கொள்கிறே னென்கிறதா? அடுப்புக்குக் குச்சியா கோலா என்ன விருக்கிறது? ஈரவாளியை ஊதியூதிக் கண்ணெல்லாம் அவிந்து போயிற்று. பாத்திரம்தான் அங்கமா யிருக்கிறதா? குடுவைச் சட்டிகூட நமக்குப் பெரிதாகக் கிடைக்கவில்லையே! இந்தப் பாழும் வீட்டில் என்ன விருக்கிறது?"

"போதும் போதும்! வாயை மூடு. பிறந்தகத்துப் பெருமையை உடற்பிறந்தானோடு சொல்லவேண்டாம். . . . . .

"வீடு பாழானது நீ மூளிவந்த காரணம் தான். ஏருழுபவ னென்னசெய்வான் பானை பிடித்தவள் பாக்கியமென்று வசனம் கேட்டதில்லையா? நானும் சம்பாதியாம லிருக்கவில்லை. எங்கே திரிந்தாவது யார் காலைப்பிடித்தாவது பத்துப் பணம் கொண்டுவந்து கொட்டிக் கொண்டுதானிருக்கிறேன். உனக்கு 'ஆயிரம் வந்தாலும் ஆற்றாப் பெருவயிறே' யென்று எவ்வளவு வந்தாலும்தான் போதவில்லை; நீ 'துடைகாலி' ஒன்றில்லாமல் துடைத்துவிடுகிறாய். நேற்றுத் தானே 20-ரூபாய் கல கல வென்று கொண்டு வந்து கொட்டினேன். உனக்குக் குடித்தன வளமில்லாமற்போனால் ஆரென்ன செய்வது?"

"குடித்தன வளமில்லாமல்தான் ஒரு புருஷன் பாதி நாள் ஊரில் இருந்தாலும் சரி, இல்லாமற்போனாலும் சரி, ஏழெட்டுப் பெண் புடைவையும் அம்பலத்தையும் கட்டிக்கொண்டு சரீரத்தைச் சாராப்பிழிந்து வருத்தப்படுகிறேன். என்ன செய்தாலும் திருப்தியில்லை, சர்க்கரையும் மாவும் சரியாய்ப்போய் விடுகிறது. வெறுங்கைகொண்டு முழம் போடவேண்டுமானால் எப்படிப்போடலாம்."

"ஆமடி நீ வெறுங்கைகொண்டு முழந்தான் போடுகிறாய். நான் சம்பாதிக்கிற துண்டா செய்கிறதுண்டா ஒன்றுமில்லை. உன் மஞ்சட்காணிகொண்டுதான் இங்கு காலக்ஷேபம் நடக்கிறது. நேற்றுத்தானேயடி புலிக்கண்மாதிரி 20-ரூபா கொண்டுவந்து கொட்டினேன். இருந்தன்றைக்குத் தீபாவளிப் பண்டிகை இல்லாதன்றைக்கு ஏகாதசிப்பட்டினி என்று அடையும் வடையும் அதிரசமும் உண்டையுமாய்ப் பண்ணி அதம் பண்ணிவிட்டால் அதற்கு ஆரிலக்கு? அடுத்தாற் போலே சுப்பிபிள்ளை 'ஜபா' கூழைக்கையும் தானுமா எவ்வளவு சம்பாதிக்கிறான், அவனுக்குமாத்திரம் பிள்ளை குட்டியில்லையா அவனகமுடையாள் என்னத்தில் ஏது குறைவாயிருக்கிறாள்?"

"ஆமாம், நீங்கள்தான் சம்பாத்தியத்தில் புலி: துபாஷி சீதாராமய்யராம். ஒரு நாளைக்கு நானூறு ரூபாய் இந்தக்கைக்கு அந்தக்கை சம்பாதிப்பனாம்! அவனுக்கும் பிரதிதான்!"

"அடியே தூர்த்தே! நீ அவனுக்கு வாழ்க்கைப்படாமல் எனக்கேனடி வாழ்க்கைப்பட்டாய்? 'என்னவா!' எண்ணெயும் தலையுமாய் நாலு நாழியாய் நிற்கிறேன்! வெந்நீர் கொண்டு வரச்சொன்னாலா அந்தச்சனி என்னுடன் வீண் வழக்காடுகிறது! சீ இதன் முகத்தில் விழிப்பதும் பாபம்; அடி பத்ரகாளி, பரதேவதை, உன் கோவிலுக்கு நான் வரவேயில்லையடி, இதோ முகத்தில் விழிக்காமல் போய்விடுகிறேனடி!" . . . . . .

இவ்வாறு கலகித்தவர்கள் புருடபாரியர் என்று சொல்லத் தேவையில்லையே. புருடர் இலக்கண இலக்கியமெல்லாம் கரைகண்ட முத்தமிழ் வித்துவான். நொடிக்குள் நூறு பாட்டுப் பாடும் திறமையுள்ளவர். ஆயின் என்ன?

கலைமகள் ப்ரசாதமுள்ளவர்களுக்குத் திருமகள் கடாக்ஷம் வெகுவாயிருப்பதில்லை. அதினும் அந்நாளில் கேட்கவேண்டியதில்லை. எங்கேயாவது பெரியமனுஷியர்களைப் பிரபுக்களையடுத்து "காமசோமா, கற்பகத்தருவே, பூமகள் மணாளா, புருடசிங்கமே" என்று பலவிதமாகத் தோத்திரம் பண்ணினும் ஏனென்று கேட்பதே யரிது. அதவாக்கொடுத்தால் ஒன்று அரை கொடுப்பார்கள். அதனால் இவர்களுக்கு என்ன குறையப்போகிறது? இவர்கள் தரித்திரம் எவ்வாறு நீங்கும்?

"அடகெடுவாய் பலதொழிலுமிருக்கக்கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில்லாமல்
திடமுளமோகனமாடக் கழைக்காத்தாடச்
செப்பிடுவித்தைகளாடத் தெரிந்தோமில்லை
தடமுலைவேசை யராகப்பிறந்தோமில்லைச்
சனியானதமிழை விட்டுத்தையலார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை
என்னசென்மமெடுத் துலகிலிரக்கின்றோம்!"

என்று ஒரு புலவரும், இன்னொருவர் இதினும் கஷ்டப்பட்டவர் :

"கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா! இல்லைத்தான் பசியாமலிருக்கத்தான்
மதுமத்தானெழுதினானா! பல்லைத்தான் விரித்திரந்தால்
நெல்லைத்தான் வரகைத்தான் பரிந்தாரீவார்!
முல்லைத்தாண்டவராய கங்கை குலம் விளங்கவந்த
முதன்மையோனே"

என்றும் பாடியிருக்கின்றனர். இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்தான் நம்முடைய பண்டிதரும். இவர் மனையாள் சுபாவத்தில் மிகவும் நல்லமாதிரி என்பது அவருக்குத் தெரியும். ஆயினும் சொன்னதற்குப் பதில் சொன்னால் யாருக்கும் கோபந்தான். ஆதலால் முன்கோபத்தால் ஒன்றும் ஆலோசியாமல் எண்ணெயும் தலையுமாய்ப் புறப்பட்டுவிட்டார். உடுத்த கோவணமும் அரையிற்சுற்றிய மூன்றுமுழத்துண்டும்தவிர வேறொன்றுமில்லை.

இவர் இவ்வாறு சென்று அஸ்தமனசமயத்துக்குப் பாண்டியராஜாவின் இராஜதானியாகிய மதுரைமா நகரில் வந்துசேர்ந்தனர். அவ்விடத்து இராஜபேட்டியைப்பெற்று அரசன் தயவை சம்பாதிப்போமென்னும் எண்ணம் கொண்டு வந்தவரல்ல. தன்னை மனையாள் சம்பாதிக்கும் திறமையில்லாததற்கு ஏசிக்காட்டிய மாற்றங்கள் நெஞ்சிலிருந்து குடைதலால் இன்னது செய்வது, யாரிடத்தில் போவது என்னும் உத்தேச மொன்றுமில்லாதவராய்க் கண்ணை மூடிக்கொண்டு வந்தவரே யன்றி வேறல்ல. ஆயினும் அவர் வரும்போது அவரவற்றைக் குறியாவிடினும் அநேக நற்சகுனங்களாயின. வாயசம் வலமாயிற்று, காடையிடமாயிற்று. கருடனும் வலியானும் இடமாயின. செம்போத்துவலமாயிற்று. இவ்வாறு சுபசகுனங்களோடு புறப்பட்டுவந்த நமது புலவர் மதுரைமா நகரத்தை முன்னும் கண்டதில்லை பின்னும் கண்டதில்லை. பசியும் தாகமும் தாங்காமல் உண்ணாக்கும் தொண்டையும் ஒட்டி யுலர்ந்துபோயின. எங்காவது போவோமென்றால் இருட்டும் வரவர முதிர்ந்து போயிற்று. ஆதலால் அங்கு வையையாற்றில் தாகசமனம் செய்துகொண்டு தேர்முட்டியின் கீழே படுக்கைபோட்டனர்.

படுத்த புலவருக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. நிழலருமை வெய்யிலிற்போனால் தெரியும் என்பதுபோல அப்போது தெரிந்தது தமது அருமைமனையாளின் நன்மையும் தாம் தம்மகத்தில் அடைந்த சுகங்களும்.

"மனம் குலம் கல்வி வண்மை யறிவுடைமை தானம்
தவமுயற்சி தாளாண்மை தேனிற் கசிவந்த
சொல்லியர்பாற் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்துபோம்."

என்றபடி மானமும் அபிமானத்தாற் பிறந்த கோபமுமடங்கிச் சாந்தமாகிச் சிந்திப்பாராயினார். "ஐயோ கோபம் மனிதர்க்குச் சண்டாள மென்பது சரியாயிற்றே. முன்கோபத்தால் அறிவுகெட்டு ஓடிவந்து விட்டோமே! அங்கு மனையாள் என்னசெய்கின்றாளோ?

குழந்தைகள் யாது செய்கின்றனவோ [illegible] இளைந்து எவ்வாறு ஏங்குகின்றனரோ?" என்று பலவாறு வருந்தி எப்போது போதுவிடியும், இங்கு நின்று ஊர்போய்ச் சேருவோமென்று எண்ணியிருந்தனர்.

இவர் இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் மணி மூன்றாயிற்று. அப்போது ஆகாயமார்க்கமாகச் சில நாரைகள் க்ராக்ரா வென்று கத்திக்கொண்டு பறந்துபோதலைக் கேட்டுப் புலவர் அப்பக்ஷிகளை நோக்கிப் பின்வருமாறு ஒரு பாட்டைக் கூறினார்:—

"நாராய் நாராய் செங்கால் நாராய்,
பழம்படுபனையின் கிழங்குபிளந்தன்ன
பவளக்கூர்வாய்ச் செங்கால் நாராய்,
நீயும் நின் பெடையும்
தென்றிசைக்குமரியாடிவடதிசைக்கேகுவீராயின்
எம் மூர்ச்சத்தி முற்றவாவியுட்டங்கி எம்மில்லம்
நனை சுவர்க்கூரைக் கனைகுரற்பல்லிப்
பாடுபார்த்திருக்கு மென் மனைவியைக்கண்டே,
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலே தழீஇப்
பேழையு ளடங்கும்பாம் பெனவுயிர்க்கும்
ஏழையா ளனைக்கண்டனம் எனுமே."

என்று தமது வருத்தத்தை வெளியிட்டுக் கூறினர். அப்போது மாறுவேடம் பூண்டு நகரி சோதனைக்கு வந்திருந்த பாண்டியராஜன் அதைச் செவியுற்று ஆச்சரியமடைந்து இத்தேர் முட்டியின்கீழ் இவ்வளவு சிறந்த புலவன் "ஆடையின்றி வாடையின் மெலிந்து வருந்தக்காரணம் என்னை? யாமின்று காலையில் எமது சிங்காரத்தோட்டத்தில் தாமரைவாவி [illegible] ந்ததாவனம் செய்துகொண்டிருக்கை [illegible] எமது காற்கீழுறுத்திய பனங்கிழங்கைப் பிடுங்கி யெறிந்தபோது அக்கிழங்கினுக்கு உவமையாக யாதைச் சொல்லலாகும் என்னும் எண்ணமுண்டாக அதை நம் சமஸ்தான வித்வான்களுக்குக் கூறிக் கேட்டோம். அவர்கள் இதுகாறும் யாதும் விடையளிக்க வல்லராயினரல்லர். இந்தச் சோற்றுக்குழன்று [illegible]ணிக்குக் கூடுமோ இப் புலவன் எப்படியோ தெரிந்து சொல்லிவிட்டானே! இவன் யாவனோ ஓர் பெரிய வித்து[illegible]போலிருக்கின்றான். இவனை நாம் சன்மானித்து இவனது வறுமையை நீக்கிச் சுகப்படுத்தவேண்டும்" என்று எண்ணங்கொண்டவனாய்ச் சற்றுநேரத்துக்கெல்லாம் புலவர் கண்ணயர்ந்த சமயம் பார்த்துத் தான் தன்மீதே போர்த்துக்கொண்டிருந்த சால்வையை எடுத்து மெல்ல அப்புலவர்மீது போர்த்துவிட்டுப் போய்விட்டான். புலவரும் குளிருக்கு இதமாக விருத்தலின் முன்னிலும் காடமாக நித்திரைபோயினர்.

மறுநாட் காலையில் அரசன் காவலாளரை விளித்து நீங்கள் காக்கும் காவல் நல்ல அழகாயிருந்தது. எனது மேற்போர்வை போகிற பாட்டில் மற்றவர்களுக்கென்ன தக்கப்போகிறது? என் போர்வையைத் திருடிக்கொண்ட கள்வனை நீங்கள் இன்று மத்தியானத்துக்குள் பிடித்துவாராவிடின் உங்களைக் கடுந்தண்டம் செய்வேன்" என்று சினந்துகூறி உத்தரவிட்டனன். காவலாளர்களும் மிகவும் நடுக்கங்கொண்டு ஊரெங்கும் தெருவு தெருவாய் வீடு வீடாத்திரிந்து சோதித்து வருகையில், புலவர் விடிந்து நெடுநேரம் வரையிற் றுயின்று பின்னர் எழுந்திருந்து மேலே போர்த்த போர்வையோடு புறம்பேவந்து சலசங்கைக்கிருந்தனர். அப்போது இலையிலையாய்த் தேடித் திரிந்துகொண்டிருந்த காவலாளர் ஓடிவந்து புலவரைப் பற்றிக்கொண்டு அடா திருட்டுப் படவா, அரசன் போர்வை உன்னிடம் எவ்வாறு வந்தது. நட! அரசன் முன்னே! உனக்கு யாங்கள் செய்யும் தண்டனை போதாது. அரசன்தானே அருந்தண்டம் விதிக்கவேண்டுமென்று சொல்லி புலவர் யாது சொல்லியும் கேளாமல் கரகரவென்று பிடித்திழுத்துச் சென்றனர்.

அரசன் முன்னே கொண்டு செல்லுதலும் அரசன் அவரைநோக்கி "ஏ துராத்மா, யாம் நேற்றிரவில் அந்தப்புரத்திற் போர்த்துத் தூங்கிய எமது போர்வையை எவ்வாறு திருடிக்

[illegible] தெரினவர் இல்லையென்று தோன்றுகின்றதே என்று [illegible]கொண்டவன்போற் கூறப் புலவர் யாதும் சொல்லத்தோன்றாமல் திகைத்து நின்றனர். அது கண்டு அரசன் இக்கள்வனைக் கொண்டுபோய்ச் சிறைச்சாலையில் தனியேவைத்து நாளொன்றுக்கு நாழி உப்பும் அரைப்படி சோறுமாகச் போடுங்கள் என்று உத்தரவிட்டனன். என்ன செய்வார் புலவர் ! ஐயோ தெய்வமே, எனக்கு வறுமையும் துயரமும் வந்திருப்பது போதாதோ ? இக்காராக்ரகப்ரவேசமும் வேண்டுமோ? ஏதும் அறியாத நிரபராதியாகிய என்னை இப்படிப் பிடித்துச் சிக்ஷித்துவிட்டானே ! ஆயினும் அரசனைச்சொல்லக் குற்றமில்லை. நம்முடைய காலவித்யாசம். போதாத வேளைக்குப் பழுதையும் பாம்பாக்கடிக்குமென்பதுண்மையாயிற்றே. நாம் அரசனைக் கண்டோமா, அந்தப்புரத்தைக் கண்டோமா, போர்வையைக் கண்டோமா, சால்வையைக் கண்டோமா? கட்டுமுளைக்குத் தேள்கொட்டக் குட்டித்திண்ணைக்கு நெறியேறிற்றுமென்றிருக்கிறதே ! தேர் முட்டியின் கீழே படுத்துக்கிடந்த எனக்கு இந்தக் கதிவந்ததே! திருடினவன் எவனோ என்பேரில் சமர்த்தா யெறிந்து தான் தப்பிக்கொண்டனனே! இதுவுமென் தலைவிதியோ ! எதற்குத் தப்பினாலும் விதிக்குத் தப்பமுடியுமோ ?

"முதிர்தருவ முடைமுதி யராயினும்
பொதுவறுதி ருவொடு பொலிவராயினும்
மதியினராயினும் வலியராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையார் !"

என்று பலவாறுசொல்லிச் சிறைச்சாலையிற் றுக்கித்துக்கொண்டிருந்தனர்.

இப்படி யிருக்கையில். அரசன் தனது பரிசனர்களைவிட்டு, அங்கு சத்திமுத்தத்தில் புலவருடைய வீட்டையிடித்து மச்சுமாளிகையோடு கட்டுவித்துப் புலவருக்கு வேண்டிய நிலபுலன்களை மானியமாக ஏற்படுத்தி புலவரது [illegible] ஆடையாபரணங்களைக் கொடுப்பித்து அவர்களுக்கு அவையெல்லாம் புலவர்க்கரசனாற் கொடுக்கப்பட்ட பரிசுகளென்று கூறுவித்தனன். அவர்கள் அதுவும் நிசமென்று நம்பியிருந்தார்கள்.

இவ்வாறு செய்யவேண்டுவன வெல்லாம் ஒரு மாதத்திடையேசெய்து முடிந்தபின் அரசன் புலவரை வருவித்து, ஓ துஷ்டா, நீ செய்த தப்பிதத்துக்கு உன்னை இன்னமும் கொடுமையாகத் தண்டிக்கவேண்டியது. ஆயினும், கிடக்கிறது என்று விட்டேன். இனிமேல் இந்த எல்லையை மிதிப்பாயாயின் சிரச்சேதம் செய்விப்பேன் ஓடிப்போ!" என்று சொல்லிவிடுத்தனன்.

புலவரும் தலைக்குவந்தது தலைப்பாவோடு போயிற்றே ! நமது நல்லகாலம்தானென்று நினைந்து தம் மூர்போய்ச் சேர்ந்தனர். சேர்ந்து அங்கு தமது இல்லை நோக்கிச் செல்லுகையில் அதைக் காணாமல் அதின் தானத்தில் ஓர் பெரிய மாடி வீடிருப்பக்கண்டு, "பிடித்த சனியன் விட்டதென் றிருந்தேன், இன்னமும் நீங்கிற்றில்லையோ ? இருந்த குச்சையும் யாரில்லாத்தருணம் நோக்கி யாரோ கவர்ந்துகொண்டானே. எமது மனைவிமக்கள் யாதாயினாரோ, எங்குகிடந்து புலம்புகின்றார்களோ? ஆ! ஆ! ஜகதீசா, ஈதெல்லாம் உனக்குச் சம்மதிதானோ" வென்று முன்னாளில் ஸ்ரீ கண்ணபிரா னருட்கண்பெற்றுவந்த குசேல பூசுரர் தம் மனையைத் திரும்பவடைந்து பிரமித்துக் கலங்கினது போலக் கலங்கினர். ஆயினும் சங்கதி அறிவோமென்று மெல்லச்சென்று அவ்வீட்டுப்புறத் திண்ணையிற் போயுட்கார உள்ளிருந்த ஓர் குழந்தை கண்டோடிச் சென்று " அம்மா அப்பா வந்துவிட்டார் பார்!" என்று கூவி அழைக்க மனையாளும் மற்றப் பிள்ளைகளுமாய் வெளியேவந்து, மனையாள் தான் தன் கணவரோடுச் சச்சரவிட்டதை நினைந்து வெட்கமுற்றுத் தலைகுனிந்து நின்ற

[illegible] குழந்தைகளெல்லாம் அப்பா வென்று மடியி[illegible]க் கழுத்தைக் கட்டிக்கொள்ளப் புலவருக்கு ஆச்சரியம் முன்னிலும் பன்மடங்காக, மனையாளை நோக்கி " இது யார் வீடு ? நமது குச்சு வீடு என்னாயிற்று ? உங்களுக்கு இந்த நகையுடையெல்லாம் யாவர் கொடுத்தார்கள் ? இந்திரஜாலம் போல விருக்கின்றதே !" என்ன, மனையாள்—" நாமாகக்கொண்டு அரசனிடத்தில் வரிசைகளெல்லாம் பெற்றுவிட்டோமென்னும் பெருமையோ ?" என்றனள். புலவர் "அரசனாவது, வரிசையாவது! அரசன் என்னை இந்தமட்டுமாவது உயிரோடே விட்டானே யென்று சந்தோஷித்து வந்தேனே" என்றனர். பின்பு மனையாள் சொல்லிய வரலாற்றால் யாவுமுணர்ந்து அரசன் தமது புலமையையும் வறுமையையும் எவ்வாறோ தெரிந்துகொண்டு தமது புலமையை வியந்து வறுமையை நீக்கினானென்று விவரங்களெல்லாம் தெரிந்துகொண்டது மன்றி அரசன் பரிசனர்களாலும் அரசன் செய்கைகள் யாவும் ஆதியோடந்தமாகத் தெரிந்துகொண்டனர்.

பின்பு சில நாட்கழித்து அரசனைக்கண்டு வரவேண்டுமென்னும் எண்ணம்கொண்டு அவ்வாறே புறப்பட்டுச்சென்று ராஜ சமூகத்தை யடைந்து அரசனை நோக்கி,

"வெறும்புற்கையு மரிதாற்கிள்ளை சோறுமென்
வீட்டில்வரும்—எறும்பிற்கு மாற்பதமில்லை—"

என்று பின்னும் சொல்லுமுன் அரசன் அவரை நில்லு மென்று தடுத்து யாம் உமக்குக் கொடுத்த வரிசைகளெல்லாம் என்னாயிற்றென்னலும், புலவர்—" முன்னாள்"—என்று கூட்டி அரசனை அடுக்குமுன் அவ்வாறு வறுமையில் வருந்தியதாகவும் அரசனைக்கூடிய பின்னர் தமது வறுமை நோயும் தம்மைவிட்டு நீங்கியதென்னும் கருத்துத்தோன்ற,

" என்னிருங்கலியாம், குறும்பைத்தவிர்த்
தெங்குடிதாங்கியைச் சென்று கூடியதால்
[illegible]றுளும்பற்கொள்யானை கவளம் கொள்ளாமற்
[illegible]ட்டியதே." என்று பாடினர்.

[illegible]லைக் கேட்டு அரசன் மனமகிழ்ந்து அவரை அன்றுமுதல் தமது சமஸ்தான வித்வான்களி லொருவராக ஏற்படுத்திக்கொண்டனன். புலவரும் அரசன் அவைக்களத்தே நக்ஷத்திரங்களின் நடுவேவிளங்கும் சந்திரனைப் போல விளங்கியிருந்தனர். இவர்தான் சத்திமுத்தப்புலவர் என்பவர்.

AN ANECDOTE OF KALATHI BHUPATHI.
காளத்திபூபதி சரித்திரத்திலோர்பகுதி.

சுமார் இருநூற்றெழுபது வருடங்களுக்கு முன்னே தொண்டைமண்டலத்தில் வல்ல நகரத்தில் காளத்திபூபதி யென்று ஓர் சிற்றரசர் இருந்தனர். இவர்,

"சித்திரமும் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்தவொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையு நடைப்பழக்கம் நட்புந்தயையும்
கொடையும் பிறவிக் குணம்"

என்றபடி ஈகைத்தன்மையைத் தமக்குப் பிறவிக்குணமாகக்கொண்டவர். இவர் குழந்தைப் பருவத்தில் திருவீதியில் விளையாடிக்கொண்டிருக்கையில் அவ்வழியே சென்ற ஒருவர் இவரது வைலக்ஷணங்களைக்கண்டு அன்புகொண்டு வாரி யெடுத்துக்கொள்ள இருகரங்களையும் விரித்து நீட்டக்கண்டதும் அவன் தம்மை யாதோ யாசிக்கின்றானெனக்கருதித் தமது திருமுடியிற் சூடியிருந்த இரத்தினச்சுட்டியை எடுத்துக்கொடுத்தனர் என்று கூறுவர். இத்தனை உதாரகுணமுள்ள ஒருவர் வயது செல்லச் செல்ல அக்குணத்தை மேன்மேலும் பிரகாசிப்பச் செய்தனர் என்பது சொல்லாமலே பெறப்படும்.

இவர் தமது உரிமையைப் பெற்றுப் பிரபுத்துவம் செய்துவரும் நாளையிலே பிற்காலத்தில் இராமநாதபுரம் வித்துவானாகப்பெற்று,

"மட்டாருந் தென்களந்தைப் படிக்காசனுரைத்த
தமிழ்வரைந்த வேட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவேட்டைத் தொட்டாலுங்
கைம்மணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
துய்யசேற்றில் நட்டாலும்
தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினது
நளினந்தானே"

என்று துதிக்கப்பெற்ற படிக்காசுப் புலவர் என்னும் பிரபலவித்துவானொருவர் இவரைத்

தேடியடைந்து தமது வறுமையை யுணர்த்தித் தமக்கோர் கறவைப் பசு தரவேண்டுமென்று கேட்டதும் அகற்றுப் பிரபு அவ்வாறே கொடுத்தருளிச் சன்மானித்து மகிழ்வித்ததும் பின்வரும் பாடல்களால் உணரப்படும்.

"பெற்றா ளொருபிள்ளை யென் மனையாட்டியப் பிள்ளைக்குப்பால்
பற்றாது கஞ்சி குடி குடிக்குந் தரமல்ல பாலிரக்கச்
சிற்றா ளுமில்லையிவ் வெல்லாவருத்தமுந்திரவொரு
கற்றாத்தரவல்லையோவல்ல மாநகர்க்காளத்தியே."

"வழிமேல் விழி வைத்துவாடாம லென்மனையாளு மற்றோர்
பழியாமற் பிள்ளையும் பாலென்றழாமற்பசி யெனுஞ்சொல்
மொழியாம லென்னைவர விட்டபாவி முசித்துச் சதை
கழியாமலாவளித்தாய் வல்லமாநகர்க்காளத்தியே."

இவ்வாறு புலவர்களுக்கும், எளிமைபற்றி வந்த ஏனையோர்களுக்கும் கற்பகம் போலக் கொடுத்து வருகையில் பூபதிக்கு ஊழ்வலியாலே செல்வம் குறைந்து வறுமைமேலிட்டு முடிவில் தமதுகடல்போலும் ஆஸ்திமுழுதும் இழக்கநேரிட்டது. அப்போது என் செய்வார் பிரபு! நாளும் ஒருபுறம் கடன்காரர்கள் கொடுத்த கடனைத்தரவேண்டி நெருக்கவும் ஒருபுறம் 'எருத்துநோய் காக்கைக்கு அறிவானேன்!' என்னும்பழமொழிக்கேற்ற பிரபுவின் வருத்தம் சிறிதும் அறியாதவராய் இரவலர் இச்சகம்பேசி ஏற்கவும் இருதலைக்கொள்ளி எறும்புபோல வருந்தி ஏதுசெய்வ மென்றறியாராய் முடிவில் மனையாளுடன் ஆராய்ந்து இருவருமாக இரவிற் புறப்பட்டு யாரும் அறியாமல் எங்கானும் பரதேசம் சென்று பிழைக்கலாமென்று தீர்மானித்துக்கொண்டனர். "இரப்பினுட்டுஞ்சலுமாகும் இரப்பினுள் யாதொன்றும் கண்பாடரிது." என்று கூறினது அநுபவசித்தமேயன்றோ?

இவ்வாறு தீர்மானித்து ஒருநாள் அஸ்தமித்தபின் புறப்பட்டு மனைவியும் தாமுமாகச் சென்று தம்மூருக்கு நான்கு மைல்தூரத்திற்கப்பாலுள்ள ஓர் சத்திரத்தில் போய் தங்கினர். அவர் அங்குதங்கியிருக்கும்காலத்தில்தம்மைத் தரிசித்துப் பரிசு பெறவேண்டிவந்த ஓர் வித்துவானும் அச்சத்திரத்திலேயே தங்கும்படி நேரிட அவன் மறுநாளுதயத்தில் காளத்தி பூபதியைக் கண்டமாத்திரத்தில் தன் தரித்திரமெல்லாம் அதமாய்ப்போய்விடு மென்னும் நம்பிக்கையாலே தனக்குள்ளே தேற்றிக்கொண்டு தன் தரித்திரத்தை முன்னோக்கி,

"நீளத்திரிந்திருந் துழன்றாய் நீங்காநிழல் போல
நாளைக் கிருப்பாயோ நல்குரவே—காளத்தி
யின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றேயிரு."

என்றோர் பாடலைப் பாடினன். அதைக்கேட்ட பூபதிக்கு உகிர்ச்சுற்றின்மேல் உலக்கைவிழுந்ததுபோலாயிற்று.

"ஆற்றுப் பெருக்கற்றடி சுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்காலுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல் கூர்ந்தா ரானாலும்
இல்லை யெனமாட்டாரிசைந்து."

என்னும் முதுமொழிப்படி தாம் அவ்வளவு வறுமையை அடைந்தாராயினும் தம்மைநாடி வெகு தூரத்தினின்று வெகு ஆசையோடும் வந்த புலவன் தம்மைக்காணவழி எங்ஙனம் வருந்துவானோவென்று வருந்தி அப்புலவனுக்கு ஆசாபங்கம் உண்டாகாமல் அவனை எங்ஙனமேனும் ஆதரிக்கவேண்டுமென்னும் எண்ணமுடையாராய் மனைவியோடும் மீண்டும் விடியுமுன் புறப்பட்டுத் தம்மிருப்பிடத்துக்குவந்து சேர்ந்தனர்.

வந்து மனையாளுடனாராய்ந்து புலவனுக்கு ஒருவேளைப் போசனமேனும்கொடுக்கநினைந்து அதற்கேதும் வகையில்லாமையின் முடிவில் தம்மனையாள் கழுத்திற்றரித்திருந்த மாங்கல்யத்தோடு கலந்திருந்த ஒரு பொன்மணியைக் கழற்றிக்கொடுப்ப அதைக்கொண்டு அரிசி முதலிய சாமான்கள் வாங்கிவந்து புலவன் வந்ததும் அவனை அன்போடும் ஆதரித்தனர். புலவனும் வயிறாரவுண்டுமகிழ்ந்து பிரபுவின் வறுமையை அறியாதவனாய்த் தான் கருதிவந்த காரியம் நிறைவேறிய தென்று நினைந்து பிரபுவைப்பலவாறு காமதேனுவே கற்பகத்தருவே, பொன்மழை பொழியும் பொருவரும் புயலே என்று பலவாறு உரையாலும் பாட்டாலும் புகழவாரம்பித்தனன். பூபதி யென்னசெய்வார்! இல்லையென்று சொல்லவும் நாவெழாமல் உண்டென்று கொடுக்கவும் கையெழாமல் அவர் நெஞ்சம் வருந்தியதை என்னென்று சொல்லுவது? உலோபிகளுக்கு எப்படிக்கொடுத்தல் வருத்தமாமோ அதினு மெண்மடங்கு வருத்தமாகும் உதாரகுணமுள்ளவர்களுக்கு இல்லையென்று கூறிமறுத்தல். உலோபியின் உயிரைக் கவர்தற்கு வேறே ஆயுதங்கள் ஒன்றும் வேண்டாம். கொடுவென்றொருவார்த்தை கேட்டாலே போதுமென்பர்.

"கொடைமறுத்த லோபிதனைக் கொல்லவிடம் வேண்
இடமடுத்தொன் றீவாய் நீயென்று—மடவனமே [டாம்
கேட்கினதே போதும் கிலிகொண்டுயிர்விடுமால்
வாட்படை பாய்ந் தென்னமதி."

என்றார் பெரியோரும். உதாரியோ ஈதற்கிசையாவழி இல்லையென்று சொல்லற்கஞ்சி யுயிர்விடுவன். ஆதலினாலே பிரபுவும் இல்லையென்று சொல்லுதலினும் உயிர்விடுதலே நலமென்றுணிந்து புலவரை நோக்கிச் சற்றே பொறும் வருகிறேனென்று சொல்லிவிட்டுப் புழைக்கடைவழியேசென்று வீட்டின் தோட்டத்திலுள்ள ஒரு பெரும்புற்றினுள்ளே தமது கையையிட்டனர். அப்போது அதற்குள் பதுங்கியிருந்த நாகசர்ப்பமொன்று சீறிச் சினந்து மேலெழுந்து கடிக்கவருதலும் கொடுத்துக் கொடுத்துக் கூழையாகிய அக்கையை நோக்கலும் 'ஆ ஆ இத்திருக்கரம் யாம் தீண்டற்பாலதன்று' என்று உடனே கோபமடங்கிச் சாந்தமாகி இலவர்க்கெவ்வளவோ எழிலிபோலக் கைம்மாறுகவாது கொடுத்த கரமாயிற்றே. இக்கரத்தில் யாம் ஏதேனும் ஓர் பொருளையீதலே முறைமையென்றுணர்ந்து தன் முடியிலுள்ள நாகரத்தினத்தை அதிற்கக்கியது. உடனே கையில் ஜில்லென்று குளிர்ந்திருக்கக் கண்டு இதுயாதோவென்று கரத்தை வெளியேயெடுத்ததும் அது தகதகவென்று கதிரொளிபோலப் பிரகாசிக்கக்கண்டு வியப்பும் உவகையும் உற்று இன்றைக்குப் பாவலற்குக் கொடுக்கும்படியான பாக்கியம் கிடைத்ததே யென்று மனமகிழ்ந்து அதனைப் பாவலன்கையில் கொணர்ந்து கொடுத்து நல்லுரை புகன்று அவனைப் போகவிடுத்தனர்.

அப்புலவன் அம்மணியைப்பெற்று அளவற்ற களிப்போடும் சென்று பின்பதை விலைப்படுத்தக் கருதி வர்த்தக வியாபாரங்களிற் சிறந்து மேன்மைபெற்றிருந்த சென்னைமாநகரை யடுத்து அங்கு இரத்தினவியாபாரிகளாகிய செட்டிகளுக்குக்காட்டி விலைகூற அவர்கள் அம்மணியின்ஒளியையும் பெருமையையும் அறிந்து ஒருவர்மே லொருவராய் போட்டி

போட்டு விலையை அதிகமாகவுயர்த்தி முடிவில் ஒருவர்க்கொருவர் அதனிமித்தமாக விவாதப்பட்டுக் கடைசியில் அம்மணியை அரசனிடம் ஒப்பித்தனர். அரசன் அதைக்கண்டு ஆச்சரியம்கொண்டு புலவனை நோக்கி இவ்விரத்தினம் உனக்கெவ்வாறு கிடைத்ததென்று கேட்கப் புலவனும் தான் பெற்ற வரலாற்றைக்கூறினன். அரசன் அதன் உண்மையைச் சோதிக்கும்பொருட்டுக் காளத்திபூபதியை வரவழைத்து விசாரித்தகாலையில் அவர் நான்தான் கொடுத்ததென்று ஒப்புக்கொண்டனர். அப்போது அரசன் அவரது விருத்தாந்தங்களைக் கேட்டு, இவ்வளவு விலைமதிப்பதற்கரிய இரத்தினத்தை ஒரு புலவனுக்குப் பரிசாகக்கொடுக்கவல்ல நீயேன் ஏழைவேஷம்போட்டுக் கடன்காரர்களை மோசம்பண்ணப் பார்க்கிறாயென்று அவரைக் கோபித்தபோது பூபதி தமக்கு அம்மணிகிடைத்த வரலாற்றைக் கூறினர். அப்போது அரசன் இது யாரிடத்திற்சொல்லும் வார்த்தை: பாம்பாவது! மாணிக்கமாவது! கதைகளிற் சொல்லும் பொய்யைச் சொல்லி ஏமாற்றிவிடலாமென்று பார்த்தையோ. உன் வார்த்தை உண்மையாயின் இன்னொருகாலும் அப்புற்றில் உன்கையையிடு பார்ப்போமென்றனன். அதற்கு அவர் சாகத்துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்காலளவென்ற வசனப்படி இவ்வாறு வருந்துவதினும் உயிர் துறத்தலே நலமென்றுணர்ந்து அங்ஙனமே ஆகுகவென்று சம்மதித்தனர்.

அவ்வாறே அரசன்பரிசனர்களுடன்சென்று அனைவரும் காணப் புற்றினுள்ளே கையிட்டமாத்திரத்தில் அச்சர்ப்பம் முன்போலவே சீறியெழுந்து தீண்டவருதலும் அக்கரத்தைக் கண்டு முன்போலவே அதைத் தீண்டுதற்கஞ்சி அக்கரத்தில் தனது ஜீவரத்தினத்தைக் கக்கித் தானும் புறம் போந்து யாவரும் கண்டு அதிசயிக்கத் தன் பிராணனை விட்டது. அரசன் இவ்விருத்தாந்தங்களைக் கேட்டு பூபதியின் வள்ளன்மையையும் பெருமையையும் உணர்ந்து அவரிடத்து நட்புக்கொண்டு அவரிழந்த செல்வங்களை யெல்லாம் அவர்க்கு மீட்டுக் கொடுத்து அவரை நன்கு மதித்தனன். பூபதியும் முன்னிலும்மேன்மையாகவிருந்து அனேக தர்மங்களைச்செய்து பாவலர்களை ஆதரித்து அழியாப் பெரும்புகழைப் பெற்றிருந்தனர்,

THE EVIL CONSEQUENCES OF TAKING BRIBES.

கைக்கூலி வாங்குதலாலுண்டாகும் கெடுதி.

முன்னொரு காலத்தில் கோசலதேசத்தில் ஒரு பிராமணனிருந்தான். அவன் அத்தேசத்தரசனாகிய குணசீலனை அடுத்து, "ஓ வேந்தனே நான் வாளாயுதத்தின் குணாகுணங்களைப் பரீக்ஷித்தறிய வல்லவன்" என்றான். அரசன் அவனைத் தன்னிடத்து ஆயுதபரீக்ஷகனாக வைத்துக்கொண்டு அன்றுமுதல் ஆயுதங்கள் கொண்டுவரும் கொல்லர்கள் எல்லாரையும் அவரவர் ஆயுதங்களை அவனுக்குக் காட்டும்படி உத்தரவுசெய்தான். அவன் பரீக்ஷித்துப் பார்த்துத் திறமென்றொப்புக்கொண்ட கத்திகள் மாத்திரம் அரசன் ஆயுதசாலையில் வாங்கி வைத்துக்கொள்ளப்பட்டன. மற்றவையெல்லாம் தள்ளிவிடப்பட்டன. அது கண்டு கருமார்களில் அநேகர் அன்றுமுதல் தாம் ஆயுதங்கள் விற்பனைக்குக் கொண்டுவரும்போதெல்லாம் அப்பிராமணனுக்கு யாதேனும் பரிதானமும் கொண்டுவரத் தலைப்பட்டார்கள். எவர்களிடத்தில் பிராமணன் பரிதானம் வாங்கிக்கொண்டானோ அவர்களுடைய ஆயுதங்களை மட்டும் முனையை முகர்ந்து பார்த்து, "இது நல்லது" என்று சொல்லுவான். அதனால் அது அரசன் ஆயுதசாலையில் ஏற்றுக்கொள்ளப்படும். கைக்கூலி கொடாதவர்களுடைய ஆயுதங்கள் எவ்வளவு நல்லவையானாலும் பயனில்லையென்று தள்ளிவிடுவான்.

ஒருநாள் ஒருகருமான், "இந்தப்பிராமணன் நான் கொண்டுபோகும் ஆயுதங்களெல்லாம் பயனற்றவையென்றும் அவனுக்குக் கைக்கூலி கொடுப்பவர் ஆயுதங்கள் எல்லாம் திறமானவையென்றும் சொல்லுகிறானல்லவா? நல்லது, இவ்வாறு இனிமேல் இவன் சொல்லத் துணியாவண்ணம் நானோர் உபாயம் செய்கிறேன் பார்" என்று தன்னுள் தானே ஆலோசித்தான்.

162439

அவ்வாறே அவன் ஒரு கத்தி உறையில் பட்டுப்போல மெல்லிதாகப் பொடித்த மிளகாய்த்தூளை வைத்தடைத்து கத்தியின் விளிம்பிலும் அப்பொடியாலே நன்றாய்ப் பூசிவைத்து அக்கத்தியை உறையிலிட்டு அரசனிடம் கொண்டுவந்து கொடுத்தான். அரசன் பிராமணனுக்கு அதைக் காண்பிக்கும்படிச் சொன்னான். பிராமணன் அக்கத்தியை உருவி வழக்கம்போல முகர்ந்துபார்க்க மூக்கில் வைத்ததும் மிளகாய் நெடி மூக்கில் ஏறி அதைப்பொறுக்கமாட்டாமல் வலுவாக ஓங்கித்தும்மினான். அதனால் அவன் மூக்கு வாள் முனையில் தாக்கி அடியுற வெட்டுண்டு போயிற்று. இதைப் பார்த்ததும் அரசனுக்கும் சபையோர்கள் எல்லோருக்கும் அடக்கமுடியாச் சிரிப்பையுண்டாக்கிக் கொல்லென்று சிரித்தார்கள்.

பேராசையினாலே கைக்கூலி வாங்குகிறவர்களுக்கெல்லாம் இவ்வாறே கடைசியில் கெடுதியும் மானக்கேடுமுண்டாகும்.

கைக்கூலி வாங்கிப் பக்ஷபாதம் சொல்லுதலைப்பற்றி, ஔவையார் பின்வருமாறு கூறுகின்றனர்.

1. ஓரஞ்சொல்லேல்.
2. வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
   பாதாள மூலி படருமே—மூதேவி
   சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
   மன்றோரம் சொன்னார் மனை.
3. உள்ள வழக்கிருக்க ஊரார் பொதுவிருக்கத்
   தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
   கைக்கூலி தான்வாங்கும் காலறுவான் தன்கிளையு
   எச்சமறு மென்றுவறு.
4. வழக்குடை யானிற்ப வலியானைக்கூடி
   வழக்கையழி வழக்குச் செய்தோன்—வழக்கிழ
   [தோன்

   சுற்றமும் தானும் தொடர்ந்தழுத கண்ணீரால்
   எச்சமறு மென்றுவறு.